உ
சிவமயம்

திருமூலரின் திருமந்திரம்

திருமூலரின் திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறை ஆகும். தமிழில் முதல் முதலில் தோன்றிய யோக நூல் இது என்பது இதன் தனிச் சிறப்பு. முதல் சித்தர் திருமூலரே ஆவார். இவர் பதினெட்டு சித்தர்களில் ஒருவர் மட்டுமல்ல. அறுபத்து மூன்று நாயன்மார்களிலும் ஒருவர் ஆவார் திருமூலர். திருவாவடுதுரையில் ஓர் அரச மரத்தின் கீழ் மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடல் என்று மூவாயிரம் பாடல்களை இவர் இயற்றினார் என்பர்.



விசாலாக்ஷி ரமணி

கீழ்கண்ட இணையதளத்தில் இருந்து தொகுக்கப் பெற்றது.

திருமந்திரம் - முதலாம் தந்திரம்	https://thirumanthiram1.wordpress.com
திருமந்திரம் - இரண்டாம் தந்திரம்	https://thirumanthiram2.wordpress.com/
திருமந்திரம் - மூன்றாம் தந்திரம்	https://thirumanthiram3.wordpress.com/
திருமந்திரம் - நான்காம் தந்திரம்	https://thirumanthiram4.wordpress.com/
திருமந்திரம் - ஐந்தாம் தந்திரம்	https://veeveeare.wordpress.com/
திருமந்திரம் - ஆறாம் தந்திரம்	https://araamthanthiram.wordpress.com/
திருமந்திரம் - ஏழாம் தந்திரம்	https://ezhaamthanthiram.wordpress.com/
திருமந்திரம் - எட்டாம் தந்திரம்	https://ettamthanthiram.wordpress.com/
திருமந்திரம் - ஒன்பதாம் தந்திரம்	https://onbathaamthanthiram.wordpress.com/

திருமூலரின் திருமந்திரம்

முதல் தந்திரம்

இரண்டாம் தந்திரம்

மூன்றாம் தந்திரம்

நான்காம் தந்திரம்

ஐந்தாம் தந்திரம்

ஆறாம் தந்திரம்

ஏழாம் தந்திரம்

எட்டாம் தந்திரம்

ஒன்பதாம் தந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஐங்கரன், ஆனைமுகன், இளம் பிறை போன்ற தந்தங்களை உடையவன்; சிவன் மகன், ஞான வடிவானவன், அவன் திருவடிகளை வணங்குகின்றேன்!

10.01 பாயிரம் - 01. கடவுள் வாழ்த்து

#1. ஒன்று அவன்தானே!

ஒன்று அவன்தானே; இரண்டு அவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன், ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான்; உணர்ந்து எட்டே.

ஒரே மெய்ப் பொருளானவன், சிவ சக்தியராக இரண்டானவன், பிரமன், திருமால் ருத்திரன்என்ற மும் மூர்த்திகளுமானவன், நான்கு புருஷார்த்தங்களை (அறம், பொருள், இன்பம், வீடு) உணர்ந்தவன், ஐம் பொறிகளை (மெய், கண், மூக்கு, வாய், செவி) வென்றவன், ஆறு சக்கரங்களில் (மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹாதம், விசுத்தி, ஆக்ஞைகளில்) விரிந்தவன், ஏழாவது சக்கரமான ஸஹஸ்ர தளத்தில் இருப்பவன், எட்டுப் பொருட்களில் (நிலம், ஜலம், தீ, வளி, வெளி, கதிரவன், நிலவு, ஆன்மா) கலந்து விளங்குபவன்.

#2. கூற்றுதைத்தான் போற்றி!

போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை
நால் திசைக்கும் நல்ல மாதுக்கும் நாதனை
மேல்திசைக்குள் தென் திசைக்குஒரு வேந்தனாம்
கூற்று உதைத்தானை யான் கூறுகின்றேனே.

தூயவனாக இனிய உயிரில் பொருந்தி உள்ளான், நான்கு திசைகளுக்கும், சக்திக்கும் அவனே நாயகன், தென்திசை மன்னனாகிய யமனை உதைத்தவன், அந்த இறைவனை நான் புகழ்ந்து போற்றுகின்றேன்.

#3. இறைவனின் திறன்

ஒக்க நின்றானை, உலப்புஇலி தேவர்கள்
நக்கன் என்று எத்திடும் நாதனை நாள்தோறும்
பக்கம் நிற்றார் அறியாத பரமனைப்
புக்கு நின்று உன்னி யான் பொற்றிசெய்வேனே.

உயிர்களுடன் கலந்து நிற்பவன்! அமரர்களான தேவர்கள் திகம்பரன் எனத் தொழுதிடும் நாதன்! அருகில் உள்ள பிற தேவர்களும் அறிய இயலாத மேன்மைகள் உடையவன்! அவனை நான் நாள் தோறும் சென்று வழிபடுவேன்.

#4. அறியாமை நீங்கினேன்

அகல்இடத்தார் மெய்யை, அண்டத்து வித்தைப்,
புகல் இடத்து என்றனைப் போதவிட்டானைப்
பகல்இடத்தும் இரவும் பணிந்து ஏத்தி
இகல்இடத்தே இருள் நீங்கி நின்றேனே.

அண்டத்தின் ஜீவர்களுக்கு மெய்ப் பொருள் ஆனவன், அண்டங்களுக்கு இவன் ஒருவனே வித்தானவன், புகுந்த இடத்தலேயே என்னை வாழ வைத்தவன், இவனைப் பகலிலும், இரவிலும் பணிந்து புகழ்ந்து நான் இந்த உலகின் அறியாமை நீங்கப் பெற்றேனே.

#5. ஒப்பில்லாதவன் சிவன்

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை ;
அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை;
புவனங் கடந்தன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடை முடி தாமரை யானே!

சிவனை விடச் சிறந்த தெய்வம் ஒன்று உலகில் இல்லை. அவனுக்கு ஒப்பானவர் என்றும் இங்கு எவருமில்லை. சிவன் அண்டத்தைக் கடந்து நின்று பொன் போல் ஒளிர்பவன். ஸஹஸ்ரதளத்தில் மேல் நோக்கிய செந்தாமரையில் உறைபவன்.

#6. முக்தி தருபவன் சிவன்

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனின்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவனன்றி ஊர் புகுமாறறி யேனே.

சிவனை விட உயரிய தெய்வம் ஒன்றும் இல்லை. அவனையன்றிச் செய்யும் அருந்தவம் ஒன்றும் இல்லை. அவனின்றி மும் மூர்த்திகள் செய்வது ஒன்றும் இல்லை. அவனின்றி முக்தி அடையும் வழி ஒன்றும் இல்லை.

#7. அவனியோருக்குத் தந்தை சிவனே!

முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கும் மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை," அப்பா" எனில் அப்பனுமாய் உளன்
பொன்னை ஒப்பு ஆகின்ற போதகத் தானே.

தனக்குச் சமமான மும் மூர்த்திகளுக்கும் மூத்தவன்; ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகன் சிவன்; தன்னை "அப்பா!" என்பவருக்குத் தந்தையாவான்; பொன்னை ஒத்த ஸஹஸ்ர தளத்தில் விளங்குவான்.

#8. வெய்யன், தண்ணியன்

தீயனும் வெய்யன் புனலினும் தண்ணியன்;
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை;
சேயினும் நல்லன்; அணியன் நல்அன்பர்க்கு;
தாயினும் நல்லன்; தாழ் சடையோனே.

தாழ்ந்த சடையினை உடைய சிவ பெருமான் தீயவருக்குத் தீயை விட வெம்மையானவன்; தன் அடியவருக்கு நீரை விடக் குளிர்ந்தவன்; சின்னக் குழந்தையை விட நல்லவன்; தன் அன்பர்களுக்கு மிகவும் அருகில் இருப்பவன்; பெற்ற தாயைவிட அருள் மிகுந்தவன்; ஆயினும் அவன் அருளை எவரும் அறிவதில்லை

9. தொழப்படுவர் இல்லாதவன்

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னால் பிறங்க இருந்தவன்; பேர் நந்தி;
என்னால் தொழப்படும் எம் இறை; மற்று அவன்
தன்னால் தொழப்படுப வார்இல்லை தானே.

பொன்னை முறுக்கி அமைத்தது போன்ற செஞ்சடை பின்புறம் விளங்குகின்ற சிவன்; அவன் பெயர் நந்தி என்பதாகும்; என்னால் வணங்கத் தகுந்தவன் அவன்; உயிர்கள் எல்லாவற்றுக்கும் தலைவன்; ஆனால் அவனால் வணங்கத் தகுந்தவர் என்று எவரும் இல்லாதவன் என் இறைவன்.

10. யாதுமாகி நிற்பவன்

தானே இருநிலம் தங்கி விண்ணாய் நிற்கும்;
தானே சுடும் அங்கி, ஞாயிரும், திங்களும்;
தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்;
தானே தடவரை, தண்கடல் ஆமே.

தானே இரு நிலத்தையும் தாங்குவான்; தானே விண்ணாக வடிவெடுத்து நிற்பான்; தீயாகவும், சூரிய, சந்திரர்களாகவும் உள்ளான்; தானே அருள் மழை பொழியும் சக்திதேவி ஆகின்றான்; அகன்று உயர்ந்த மலையும் அவனே! பரந்து குளிர்ந்த கடலும் அவனே!

11. அவன் பெயர் நந்தி

அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதும்ஒன்று இல்லை;
முயலும் முயலில் முடிவும் மற்று அங்கே
பெயலும் மழை முகில்; பேர் நந்தி தானே.

தொலைவிலும், அருகிலும் எங்கு நோக்கினும் என் பெருமானுக்கு ஒப்பான தெய்வம் இல்லை. முயற்சியும் அதன் பலனும் அந்தப் பெருமானே. மழை பொழிகின்ற மேகமும் அந்தப் பெருமானே. அந்தப் பெருமானின் பெயர் நந்தி என்பதாகும்.

12. தலைவன் அவனே

கண்ணுத லான் ஒரு காதலின் நிற்கவும்
எண்இலி தேவர் இறந்தார் எனப் பலர்;
மனஉறு வார்களும் வான்உறு வார்களும்
அண்ணல் இவன்என்று அறியகிலார்களே.

நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான் நிகரில்லாத அன்புடன் அழியாது இருக்கையில், எண்ணில்லாத தேவர்கள் அழிந்து பட்டனர். மண்ணவர்களும், விண்ணவர்களும் தாங்கள் அழியாது வாழ அருள் செய்பவன் சிவனே என்று அறியாமல் இருக்கின்றனர்! என்னே இவர் பேதைமை!

13. கடந்து நின்றான்

மண்அளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்அளந்து இன்னம் நினைக்கிலார் ஈசனை;
விண்அளந் தான்தன்னை மேல்அளந்தார் இல்லை;
கண்அளந்து எங்கும் கடந்து நின்றானே.

மண் அளந்த மாலவனும், தாமரை மலரில் உதித்த பிரமனும் பிற தேவர்களும் ஈசனை எண்ணத்தில் நிறுத்துவதில்லை; அவனைப் பற்றி அவர்கள் சிறிதும் எண்ணுவதில்லை. விண்ணில் விரிந்துள்ள சிவனை மண்ணவர் அறிய முடிவதில்லை. சிவன் மண்ணில் கலந்தும், அனைத்தையும் கடந்தும் விளங்குகின்றான்.

14. கண்காணிக்கின்றான் சிவன்

கடந்துநின்றான் கமல மலர் ஆதி;
கடந்துநின்றான் கடல்வண்ணன் எம் மாயன் ;
கடந்து நின்றான் அவர்க்கு அப்புறம் ஈசன்;
கடந்துநின்றான் எங்கும் கண்டு நின்றானே.

சிவன், சுவாதிஷ்டானத்தில் விளங்கும் நான்முகனைக் கடந்து விளங்குகின்றான். சிவன் மணிபூரகத்தில் விளங்கும் திருமாலைக் கடந்து விளங்குகின்றான். இவ்விருவரையும் கடந்து அனாஹதத்தில் விளங்கும் ருத்திரனையும் கடந்து சிவன் சிரசின் மேல் சஹஸ்ரதளத்தில் இருந்துகொண்டு அனைத்தையும் கண்காணிக்கின்றான்.

15. ஆதியாகிய சோதி

ஆதியுமாய், அரனாய், உடலுள் நின்ற
வேதியுமாய் விரிந்து ஆர்ந்து இருந்தான் அருள்
சோதியுமாய்ச் சுருங்காதது ஓர் தன்மையுள்
நீதியுமாய் நித்தம் ஆகி நின்றானே.

உலகினைப் படைப்பவன் சிவ பெருமான்; உலகினை அழிப்பவனும் சிவபெருமான்; உடலில் மாற்றங்களைச் செய்பவன் அவன்; அவற்றைக் கடந்து விளங்குபவனும் அவன்; குவியாத அருட் சோதியாக விளங்குபவன் சிவன்; ஊழினை இயக்குபவன் அவன்; நீதியாகி, நித்தியமாகி என்றும் அழியாமல் இருப்பவன் சிவபெருமானே.

#16. வணங்குவது எதற்காக?

கோது குலாவிய கொன்றைக் குழல்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம் பயில் வாரே.

நரம்புகள் உள்ள கொன்றை மலரை அணிந்த சுருண்ட சடையுடையவன் சிவ பெருமான். ஒளிரும் நெற்றியுடைய உமையொரு பாகத்தினன். மூவர்களும்,

தேவர்களும் குற்றங்கள் பொருந்தியுள்ளதால் சிவனை எந்த குணத்தைப் பாராட்டி நாடுவர்? நாட மாட்டார்!

17. ஒப்பில்லாத உறவு!

காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
மாயம் கத்தூரிஅது மிகும்; அவ்வழி
தேசம் கலந்து ஒரு தேவன் என்று எண்ணினும்
ஈசன் உறவுக்கு எதிர் இல்லை தானே.

பருவுடல், நுண்ணுடல் இரண்டும் ஒன்றாகக் கலந்திருந்த போதிலும், மாயையுடன் தொடர்புடைய நுண்ணுடலில் தான் கானம் மிகுந்திருக்கும். அந்த கானம் வழியே மனம் பொருந்தி ஆன்மா தன்னையே ஒளிவடிவாக் காண இயலும். அதுவும் உடலை விட்டு வான் வடிவான சிவனுடன் கொள்ளும் தொடர்புக்கு ஒப்பாகாது.

#18. வரமருளும் வள்ளல்

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறை தவம் நோக்கி
அதுபதி ஆதரித் தாக்கம் அது ஆக்கின்
“இதுபதி கொள்” என்றஎம் பெருமானே.

அளகாபுரி மன்னன் குபேரனை வடதிசைக்குத் தலைவனாக ஆக்கியது அவன் அருந்தவம். செல்வத்தின் அதிபதியாக்கியது அவன் அருந்தவம். “அந்த வடதிசையைப் போற்றி சேமிப்பைப் பெருக்கினால் இந்த வடதிசைக்கு நீ தலைவன் ஆகலாம்!” என்று சொல்பவன் என் இறைவன் சிவபெருமான்.

#19. தவத்தில் விளங்குகின்றவன்

இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன்; மூதறிவாளன்;
விதுபதி செய்தவன்; மெய்த்தவம் நோக்கி,
அதுபதி யாக அமர்கின் றானே.

வடக்கு திசைக்கு அதிபதியானவன் சிவபெருமான். விஷய வாசனைகள் விளங்கும் ஏழு ஆதாரங்களையும் அழித்துப் பாழ் நிலமாக ஆக்கியவன் சிவன். அனைத்தையும் அறிய வல்ல மூதறிவாளன். நம் பாவங்களைப் போக்க வல்லவன் சிவன். அடியவர்களின் உண்மையான தவத்தைக் கண்டவுடன் அதையே தன் இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருள்வான்.

20. ஈசன் உருவம்

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்,
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்
கடிமலர்க் குன்றம் மலைஅது தானே.

சிவன், கருவில் உருவாகும் முன்னரே நம்முடைய பிறப்பையும், இறப்பையும் வரையறை செய்பவன். அவன் உறையும் நியதியை அறிந்து கொண்டால் அதுவே விளக்கம் பொருந்திய கண் மலர்களுக்கு மேலுள்ள சிரசாகும். அந்த இறைவனின் வடிவம் ஒளியும், இடியின் ஒலியும் ஆகும்.

(பஞ்ச பூதங்களின் தலைவர் சிவபெருமான். தியானப் பயிற்சியில ஈடுபடுபவர்களுக்கு ஒளி வட்டம் தோன்றும்! இடி முழக்கம் கேட்கும்!)

21. கோனைப் புகழ்மின்!

வானப் பெருங்கொண்டல் மால்அயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை,
காணக் களிறு கதறப் பிளந்த எம்
கோனைப் புகழுமின், கூடலும் ஆமே.

வானத்தில் உள்ள மேக நிறம் கொண்ட கரிய திருமால், பிரமன், பிற தேவர்களின் இழிந்த பிறவியை நீக்குபவன் சிவபெருமான். ஒப்பற்ற ஒருவன் ஆவான் அவன். ஆணவமாகிய காட்டு யானை கதறும்படி அதைப் பிளந்து அழித்தவன் சிவபெருமான்; இத்தகைய எம் கோனைப் போற்றிப் புகழுங்கள்! அவனையே அடைந்து முக்தி பெற அதுவே உதவும்.

22. பேணி நிற்பான்

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்தது அறிவனென்னில் தான் நினைக்கிலர்
எனக்கு இறை அன்புஇலன் என்பர்; இறைவன்
பிழைக்கநின் றார் பக்கம் பேணிநின் றானே.

தியானப் பொருளாக மனத்தில் தோன்றுவான் மாயநாடனாகிய சிவன். தன்னை ஜீவர்கள் நினைப்பதை நன்கு அறிவான் சிவபெருமான் எனினும் அவனைச் சிறிதும் நினையாது வாழ்கின்றனர் பற்பல ஜீவர்கள். ”சிவனுக்கு என் மீது அருள் இல்லை!” என்றும் கூறுவார்கள் பலர்! தன் கருணையை நாடாதவர்களுக்கும் கருணை வழங்கும் வள்ளல். அவன் தன் கருணையின் சிறப்புத் தான் என்னே!

#23. அல்லும் பகலும் அருள்வான்

வல்லவன் வன்னிக்கு இறைஇடை வாரணம்
நில்என் நிற்பித்த நீதியுள் ஈசனை
இல் என வேண்டா; இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே.

இறைவன் எல்லாம் செய்ய வல்ல ஆற்றல் பெற்றவன். கடலின் நடுவே அக்னி தேவனை நிலைக்கச் செய்பவன். இத்தகைய இறைவனை இல்லை என்று கூற வேண்டாம். பிற தெய்வங்களுக்கும் முதல்வனாக இருந்துகொண்டு அல்லும் பகலும் நமக்கு அருள் செய்கின்றான் சிவபெருமான்.

24. சிவன் அடி

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனிதன்அடி
தேற்றுமின் என்றும்; சிவன் அடிக்கே செல்வம்
ஆற்றியது என்று, மயல் உற்ற சிந்தையை
மாற்றி நின்றார்வழி மன்னி நின்றானே.

சிவபெருமானின் திருவடிகளை இடைவிடாது போற்றிப் புகழ்ந்து எப்போதும் சிந்தனை செய்யுங்கள். நம் செல்வம் அனைத்தும் அவன் திருவடிகளுக்கே உரியது என்று புறப் பொருட்களில் மயங்கிய மனத்தை மாற்றினால்
சிவன் நம் சிந்தையில் நீங்காமல் நிலையாக நிற்பான்.

#25. அஞ்ஞானம் விலகும்

பிறப்பிஇலி, பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்புஇலி, யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்புஇலி தன்னைத் தொழுமின்; தொழுதால்
மறுப்பு இலி, மாயா விருத்தமும் ஆமே.

அவன் பிறவி அற்றவன்; கனத்த சடை முடியை உடையவன்; பேரருள் மிக்கவன்; அழிவு என்பது அற்றவன்; எல்லோருக்கும் இடையறாத இன்பத்தைத் தரும் இறைவன்; அவனை வணங்குங்கள். அதனால் அஞ்ஞானம் நீங்கப் பெறலாம்; மெய்ஞானம் அடையலாம்.

#26.இதயம் ஆலயம்.

தொடர்ந்து நின்றானைத் தொழுமின்; தொழுதால்
படர்ந்து நின்றான்பரி பாரகம் முற்றும்
கடந்து நின்றான்; கமலம் மலர் மேலே
உடந்திருந்தான் அடிப்புண்ணியம் ஆமே.

ஆன்மாக்களைத் தொடர்ந்து நிற்கும் சிவபெருமானை எப்போதும் இடைவிடாது வணங்குவீர். அங்ஙனம் வணங்கினால் நமக்குக் கிடைக்கும். எங்கும் பரவி விரவி இருப்பவனும்; உலகம் முழுவதையும் கடந்தவனும், ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் உறைபவனும ஆகிய சிவபெருமானின் சீரியத் திருவடிப் பேறு.

#27. இதயமே ஆலயமாகும்

"சந்தி எனத்தக்க தாமரை வாள் முகத்து
அந்தம்இல் ஈசன் அருள் நமக்கே" என்று
நந்தியை நாளும் வணங்கப்படும் அவர்
புந்தியின் உள்ளே புகுந்து நின்றானே.

சேர்க்கையின் இடம் எனப்படும் சுவாதிஷ்டானத்தின் கீழே,"முடிவு இல்லாத இறைவனின் அருள் எனக்கு உரியது!" என அந்தப் பெருமானை வணங்குபவரின் அறிவினுள் புகுந்து, அவர் இதயமே ஆலயமாக நிலைத்து நிற்பான் சிவபெருமான்.

#28. வழித்துணை

இணங்கிநின் றான், எங்குமாகி நின் றானும்,
பிணங்கிநின் றான்,பின் முன் ஆகிநின்றானும்,
உணங்கிநின் றான், அமரா பதி நாதன்;
வணங்கிநின் றார்க்கே வழித்துணை ஆமே.

ஆன்மாக்களுடன் பொருந்தி விளங்குபவன் சிவன்; இங்கு அங்கு என்னாதபடி எங்கும் நிறைந்தவன் அவன்; எக்காலத்திலும் இருக்கும் அவன் மாறுபட்ட தன்மை உடையவன்; தேவர்களின் உலகை ஆளும் அந்த நாதன் தனக்கு என்று ஒரு செயல் இல்லாதவன்; தன்னை அணுகி வணங்குபவர்களுக்கு நல்ல வழித்துணையும் ஆவான் அவன்.

#29. உறவு ஆர் உளர்?

காண நில்லாய் , அடியேற்கு உறவு ஆர் உளர்?
நாண கில்லேன் உன்னை நான் தழுவில் கொளக்
கோணி நில்லாத குணத்து அடியார் மனத்து
ஆணியன் ஆகி அமர்ந்து நின்றானே.

நான் உன்னைக் காணும்படி வெளிப்பட்டு அருள்வாய்! எனக்கு உனையன்றி உறவு வேறு யார் உளார் கூறு! வெளிப்படும் உன்னைத் தழுவிக் கொள்ள நான் நாணுகில்லேன்! மனத் தூய்மை வாய்ந்த, குணம் மிகுந்த, அடியவர்கள் உள்ளங்களில் ஆணி வேரெனே உறுதியாக எழுந்தருளி இருக்கும் என் தலைவா வா!

#30. ஞானம் கருதியே!

'வான்நின்று அழைக்கும் மழைபோல் இறைவனும்
தான்நின்று அழைக்கும்கொல்' என்று தயங்குவார்;
ஆன்நின்று அழைக்கும் அதுபோல், என் நந்தியை
நான்நின்று அழைப்பது ஞானம் கருதியே.

வானம் தானே உவந்து முன்வந்து மழை பொழிவதைப் போலவே தானே வந்து அருள் மழை பொழிவார் ஈசன் எனத் தயங்கி நிற்பார் சிலர். கன்று ஒன்று தன் தாய்ப் பசுவை அன்புடன் அழைப்பது போல இன்று நான் ஈசனை அழைப்பது ஞானம் பெற விரும்புவதால்!

#31. இசைந்த வடிவினன்

மண்ணகத் தான்ஒக்கும், வானகத் தான்ஒக்கும்,
விண்ணகத் தான்ஒக்கும், வேதகத் தான்ஒக்கும்
பண்அகத்து இன்னிசை பாடல் உற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

இறைவன் மண்ணுலகில் வசிப்பவர்களுக்கு மனித உருவில் வந்து வெளிப்படுவான். வானுகத்தில் வசிப்பவர்களுக்கு இறைவன் வானவடிவில் ஒளிமயமாக வெளிப்படுவான். விண்ணுலகில் வசிப்பவர்களுக்கு இறைவன் தேவ வடிவில் வந்து வெளிப்படுவான். சித்திகளை விரும்புபவர்களுக்கு இறைவன் சித்தர் வடிவில் வந்து வெளிப்படுவான். நிறைவு பெற்ற மனதில் நின்று கொண்டு நாதத்தை வெளிப்படுத்தும் பெருமானிடம் அறிவின் இடத்தில நின்று நான் அன்பு பூண்டிருந்தேன்.

32. பாடிப் பணிவோம்

தேவர் பிரான், நம்பிரான் திசை பத்தையும்
மேவு பிரான், விரி நீர்உலகு ஏழையும்
தாவு பிரான், தன்மைதான் அறிவார் இல்லை
பாவு பிரான் அருள் பாடலும் ஆமே.

சிவ பெருமான் தேவர்களுக்குத் தலைவன்; சிவ பெருமான் நம் போன்றவருக்கும் தலைவன்; ஜீவராசிகளைப் பத்து திசைகளிலும் சூழ்ந்திருப்பான்; விரிந்த,நீரால் சூழப்பட்ட ஏழு உலகங்களைக் கடந்தவன்; அவனது தன்மையை அறிந்தவர் யாரும் இல்லை. அந்தப் பெருமானைப் பாடிப் பணிவோமாகுக.

33. நெஞ்சம் வாடுகின்றார்

பதிபல வாயது பண்டு இவ்வுலகம்
விதிபல செய்துஒன்றும் மெய்ம்மை உணரார்,
துதிபல தோத்திரம் சொல்லவல் லாரும்
மதி இலர் நெஞ்சினுள் வாடுகின்றாரே.

தொன்று தொட்டே இந்த உலகினில் பல வேறு தெய்வங்கள் இருந்துள்ளனர். அவர்களைத் தொழும் விதிகள் பலவற்றை ஏற்படுத்தியும் உண்மையை உணரவில்லை. துதித்து பாட வல்லவர்களும் சிவத்துடன் கலந்து பெறுகின்ற உண்மை அறிவைப் பெறவில்லை! அவர்கள் அமைதியின்றி நெஞ்சம் வாடுகின்றனரே.

34. புகழ்ந்து நின்றேன்

சாந்து கமழும் கவரியின் கந்தம் போல்
வேந்தன் அமரர்க்கு அருளிய மெய்நெறி
ஆர்ந்த சுடர் அன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

சிவபிரான் தேவர்களுக்கு அருளிய மெய்நெறி கலவைச் சாந்தில் வீசும் கஸ்தூரியைப் போலச் சிவமணம் வீசிக் கமழும். உலகில் திகழும். அந்த உண்மை நெறியில் செல்வதற்குத தேவை அரிய சுடர் போன்று வழிகாட்ட ஒரு பெரிய ஒளி. அதனை அளிப்பது அந்தப் பெருமானின் ஆயிரம் நாமங்கள். அவற்றை நான் இருக்கும் போதும் நடக்கும் போதும் ஓதுகின்றேன்.

35. திருமந்திரம்

ஆற்றுகில் லாவழி யாகு மிறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை யெட்டொடு
மாற்றுவ னப்படி ஆட்டவுமாமே.

பிறர் படைக்காத செந்நெறியில் திகழ்பவன் சிவபெருமான். அவனைப் போற்றுங்கள்; அவனைப் புகழுங்கள். அப்போது அவன் நம் சிரசில் கவிழ்ந்த நிலையில் இருக்கும் அஷ்ட தளக் கமலத்தை நிமிரச் செய்து விட்டு சன்மார்க்க நெறியில் நம்மைச் செலுத்துவான். அப்போது ஊர்த்துவ முகமான ஈசான முகம் ஒளிமயமாக விளங்கும்.

#36. அருள் பெறலாம்

அப்பனை நந்தியை ஆரா அமுதனை
ஒப்புஇலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.

உயிர்கள் அனைத்துக்கும் தந்தை அவன்; நம் அனைவரின் இறைவனும் அவன்; திகட்டாத அமுதம் போன்றவன் அவன்; தனக்கு ஒரு ஒப்பில்லாதவன் அவன்; வேண்டியவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியபடியே அருளும் ஓர் வள்ளல் அவன்; ஊழியின் உயர்ந்த தலைவன் அவன்; அவனை எவ்வழியிலாகினும் தொழுது வழிபடுங்கள்; இவ்வழியில் அவன் அருளைப் பெற இயலுமே.

#37. வான்மதி போல் ஊனில் நிற்பான்

நானும்நின்று ஏத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் றான் தழல்தான் ஒக்கும் மேனியன்;
வானில் நின்று ஆர் மதிபோல் உடல் உள்ளுவந்து
ஊனில் நின்று ஆங்கே உயிர்க்கின்ற வாறே.

நாள் தோறும் நிலையாக இருந்து நான் ஈசனை வழிபடுவேன். அதனால் தழல் போன்ற மேனி இறைவன் வெளிப்பட்டு நிற்பான். வானத்தில் கலைகளுடன் திகழும் திங்களைப் போல அவன் ஊன் பொருந்திய உடலில் மகிழ்வுடன் வந்து தோன்றுவான். சஹஸ்ர தளக் கமலத்தில் பிராண வடிவமாக ஒளிவீசுவான்.

#38. பிதற்று ஒழியேன்

பிதற்று ஒழியேன்பெரி யான்அரி யானை;
பிதற்று ஒழியேன் பிறவா உருவானைப்
பிதற்று ஒழியேன் எங்கள்பேர் நந்தி தன்னை;
பிதற்று ஒழியேன் பெருமைத்தவன் தானே.

பெரியவன், அரியவன் ஆகிய பெருமானை வழியாடுவதை நான் கைவிடவே மாட்டேன்! ஒரு தாயின் வயிற்றில் பிறவாதவனும், உருவம் உடையவும் ஆகிய பெருமானை வழிபடுவதை நான் கைவிடவே மாட்டேன்! என் பெருமானான இறைவனைச் சிவனை வழிபடுவதை நான் கைவிடவே மாட்டேன்! எப்போதும் அவனை வழிபடுவதாலேயே பெரிய தவம் செய்தவன் ஆவேன் நான்!

#39. ஈசன் அருள்

வாழ்த்தவல் லார்மனத்துள் உறு சோதியை,
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெருமான் என்று இறைஞ்சியும்
ஆத்தம் செய்து ஈசன் அருள் பெறலாமே.

திரு ஐந்தெழுத்தால் வணங்குபவர்களின் உள்ளத்தில் இறைவன் அறிவின் பேரொளியாகத் தோன்றுவான். பாசங்களில் இருந்து நீங்கியவன் அந்தப் பெருமான். உயிர்களிடத்தில் மகிழ்ந்து திளைக்கும் ஈசன் அவன். அவனை ஏத்திப் புகழுங்கள்; அவனிடம் இறைஞ்சுங்கள்; தன்னையே அவனுக்குத் தந்தால் அவன் நல்ல நண்பன் ஆவான். அப்போது அவன் அருளைப் பெறுவது நமக்கு மிகவும் எளிதாகும்.

#40. சடம் செய்யான்!

குறைந்து அடைந்து ஈசன் குரை கழல் நாடும்
நிறைந்து அடை செம்பொன்னின் நேர்ஒளி ஒக்கும்
மறைஞ்சு அடம் செய்து வாழ்த்தவல் லார்க்குப்
புறம் சடம் செய்யான், புகுந்து நின்றானே.

தாழ்ந்தும், பணிந்தும், மிகுந்த விருப்பத்துடன் ஒலிக்கும் கழல் அணிந்த ஈசனின் திருவடிகளை அடைவதற்கு ஒவ்வொருவரும் விரும்ப வேண்டும். நிறைந்த செம் பொன்னின் ஒளியை உடையவன் சிவன்.வஞ்சனையால்மறையாமல், குறும்புகள் செய்யாமல், வாழ்த்தும் மெய் அன்பர்களின் உடலைப் புறக்கணியாது அன்புடன் அவன் அதில் புகுந்து நிற்பான் சிவபெருமான்.

#41. இணங்கி நிற்பான்

சினம்செய்த நஞ்சு உண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்ற வல்லார்க்கு,
கனம் செய்த வாள்-நுதல் பாகனும் அங்கே
இனம்செய்த மான் போல் இணங்கி நின்றானே.

பாற்கடலில் சீறிச் சினத்துடன் எழுந்த கொடிய நெஞ்சை தான் உண்டு அருளியவன் தேவர்களின் தலைவன் ஆகிய நம் சிவபெருமான். கடின மனத்தைத் திருத்தி விளைநிலம் போல் ஆக்கி அவனை வணங்கினால், நாதஒலி காட்டும் அந்த மாதொரு பாகன், அந்தப் பண்பட்ட உள்ளத்தில் பெண் மானைக் கண்ட ஆண் மான் போல இணங்கி நிற்பான்.

#42. இல்லறவாசிகளுக்கும் அருளுவான்

போய் அரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகன் நான்முடி செய்து அதுவே நல்கும்;
மாயகம் சூழ்ந்து வரவல்லார் ஆகிலும்
வேயன தோளிக்கு வேந்து ஒன்றுந்தானே.

சிவபிரானை அடைந்து தோத்திரம் செய்பவர் அடையும் பயன் இது. நான்கு சிரங்கள் கொண்ட பிரம்மன் படைத்த பல பிறவிகள் எடுத்து மாயையுடன் கூடிய இல்லற பந்தத்தில் உழல்பவர்களே ஆயினும் அழகிய மூங்கில் போன்ற தோள்களை உடைய உமையின் நாதன் அவர்களிடமும் அன்புடன் வந்து பொருந்துவான்.

#43. நிறைந்து நிற்பான்

அரன்அடி சொல்லி, அரற்றி, அழுது
பரன்அடி நாடியே, பாவிப்ப நாளும்
உரன்அடி செய்து அங்கு ஓதுங்க வல்லார்க்கு
நிரன்அடி செய்து நிறைந்து நின்றானே.

திரு ஐந்தெழுத்தை தூய உள்ளத்துடன் இடைவிடாது ஓதி, அவன் பிரிவை ஆற்றாமல் அரற்றியும் அழுதும் திரிந்து, அவன் அடிகளையே எப்போதும் நாடுபவர்களுக்கு,அந்தத் திருவடிகளிலேயே அடங்கி நிற்க வல்லவர்களுக்கு, அவன் தன் திருவடிகளை உறுதியாகத் தருவான். மேலும் அவர்களிடம் ஒன்றி நிறைந்து நிற்பான்.

#44. அன்புள் விளங்குவான்

போற்றி என்பார் அமரர் புனிதன் அடி;
போற்றி என்பார் அசுரர் புனிதன் அடி;
போற்றி என்பார் மனிதர் புனிதன் அடி;
போற்றி என் அன்புள் விளங்க வைத்தேனே.

அமரர்கள் சிவபெருமானைப் போற்றுவர். அசுரர்கள் சிவபெருமானைப் போற்றுவர்; மனிதர்கள் சிவபெருமானை போற்றுவர். நானும் அந்தப் பெருமானைப் போற்றி வணங்கி என் அன்பினுள் அவன் விளங்குமாறு செய்தேன்.

(தேவர்கள் தம் சுய நலத்துக்காகப் போற்றுவர். ஞானிகள் எப்பயனும் கருதாமல் போற்றுவர். தேவர்கள் ஈசனை அன்பு இன்றிப் போற்றுவர். ஞானிகள் ஈசனை அன்புடன் போற்றுவர்.)

#45. வழிகாட்டி

விதிவழி அல்லதுஇல் வேலை உலகம்;
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை;
துதிவழி நித்தலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே.

கடல் சூழ் உலகு இறைவன் விதித்தபடி இயங்கும். வேறு விதமாக அதனால் இயங்க இயலாது. நாம் அடையும் இன்பமும் விதி வழிப்பட்டதே. அதுவும் இறைவனின் விதிக்கு மாறுபட்டதல்ல. துதிவழி நின்றால் பேரொளியாகிய சோதிப்பிரான் முக்தி பெறும் வழியை நமக்கு பகலவன் போலக் காட்டுவான்.

#46. மனம் புகுந்தான்

‘அந்திவண்ணா, அரனே, சிவனே’ என்று
சிந்தைசெய் வண்ணம் திருந்து அடியார் தொழ
‘முந்தி வண்ணா, முதல்வா, பரனே’ என்று
புந்தி வண்ணன் எம் மனம் புகுந்தானே.

“அந்தி வண்ணச் செம்மேனி உடையவனே! அரனே! சிவனே ! “என்று ஏத்தித் தொழுவர் தம் சிந்தையைச் செப்பனிட்ட அடியவர்கள். “அனைத்துக்கும் பழமையானவனே! முதல்வனே! அனைத்துக்கும் மேலானவனே!” என் நான் தொழ ஞான வடிவினன் ஆக அவன் என் மனம் புகுந்தான்!

(அந்திவண்ணா! அரனே! சிவனே! - உருவ வழிபாடு முந்திவண்ணா முதல்வா! பரனே! - அருவ வழிபாடு)

#47. நினையாவிடில் நின் இன்பம் இல்லை!

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்;
நினைவுள் இருந்தவர் நேசத்தில் நிற்பர்;
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாதவர்க்கு இல்லை நின்இன்பம் தானே.

சிவபெருமான் உயிர்களிடத்தில் கோவில் கொண்டுள்ளான். இந்த உண்மையை உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்பத் தம் உடலைப் பேணுகின்றவர்கள் மாதவம் செய்பவர்கள் ஆவர். அந்தப் பெருமான் தம் நெஞ்சத்தில் எழுந்தருளி இருக்கும் தன்மையை அறிந்தவர்கள் அவனிடம் மாறாத அன்பு பூணுவர். பனை மரத்தில் இருக்கும் பருந்து சுவையான பனம் பழங்களை உண்ண எண்ணாமல் இழிந்த உணவை நாடிச் செல்கின்றது. பருந்து பனம் பழத்தின் பெருமை அறியாது அந்த இன்பத்தை இழக்கின்றது. உன் பெருமையை அறியாதவர்கள் அதுபோன்றே உன் இன்பத்தை இழக்கின்றார்கள்.

#48. விடியா விளக்கு

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கு என்று மேவி நின்றேனே.

அடியவர்கள் தொழும் அமரர் பிரானை என் முடியால் தொழுது பணிந்து வணங்கினேன். அவனையே இடைவிடாது எண்ணினேன். உலகத்தார்களுக்கு அனைத்தையும் அருளும் ஈசனை, எந்தையை அனைத்துக்கும் மேலான அணையா விளக்கு என்று நினைத்து இருந்தேன்.

#49. முக்தி பெறலாம்

நரைபசு பாசத்து நாதனை உள்ளி,
உரைபசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்
திரைபசு பாவச் செழும்கடல் நீந்திக்
கரைபசு பாசம் கடந்து, எய்தலாமே.

பழமையான ஜீவன், பாசத்தளை இவற்றின் தலைவனை எண்ணி; பசு என்றும், பாசம் என்றும் கூறப்படுபவற்றின் தன்மையை அறிந்து; இவற்றின் தலைவனாகிய சிவனோடு ஒன்றாகக் கூட வல்லவர்கள்; அலைகள் போல வரும் பண்டு செய்த ஜீவனின் பாவக் கடலை நீந்தி; பசு, பாசங்களைக் கடந்து முக்தி என்னும் கரையை அடைய முடியும்.

#50. வழிபடும் வகை

சூடுவன்; நெஞ்சிடை வைப்பன்; பிரான் என்று
பாடுவன்; பன்மலர்தூவிப் பணிந்து நின்று
ஆடுவன்; ஆடி, அமரர் பிரான் என்று
நடுவன்; நான் இன்று அறிவது தானே.

இறைவனின் திருவடிகளை என் முடிமேல் சூடுவேன்; அவற்றை என் நெஞ்சத்தில் வைத்துப் போற்றுவேன்; என் தலைவனைப் போற்றிப் பாடுவேன்; பல வண்ண மலர்களைக் கொண்டு பூசிப்பேன்; அவன் பெருமையை எண்ணிக் கூத்தாடுவேன்; தேவர்களின் தேவன் என்று அவனையே நாடுவேன்; அவனை வழிபட நான் செய்வது இவையே ஆகும்.

10.01 பாயிரம் - 02. வேதச் சிறப்பு

#51. வேதம் ஓதி வீடு பெறலாம்

வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு, மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

வேதம் கூறாமல் விட்டு விட்ட அறம் எதுவும் இல்லை. நாம் ஓதத் தகுந்த நீதிகள் எல்லாம் வேதத்தில் உள்ளன. வாதங்களை விட்டு, வேதங்களை ஓதிய அறிஞர்கள் அதன் மூலமே முக்தி அடையும் பேறு பெற்றார்கள்.

#52. மெய்ப்பொருள் காட்டவே!

வேதம் உரைத்தானும் ஆகிலன்
வேதம் உரைத்தாலும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே.

வேதத்தை உரக்கப் படிப்பதனால் மட்டும் ஒருவன் வேதம் அறிந்த வேதியன் ஆகிவிட மாட்டான். வேதத்தை உரைத்த இறைவன் மக்களுக்கு பிரம்ம தத்துத்தை நன்கு விளக்கவும், வேதியர்கள் வேள்வி செய்யும் பொருட்டும், உண்மைப் பொருளை உணர்த்துவதற்காகவும், வேதத்தைக் கூறி அருளி உள்ளான்.

#53. கருக் குருவானவன்

இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய் உணர் வேதத்துள் ஓங்கி,
வெருக்கு உருவாகிய வேதியர் சொல்லும்
கருக்குரு வாய் நின்ற கண்ணனும் ஆமே.

மந்திர வடிவானது அழகிய வேதம்.அதில் உள்ளதை உருக்கும் உணர்வாக விளங்கி, அச்சத்தை ஏற்படுத்தும் ஒலி அலைகளைக்கொண்ட வேத மந்திரத்தில் நுண்ணிய வடிவில் விளங்குவது முக்கண்ணனாகிய சிவபெருமானே ஆவான்.

#54. வேதாந்தம் ஓதும்

திருநெறி ஆவது செய்து அசித்து அன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறியாம் சிவமரம் நெறி கூடும்
ஒருநெறி; ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

திருநெறி எனப்படும் ஒருநெறி இதுவே ஆகும். அறிவு, அறியாமை அற்றதாகிய, வீடுபேறாகிய இறைவனை எண்ணி, குருவினால் உணர்த்தப்பட்டு, சிவத்துடன் இணையும் ஒப்பில்லாத நெறியாகும். வேத முடிவாகிய உபநிடதம் கூறுவதும் இதுவே.

#55. சிவனை அறிந்தவர் எவர்?

ஆறு அங்கமாய் வரு மாமறை ஓதியைக்
கூறு அங்கம் ஆகக் குணம் பயில்வார் இல்லை,
வேறு அங்கம் ஆக விளைவு செய்து அப்புறம் ,
பேறு அங்கம் ஆகப் பெருக்குகின்றாரே.

ஆறு அங்கங்கள் கொண்ட வேதத்தைத் தந்தவன் ஈசன். அந்த இறைவனின் இயல்பினை, உடல் அங்கங்களைக் கொண்டு அறிந்து கொண்டவர் எவரும் இல்லை. இறைவனைத் தம்மிலும் வேறுபட்டவனாக எண்ணிக்கொண்டு தம் விருப்பங்களை பெருக்கித் துன்பம் அடைகின்றார்களே!

#56. மாறுபட்டு அழிவர்

பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்
வேட்டு விருப்பார், விரதம் இல்லாதவர்
ஈட்டும் இடம் சென்று இகலல் உற்றாரே.

பாட்டும், அதன் இசையும், அதற்கேற்ற நடனமும் ஆடும் கணிகையரின் ஆட்டம் நிறைந்த உலகம் ஆகும் இது.வேதங்கள் காட்டும் நன்னெறியில் நில்லாதவர்கள், விரதங்கள் எதையும் கைக் கொள்ளாதவர்கள், ஆயினும் வேள்வியைச் செய்யும் விருப்பம் கொண்டவர்கள் தம் மாறுபாட்டினால் பல விதத் துன்பங்களை அனுபவிப்பார்கள்.

10.01 பாயிரம் - 03. ஆகமச் சிறப்பு

#57. ஆகமச் சிறப்பு

அஞ்சன மேனி அரிவை ஓர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்று உள ஆகமம்;
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

கருநிறம்கொண்ட உமை அன்னையின் நாதன் அருளினான் நமக்கு இருபத்தெட்டு ஆகமங்கள். அறுபத்தறுவரும் அஞ்சலி செய்து ஆகமங்களை அவன் ஐந்தாம் திருமுகத்தால் கூறக் கேட்டனர்.

#58. அண்ணல் அருள்

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்;
எண்ணி நின்று அப்பொருள் ஏத்துவன் நானே.

ஆன்மாக்களின் மீது கொண்ட கருணையினால் அண்ணல் அளித்தான் எண்ண இயலாத இருபத்தெட்டுக் கோடி நூறாயிரம் ஆகமங்கள். தேவர்கள் இவற்றின் வழியே இறைவன் பெருமையைக் கூறினர். நானும் அவ்வழியைப் பின்பற்றி அப் பொருளை வணங்குவேன்.

59. அற நெறி உரைக்கும்

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலா னறஞ் சொன்னவாறே.

பதினெட்டு மொழிகளை நன்கு அறிந்தவர்கள் அறிஞர்கள்.அவர்கள் ஆகமம் கூறும் பொருளை நன்கு உணர்ந்தவர்கள். அறிஞர்கள் அறிந்த அந்த பதினெட்டு மொழிகளும் கூறுகின்றன அண்டங்களுக்கு முதல்வனாகிய சிவபெருமான் கூறும் அறத்தையே.

#60. நீர் மேல் எழுத்து

அண்ண லருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணி லமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணி லெழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மே லெழுத்து வாகுமே.

சிவபெருமான் நமக்கு அருளிய இந்த ஆகமங்கள் விண்ணவர்களுக்கும் அனுபவத்தில் கிடைக்காது. எழுபது கோடியே நூறாயிரம் என்று நாம் அவற்றைக் கணக்கிட்டாலும், அனுபவம் இல்லாவிடில் அவை நீர் மேல் எழுத்துப்போல வீணாகி விடும்.

#61. ஓங்கி நின்றான்

பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரன்ஆகி ஆகமம் ஓங்கி நின்றானே.

சிவன் மிகவும் மேன்மை வாய்ந்தவன். பரஞானம், அபரஞானம் என்னும் இரண்டையும் அவன் உலகத்தினருக்கு உவந்து அளிக்கின்றான். உலகைத் தாங்குபவனும் அந்தப் பெருமானே. சிவதர்மத்தை அவனே அனைவருக்கும் அருள்கின்றான். அமரர்கள் அவனை அரனாக எண்ணி அர்ச்சிக்கின்றனர். சிவனே ஆகமத்தில் அறிவாக ஓங்கி விளங்குகின்றான்.

#62. நவ ஆகமம்

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே.

பரம் பொருளாகி, குருவாகிய பரமசிவத்திடமிருந்து சக்தியும், சதாசிவமும், மகேசரும், உருத்திர தேவரும், திருமாலும், நான்முகனும் அவரவர் அறிவில் விளங்கிய ஒன்பது ஆகமங்களை குருமுகமாகப் பெற்றனர்.

#63. நவ ஆகமங்கள்

பெற்றநல் லாகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீர முயர்சிந்திய வாதுளம்
மற்றவ்வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்ற நற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

குருமுகமாகப் பெற்ற ஒன்பது ஆகமங்கள் இவை: காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம்,கலோத்திரம், சுப்பிரம், மகுடம் என்பவை. இந்த ஒன்பது ஆகமங்களின் சரமே திருமந்திரம் ஆகும்.

#64. உணராவிடில் வீணாகும்

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்இலிகோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்
எண்இலி கோடியும் நீர் மேல் எழுத்தே.

சிவபெருமான் அருளிய சிவாகமாங்கள் எண்ணற்றவைகள் ஆகும் எனினும் அவற்றில் இறைவன் சொன்ன மெய்ப் பொருளை உணராவிடில் அவை நீர் மேல் எழுதிய எழுத்துப் போல பயனற்றவை.

#65. உணராவிடில் வீணாகும்

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்இலிகோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்
எண்இலி கோடியும் நீர் மேல் எழுத்தே.

சிவபெருமான் அருளிய சிவாகமாங்கள் எண்ணற்றவைகள் ஆகும் எனினும் அவற்றில் இறைவன் சொன்ன மெய்ப்பொருளை உணராவிடில் அவை நீர் மேல் எழுதிய எழுத்துப் போலப் பயனற்றவை.

#66. அறிய இயலாது

அவிழ்க்கின்றவாறும், அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்றவாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே.

உயிர்களைப் பந்தத்திலிருந்து நீக்கும் முறையையும், உயிர்களை பந்தத்தில் கட்டும் முறையையும், இமைக்கும் தொழில் ஒழித்து உயிர் போகும் முறையையும், தமிழ்ச் சொல், வடசொல் இரண்டிலும் கூறி உணர்த்துகின்ற சிவனை ஆகம அறிவால் மட்டும் அறிந்து கொள்ள முடியுமோ?

10.01 பாயிரம் - 04. குரு பாரம்பரியம்

67. நந்தி அருள் பெற்ற எண்மர்

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி , வியாக்கிரமர்
என்ற இவர், என்னுடன் எண்மரும் ஆமே.

நந்தியின் அருள் பெற்ற குருநாதர்கள் எண்மர் ஆவர். சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் நால்வர் ஆவர். இவர்களோடு சிவயோக முனிவர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் மூவரையும் என்னையும் சேர்த்தால் எண்மர் ஆவோம்.

#68. நந்தியின் அருள்

நந்தியின் அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்;
நந்தி அருளாலே மூலனை நாடினோம்;
நந்தி அருளாவது என் செயும் நாட்டினில்
நந்தி வழி காட்ட நான் இருந்தேனே.

சிவன் அருளால் குருநாதர் ஆகும் தகுதியை அடைந்தோம். சிவன் அருளாலே மூஆதரதில் விளங்கும் மூர்த்தியை நாடினோம். சிவன் அருள் எதையும் சாதிக்க வல்லது இந்த பூவுலகினில். சிவன் வழி காட்ட மூலாதாரத்தில் இருந்து மேலே ஏறி தலையின் மேல் சஹஸ்ர தளத்தில் நான் நிலை பெற்றேன்.

#69. மாணவர் எழுவர்

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமனுத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவருமென் வழியாமே.

திருமந்திர உபதேசத்தை முறையாகப் பெற்ற என் மாணவர்கள் எழுவர். மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி மற்றும் கஞ்ச மலையான் என்னும் எழுவர் என் வழித் தோன்றிய மாணவர்கள் ஆவார்.

#70. நால்வர் உபதேசம்

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப் பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான் பெற்றதெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரானார்களே.

சனகன் முதலிய நால்வரும் திசைக்கொருவர் என்று நாலு திசைக்கும் நான்கு குரு நாதர்கள் ஆவார்கள். அவர்கள் நால்வரும் தாம் பெற்ற பல்வேறு அனுபவங்களை மற்றவருக்கு எடுத்துரைத்து மேன்மையான குருநாதர் ஆயினர்.

71. சிவன் செய்த உபதேசம்

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை யிறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே.

சிவபெருமான் சிவயோக முனிவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் என்ற மூவர்க்கும், மற்றும் சனகர் முதலிய நால்வருக்கும் உபதேசம் செய்தார். அது பிறப்பு இறப்பு என்னும் இரண்டையும் ஒழிக்கும் பெருமை பெற்ற நல்ல நெறியாகும்.ஆதவன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர் வடிவான ஈசன் நமக்கு குறைந்த பெருமையை அளிப்பவன் அல்லவே அல்ல.

#72. கடன்கள் தடை படவேண்டாம்

எழுந்து நீர் பெய்யினும் எட்டு திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்யுமினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர் சடையோடே
அழுந்திய நால்வருக் கருள் புரிந்தானே.

"பெரிய மழை பொழிந்து எட்டு திசைகளிலும் நீர் எழுந்தாலும் முன்னேறத் தேவையான கடமைகளை விடாது செய்யுங்கள்!" எனக் கொழுவிய, பவழம் போன்ற, செவ்வொளி வீசும் குளிர்ந்த சடைமேல், அன்பு கொண்டு அதில் அழுந்தி இருந்த சனகர் முதலிய நால்வருக்கும் ஈசன் அருள் புரிந்தானே.

10.01 பாயிரம் - 05. திருமூலர் வரலாறு

73. ஆகமம் செப்பலுற்றேன்

நந்தி திருஅடி நான் தலைமேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து, போற்றி செய்து
அந்தி மதி புனை அரனடி நாள்தொறும்
சிந்தை எய்து ஆகமம் செப்ப லுற்றேனே.

என் குருவாகிய சிவனின் இரு திருவடிகளை என் சிரமேற்கொண்டேன். அந்தப் பெருமானை என் அறிவில் நிறுத்தி நான் வணங்கி வழிபட்டேன். புருவ மத்தியாகிய முச்சந்தியில் பொருந்தியுள்ள மதியணி நாதனின் சிறந்த திருவடிகளை தியானித்து இந்தத் திருமந்திரம் என்னும் இந்த ஆகம நூலைத் தொடங்குகின்றேன்.

#74. தனிக் கூத்துக் கண்டேன்!

செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள் நந்தி தாள் பெற்றத்
தப்புஇலா மன்றில் தனி கூத்துக் கண்டபின்
ஒப்பில் ஏழு கோடி யுகம் இருந்தேனே.

சிவாகமம் சொல்ல வல்லவன் என்ற தகுதியைப் பெற்றேன். அந்தத் தகுதியை அளித்த குருவின் திருவடிகளைப் பெற்றேன். தலை உச்சியில் உள்ள சிதாகாசத்தில், ஒப்பில்லாத சூரிய சந்திரர்களின் ஒளிக் கதிர்களின் அசைவுகளை நான் கண்டு தரிசித்தேன். ஏழு ஆதாரச் சக்கரங்களும் விளங்குமாறு நெடுங்காலம் அமைந்திருந்தேன்.

உடலில் உள்ள ஏழு ஆதாரச் சக்கரங்கள் உள்ளிருந்து வெளிப்படும் கதிரவனின் கலைகளையும், வெளியிருந்து உள்ளே புகும் சந்திரக் கலைகளையும் இயக்குகின்றன. சிவயோகியர் ஒளிக்கதிர்கள் உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் இணைவதை அறிவர். உடலே ஆன்மா என்று மயங்கி நிற்கும் சராசரி மனிதர்கள் இதனை அறிய முடியாது.

#75. அருந்தவச் செல்வி

இருந்தவக் காரணங் கேளிந்திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியினாலே.

இங்ஙனம் நான் ஆதார சக்கரங்களில் பொருந்தி இருந்த காரணத்தைக் கேள் இந்திரன் என்னும் மாணவனே! புவனங்களின் நாயகியாகிய பராசக்தி அங்கு பொருந்தி உள்ளாலள். அந்த அருந்தவத்துக்கு உரிய செல்வியை பக்தியுடன் அடைந்து வணங்கி விட்டு அவளுடன் நான் மீண்டும் திரும்பினேன்.

சஹஸ்ர தளத்தில் உறையும் சிவனை நோக்கிச் செல்லும் பொழுது மூலதாரத்தில் மண்டலமிட்டு இருக்கும் குண்டலினி சக்தி நிமிரும். ஆதாரச் சக்கரங்கள் வழியே சிவத்தை அடையும். அதனுடன் இணையும். சமாதிக்குப் பின் மீளும் போது குண்டலினி சக்தியும் கீழே இறங்கி விடும்.

#76. பாராமுகம் உண்மையை உணர்த்தியது

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன் மனம் நீங்கி
உதாசனி யாதுடனே உணர்ந்தோமால்.

தத்துவத்தையும், முத்தமிழையும், வேதத்தையும் பெரிதும் நுகர்ந்து அனுபவித்தேன் நான். அந்த வேளையில் உடலுக்கு இதமான உணவையும் கூட உண்ணாமல் இருந்து வந்தேன் நான். மனம் தெளிந்து விருப்பு வெறுப்பு என்ற இரண்டும் இல்லாமல் நான் உதாசினமாக இருந்ததால் உண்மைப் பொருளை உணர்ந்தேன்.

#77. திருக் கூத்தைக் கூற வந்தேன்!

மாலாங்க னேயிங்கு யான் வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளோடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே.

மாலாங்கன் என்னும் என்னுடைய மாணவனே! தென் திசைக்கு நான் வந்த காரணம் இதுவே. நீல நிற மேனியையும், சிறந்த அணிகலன்களையும் உடைய சிவகாமி தேவியுடன், மூலாதாரத்தை இடமாகக் கொண்டு சதாசிவன் நடத்தும் ஐந்தொழிக் கூத்தின் சிறப்பை விளக்கும் வேதத்தை எல்லா மக்களுக்கும் எடுத்துக் கூறுவதற்காகவே.

உலகைப் படைக்கும் ஆற்றல் நீல ஒளியில் உள்ளது. எனவே பராசக்தி தேவியின் நிறம் நீலம். சிவந்த ஒளி அறிவு மயமானது. அறிவு சிவ மயமானது. இந்த இரண்டு ஒளிகளின் சேர்க்கையால் உலகம் படைக்க படுகின்றது. ஐந் தொழில்கள் நடக்கின்றன. இதுவே யோகத்தின் ரகசியம் ஆகும்.

#78. பதம் சேர்ந்திருந்தேன்

நேரிழை ஆவாள் நிரதிச யானந்தப்
பேருடையாள்; என் பிறப்பு அறுத்து ஆண்டவள்;
சீருடையாள்; சிவன் ஆவடு தண்துறைச்
சீருடையாள் பதம் சேர்ந்திருந்தேனே.

சிறந்த அணிகலன்களை அணிந்தவள் பராசக்தி. சிவானந்தவல்லி என்னும் பெயர் பெற்றவள். என் பிறப்பை நீக்கி என்னை ஆட்கொண்டவள். எல்லையில்லாத சிறப்பை உடையவள் அவள். ஜீவர்களைப் பக்குவம் அடையச் செய்வதற்காகச் சிவன் எழுந்தருளிய தண்டில் சக்தியும் பொருந்தி இருப்பாள். அத்தகைய தேவியின் திருவடியில் நான் சேர்ந்திருந்தேன்.

#79. நாமங்களை ஓதினேன்

சேர்ந்திருந்தேன் சிவமங்கை தன்பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்துறை;
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்;
சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே.

உமையொரு பாகனாகிய சிவபெருமனைச் சேர்ந்து வழிபட்டேன். ஜீவர்களைப் பக்குவம் செய்யும் சிவபெருமான் உறையும் தண்டின் உச்சியில் உள்ள சஹஸ்ர தளத்தில் சேர்ந்திருந்தேன். சிவம் என்னும் அறிவின் நீழலில் நான் சேர்ந்திருந்தேன். அவ்வமயம் நான் சிவன் நாமங்களை ஓதியபடி இருந்தேன்.

#80. இரவு பகல் அங்கு இல்லை!

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி;
இருந்தேன் இராப் பகல் அற்ற இடத்தே;
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே;
இருந்தேன் என் நந்தி இணையடிக் கீழே.

எண்ணில்லாத காலம் இந்த உடலில் தங்கி இருந்தேன். இரவு பகல் என்னும் வேறுபாடுகள் இல்லாத சுயம்பிரகாசவெளியில் நான் தங்கி இருந்தேன். தேவர்கள் போற்றும் பதத்தில் நான் இருந்தேன்.என் குருநாதனான சிவபெருமானின் திருவடிகளில் நான் பொருந்தி இருந்தேன்.

81. தமிழ் செய்யப் படைத்தான்

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது?
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்;
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

பின்னால் தயங்கி நின்று மக்கள் மீண்டும் ஏன் பிறவியைப் பெறுகின்றனர்? முந்தைய பிறவிகளில் நன்கு முயன்று தவம் செய்யாத காரணத்தினால்! நான் நல்ல தவம் செய்திருந்தேன். இறைவன் எனக்கு நல்ல பிறவி தந்தான். தன்னைப் பற்றித் தமிழில் நூல் செய்யப் பணித்து, எனக்கு நல்ல பிறவியும், அதற்குத் தேவையான ஞானத்தையும் நல்கினான் என் குரு சிவபெருமான்.

#82. திருவடியில் பொருந்தி இருந்தேன்

ஞானத் தலைவி தன் நந்தி நகர் புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப் பாலாட்டி நாதனை அர்ச்சித்து
நானுமிருந்தேன் நற் போதியின் கீழே.

ஞானத் தலைவியான சக்தியுடன் சிவன் விளங்கும் நகரில் புகுந்தேன். ஊனம் இல்லாத ஒன்பது முடிவுகளின் சந்திப்பில் இருந்து கொண்டு, சிவனைத் தோத்திரம் செய்தென். அறிவு மயமாகிய அவன் திருவடிகளின் கீழே நானும் இருந்தேனே.

‘ஒன்பது முடிவுகளின் சந்திப்பு’ என்பது ஏழு ஆதாரச் சக்கரங்கள், நாதம், பிந்து என்ற ஒன்பது இடங்களைக் குறிக்கும்.

#83. வான் வழியே வந்தேன்

செல்கின்ற வாற்றில் சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானது மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவரசுரர் நரர் தம்பால்
ஒல்கின்ற வான் வழியூடு வந்தேனே.

கயிலையில் இருந்து வரும் பொழுது, சிவபெருமானை நினைத்து மன்மதனை வெல்லும் ஆற்றல் கொமண்ட முனிவர்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் இவர்களிடம் உள்ள நுட்பமான விண் வழியே நான் வந்தேன்.

#84. அத்தன் அருளினான்

**சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தமமாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே.**

சித்தத்தில் விளங்கும் நூல்களில் சிறந்தது வேதம். சொற்களே வேதத்தின் உடல் ஆகும் என்றால் உற்பத்தியாகும் அந்த உடலில் வேதத்தின் பொருள். இறைவன் இவற்றைத் தன் கருணையால் எனக்கு அளித்தான்.

#85. சிவம் வந்து பொருந்தும்

**நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்;
வான்பற்றி நின்ற மறைப்பொருள், சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வு உறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.**

நான் பெற்ற இன்பத்தை இந்த உலகம் முழுவதும் பெறட்டும். வானைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன் சிவபெருமான் அறிவே வடிவாக அமைந்தவன் ஆவான் நம் சிவபெருமான். அவனைப் பற்றிச் சிந்தித்தால் சிரசில் ஓர் உணர்வு உண்டாகும். அந்த உணர்வை நாம் முயன்று பற்றிக் கொண்டோம் என்றால் அந்த சிவம் நம்மைத் தேடி வந்து நம்மிடம் பொருந்தி விடும்.

#86. உறைப்பொடு ஓதவேண்டும்

**பிறப்பு இலி நாதனை, பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடி நின்று ஓதலும் ஆமே.**

பிறப்பும் இறப்பும் இல்லாதவன் சிவபெருமான். அவன் திருப் பெயர் நந்தி என்பது ஆகும். விண்ணுலகத்தோர் சென்று வணங்குவர் சிவனை. உள்ளத்தில் அவனை மறவாதவர்கள் மந்திர மாலையால் பக்தியுடன் பாராயணம் செய்து அவன் அருள் பெறலாம்.

#87. மிகாமல் வைத்தான்

**அங்கி மிகாமை வைத்தான் உடல்; வைத்தான்
எங்கும் மிகாமை வைத்தான் உலகு ஏழையும்;
தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமை வைத்தான் பொருள்தானுமே.**

உடலை நமக்கு அளித்தவன் சிவ பெருமான். அந்த உடலில் ஜடராக்னியை மிகாமல் வைத்தான். பூவுலகம் கடல் பொங்கி அழியாமல் இருப்பதற்கு வடவாக்கினியை சிவன் கடலில் மிகாமல் வைத்தான். உள்ளத்தில் குழப்பம் தங்கி மிகாமல் இருப்பதற்காகச் சிவன் தந்தான் தமிழ் ஆகமமான திருமந்திரம். அத்தனை பொருட்களும் பொங்கி மிகாமல் இருக்க
இந்த திருமந்திரத்தில் வைத்தான் சிவபெருமான்.

#88. படி கண்டிலர்!

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண் டேன் என்றயன் பொய்மொழிந் தானே.

"சிவ பெருமானின் திருவடிகளையும் திருமுடியையும் காண்போம்" என்று எண்ணினர் அரியும் அயனும் ஒருமுறை. எத்தனை முயன்றும் அடி முடியைக் காணவே முடியவில்லை. மீண்டும் பூமியில் சந்தித்தனர் இருவரும். "நான் அடியைக் கண்டிலேன்!" என்று உண்மை உரைத்தார் அரி. "நான் முடியைக் கண்டேன்" என்று பொய் உரைத்தான் அயன்.

#89. என் முடி மீது தன் அடி வைத்தான்!

பெற்றமும் மானும் மழுவும் பிரிவுஅற்ற
தற்பரன் கற்பனை ஆகும் சராசரத்து
அற்றமும் நல்கி, அடியேன் சிரத்தினில்
நற்பதமும் அளித்தான் எங்கள் நந்தியே.

காளை, மான், மழு இவற்றைப் பிரியாதவன் அனைத்துக்கும் மேலான நம் சிவபெருமான். கற்பனையாக அமைந்தது இந்த உலக வாழ்வு. இதிலிருந்து எனக்கு ஒழிவைத் தந்தான் சிவன். என் சிரம் மீது தன் திருவடிகளைச் சூட்டினான்!

90. முற்றும் விளக்கினேன்

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை, மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை, அச்சிவம் தன்னை யாகோசர
வீயத்தை முற்றும் விளக்கி யிட்டேனே.

அறியப்படும் பொருளையும் (ஞேயம், அறியும் அறிவையும் (ஞானம்), அறிபவனையும் (ஞாதுரு) மாயையின் விவரங்களையும், சுத்த மாயையில் விளங்கும் பரை முதலிய சக்தியின் கூட்டத்தையும், அச்சக்திகளில் விளங்கும்

சிவத்தையும், வித்தாகிய சிவத்தின் பிரபாவத்தையும் இவை அனைத்தையும் நான் திருமந்திரத்தில் விளக்கினேன்.

#91. அவன் ஆணையிட்டான்

விளக்கிப் பரம் ஆகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கு அறும் ஆனந்தக் கூத்தன் சொற்போந்து
வளப்பின் கயிலை வழியில் வந்தேனே.

இவற்றை எனக்கு நன்றாக விளக்கியவன் நம் சிவபெருமான். அகோசர வித்து நிலையில் இருப்பான் அறிவு மயமான ஜோதியாக. அளவில்லாத பெருமைகளை உடையவன் அந்த ஆனந்த நந்தி. அசைவற்று இருக்கும் அந்த ஆனந்த நடராசன் இட்ட ஆணையின் படி சிறந்த கயிலாய மலையிலிருந்து நான் இங்கே வந்தேன்.

#92. மெய்ஞானம் தந்தான்

நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்;
நந்தி அருளால் மெய் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான்இருந் தேனே.

சிவகுருவின் அருளால் நான் மூலாதாரத்தில் உள்ள ருத்திரனை நாடினேன். சிவகுருவின் அருளால் நான் சதாசிவன் என்னும் பெயர் பெற்றேன். சிவகுருவின் அருளால் நான் உண்மையான ஞானத்தைப் பெற்றேன். சிவகுருவின் அருளால் நான் நிலை பெற்றிருந்தேன்.

#93. நாதாந்ததில் வீசும் பொன்னொளி

இருக்கில் இருக்கும் எண்இலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே.

இருக்கு வடிவான வேதத்தில் எண்ணற்ற மந்திரங்கள் உள்ளன. மூலாதாரத்தில் உள்ள சிவசக்தி மேலே சென்று உச்சியை அடையும். மந்திரங்கள் நாத மயமானவை. அவை பிரணவத்தில் முடிவாகும், பிரணவம் முடிந்த நாதாந்த நிலையில், சூரிய சந்திரர்களின் கதிர் ஒளியில், பிரணவ உச்சியில், ஆன்மாவானது பேரொளி மயமாக விளங்கும்.அந்நிலையில் அது பொன்னொளி போன்ற கிரணங்களுடன் ஒளி வீசும்.

#94. எப்போதும் புகழ்வேன்

பிதற்றுகின்றேன் என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத்து இரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கு ஒளிவண்ணன் எம்மானை
இயல் திகழ் சோதி இறைவனும் ஆமே.

10.01 பாயிரம் - 06. அவையடக்கம்

95. வேர் அறியேன்

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை;
யார் அறிவார் இந்த அகலமும் நீளமும்;
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்று; அதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே.

எம் பிரான் நந்தியின் பெருமையை யார் அறிவார்? அவன் நீளத்தையும், அகலத்தையும், பரப்பையும் யார் அறிவார்? அவன் தனக்கென்று ஒரு பெயரோ, உருவமோ இல்லாத பெருஞ்சுடர். அவன் வேரைக் கூட அறியாத நான் அவனைப் பற்றிப் பேசுகின்றேன். [வேர் = பாதங்கள்]

அவன் திருவடிகள் பாதாளம் ஏழுக்கும் கீழே உள்ளன. திருமால் அவற்றைத் தேடித் தேடித் தோற்றுப் போனான்.

நந்தி என்னும் பெயர் கொண்ட இறைவனை நான் புகழ்வேன். இரவும், பகலும் அவனையே எண்ணி நான் தியானிப்பேன். ஸ்வயம் பிரகாசியாகிய அவனை நான் அடைய முயல்வேன். இயற்கையிலேயே ஒளி வடிவானவன் நம் சிவபெருமான்.

#96. நெறி அறிகிலேன்

பாடவல்லார் நெறி பாடவறிகிலேன்
ஆடவல்லார் நெறி யாடவறிகிலேன்
நாடவல்லார் நெறி நாட வறிகிலேன்
தேடவல்லார் நெறி தேடகில்லேனே.

சிவ பெருமானின் புகழைப் பாட வல்லவர்கள் நெறியில் சென்று பாட வல்லவன் அல்ல நான்! பக்தி பரவசத்துடன் ஆட வல்லவர்களின் நெறியில் சென்று ஆட வல்லவன் அல்ல நான்! ஞான நெறியில் சென்று அவனை நாடவல்லவர்கள் போல அவனை நாடவும் நான் அறிகிலேன். உடலில் அவனைத் தேடி, அவன் காட்சிக்காக ஏங்கி, யோகநெறியில் நின்று ஆராய்வதையும் அறிகிலேன்!

#97. உணருவது அரிது

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை யுள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
முன்னும் அவனை உணரலும் ஆமே?

நிலைபெற்ற வேதங்களை முனிவர்கள் ஓதுகின்ற பொழுது அதன் ஸ்வரங்களின் நாதத்தில் வெளிப்படுவான் பெருமான். உலகத்தைப் படைத்த நான்முகனும், அவன் தந்தையாகிய திருமாலும் சிவபெருமானின் சிறப்பை அறிய முடியுமா?

#98. பயன் அறியார்

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முக்திக்கு இருந்த முனிவரும் தேவரும்
இத்துடன் வேறாய் இருந்து துதி செயும்
பத்திமை ஆல் இப் பயன் அறியாரே.

குருவாக வந்து சிவன் தத்துவ ஞானத்தைப் போதித்து திருக் கயிலை மலையின் அடிவாரத்தில். முக்தியை விரும்பும் முனிவர்களும் தேவர்களும் இந்தத் தத்துவ ஞானத்தை வேறாகி இருந்து ஓதுவதால் அதன் சிறந்த பயனை பெற மாட்டார்கள்.

அஹங்காரம் உள்ளவர்கள் இறைவனை அன்னியமாகக் கருதி வழிபடுவார்கள். அஹங்காரம் அழிந்ததும் அவர்களின் அந்நிய பாவம் மறைந்து விடும். பயன் கிடைக்கும்.

10.01 பாயிரம் - 07. திருமந்திரத் தொகைச் சிறப்பு

#99. ஞாலத் தலைவன்

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலமறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

என்னும் நான் உரைத்துள்ளேன் மூவாயிரம் தமழ் மந்திரங்கள் கொண்ட இந்தத் திருமநதிரம். உலகத்தவர் உணர்ந்து கொண்டு உய்யும் பொருட்டு

இறைவனால் அருளப்பட்டது இந்தத் திருமந்திரம். காலை எழுந்தவுடன் கருத்து அறிந்து இதனை ஓதினால் உலகத்தவர், உலகத் தலைவனை அடைந்து இன்புறுவர்.

#100. முக்தி நிலை

வைத்த பரிசே வகை வகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவாயிரத்திலே
புத்தி செய் பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே.

திருமந்திரம் என்னும் இந்த நூலில் உள்ளன ஒன்பது தந்திரங்கள். மூவாயிரம் பாடல்களும் கூறும் முக்தி நிலையினை. பொதுவாகவும் சிறப்பாகவும் அமைந்த மூவாயிரம் பாடல்கள் ஓதுபவர்களுக்கு தகுந்த நன்மைகளை அளித்திடும்.

10.01 பாயிரம் - 08. குரு மட வரலாறு

101. ஏழு மடங்கள்

வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி வுதிக்கின்ற மூலன் மடவரை
தந்திர மொன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே.

ஏழு மடங்கள் கயிலாய பரம்பரையில் வந்தவை. அவை ஏழுமே சன்மார்க்கத்தைகே கூறுபவை. அவற்றில் முன்னே தோன்றியது மூலன் மடம். அதன் ஆசிரியர் மூவாயிரம் பாடல்களை ஒன்பது தந்திரங்களில் அழகிய ஆகமமாக அமைத்தார்.

#102. நிராமயத்தோர் எழுவர்

கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத்தோரே.

சிவானந்தத்தில் கலந்திருக்கும் காலாங்கர், அகோரர், நன்மையை அளித்திடும் மாளிகைத் தேவர், நாதாந்தர்,அறிவு மயமாகத் திகழும் பரமானந்தர், போகத் தேவர், உலகில் விளங்கும் திருமூலர் என்னும் இந்த எழுவரும் பிறவிப் பிணி என்பது இல்லாத சித்தர்கள் ஆவர்.

10.01 பாயிரம் -
09. மும்மூர்த்திகளின் முறைமை

103. சங்கரன் தன்நிகரற்றவன்

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்வு இலன் சங்கரன்; தன்னடியார் சொல்
அளவில் பெருமை அரி அயற்காமே.

அளவில்லாத இளமை, அளவில்லாத அழகு, அளவில்லாத இறுதி, அளவு செய்யும் காலம் என்ற நான்கு வகைகளிலும் ஆராய்ந்தால் குறைவற்றவன் சங்கரன் ஒருவனே ஆவான். அடியார்கள் போற்றும் எல்லை இல்லாத பெருமை பிரம்மனுக்கும், திருமாலுக்கும் உரியது ஆகுமோ?

#104. மூவரும் ஆவர் ஒருவரே.

ஆதி பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசையானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று எனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே.

மூலாதாரத்தில் உள்ளவன் உருத்திரன்.(இவன் அழித்தல் செயலைச் செய்பவன்.)நீல மணி நிறம் கொண்டவன் திருமால்.(இவன் மணிபூரகத்தில் இருந்து கொண்டு காத்தல் செயலைச் செய்கின்றான்) தாமரை மலரில் உள்ளவன் பிரம்மன்.(இவன் ஸ்வாதிஷ்டானச் சக்கரத்தில் இருந்து கொண்டு படைப்புத் செயலைச் செய்கின்றான்.) ஆராய்ந்து பார்த்தால் இந்த மூவரும் தொடர்பினால் ஒருவரே ஆவார். இதை அறியாமல் அவர்கள் வேறு வேறுபட்டவர் என்பது அறியாமை.

105. உலகின் பீஜம்

ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம்;
பீசம் உலகில் பெருந்தெய்வம் ஆனது;
நீசர் 'அது, இது' என்பர் நினைப்பு இலார்;
தூசு பிடித்தவர் தூர் அறிந்தார்களே.

நல்வினை தீவினை என்னும் இருவினைகளுக்கு ஏற்ப உயிர்களை படைத்துக் காத்து அழிக்கும் மும்மூர்த்திகளுக்கு அப்பாற்பட்டவன் சிவன். அந்த மும் மூர்த்திகள் உண்டாவதற்கான மூலப்பொருள் சிவனே ஆவான். இதை

அறியாதவர்கள் உண்மையான தெய்வம் அது இது என்று கூறுவார்.மாசற்ற மனம் கொண்ட தூய்மையாளர் வேராகிய சிவனை அறிவார்கள்.

106. அவன் பெயர் சங்கரன்

சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவை முதல் ஆறு, இரண்டு, ஒன்றோடு ஒன்று ஆகும்,
அவை முதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவை முதல் சங்கரன் தன் பெயர் தானே.

சிவனாகிய முதல்வன் மூவராக ஆவான். (பிரம்மன், திருமால் உருத்திரன் என்பவர்) திருச் சிற்சபையில் ஐவராக விளங்குவான் சிவன். மும்மூர்த்திகளுடன் மகேஸ்வரன் சதாசிவன் என ஐவர்)

ஆறு ஆதாரங்கள் + ஒளி மயமான மகேஸ்வர மண்டலம்+ ஒலி மயமான சதாசிவ மண்டலம் + கவிழ்ந்துள்ள சஹஸ்ரதளம் + நிமிர்ந்துள்ள சஹஸ்ரதளம் என்று மொத்தம் பத்து ஆகும்.

விந்துவும், நாதமும் விளங்கும் அந்த நிலையில் அவன் பெயர் ஜீவர்களுக்குச் சுகத்தை அளிக்கும் சங்கரன் என்பது ஆகும்.

107. அன்னியம் இல்லை

பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால் நமக்கு அன்னியம் இல்லை;
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்;
வயனம் பெறுவீர் அவ்வானவராலே.

ஜீவர்கள் அடையும் பயனை எண்ணிச் சிந்தித்தால் பிரம்மனும், திருமாலும் சிவனுக்கு அன்னியர் அல்ல. முக்கண்ணன் ஆகிய சிவன் வழி நிற்பவர்கள் அவர்கள். பயன் அடைவீர் அந்தத் தேவ தேவரின் திருவருளால். [முக்கண்கள் ஆகும் சூரியன், சந்திரன், அக்னி.]

#108. "ஞாலத்துக்கு நல்கிடு!"

ஓலக்கம் சூழ்ந்த உலப்புஇலி தேவர்கள்
பால்ஒத்த மேனி பணிந்து அடியேன் தொழ
"மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்பு நீ
ஞாலத்துக்கு நம் அடி நல்கிடு" என்றானே.

அழிவு இல்லாத அமரர் தேவர்கள் சிவனைச் சூழ்ந்திருக்க, அச்சபையில் பால் ஒத்த மேனியனை நான் பணிந்தேன். சிவன் என்னிடம் , "திருமாலுக்கும், பிரம்மனுக்கும் சமமானவன் நீ! மண்ணுலகுக்கு என் திருவடி ஞானத்தை நல்குவாய்!" என்றான.

#109. பிறவிப் பயன்

வானவர் என்றும், மனிதர் இவர் என்றும்'
தேன் அமர் கொன்றைக் சிவன் அருள் அல்லது
தான் அமர்ந்து ஓரும் தனித் தெய்வம் மற்று இல்லை;
ஊன் அமர்ந்தோரை உணர்வது தானே

இவர் என்றும் மனிதர் இவர் என்றும் பெயர் வேறுபடுவது தேன் நிறைந்த கொன்றை மலர்களை அணிந்த சிவபெருமான் தந்து ஓம்பும் பல வித உடல்களின் வேறுபாட்டினால் மட்டுமே ஆகும். வேறு எந்தச் சிறப்பும் உயிர்வகையால் ஏற்படுவது இல்லை. ஒப்பற்ற தெய்வம் சிவபெருமான் ஒருவரே அன்றி வேறு எவரும் இலர். உடலை விரும்பி அதில் வாழும் நம் கடமை சிவபெருமானை அறிந்து கொள்வதே ஆகும்.

110. மூவரும், ஐவரும் சிவனே!

சோதித்த பேரொளி மூன்றுஐந்து எனநின்ற
ஆதிக்கண் ஆவது அறிகிலர் ஆதர்கள்;
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன் என்று
பேதித்து அவரைப்பிதற்று கின்றாரே.

பேரொளியாக ஒளிவீசும் சிவபெருமான் ஒருவரே நான்முகன், திருமால், ருத்திரன் என்று மூவராகவும், இம் மூவருடன் மகேஸ்வரன், சதாசிவன் என்று ஐவராவும் விளங்கும் உண்மையை அறியாத பரம மூடர்கள் அவர்களை வெவ்வேறாகக் கருதுவது எத்தனை மடமை!

111. பல தன்மையன் சிவன்

பரத்திலே ஒன்றாய், உள்ளாய்ப் புறம் ஆகி,
வரத்தினுள் மாயவனாய், அயனாகித்
தரத்தினுள் தான் பல தன்மையன் ஆகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே.

ஒப்பற்ற தன்மையில் ஒருவனாவான் சிவன். அனைத்திலும் உள்ளும் புறமுமாக இருந்து கொண்டு விருப்பத்தை உண்டாகுவதில் திருமால் ஆவான். படைக்கும் தொழிலில் இவனே நான்முகன் ஆவான். பல தன்மைகள் கொண்டு பல

தெய்வங்களாக விளங்கும் சிவன் மறைந்து நின்று சம்ஹாரத் தொழிலைச் செய்யும் ருத்திரன் ஆவான்.

#112. சிவனே ஆவான் சதாசிவன்

தான்ஒரு கூறு சதாசிவன் எம்இறை
வான்ஒரு கூறு மருவியும் அங்கு உளான்;
கோன்ஒரு கூறு உடலுள் நின்று உயிர்க்கின்ற
தான்ஒரு கூறு சலமயன் ஆமே.

சிவபரத்தின் ஓர் அம்சமாகிய சதாசிவன் என்ற தலைவன் வான வெளியில் விரிந்து பரந்து பொருந்தியுள்ளான். அனைத்துத் தத்துவங்களிலும் மருவியுள்ளான். ஜீவர்களின் உடலில் பிராண மயமாக உள்ளவன் அவனே. ஜீவர்களின் சலனத்துக்கும், அசைவுகளுக்கும் அவனே காரணம்.

முதல் தந்திரம்

முதல் தந்திரம் - 1. உபதேசம்

#113. களிம்பு அறுத்தான்

விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்க்கொண்டு
தண்நின்ற தாளைத் தலைக்காவல் முன் வைத்து
உள்நின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்நின்று காட்டிக் களிம்பு அறுத்தானே.

விண்ணிலிருந்து இறங்கி வந்தான் நம் சிவபெருமான். ஜீவர்களின் வினைகளுக்கு ஏற்ப மேனியைத் தாங்கினான். தன் குளிர்ந்த திருவடிகளையே உயிர்களுக்குப் பாதுகாவல் ஆக்கினான். உடல் உள் நின்று அதன் ஊனையும் உருகச் செய்தான். ஒப்பற்ற ஆனந்தத்தைக் காட்டி அதன் பாசத்தை நீக்கினான்.

#114. பவளம் பதித்தான்

களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருட்கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிர்ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே.

கண்ணுதல் பிரான் ஆணவம், கன்மம், மாயை என்னும் களிம்புகளை முற்றுலுமாக அகற்றி அருளினான். மீண்டும் பாசம் என்ற இருள் அணுகாத வண்ணம் அங்கே சிவ சூரியனைத் தோற்றுவித்தான் பிரான். பளிங்கு போன்ற ஜீவனில், ஞானம் தரும் அந்தச் சிவந்த சிவஒளி, பவழம் போலப் பதிந்தது.

#115. பசு, பாசம் நிலாவே!

பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி;
பதியினைச் சென்று அணுகா பசு, பாசம்,
பதி அணுகின் பசு பாசம் நிலாவே.

நம் தலைவன் = பதி; ஜீவன் = பசு; தளை = பாசம். இம்மூன்றுமே மிகவும் தொன்மையானவை. பசுத் தன்மையும், பாசத் தன்மையும் பதியை அணுகிட இயலாது. பதியே நம்மை அணுகிடில் பசுத் தன்மையும், பாசத் தன்மையும் நீங்கும்.

#116. எழும் சூரியன்

வேயின் எழும் கனல் போல இம்மெய் எனும்
கோயில் இருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயா என்னும்
தோயமதாய் எழும் சூரியனாமே.

மூங்கிலில் தீ மறைந்து உறைகின்றது போன்றே பிரான் உடல் என்னும் கோவிலில் மறைந்து உறைகின்றான். சேயின் அழுக்கை போக்கும் தாய் போல சிவபிரான் உயிர்களின் மலங்களை மாற்றுகின்றான் சிவன். அருட் கடலில் உதிக்கின்ற உதய சூரியனாவான் அவன்.

#117. மலங்கள் அறும்

சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே,
சூரிய காந்தம் சூழ் பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சன்னதியில் சுடுமாறு போல்
ஆரியன் தோற்றம் முன் அற்ற மலங்களே.

சூரிய காந்தக் கல் போன்றது ஜீவன். அதை சூழ்ந்துள்ள பஞ்சு போன்றது பாசம். சூரிய காந்தக் கல் பஞ்சினை எரித்து விடாது. அதே சூரிய காந்தக் கல் சூரிய ஒளியில் பஞ்சினை எரித்து விடும். அதே போல் சிவகுருவின் தோற்றம் பாசத் தளையை எரித்து விடும்.

#118. மலங்கள் ஐந்து

மலங்களைந்தாம் என மாற்றி, அருளி,
தலங்கள் ஐந்தால் நற் சதாசிவமான
புலன்களைந்தான் அப்பொதுவினுள் நந்தி
நலன்கள் ஐந்தான் உள் நயந்தான் அறிந்தே.

சிவபெருமான் சதாசிவன் போன்ற ஐந்து மூர்த்திகளாக விளங்கி, ஐந்து நிலைகளிலும், ஐம்பொறிகளின் விஷய வாசனைகளை முற்றிலுமாக மாற்றி அருள் புரிந்தான்.

ஐந்து மலங்கள் = ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரேதாயீ
ஐந்து தலங்கள் = சிவன் இயக்குகின்ற ஐந்து மண்டலங்கள்
ஐந்து புலன்கள் = ஒலி, ஒளி, வாசனை, சுவை, தொடு உணர்ச்சி
ஐம் பொறிகள் = விழி, செவி, மூக்கு, நாக்கு, த்வக்கு (தோல்)
ஐந்து விஷய வாசனைகள் = ஐம் பொறிகள் விரும்புபவை

#119. குரு உபதேசம்

அறிவு ஐம்புலனுடனே நான்றது ஆகி
நெறி அறியாது உற்ற நீராழம் போல
அறிவு அறிவுள்ளே அழிந்தது போலக்
குறி அறிவிப்பான் குருபரன் ஆமே.

ஜீவனின் அறிவு ஐம் புலன்களுடன் கூடியதால், அது வெள்ளத்தில் அகப்பட்டதைப் போல மயங்கி நிற்கும். சிற்றறிவைப் பேரறிவில் அடங்குவதை போல ஒரு நல்ல குருநாதன் தெளிவை ஏற்படுத்தி நல் வழியைக் காட்டுவான்.

#120. எரி சார்ந்த வித்து

ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம் போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனி நித்தம்
தீமேவு பல கரணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பு எரி சார்ந்த வித்து ஆமே.

பசுவின் பாலில் கலந்த நீரை அன்னப் பறவை பிரித்து விடும். சிதாகசப் பெருவெளியில் நடனம் புரிகின்றான் அம்பல வாணன். அந்த நடனம் உயிரிடமிருந்து அதன் வினைகளைப் பிரித்து விடும். வறுக்கப்பட விதைகள் ஒரு நாளும் முளை விடா. அது போன்றே ஏழு பிறவிகளின் நல் வினைத் தீவினைகள் இனிப் பலன் தாரா.

121. சிவயோகியர்

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிக
சுத்த துரீயம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயி ரொன்றா யுடம்போடு
செத்திட்டிருப்பர் சிவயோகி யார்களே.

பிறவிக்கு வித்தாகிய கன்மத்தை அழித்துவிட்டு, சுத்த துரீய நிலையை அடைவதற்கு சிவயோகியர், விழிப்பு நிலையிலேயே தூய நிலையை எய்துவர். பந்தங்கள் அனைத்தையும் விட்டு விடுவர். பொறிகள் புலன்கள் வழியே செல்லாது அடக்கி, உடலும், அறிவும் செயல் இல்லாது இருப்பார்கள்.

122. சிவயோகம்

சிவயோக மாவது சித்து அசித்து என்று
தவயோகத் துள் புக்குத் தன்ஒளி தானாய்
அவயோகம் சாராது, அவன்பதி போக
நவயோகம் நந்தி நமக்கு அளித்தானே.

சிவயோகம் என்பது அறிவுள்ள பொருளையும் (ஈசனையும்), அறிவற்ற பொருளையும் (உலகையும்) பிரித்து அறியும் திறன்; தன் உணர்வைச் சுழுமுனை (சுஷும்னா நாடி) வழியாக மேலே தலைக்கு கொண்டு செல்லும் தவ யோகத்தை அடையும் திறன்; அங்கே உள்ள சிவ ஒளியில் தானும் புகுந்து கலந்து நிற்கும் திறன்; தீமை தரும் வேறு விதமான யோகங்களைச் சாராதிருத்தல் ஆகும். சிவன் தன் பரமாகாயத்தில் நின்று உய்யுமாறு ஒரு நல்ல நெறியை தானே எனக்கு அன்புடன் உவந்து அளித்தான்.

123. பேரின்பம்

அளித்தான் உலகுளங்கும் தான்ஆன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே.

உலகம் முழுவதும் சிவமயமாக இருக்கும் உண்மையை என் ஈசன் சிவபெருமான் எனக்கு நன்கு உணர்த்தினான். தேவர்களும் அறிந்திடாத ஓர் உலகை எனக்குக் காட்டினான். பரமாகாயத்தில் ஆனந்த நடனம் செய்யும் திருப் பாதங்களை என் தலை மேல் அன்புடன் சூட்டினான் அந்த இறைவன். பேரின்பமாகிய அருள் வெளியையும் எனக்குத் தந்தான்.

124. சிவசித்தர்

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியு மவரே சிவசித்தர் தாமே.

சிவசித்தர்கள் அறிவர் இந்த உண்மைகளை. சிவன் விளங்கும் சிதாகாசப் பெருவெளியில் ஆகாய மயமான ஆன்மா கலக்கும் விதத்தையும்; சிவ பிரானது இச்சையில் ஆன்மாவின் இச்சை சென்று அடங்குகின்ற விதத்தையும்; சிவ ஒளியில் ஆன்ம ஒளி ஒடுங்கும் விதத்தையும்; அறிவால் தெளிந்து கண்டவர்களே சிவ சித்தர்கள்.

#125. தத்துவங்கள் முப்பத்தாறு

சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமும் சத்தமுடிவும் தம்முட் கொண்டோர்,
நித்தர், நிமலர், நிராமயர், நீள்பர
முத்தர் தம்முத்தி முதல் முப்பத்தாறே.

சிவலோகத்தில் அடையக் கூடிய பேரின்பத்தை சித்தர்கள் தம் சமாதி நிலையிலேயே பெறுவர். நாதத்தையும், நாதத்தின் முடிவாகிய நாதாந்தத்தையும் அவர்கள் தமக்குள்ளேயே காண்பர். அவர்கள் அறிவு அற்றவர், நிர்மலமானவர்,குற்றமற்றவர், தூய இன்பத்தில் திளைத்திருப்பவர்.

இத்தகைய சித்தர்களுக்கு முக்திக்கு வழியாகும் கீழ்கண்ட முப்பத்தாறு தத்துவங்கள்.

ஆன்ம தத்துவம் ….. 24
வித்தியா தத்துவம்….7
சிவ தத்துவம் ……….….5

#126. சிவமாகத் திகழ்வர்

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு
செப்ப அரிய சிவம்கண்டு, தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந்தாரே.

முப்பத்தாறு தத்துவங்களையே முக்தியை அடைவிக்கும் சிறந்த ஏணியின் பல படிகளாக அமைத்துக் கொண்டு,ஒப்பில்லாத சிவானந்தத்தைத் தரும் ஒளியில் புகுந்து, சொல்வதற்கு அரிய சிவபெருமானைத் தரிசித்தவர்கள் அந்த சிவத் தன்மையை அடைந்து சிவமாகத் திகழ்வார்கள்.

127. ஆன்ம சுத்தி

இருந்தார் சிவமாகி எங்கும் தாம்ஆகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு
இருந்தார் இழிவு வந்து, எய்திய சோம்பே.

சித்தர்கள் சிவத் தன்மையை அடைந்து விட்டதால் தாமும் சிவன் போல எங்கும் நீக்கமற நிறைந்திருப்பர். சிவன் செயல்களை நோக்கிய வண்ணம் இருப்பர். முக்காலங்களின் இயல்பையும் அறிந்து இருப்பர். தமக்கென்று தனியாகச் செயல் இன்றி இருப்பர்.

#128. நாதாந்தம்

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்த இடம்
சோம்பர் கண்டார் அச் சுருதிக்கண் தூக்கமே.

தன் செயல் இல்லாமல் சிவன் செயலாக இருப்பவர் சோம்பர். அவர்கள் தங்கி இருப்பது தூய வெளியாகிய சிவ வெளியிலே. அவர்கள் பேரின்பத்தில் திளைப்பதும் தூய சிவ வெளியிலே. முப்பத்தாறு தத்துவங்களின் இறுதியில் உள்ளது நாதம் எனில் அதன் முடிவே ஆகும் நாதாந்தம் என்னும் உயர்ந்த நிலை.

#129. கூற இயலுமோ?

தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வ தெவ்வாறே.

தூங்கிக் கண்டவர் நாதாந்த நிலையை அடைந்து விட்ட சிவசித்தர்கள். அவர்கள் யோகநிலையில் தம்முள் சிவலோகத்தைக் காண்பவர்கள். அவர்கள் தமக்குள்ளேயே சிவனுடன் இணைந்து இருப்பவர்கள். அவர்கள் தமக்குள்ளேயே சிவபோகமான பேரின்பத்தைத் துய்ப்பவர்கள்.அவர்கள் நிலையை அந்த அனுபவம் இல்லாதவர்கள் கூற இயலுமோ?

#130. பக்குவமும் பரிசும்

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருள் செய்வான் ஆதி அரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்.

அறிவுக்கு எல்லையானவன் சிவபெருமான். நாம் அவனை எந்த முறையில் அணுகுகின்றோமோ, நம்மை அவனும் அதே முறையில் அணுகி அருளுவான். ஆதியான சிவன் ஒப்பற்ற மன்றத்துள் திருநடனம் செய்வான், உமை அன்னை கண்டு மனம் மகிழும் வண்ணம். செவ்வானத்தை விடவும் சிறந்த, சிவந்த, ஒளி வீசுகின்ற ஓர் அற்புதமான மாணிக்கம் ஆவான் நம் சிவபெருமான்.

#131. சித்தர்கள் மகிழ்வர்

மாணிக்கத்துள்ளே மரகத சோதியாய்
மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினு ஆடுந் திருக் கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறு பெற்றாரே.

சிரசின் மீது மாணிக்கம் போன்ற சிவந்த ஒளியுள் (சிவத்தினுள்) கொடி போன்று பின்னிக் கிடக்கும் பச்சை நிற ஒளி (சக்தி தேவி). அந்தப் பச்சை நிற ஒளியே சிவன் நிருத்தியம் செய்யும் மாடம். அந்த மண்டபத்தில், பசும் பொன்

போன்ற பரமகாயத்தில், சிவன் ஆடும் திருக் கூத்தைக் கண்ட சிவயோகியர் மகிழ்வர்.

#132. மௌனமே மொழி

பெற்றா ருலகில் பிரியாப் பெருநெறி
பெற்றா ருலகில் பிறவாப் பெரும் பயன்
பெற்றாரம் மன்றில் பிரியாப் பெரும் பேறு
பெற்றா ருலகுடன் பேசப் பெருமையே.

பொன் போன்று ஒளிரும் வெளியில் விளங்கினாலும், சிவசித்தர்கள் உலகை விட்டுப் பிரிந்து நிற்பதில்லை.உலகத்தினருக்கு உதவுவதையே தம் கொள்கையாக கொள்வர். உலகில் இருந்து கொண்டு உலகத்தினருக்கு உதவினாலும் அவர்கள் மீண்டும் உலகில் பிறவாத பெரும் பேறு பெறுவார். தம் சேவையை பந்தமின்றிச் செய்வதுவே காரணம் ஆகும்.

#133. சாதகர்

பெருமை, சிறுமை அறிந்துஎம் பிரான் போல்
அருமை, எளிமை அறிந்து, அறிவார் ஆர்?
ஒருமையுள் ஆமை போல், உள் ஐந்து அடக்கி
இருமையும் கேட்டு, இருந்தார் புரை அற்றே.

அண்டதிலும், அணுவிலும் நிறைந்திருப்பவன் சிவபெருமான். அவற்றின் அருமை பெருமைகளை அவனைப் போல் யார் அறிவார்? ஆமை போல் ஐம்பொறிகளையும் ஐம் புலன்களின் மேல் செல்லாது அடக்கி, மனத்தை ஒருமைப் படுத்திய சாதகர்கள், சிவ பெருமானைப் போலவே பெருமை சிறுமை இவை இரண்டையும் முழுமையாக உணர்ந்திருப்பார்.

#134. கரை அற்ற சோதி

புரை அற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்
திரை அற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரை அற்ற சோதி கலந்தசத்து ஆமே.

புரை இடாத பாலில் நெய் எங்கும் விரவி இருக்கும். எண்ண அலைகள் ஓய்ந்த மனத்துடன், ஆசிரியன் கூறும் உபதேச மொழிகளைக் கேட்டு, அதனை உணர்ந்து கொண்டு, உடல் என்ற உணர்வை ஒருவன் முற்றிலுமாக ஒழித்தால், எல்லை இல்லாத சோதியாகிய சிவத்துடன் இணையலாம்.

#135. சுடரில் சுடர் சேரும்

சத்தம் முதல் ஐந்தும் தன்வழித் தான் சாரில்
சித்துக்குச் சித்து அன்றிச் சேர்விடம் வேறு உண்டோ?
சுத்த வெளியில், சுடரில் சுடர் சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டுகொள் அப்பிலே.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து தன்மத்திரைகள் அறிவற்றதாகிய அஹங்காரத்தில் ஒடுங்கி விடும் என்றால்,அறிவு மயமாகிய ஆன்மா சென்று ஒடுங்குவதற்கான இடம் அறிவு மயமான சிவனை அன்றி வேறு இருக்க முடியுமா? பரமாகாயமான சுத்த வெளியில் சிவ ஒளியுடன் ஆன்ம ஒளி இணையும். என்னையும் ஒரு பொருளாகக் கருதி, அருள் நீராட்டி, என்னை ஆட்கொள்ளுவாய்.

#136. சீவனும், சிவனும்

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்புஎனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடி அது ஒன்றாகு மாறுபோல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே.

கடல் நீரில் கலந்துள்ள உப்பு கண்ணுக்குத் தெரியாது. ஆனால் சூரியனின் வெப்பம் அதைக் கண்ணால் காணமுடிகின்ற உப்பாக மாற்றுகின்றது. அந்த உப்பை மீண்டும் கடல் நீரில் இட்டால் முழுவதுமாகக் கரைந்து கலந்து விடுகின்றது.

சிவத்திலிருந்து சீவன் வெளிப்படுகின்றது.சிவத்திலேயே சீவன் மீண்டும் அடங்க வேண்டும்.

#137. திருவடிகளே!

அடங்கு பேரண்டத்து அணு அண்டம் சென்று அங்கு
இடங்கொண்டதில்லை இதுவன்றி வேறு உண்டோ ?
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம் பெற நின்றான் திருவடி தானே.

எல்லாவற்றையும் தன்னுள் கொண்டவன் சிவன். உயிரின் எல்லையான அண்ட கோசம், இறைவனின் எல்லையற்ற பரப்பினுள் சென்ற பொருந்துகின்றது. பேரண்டத்தில் சீவனின் அண்ட கோசம் அடங்குவது பொருத்தமே.அதைத் தவிர அடங்கும் இடம் என்று வேறு ஏதாவது உண்டோ? உடல் தோறும் உள்ள உயிர், தான் சேரும் இடத்தை ஆராய்ந்தால் அது எல்லாவற்றுக்கும் ஆதாரமான இறைவன் திருவடிகளே ஆகும்.

#138. திருவடியே தஞ்சம்

திருவடியே சிவமாவது நேரில்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்
திருவடியே செல் கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள் தெளிவார்க்கே.

ஆராய்ந்து நோக்கிடில் திருவடிகளே சிவம் ஆகும். சிந்தித்தால் திருவடிகளே சிவலோகம் ஆகும். சொல்லப் போனால் திருவடிகளே முக்திக்கு நெறியாகும். உள்ளம் தெளிந்தவர்களுக்குத் திருவடிகளே தஞ்சம் ஆகும்.

#139. தெளிவு

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே.

தெளிவைத் தருபவை இவையே! சிவகுருவைப் பேரொளியாகச் சிரசின் மேல் காணுதல்; சிவகுருவின் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதல்; சிவகுருவின் உபதேச மொழிகளைக் கேட்டல்; சிவகுருவின் திருமேனியைச் சிந்தித்தல்.

#140. புலன்கள் செலுத்தும்

தானே புலனைந்தும் தன் வசமாயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடை மாறும்
தானே தனித்தெம்பி ரான்தனைச் சந்தித்தே.

உயிர் உலகில் இருந்து விலகி குருவை அடையும் பேறு பெற்றால், மனம் ஐம்புலன்கள் வழியே செல்லாது உயிர் வழியே செல்லத் துவங்கும். ஐம்புலங்கள் தரும் இன்பங்களில் அது கொண்ட ஆர்வம் அழிந்து விடும். அப்போது ஐம்புலன்களே ஆன்மாவை இறைவனை நோக்கிச் செலுத்தும்.

#141. பொற்போதம்

சந்திப்பது நந்திதன் திருத்தாளிணை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமமென் வாய்மையாற்
புந்திக்குள் நிற்பது நந்தி பொற் போதமே.

இடைவிடாது நான் சந்திப்பது சிரசின் மேல் சிவன் திருவடிகளை. இடைவிடாது நான் சிந்திப்பது சிவனின் சிவந்த திருமேனியினை. இடைவிடாது நான் வணங்குவது சிவனின் திருப்பெயரினை. இடைவிடாது என் அறிவில் விளங்குவது சிவன் திருவடி ஞானம்.

#142. வான் மண்டலம்

போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியைப்
போதம் தனில் வைத்துப் புண்ணியர் ஆயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.

புண்ணிய வடிவான சிவபெருமான் மேன்மையான தன் திருவடி ஞானத்தை நமக்கு அளிப்பான். அப்பெருமானை அறிவில் பொருத்தியவர் புண்ணியர் ஆவர். அவர்கள் நாதனின் ஆனந்த நடனத்தைக் கண்டு களி கூர்வர். அவர்கள் வேதங்கள் புகழ வான்வெளியை அடைவார்கள்.

முதல் தந்திரம் - 02. யாக்கை நிலையாமை

#143. பச்சை மண்கலம்

மண்ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர் விழின் மீண்டும் மண் ஆவபோல்
எண்ணிறந்த மந்தர் இறக்கின்றவரே.

மண் ஒன்றே என்ற போதிலும் அதில் உருவாகும் கலங்கள் இருவகைப்படும். தீயினைச் சார்ந்த மண்கலம் நல்ல வலிமை பெறும். எளிதில் உடையாது. தீயினைச் சாராத மண்கலம் மென்மையாக இருக்கும். எளிதில் அழிந்துவிடும். மழை நீர் விண்ணிலிருந்து பொழிந்தால் பச்சை மண்கலம் முற்றிலும் அழிந்து மீண்டும் மண்ணாகவே மாறிவிடும். சுட்ட மண்கலம் மழை நீரில் கரையாது. அழியாது. தீயாகிய சிவன் அருள் வயப்பட்ட உடல் அழிவதில்லை. திருவருள் வயப்படாத பச்சை மண்கலம் போன்ற உடல் அழிந்து அழிந்து மீண்டும் மீண்டும் உலகில் பிறக்கின்றது.

#144. உடன் வழி நடவாது!

**பண்டம்பெய் கூரைபழகி விழுந்தக்கால்
உண்டஅப்பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமுமல்லது
மண்டியவருடன் வழி நடவாதே.**

கன்ம வினைப் பயன்களைத் துய்த்த பின் உடல் விழுந்துவிடும். உடன் இருந்து இன்பங்களை அனுபவித்த மனைவியோ மக்களோ உடன் வரமாட்டார்கள் அப்போது நம்முடன். வாழ்ந்திருந்த காலத்தில் நாம் செய்த நோன்புகளின் பலன்களும், நாம் சேகரித்த ஞானமும் மட்டுமே நம்மைத் தொடர்ந்து வரும்.

#145. நினைப்பு ஒழிப்பர்

**ஊர்எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேர் இட்டு
சூரை அங்காட்டிடை கொண்டு போய்க் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.**

உடல் விழுந்த பின் ஊரெல்லாம் கூடி ஓலம் இடும், அழும். அவன் பேரை மாற்றி விட்டுப் பிணம் என்று அழைப்பர். முட்செடிகள் நிறைந்த சுடுகாட்டில் கொண்டு உடலை எரித்து விட்டு பிறகு நீராடி எழுந்ததும் அந்த மனிதனைப் பற்றி மறந்தே போவார்கள்.

#146. போன உயிர் மீளாது.

**காலும் இரண்டு, முகட்டு அலகு ஒன்றுஉள,
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டு உள,
மேல்உள கூரை பிரியும் , பிரிந்தால் முன்
போல் உயிர் மீளப் புகஅறி யாதே.**

இரண்டு கால்கள் உள்ளன வீடாகிய உடலுக்கு. உச்சி உத்தரமாக உள்ளது ஒரு முதுகுத்தண்டு. இரு பக்கங்களிலும் உள்ளன முப்பது இரண்டு விலா எலும்புகள் ஆகிய பருத்த சாற்றுக்கழிகள். இவை அனைத்தையும் மூடியுள்ளது தசை என்னும் கூரை. ஒரு நாள் கூரை பிரிந்துவிடும். அப்போது உயிர் நீங்கிவிடும். மீண்டும் உயிர் அந்த வீட்டுக்குள் புகுவதை அறியாது.

#147. ஆக்கை பிரிந்தது

சீக்கை விளைந்தது, செய்வினை மூட்டிற்று;
ஆக்கை பிரிந்தது; அலகு பழுத்தது;
மூக்கினில் கைவைத்து மூடிக்கொண்டு போய்
காக்கைக்குப் பலி வைக்கின்றவாறே.

உயிர் பிரியும் வேளையில் கபம் மிகவும் அதிகரித்தது. வினைகளுடன் உடல் கொண்ட தொடர்பு நீங்கியது. உடல் நீங்கியது. எலும்புகளின் வன்மை கெட்டது. மூக்கில் கை வைத்துப் பார்த்து விட்டு, ஒரு துணியால் உடலை மூடி, எடுத்துக் கொண்டு செல்கின்றனர். வாயில் அரிசி இட்டு இறுதிக் கடன்களைச் செய்கின்றனர்.

#147. ஆக்கை பிரிந்தது

சீக்கை விளைந்தது, செய்வினை மூட்டிற்று;
ஆக்கை பிரிந்தது; அலகு பழுத்தது;
மூக்கினில் கைவைத்து மூடிக்கொண்டு போய்
காக்கைக்குப் பலி வைக்கின்றவாறே.

உயிர் பிரியும் வேளையில் கபம் மிகவும் அதிகரித்தது. வினைகளுடன் உடல் கொண்ட தொடர்பு நீங்கியது. உடல் நீங்கியது. எலும்புகளின் வன்மை கெட்டது. மூக்கில் கை வைத்துப் பார்த்து விட்டு, ஒரு துணியால் உடலை மூடி, எடுத்துக் கொண்டு செல்கின்றனர். வாயில் அரிசி இட்டு இறுதிக் கடன்களைச் செய்கின்றனர்.

#148. இடப்பக்கம் நொந்தது.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

நல்ல உணவைச் சமைத்தார். அதை உண்டார். இளம் பெண்களுடன் இன்பம் அனுபவித்தார். இடப்பக்கம் கொஞ்சம் வலிக்கின்றது என்றார். கீழே படுத்தவர் அதன் பின்னர் எழவே இல்லை.

#149. திரிந்திலன்

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது;
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்;
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்;
சென்று, 'அத்தா' என்ன, திரிந்திலன் தானே.

மாடி வீடு கட்டினான். மகிழ்வுடன் அதில் வாழ்ந்தான். பலர் காணும்படி பல்லக்கில் பவனி வந்தான். பலருக்கு புத்தாடைகளை வாரி வழங்கினான். அவன் உயிர் நீங்கிய பிறகு, அவன் மக்கள் அவனை “அப்பா!” என்று அழைத்தபோது அவன் எழவில்லை.

#150. பாசம் மறைந்துவிடும்

வாசந்தி பேசி மணம் புணர்ந்து, அப்பதி
நேசம் தெவிட்டி நினைப்பு ஒழிவர் பின்னை
ஆசந்தி மேல் வைத்து அமைய அழுதிட்டுப்
பாசம் தீச்சுட்டுப் பலிஅட்டி னார்களே.

நிச்சய தாம்பூலம் செய்து, மணம் புரிந்து கொண்ட கணவன் அன்பு மனைவிக்குத் திகட்டி விடும். அவன் நினைவையும் அவள் மறந்து விடுவாள். அவன் இறந்த பின்னர் அவனைப் பாடையில் வைத்துப் பொருத்தமாக அழுது புலம்பி, அவன் மீது வைத்த பாசத்தையும் அவனுடன் தீயினில் சுட்டுவிட்டு அவனுக்குப் பிண்டம் இடுவாள்.

#151. மெய் விட்டுப் போவர்.

கைவிட்டு நாடிக் கருத்து அழிந்து அச்சுஅற
நெய்அட்டுச் சோறு உண்ணும் ஐவரும் போயினர்;
மை இட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடை கொள்ளு மாறே.

நாடி பார்க்கும் வைத்தியர் அவனைக் கைவிட்டு விடுவார். எண்ணும் திறன் அழிந்து விடும். உயிர் இயக்கம் நீங்கும். நெய் கலந்து உண்ட நாக்கு முதலிய ஐம்பொறிகள் செயலறும். மையிட்ட கண் மனைவியும், ஈட்டிய செல்வமும் இருக்கும். அவன் உடலை விட்டு உயிர் நீங்கும் வகை இதுவே ஆகும்.

#152. அழுதுவிட்டு அகலுவார்.

பந்தல் பிரிந்தது, பண்டாரம் கட்டு அற்ற
ஒன்பது வாலும் ஒக்க அடைத்தன,
துன்பு உறு காலத் துரிசுவர மேன்மேல்
அன்புடையார்கள் அழுது அகன்றார்களே.

உடல் என்னும் அழகிய பந்தல் பிரிந்துவிட்டது. உயிர்நிலை அப்போது நிலை குலைந்துவிட்டது. உடலின் ஒன்பது வாயில்களும் ஒன்றாக மூடிக் கொண்டன. துன்பம் தருகின்ற, காலம் என்பதன் முடிவு வந்து சேர்ந்தது. அன்பு கொண்ட உறவினர்கள் அழுவிட்டு அகன்று சென்றார்கள்.

#153. நம்பி நடக்கும் முறை

நாட்டுக்கு நாயகன் நம்ஊர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்றுஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

நாட்டின் தலைவன், ஊருக்குத் தலைவன் ஏறுவான் காட்டுக்குச் செல்லும் சிவிகையில் கடைசி முறையாக. நாட்டு மக்கள் அவனைப் பின் தொடர்ந்து செல்வார்கள். அவன் முன்னே செல்பவர்கள் பறை ஒலிப்பார்கள். நாட்டின் தலைவன் காடு செல்லும் முறை இதுவே ஆகும்.

#154. தத்துவங்கள் தொண்ணூற்றாறு

முப்பதும் முப்பதும் முப்பதறுவரும்
செப்பம் மதிள் உடைக் கோவிலுள் வாழ்பவர்.
செப்பம் மதிள் உடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.

தொண்ணூற்றாறு தத்துவங்கள் வாழ்வர். நல்ல மதிள் அமைந்த கோவில் ஒன்றில். மதிள் சிதைந்தவுடன் அவர்கள் அனைவரும் ஒன்றாகக் கோவிலை விட்டு ஓடி விடுவார்கள்!

தொண்ணூதராறு தத்துவங்கள் :-

1. சிவ தத்துவம் 5
2. வித்தியா தத்துவம்................7
3. ஆன்ம தத்துவம்..................24
4.பஞ்சபூதக் காரியங்கள்..............25
5. வாசனாதிகள்......................5
6. வாயுக்கள்........................10
7. நாடிகள்..........................10
8. வாக்கு............................4
9. ஏடணை 3
10. குணம்..........................3

1, 2, 3 சேர்ந்தவை முப்பத்தாறு தத்துவங்கள்
4 முதல் 10 வரை உள்ள அறுவதும தாத்துவிகம்

#155. வைத்து அகலுவார்கள்

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம் தேறிப்
பொதுவூர் புறஞ் சுடுகாடுஅது நோக்கி
மதுஊர வாங்கியே வைத்து அகன் றார்களே.

தேன் சிந்தும் மலர் சூடும் மனைவியும், ஈட்டிய செல்வமும், கட்டிய வீடும் இந்த உலகிலேயே தங்கிவிடும். உயிர் பிரிந்த உடலை ஊருக்குப் பொதுவாக புறத்தே உள்ள சுடுகாட்டை நோக்கிப் பாடையில் எடுத்துச் செல்வர். மன மயக்கத்துடன் உடலைச் சிதையில் வைத்துவிட்டு அகலுவர்.

#156. பொருளைத் தேடுகின்றனர்!

வைச்சு அகல்வு உற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது என நாடும் அரும் பொருள்
பிச்சு அதுவாய்ப் பின் தொடர்வுறும், மற்று அவர்
எச்சு அகலா நின்று, இளைக்கின்றவாறே.

உடலை வைத்து விட்டு நீங்கும் மனிதர்கள் சிறிதும் உணர்வதில்லை உயிர் பிரிந்துவிடும் என்ற உண்மையை. தம் உயிர் தம் உடலை விட்டுப் பிரியாது என்று எண்ணிப் பித்துப் பிடித்தவர் போல பொருட்களை நாடித் தேடி, அலைந்து, குலைந்து, தம் மேன்மை அழிந்து வருந்துகின்றார்களே!

#157. பந்தம் இலார்

ஆர்த்துஎழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர், ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகு இட்டு எரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதி இலோரே.

ஆரவாரம் செய்து எழும் சுற்றத்தவரும், மனைவியும், மக்களும், ஊருக்கு வெளியே உள்ள நீர்நிலை வரை வந்துவிட்டு நீங்குவர். வாழ்க்கைக்கு வேராகிய தலையினை மறைத்து எரி மூட்டுவார்கள். நீரில் தலை முழுகிவிட்டுச் செல்லும் இவர்கள் பந்தம் அற்றவர்கள்.

#158. உடலைக் காப்பாற்ற மாட்டார்.

வளத்து இடை முற்றத்து ஓர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண் கொண்டு குயவன் வனைந்தான்;
குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பார்.
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே.

வளமையான இடைப் பகுதியின் முன்னால் கருப்பை என்னும் ஒரு குளம் உள்ளது. நான்முகன் என்னும் குயவன் அதில் உடல் என்ற ஒரு மண் குடத்தை உருவாக்கினான். வெறும் மண்ணால் ஆன குடம் உடைந்தால் அதன் ஓட்டைப் பாதுகாக்கும் மனிதர்கள் நான்முகன் செய்த மனித உடல் என்னும் குடம் உடைந்தால் அதைப் பாதுகாக்க மாட்டார்.

#159. உடல் பயன் அற்றதாகும்

ஐந்து தலைப்பறி, ஆறு; சடை உள
சந்து அவை முப்பது; சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேல் அறியோமே.

உடலில் பொறிகள் ஐந்து உள்ளன. உடலில் ஆதாரங்கள் ஆறு உள்ளன. வாயுக்கள் பத்து; நாடிகள் பத்து; மன மலங்கள் ஆறு; வாக்குகள் நான்கு என மொத்தம் முப்பது உள்ளன.

சிவதத்துவங்கள் ஐந்து, வித்திய தத்துவங்கள் ஏழு, ஞானேந்திரங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிரகிருதி ஒன்று என மொத்தம் பதினெட்டு உள்ளன.

யோனிகளின் வேறுபாட்டினால் உடம்பு ஒன்பது வகைப்படும் அங்கே அனுபவிக்கும் பதினைந்து அம்சங்கள் இவைகள். சத்து ஆதி ஐந்தும், வாசனைஆதி ஐந்தும் மற்றும் குணங்கள் மூன்று இன்பம் துன்பம் எனப் பயன்கள் இரண்டு.

எரியூட்டிய உடல் வெந்து கிடப்பதையே நாம் காண்கின்றோம் மற்ற இவைகள் என்ன ஆயின என்பதை எவரும் அறியோம்.

#160. அத்திப் பழமும் அறைக் கீரையும்

அத்திப் பழமும் அறைக்கீரை நல் வித்தும்
கொத்தி உலை பெய்து கூழ் அட்டு வைத்தனர்;
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்து உண்ணக்
கத்தி எடுத்தவர் காடு புக்காரே.

சுக்கிலம், சுரோணிதம் இவற்றால் ஜீவனின் உடலை உண்டாக்கினான். இருவினைகளின் பயன்களைக் கலந்து உயிருக்கு உணவாகச் சமைத்தான். ஊழ்வினைப் பயன்களை அந்த உயிர் உண்டு அழித்தும், கழித்தும் விட்டது. உயிர் நீங்கிய பிறகு உடம்பை எரிக்கத் துணிந்து அதை கத்திக் கதறி அழும் அழுகை ஒலியுடன் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர் உற்றார் உறவினர்கள்.

#161. உடல் அழிந்துவிடும்.

மேலும் முகடு இல்லை , கீழும் வடின்பு இல்லை,
காலும் இரண்டு, முகட்டு அலகு ஒன்று உண்டு;
ஓலையால் மேய்ந்தவர் ஊடு வரியாமை
வேலையாள் மேய்ந்ததோர் வெள்ளித் தளியே.

உடல் என்ற வீட்டுக்குக் கூரையும் (தலையும்) இல்லை. கீழே அதற்குத் தேவையான அடிநிலையும் இல்லை. இரண்டு கால்கள் (இடகலை, பிங்கலை) மட்டும் உள்ளன. நடுக்கால் (சுழு முனை நாடி என்ற) ஒன்றும் உள்ளது. வேலையாள் வரிச் சுழி இட்டுக் கூரையை வேயாததால் (அவன் சுழு முனை வழியே பிராணனைச் செலுத்தாததால்) அழகிய கோவில் ஆகவேண்டிய உடல் அழிந்து விட்டது.

#162. தீயினில் தீய வைத்தனர்

கூடம் கிடந்தது கோலங்கள் இங்கு இல்லை,
ஆடும் இலயமும் அற்றது அறுதலும்
பாடுகின்றார் சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடியே தீயினில் தீய வைத்தார்களே.

உயிர் பிரிந்த உடல் உலகில் கிடந்தது என்றாலும் அதன் அழகும், பொலிவும் அகன்று சென்று விட்டன. ஆடி ஓடும், உண்டு உழைக்கும் தொழில்கள் நின்று விட்டன. சிலர் அருட்பாடல்களைப் பாடினர்; சிலர் இசையுடன் ஒப்பாரி வைத்தனர்; சிலர் தீயினில் வைத்து தீய வைத்தனர்.

#163. எழுபது ஆண்டுகள்

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்,
இட்டது தான்இலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மாணம் பன்னிரண்டு ஆண்டினில்
கெட்டது எழுபதில், கேடுஅறியீரே.

கருமுட்டையில் உருவான உடல் பிறந்தது அதற்குப் பத்து மாதங்கள் கழிந்த பின்னர். அந்த உடல் அதன் விருப்பப்படி உருவானது அல்ல என்ற உண்மையை

அறிவீர் அறிவற்றவர்களே! பன்னிரண்டு வயதில் அதன் உலக வாசனை வெளிப்பட்டது. எழுபது வயதில் அந்த உடல் கெட்டு அழிந்தது போனது.

#164. நிலையற்றது உடல்

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருள் ஆவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

உடல் என்ற அகல் விளக்கை இங்கேயே விட்டு விட்டு உயிர் என்ற தீபஒளியைக் காலன் எடுத்துச் சென்றான்.அறிவிலிகள் உடல் அழியும் தன்மை வாய்ந்தது என்று அறியாமல் வீணே அழுது புலம்பி வருந்துகின்றனர். பிறப்பும், இறப்பும், விடியலும், இரவும் போல மாறி மாறி வருபவை. நிலையற்ற உடலை நிலையென்று நம்பிப் பதைபதைக்கின்றனரே!

#165. ஏழு நரகங்கள்

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர் படர்ந்து ஏழாம் நரகில் கிடப்பர்
குடர் பட வெந்தமர் கூப்பிடுமாறே.

இதழ்கள் மலர்ந்த கொன்றையை அணிபவன் சிவபெருமான். மாயையாகிய சக்தி தேவிக்கும் அவனே ஆதாரம் ஆவான். அவன் படைத்த உடலிலும் உயிரிலும் சிவன் கலந்து விளங்குகின்றான். அவனை வணங்காமல் வாழ்நாளைக் கழித்துவிட்டுப் பிறகு குடல் வருந்தி உறவினர்கள் கதறும்படி ஏழு நரகங்களில் சென்று வருந்துவான் மனிதன்.

#166. இடம் வலமாகும்

குடையும் குதிரையும் கொற்ற வாளும் கொண்டு
இடையும் அக்காலம் இருந்து நடுவே
புடையும் மனிதனார் போகும் அப்போதே
அடையும் இடம் வளம் ஆருயிராமே.

வெண்கொற்றக் குடையின் கீழ், குதிரை மீது அமர்ந்து,செங்கோலும், வாளும் ஏந்திக்கொண்டு, நான்கு பக்கங்களிலும் மக்கள் சூழ்ந்து வரச் செல்லும் தலைவனுக்கும் கண நேரத்தில் அழிவு வரலாம். அவன் உயிர் இடம் வலமாகச் சுழன்று நின்று விடலாம்.

#167. உணர்வும் அழிந்துவிடும்

காக்கை கவரில் என்? கண்டார் பழிக்கில் என்?
பால்துளி பெய்யில் என்? பல்லோர் பழிச்சில் என்?
தோல் பையுள்நின்று தொழில் அறச் செய்து, ஊட்டும்
கூத்தன் புறப்பட்டுப்போன இக் கூட்டையே.

உடல் என்னும் தோல் பையில் இருந்து கொண்டு வினைகளை முடிவு பெறச் செய்பவன் சிவன். வினைகளின் பயன்களை ஊட்டுபவன் சிவன். உயிராக விளங்கிய அவன் வெளியேறிய பிறகு இந்த உயிரும் உணர்வும் அற்ற வெறும் உடலைக் காக்கை கொத்தினால் என்ன? கண்டவர் பழித்தால் என்ன? பாலைத் தெளித்தால் என்ன? பலர் பழித்தால் என்ன?

முதல் தந்திரம் - 03. செல்வம் நிலையாமை

#168. மருளும் தெருளும்

அருளும் அரசனும் ஆணையும் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரோடும் செல்வனைச் சேரில்
மருளும் பினை அவன் மாதவம் அன்றே.

அரச பதவியையும், யானைப் படையையும், தேர்ப் படையையும், பொருட் குவியலையும், பிறர் கவர்ந்து செல்லும் முன்னமே ஒருவன் தெளிந்த அறிவுடன் நிலையான செல்வமாகிய சிவபெருமானின் அடிகளைச் சேர வேண்டும். அதன் பின் அவன் பெருந் தவத்தையும் விரும்பான்.

#169. பெருஞ்செல்வம்

இயக்குஉறு திங்கள் இருட் பிழம்பு ஒக்கும்
துயக்குஉறு செல்வதைச் சொல்லவும் வேண்டா;
மயக்குஅற நாடுமின் வானவர் கோனைப்
பெயல் கொண்டல் போலப் பெருஞ் செல்வம் ஆகுமே.

விண்ணில் இயங்கும் நிலவு ஒளி குன்றிப் போகும். மண்ணில் செல்வம் அதுபோன்றே தளர்ச்சி அடைந்துவிடும். பொருள் மயக்கத்தைத் தொலைத்துவிட்டு அடைவீர் விண்ணவர் கோன் ஆகிய சிவபெருமானையே. அப்போது மழை மேகம் போன்ற பெருஞ் செல்வம் உண்டாகும்.

#170. அகஒளி

தன்னது சாயை தனக்கு உதவாதது கண்டு
என்னது மாடு என்று இருப்பார்கள் ஏழைகள்
உன்னுயிர் போம் உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண் ஒளி கண்டு கொள்ளீரே.

ஒருவனது நிழல் அவனுக்கு உதவாது. தனக்கு அயலாக உள்ள செல்வம் உதவும் என்று எண்ணுபவர்கள் அறிவற்ற மூடர்கள். உடலுடன் ஒன்றாகப் பிறந்தது உயிர் என்றாலும் உடல் அழிந்துவிடும் அதன் உயிர் பிரிந்துவிட்டால்! அகக் கண்ணில் உள்ள நிலையான ஒளியை நீங்கள் உடல் உயிருடன் இருக்கும்போதே கண்டு கொள்வீர்.

#171. வலியார் கொள்வார்

ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திவிட்டு அது வலியார் கொளக்
காட்டிக் கொடுத்தது கை விட்டவாறே.

மலர்களின் மணத்தால் ஈர்க்கப்பட்ட தேனீ அதன் தேனைச் சேகரித்து மரக்கிளையில் தேன்கூட்டில் கொண்டு சேர்க்கும். வலிய வேடன் அந்தத் தேனீக்களைத் துரத்திவிட்டு விட்டு அந்தத் தேனை எடுத்துச் சென்று விடுவான். அது போன்றே செல்வம் சேகரிப்பவர்களுக்குத் துன்பம் தரும்.

#172. செல்வம் நிலையற்றது

தேற்றித் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்று பெருக்கில் கலக்கி மலக்கதே
மாற்றிக் களைவீர் மறுத்து உங்கள் செல்வதைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலும் ஆமே.

அறிந்து கொள்ளுங்கள் செல்வம் நிலையற்றது என்று. அறிந்தபின்பு நன்கு அறிவில் தெளிவடையுங்கள். தெளிவடைந்த பின்னர் அஞ்சி மலைக்கதீர். ஆற்றில் பெருகும் வெள்ளம் போல பெருகும் செல்வதைக் கண்டு மனம் மயங்காதீர்கள். பெருகும் வெள்ளம் பின்பு வடிந்து குறைவது போன்றே பெருகும் செல்வமும் பின்பு குறைந்து விடும். மேன்மையான செல்வமான சிவன் அருள் மீது நீங்கள் பற்றுக் கொண்டீகள் என்றால் யமனையும் வெல்ல முடியும்.

#173. கவிழ்கின்ற படகு செல்வம்

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர்வீடு பேறுஆகச்
சிமிழ் ஒன்று வைத்தமை தேர்ந்து அறியாரே.

முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற செல்வமும், தானே முயன்று ஈட்டிய செல்வமும் அனைத்துமே நீரில் மூழ்கும் படகு போலக் கவிழக் கூடியது. அழியும் இயல்பு கொண்ட மனித உடலுக்கு ஓர் அழியாத சேமிப்பு வீடு பேறு என்பதை அறிந்து கொண்டவர் அழியும் செல்வத்தைப் பெருக்க எண்ணார்.

#174. ஒண்பொருளை மேவுங்கள்

வாழ்வும் மனைவியும் மக்கள் உடன் பிறந்த
தாரும் "அளவு ஏது எமக்கு" என்பர் ஒண்பொருள்
மேவும் தனை விரிவு செய்வார்கட்குக்
கூவும் துணை ஒன்று கூடலும் ஆமே.

மனைவியும், மக்களும், உடன் பிறந்தோரும், உலகப்பொருட்களும் என்னிடம் அளவில்லாமல் உள்ளனர் என்று எண்ண வேண்டாம். உயிருக்கு உதவாத இவற்றை விடுத்து ஒருவன் உற்ற இடத்தில உதவக் கூடிய சிவத்தை நாடினால் அது அவனைக் கூவி அழைத்து மேலான தன்னிடத்தே இணைத்துக் கொள்ளும்.

#175. போம் வழி ஒன்பது

வேட்கை மிகுந்தது மெய் கொள்வார் இங்கு இல்லை,
பூட்டும் தறி ஒன்று போம் வழி ஒன்பது
நாட்டிய தாய் தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்து, அவர் கைவிட்ட வாறே.

உலக வாழ்வில் ஆர்வம் பெருகியது. ஆனால் உண்மைப் பொருளை அறியும் ஆர்வம் இல்லை. உடலை நிலையாக நிறுத்துவதற்கு உள்ளது சுழுமுனை என்னும் ஒரே ஒரு தறி மட்டும். ஆனால் அழிக்கும் வழிகள் உள்ளன ஒன்பது. உறவுகளை நிலை நாட்டியவர்கள் உடலை வணங்கிப் பிறகு சுடுகாட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டுச் சென்று விடுவார்கள்.

#176. இல்லை மரண வேதனை

உடம்போ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலையெண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் தூதர்
சுடும் பரிசத்தையுஞ் சூழகிலரே.

உயிர் உடலைப் பிரிவதை வெல்லும் வகை ஒன்றும் இல்லை. இறைவனை நினைந்திருப்பதே ஒரே வழி ஆகும் யம தூதர்கள் நமக்கு மரண வேதனையைத் தராமல் காத்துக் கொள்வதற்கு.

முதல் தந்திரம் - 04. இளமை நிலையாமை

#177. இளமை நிலையாது

கிழக்கு எழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழிஇலா மாந்தர்
குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்
விழக் கண்டும் தேறார் வியன் உலகோரே.

கிழக்கில் உதிக்கும் இளம் சூரியன் மேற்கில் விழுந்து மறைவதைக் கண்ட பிறகும் இளமையின் நிலையாமையை உணரமாட்டர்கள் அறிவில்லாதவர்கள். இளம் கன்று முதிர்ந்து எருதாகி மூப்படைந்து மறைவதைக் கண்ட பிறகும் வாழ்க்கை நிலையாமையை உணரமாட்டார்கள்.

#178. சிவ ஒளி

ஆண்டுகள் பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டு கொண்டாரும் புகுந்து அறிவார் இல்லை;
நீண்ட காலங்கள், நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடர் அறியாரே.

அறியாமையிலேயே பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இறைவனே நம் அனைவருக்குத் தந்தையாவான். அவன் நினைவை நெஞ்சில் பூண்டு கொண்டு அவன் ஒளியில் புகுந்து பேரறிவு பெறுபவர் இல்லை. நீண்ட ஆயுள் பெற்று, நீண்ட நாட்கள் வாழ்ந்த போதிலும், தூண்டினால் ஒளியைப் பெருக்கும் விளக்குப் போன்ற இறைவனை அறியாமலேயே உலகில் வாழ்கின்றனர்.

#179. இளமையே நல்ல சமயம்

தேய்ந்து அற்று ஒழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்து அற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்து அற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உயிர் உள்ள போதே.

சிறிது சிறிதாக இளமை தேய்ந்து மறைந்து விடும். அரிய கருமங்களை முதுமையில் செய்ய இயலாது. எனவே உயிரும் உடலும் நன்றாக இருக்கும் போதே கங்கை நதி அணிந்த சிவனை நன்றாக ஆராய்ந்து அடைந்து அவனிடம் ஒன்றாகப் பொருந்தி விடுங்கள்.

#180. முதுமை கொடுமை

விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக் கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்கும்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே.

இளமையில் மெல்லியல் கொண்ட மங்கையர் ஒரு ஆணை அடிக் கரும்பின் சாற்றைப் போல மிகவும் விரும்புவர். தாமரை மொக்குப் போன்ற நகில்களும் அழகிய நகைகளும் அணிந்த மாதர் வயது முதிர்ந்த பிறகு அதே ஆணை எட்டிக் காயைப் போல வெறுப்பார்கள்.

#181. பல பருவங்கள்

பாலன், இளையன், விருத்தன் என நின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்;
ஞாலம் கடந்து அண்டம் ஊடு அறுத்தான் அடி
மேலும் கிடந்தது விரும்புவன் நானே.

பாலன் என்றும் இளையவன் என்றும், முதியவன் என்றும் பல பருவங்கள் உண்டு ஒரு மனிதனின் உலக வாழ்வில். இந்த உலகத்தைக் கடந்து அண்டங்களை ஊடறுத்து நிற்கும் இறைவன் திருவடிகளிடம் மேலும் மேலும் அன்பு செய்வேன்.

#182. வாழ்நாள் வீணாகலாகாது

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதும்
சாலும்; அவ்வீசன் சலவியன் ஆகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே.

காலையில் எழுவதும், மாலையில் உறங்குவதும் வாழ் நாளைக் குறைக்கின்ற செயல் மட்டுமே ஆகும். வாழ் நாளை இங்ஙனம் வீணாக்கும் மனிதர்கள் மீது ருத்திரன் சினம் கொள்வான் என்ற போதிலும் தன்னை ஏற்ற முறையில் நினைப்பவருக்கு இன்பமே அளிப்பான்.

#183. பரு ஊசி

பருஊசி ஐந்தும் ஓர் பையினில் வாழும்
பருஊசி ஐந்தும் பறக்கும் விருகம்;
பருஊசி ஐந்தும் பனித் தலைப்பட்டால்
பருஊசிப் பையும் பறக்கின்றவாறே.

பருத்த, கூர்மையான ஊசிகளைப் போன்றவை நம் ஐம்பொறிகள். தோல் பையைப் போன்ற நமது உடலில் இவை அமைந்துள்ளன.பறந்து சென்று, இழிந்த பொருட்களை உண்ணும் காகத்தைப் போலவே உடலின் ஐம்பொறிகளும் இழிந்த பொருட்களையே நாடுபவை. சிரசில் உள்ள பனிப் படலம் போன்ற ஒளியில் அந்த ஐம்பொறிகள் சென்று அமைந்து விட்டால், ஐம்பொறிகள் கொண்ட உடலின் உணர்வு அகன்று விடும்.

[நின்மல சாக்கிரத நிலை ஏற்பட்டு உடல் உணர்வுகள் ஒழிந்துவிடும்.]

#184. முப்பது ஆண்டுகள்

கண்ணதும் காய்கதி ரோனும் உலகினை
உள்நின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண்உறு வாரையும் வினை உறு வாரையும்
எண் உறும் முப்பதில் ஈர்ந்தொழிந்தாரே.

குளிர்ந்த நிலவும், காயும் கதிரவனும், உலகத்தவர் உடலில் இருந்து கொண்டு அவர்கள் வாழ்நாட்களை அளந்து கொண்டு இருக்கின்றார்கள். இதைப் பலர் அறிவது கூட இல்லை. விண்ணுலகப் பேறு அடையப் போகின்றவர்களையும் வினைப் பயனாக மீண்டும் மண்ணுலகத்தையே அடையப் போகின்றவர்களையும், சூரிய சந்திரர் முப்பது ஆண்டுகளில் இனம் கண்டு கொண்டு விடுவர்.

{இடகலை பிங்கலை நாடிகள் நன்கு அறியும் ஆன்மீகத் தேடலில் ஈடுபடுபவர்களை இனம் கண்டு. முப்பது வயதுக்குள் ஆன்மக் கலையை அறிந்து கொண்டவர்கள் விண்ணுலக வாழ்வடைவர். மற்றவர் மண்ணுலக வாழ்வடைவர்}

#185. திகைப்பு ஒழியாதவர்

ஒன்றிய ஈரெண் களையும் உடன் உற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வார் திகைப்பு ஒழியாரே.

பதினாறு கலைகளும் பொருந்தி உடன் நிற்கும் போது அவற்றின் வழியே சென்று மேலே விளங்கும் ஈசனைச் சிறிதும் நினைப்பதில்லை நீசர்கள். ருத்திரன் சினம் அடைந்து மீண்டும் கருக்குழியில் வைத்த பின்னர் மீண்டும் பிறவிக்கடலில் வீழ்வார் மனமயக்கம் ஒழியாதவர்கள்.

#186. உண்மையை உணர்ந்தேன்

எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவது அறியாமல்
எய்திய நாளில் இருந்து கண்டேனே.

பிரசாத நெறியில் மேலே சென்று, சந்திர மண்டலம் விளங்கும் போது, இளமை நீங்காது இருக்கின்றபோதே ஈசனைத் துதித்துப் புகழ்ந்து பாடுங்கள். இவ்வாறு அறிந்து கொள்ளவில்லை நான் பிராண இயக்கத்தை. தியானத்தில் பொருந்தி இருந்து உண்மையை உணர்ந்து கொண்டேன்.

முதல் தந்திரம் - 05. உயிர் நிலையாமை

#187. தொழ அறியாதவர்

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பு இன்றி எம் பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே.

பூங்கொம்பில் தழைக்கும் செந்தளிர்கள், மற்றும் அழகிய மலர்கள் போன்றவை. இவை அனைத்துமே சருகுகளாக மாறி விடும். இதைக் கண்ட பிறகும் கூட உயிர் உள்ளபோதே மக்கள் இறைவன் திருவடிகளைத் தொழுவதில்லை. எங்கனம் வணங்குவர்யமனிடமிருந்து அழைப்பு வந்த பிறகு?

#188. உடலை ஓம்ப வேண்டும்

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது,
ஐவருமச் செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகனோலை வருதலால்
ஐவருமச் செய்யைக் காவல்விட்டாரே.

பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்ற ஐவர் தத்தம் தொழில்களைச் செய்வதற்கு அவர்களுக்கு விளை நிலமாக ஓர் உடல் கிடைத்தது. அந்த ஐவரும் அந்த உடலை நன்கு ஓம்புவார்கள் அதன் வினைப் பயன்களை அதற்கு ஊட்டி விடுவார்கள். இவர்களின் தலைவனாகிய சிவபெருமான் அந்த உடலின் வினை நுகர்வு முடிந்தவுடன் இறுதிச் சீட்டு அனுப்புவான்.அதன் பிறகு இந்த ஐவரும் அந்த உடலை ஓம்ப மாட்டார்கள்.

#189. கோவில் மண்ணாகி விடும்

மத்தளி ஒன்றுள தாளம் இரண்டுஉள
அதுள்ளே வாழும் அரசனும் அங்கு உளன்
அதுள்ளே வாழும் அரசம் புறப்பட்டால்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே.

மாயை என்ற மண்ணால் உருவாகிய உடல் ஒன்று உண்டு. அதில் உயிர்ப்பை நிறுத்தவும் விடுக்கவும் இரண்டு இடங்கள் உள்ளன. அந்த உடலில் பற்றுக் கொண்டு வாழும் ஜீவன் ஆகிய அரசன் அங்கு உள்ளான். ஆனால் அந்த அரசன் அந்த உடலை விட்டு நீங்கிய உடனேயே கோவில் போன்ற அந்த உடல் மீண்டும் மண்ணாக மாறி விடும்.

#190. வேதாந்தக் கூத்தன்

வேங்கடநாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத்துள்ளே விளையாடும் நந்தியை
வேங்கடம் என்றே விரகு அறியாதவர்
தாங்கவல்லார் உயிர் தாம் அறியாரே.

சிரசின் மேல் ஈசான திசையில் விளங்குபவன் சிவன். வேதம் கூறும் வாக்கின் வடிவான பிரமமும் சிவன். வெந்து அழியும் இடலில் தீயாக இருப்பவனும் சிவன். தம் உடம்பாக சிவன் இருக்கும் உண்மையை அறியாதவர் உடலைத் தாங்கும் உயிரைப் பற்றியும் அறியாதவர் ஆவர்.

#191. அகங்காரத்தை வென்றவர்

சென்று உணர்வான் திசை பத்தும் திவாகரன்
அன்று உணர்வால் அளக்கின்றது அறிகிலர்
நின்று உணரார் இந்நிலத்தில் மனிதர்கள்
பொன்று உணர்வாரின் புணர்க்கின்ற மாயமே.

சிவன் என்னும் சூரியன் பத்து திசைகளிலும் சென்று அங்குள்ள அனைத்தையும் உணர்வான். சிவன் உணர்வு மயமாக விளங்குவான். உடலில் பரவியும் விரவியும் அனைத்தையும் உணர்கின்றான். இந்த உண்மையை உலகத்தவர் சற்றும் அறிவதில்லை. 'நான்' என்னும் அஹங்காரத்தை வென்று விட்ட ஞானியரிடம் சிவன் கலந்து விளங்கும் உண்மையையும் அவர்கள் அறியமாட்டார்கள்.

#192. அழிந்துவிடும் தன்மை

மாறு திருத்தி வரம்பு இட்ட பட்டிகை
பீறும் அதனைப் பெரிது உணர்ந்தவார் இல்லை
கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவதும்
ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டு எனும் நீரே.

நன்கு நெய்து தயாரிக்கப் பட்ட பட்டாடையும் கிழிந்து போய்விடும். இந்த உண்மையைப்பற்றி உலகத்தவர் சிறிதும் சிந்திப்பதில்லை. அழகிய கருங் கூந்தல் வெண் கூந்தலாக மாறிவிடுவதும் கண்கூடு. பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே ஒரு சிறு பொழுதே உள்ளது. இந்த உண்மைகளைச் சிந்தித்து நன்கு உணர்வீர் உலகத்தோரே.

#193. வீணாள் ஆக்காதீர்கள்

துடுப்புஇடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்புஇடு மூன்றிற்கும் அஞ்சு எரிகொள்ளி
அடுத்துஎரி யாமல் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேல் சென்றனவே.

சுழுமுனை என்னும் அகப்பை உள்ளது நம் உடலில். உடலாகிய பானைக்கு தகுந்த அரிசி ஆகும் விந்து. சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்றும் சேர்ந்த அடுப்புக்குத் தகுந்த விறகுகள். உடலின் பஞ்சப் பிராணன்கள். இவற்றை வீணாக்காதீர்கள். விந்து சக்தியைத் தந்து விட்டு அமுதத்தைப் பெறுங்கள். நாட்களை வீணாக்காதீர்கள்!

துடுப்பு = அகப்பை => சுழுமுனை

பானை = > உடல்
அரிசி => விந்து
அடுப்பு => நாபி ஸ்த்தானம்
மூன்று => சூரியன் , சந்திரன், அக்னி
கொள்ளி => ஞானம் என்னும் தீ
அஞ்சு => பஞ்சப் பிராணன்கள்.

#194. புறம் நின்ற கருத்து

**இன்புஉறு வண்டு அங்கு இனமலர் மேல்போய்
உண்பது வாசம் அதுபோல் உயிர்நிலை
இன்புஉற நாடி நினைக்கிலும் மூன்று ஒளி
கண் புறம் நின்ற கருத்துள் நில்லானே.**

இன்பத்தைத் தேடும் வண்டுகளின் கூட்டம். பூக்களில் உள்ள சுவை மிக்க தேனை உண்ணும். அது போன்ற உயிர்களும் இன்பத்தையே நாடும். சோம சூர்யாக்னிகளின் ஒளியில் விளங்கும் நம் ஈசன் புறப் பொருட்களை நாடும் மனத்துள் விளங்க மாட்டான்.

#195. விதிகள் ஒன்றும் இல்லை

**ஆம்விதி நாடி அறம் செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும் அதுஎன் சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமை வல்லார்க்கே.**

இந்தப் பிறவியில் அறவழியில் நில்லுங்கள். இன்பம் தரும் நெறியில் ஒழுக்கத்துடன் இருங்கள். ஒளி மண்டலத்தில் விளங்கும் இறைவனைப் போற்றுங்கள். மனிதப் பிறவியை பெற்ற நற்பேறு உடையவர்களுக்குக் கூறுவதற்கு என்று வேறு என்ன விதிகள் உள்ளன?

#196. பகிர்ந்து உண்ணுங்கள்

**அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர் பொருள் வவ்வன்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்து உண்ணும்போது
தவ்விக் கொடு உண்ம்மின் தலைப்பட போதே.**

வஞ்சனை, பொய், துன்பம் தரும் தீய சொற்களைப் பேசாதீர். அறநெறி கெடுமாறு தீய செயல்களைச் செய்யாதீர். பேராசை கொண்டு பிறர் பொருட்களைக் கவராதீர். சிறந்தவர்களாக நற்பண்புகளுடன் விளங்குங்கள். உண்ணும் பொழுது

எவரேனும் வந்தால் அவர்களுக்கு ஓர் அகப்பை உணவு கொடுத்துவிட்டுப் பிறகு உண்ணுங்கள்.

முதல் தந்திரம் - 06. கொல்லாமை

#197. சிவபூசை

பற்றுஆய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்று ஆரும் ஆவி அமர்ந்த இடம் உச்சியே.

பற்றுக் கோடாக விளங்குபவன் நம் ஈசன். அவன் பூசைக்கு உகந்த மலர் ஆவது கொல்லாமை. நல்ல மாலை ஆவது கண் மலர்களின் நல்ல ஒளியே. சலனமற்ற மனமே பூசைக்கேற்ற நல்ல தீபம் ஆகும். பூசைக்கு உகந்த இடம் ஆகும் தலையின் உச்சி.

#198. தீவாய் நரகம்

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக்காரர் வலிக் கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.

“கொல்! குத்து!” என்ற கூறி வந்த மனித மிருகங்களை வலிமை வாய்ந்த கயிற்றால் பிணிப்பர் யம தூதர்கள். “செல்! நில்!” என்று அவர்களை அதட்டியும், அச்சுறுத்தியும், தீ வாய் நரகத்தில் நெடுங்காலம் நிற்கும்படி ஆணையிடுவர்.

முதல் தந்திரம் - 07. புலால் மறுத்தல்

#199. மறித்து வைப்பர்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.

பிற உயிர்களைக் கொன்று தின்னும் கயவர்களை, யமதூதர்கள் எல்லோரும் காணும்படி எடுத்துச் செல்வர். கரையானைப் போல பறித்துச் சென்று அவர்களை நரகத் தீயில் மல்லாக்கக் கிடத்தித் தண்டனை தருவர்.

#200. பேரின்பம்

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலையான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே.

கொலை, களவு, கள், காமம், பொய் பேசுதல் இவை ஐம் பெரும் பாவங்கள் எனப்படும். இவற்றை விலக்கி விட்டுத் தம் தலையால் சிவன் திருவடியைச் சார்ந்தவர்கள் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருக்கலாம். இப்பாவங்களும் அவற்றால் விளையும் துன்பங்களும் அவர்களைப் பற்றா.

முதல் தந்திரம் - 08. பிறன்மனை நயவாமை

#201. பலாக்கனி

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைக் காமுறு காளையர்
காய்ச்ச பாலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே.

அன்பு கொண்ட தன் மனைவி வீட்டில் இருக்கும் போது, அவளை விடுத்து பிறன் ஒருவனால் காக்கப்படும் அவன் மனைவியை ஒருவன் விரும்புவது வீட்டில் உள்ள பழுத்த பலாக் கனியை உண்டு இன்புறாமல் காட்டில் உள்ள ஈச்சம் பழத்திற்காக துன்பம் அடைவது போன்றது.

#202. தேமாங்கனி

திருத்தி வளர்த்தது ஓர் தேமாங்கனியை
அருத்தம் என்று எண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத புளிமாங்கொம்பு ஏறிக்
கருத்து அறியாதவர் கால்அற்ற வாறே.

நன்றாக வளர்க்கப் பட்ட தேமாங்கனி போன்றவள் தன் மனைவி. அவளை ஒரு சேமிக்கும் பொருளாக கருதி, வீட்டில் புதைத்து விட்டு, பொருத்தம் இல்லாத

புளியம்பழத்தை உண்பதற்கு மரம் ஏறிவிட்டு, கருத்துத் தெளிவு இன்றி மனிதர்கள் வருத்தம் அடைகின்றாகளே.

#203. மாதர் ஆசை

பொருள் கொண்ட கண்டனும் போதத்தை ஆளும்
இருள் கொண்ட மின்வெளி கொண்டு நின்றோரும்
மருள் கொண்ட மாதர் மயல் உறுவார்கள்
மருள் கொண்ட சிந்தையை மாற்றகில்லாரே.

பொருள் மீது பற்றுக் கொண்டவர்களும், அறிவை மறைக்கும் அறியாமை என்ற இருளில் தோன்றிய சிறு ஒளியைப் போன்ற அறிவினைப் பெரிதாக மதிப்பவர்களும், மருண்ட பார்வை உடைய மங்கையரிடம் மயங்குவர். அவர்கள் அந்த மயக்கத்தை மாற்ற முடியாது.

முதல் தந்திரம் - 09. மகளிர் இழிவு

#204. எட்டிப் பழம்

இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்
குலைநல ஆம் கனி கொண்டு உணல் ஆகா
முலைநலம் கொண்டு முறுவல் செய்வார் மேல்
விலகுறும் நெஞ்சினை வெய்து கொள்ளீரே.

எட்டியின் இலை அழகானதாக இருக்கலாம். எட்டி குலை குலையாகப் பழுக்கலாம். ஆயினும் கவர்ச்சியில் மயங்கி அந்த எட்டிக் கனியை உண்ணல் ஆகாது. அது போன்றே தம் அங்கங்களின் அழகைக் காட்டியும், புன்முறுவல் பூத்து வசீகரிக்கும் பொது மகளிரிடம் மயங்காமல் விலகிச் செல்ல வேண்டும். அந்தப் பெண்களை நாடுகின்ற மனத்தையும் முயன்று அடக்க வேண்டும்.

#205. மங்கையர் அன்பு

மனைபுகுவார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போல் சுழித்துடன் வாங்கும்
கனவதுபோலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாட வொண்ணாதே.

அயலார் மனையில் புகுந்து அவர் மனைவியை நாடுவது ஒருவனை நீரில் மூழ்குபவனை மலைச்சுனையில் புகுந்த நீர் போலச் சிக்க வைக்கும். கனவு போன்ற

தோற்றம் தந்து, அவர்கள் மீது தோன்றுகின்ற சிறு அன்பை, நனவு போல உண்மையானதாக எண்ணி அவர்களை நாடக் கூடாது.

#206. அகன்று ஒழிவர்

இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயல்உறும் புல்லின் புணர்ந்தவரேயினும்
மயல்உறும் வானவர் சார இரும் என்பர்
அயல்உறப் பேசி அகன்று ஒழிந்தாரே.

இளம் பெண்யானைய நிகர்த்த பொதுமகளிர், ஒருவனால் மழைநீர் கொண்ட புல்லைப் போலத் தழைத்திருந்தாலும், மையல் கொண்டு தேவன் போன்ற புதிய ஒருவன் வந்துவிட்டால், முன்பே தன்னைப் புணர்ந்தவனை வெளியே இருக்கச் சொல்வார்கள்.

#207. கரும்புச் சாறா? வேம்பா?

வையகத்தே மடவாரொடும் கூடி ஏன்
மெய்யகத்தோரும் வைத்த விதி அது
கையகத்தே கரும்பாலையின் சாறு கொள்
மெய் அகத்தே பெரும் வேம்பது ஆமே.

உலகில் மங்கையரோடு உறவாடுவதால் என்ன பயன்? மெய்ப்பொருளை உணர்ந்த ஞானியர் கூறுவது இதுவே. மங்கையர் புணர்ச்சி வெளியே கரும்பின் சாறு போல இனித்தாலும் உண்மையில் அது உடல் உள்ளே வேம்பைப் போல கசப்பது ஆகும்

#208. ஆசையால் அழிவர்

கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்
ஆழ நடுவர் அளப்பு உறுவார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில்லாவிடில்
பூழைநுழைந்து அவர் போகின்றவாரே.

ஆடவர்கள் தம் சுக்கிலத்தைப் பெண்களின் அழுக்கான பாசி மூடிய குளம் போன்ற கருக்குழியில் விடுவார்கள். அதனால் இன்பம் அடைவார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தாவிடில் சிறு பாதைகளில் ஒளிந்து மறைந்து சென்றாவது அழிவை நடுவார்கள்.

முதல் தந்திரம் - 10. நல்குரவு

#209. வாழ்க்கை போய்விடும்

புடவை கிழிந்தது; போயிற்று வாழ்க்கை;
அடையப் பட்டார்களும் அன்புஇலர் ஆனார்;
கொடை இல்லை; கோள் இல்லை; கொண்டாட்டம் இல்லை;
நடை இல்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே.

உடுத்துக் கிழிந்து போன ஆடை பயனற்றது ஆகும். அதுபோன்றே வறியவர் வாழ்வும் பயனற்றதுஆகும். உறவினர்கள் அன்பு இல்லாமல் விலகிச் சென்று விடுவர். கொடுக்கல் வாங்கல் என்று எதுவும் அவர்களிடையே மிஞ்சாது. கொண்டாட்டமோ, குதூகலமோ, மகிழ்ச்சியோ வாழ்வில் இராது. நாட்டில் வாழ்பவர் ஆயினும் அவர் காட்டில் வாழ்பவரைப் போல் தனிமைப் படுத்தப் படுவர் அவர் வறுமையின் காரணமாக.

#210. இறைவனை ஏத்துமின்

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்று
அக்குழி தூர்க்கும் அரும் பண்டம் தேடுவீர்!
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கு அற்றபோதே.

பொழுது புலர்ந்ததும் வயிற்றை நிரப்புவதற்கு உணவைத் தேடி அலையும் மனிதர்களே! எந்தக் குழியை நிரப்பியாவது இறைவனின் புகழைத் தேடுங்கள். பிறவிக்குக் காரணம் ஆன வினைகள் அகன்று போய்விட்டால் அதன் பின்னர் வயிற்றுக் குழி தானே நிரம்பி விடும் அறிவீர்.

#211. அறிவை அறிந்ததும்

கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கு மரியது
அக்குழி தூர்க்கும் அறிவை யறிந்தபின்
அக்குழி தூறும் அழுக்கற்ற வாறே.

பொன்னையும் பொருளையும் தேடுவர் உலகத்தோர் வயிற்றுக் குழியை உணவால் நிரப்புவதற்காக. குறையாத வண்ணம் அந்தக் குழியை நிரப்ப இயலாது. அந்த குழியை நிரப்பும் ஞானம் அடைந்து விட்டால் அப்போது பிறவிகளுக்குக் காரணமான வினைகள் நீங்கி விடும். நிரப்ப முடியாத வயிற்றுக் குழியும் நிரம்பி விடும்.

#212. பசிப்பிணி

தொடர்ந்து எழும் சுற்றம் வினையினும் தீய,
கடந்தது ஓர்ஆவி கழிவதன் முன்னே
உடந்து ஒரு காலத்து உணர்விளக்கு ஏற்றித்
தொடர்ந்து நின்று அவ்வழி தூர்க்கலும் ஆமே.

வினைகளை விடவும் மிகக் கொடியவை நம்மைப் பிறவிகள் தோறும் தொடர்ந்து வருகின்ற உறவுகளே. நம் வாழ் நாள் கழிந்து போவதற்கும் முன்பே, உயிர் உடலினின்றும் நீங்குவதற்கு முன்பே,உலகப் பொருட்களில் இருந்து மாறுபட்டு நிற்கும் உண்மைப் பொருளை நாம் நாடவேண்டும்.அப்போது பிறவிப் பிணி, பசிப் பிணி என்ற இரண்டு பிணிகளும் ஒரு சேர அகன்று விடும்.

#213. வாழ்வை வெறுத்தனன்

அறுத்தன ஆயினும் ஆனினம் மேவி
அறுத்தனர் ஐவரும்; எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்று அல்ல; வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டி நின்றானே

உயிர்க் கூட்டம் வினைகளை ஈட்டுகின்றன வன்னம், பதம், மந்திரம், தத்துவம், கலை, புவனம் என்னும் ஆறு அத்துவாக்களின் வழியாக.ஐம் பொறிகள் ஐம் புலன்களை நாடிச் செல்கின்றன. உயிருக்கு எண்ணற்ற துன்பங்களைத் தருகின்றன.கொடிய வினைகள் வாழ்வில் வேதனைகள் தருகின்றன. வாழ்வையே வெறுத்த வறியவன் ஈசனை நாடி நிற்கின்றான்.

முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம்

#214. வேள்விப் பயன்கள்

வசை இல் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேதம் முதலாம்
அசைவு இலா அந்தனன்ர் ஆகுதி வேட்கிலே.

வேதங்கள் கூறுகின்ற அறவழியில் நின்று தளர்ச்சி இல்லாத அந்தணர்கள் செய்யும் வேள்விகளால், வானத்தில் வாழ்பவர்கள், நிலத்தில் வாழ்பவர்கள், எட்டு திசைகளில் வாழ்பவர்கள், திசைகளின் தேவதைகள் என்னும் அனைவருமே மிகுந்த நன்மை அடைவார்கள்.

#215. மெய் நெறியை உணர்வர்

ஆகுதி கேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறம் கொடுத்து உண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படும் மெய்நெறி
தாம் அறிவாலே தலைப்பட்டவாறே.

சுவர்க்கத்தை விரும்புகின்ற அந்தணர்கள் அதற்குரிய வேள்விகளைச் செய்து தானங்கள் தந்தபின் தாம் உண்பர்.

(இவர்கள் சுவர்க்க வாழ்வுக்குப் பின் மீண்டும் பிறவி எடுப்பார்.)

தம் விதியைத் தாமே நிர்ணயம் செய்து கொள்ளும் திறன் கொண்டவர், உண்மை நெறியை உணர்ந்தவர்கள் வேள்விகள் புரியார். இவர்கள் தங்கள் சிரசின் மேல் அறிவைச் செலுத்தி வாழ்வார்.

(இவர்கள் பிறவா வரம் பெற்றுப் பிறவிப் பிணியை அகற்றுவார்கள்.)

#216. தூய நெறி

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததன் உட்பொருள் ஆன
இணைதுணை யாமத்து இயங்கும் பொழுது
துணையணை ஆயது ஓர் தூய்நெறி ஆமே.

இல்லற வாழ்வில் உள்ள அந்தணர்கள் தாங்கள் புறத்தே செய்யும் வேள்வியைப் போன்றே தங்கள் அகத்திலும் மனைவியோடு செய்ய வேண்டும். சிவ சக்தியரின் இணைப்பாக நினைத்து அதனை யாமத்தில் செய்வதே மேன்மையான நெறியாகும்.

#217. இறையருளை விழைய வேண்டும்

போது இரண்டு ஓதிப் புரிந்து அருள் செய்திட்டு
மாது இரண்டு ஆகி மகிழ்ந்து உடனே நிற்கும்
தாது இரண்டு ஆகிய தண்ணம் பறவைகள்
வேது இரண்டு ஆகி வெறிக்கின்றவாறே.

ஆண் பெண் சேர்க்கை இறையருளை விரும்பிச் செய்ய வேண்டும். அப்போது குண்டலினி மேலேறி விளங்கும். சிற்சக்தி இருள் நீங்கி ஒளியுடன் விளங்கும். இந்த நிலையை அடையாமல் வெறும் உடல் அளவில் சுக்கிலம் சுரோணிதக் கலப்பு மட்டும் ஏற்பட்டால் ஆணும் பெண்ணும் மாற்றம் அடைந்து மன மயக்கம் அடைவார்கள்.

#218. புருவ மத்தியில் சுடர்.

நெய்நின்று எரியும் நெடுஞ்சுடரே சென்று
மைநின்று எரியும் வகை அறிவார்கட்கு
மைநின்று அவிழ்தரு மத்தினம் ஆம் என்றும்
செய்நின்ற செல்வம் தீயது வாமே.

ஆண் பெண் கூடலின் போது ஏற்படும் உணர்வுடனே மேலே சென்று புருவ மத்தியில் உள்ள சுடரின் தன்மையை அறிய முடிந்தவர்களின் அனைத்து மலங்களும் நீங்கி அகன்று விடும். அந்தச் சுடர் என்ன? எப்போது உடலில் நிலை கொண்டுள்ள சிவனே அந்த அக்னியே ஆவான்.

#219. வினைகள் அகலும்

பாழி அகலும் எரியும் திரிபோல் இட்டு
ஊழி அகலும் உறுவினை நோய் பல
வாழி செய்து அங்கி உதிக்க அவைவிழும்
வீழி செய்து அங்கி வினை சுடுமாமே.

யோனி என்பது ஒரு ஓம குண்டம் என்றால் அதில் உள்ள அக்கினியைத் தீப்பந்தம் போல நாம் மேல் நோக்கி எழச் செய்ய வேண்டும். அப்போது வினைகள் அழிந்து போய் விடும். உடலை வருத்தும் நோய்களும் அழிந்து போகும். கீழே இருக்கும் தீ மேலே நிலை பெற்றால் மேலும் மேலும் வினைகள் ஏற்படாதவாறு காப்பாற்றும்.

உபநிடதம் கூறும் கருத்து இது:
பெண்ணின் யோனி ஒரு ஓம குண்டம்.
அதில் உள்ள மயிர்கள் தருப்பைப் புற்கள்.
தோல் சோமக் கொடி.
யோனியின் உதடுகள் அக்கினி.
இதை அறிந்தவன் வாஜபேய யாகம் செய்தவன் ஆகின்றான்.
அவன் எல்லாப் பாவங்களையும் அழித்தவன் ஆகின்றான்.

#220. சிவாக்னி

பெருஞ்செல்வம் கேடு என்று முன்னே படைத்த
அருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத்து இன்பம் வர இருந்து எண்ணி
அருஞ்செல்வத்து ஆகுதி வேட்க நின்றாரே.

பெரும் செல்வம் கேடு தரும் என்று முன்னமே கூறி அருளிவன் சிவன். நமக்கு அரிய ஞானச் செல்வதைத் தந்த தலைவன் நம் சிவபெருமான். அவனையே

எப்போது நாடுங்கள். சிவாக்னி தலயில் உள்ளதை உணர்ந்தவர்கள், ஞானச் செல்வதையே விரும்பி, அதற்கேற்ற அக்கினி காரியங்களைச் செய்வார்கள்.

#221. ஓமத் தலைவன்

ஒண்சுடரானை, உலப்பு இலி நாதனை
ஒண்சுடர் ஆகி என் உள்ளத்து இருக்கின்ற
கண்சுடரோன், உலகு எழும் கடந்த அந்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

ஒளி வடிவானவன் இறைவன்; அழிவு இல்லாதவன். ஒளி மிக்க சுடராக என் உள்ளத்தில் இருக்கின்றான்.என் கண்களில் ஒளியாக இருப்பவனும் அவனே! ஏழு உலகங்களையும் கடந்து விளங்கும் அவன், வெம்மையே தராத ஒரு குளிர்ந்த சுடர் ஆவான். அவனே ஓமத்துக்கு உரிய தலைவனும் ஆவான்.

#222. அக்கினியில் பொருந்துவான்

ஓமத்துள் அங்கியின் உள் உளன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதம் கொள்வான் உளன்;
வேமத்துள் அங்கி விளைவி வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே.

மறைந்து இருந்து அக்கினி காரியங்களுக்கு உதவுபவன் சிவன். இறந்தவர்களின் சூக்ஷ்ம உடலிலும் அவன் பொருந்தி இருப்பான். நெய்யப் பெற்ற நூல் ஆடையாக உருவெடுத்து வலிமையடைகிறது. வாசனைகள் வடிவான வினைகள் கடலைப்போல பெருகி விடுகின்றன. ஆன்மாவைச் சிவனை நோக்கிச் செலுத்தினால் நம் சிந்தனை கடையப் பெறும். அப்போது ஒரு நாத ஒலி ஏற்பட்டும். அதனால் நம் வினைகள் எல்லாம் அழியும்.

#223. அருந்தவர்

அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்து
அங்கி இருக்கும் வகை அருள் செய்தவர்
ங்கும் நிறுத்தி இளைப்ப பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழ் அது ஆமே.

தலைக்கு அக்கினியைக் கொண்டு செல்கின்ற ஆற்றல் கொண்ட அருந் தவத்தவர், வைதீகத் தீயை பத்தினியுடன் வளர்த்தவர் ஆவார். இம்மையில் அவர் புகழ் ஓங்கும், நாற்றிசைகளிலும் பரவும். மறுமையில் பிரம்மலோகத்தில் தங்கி இளைப்பாற இடம் கிடைக்கும்.

முதல் தந்திரம் - 12. அந்தணர்

#224. அந்தணர்

அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுள்ளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும் நியமம் செய்
தம் தவ நற்கருமத்து நின்றுஆங்கு இட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கு அறுப்போர்களே.

பிறவிப் பிணியை ஒழிக்கும் தொழில் செய்பவர் அந்தணர். அவர்கள் அக்கினி காரியங்களைத் தவறாமல் செய்பவர்கள்; மூன்று வேளைகளிலும் தமக்கு விதிக்கப்பட்ட வற்றைத் நாள் தவறாமல் செய்து வருபவர்கள் அந்தணர்கள். சந்தி கால நியமங்களையும் தவறாமல் செய்து வருபவர்கள்.

#225. துரிய நிலையை அடைவர்

வேதாந்தம் கேட்க விருப்பொடு முப்பதப்
போதந்தமான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் எனாது கண்டு இன்புறுவோர்களே.

அந்தணர் வேதாந்தம் ஆகிய உபநிடத்தின் உண்மையை அறியவதற்கு விரும்புவார்கள்."தத் த்வம் அஸி" என்ற மூன்று சொற்கள் கூறும் மெய்ப் பொருளை உணர்ந்து; பிரணவத்தில் புகுந்து; நாதாந்த, வேதாந்த, போதாந்த நாதனைக் கண்டு; இதுவே முடிவு என்று எண்ணிவிடாமல்; எப்போதும் தூய துரிய நிலையில் விளங்குவார்கள்.

#226. காயத்திரி

காயத்திரியே கருது சாவித்திரி
ஆய்தற்கு வப்பர் மந்திரம் ஆங்கு உன்னி
நேயத்தேர் ஏறி நினைவுற்று நேயத்து ஆய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.

ஒளியை வேண்டிக் கதிரவனை வணங்குவதற்காக அந்தணர் அதற்குரிய காயத்திரி மந்திரத்தை விருப்பத்துடன் ஜபம் செய்வர். அன்பாகிய தேரில் ஏறி அமர்ந்து கொண்டு அந்தணர்கள் சிவம் என்னும் அறிய வேண்டிய பொருளுடன் பொருந்துவார். உடல், உலகம் என்னும் காரியங்களை வென்று விளங்குவர்.

#227. அந்தணர் இயல்பு

பெருநெறியான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறியான கிரியை இருந்து
சொரூபமதானோர் துகளில் பார்ப் பாரே.

குற்றம் அற்ற அந்தணர்களின் இயல்புகள் இவை. முக்தி தரும் பிரணவத்தைத் தெளிவாக அறிவார்கள். குரு உபதேசத்தால் 'தத்வமசி' என்ற வாக்கியம் உணர்த்தும் பொருளைப் புரிந்து கொள்வார்கள். அத்வைத நெறியில் நிலை பெற்று நிற்பார்கள்.
அகவழிபாட்டால் பிரம்ம ஸ்வரூபம் அடைவார்கள்.

#228. பந்தம் அறுத்தல்

சத்திய மும்தவம் 'தான் அவன் ஆதலும்'
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டாய் உணர்வற்றுப்
பெத்தம் ஆறுத்தலும் ஆகும் பிரமமே.

பிரம்மமாகவே மாறும் வழி இதுவே அறிவீர். சத்தியம் தவறாமை, உடலால் தவம் புரிதல், தற்போதத்தை அகற்றி விட்டு நடப்பவை எல்லாம் சிவன் செயல் என்று எண்ணுதல், அலைந்து திரிந்து களைப்படையும் இந்திரியங்களைப் புலன்களின் வழிப்போகாமல் தடுத்து நிறுத்துதல்; இருவினைகள் அற்றவர்களாக ஞானத்தை அடைதல், மற்றும் பந்தங்களை நீக்குதல் என்பவை ஆகும்.

#229. வேதாந்தம்

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்தமாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கையை விட்டாரே.

வேதத்தின் முடிவான உள்ளவை உபநிடதங்கள். வேதாந்தம் எனப்படுவவை இவையே ஆகும். வேதாந்தத்தைக் கேட்க விரும்பிய அந்தணர்கள் வேதாந்தத்தைக் கேட்ட பின்னும் ஆசைகளை விடவில்லை. வேதாந்தத்தின் முடிவு என்பது ஆசைகளின் அழிவு ஆகும். வேதந்தந்தின் பொருளை அறிந்தவர் ஆசைகளைத் துறந்தவர்.

#230. நூலும், சிகையும்

நூலுஞ் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
நூலுடை யந்தணர் காணு நுவலிலே.

பூணூலும், குடுமியும் வைத்துக் கொள்வதால் மட்டும் ஒருவன் அந்தணன் ஆகிவிட முடியமா என்ன? பூணூல் என்பது வெறும் பருத்தியின் பஞ்சு ஆகும். குடுமி (சிகை) என்பது வெறும் தலை மயிர் ஆகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் உடலின் மூன்று நாடிகளையும் ஒன்றாக ஆக்கி உணரவேண்டும். அதுவே ஆகும் முப்புரி நூலாகிய மெய்யான பூணூல்.

#231. அந்தணன் அன்று

சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி
ஒத்தவிடயம் விட்டோரும் உணர்வின்றிப்
பக்தியும் இன்றிப் பரனுண்மை இன்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.

மெய்ப் பொருளைப் பற்றிய அறிவு இல்லாதவர்கள், தன்னைப் பற்றிய அறிவும் சிறிதும் இல்லாதவர்கள், ஆசைகளைத் துறந்து அதன் மூலம் உண்மையை உணரும் உணர்வு சிறிதும் இல்லாதவர்கள்; உண்மையான பக்தி என்பது இல்லாதவர்கள்; மேலான உண்மைப் பொருள் ஒன்று உண்டு என்ற மனத் தெளிவும் இல்லாதவர்கள்;அறியாமையிலே ஆழ்ந்திருப்பவர்கள் இவர்கள் உண்மையான அந்தணர்கள் ஆக மாட்டார்கள்.

#232. புறக் கிரியைகள்

திரநெறி ஆகிய சித்துஅசித்து இன்றிக்
குரநெறி யாலே குருபதம் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணும்
துரிய சமாதியாம் தூய மறை யோர்க்கே.

அறிவு, அறியாமை, இரண்டும் இல்லாதவர்கள்; குருவின் உபதேசத்தால் திருவடி அடைந்தவர்கள், பிரணவ நெறியில் நின்று அருட்செல்வம் ஈட்டியவர்கள், புறக்கிரியைகளை விட்டு துரிய நிலையில் பொருந்தி நிற்பார்.

#233. வேதம் மட்டுமே ஓத வேண்டும்

மறையோ ரவரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையில் தூய்மை
குறையோர் தன் மற்றுள்ள கோலாகலமென்று
அறிவோர் மறைய தெரிந்தணராமே.

வேதங்களின் பொருளை உணர்ந்து ஓதுகின்றவரே அந்தணர். தூய்மையானது மறைகளின் முடிவாகிய வேதாந்தமே ஆகும். வேதத்தைத் தவிர்த்து மற்ற நூல்கள் அனைத்தும் குறையுடையவை. அவற்றைக் கற்பதனால் எந்த விதப் பயனும் இல்லை. அந்தணர்கள் வேதத்தை மட்டுமே ஓத வேண்டும். ஆரவாரமான மற்றவற்றைத் தவிர்த்து விட வேண்டும்.

#234. உண்மை அந்தணர்

அந்தண்மை பூண்ட அருமறையந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துத லில்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

உண்மையான அந்தணர்கள் என்பவர் இவர்களே! எல்லா உயிர்களிடத்தும் கருணை உள்ளம் கொண்டவர்கள். வேதங்களின் முடிவாகிய சிவனை இடையறாது சிந்தை செய்பவர்கள். இவர்கள் இருக்கும் பூமி வளமானது ஆகும்; வளம் குன்றவே குன்றாது! இவர்கள் நாட்டை ஆளும் தலைவனும் நல்லவன் ஆவான். அந்தணர்கள் தினம் தவறாமல் இருமுறை ஆகுதி செய்வார்கள்.

#235. முக்தியும், சித்தியும் எய்துவர்!

வேதாந்த ஞானம் விளங்க விதி இலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம்பரன் பால்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியும் சித்தியு நண்ணுமே.

வேதாந்த ஞானம் பெறுகின்ற நல்வினைப் பயன் இல்லாதவர்கள் நாதாந்தத்தில் உள்ள முக்தியாகிய பதத்தினை அடைவார்கள். அறிவின் எல்லையாகிய ஞானம் அடைந்தவர்கள் அதன் மூலம் பரத்தை அடைந்தால் அடைவர் நாதாந்த முக்தியுடன் சித்தியும்.

#236. சிவனை நாடுவர்

ஒன்று மிரண்டு மொருங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்கும் திருவுடையோரே.

பிராணன், உள்வாங்கும் மூச்சு, வெளிவிடும் மூச்சு இவை அடங்கும் போது நன்றாக இருந்து கொண்டு நல்லவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தாலும் எல்லாவற்றுக்கும் மேலான முக்தியை விழைபவர்கள் எல்லாவற்றையும் கடந்து விளங்கும் சிவனையே நாடுவார்கள்.

#237. பற்று நீங்கும்

தானே விடும் பற்று இரண்டும் தரித்திட
'நானே' விடப்படும் ஏது ஒன்றை நாடாது;
பூமேவு நான்முகன் புண்ணியப் போகனாய்
'ஓம்' மேவும் ஓராகுதி அவி உண்ணவே.

இறைவனை நினைக்க நினைக்க அகன்று விடும் 'நான்' என்ற அகப் பற்றும், 'எனது' என்ற புறப்பற்றும். அஹங்காரம் முற்றிலும் அழிந்து போகும். பிறகு பொருட்களில் உள்ள நாட்டம் போய்விடும். தாமரை மலரில அம்ர்ந்துள்ள பிரம்மனைப் போல புண்ணியம் ஒன்றையே நாடி ஆகுதிகள் செய்து, வேள்வி அவியை உண்டால் ஓம் ஆகிய சிவனே வந்து பொருந்துவான்.

முதல் தந்திரம் -
13. ராச தோடம் (அரசனின் குற்றங்கள்)

#238. காலன் நல்லவன்!

கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்
கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே.

கற்க வேண்டியவற்றைக் கற்று அறியாத மன்னனும் உயிர்களைப் பறிக்கும் காலனும் ஒப்பானவர்கள் ஆவர். கல்வி அறிவு பெறாத மன்னனைவிடக் காலன் நல்லவன். கல்வி கற்காத மன்னன் அறவழியில் நில்லான். நல்லவர்களைக் கொல் என்று ஆணையிடுவான். காலன் நல்வழியில் நிற்பவர்களை அணுக மாட்டான்.

#239. வளம் குறையும்

நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி அவநெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெட மூடம் நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே.

மன்னன் நாள்தோறும் நன்நெறியை ஆராய வேண்டும். நாள்தோறும் அவன் நீதி நெறிப்படி ஆட்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அந்த நாட்டின் வளம் நாள் தோறும் குன்றிக் குறைந்து போய்விடும். மக்களிடம் அறியாமை பெருகிவிடும். மன்னனின் செல்வம் குறைந்து விடும்.

#240. வேடமும் நெறியும்

வேடநெறி நில்லார் வேடம்பூண்டு என்பயன்
வேடநெறி நிற்போர் வேடம் மெய்வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடுஅது ஆமே.

ஏற்றக் கொண்ட வேடத்துக்கு ஏற்ப ஒருவனின் அகமும் புறமும் ஒத்து இருக்காவிட்டால் அவன் புனைந்து கொண்ட வேடத்தால் என்ன பயன்? ஏற்றுக் கொண்ட வேடத்துக்கு ஏற்ப நிற்பவர் வேடமே உண்மையில் அதற்கேற்ற பயனைத் தருவது கண்கூடுவேடத்துக்கு ஏற்ப நடக்காதவரைக் கண்டித்தும் தண்டித்தும் அவனை நல்வழியில் நிற்கச் செய்யும் மன்னனுக்கு வீடுபேறு கிடைக்கும்.

#241. வேண்டாம் ஆடம்பரம்

மூடங் கொடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகு மாதலாற் பேர்த்துணர்ந்து
ஆடம் பரநூல் சிகையறுத் தானன்றே.

அறியாமை நீங்கப் பெறாதவர்கள் அந்தணருக்குரிய சிகை, பூணூல் முதலியவற்றை கைக் கொண்டால் அந்தச் செய்கையால் வருந்தும் இந்த மண்ணுலகு! மன்னனின் பெருவாழ்வும், பெருமையும் அழிந்துவிடும். ஏற்கும் வேடத்தின் உண்மைத் தன்மையை நன்கு ஆராய்ந்து அறிந்துகொண்டு, வெறும் ஆடம்பரத்க்காக அணிந்து கொண்டுள்ள பூணூலையும், சிகையையும் துறந்து விடுவது நாட்டுக்கு நன்மை தரும்.

#242. சோதிக்க வேண்டும்

ஞானமி லாதார் சாடி சிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடக்கின் றவர்தமை
ஞானிகளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டுக்கே.

ஞானம் அடையாதவர்கள் வெறுமனே வேடம் அணிந்து கொண்டு, சடை, குடுமி, பூணூல் இவற்றுடன் ஞானிகள் போல நடமாடினால், அரசன் ஞானியரைக் கொண்டே அவர்களை நன்கு சோதிக்க வேண்டும். அவர்களை ஞானம் பெறுமாறு செய்வது நாட்டுக்கு நலம் பயக்கும்.

#243. மீளா நரகம்

ஆவையும், பாவையும், மற்றுஅற வோரையும்,
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன்; காவது ஒழிவானேல்
மேவும் மறுமைக்கும் மீளாநரகமே.

ஆவினம், பெண்கள், அறவழியில் நிற்பவர்கள், தேவர்களும் தொழும் திருவேடம் புனைந்தவர்கள், இவர்களை ஒரு மன்னன் காப்பாற்ற வேண்டும். அங்ஙனம் காக்கத் தவறி விட்ட மன்னன் மீள முடியாத நரகத்தைச் சென்று அடைவான்.

#244. ஆறில் ஒரு பங்கு

திறம்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்;
சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்று ஆமே.

மறுமையில் முக்தியையும், இம்மையில் செல்வமும், பெற விரும்புகின்ற ஒரு மன்னன் செய்ய வேண்டியது இது. அவன் அறத்தையே எப்போதும் நிலை நாட்ட வேண்டும். கடல் சூழுலகில் மக்கள் செய்யும் நல்வினைகள் தீவினைகள் அனைத்திலும் ஆறில் ஒரு பங்கு அரசனையே சாரும்.

#245. மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி!

வேந்தன் உலகைக் மிக நன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்;
பேர்ந்து இவ்உலகைப் பிறர் கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலி அன்ன பாவகத்தானே.

மன்னன் உலகைக் காக்கும் திறன் மிகவும் நன்றாக உள்ளது. அவன் நாட்டு மக்களும் அவனைப் போலவே இருப்பார்கள். பகைமை பூண்ட அயல் நாட்டு மன்னன் இவன் நாட்டைக் கைப்பற்றுவான். அதே போன்று இவன் அயல் நாட்டைக் கைப் பற்றுவான். விளைவுகளை ஆராயாது பாய்கின்ற மன்னனுக்கும் காட்டுப் புலிக்கும் என்ன வேறுபாடு உள்ளது?

#246. வேந்தர் கடன்

கால்கொண்டு கட்டிக் கனல் கொண்டு மேலேற்றிப்
பால் கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை யுண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ் செய்வேந்தன் கடனே.

மூச்சுக் காற்றின் இயக்கத்தைத் தடுக்க வேண்டும். மூலாதாரத்தில் உள்ள கனலை மேலேற்ற வேண்டும். பால் போன்று நிலவும் வெண்ணிற ஒளியின் உதவியால் மதி மண்டலத்தைக் கண்டு கொள்ள வேண்டும். அங்கு பொழியும் ஆனந்தத் தேனைப் பருக வேண்டும். இதை விட்டு விட்டு ஆனந்தம் தரும் என்று மயங்கி, மயக்கம் தரும் கள்ளை அருந்தி மேலும் மயங்காமல், மக்களைக் காப்பது ஒரு நல்ல மன்னனின் கடமை ஆகும்.

#247. சமயவாதிகள்

தத்தம் சமயத் தகுதி நில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண் டம்செய்வது அவ் வேந்தன் கடனே.

தங்களுக்கு உரிய சமய நெறியில் நிற்காதவர்களைச் சிவபெருமான் ஆகம நெறிப்படி மறு பிறவியில் தண்டனை தந்து திருந்துவான். இந்தப் பிறவிலேயே தகுந்த தண்டனை தந்து அவர்களைத் திருத்துவது ஒரு நல்ல மன்னனின் கடமைகளில் ஒன்று ஆகும்.

முதல் தந்திரம் - 14. வானச் சிறப்பு.

#248. அமுதூறு மாமழை

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.

அமுதம் போன்ற மழைப் பொழிவினால் உலகம் எங்கும் வளமையும் பசுமையும் பெருகும். சுவையான கனிகள் கொண்ட மரங்கள் வளரும். பாக்கு, இளநீர் தரும் தெங்கு, கரும்பு, வாழை இவற்றோடு சமாதி நிலைக்கான மூலிகை காஞ்சிரையும் தோன்றி வளரும்.

#249. நுரையும் கரையும் இல்லை

வரை இடைநின்றுஇழி வான்நீர் அருவி
உரை இல்லை, உள்ளத்து அகத்து நின்று ஊறும்;
நுரை இல்லை, மாசு இல்லை, நுண்ணிது தெள்நீர்;
கரை இல்லை எந்தை கழுமணி ஆறே.

சிவனின் தலை ஆகிய மலையில் இருந்து பெருகுவது ஒளிமயமான கங்கை. அதன் பெருமையை உரைப்பதற்கு இல்லைப் பொருத்தமான வார்த்தைகள். உள்ளத்தில் அன்பினால் ஊறுவதனால் அதில் நுரை இருக்காது; மாசு இருக்காது; தெளிந்த அந்த நீர் கரையில்லாதது; பரந்து அகன்று ஓடுவது; பாவங்களை அழிப்பது.

முதல் தந்திரம் - 15. தானச் சிறப்பு

#250. ஒல்லை உண்ணன்மின்

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே.

எல்லோருக்கும் கொடுங்கள். "அவர் உயர்ந்தவர்! இவர் தாழ்ந்தவர்" என்று வேறுபடுத்திப் பேசாதீர்கள். வரும் விருந்தாளியை எதிர் நோக்கி இருங்கள். அவருடன் சேர்ந்து உணவைப் பகிர்ந்து உண்ணுங்கள். பழைய உணவைப் போற்றிக் காவாதீர்கள். இம்மையிலும் மறுமையிலும் விருப்பம் கொண்டவர்களே! விரைவாக

உணவை உண்ண வேண்டாம். காகங்கள் கூட உண்ணும் பொழுது தன் இனத்தைக் கரைந்து அழைத்து உணவைப் பகிர்ந்து உண்ணும் என்பதை அறிவீர்.

முதல் தந்திரம் - 16. அறம் செய்வான் திறம்

#251. தாம் அறிவார்

தாம் அறிவார் அண்ணல் தாள் பணிவார் அவர்
தாம் அறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்;
தாம் அறிவார் சில தத்துவர் ஆவார்கள்;
தாம் அறிவார்க்குத் தமர் பரன் ஆமே.

தம்மை அறிந்தவர் சிவபெருமானது திருவடிகளை வணங்குவர். தம்மை அறிந்தவர் அறத்தை மேற்கொண்டு செய்து செய்து வருவர். தம்மை அறிந்தவர் உண்மையை உணரும் தத்துவர்கள் ஆவர். தம்மை அறிந்தவர்க்கு இறைவனே உறவினன் ஆவான்.

#252. செய்ய முடிந்தவை, செய்ய வேண்டியவை!

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே.

எல்லோராலும் செய்ய முடிந்த செயல்கள் இவை. உணவு உண்ண அமரும் முன்னர் இறைவனுக்கு ஒரு வில்வத்தைச் சமர்பித்தல்; தினமும் ஒரு பசுவுக்கு ஒரு கைப்பிடி பச்சைப் புல்லை அளித்தல்; தான் உண்ணும் முன்னர் பிறர் ஒருவருக்கு ஒரு கவளம் உணவு அளித்தல், எல்லாரிடமும் இனிய சொற்களைப் பேசுதல். இவற்றை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும்.

#253. பயன் அறியார்.

அற்றுநின்றார் உண்ணும் ஊணே அரன்என்னும்
கற்றன போதம் கமழ்பவர் மானிடர்
உற்று நின்று ஆங்கு ஒரு கூவற் குளத்தினில்
பற்றி வந்து உண்ணும் பயன் அறியாரே.

அகப் பற்றும், புறப் பற்றும் நீங்கியவர்கள் சிவஞானியர். உணவை நாடி அவர்கள் எங்கும் செல்ல மாட்டார்கள். அவர்களைத் தேடிச் சென்று நாம் அளிப்பதே

உணவே அறம். இந்த உண்மையை அறிந்த பிறகும் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள் பலர் ஒரு கிணற்றங் கரையிலோ, குளத்தங் கரையிலோ தங்கி இருக்கும் ஞானியரை வருந்தி வருந்தி அழைத்து வந்து உணவு அளிப்பதிலையே!

#254. அறம் செய்வீர்

**அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமம் செய்வீர்
விழித்திருந்து என் செய்வீர் வெம்மை பரந்து
விழிக்க அன்று என் செய்வீர் ஏழை நெஞ்சீரே.**

மன மலங்களை அகற்றி அறிவைப் பெருக்கிக் கொள்ளவில்லை. செல்வம் இருந்தபோதிலும் அறச் செயல்களைச் செய்யவில்லை. உலகில் இப்படிக் காலத்தைக் கழிப்பதால் என்ன பயன் விளையும்? நெருப்பில் உடல் எரியும் போது அறம் செய்யாதவர் நிலை என்னவாகும்? அறம் செய்யும் உள்ளத்தைப் பெறாத மனிதர்களே! இதனைச் சிந்தியுங்கள்!

#255. தவம் செய்வீர்.

**தன்னை அறியாது, தாம் நல்லார் என்னாது, இங்கு
இன்மை அறியாது, இளையர் என்று ஓராது,
வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்
தன்மையின் நல்ல தவம் செய்யும் நீரே.**

உயிர்களைக் கவரும் யமன் இவற்றைச் சிந்திக்க மாட்டான். உன் நிலைமையை பற்றி சிறிதும் சிந்திக்க மாட்டான். நீங்கள் மிகவும் நல்லவர் என்ற சிந்திக்க மாட்டான்.நீங்கள் வறுமையில் வாடுவதையும் சிந்திக்க மாட்டான். நீங்கள் வயதில் இளையவர் என்றும் சிந்திக்க மாட்டான். வலிமை உடைய யமன் வந்து சேரும் முன்பே நீங்கள் உடலை நிலைக்கச் செய்யும் அரிய தவத்தை மேற்கொள்வீர்!

#256. அறம் செய்யும் முறை

**துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை;
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவு அறியாரே.**

அகப் பற்று புறப் பற்று இரண்டையும் துறந்து விட்டால் அவர்களுக்கு இல்லை எந்த விதமான உறவுமுறைகளும். இறந்து விட்டவர்களுக்கு இல்லை எந்த விதமான உலக இன்பமும். அறம் செய்ய மறந்தவனுக்கு வழித் துணையாக

வரமாட்டான் ஈசன். இந்த மூன்று வகைப் பட்டவர்களுமே அறம் செய்யும் முறையை அறியார்.

#257. உடலைப் பேணுவீர்!

தான்தவம் செய்வது ஆம் செய் தவத்து அவ்வழி
மான்தெய்வமாக மதிக்கும் மனிதர்கள்
ஊன் தெய்வமாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான் தெய்வம் என்று நமன் வருவானே.

அறிவைத் தெய்வமாக மதிக்கும் மனிதர்கள், தாம் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாக இப்பிறவியிலும் தவம் செய்து மேன்மை அடைவர். உடலே தெய்வம் என்று மதிக்கும் அறிவற்ற மனிதர்கள் தாமே தெய்வம் என்று எண்ணி அறம் செய்யாது வாழ்வர். யமன் வருவதை அறியாது வீணே அழிந்து போவர்.

#258. மறுமைக்குத் துணை

திளைக்கும் வினைக்கடல் தீர்வு உறுதோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு;
கிளைக்கும் தனக்கும் அக்கேடு இல் புகழோன்
விளைக்கும் தவம் அறம் மேல்துணை ஆமே.

நல்வினைகள், தீவினைகள் இரண்டும் கலந்து ஒரு பெரும் கடலாக மாறி நம்மை அதில் அமிழ்த்து விடும். அதில் மூழ்காமல் பத்திரமாகக் கரையேறுவதற்கு நமக்கும் நம் உறவுகளுக்கும் களைப்பைப் போக்கி உதவுகின்ற தோணிகளாக இரண்டு வழிகள் உள்ளன. அழியாப் புகழை உடைய இறைவனைப் பற்றிக் கொண்டு அறச் செயல்களைப் புரிந்து வாழ்வது ஒரு வழி. இல் வாழ்வில் இருந்து கொண்டே அறச் செயல்களைப் புரிந்து கொண்டு வாழ்வது மற்றொரு வழி.
இரண்டுமே மறுமைக்குத் துணையாம்.

#259. சிவன் செய்த வழி

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்ற முரையான் அறநெறிக் கல்லது
உற்றங்க ளாலொன்று மீந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழி கொள்ளு மாறே.

உலகுக்கு ஆதாரமாக இருப்பவன் இறைவன். அவனைக் குற்றம் கூறாமல் இருத்தல் வேண்டும். அறநெறியை விடுத்துப் பிற நெறிகளில் செல்லாது இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு நாம் கொடுப்பதே நமக்குத் துணையாக மாறி வரும். இதுவே சிவன் நாம் முக்தி அடைவதற்கு ஏற்படுத்தியுள்ள வழியாகும்.

முதல் தந்திரம் - 17. அறம் செய்யான் திறம்

#260. பயன் அறியார்!

எட்டி பழுத்த, இருங்கனி வீழ்ந்தன,
ஒட்டோய நல்லறம் செய்யாதவர் செல்வம்
வட்டிகொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே.

எட்டி மரம் பழுத்தது. பெரிய கனிகள் தரையில் வீழ்ந்தன. ஆனால் யாரும் அவற்றை நாடிச் செல்லவில்லை. வட்டி வாங்கி உலகில் பெரும் பொருள் சேர்ப்பவர் அதன் உண்மையான பயனை அறியார். அறம் செய்யார். அவர்கள் செல்வமும் எட்டிக் கனிகள் போன்று பயனற்றவையே.

#261.அறம் அறியார்

ஒழிந்தன காலங்கள்; ஊழியும்போயின;
கழித்தன கற்பனை; நாளும் குறுகிப்
பிழிந்தன போலத் தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம் அறியாரே.

காலம் கழிந்து சென்றது. ஊழிகள் ஓடிச் சென்றன. கற்பனைகள் எல்லாம் கனவாகி மறைந்து விட்டன. வாழ்நாட்கள் குறுகின. உடல் சாறு பிழிந்த சக்கையானது. பலவிதத் துன்புற்ற பின்னர் அந்த உடல்கள் அழிந்து பட்டன. இவற்றை எல்லாம் கண்ட பிறகும் உலகத்தவர் அறம் என்பதையே அறியாதவர்களாக இருகின்றார்களே!

#262. பிறப்பும், இறப்பும்

அறம் அறியார், அண்ணல் பாதம் நினையும்
திறம் அறியார், சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம் அறிவார், பகை மன்னி நின்றாரே.

அறம் என்பதையே அறியாமல் பலர் உலகில் வாழ்கின்றனர். இறைவனைத் துதிக்கும் திறன் என்பதையும் இவர் அறியார். சிவலோகத்தின் பக்கமான சுவர்க்கம் போன்றவற்றையும் அறியார். லௌகீக வாழ்வில் பற்பல பொய்மொழிகளைக் கேட்கின்றனர். பலவிதமான பாவச் செயல்களை இவர்கள் செய்கின்றனர். அதனால் பிறப்பு இறப்பு என்றவற்றில் இவர்கள் பொருந்தி நிற்கின்றனர்.

#263. அறம் செய்யாவிட்டால்…

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பாலது ஆகும்;
உரும், இடி, நாகம், உரோணி, கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே.

அறம் செய்யாதவர்க்கு வந்து விளையும் இருமல், சோகை, கோழை, ஜுரம் போன்றவை. மின்னலும் , இடியும், பாம்பும், தொண்டை நோயும், கட்டிகளும் அறம் செய்பவர்களை ஒரு நாளும் அண்டாது.

#264. நரகத்தே நிற்றிரோ?

பரவப் படுவான் பரமனை ஏத்தார்,
இரவலர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்,
கரகத்தால் நீர் அட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தே நிற்றிரோ நல்நெஞ்சி னீரே.

தன் புகழையே என்றும் விரும்பி வாழ்வார். இறைவனைப் பணிந்து வணங்க மாட்டார். தன்னை அண்டி இரந்து நிற்பவற்கு ஏதும் ஈயார். குடத்தால் நீர் ஊற்றி வழிப் போக்கர்கள் தங்குவதற்குக் குளிர்ந்த சோலைகளையும் வளர்க்க மாட்டார்கள். இத்தகைய நல்ல மனம் படைத்தவர்களே! நீங்கள் நரகத்தில் நிலையாக இருக்க விரும்புகின்றீர்களோ?

#265. வினைகளைக் கடப்பார்.

வழி நடப்பார், இன்றி , வானோர் உலகம்
கழி நடப்பார்; நடந்தார் கரும்பாரும்
அழி நடக்கும் வினை ஆசு அற ஓட்டிட்டு
ஒழி நடப்பார், வினை ஓங்கி நின்றாரே.

அறவழியில் நிற்பவர் அடைவர் தேவர் உலக இன்பம். தீய நெறியில் நடப்பவர்களுக்குக் கிடைக்காது இந்த இன்பம். அவர்கள் இருள் மிக்க நரகத்தில் நடப்பவர்கள் ஆவார்கள். காமம், கோபம், மயக்கம் போன்ற மன மலங்களை ஒழித்து விட்டு நல்ல வழியில் நடப்பவர்கள் வினைகளைக் கடந்து நிற்பார்கள்.

#266. துறக்கம் ஆள்வர்!

கனிந்தவர் ஈசன் கழல்அடி காண்பர்;
துணிந்தவர் ஈசன் துறக்கம் அது ஆள்வர்
மலிந்தவர் மாளும் துணையும் ஒன்று இன்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்து ஒழிந் தாரே.

கனிந்த மனதுடன் எல்லா உயிர்களிடத்தும் கருணை செய்பவர் இறைவனின் திருவடிகளின் தரிசனம் பெறுவார். உலகப் பற்றினை ஒழித்துவிட்டு மனம் துணிந்து தவம் செய்பவர் இறைவனுடன் இணையும் சாயுஜ்ய நிலையை அடைவர்.
உலக வாழ்வில் இருந்துகொண்டு அறம் அற்ற செயல்களைச் செய்தால் இறைவன் ஆசி கிடைக்காது. காலனின் சினம் கிடைக்கும். அஞ்சத் தகுந்த நரகத்தில் இடம் கிடைக்கும்.

#267. அறம் அறியாரே

இன்பம் இடர் என்று இரண்டு உற வைத்தது
முன்பு அவர் செய்கையினாலே முடிந்ததும்
இன்பம் அது கண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பு இலார் சிந்தை; அறம் அறியாரே.

இன்பமும், துன்பமும் பொருந்தியுள்ளன உலகினில். முற்பிறப்பில் செய்த அறச் செயல்கள் இன்பம் தரும். முற்பிறப்பில் செய்த மற்றச் செயல்கள் துன்பம் தரும். இதைக் கண்ட பிறகும் பிறருக்கு எதையும் கொடுக்காத மனிதர்கள் அன்பு என்பதே இல்லாதவர்கள். அவர்கள் அறத்தை அறியாதவர்கள்.

268. தீமை செய்பவன் ஒரு விலங்கு

கெடுவதும் ஆவதும் கேடுஇல் புகழோன்
நடு அல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவது எண்ணுமின் இன்பம்
படுவது செய்யின் பசு அது ஆமே.

ஒருவன் கேட்டை அடைவதும் ஆக்கத்தை அடைவதும் இறைவன் இச்சைப் படி நடக்கின்ற செயல்கள் ஆகும். நேர்மை இல்லாத செயல்களைச் செய்பவன் இன்பம் அடைவதை இறைவன் ஒருநாளும் அனுமதிக்க மாட்டான். எனவே பிறருக்கு அன்புடன் கொடுப்பதையும் வறியவர்க்கு மனம் கனிந்து இடுவதையும் சிந்தனை செய்யுங்கள். பிறர் இன்பத்தைக் கெடுப்பவன் ஒரு விலங்குக்குச் சமம்.

#269. புன் மக்களைப் போற்றன்மின்

**செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வு எனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லம் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கு எய்த விற்குறி ஆமே.**

செல்வம் கருதி அறிவற்ற புன்மக்களைப் போற்றிப் புகழாதீர்கள். அவர்கள் தரக் கூடிய அழிகின்ற செல்வத்தை நாடி வாடாதீர்கள். அழியாத செல்வம் ஆகிய வீடு பேறைத் தரவல்லவன் இறைவன். அவனையே என்றும் நாவாறப் போற்றிப் புகழுங்கள். வில் வீரனின் அம்பு இலக்கைத் தவறாது அடையும். அது போன்றே உங்கள் வார்த்தைகள் இறைவனை அடையும். அவன் உங்கள் வறுமையை நீக்கி வாழ்வில் இன்பம் தருவான்

முதல் தந்திரம் - 18. அன்புடைமை

#270. அன்பே சிவம்

**அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே.**

அன்பாகிய சக்தி தேவியும், அறிவாகிய சிவபிரானும், இரண்டு ஆகும் என்பர் அனுபவம் அறிவும் அற்றவர்கள். அன்பு முதிர்ச்சி அடைந்தால், சிவம் ஆகிய அறிவு விளங்கும். இந்த உண்மையை உலகில் எவருமே அறிவதில்லை. அன்பின் முதிர்ச்சி அறிவை விளங்கச் செய்வதை அறிந்த பின் அன்பே வடிவாக மாறி அறிவாகிய சிவத் தன்மையை அடைவர்.

#271. அன்பு செய்ய வேண்டும்

**பொன்னைக் கடந்து இலங்கும் புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிறும் இளம் பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்ததுஎன் பேரன்பு தானே.**

பொன்னை வெல்லும் ஒளியுடைய புலித் தோல் அணிந்தவன்; மின்னல் போல் ஒளிரும் அழகிய பிறைச் சந்திரனைச் சூடியவன்; பிறை நிலவு பொருந்திய

வெண்ணீ ற்றின் ஒளியில் விளங்குபவன். அந்தப் பெருமானிடத்தே சென்று பொருந்தியுள்ளது எனது பேரன்பு.

#272. என்பே விறகு!

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போன் மணியினை எய்த ஒண்ணாதே.

தன் எலும்புகளையே விறகாக எரிக்கலாம். தன் இறைச்சியையே அறுத்து இடலாம். கனலில் அதைப் பொன் போல வறுக்கலாம். ஆனால் அன்போடு தன் உள்ளம் உருகி மனம் நெகிழ்பவர்களால் மட்டுமே என் போல் இறைவனை அடைய முடியும்.

#273. ஈரம் உடையவர்

ஆர்வம் உடையவர் காண்பார் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணை அடி
பாரம் உடையவர் காண்பார் பவம் தன்னை
கோர நெறி கொடு கொங்கு புக்காரே.

இறைவனைக் காணும் அன்பு மனம் கொண்டவர் இறைவனைக் காண்பார் தான் விரும்பியபடியே. அன்பான மனம் நெகிழும் ஈரத் தன்மை கொண்டவர் இறைவன் திருவடிகளைத் தலையில் சூடுவர். சம்சார பாரத்தைச் சுமப்பவர் பிறவிப் பெருங்கடலில் மூழ்கி பெரும் துன்பம் அடைவர். அன்பு என்பதையே அறியாதவர் கொடிய கானகத்தில் போகும் வழி தெரியாமல் மிகவும் துன்புறுவர்.

#274. அன்போடு வழிபடுங்கள்

என்அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்
முன்அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்
பின்அன்பு உருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்அன்பு எனக்கே தலை நின்றவாறே.

அன்பு கொண்ட உள்ளத்தை உருக்கி இறைவனை ஏத்துங்கள். முதன்மையான அன்பினை உருக்கி முதல்வனை நாடுங்கள். அப்போது இறைவனும் தன் அன்பைக் காட்டி நம் பந்த பாசங்களை அகற்றி விடுவான். அவன் அருளைத் தரும் விதம் இதுவே.

#275. அன்பு வலை

தான்ஒருகாலம் சயம்பு என்று ஏத்தினும்
வான்ஒரு காலம் வழித் துணையாய் நிற்கும்
தேன்ஒரு பால் திகழ் கொன்றை அணிசிவன்
தான்ஒரு வண்ணம் என் அன்பில் நின்றானே.

சிவபெருமானை ஸ்வயம்பு என்று எண்ணிப் புகழ்ந்தால் அது வானத்தில் பொருந்தி வழிபடுபவருக்கு ஒரு நல்ல துணை ஆகும். தேன் போன்ற இன்மொழி பேசும் உமை அன்னையைத் தன் இடப் பக்கத்தில் கொண்டு, கொன்றை மலர்களை அணிந்த சிவன், என் அன்பு வலையில் வந்து அகப்பட்டுக் கொண்டான். இன்னதென்று கூற முடியாத வண்ணத்துடன் நின்றான்.

#276. பெருமானை அறிகிலர்

முன் படைத்து இன்பம் படைத்த முதலிடை
அன்பு அடைத்து எம் பெருமானை அறிகிலார்
வன்பு அடைத்து இந்த அகலிடம் வாழ்வினில்
அன்பு அடைத்தான் தன் அகலிடத்தானே.

இறைவன் இந்த உலகினை முதலில் படைத்தான். உயிர்களுக்காக எல்லா இன்பங்களையும் படைத்தான். எல்லா உயிர்களுக்கும் ஒரே தலைவனாகிய அவனிடம் அன்பு செலுத்தாமல் அவனை அறியாமல் இருக்கின்றனரே! உறுதியையும், தனது அன்பினையும் படைத்த பெருமானே இந்த விரிந்து பரந்த உலகமாகவும் விளங்குகின்றான்.

#277. சிவ ஒளி

கருத்து உறு செம்பொன் செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவன் என்று ஏத்தியும்
அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

உள்ளத்தில் பொருந்தும் போது உருகிய செம்பொன்னைப் போல ஒளிரும் ஜோதி வடிவானவன் நம் இறைவன்.மனதில் அவனை இருத்துங்கள்; மாறாமல் வையுங்கள். அவனே நம் தலைவன் என்று போற்றிப் புகழுங்கள். அன்பு கொண்ட மனதுடன் அவனை யார் வேண்டிக் கொண்டாலும் தேவர்களின் தலைவன் ஆகிய அவன் அங்கு தன்னுடைய சிவ ஒளியைப் பெருகச் செய்வான்.

#278. அண்ணலை நாடுகிலரே!

நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசு அறிந்தேயும் மனிதர்கள்
இச்சையுளே வைப்பர் எந்தை பிரான் என்று
நச்சியே அண்ணலை நாடிகிலரே.

ஜீவனுடைய வினைகளுக்கு ஏற்பப் பிறப்பையும் இறப்பையும் அமைக்கிறான் ஈசன். அவன் வைத்துள்ள முறையை அறிந்த பிறகும் உலக இன்பத்தில் நாட்டம் கொள்கின்றனர். “என் தந்தையே! எம் பிரானே!” என்று அன்புடன் அவனை விரும்பி வணங்குவதில்லை. அவர்கள் செயல் எவ்வளவு அறிவின்மை!

#279. துணையாவான்

அன்பின் உள்ளான் புறத்தான் உடலாய் உள்ளான்
முன்பின் உள்ளான்; முனிவர்க்கும் பிரான் - அவன்
அன்பினுள் ஆகி அமரும் அரும் பொருள்
அன்பினுள்ளார்க்கே அணைதுணை ஆமே.

இறைவன் இருப்பது எங்கெங்கே எப்படி என்று அறிவீரா? அவன் தன்னை அறியும் அறிவு கொண்டவர்களின் தூய அன்பில் இருப்பான். தன்னிடத்தில் இருப்பது போன்றே மற்றவர்களிடத்தும் பொருந்தி நிற்பான். அவன் அன்பையே தன் உடலாகக் கொண்டவன். உலகம் தோன்றுவதற்கு முன்பே உள்ளான். உலகம் அழிந்த பின்னும் அவன் இருப்பான். ஆத்மா ஞானம் தேடுபவர்களின் தலைவன் அவனே. அன்பு பூண்டவரிடம் நிலையாகப் பொருந்தும் அரும் பொருள் அவன். அன்பின் வழியில் தன்னை நாடி வருபவர்களை அவன் உய்விப்பான்.

முதல் தந்திரம் - 19. அன்பு செய்வோரை அறிவான்

#280. அன்பு செய்வான்

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்து அன்பு செய்து, அருள் கூர வல்லார்க்கு
மகிழ்ந்து அன்பு செய்யும் அருள் அது ஆமே.

சிவன் அறிவான் தன்னிடம் அன்பு செய்வதை இகழ்பவர் யார்; தன்னிடம் மெய்யான அன்பு செய்பவர் யார் என்பதை நன்றாக. உத்தம நாதன் அவன்

அதற்கேற்ப மகிழ்வுடன் அருள் செய்வான். தளிர்த்து வளரும் அன்பைத் தன்னிடன் காட்டுபவர்களுக்கு அவனும் மிகவும் மகிழ்ந்து அன்புடன் அருள் செய்வான்.

#281. பிறவி இன்பமாகும்

இன்பம் பிறவிக்கு இயல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில் பல என்னினும்
அன்பிற் கலவி செய்து ஆதி பிரான் வைத்த
முன்பப் பிறவி முடிவது தானே.

பிறவிகள் இன்பம் பெறுவதற்காகச் சிவபெருமான் அனைத்தையும் அழகாக வகுத்து அமைத்துள்ளான். ஆயினும் பிறவிகளில் வரும் துன்பங்கள் பலப் பல! அவற்றைப் போக்குவதற்காகச் செய்யப்படும் செயல்களும் பலப்பல. எது எப்படியாயினும் சிவபெருமான் மீது நீங்காத அன்பு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் சிவன் அருளால் இந்தப் பிறவி இன்ப மயம் ஆகும்.

#282. துன்புறு கண்ணிகள் ஐம்பொறிகள்

அன்புஉறு சிந்தையின் மேல்எழும் அவ்ஒளி
இன்பு உறு கண்ணியொடு ஏற்க இசைந்தன
துன்புஉறு கண் இயைந்தாடுந் துடக்கற்று
நண்புஉறு சிந்தையை நாடுமின் நீரே.

அன்பு கொண்ட உள்ளத்தின் மீது ஒளியாக விளங்குவான் சிவன். இன்பம் தரவல்ல விழிகளை உடைய சக்தி தேவியுடன் அவனும் அடியவர்களுக்கு அருள் புரிவதற்குத் திருவுள்ளம் கொள்வான். அப்போது வலை போல ஜீவனைச் சிக்க வைக்கும் ஐம்பொறிகளுடன் ஜீவன் கொண்டிருந்த தொடர்பு அற்றுப் போய்விடும். அப்போது சிந்தையை நட்புணர்வுடன் சிவன் மீது செலுத்தி துன்பம் தரும் பொறிகளில் இருந்து விலகியே நில்லுங்கள்.

#283. பேரின்பம்

புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்க்கு
உணர்ச்சி இல்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுஇது ஆமே.

சிற்றின்பம் துய்க்க மங்கையின் மீது அன்பு கொள்ள வேண்டும். அதை போன்ற அன்புடன், தம் சிரசின் உச்சியில் உதிக்கும் ஸ்பரிச உணர்வில் பொருந்தி இருக்க அறிந்தவர்களுக்கு, உணர்வு அழிந்து துவாதசாந்தத்தில் சென்று சிவனுடன் கூடுவது, அந்தச் சிற்றின்பத்தை விடப் பல மடங்கான பேரின்பமாக இருக்கும்.

#284. முன்பு நிற்பான்!

உற்றுநின் றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்து அறிவார் இல்லை;
பத்திமை யாலே பணிந்து அடியார் தொழ
முத்தி கொடுத்து அவர் முன்பு நின்றானே.

பேரின்பத்தில் திளைப்பவரோடு விளங்கும் சோதியாகிய சிவபிரானைச் சித்திகள் பெற்ற சித்தர்களாலும் ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்ள முடியாது. பக்தியோடு அவனை வணங்கித் தொழுபவர்களுக்கு அவன் வீடு பேற்றை அளிக்க விரும்பி அவனே அவர்கள் முன்பு வந்து காட்சி அளிப்பான்.

#285. அன்பினால் காணலாம்

கண்டேன் கழல்தரு கொன்றை யினான்அடி,
கண்டேன் கரிஉரி யான்தன் கழல்இணை
கண்டேன் கமல மலர்உறை வான்அடி
கண்டேன் கழல் அது என் அன்பினுள் யானே.

கண்டேன் தன் திருவடிகளைத் தரும் கொன்றை மலர் சூடியவன் இணையடி!
கண்டேன் கரிய ஆணவ யானையின் தோலை அணிந்து கொண்டவன் கழலடி!
கண்டேன் மூலாதாரத்தில் உள்ள தாமரையில் உறைவும் சிவன் திருவடி!
அவன் கழல்கள் என் அன்பினுள் விளங்குவதை நான் கண்டேன்!

#286. அன்பனை அறிகிலர்!

நம்பனை நானா விதப் பொருள் ஆகும்என்று
உம்பரில் வானவர் ஓதும் தலைவனை
இன்பனை இன்பத்து இடை நின்ற இரதிக்கும்
அன்பனை யாரும் அறியகிலாரே.

நம்புவதற்கு உரியவன் சிவபெருமான். நானாவிதப் பொருட்களாகத் திகழ்பவனும் அவனே. வானுலகத் தேவர்கள் போற்றும் தலைவன் அவனே. இன்பமே வடிவான பெருமான் அவனே. ஜீவர்களின் இன்பத்தில் மகிழும் அன்பனும் அவனே. யாருமே இத்தகைய இறைவனை அறியவில்லை.

#287. யாம் அறிவோம் என்பர்!

முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பு இல் இறைவனை யாம் அறிவோம் என்பர்;
இன்பப் பிறப்பும் இறப்பும் இல்லான் நந்தி
அன்பில் அவனை அறியகிலாரே.

இன்பத்தினால் வந்த பிறப்பு இல்லாதவன் ஈசன். இறப்பு என்பதும் இல்லாதவன் நம் ஈசன், பிறப்பும் இறப்பும் இல்லாத ஞானியர் இங்ஙனம் கூறுவர். அன்புடன் வழிபட்டு யாம் இறைவனை அறிந்துள்ளோம் என்பர். அப்படி இருந்த போதிலும் மற்றவர்கள் ஈசனை உணர்ந்து தங்கள் பிறப்பு இறப்பைப் போக்கிக் கொள்ள வில்லையே.

#288. ஈசன் ஈட்டி நின்றானே!

ஈசன் அறியும் இராப் பகலும் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களைத்
தேசு உற்று இருந்து செயல் அற்று இருந்திடில்
ஈசன் வந்து எம் இடை ஈட்டி நின்றானே.

இரவும் பகலும் தன்னிடம் மிகுந்த அன்பு செய்பவரை நன்றாக அறிவான் நம் சிவபெருமான். அவனுடைய ஒளியைப் பெற்று அந்த ஒளியிலேயே இருந்து கொண்டு தனக்கென்று எந்தச் செயலும் இல்லாது இருந்தோம் என்றால் இறைவன் நம்மிடம் வந்து எழுந்தருள்வான்; எப்போதும் பிரியாமல் நம்முடன் தங்குவான்.

#289. மஞ்சனம்

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டும் என் ஆருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சனம் ஆமே.

மேலான ஒளிவடிவான ஈசனை விட்டு விடுவது ஏன்? மீண்டும் சென்று இறைவனைப் பிடிப்பது ஏன்? நான் அவனை உறுதியாகப் பற்றிக் கொண்டு தொடர்வேன். என்றும் குறையாத பெருமையைப் பெறுவேன். என் உயிரில் கலந்து விளங்குகின்ற ஈசனுடன் நான் இனிதாகக் கலப்பதே மஞ்சனம் என்னும் நீராடல் ஆகும்.

முதல் தந்திரம் - 20. கல்வி கற்றல்

#290. கல்வி கற்றேனே!

**குறிப்பு அறிந்தேன் உடல் உயிர் அது கூடிச்
செறிப்பு அறிந்தேன்; மிகு தேவர் பிரானை
மறிப்பு அறியாது வந்து உள்ளம் புகுந்தான்
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.**

உடல் தோன்றிய காரணத்தை நான் அறிந்து கொண்டேன். உடலும் உயிரும் பொருந்தியுள்ள காரணத்தை அறிந்து கொண்டேன். எந்த விதமான தடையும் இல்லாததால் இறைவன். தானாகவே என் மனதில் வந்து குடி புகுந்து விட்டான். கறிப்பு என்பதே இல்லாத கல்வியை நான் இவ்வாறு கற்றேன்.

#291. கயல் உள ஆக்கும்!

**கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்தில்ஓர் கண்உண்டு;
கற்றறிவாளர் கருதி உரை செய்யும்
கற்றறி காட்டக் கயல் உள ஆக்குமே.**

நன்கு கற்றறிந்தவர்கள் கற்றவற்றை எண்ணிப் பார்க்கையில் அவர்கள் கருத்தில் ஒரு ஞானக்கண் உருவாகும்; உண்மை புலனாகும். அவ்வாறு அவர்கள் கண்ட உண்மைகளை சிந்தித்துப் பிறருக்கும் உணர்த்துவார். கல் தூண் போல் சலனம் இல்லாது இருந்து கொண்டு அவர்கள் கூறும் உண்மைகளால் மற்றவர்களுக்கு அதே போன்று ஞானக் கண் உருவாகும்.

#292. மணி விளக்கு

**நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்து அறும் பாவங்கள்
சொல் குன்றல் இன்றித் தொழுமின்; தொழுத பின்
மற்று ஒன்று இலாத மணிவிளக்கு ஆகுமே.**

உடலுடன் உயிர் பொருந்தி இருக்கும் போதே, இந்த உடல் எப்போதும் நிலைத்து நிற்காது என்ற உண்மையை அறிவீர். உயிருக்கு நிலையான் உறு துணை இறைவனே என்று அறிவீர். அவன் திருவடி ஞானத்தைப் பெற்றிட முயற்சி செய்யுங்கள். அப்போது உங்கள் பாவங்கள் எல்லாம் அழிந்து மறைந்து விடும். குற்றம் இல்லாத சொற்களால் இறைவனைத் தொழுவீர். அப்போது ஒப்புவமை இல்லாத சுயம் பிரகாசியாகிய சிவன் தோன்றுவான்.

#293. அழியாத உடல்

கல்வி உடையார் கழிந்து ஓடிப் போகின்றார்
பல்லி உடையார் பாம்பு அறிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்துமின் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமும் ஆமே.

மெய்ஞானக் கல்வி கல்லாது உலகிய கல்வி கற்றவர்கள் பிரணவத்தில் இருந்து விலகி வேறு பாதையில் செல்கின்றாகள். உடல் பற்றும், உலகப் பற்றும் உடையவர்கள் குண்டலினி சக்தியைப் பெருக்காமல் வீணாக்குகின்றனர். இரவும் பகலும் இறைவனை ஏத்தி வழி படுங்கள். அப்போது ரசவாதாதால் உருவாகும் பொன்னைப்போல குண்டலினி சக்தியின் ஆற்றலால் அழியாத உடல் அமையப் பெறுவீர்.

#294. துணையாய் வரும்

துணைஅது வாய் வரும் தூய நல் சோதி
துணைஅது வாய் அரும் தூய நல் சொல்லாம்
துணைஅது வாய் வரும் தூய நல் கந்தம்;
துணைஅது வாய் வரும் தூய நற் கல்வியே.

இறைவனை வழிபடுபவருக்குக் கிடைப்பன இவை:
தூய ஜோதி ஒன்று துணையாக உடன் வரும்.
பிரணவம் அவர்களுக்குத் துணையாக வரும்.
சுக்கிலம் கெடாமல் தூய்மை அடையும்.
உடலுக்குத் துணையாகி ஒளி வீசி நிற்கும்.
பிரணவக் கல்வி முக்தியை அளிக்கும்.

#295. மயங்குகின்றாகள்!

நூல்ஒன்று பற்றி நுனி ஏற மாட்டாதார்
பால்ஒன்று பற்றினால் பண்பின் பயன் கெடும்
கோல் ஒன்று பற்றினால் கூடாப் பறவைகள்
மால் ஒன்று பற்றி மயங்கி கின்றார்களே.

உடலில் உள்ள சுழுமுனை நாடியைப் பற்றிக் கொண்டு, சிரசின் உச்சியில் உள்ள பிரமரந்திரத்தைச் சென்று அடைய வேண்டும். இதைச் செய்ய இயலாமல் காம வயப்பட்டவர்கள் சிவயோகத்தின் பயனை அடையவே முடியாது. முதுகுத் தண்டைப் பற்றி கொண்டு, தலையின் உச்சியை அடைந்து விட்டால் அடங்கி வசப்படும் ஐம்பொறிகளும். இதை அறிந்து கொள்ளாமல் மக்கள் உலக வயப்பட்டு மயங்கி நன்மை அடையாமல் வீணாகின்றார்கள்.

#296. சுழுமுனை நூலேணி ஆகும்

ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும்
தோய் ந்த நெருப்பு அது தூய் மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்ட வல்லார்கட்க்கு
வாய்ந்த மனம் மல்கு நூலேணி ஆமே.

சுழுமுனை நாடியைப் பற்றிக்கொண்டு மேலே செல்பவர்களுக்கு சிவபெருமான் நாதாந்ததில் வெளிப்படுவான். நாததத்துவத்தில் ஈசன் தூய ஒளியைச் சிந்திக் கொண்டு இருப்பான். இங்ஙனம் சந்திர மண்டலம் விளங்கியவர்களுக்கு சுழுமுனை நாடி ஒரு நூலேணியாக மாறிவிடும்.

#297. வழித்துணை ஆவான்

வழித்துணையாய், மருந்தாய் இருந்தார் முன்
கழித்துனையாம் கற்றில்லாதவர் சிந்தை
ஒழித் துணையாம், உம் பராய் உலகு எழும்
வழித் துணையாம் பெருந்தன்மை வல்லானே.

ஞானத்தைப் பெறுவதற்கு உதவுவது சுழுமுனை ஆகிய நூலேணி. பிறவிப் பிணிக்கு மருந்தாக விளங்குவது சுழுமுனை ஆகிய நூலேணி. இதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறிச் செல்பவர்களுக்கு அங்கனம் பற்றிக் கொள்ளாதவர்கள் நல்ல துணையாக ஆக முடியாது. சிந்தையை மாற்றி பழைய நிலையை ஒழிப்பவன் சிவன். அந்தப் பெருமானே அவர்களுக்குச் சிறந்த துணை யாவான். தேவ வடிவில் ஏழுலகங்கள் செல்ல வழித் துணை ஆவான்.

#298. பேரின்பம் பெறுவர்

பற்றுஅது பற்றின் பரமனைப் பற்றுமின்
முற்றுஅது எல்லாம் முதல்வன் அருள் பெறில்
கிற்ற விரகின் கிளர்ஒளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே.

பற்றுக் கோடாக ஒரு தெய்வம் வேண்டும் என்றால் எல்லாவற்றுக்கும் மேலான சிவனையே பற்றிக் கொள்ளுங்கள். அவன் அருள் பெற்றுவிட்டால் எல்லாம் இனிதாகி விடும். ஒளியும் படைத்த, வல்லமை படைத்த தேவர்களைக் காட்டிலும் அனுபவக் கல்வி கற்றவர்கள பேரின்பம் அடைந்து நிற்பார்கள்.

#299. நெஞ்சத்தில் இருப்பான்

கடல் உடையான் மலையான் ஐந்து பூதத்து
உடல் உடையான், பல ஊழி தொறு ஊழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடம் உடையார் நெஞ்சத்து இல்இருந்தானே.

பரந்த கடல் சிவனுக்கு உரிமை உடையது. உயர்ந்த மலை சிவனுக்கு உரிமை உடையது. ஐம் பெரும் பூதங்களும் சிவனுடைய மேனி ஆகும் . ஊழிகள் தோறும் இவை அழிந்து மாறுபடும் காலங்களில் காளையை ஊர்தியாகக் கொண்ட ஒளி வடிவான சிவன் தன்னையே நினைத்துக் கொண்டு இருக்கின்ற தன் அடியவர்களின் உள்ளத்தில் குடி இருப்பான்.

முதல் தந்திரம் -
21. கேள்வி கேட்டு அமைதல்

#300. சிவகதி பெறும் வழி

அறம் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம் கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம் கேட்டும் பொன் உரைமேனி எம் ஈசன்
திறம் கேட்டும் பெற்ற சிவகதி தானே.

சிவகதி பெறச் செய்ய வேண்டியவை இவை:
அறங்களைக் கேட்டறிய வேண்டும்.
அந்தணர்கள் அறிவுரைகளைக் கேட்க வேண்டும்.
பாவங்கள் இவை என்று கூறும் நீதி நூல்களைக் கேட்க வேண்டும்
தேவர்களை வழிபடும் மந்திரங்களைக் கேட்க வேண்டும்.
மற்ற சமயங்கள் பற்றிய நூல்களையும் கேட்க வேண்டும்.
பொன் வண்ண மேனியன் சிவனை பற்றியும் கேட்க வேண்டும்.

#301. ஓங்கி நின்றார்!

தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேள்மின்; உணர்மின்; உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே.

தேவர்களுக்குத் தலைவன் ஆவான் சிவபெருமான். திவ்வியமான வடிவம் கொண்டவன் அந்தப் பெருமான். அவன் பெருமைகளை எவர் ஒருவரால் அறிய முடியும்? அவனை உணர்த்தும் நூல்களை நன்கு கற்று அறியுங்கள். அவற்றைக் கற்றவர்களிடம் அவற்றைக் கேட்டறியுங்கள் கற்றவை கேட்டவைகளை அனுபவத்தில் கொண்டுவாருங்கள். அனுபவத்தால் அறிந்து கொண்டபின் நிஷ்டையில் நீங்கள் சிவத்துடன் பொருந்தி உயர்ந்த நிலையை அடைய முடியும்.

#302. நீங்காத பற்று வேண்டும்

மயன்பணி கேட்பது மா நந்தி வேண்டின்;
அயன்பணி கேட்பது அரன் பணியாலே
சிவன்பணி கேட்ப வர் தேவரும் ஆவர்
பயன்பணி கேட்பது பற்றது ஆமே.

சிவனுக்குப் பணி செய்வதன் பயன்கள் இவை:
சிவனை வேண்டினால் திருமால் பணியைச் செய்வான்.
சிவன் ஆணைப்படியே அந்த நான்முகனும் நடப்பான்.
தேவர்கள் அனைவரும் சிவன் ஆணைகளைப் பணிகின்றவர்.
சிவனுக்கு பணியாற்றுவதால் நமக்குக் கிடைப்பது
அவன் திருவடிகளில் என்றும் நீங்காத, மாறாத பற்று.

#302. ஆதிப் பிரான்

பெருமான் இவன்’ என்று பேசி இருக்கும்
திருமா னிடர் பின்னைத் தேவரும் ஆவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்து அருள் செய்யும்
அருமா தவத்து எங்கள் ஆதிப் பிரானே.

உண்மை ஞானம் அடைந்து “இவனே தலைவன்” என்று கூறும் மனிதர்கள் பின்னர் தேவர்களாக மாறி விடுவர். மேலான தவம் உடையவர்களுக்குச் சிவபெருமான் மகிழ்ந்து அருள் செய்வது தான் இதன் காரணம்.

304. ஒளியாய் நிற்பான்

ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி இருந்து பிதற்றி மகிழ்வு எய்தி
நேசமும் ஆகும் நிகழ் ஒளியாய் நின்று
வாச மலர்க்கந்தம் மன்னி நின்றானே.

பிறப்பையும் இறப்பையும இறைவன் அருள்வது வினைகளின் வழியே. இதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள். பிறருக்கு எடுத்துக் கூறுங்கள். தானே பேசியும்

பிதற்றியும் மன மகிழ்ச்சி அடையுங்கள். சிவ ஒளியாக அவன் சுவாதிஷ்டான மலரில், ஒரு மலரின் நறு மணம் போலப் பொருந்தி இருக்கின்றான்.

#305. அளவில்லாமல் அருள்வான்

**விழுப்பமும், கேள்வியும், மெய் நின்ற ஞானத்து
ஒழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது,
வழிக்கி விடாவிடில், வானவர் கோனும்
இழுக்கு இன்றி, எண்இலி காலம் அது ஆமே.**

சிவபெருமானின் பெருமையைக் கேட்பதும், அப்படிக் கேட்கும் போது அதனால் விளையும் ஞானமும்,சிந்திக்கும் போது உள்ளம் கட்டுக்குள் அடங்கி இருக்கும் பாங்கும், கைவரப் பெற்றுவிட்டால். தேவர்களின் தலைவனாகிய சிவபெருமான் அளவில்லாத காலத்துக்கு நமக்கு தன் அருள் செய்வான்.

306. மணல் சோறு

**சிறியார் மணல் சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகம் சித்திக்கும் என்னில்
குறியாதது ஒன்றைக் குறியாதார் தம்மை
அறியாது இருந்தார் அவர் அவர் அன்றே.**

உலகத்துடன் உள்ள தொடர்பினால் இறைவனின் அனுபோகம் உண்டாகும் என்று கூறுவது சிறு பிள்ளைகள் சமைக்கும் மணல் சோறு பசியைத் தீர்க்கும் என்று சொல்வது போன்றதே. சுட்டிக் காட்ட இயலாது எங்கும் நிறைந்துள்ள வியாபகத் தன்மை கொண்டவன் சிவன். இது உணராதவர்கள் தங்கள் ஆத்மாவின் தன்மையையும் உணராதவர்கள் அன்றோ?

307. பிறப்பு இல்லை

**உறுதுணை ஆவது உயிரும் உடம்பும் ;
உறுதுணை ஆவது உலகுஉறு கேள்வி;
செறி துணை ஆவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கின் பிறப்பு இல்லை தானே.**

உடலுக்கு உறுதுணை ஆவது உயிர் என்றால் உயிருக்கு உறுதுணை ஆவது என்னவாக இருக்கும்? ஞானிகளிடம் நாம் பெறும் கேள்விச் செல்வம் ஆகும் அது. சிந்தைக்குச் சிறந்த துணை சிவபிரானின் திருவடிகள். இவ்வரிய துணையைப் பெற்றுவிட்டால் பிறவிப் பிணி நீங்கும்.

308. கல்லால் ஆன பசு

புகழ நின்றாக்கும் புராணன் எம் ஈசன்
இகழ நின்றார்க்கும் இடும்பைக்கு இடமாம்;
மகிழ நின்று ஆதியை ஓதி உணராக்
கழிய நின்றார்க்கு ஒருகற்பசு ஆமே.

புகழப்படுகின்ற மும் மூர்த்திகளாகிய பிரமன், திருமால் ருத்திரன் என்ற மூன்று தெய்வங்களுக்கும் மூத்தவன் ஆவான் சிவன். தன்னை இகழ்ந்து பேசுகின்றவர்களுக்குத் துன்பத்துக்கு இடமவான் அவன். ஆதிதேவனாகிய சிவன் பெருமைகளை அறியாமல் விலகி நிற்பவர்களுக்கு அவன் கல்லினால் செதுக்கப்பட்ட ஒரு பசுவைப் போல அமைந்து விடுவான்.
(கற்பசு பால் தராது. சிவனும் தன் அருளைத் தரமாட்டான் என்பது கருத்து.)

309. நச்சு உணர்ந்தார்

வைத்து உணர்ந்தான் மனத்தோடும் வாய்பேசி
ஒத்து உணர்ந்தான் உருஒன்றோடு ஒன்று ஒவ்வாது
அச்சுழன்று ஆணி கலங்கினும் ஆதியை
நச்சு உணர்ந்தார்க்கே நணுகலும் ஆமே.

சிவபிரான் அனைத்து ஆத்மாக்களிலும் தன்னைப் பதித்துள்ளான். அவர்களின் மனத்தையும் வாக்கையும் அவற்றோடு பொருந்தி இருந்து அவன் நன்கு உணர்கின்றான். பிரானின் வடிவம் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடும். உடம்பு என்னும் அச்சிலிருந்து மனம் என்னும் ஆணி கழன்று உருக்குலைந்தாலும், சிவனை நினைந்து அவனை விரும்பி நிற்பவர்கள் மட்டுமே அவனிடம் நெருங்கி அவனை அனுபவிக்க முடியும்.

முதல் தந்திரம் - 22. கல்லாமை

#310. இன்பம் காணுகிலார்

கல்லாத வரும் கருத்து அறி காட்சியை
வல்லார் எனில், அருட்கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மை பற்றா நிற்பர், கற்றோரும்
கல்லாதார் இன்பம் காணுகிலாரே.

இறைவன் திருவருள் பெற்றவர்கள் சிலர் ஆசிரியனிடம் சென்று முறைப்படிக் கற்காமல் இருக்கலாம் தமது சீரிய தவத்தினால் அவர்கள் தெய்வக் காட்சியைப்

பெற்று அதை உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய அரிய பெரியவர்கள் உலகத்தைப் பற்றிக் கொள்வதில்லை சிவத்தைப் பற்றிக் கொள்கிறார்கள் ஆசிரியனிடம் சென்று முறைப்படிக் கற்றவர்கள் கூட இந்தக் கல்லாதவர்கள் பெற்ற சிவ அநுபூதியைப் பெறுவதில்லை.

#311. கலப்பு அறியார்

வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்,
அல்லாதவர்கள் அறிவுபல என்பார்;
எல்லா இடத்தும் உளன் எங்கள்தம் இறை
கல்லாதவர்கள் கலப்பு அறியாரே.

சிவபெருமானின் அருளைப் பெற்ற அருளாளர்கள் என்றும் உண்மை வழியில் ஒன்றி வாழ்ந்து வருவர். சிவன் அருளைப் பெறாதவர்களோ எனில் உலகில் பல வேறு நெறிகள் உள்ளன என்பார்கள். எல்லா நெறிகளிலும் நிறைந்து விளங்குபவன் சிவன் என்ற உண்மையை இந்த மனிதர்கள் அறிய மாட்டார்கள்.

#312. காண ஒண்ணாது

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலை என்று உணர்வீர்காள்!
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காண ஒண்ணாதே.

நிலையற்றறைவைகளை நிலையானவை என்றும் நிலையற்ற உடலை அழிவில்லாதது என்றும் உள்ளத்தில் தவறாக எண்ணுகின்றவர்களே! எல்லா உயிர்களுக்கும் அவன் இறைவனே என்றாலும் நிலையான நிலையற்ற பொருட்களைப் பற்றிய உண்மை அறிவு இல்லாதவர்களால் அவனை உணர்ந்து கொள்ள முடியாது.

#313. ஆடவல்லேனே

கில்லேன் வினைக்குத் துயராகும் அயல்ஆனேன்
கல்லேன் அர நெறி அறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழிய நின்று ஆடவல்லேனே.

இறை நெறியில் நிற்கும் ஆற்றலை நான் பெறவில்லை.
அதனால் வினைகளுக்கும், துயரங்களுக்கும் ஆளாகின்றேன்.
அரன் கூறும் நெறியில் நிற்பதையும் நான் அறியவில்லை.
அறியாமையால் மயக்குகின்றவற்றைக் கற்கின்றேன்.
அருள் தரும் வள்ளல் சிவனைத் தியானிக்கவும் அறியவில்லை.

புற உலக அனுபங்களில் திளைப்பவனாக நான் இருக்கின்றேன்.

#314. வினைத் துயர்

நில்லாது சீவன் நிலை அன்று என எண்ணி
வல்லார் அறத்தும் தவத்துகளும் ஆயினார்,
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத் துயர் போகம் செய்வரே.

உயிர் உடலில் நிலத்து நிற்காது என்று உணர்ந்து கொண்டவர்கள் செய்வது இதுவே. தர்மத்தைத் தவத்தைச் செய்தும் , துறவறம் பூண்டும் சிவ பெருமான் அருளைப் பெறுவர். இங்ஙனம் அவன் அருளைப் பெற அறியாதவர்கள், கீழான மக்கள் தாம் செய்த வினைகளின் பயன்களை அனுபவித்துத் துன்பம் எய்துவர்.

#315. இளைத்து விட்டார்

விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்து அங்கு இருந்தது ;
மண்ணினின் உள்ளே மதித்து மதித்து நின்று
எண்ணி, எழுதி, இளைத்து விட்டாரே.

சிவன் என்னும் விளங்கனி விண்ணிலே விளைந்து நின்றது. அது கண்ணினின் உள்ளே கலந்து பரமாகாயத்தில் நின்றது. இறைவனிலும் உலக இயல்பையே அதிகம் விரும்பும் சிலர். உலக வாழ்வில் இருந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக இறை நிலையை இழந்து வீணாகிப் போயினர்.

#316. கற்று அறிந்தவர்

கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் காண ஒண்ணாது;
கணக்கு அறிந்தாற்கு அன்றிக் கைகூடா காட்சி,
கணக்கு அறிந்து உண்மையைக் கண்டு அண்டம் நிற்கும்
கணக்கு அறிந்தார் கல்வி கற்று அறிந்தாரே.

ஞானத்தைத்தேடி சாதனை செய்தவர்களால் மட்டுமே சிவம் என்னும் சிறந்த விளங்கனிப் பெற முடியும். சாதனை செய்தவர்களால் மற்றுமே பெற முடியும் இறைவனின் காட்சி. ஞான சாதனையை அறிந்து கொண்டு, உண்மைப் பொருளையும் உணர்ந்து அதனுடன் பொருந்தி இருப்பவர்களே உண்மையில் கல்வி கற்றார்கள் ஆவர்.

#317. மூடர்களைக் காணாதீர்

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருது அறியாரே.

கற்றவற்றின் அனுபவம் பெறாத மூடர்களைக் காணவும் கூடாது. கற்றவற்றின் அனுபவம் இல்லாத மூடர்களின் சொல்லைக் கேட்க வேண்டிய அவசியம் என்று எதுவும் இல்லை. அனுபவ அறிவு பெறாத படித்த மூடர்களை விடவும் எழுத்தறிவே இல்லாத மூடர்கள் நல்லவர்கள். இவர்கள் பிறரைத் தவறான பாதையில் செலுத்த மாட்டார்கள். அனுபவம் இல்லாதவர் உள்ளத்தில் சிவனை உணர முடியாது.

#318. கணக்கு அறிந்தவர்

கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசு அறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்று அன்பில் நிற்போர் கணக்கு அறிந்தார்களே.

பல நூல்களைக் கற்ற பிறகும் அனுபவ ஞானம் பெறாதவர்கள் கன்மம் மாயை இவற்றை தொடர்பை விட்டு விட மாட்டார்கள். தம் குற்றங்களை உணர்ந்து அவற்றைப் போக்கிக் கொள்ளமாட்டர்கள். பல இடங்களில் உள்ள அறிஞர்களிடம் கலந்து உரையாடி அரிய உண்மைகளைத் தெரிந்த கொள்ளவும் மாட்டார்கள். சிவஞானம் பெற்று மாறாத அன்புடன் இருப்பவர் கணக்கு அறிந்தவர்.

#319. தொடர்பு அறியார்!

ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந் தெய்வம்
ஓதி உணர வல்லோம் என்பர், உள்நின்ற
சோதி நடத்தும் தொடர்வு அறியாரே.

ஆதிப்பிரான் ஆகிய சிவபெருமான் எல்லோருக்கும் தலைவன். தேவர்களுக்கும் அவன் மங்காத ஒளியாகத் திகழ்கிறான். அடியார்கள் தேடி வரும் பெருந் தெய்வமாக இருக்கின்றான். அவனைக் கல்வி கற்பதன் மூலம் அறிந்து கொள்வேன் என்பவன் தனக்குள் இருந்து கொண்டு தன்னை நடத்தும் அந்த சோதிக்கும் தனக்கும் என்ன தொடர்பு என்ற உணமையை அறியாதவன்.

முதல் தந்திரம் - 23. நடுவுநிலைமை

#320. ஞானம் பெற்றவர்

நடுவு நின்றார்க்கன்றி ஞானமுமில்லை
நடுவு நின்றார்க்கு நரகமுமில்லை
நடுவு நின்றார் நல்ல தேவருமாவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே

சஹஸ்ர தளத்தின் நடுவில் நிற்காதவர்களுக்கு ஞானம் கிடைக்காது.
சஹஸ்ர தளத்தின் நடுவில் நிற்பவர்களுக்கு நரகமும் கிட்டாது.
இங்ஙனம் நடுவில் நின்றவர் நல்ல தேவர்களாக ஆகி விடுவர்.
நடுவே நிற்கும் அடியவர்களின் நடுவே நானும் நின்றேனே.

#321. நடுவு நின்றான் சிவன்

நடுவு நின்றான் நல்ல கார்முகில் வண்ணன்,
நடுவு நின்றான் நல்ல நான் மறை ஓதி
நடுவு நின்றார் சிலர் ஞானியர் ஆவோர்.
நடுவு நின்றான் நல்ல நம்பனும் ஆமே.

காக்கும் தன்மையால் நடுவில் நின்றான் கரிய நிறம் கொண்ட திருமால். படைக்கும் தன்மையால் நடுவில் நின்றான் நான்முகன். நடுவில் நின்றவர்கள் சிலர் சிவஞானிகள் ஆவோர். நடுவு நின்றார் சிவபெருமான் ஆகித் திகழ்வார்.

#322.நானும் நடுவு நின்றேன்

நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவர்
நடுவு நின்றார் சிலர் தேவருமாவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனுமாவர்
நடுவு நின்றாரொடு நானும் நின்றேனே.

சிவ நினைவுடன் சஹஸ்ர தளத்தின் நடுவில் நின்றவர்
அதன் பயனாக சிவ ஞானிகளாக ஆகி விடுவார்கள்.
அதன் பிறகு தேவர்களாகவும் ஆகி விடுவார்கள்
அதன் பின்பு சிலர் சிவனாகவே மாறி விடுவர்.
அத்தகையவர்களோடு நானும் கூடி நின்றேனே.

#323. நடுவு நிற்பதன் பயன்

தோன்றிய எல்லாம் துடைப்பன் அவன்றி
ஏன்று நின்ற ரென்று மீசனிணை யடி
மூன்று நின்றார் முதல்வன் திரு நாமத்தை
தான்று நின்றார் நடுவாகி நின்றாரே.

தோன்றிய எல்லாவற்றையும் அழிப்பவன் சிவன். பொருட்களின் முடிவைத் தருபவன் அவனே. என்றும் அவன் இணையடிகளை ஏற்று நிற்கின்றவர்கள் நடுவில் நிற்பவர்கள் ஆவர். அந்தப் பெருமானின் திருநாமத்தைக் கூறுபவர்களும் நடுவில் நின்றவர்களே. அவர்கள் அரிய யோகநித்திரையில் இருக்கும் பயனை அடைவர்.

முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை

#324. சிவானந்தத் தேறல்

கழுநீர் பசுப்பெறில் கயம்தொறும் தேரா;
கழுநீர் விடாய்த்துத் தம் காயம் சுருக்கும்;
முழுநீர்க் கள் உண்போர் முறைமை அகன்றோர்,
செழுநீர்ச் சிவன் சிவானந்தத் தேறலே.

குடிப்பதற்குக் கழுநீர் கிடைத்துவிட்டால் அதன் பிறகு பசுக்கள் குடிநீரைத் தேடிக் குளங்களுக்குச் செல்லா அவை கழுநீரை வேண்டித் தாகத்தால் காத்திருந்து . உடலை வருத்திக் கொள்ளும். சிவானந்தத் தேறல் வாழ்க்கைக்கு வளமை இனிய தரும் மதுவாகும். அதை அருந்தாமல் மயக்கம் தரும் மதுவை உண்பவர் நல்லொழுக்கத்திலிருந்து பிறழ்ந்தவர்கள் ஆவர்.

#325. தாழ்ந்த செயல்கள்

சித்தம் உருக்கிச் சிவம் ஆம் சமாதியில்
ஒத்த சிவானந்தம் ஓவாத தேறலைச்
சுத்தமது உண்ணச் சிவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல் கீழ்க்காலே.

சித்தத்தை உருக்கவேண்டும் அதனைச் சிவத்தின் மீது அன்புடன் செலுத்துவதன் மூலம். சமாதி நிலையில் சிவானந்தம் என்னும் மாறாத சுத்தமானத் தேறலை அருந்த வேண்டும். அந்த நிலையில் அந்தப் பேரானந்தம் நம்மை விட்டு நீங்காது நிலைத்து நிற்கும். அதை ஒழித்துவிட்டு சிவனின் நினைவே இல்லாமல் நிற்பதும், நடப்பதும், கிடப்பதும் தாழ்ந்த செயல்கள் ஆகும்.

#326. ஆனந்தத் தேறல்

காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்;
மாமல மும்சமயத்துள் மயல் உறும்
போமதி ஆகும் புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வு உண்டே.

கீழ் மக்களுக்கு உரியவை காமமும் கள்ளும். பெரிய மலமாகிய ஆணவ மலம் ஒருவன் சமயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதபடி மயக்கத்தை ஏற்படுத்தும். அறிவைக் கெடுத்து விடும். சிவபெருமானின் இணையடிகள் தொடர்பினால் அருந்தும் பிரணவ மயமான தேன் உணர்வைக் கொடுக்கும்; கெடுக்காது.

#327. சிவன் நாம மகிமை

வாமத்தோர் தாமும் மது உண்டு மாள்வர்
காமத்தோர் காமக்கள் உண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே.

வாமாசாரம் என்னும் முறைப்படி சக்தியை வழிபடுகின்றவர்கள் தாமும் மது அருந்தி அழிந்து போவர். காம லீலைகளில் ஈடுபடுவோர் அந்தக் காமத்தின் மயக்கத்திலே அழிந்து போவர். சிவன் நாமங்களைச் சொல்லி ஓமம் செய்கின்றவர்கள் தம் சிரசில் வெளிப்படும் சிவஒளியில் தம் உணர்வைக் கொண்டு நிறுத்தி மகிழ்ச்சி அடைவர். சிவன் நாம மகிமையை அறிந்து கொண்டவர் சிவனிடம் நெருங்கும் இன்பதைப் பெறுவார்கள்.

#328. கருத்து அறியார்

உள்உண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வல்லன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்உண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்;
கள்உண்ணும் மாந்தர் கருத்து அறியாரே.

வேதங்கள் ஆகமங்கள் கூறும் மறைந்துள்ள உண்மைகளை அறியாதவர்களால் பசு பதி பாசம் இவற்றின் தொடர்பினைப் புரிந்து கொள்ள முடியாது. விரும்புகின்ற எல்லாவற்றையும் அள்ளித் தரும் வள்ளல் ஆவான் சிவபெருமான். அவன் அருளைத் துணையாகக் கொண்டு வாழ மாட்டார்கள் இவர்கள். தெளிந்த சிவ யோகத்தில் நிலைத்து நிற்கவும் அறியார். மனத்தை

மயக்கிக் கெடுக்கும் கள்ளை அருந்துபவர்கள் இந்த கருத்துக்களை அறிய மாட்டார்கள்.

#329. மாமாயை

மயக்கும் சமய மலம் மன்னும் மூடர்
மயக்கும் மது உண்ணும் மாமூடர் தேரார்
மயக்கு உறு மாமாயை மாயையின் வீடும்
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.

சமயக் கோட்பாடுகள் மனதை மயக்க வல்லவை. சமயக் குற்றங்கள் புரிகின்ற மகா மூடர்கள் சமயத்தின் பெயரில் அறிவை மயக்கும் மதுவை அருந்துகின்றார்கள். இவர்கள் நல்ல வழியை ஆராயும் திறன் அற்றவர்கள். மயக்கத்தைத் தரும் மகாமாயை தான் மாயையின் இருப்பிடம் என்பர். மயக்கத்தை ஒழித்து வெளியே வந்த போதிலும் வாமாசார வழிபாடு மீண்டும் மீண்டும் மயக்கத்தில் அவர்களைக் கொண்டு தள்ளி விடும். உயரிய சிவானந்தத்தை அருளாது.

#330. இடையறா ஆனந்தம்

மயங்கும், தியங்கும், கள் வாய்மை அழிக்கும்,
இயங்கும் மடவார் தம் இன்பமே எய்தி
முயங்கும்; நயம் கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடை அறா ஆனந்தம் எய்துமே.

கள் அருந்தும் பழக்கம் மனிதனின் மனதை மயக்கும்; வீணாகக் கவலை அடையச் செய்யும்; பெண்கள் தரும் இன்பத்தை நாடச் செய்யும்; கள் அருந்துபவர்கள் நல்ல ஞானத்தை அடைய முயல மாட்டார்கள்; இடையறாத சிவானந்தப் பேரின்பம் அவர்களுக்கு கிடைக்குமோ? ஒரு நாளும் கிடைக்காது!

#331. நீங்கா இன்பம்

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்குஅற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டு இடத்தேனே

இரவு பகல் என்ற பேதம் இல்லாத இடம் தன்னை மறந்த சாக்கிரத அதீத நிலை. அங்கே இருந்து கொண்டு வேறு எண்ணங்கள் எதுவும் இல்லாமல் சிவானந்தத் தேனை பருகும் வல்லமை இந்த உலகத்தவருக்கு இருக்காது. இரவும்

பகலும் இல்லாத திருவடி இன்பத்தில் நான் திளைத்தேன். சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரவும் பகலும் உள்ளவற்றை நான் நீக்கி விட்டேன்.

#332. ஞான ஆனந்தம்

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறந்ததால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே.

சத்தியை வழிபடுவோர் அவள் அருளை வேண்டிக் கள் உண்பர். அவர்கள் மது அருந்தித் தம்மை மறப்பதால் அறிவு தன் சக்தியை இழந்து விடுகிறது. உண்மையான சக்தியை அடைய விரும்பினால், சிவ ஞானத்தைப் பெற வேண்டும். அதில் நிலையாக இருந்து கொண்டு என்றும் நிலையானதாகிய, அறிவு மயமாகிய, ஆனந்த மயமாகிய ஒரே மெய்ப்பொருளை அடைய வேண்டும்.

#333. அஷ்ட மாசித்தி

சத்தன் அருள் தரின் சத்தி அருள் உண்டாம்;
சத்தி அருள்தரின் சாத்தான் அருள் உண்டாம்;
சத்தி சிவம் ஆம் இரண்டும்தன் உள்வைக்கச்
சத்தியும் எண் சித்தித் தன்மையும் ஆமே.

சக்திதேவியின் நாதன் சிவபெருமான் அருள் செய்தால் சக்திதேவியின் அருள் நமக்குக் கிடைக்கும். சக்திதேவி அருள் செய்தால் சிவன் அருள் கிடைக்கும். சக்தி சிவன் இவர்களின் இருப்பிடமான விந்து நாதத்தில் பொருந்தி இருந்தால், அவர்களுக்குச் சக்தியின் வடிவமும் கிடைக்கும். அஷ்ட மாசித்திகளும் தாமே வந்து பொருந்தும்.

#334. சிவானந்தம்

தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தான்ஆகிப்
பொய்த்தவம் நீக்கி, மெய்ப் போகத்துள் போக்கியே
மெய்த்த சகம் உண்டுவிட்டுப் பரானந்தச்
சித்தி அது ஆக்கும் சிவானந்தத் தேறலே.

சிவானந்தம் என்னும் தேன் முப்பத்தாறு தத்துவங்களையும் கடக்கச் செய்யும். தானே தத்துவங்கள் என்று மயங்கும் அறிவை நீக்கிவிடும். . உபாயத்தினால் சிவத்தை அடையலாம் என்று எண்ணிச் செய்யும் பொய்த் தவங்களில் இருந்து விலக்கி விடும். உண்மையான சிவ யோகத்தில் கொண்டு சேர்க்கும். மெய் போலத்

தோற்றம் அளிக்கும் இந்த உலகம் உண்மை இல்லை என்று உணரச் செய்யும். எல்லாவற்றுக்கும் மேலான பரமானந்தம் கிடைக்கச் செய்யும்.

#335. மதத்தால் அழிவர்

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
யோகியர்கள் உண்டு மூடராய் மோகம் உற்று
ஆகும் மதத்தால் அறிவழிந்தாரே.

சிவயோகிகள் மூச்சுக் காற்றைத் தம் வசப்படுத்துவார்கள். சந்திர மண்டலத்தில் இருந்து கொண்டு அமிர்தம் போன்ற சிவானந்தத்தை அருந்துவார்கள். ஞான அமிர்தம் பருகியதால் மேலும் மேன்மை பெறுவார்கள். ஆனால் எண் சித்திகளை விரும்பும் பிறர், கள்ளை அருந்தும் பற்றுதலால், மூடர்கள் ஆவதுடன் உள்ள அறிவையும் இழந்து நிற்பார்கள்.

#336. சுவாசத்தின் பாதை

உண்ணீர் அமுதம் உறும் ஊறளைத் திறந்து
எண்ணீர் குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியின் நாடி நீரால் நலம்
கண்ஆற்றொடே சென்று கால்வழி காணுமே.

இறப்பினை மாற்றவல்ல அமிர்தம் ஊறும் ஊறலைத் திறந்து உண்ண மாட்டீர்கள் நீங்கள். சிவபெருமானுடைய இணையடிகளைச் சிறிதும் உள்ளத்தில் எண்ண மாட்டீர்கள் நீங்கள். சமாதி நிலையில் சிவஒளியுடன் பொருந்தி நிற்க மாட்டீர்கள் நீங்கள். கண்ணின் காரியமாகிய, நன்மை அளிக்கும் ஒளி நெறியைப் பின் தொடர்ந்தால், தலையில் சுவாசம் புகும் வழியையும் போகும் வழியையும் கண்டறியலாம்.

இத்துடன் முதல் தந்திரம் முற்றுப் பெற்றது.

இரண்டாம் தந்திரம்

இரண்டாம் தந்திரம் - 01. அகத்தியம்

உடலில் உள்ள நாதமே அகத்தியம் ஆகும் .

#337. "நீ போய் முன் இரு!"

"நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்றது எம்பெருமான்" என்ன ஈசன்
"நடுவுள அங்கி அகத்திய, நீ போய்,
முடுக்கிய வையத்து முன்இரு" என்றானே.

"எம்பெருமானே! இந்த உலகத்தோர் நடுவில் உள்ள சுழுமுனையில் பொருந்தி நிற்பதில்லை. உலக முகமாக இருந்து கீழ் நிலைப்பட்டு கெடுகின்றனர்" என்று கூறினேன். உடனே இறைவன் கூறியது இதுவே. "மூலாதாரத்தின் நடுவே உள்ள அக்னி ஸ்வரூபமே! நீ சென்று ஜீவனின் தலையின் முன் பக்கம் பொருந்துவாய். விரைந்து ஒடும் ஜீவனைக் காப்பற்றுவாய்" என்றான்.

#338. இலங்கும் ஒளி தானே!

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயம் செய் மேல்பாலவனொடும்
அங்கி உதயம் செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கு ஒளிதானே.

அகத்தியன் என்னும் சாதகன் அக்னிக் கலையின் வடிவாகிய நாதத்தைத் தலையின் முன் பக்கம் விளங்கச் செய்வான் அது அதற்குப் பிறகு தலையின் பின் புறமாகப் பரவி விரவும். தலையின் இடப்புறம் விளங்கும். அப்போது தவ முனிவனின் சிரசு முழுவதுமே ஒளிமயமாகி விடும்.

இரண்டாம் தந்திரம் -
02. பதிவலியில் வீரட்டம் எட்டு

சிவபெருமான் மறக் கருணை காட்டிய எட்டு இடங்கள் இவை.

1. திருவதிகை ... முப்புரங்களை அழித்த இடம்
2. திருக்கடவூர் --- யமனை வென்ற இடம்
3. திருக்கொறுக்கை ... மன்மதனை வென்ற இடம்
4. திருவழுவூர் ... கயமுகாசுரனை வென்ற இடம்
5. திருக்கோவலூர் ... அந்தகாசுரனை அழித்த இடம்
6. திருப்பறியலூர் .... நான்முகனை வென்ற இடம்

7. திருக்கண்டியூர் ... திருமாலை வென்ற இடம்
8. திருவிற்குடி ... சலந்தராசுரனை வென்ற இடம்

#339. அந்தகாசுரன்

கருத்து உறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்து உயிர்களை எல்லாம்
வருத்தம் செய்தான் என்று வானவர் வேண்டக்
குருத்து உயர் சூலம் கைக்கொண்டு கொன்றானே.

அந்தகன் என்னும் கொடிய அசுரன் இயமனைப் போன்றவன். இறைவனிடம் பெற்ற வரத்தினால் அந்தகன் உலகததோரை வருத்தி வந்தான். அவன் செய்யும் கொடுமைகளைப் பொறமாட்டாத வானவர் இறைவனிடம் சென்று முறையிட, சிவபெருமான் கூர்மையான ஞானச் சூலத்தை எடுத்து அந்தகனை அழித்து அருளினான்.

இது நிகழ்ந்த இடம் திருக்கோவலூர்

#340. நான்முகனை அடக்கியது

கொலையின் பிழைத்த பிரசாபதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான் அங்கியிட்டு
நிலை உலகுக்கு இவன் வேண்டும் என்று எண்ணித்
தலையை அறிந்து இட்டுச் சந்தி செய்தானே.

நான்முகன் ஸ்வாதிஷ்டானச் சக்கரத்தில் இருந்து கொண்டு விந்துவை நாசம் செய்கின்றான். அவன் விந்து நீக்கம் செய்வதைத் தடுத்தும் , அக்னி காரியத்தினால் பக்குவம் வாய்ந்தவர்கள் விந்துவை வெற்றி பெறச் செய்தும், நான்முகனின் குறும்பை அடக்கினான் சிவபெருமான்.

இது நிகழ்ந்த இடம் திருப்பறியலூர்

#341. உலக இன்பம்

எங்கும் பரந்தும் இரு நிலம் தாங்கியும்
தங்கும் படித்து அவன் தாள் உணர் தேவர்கள்
பொங்கும் சினதுள் அயன் தலை முன் அற
அங்கு அச்சுதனை உதிரம் கொண்டானே.

பக்குவம் அடைந்தவர்கள், எங்கும் பரவி இருக்கும், எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கும், எல்லாம் சென்று ஒடுங்குமிடமாக இருக்கும் இறைவனின்

திருவடிகளையே இடைவிடாது சிந்தித்து இருப்பார்கள். அதனால் அவர்களுக்குப் போகத்தில் கவர்ச்சி குறைந்துவிடும். மணி பூரகச் சக்கரத்தில் இருக்கும் திருமாலின் கவர்ச்சியை அவர்கள் வென்று விடுவார்கள்.

இது நிகழ்ந்த இடம் திருக் கண்டியூர்.

#342. அருள் செய்வான்

எங்கும் கலந்து மென் உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன், அருமறை ஓதிபால்
பொங்கும் சலந்தரன் போர் செய்ய நீர்மையின்
அங்கு விரல் குறித்து ஆழி செய்தானே.

உயிரில் கலந்து உள்ளவன் சிவன். உடலின் நாயகன் சிவன். நாதத் தத்துவத்துக்கு உரியவன் சிவன். நீரை முகமாகக் கொண்ட அபானனன் சலந்தரன். அவன் கீழே நோக்கியபடி இருக்க, யோக சாதனையால் அவனை மேலே சென்று சஹஸ்ர தளத்தில் கலநது விரியும்படி அருள் புரிபவன் இறைவன்.

இது நடந்த இடம் திருவிற்குடி

#343. முப்புரம் எரித்தது

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரமெய்தமை யாரறிவாரே.

முப்புரங்களை அழித்தான் கங்கையை அணிந்த செஞ்சடையை உடைய சிவபெருமான் என்பார்கள். முப்புரம் ஆகிய மூன்று கோட்டைகள் நம்முடைய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்கள் ஆகும், இம்மும் மலங்களை சிவன் அழித்த சிறப்பினை அறிய வல்லார் யாருளர்?

பெருமான் திரிபுரங்களை அழித்தது திருவதிகைத் தலத்தில்.

#344. சிவ ஒளி

முத்தீ கொளுவி முழங்கு எரி வேள்வியுள்
அத்தி உரி அரன் ஆவது அறிகிலர்
சத்தி கருதாது ஆம் பல தேவரும்
அத்தீயினுள் எழுந்தன்று கொலையே.

மூன்று வகையான அக்கினியை வளர்த்து செய்யும் வேள்விகளில் யானையைப் போன்ற கரிய இருளைக் கிழித்துக் கொண்டு இறைவன் சிவ ஒளியாக வெளிப்படுவான். இதை எவரும் அறிவதில்லை. அகண்டமாகச் சிவன் வெளிப்படும்போது கண்டமாகிய தேவர்கள் அழிந்து விடுவர்.

சிவபெருமான் கயமுகாசுரனை சம்ஹரித்த தலம் திருவழுவூர்.

#345. இறப்பில்லை

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்தின் மேல் உறநோக்கி முற்
கால் உற்று காலனைக் காய்ந்து அங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாக இருந்ததே.

மூலாதாரத்தில் கிளம்பி எழும் ஒருவனை சுழுமுனை நாடி வழியே மேலே செலுத்த வேண்டும். தலை உச்சியில் இருக்கும் பிரமரந்திரத்தில் அவன் சென்று பொருந்துமாறு ஊர்த்துவ திருஷ்டியால் நோக்க வேண்டும். அங்கிருந்து கொண்டு ஒருவன் யமனைச் சினந்து அக்னி வழிபாடாக தியானம் செய்து வந்தால், அவன் உடலைக் கடந்து சஹஸ்ரதளத்திலேயே என்றும் அழிவின்றி இருக்க முடியும்.

சிவன் யமனை அழித்த செயல் நடந்தது திருக்கடவூர் தலத்தினில்.

#346. காமனை வெல்வது

இருந்த மனதை இசையப் இருத்திப்
பொருந்தி இலிங்கவழி அது போக்கி,
திருந்திய காமன் செயல் அது அழித்து அங்கண்
அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே.

கொறுக்கை இருப்பது என்பது என்ன? மனத்தைச் சிவனுடன் சேர்த்து விட வேண்டும். இலிங்க வழி செல்லக் கூடாது. விந்து நீக்கமாகிய காமன் செயலைக் கெடுக்க வேண்டும். இவ்வாறு செய்துவிட்டு வாழ்க்கை துணையுடன் பொருந்தி இருப்பதே கொறுக்கை இருத்தல் எனப்படும்.

மனத்தைச் சஹஸ்ர தளத்தில் பொருத்திக் கொண்ட ஒருவன் பெண்ணுடன் புணர்ந்தால் விந்து நீக்கம் ஏற்படாது. இது காமன் என்னும் மன்மதனை வெல்வது ஆகும். இதனால் சிவ திருஷ்டி என்னும் ஞானக் கண் கிடைக்கும்.

மன்மதனைச் சிவன் வென்ற இடம் திருக் கொறுக்கை என்னும் திருத்தலம்

இரண்டாம் தந்திரம் -

03 - லிங்கம் என்பது தோற்றம் ஒடுக்கம் இவைகளின் காரணமான அருட்குறி!

#347. சக்தி வழிபட்டாள்

'அடிசேர்வேன்' என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமகனார் மகள் ஆகித்
திடம் ஆர் தவஞ் செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்தி செய்தாளே.

"சிவபெருமானின் திருவடிகளைச் சென்று அடைவேன்!" என்று உறுதி பூண்டாள் சக்தி தேவி. உடலின் உச்சியில் விளங்கும் சிற்சக்தி ஆனாள் அவள். சிவனை அடைவதற்கு ஒளி மண்டல வாசிகள் காணும்படி முறையாக வழிபட்டுத் தவம் செய்தாள்.

மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி மேலே சென்று சிரசில் இருக்கும் சிற் சக்தியுடன் ஒன்றாகச் சேருவதே தவம் எனப்படும்.

#348. ஆட்கொள்வான் சிவன்

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்று எண்ணி அயர்வுற வேண்டா;
புரிவுடையாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறிவானே.

உலவும் திறன் பெற்ற மும்மலக் கோட்டைகளை அழித்த பிரான் அடைவதற்கு அரியவன் என்று எண்ணி அயர்வுற வேண்டியதில்லை. அன்புடையவரிடம் அவன் பொய்க்க மாட்டான். பெருமான் அன்பர்களுக்கு அருள் புரிந்து கருணை காட்டுவான.

#349. மூவருக்கும் தருபவன் சிவன்

ஆழி வலம் கொண்டு அயன் மால் இருவரும்
ஊழி வலம் செய்ய ஒண் சுடர் ஆதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற்கு அவ்வழி
வாழி பிரமற்கும் வாள் கொடுத்தானே.

சுவாதிஷ்டன, மணிபூரகச் சக்கரங்களில் உறையும் நான்முகனும், திருமாலும் மூலாதாரத்தை முறைப்படி வலம் வந்தனர். அங்கே ஒளி வடிவாக விளங்கும் ருத்திரன் சஹஸ்ர தளத்தில் விளங்கும்படி திருமாலுக்கு அருள் செய்தான்.

நான்முகனுக்கும் ஒளி தந்து நான்முகன் சுவாதிஷ்டானத்திலிருந்து உற்பத்தியைப் பெருக்காமல் இருக்கும்படிச் செய்தான்

#350. சிவன் வெளிப்படுவான்

தாங்கி இருபது தோளும் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பு இல் பெருவலி
ஆங்கு நெரித்து 'அமரா' என்று அழைத்தபின்
நீங்கா அருள் செய்தான் நின்மலன் தானே.

பத்துத் தலைகளும் இருபது தோள்களும் கொண்ட ராவணன் தன் முயற்சியால் கயிலை மலையைப் பெயர்த்து எடுத்தான். அவன் ஆற்றலை முற்றிலுமாக அழித்து, "இறைவா! என்னைக் காப்பாற்று!" என்று கெஞ்ச வைத்து அவனுக்கு நீங்காத பக்தியை அளித்தான் சிவபெருமான்.

ராவணனுக்குப் பத்துத் தலைகள். அவைகள் காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம், மாச்சர்யம், டம்பம், தர்ப்பம், அசூயை, ஈரிஷை.

ஞான இந்திரியங்கள் ஐந்து, கர்ம இந்திரியங்கள் ஐந்து, இவைகள் சுவைக்கும் புலன்கள் பத்து என்ற இருபதும் அவனது தோள்களள.

#351. உடல் நினைவு மறையும் வழி

உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆன் ஐந்தும் ஆட்டத் தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே.

தனக்கு நேர்வதைக் காரண காரியங்களுடன் அறிய வல்லவன் சீவனான சண்டீசன். அவன் வெள்ளிய ஒளியாகிய மணலால் ஒரு லிங்கத்தைச் செய்தான். பிறவிப் பிணி நீங்கும் வண்ணம் தன் ஐந்து ஞான இந்திரியங்கள் புலன்களில் மேயாமல் தடுத்தான். மாயையால் உண்டான உடலான தந்தை சினம் கொண்டு அவனை ஒடுக்கினான். சண்டீசன் அக்கினிக் கலையாகிய வாளினால் இடை பிங்கலைகளைச் செயலாற்றாமல் செய்து சிவத் தொண்டன் ஆகிவிட்டான்.

#352. தேவர்களுக்கு அருள்வான்

ஓடிவந்து எல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாம் சென்று
நாடி "இறைவா நம" என்று கும்பிட,
ஈடு இல் புகழோன் "எழுக" என்றானே.

தேவர்கள் எல்லாம் சிவபெருமானிடம் ஓடி வந்து மிகுந்த முக வாட்டத்துடன் “இறைவா போற்றி!’ என்று அடைக்கலம் புகுகின்றபோது “எழுந்து வாருங்கள்!” என்று கூறி பெருமான் அருள் செய்தார் .

தேவர்கள் பாற்கடலில் எழுந்த கொடிய நஞ்சைக் கண்டு அஞ்சி சிவனிடம் சென்று அடைக்கலம் புகுந்ததைக் குறிக்கும் இது.

இரண்டாம் தந்திரம் -
4. தக்கன் வேள்வி

ஆண் பெண் கூட்டுறவே தக்கன் வேள்வி ஆகும்.
சிவனை எண்ணாமல் வேள்வி செய்யப்பட்டது.
விந்து ஜெயம் என்ற பயன் கிடைக்க வில்லை.
வேள்வியும் பயன் தராமல் அழிவுற்றது.

#353. அருள் இன்றேல் ஜெயம் இல்லை!

**தந்தை பிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறை கெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே.**

தக்கன் ஆண் பெண் கூட்டுறவாகிய வேள்வியைச் செய்தான். சிவனை எண்ணாமல் அந்த வேள்வி செய்யப்பட்டது. சிவபெருமான் அது கண்டு மிகுந்த சினம் கொண்டார். அதனால் மிகுந்த காமாக்னி ஏற்பட்டது. விந்து வெளிப்பட்டது. விந்து ஜயம் என்ற பலன் அந்த வேள்விக்குக் கிடைக்கவில்லை. சிவபெருமான் சினந்தவுடன் தேவ காரியம் தடைப்பட்டது.

#354. திருமாலுக்கு அருளல்

**சந்தி செயக்கண்டு எழுகின்ற அரிதானும்
“எந்தை இவன் அல்ல யாமே;” உலகினில்
பந்தம் செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தம் இலானும் அருள் புரிந்தானே.**

ஆண் பெண் கூட்டுறவைச் செய்வதற்கு தருக்கி எழுபவன் திருமால். அவன் “உலகத்தைப் படைப்பவன் நானே அன்றி சிவன் அல்ல” என்றான். அதனால் பந்தப்படுத்தும் பாசக்கட்டில் விழுந்தான் திருமால். மனம் திருந்தி வருந்திச் சிவனை நோக்கித் தவம் செய்த பின்னர் , அவனுக்கு சிவன் அருள் புரிந்தான்.

#355. நான்முகனுக்கு அருளல்

அப்பரிசே அயனார் பதி வேள்வியுள்
அப்பரிசு அங்கி அதிசயம் ஆகிலும்,
அப்பரிசேயது நீர்மையை உட்கலந்து
அப்பரிசே சிவன் ஆலிக்கின்றானே.

தக்கன் வேள்விக்குத் தானே தலைவன் என்ற தருக்கு அடைந்தான் நான்முகன். அதனால் காமாக்னி மூண்டு எழுந்த போதிலும், அதன் வகையிலேயே, அதன் தன்மையில் நன்றாகப் பொருந்திய சிவபெருமான் ஆரவாரத்துடன் விளங்கினான்.

#356. நீக்கம் அற நிறைவான்

அப்பரிசே அயன் மால் முதல் தேவர்கள்
அப்பரிசே அவர் ஆகிய காரணம்
அப்பரிசு அங்கியுல நாளும் உள்ளிட்டு
அப்பரிசு ஆகி அலர்ந்திருந்தானே.

நான்முகனும் திருமாலும் தேவர்களும் அத்தன்மையைப் பெறக் காரணம் ஆவான் சிவபெருமான். அக்கினிக் கலையில் நீக்கம் அற நிறைந்திருக்கும் சிவன் அந்த அக்கினிக் கலையை உள்ளே விளங்கச் செய்வான்.

#357. விரைந்து அருள்வான்

அலர்ந்திருந்தான் என்று அமரர் துதிப்பக்
குலம் தரும் கீழ் அங்கி கோளுற , நோக்கிச்
சிவந்த பரம் இது சென்று கதுவ
உவந்த பெருவழி ஓடி வந்தானே.

சிவபெருமானே எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன். இந்த உண்மையை உணர்ந்த வானவர்கள் அவனிடம் வேண்டினர். அப்போது ஆறு ஆதாரங்களில் கீழாக உள்ள மூலாதாரத்தில் உள்ள அக்கினிக் கலை மேலே எழுந்தது. சுழுமுனை வழியே சஹஸ்ரதளத்தைச் சென்று பற்றியது அச் சிவந்த ஒளி. அப்போது சிறந்த வழிபாடு இதுவே என்று விரைந்து வந்து அருள் செய்தான் சிவபெருமான்.

#358. நல்லவர்கள் ஆயினர்

அரி, பிரமன், தக்கன், அருக்கனுடனே
வருமதி, வாலை ,வன்னி நல் இந்திரன்
சிரம், முகம், நாசி, சிறந்தகை, தோள் தான்
அரன் அருளின்றி அழிந்த நல்லோரே.

திருமால், நான்முகன், தக்கன், சூரியன், சந்திரன், நாமகள், அக்கினி, இந்திரன் என்பவர் தலை, முகம், மூக்கு, கை, தோள் என்பனவற்றைச் சிவன் அருள் பெறாததால் இழந்தனர். பின்னர் சிவன் அருள் பொருந்தியதால் அவர்கள் நல்லவர்கள் ஆயினர்.

#359. மந்திரம் நல்லதே

செவி மந்திரம் சொல்லும் செய்தவத் தேவர்
அவி மந்திரத்தின் அடுக்களை கோலிச்
செவி மந்திரம் செய்து, தாம் முற நோக்கும்
குவி மந்திரங் கொல் கொடியதுவாமே.

தேவர்கள் ஜெபிக்கத் தகுந்த மந்திரங்களை ஓதி சிவன் அருள் பெற்றவர்கள். வாயினால் கூற இயலாத பிரணவத்தால், மூலாதாரத்தில் உள்ள அக்கினியைத் தூண்டி, அதன் மூலம் நாதம் ஏற்படச் செய்து மனதை ஒருமைப் படுத்தும் ஒரு மந்திரம் கொடியது ஆகுமோ? ஆகாது! அந்த மந்திரம் மிகவும் நல்லதே!

#360. மல நீக்கம் செய்வான்

நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர், 'பரிந்தருள் செய்க' என,
வில்லார் புரத்தை விளங்குஎரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே.

'எம் உடலில் உள்ள ஒன்பது குண்டங்களும் இன்பம் அடையுமாறு அருள வேண்டும்!" என்று தேவர்கள் சிவனை நோக்கி வேண்டினார்கள். பிரணவம் என்ற வில்லை எடுத்து, ஆணவம் முதலிய மும் மலங்கள் ஆகிய கொடிய அசுரர்களை அழித்துச் சிவன் அவர்களுக்கு அருள் புரிந்தான்

#361. அன்புடன் செய்ய வேண்டும்

**தெளிந்தார் கலங்கினும் நீ கலங்காதே
அளிந்தாங்கு அடைவது எம் ஆதிப் பிரானை
விளிந்தான் அது தக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங்கு அருள்செய்த தூமொழியானே.**

நாத வடிவானவன் சிவபெருமான். தன்னை எண்ணாது (தக்கன்) செய்த காம வேள்வியை முதலில் சினந்து அழித்தான். பின்னர் அவனே அருள் செய்தான். இன்ப வடிவான சிவனை அடைவதற்கு அவனை அன்புடன் வழிபட வேண்டும். இதில் நீ எள்ளளவும் மயக்கமோ கலக்கமோ அடையாதே!

இரண்டாம் தந்திரம் - 5. பிரளயம்

#362. சிவஜோதி

**கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்து
இருவரும் கோ என்று இகல, இறைவன்
ஒருவனும் நீர் உற ஓங்கொளி ஆகி,
அருவரையாய் நின்று அருள்புரிந்தானே.**

கருவிடும் எல்லையில் உள்ளது மணி பூரகம். அதில் உள்ள நீர் மண்டலத்தில் நான்முகன், திருமால் என்னும் இருவரும் மாறுபட்டு நின்றால் அழிவு ஏற்படும். அது நிகழாமல் இருக்க, மணி பூரகத்தில் இருக்கும் அறிவு மயமான சூரியன் மேலே எழுந்து, சிவ ஒளியாகி, உச்சியின் மேல் நின்று, அருள் செய்வான்.

#363. அஞ்சேல் என அருள்வான்!

**அலைகடல் ஊடு அறுத்து அண்டத்து வானோர்
தலைவன் எனும் பெயர் தான் தலை மேற்கொண்டு
உலகார் அழற் கண்டு உள்வீழாது ஓடி
அலைவாயில் வீழாமல் அஞ்சல் என்றானே.**

கடல் பகுதியாகிய மணிபூரகத்தைப் பிளந்து கொண்டு எழுவான் சிவன். அண்டத்தின் எல்லையைச் சென்று அடைவான் .அனைவருக்கும் தானே தலைவன் ஆவான். உலகினர் காமத் தீயில் விழுந்து துன்பமயமான உலகில் அழுந்தாமல், "அஞ்சேல்!" என்று உரைத்து அவர்களைக் காப்பான் சிவன்.

#364. பரவெளியில் விளங்குவான்

தண்கடல் விட்டது அமரரும் தேவரும்
எண்கடல் சூழ் எம்பிரான் என்ற இறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேல் எழுந்து அப்புறம்
கண்கடல் செய்யும் கருத்து அறியாரே.

குளிர்ந்த கடலாகிய மணிபூரகத்தைக் கடந்த அறிவு மயமாகிய சூரியன் சிவன். அமரத் தன்மை பெற்றவன். ஒளி மண்டலத்தினன். கடல் போல் தலையின் மீது எட்டு திக்குகளிலும் பரவியவன். வைச் சிவன் என்று தொழுவர் வானவரும் தேவர்களும். வானத்தைக் கடல் போலச் செய்து சிவன் அகக் கண்களுக்கு பரவெளியாகக் காட்சி அளிப்பதை அவர்கள் அறிகிலர்.

#365. காமத்தீ

சமைக்க வல்லானைச் சயம்பு என்று ஏத்தி
அமைக்க வல்லார் இவ்வுலகத்து உளாரே
திகைத்ததெண்ணீரில் கடல் ஒலி ஓசை
மிகைக்கொள அங்கி மிகாமை வைத்தானே

அனைத்துத் தத்துவங்களையும் படைப்பவன் சிவன். அவனைத் தனக்கு ஒரு படைப்பு இல்லாதவன் என்று அமைத்துத் துதிப்பர் உலகத்தோர். பொங்கிய நீரில் கடல் ஒலி போன்ற நாதம் மேலிட்டுப் பரவச் செய்து காமத்தீ மிகாத வண்ணம் அமைத்து அருளியவன் சிவன்.

#366. நான்முகன் செயல்

பண் பழிசெய் வழிபாடு சென்று அப்புறம்
கண் பழியாத கமலத்து இருக்கின்ற
நண் பழியாளனை நாடிச் சென்று அச்சிரம்
விண் பழியாத விருத்தி கொண்டானே.

பண்பை அழிப்பது காமச் செயல். அதைச் செய்பவன் சுவாதிஷ்டானத்தில் உள்ள நான்முகன். நட்பை அழிக்கும் அவனைத் தேடிச் சென்று அவன் சேட்டையைக் கெடுத்த சிவன் விண் பழிக்காதபடி அவன் தலைகளில் ஒன்றைக் கொய்தான்.

இரண்டாம் தந்திரம் - 6. சக்கரப் பேறு

#367. இன்பங்களை அளிப்பவன்

மால் போதகன் என்னும் வண்மைக்கு இங்கு ஆங்காரம்
கால் போதம் கையினோடு அந்தரச் சக்கரம்
மேல்போக வெள்ளி மலை, அமராபதி
பார் போகம் ஏழும் படைத்து உடையானே.

மயக்கத்தைத் தருபவன் திருமால் என்னும் விஷ்ணு தத்துவம். அது உலக அனுபவம் நீங்கும் வண்ணம் சுழுமுனை வழியே மணிபூரகத்தில் உள்ள உணர்வு சஹஸ்ர தளத்தை அடைய வேண்டும். அப்போது அந்த வெண்மையான ஒளியில் திருமால் தேவர்களின் தேவனாக, ஏழு உலகங்களையும் படைத்து, அனைத்து இன்பங்களையும் அளிக்கும் சதாசிவன் ஆகி விடுவான்.

#368. ஆற்றலை அளித்தான்

சக்கரம் பெற்று நல் தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைத் தரிக்க ஒண்ணாமையால்
மிக்கு அரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்க நல் சக்தியை தான் கூறு செய்ததே.

மேற்கூறியபடி சிவனிடமிருந்து சக்கரத்தைப் பெற்றான் திருமால். அவன் அந்தச் சக்கரத்தைத் தரிக்க ஒண்ணாமல் மிகுந்த விருப்புடன் சிவனை வழிபட்டான். அப்போது சிவன் தன ஆற்றலின் ஒரு பகுதியை திருமாலுக்கு அளித்தான்.

#369. திருமேனியில் பங்கு தந்தான்

கூறு அது ஆகக் குறித்து நல் சக்கரம்
கூறு அது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறு அது செய்து கொடுத்தனன் சக்திக்குக்
கூறு அது செய்து தரித்தனன் கோலமே.

சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரம் தந்தான். அது போன்றே சக்தி தேவிக்கும் தன் திருமேனியில் ஒரு பாதியை அளித்தான். திருமாலும் சக்தி தேவியும் சிவபெருமான் ஆணைப்படி நடப்பவர்கள் ஆவர்.

#370. திருமாலின் சக்கரம்

தக்கன் தன் வேள்வி தகர்த்த நல் வீரர்பால்
தக்கன் தன் வேள்வியில் தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைச் சசி முடிமேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயு உக்கரத்திலே.

தக்கன் வேள்வி என்பது பிரஜா உற்பத்தி. தக்கன் வேள்வியை வீரபத்திரர் அழித்தார். திருமால் அந்த வீரர் மேல் ஆணை என்னும் சக்கரத்தைச் செலுத்தினார். சக்கரத்தை அந்த வீரர் பிறை முடியில் செலுத்தியபோது காம வாயுவின் வேகத்தால் அந்த அக்னியின் பயன் கிட்டாமல் போனது.

இரண்டாம் தந்திரம் - 7. எலும்பும், கபாலமும்

#371. ஏந்தியது ஏன்?

எழும்பும் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணி முடி வானவர் ஆதி
எலும்பும் கபாலமும் எந்திலன் ஆகில்
எலும்பும் கபாலமும் இற்று மண் ஆமே.

எலும்பு என்பது மணி முடிதரித்த தேவர்களின் வடிவம். மண்டையோடு என்பது அறிவின் வடிவம். சிவபெருமான் எலும்பையும், மண்டை ஓட்டையும் பிரளய காலத்தில் தாங்குவது ஏன் தெரியுமா ? அவ்வாறு அவன் தாங்கவில்லை என்றால் மீண்டும் பிறவி எடுக்கும் ஜீவர்களின் பழைய வடிவமும் அறிவும் தொடர்பு இன்றிப் போய்விடும்

இரண்டாம் தந்திரம் - 8. அடி முடி தேடல்

#372. மால் அயன் அடி முடி தேடல்

பிரமனும் மாலும் , 'பிரானே நான்' என்னப்
பிரமன் மால் தங்கள்தம் பேதமையாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன் நிற்க
அரன் அடி தேடி அரற்றுகின்றாரே.

"நானே பிரம்மம்!" என்று தம் அறியாமையால் நினைத்துக் கொண்டனர் அரியும் அயனும். அதனால் அஹங்காரம் அடைந்தனர். அப்போது சிவபெருமான் அவர்கள் முன்பு ஒரு பேரொளிப் பிழம்பாகத் தோன்றி நிற்கவும் அந்த ஒளிப் பிழம்பின் அடியையும் முடியையும் அவர்கள் தேடித் தேடிக் காண இயலாமல் வாடி நின்றனர்.

#373. நான் கண்டேன் சிவனை!

ஆம்ஏழ் உலகு உற நின்ற எம் அண்ணலும்
தாம்ஏழ் உலகில் தழற்பிழம்பாய் நிற்கும்
வான்ஏழ் உலகு உறும் மா மணிகண்டனை
நானே அறிந்தேன் அவன் ஆண்மையாலே.

ஏழு உலகங்களும் பொருந்தும் வண்ணம் உயர்ந்து நிற்பவன் சிவன். அவன் தானே அக்கினி வடிவாக ஏழு உலகங்களிலும் பரந்து நிற்கின்றான். வானத்தில் ஏழு உலகங்களிலும் விளங்கும் சிவனை, மாலும் அயனும் தேடியும் காண இயலாத சிவனை நான் அவன் அருளால் காணப் பெற்றேன்.

#374. எங்கும் நிறைந்தவன்

ஊனாய், உயிராய் உணர்வு அங்கியாய், முன்னம்
சேணாய் வான் ஓங்கி , திருஉருவாய் அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து
ஆள் முழுது அண்டம் ஆகி நின்றானே.

உடலாகவும், உயிராகவும், அதில் உறையும் உணர்வாகவும், அக்கினியாகவும், அரி அயன் காண இயலாத தொலை தூரத்துப் பொருள் ஆகவும், வானளாவிய ஒரு பேரொளியாகவும், அண்டங்களைத் தாங்கும் ஒரு தூணாகவும் அவற்றை வலம் வரும் சந்திர சூரியர்களைக் கடந்தவனாகவும், தான் ஆளும் அண்டங்கள் அனைத்திலும் முழுமையாக விளங்குகின்றவன் சிவபெருமான்.

#375. சிவனை அறிய இயலாது!

நின்றான் நிலமுழுது அண்டத்துள் நீளியன்
அன்றே அவன் வடிவு அஞ்சினர் ஆய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேல் செல
நன்று ஆம் கழல்அடி நாட ஒண்ணாதே.

எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்கும் சிவபெருமான் அண்டங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு உயர்ந்து நின்றான். பேரொளியாக அவன் விளங்கிய போது அவன் ஒளிரும் திருமேனியைக் கண்டு அஞ்சினர் அரியும் அயனும். அந்த

ஒளியின் அடி முடிகளைக் ஆராயச் சென்றனர் இருவரும். அரி நிலத்தின் கீழேயும் அயன் வானத்தின் மேலேயும் சென்றனர். எவ்வளவு தேடியும் அடி முடிகளைக் காணாது நாணி மீண்டு வந்தனர்.

#376. அடி முடி காணிலர்

சேவடி ஏத்தும் செறிவுடை வானவர்
மூவடி தாஎன் றானும், முனிவரும்,
பாவடி யாலே பதம் செய் பிரமனும்
தாவடி இட்டுத் தலைப் பெய்துமாறே.

கூட்டமாக இருந்து சிவன் சேவடிகளைப் போற்றுகின்ற தேவர்களும், தானமாக மூன்றடி மண் கேட்ட திருமாலும், முனிவர்களும், இசை வடிவான மந்திரங்கள் மூலம் விரும்பியவற்றை அடையலாம் என்னும் நான்முகனும் அலைந்து திரிந்தாலும் சிவனைக் காண இயலாது அல்லவா?

#377. சிவன் இயல்பை அறிகிலர்

தானக் கமலத்து இருந்த சதுமுகன்
தானக் கருங்கடல் வாழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும் பொருள் தன்மையது ஆமே.

சுவாதிஷ்டானச் சக்கரத்தில் இருக்கும் நான்முகனும், மணிபூரகத்தில் இருக்கும் திருமாலும், ஊனின் உள்ளே இருக்கும் உயிர் போல் உணரவல்ல, தலை உச்சியில் விளங்கும் சதாசிவனுக்கு ஈடு ஆவரோ? ஆகா மாட்டார்!

#378. சாதாக்கியம் பெறலாம்

ஆலிங்கனம் செய்து எழுந்த பரஞ்சுடர்
மேல் இங்ஙன் வைத்தது ஓர் மெய்நெறி முன்கண்டு
ஆலிங்கனம் செய்து உலகம் வலம் வரும்;
கோலிங்க அமைஞ்சு அருள் கூடலும் ஆமே.

சாதாக்கியம் = சிவதத்துவங்கள் ஐந்தில் ஒன்று.
ஞானமும் செயலும் ஒத்தது சாதாக்கியம்.

கோலிங்கம் ஐந்து:

1. கர்ம சாதாக்கியம், 2. கர்த்துரு சாதாக்கியம், 3. மூர்த்தி சாதாக்கியம், 4. அமூர்த்தி சாதாக்கியம், 5. சிவ சாதாக்கியம்.

அனைத்திலும் கலந்து விளங்குகின்ற மேலான மெய்ப்பொருள் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இங்கு அடைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், நம்மால் எல்லாத் தத்துவங்களில் கலந்து நிற்கும், அதே சமயம் அவற்றைக் கடந்தும் நிற்கும் பஞ்ச சதாக்கியத்தின் அருளைப் பெறமுடியும்.

சிவனால் வகுக்கப்பட்ட நெறியில் சென்றால் சிவசதாக்கியத்தை எளிதாக அடையலாம்.

#379. தேவர்கள் சிவனைப் பொருந்தார்

வாள் கொடுத்தானை வழிபட்ட தேவர்கள்
ஆள் கொடுத்து எம் போல் அரனை அறிகிலர்;
ஆள் கொடுத்து இன்பம் கொடுத்துக் கோளாகத்
தாள் கொடுத்தான் அடி சாரகிலரே.

தேவர்களுக்கு ஒளி தந்தவன் சிவபெருமான். அவனை வணங்குவார்கள் தேவர்கள். ஆயினும் தங்களையே இறைவனுக்கு அடிமையாகத் தந்து, நாம் அறிந்தது போல சிவனை அவர்கள் அறிகிலர். இறைவன் தன்னையே நமக்குத் தருவான். சிவ போகத்தையும் தருவான். நாம் உய்யும் வண்ணம் தன் திருவடிகளைத் தருவான். என்றாலும் தேவர்கள் சிவனைச் சென்று பொருந்துகிலர். பலவேறு ஆசைகளுடன் அவர்கள் சிவனை வழிபடுவதால் அந்த அறியாமை அவனுடன் பொருந்த விடாது.

#380. படைக்கும் தொழிலை அருளினான்.

ஊழி வலம் செய்து அங்கு ஓரும் ஒருவருக்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்;
'வீழித் தலை நீர் விதித்தது, தா' என
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே.

ஊழியைச் செய்பவன் உருத்திரன். அவனை ஆராய்ந்து அறிபவன் சிவன். " எனக்குத் தாங்கள் இடும் ஆணையை அளித்து அருள்க!" எனப் பிரமன் வேண்டிடப் பேரொளியாக நின்ற இறைவன் பிரமனுக்குப் படைப்புத் தொழிலை அளித்தான்.

இரண்டாம் தந்திரம் - 9. சர்வ சிருஷ்டி

#381. நாதத் தத்துவம்

**ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போதம் அது ஆகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரம் தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரை; அதன் பால் திகழ் நாதமே.**

தொடக்கமும் முடிவும் இல்லாதது பரம் பொருள். அறிவு மயமாகப் பிரிக்க இயலாதபடி உள்ள பரம் பொருளிடம் தோன்றுவாள் பரை என்னும் சக்தி. அந்தச் சக்தியிடம் தோன்றும் நாதம்.

#382. நாதத்தில் தோன்றுபவை

**நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில்
தீதற்றகம் வந்த சிவம் சத்தி என்னவே
பேதித்து ஞானம் கிரியை பிறத்தலால்
வாதித்த இச்சையில் வந்து எழும் விந்துவே.**

நாதத்திலிருந்து தோன்றும் விந்து. நாத விந்துகளில் இருந்து தோன்றுவர் சிவனும் சிவை என்னும் சக்தியும். சிவன் பேரறிவு கொண்டவன். சிவை என்னும் சக்திதேவி பேராற்றல் கொண்டவள். இங்ஙனம் இருவராகப் பிரிந்த பின்னர் ஞானமும் செயலும் உண்டாகும். அதனால் உலகைத் தோற்றுவிக்கும் இச்சை எழும். இவை அனைத்தும் சுத்த மாயையிலிருந்து தோன்றுபவைகள்.

#383. சக்தியின் பெருமை

**இல்லது சத்தி இடம்தனில் உண்டாகிக்
கல் ஒளி போலக் கலந்து உள் இருந்திடும்;
வல்லது ஆக வழி செய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே.**

தத்துவங்கள் தோன்றும் இடம் ஆவாள் சக்தி தேவி. இவள் நவ மணிகளின் ஒளியுடன் பராசக்தியிடம் தோன்றி நம் ஆவியில் கலந்து பரவி நிற்பாள். ஆற்றலோடு தொழில் செய்ய வல்ல அந்தச் சக்தியின் பெருமைகளை நம்மால் கூறவும் இயலுமோ?

#384. சதாசிவன்

தூரத்தில் சோதி தொடர்ந்து ஒரு சத்தியாய்,
ஆர்வத்து நாதம் அணைந்து ஒரு விந்துவாய்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்தி ஓர் சாத்துமான் ஆமே.

எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன் சிவன். அவன் பேரொளி வடிவானவன். அவனே எண்ணத்துக்கு உட்பட்ட சக்தியாகவும், இச்சையினால் நாதத்தைப் பொருந்துகின்ற விந்துவாகவும், பாரமான ஐந்தொழில்களைப் புரிபவனாகவும் ஒப்பற்ற ஆற்றல் கொண்டவனாகவும் உள்ளான்.

#385. பிரபஞ்சம் தோன்றிய விதம்

மானின்கண் வான் ஆகி, வாயு வளர்ந்திடும்
கானின் கண் நீரும் கலந்து கடினமாய்த்
தேனின் கண் ஐந்தும் செறிந்து ஐந்து பூதமாய்ப்
பூவின் கண் நின்று பொருந்தும் புவனமே.

அசுத்த மாயையினின்றும் ஆகாயம் தோன்றும். அதிலிருந்து தோன்றும் வாயு. வாயுவிலிருந்து நெருப்பும் , நெருப்பில் இருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றும். பஞ்சீகரணம் என்னும் முறைப்படி பஞ்ச தன்மாத்திரைகள் கலக்கப்படும் போது பஞ்ச பூதங்கள் இவ்வாறு தோன்றும்.

#386. சிவ சக்தியர்

புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை ஆயனாய்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே.

புவனத்தைப் படைப்பது சிவ சக்தியர். அவர்களுக்கு ஐந்து புதல்வர்கள் உள்ளனர். அவர்கள் முறையே நான்முகன், திருமால், ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆவர். படைக்கும் போது சிவசக்தியர் பிரம்மனிடம் பொருந்தி இருப்பர். நிலம், நீர், தீ, வளி, வெளி, விந்து, நாதம், சக்தி, சிவன் என்ற ஒன்பதையும் படைப்பர்.

#387. உலகினைக் காப்பர்.

புண்ணிய நந்தி பொருந்தி உலகுளங்கும்
தண்ணிய மானை வளர்த்திடும் சக்தியும்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே.

அறிவு மயமாகச் சிவன் அனைத்துப் பொருட்களிலும் பொருந்தி இருப்பான். அவனே குளிர்ச்சி பொருந்திய மாயையும் காக்கின்றான். சக்தி சிவனுடன் பொருந்தி, வெப்பத்தைத் தணிக்கும் குளிர்ச்சி போலச் செயல்படுவாள். சிவனின் தாங்கும் தன்மையில் அவளும் விரிந்து இருப்பாள்.

#388. பிறப்பு உண்டாவது

நீரகத்து இன்பம் பிறக்கும் நெருப்பு இடை
காயத்தில் சோதி பிறக்கும் அக்காற்று இடை
ஓர்வு உடை நல்உயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீர் இடை மண்ணின் நிலைப் பிறப்பாமே.

புருஷனுக்கு இன்பம் உண்டாவது நீர்ப் பகுதியாகிய மணிபூரகத்தில் ஆம். அனாகதத்தில் அக்னி விளங்குவதால் அங்கே ஒளி வீசும் கிரணங்கள் உண்டாகும். விசுத்தியில் வாயு விளங்கு உயிர் நிலைபெற்று இருக்கும். நாதமோ எனில் சக்தியியைத் தரும். நீருக்கும் (மணிபூரகச் சக்கரம்)

மண்ணுக்கும் (மூலாதாரம்) இடையே உள்ள சுவாதிஷ்டானமே உற்பத்திக்குரிய இடம் ஆகும்.

#389. உலகினைப் படைப்பவன்

உண்டு உலகு எழும் உமிழ்ந்தான் உடன் ஆகி
அண்டத்து அமரர் தலைவனும் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னோடும்
பண்டு இவ்வுலகம் படைக்கும் பொருளே.

உலகு ஏழையும் உண்டு உமிழ்ந்த திருமால் உலகினைக் காக்கும் கடவுள் ஆவான். நான்முகன் உலகினைப் படைக்கும் கடவுள் ஆவான். ஆனால் அண்டங்கங்களில் வாழுகின்ற தேவர்களின் தலைவனாகிய சிவபெருமானே அனைவருக்கும் தலைவனும் முதல்வனும் ஆவான். அவனே உண்மையில் இந்த உலகினைப் படைத்துக் காக்கும் மெய்பொருள் ஆவான்.

#390. சிவனே பிரமன் ஆவான்

ஓங்கு பெருங்கலடலுள்ளுறு வானோடும்
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமலா மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந்தானே.

விரிந்த கமல மலர்மீது அமரும் நான்முகன் உடலுடன் உயிரைப் பொருத்தும் செயல் செய்கின்றான். இதன் தன்மையை ஓங்கிய கடற் பகுதியாகிய சுவாதிஷ்டானத்தில் உள்ள திருமாலுடன், தலையின் மீதுள்ள வெண்மையான ஒளியில் விளங்கும் சிவபெருமானும் நன்கு அறிவான்.

#391. சிவனே அனைத்துமாவான்

காரணன் அன்பில் கலந்து எங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுடலாய் நிற்கும்
பாட அணன்அன்பின் பதம் செய்யும் நான்முகன்
ஆரணமாய் உலகாய் அமர்ந்தானே.

அன்புடன் அனைத்துப் பொருட்களிலும் கலந்து உறைபவன் சிவபெருமான். அவனே படைப்புக்குக் காரணம். அவனே உடலின் நடுப் பகுதியில் நாபிப் பிரதேசத்தில் திருமாலாகவும் அமர்ந்துள்ளான். அவனே உலகங்களைப் படைக்கும் பிரமனாகவும் உள்ளான். அவனே சொற் பிரபஞ்சமாகவும் பொருட் பிரபஞ்சமாகவும் விளங்குகின்றான்.

#392. சிவன் துணை பயன் தரும்!

பயன்எளி தாம் பரு மாமணி செய்ய
நயன்எளிது ஆகிய நம்பன் ஒன்று உண்டு
அயன்ஒளி யாய் இருந்து அங்கே படைக்கும்
பயன்எளிது ஆம் வயணம் தெளிந்தேனே.

எளிமையாக நன்மைகள் செய்யும் சிவபெருமான் ஒருவன் உளான். பயனை எளிதாக்கும் ஒரு பெரிய மாணிக்கத்தைப் போன்றவன் அவன். அவனே மூலாதாரத்தில் இருந்து கொண்டு நான்முகனுக்கு ஒளியை அளித்துப் படைப்புத் தொழிலில் உதவுகின்றான். அவன் துனையைப் பெற்றால் பயன்களை எளிதாக அடைந்து விடலாம் னென்று நான் உணர்ந்து கொண்டேன்.

#393. முத்தொழில்கள்

போக்கும் வரவும் புனிதன் அருள் புரிந்து
ஆக்கமும் சிந்தையது ஆகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையோடும்
தாக்கும் கலக்கும் தயாபரன் தானே.

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் உள்ளத்தில் எண்ணிப் பார்க்கும் போது மூலாதாரத்திலிருந்து எழுகின்ற சிவந்த ஒளி மேலே சென்று சிரசைச் சுற்றியுள்ள எட்டு திசைகளிலும் பரவும். அப்போது அங்கே சிவன் வெளிப்படுவான் .

#394. இன்பம் தருவான்

நின்று உயிர் ஆக்கும் நிமலன் என் ஆருயிர்
ஒன்று உயிர் ஆக்கும் அளவை உடல் உற
முன்துயர் ஆக்கும் உடற்கும் துணையதா
நன்று உயிர்ப்பானே நடுவு நின்றானே.

குற்றமற்றவன் சிவபெருமான். அவன் உலக உயிர்களுடன் பொருந்தி அவற்றைப் பக்குவம் அடையச் செய்வான். அவன் என் அரிய உயிரை என் உடலில் பொருந்தினான். முன்பு துன்பம் தந்தது இந்த உடல். இன்று அவன் நடுநாடியின் உயிர்ப்பாக இருந்து கொண்டு நன்மை செய்கின்றான்.

#395. உடலும் அவனே!

ஆகின்ற தன்மையின் அக்கு அணி கொன்றையன்
வேகின்ற செம்பொன்னின் மேல் அணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்து உடலாய் உளன்
ஆகின்ற தன்மை செய ஆண் தகையானே.

உயிரைச் சிவமாகி ஆள்பவன் சிவன். உருத்திராக்கம் அணிந்து கொன்றை மலர் சூடியவன் சிவன். உருக்கிய பொன் நிற மேனியன். பிறக்கும் எல்லா உயிர்களின் உடலாகவும் அவனே உள்ளான்

#396. மாறுபட்ட பயன்கள்

ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்;
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்;
பருவங்கள் தோறும் பயன் பல ஆன;
திருஒன்றில் செய்கை செகம் முற்றும் ஆமே.

சிவனும் சிவையும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் விளையாடல்களை விளையாடினர். அவ்விருவர் விளையாடும் விளையாட்டு அனைத்தையும் செய்ய வல்லது. சூரியனின் கதி மாறினால் பருவங்கள் மாறிவிடும். இறைவனின் அருட்தன்மை மாறுபடுவதால் ஜீவன் அடைகின்ற பக்குவம் மாறுபடும். அதனால் விளைகின்ற பயன்களும் வேறுபடும்.

#397. முத் தொழில்களைச் சிவன் அறிவான்

புகுந்துஅறிவான் புவனாபதி அண்ணல்
புகுந்து அறிவான் புரி சக்கரத்து அண்ணல்
புகுந்து அறிவான்மலர் மேல் உரை புத்தேள்
புகுந்து அறியும் முடிக்கு ஆகி நின்றாரே.

சிவபெருமான் உலகத்தின் தலைவனாகிய ருத்திரனிடம் புகுந்து உலகை அழிக்கும் செயலை அறிந்துள்ளான். சக்கரத்தை ஆயுதமாகக் கொண்ட திருமாலிடம் பொருந்தி அப்பெருமான் உலகைக் காக்கும் தொழிலை அறிந்துள்ளான். சுவாதிஷ்டானத்தில் கமலத்தில் வீற்றுள்ள பிரமனிடம் பொருந்தி படைப்புத் தொழிலையும் அவன் அறிந்துள்ளான். அவ்வாறு அவன் அறியும்படி அந்த மூவரும் அவன் ஆளுகைக்கு உட்பட்டே அந்தத் தொழில்களை நிகழ்த்துகின்றனர்.

#398. அதிகார மலம்

ஆணவச் சத்தியும் ஆம் அதில் ஐவரும்
காரிய காரன் ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழிலால் விந்துவில் பிறந்து
ஆணவம் நீங்காதவர் எனல் ஆகுமே.

ஆணவ மலத்தை உடையவர்கள் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவர். தகுதியால் மேலே உள்ள ஈசனைக் காரண ஈசன் என்றும் கீழே உள்ள ஈசனைக் காரிய ஈசன் என்றும் கூறுவர். சுத்த மாயையில் தோன்றி ஐந்தொழில்கள் புரியும் இவர்கள் ஆணவ மலம் நீங்காதவர்கள் என்றே கருதப் படுவர்.

#399. சிவசக்தியரின் விளையாட்டு

உற்ற முப்பால் ஒன்று மாயாள் உதயமாம்
மற்றைய மூன்றும் மாயோதயம் விந்து
பெற்றவன் நாதம் பரையில் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல் விளையாட்டிதே.

சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மாயை மூன்று வகைப்படும். சாதாக்கியம், மகேசுவரம், சுத்த வித்தை என்ற மூன்றும் மாயையின் காரியங்கள் ஆகும். பரையிலிருந்தே தோன்றும் நாதமும், விந்துவும். பரையுடன் சிவன் ஆடுகின்ற விளையாட்டே படைப்பு ஆகும்.

#400. மாயா சக்தி

ஆகாயம் ஆதி சதாசிவர் ஆதி என்
போகாத சத்தியுள் போந்து உடன் போந்தனர்
மாகாய ஈசன் அரண் மால் பிரமனாம்
ஆகாயம் பூமி காண அளித்தலே.

வான் முதலான பூதங்கள் ஐந்து. இவற்றை இயக்குகின்ற சதாசிவன் போன்றவர்களும் ஐவர் ஆவர். மாயையில் பொருந்தி, இவ்வைவரும் என் உடலிலும் உயிரிலும் தொழில் புரிகின்றார்கள். வான் மண் போன்ற உலகங்களைத் தோன்றுமாறு செய்பவர்களும் இந்த ஐவரே!

#401. ஐந்தொழில்கள்

அளியார் முக்கோணம் வயிந்தவம் தன்னில்
அளியார் திரிபுரையாம் அவள் தானே
அளியார் சதாசிவம் ஆகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்தும் செய்வாளே.

தேவியின் முக்கோணப் பீடம் அருளால் நிறைந்தது. அதில் உள்ள விந்துவின் மையத்தில் விளங்குவாள் அருள் மிகுந்தவளும், மண்டலங்களின் தலைவியும் ஆகிய சக்தி தேவி. அருள் மிகுந்த சதாசிவ மூர்த்தியிடம் பொருந்தி இருப்பவளும் அவளே. ஐந்தொழில்களைச் செய்பவளும் அவளே.

402. எல்லாமாக இருப்பவள்

வாரணி கொங்கை மனோமனை மங்கலி
காரணி, காரியம் ஆகக் கலந்தவள்;
வாரணி ஆரணிவானவர் மோகினி
பூரணி போதாதி போதமும் ஆமே.

கச்சை அணிந்த (சூரியன், சந்திரன் என்னும் இரண்டு) ஸ்தனங்களை உடைய மனோன்மணி ஆவாள் சதாசிவனின் நாயகி; அவளே மங்கலப் பொருள்; அவளே எல்லாவற்றுக்கும் காரணம், அவளே காரியமாகிய ஐந்தொழில்களில் கலந்தவள்; அவளே ஓங்காரத்தின் வடிவம்; அவளே வேதப் பொருள்; அவளே தேவர்களையும்

மயக்கும் திரோதான சக்தி; அவளே அறிவாகவும் (ஞானமாகவும்) பேரறிவாகவும் (அனுபவ ஞானமாகவும்) விளங்குபவள்.

#403. சதாசிவனே அனைத்து மூர்த்திகள்

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங்கு இயங்கும் அரன் திருமாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேல் அயன்
என்ற இவராக இசைந்திருந்தானே.

மகேசுரன் சதாசிவத்துடன் கலந்து இருப்பான். அவனே கீழே சென்று தத்தம் தொழில்களைப் புரியும் உருத்திரனாகவும், திருமாலாகவும் ஆண் பெண்களின் சேர்க்கையைச் சுவாதிஷ்டானச் சக்கரத்தில் இருந்து கொண்டு செய்யும் நான்முகனாகவும் பொருந்தி இருக்கின்றான்.

#404. எல்லாமாக இருப்பவன் சிவனே!

ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளித்தான்
ஒருவனுமே உலகு ஏழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர் தானே.

சிவன் என்னும் ஒருவ தேவனே சதாசிவன் என்னும் தலைவன் ஆகின்றான். அவனே பிரமனுடன் பொருந்தி ஏழு உலகங்களைப் படைக்கின்றான்; அவனே திருமாலுடன் பொருந்தி ஏழு உலகங்களைக் காக்கின்றான்; அவனே ஏழு உலகங்களை உருத்திரனுடன் பொருந்தி அழிக்கின்றான். அவனே உலகமாகவும் அதில் உள்ள உயிர்களாகவும் இருக்கின்றான்.

#405. உலக உற்பத்தி

செந்தாமரை வண்ணன் தீவண்ணன் எம்மிறை
மஞ்சுஆர் முகில் வண்ணன் மாயம் செய்பாசத்தும்
கொந்துஆர் குழலியர் கூடிய கூட்டதும்
மைந்தார் பிறவி அமைத்து நின்றானே.

செந்தாமரை போன்று தீயின் செந்நிறம் உடையவன் உருத்திரன். மேகம் போன்ற கரிய நிறம் கொண்டவன் திருமால். அவனே உலகை மயக்கி, பந்தத்தை ஏற்படுத்தி, பூங் கொத்துக்களை அணிந்த மங்கையர் கூட்டத்தில் பொருந்தி, உலக உற்பத்தியை நிகழ்த்துகின்றான்.

#406. ஊடலும், நாடலும், கூடலும்

தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடும் பிறவிக் குணம் செய்த மாநந்தி
ஓடும் அவர் தமது உள்ளத்துளே நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே.

எண் திசைகளிலும் தேடித் திரிபவன் சீவன். அவனை உடலுடன் உயிர் கூடிப் பிறக்கும்படிச் செய்பவன் சிவன். அவனே ஊடுகின்ற மங்கையர், ஆடவர் உள்ளத்தில் இருந்து கொண்டு, அவர்களின் இன்பத்தை நாடலையும் பின் அவர்களின் கூடலையும் ஏற்படுத்துகின்றான்.

#407. சிவ சக்தியர் செயல்கள்

ஓர் ஆயமே உலகு எழும் படைப்பதும்
ஓர் ஆயமே உலகு எழும் அளிப்பதும்
ஓர் ஆயமே உலகு எழும் துடைப்பதும்
ஓர் ஆயமே உலகோடு உயிர்தானே.

சிவசக்தியரே ஏழு உலகங்களையும் படைக்கின்றனர். சிவ சக்தியரே ஏழு உலகங்களையும் காக்கின்றனர். சிவசக்தியரே ஏழு உலகங்களையும் அழிக்கின்றனர். சிவ சக்தியரே உலகோடு உயிரை இணைத்து வைக்கின்றனர்.

#408. ஆணையிடுபவன் சிவனே!

நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குலதொடும் கூட்டிக் குழைத்தனர்
ஏதுபணி என்று இசையும் இருவருக்கு
ஆதி இவனே அருளுகின்றானே.

தலைவன் ஆவான் சிவபெருமான். சதாசிவன், மகேசுரன் சீவன்களுக்கு நன்மை செய்யும் இருவர்.இவர்கள் சுத்த மாயை அசுத்த மாயை என்ற இரண்டையும் கூட்டிக் குழைத்து காரண நிலையை அமைப்பர். “காரியம் யாது செய்ய வேண்டும்?” என்று வினவும் திருமால் நான்முகன் இருவருக்கும் சிவனே ஆணை இடுகின்றான். அதைச் செய்யும் ஆற்றலையும் அவர்களுக்கு அளிக்கின்றான்.

#409. படைப்பு என்பது பொய்யா?

அப்பரிசு எண்பத்து நான்கு நூறாயிரம்
மெய்ப்பரிசு எய்தி விரிந்து உயிராய் நிற்கும்
பொய்ப்பரிசு எய்திப் புகலும் மனிதர்கட்கு
இப்பரிசே இருள் மூடி நின்றானே.

சிவபெருமானின் ஆணைப்படி பிரமன் நான்கு வகைத் தோற்றத்தில் ஏழு வகைப் பிறப்பில் எண்பத்து நான்கு லக்ஷம் வேறுபாடுகளுடன் உடல்களைப் படைக்கின்றான். இதைப் பொய் என்று
கூறுபர்களை அவனே ஆணவ இருளில் ஆழ்த்துகின்றான்.

#410. மாயையின் விரிவு

ஆதித்தன், சந்திரன், அங்கி, எண்பாலர்கள்
போதித்த வான், ஒலி, பொங்கிய நீர் புவி
வாதித்த சத்து ஆதி, வாக்கு மன ஆதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.

சூரியன்; சந்திரன்; எட்டுத் திக்குப் பாலகர்கள்; போதனை செய்யும் நாதம் நிரம்பியுள்ள வானம்; வாதனை தரும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம் கந்தம் என்னும் ஐந்து தன் மாத்திரைகள்; புத்தி, மனம், சித்தம், அஹங்காரம் என்னும் அந்தக் கரணங்கள்; அனைத்துமே மகேசுவரரின் விந்து மண்டலத்தில் நுட்பமாக அமைந்துள்ளன.

இரண்டாம் தந்திரம் - 10. திதி

உலகைக் காக்கும் இயல்பு

#411. அறிவுக்கு அறிவானவன் சிவன்

புகுந்து நின்றான் வெளியாய், இருள் ஆகிப்
புகுந்து நின்றான் புகழ் வாய், இகழ்வு ஆகிப்
பகுந்து நின்றான் உடலாய், உயிர் ஆகிப்
புகுந்து நின்றான் புந்தி மன்னி நின்றானே.

வெளியாகவும், இருளாகவும் எல்லாவற்றிலும் கலந்து நிற்பவன் சதாசிவன்.ஞானியர்க்குப் புகழத் தக்க பொருளும் அவனே. அஞ்ஞானியருக்கு இகழத்தக்க பொருளும் அவனே. உடலும் அவனே. உயிரும் அவனே. அவ்வுயிர்களின் அறிவும் அவனே. அறிவுக்கு அறிவாகி அதனை விளகுபவனும் அவனே.

#412.சதாசிவன் இயல்பு.

தானே திசையோடு தேவருமாய் நிற்கும்
தானே உடல், உயிர், தத்துவமாய் நிற்கும்
தானே கடல், மலை ஆதியுமாய் நிற்கும்
தானே உலகின் தலைவனும் ஆமே.

சதாசிவமே எல்லா திக்குகளிலும் பரவித் தேவர்களாக இருப்பான். அவனே உடலாகவும், உயிராகவும், எல்லாத் தத்துவங்களாகவும் இருப்பான். அவனே கடலாகவும், மலையாகவும், அசைவில்லாத பிற அனைத்துமாகவும் இருப்பான். அவனே உலகின் தலைவனாகவும் இருப்பான்.

413. எங்கும் நிறைந்து இருப்பவன்

உடலாய் உயிராய் உலகம்அது ஆகி
கடலாய்க் கார்முகில் நீர் பொழிவான் ஆய்
இடையாய் , உலப்புஇலி, எங்கும் தான் ஆகி
அடையார் பெருவழி அண்ணல் நின்றானே.

தலையின் உச்சியில் இருக்கும் ஒளிமயமாகிய வானத்தில் (பிரமரந்திரத்தில்) இருப்பவன் சதாசிவன். உடலாக, உயிராக, உலகமாக, கடலாக, கார் மேகமாக, மழை பொழிபவனாக, இவற்றின் நடுவில் இருப்பவனாக, என்றும் அழியதவனாக, எங்கும் நிறைந்திருப்பவன்.

#414. ஊடல், தேடல், கூடல்

தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடும் மரபிற் குணம் செய்த மாநந்தி
ஊடும் அவர் தம் உள்ளத்துளே நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே.

#406 ஆம் பாடல் இதுவே.

எண் திசைகளிலும் தேடித் திரிபவன் சீவன். அவனை உடலுடன் உயிர் கூடிப் பிறக்கும்படிச் செய்பவன் சிவன். அவனே ஊடுகின்ற மங்கையர், ஆடவர் உள்ளத்தில் இருந்து கொண்டு, அவர்களின் இன்பத்தை நாடலையும் பின் அவர்களின் கூடலையும் ஏற்படுத்துகின்றான்.

#415. முத்தொழில் வல்லுனன்

தான் ஒரு காலம் தனிச் சுடராய் நிற்கும்
தான் ஒருகால் சண்ட மாருதமாய் நிற்கும்
தான் ஒரு காலம் தண்மழையாய் நிற்கும்
தான் ஒருகாலம் தண் மாயனும் ஆமே.

உலகை அழிக்க வேண்டிய சமயத்தில் சதாசிவன் ஒப்பற்ற ஒரு சூரியன் ஆவான். மழையே இல்லாமல் செய்து பெரும் அழிவை ஏற்படுத்துவான். அப்பிரானே ஒரு சமயம் புயல் காற்றாக மாறி அழிவை ஏற்படுத்துவான். அப் பெருமானே ஒரு சமயம் பெரு மழையாகப் பெய்து பெரும் வெள்ளத்தைத் தோற்றுவிப்பான். அவனே ஒரு சமயம் திருமாலாகி உலகத்தைக் காப்பான்.

#416. சதாசிவத்தின் பெருமை

அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்
முன்பு உறு காலமும் ஊழியுமாய் நிற்கும்
அன்பு உற ஐந்தில் அமர்ந்து நின்றானே.

உயிர் ஆற்றலில் விளங்கும் அன்பு, அறிவு, அடக்கம் ஆகிய நற் பண்புகள் சிவபெருமான் ஆவான். இன்பத்துக்கும் இன்பக் கூட்டுறவுக்கும் காரணம் அந்தப் பெருமானே ஆவான். காலத்தின் எல்லையை வகுத்தவன் அவனே. அதை முடிப்பவனும் அவனே. அவன் நன்மைகள் செய்வதற்காக சுத்த மாயா தத்துவங்கள் ஆகிய நாதம், விந்து, சாதாக்கியம், மகேசுரம், சுத்த வித்தை என்ற ஐந்தினில் பொருந்தி ஐந்து செயல்களைச் செய்வான்

#417. சிவன் உலகை வனைவான்

உற்று வனைவன் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமும் சிறுதூதை
மற்றும் அவனே வனைய வல்லானே.

சதாசிவனே மாயைலிருந்து உலகங்களைப் படைக்கின்றான். அந்தப் பெருமானே ஜீவர்களுக்குப் பிறவியை அளிகின்றான். பெரிய குடம் பேரண்டம் என்றால் சிறிய குடம் ஜீவனின் உடல்.ஆகும். குயவன் மண்ணிலிருந்து வேறு வேறு குடங்களை வனைவது போல இறைவன் மாயையிலிருந்து உலகங்களைப் படைக்கின்றான்.

#418. படைத்தும் காத்தும் அருள்வான்!

உல் உயிர்ப்பு ஆய், உடலாகி நின்றான் நந்தி
வெள்ளுயிர் ஆகும் வெளியான் இலங்கு ஒளி
உள் உயிர்க்கும் உணர்வே உடலுள் பரம்
தள் உயிரா வண்ணம் தாங்கி நின்றானே.

உடலின் மூச்சுக் காற்றாக இருப்பவன் நந்திப் பிரான். உடலில் உணர்வாகப் பரவி உயிர்களை வெளியேற விடாமல் காப்பவன் அவனே. தத்துவங்களுடன் கூடாததனால் பிறவிக்காக் காத்திருக்கும் உயிர்கள். அவற்றையும் காப்பவன் சிவனே. உடலைப் படைப்பதற்கு முன்பும் பின்பும் அவனே காலஎல்லை வரையில் காத்து அருள்வான்.

419. எப்போதும் காப்பவன் சிவன்

தாங்க அருந்தன்மையும் தான் அவை பல்உயிர்
வாங்கிய காலத்தும் மற்றோர் பிறிது இல்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்தம் அவ்வழி
தாங்கி நின்றால்னும் அத்தரணி தானே.

உயிர் உடலை விட்டு நீங்காத வண்ணம் தாங்குபவன் சிவன். கால எல்லையில் உடம்பிலிருந்து உயிர் பிரிந்த நிலையிலும் அதைக் காப்பவன் அவனே. ஏழு பிறவிகளிலும், அவற்றின் இடைப்பட்ட துரியாதீத நிலையிலும் உயிர்களைக் காத்து அருள்பவன் அவனே.

#420. ஞானமும் உடலும் தருவான்

அணுகினும் சேயவன் அங்கியின் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயிர் ஆகித்
தணிகினும் மண் உடல் அண்ணல் செய்வானே.

சிவன் உயிர்களுடன் கலந்து கூடி இருக்கும் போது அவனை வெளியில் தேடினால் அவன் மிகத் தொலைவாகவே இருப்பான். மூலதாரத்தில் உள்ள அக்கினியை ஏழுப்பி பிரமரந்திரத்தை அடைந்தால் அருள் புரிவான். பல உடல்களை எடுத்துப் பாரில் அவனைப் பணிந்தால் அவன் நமக்கு மேன்மையான உடல்களைத் தந்தருள்வான்.

இரண்டாம் தந்திரம் - 11. சங்காரம்

சங்காரம் = அழித்தல்.
இதுவும் இறைவனின் அருட் செயல்களில் ஒன்று.
சிவனே உருத்திரனாகச் சங்காரம் செய்கின்றான்.

#421. அழிக்கும் அருட்செயல்

அங்கி செய்து ஈசன் அகல் இடம் சுட்டது
அங்கி செய்து ஈசன் அலைகடல் சுட்டது
அங்கி செய்து ஈசன் அசுரரைச் சுட்டது
அங்கி அவ்ஈசற்குக் கை அம்பு தானே.

இறைவன் தீயினால் பரந்த உலகத்தை அழித்தான். இறைவன் தீயினால் கடலை வற்றும்படிச் செய்தான் இறைவன் தீயினால் அசுரர்களை அழித்தான். அந்தத் தீயே இறைவன் கையில் இருக்கும் அம்பு ஆகும்.

#422. மூன்று சங்காரம்

இலயங்கள் மூன்றிலும் ஒன்று கற்பாந்தம்;
நிலை அன்று இழிந்தமை நின்று உணர்ந்தேனால்
உலை தந்தமெல்அரி போலும் உலகம்
மலை தந்த மானிலம் தான் வெந்ததுவே.

மூன்று வகைப் பிரளயங்கள் உள்ளன. தினப்பிரளயம் தினந்தோறும் நாம் உறங்கும்போது நிகழ்வது. நடுப்பிரளயம் உயிர் உடம்பிலிருந்து நீங்கும் பொழுது நிகழ்வது. மகாபிரளயம் கற்பத்தின் முடிவில் நிகழ்வது. இந்த உலகங்கள் அழிவதை அன்று நான் ஞானக் கண்ணால் கண்டேன். கற்பத்தின் முடியில் நிகழும் பிரளயத்தின் போது இந்த உலகம் உலையில் இட்ட அரிசியைப் போலச் சுற்றிச் சுழலும். குறிஞ்சி போன்ற பிரதேசங்களும் எரிந்து அழிந்து விடும்.

#423. கற்ப முடிவு

பதம் செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதம் செய்யும் ஏழ் கடல் ஓதம் முதலாம்
குதம் செய்யும் அங்கி கொழுவி ஆகாசம்
விதம் செய்யும்; நெஞ்சில் வியப்பு இல்லை தானே.

ஜீவர்களுக்குப் பக்குவம் தரும் பூமி, பனி மூடிய மலைகள், மகிழ்ச்சியைத் தரும் ஏழு கடல்கள் இவற்றைக் கொதிக்கச் செய்யும் தீயை மூட்டி, அதை வெட்ட வெளியில் கொண்டு சேர்ப்பவர்களுக்குக் கற்ப முடிவில் வியப்பதற்கு ஏதும் இராது.

மூலாதாரத்தில் உள்ள அக்கினியை ஏற்றிச் சிரசில் நிலை பெறச் செய்ய வேண்டும் என்பது பொருள்.

#424. மீண்டும் ஒடுக்குதல்

கொண்டல் வரை நின்று இழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி இருந்து எண் திசை ஆதி
ஒன்றிண் பதம் செய்த ஓம் என்ற அப்புறக்
குண்டத்தின் மேல் அங்கி கோலிக் கொண்டானே.

தலையின் மேல் இருக்கும் ஒளி மண்டலத்தில் இருந்து கீழே இறங்குவாள் ஆதி சக்தி. அவள் உடலைச் சுற்றியுள்ள ஒளி மாயமான அண்டகோசத்தில் சிவன் பொருந்துவான். திரோதன சக்தியுடன் கூடி ஜீவர்களுக்கு பக்குவம் தருவான். அதன் பின்னர் மூலாதாரத்தில் உள்ள தீயைத் தன்னுள் மீண்டும் ஓடுக்கிக் கொண்டு விளங்குவான்.

#425. மூன்று சங்காரங்கள்

நித்த சங்காரம் உறக்கத்து நீள் மூடம்
வைத்த சங்காரமும் சாக்கிரதாதீதம் ஆம்
சுத்த சங்காரம் தொழில் அற்ற கேவலம்;
உய்த்த சங்காரம் பரன்அருள் உண்மையே.

உறக்கத்தின் போது எதையுமே அறிந்து கொள்ளாமல் இருப்பது நித்த சங்காரம் என்னும் தினப் பிரளயம். வைத்த சங்காரம் என்பது (சாக்கிரத்தை, சொப்பனம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என்ற) ஜீவனின் ஐந்து அவஸ்தைகளுடன் தொடர்பு இன்றி இருக்கும் நிலை. சுத்த சங்காரம் என்பது சகஜ நிலையிலேயே செயல் ஒன்றும் இல்லாமல் இருக்கும் யோகநிலை. சிவன் அருளுடன் பொருத்துவதே உய்த்த சங்காரம் ஆகும்.

#426. மெய்யான சங்காரம்

நித்த சங்காரம் இரண்டு உடல் நீவுதல்
வைத்த சங்காரமும் மாயாள் சங்காரமாம்
சுத்த சங்காரம் மனாதீதம் தோய்வித்தல்;
உய்த்த சங்காரம் சிவன் அருள் உண்மையே.

நாள் ஒடுக்கம் என்ற நித்த சங்காரத்தில் ஜீவன் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும். இது மாயையுடன் பொருந்திய சங்காரம். (கனவு நிலயில் ஜீவன் ஸ்தூல உடலை விட்டு விலகி சூக்ஷ்ம உடலுடன் தொடர்பு கொள்ளும்). மனம் அதீதத்தில் நிலைத்து செயல் ஒன்றும் இல்லாது இருப்பது சுத்த

சங்காரம். அப்போது ஜீவன் சிவன் அருளில் தோய்வதே உண்மையான சங்காரம் ஆகும்.

#427. சிவமாகும் தன்மை

நித்த சங்காரங் கருவிடர் நீக்கினால்
ஒத்த சங்காரமுடலுயிர் நீவுதல்
வைத்த சங்காரம் கேவலமான்மவுக்
குய்த்த சங்காரஞ் சிவமாகு முண்மையே.

நாள் ஒடுக்கம் என்பது பிறவித் துயரை நீக்கும். மனம் கருவிகள் இவ்விரண்டின் ஒத்த ஒடுக்கத்தில் உயிரும் உடலும் பிரிந்திருக்கும் நிலை உண்டாகும். இந்தகைய ஒடுக்கம் ஆன்மாவின் தூய நிலை (சுத்த கேவல நிலை) எனப்படும். சிவத் தன்மையை அளிக்கும் ஒடுக்கமே உண்மையான ஒடுக்கம்.

#428. நான்கு வகை ஒடுக்கங்கள்

நித்த சங்காரமும் நீடு இளைப்பு ஆற்றுதல்
வைத்த சங்காரமும் மன்னும் அனாதியில்
சுத்த சங்காரமும் தோயாப் பரன் அருள்
வைத்த சங்காரமும் நாலாம் மதிக்கிலே.

நாள் ஒடுக்கம் என்னும் நித்த சங்காரம் ஜீவன் நீண்ட உறக்கத்தில் இருப்பது ஆகும். அமைத்து வைத்த சங்காரம் என்பது மனம் முதலிய கரணங்களை அடக்கி ஒடுக்குவது ஆகும். சுத்த ஒடுக்கம் கருவிகளின்றும் நீங்கி இருந்த போதிலும் பரன் அருளில் தோயாமல் இருக்கக் கூடும். கரணம் கருவிகளில் இருந்து நீங்கிப் பரமன் அருளில் தோய்ந்து நிற்பதே நான்காவது வகையான சங்காரம்.

#429. சுத்த சங்காரம்

பாழே முதலா எழும் பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப் பாழாகா
வாழாச் சங்காரத்தின் மால் அயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும் அப்பாழிலே.

குணம், குறி இரண்டும் இல்லாதது சிவம். அந்தச் சிவத்தை முதலாகக் கொண்டு தோன்றும் ஆன்மா என்னும் பயிர். உடல், கரணம் இவற்றுடன் கூடிய பின்னர் அவற்றை விடுத்தாலும் ஆன்மா தன் முந்தைய நிலையை அடையாது. எனவே இந்த சங்காரம் முடிவைத் தராத ஒடுக்கம் ஆகும். இத்தகைய ஆன்மாக்கள் நான்முகன் திருமால் செயல்களுக்கு உட்படுவர். மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பார். பிறப்பு, இறப்பு என்று உழல்வர். ஆனால் ஆணவ மலம், வறுக்கப்பட்ட விதையின்

முளைக்கும் திறனைப் போல அழிந்த பின்னர் அந்த ஆன்மப் பயிர் சிவத்தில் அடங்கி விடும்.

#430. ஒளி மண்டலம்

தீய வைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத்தான் வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம் வைத்தான் கலந்து எங்கும் நினைப்பது ஓர்
ஆயம் வைத்தான் உணர்வு ஆர வைத்தானே.

உம்மிடம் சேருகின்ற வினைகளைச் சுட்டெரிக்கச் சிவனிடம் ஆர்வத்தைப் பெருக்குங்கள் உலகீரே! வினைகளை அழிக்கும் சிவன் வாழும் இடம் என்று ஒன்று உண்டு. அதுவே சஹஸ்ரதளம் ஆகும். சஹஸ்ர தளத்தை உடலில் வைத்தான் சிவன் . அத்துடன் கலந்து சிந்திக்க ஒளிக் கற்றைகளையும் அமைத்துள்ள சிவனின் கருணை தான் என்னே!

இரண்டாம் தந்திரம் - 12. திரோபவம்

திரோபவம் என்பது மறைப்பது. ஜீவர்கள் தங்கள் வினைப் பயன்களை நுகரும்படிச் செய்வதற்காக அவர்கள் அறிவை மறைப்பது. வினைகளை அழிக்கும் இதுவும் ஓர் அருட் செயலே ஆகும்.

#431. மன மல மறைப்பு

உள்ளத்து ஒருவனை உள்உறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

உயிருக்கு உயிராக இருப்பவன் சிவன். மனத்தில் பேரொளியாக விளங்குபவன். மனத்தை விட்டுச் சிறிதும் அகலாதவன். மனத்துடனேயே அவன் ஒன்றி இருந்த போதிலும் ஆன்மா அவனை மனமலம் என்னும் திரையினால் அறிய முடியாமல் போகின்றது.

#432. முக்தியை அளித்தான்

இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பஞ் செய் பாசத்துயருள் அடைத்தனன்
என்பில் கொளுவி இசைந்து உறு தோல் தசை
முன்பின் கொளுவி முடிகுவது ஆக்குமே.

இன்பம் பெறுவதற்காகப் பிறவியைத் தந்தான் ஈசன். துன்பம் தரும் பாசங்களையும் அவற்றுடனேயே அமைத்தான். அவன் எலும்பு, தசை, தோல் என்று வலிமை வாய்ந்த உடலைத் தந்தது சீவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களுக்கு முக்தி அருள்வதற்காகவே.

#433. யார் அறிவார்?

இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வாய்த்த பரிசு அறியாரே.

உருத்திரன், திருமால் , இனத்தைத் தரும் நான்முகன் என்னும் மூவரும் ஒன்றாக வந்து ஈசன் அளித்த உடலில் மறைவாக இருப்பார்கள். இருந்த போதிலும் அவர்களும் அவன் அருட்செயல்களை அறிய மாட்டார்கள்.

#434. வான் மண்டலம்

காண்கின்ற கண்ஒளி காதல் செய் ஈசனை
ஆண் பெண் அலி உருவாய் நின்ற ஆதியை
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயல் அணையரே.

கண்களின் ஒளியாக இருப்பவன் ஈசன். ஆணாகப் பெண்ணாக அலியாக விளங்குபவன். ஆதியாகிய சிவன் அவனை அறிய வழி ஒன்று உண்டு. உணவு உண்ணப் பயன் படும் நாவின் வழியே மனத்தைச் செலுத்த வேண்டும். தலை உச்சியில் உள்ள வான் மண்டலத்தில் உள்ள தடாகத்தில் அதைக் கொண்டு சென்று பொருத்த வேண்டும்.

#435. அண்டகோசம்

தெருளும் உலகிற்கும் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகை செய்யும் ஆதிப் பிரானும்
சுருளும் சுடர் உறு தூவெண் சுடரும்
இருளும் அற நின்று இருட்டறையாமே.

தெளிவு பொருந்திய உயிர்களுக்கும் தேவர்களுக்கும் இன்பம் தருபவன் சதாசிவன். அவனே ஜீவர்களின் அண்ட கோசத்தில் இருந்து கொண்டு வல்லிருளாக உண்மையை மறைக்கவும் செய்வான்.

#436. மறைக்கும் சக்தி

அரைக்கின்ற அருள் தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றோடு ஒன்று ஒவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின்றவை செய்த காண் தகையானே.

உலகில் பல தத்துவங்கள், தன்மாத்திரைகள், வேறுபட்ட ஆசைகள், மாறுபட்டு விளங்கும் பல வடிவங்கள் என்று நிறைந்துள்ளன. உலகம் முழுவதையும் தானாக மறைக்கின்ற ஈசனே மறைக்கின்ற சக்தியை அருள்பவன் ஆவான்.

#437. அக வழிபாடு

ஒளித்துவைத் தேன்உள் ஊற உணர்ந்து ஈசனை
வெளிப்பட்டு நின்று அருள் செய்திடும் ஈண்டே;
களிப்பொடும் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட்டு இரைஞ்சினும் வேட்சியும் ஆமே.

உள்ளத்தில் உணர்ந்து நாம் சிவனை வழிபட்டாலும், அவன் காட்சியில் வெளிப்படுவான். தன் அருளைப் பொழிவான். உள்ளத்து அன்பு என்பது வெளிப்படும் வண்ணம் நாம் வெளிப்படையாக அவனை வழிபட்டால் அதுவும் அவனுக்கு உவப்பையே அளிக்கும்.

#438. மகேசுவரன் மறைப்பான்

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங்கு இயங்கி அரன் திருமாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை அயன்
என்றிவராகி இசைந்திருந்தானே.

அனைத்தையும் மறைத்து நிற்கின்றவன் மகேசுவரன். அவன் கீழ் முகமாகச் செயல் புரிவான். அவன் உருத்திரன், திருமால், கமல மலரில் அமர்ந்து நன்மைகள் செய்யும் பிரமன் என்னும் மூவர்களுடனும் கலந்து விளங்குகின்றான்.

#439. மனமாசு நீங்க வேண்டும்

ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தின்
இருங்கரை மேல் இருந்து இன்புறநாடி
வரும் கரை ஓரா வகையினில் கங்கை
அருங்கரை பேணில் அழுக்கு அறலாமே.

மன மாசு நீங்குவதற்கு என்ன செய்ய வேண்டும்? பாசத்தை ஒடுக்க வேண்டும்; சிவன் என்னும் பெருங்கரையின் மீது அமர வேண்டும்; ஆன்ம அனுபவத்தை நாட வேண்டும்; பிறவியை நாடாமல் இருக்க வேண்டும்; தூய வான் கங்கையுடன் பொருந்த வேண்டும்.

#440. உயிர்கள் அறிய இயலாது

மண் ஒன்று தான் பல நற்கலம் ஆயிடும்
உள் நின்ற யோனிகட்கு எல்லாம் ஒருவனே;
கண் ஒண்டு தான் பல காணும் , தனைக் காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகி நின்றானே.

ஒரே மண் பலவிதக் கலங்களாக மாறிவிடும். உடல்களில் காணப் படும் பேதங்களுக்கும் காரணம் ஆனவன் ஈசன் ஒருவனே. கண்களால் வெளியே உள்ள எல்லாவற்றையும் காண இயலும் ஆயினும் தன்னைத் தானே காண இயலாது. அது போன்றே உயிர்களின் வேறுபாடுகளுக்குக் காரணமான அந்த ஒருவனை உயிர்களால் காண முடியாது.

இரண்டாம் தந்திரம் - 13. அனுக்கிரகம்

உயிர்களைப் பிறக்கச் செய்து அவை மல நீக்கம் பெறுவதற்கு சதாசிவன் அருள்வது அனுக்கிரகம்.

#441. உடலும், உயிரும்

எட்டுத் திசையும் எறிகின்ற காற்றோடு
வட்டத் திரை அனல், மாநிலம், ஆகாயம்,
ஒட்டி உயிர்நிலை என்னும் இக்காயப்பை
கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே.

எட்டுத் திசைகளிலும் வீசும் காற்று. வட்டமாக உலகைச் சூழ்ந்துள்ளது கடல். இவேற்றோடு தீ, பூமி, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களைக் கலப்பது சதாசிவன். உடலுடன் உயிரைச் சேர்ப்பதும் பின்னர் உடலிலிருந்து உயிரைப் பிரிப்பதும் அவனே ஆவான்.

#442. உயிர்களை உய்விப்பான்

உச்சியில் ஓங்கி ஒளி திகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள்வார்க்கு நமன் இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்க வல்லானே.

தலை உச்சியில் பிரமரந்திரத்தில் விளங்கும் நாதத்தை விரும்புபவர்கள் உயர்ந்த இன்பத்தை அனுபவிப்பார்கள். அவர்களுக்கு இறப்பு என்பதே இல்லை. சூரியன், சந்திரன் அக்கினி என்று விரியும் மூன்று சுடர்களையும் ஒரே சுடர் ஆக்குபவன் சதாசிவன். உயிர்களை உய்விப்பவனும் அவனே.

#443. அசையாதன அசையும்!

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்து உற்றது எல்லாம் வனைவன்
குசவனைப் போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இது ஆமே.

சக்கரத்தில் வைத்த மண்ணைக் குயவன் தன் விருப்பம் போல வடிப்பான். சதாசிவனும் அது போன்றே. அவன் விரும்பினால் அசையாத பொருளும் அசையும் பொருள் ஆகிய ஆத்மாவாக மாறிவிடும்.

#444. உள்ளக் கோவில்

விடையுடையான் விகிர்தன் மிகு பூதப்
படையுடையான் பரிசே உலகு ஆக்கும்
கொடையுடையான் குணம் எண் குணம் ஆகும்
சடையுடையான் சிந்தை சார்ந்து நின்றானே.

காளையை ஊர்தியாகக் கொண்டவன் சதாசிவன். அவன் பிறப்பற்றவன். பூதங்களின் படையை உடையவன். தன் விருப்பம் போல உலகினை உருவாக்குவான். தன்னைப் பணிவோர் வேண்டுகின்ற வற்றை அவர்கள் வேண்டியவாறே அளிக்கும் கொடை வள்ளல். எண் குணம் உடையவன் சதாசிவன். சிந்தையில் குடி கொண்ட அவன் ஒளி வீசுகின்ற சடையை உடையவன்.

#445. இறைவன் படைத்தவை

உகந்து நின்று படைத்தான் உலகு ஏழும்
உகந்து நின்றே படைத்தான் பல ஊழி
உகந்து நின்றே படைத்தான் ஐந்துபூதம்
உகந்து நின்றே உயிர் ஊன் படைத்தானே.

மனம் உவந்த சதாசிவன் உலகத்தோர் வாழ்வதற்கு இறைவன் ஏழு உலகங்களைப் படைத்தான். அது போன்றே பலவேறு கற்பங்களையும் படைத்தான். உகந்து பஞ்ச பூதங்களையும் படைத்தான். உடலையும் உயிரிலும் பொருந்தி ஜீவர்களுக்கு உதவி செய்தான்.

#446. தலைவன் அவனே!

படைத்தது உடையான் பண்டு உலகங்கள் ஏழும்
படைத்து உடையான் பல தேவரை முன்னே
படைத்தது உடையான் பல சீவரை முன்னே
படைத்தது உடையான் பரம் ஆகி நின்றானே.

சிவபெருமான் ஏழு உலகங்களையும் படைத்தான். அவற்றைத் தன் உடமை ஆக்கிக் கொண்டான். பல தேவர்களைப் படைத்தான். அவர்களையும் அவனே ஆண்டான். பல ஜீவர்களைப் படைத்து அவர்களோடு தொடர்பு கொண்டு ஆட்கொண்டான். இங்ஙனம் அனைத்தைம் படைத்தும் ஆண்டும் அவனே தலைவனாக விளங்குகின்றான்.

#447. ஆதாரம் ஆனவன் அவனே.

ஆதி படைத்தனன் ஐம் பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில் பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்இலி தேவரை
ஆதி படைத்தவை தங்கி நின்றானே.

ஆதி தேவனாகிய சிவன் ஐம் பெரும் பூதங்களைப் படைத்தான். குற்றமற்ற பல ஊழிகளைப் படைத்தான். எண்ணற்ற தேவர்களைப் படைத்தான். இவ்வாறு படைத்த அனைத்துக்கும் அவனே ஆதரமாக இருந்து அவற்றைத் தாங்குகின்றான்.

#448. உபதேசம்

அகன்றான் அகல் இடம் ஏழும் ஒன்றாகி
இவன் தான் எனநின்ற எளியனும் அல்ல
சிவன் தான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகு உறு நம்பனும் ஆமே.

அகன்ற உலகங்கள் ஏழிலும் சதாசிவன் ஒன்றாகப் பொருந்தி உள்ளான். அவனே அவ்வேழு உலகங்களைக் கடந்தும் உள்ளான். இதனால் நம்மோடு அவன் பொருந்தி இருந்த போதிலும் அவன் காட்சிக்கு எளியவன் அல்லன். சிவனே பல உயிர்களில் கலந்து இருப்பான். அவனை விரும்பி வருபவர்களுக்கு அவன் உபதேசம் செய்து அருள்வான்.

#449. பேரொளி

உண்ணின்ற ஜோதி உற நின்ற ஓர் உடல்,
விண் நின்ற அமரர் விரும்பும் விழுப் பொருள்
மண் நின்ற வானோர் புகழ் திருமேனியன்
கண் நின்ற மாமணி மாபோதமாமே.

உயிர் பொருந்தி நிற்கும் உடலாக ஆனது உள்நின்ற ஜோதி. விண்ணோர் விரும்பும் விழுப் பொருள் ஆனது உள்நின்ற ஜோதி. ஞானம் அடைந்தோர் புகழும் திருமேனி ஆனது அதே ஜோதி. கண்ணின் மணியாகவும், உயர்ந்த ஞானமாகவும் விளங்குகின்றது அந்த ஜோதி.

#450. உயிருடன் கலந்து இருப்பான்

ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பார் முதலாகப் பயிலும் கடத்திலே
நீரினில் பால் போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமல் காணும் சுகம் அறிந்தேனே.

யாரும் அறிய முடியாத அண்டத்தில், பால் நீரில் கலப்பது போல ஒன்றாகிக் கலந்துவிடும் சிவன் திருவடிகள். அந்தச் சீரிய தன்மையை நான் சோர்வடையாமல் காணும் இன்பத்தைப் பெற்றேன்.

இரண்டாம் தந்திரம் - 14. கர்ப்பக் கிரியை

கர்ப்பத்தில் உருவாகும் உயிர்களை இறைவன் காக்கும் முறை.

#451. 25 தத்துவங்கள்

ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு
ஆக்குகின்றான் அவன் ஆதி எம் ஆருயிர்
ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகையுள் இருந்து
ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே.

இறைவன் ஒரு ஜீவன் இறக்கும் போது பிரிந்து சென்றுவிட்ட இருபத்து ஐந்து தத்துவங்களையும் மீண்டும் தோற்றுவிக்கின்றான் . அவற்றை மீண்டும் உயிருடன் பொருத்துகின்றான் . கர்ப்பப்பையில் ஜீவன் வளர்வதற்குத் தேவையான எல்லா நன்மைகளையும் செய்கின்றான். அந்த உடல் நன்கு வளருவதற்கு வேண்டியவற்றை அருளுடன் செய்கின்றான்.

#452. கருவைக் காப்பான்

அறிகின்ற மூலத்தின் மேல் அங்கி, அப்புச்
செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறை நின்ற இன்னுயிர் போந்துற நாடிப்
பறிக்கின்ற பத்து எனும் பரம் செய்தானே.

மூலாதாரத்தை யோகிகள் உணர வல்லவர்கள். அதற்கு மேல் தீயும் அதற்கும் மேல் நீரும் உள்ள இடத்தில் உடலில் கரு உருவாகும். தன் திருவடிகளைச் செறிந்துள்ள ஞான பூமியில் பதித்து கருவில் உயிர் புகும்படிச் செய்வான் இறைவன். அது பிறவி எடுக்கும் காலக் கெடுவைப் பத்து மாதங்கள் என்று நிர்ணயித்தான் அந்த ஈசன்.

#453. காலத்தை நியமிக்கின்றான்

இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய
துன்புறு பாச துயர்மனை வான் உளன்
பண்பு உறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்பு உறு காலத்து அமைந்தொழிந்தானே.

தலைவன் தலைவி இன்பம் அடையும் காலத்திலேயே இறைவன் ஜீவன் விட்டுச் சென்ற வினைகளை துய்ப்பதற்குத் தேவையான உடல், அது பக்குவம் அடையும் காலம், அது உயிர் வாழ வேண்டிய காலம் அனைத்தையும் நியமிக்கின்றான்.

#454. கருவை நாடி ஓடும்

கருவை ஒழிந்தவர் கண்ட நால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்தும் மற்று ஓரார்;
திருவின் கருக்குழி தேடித் புகுந்த
உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே.

இருபத்து ஐந்து தத்துவங்களும் ஆண் உடலில் தங்கி உருவாகும். இந்த உண்மையை ஞானியர் மட்டுமே அறிவர். பிறர் அறிகிலர். அந்தக் கரு ஆண் உடலிலிருந்து பெண்ணின் கருவை நாடிப் பாயும்.

#455. கரு உருவாகும்

விழுந்தது லிங்கம்; விரிந்தது யோனி;
ஒழிந்த முதல் ஐந்தும் ஈரைந்தோடு ஏறிப்
பொழிந்த புனல் பூதம் போற்றும் கரணம்
ஒழிந்த நுதல் உச்சி உள்ளம் ஒளித்ததே.

ஆண் பெண் கூட்டுறவின் போது ஆண் குறியிலிருந்து சுக்கிலம் வெளிப்படும். விரிந்த பெண் குறியை அது சென்று சேரும். புருடன் என்ற தத்துவத்தில் ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் கூடும். தன்மாத்திரையிலிருந்து பஞ்ச பூதங்களும், நான்கு அந்தக் கரணங்கள் என்ற ஒன்பதும் தோன்றிப் புருவ மத்தியிலும் உச்சந்தலையிலும் பொருந்தும்.

#456. காற்று உதவிடும்

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மேல நீள் வாயுவும்
கூவி அவிழும் குறிக்கொண்ட போதே.

மலரின் மணத்தையும் மகரந்தத்தையும் சுமந்து செல்லும் வாயு, அதை உலகெங்கும் பரப்பும். அது போன்றே கருப்பையில் உள்ள தனஞ்சயன் என்ற வாயு ஆண் விந்துவுடன் எழுந்து அதைப் பெண் கருவில் கொண்டு சேர்க்கும்.

#457. கருவில் அமைபவை

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற்ப் பன்றியும் ஆமே.

உருவம் இல்லாத புரியட்டக உடலும், அதில் உள்ளே புகும் பத்து வாயுக்களும்; காமம் முதலிய எட்டு மன விகாரங்களும், இவற்றுடன் கூடிய புருடனும், ஒன்பது துவாரங்களும், குண்டலினி சக்தியும், பன்னிரண்டு விரற்கடை செல்லும் பிராணன் என்னும் குதிரையும்; இறைவன் என்னும் பாகன் வழி நடத்தாவிட்டால் அந்தப் பிறவி பன்றியைப் போன்று இழிந்ததாகி விடும்.
கருவில் அமைய வேண்டியவை இவை:

1. போகின்ற எட்டு: சுவை, நாற்றம், ஒளி, ஓசை, ஊறு, மனம், புத்தி, அகங்காரம்
2. புகுகின்ற பத்தெட்டு: பத்து வாயுக்கள் + எட்டு விகாரங்கள்
3. புகுகின்ற பத்து வாயுக்கள்: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன்,

நாகன், கூர்மன், கிருகரன்,தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்து வாயுக்கள்
4. புகுகின்ற எட்டு மலங்கள்: காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம், மாச்சரியம், துக்கம் அஹங்காரம்
5. மூழ்கின்ற முத்தன்: இவற்றுடன் கூடிய புருடன்
6. ஒன்பது துளைகள்: கண்கள், நாசித் துவாரங்கள், செவிகள், வாய், கருவாய், எருவாய்.
7. நாகம் = மண்டலமிட்ட குண்டலினி சக்தி
8. எட்டுடன் நாலு = பன்னிரண்டு விரற்கடை செல்லும் பிராணன்.

#458. குழந்தையின் குணநலன்கள்

ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்
நேர் ஒக்க வக்கின் நிகர் போதத்தான் ஆகும்
பேர் ஒத்த மைந்தனும் பேரரசு ஆளுமே.

ஆணும் பெண்ணும் கூடும்போது சுக்கில சுரோணிதக் கலப்பு ஏற்படும். ஆணின் சுக்கிலம் எதிர்த்துச் சென்றால் ருத்திரனைப் போன்ற குழந்தை பிறக்கும். பெண்ணின் சுரோணிதம் எதிர்த்துச் சென்றால் திருமாலைப் போன்ற குழந்தை பிறக்கும். சுக்கிலம், சுரோணிதம் இரண்டும் சமமாகப் பொருந்தினால் நான்முகனைப் போன்ற குழந்தை பிறக்கும். மூவர்களின் தன்மையையும் கொண்டவன் புவி ஆள்வான்.

459. பெற்றோர் போலக் குழந்தை

ஏயங்கலந்த இருவர் தம் சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப்பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே.

பல பிறவிகளில் பல உலகங்களில் பொருந்தி வருந்தும் சீவன். கூடும் ஆண் பெண் இருவரைப் போலவே அவர்களின் குழந்தை உருவாகும். பல பிறவிகளில் பல உடலில் பொருந்தி இருந்த அந்த சீவன், கருவில் பொருந்திய பின்னர் மயக்கம் அடைந்த இருவர் மனமும் ஒரே தன்மையை அடையும்.

#460. நினைவு, வாக்கு, குணம்.

கர்ப்பத்துக் கேவலம் மாயாள் கிளை கூட்ட
நிற்கும் துரியமும் பேதித்து நினைவு எழ
வற்புறு காமியம் எட்டு ஆதல் மாயேயம்
சொற்புஉறு தூய்மறை வாக்கின் ஆம் சொல்லே.

ஒன்றும் அறியாத நிலையில் கரு கர்ப்பத்தில் இருக்கும். மாயை அதனுடன் தத்துவங்களைச் சேர்ப்பாள். அதனால் அக்கருவின் பேருறக்கம் நீங்கும்.நினைவு உண்டாகும். மாயையின் காரியமான எட்டு குணங்கள் தோன்றும். நான்கு வித வாக்கிலிருந்து சொற்கள் தோன்றும்.

எட்டுக் காம்யங்கள்: தர்மம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், அதர்மம், அஞ்ஞானம் அவைராக்கியம், அனைஸ்வர்யம்.

நான்கு வித வாக்குகள்: சூக்ஷ்மை, பச்யந்தி, மத்யமா வைகரி.

#461. உடல் அமைந்த விதம்

என்பால் மிடைந்து நரம்பு வரிகட்டிச்
செம்பால் இறைச்சி திருத்த மனை செய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறை ஓங்கும்
நண்பால் ஒருவனை நாடுகின்றேனே.

உடல் எலும்புகளால் பின்னப்பட்டு நரம்புகளால் கட்டப் பட்டுள்ளது. ரத்தம் இறைச்சி இவற்றால் திருத்தமாக அமைக்கப் பட்டுள்ளது. இன்பம் பெறுவதற்காக உயிர் உடலைத் தாங்குகின்றது. இவ்வாறு உடலை அமைத்த இறைவன் மீதுள்ள அன்பால் நான் அவனை வணங்குகின்றேன்.

#462. வேகத்தைத் தணித்தான்

பதம் செய்யும் பால் வண்ணன் மேனிப் பகலோன்
இதம் செய்யும் ஒத்து உடல் எங்கும் புகுந்து,
குதம் செய்யும் அங்கியின் கோபம் தணிப்பான்
விதம் செய்யுமாறே விதித்து ஒழிந்தானே.

பால் போன்ற நிறமும், கதிரவனின் ஒளியும் உடையவன் சதாசிவன். அவன் உயிர்களைப் பக்குவம் செய்கின்றான். உடல் எங்கும் பரவியும் விரவியும் நன்மைகள் புரிவான். மூலாதாரத்தில் இருந்து எழுகின்ற அ க்கினியின் வேகத்தைத் தணிப்பதற்காகவே அவன் உயிர்கள் இன்பம் பெறும் முறையினை அமைத்தான்.

#463. சிசுவைக் காத்தல்

ஒழிபல செய்யும் வினை உற்ற நாளே
வழி பல நீராட்டி வைத்து எழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல் வைத்தானே.

வினை பொருந்தி வரும் காலத்தில் வினைகளை ஒழிப்பான் இறைவன். பல வழிகளிலும் சிசுவைத் தூய்மை செய்வான். பழிக்கப்படும் பல செயல்களைச் செய்கின்ற பாசத்தில் கட்டப் பட்ட சிசுவை துன்பம் அடையாமல் பலவகைச் சுழிகளில் இருந்தும் அவனே காப்பான்.

#464. எண் சாண் உடல்

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிரமத்தே தோன்றும் அவ்வியோனியும்
புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எய்யும் எண் சாண் அது ஆமே.

சுக்கில நாடியில் தோன்றும் வெண்ணிறச் சுக்கிலம் எட்டு விரற்கடை செல்லும். யோனியில் தோன்றும் செந்நிற சுரோணிதம் நான்கு விரற்கடை செல்லும். ஆண் பெண் கூட்டுறவால் இவை இணையும் பொழுது எண் சாண் உடல் ஒன்று உருவாகும். பஞ்ச பூதங்களாகிய ஐந்து அக்ஷரங்களும் பிரணவத்தின் மூன்று அக்ஷரங்களும் அதை உருவாக்கும்.

#465. முப்பத்தொரு தத்துவங்கள்

போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆகம் கொணர்ந்த கொடைத் தொழில்
ஏகத்துள் ஆங்கே இரண்டு எட்டு மொவைந்து
மோகத்துள் ஆங்கு ஒரு முட்டை செய்தானே.

போகத்தில் ஆணும் பெண்ணும் பொருந்தும் போது இறைவன் தன் கொடைச் செயலைச் செய்தான்.

அவர்கள் இருவரது மயக்க நிலையில், முப்பதொரு தத்துவங்களைச் சேர்த்து, கருவாகிய ஒரு முட்டையை உருவாக்கினான்.

#466. செயலற்று இருக்கும்

பிண்டத்தி னுள்ளூறு பேதைப் புலனைந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தி னுள்ளூறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திருந்தானே.

அறியாமை வாய்ந்தவை ஐம் புலன்கள். உடல் தோன்றும் போது அவைகளும் தோன்றின. உடல் அழியும் போது அவைகளும் அழிந்தன. கருவில்

உருவான உடலும் அது போன்றே ஆண்ட கோசத்தில் கோசத்தில் செயலற்று இருந்து நாதத் தத்துவத்தில் அடங்கும்.

#467. கருவை அமைக்கும் விதம்

இலைப்பொறி ஏற்றி எனது உடல் ஈசன்
துலைப் பொறி யில் கரு ஐந்துடன் நாட்டி
நிலைப் பொறி முப்பது நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்று செய்தானே.

மாயையால் சதாசிவன் கருவின் உடலை உண்டாக்குவான். துலாக் கோலைப் போல் செலுத்த வல்ல சிவ தத்துவமாகிய ஐந்தினால் (அ, உ , ம, நாதம், விந்து இவற்றால்) அந்தக் கருவை இயக்குவான். ஆன்ம தத்துவம் இருபது நான்கையும் வித்தியா தத்துவம் ஆறையும் அந்த உயிரின் தன்மைக்கு ஏற்றபடி அத்துடன் இணைப்பான். உடல் என்னும் பொறியில் ஒன்பது துளைகளையும் அமைப்பான்.

#468. கருப்பை ஒரு சூளை

இன்புற்று இருவர் இசைவித்து வைத்த மண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே.

சிற்றின்பம் அனுபவிக்கும் தாய் தந்தையர் மனம் ஒன்றுவர். அவர்கள் உருவாக்கிய துன்பக் கலசம் ஆகிய மண் குடத்துக்குள் (உடலுக்குள்) சேர்வான் ஓர் ஆத்மா. அந்தக் கருப்பை என்னும் சூளை யில் ஒன்பது துளைகள் உடைய நீர்ச்சாலும், சூக்கும உடலாகிய எட்டும், ஞான இந்திரியங்கள் கர்ம இந்திரியங்கள் பத்தும் வெந்து பக்குவம் அடையும்.

#469. சித்திகள் தேவையில்லை

அறியீர் உடம்பினில் ஆகிய ஆறும்
பிறியீர் அதனில் பெருகும் குணங்கள்
செறியீர் அவற்றினுள் சித்திகள் இட்டது
அறிய ஈரைந்தினுள் ஆனது பிண்டமே.

உடலில் பொருந்தியுள்ள ஆறு துன்பங்களை நீங்கள் அறியவில்லை. மனதில் பொங்கி வழியும் முக்குணங்களில் இருந்து பிரியாது உள்ளீர். அங்கே சித்திகள் அமைவதை விரும்பாதீர். பத்து மாதங்களின் இந்த உடல் தயாராகி விடும்.

#470. உய்யும் வழியை உணர்வீர்

உடல் வைத்த வாறும் உயிர் வைத்தவாறும்
மடை வைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம் வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடை வைத்த ஈசனைக் கைக் கலந்தேனே.

மாயையில் இருந்து உடலைத் தோற்றுவித்தான். உடலுள் உயிரைப் புகுத்தினான். மடையுடன் கூடிய திறந்து மூட வல்ல ஒன்பது துவாரங்களை அமைத்தான். உறுதி வாய்ந்த ஆயிரம் இதழ்த் தாமைரையை சஹஸ்ரதளத்தில் இறுதியாக அமைத்தான். அந்த இறைவனை நான் சுழுமுனை நாடி வழியே சென்று சிரசின் உச்சியில் அடைந்தேன்.

#471. நேர்படல்

கேட்டு நின்றேன் எங்கும் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின்றான் முதல் யோனி மாயன் அவன்
கூட்டுகின்றான் குழம்பின் கருவை உரு
நீட்டி நின்று ஆகத்து நேர்ப்பட்டவாறே.

நூல் அறிந்தவரும் நுட்பமான அறிவுடையவரும் ஓதுகின்ற முறையைக் கேட்டு நின்றேன். அவர்கள் கூறுவது யாது? இறைவன் எக்காலத்தும் எங்கும் விளங்குகின்றான். கேடில்லாத உயிர்களை அவர் அவர்கள் வினைக்கு ஏற்ற உடல்களில் பொருத்துகின்றான். சுக்கிலச் சுரோணிதக் கலப்பில் கருவைக் குழம்பு போல உருவாக்குகின்றான். கருவை உருவாக்கி அதன் உடலை நன்கு வளர்க்கின்றான். அதனுடன் எப்போதும் நேர்படுகின்றான் (அதாவது கலந்து நிற்கின்றான்).

#472. சீவ அணுக்கள்

பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்
நீர் இடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பறந்து எட்டும் பற்றுமே.

பெண்ணின் யோனி மலரைப் போன்றது. ஆணின் லிங்கம் மொட்டைப் போன்றது. இவை இரண்டும் பொருந்தும் போது அலரும். அப்போது சுக்கில சுரோணிதங்கள் கலக்கும் . அப்போது ஒளிமயமான சீவ அணுக்கள் தோன்றும். நீரின் குமிழி நீரில் கலப்பது போல சீவ அணுக்கள் கருவின் உடல் முழுவதும் பரவிக் கலந்துவிடும்.

#473. தூலமும், சூக்குமமும்.

எட்டினுள் ஐந்தாகும் இந்திரியங்களும்
கட்டிய மூன்று கரணமுமாய்விடும்
ஒட்டிய பாச உணர்வென்னும் காயப்பை
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே.

நுண் உடலில் ஐம்பொறிகள் (கண், நாசி, செவி, மெய், வாய்) தோன்றும். மனம், புத்தி, அஹங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் தோன்றும். இவற்றுடன் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப உண்டாக்கிய உடலை இறைவனே முதலில் சேர்ப்பான். பின்பு அவனே அவற்றைப் பிரித்து அவிழ்த்து விடுவான்

#474. பசு பாசம் நீங்கும்

கண்ணுதல் நாமம் கலந்து உடம்பு ஆயிடைப்
பண்ணுதல் செய்து பசுபாசம் நீங்கிட
எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை
மண்முதலாக வகுத்து வைத்தானே.

இறைவனின் திருப் பெயர் ஆகும் பிரணவம். அதைக் கலந்து அந்த உடலில் நாதம் விளங்கச் செய்வான்.

மூலாதாரம் ஒரு நான்கு இதழ்த் தாமரை ஆகும். சக்கரங்களால் உணர்த்தப்படும் பரப்பை மண் முதலாகத் தொடங்கும் முறையை இறைவன் வகுத்து அமைத்துள்ளான்.

#475. செவிலித் தாய்கள்

அருள் அல்லது இல்லை; அரனவன் அன்றி
அருள் இல்லை ; ஆதலின் அவ் ஓர் உயிரை
தருகின்ற போது இரு கைத்தாயார் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே.

சக்தி இல்லாமல் சிவம் இல்லை.சிவம் இன்றிச் சக்தியும் இல்லை. ஆகவே ஓர் உயிருக்கு உடலைத் தரும் போது அத்துடன் இரண்டு செவிலித் தாய்களையும் அன்புடன் தந்தான்.

#476. உயிருக்கு உயிராவர்

வகுத்த பிறவியின் மாது நல்லாளும்
தொகுத் திருள் நீக்கிய சோதியவனும்
பகுத்துணர்வு ஆகிய பல்லுயிர் எல்லாம்
வகுத்து உள்ளும் நின்றதோர் மாண்பது ஆமே.

சீவனின் வினைகளுக்கு ஏற்ப அதன் பிறவி அமைக்கப் படுகின்றது. அந்தப் பிறவியில் சக்தி தேவியும், இருளை நீக்கும் சோதியாகிய சிவனும் அந்த சீவனின் உயிருக்கு உயிராக இருப்பர். மேலும் பலவகை உயிர்களுக்குப் பலவகை உணர்வுகளை வகுத்து வகை செய்வர்.

#477. உயிர் ஒளி மயமானது!

மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக்
காண்பது ஆண் பெண் அலி எனும் கற்பனை
பூண்பது மாதா பிதா வழி போலவே
ஆம்பதி செய்தான்; அச்சோதிதன் ஆண்மையே.

பெருமையுடன் வளரும் அந்த உயிர் ஆணுமல்ல; பெண்ணுமல்ல; அலியுமல்ல. அப்படி எண்ணுவது வெறும் கற்பனை ஆகும். அது தன் பெற்றோரின் தன்மைகளுடன் விளங்கும். அத்தகைய உயிருக்கு ஏற்றவாறு உடலைப் படைப்பது சிவபெருமானின் ஆற்றல் ஆகும்

#478. ஆண், பெண் உருவாவது

ஆண் மிகில் ஆண் ஆகும் பெண் மிகில் பெண் ஆகும்
பூண் இரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்
தாண் மிகும் ஆயின் தரணி முழுது ஆளும்
பாணவம் மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே.

ஆண் பெண் கூடும் போது ஆண் பண்பு அதிகமாக இருந்தால் அந்த உயிர் ஆணாகும். பெண் தன்மை மிகுந்திருந்தால் அந்த உயிர் பெண் ஆகும். ஆண் பெண் பண்புகள் சரி சமம் ஆனால் அந்த உயிர் அலியாகும். ஆள்வினை மிகுந்து இருந்தால் சிறந்த சிசு பிறக்கும். அது வளர்ந்து உலகை ஆளும். தாழ்வு மனப்பான்மை இருந்தால் சுக்கிலம் பாயாது.

#479. யோகியின் ஆற்றல்

பாய்ந்த பின் அஞ்சு ஓடில் ஆயுளும் நூறு ஆகும்;
பாய்ந்த பின் நால் ஓடின் பாரினில் எண்பதாம்;
பாய்ந்திடும் வாயுப் பகுத்து அறிந்து இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலும் ஆமே.

ஆணிடமிருந்து பிரிந்த சுக்கிலம் ஐந்து விரற்கடை தூரம் ஓடினால் பிறக்கும் உயிரின் ஆயுள் நூறு ஆண்டுகள். அந்தச் சுக்கிலம் நான்கு விரற்கடை ஓடினால் அந்த உயிரின் ஆயுள் எண்பது ஆண்டுகள். தான் விரும்பியபடி சுக்கிலத்தைப் பாய்ச்சும் ஆற்றல் யோகிக்கு உண்டு. அதனால் ஒரு யோகியினால் தான் விரும்பிய குழந்தையைப் பெற இயலும்.

#480. குழந்தையின் அங்கங்கள்

பாய்கின்ற வாயு குறையின் குறள் ஆகும்;
பாய்கின்ற வாயு இளைக்கின் முடம் ஆகும்;
பாய்கின்ற வாயு நடுப்படில் கூன் ஆகும்;
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லைப் பார்க்கிலே.

சுக்கிலத்தைச் செலுத்தும் வாயு குறைவாக இருந்தால் குழந்தை குட்டையாகப் பிறக்கும்..பாய்கின்ற வாயு மெலிந்திருந்தால் பிறக்கும் குழந்தை முடம் ஆகும். பாய்கின்ற வாயு தடைப்படில் குழந்தை கூனனாகப் பிறக்கும். பெண்களுக்கு இதைப் போன்று பாய்கின்ற வாயு என்பது இல்லை.

#481. தாயின் வயிறு பாதிக்கும்

மாதா உதரம் மலம் மிகின் மந்தன் ஆம்;
மாதா உதரம் சலம் மிகின் மூங்கை ஆம்;
மாதா உதரம் இரண்டும் ஒக்கின் கண் இல்லை;
மாதா உதரத்திலே வந்த குழவிக்கே.

அன்னையின் வயிறு கருவில் வளரும் குழந்தையைப் பாதிக்கும். அன்னையின் வயிற்றில் மலம் மிகுந்து இருந்தால் குழந்தை மந்த புத்தியுடன் பிறக்கும். அன்னை வயிற்றில் நீர் மிகுந்திருந்தால் குழந்தை ஊமையாகிவிடும். அவள் வயிற்றில் மலம், நீர் இரண்டுமே மிகுதியாக இருந்தால் பிறக்கும் குழந்தை குருடனாகிவிடும்.

#482. மூச்சுக் காற்றும் பாதிக்கும்

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்ததுவாகில்
குழந்தையும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலி ஆகும் கொண்ட கால் ஒக்கிலே.

இன்பம் துய்க்கும் போது ஆண் மகனின் மூச்சுக் காற்று சூரிய கலையில் (வலது நாசித் துவாரத்தில்) இயங்கினால் ஆண் குழந்தை கருவில் உருவாகும். சந்திர கலையில் (இடது நாசித் துவாரத்தில்) மூச்சுக் காற்று இயங்கினால் கருவில் பெண் குழந்தை உருவாகும். சுக்கிலத்தைச் செலுத்தும் பொழுது மலக் காற்றகிய அபான வாயு அதை எதிர்த்தால், சுக்கிலம் இரண்டாகப் பிரிந்து கருவில் இரட்டைக் குழந்தைகள் உருவாகும். சூரிய கலையும், சந்திர கலையும் ஒத்தவாறு இயங்கினால் அலி ஆகிவிடும் பிறக்கும் குழந்தை.

#483. கருவின் உருவம்

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளமாயிடுங்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டது மில்லையாம் கோல்வளை யாட்கே.

புணரும் ஆண் பெண் இருவரின் மூச்சுக் காற்றும் ஒத்து இருந்தால் கருவில் அழகிய குழந்தை உருவாகும். புணரும் போது இருவருக்கும் உயிர்ப்புத் தடுமாறினால் குழந்தை உண்டாகும் வாய்ப்பு இல்லை.

#484. பொற்சிலை போன்றது

கோல்வளை உந்தியில் கொண்ட குழவியும்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால் வளர்ந்து உள்ள பகலவன் பொன் உருப்
போல் வளர்ந்து உள்ள பொருந்து உரு ஆமே.

பெண்ணின் வயிற்றில் வளரும் குழந்தை பேரொளி உடையது. அது ஆணாகவோ பெண்ணாகவோ வளரும். கதிரவனில் பொன்னிற ஒளியைப் பெற்று வளர்ந்து முழு வடிவம் பெறும்.

#485. உயிருக்கு இல்லை உருவம்!

உருவம் வளர்ந்திடும் ஒண் திங்கள் பத்தில்
பருவமது ஆகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடும் மாயையினாலே
அருவம் அது ஆவது இங்கு ஆர் அறிவாரே.

கருவில் குழந்தை பத்து மாதங்கள் வளரும். தக்க காலத்தில் உலகில் வந்து பிறந்திடும். மாயை என்னும் வளர்ப்புத் தாயுடன் பொருந்தி மேலும் மேலும் வளரும். ஆயினும் அந்த உருவத்தின் உள்ளே இருக்கும் உயிர் அருவமானது என்ற உண்மையை யார் அறிவார்?

#486. மயக்கும் மாயை

இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்,
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கும் உரைத்திலன்,
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்கு உளன்,
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே.

கருவுக்குக் காரணம் ஆன தந்தை அது என்ன குழந்தை என்றறியான். அதைக் கருவில் ஏற்ற தாயும் அது என்ன குழந்தை என்றறியாள். ஒரு தட்டானைப் போல அதை உருவாக்கும் நான்முகனும் யாருக்கும் அதைக் கூறமாட்டான். அதை அமைக்கும் சதாசிவனும் அங்கே இருப்பான். மாயையின் மயக்கும் சக்தி தான் என்னே!

#487. பழமைக்கும் பழமை

இன்பு உற நாடி இருவரும் சந்தித்தித்
துன்பு உறு பாசத்தில் தோன்றி வளர்ந்த பின்,
முன்பு உற நாடி நிலத்தில் முன் தோன்றிய
தொன்பு உற நாடி நின்று ஓதலும் ஆமே.

இன்பம் அடைய விரும்பிய ஆண் பெண் இருவரும் புணருவர். அப்போது துன்பம் பொருந்திய பாசத்தில் தோன்றும் ஓர் உயிர். அந்த உயிர் வளர்ந்த பின்னர் மேன்மை அடைய விரும்பினால் செய்ய வேண்யது இதுவே. உலகில் எல்லாவற்றுக்கும் பழமையான இறைவனை நாடித் துதிக்க வேண்டும்.

#488. கரு வளரும் விதம்

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டு இட்டால்
அயிர்ப்பு இன்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கு இல்லைப் போக்கு இல்லை ஏன் என்பது இல்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

குயில் தன் முட்டையைக் காக்கைக் கூட்டில் இட்டாலும், காக்கை அதைச் சந்தேகிக்காமல் வளர்த்து வரும். அது போன்றே தாயும் ஒரு மயக்கத்துடன் கருவின் உடலை வளர்ப்பாள், ஒரு இயக்கம் இல்லாமலும், போக்கு இல்லாமலும், ஏன் என்று கேட்காமலும்.

#489. இறைவன் இன்புறுவான்

முதற்கிழங்கு ஆய் முளையாய் அம்முளைப்பின்
அதற் புதலாய், பலமாய் நின்று அளிக்கும்
அதற்கு அதுவாய் இன்பம்ஆவது போல
அதற்கு அதுவாய் நிற்கும் ஆதிப்பிரானே.

முதலில் விதை மட்டும் இருக்கும். பிறகு அது முளைக்கும். பிறகு வளர்ந்து புதர் ஆகும். பிறகு நல்ல கனிகளை அளிக்கும். இதுவே தாவரங்களின் இயல்பு. இதைப் போன்றே எல்லாவற்றையும் படைத்துக் காத்து அளிப்பதே இறைவனுக்கு இன்பம் தருகின்ற செயல் ஆகும்

#490. தவத்தால் அறியலாம்

ஏனோர் பெருமையன் ஆகிலும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்து, அங்குளன்,
வானோர் அறியும் அளவல்ல மாதேவன்
தானே அறியும் தவத்தின் உள்ளே.

ஏனைய தேவர்களைக் காட்டிலும் அதிக ஏற்றம் உடையவன் இறைவன். ஆயினும் குற்றம் குறைகள் நிறைந்த சீவர்களின் உடல்களிலும் அவன் கலந்து விளங்குகின்றான். அத்தகைய பெருந்தகையை தேவர்களாலும் அறிய இயலாது. மனிதர்கள் தாங்கள் செய்யும் தவத்தினால் அவனை அறிந்து கொள்ளலாம்

#491. பக்குவம் தரும் உடலை!

பரத்தில் கரைந்து பதிந்த நற்காயம்
உருத்தரித்து இவ்வுடல் ஓங்கிட வேண்டி
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்துப் பிறக்கும் திருவருளாலே.

இறைவனிடம் நுண்மையாக ஒடுங்கிய உடல் மீண்டும் பருவத்துக்கு ஏற்ற பயன் அடைய வேண்டும். அலைகடலில் கதிரவனின் வெப்பத்தால் திரண்டு உருவாகும் உப்பைப் போலவே, இறைவன் அருளால் மீண்டும் உடல் ஒரு கருவிலே உருவாகின்றது.

இரண்டாம் தந்திரம் - 15. சீவ வர்க்கங்கள்

மூன்று வகை சீவ வர்க்கங்கள்

1. விஞ்ஞானகலர் - ஆணவம் ஒன்றை மட்டும் உடையவர்.

2. பிரளயாகலர் - ஆணவம், கன்மம் இரண்டையும் உடையவர்.

3. சகலர் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றையும் உடையவர்.

#492. சிவமயம் ஆக்கும்

சக்தி சிவன் விளையாட்டால் உயிராக்கி
ஒத்த இரு மாயா கூட்டதிடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் புரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமயமாக்குமே.

சிவனும் சக்தியும் உயிர்களை நுண் உடல்களில் புகுத்துவர். இது அவர்களுக்கு ஒரு விளையாட்டு. சுத்தம், அசுத்தம் என்னும் இரண்டு மாயைகளுடன் கூட்டுவிப்பர். மேலான துரிய நிலையை அடையச் செய்வர். அதன் பின் உயிர்கள் சிவமயம் ஆகும்படி அருள் செய்வர்.

#493. பத்துப் பிரிவினர்

விஞ்ஞானர் நால்வரும், மெய்பிரளயாகலத்
தஞ்ஞானர் மூவரும், தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின்மராம்;

விஞ்ஞானர் ஆதியர் வேற்றுமை தானே.

தெளிந்த ஞானம் உடைய விஞ்ஞானர் நான்கு வகைப்படுவர். பேரூழிக் காலத்தில் ஞானம் அடையும் பிரளயாகலர் மூன்று வகைப்படுவர். உலக வாழ்விலும் அறியாமையிலும் அழுந்தியுள்ள சகலர் மூன்று வகைப்படுவர். இவ்வாறு சீவர்கள் பத்து வகைப்படுவர்.

விளக்கம்

விஞ்ஞானர் நான்கு வகையினர்:

உடலுடன் இருக்கும் போதே சிவத்துடன் பொருந்திய சீவன் முக்தர் ஒரு வகை உடலை விட்டுப் பிரிந்த பின்னர் சிவத்துடன் பொருந்துகின்ற உத்தம, மத்திம, அதமர் என்ற மேலும் மூன்ற வகையினர்.

பிரளயாகலர் மூன்று வகையினர்: உத்தம, மத்திம, அதம வகையினர்.

சகலர்: உத்தம, மத்திம, அதம வகையினர்.

#494. விஞ்ஞானர் நான்கு வகையினர்

விஞ்ஞானர் கேவலத்து ஆராது விட்டவர்;
அஞ்ஞானர் அட்ட வித்தேசாரம் சார்ந்துளோர்;
எஞ்ஞானம் ஏழ்கோடி மந்திர நாயகர்;
மெய்ஞானர் ஆணவம் விட்டு நின்றாரே.

ஆணவத்தை மட்டும் உடைய தன்னலம் நீங்கியவர்; ஆன்ம ஞானம் உடைய அட்ட வித்தியேசுரபதம் சார்ந்தவர், உயர்ந்த ஞானம் கொண்ட ஏழு கோடி மந்திரேசுரர்; உண்மையான் அஞ்ஞானம் பெற்று ஆணவ மலத்தை அழித்தவர் என்று நான்கு வகைப்படுவர் விஞ்ஞானகலர்.

#495. அடையும் பதங்கள்

இரண்டாவதில் முத்தி எய்துவர் அத்தனை,
இரண்டாவதுள்ளே இருமல பெத்தர்,
இரண்டு ஆகும் நூற்றெட்டு உருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தார் மும் மலத்தாரே.

விஞ்ஞானகலரில் பக்குவம் சற்றுக் குறைவாக இருப்பவர்கள் உடலுடன் உள்ள போதே சீவன் முக்தி அடைவதில்லை. அவர்கள் அடுத்த பிறவியில் சிவனைச் சென்று அடைவர். பிரளயாகலர் இரு பிறவிகளில் உருத்திர பதவி

அடைவர். மாயையினால் பந்திக்கப்பட்ட சகலர் தங்களுடைய மூன்று மலங்களும் அழியாமல் இருப்பார்.

#496. சகலரின் வகைகள்

பெத்தத்த சித்தோடு பேண்முத்தச் சித்துஅது
ஒத்திட்டு இரண்டிடையூடு உற்றார் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத்து அமிழ்ந்து சகலத்து உள்ளாரே.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் உடையவர் சகலர். இவர்களில் சிலர் சித்தான சிவதைப் பேணியதால் ஞான வடிவான சிவம் ஆகி விடுவர். ஞானம் கிரியை என்னும் இரண்டும் ஒத்துப் போய் சதாசிவ நிலையில் பற்றி நிற்பவர் ஆணவம் கன்மம் இரண்டையும் கடந்து ஞான வடிவாக நிற்பர். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் நீங்கப் பெறாதவர் நாதத் தத்துவத்தை அறியாத சகலராகவே எப்போதும் இருப்பர்,

#497. சிவனை அறிந்தவர் ஆவார்

சிவம்ஆகி ஐவகைத் திண்மலம் செற்றோர்
அவம்ஆகாச் சித்தர் முத்தாந்தத்து வாழ்வார்
பாவம்ஆன தீர்வோர்; பசுபாசம் அற்றோர்
நவம் ஆன தத்துவம் நாடிக் கொண்டாரே.

ஐந்து வகைப்பட்ட மலங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பவை. இந்த ஐந்தையும் வென்றவர் சித்தர் ஆகிவிடுவார். என்றும் அழிவில்லாத நிலையில் இருப்பார். அவருடைய பசு பாசத் தன்மைகள் நீங்கிவிடும். அவருக்குப் பிறவிப்பிணி ஓழிந்து விடும். அவர் சிவனின் ஒன்பது நிலைகளையும் நன்கு அறிவார். அவை சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன் , மகேசுரன் , உருத்திரன், திருமால், நான்முகன் என்பவை ஆகும்.

#498. ஒன்பது வகையினர்

விஞ்ஞானர் ஆணவ கேவலம் மேவுவார் ;
விஞ்ஞானம் மாயையில் தாங்கும் இருமலர்;
அஞ்ஞானர் அச்சகலத்தார் சகலராம்
விஞ்ஞானர் ஆதிகள் ஒன்பான் வேறு உயிர்களே.

விஞ்ஞானர் ஆணவம் என்ற ஒரு மலத்தை மட்டும் உடையவர். சுத்த மாயையில் உள்ள பிரளயாகலர் ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களை உடையவர். சகலர் அறிவற்றவர்கள். ஆணவம், கன்ம, மாயை என்னும்

மும்மலங்களையும் உடையவர். இந்த ஒவ்வொரு வகையிலும் உத்தமம், மத்திமம், அதமம் என்ற மூன்று மூன்று பிரிவுகள் என மொத்தம் ஒன்பது வகைகள் உள்ளன.

#499. மூவருக்கும் முக்தி

விஞ்ஞான கன்மத்தால் மெய்அகம் கூடி
அஞ்ஞான கன்மத்தினால் சுவர் யோனி புக்கு
எஞ்ஞான மெய் தீண்டியே இடைவிட்டுப் போய்
மெய்ஞானர் ஆகிச் சிவம் மேவல் உண்மையே.

விஞ்ஞானகலர் எடுத்த பிறவியிலேயே ஞானம் பெற்றுச் சிவபதம் சென்று அடைவர். இவர்கள் ஞான கர்மத்தால் உள் நின்று உணர்த்தப் பெறுவர் . பிரளயாகலர் இங்ஙனம் ஞான கர்மத்தால் உள் நின்று உணர்தப் பெறார். இவர்கள் சில பிறவிகளில் சுத்த வித்தியா மண்டலங்களை அடைந்து அதன் பின்னர் சிவபதம் சென்று சேருவர். சகலர் பலப்பலப் பிறவிகளில் படிப்படியாக ஞானம் பெறுவர். உண்மையான ஞானத்தை அடைந்த பின்பு இவர்களும் சிவபதம் சென்று சேருவர். சிவசாயுச்சியம் என்பது அனைவருக்கும் உறுதியாகக் கிடைக்கும்.

#500. சகலருக்கும் சிவப்பேறு

ஆணவந் துற்ற அவித்தாம் நனவு அற்றோர்
காணிய விந்துவாம் ; நாத, சகல ஆதி
ஆணவம் ஆதி அடைந்தோர் அவர் அன்றே
சேண் உயர் சத்தி சிவதத்துவம் ஆமே.

ஆணவத்துடன் கூடிய அஞ்ஞானத்தை முற்றிலுமாக நீக்கியவர், சகல நிலையிலும், உடம்புடன் உள்ள போதே, நாதம் பிந்து ஆகியவற்றைக் காண முடியும். ஆணவம் முதலான மலங்களை உடையவரோ எனில், அம்மலங்கள் முற்றிலுமாக நீங்கிய பிறகே, மேன்மை பொருந்திய சிவமண்டலங்களைச் சென்று அடைய முடியும்.

இரண்டாம் தந்திரம் - 16. பாத்திரம்

பாத்திரம் என்பது அறநெறியில் ஈட்டிய பொருளைப் பத்திரமாகச் சேமித்து வைக்கும் இடம் ஆகும்.

#501. தானப் பயன்

திலமத்தனை பொன் சிவஞானிக்கீந்தால்
பல முத்தி சித்தி பரபோகமுந் தரும்
நிலமத்தனை பொன்னை நின்மூடர்க்கீந்தால்
பலமுற்றே பர போகமும் குன்றுமே.

எள்ளளவு பொன்னைச் சிவஞானியாருக்கு ஈந்தால் அதன் பயனாக இம்மையில் இன்பமும், சித்தியும் கிடைக்கும். மறுமையில் முக்தி கிடைக்கும். அஞ்ஞானியருக்கு பூமி அளவு பொன்னைத் தந்தாலும் இம்மையில் இன்பம் கிடைக்காது; மறுமையில் முக்தியும் கிடைக்காது.

#502. நாதனை உணர்ந்தவர் தேவர் ஆவர்

கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை '
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார் சிலர் தேவருமாமே.

உரிய காலம் வரை காத்திருந்து அதன் பின்னர் உயிரைப் பறித்துச் செல்வான் யமன். அவனைச் செலுத்துபவன் சிவபெருமானே ஆவான். எட்டுச் சீரிய குணங்களை உடைய சிவன். தன்னை நன்றாக உணர்ந்தவர்களுக்கு அருள் புரிவான். அவன் விளங்குகின்ற நாத விந்து மண்டலங்களைச் சென்று அடைந்தவர்கள் வானவர்கள் ஆகி ஒளி மண்டலத்தில் வசிப்பார்கள்.

#503. இறைவனை வணங்க வேண்டும்.

கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்
மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடையான் அடி
நெய்விட்டிலாத இடிஞ்சிலும் ஆமே.

அன்னையின் வயிற்றில் நான் கருவாக இருந்த போதே சிவஞானத்தைப் பற்றி இருந்தேன். நான் உடலுடன் கூடி இருந்த போதும் அவன் நினைவு நீங்காமல் இருந்தேன். பொய்யான உடலை விடுத்த பின்பும் நான் ஒளி மயமான சிவன் திருவடிகளையே நாடுவேன். நெய் விடாத விளக்கு போல ஒளிர்கின்ற அது ஒரு தூண்டா விளக்கு ஆகும்.

#504. தன்மயமாகி இருப்பர்

ஆவன ஆவ, அழிவ அழிவன,
போவன போவ, புகுவ புகுவன,
காவலன் பேர் நந்தி, காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளை யோனே.

வர வேண்டியவை தாமே வந்து சேரும். நீங்க வேண்டியவை தாமே நீங்கி விடும். கழிய வேண்டியவை தாமே கழியும். அனுபவிக்க வேண்டியவை தாமே வந்து சேரும். இறைவள் காட்டுவதைக் கண்டு அமைபவனே ஈசன் ஆணைப் படி நடக்கும் தகுதி வாய்ந்தவன் ஆவான்.

இரண்டாம் தந்திரம் - 17. அபாத்திரம்

தகுதியற்றவர்கள் ஆவர் அபாத்திரம்.
நல்லார்க்கு ஈவது நற்பயன் தரும்.
அல்லார்க்கு ஈவது நற்பயன் தராது.

#505. வறண்ட பசு

கோல வறட்டைக் குனித்துக் குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்குஞ்
சீலமு நோன்பு மிலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது வாகுமே.

ஒழுக்கமும் நோன்பும் இல்லாதவர்க்கு ஈவது எதைப் போன்றது? அழகிய வறட்டுப் பசுவுக்கு குனிந்தும் நிமிர்ந்து பசுந் தழைகள் இட்டு அதன் பாலைக் கறந்து குடிப்பது போன்றது ஆகும். பருவம் தவறிச் செய்த பயிரைப் போன்றது ஆகும்.

506. அன்பிலாதவர்க்கு ஈதல்

ஈவதி யோக மியம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்காதவர்களுக்கு
ஈவா பெரும் பிழை யென்று கொள்ளீரே.

யோகம் செய்யும் போது செய்ய வேண்டியவை எவை தவிர்க்க வேண்டியவை எவை என்பதை நன்கு அறிந்த, அன்பு உடையவர்களுக்கே தானம் செய்ய வேண்டும். அங்ஙனம் உள்ளத்தில் அன்பு சிறிதும் இல்லாதவர்களுக்கும்,

சார்பு அறியாதவர்களுக்கும் தானம் செய்வது பெரிய தவறு ஆகும். உலகத்தோரே இதை நன்கு அறிந்து கொள்வீர்!!

#507. நரகத்தில் அழுந்தான்

ஆமா றறியா னதி பஞ்ச பாதகன்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்கும்
காமாதி விட்டோர்க்கும் தரல் தந்து கற்பிப்போன்
போமா நரகிற் புகான் போதங் கற்கவே.

பஞ்சமா பாதகன் நல்லவர்களுக்கு தானம் தருவதன் பயனை அறியாமல் வீணே கெடுவான். ஆனால் குற்றமற்ற குருவுக்கும், தூய பெரியவர்களுக்கும், காமம் முதலிய மன மலங்களை முற்றிலுமாக அழித்தவர்களுக்கும் தானம் தருபவன் ஒரு நாளும் நரகக் குழியில் விழவே மாட்டான்.

#508. ஏழு வகை நரகங்கள்

மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே யஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரும்
நண்ணுவ ரேழா நரகக் குழியிலே.

மண் மலையளவு பெரிய பொருளைத் தானம் செய்தாலும், சிவனே முன் நின்று அதைத் தருகின்றான் என்று எண்ணி கூப்பிய கைகளுடன் சிவனை வணங்க வேண்டும். அவ்வாறு எண்ணாமல் தானம் கொடுக்கின்றவனும், அதை வாங்குகின்ற வனும் ஏழு வகைப்பட்ட நரகங்களில் வீ ழ்ந்து வருந்துவர்.

இரண்டாம் தந்திரம் - 18. தீர்த்தம்

தீர்த்தம் என்றால் தூய நீர் என்று பொருள். காவிரியும், கங்கையும் மண்ணில் பாய்ந்து மக்களைத் தூய்மைப் படுத்துகின்றன. அது போன்றே உடலின் உள்ளேயும் மூலாதாரம் முதல் சஹஸ்ர தளம் வரையில் தூய நீர் உள்ளது. அந்த நீரை அறிந்து கொண்டு அதில் நீராட வேண்டும்.

#509. ஏழு தீர்த்தங்கள்

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்று ஆடார் வினை கெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக் கல்வி இலோரே.

உடலின் உள்ளே மூலாதாரம் முதல் சஹஸ்ரதளம் வரையில் ஏழு இடங்களில் தூய நீர் உள்ளது. நாம் செய்த வினைகள் நீங்கிட இந்தத் தூய நீரில் நீராட வேண்டும். நேர்மையான மனமும், தெளிந்த அறிவும் இல்லாதவர்கள் பள்ளங்களிலும் மலைகளிலும் தூய நீரைத் தேடி அலைவார்கள்.

#510. அகத்தில் சிவன் விளங்குவான்

தளி அறிவாளர்க்குத் தண்ணியதாய்த் தோன்றும்
குளி அறிவாளர்க்குக் கூடவும் ஒண்ணான்
வளி அறிவாளர்க்கு வாய்க்கினும் வாய்க்கும்
தெளி அறிவாளர்தம் சிந்தையுளானே.

கோவிலில் சென்று வழிபடுபவருக்குச் சிவன் குளிர்ச்சியுடையவனாகி அருள் செய்வான் .காம நெறியில் செல்பவர்களுக்கு அவன் அடைய முடியாதவன் ஆவான். மூச்சுப் பயிற்சியும் பிராணாயாமமும் செய்பவர் ஒருவேளை அவனை அடையக் கூடும். ஆயினும் அவன் தெளிந்த ஞானம் உடையவர் சிந்தையில் எப்போதும் இடையறாது வீற்றிருப்பான்.

#511. கள்ள மனம் கொண்டவர்

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தின் ஆருகலந்து அறிவார் இல்லை
வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவினை
பள்ளத்தில் இட்டது ஒரு பத்தலுள் ஆமே.

உள்ளத்தால் உணர இயலும் சிவபெருமானை! கள்ள மனம் கொண்ட, ஒழுக்கம் அற்றவர்களால் சிவனை அறிய இயலாது. இன்பத்தை நாடும்அவர்கள் மனம் ஒரு ஒட்டையான சால் போன்றது. அவர்கள் சிவனை அறிய முயல்வது ஓட்டைச் சாலை வைத்துக் கொண்டு மேட்டுக்கு நீரை இறைப்பதைப் போன்று வீணாகும்.

#512. தலை உச்சியில் உள்ளது கங்கை நீர்

அறிவு ஆர் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவான், உறைபதம் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனல் கங்கைப்
பொறிஆர் புனல் மூழ்கப் புண்ணியர் ஆமே.

ஒளி மண்டலத்தில் வாழ்பவர்கள் அமர்கள். அவர்கள் விந்து மண்டலத்தை அடைந்து, ஆதிப் பிரானாகிய சிவபெருமானை அடைவர். ஐம் பொறிகளை உடைய

அன்பர்கள் காமத்தைத் தடுத்து வெற்றி கொண்டால், ஓங்கார நாதத்துடன் தலை உச்சியில் பாயும் கங்கை நீரில் நீராடிப் புனிதர்கள் ஆகிவிடலாம்.

#513. சிவனை உள்ளத்தில் தேடுவீர்

கடலில் கெடுத்துக் குளத்தில் காண்டல்
உடலுற்றுத் தேடுவார் தம்மை ஒப்பார் இல்;
திடம் உற்ற நந்தி திருவருளால் சென்று
உடலில் புகுந்தமை ஒன்று அறியாரே.

கடலில் ஒரு பொருளைப் போட்டு விட்டு அதை குளத்தில் சென்று தேடுவர் சிலர். ஆயினும் நீர்ப்பை என்னும் கடலில் விந்து நீக்கம் ஆவதைக் கெடுத்தவர், அதை நெற்றிப் பகுதியில் உள்ள குளத்தில் ஒளியாகப் பெற முடியும். சிவபெருமான் தன் திருவருளால் நம் உடலில் புகுந்துள்ளதால் இதுவும் சாத்தியமே.

#514. சந்திர மண்டலம்

கலந்தது நீர் அது உடம்பில் கறுக்கும்;
கலந்தது நீர் அது உடம்பில் சிவக்கும்;
கலந்தது நீர் அது உடம்பில் வெளுக்கும்;
கலந்தது நீர், அனல், காற்று அது ஆமே.

சீவன் தாமச குண வயப்பட்டிருக்கும் போது உடலில் கலந்துள்ள நீர் கருமை நிறம் உடையதாக இருக்கும். ராஜச நிலையில் மூல வாயு நெற்றியைச் சென்று அடையும் போது மாதுளம் பூவைப் போன்று சிவந்த நிறத்துடன் இருக்கும். சாத்விக குணத்துடன் சிதாகாசத்தை அடையம் போது வெண்மையான ஒளியுடன் விளங்கும். இவ்வாறு கலந்த நீரில் தீயின் ஒளியும், காற்றியின் இயக்கமும் கலந்து இருக்கும்.

இரண்டாம் தந்திரம் - 19. திருக்கோவில் இழிவு

கோவிலுக்குச் செய்யும் இழிவுகளால் விளையும் கேடு!

#515. தாவர லிங்கம்

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே யரசு நிலை கெடுஞ்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடுங்
காவலன் பேர் நந்தி கட்டுரைத் தானே.

சிவலிங்கம் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனி ஆகும். ஓரிடத்தில் அமைக்கப் பட்டுள்ள ஒரு லிங்கத்தைப் பெயர்த்து வேறு இடத்தில் வைத்தால் ஆகாது. அவ்வாறு செய்ய எண்ணினால் அது நிகழும் முன்பே அந்த நாட்டின் ஆட்சி அழிந்து போகும். லிங்கத்தைப் பெயர்த்தவனை அவன் இறக்கும் முன்பே தொழுநோய் வந்து பற்றும். இதை உலகுக்கு உரைத்தவன் உலகின் காவலனான சிவபெருமான்.

#516. கோவில் மதில்

கட்டுவித் தார்மதில் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும் அபிடேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதியராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே.

கோவில் மதிலின் ஒரு கல்லைப் பெயர்த்து எடுத்தால் அதன் தீமைப்பயன் முடி சூடிய மன்னனையே வெட்டி வீழ்த்தி விடும். முனிவர்களின் செய்கின்ற தவம் பயன் தராமல் தடுக்கும். அவ்வாறு கல்லைப் பெயர்த்துப் பறித்தவன் அந்தணன் ஆயினும் அவனையும் வெட்டி வீழும்படிச் செய்யும். இது சிவ பெருமானின் ஆணை ஆகும்.

#517. பூசைகள் தவறக் கூடாது

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோவில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே.

காலனைக் காலால் உதைத்தவன் சிவபெருமான். அவன் திருக் கோவில்களில் மறைகள் விதித்தபடி பூசைகள் நடைபெற வேண்டும். அங்ஙனம் பூசைகள் நிகழவில்லை என்றால் குணப்படுத்த முடியாத பல வியாதிகள் தோன்றும். பருவத்தே மழை பொழியாது பொய்க்கும். மன்னனின் போர் ஆற்றல் குறைந்து விடும்.

#518. பிற கேடுகள்

முன்னவ னார்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங் குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே.

சிவபெருமான் திருக் கோவில்களில் பூசைகள் தடைப்பட்டால் மன்னனுக்குத் தீமைகள் உண்டாகும். நாட்டின் வளம் குன்றும். கன்னக் கோல் இடும் கள்ளர்கள் அதிகரிப்பர். களவு பெருகும். இங்கனம் உரைத்தது என் சிவபெருமான்.

#519. சிவ தீட்சையின் இன்றியமையாமை

பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

பூஜை செய்யும் தகுதியைப் பெறாத அந்தணன் சிவன் கோவிலில் பூசை செய்யலாகாது. அங்கனம் பூசை செய்தால் போருக்குச் செல்லும் மன்னனுக்குக் கொடிய வியாதிகள் தோன்றும். பார் எங்கும் பரவிய நாட்டில் பஞ்சம் உண்டாகும். இவ்வாறு கூறியவன் சிறப்புடைய சிவபெருமானே ஆவான்.

இரண்டாம் தந்திரம் -
20. அதோ முக தரிசனம்

கீழ் நோக்கிய சிவனின் முகம் அதோ முகம் ஆகும். அதைத் தரிசிப்பது அதோ முக தரிசனம்.

#520. ஆறுமுகனுக்கு ஆணையிட்டான்

'எம்பெருமான் இறைவா முறையோ' என்று
வம்புஅவிழ் வானவர் அசுரன் வலிசொல்ல,
அம்பவள மேனி அறுமுகன் போய் அவர்
தம்பகை கொல் என்ற தற்பரன் தானே.

சிவபெருமானிடம் சென்று 'எம் தலைவா! எம் இறைவா! இதுவும் முறையோ?' என்று துயருற்ற வானவர்கள் அசுரனின் வலிமையைப் புகன்று வருந்தினர். சிவன் ஆறுமுகனை அழைத்து, "அழகிய பவள வண்ணம் கொண்ட பாலகனே! நான் தரும் படையுடன் செல்வாய். அசுரனைக் கொல்வாய். தேவர்கள் துயர் தீர்ப்பாய் " என்று ஆணையிட்டான். அந்த அருள் மிகுந்த இறைவனே தற்பரன் ஆகிய நம் சிவபிரான்.

#521. கறுத்த கண்டம் கொண்டவன்

அண்டமொடு எண்திசை தாங்கும் அதோமுகம்
கண்டம் கறுத்த கருத்து அறிவார் இல்லை
உண்டது நஞ்சு என்று உரைப்பர் உணர்வு இலோர்;
வெண் தலை மாலை விரிசடையோற்கே.

வெண்ணிறக் கபால மாலையை அணிந்தவன் சிவன். அண்டங்களையும், எட்டு திசைகளையும் தன் அதோ முகத்தால் தாங்குகின்றான். அந்த அதோ முகத்தின் கண்டம் கறுத்து இருப்பது ஏன்? சிவன் நஞ்சை உண்டதால் கண்டம் கறுத்தது என்று கூறுபவர் அறிவற்றவர்கள். கருமை என்பது இருட்டு அல்லது அறியாமை. மேலே இருக்கும் ஒளியை நோக்கிச் செல்லாமல் கீழ் இருளை நோக்கிச் செல்வது அறியாமை என்று உணர்த்துகின்றது அந்தக் கருமை.

#522. பொய்யும் மெய்யும்

செய்தான் அறியும் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே உரைத்திடில் விண்ணோர் தொழச் செய்வான்
மை தாழ்ந்து இலங்கும் மணி மிடறுடையோனே.

கரிய நிறம் கொண்ட கழுத்தை உடையவன் சிவபெருமான். உலகங்களைப் படைத்த அவன் பொய்யையும் அறிவான்; மெய்யையும் நன்கு அறிவான். கடல் சூழ்ந்த உலகில் பலர் பொய்க் கதைகளைப் பேசித் திரிகின்றார்கள். அவர்கள் உண்மையான தத்துவத்தைப் பற்றிப் பேசுவார்கள் என்றால் சிவன் அவர்களுக்குத் தேவர்களும் வந்து தொழும்படியான மேன்மையை அருள்வான்.

#523. அதோ முகமே சிவனாக மாறும்.

நந்தி எழுந்து நடுஉற ஓங்கிய
செந்தீ கலந்து உள்சிவன் என நிற்கும்
உந்திக் கலந்து அங்கு உலகம் வலம் வரும்
அந்தி இறைவன் அதோமுகம் ஆமே.

முடிவினைச் செய்பவன் உருத்திரன். அவன் இருப்பிடம் மூலாதாரம். அவனே இறைவனின் அதோ முகம் ஆவான். அவனே சுழுமுனை வழியே மேலே சென்று தலையில் உள்ள செவ்வொளியுடன் கலந்து சிவன் ஆகி விடுவான். உலகங்களின் இயல்பை மாற்றி விட்டு மேல் எழுந்து நிற்பான்.

#524. ஊழித் தலைவனும் சிவனே ஆவான்

அதோமுகம் கீழ்அண்டம் ஆன புராணன்
அதோமுகம் தன்னொடும் எங்கும் முயலும்
சதோமுகத்து ஒண்மலர்க் கண்ணிப்பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனும் ஆமே.

அதோமுகம் பிரணவம் என்னும் அண்டத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த முகம். அது நுண்ணுடல் முழுவதும் பரவும் ஆற்றல் படைத்தது. ஒளியை உடைய, பிரணவ வடிவம் கொண்ட, சக்தியுடன் கூடிய அதே சதாசிவன் தான் அதோமுகனாகவும், ஊழித் தலைவனாகவும் இருக்கின்றான்.

#525. நூறு நாடிகள் இணைக்கின்றன

அதோமுகம் மாமலர் ஆயது கேளும்
அதோமுகத்தால் ஒரு நூறாய் விரிந்து
அதோமுகம் ஆகிய அந்தம் இல் சத்தி
அதோ முகம் ஆகி அமர்ந்திருந்தானே.

அதோமுகம் ஓர் ஆயிரம் இதழ்த் தாமரையாக ஆனது என்ன விந்தை? தலையில் கவிழ்ந்துள்ள சஹஸ்ரதளத்தில் இருந்து நூறு நாடிகள் கீழ் நோக்கி விரிந்து செல்கின்றன. கவிழ்ந்துள்ள நாடிகளில் அழிவற்ற சக்திகளோடு அதோமுகன் ஆன இறைவனும் திகழ்கின்றான்.

இரண்டாம் தந்திரம் - 21. சிவ நிந்தை

#526. கிளியும், பூனையும்

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அழிவு உறுவார் அமராபதிநாடி
எளியன் என்று ஈசனை நீசர் இகழின்
கிளி ஒன்று பூஞையால் கீழது ஆகுமே.

தெளிந்த ஞானம் பெற்ற மேலோர் ஈசனைச் சிந்தையினுள்ளே தேடி அவன் அருளைப் பெறுவர். தெளிந்த அறிவற்ற கீழோர் சிவபிரான் எளியவன் என்று எண்ணி அவனை இகழ்ந்து பேசினால், அவர்கள் கதி பூனையின் கையில் அகப்பட்ட ஒரு கிளியின் கதி போல ஆகிவிடும்.

#527. வானவர் தானவர் சிவனை அறியார்

முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
அளிந்து அமுது ஊறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க்கு அல்லது தாங்க ஒண்ணாதே.

நெஞ்சில் அன்பின் ஈரம் இல்லாத வானவர்களும், தானவர்களும் காமத்தால் கெட்டுப் போனவர்கள் ஆவர். அவர்களால் அதோமுகத்தில் விளங்கும் இறைவன் பெருமையை உணர இயலாது. அன்பால் கசிந்து அமுதம் சுரக்கும் ஈசனைத் தம் உடலில் தேக்கித் தாங்குபவர்களால் மட்டுமே அவனை உணர முடியும்.

#528. பகை ஈசனை மறைக்கும்

அப்பகையாலே அசுரரும், தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை ஆகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்று பத்து ஆமே.

தீராத பகைமை பூண்ட அசுரர்களும் அமரர்களும் உய்வு பெறாமலேயே அழிந்து போயினர். எந்த விதமான பகைமை பூண்டாலும் இறைவனை அடைய முடியாது. விளையாட்டாகப் பகைமை பூண்டாலும் அது வினையாக மாறி ஒன்றுக்குப் பத்துத் தீமைகள் செய்து விடும்.

#529. நானே விகிர்தன்!

போகமும் மாதர் புலவி அது நினைந்த
ஆகமும் உள்கலந்து அங்கு உளர் ஆதலில்
வேதியர் ஆயும் விகிர்தன் ஆம் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பு ஒழிவாரே.

அந்தணராகப் பிறந்திருந்த போதிலும் பெண்ணின் கூடலையும், ஊடலையும் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதாலும், “நானே பிரம்மம்” என்று எண்ணுவதாலும், ஈசனைப் பற்றிய நினைப்புகளை அறவே ஒழித்து விடுவர்.

இரண்டாம் தந்திரம் - 22. குரு நிந்தை

குருவைப் பழித்தல் குரு நிந்தை ஆகும். அது விளைவிக்கும் துன்பங்களைப் பற்றி அறிவீர்.

#530. ஞானம் வேண்டுமெனில்…

பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை யுளைவன சொல்லுவர்
சுற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார் பெரும் பேறே.

ஞானம் பெற்ற மேலோரையும் கீழ்மக்கள் பேண மாட்டார்கள். தம்முடைய உற்றார்களையும் மனம் வருந்தும்படிச் செய்வார்களே. கற்று அறிந்த குருவிடம் பொருந்தியவரே ஞானம் அடைய முடியும். அவரை அல்லாது வேறு எவரால் ஞானம் அடைய முடியும்?

#531. நாத ஒலியை எழுப்பி விடுவார்

ஓரெழுத்து ஒருபொரு ளுணரக் கூறிய
சீரெழுத்தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்திங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் பழகுவர் மண்ணிலே.

ஓரெழுத்து மந்திரம் ஆகிய பிரணவத்தின் பொருளை மாணவருக்கு உணர்த்தியவர் குருநாதர். அதன் நாதத்தை அவனுள் எழுப்பியவர் குருநாதர். அத்தகைய குருவின் மனத்தை நோகடிக்கும் மாணவன் ஊர் முழுவது வீணே அலைந்து திரியும் நாயாகப் பிறப்பான். ஒரு யுகம் வரையில் வெறும் ஓரறிவுள்ள ஒரு புழுவாகப் பிறந்து உலகில் உழல்வான்.

#532. ஆவியும் பொருளும் கெடும்!

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

இல்லற ஞானிகளும், தத்துவ ஞானிகளும் உள்ளம் வருந்தும்படி நடந்து கொண்டவர்கள் தம் இனிய ஆவியையும் செல்வதையும் ஓர் ஆண்டுக்குள் இழந்து விடுவர். இது சத்தியம். சதாசிவத்தின் மீது ஆணை.

#533. தீச் செயலின் பரிசு!

மந்திரமோ ரெழுத்து துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூருறு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

ஓரேழு மந்திரமாகிய பிரணவத்தை உபதேசித்த தவ சீலரான குருவின் உள்ளத்தை வருத்தம் அடையச் செய்தவன் இழிந்த நாயாக நூறு பிறவிகள் எடுப்பான் . தாழ்ந்த பிறவிகள் பல எடுத்து வீணே மடிந்து போவான்.

#534. பதவி பறி போகும்!

ஈச னடியா ரிதயங் கலங்கிட
தேசமு நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாச மதாகுமே நந்நந்தி யாணையே.

சிவனடியார் தம் உள்ளம் கலங்கினால் அப்படிக் கலங்கச் செய்தவனின் தேசம், நாடு, போன்ற எல்லாச் சிறப்புகளும் அழிந்து போய் விடும். இந்திரனின் ஆட்சியாயினும், மன்னவன் ஆட்சியாயினும் அது நஷ்டமாகி விடும். இது எம் சிவபெருமான் இட்ட ஆணை.

#535. பொய் புகன்றால் துன்பம்!

சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமும் தங்காது
தொன்மார்க்க மாய துறையு மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமுமாமே.

நன்னெறியைப் புகட்டிய நல்ல குருவிடம் பொய் சொல்லல் ஆகாது. ஒருவன் குருவிடம் அவ்வாறு பொய் பேசினால், அவன் பெற்றிருந்த தவம் அழியும். குருவிடம் பெற்ற உபதேசமும் நிலைத்து நிற்காது. பழைய உபதேசங்களும், கற்று அறிந்திருந்த நன்னெறிகளும் மொத்தமாக மறந்து போகும். அவன் ஆன்ம வளர்ச்சியின் அத்தனை வழிகளும் அடைபட்டு விடும். கொடிய வறுமை வந்து சேரும்.

#536. ஞான நெறியே சிறந்தது

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதி போன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர் நிற்கத் தானறக்
கைப்பிட்டுண்பான் போன்றுங் கன்மி ஞானிக்கொப்பே.

கையில் அகப்பட்ட மாணிக்கத்தை எடுத்துக் கொள்ளாமல் காலில் அகப்ட்ட கல்லைச் சுமப்பது அறிவின்மையாகும். கைவசம் உள்ள நெய், பால், தயிர் போன்றவற்றை உண்ணாமல் வெறும் பிட்டை எடுத்து உண்பதும்

அறிவின்மையாகும். ஞான நெறியைத் துறந்து விட்டு கன்ம நெறியைத் தேர்ந்தெடுப்பதும் இது போன்ற அறிவின்மையே ஆகும்.

இரண்டாம் தந்திரம் - 23. மயேசுர நிந்தை

மகேசுரரைப் பூசை செய்பவர் மயேசுரர். அவரை நிந்தனை செய்வோர் அடையும் தீமைகளை இப்பகுதி எடுத்துரைக்கின்றது.

#537. நரகக் குழி

ஆண்டா னடியார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவ ரையமேற் றுண்பவர்
ஆண்டானடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்ந்த நரகாகுமே.

சிவன் அடியவர்கள் உலக இயல்பிலிருந்து மாறுபட்டவர்கள். அவர்கள் வயிறு பசிக்கும் போது மட்டும் ஐயம் ஏற்று உண்பவர்கள். அத்தகைய உயர்ந்த சிவனடியார்களை நிந்திப்பவர்கள் தாழ்ந்த நரகக் குழியை அடைவார்கள்.

#538. சிவ போகம்

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன் வயம்
போன பொழுதே புகுஞ் சிவ போகமே.

சிவஞானியைத் தூற்றுபவன் நல்வினைகளில் இருந்து நீங்கித் துன்பம் அடைவான். சிவஞானியயரை வணங்குபவன் தீவினைகள் நீங்கி இன்பம் அடைவான், . அடியாரிடம் செல்லும் போதே அவர்களுக்குச் சிவபோகம் கைக் கூடி விடும்.

இரண்டாம் தந்திரம் - 24. பொறையுடைமை

பொறுத்துக் கொள்ளும் தன்மை. உடலில் உள்ள அமுதம் வற்றிடாமல் பொறுத்தல் பொறை நிலை ஆகும்.

#539. அமுதம் சுரக்கும்

பற்றிநின்றார் நெஞ்சில் பல்லி தான் ஒன்றுஉ ண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாது ஒழிவது மாகமை ஆமே.

யோகியர் மெய் நெறியைப் பற்றிக் கொண்டு அதனின்றும் வழுவாமல் நிற்பார். அவர்கள் உள்ளத்தை 'மெய்ப்பொருளுடன் கூட வேண்டும்' என்ற எண்ணம் உடும்பு போலப் பற்றிக் கொண்டு இருக்கும்.

அது மூக்கு நாக்கு இவற்றின் செயல்களை அழித்து விடும். பிராண வாயு கீழ் நோக்கிச் செல்லாது தடுக்கும். மன ஓட்டதை ஒடுக்கும். அப்போது அமைதியான மன மண்டலத்தில் அமுதம் சுரக்கும்.

#540. ஞானி மேலானவன்

ஓலக்கம் சூழ்ந்த உலப்பு இலி தேவர்கள்
பால் ஒத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
"மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத்து இவன் மிக நல்லவன்" என்றாரே.

பால் ஒத்த மேனி கொண்ட ஈசனின் பதம் பணிவதற்காக அவன் கொலு மண்டபத்தைச் சூழ்ந்து நின்றனர் அழிவில்லாத அமர்கள். அப்போது ஈசன் அவர்களிடம்," பொறுமையில் சிறந்த இந்த ஞானி மாலுக்கும் அயனுக்கும் தலைவன் ஆவான். இவன் உலகத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தவன் " என்ற சொன்னான்.

#541. இறைவனை அடையலாம்

ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கை தொழ
ஊனை விளைத்திடு மும்பர் தம் மாதியை
யேனை விளைந்தருள் எடடலுமாமே.

மெய்ஞானம் கை கூடப் பெற்ற ஒரு ஞானிக்கு அவர் உடலின் கருவிகள் கரணங்கள் என்னும் படை ஏவல் செய்யும். அவரை அனைவரும் கைதொழுவர். உடலை மாற்றி அளிக்கும் தேவாதிதேவனை அவர் ஞானத்தாலே அடைய முடியும்.

#542. இலயம் உண்டாகும்

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகையாலும் பற்றிப் பதம் செயும்
கொல்லையின் நின்று குதி கொள்ளும் கூத்தனுக்கு
எல்லை இலாத இலயம் உண்டாமே.

பல வகையான இன்ப துன்பங்களை உயிர்களுக்குத் தருவான் சிவன். அந்த உயிரின் பக்குவத்துக்கு ஏற்றபடி அதன் உடலிலும் உள்ளத்திலும் பல விதமான அனுபவங்களைத் தந்து மேலும் பக்குவம் அடையச் செய்வான். மூலாதாரத்தில் நின்று கூத்தாடும் பெருமான் ஐந்தொழில்களை நிகழ்த்துவது அந்தக் கூத்தின் ஒருமைப்பாடு ஆகும்.

இரண்டாம் தந்திரம் -
25. பெரியாரைத் துணைக் கோடல்

ஞானம் மிகுந்தவரைத் தனக்குத் துணையாக ஏற்றுக் கொள்ளல்.

#543. பெரியவர் துணை

ஓடவல் லார் தமரோடு நடாவுவன்
பாடவல் லார் ஒலி பார்மிசை வழங்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர் பிரானொடும்
கூடவல் லார் அடி கூடுவன் யானே.

தலப்பயணம் செய்பவர்களோடு சேர்ந்து கொண்டு நானும் தலப்பயணங்கள் செய்வேன்.இன்னிசை பாடுபவர்களின் இசையைக் கேட்டு நான் இன்பம் அடைவேன். உள்ளத்தில் தன்னைத் தேடுபவர்களுக்கு அருளும் சிவனோடு பொருந்தும் திறன் பெற்றவர்களின் திருவடிகளில் நானும் பொருந்துவேன்.

#544. நெஞ்சே நீயும் வா!

தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகும்
நீயிடர்ப் பட்டிருந்தென் செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னோடும் போது கண்டாயே.

படர்வதற்கு கொழுகொம்பு இல்லாத தளிரைப் போல வாட்டம் அடைந்தாலும், மன உறுதி கொண்டவர் தன் மனத்தின் மீது அன்பு வைத்து அதன் வழிப்படி எல்லாம் செல்வதில்லை!

நீ மட்டும் தனியாயாக இருந்து கொண்டு என்ன செய்வாய் என் நெஞ்சமே? பெரியாரைக் காண நான் போகும் போது நீயும் என்னுடன் வருவாய்!

#545. சான்றோர் சகவாசம்

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவார் சிவதத்துவத்தை
நெறிதான் மிக மிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்பமாமே.

உண்மை அறிவு பெற்ற சான்றோர் தேவதேவனை விரும்பி அவனோடு பொருந்தி இருப்பார். அவர்கள் தத்துவங்கள் அனைத்திலும் உயர்ந்த சிவ தத்துவத்தைப் பெறுவார். நல்ல நெறியில் நிற்பவர்களுக்கும் உபதேசிக்க வல்ல பெரியாருடன் சேர்ந்து இருப்பது பெரும் இன்பத்தைத் தரும்.

#546. சிவநெறி

தார்சடை யான் தன் தாமராய் உலகினில்
போர் புகழா எந்தை பொன்னடி சேருவர்.
வாய் அடையா, உள்ளம் தேவர்க்கு அருள் செய்யும்
கோ அடைந்து அந்நெறி கூடலும் ஆமே.

உலக வாழ்வில் உழல்பவர்கள் சிவனைத் துதிக்காமல் இருக்கலாம். பெரியவர்களுடன் கூடி இருப்பவர்கள் சிவபெருமானுக்கு உறவினராகி அவன் திருவடிகளையே சென்று அடைவர்.. மௌனமாக சிவனை ஆன்மாவில் துதிப்பவர்களுக்குச் சிவன் அருள் செய்வான். அந்தச் சிவ நெறியில் இணைவது என்பது சான்றோர் சகவாசத்தாலேயே நிகழும்.

#547. சிவபுரம்

உடையான் னடியார் அடியார் உடன்போய்ப்
படையா ரழல்மேனிப் பதி சென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
வுடையான் வருகென ஓலைமென்றாரே.

எல்லாம் உடையவன் சிவபெருமான். அவன் அடியாருக்கு அடியாராகிச் சிவபுரத்தில், சிவ சோதியில் பொருந்தி நின்றார் ஒருவர். அவர் என்னைக் கண்டதும்

சிவபெருமானிடம் விண்ணப்பித்தார். என்னை அழைத்து வருமாறு சிவன் பணித்தான். கடை வாயிலில் நின்றவர் எனக்கு அடைக்கல முத்திரியைக் காட்டினார். என்னை உள்ளே வருமாறு அழைத்தார்.

#548. பெரியார் துணை

அருமைவல் லோன் கலை ஞானத்துள் தோன்றும்;
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லோன் உணர்ந்து ஊழி இருக்கும்;
திருமைவல் லாரோடு சேர்ந்தனன் யானே.

சான்றோரோடு கூட வல்லவன் கலை ஞானத்துடன் விளங்குவான். பெருமை உடைய ஞானம் பெற்றவன் பிறவிச் சுழலிலிருந்து வெளிப்படுவான். உரிமையோடு பழகுபவன் சிவனை உணர்ந்து என்றும் அழிவில்லாமலிருப்பான். அருமை பெருமை வாய்ந்த சான்றோர்களின் சிறந்த துணையை அடைகின்ற பெரும் பேற்றைப் பெற்றேன் நான்.

இரண்டாம் தந்திரம் முற்றப் பெற்றது.

மூன்றாம் தந்திரம்

மூன்றாம் தந்திரம் - 1. அட்டாங்க யோகம்

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு உறுப்புக்களை உடையது அட்டாங்க யோகம் . இவை இறைவனை அடைவதற்கான வழிகள் ஆகும்.

#549. யோகம் செய்தல்

உரைத்தன வற்கரி ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிரைமுறை எண்ணி
பிரைச்சதம் எட்டும் பேசியே நந்தி
நிறைத்த இயம நியமம் செய்தானே.

பலவகையாகப் பேசப்படுகின்றது உயிர் மூச்சு. பிராணாயாமத்தில் அது நன்கு கட்டுப்படுத்தப்பட்டு கழுத்துக்கு மேலும் கீழும் பன்னிரண்டு அங்குலங்கள் இயக்கப்படுகின்றது. இதை எடுத்துக் கூறிய குருநாதர் தீமைகளைப் போக்கும் இயமத்தையும், நன்மைகளைத் தரும் நியமத்தையும் கற்பித்தார்.

#550. அட்டாங்க யோகம்

செய்த வியாம நியமஞ் சமாதி சென்று
உய்ய பராசத்தி உத்தர பூருவம்
மெய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த வுரை செய்தவன் இந்நிலை தானே.

இயம, நியமங்களில் முறைப்படி நிற்க வேண்டும். சமாதியில் நன்கு பொருந்த வேண்டும். முன்னால் இருந்து வழி காட்டியும் பின்னல் இருந்து தாங்கிக் கொண்டும் இருக்கும் பராசக்தியின் துணையைப் பெற வேண்டும். கவசம், நியாசங்கள், முத்திரைகள் இவற்றை சரிவரச் செய்ய வேண்டும். உய்வதற்கு இதுவே நல்ல வழியாகும்

#551. பிறவிப் பிணி இல்லை!

அந்நெறி இந்நெறி என்னாது அட்டங்கத்
தந்நெறி சென்று சமாதியில் நின்மின்;
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில்ஏகலாம்;
புல்நெறி ஆகத்தில் போக்கு இல்லை ஆகுமே.

இறைவனை நாடுவதற்கு அது நல்ல வழியா இது நல்ல வழியா என்று மயங்க வேண்டாம். அட்டாங்க யோக நெறியில் நின்று சமாதி நிலையை அடையுங்கள். அந்த நெறியில் சென்று அந்நிலையில் பொருந்தியவர்களுக்குச்

சிவப்பேறு கிட்டும். மெய் ஞானமும் கிட்டும். மெய் ஞானம் கிடைக்காமல் போனாலும் மீண்டும் ஓர் உடலில் வந்து பொருந்துகின்ற பிறவிப்பிணி அழிந்து விடும்.

#552. எட்டு நெறிகள்

இயம நியமமே எண்ணிலா வாதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாராஞ்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறு மட்டாங்கம் ஆவதுமாமே.

இயமம், நியமம், ஆசனங்கள், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டும் அட்டாங்க யோகத்தின் எட்டு அங்கங்கள் ஆகும்.

1. இயமம் = தீயவற்றைச் செய்யாது இருத்தல்.
2. நியமம் = நல்லவற்றைச் செய்தல்
3. ஆசனங்கள் = பலவிதமான உடலின் இருக்கை நிலைகள்
4. பிராணாயாமம் = மூச்சுக் காற்றைக் கட்டுப் படுத்துவது
5. பிரத்தியாகாரம் = மனத்தைக் கட்டுக்குள் அடக்கி வைப்பது.
6. தாரணை = கட்டுக்குள் உள்ள மனத்தை நிலை பெறச் செய்வது.
7. தியானம் = இடையறாது ஒரே பொருளைச் சிந்தனை செய்வது.
8. சமாதி = சிவனும், சீவனும் ஒன்றி இருத்தல்.

மூன்றாம் தந்திரம் - 2. இயமம்

இயமம் = தீயவற்றைச் செய்யாது இருத்தல்.

#553. நால்வருக்கு உரைத்தான் சிவன்

எழுந்து நீர் பெய்யினும் எட்டு திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர் சடையோடே
யழுந்திய நால்வர்க் கருள் புரிந்தானே.

“எட்டுத் திசைகளிலும் மேகங்கள் குழுமிக் கன மழை பொழிந்தாலும் நன்மை தரும் இயமங்களைத் தவறாமல் செய்யுங்கள்!” என்று கொழுவிய, குளிர்ந்த, பவள நிறச் சடையுடைய சிவபெருமான் சனகர் முதலான நால்வருக்கும் உரைத்தான்.

#554. இயமத்தில் நீக்க வேண்டியவை

கொல்லான், பொய்கூறான், களவுஇலான், எண் குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுசெய்ய
வல்லான் பகுத்து உண்பான் மாசு இலான் கள் காமம்
இல்லான் இமயத்து இடை நின்றானே.

ஒரு உயிரையும் கொல்லாதவன், பொய் சொல்லாதவன், களவு செய்யாதவன், ஆராய்ச்சி செய்யும் தன்மை உடையவன், நல்லவன், பணிவு கொண்டவன், நீதி நேர்மைகளிலிருந்து பிறழாதவன், தன் உடமைப் பொருட்களைப் பிறருக்குப் பகிர்ந்து அளிப்பவன், குற்றமற்றவன், கள் காமம் இல்லாதவனே இயமத்தை மேற்கொள்ளத் தகுதி உடையவன் ஆவான்.

மூன்றாம் தந்திரம் - 3. நியமம்

நியமம் = நல்லவற்றைச் செய்தல்.

#555. நியமத்தில் செய்ய வேண்டியது

ஆதியை வேதத்தின் அப்பொருளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசக்தி யோடு உடன்
நீதி உணர்ந்து நியமத்தனாமே.

நியமத்தை மேற்கொள்பவன் பழமையான சிவனை, நாத வடிவானவனை, பேரொளி வீசுபவனை, மூலாதாரத்தில் அக்கினி வடிவமாக இருப்பவனை, பிரிவில்லாமல் சக்தியுடன் கலந்து நிற்பவனின் இயல்பினை அறிந்து உணர்தல் வேண்டும்.

#556. நியமத்தில் நிற்பதற்குத் தேவையானவை

தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலையெனக் காண்பவை
நேமி யீரைந்து நியமத்தானாமே.

நியமத்தில் நிற்பவன் மேற்கொள்ள வேண்டிய பத்து குணங்கள் இவை :

தூய்மை, அருள், சுருங்கிய உண்டி, பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை என்ற நல்ல குணங்களை வளர்க்க வேண்டும். காமம், களவு, கொலை இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

#557. நியமத்தில் செய்ய வேண்டியவை

தவம் செபம். சந்தோடம் ஆத்திகாந் தானம்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதி சொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்தனாமே.

நியமத்தில் உள்ளவன் செய்ய வேண்டியவை இவை:
தவம், செபம், மகிழ்ச்சி, தெய்வ நம்பிக்கை, கொடைத்தன்மை, சிவ விரதம், சிந்தாந்த சிரவணம், வேள்வி செய்தல், சிவபூசை, பேரொளி தரிசனம் என்னும் பத்து ஆகும்.

மூன்றாம் தந்திரம் - 4. ஆதனம்

ஆதனம் = இருக்கை.

இதில் யோகத்தை மேற்கொள்வதற்குத் தகுந்த இருக்கை நிலைகள் மற்றும் அவற்றின் பயன்கள் பற்றிக் கூறப்படும்.

#558. சுவத்திகாசனம்

பங்கயம் ஆதிப் பரந்தபல் ஆதனம்
இங்குள வாம் இருநாலும் அவற்றினுள்
சொங்கு இல்லை ஆகச் சுவத்திகம் என மிகத்
தங்க இருப்பத் தலைவனும் ஆமே.

பத்மாசனம் முதலிய பல ஆசனங்கள் உள்ளன. அவற்றில் எட்டு ஆசனங்கள் மிக முக்கியமானவை. சோர்வு அடையாமல் சுவத்திக ஆசனத்தில் பொருந்தி இருக்கும் திறமை பெற்றவன் ஒரு நல்ல தலைவன் ஆவான்.

#559. பத்மாசனம்

ஓரணை யப்பதம் ஊருவின் மேலேறிட்டு
ஆர வலித்ததன் மேலவைத் தழகுறச்
சேர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே.

ஒரு பக்கம் அணைந்த காலை தொடையின் மேல் ஏற்றி நன்கு இழுத்து வலது தொடையில் இடது காலையும் இடது தொடையில் வலது காலையும் வைக்க வேண்டும். இரு தொடைகளின் நடுவில் இரு கைகளையும் மலர்ந்த நிலையில் வைக்க வேண்டும். இதுவே உலகம் போற்றும் பத்மாசனம் ஆகும். (மூக்கு முனையில் பார்வையைப் பதித்து, மார்பில் முகவாய்க் கட்டையைப் பதிக்க வேண்டும்)

#560. பத்திராசனம்

துரிசுஇல் வலக்காலைத் தோன்றவே மேல் வைத்து
அரிய முழந்தாளில் அங்கைகளை நீட்டி
உருகியிடும் உடல் செவ்வே இருத்திப்
பரிசு பெரும் அது பத்திராசனமே.

குற்றம் இல்லாத வலக்காலை இடது பக்கம் தொடையின் மீது வைக்க வேண்டும். கைகளை முழங்கால்களின் மீது நீட்ட வேண்டும். தளரும் உடலைச் செம்மையாக இருத்த வேண்டும். இதுவே பத்திராசனம்.

#561. குக்குட ஆசனம்

ஒக்க அடி இணை உருவில் ஏறிட்டு
முக்கி உடலை முழங்கைதனில் ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசனம் கொள்ளலும் ஆமே.

பத்மாசனத்தில் சொல்லப் பட்டது போல இரண்டு பாதங்களையும் தொடைகளின் மேல் ஏற்றி வைக்க வேண்டும். கணுக் காலுக்கும் தொடைக்கும் இடையே இரு கைகளையும் நுழைத்துத் தரையில் பதிக்க வேண்டும். முக்கி உடலை மேலேற்றி முழங்கை வரையில் தூக்க வேண்டும். சம நிலை அறிந்து கொண்டு உடல் அசையாதபடி இருத்தல் குக்குட ஆசனம் ஆகும்.

#562. சிம்மாதனம்

பாதம் முழந்தாளில் பாணிகளை நீட்டி
ஆதரவோடும் வாய் அங்காந்து அழகுறக்
கோது இல் நயனம் கொடி மூக்கிலே உறச்
சீர்திகழ் சிங்காதனம் எனச் செப்புமே.

அமர்ந்து பாத நுனிகளை நிலத்தில் ஊன்ற வேண்டும். கைகளை முழங் கால்களின் மீது நீட்ட வேண்டும். வாயை அகலத் திறந்து கொண்டு கண் பார்வையை மூக்கின் நுனியில் இருத்த வேண்டும். இதுவே சிங்க ஆசனம் ஆகும்.

#563. ஆதனங்கள் பல

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரம் சுகாதனம் மோரேழும்
உத்தமு மாமுது வாசன மெட்டெட்டுப்
பத்தோடு நூறு பல்லாசனமே.

பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சோத்திரம், வீர, சுகாதனம் என்ற ஏழும் மேலானவை. இவ்வண்ணம் நூற்று இருபத்தாறு வகைப்பட்ட ஆசனங்கள் உள்ளன.

மூன்றாம் தந்திரம் - 5. பிராணாயாமம்

பிராண வாயுவைக் கட்டுப் படுத்துவது பிராணாயமம் ஆகும். ஏதாவது ஒரு ஆசனத்தில் இருந்தவாறு இதைச் செய்ய வேண்டும்.

#564. பிராண ஜெயம்

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டு ஏறும் குதிரை மற்று ஒன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாது போய்ப்
பொய்யரைத் துள்ளி விழுந்திடும் தானே.

ஆன்மா ஐம் பொறிகளின் தலைவன். உடலுக்கும் ஆன்மா தலைவன். அந்த ஆன்மா உய்வதற்கு உதவிடவும் மனம் என்னும் குதிரையைக் கட்டுப் படுத்தவும் பிராணன் என்ற ஒன்று உள்ளது. உடலைப் பற்றாமல் அகண்டதைப் பற்றி நிற்பவர்களுக்கு அவை வயப்படும். உடலைப் பற்றி நிற்பவர்களுக்கு அவை வசப்படா.

#565. குருவருள் வேண்டும்

ஆரியன் நல்ல குதிரை இரண்டு உள,
வீசிப் பிடிக்கும் விரகு அறிவார் இல்லை
கூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.

மனம் என்னும் ஆரியனுக்கு உள்ளன இரண்டு குதிரைகள். அவை பிராணன் அபானன் என்பவை ஆகும். அவற்றைச் வீசிப் பிடிக்கும் உபாயத்தை அறிவது மிகவும் கடினம். பிராண ஜெயம் பெற்றுள்ள குருநாதரின் அருள் கிடைத்தால் அவ்விரு குதிரைகளையும் சேர்த்துப் பிடித்து பிராண ஜயத்தை அடைய முடியும்

#566.சோம்பல் நீங்கும்

**புள்ளினு மிக்க புரவியை மேல்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களி தரும்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் முணர்வுடையோர்க்கே.**

பறவையை விட வேகமானது பிராணன். அது சிரசை நோக்கிச் செல்லும் பொழுது கள் அருந்தாமலேயே மனிதனுக்கு மகிழ்ச்சி ஏற்படும். சோம்பல் மறைந்துவிடும். சுறுசுறுப்புத் தோன்றும். பிராணனும் மனமும் சிரசை நோக்கிப் பாயும். மனம் உடைய மனிதருக்கு இந்த நன்மையைக் கூறினேன்.

#567. பிறவி நீங்கும்

**பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்
பிராணன் இருக்கின் பிறப்பு இறப்பு இல்லை
பிராணன் மடை மாறிப் பேச்சு அறிவித்துப்
பிராணன் அடைபேறு பெற்று உண்டீர் நீரே.**

நாமங்களும் ரூபங்களும் வேறு வேறான உலகத்தை எண்ணாது இறைவனை எண்ணி இருந்தால் மனமும் பிராணனும் கட்டுக்குள் அடங்கும். அப்போது பேச்சு இராது. பிறப்பு இறப்பு என்பவை இல்லாமல் போகும். பிராணன் கீழ் நோக்கிச் செல்லும் பொழுது பேச்சு உண்டாகும். பிராணன் ஒடுங்காதவர் பிறப்பு இறப்பு இவற்றில் சிக்கி உழல்வர்.

#568. பிராணாயாமம் செய்யும் விதம்

**ஏறுதல், பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபது நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்
மாறுத லொன்றின்கண் வஞ்சகமாமே.**

பூரகம்: பதினாறு மாத்திரையளவு இடது நாசித் துவாரத்தால் காற்றை உள்ளுக்கு இழுத்தல்.

கும்பகம்: இழுத்த காற்றை அறுபத்து நான்கு மாத்திரை அளவு உள்ளே நிறுத்துதல்

ரேசகம்: வலது நாசித் துவாரத்தால் நிறுத்திய காற்றை மெல்ல வெளியேற்றுவது .

இதற்கு மாறாக வலது நாசித் துவாரத்தில் காற்றை இழுத்து இடது நாசித் துவாரத்தின் வழியே வெளியேற்றுவது வஞ்சனை ஆகும்.

#569. மாறாத இளமை

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு அளியனுமாமே.

காற்றை இழுத்துத் தன் வயப்படுத்திப் பிராணாயாமம் செய்தால் உடல் பளிங்கைப் போலத் தூய்மை அடையும். முதுமை எய்தினாலும் தோற்றத்தில் இளமை நிலவும். குருவின் அருளையும் பெற்று விட்டால் அவன் உடல் காற்றை விட மென்மையானதாகி விடும். அவன் எங்கும் செல்லும் வல்லமை பெற்று விடுவான்

#570. இடகலை தரும் சிறப்பு

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அது செய்ய ஆக்கிக்கு அழிவு இல்லை
அங்கே பிடித்தது விட்டு அளவும் செல்ல
சங்கே குறிக்கத் தலைவனும் ஆமே.

எந்த இடத்தில் பிராணாயாமம் செய்தாலும் இடது நாசி வழியாகவே பூரகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உடலுக்கு அழிவு என்பதே இல்லை. கும்பகம் செய்து பிராணன் மேலே செல்லும் அளவுக்கு ஏற்பச் சங்க நாதம் ஏற்படும். மேன்மைகள் கிடைக்கும்.

#571. கும்பகத்தின் பயன்.

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றை பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

இடைக்கலை பிங்கலை வழியாகக் காற்றை உள்ளே இழுத்துப் பூரித்துக் கும்பகம் செய்யும் முறையை அறிந்தவர்கள் இல்லை. அங்ஙனம் கும்பகம் செய்யும் முறையினை அறிந்தவர் யமனின் வருகையை விலக்கும் ஆற்றலைப் பெறுவார்.

#572. அருள் பெறலாம்

மேல் கீழ் நடுப்பக்கம் மிக்கு உறப் பூரித்துப்
பாலாம் இரேசகத்தால் உட்பதிவித்து
மாலாகி உந்தியுள் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள் பெறலாமே.

தொண்டை, மூலாதாரம், விலாப் பகுதிகள் ஆகியவை காற்றால் நிரம்பும் வண்ணம் செய்ய வேண்டும். ரேசகத்தால் உறுப்புக்கள் ஒன்றுடன் ஒன்று பதியும்படிச் செய்ய வேண்டும். வயிற்றில் கும்பகம் செய்து கொண்டு வந்தால் ஆலகால நஞ்சினை உண்ட சிவபெருமானின் அருளைப் பெறலாம்.

#573. கும்பகத்தின் அளவு

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏம்உற்ற முப்பத்திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்டு
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

இடக்கலை வழியே பதினாறு மாத்திரை பூரகம் செய்ய வேண்டும். பிங்கலை வழியே முப்பத்திரண்டு மாத்திரை ரேசகம் செய்ய வேண்டும். கும்பகம் அறுபத்து நான்கு மாத்திரைகள் செய்ய வேண்டும். காற்றை வெளியே விட்ட பின்பு காற்றை மீண்டும் உட்கொள்ளாமல் அறுபத்து நான்கு மாத்திரைகள் இருக்க வேண்டும்.

#574. காலனைக் கடக்கலாம்

இட்டத் தவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப்படத் தச நாடியும் பூரித்து,
கொட்டிப் பிராணன் அபானனும் கும்பித்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே.

இவ்வுடல் தளர்ச்சி அடையாமல் இரேசகம் செய்ய வேண்டும். பத்து நாடிகளும் விம்மும்வண்ணம் காற்றை உள்ளே இழுத்து நிரப்ப வேண்டும். பிராணன் அபானன் இரண்டும் சேர்ந்து நேராய் நிமிர்ந்து இருந்தால் யம பயம் இராது.

தச நாடிகள்: சுத்தி, அலம் புடை, இடை, காந்தாரி, குரு, சங்கினி, சிங்குவை, சுழுமுனை, பிங்கலை, புருடன்.

பிராணன் அபானன் கும்பித்தல்: மூலாதாரமும் தொண்டையும் நெருக் குண்ணலால், பிராணனும் அபானனும் நெருக்குண்டு சுழுமுனை திறந்து இருத்தல்.

#575. உடலில் மாற்றம் தோன்றும்

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்படவுள்ளே நின்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.

உயிர்ப்பாக வெளியே திரிகின்ற காற்றை முறையாக உடலின் உள்ளே கும்பகம் செய்து தூய்மைப் படுத்தினால், உடலில் ரத்த ஓட்டம் நன்றாகும். உடல் சிவந்த நிறம் அடையும். தலை முடி நன்கு கறுக்கும். ஒளி வடிவான ஆத்மா உடலில் நிலையாக நிற்பான்.

#576. திருவைந்தெழுத்து

கூடம் எடுத்துக் குடி புக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளின் கோல அஞ்செழுத்து ஆமே.

குழந்தையாக இருக்கும் போது பிராண சக்தி பன்னிரெண்டு விரல் அளவு உடலின் உள்ளே சென்றும் புகுந்தும் இருந்தது . வயது முதிரும் பொழுது பிராண சக்தி வெறும் எட்டு விரல் அளவே செயல்படுகின்றது. தொண்டைக்கு மேலே நான்கு அங்குலம் தலைக்குள் செல்வதில்லை. தடைப்பட்ட அந்த நான்கு விரல் அளவு தலையில் செல்லுமாறு பிராணாயாமப் பயிற்சி செய்தால் அவர் திருவைந்தெழுத்தின் வடிவத்தைப் பெறுவார்.

ஐந்தெழுத்து: அ , உ , ம , நாதம், விந்து.

#577. துரிய நிலை

பன்னிரண் டானைக்குப் பகலிர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாக னறிகிலன்
பன்னிரண் டானையைப் பாக னறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகலிர வில்லையே.

பன்னிரண்டு விரல் அளவுச் செயல்படும் பிராணன் என்னும் கதிரவனுக்குப் பகல், இரவு என்ற கால பேதங்கள் உண்டு. மூக்கிலிருந்து தொண்டை வழியாகக் கீழ் நோக்கிப் பாயும் பிராணனை ஆன்மா அறிவதில்லை. கீழே பாயாமல் மேலே தலையில் பாயும் பிராணனை ஆன்மா அறிந்து கொள்ளும் அப்போது இரவு பகல் என்னும் பேதம் இன்றிக் கதிரவன் எப்போதும் ஒளி வீசுவான். அப்போது நாம் இரவு பகல் அற்ற துரிய நிலையில் இருக்கலாம்.

மூன்றாம் தந்திரம் - 6. பிரத்தியாகாரம்

வெளி நோக்கிச் செல்லும் மனத்தை அடக்கி உள்ளேயே நிறுத்துவது பிரத்தியாகாரம். இது அடயோகம், இலய யோகம், நியமம், ஆசனம், இலம்பிகா யோகம், மந்திர யோகம், ராஜ யோகம், சிவயோகம் என்னும் பல வகைப்படும்.

#578. சிவனை உணரலாம்

கண்டு கண்டு உள்ளே கருத்துஉற வாங்கிடில்
கொண்டு கொண்டு உள்ள குணம் பல காணலாம்
பண்டு உகந்து எங்கும் பழமறை தேடியை
இன்று கண்டு இங்கே இருக்கலும் ஆமே.

வெளியே சென்று பழக்கப்பட்டுவிட்ட மனதை உடலின் உள்ளேயே பொருந்தும்படிச் செய்தால் சிறிது சிறிதாக மன இருள் விலகும். எங்கும் எப்போதும் மறைகளால் தேடப்படும் பரம்பொருளை நம் உடலின் உள்ளேயே நம்மால் உணர முடியும்.

#579. மனத்தை மந்திரம் உள்ளிழுக்கும்

நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்த பின்
கூவிக் கொண்டு ஈசன் குடியிருந்தானே.

குண்டலினி சக்தி நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலத் தொலைவில் மூலாதாரத்தில் உள்ளது. அதை எழுப்பி மேலே செலுத்தும் பிரசாத மந்திரத்தை எவரும் அறியவில்லை. அந்த மந்திரத்தை நாம் அறிந்து கொண்ட பின்னர் ஈசன் நாத மயமாக நம் தலையில் விளங்குவான்.

#580. செழுஞ்சுடர்

மூலத்து இருவிரல் மேலுக்கு முன் நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ் நின்ற
கோலித்த குண்டலினி உள்எழும் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே.

குண்டலினி சக்தி மண்டலமிட்டு இருக்கும் இடம் எது?

குண்டலினி மூலாதாரத்துக்கு இரண்டு விரல் அளவு மேலே இருக்கும். யோனிக்கு இரண்டு விரல் அளவு கீழே இருக்கும். மண்டலமிட்டு வட்ட வடிவமான குண்டலினியில் எழும் செஞ்சுடர் கொப்பூழுக்குக் கீழே நான்கு விரல் தொலைவில்

உள்ளது. இது தலை உச்சியில் இருக்கும் பிரமதந்திரம் என்னும் தொளை வரையில் செல்லக் கூடியது.

#581. அழியாத உடல்

நாசிக்கு அதோமுகம் பன்னிரண்டு அங்குலம்
நீ சித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப் பெய்தும்
தேகத்துக்கு என்றும் சிதைவு இல்லையாகுமே.

நாசிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலத் தொலைவில் இதயம் உள்ளது. மனத்தை இழுத்து அந்த இதயத்தின் மேல் பொருத்தி செழுஞ்சுடரை நினைக்க வேண்டும் அப்போது அஷ்ட மாசித்திகளும் அரச யோகமும் சித்திக்கும் . இவ்வகை தியானம் உடல் அழியாமல் பாதுகாக்கும்.

#582. ஆனந்தப் பரவசம்

சோதி இரேகைச் சுடர் ஒளி தோன்றிடின்
கோதுஇல் பரானந்தம் என்றே குறிக் கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலஒளி எய்தினால்
ஓதிய தன் உடல் உன்மத்தம் ஆமே.

இரண்டு மின்னற் கொடிகள் பின்னிக் கொண்டு ஓடுவது போல ஓர் ஒளி தோன்றினால் அது குற்றமற்ற மேலான ஆனந்தத்தைத் தரும். நிலவின் ஒளி கழுத்துப் பகுதியில் தோன்றினால், பிரத்தியாகரப் பயிற்சி செய்பவனின் உடலில் ஆனந்தப் பரவசம் உண்டாகும்.

#583. காலத்தை வெல்லும் முறை

மூலத் துவாரத்தை மொக்கர மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே.

பிரத்தியாகாரத்தில் விசுத்திக்கு மேலும் செல்ல விரும்புவையாயின், கும்பகத்தால் நின்ற வாயு கீழே போகாமல் எருவாய்ப் புழையை இறுக அடைத்து, (அவ் வாயு மேல் அண்ணத்தில் உள்ள துளை வழியாக மூக்குத் துளையை அடைந்து புறப்படுமாறு) மனத்தை அவ் அண்ணத்தின் துளையிடத்தே வைத்துப் புருவ நடுவில் நில் - அந்நிலையில் (அக்காற்று, கண் காதுகள் வழியாகவும் பரவிப் புறப்படும் ஆதலின்), கண்களை இமையும் கொட்டாமல் விழித்திரு. இதுவே காலத்தை வெல்லும் முறை.

#584. மனத்தை ஜோதியில் நிறுத்து

எருவிடும் வாசற்கு இருவிரல் மேலே
கருவிடும் வாசற்கு இருவிரல் கீழே
உருஇடும் சோதியை உள்க வல்லார்க்குக்
கருஇடும் சோதி கலந்து நின்றானே.

மலம் இடும் துவாரத்துக்கு இரண்டு விரல் மேலேயும், கரு இடும் துவாரத்துக்கு இரண்டு விரல் கீழேயும், உள்ள இடத்தில் விளங்கும் குண்டலினியின் சோதியினை இடையறாது நினைப்பவர்களுடன், உயிர்களுக்குப் பிறப்பைத் தருகின்ற ஈசன் பேரொளி வடிவத்தில் கலந்து நிற்பான்.

#585. எது பிரத்தியாகாரம்?

ஒருக்கால் உபாதியை, ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்து உணர்வு உன்னல், கரைதல் உள்நோக்கல்
பிரத்தியாகாரப் பெருமையது ஆமே.

சுழுமுனையை மாயை இருளாக மறைத்து நிற்கும். அதன் மூலம் ஜீவனுக்குச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் போன்ற பல விதமான அவஸ்தைகளை உண்டாக்கும். இவை விந்துதானத்தில் இருந்து நாபியின் கீழ் வரையில் குண்டலியினால் நடைபெறும். ஆனால் புருவ மத்தியில் இருள் இராது. அது ஒளி மயமாக இருக்கும். தாம் இருக்கும் இருளை விடுத்து மேலே ஒளியை நோக்கிச் செல்பவர்கள் அவஸ்தைகள் இல்லாத ஒரு தூய நிலையில் இருப்பார்கள். அவர்களின் ஜீவபோதம் அழிந்து விடும். ஆகவே மனம், உடல், நினைவு, அறியும் தன்மை ஆகியவை தாமே நின்று போகும். இதுவே உண்மையான பிரத்தியாகாரம் ஆகும்.

#586. அடையும் பயன்

புறப்பட்ட வாயுப் புகவிடாவண்ணம்
திறப்பட்டு நிச்சயம் சேர்ந்து உடன் நின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டு போகன் பெருந்தகையோனே.

மனம் அசைந்தால் அத்துடன் கூடப் பிராணனும் சலிக்கும். வெளியே புறப்பட்டுப் போன வாயு கழிந்து விடாதபடி உறுதியாக அதை உள்ளொளியில் பொருத்தி நின்றால் உள்ளம் வலிமை அடையும். அப்போது பெருமை வாய்ந்த இறைவனும் அந்தப் பேரொளியில் நிலைத்து நிற்பான். வெளியே புறப்பட்டுப் போக மாட்டான்.

#587. இறவாத தன்மை

குறிப்பினுள் உள்ளே குவலயம் தோன்றும்
வெறிப்பு இருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புஉறு சிந்தையைச் சிக்கென்று உணரில்
அறிப்புஉறு காட்சி அமரும் ஆமே.

பிரத்தியாகாரத்தில் நாம் இருக்கும் நிலையில் இருந்து கொண்டே உலகம் முழுவதையும் அறிந்து கொள்ளலாம். வெறுக்கத் தக்க இருளை நீக்கி நல்லதொரு வேறுபாட்டினைச் செய்வான் ஈசன். அவனை நாடுங்கள். சிவனை விரும்புவதில் உறுதியாக இருந்தால், சிவஞானம் பெற்று, இறவாத தன்மை கொண்ட ஒரு தேவனாக ஆகிவிடலாம்.

மூன்றாம் தந்திரம் - 7. தாரணை

உள்ளே இழுத்த மனதை நிலைபெறச் செய்தல்

#588. வாணாள்

கோணா மனத்தைன் குறிக் கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண்டு ஊடே வெளியுறத் தான் நோக்கிக்
காணக்கண், கேளாச் செவி என்று இருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழி அதுவாமே.

வெளியில் செல்லாமல் தடுக்கப்பட்ட மனத்தை ஜாலந்தர பந்தம் செய்யா வேண்டும். கழுத்தை மார்பில் நெருக்கி வைத்துக் கீழ் நோக்காமல் தடுக்க வேண்டும். நடு நாடியில் மனத்தையும் மூச்சையும் ஒன்றாகப் பொருத்த வேண்டும். வானத்தில் பார்வையைச் செலுத்த வேண்டும். காணாத கண்களுடனும், கேளாத செவிகளுடனும் இவ்வாறு இருப்பவர்களுக்கு வாழ்நாள் வளரும்.

#589. ஒலியும் ஒளியும்

மலைஆர் சிரத்துஇடை வான்நீர் அருவி
நிலை ஆரப்பாயும் நெடுநாடி ஊடுபோய்ச்
சிலைஆர் பொதுவில் திருநடம் ஆடும்
தொலையாத ஆனந்தச் சோதியைக் கண்டேனே.

மலை போன்ற தலையில் வான கங்கை எப்போதும் பாய்ந்து கொண்டிருக்கும். சுழுமுனை நாடியின் வழியே சென்றேன். பரநாதம் ஒலிக்கும்

சிற்சபையில், அற்புதக் கூத்தாடி, அகலாத ஆனந்தத்தை அளிக்கும் அந்தப் பேரொளியை நான் கண்டேன்.

590. இளமை திரும்பும்

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.

தலையின் மேல் எழுந்தருளியுள்ள சிற்சக்தி பல மாற்றங்களைச் செய்ய வல்லவள் ஆவாள். மூலாதாரத்தில் கிரியா சக்தியுடன் பொருந்தி இருக்கும் மூர்த்தியைத் தாரணையால் சிரசின் மீது கொண்டு சென்று அங்குள்ள சிற்சக்தியுடன் இணையச் செய்தால் வயது முதிர்ந்தவனுக்கும் இளமை திரும்பும். இது சிவபெருமானின் ஆணையாகும்.

#591. உடல் அழியாது

கடைவாசலைக் கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிது உள்இருத்தி
மடைவாயில் கொக்குப்போல் வந்தித்திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலும் ஆமே.

மூலாதாரத்தில் உள்ள காம வாயுவை மேல் நோக்கிச் செல்லும்படிச் செய்ய வேண்டும். நடுநாடியாகிய சுழுமுனையில் மனத்தை நிலை நிறுத்த வேண்டும். மீனுக்காகக் காத்திருக்கும் கொக்கைப் போலத் தன் முயற்சியில் மாறாத நாட்டம் கொள்ள வேண்டும். அப்போது உடல் பல ஊழிகள் வரையிலும் சிதையாமல் இருக்கும்.

#592. இல்லை கால எல்லை!

கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிர் அது காலின் நெருக்கம்
கலந்த உயிர்அது கால்அது கட்டின்
கலந்த உயிருடன் காலமும் நிற்குமே.

ஓர் உடலில் அதன் உயிர் பொருந்தியிருக்கும் கால எல்லை அந்த ஜீவனின் பிராண இயக்கத்தைப் பொருத்து அமையும். அந்த உயிரில் பிராணனின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திவிட்டால், அந்த உடலுடன் அதன் உயிர் கூடியிருக்கும் காலமும் அழியாமல் இருக்கும்.

#593. மௌனம் ஒரு செல்வம்

வாய்திற வாதார் மனத்தில் ஓர் மாடு உண்டு
வாய்திறப் பாரே வளி இட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதி இட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடில் கோழையும் ஆமே.

மௌனமாக இருப்பவர்களின் மனமண்டலத்தில் பிராணன் என்னும் ஒரு செல்வம் இருக்கும். வாய் திறந்து பேசிக் கொண்டே இருப்பவர்கள் அந்தப் பிராணச் செல்வத்தை வீணாக்கி விடுவார்கள். மௌனமாக இருப்பவர் பிராணனைச் செலுத்தி உள்ளே உள்ள ஜோதியை அறிந்து கொள்வார். சஹஸ்ரதளம் என்னும் செப்பைத் திறந்து பாராதவர்கள் வெறும் கோழைகள் ஆவர்.

#594. பெரிய பள்ளியறை

வாழலும் ஆம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயுப் புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழு சாலேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியது ஓர் பள்ளி யறையிலே.

மனத்திலிருந்து இறங்கும் வாயுவை வெளியேறி விடாதபடி நடு நாடியிலே செலுத்த வேண்டும். அப்போது ஏழு சாளரங்களையும், இரண்டு பெரிய வாயில்களையும் கொண்ட தேவரின் கோவிலில் உள்ள பெரிய பள்ளியறையிலே பல காலம் வாழலாம்.

விளக்கம்:

ஏழு சாலேகம் = ஏழு பலகணிகள் = 2 கண்கள் + 2 காதுகள் + 2 நாசிகள் + வாய் இரண்டு பெரு வாய்தல் = கரு வாய் + எருவாய் பள்ளியறை = சஹஸ்ரதளம்

#595. மனம் என்னும் குரங்கு

நிரம்பிய ஈரைந்தில் ஐந்தவை போனால்
இரங்கி விழித்திருந்து என் செய்வை பேதாய்?
வரம்பினைக் கோலி வழி செய்வார்க்குக்
குரங்கினைக் கொட்டைப் பொதியலும் ஆமே.

புலன்களைத் துய்த்து நிரம்பியுள்ளன ஐந்து ஞான இந்திரியங்களும், ஐந்து கர்ம இந்திரியங்களும்.. இவற்றில் ஐந்து ஞான இந்திரியங்களும் தம் செயல்களில் இருந்து நீங்கி விட்டால், ஐந்து கர்ம இந்திரியங்களால் என்ன செய்ய இயலும்? ஐம் பொறிகளின் எல்லையைத் தாண்டிவிட்டால் மனம் என்னும் குரங்கை எளிதாக அடக்கிவிட முடியும்.

#596. தாரணைப் பயிற்சி

முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்
முன்னூறு கோடி யுறுகதி பேசிடில்
என்ன மாயம் இடிகரை நிற்குமே.

முன்னம் பிறந்தவர்கள் இந்தத் தாரணைப் பயிற்சி இல்லாததால் அழிந்து போனார்கள். பின்னால் வருபவர்களும் அழிய மாட்டார்கள் என்பதற்கு என்ன பிரமாணம்? இவ்வாறு அழிகின்றவர்களின் நிலையைப் பற்றிப் பேசினால் அது அளவில்லாதது ஆகும்! ஆற்றின் கரையே கரைந்து போகும் போது அழியக் கூடிய உடல் மட்டும் அழியாமல் இருக்குமே!

#597. எது தாரணை?

அரித்த உடலை ஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து
தெரித்த மனாதி சத்தாதியிற் செல்ல
தரித்தது தாரணை தற்பரத்தோடே.

ஐம்பொறிகளால் அரிக்கப்பட்ட உடலை ஐம்பூதங்களில் ஒடுக்க வேண்டும்.
அந்த ஐம்பூதங்களை ஐந்து தன்மாத்திரைகளில் அடக்க வேண்டும்.
ஐந்து தன்மாத்திரைகளை நான்கு அந்தக் கரணங்களில் ஒடுக்க வேண்டும்.
நான்கு அந்தக்கரணங்களை மாயையில் அடக்க வேண்டும்.
மாயையை ஆன்மாவில் அடக்கி விட்டு ஆன்மாவைச் சிவத்தில் ஒடுக்க வேண்டும்.
ஆன்மா சிவத்துடன் பொருந்தி இருப்பதே தாரணை ஆகும்.

வானத்தில் உள்ள நாதத்தில் அந்தக்கரணங்கள் பொருந்தும் போது மனம் சிந்திப்பதை விட்டு விடும். புத்தி நிச்சயம் செய்வதை விட்டு விடும். சித்தமும் அஹங்காரமும் சிவத்துடன் ஆன்மா பொருந்தும் போது அழிந்து போய்விடும். அப்போது மிஞ்சி நிற்பவை 'தத்' என்ற சிவமும் 'பரம்' என்ற ஆன்மவுமே ஆகும்.

ஐம்பொறிகள்: கண்கள் , காதுகள் , மூக்கு, நாக்கு, தோல்.
ஐம் பூதங்கள்: நிலம், நீர், நெருப்பு, வளி, வெளி.
ஐந்து தன்மாத்திரைகள்: சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம்
நான்கு அந்தக்கரணங்கள்: சித்தம், புத்தி, மனம் அஹங்காரம்

மூன்றாம் தந்திரம் - 8. தியானம்

இடையறாது நினைவு கூர்வது தியானம்.

#598. இருவகை தியானங்கள்

வரும் ஆதி ஈரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன் போக மேவல்;
உருவாய சத்தி பரத்தியானம்; உன்னும்
குரு ஆர் சிவத்தியானம் யோகத்தின் கூறே.

தாரணையில் கூறியபடி புத்தியும் புலன்களும் நீங்கி இருப்பது தியானம். வடிவோடு கூடிய சக்தியைக் குறித்து எண்ணுவது பரத்தியானம்.. ஒளியுடைய சிவனைக் குறித்து சிந்திப்பது சிவத்தியானம் ஆகும். சக்தியை உன்னுவது சகளத் தியானம் என்றும் சிவனை எண்ணுவது நிஷ்களத் தியானம் என்றும் கூறுவர்.

#599. பரம் பொருளின் பேரொளி

கண்ணாக்கு மூக்குச் செவி ஞானக் கூட்டத்துள்
பண்ணாக்கி நின்ற பழம் பொறு ளொன்றுண்டு
அண்ணாக்கி னுள்ளே அகண்ட வெளி காட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.

பஞ்ச ஞானேந்திரியங்கள் (கண், காது, மூக்கு, நாக்கு, மெய் என்பவை) கூடும் இடத்தில் நாதத்தை எழுப்புகின்ற ஒரு பழமையான வஸ்து உள்ளது. அதுவே நம் அண்ணாக்குப் பகுதியில் எல்லை இல்லாத பேரொளியைக் காட்டும். நம் மனம் வெளியே செல்லாதவாறு தடுக்கும். நம்மை உலக வாழ்விலிருந்து பிழைக்கச் செய்யும்.

வாயில் நாவுக்கு மேலே உள்ள அண்ணாக்கிலிருந்து பிரமரந்திரம் வரை ஒளி பாயும் வழி உள்ளது.

600. பெருவெளியில் பேரொளி

ஒண்ணா நயனத்தில் உற்ற ஒழி தன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்து அங்கு இருந்திடில்
விண்ணாறு வந்து வெளி கண்டிட ஓடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே.

ஞானக் கண்ணில் பொருந்தியுள்ள சோதியை, இரண்டு ஊனக் கண்களாலும் பார்த்து, சலனம் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும். இந்தச் சுழுமுனை

தியானத்தைச் செய்யும் பொழுது வான கங்கை சிதாகாசத்தில் பாய்வது நன்கு புலப்படும். உளியால் செதுக்கிச் செய்யப் படாத சுயம்பு மூர்த்தியையும் அங்கே காண முடியும்.

#601. சிவனைச் சிந்தையுள் சிந்திப்பீர்!

ஒரு பொழு துன்னார் உடலோ டுயிரை
ஒருபொழு துன்னா ருயிருள் சிவனை
ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னார் சந்திரப் பூவையே.

உடலுடன் பொருந்தி இருக்கும் உயிரைக் குறித்து ஒரு போதும் சிந்திக்க மாட்டார்கள்.

உயிருக்கு உயிராக உள்ள சிவனைக் குறித்து ஒரு போதும் சிந்திக்க மாட்டார்கள்.

சிவன் அமர்ந்திருக்கும் சிந்தையைக் குறித்தும் ஒரு போதும் சிந்திக்க மாட்டார்கள்.

சந்திர மண்டலத்தில் விளங்கும் நாத மயமான சக்தியைக் குறித்தும் சிந்திக்க மாட்டார்கள்.

இவர்கள் அறிவின்மையின் எல்லை தான் என்ன

#602. சிவன் என்னும் சோதி

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே.

உள்ளத்தில் உள்ள ஜோதியை மேல் நோக்கிச் செல்ல வைக்க வேண்டும். சினம் என்னும் தீயினை நெருக்கி அழிக்க வேண்டும். அனைத்தையும் விளங்கச் செய்யும் சிவ ஒளியைச் சுழுமுனை என்ற திரியில் பொருத்த வேண்டும். அப்போது சிவம் என்ற ஜோதி மனதில் மங்காத விளக்காக எப்போதும் ஒளிரும்.

#603. உள்ளம் ஒளிர வேண்டும்

எண்ணாயிரத் தாண்டு யோகம் இருக்கினும்
கண்ஆர் அமுதினைக் கண்டுஅறி வார் இல்லை;
உள்நாடி, உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடிபோலக் கலந்து நின்றானே.

எண்ணாயிரம் ஆண்டுகள் யோகம் செய்தாலும் கண் ஆர் அமுதனைய சிவனைக் காண இயலாது. நம் உள்ளத்தின் உள்ளேயே அவனை நாட வேண்டும். நம் உள்ளத்தை ஒளி மயமாக ஆக்க வேண்டும். அப்போது கண்ணாடியில் நம் உருவத்தைக் காண்பது போலத் தெளிவாகச் சிவனையும் நம்மால் காண இயலும்.

#604. கண் பார்வை எங்கே இருக்க வேண்டும்?

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவுஇல்லை
ஓட்டமும் இல்லை உணர்வு இல்லை தான் இல்லை
தேட்டமும் இல்லை சிவன் அவன் ஆமே.

இருகண் பார்வையையும் நடுமூக்கில் பொருத்தி வைக்க வேண்டும். அப்போது சோர்வு உண்டாகாது.

உடலுக்கும் அழிவில்லை. மனமும் கட்டுக்குள் அடங்கும். உணர்வுகள் தாமே ஒடுங்கும். தான் என்னும் எண்ணம் குறையும். வெளியே செல்லும் திறன் இராது. அதனால் அவனே சிவனாக மாறிவிடலாம்.

605. புருவ மத்தியில் பார்வை

நயன மிரண்டும் நாசி மேல் வைத்திட்டு
உயர்வெழா வாயுவை உள்ளே யடக்கித்
துயரற நாடியே தூங்க வல்லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

இரு கண் பார்வையையும் புருவ மத்தியில் வைக்க வேண்டும். உயர்வினின்றும் தாழாத பிராணனை உள்ளே அடக்க வேண்டும். துன்பம் தரும் மனம் போன்றவற்றை நீக்க வேண்டும். இவ்வாறு யோக நித்திரை செய்பவருக்கு, அவர் உடல் தான் பிறந்த பயனைத் தரும். கூற்றுவனக்கு அஞ்ச வேண்டிய அவசியம் இராது.

606. ஒலிக்கும் ஒலிகள்

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாம்இவை பத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பார்க்க ஒண்ணாதே.

மணியோசை, கடலோசை, யானையின் பிளிறல், புல்லாங்குழலோசை, மேகத்வனி, வண்டின் ரீங்காரம், தும்பியின் ஒலி, சங்கொலி, பேரிகை நாதம்,

யாழிசை என்ற நுட்பமான ஒலிகள் பத்தையும் தியானத்தில் உள்ளவர்களால் கேட்க இயலும்.

#607. வலிய ஓசைகளும், மெல்லிய ஓசைகளும்

கடலோடு மேகம் களிறொடும் ஓசை
அடஎழும் வீணை யண்டரண்டத்துச்
சுடர்மனு வேணுச் சுரிசங்கி னோசை
திடமறி யோகிக்கல்லால் தெரியாதே.

கடல், மேகம், யானை இவைகள் செய்யும் ஒலிகளும், வீணையின் நாதமும், வானத்தில் உள்ள மறையொலி, சுருங்கிய வாயை உடைய சங்கு போன்றவற்றின் ஓசைகளைத் திடமான யோகிகளால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். மற்றவர்களால் அறிய முடியாது.

608. நாத வடிவானவன் சிவன்

ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும் பரிந்து உயிராய் நிற்கும்
ஓசை அதன் மணம் போல விடுவது ஓர்
ஓசையாம், ஈசன் உணரவல் லார்க்கே.

இறைவனின் இயல்பு நாதம். தேவர்களின் கூட்டமும் நாதம். பாசத்தின் இயக்கமும் நாதம். பாசத்தை விட்ட உயிராக இருப்பதும் நாதம். இந்த நாதத்தை உணர வல்லவர்கள் பூவில் உள்ள மணம் போல நாதத்தில் உள்ள ஈசனை உணர்ந்து கொள்வர்.

609. நாதந்தத்தில் உள்ளான் ஈசன்

நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல் யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது;
நாத முடிவிலே நஞ்சுஉண்ட கண்டனே.

நாதத்தின் முடிவிலே தேவி பராசக்தி உள்ளாள்.
நாதத்தின் முடிவிலே யோகத்தின் முடிவு உள்ளது.
நாதத்தின் முடிவிலே நம் நாட்டம் இருக்க வேண்டும்.
நாதத்தின் முடிவிலே நஞ்சுண்ட கண்டன் உள்ளான்.

#610. ஈசன் திருவடிகளை அடைய...

உதிக்கின்ற ஆறினும் உள்அங்கி ஐந்தும்
துதிக்கின்ற தேசுஉடைத் தூங்கு இருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல் சேரல் ஆமே.

ஆறு ஆதாரங்களில் உள்ளன ஐந்து வகையான அக்கினிகள். இவற்றை நன்கு அறிந்து கொண்டு தியானம் செய்ய வேண்டும். துதிக்கின்ற ஒலியுடன் கூடிய நீல ஒளி அகல வேண்டும். ஐந்து தன்மாத்திரைகளில் நாதம் ஒடுங்க வேண்டும்.அப்போது கொன்றையணி ஈசனின் கழலடிகளைச் சென்று சேர முடியும்.

ஆறு ஆதாரங்கள்:
மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை

ஐந்து அக்கினிகள்:
மூலாக்கினி, வடவாக்கினி, மின்னல் அக்னி, சூரிய அக்னி, சந்திர அக்னி.

ஐந்து தன்மாத்திரைகள்:
சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

611. ஒளிமயமானது!

பள்ளி யறையில் பகலே இருள் இல்லை
கொள்ளி அறையில் கொளுந்தாமல் காக்கலாம்
ஒள்ளிது அறியில் ஓர் ஓசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவு இல்லைதானே.

சஹஸ்ரதளம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரையே ஐம்பொறிகள் ஓய்வு எடுக்கும் பள்ளியறை ஆகும். இந்தப் பராவஸ்தை நிலையில் ஒளி மட்டுமே இருக்கும். இருள் இராது. ஒளி இருப்பதனால் இங்கு வேறு அக்கினியைக் கொளுத்த வேண்டிய தேவை இல்லை. இந்த ஒளி நான்கு காத தூரம் வரையில் நீளும். இது தியானத்தால் மட்டுமே அடையப் படுவது. இங்கு இருள் இல்லாததால் விடியலும் இல்லை.

#612. உடல் அழியாது!

கொண்ட விரதம் குறையாமல் தான் ஒன்றி,
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றினும் ஒக்க வளர்ந்த பின்
பிண்டமும் ஊழி பிரியாது இருக்குமே.

தான் மேற்கொண்ட விரதம் குறையாமல் காத்து, சுழுமுனை நாடி வழியே மேல் நோக்கிச் செல்லும் யோகியின் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்னும் மூன்றும் ஒருங்கிணைந்து வளரும். அங்ஙனம் வளர்த்த பின்னர் அவன் எடுத்த உடல் ஊழிக் காலம் வரை ஜீவனை விட்டு நீங்காது.

#613. சீவனுக்கு உதவுபவர்

அவ்வவர் மண்டலம் ஆம்பரிசு ஒன்று உண்டு;
அவ்வவர் மண்டலத்து அவ்வவர் தேவராம்;
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டலம் ஆயம் மற்றோர்க்கே.

ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒவ்வொரு தன்மை உண்டு; ஒவ்வொரு தலைவன் உண்டு. அக்கினி, கதிரவன், திங்கள் மண்டலங்களுக்குத் தலைவர்கள் நான்முகன், திருமால் உருத்திரன் ஆவர். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒவ்வொருவர் ஆட்சி நடை பெறும் என்றாலும் ஒவ்வொரு மண்டலமும் மற்றவர்களுக்கு உதவிகள் செய்யும்.

614. ஒளியுண்டாகும்

இளைக்கின்ற நெஞ்சத்து இருட்டறை யுள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப் பெரும்பாசம் துருவிடு மகிழ்
இளைப்பு இன்றி மார்கழி ஏற்றம் அது ஆமே.

உலக வாழ்வில் மயங்கித் தவிக்கின்ற உள்ளம் ஒரு இருட்டறை போன்றது . மூன்று அக்கினி மண்டலங்களிலும் பொருந்தித் தலை உச்சியில் உள்ள துளை வழியே சிவனிடம் அன்பு கொண்டு ஆராய்ந்து மேலே செல்பவரின் துன்பங்கள் எல்லாம் நீங்கி விடும். அவர்களால் விடியற் காலை போன்ற ஒளியைக் காண இயலும்.

#615. உடல் அழியாது இருக்க…

முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலம் இடம் நாழிகை சாதிக்க,
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே.

முக்குணங்களின் இருள் நீங்க வேண்டும் என்றால் மூலாதாரத்தில் உள்ள அபான வாயுவை மேலே எழுப்ப வேண்டும். வலப் பக்கம் உள்ள கதிரவன் கலை இடப்புறம் உள்ள திங்களின் கலையுடன் பொருந்தும்படிக் காலையில் ஒரு நாழிகை

நேரம் சாதிக்க வேண்டும். அப்போது உடலில் உள்ள உயிர் அழியாத வண்ணம் காப்பான் சிவபெருமான்.

#616. ஆத்ம தரிசனம்

நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக்கு இருவிரல் உள்ளே
கடலித்து இருந்து கருத வல்லார்கள்
சடலத் தலைவனைத் தாம் அறிந்தாரே.

உடலில் உள்ள ஆன்மாவை அறிவதற்கு என்ன செய்ய வேண்டும்?

அசைவை ஏற்படுத்தும் கொப்பூழ் சக்கரத்துக்கு (மணிபூரகத்துக்கு) நான்கு விரல் மேலேயும்;

வாக்கு வெளிப்படும் தொண்டைக்கு (விசுத்தச் சக்கரத்துக்கு) இரண்டு விரல் கீழேயும் உள்ள;

அநாஹதச் சக்கரத்தில் பொங்கி எழுகின்ற கடல் ஒலியைத் தியானம் செய்ய வேண்டும்.

#617. இன்பம் எய்துவர்

அறிவாய், அசைத்து என்னும் ஆறாறு அகன்று,
தெளிவான மாயை சிதைத்து, அருளாலே
பிரியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந்தாரே.

அறிவு வடிவான ஆன்மா அறிவற்ற முப்பத்தாறு தத்துவங்களில் இருந்து நீங்கப் பெற வேண்டும். அது மாயையைச் சிதைத்து அழிக்க வேண்டும். சிவனுடன் பிரியாமல் இருக்கும் அருளைப் பெற வேண்டும். சிவநெறியில் நின்று சிவனைத் தியானம் செய்பவரே துன்பம் நீங்கி இன்பம் எய்துவர்.

மூன்றாம் தந்திரம் - 9. சமாதி

சிவனும் சீவனும் ஒன்றி இருத்தல் சமாதியாகும்.

#618. சமாதி நிலை

சமாதிய மாதியில் தான் சொல்லக் கேட்கின்
சமாதிய மாதியில் தான் எட்டும் சித்திக்கும்
சமாதிய மாதியில் தங்கினோர்க்கு அன்றே
சமாதிய மாதி தலைப்படும் தானே.

இயமம் முதல் சமாதி வரை செல்லும் முறையைக் கேளுங்கள். இயமம் முதல் சமாதி வரை உள்ள படிகளை முறையாகக் கடந்தால் அட்டாங்க யோகத்தின் கடைசிப் படியாகிய சமாதியும் தானேக் கைக் கூடும்.

#619. சமாதியில் பேரொளி தோன்றும்

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்
சந்தியில் ஆன சமாதியில் கூடிடும்;
அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே.

விந்துவும், நாதமும் தலையில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் விளங்கும் பொழுது சமாதி யோகத்தில் சீவன் பொருந்தி இருக்கும். அப்போது சிவனுடைய ஞான வடிவம் ஒரு பேரொளியாகக் காட்சி அளிக்கும்.

#620. மனம் அடங்கும்

மன்மனம் எங்கு உண்டு வாயுவும் அங்கு உண்டு;
மன்மனம் எங்கு இல்லை வாயுவும் அங்கு இல்லை;
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலயம் ஆமே.

நினைக்கின்ற மனம் எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் பிராண வாயுவும் உண்டு. மனம் சிந்திப்பதை விட்டு விட்டால் பிராண வாயுவில் அசைவு ஏற்படாது. சிந்திப்பதை விட்டு விட்டு மகிழ்வோடு இருப்பவரின் மனம் தானே மனோலயம் அடைந்து அடங்கி விடும்.

#621. பிராணன் அடங்குதல்

விண்டு அலர் கூபமும் விஞ்சத்து அடவியும்
கண்டுஉணர் வாகக் கருதி இருப்பார்கள்
செண்டு வெளியில் செழுங்கிரி யத்திடைக்
கொண்டு குதிரைக் குசைசெறுத் தாரே.

நீர் ஊற்றைப் போன்று பிளந்து கொண்டு வெளிப்படும் சிவசோதி. சிவம் என்பதே ஒரு ஞானக் காடு ஆகும். இதைக் கண்டு உணர்வு மயமாக இருப்பவர், பிராணன் என்னும் குதிரையைத் தலை என்னும் மலை மேல் செலுத்திவிட்டு, அதை மனம் என்னும் கயிற்றால் கட்டி விடுவர்.

#622. காலன் கனவிலும் இல்லை

மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவில் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்ட பின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே.

தலை உச்சியில் உள்ள சஹஸ்ரதளத்தில் சிவனை நாடி, முகத்தில் உள்ள நான்கு ஞான இந்திரியங்களும் பொருந்தும்படி இருப்பவர்களே! பரந்த சஹஸ்ர தளத்தின் மேலே உள்ள அகண்டத்தைக் கண்ட பின் உங்களுக்கு யமன் என்ற சொல் கனவிலும் இல்லை.

#623. சிவயோகி

மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்கும் குடிகளும் ஆறெண்மர்
கண்டிட நிற்கும் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.

பிருத்வீ முதலிய மண்டலங்கள் ஐந்து; அகரம் முதல் உன்மனி வரை உள்ள கலைகள் பன்னிரண்டு, ஆதாரச் சக்கரங்களில் அட்சரங்களை இடமாகக் கொண்ட தேவதைகள் நாற்பதெட்டு. இவற்றை நிராதாரத்தில் கண்டு, எங்கும் பரந்துள்ள சிவனைடியைச் பொருந்தி அனுபவிப்பான் சிவயோகி.

#624. சிவக்கனி

பூட்டுஒத்த மெய்யில் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டு அற்ற அந்நிலம் சேரும்படி வைத்து
நாட்டத்தை மீட்டு நயனத்து இருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழம் தூங்கலும் ஆமே.

கிணற்றுச் சகடையின் உதவியுடன் கயிறு மேலும் கீழும் போக இயலும். அது போன்றே மனதில் எழும் எண்ணங்களுக்கு ஏற்பப் பிராண வாயு மேலும் கீழும் போகும். அந்த பிராண வாயுவை மேலே பிரமரந்திரத்தில் பொருத்த வேண்டும். இதையும் அதையும் தேடி, இங்கும் அங்கும் அலையாமல், விழிப்புடன் இருந்தால், சிவன் என்னும் தோட்டத்து மாங்கனியுடன் அசைவின்றிப் பொருந்தி இருக்கும் பேறு சித்திக்கும்.

#625. மனம் அடங்கினால் கிடைப்பது?

உரு அறியும் பரிசு ஒன்று உண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்து அமுது உண்டார்;
அருவரை ஏறி அமுது உண்ண மாட்டார்
திருவரை யாமனம் தீர்ந்துஅற்ற வாறே.

ஆன்ம வடிவை அறிந்து கொள்ளும் வழி இது. தேவர்கள் கடலைக் கடைந்து அமுதம் பெற்று அதனை உண்டார்கள். அதனால் அவர்கள் சிரசின் உச்சியில் சென்று அங்குள்ள அமுதத்தைப் பருகவில்லை. மனத்தை அடக்கித் தலையின் மேல் பொருத்துவதே உண்மை ஸ்வரூபத்தை அறியும் வழி ஆகும்.

#626. சிவனுடன் கூடி இருத்தல்

நம்பனை ஆதியை நான்மறை ஓதியைச்
செம்பொன்னின் உள்ளே திகழ்க்கின்ற சோதியை
அன்பினை ஆக்கி, அருத்தி ஒடுங்கிப் போய்க்
கொம்பு ஏறிக் கும்பிட்டுக் கூட்டம் இட்டாரே.

சிவபெருமான் நம்பிக்கைக்கு உரியவன்; முழு முதல் பொருளாவான்; நான் மறைகளை ஓதியவன்; செம்பொன்னின் நிறம் கொண்டவன்; சோதியாக விளங்குபவன்; அவன் மேல் அன்பு கொண்டு தன் ஆசைகளை அடக்கிச் சஹஸ்ரதளத்தில் நின்று பயிற்சி செய்பவனின் நிட்டையில் சிவபெருமான் கலந்து நிற்பான்.

#627. குண்டலினி சக்தி

மூலத்து மேலது முச்சதுரத்தது
கால் அத்திசையில் கலக்கின்ற சந்தியில்
மேலைப் பிறையினில் நெற்றி நேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

குண்டலினி சக்தி நான்கு இதழ்த் தாமரையாகிய மூலாதாரத்தில் முக்கோண வடிவு கொண்டிருக்கும். அபானன் மூச்சுக் காற்றுடன் சேரும் இடத்தில், நெற்றியின் நடுவே உள்ள அர்த்த சந்திரன் வடிவில் பல வேறு கலைகளாகத் தோன்றும்.

#628. திங்கள் மண்டலம்

கற்பனை அற்றுக் கனல் வழியே சென்று
சிற்பனை எல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர் மதியோடு உற்றுத்
தற்பரமாகத் தகும் தண் சமாதியே.

வீணான எண்ணங்களைத் துறந்து விட வேண்டும்; மூலத் தீயுடன் கலந்து மேலே செல்ல வேண்டும்; சிறப்பத் திறன் வாய்ந்த இந்த அழகிய உலகங்களை உருவாக்கிய பேரொளி வீசும் சிவனைத் தேட வேண்டும். மதி மண்டலத்தில் அவனுடன் பேதமின்றிப் பொருந்தி இருக்க வேண்டும். இதுவே சாந்தம் மிகுந்த சமாதி நிலை ஆகும்.

#629. நடுவு நிலைமை

தலைப்பட்டு இருந்திடத் தத்துவம் கூடும்;
வலைப்பட்டு இருந்திடும் மாது நல்லாளும்;
குலைப்பட்டு இருந்திடும் கோபம் அகலும் ;
துலைப்பட்டு இருந்திடும் தூங்க வல்லார்க்கே.

இத்தன்மை வாய்ந்தவர்களுக்கு ஆன்மத் தத்துவம் நன்கு விளங்கும். சிவனுடன் சேர்ந்திருக்கும் சக்தியின் அருள் மிகுந்திடும். காமக் குரோதங்கள் போன்ற மன மாசுகள் அகன்று விடும். நடுவு நிலைமை என்பது தானே வந்து சேரும்.

#630. நீங்காத அன்பு கொள்வர்

சோதித் தனிச்சுடராய் நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனும் ஆகுமால்
ஆதி பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடி பணிந்து அன்பு உறுவாரே.

ஒளி வீசும் ஒப்பில்லாத சுடர் ஆவான் சிவன். மன மலம் நீங்கிச் சமாதியில் பொருந்தியுள்ள சீவனும் சிவனும் சமாதியில் ஒன்றேயாவர். படைப்புக் கடவுள் பிரமனும், கடல் வண்ணனாகிய திருமாலும் சிவனிடம் கொள்ளும் அன்பை அந்தச் சீவனிடமும் கொள்வர்.

#631. சமாதி தேவையில்லை!

சமாதி செய்வார்க்குத் தகும் பல யோகம்
சமாதிகள் வேண்டாம் இறையுடன் ஏகில்;
சமாதிதான் இல்லை தான் அவன் ஆகில்;
சமாதியில் எட்டெட்டு சித்தியும் எய்துமே.

சமாதியில் இருப்பவர்களுக்கு அனேக யோகங்கள் கைக்கூடும். எப்போதும் இறைவனுடன் கூடி இருப்பவர்களுக்குச் சமாதி தேவையில்லை. ஆன்மாவே சிவம் என்று ஆகிவிட்டால் சமாதி தேவையில்லை. சமாதியினால் அறுபத்து கலை ஞானங்களும் தானே வந்து சேரும்.

மூன்றாம் தந்திரம் -
10. அட்டாங்க யோகப்பேறு

அட்டாங்க யோகத்தால் அடையும் நன்மைகள்.

#632. உகந்ததை ஈவான் ஈசன்

போதுகந் தேறும் புரிச்சடையானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவ னென்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால் விடை யோனே.

சஹஸ்ரதளத்தில் விளங்கும் சிவன் திருவடிகளை அடைய விரும்பியவர் அவற்றை எப்படியேனும் அடைந்து விடுவர். அவர்கள் விண்ணுலகப் பேற்றினையும் அடைவர். காளையை ஊர்தியாகக் கொண்டு உமை அன்னை மனம் மகிழும்படி நடனம் செய்யும் பிரான், தன் அடியவர் விரும்புவது என்ன என்று அறிந்து கொண்டு அவற்றையே அவர்களுக்கு ஈவான்.

#633. சிவபதம் சேரலாம்

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன் புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத்
தெற்றுஞ் சிவபதம் சேரலு மாமே.

சிவன் திருவடிகள் மேல் அன்பு வைத்து, அவன் புகழையே கேட்டும், அதைக் குறித்தே சிந்தித்துக் கொண்டும் இருப்பவர்களுக்கு, முனிவர்கள் நேரே வந்து எதிர் கொண்டு அழைத்துச் செல்லும் அரிய சிவபதம் கிடைக்கும்.

#634. இம்மையிலும் இன்பம்

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வனிவ னெனத்
தருந்தண் முழவங் குழலு மியம்ப
இருந்தின்ப மெய்துவ ரீசன் அருளே.

வருந்தித் தவம் செய்பவர் அடைவது என்ன?

தேவர் உலகத்துக்குத் தலைவனாக, தேவர் உலகம் செல்லும் தகுதி வாய்ந்தவன் இவன் என்று முரசும், குழலும் ஒலிக்கும்படி அவன் இம்மையிலும் சிவன் அருளால் இன்பம் அடைவான்.

#635. பூரண கும்பம்

செம்பொற் சிவகதி சென்றெய்தும் காலத்துக்
கும்பத் தமரர் குழாம் வந்தெதிர் கொள்ள
எம்பொன் தலைவ னிவனாம் எனச்சொல்ல
இன்பக் கலவி யிருக்கலு மாமே.

பொன்னொளி வீசும் சதாசிவ மண்டலத்தை அடையும் பொழுது பூரண கும்பத்துடன் தேவர்கள் எதிரே வந்து அழைத்துச் செல்வர். “எங்கள் பொன் மண்டலத்தின் தலைவன் இவனே!” என்று சொல்லும்படி இன்பச் சேர்க்கையில் இருக்க இயலும்.

#636. “யாமே இவன்!” என்பான் சிவன்

சேருறு காலம் திசைநின்ற தேவர்கள்
ஆரிவ னென்ன வரனாம் இவனென்ன
ஏருறு தேவர்க ளெல்லா மெதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய் கண்டவாறே.

சிவகதியை அடையும் காலம் வந்தவுடன் திக்பாலகர்கள் முதலான தேவர்கள் “யார் இவன் ?” என்று வினவும் போது “யாமே இவன்!” என்பார் சிவபெருமான். அழகிய தேவர்கள் எதிர்க் கொண்டழைக்கக் கருமை நிறம் கொண்ட கழுத்தை உடைய சிவனை நேரில் காணக் கிடைக்கும்.

#637. எங்கும் செல்ல வல்லவர்

நல் வழி நாடி நமன் வழி மாற்றிடும்
சொல் வழியாளர் சுருங்காப் பெருங்கொடை
இவ்வழி யாள ரிமையவ ரெண்டிசைப்
பல் வழி எய்தினும் பார் வழி யாகுமே.

பிரணவ உபாசகர் நல்ல வழியை நாடுவார். நமன் வழியை மாற்றுவார். குறையில்லாத கொடை வள்ளல் போன்ற இந்த யோகியர் தேவர் உலகில் எங்கு சென்றாலும் அது நன்கு தெரிந்த வழி போலவே இருக்கும்.

#638. சிவயோகியின் பெருமை

தூங்கவல் லார்க்கும் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலி செய்து நின்றிட்டுத்
தேங்கவல் லார்க்கும் திளைக்கும் அமுதமும்
தாங்கவல் லார்க்கும் தன்னிடமாமே.

அறிதுயில் கொள்ளும் திருமாலுக்கும், ஏழு உலகங்களைப் படைக்கும் பிரம்மனுக்கும், அழிவில்லாத ருத்திரனுக்கும், அமுதம் உண்டு வாழும் தேவர்களுக்கும் இருப்பிடம் சிவயோகியரே ஆவார்.

#639. சமாதியின் பயன்

காரியமான வுபாதியைத் தான் கடந்து
ஆரிய காரண மேழுந்தன் பாலுற
ஆரிய காரண மாய தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே.

ஆணவ மலத்தின் மறைப்பினால் ஜீவர்களுக்கு உண்டாகும் துன்பம் ஏழு வகைப்படும். சிவனுடைய இறைத் தன்மைகள் ஏழு வகைப்படும். ஜீவனின் உபாதிகளைத் தொலைத்விட்டு சிவனுடைய இறைத் தன்மைகளில் பொருந்தி. மாயையை விலக்கிச் சிவனுடன் பொருந்துவதே சமாதியின் பயன்.

ஜீவனின் ஏழு துன்பங்கள்:
இறையின்மை, சிற்றறிவு, சிறிய அளவு, மாயை, சிறிய ஆற்றல், சுதந்திரம் இன்மை, காணாமை.

இறைத் தன்மைகள் ஏழு:
இறைமை, பேரறிவு, எல்லையின்மை, மாயையின்மை, பேராற்றல்,முழுச் சுதந்திரம், ஒன்றி உணர்தல்.

மூன்றாம் தந்திரம் -
11. அட்டமா சித்திகள்

எட்டு சித்திகள் இவை:
அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம்.

#640. எட்டு சித்திகளும் கிட்டும்

பணிந்து எண்திசையும் பரமனை நாடித்
துணிந்து எண்திசையும்தொழுது எம் பிரானை
அணிந்து எண்திசையினும் அட்டமாசித்தி
தணிந்து எண்திசைச் சென்று தாபித்தவாறே.

எண்திசைகளிலும் சிவனே உயர்ந்தவன் என்று துணிந்து அந்தப் பரமனை நாடிப் பணிய வேண்டும். எண்திசைகளிலும் சிவனைத் தொழுதல் எட்டு சித்திகளும் தாமே வந்தடையும்.

#641. பிறவி நீங்கும்

பரிசுஅறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசுஅற நாடியே தூவெளி கண்டேன்
அரியது எனக்கு இல்லை அட்டமாசித்தி
பெரிது அருள் செய்து பிறப்பு அறுத்தானே.

தேவர்களின் பக்குவத்துக்கு ஏற்ப அருளை வழங்கும் பண்புடையவன் சிவன். அவன் திருவடிகளே அடைக்கலம் என்று நான் அடைந்த போது என் குற்றங்கள் நீங்கிப் பரவெளியைக் கண்டேன். அரிய பொருள் என்று எனக்கு எதுவும் இல்லை. எ ட்டு சித்திகளையும் எனக்குத் தந்து என் பிறவிப் பிணியையும் நீக்கினான் சிவன்.

#642. சிவப்பேறு

குரவன் அருளில் குறி வழி மூலப்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசை சேரப்
பெரிய சிவகதி பேறு எட்டாம் சித்தியே.

குருவின் அருளால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை ஜீவசக்தியுடன் பொருத்த வேண்டும். அது குறிவழியே வெளியே பாய்வதைத் தடுத்து மேலே ஏற்ற வேண்டும். சாம்பவி அல்லது கேசரி என்ற இரண்டு முத்திரைகளில் ஏதோ ஒன்றைச் செய்தால் சிவகதியைப் பெறலாம் அதன் பயனாக எட்டு சித்திகளையும் பெறலாம்.

சாம்பவி:
கண் பார்வையை மூக்கு நுனியில் நிறுத்தி அனாஹதச் சக்கரத்தைப் பார்த்துக் கொண்டிருத்தல்

கேசரி:
கண் பார்வையை புருவ மத்தியில் நிறுத்தி ஆக்ஞா சக்கரத்தைப் பார்த்துக் கொண்டிருத்தல்.

#643. பரகாயம் பெறலாம்

**காயதி பூதம், கலை, காலம், மாயையில்
ஆயாது அகல அறிவு ஒன்று அனாதியே
ஓயாப் பத்தி அதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலும் ஆமே.**

வான் முதலிய பஞ்ச பூதங்கள், கலை,காலம் ,மாயை என்ற தத்துவங்கள் இவற்றில் தோயாமல் அகன்று செல்லவேண்டும். ஆன்ம அறிவுடன் நீங்காத சக்தியைக் கூட்டினால் அழியாத மேலான உடலைப் பெறலாம்.

#644. கர்மயோகம்

**இருபதி னாயிரத் தெண்ணூறு பேதம்
மருவிய கன்மமாம் அந்த யோகம்
தரும் இவை காய உழைப்பு ஆகும் தானே
அரும் இரு நான்காய் அட்ட மாசித்திக்கே.**

கர்ம யோகம் இருபதாயிரத்து எண்ணூறு பேதங்களை உடையது. இவைகள் அனைத்துமே உடல் உழைப்புக்கள் ஆகும். அஷ்டாங்க யோகத்தில் இவைகள் அடங்குவதால் அட்டமா சித்திகளை அளிக்கும் வல்லமை கொண்டது கர்ம யோகம்.

#645. கேவல கும்பகம் சித்திக்கும்

**மதிதனில் ஈராறாய் மன்னும் கலையில்
உதயம்அது நால் ஒழியர் ஓர் எட்டுப்
பதியும்; ஈராறு ஆண்டு பற்று அறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திகள் ஆமே.**

சந்திர நாடியாகிய இட கலையில் இழுக்கப் படும் மூச்சு பன்னிரெண்டு அங்குலம் உள்ளே செல்லும். பிங்கள நாடி வழியாக வெளிப்படும் மூச்சு நான்கு அங்குலம் மட்டுமே. மீதி எட்டு அங்குலம் மூச்சு உள்ளே தங்கும். உலகப் பற்றை விட்டு விட்டு இதை உறுதியாகக் கவனித்து வந்தால் பெரும் சித்திகள் கைக் கூடும்.

#646. சித்திகள் வந்து சேரா!

**நாடும் பிணியாகும் நம் சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலை, கல்வி, நீள் மேதை கூர் ஞானம்
பீடு ஒன்றினால் வாயாச் சித்தி பேதத்தின்
நீடும் துரம் கேட்டால் நீள் முடிவு ஈராறே.**

நம் உறவினர்கள் நம்மைச் சூழ்ந்து இருந்தால் அதனால் பந்தம் உண்டாகும். கலையறிவு, கல்வி, கூர்மையான அறிவு, நிறைந்த அறிவு இவை நமக்குச் சித்திக்கா! பேதமாக இருந்து கொண்டு பெருகும் ஒலியினைப் பன்னிரண்டு ஆண்டுகள் விடாமல் கேட்டால் நமக்குச் சித்திகள் சித்திக்கும்.

#647. பெறும் பயன்கள் இவை

ஏழா னதில் சண்டவாயுவின் வேகியாம்;
தாழா நடை பல யோசனை சார்ந்திடும்;
சூழான ஓர் எட்டில் தோன்றா நரை திரை ;
தாழான ஒன்பதில் தான் பரகாயமே.

நாதத்தை அறிந்து கொண்டவர் ஏழு ஆண்டுகளில் சண்ட மாருதம் போலச் செல்லும் வேகத்தைப் பெறுவார். நடை தளராமல் வெகு தொலை செல்ல வல்லவர் ஆவார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் நரை திரை இவை தோன்றா. ஒன்பது ஆண்டுகளில் அழியாத, மேலான, ஓர் உடல் கிடைக்கும்.

#648. பெறும் பிற பயன்கள் இவை.

ஈரைந்தில் பூரித்துத் தியான ருத்திரன்
ஏர்வு ஒன்று பன்னொன்றில் ; ஈராறாம் எண்சித்தி
சீர் ஒன்று மேல்ஏழ் கீழ்ஏழ் புவிச் சென்று
ஏர் ஒன்று வியாபியாய் நிற்றல் ஈராறே.

பத்து ஆண்டுகள் தொடர்ந்த தியானப் பயிற்சியால் கீழே போகும் சக்திகளை மேலே நிரப்பிக் கொண்டு ஒரு ருத்திரன் போல விளங்கலாம். பதினோரு ஆண்டுகளில் எட்டு சித்திகள் சித்திக்கும், பன்னிரண்டு ஆண்டு தியானப் பயிற்சியால் கீழ் உலகங்கள் ஏழு, மேல் உலகங்கள் ஏழு இவற்றில் எதற்கும் சென்று வரும் ஆற்றல் கிடைக்கும்.

#649. யோகியரின் சித்திகள்

தானே அணுவும் சகத்துத்தன் நோன்மையும்
மானாக் கனமும், பரகாயத் தேகமும்,
தான் ஆவது பரகாயம் சேர் தன்மையும் ,
ஆனாத உண்மையும், வியாபியும் ஆம் எட்டே.

தானே மிகச் சிறிய அணிமாவாகவும்; உலகத்தைப் போன்ற பெரிய மகிமாவாகவும்; அளக்க முடியாத கனத்தை உடைய கரிமாவாகவும், வானத்தைப் போன்று லேசான லகிமாவாகவும், அழிவில்லாத உடலைப் பெறும் பிராப்தியாகவும், அயலான் உடலை அடைய வல்ல பிரகாமியமாகவும்; உண்மையான

ஈசத்துவமாகவும்; உலகம் முழுவதையும் தன் வயப்படுத்தும் வசித்துவமாகவும் பெருமையுடன் கூறப்படும் யோகியர் அடையும் எட்டு சித்திகள்.

விளக்கம்:

1. அணிமா: மிகவும் நுட்பமான உடலை எடுத்தல்
2. மகிமா : மிகவும் பருமனான உடலை எடுத்தல்
3. கரிமா : மிகவும் கனமான உடலை எடுத்தல்
4. லகிமா : மிகவும் லேசான உடலை எடுத்தல்
5. பிராப்தி : அழியாத உடலை எடுத்தல்
6. பிராகாம்யம் : விரும்பிய பிற உடலில் புகுதல்
7. ஈசத்வம் : எல்லோருக்கும் மேம்பட்டு இருத்தல்
8. வசித்வம்: எல்லோரையும் தன்வசப்படுத்துதல்

#650. முக்தி சித்திக்கும்

தாங்கிய தன்மையும் தான் அணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்தும் மற்று ஓர் குறை இல்லை,
ஆங்கே எழுந்த ஓம் அவற்றுள் எழுந்தும் மிக்கு
ஓங்கிவர முத்தி முந்தியவாறே.

சிவயோகி அணுவின் தன்மையை அடைந்த போதும், பல வேறு உடல்களைத் தாங்கிய போதும், அவற்றை மீண்டும் வாங்கி ஒடுக்கிய போதும் ஒரு மாற்றமும் நிகழாது. ‘ ஓம்’ என்னும் பிரணவ நாதம் மேலே எழுந்து சென்று சஹஸ்ரதளத்தை அடையும் பொழுது யோகிக்கு முக்தி உண்டாகும்.

#651. பிரணவ யோகம் செய்யும் காலம்

முந்திய முந்நூற்று அறுபது காலமும்
வந்தது நாழிகை வான் முதலாயிடச்
சிந்தை செய் மண் முதல் தேர்ந்தறி வார்வலர்
உந்தியுள் நின்று உதித்து எழுமாறே.

கதிரவன் தோற்றம் முதல் உள்ள முப்பது நாழிகைகள் வான், காற்று, தீ, நீர், பூமி என்ற பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆறு ஆறு நாழிகையாகக் கொள்ளப்படும். இரவும் முப்பது நாழிகைகள். இதுவும் நிலம், நீர், தீ, காற்று, வானம் என்ற வரிசையில் ஒவ்வொன்றுக்கும் ஆறு ஆறு நாழிகைகளாகக் கொள்ளப் படும். இதை அறிந்து கொண்டு கதிரவனின் உதயத்துக்கு முன்னும் பின்னும் உள்ள வானத்துக்குரிய ஆறும் ஆறும் ஆகிய பன்னிரண்டு நாழிகைகளை பிரணவ யோகத்துக்குப் பயன் படுத்தினால் கொப்பூழில் உள்ள கதிரவனை மேலேற்றித்

தலைக்குக் கொண்டு போக இயலும். இதனால் நாதமும், விந்துவும் வந்து அமையும்.

#652. உடலைக் கடந்த இன்பம் கிடைக்கும்

சித்தம் திரிந்து சிவமயம் ஆகியே
முத்தம் தெரிந்தும்உற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கு அற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத்தோரே.

வெளியில் செல்லாமல் அடக்கப்பட்ட மனம் மாறிச் சிவமயம் ஆகிவிடும். முக்தியை ஆராய்ந்து, அதை அறிந்து கண்டு கொண்ட சிவயோகியர் மோனத்தில் இருப்பர். அவர்கள் ஐம்பொறிகளுடன் தொடர்பு அற்றவர்கள். அதனால் மனத் தூய்மை பெற்றவர். அறிவு என்ற வானத்தில் தத்துவங்களைக் கடந்து சிவத்துடன் பொருந்தி இருப்பர். அதனால் அவர்கள் உடலைக் கடந்த ஒரு தெய்வீக இன்பம் அடைவர்.

#653. ஒன்பது வாயுக்கள்

ஒத்த இவ்ஒன்பது வாயுவும் ஒத்தன
ஒத்த இவ்ஒன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்து இவ் ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததே.

உடலில் இயங்குகின்ற ஒன்பது வாயுக்களும் சமமாக இருக்க வேண்டும். ஏதொன்றும் மிகுதியாகவும் கூடாது. குறையவும் கூடாது. இவ்வொன்பதைத் தவிர தனஞ்சயன் என்ற பத்தாவது வாயுவும் உடலில் உள்ளது. ஒத்து இயங்கும் இவ்வொன்பது வாயுக்களுடன் தனஞ்சயனும் கூடி இயங்கினால் உடலும் உயிரும் நீங்காமால் கூடி இருக்கும்.

உடலில் உள்ள பத்து வாயுக்கள்:

பிராணன், அபானன், வியானன், சமானன், உதானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

#654. தனஞ்சயனின் அவசியம்

இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்;
இருக்கும் இருநூற்று இருபத்து மூன்றாய்;
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்,
இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே.

தனஞ்சயன் என்ற வாயு மற்ற வாயுக்கள் உள்ள நாடிகளில் பொருந்தி இருக்கும் . அது இருநூற்று இருபது மூன்றாவது மண்டலம் ஆகிய அகந்தை மண்டலத்தில் பொருந்தி இருக்கும். தனஞ்சயன் உடலில் இல்லாவிட்டால் அந்த உடல் வீங்கி வெடித்துவிடும். அதனால் எல்லா வாயுக்களும் உடலில் இருந்து நீங்கிய பிறகே தனஞ்சயன் என்னும் வாயு நீங்கும்.

முக்கியமான பத்து நாடிகள்

இடை, பிங்களை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அஸ்தி, அலம்புடை, சங்கினி, குரு.

#655. தனஞ்சயன் திரிபால் உண்டாகும் நோய்கள்

வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனு முடமாதாய்
வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே.

கழலை, சிரங்கு, குட்டம், சோகை, வாதம், கூன், முடம், கண்ணில் தோன்றும் வியாதிகள் இவை தனஞ்சயன் மாற்றத்தால் உண்டாகும்.

#656. கூர்மன் திரிபால் உண்டாகும் நோய்கள்

கண்ணில் வியாதி உரோகம் தனஞ்சயன்
கண்ணில் இவ்ஆணிகள் காசம் அவன் அல்லன்
கண்ணினில் கூர்மன் கலந்திலன் ஆதலால்
கண்ணனில் சோதி கலந்ததும் இல்லையே.

தனஞ்சயன் என்ற வாயுவின் திரிபினால் நோய்கள் உண்டாகும். கண்களில் உண்டாகும் பூக்களும் காச நோயும் தனஞ்சயனால் தோன்றுவதில்லை. கண்ணில் கூர்மன் என்ற வாயு பொருந்தா விட்டால் கண் நோயுண்டாகும். கண்ணில் ஒளியும் இராது.

#657. நாடியின் ஓசை

நாடியி னோசை நயன மிருதயம்
தூடி யளவுஞ் சுடர் விடு சோதியைத்
தேவருளீசன் றிருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந்தாரே.

கண்கள் இதயம் இவற்றில் நாடியின் ஓசை விளங்கும். சிறிய ஒலியை உண்டாக்கும் அந்தச் சுடரை மும்மூர்த்திகளும் இடைவிடாது அங்கே பொருந்தி உணர்ந்திருந்தனர்.

#658. ஒன்பது வாயில்கள்

ஒன்பது வாசல் உடையது ஓர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையது ஓர் ஓர் இடம்;
ஒன்பது நாடி ஒடுங்க வல்லர்கட்கு
ஒன்பது வாசல் உலை; நல ஆமே.

உடலில் உள்ள ஒன்பது வாயில்களையும் அடைத்துவிட்டால், மற்ற ஒன்பது நாடிகளும் பத்தாவது நாடியாகிய சுழுமுனையில் சென்று ஒடுங்கும். அங்கனம் அவற்றைப் பொருத்தித் தவம் செய்பவர்கள் அழியாத உடலைப் பெறுவார்கள்.

#659. குருவின் உபதேசம்

ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு முனைச்செல்ல
வாங்கி இரவி, மதி வழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழும் தரித்திட,
ஆங்குஅது சொன்னோம் அருவழி யோர்க்கே.

குண்டலினி சக்தியான தீயின் கீழே சுழுமுனை செல்லும்படிச் செய்ய வேண்டும். கதிரவன் கலையில் இயங்கும் பிராணனைத் திங்கள் கலையில் செல்லும்படிச் செய்ய வேண்டும். இதை ஏழு உலகங்களையும் தாங்க யோக நெறியில் நிற்பவருக்கு உரைத்தோம்.

#680. சுழுமுனைத் தியானம்

தலைப்பட்ட வாறு அண்ணல்தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்கு உண்ணா வைத்தோர் வித்துஅது ஆமே.

பிரமரந்திரத்தில் விளங்குகின்ற சிவசக்தியரை நாட வேண்டும். வலையில் அகப்பட்ட மான் எங்கும் போகாமல் இருப்பது போல, மூச்சுக் காற்றைச் சுழுமுனையிலேயே செலுத்த வேண்டும். இத்தகைய சுழுமுனைத் தியானம் இதைச் செய்பவருக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் பயன் தரும்.

#661. பிரணவ உபாசனை

ஓடிச் சென்று அங்கே ஒரு பொருள் கண்டவர்
நாடியின் உள்ளாக நாதம் எழுப்புவர்;
தேடிச் சென்று அங்கே தேனை முகந்து உண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் காட்டுமே.

மூலாதாரத்தில் இருந்து சுழுமுனை வழியே மேலே சென்றால் சஹஸ்ர தளத்தை அடைந்து அங்கே இருக்கும் சிவ சக்தியரை வணங்கலாம். இவ்வாறு வணங்குபவர் அங்குள்ள நாடியின் உள்ளே இருக்கும் நாதத்தை வெளிப்படுத்துவார். அங்கு உண்டாகும் அமுதத்தை அருந்துவார். உடல் என்னும் பாசறையில் குடியிருக்கும் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம் என்ற ஆறு பகைவர்களைச் சிறைப்படுத்துவார்.

#662. ஒன்பது கன்னியர்

கட்டிட்ட தாமரை ஞானத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
கட்டிட்டு நின்று களங்கனி ஊடு போய்ப்
பொட்டு இட்டு நின்று பூரணம் ஆனதே.

சஹஸ்ரதளத்துடன் கட்டப்பட்ட சுழுமுனை நாடியில் ஒன்பது சக்தியர் உள்ளனர். அவர்கள் அங்கிருந்து ஜீவர்களை உலகமுகப்படுத்திக் கொண்டு உள்ளனர். ஜீவர்கள் பக்குவம் அடைந்த பிறகு அவ்வொன்பது சக்தியரும் செயல் அற்றுச் சக்தியுடன் பொருந்தி நின்றனர். அப்போது மூலாதாரத்தில் இருந்த குண்டலினி தொண்டைச் சக்கரமாகிய விசுத்தியின் வழியே சென்று புருவ மத்தியில் உள்ள ஆக்ஞை சக்கரத்தை அடைந்து அங்கே முழுச் சக்தியானது.

#663. பராசக்தியே செய்விப்பவள்!

பூரணச் சத்தி ஏழு மூன்று அறை ஆக
ஏர்அணி கன்னியர் எழு நூற்றஞ்சு ஆயினர்
நாரணன், நான்முகன் ஆகிய ஐவர்க்கும்
காரணம் ஆகிக் கலந்து விரிந்ததே.

பராசக்தியே ஏழு கன்னியர்களாக ஆவாள். இச்சை, ஞானம், கிரியை இவற்றின் வேறுபாடுகளால் அந்த ஏழு கன்னியர் இருபத்தொரு அழகிய கன்னியர் ஆவார்கள். ருத்திரன், நான்முகன், திருமால், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவருக்கும் காரணமாகி அந்த இருபத்தொரு கன்னியர்களே நூற்று ஐந்து கன்னியர்களாக ஆவார்கள். இவ்வாறு ஐந்து மூர்த்திகளின் அனைத்துத் தொழில்களையும் செய்விப்பவள் பராசக்தி தேவியே ஆவாள்.

#664. நாதத்தில் விளங்குவாய்!

விரிந்து குவிந்து விளைந்த இம்மங்கை
கரந்து உள்எழுந்து, கரந்து அங்கு இருக்கின்
பரந்து குவிந்தது பார்முதல் பூதம்
இரைந்து எழுவாயு இடத்தில் ஓங்கே.

இவ்வாறு விரிந்து நிற்கும் சக்தியே பிறகு மீண்டும் ஒடுங்கி விடுவாள். பலவகையான போகங்களையும் விளைவிப்பாள். சிவத்துடன் நின்று அதன் பின்னர் மறைந்து ஒடுங்கி விடுவாள். மேலே எழுகின்ற நாதத்தில் நீ ஓங்கி விளங்குவாய்.

#665. விந்துத் தானம்

இடையொடு பிங்கலை என்னும் இரண்டு
மடைபடும் வாயுவும் மாறியே நிற்கும்.
தடைஅவை ஆறு எழும் தண்சுடர் உள்ளே
மிடை வளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே.

நாதத்தில் ஒடுங்கி விட்டவர்களுக்கு இடைகலை பிங்கலை என்னும் இரண்டும் அடைபட்டுவிடும். சுழுமுனை திறந்து கொள்ளும். அவர்களின் சுவாசம் மெல்ல இயங்கும். ஆறு ஆதாரங்களும், ஏழு சக்திகளும் நீங்கிச் சந்திர மண்டலத்தில் புருவ மத்தியில் விந்துத் தானத்தில் அடங்கும்.

#666. சிவன் தன்னை அறியச் செய்தல்

ஒடுங்கி ஒருங்கி உணர்ந்து அங்கு இருக்கில்
அடங்கி அடங்கிடும் வாயு அதனுள்
மடங்கி மடங்கிடும் மன் உயிருள்ளே
நடங் கொண்ட கூத்தனும் நாடுகின்றானே.

உள்ளம் ஒருமைப்பட்டு புருவ மத்தியில் இருந்தால், மூச்சுக் காற்றும் கட்டுப்பட்டு நின்று விடும். சீவன் வெளி உலக நோக்கம் இல்லாமல் அகத்தின் மீது நோக்கம் கொண்டு விடும். அப்போது உயிரில் கலந்து விளங்கும் ஈசன், சீவனுக்குத் தன்னை வெளிப்படுத்துவான்.

#667. தூண்டா விளக்கு

நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
தேடி உடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிடும்
மாடில் ஒருகை மணிவிளக்கு ஆனதே.

பாயும் இடத்தில் நாத ஒலியுடன் சென்று, அங்கு நிலை பெற்று விளங்கும் சிவ சக்தியரைப் பொருந்தும் சுழுமுனை ஒரு தூண்டா விளக்கு ஆகும். அது பாசறையில் தங்கி இருக்கும் இருள் என்னும் கொடிய பகைவனை அடையாளம் காட்டுகின்றது.

#668. எண் சித்திகள்

அணிமாதி சித்திக ளானவை கூறில்
அணுவி லணுவின் பெருமையி னேர்மை
இனுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத் தனையெங்குத் தானாதல் என்றெட்டே.

அணிமா முதலிய எட்டு சக்திகள் இவை:

1. அணுவில் அணுவாதல். 2. பெரியதில் பெரியது ஆதல். 3. அசைக்க முடியாத கனம் அடைதல். 4. இறகு போல லேசாதல். 5. மேலே உள்ள வானத்தைத் தொடுதல் 6. எல்லா பூதங்களிலும் கலந்து எழுதல். 7. உயிர்களுக்கு எல்லாம் கருத்தாக ஆதல். 8. எங்கும் தானாக இருத்தல்.

#669. அமுதம் உண்பர்

எட்டாகிய சித்தி யோரெட்டி யோகத்தால்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டான் மதியுண்ண வும்வரு மேலதே.

அட்டாங்க யோகத்தால் அடக்கி ஆள இயலாத மூச்சுக் காற்றை ஒருவர் அடக்கி ஆளலாம். அவர் எட்டுப் பெரிய சித்திகளையும் அடையலாம். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி, சுழுமுனை நாடி வழியே மேலே செல்லலாம் . அக்கினி மண்டலம், கதிரவன் மண்டலம் இவற்றைக் கடந்து செல்லலாம். சந்திர மண்டலத்தில் உள்ள அமுதத்தையும் உண்ணலாம்.

#670. திரிபுரை சக்தி

சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தால்
புத்திக ளானவை எல்லாம் புலப்படும்
சித்திக லெண் சித்தி தானந் திரிபுரைச்
சக்தி அருள்தரத் தானுள வாகுமே.

பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் அடைவிக்கும் அட்டாங்க யோகம். அதைப் பயின்று மேலே செல்லச் செல்ல பலன்கள் பலப்பல கிடைக்கும். எட்டு சித்திகள்

கிடைக்கும்; ஞானம் தானே வெளிப்படும்; எண் சித்திகளும் திரிபுரை சக்தியே ஆனதால் அவள் அருளால் சித்தியும், புத்தியும் தாமே கிடைக்கும்.

#671. அணிமா சக்தி

எட்டுஇவை தன்னோடு எழிற்பரம் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகம் சேர்தலால்
இட்டமது உள்ள இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பும் இடம்தான் நின்று எட்டுமே.

எட்டு பெரிய சித்திகளுடன் எல்லாம் வல்ல பரஞானமும் பெற்ற ஒருவர் சித்தர் ஆகி விடுவார். இவர் சிவலோகத்தை அடைந்து, தனக்கு மிகவும் விருப்பமான சிவபெருமானுடன் பொருந்தி இருப்பார்.

#672. விரும்பும் உலகம் சேரலாம்!

மந்தர மேறு மதிபானுவை மாற்றிக்
கந்தாய்க் குழியில் கசடுஅற வல்லோர்க்குத்
தந்துஇன்றி நற்கமிய லோகம் சார்வாகும்
அந்த உலகம் அணிமாதி ஆமே.

மலையாகிய தலையில் சந்திர, சூரிய கலைகளை மாற்ற வேண்டும். சுழுமுனையை அடிக்கப் பட்ட ஒரு முளையைப் போல ஆக்கி விட வேண்டும். விந்துவின் நீக்கம் என்பதே இருக்கக் கூடாது. இப்படிப்பட்டவருக்கு நரம்புகள் இல்லாத ஒரு பிரணவ உடல் கிடைக்கும். அவர் அதன் மூலம் நல்ல உலகத்தை அடைய முடியும். அந்த உலகம் தன்னை அடைந்தவருக்கு எட்டு சித்திகளையும் அளிக்க வல்லது.

673. வெல்ல இயலாது

முடிந்திட்டு வைத்து முயங்கில் ஓராண்டில்
அணிந்த அணிமா கைதானாம் இவனும்
தணிந்த அப்பஞ்சினும் தான் நொய்யது ஆகி
மெலிந்து அங்கு இருந்திடும் வெல்ல ஒண்ணாதே.

விந்து நீக்கம் இல்லாமல் சேமித்து வைத்துக் கொண்டு ஓராண்டு யோக முயற்சியில் ஈடுபட வேண்டும். அப்போது அணிமா சக்தி கிடைக்கும். அது கிடைத்தால் அந்த சித்தன் மெலிந்த நுட்பமான பஞ்சை விட மிகவும் மெலிந்து இருப்பான், அவனை வெல்ல முடியாது.

#674. இலகிமா

ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற ஐயாண்டில் மா லகு ஆகுமே.

பராசக்தி ஆக்கத்தைத் தருபவள். மூலாதரத்தில் இருந்து மேலே செல்லும் எல்லா தத்துவங்களிலும் அந்த சக்தி தேவையான் காலத்துக்குத் தன்மயமாகி நின்றால் இலகிமா என்னும் சித்தி ஐந்து ஆண்டுகளில் கைவரும்.

#675. சிவ தரிசனம்

மாலகு ஆகிய மாயனைக் கண்டபின்
தான்ஒளி ஆகித் தழைத்து அங்குஇருந்திடும்
பால்ஒளி ஆகிப் பரந்து எங்கும் நின்றது
மேல்ஒளி ஆகிய மெய்ப்பொருள் காணுமே.

இலகிமா என்னும் சித்தியைப் பெற்ற ஆன்மா தானே ஒளியாக விளங்குவான். அந்தப் பேரொளியில் திளைத்து இருப்பான். பால் போன்ற ஒளியுடன் பரவி நிற்கும் ஆன்மாவுக்கு அப்போது மேலான சிவ தரிசனம் கிடைக்கும்.

#676. மகிமா

மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
தத்பொருள் ஆகிய தத்துவம் கூடிடக்
கைப்பொருள் ஆகக் கலந்திடும் ஓர் ஆண்டின்
மைப்பொருள் ஆகும் மகிமாவது ஆகுமே.

மெய்யான ஞானத்தை உணர்த்துபவள் சக்தி. இவள் விந்து வடிவானவள். 'தத்' என்ற சொல்லால் குறிக்கப்படும் பரம்பொருள் சிவன். இவன் நாத வடிவானவன் . இவ்விருவரும் நாதமும், விந்துவுமாக இணைந்தால் மகிமா என்னும் சித்தி ஒரே ஆண்டில் உள்ளங்கையில் உள்ள ஒரு பொருளைப் போலக் கிடைத்து விடும்.

#677. காலத் தத்துவத்தைக் கடக்கலாம்

ஆகின்ற கால்ஒளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையாம்
மெனொஇன்ற காலங்கள் வெளியுற நின்றபின்
தானின்ற காலங்கள் தன்வழி ஆகுமே.

இடைகலை பிங்கலை என்ற இரண்டு நாடிகளைப் பெற்றுள்ளது சுழுமுனை. இதன் வழியே சென்று தலையின் மேல் உள்ள ஒளியைக் கண்டுவிட்ட ஒருவருக்கு ஆயுட்காலம் அழியாது. இனி வரும் காலங்களில் மற்ற தத்துவங்கள் எல்லாம் அவர் வழியாகும்.

#678. மகிமா பெற்றவன் மகிமை

தன்வழி யாகத் தழைத்திடும் ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகம்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாம்
தன்வழி தன்னரு ளாகி நின் றானே.

மகிமா என்னும் சித்தியைப் பெற்ற ஒருவனால் ஞானம் தழைத்து ஓங்கும். அவனால் உலகம் செழிப்பு அடையும். எல்லாப் பொருட்களும் அவன் வயப்பட்டு நிற்கும். அவன் சிவனருள் வயப்பட்டு நிற்பான்.

#679. பிராப்தி

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப்படையவை எல்லாம்;
கொண்டவை ஓராண்டு கூட இருந்திடில்
விண்டதுவே நல்ல பிராத்திய தாகுமே.

தூலமாகக் காணப் படும் பொருட்கள் அனைத்துமே பராசக்தியிடம் நுண்மையாக ஒடுங்கி இருக்கும். அத்தகைய நுண்மையான ஒளி வீசும் பொருட்களைக் கண்டு அவற்றின் மீது ஓராண்டு காலம் தாரணை செய்துவந்தால் பிராப்தி என்னும் சித்தி சித்திக்கும். அப்போது உலகப் பொருட்கள் எல்லாமே நம்மிடம் பொருந்தி இருப்பதைக் காண இயலும்.

#680. கரிமா

ஆகின்ற மின்ஒளி ஆவது கண்டபின்
பாகின்ற பூவில் பரப்புஅவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவதும் இல்லையே.

அத்தகைய மின் ஒளியைக் கண்ட பின்னர் விரிந்த ஆயிரம் இதழ்த் தாமரையில் உலகப் பொருட்களின் விரிவைக் காண இயலும். அப்போது காலத் தத்துவம் மாறுபட்டு நிற்கும்,. கழிகின்ற காலம் கழியாமல் நிற்கும்.

#681. மின் ஒளியைக் கண்டவர் பெருமை

போவதொன்று இல்லை வருவது தான் இல்லை
சாவது ஒன்றில்லை தழைப்பதுதான் இல்லை
தாமதம் இல்லை தாமே அகத்து இன்னொளி
ஆவதும் இல்லை அறிந்து கொள்வார்க்கே.

மின் ஒளியைக் கண்டவர் எங்கும் செல்ல வேண்டியதில்லை. எங்கிருந்தும் வர வேண்டியதில்லை. அவருக்கு இறப்பு இல்லை. இறப்பு இல்லாததால் இனிப் பிறப்புமில்லை. முக்குணங்கள் இனி இல்லை. பிரமரந்திரத்தில் உள்ளேயுள்ள சுழுமுனையில் இருக்கும் பல விதமான ஒளிகளும் உண்மையை உணர்வதற்கு இல்லாகும்.

#682.பரகாயம் புகுதல்

அறிந்த பராசக்தி உள்ளே அமரில்
பறிந்தது பூதப்படைஅவை எல்லாம்
குவிந்தவை ஓர் ஆண்டுகூட இருக்கில்
விரிந்த பரகாயம் மேவலும் ஆமே.

தத்துவக் கூட்டங்களை அமைப்பவை பூதக் கூட்டங்கள். பராசக்தியுடன் ஆன்மா பொருந்திருந்தால் பூதக் கூட்டங்கள் நீங்கும். உள்ளம் பராசக்தியின் மீது ஓராண்டு காலம் குவிந்து இருந்தால் பரகாயம் புகுதல் என்னும் சித்தி கைக் கூடும்.

#683. பிரகாமியம்

ஆன விளக்கொளி யாவது அறிகிலர்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டு கொள்வார்கட்கு
மேலை விளக்கொளி வீடுஎளிதாம் நின்றே.

தன்னை விளக்கிக் காட்டும் ஒளி ஆன்மாவிடமே உள்ளது. ஆனால் இதை பலரும் அறியார். மூலாதாரத்தில் மூலக் கனல் ஒன்று உள்ளது. அதை ஒலியாகவும் ஒளியாகவும் மாற்றித் தரிசிக்கக் கற்றுக் கொண்டால் தலைக்கு மேலே உள்ள சிவ ஒளியைக் காண்பது எளிதாகும். அதனால் முத்தி அடைவதும் எளிதாகி விடும்.

#684 . ஈசத்துவம்

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாம்
கொண்டவை ஓராண்டு கூடி இருந்திடில்
பண்டைய ஈசன் தத்துவம் ஆகுமே.

சிவ சக்தியர் எப்போதும் ஜீவர்களிடம் நிலை பெற்று இருப்பர். தலைக்கு மேலே உள்ள விந்து மண்டலத்தில், நுண்ணிய பார்வைக்கு மட்டும் புலப்படும் ஒளி அணுக்களை, ஓராண்டு காலம் பாய்ச்சி வந்தால் சதாசிவத் தத்துவம் வாய்க்கும்.

#685. ஈசத்துவம் பெற்றவர் பெருமை

ஆகின்ற சந்திரன் தன்ஒளி யாவான்
ஆகின்ற சந்திரன் தட்பமும் ஆயிடும்
ஆகின்ற சந்திரன் தன் கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான்அவன் ஆமே.

சக்தியின் ஒளியைத் தன் நெற்றியின் நடுவில் அமையப் பெற்றவன், அந்தச் சந்திரனைப் போலவே ஒளி பெறுவான். அந்தச் சந்திரனைப் போலவே குளிர்ச்சி பெறுவான். வளரும் திங்களைப் போல வளர்ந்து அவன் சக்தியும் முழுமை அடைந்து விட்டால், அந்த சீவன் அப்போது சதாசிவனின் நிலையை அடைந்து விடும்.

#686. தமக்குத் தாமே நிகர் ஆவர்

தானே படைத்திட வல்லவன் ஆயிடும்;
தானே அளித்திட வல்லவன் ஆயிடும் ;
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்;
தானே இவன் என்னும் தன்மையன் ஆமே.

ஈசத்துவம் என்னும் சித்தியை அடைந்தவர்கள் தாமே படைப்புத் தொழிலைச் செய்யும் வல்லமை பெறுவார். அவரே காக்கும் தொழிலையும் செய்யும் வல்லமை பெறுவார். அவரே அழிக்கும் தொழிலைச் செய்யும் வல்லமையும் பெறுவார். அப்போது அவருக்கு நிகர் அவரே ஆவார்.

#687. சந்திர கலையில் நீல ஒளி

தன்மையது ஆகத் தழைத்த கலையினுள்
பன்மையது ஆகப் பரந்த ஐம்பூதத்தை
வன்மைய தாக மறித்திடில், ஓராண்டின்
மென்மையது ஆகிய மெய்ப்பொருள் காணுமே.

குளிர்ந்த கதிர்களுடன் இருக்கும் சந்திர கலையில் ஒளி அணுக்கள் விளங்கும். பலவகையான பஞ்ச பூதங்களின் ஒளி அணுக்களை வேறு வேறாகக் காணாமல், நீல ஒளியாக ஓராண்டு காலம் கண்டு வந்தால் அப்போது ஆன்மா சிரசின் மேலே ஒரு ஒளியாக விளங்கும்.

#688. வசித்துவம்

மெய்ப்பொருளாக விளைந்தது ஏதெனில்
நற்பொருளாகிய நல்ல வசித்துவம் ;
கைப்பொருள் ஆகக் கலந்த உயிர்க்கு எல்லாம்
தற்பொருள் ஆகிய தன்மையன் ஆகுமே.

தாரணை முதலிய யோகப் பயிர்ச்சிகளால் விளையும் நன்மை எது?
அது எல்லோரையும் கவர்ந்திடும் வசித்துவம் என்னும் தன்மையாகும். தன் விருப்பப்படி நடக்கும் உயிர்களுக்கு எல்லாம் அவன் சிவன் போல ஆகிவிடுவான்.

689. வசித்துவம் பெற்றவன்

தன்மையதாகத் தழைத்த பகலவன்
மென்மையது ஆகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மையதாகப் புலன்களும் போயிட,
நன்மையது ஆகிய நற்கொடி காணுமே.

சிவத்தன்மை பெற்றுவிட்ட சித்தன் சிறப்பு அடைவான். அவன் நுண்ணிய தன் ஆன்மாவையும் அறிந்து கொண்டுவிட்டால், அதன் பின்னர் அவனால் பொன்னொளியுடன் கூடியிருந்தும், ஐம்புலன்களிடமிருந்து உடலை விடுவித்தும், உலகுக்கு நன்மை செய்யும், சதாசிவ நாயகியைக் காண இயலும்.

#690. புவனங்கள் போய் வரலாம்!

நற்கொடி ஆகிய நாயகி தன்னுடன்
அக்கொடியாகம் அறிந்திடில் ஓர் ஆண்டு
பொற்கொடி ஆகிய புவனங்கள் போய்வரும்
கற்கொடி ஆகிய காமுகன் ஆமே.

சதாசிவ நாயகி நன்மைகளைச் செய்யும் ஒரு மெல்லிய கொடியாவாள். அந்தக் கொடி போன்ற சக்தி தன்னிடம் நிலை பெறுவதாக ஒருவன் ஓராண்டு காலம் தியானம் செய்து வந்தால், அவன் எந்த உலகத்திற்கும் நினைத்த மாத்திரத்தில் போய் வரும் அற்புதமான சித்தியைப் பெறுவான்.

#691. படைக்கும் ஆற்றல் கிடைக்கும்

காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம்அது ஆயிடும்;
மாமரு உன்இடை மெய்த்திடும் மானன் ஆய்
நாமரு வும்ஒளி நாயகம் ஆனதே.

யாவற்றையும் தன் வயப்படுத்தும் வசித்துவம் என்ற சித்தியை அடைந்த பிறகு, ஆயிரம் இதழ்த் தாமரையில் இருக்கும் தன்மாத்திரையின் ஒளி அணுக்கள் அவற்றின் பெருமைக்கு ஏற்ப உலகங்களாக விரிந்து நிற்கும். அருட்சக்திக்கும், வசித்துவம் கைவரப் பெற்றவரின் சக்திக்கும் எந்த வேறுபாடுமிராது. அது அவனை வாக்கு ரூபமான ஒளித் தன்மை பெற்ற ஒரு நாயகன் ஆக்கி விடும்.

#692. பேரொளியைக் கண்டவர் நிலைமை

நாயகம் ஆகிய நல்லொளி கண்டபின்
தாயகம் ஆகத் தழைத்து அங்கு இருந்திடும்
போய்அகம் ஆன புவனங்கள் கண்டபின்
பேய்அகம் ஆகிய பேரொளி காணுமே.

சிவப் பேரொளியைக் கண்டு தரிசித்தவன் அந்த ஒளியையே தன் வீடாக எண்ணுவான். அதில் மகிழ்ச்சியுடன் குடி இருப்பான். வேறு உலகங்களுக்குச் சென்று அவற்றைக் கண்டாலும், காமம் குரோதம் போன்ற உணர்வுகளுடன் வாழும் ஜீவர்களிடையே வாழ்வதை அவன் சிறிதும் விரும்ப மாட்டான்.

#693. பிரணவ ஒளி

பேரொளி ஆகிய பெரிய அவ்எட்டையும்
பார்ஒளி யாகப் பதைப்பு அறக் கண்டவன்
தார்ஒளி யாகத் தரணி முழுவதும்ஆம்
ஓர்ஒளி ஆகிய கால்ஒளி காணுமே.

பேரொளி ஆகிய இறைவனின் ஒளியைச் சிறிதும் அசைவில்லாமலும், சலனமில்லாமும், உலகத்தில் உள்ள ஒளியைப்போல காணக் கற்றறிந்தவன், ஆன்மாவின் ஒளியுடன் பூமண்டலம் முழுவதிலும் வியாபித்துள்ள பிரணவ ஒளி ஒன்றையே காண்பான்.

#694. நாடிகளின் இயல்புகள்

காலோடு உயிரும் கலக்கும் வகை சொல்லின்
கால்அது அக்கொடி நாயகி தன்னுடன்
கால்அது ஐஞ்ஞூற்று ஒருபத்து மூன்றையும்
கால்அது வேண்டிக் கொண்டஇவ்வாறே.

சுழுமுனை மின்னொளி போல விளங்கும். பராசக்தியின் ஒளியும் உடன் நிற்கும். சுழுமுனை இடைகலை, பிங்கலை என்னும் இரு நாடிகளை அனுசரித்து இருக்கும். உடலில் உள்ள முக்கியமான பத்து நாடிகள் இவை. இடை, பிங்களை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அஸ்தி, அலம்புடை, சங்கினி, குரு. இவை

மேலும் ஐந்நூறு நாடிகளுடன் தொடர்பு உடையன. இங்ஙனம் சுழுமுனையின் ஆளுமை இந்த ஐந்நூற்றுப் பதின்மூன்று நாடிகளிலும் இருக்கும். உயிர் இந்த நாடிகளில் கலந்து இருப்பது இவ்வாறே ஆகும்.

#695. சிவ சக்தியர்

ஆறுஅது ஆகும் அமிர்தத் தலையினுள்
ஆறுஅது ஆயிரம் முன்னூற்றொடுஐஞ்சு உள
ஆறுஅது ஆயிரம் ஆகும்; அருவழி
ஆறுஅதுஆக, வளர்ப்பது இரண்டே.

அமிர்தத்தைப் பெருக்குவதற்கு தலையில் நிரோதினி என்னும் ஒரு கலை உள்ளது.. அங்கே பலவித மாற்றங்களைச் செய்து அமிர்தத்தைப் பெருக்குவதற்கு ஆயிரத்து முன்னூற்று ஐந்து நரம்புகள் உள்ளன. ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரைக்குச் செல்லும் வழி இதுவே. இதன் வழியே சீவனின் உயிரை ஓம்புவது சிவ சக்தியர்.

விளக்கம்

சந்திர கலைகளில் ஆறாவது கலை நிரோதினி. இந்த நிரோதினி அமைந்த பின்னர் பாசக் கூட்டம் பெருகாது. இதன் இருப்பிடம் நெற்றியின் மேல் பகுதி. நிரோதினி அமைந்த பிறகே தலையில் ஒளி மண்டலம் சிறிது சிறிதாகத் தோன்ற ஆரம்பிக்கும். சிவசக்தியரை நினைப்பதால் திரோதினி அமையும். அமைந்து பாசம் பெருகுவதைத் தடுக்கும். அதற்கும் மேலே பரையின் வியாபகத்துக்கு வழி செய்யும்.

#696. காலத்தைக் கடக்க உதவுபவள்

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டுஅது கால்கொண்டு எழுவகை சொல்லில்
இரண்டுஅது ஆயிரம் ஐம்பதோடு ஒன்றாய்
திரண்டது காலம் எடுத்தும் அஞ்சே.

சிவதத்துவதில் மகேசுவரத் தத்துவத்துக்கு மேல் சாதாக்கியத்தில் விளங்குவாள் மனோன்மணி என்னும் சதாசிவ நாயகி. இவள் இடகலை, பிங்கலை என்ற இரண்டு நாடிகளின் மீது தலைக்குச் சென்று விளங்குவாள். இந்த நாடிகள் இரண்டும் ஆயிரம் இதழ்த் தாமரையை அடையும் முன்னர் ஆதாரச் சக்கரங்களில் விரிந்துள்ள ஐம்பத்து ஒன்று எழுத்துக்களைக் கடந்து செல்லும். அப்போது ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவ நாயகியே யோகி காலத்தைக் கடக்க உதவி செய்வாள்.

காலம் என்பது உடலுக்கே அன்றி உயிருக்கு அல்ல. சதாசிவ வடிவம் தாங்கும் பொழுது காலத்தத்துவத்துக்கு உட்பட்ட உடல் இருக்கும். தலைக்கு மேலே போய் உருவத்தைக் கடந்து விட்டால் காலம் என்பதே இல்லாமல் போகும்.

#697. சதாசிவ நாயகி

அஞ்சுடன் அஞ்சு முகம் உள நாயகி
அஞ்சுடன் அஞ்சு அது ஆயுதம் ஆவது
அஞ்சு அது அன்றி, இரண்டுஅது ஆயிரம்
அஞ்சு அது களம் எடுத்துளும் ஒன்றே.

பத்து திசைகளிலும் பத்து முகங்களை உடையவள் சதாசிவ நாயகி. அவளுக்குப் பத்து வாயுக்களும் பத்துக் கருவிகள் ஆகும். ஐந்து முகங்கள் கொண்ட சக்திக்கு கவிழ்ந்த ஆயிரம் இதழ் தாமரை, நிமிர்ந்த ஆயிரம் இதழ்த் தாமரை என்னும் இரண்டும் கருவிகள் ஆகும். உருவம் அற்ற நிலையில் அந்த சக்தி பத்து வாயுக்களையும், பத்து திசைகளையும் கடந்த வெளியாக விளங்குவாள்.

#698. பராசக்தியை நினைக்க வேண்டும்

ஒன்றுஅது ஆகிய தத்துவ நாயகி
ஒன்றுஅது கால்கொண்டு ஊர்வகை சொல்லிடில்,
ஒன்று அது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்று அது காலம் எடுத்துளும் உன்னே.

அகன்று விரிந்து பரந்த ஒரே சக்தியாகிய பராசக்தி கவிழ்ந்த ஆயிரம் இதழ்த் தாமரையில் காலத்தில் விளங்குபவள் ஆக இருப்பாள்..நிமிர்ந்த ஆயிரம் இதழ் தாமரையில் அவளே காலத்தைக் கடந்தவளாக இருப்பாள். அவளை எப்போதும் உன் நினைவில் கொள்ள வேண்டும்.

#699. காற்று அடங்கும் வகை

முன்எழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னூறு வாயு முடிவகை சொல்லிடின்
முன்னூறும் ஐம்பதொன்றுடன் அஞ்சுமாய்
முன்னூறு வாயு முடிவகை ஆமே.

தலையின் முன் பக்கத்தில் விளங்கும் நிமிர்ந்த ஆயிரம் இதழ்த் தாமரை. அதில் விளங்குவாள் பராசக்தி. அந்த சக்தியுடன் முன்னோக்கிப் பாயும் வாயுக்கள் முடிவுறும் வகை இதுவே ஆகும். ஐம்பத்தொன்று எழுத்துக்களைக் கொண்ட, ஆறு ஆதாரச் சக்கரங்களை இயக்கிக் கொண்டிருந்த, ஐந்து முகங்கள் கொண்ட

சக்தியானவள் பராசக்தியாகும் பொழுது, முன்பு விளங்கிய வாயுக்கள் எல்லாம் அடங்கி விடும்.

#700. வாயு அடங்குதல்

ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்நூற்று முப்பதொடு ஒன்பது
மாய்வரு வாயு வளப்புள் இருந்ததே.

ஆராய்ச்சியினால் அறிய முடியாதவள் பராசக்தி. ஆராய்ந்து காற்றின் அளவைக் கூறப் போனால், மூச்சுக்காற்று ஒரு நாளைக்கு ஐந்நூற்று முப்பது ஒன்றாகக் குறைந்துவிடும் போது பராசக்தியுடன் இரண்டறக் கலக்கும்.

(இத்தகைய ஒரு நீண்ட மூச்சுக் காற்றின் நீளம் ஏறக் குறைய நூற்று அறுபது வினாடிகள்!!!)

#701. பிரணவத்துடன் பொருந்தும்

இருநிதி ஆகிய எந்தை இடத்து
இருநிதி வாயு இயங்கும் நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுத்தே.

ஒளிமண்டலம் ஆகிய பெரிய செல்வத்தில் விளங்கும் சிவனிடம் செல்லும் போது, மூச்சுக் காற்று இருநூற்று முப்பத்தி எட்டாகக் குறைந்து விடும். அது பிரணவத்துடன் பொருந்தி விடும்.

(இந்த நீண்ட ஒரு பெருமூச்சின் நீளம் ஏறக்குறைய ஆறு நிமிடங்கள்!)

#702. மூலத்தீயே பேரொளியாகும்

எழுகின்ற ஜோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடம் அது சொல்லில்
எழுநூற் றிருபத்தொன் பான்அது நாலாய்
எழுந்துடன் அங்கி இருந்தது இவ்வாறே.

மூலாதாரத்திலிருந்து எழுகின்ற ஜோதியுள் சக்தி உறைவாள். சுழுமுனை வழியே பாய்ந்து செல்லும் மூச்சுக் காற்றின் இடம் எது என்று அறிவீரா? எழுநூற்று இருபத்தொன்பது நாடிகளிலும் அது கலந்துள்ளது. நான்கு இதழ்த் தாமரையாகிய மூலாதாரத்தில் எழும் ஒளியே இந்தப் பேரொளியாகின்றது.

#703. மூச்சின் இயக்கம் நின்றுவிடும்

**ஆறுஅது கால்கொண்டு இரதம் விளைத்திடும்
ஏழுஅது கால்கொண்டு இரட்டி இறக்கிட
எட்டு அது கால்கொண்டு இடவகை ஒத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே.**

சந்திர கலைகளுள் ஆறாவது கலையாகிய நிரோதினியை, நெற்றியின் மேல் பகுதியில் தியானித்து வந்தால், புகை போன்ற ஒரு நிறம் தோன்றும். அது ஏழாவது சந்திர கலையாகிய நாதத்தைப் பெருக்கி அதன் மூலம் யோகியின் ஆனந்தத்தை இரு மடங்கு ஆக்கும். எட்டாவது கலையாகிய நாதாந்தத்தில் மனம் எண்ணுவதை விட்டு விட்டு உணருவதை மட்டும் மேற்கொள்ளும். ஒன்பதாவது கலையாகிய சக்தி கலையில் உடலை இயக்கி வந்த மூச்சுக் காற்று அடங்கி விடும்.

பதினாறு சந்திர கலைகள்:

1. அகரம். 2. உகரம். 3. மகரம். 4. விந்து. 5. அர்த்த சந்திரன். 6. நிரோதினி. 7. நாதம். 8. நாதாந்தம். 9. சக்தி. 10. வியாபினி. 11. வியோமரூபிணி . 12. அகந்தை. 13. அநாதை . 14. அநாசிருதை. 15. சமனை. 16. உன்மனி.

#704. சிவமாகி விடும் யோகி

**சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவில்
சந்திரன் தானும் தலைப்படும் தன்மையைச்
சந்தியிலே கண்டு தான்ஆம் சகமுகத்து
உந்தி சமாதி உடைஒளி யோகியே.**

நிமிர்ந்த ஆயிரம் இதழ் தாமரையில் சந்திரகலை, சூரியகலை ஆன்மா என்னும் மூன்றுமே விளங்கும். உலகில் உயிருடன் வாழும்போதே சீவ ஒளியைச் சிவ ஒளியுடன் பொருத்திச் சமாதி நிலையை அடைந்த யோகியால் மட்டுமே சிவம் ஆகும் தன்மையை அடைய முடியும்.

#705. யோகியர் அறிவர்.

**அணங்கற்ற மாதல் அருஞ்சன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்
சிணங்குற்ற வாயார் சித்தி தூரம் கேட்டல்
நுணங்கற்றி ரோதல்கால் வேகத்து நுந்தலே.**

ஆசையை அழிப்பது, சுற்றத்தினரிடமிருந்து விலகி இருப்பது, பணிவைத் தருகின்ற சிவஞானத்தை அதிகரிப்பது , பேச்சைச் சுருக்குவது, தொலைவில்

நடப்பதைக் கேட்பது, நுண்மையாக மறைந்து இருப்பது, உடலில் காற்றை மேலே செலுத்துவது இவை யோகியர் செய்கின்ற சில சாதனைகள்.

#706. யோகியர் அறிவன

மரணஞ் சரைவிடல் வண்பர காயம்
இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் திருவுரு வாதன் மூவேழங்
கரனுறு கேள்விக் கணக்கறி ந்தோனே.

இறப்பு, மூப்பு இவற்றைக் கடப்பது; அயல் உடலில் புகுவது; இறந்தவருக்குப் பொன்னுலகத்தை அளிப்பது; தனக்குப் பிரணவ உடலைப் பெறுவது; மூண்டு எழுகின்ற சிவ சூரியனைப் பற்றிய கேள்வி ஞானம் அடைவது; இவை யோகியர் புரிய வல்ல சில சாதனைகள் ஆகும்.

#707. தலயாத்திரை தேவையில்லை!

ஓதம் ஒலிக்கும் உலகை வலம் வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாத நிருந்த நகரறி வாரே.

கடல் சூழ்ந்த இந்த உலகை வலம் வந்து கால் தேயத் தலயாத்திரைகள் செய்யத் தேவையில்லை. நம் தலைவன் எங்கும் இருக்கின்றான் என்றுணர்ந்து அவன் மேல் அன்பு கொண்டவர்கள் அவனை எங்கும் வழிபட்டு இன்பம் அடைவர்.

#708. சிவசக்தியின் இருப்பிடம்

மூல முதல் வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சக்தி பரைபரன் பாதமே.

மூலாதாரத்துக்கும் மேலே உள்ள சுவாதிஷ்டானத்தில் நான்முகன் இருக்கிறான். அதற்கும் மேலே மணிபூரகத்தில் திருமால் இருக்கிறான். அதற்கும் மேலே அநாஹதத்தில் உருத்திரன் இருக்கிறான். அதற்கும் மேலே நெற்றி முதல் தலை உச்சி வரையில் பரந்துள்ளான் சிவனின் அம்சமாகிய சதாசிவன். அதற்கும் மேலே பரவிந்து, பரநாதம், நாதாந்தம் இவற்றைக் கடந்தது இருப்பது அருள் புரியும் சிவசக்தியின் இருப்பிடமாகும்.

#709. ஆனந்தம் மேவும் யோகம்

ஆதார யோகத்து அதிதே வொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி ஈரெண் கலை செல்ல , மீதுஒளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே.

ஆறு ஆதாரங்களுக்கும் உரிய பிரமன் முதலான தேவதைகளுட ன் பொருந்திய பின்னர், இன்னும் மேலே செல்லும் பராத்பரை, மேலான பரனொடு பொருந்துகின்றாள். அப்போது பதினாறு கலைகளான பிரசாத நெறியில் விளங்கும் ஒளியில், வாக்கும் மனமும் இல்லாத ஒரு நிலை ஏற்படும். மனோ லயம் அடைந்து எண்ணங்கள் அற்றுப் போகின்ற அந்த உயர்ந்த நிலையே ஆனந்த யோகம் ஆகும்.

#710. வீடுபேறு அடையலாம்

மதியமும் ஞாயிறும் வந்து உடன் கூடித்
துதி செய்பவர் அவர் தொல் வானவர்கள்
விதி அது செய்கின்ற மெய்யடியார்க்குப்
பதி அது காட்டும் பரமன் நின்றானே.

இடைகலை, பிங்கலை பொருந்தியுள்ள சுழுமுனையின் உச்சியில் நான்முகன் முதலிய தேவர்கள் சிவனை வணங்குவர். ஆனால் சித்தர்கள் இடைகலை, பிங்கலை இரண்டையும் ஒடுக்கி விட்டுப் பிரசாத நெறிப்படி இறைவனைத் தேடித் செல்வர். இத்தகைய அடியவருக்கு முக்தியை அளித்து இறைவன் அருள் புரிவான். இத்தகைய முத்தரைச் சித்தரை நான்முகன் போன்ற தேவர்களும் வணங்குவர்.

#711. சிவனை அறிந்தால் நமன் இல்லை!

கட்ட வல்லார்கள் கரந்து எங்கும் தான்ஆவர்;
மட்டு அவிழ் தாமரை யுள்ளே மணம்செய்து
பொட்டு எழக் குத்திப் பொறி எழத் தண்டுஇட்டு
நட்டு அறிவார்க்கு நமன்இல்லை தானே.

மூச்சுக் காற்றைக் கட்ட வல்லவர் எங்கும் மறைந்து எல்லா இடங்களிலும் இருக்கும் ஈசத்துவத்தை அடைந்து விடுவர். தேன் மிகுந்த தாமரையாகிய சுவாதிஷ்டானம் மூலாதாரத்தில் சேர்க்கையை உண்டு பண்ணுகிறது. ஐம்பொறிகளின் அறிவு நீங்கி, உச்சித் துளைக்குச் சென்று, சுழுமுனையில் நின்று, அங்கே நடனம் புரியும் சிவனை அறிந்து கொண்டவர்க்கு நமன் இல்லை என்று அறிவீர்!

மூன்றாம் தந்திரம் -
12. கலை நிலை

சந்திர கலை, சூரிய கலை, அக்கினிக் கலை இவை இயங்கும் முறையைக் கூறுவது.

#712. உயிரை அழியாது காக்கும்

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடில்
காதல் வழி செய்து கங்கை வழிதரும்
காதல் வழி செய்து காக்கலும் ஆமே.

காதல் வழியினைப் படைத்தவன் முக்கண்ணன். அந்த சிவனைக் காதலுடன் இரண்டு கண்களையும் மேலே செலுத்தி நோக்கினால், காதல் வழியான கங்கை வெள்ளம் பெருகும். அப்படிக் காதல் செய்வது நம் உயிரை அழியாமல் காக்கும்.
சந்திர கலை சூரிய கலை ஆகிய இரண்டு கண்களையும் மேலே செலுத்தி நோக்க வேண்டும். தலையில் உள்ள திரிவேணி சங்கமம் இது:
இடைகலையை கங்கை என்றும், பிங்கலையை யமுனை என்றும் , சுழுமுனையை சரஸ்வதி என்றும் நூல்கள் கூறும்.

#713. கருத்துற நிற்க வேண்டும்

காக்கலு மாகும் கரணங்கள் நான்கையும்
காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்
காக்கலு மாகுங் கலந்த நல் வாயுவும்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே.

நமது அந்தக்கரணங்கள் நான்கு ஆகும். அவை முறையே மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்பன. இவரைப் பாச வழியில் செலுத்தினால் உலக வாழ்வில் மேலும் மேலும் அழுந்தி விடுவோம். ஆனால் இவற்றைப் பதியாகிய சிவன் வழியில் செலுத்தினால் நம்மைக் காத்துக் கொள்ள முடியும். சந்திர கலைகள் பதினாறும் பரந்து நிற்குமாறு அவற்றையும் காக்க இயலும். பாசத்துக்கு முக்கிய காரணம் நம் மனம். இது சிவ ஒளியைப் பற்றிக் கொள்ளும் பொழுது பிராண வாயுவும் சிவ ஒளியில் சேர்ந்து கொண்டு விடும். எனவே எப்போதும் சிவன் திருவடிகளில் கருத்தை ஊன்றி நிற்க வேண்டும்.

#714. சலனம் அற்ற மனம்

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலை வழி நின்ற கலப்பை அறியில்
அலைவுஅறவு ஆகும் வழி இது ஆமே.

சுழுமுனையில் செல்லும் வாயு நிலைத்து நிற்கும். அது காற்று இல்லாத இடத்தில் வைத்த ஒரு தீபத்தைப் போலவும், அசைவற்றை மலையைப் போலவும் நிலையாக இருக்கும். சந்திர கலைகள் பதினாறிலும் சிவ சக்தியர் பொருந்தியுள்ளனர். இதை அறிந்து கொண்ட பின்னர் நம் மனம் சிறிதும் சலனமற்று அசையாமல் நிற்கும்.

#715. விடையில் ஏறி வீற்றிருப்பான் சிவன்

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியும்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றில் ஏறியே வீற்றிருந் தானே.

எவ்விடத்திலும் நிறைந்து நிற்பவன் பூத நாயகனாகிய சிவன். அவனைச் சிறு சிறு நாடிகளின் வழியே சென்று தேடாமல், நடு நாடியகிய சுழுமுனை வழியே சென்று தேட வேண்டும். மூச்சுக் காற்று என்ற பிராணன் சுழுமுனையில் பொருந்தி நிற்கும் பொழுது, அந்தக் கதிர்சடையோன் சிவனும் விந்து மண்டலம் என்ற விடையில் ஏறி அமர்ந்தபடி காட்சி தருவான்.

#716. காலத்தை உணரார்.

இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு ஒளிபெற நிற்கத்
தருக்கு ஒன்றி நின்றிடும் சாதகன் ஆமே.

சமாதியில் பொருந்தி இருக்கும் காலத்தை ஒரு நல்ல யோகி உணர மாட்டான். பெருகும் காலத்தின் பெருமையை எதிர் நோக்கி இருப்பான் . சுழுமுனையில் ஒன்றி இருக்கும் ஆயிரம் இதழ்த் தாமரையில் பிராணனைப் பொருந்தி இருக்கச் செய்து விட்டுச் செருக்கு என்பதே இல்லாமல் இருப்பவனே நல்ல யோக சாதனை செய்பவன்.

#717. உடலில் நடக்கும் ரசவாதம்

சாதக மான அத்தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்
வேதகமாக விளைந்து கிடக்குமே.

இங்ஙனம் சாதகமான தன்மையை ஆராய்ந்து பெருந்தவமான அந்த வழிபாட்டைச் செய்யுங்கள். பிராண வாயுவை ஆயிரம் இதழ்த் தாமரையில் புகுத்தினால் உடலில் ரசவாதம் நிகழும். உடலில் உள்ள குற்றங்கள் எல்லாம் நீங்கிவிடும். உடல் புடமிட்ட பொன்னைப் போல ஆகிவிடும்.

(அப்போது சாதகனின் ஆவியும் சிவனாகவே மாறிவிடும்)

#718. சிவத்தில் சீவன் அடங்கும்

கிடந்தது தானே கிளர்பயன் மூன்றும்;
நடந்தது தானே உள் நாடி உள்நோக்கி
படர்ந்தது தானே அப் பங்கயம் ஆகத்
தொடர்ந்தது தானே அச்சோதியுள் நின்றே.

இதனால் கிடைக்கின்ற பயன்கள் மூன்று வகைப்படும். அவை இம்மையின்பம் , மறுமையின்பம் வீடு பேறு என்பவை. உள் நாடியகிய சுழுமுனைவழியே செலுத்தப்பட்ட சீவன் ஆயிரம் இதழ்த் தாமரையை அடையும் . அங்கே சீவன் சிவத்துடன் பொருந்தி விடும்.

#719. உடலே ஓர் ஆலயம் ஆகி விடும்.

தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்து எம்உள்ளே இருந்திடும்,
வானோர் உலகு ஈன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலயம் ஆகுமே.

தான் அனைத்துக்கும் ஆதாரம் ஆனவள் சக்தி தேவி. தனக்கு என்று ஒரு ஆதாரமும் இல்லாதவள் சக்தி தேவி. சீவர்களின் உடலில் அவள் வசிப்பாள். தேவர்களுக்கும் தாயாகிய அவள் நம் உடலில் இடம் கொண்ட இன்பத்திலும், அது தரும் ஒளியிலும் ஆழ்ந்து திளைக்கும் ஒரு சிவயோகியின் உடல் ஓர் சிவாலயமாக மாறிவிடும்.

#720. பேரொளியில் கலந்து விடலாம்.

திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகிலர் ஆரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலும் ஆமே.

நிறைந்து விளங்கும் பிராண வாயு ஒடுங்கும் நிலையை எவரும் அறியவில்லை. பிராணவாயு ஒடுங்கும் நிலையை ஒருவன் அறிந்து கொண்டு விட்டால், அதன் பின்னர் வான மண்டலத்தில் இருக்க முடியும். சிவப் பேரொளியில் கலந்து ஒன்றாக முடியும்.

#721. சிவகுருவைப் பணிவீர்!

சோதனை தன்னில் துரிசு அறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னில் பிரியும் நாள்;
சாதனம் ஆகும் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக் கொள்ளீரே.

சோதனைக்கு உட்படுத்தி நான் கூறும் உண்மையைக் குற்றம் இல்லாமல் நீங்கள் அறிந்து கொள்ளலாம். உயிர்புக் காற்று குண்டலினியை விட்டு மேலே செல்லும் பொழுது சிவயோக சமாதியை அடையலாம். எனவே சிவ குருவைப் பணிவீர்! யோகப் பெருஞ் செல்வதைப் பெறுவீர்!

#722. உடல் என்றும் அழியாது.

ஈர்ஆறு கால் கொண்டு எழுந்த புரவியைப்
பேராமல் கட்டிப் பெரிது உண்ணவல்லீரேல்
நீர் ஆயிரமும் நிலம் ஆயிரத்தாண்டும்
பேராது காயம், பிரான் நந்தி ஆணையே.

இடைகலை பிங்கலை என்ற இரண்டு நாடிகளின் வழியே எழுகின்றது பிராண வாயு என்னும் புரவி. அந்தப் புரவியைத் தலை மேல் கொண்டு சென்று அசையாமல் நிறுத்தி விட்டு; அங்கேயுள்ள அமுதத்தை உண்ண அறிந்து கொண்டு விட்டால்; நீரிலோ நிலத்திலோ ஆயிரம் ஆண்டுகள் சமாதியிலிருந்த போதிலும் உடம்பு அழியாது. இது சிவன் தந்த உறுதி மொழி.

#723. சிவன் செய்யும் அருட் செயல்.

ஓசையில் ஏழும் ஒளியின் கண் ஐந்தும்
நாசியில் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனும் தன்னிற் பிரியும்நாள்
மாசுஅறு சோதி வகுத்து வைத்தானே.

குற்றம் ஒன்றும் இல்லாத சிவன், குண்டலினியும் பிராணனும் உடலை விட்டுப் பிரியும் பொழுது இந்தத் தன்மாத்திரைகளின் இந்தத் தொழில்களை முற்றிலுமாக ஒடுக்கி அருள் செய்வான்.

ஓசை என்ற வானத்தின் தன்மாத்திரையில் வெளிப்படும் ஏழு செயல்கள் இவை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எரித்தல், சேர்த்தல்.

ஒளி என்னும் தன்மாத்திரையில் நிகழும் செயல்கள் இந்த ஐந்து: சுவை, ஒளி, நாற்றம், வெம்மை, எரித்தல்.

நாசியில் பொருந்தியுள்ள மூன்று நிகழ்வுகள் இவை: நாற்றம், உயிர்ப்பு, உணருதல்.

நாவில் பொருந்தியுள்ள தொழில்கள் இவை இரண்டு: எடுத்தல், சுவைத்தல்.

மூன்றாம் தந்திரம் -
13. சரீர சித்தி உபாயம்

உடலை அழியாமல் காப்பாற்றும் வழி.

#724. உடல் பெற்ற பயன் ஞானம் பெறுவது

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே.

உடல் அழிந்தால் உயிர் நீங்கி விடும். உடலைப் பெற்ற பயன் ஞானத்தைப் பெறுவது ஆகும். உடல் உறுதி குறைந்தால் உறுதியான ஞானம் கிடைக்காது. ஞானம் கிடைக்கா விட்டால் உயிர் நீங்கி விடும். எனவே உடலைப் பேணும் முறையை அறிந்து கொண்டு என் உடலையும், உயிரையும் காத்தேன்.

உடலை வளர்க்கும் முறை:
உடல் சிவன் குடியிருக்கும் கோவில் என்று அறிந்து கொண்டு உடலுள் சிவனைக் காணுவது.

உயிர் வளர்க்கும் முறை:
உடலுடன் இருக்கும்போதே தனியாக இயங்கும் சக்தியைப் பெறுவது.

#725. உடலை ஏன் பாதுகாக்க வேண்டும்?

உடம்பினை முன்னம் இழுக்குஎன்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோவில் கொண்டான்என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே.

உடல் குற்றம் குறைகள் நிறைந்தது என்று முன்பு எண்ணியிருந்தேன். ஆனால் உடம்புக்குள்ளே சிவனைக் கண்டேன். உடலில் அந்த உத்தமன் கோவில் கொண்டதை அறிந்த பின்னர், உடலை நான் நன்கு ஓம்புகின்றேன்.

#726. பிரணவ உடல் உண்டாகும்

கழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழற்றித் தவிர்ந்து உடல் அஞ்சனம் ஆமே.

உலகத்தை நோக்கிச் செல்லும் மனத்தின் பாதையை மாற்றி அதைச் சிவனை நோக்கித் திருப்பினால் மனத் தூய்மை உண்டாகும். சிவ சிந்தனையால் மனம் தூய்மை அடைந்த பின்னர், கவிழ்ந்த ஆயிரம் இதழ்த் தாமரையை மலரச் செய்யவும் அதை நிமிரச் செய்யவும் இயலும். அப்போது வெப்பமான உடல் நீங்கி விடும். குளிர்ந்த பிரணவ உடல் கிடைத்து விடும்.

#727. இளமையும், உடல் நலமும் கிடைக்கும்

அஞ்சனம் போன்றுடல் ஐயுறும் அந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே.

மாலை வேளையில் யோகம் பயின்றால் கபம் அகன்று விடும். நண்பகலில் யோகம் பயின்றால் வாத நோய் நீங்கிவிடும். சிற்றஞ் சிறு விடியற் காலையில்

செய்தால் பித்தம் அகன்று விடும். சுக்கிலம் நீங்காமல் இருக்கும். நரை, திரை, முதுமை இவை அருகில் நெருங்கா.

#728. இரு கண்பார்வையும் மேல் நோக்க வேண்டும்

மூன்று மடக்குஉடைப் பாம்பு இரண்டும் எட்டும் உள
ஏன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்
நான்ற இம்முட்டை இரண்டையும் கட்டியிட்டு
ஊன்றியிருக்க உடம்பு அழியாதே.

இரண்டு பாம்புகள் போலப் பின்னிப் பிணைந்துள்ளன சூரியகலை, சந்திரகலை என்ற இரண்டு நாடிகள். இவற்றில் அமைந்துள்ளன உடலில் உள்ள மூன்று முடிச்சுக்கள். இயந்திரம் போல இயங்கும் உடலை இயக்குவது பன்னிரண்டு அங்குலம் செல்லும் பிராணவாயு. கீழே நோக்கும் இரு கண்களின் பார்வையை ஒன்றாக்கி மேலே நோக்கி அதிலேயே நிலைத்திருந்தால் அப்போது பிராணன் லயம் பெறும். உடல் அழியாது.

#729. தத்துவத்தைக் கடந்து நிற்கலாம்

நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே.

நூறு நாடிகள், அறுபது தாத்துவிகங்கள், ஆறு அத்துவாக்கள் இவை அனைத்தும் பிங்கலையையும் இடகலையையும் பற்றி இயங்குகின்றன. பயிற்சியாளர் இடையறாத சாதனைகளால் இவற்றைத் தூய்மைப் படுத்தலாம். முற்றிலுமாக மாற்றி அமைத்து விடலாம். அப்போது அவர் இவற்றைக் கடந்து மேலே உள்ள நிலைக்குச் செல்லலாம்.

விளக்கம்:

நூறு நாடிகள் தலையிலிருந்து கீழ் நோக்கிச் செல்கின்றன. ஒரு நாடி மட்டும் மேல் நோக்கிச் செல்கிறது . மேல் நோக்கிச் செல்லும் நாடி சிறப்படைய வேண்டும் என்றால் மற்ற நாடிகளின் தன்மையை மாற்ற வேண்டும்.

தொண்ணூற்றாறு தத்துவங்களில் தாத்துவிகங்களாக உள்ளவை அறுபது. அந்த அறுபதையும் மாற்றிவிட வேண்டும்.

உடலில் உள்ள அத்துவாக்கள் (வழிகள்) ஆறு ஆகும். அவைகள் எல்லாம் எல்லாக் குற்றங்களில் இருந்தும் தூய்மை அடைய வேண்டும். இவை அனைத்தும் தூய்மை அடைந்து விட்டால் அப்போது பிரணவம் தூய்மை ஆகிவிடும்.

#730. சிவ நடனம் காணலாம்

சத்தியார் கோயி லிடம்வலம் சாதித்தால்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதாநந்தி யாணையே.

சந்திரகலை சூரியகலையிடம் பொருந்தும்படிச் சாதனை செய்தால், நண்பகலில் பிரணவ ஒலியைக் கேட்க இயலும். இனிய சிவ நடனத்தைக் காணவும் இயலும். இது சத்தியம்! இறைவன் மீது ஆணை!

#731. அம்ச வித்தை

திறத்திறம் விந்து திகழும் அகாரம்
உறப்பெறவே நினைந்து ஓதும் சகாரம்
மறிப்பது மந்திரம், மன்னிய நாதம்
அறப்பெற யோகிக்கு அறநெறி ஆமே.

மிகத் தூய்மையுடன் பொருந்தியுள்ளது அகரம். அத்துடன் பொருந்தியது சகரம். இவ்விரண்டின் சேர்க்கையாகிய 'அம்சம்' என்பதே யோகி மனனம் செய்வதற்குரிய மந்திரம் ஆகும். இதனால் அவன் பெறும் நாதமே அவன் வழிபடுகின்ற மூர்த்தி ஆகும்.

"அம்சம்' என்பதை உச்சரித்தால் அது தொண்டையின் வழியாகச் சென்று மேலே சிவனின் ஸ்தானமாகிய சிரசில் படரும். அப்போது ஒரு நாதம் உண்டாகும். இதுவே 'அம்ச வித்தை' எனப்படும். 'அசபை' என்பதுவும் இதுவே ஆகும்.

#732. சிவம் ஆகும் தன்மை

உந்திச் சுழியி னுடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டி னிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே.

சிவனை நினைத்துக் கொண்டு கொப்பூழ்த் தாமாரையில் தோன்றும் பிராணனை உச்சித் துளையில் நிறுத்த வேண்டும். காற்று கீழ் நோக்கிச் செல்லாமல் தடுத்து அதை மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்பவன் சிவமாகும் தன்மையை அடைவான்.

#733. கூறா உபதேசம்

மாறா மலக்குதம் தன்மே லிருவிரல்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆறா உடம்பிடை அண்ணலு மங்குளன்
கூறா உபதேசம் கொண்டது காணுமே.

எப்போதும் நீங்காமல் மலம் பொருந்திருப்பது குதம். அதற்கு இரண்டு விரல் அளவு மேலேயும், விவரிக்க முடியாத பாலுணர்வைத் தம் குறிக்குக் கீழேயும் உள்ளது மூலாதாரம். அதைத் தியானம் செய்யுங்கள் அங்கே ஜீவர்களை வழி நடத்தும் சிவம் குடிகொண்டுள்ளது. அதனிடம் உபதேசம் பெற்று இவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

#734. இளமை வாய்க்கும்

நீல நிறனுடை நேரிழை யாளொடும்
சாலவும் புல்லிச் சதமென்று இருப்பார்க்கு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனும் ஆவர் பராநந்தி யாணையே.

நீலநிற ஒளியுடன் விளங்குவாள் பராசக்தி. அவளுடன் பொருந்தி அவளையே அடைக்கலாமாகக் கொண்டு விட்டால் உலகத்தோருக்கு ஏற்படும் நரை திரை இவை மாறி இளமையான தோற்றம் அமையும். இது சிவனது ஆணை.

#735. நீலகண்டன் ஆகலாம்

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கின் பிராணன் நிலை பெறும்
உண்டி சுருங்கில் உபாய பலவுள
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே.

கருவாய் செயலின்றி இருந்தால் மனிதனுக்கு எந்த இழப்பும் இராது. உடல் மெலிந்திருந்தால் சத்துவ குணம் மேற்படும். பிராணனை எளிதாக வெல்ல முடியும். உணவைக் குறைப்பதற்குப் பல வழிகள் உள்ளன. யோக நெறியைப் பின்பற்றுவோர் நீல கண்டப் பெருமானாக ஆக முடியும்.

#736. பெண்களும் விரும்புவர்

பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை
யண்டத்து ளுற்று அடுத்தடுத்து ஏகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்
கண்டிச் சிக்கு நற் காயமுமாமே.

உடலில் மூலாதாரத்தில் காம வாயு பொருந்தி இருக்கும். அதைத் தலையில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரைக்குக் கொண்டு செல்ல வேண்டும். இந்தப் பயிற்சியைச் செய்து வந்தால் அவர் அழகிய வடிவம் பெறுவார். வண்டுகள் விரும்பும் மலர்களைச் சூடிய அழகிய பெண்டுகள் இவரைக் கண்டு இச்சிப்பர்.

#737. காலனை வெல்ல இயலும்

சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளும் தெற்றுளும் நிற்றலும் ஆமே.

யாவரும் அஞ்சும்படிச் சினத்துடன் வருபவன் இயமன். ஒளி பொருந்திய மூலாதாரத்தில் உள்ளது அதோமுகச் சக்கரம். அதில் விளங்குபவன் சிவன். அவனது கழல்கள் ஒலிக்கும் திருவடிகளைக் கண்ட பின்னர் நம்மால் யமனிடம் அஞ்சாமல் அவனிடமே வெகுண்டெழ முடியும். இவ்வுலகிலும் மேல் உலகிலும் வாழ்பவராக ஆக முடியும்.

#738. இன்பமாக வளர உதவும்

நான்கண்ட வன்னியும் நாலு கலை ஏழும்
தான்கண்ட வாயுச் சரீரம் முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட உணர்வும் மருந்தாக
மான் கன்று நின்று வளர்கின்ற வாறே.

நான்கு அக்கினிக் கலைகளாகிய கதிரவன், திங்கள், அக்கினி, விண்மீன் இவற்றில் உள்ளான் சிவன். உடலில் உள்ள ஆறு ஆதாரச் சக்கரங்களிலும், சஹஸ்ரதலத்திலும் உள்ளான். பிராணனாக உடல் முழுவதும் பரவி அதில் உணர்வாக வெளிப்படுகின்றான். அவன் அதோமுகனாக இருந்து கொண்டு சீவன் இன்பத்துடன் வளர உதவிகள் புரிகின்றான்.

#739. ஒளியை சேமிப்பாய்

ஆகுஞ்சன வேத சக்தியை அன்புற
நீர்கொள நெல்லில் வளர்கின்ற நேர்மையைப்
பாகுபடுத்திப் பல்கோடி களத்தினால்
ஊழ் கொண்ட மந்திரம் தன்னால் ஒடுங்குமே.

ஆகுஞ்சன ஆசனத்தில் வேதசக்தி வெளிப்படும் . அதை அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். பயிர் செய்த நெல்லைப் பிரித்து விதைக்காகவும்,

உண்பதற்காகவும் சேமித்து வைப்போம் அதைப் போன்றே அளவற்ற பயிற்சியால் இருளை வென்று, ஒளியைச் சேமித்து அதில் ஒடுங்க வேண்டும்.

மூன்றாம் தந்திரம் -
14. காலச் சக்கரம்

முடிவில்லாமல் தொடருவதால் காலம் ஒரு சக்கரம் என்று கூறப்படும்.

#740. காலத்தைக் கடக்கலாம்

மதிவட்டம் ஆக வரை ஐந்து நாடி,
இதுவிட்டு அங்கு ஈராறு அமர்ந்த அதனால்
பதிவட்டதுள் நின்று பாலிக்கும் மாறும்,
அதுவிட்டுப் போமாறும் ஆயலுற்றேனே.

திங்கள் மண்டலத்தில் உள்ளன வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாசிருதை, உன்மனி என்ற ஐந்து கலைகள். இவற்றின் இயல்பை ஆராய்ந்து இவற்றை நீக்க வேண்டும். தலையின் மேல் துவாதசாந்தப் பெருவெளியில் அமரவேண்டும். சிவசக்தி அருளும் வகையையும், காலச்சக்தியைக் கடக்கும் நிலையையும் ஆராய வேண்டும்.

விளக்கம்:

வியாபினி முதல் உன்மனி வரையில் உள்ள ஐந்து கலைகள் உயிர்களை மேல் நோக்கும் வண்ணம் செய்யும்.

கீழே குறிப்பிபட்டவண்ணம் உயிர்களை முன்னேறச் செய்யும்.

நிவிர்த்தி கலை => பிரதிட்டை கலை => வித்தியா கலை => சாந்தி கலை => சாந்தியதீதை கலை.

#741. மக்கள் ஏன் அழிகிறார்கள்?

உற்றறிவு ஐந்தும், உணர்ந்தறிவு ஆறு ஏழும்
சுற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறியாது அழிகின்ற வாறே.

ஐம்புலன்களில் ஐம்பொறிகள் பொருந்தி அறிந்து கொள்வது ஐந்து வகை அறிவு ஆகும். இந்த அறிவை அவற்றினின்றும் வேறாக இருந்து அறிந்து கொள்வது ஆறாவது அறிவு ஆகும். பொருட்களின் நன்மை, தீமைகளை ஆராயும் அறிவு

ஏழாவது அறிவு ஆகும். கல்வியால் பெறுவது எட்டாவது அறிவு. அனுபவத்தால் பெறுவது ஒன்பதாவது அறிவு. இந்த ஒன்பது அறிவுக்கும் காரணம் ஆனவர் சிவ சக்தியர் என்று அறிந்து கொள் வது பதிஞானம் என்னும் பத்தாவது அறிவு ஆகும். இத்தனை அறிவினையும் அறிந்து கொண்டு, அதற்கேற்ப நடக்காமல் இருப்பதனாலேயே மக்கள் அழிகின்றனர்.

#742. வாழ்க்கையில் நான்கு கண்டங்கள்

அழிகின்ற ஆண்டு அவை ஐயைஞ்சும் மூன்றும்.
மொழிகின்ற முப்பத்து மூன்று என்பது ஆகும்
கழிகின்ற கால் அறு பத்திரண்டு என்பது
எழுகின்றது ஈரைம்பது எண் அற்று இருந்ததே.

மனிதனுக்கு வாழ்க்கையில் நான்கு கண்டங்கள் உள்ளன. இருபத்தைந்து முதல் இருபத்தெட்டு வரையில் முதல் கண்டம். முப்பது முதல் முப்பத்து மூன்று வரையில் இரண்டாவது கண்டம். அறுபது முதல் அறுபத்து இரண்டு வரையில் மூன்றாவது கண்டம். நான்காவது கண்டம் நூறு ஆண்டுகளில். இவ்வாறு மனிதனின் வாழ்வில் நான்கு கண்டங்கள் உள்ளன.

#743. யோகப்பயிற்சி தொடங்க உகந்த நாள்

திருந்து தினம்அத் தினத்தி னொடு நின்று
இருந்துஅறி நாள்ஒன்று; இரண்டு எட்டு மூன்று
பொருந்திய நாளோடு புக்கு அறிந்து ஓங்கி
வருந்துதல் இன்றி மனைபுக லாமே.

பிறந்த நாள், அதனுடன் பொருந்தி நின்ற பிறவி விண்மீன் கூடிய நாள் ஒன்று, பிறவி விண்மீனுடன் பதினாறு நாட்கள் கூடியப் பதினேழாவது நாளும், ஆறு கூடிய ஏழாவது நாளும் தவிரப் பொருந்திய நாளை ஆராய்ந்து அறிந்து யோகப் பயிற்சியைத் தொடங்க வேண்டும்.

#744. சிவம், சக்தி, நாதம், விந்து

மனைபுகு வீரும் அகத்திடை நாடி
எனஇருபத்தஞ்சும் ஈராறு அதனால்
தனை அறிந்து, ஏறட்டு, தற்குறி ஆறு
வினைஅறி ஆறும் விளங்கிய நாலே.

ஞான யோகத்தை விரும்பி அதைச் செய்கின்றவர்களே! இருபத்து ஐந்து தத்துவங்களையும் பன்னிரண்டு ராசிகளில் செல்கின்ற கதிரவனாகிய அறிவினால் அறிந்து கொள்ள வேண்டும். தன்னை அறிந்து நன்கு பக்குவப்பட வேண்டும்.

சிவபெருமான் விளங்குகின்ற ஆறு ஆதாரங்கள் செயல்படும் வழிகளை அறிந்து கொள்ள வேண்டும். அவற்றைக் கடந்து செல்லும்போது சிவம், சக்தி, நாதம் விந்து என்ற நான்கும் நன்கு விளங்கும்.

#745. ஆன்மாவை தரிசிக்க வேண்டும்

நாலும் கடந்தது நால்வரும் நால் அஞ்சு
பாலம் கடந்தது பத்துப்பதின் அஞ்சு
கோலம் கடந்த குணத்துஆண்டு மூவிரண்டு
ஆலம் கடந்தது ஒன்று ஆர் அறிவாரே?

நான்முகன் திருமால் உருத்திரன், மகேசுவரன் என்பவை உருவங்கள் நான்கு ஆகும். விந்து, நாதம், சக்தி, சிவம் என்பவை அருவங்கள் நான்கு ஆகும். இவற்றுடன் அருவுருவம் சேரும் போது ஒன்பது பேதங்கள் உருவாகும். ஒன்பது வடிவங்களாக விளங்குகின்றதும், நெற்றியைக் கடந்து இருபத்து ஐந்து தத்துவங்களால் விளங்குவதும், ஆறு ஆதாரங்களையும் தாண்டுகின்றதும் ஆகிய ஆன்மா என்ற கதிரவனைக் காணவேண்டும்.

#746. நாற்பத்தெட்டு எழுத்துக்கள்

ஆறும் இருபதுக்கு ஐயைஞ்சும் மூன்றுக்கும்
தேறும் இரண்டு இருபத்தோடு ஆறு இவை
கூறும் மதிஒன் றினுக்கு இருபத்தேழு
வேறு பதியங்கள் நாள்விதித் தானே.

ஆறு ஆதாரங்களில் நாற்பத்தெட்டு எழுத்துக்கள் கொண்ட ஆறு தாமரைகள் இருப்பதை அறிந்து கொள்வீர். ‘உ‘ என்ற எழுத்தால் குறிப்பிடப்படும் கதிரவன் இருபத்தாறாவதாக அமைந்துள்ளது. ‘அ‘ என்று குறிப்படப்படும் சந்திர வட்டம் என்பது இருபத்தேழாவது ஆக அமைந்துள்ளது.

விளக்கம்:
தாமரை இதழ்களின் எண்ணிக்கை:
மூலாதாரம் 4
ஸ்வாதிஷ்டானம் 6
மணிபூரகம்....................10
அனாஹதம்...................12
விசுத்தி 16
உடலில் உள்ளன 25 தத்துவங்கள்.
‘உ’ என்பது கதிரவனைக் குறிக்கும். இது இருபத்தாறாவது ஆகும்
‘அ ‘ என்பது சந்திரனைக் குறிக்கும். இது இருபத்தேழாவது ஆகும்

#747 தத்துவம் முப்பத்து மூன்று.

விதித்த இருபத்தெட்டோடு மூன்று அறையாக
தொகுத்து அறி முப்பத்து மூன்று தொகுமின்;
பதித்துஅறி பத்தெட்டுப்பார் ஆதிகள் நால்
உதித்துஅறி மூன்று இரண்டு ஒன்றின் முறையே

தத்துவங்களைச் சுருக்கி எண்ண வேண்டின், அசுத்த தத்துவங்களில் மூன்று நீங்கலாக ஏனைய இருபத்தெட்டோடு, சுத்த தத்துவம் ஐந்தனையும் அங்ஙனமே கொண்டு, ``தத்துவம் முப்பத்து மூன்று`` என வைத்துக்கொள். இனி அத்தத்துவங் களில் இந்திரியம் பத்து சூக்கும தேகமாய் உள்ள எட்டு இவைகளையும் நிலம் முதலிய பஞ்ச பூதங்களில் அடங்கி நிற்பன வாகவே பாவித்துக்கொள். இனி நிலம் முதலிய அப் பூதங்கள் ஐந்தும் ஒன்றின் ஒன்று - அஃதாவது, ஐந்தாவது பூதமாகிய நிலம் நான்காவது பூதமாகிய நீரிலும், நான்காவது பூதமாகிய நீர் மூன்றாவது பூதமாகிய தீயிலும் இவ்வாறு முறையே தோன்றின என்பதை உணர்.

#748. மறைபொருளை மறைவாகப் பெற வேண்டும்.

முறை முறை ஆய்ந்து முயன்றிலர் ஆகில்
இறை இறை யார்க்கும் இருக்க அரிது;
மறையது காரணம் மற்றொன்றும் இல்லை
பறைஅறை யாது பணிந்து முடியே.

குருவின் உபதேசப்படி பயிற்சியாளர் முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிடில் இறைவனுடன் தொடர்பு கொள்வது மிகவும் கடினம். உபதேசத்தை இங்கே மறைத்துக் கூறியதன் காரணம் இதுவே! உபதேசத்தை உங்கள் குருவிடம் மறைவாகவும் முறையாகவும் பெற வேண்டும் என்பதே. மறையைப் பெறுவது போல இந்த மறை பொருளையும் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்!

#749. நிலைத்து வாழும் வழி

முடிந்தது அறியார் முயல்கின்ற மூர்க்கர்;
இடிஞ்சில் இருக்க விளக்கு எரிகொண்டு
கடிந்து அனல் மூளக் கதுவ வல்லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலும் ஆமே.

உடலை நிலைத்து இருக்கச் செய்யும் வழியை மறைத்து வைத்துள்ளதை அறியாமல் வீணே முயற்சி செய்பவர்கள் முழு மூடர்கள். உடல் நிலைத்து இருக்க விரும்புபவர்கள் மூலாதாரத் தீயை அடக்க வேண்டும். நிலையற்ற உலகில் நிலையாக வாழ அது ஒன்றே வழியாகும்.

#750. ஓவியம் போல நில்லுங்கள்

**நண்ணும் சிறுவிரல் நாண்ஆக மூன்றுக்கும்
பின்னிய மார்பு இடைப் பேராமல் ஒத்திடும்
சென்னியில் மூன்றுக்கும் சேரவே நின்றிடும்
உன்னி உணர்ந்திடும் ஓவியம் தானே.**

ஒரு கையில் உள்ள சிறுவிரல், அணி விரல், நடு விரல் என்ற மூன்று விரல்களுடன் மறு கையில் உள்ள மூன்று விரல்களையும் கண்கள் புருவங்களில் நெறித்துப் பிடித்தால் பிராணனும் அபானனும் சமமாக நிற்கும். அதனால் அக்கினி, கதிரவன், சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களும் ஒத்து நிலை பெறும். அங்கே காணப்படும் ஒளியில் அசையாமல் ஓவியம் போல நில்லுங்கள்.

#751. மூன்று மண்டலங்கள்

**ஓவியம் ஆன உணர்வை அறிமின்கள்;
பாவிகள் இத்தின் பயன் அறிவார் இல்லை;
தீவினையாம் உடல் மண்டலம் மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே.**

ஓவியம் போல அசையாமல் நிற்பதை அறிந்து கொள்ளுங்கள். பாவிகள் இதன் பயனை அறிந்திட முடியாது. தீவினைகளுக்குக் காரணம் ஆன இந்த உடலில் அக்கினி, கதிரவன், சந்திரன் இந்த மூன்றின் மண்டலங்களும் சுழுமுனையில் பொருந்திச் சஹஸ்ரதளத்தில் விளங்கும்.

#752. ஞானிகள் அழிய மாட்டார்கள்.

**தண்டுஉடன் ஓடித் தலைப் பெய்த யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்து உடல் ஒத்திடும்
கண்டவர் கண்டனர்; காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே.**

முதுகுத் தண்டுடன் பிணைந்து மேலே சென்று பிரமரந்திரத்தை அடைவார் ஒரு யோகி. அவர் உடலில் திங்கள், கதிரவன், அக்கினி மண்டலங்கள் மூன்றும் ஒத்துப்போய் உடல் மகிழும்படி அமைந்திருக்கும். இதைக் கண்டறிந்தவர்கள் மெய்ஞானிகள். அவர்கள் அழியவே மாட்டார்கள். இதை அறியாதவர்கள் வினைப் பயனாக விளைந்த உடலை அழிய விட்டு விடுகின்றனர்.

#753. காமச் செயல் வாழ்வைக் கெடுக்கும்

பிணங்கி அழிந்திடும் பேறு அது கேள்நீ
அணங்குடன் ஆதித்தன் ஆறு விரியின்
வணங்குடனே வந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே.

உடல் எப்படி அழியும் என்பதையும் கேட்டு அறிந்து கொள்வாய் நீ! கதிரவன் என்னும் அறிவு, குண்டலினி வழியே சென்றுக் காமச் செயல்களைச் செய்யுமானால் உயர்ந்த உன் வாழ்வு தாழ்ந்து போய் விடும். ஒரு நாய் மலம் தின்ன எப்படி அலையுமோ அதுபோலவே உன் அறிவும் காமச் செயலைப் புரிய அலையும்.

#754. கூத்தன் அங்கே தோன்றுவான்

சுழல்கின்ற வாறுஇன் துணைமலர் காணான்
தழல்இடைப் புக்கிடும் தன்னுள் இலாமல்
கழல்கண்டு போம்வழி காண வல்லார்க்குக்
குழல்வழி நின்றிடும் கூத்தனும் ஆமே.

காம வயப்பட்டு அலையும் மனிதனால் சஹச்ரதளத்துக்கு மேலே விளங்கும் இறைவனின் திருவடிகளை உணர முடியாது. மேலே தன் இடமாகிய அக்கினி மண்டலத்தில் இல்லாமல் கீழே மூலாதாரத்தில் உள்ள தீயினால் மக்கள் அழிந்து படுகின்றனர். இறைவனின் காற் சிலம்போசையைக் கேட்டு, அதை நாடிச் செல்பவருக்குச் சுழுமுனையில் கூத்த பிரானாகிய சிவன் காட்சி தருவான்.

#755. இறைவன் கலந்து நிற்பான்

கூத்தன் குறியில் குணம்பல கண்டவர்கள்
சாத்திரம் தன்னைத் தலைப் பெய்து நிற்பர்கள்
பார்த்திருந்து உள்ளே அனுபோகம் நோக்கிடில்
ஆத்தனும் ஆகி அலர்ந்திரும் ஒன்றே.

நாதத்தைக் கேட்பதால் சீவனுக்குப் பல பயன்கள் விளையும். அவற்றைக் கண்டு அறிந்தவர் சாத்திரங்களின் பொருளை உணர்ந்து அதன் வழியே நிற்பார். யோகி சிவனைத் தியானம் செய்து கொண்டு இருந்தால் அவனும் விருப்பம் கொண்டு யோகியுடன் வேறுபடாமல் ஒன்றி இருப்பான்.

#756. குன்றின் மேல் கூத்தன் தோன்றுவான்

ஒன்றில் வளர்ச்சி உலப்பு இலி கேள் இனி
நன்று என்று மூன்றுக்கு நாள் அது சென்றிடும்
சென்றிடும் முப்பதும் சேர இருந்திடில்
குன்றிடை பொன்திகழ் கூத்தனும் ஆமே.

இவ்வாறு இறைவனுடன் வேறுபாடு இன்றிப் பொருந்தி இருப்பவரின் வாழ்நாள் வளரும். அவருக்கு அழிவும் இல்லை. நன்மை தரும் என்று எண்ணிப் பூராகம், இரேசகம், கும்பகம் இவற்றைச் செய்தால் வாழ்நாள் குறைந்து விடும். இவற்றை விடுத்து முப்பது நாழிகை சமாதியில் இருந்தால் சஹஸ்ர தளத்தில் உள்ள பொன்னொளியில் கூத்தபிரான் தோன்றுவான்.

#757. நூறாண்டு வாழலாம்

கூத்து அவன் ஒன்றிடும் கூர்மை அறிந்து அங்கே
ஏத்துவர் பத்தினில் எண்திசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து, பதுமரை நோக்கிடில்
சாத்திடும் நூறு தலைப் பெய்ய லாமே.

உடலில் கூத்தை நிகழ்த்துபவன் சிவபெருமான். பிராணன் நுட்பமாக அடங்கும் இடத்தை அறிந்து கொள்ள வேண்டும் அங்கே அகரத்தையும், உகரத்தையும் பொருத்த வேண்டும். அதில் எட்டு இதழ்க் கமலத்தை விளங்கச் செய்ய வேண்டும். அந்தக் கமலத்தில் சிவனைக் கண்டு மகிழ்ந்தால் ஒருவன் எடுத்த உடலில் நூறாண்டு காலம் வாழலாம்.

2 = அகரம் - சந்திர மண்டலம்
8 = உகரம் - கதிரவன் மண்டலம்
2 + 8 = 10

#758. பலகாலம் வாழலாம்

சாத்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்து உடல் ஆயிரம் கட்டு உறக் காண்பர்கள்
சேர்த்து உடல் ஆயிரம் சேர இருந்தவர்
மூத்து உடன் கோடி யுகம் அது ஆமே

நூறாண்டு காலம் வாழும் முறையை அறிந்தவர் இந்த உடலை ஆயிரம் ஆண்டுகளுக்குக் குறையாதபடிக் காத்துக் கொள்ள இயலும் இது போன்று ஆயிரம் ஆண்டுகள் வாழ அறிந்தவர்கள் அறிவால் முதிர்ந்து பல யுகங்கள் வாழ இயலும்.

#759. இரண்டற ஒன்றி விடுவர்

உகம்கோடி கண்டும் ஒசிவு அற நின்று
அகம்கோடி கண்டு உள் அயல் அறக் காண்பர்கள்
சிவம்கோடி விட்டுச் செறிய இருந்து அங்கு
உகம்கோடி கண்டு அங்கு உயர்உறு வாரே.

இங்ஙனம் பல நாட்களைக் கண்டவர் சிறிதும் தளர்ச்சி என்பதே இல்லாமல் இருப்பார். உள்ளத்தால் சிவனை இடைவிடாது தியானிப்பார். சிவம் வேறு தான் வேறு என்னும் சிந்தனையே மறைந்து விடும்படி அவனோடு ஒன்றி விடுவார். சிவனோடு ஒன்றாக உணர்ந்து நீண்ட காலம் வாழ்ந்து உயர்வினை அடைவார்.

760. சக்தியை அறியாதவர் ஆவார்

உயர்உறு வார், உலகத்தொடும் கூடிப்
பயன்உறு வார் பலர்தாம் அறியாமல்
செயல்உறு வார் சிலர் சிந்தை இல்லாமல்
கயல்உறு கண்ணியைக் காணகி லாரே.

சிவம் என்ற தன்மையுடன் ஒன்றறக் கலந்தவரே உண்மையில் உயர்வு அடைந்தவர் ஆவார். அவரே உலகத்தோடு கூடிப் பயன் அடைந்தவர் ஆவார். ஆனால் பலர் இந்த உண்மையை அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் மேலும் மேலும் கன்மங்களை ஈட்டுகின்றனர். வேறு சிலர் இதை முற்றிலும் மறந்து விடுவர். இமைக்காத மீன் போன்ற கண்களை உடைய பராசக்தியையும் கூட அறியாதவர்களாக ஆகிவிடுவார்கள்.

#761. தொண்டாற்ற என்ன தேவை?

காணகி லாதார் கழிந்து ஓடிப் போவார்கள்;
நாணகி லாதார் நயம் பேசி விடுவார்கள்;
காணகி லாதார் கழிந்த பொருள் எல்லாம்
காணகி லாமல் கழிகின்ற வாறே.

இறையொளியைக் காண இயலாதவர் பிறவிப் பயனை அடைய மாட்டார். வாழ்க்கை வீணாகி விடும். நாணம் இல்லாதவர் நயமாகப் பேசிப் பேசிக் காலத்தை வீணாக்கிச் செல்வார்கள். பராசக்தியின் ஒளியைக் காண இயலாதவர்களால் தத்துவத்தை அறிந்து கொள்ள முடியாது. அதனால் அவர்கள் தொண்டுகள் எதுவும் செய்யாமல் காலத்தைக் கழித்துச் செல்வார்கள். இறையருள் உடையவரே தொண்டுகள் புரிய இயலும்.

#762. எங்கும் நிறைந்தது சிவம்

கழிகின்ற அப்பொருள் காணகிலாதார்
கழிகின்ற அப்பொருள் காணலும் ஆகும்
கழிகின்ற உள்ளே கருத்துற நோக்கில்
கழியாத அப்பொருள் காணலும் ஆமே.

அழிகின்ற உலகப்பொருட்கள் அனைத்தும் நம்மிடம் பிணைப்பை ஏற்படுத்தும். அவற்றைப் புறக் கண்களால் நோக்காதவருக்கு மட்டுமே அவற்றை அகக் கண்களால் நோக்க இயலும். அழியும் அந்தப் பொருட்களின் உள்ளே ஒருமைப் பட்ட மனத்துடன் நோக்கினால், அவை அனைத்திலும் நீங்காது விளங்குகின்ற சிவத்தைக் காணலாம்.

#763. யோகியர் பெறும் பயன்

கண்ணன், பிறப்பு இலி காண்நந்தி யாய்உள்ளே
எண்ணும் திசையுடன் ஏகாந்தன் ஆயிடும்;
திண் என்று இருக்கும் சிவகதியாய் நிற்கும்
நண்ணும் பதம் இது நாடவல் லார்கட்கே.

சிவபெருமான் முக்கண்ணன்; பிறப்பு அற்றவன்; நந்தியம் பெருமான். அவனை மனத்தில் ஆராய்ந்து அறிய வேண்டும். அப்போது அவன் பத்துத் திசைகளில் இருப்பதும் தெரியும். அதே சமயத்தில் தனித்து ஏகாந்தனாக இருப்பதும் தெரியும். உறுதியான சிவகதியும் கிடைக்கும். ஆராய்ச்சி செய்யும் யோகியர் பெறுகின்ற பெரும் பயன் இதுவே.

#764. அக நோக்கு

நாடவல் லார்க்கு நமன் இல்லை, கேடு இல்லை,
நாடவல் லார்கள் நரபதி யாய் நிற்பர்;
தேடவல் லார்கள் தெரிந்த பொருள் இது
கூடவல் லார்கட்குக் கூறலும் ஆமே.

இப்படி நந்தியம் பெருமானை ஆராய்ந்து அறிபவர்களின் வாழ்நாட்களுக்கு எல்லை இல்லை. அதனால் அழிவும் இல்லை. இவ்வாறு ஆராய்ந்து அறிந்தவர் மக்களின் தலைவர் ஆவார். சிவனைச் சேர வண்டும் என்ற விருப்பம் கொண்டவர்களுக்கு இதைக் கூற வேண்டும்.

#765. சிரசில் சிவன் தோன்றுவான்

கூறும் பொருள் இது அகார உகாரங்கள்
தேறும் பொருள் இது சிந்தையுள் நின்றிடக்
கூறும் மகாரம் குழல்வழி ஓடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலும் ஆமே.

தகுதி உடையவர்களுக்கு உணர்த்த வேண்டியவை அகார உகாரங்கள். இவை இரண்டும் மனதில் நிலை பெற்று விட்டால் அப்போது மகரம் சுழுமுனை நாடி வழியே உயரச் சென்று அங்கு நாதமாகி விடும். அப்போது ஆறு ஆதாரங்களும் ஒன்றாக இணைந்துவிடும். மூலாதாரத்துக்கும் சஹஸ்ர தளத்துக்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டு விடும். சிரசில் சிவன் தோன்றுவான்.

#766. சிந்தித்தால் சிவம் ஆகலாம்

அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள் வார்களுக்கு
அண்ணல் அழிவு இன்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவன் ஆகுமே.

சிவபெருமான் உறையும் இடத்தை எவரும் அறியவில்லை. அந்தப் பெருமான் ஓசையாகவும், ஒளியாகவும் நம் உடலில் உறையும் இடத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டு விட்டால், அதன் பின் சிவன் அவன் உள்ளத்தை விட்டு அகலாமல் இருப்பான். அப்படிக் காண முடிந்தவனே சிவனாக ஆகி விடுவான்.

#767. ஒலியுள் ஒளியுள் உறைவான் சிவன்

அவன்இவன் ஆகும் பரிசுஅறி வார்இல்லை
அவன்இவன் ஆகும் பரிசு அது கேள் நீ
அவன்இவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவன்இவன் வட்டம் அது ஆகி நின்றானே.

தானே சிவன் ஆகும் இயல்பை அறிந்தவர் யாரும் இல்லை. தானே சிவன் ஆகும் தன்மையினை நீ கேட்பாய்! சிவன் ஆன்மாவின் நுண்ணிய ஒளியிலும், நுண்ணிய ஒளியிலும் பொருந்துவான். சிவன் இவனது வானக் கூற்றில் நன்றாக விளங்குவான்.

#768. இன்பம் இருக்கும் இடம் இதுவே

வட்டங்கள் எழும் மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலீர்
ஒட்டி இருந்துஉள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலும் ஆகுமே.

ஆதாரச் சக்கரங்கள் ஆகிய ஏழு வட்டங்களும் மலர்ந்து நிமிரும் போது, அங்கே மேன்மை உடைய சிவம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்வீர். ஓர் உபாயத்தால் சிவனுடன் பொருந்தி இருக்க முடியும். அதை அறிந்து கொண்டால் சர்க்கரைக் கட்டியைப் போல இனிக்கும் சிவன் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.

கீழ் நோக்கிய ஆயிரம் இதழ் தாமரையை மேல் நோக்கச் செய்ய வேண்டும். நாதம் விந்து இவற்றில் சிவன் வெளிப்படுவதை அறிந்து கொள்வதே அந்த உபாயம்.

#769. உள்ளே உள்ளான் இறைவன்

காணலும் ஆகும் பிரமன் அரி என்று
காணலும் ஆகும் கறைக்கண்டன் ஈசனை
காணலும் ஆகும் சதாசிவ சத்தியும்
காணலும் ஆகும் கலந்து உடன் வைத்ததே.

ஆதாரத் தாமரைகளில் நான்முகன், திருமால், நீலகண்டன், சதாசிவன், சக்தி தேவி இவர்களைக் காண இயலும். நம் உடலிலும் உயிரிலும் இறைவன் பொருந்திருப்பதையும் அறிய முடியும்.

மூன்றாம் தந்திரம் -
15. ஆயுட்பரீட்சை

வாழும் காலத்தை அறிவதற்குச் செய்யும் பரீட்சை இது.

#770. அளவான கை

வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடி லோராறு திங்களாம்
அத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்த லுயிர்கொரு திங்களி லோசையே.

தலை இடத்தில் வைத்த கை பருத்தோ சிறுத்தோ இராமல் அளவாக இருந்தால் நன்மை விளையும். கை பெருத்து இருந்தால் ஆறு மாதங்களில் இறப்பு ஏற்படும். கை இரண்டு பங்கு பருத்து இருந்தால் ஒரே மாதத்தில் இறப்பு வரும்.

#771. நாதாந்தத்தில் ஈசன்

ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண் ;
ஓசை இறந்தவர் ஈசனை உள்குவர்;
ஓசை இறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை உணர்ந்த உணர்வுஇது ஆமே.

உள்ளத்தில் உண்டாகும் வாக்குகளின் ஓசையும் ஈசனுக்கு ஒப்பானவை. நாதத்தைக் கடந்து விட்டவர் ஈசனை நினைந்து நாதாந்தத்தில் இருப்பார். அவர்கள் மனதில் ஈசனும் ஓசையால் உணரும் உணர்வாக இருப்பான்.

#772. ஞானம் பெற்றவர் ஞாலத்தின் தலைவர்

ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமேல் உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே உலகின் தலைவனும் ஆமே.

உள் நாக்கின் மேலே உள்ள நான்கு அங்குல அளவு தொழிற் படாததால் பிராண வாயு அழிந்து விடுகிறது. அந்த வாயுவை அழியாமல் உடலில் பொருத்த வேண்டும். அப்படிச் செய்தால் உள் நாக்கின் மேலே அடைந்துள்ள பகுதி திறந்து கொள்ளும். மூச்சுக் காற்று பிரமரந்திரம் நோக்கிப் பாயும். சஹஸ்ர தளம் விரிந்து கொள்ளும். ஞானம் நிலை பெறும். அப்போது யோகியால் ஐம்புலன்களின் துணை இல்லாமலேயே எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு ஞானம் பெற்றவர் ஆவார் ஞாலத்தின் தலைவர்.

#773. நூறாண்டு வாழலாம்

தலைவன் இடம்வலம் சாதிப்பார் இல்லை;
தலைவன் இடம்வலம் ஆயிடில் தையல்
தலைவன் இடம்வலம் தன்வழி அஞ்சில்;
தலைவன் இடம்வலம் தன்வழி நூறே.

தலைவன் வாழ்வது இடக்கண் பார்வையில். இடக்கண் பார்வையை வலக்கண் பார்வையுடன் பொருத்தும் வகையை அறிந்தவர் இல்லை. இடக் கண்ணால் வலக் கண்ணுக்கு மேல் நோக்கினால் அங்கு சக்தியாகிய ஒளி

விளங்குவாள். இதைச் செய்ய வல்லவருக்கு ஐந்து ஞானேந்திரியங்களும் வசப்படும். அவர் நூறாண்டு காலம் வாழ்வார்.

#774. உயிர்ப்பும், ஆயுளும்!

ஏறிய ஆறினில் எண்பது சென்றிடும்
தேறிய ஏழில் சிறக்கும் வகை எண்ணில்
ஆறு ஒரு பத்தாய் அமர்ந்த இரண்டையும்
தேறியே நின்று தெளியிவ் வகையே.

மூச்சுக் காற்று ஆறு விரல் அளவு வெளியேறினால் ஒருவன் எண்பது ஆண்டுகள் உயிர் வாழலாம். ஏழு விரல் அளவு மூச்சுக் காற்று வெளியேறினால் வாழும் காலம் அறுபத்திரண்டு ஆண்டுகள் ஆகும்.

#775. மூச்சின் அளவும் வாழும் காலமும்

இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே என்ன அறியலாம்
செவ்வகை ஒன்பதும் சேரவே நின்றிடின்
முவ்வகை யாம்அது முப்பது மூன்றே.

எட்டு விரல் அளவு மூச்சு நீண்டு இயங்கினால் அவ் வகையினரின் ஆயுள் ஐம்பது ஆண்டுகள் ஆகும். ஒன்பது விரல் அளவு மூச்சு நீண்டு இயங்குமானால் அந்த மனிதனின் ஆயுள் முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

#776. பிற உயிர்ப்புக்களும் ஆயுளும்

மும்மூன்றும் ஒன்றும் முடிவு உற நின்றிடில்
எண்மூன்றும் நாலும் இடவகை யாய்நிற்கும்;
ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடில்
பன்மூன்றொடு ஈராறு பார்க்கலும் ஆமே.

பத்து விரல் அளவு மூச்சு வெளியேறினால் இருபத்தெட்டு ஆண்டுகள் ஆயுள் ஆகும். பதினைந்து விரல் அளவு மூச்சு வெளியேறினால் ஆயுள் இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆகும்.

#777. சுழுமுனையில் அக்கினிக் கலை

பார்க்கலும் ஆகும் பகல்முப் பதும்ஆகில்
ஆக்கலும் ஆகும் அவ் ஆறிரண்டு உள் இட்டுப்
போக்கலும் ஆகும் புகல் அற ஒன்று எனில்
தேக்கலும் ஆகும் திருந்திய பத்தே.

பகல் பொழுது முப்பது நாழிகைகளும் கதிரவன் இல்லாத திங்கள் பகுதியில் சேர்ந்து நின்றால், தலையின் ஈசான திக்கில் உணர்வு உதிக்கும். சுழுமுனையில் மூச்சுக் காற்றுப் போகும். அகரம், உகரம் என்ற இரு சந்திர சூரிய நாடிகளும் செம்மைப்படும். அக்கினிக் கலை சுழுமுனையில் விளங்கும். இதைக் காண முடியும்.

#778. வாழ்நாள் நீடிக்கும்

ஏய்இரு நாளும் இயல்பு உற ஓடிடில்
பாய்இரு நாலும் பகை அற நின்றிடும்
தேய்வுஉற மூன்றும் திகழவே நின்றிடில்
ஆயுறு ஆறு என்று அளக்ககலும் ஆமே.

மேலே சொன்னவாறு இரு நாட்கள் சுழுமுனையில் மூச்சியின் இயக்கம் இருந்தால், கீழ் நோக்குதலை உடைய அபானனும், வியாபித்து இருக்கும் திங்களும் சீவனுக்குப் பகைமை பாராட்டாமல் நன்மை செய்வர். இவ்வறு கீழ் நோக்கும் சக்தியைக் குறைத்து மூன்று நாட்கள் இருந்தால் பயிற்சியாளரின் வாழ்நாள் நீடிக்கும்.

#779. சுழுமுனையில் நிற்க வேண்டும்

அளக்கும் வகைநாலும் அவ்வழியே ஓடில்
விளக்கும் ஒரு நாளும் மெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகை ஐந்தும் தூய்நெறி ஓடில்
களக்கம் அறமூன்றில் காணலும் ஆமே.

இந்த வகையில் நன்கு நாட்களுக்குச் சுழுமுனை வழியே மூச்சுக் காற்று இயங்கினால் சிவன், சக்தி, விந்து, நாதம் என்னும் நான்கையும் காண முடியும். ஐந்து நாட்களுக்குத் தூய்மையான இந்த வழியில் மூச்சுக் காற்று இயங்கினால் சிவன், சக்தி, ஆன்மா என்ற மூன்றையும் காணலாம்.

#780. சிவனைக் காணமுடியும்!

காணலும் ஆகும் கருதிய பத்து ஓடில்
காணலும் ஆகும் கலந்த இரண்டையும்
காணலும் ஆகும் கலப்பு அற மூ ஐந்தேல்
காணலும் ஆகும் கருத்து உற ஒன்றே.

முன்னே கூறியவாறு சுழுமுனையில் பத்து நாட்களுக்கு அறிவு பொருந்தி இருந்தால், தன்னுள்ளே கலந்து உறையும் சிவ சக்தியரைக் காணலாம்.

காலத்தன்மையை விட்டுவிட்டு பதினைந்து நாட்கள் சுழு முனையில் அறிவு பொருந்தி இருந்தால் உள்ளத்தில் சிவபெருமானைக் காணலாம்.

#781. அனைத்தும் விளங்கும்

கருதும் இருபதில் காண ஆறு ஆகும் ;
கருதிய ஐயைந்தில் காண்பது மூன்றாம்
கருதும் இருபதுடன் ஆறு காணில்
கருதும் இரண்டுஎனக் காட்டலும் ஆமே.

இரு முனைகள் சுழுமுனையில் நிலை பெற்றால் வானக் கூறில் இருந்து ஆறு ஆதாரங்களையும் அறிந்து கொள்ளலாம். இருபத்தி ஐந்து நாட்கள் இந்த விதமாக இயங்கி வந்தால் ஒளி, வளி, வெளி என்னும் மூன்றும் நன்றாக விளங்கும். இன்னும் இருபது நாட்கள் இதே போன்று இயங்கி வந்தால் ஒளி, வெளி என்ற இரண்டும் இன்னமும் சிறப்புற விளங்கும்.

#782. பிறருக்கும் உணர்த்த முடியும்!

காட்டலும் ஆகும் கலந்த இருபத்தேழில்
காட்டலும் ஆகும் கலந்து எழும் ஒன்று எனக்
காட்டலும் ஆகும் கலந்த இருபத்தெட்டில்
காட்டலும் ஆகும் கலந்த ஈரைந்தே.

சுழுமுனையில் ஒரு யோகி இருபத்தேழு நாட்கள் நிலை பெற்றிருந்தால் அவரால் ஜோதி வடிவமாகிய சிவபெருமானைப் பிறருக்குக் காட்டி உணர்த்த முடியம் . இருபத்தெட்டு நாட்கள் சுழு முனையில் நிலை பெற்றிருந்தால் பத்தாவது நிலையில் மேல் நோக்கிய சஹஸ்ரதலத்தில் விளங்குகின்ற ஆன்மாவையே பிறருக்கு உணர்த்த முடியும்.

#783. காலம் செல்வதை அறியார்!

ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பார்அஞ்சி நின்ற பகை பத்துநாள் ஆகும்
வாரம்செய் கின்ற வகை ஆறஞ்சு ஆமாகில்
ஓர்அஞ்சொடு ஒன்று ஒன்று என ஒன்றும்தானே.

பத்து, ஐந்து, ஆறு, எட்டு என்ற இருபத்து ஒன்பது நாட்கள் யோகிகளுக்குப் பத்து நாட்களைப் போலத் தோன்றும். இறைவனுடன் கலந்து இருக்கும் அன்பைப் பெருக்கும் முப்பது நாட்கள் வெறும் ஏழு நாட்களைப் போல தோன்றும்.

#784. காலம் நின்றுவிடும்

ஒன்றிய நாள்கள் ஒருமுப்ப தொன்றுஆகில்
கன்றிய நாளும் கருத்துற மூன்று ஆகும்
சென்று உயிர் நால் எட்டும் சேரவே நின்றிடின்
மன்று இயல்பு ஆகும் மனையில் இரண்டே.

இறைவனுடன் பொருந்தி இருக்கும் முப்பதொன்று நாட்கள் வெறும் மூன்று நாட்கள் போலத் தோன்றும். இறைவனுடன் ஜீவன் முப்பத்திரண்டு நாட்கள் பொருந்தி இருந்தால் அவை வெறும் இரண்டு நாட்களைப் போலத் தோன்றும்.

#785. சும்மா இருந்தால் சிவன் ஆகலாம்!

மனையினில் ஒன்றாகும் மாதமும் மூன்றும்
சுனையினில் ஒன்று ஆகத் தொனித்தனன் நந்தி
வினையற ஓங்கி வெளிசெய்து நின்றால்
தனைஉற நின்ற தலைவனும் ஆமே.

மூன்று மாதங்கள் சிவமும், ஆன்மாவும் இரண்டறப் பொருந்தி இருந்தால் சிவன் அந்த யோகிக்கு சஹஸ்ரதளத்தில் ஒரு சூக்ஷுமமான வாக்குக் கேட்கும்படிச் செய்வான். யோகி பரமாகாயத்தில் நிமிர்ந்து நின்றுச் செயல் ஒன்றும் இன்றிச் சும்மா இருந்தால் சிவனுடன் பொருந்திச் சிவனாகவே ஆகிவிடமுடியும்.

#786. யாரும் அறியாததை நாம் அறியலாம்!

ஆரும் அறியார் அளக்கின்ற வன்னியை
ஆறும் அறியார் அளக்கின்ற வாயுவை
ஆறும் அறியார் அழிகின்ற அப்பொருள்
ஆறும் அறியார் அறிவு அறிந்தேனே.

பரவெளியில் சூக்ஷ்மமாகக் கலந்து எங்கும் பரவியுள்ள தீயாகிய பூதத்தை யாரும் அறிய இயலாது.

பரவெளியில் சூக்ஷ்மமாகக் கலந்து எங்கும் பரவியுள்ள காற்றாகிய பூதத்தை யாரும் அறிய இயலாது.

எல்லாவற்றையும் தனக்குள் ஒடுக்கிக் கொண்டுள்ள சிவனையும் யாரும் அறிய இயலாது. எவருமே அறியாத அறிவினை நான் எங்கனம் அறிந்து கொண்டேன் தெரியுமா? சிவத்துடன் கூடி இவற்றை அறிந்து கொண்டேன்.

#787. சிவத்தின் இயல்பு என்ன?

அறிவது, வாயுவொடு, ஐந்து அறிவு ஆய,
அறிவு ஆவதுதான் உலகுஉயிர் அத்தின்
பிறிவு செய்யா வகை பேணி உள்நாடின்
செறிவது நின்று திகழும் அதுவே.

காற்று முதலிய ஐந்து தன்மாத்திரைகளை அறிந்து கொள்ளும் அறிவே சிவம் ஆகும். உலகம், உயிர்கள் இவை

எல்லாவற்றையும் அறிந்து கொள்வதே சிவம் ஆகும். சிவத்தை மற்றவற்றிலிருந்து பிரித்துக் காண முயலக் கூடாது. சிவத்தை எல்லாப் பொருட்களுடனும் ஒன்றாகக் கண்டால் அந்தச் சிவமே எல்லாப் பொருட்களையும் நமக்கு நன்கு விளக்கித் தானும் நன்கு விளங்கும்.

#788. பராசக்தி தரும் பரிசு

அது அருளும் மருள் ஆனது உலகம்
பொது அருளும்; புகழாளர்க்கு நாளும்
மது அருளும் மலர் மங்கையர் செல்வி
இதுஅருள் செய்யும் இறையவன் ஆமே.

சிவன் அருளிய உலகம் மயக்கத்தைத் தருவது ஆகும். ஆனால் ஞானியாருக்கு அதுவே பொது அறிவை அருளும். இன்பத்தைத் தரும் சஹஸ்ர தளத்தில் விளங்குபவள் பராசக்தி. அவளே ஞானியரைச் சிவத்துடன் சேர்த்து வைப்பவள்.

#789. பற்று நீங்கும்! அறிவு ஓங்கும்!

பிறப்புஅது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்புஅது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி ஆவது பற்று அறும் பாசம்
அழப்படி செய்வார்க்கு அகலும் மதியே.

படைப்புச் செயலைக் குறித்து எண்ணிய பெருமையை உடையவன் சிவன். பிறப்பு இல்லாதபடிச் செய்பவரின் அழகிய உடல் அவனுக்குப் பழமையான இருப்பிடம் ஆகும். இந்த உண்மையை அறிந்து கொண்டு விட்டால் உள்ளத்தி உள்ள பற்று தானே அகன்று விடும். பாசமே ஆசைக்கும் துன்பங்களுக்கும் காரணம். அதை விலக்கி விட்டால் ஆழ்ந்த அறிவு உதயமாகும்.

மூன்றாம் தந்திரம் - 16. வார சரம்

வாரம் = வாரத்தின் நாள்
சரம் = மூச்சின் இயக்கம்

#790. நாட்களும் நாடிகளும்

**வெள்ளிய வெண் திங்கள் விளங்கும் புதன் இடம்
ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய் வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறை இடம்
தெள்ளிய தேய் பிறை தான் வலம் ஆமே.**

வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் இட நாடி வழியாக மூச்சு இயங்க வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் வல நாடி வழியே மூச்சு இயங்க வேண்டும். வளர்பிறை வியாழக் கிழமைகளில் இடைகலையிலும், தேய்பிறை வியாழக் கிழமைகளில் வலது நாடியிலும் மூச்சு இயங்க வேண்டும்.

#791. உடம்பு அழியாததன் காரணம்

**வெள்ளி வெண் திங்கள் விளங்கும் புதன் மூன்று
தள்ளி யிடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூனமிலை என்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத்தானே.**

இயல்பாகவோ அல்லது பயிற்சியினாலோ திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மூச்சு இடைகலை வழியாக நடைபெறின் அந்த உடல் அழியாது. இதை வள்ளல் ஆகிய சிவபெருமான் நமக்கு உரைத்துள்ளான்.

#792. ஆனந்தம் கூடும்

**செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறேயென்னும்
இவ்வா றறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்டு
அவ்வா றறிவார்க்கு அவ்வானந்த மாமே.**

செவ்வாய்க் கிழமை, தேய்பிறை வியாழக்கிழமை, சனிக் கிழமை, ஞாயிற்றுக் கிழமை ஆகிய நாட்களில் மூச்சை வலப்பக்க நாடி வழியே அறிந்து கொள்ளும் யோகி இறைவன் ஆவான். இந்த நாட்களில் மூச்சு இட நாடியில் நடந்தால் அதை மாற்றி வல நாடியில் புரிய வேண்டும். அப்போது ஆனந்தம் கூடும்.

#793. நாசியில் சிவம் விளங்கும்

மாறி வருமிரு பான்மதி வெய்யவன்
ஏறியும் இழியு மிடைபிங் கலைஇடை
ஊறுஉயிர் நடு வேயுமி ருக்கிரன்
தேறி யறிமின் தெரிந்து தெளிந்தே.

சந்திரனும், சூரியனும் இடகலை, பிங்கலை நாடிகளில் மாறி மாறி இயங்கும். இடகலை வழியே ஏறிப் பிங்கலை வழியே இறங்கும், பிங்கலை வழியே ஏறி இடகலை வழியே இறங்கும். நாடு நாடியில் மூச்சு ஊர்ந்து போகும். நாசிகள் வழியே இயங்கும் மூச்சில் சிவம் உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

#794. இராசியைப் பொருத்தி அறிக

உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்
உதித்தது வேமிக ஓடிடு மாகில்
உதித்த இராசி உணர்ந்து கொளுற்றே.

பிராணம் வலப்பக்கம் தோன்றி இடப்பக்கம் ஓடும் போது ஒரு பக்கம் கனமாகவும் ஒரு பக்கம் மெல்லியதாகவும் தோன்றும். அகன்றும் தணிந்தும் மாறி மாறி ஓடாமல் ஒரே நாடியில் மிகுதியாக ஓடினால் பிறந்த ராசியைப் பொருத்தி கதிரவன் நாடி, சந்திரன் நாடி அறிய வேண்டும்.

#795. தீப ஒளி தோன்றும்!

நடுவுநில் லாம லிடம் வலம் ஓடி
அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி
இடுகின்ற வாறுசென் றின் பணிசேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண் டென் றானே.

இரண்டு நாடிகளின் வழியே சமமாக நிற்காமல் இடம் அல்லது வலமோடிப் பாய்கின்ற வாயுவை சுழுமுனையில்

பொருத்த வேண்டும். நாடிகள் இரண்டையும் ஒத்து இயங்கச் செய்து, குண்டலினியைப் புருவமத்தியில் கொண்டு பொருத்தினால் அப்போது நடுநாடியான சுழுமுனையின் உச்சியில் தீபத்தின் ஒளி தோன்றும்.

#796. ஆயுளை மூச்சு தீர்மானிக்கும்

ஆயும் பொருளும் அணி மலர் மேலது
வாயு விதமும் பதினாறு உளவலி
போய மனத்தைப் பொருகின்ற ஆதாரம்
ஆயுவும் நாளும் முகுர்த்தமும் ஆமே.

ஆராய்ச்சிக்கு உரிய சிவன் நம் அழகான கண் மலர்களுக்கு மேலே உள்ளான். மூச்சுப் பயிற்சியின் மூலம் சுவாசத்தை மாற்றி அமைத்தால் பதினாறு கலைகள் பொருந்திய சந்திரன் நன்கு விளங்குவான். அந்தக் கலையே நமது ஆயுட்காலத்தைத் தீர்மானிக்கும். அதுவே நாட்களாகவும், தியான காலத்துக்குரிய முகூர்த்தமாகவும் அமையும்.

மூன்றாம் தந்திரம் -
17. வார சூலம்

வாரம் = கிழமை. சூலம் = குற்றம்
பிரயாணத்துக்கு நன்மை தராத தோஷங்கள்.

#797. தவிர்க்க வேண்டிய நாட்களும், திசைகளும்

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே.

திங்கள்,சனிக் கிழமைகளில் கிழக்கே சூலம் ஆகும். செவ்வாய், புதன் கிழமைகளில் வடக்கே சூலம் ஆகும். ஞாயிறு, வெள்ளிக் கிழமைகளில் மேற்கே சூலம் ஆகும்.

#798. சூலமும் தீமைகளும்

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்
துக்கமும் இல்லை வளமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே.

வியாழக் கிழமையன்று சூலம் தெற்கு திசையில் அமையும். சூலம் நாம் செல்லும் திசைக்கு இடப் பக்கமாகவோ அல்லது பின்பக்கமாகவோ இருந்தால்

நன்மை விளையும். சூலம் நாம் செல்லும் திசைக்கு வலப்பக்கமாகவோ அல்லது முன் பக்கமாகவோ இருந்தால் தீமை விளையும்.

மூன்றாம் தந்திரம் -
18. கேசரி யோகம்

கேசரி = வானம்.
கேசரி = சிங்கம்.

கேசரி யோகம் என்பது சிங்கத்தைப் போல மேல் நோக்கிய பார்வையுடன் இருப்பது. இந்த யோகத்தைச் செய்பவர் வானத்தில் செல்லும் ஆற்றலைப் பெறுவர் என்பர்.

#799. நமன் இல்லை!

கட்டக் கழன்று கீழ் நான்று விழாமல்
ஆட்டத்தைக் கட்டி அடுப்பை அணை கோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாள்கோர்த்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே.

மூச்சுக் காற்று கீழே இறங்காமல் அண்ணாக்கில் அதைக் கட்டிவிட வேண்டும். அபான வாயு குதம் வழியாகவோ அல்லது குறி வழியாகவோ வெளியேறாமல் குதத்தைச் சுருக்கி நிறுத்த வேண்டும். இரு கண் பார்வைகளையும் ஒன்றாக்கிவிட வேண்டும். உள்ளத்தைச் சுழுமுனை வழியே பாயும் மூச்சில் கொண்டு நிறுத்த வேண்டும். உடலைத் தாண்டிய இந்த நிலையை ஒருவன் அடைந்து விட்டால் அவன் காலத்தைக் கடந்து விடலாம். அவனுக்கு ஒரு நமன் இல்லை.

#800. அழுக்கு அற்றுப் போகும்

வண்ணான் ஒலிக்கும் சதுரப் பலகை மேல்
கண் ஆறு மோழை படாமல் கரைகட்டி
விண் ஆறு பாய்ச்சி குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க அழுக்கு அற்றவாறே.

சீவன், முன் பக்கம் உள்ள தன் மூளையைச் சிவயோக நாதத்தினால் மோத வேண்டும். இரண்டு கண்களின் பார்வைகளையும் மாறி மாறிப் பார்ப்பதால் சிரசின் உள்ளே ஏற்படும் இரண்டு கரைகள். அவற்றின் இடையே உள்ள சஹஸ்ர தளம் என்னும் குளத்தை வானத்தில் உண்டாகும் ஒளியைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

அதற்குப் பிறகு நெற்றிக்கு மேலே நிமிர்ந்து பார்த்தால் அந்த சீவன் தன் குற்றங்கள் அனைத்தும் நீங்கித் தூய்மை அடைந்து விடுவான்.

விளக்கம்:
வண்ணான் = சீவன்
உவர்மண் = மூலபந்தம்
அடித்துத் துவைத்தல் = தவம் என்ற நாதத்தில் மோதுதல்
அழுக்கு நீங்குதல் = சீவனின் மலங்கள் அனைத்தும் நீங்குதல்

801. இறக்காமல் இருக்கலாம்

இடக்கை வலக்கை இரண்டையு மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணர வல்லார்கட்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கலும் ஆமே.

இடைகலை பிங்கலை நாடிகள் வழியே மூச்சுக் காற்று இயங்குவதை மாற்றிச் சுழுமுனை வழியே செலுத்தும் கலையை ஒருவன் அறிந்து கொண்டு விட்டால் அவருக்குத் தளர்ச்சி ஏற்படாது. மற்றவர் உறங்கும் போது பயிற்சி செய்து வந்தால் ஒருவனுக்கு இறப்பு இல்லை. நீண்ட காலம் வாழ இயலும்.

#802. நிலா மண்டலம் பாலிக்கும்

ஆய்ந்து உரைசெய்யில் அமுதம் நின்றுஊறிடும்
வாய்ந்து உரைசெய்யும் வருகின்ற காலத்து
நீந்துஉரை செய்யில் நிலாமண்டலம் ஆய்
பாய்ந்து உரை செய்தது பாலிக்குமாறே.

மறைகளை ஆராய்ந்து சொல்லப் போனால், சுழுமுனைத் தியானச் சாதனையில் அமுதம் ஊறிப் பெருகும் . அது அப்போது ஓர் ஒலியை எழுப்பும். ஒலிக்கும் போது சந்திர மண்டலமாக விளங்கி அது நம்மைப் பாதுகாக்கும்.

#803. நூறு கோடி ஆண்டுகள்

நாவின் நுனியை நடுவே விசிறிடில்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்
சாவதும் இல்லை சதகோடி ஊனே.

நாக்கின் நுனியை அண்ணாக்கில் உரசினால் பிரணவத் தொனி கேட்கும். சீவனும், சிவனும் அங்கே தோன்றுவர். மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி

தேவர்களும் அங்கே தோன்றுவர். நூறு கோடி ஆண்டுகளுக்கு மரணம் என்பதே இராது.

முப்பத்து மூவர்:
துவாதச ஆதித்தர் = 12.
ஏகாதச ருத்திரர் = 11
அஷ்ட வசுக்கள் = 8
அஸ்வினி குமாரர் = 2

#804. அமுதம் உண்ணலாம்

**ஊன் ஊறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வான் ஊறல் பாயும் வகைஅறி வார் இல்லை;
வான் ஊறல் பாயும் வகை அறிவாளர்க்குத்
தேன் ஊறல் உண்டு தெளியலும் ஆமே.**

ஊனால் ஆன உடம்பால் அறியும் அறிவு எல்லாம் ஒருவரின் சிரசில் பொருந்தி அமையும். அந்த சிரசின் உச்சியின் மேல் வான் மண்டலம் பொருந்தி அமையும். ஆயினும் இதன் இயல்பை அறிந்தவர் இல்லை. வான்மண்டலத்தைப் பொருந்தி அறிந்து கொண்டவர் அங்கு ஊறும் தேனை ஒத்த இனிய அமுதத்தை உண்டு தெளிவு பெறலாம்.

#805. இளமையுடன் இருக்க வழி

**மேலை அண்ணாவில் விரைந்து இருகால் இடின்
காலனும் இல்லை கதவம் திறந்திடும்
ஞாலம் அறிய நரை திரி மாறிடும்
பாலனும் ஆவான் பரா நந்தி ஆணையே.**

மேல் அண்ணாக்குப் பகுதியில் பிராணன், அபானன் என்ற இரு வாயுக்களும் பொருந்தும்படி பயிற்சி செய்ய வேண்டும். அப்போது உடலுக்கு அழிவு இராது. பிரமரந்திரம் என்னும் உச்சித் துளையின் வழி திறக்கும். நரை திரை மாறி, இளமை திரும்புவதை உலகம் கண்டறியும். இது சிவ சக்தியரின் ஆணை ஆகும்.

#806. உடலறிவு நீங்குவர்

**நந்தி முதலாக நாமேலே ஏறிட்டுச்
சந்தித்து இருக்கில் தரணி முழுது ஆளும்
பந்தித்து இருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித்து இருப்பவர் தீவினை யாளரே.**

சிவத்தை முன்னிட்டு நாக்கின் நுனியை அண்ணாக்கில் ஏறும்படிச் செய்ய வேண்டும். அங்கே நடுநாடியின் உச்சியில் கூடி இருக்க வேண்டும். அப்போது அந்த யோகி உலகம் முழுவதையும் ஆளலாம். உடல் நினைவை ஒழித்துச் சிவனையே நினைத்துக் கொண்டிருப்பவர் உண்மையான அக்கினி காரியம் செய்தவர் ஆவார்.

#807. வினை நீங்குவர்

தீவினை ஆடத் திகைத்து அங்கு இருந்தவர்
நாவினை நாடின் நமனுக்கு இடம் இல்லை
பாவினை நாடிப் பயன் அறக் கண்டவர்
தேவினை ஆடிய தீங்கரும்பு ஆமே.

தீ வினைகள் நம்மை வருத்தும் பொழுது அறிவு மயங்கும். சீவர்கள் நாவினால் செய்யும் பயிற்சியினால் கூற்றுவனை வென்று விடலாம். பல வேறு வினைகளை ஆராய்ந்து அவற்றின் பயன் இன்மையை உணர்ந்து கொண்டவர்கள் தெய்வப் பணியில் ஈடுபடுவர். அதன் இனிமையைச் சுவைத்து இருப்பர்.

#808. ஊன் உடலில் அமுதம்

தீங்கரும்பு ஆகவே செய்தொழில் உள்ளவர்
ஆங்கரும்பு ஆக அடைய நா ஏறிட்டுக்
கோங்கு அரும்பு ஆகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும்பு ஆகிய ஊன் நீர் வருமே.

இனிய கரும்பு போன்ற வினைகளைச் செய்பவர்கள் சுழுமுனை நாடியில் உள்ள கரும்பைச் சுவைகக் விரும்பினால். நாக்கை மேலே ஏற்றி நாடு நாடியின் கோணலை நேராக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஊன் உடலிலேயே அமுதத்தைக் காண இயலும்.

809. திருவைந்தெழுத்து

ஊன்நீர் வழியாக உள்நாவை ஏறிட்டு,
தேன்நீர் பருகி, சிவாய நாம என்று
கான்நீர் வரும் வழி கங்கை தருவிக்கும்
வான்நீர் வரும் வழி வாய்ந்தறிவீரே.

அண்ணாக்குப் பகுதி வழியே ஒருவன் தன் உண்ணாக்கை மேலே ஏற்ற வேண்டும். அங்கே ஊறும் அமுதத்தைப் பருக வேண்டும். 'சிவாயநம' என்ற ஐந்து எழுத்துக்களை சிந்தனை செய்ய வேண்டும். அப்போது ஓர் ஒளி வெள்ளம் நீர் வெள்ளம் போல முகத்தின் முன்பு பெருகும். அந்த வான கங்கையை அறிந்து கொள்ள வேண்டும்.

#810. உடலே ஓர் ஆலயம் ஆகும்!

வாய்ந்தறிந்து உள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்த அறிவு ஆகக் கருணை பொழிந்திடும்;
பாய்ந்து, அறிந்து உள்ளே படிக்கதவு ஒன்று இட்டுக்
கோய்ந்து அறிந்து உள்உறை கோயிலும் ஆமே.

சிவனை மனதில் இருத்தி வழிபாடு செய்யும் போது மலங்களைச் சுட்டெரிக்கும் சக்தி தேவி ஒலி வடிவாகவும், ஒளி வடிவாகவும் வெளிப்படுவாள். அந்த ஒளி, ஒலிகளில் மனத்தைப் பதிக்க வேண்டும். சலந்தர பந்தனமும், கேசரி முத்திரையும் அமைத்து அவை கீழே இறங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அங்கேயே குவிந்து தியானம் செய்தால் அந்த யோகின் உடலே ஓர் ஆலயமாக மாறிவிடும்.

#811. தீயினும் தீயவர்!

கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தாரணி முழுதுக்கும்;
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளும்
தீயினும் தீயரத் தீவினை யாளர்க்கே.

அகக் கோவிலையே தன் இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவர்கள் உலகம் மொத்தத்துக்கும் தாயினும் மேலாகத் தன் அருளைப் பொழிவர். பிறர் இவரைச் சினந்தாலும் இவர் நன்மையே செய்வார். ஆனால் சினம் கொண்டவர்கள் தீவினை செய்தவர்களுக்குத் தீயைவிட அதிகமாகத் தீமை செய்து விடுவார்கள்.

#812. சிவபெருமான் இயல்பு

தீவினை யாளர்தம் சென்னியில் உள்ளவன்
பூவினை யாளர்தம் பொற்பதி ஆனவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர்தம் மதியில் உள்ளானே.

சிவபெருமானின் இருப்பிடங்கள் இவை:
மூலாக்கினியை எழுப்பி யோகம் செய்பவரின் சென்னியில் இருப்பான்.
சஹஸ்ரதளத்தில் உணர்பவருக்குப் பொன்னொளியில் விளங்குவான்.
தொடர்ந்து பாவனை செய்பவர்களுக்கு பாவகப் பொருளாக இருப்பான்.
சிவயோகம் செய்பவரின் அறிவில் சிவா பெருமான் செறிந்து விளங்குவான்.

#813. ஒளிக் கதிர்கள் பரப்புவான்

மதியினின் எழும் கதிர் போலப் பதினாறாய்,
பதிமனை நூறு நூற் றிருபத்து நாலாய்
கதிமனை உள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலை யாமல் இருந்தன தானே.

சந்திரனின் கலைகள் பதினாறு. அது போன்றே விசுத்திச் சக்கரத்தில் உள்ள தாமரையின் இதழ்கள் பதறினாறு. உடலில் உள்ள சக்கரங்கள் ஒளி பரப்பும் கதிர்கள் 224. உலகங்களில் உள்ள ஒளிக் கதிர்களை உடலிலும் பரப்பி அதன் மூலம் தத்துவங்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபடாமல் சிவன் விளங்குவான்.

#814. இன்பம் அளிப்பாள்

இருந்தனள் சததியும் அக்கலை சூழ
இருந்தனள் கண்ணியம் அந்நடு ஆக
இருந்தனள் மான் நேர்முகம் நில ஆர
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே.

பராசக்தி விசுத்திச்சக்கரத்தின் நடுவே விளங்குகின்றாள். அக்கிரணங்களின் இடையில் பராசக்தி விளங்குகின்றாள். ஆன்ம தத்துவத்தில் சந்திரனாக விளங்குபவளும் சக்தி தேவியே. போகத்தின் போது உடலில் பொருந்தி இன்பம் அளிப்பவளும் சக்தி தேவியே.

#815. விசுத்திச் சக்கரம்

பொழிந்தவிரு வெள்ளி பொன் மண் அடையில்
வழிந்துஉள் இருந்தது வான் முதல்; அங்குக்
கழிந்து அது போகாமல் காக்க வல்லார்க்கு
கொழுந்து அது ஆகும் குணம் அது தானே.

அனைத்துமாக உள்ள பராசக்தி வெண்மையான சுக்கிலத்திலும், பொன் மாயமான சுரோணிதத்திலும் பொருந்தி உள்ளாள். அவை செயல்படும் இடமாகிய ஸ்வாதிஷ்டானச் சக்கரத்தில் பொருந்தி உள்ளாள். ஆற்றல் கழிந்து செல்லாமல் காத்துக் கொள்ள அறிந்து கொண்டு விட்டால் அதுவே உடலைக் காக்கும் சிறந்த பச்சிலை ஆகி விடும். விசுத்தி மந்திரங்களில் அளிக்கும் பயன் இதுவே.

#816. மெய்ஞானம் உண்டாகும்

**குணம்அது ஆகிய கோமளவல்லி
மணம் அது ஆக மகிழ்ந்து அங்கு இருக்கில்,
தனம்அது ஆகிய தத்துவ ஞானம்
இனம்அது ஆக இருந்தனன் தானே.**

காம வெற்றிக்குக் காரணம் ஆகும் குண்டலினி சக்தி. கொடி போன்று மிக மெல்லிய இந்த சக்தி வான மண்டலத்தை அடைந்து, சிவனுடன் சேர்ந்து மகிழும். அவ்வாறு நடந்தால் எட்டு பெருஞ் சித்திகளும் கைக் கூடும். மெய் ஞானம் உண்டாகும். குண்டலினி சக்தியுடன் அறிவு மயமான சிவனும் நம் அறிவில் செறிந்து விளங்குவான்.

#817. நீண்ட காலம் வாழ முடியும்

**இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்தஅப் பூவுடன் மேல் எழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலும் ஆமே.**

விசுத்திச் சக்கரத்தின் கீழே ஓடும் மூச்சுக் காற்று, கண்டத்திலிருந்து உள்முகமாக மேல் நோக்கிச் செல்லும். அது உடலில் உள்ள வானத்தை அடைந்து கவிழ்ந்திருக்கும் சஹஸ்ரதளத்தில் விளங்க வேண்டும். அப்போது சந்திர மண்டலம் நன்கு வளரும். பூமண்டலத்தில் நெடுங்காலம் உயிர் வாழ முடியும்.

#818. நாதாந்தம் தரும் ஆனந்தம்

**மண்டலத் துள்ளே மன ஒட்டி யாணத்தைக்
கண்டுஅகத்து அங்கே கருதியே கீழ்க்கட்டி,
பண்டுஅகத் துள்ளே பகலே ஒளிஆகக்
குண்டலக் காதனும் கூத்து ஒழிந் தானே.**

சந்திர மண்டலத்துக்குள்ளே, சஹஸ்ரதளம் என்னும் ஒட்டியாணத்தால், மனத்தைக் கீழே செல்லாதவாறு கட்டி நிறுத்தி விட வேண்டும். உள்ளம் தளர்ச்சி அடையாமல் சிரசிலேயே நிற்கும் போது இயல்பான சாலந்திர பந்தனம் ஏற்பட்டு மூச்சுத் தடைப்படும். ஆனந்தமய கோசத்தில் கதிரவன் ஒளி வீசுவான். குண்டலத்தை அணிந்த சிவபெருமானும் தன் ஐந்தொழில்களை ஒழித்து விட்டு அசைவின்றி அங்கே விளங்குவான்.

ஆனந்தமய கோசம் ஒளி மயமானது. அது ஒளி அணுக்களால் ஆனது
ஈசனின் ஐந்தொழில்கள் : படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல்.

#819. மனம் உடல் பற்றை ஒழிக்க வேண்டும்

ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமரும்
கழிகின்ற வாயுவும் காக்கலும் ஆகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிக்கின்ற காலத்துப் பைஅகற் றீரே.

மேலே சொன்ன சாதனையால் விசுத்திச் சக்கரத்துக்குக் கீழே சென்று கழிந்து போகின்ற வாயு அண்ணாக்கின் வழியே சென்று மேலே போய்த் தங்கும். ஒளி நிலை பெற்று வழியும். அந்த சமயங்களில், சஹஸ்ரதளத்தில் ஈசன் திருவடிகளைத் தொழும் போது, உடல் நினைவைத் துறந்து விடுங்கள். உடலைப் பற்றி மறந்து விடுங்கள்.

#820. மணி விளக்கு ஆகும்!

பையின் உள்ளே படிக்கதவு ஒன்று இடின்
மெய்யினின் உள்ளே விளங்கும் ஒளியதுஆம்
கையினுள் வாயுக் கதித்தி அங்கே எழுந்திடின்
மை அணி கோயில் மணிவிளக்கு ஆமே.

உடலில் உள்ள மூலாதாரக் கதவு குதம் ஆகும். அதைச் சுருக்கிப் பிடித்தால் மூல பந்தம் நிகழும். அதனால் அபானன் அமுக்கப்படும். தன திசையை மாற்றிக் கொண்டு மேல் நோக்கிப் போகும். உயிர்ப்பை மாற்றி மேலே செலுத்தும் போது உடல் ஒளியுடன் விளங்கும். அபானன் நாடியினுள் மேலே எழும் போது மலங்கள் நிறைந்த சீவன் ஒளி உடையதாக விளங்கும்.

#821. அக்கினிக் கலை வளரும்

விளங்கிடும் வாயுவை மேல் எழ உன்னி
நலங்கிடும் கண்டத்து நாடியின் உள்ளே
வணங்கிடும் மண்டலம் வாய்ந்திடக் கும்பிச்
சுணங்கிட, நின்றவை சொல்லலும் ஆமே.

மூல பந்தத்தால் அபானனை திசை மாற்றி மேலே செல்ல வைக்க வேண்டும். மூல பந்தத்துடன் செய்யும் சாலந்தர பந்தனம் பிராணவாயுவையும் அபான வாயுவையும் ஒன்றாகச் சேர்க்கும். அதனால் அக்கினிக் கலை நன்கு வளர்ந்து, மிளிர்ந்து, ஒளிரும்.

#822. தொலை நோக்கு கிடைக்கும்

சொல்லலும் ஆயிடும் மாகத்து வாயுவும்
சொல்லலும் ஆகும் அனல் நீர் கடினமும்
சொல்லலும் ஆகும் இவை அஞ்சும் கூடிடின்
சொல்லும் ஆம் தூர தரிசனம் தானே.

வான் பூதத்தில் மற்ற ஐந்து பூதங்களும் ஒடுங்கி மறைந்து இருப்பதை அறிவோம். வானம் முதலிய ஐந்து பூதங்களும் ஒளி மயமாகப் பொருந்தி இருக்கும். இதைக் கண்டு அறிந்தவர் தொலை நோக்குப் பெறுவார்.

#823. சிவஞானம் தரும் பயன்.

தூர தரிசனம் சொல்லுவான் காணல் ஆம்
கார் ஆரும் கண்ணி கடை ஞானம் உட்பெய்து
தேர் ஆரும் தீபத்து எழில் சிந்தை வைத்திடின்
பார்ஆர் உலகம் பகல் முன்னது ஆமே.

தொலைப் பார்வையைப் பற்றிச் சொந்த அனுபவத்தால் அறிந்து கொள்ளலாம். மேகத்தைப் போல அருள் பொழியும் சக்தியைப் பற்றிய ஞானத்தை உள்ளே நிறுத்த வேண்டும். அழகிய ஒளி மிகுந்த தீபத்தைப் போன்ற சிவஞானத்தின் மீது மனத்தை நிலை நிறுத்த வேண்டும். அப்போது பூமி முதலான உலகங்கள் பகலில் பார்ப்பதைப் போலத் தெளிவாகக் காட்சி அளிக்கும்.

#824. ஆன்மாவில் சிவன் விளங்குவான்

முன்எழு நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன்எழு வேதம் பகல் ஒளி உண்டு என்னும்
தன்எழு நாதத்து நல்தீபம் வைத்திடத்
தன்எழு கோவில் தலைவனும் ஆம்.

முன்னால் எழுவது கொப்பூழ்த் தாமரை. அதற்குப் பன்னிரண்டு விரற்கடை கீழே உள்ளது மூலாதாரம். அங்கு கதிரவன் விளங்குவதாக வேதங்கள் கூறும். கீழே செல்லாதவாறு பந்தித்துக் குண்டலினியை மேலே செலுத்தும் பொழுது ஒரு நாதம் எழும். அதில் அறிவு பொருந்தி இருந்தால் அப்போது ஆன்மாவாகிய கோவிலில் சிவன் விளங்குவான்.

மூன்றாம் தந்திரம் - 19. பரியங்க யோகம்

பரியங்கம் என்பது கட்டில். யோகம் என்பது சேர்க்கை. கட்டிலில் ஆடவனும் பெண்ணும் கூடி செய்யும் போகத்தையே ஒரு யோகமாக மாற்றுவது பரியங்க யோகம்.

#825. போகத்தை யோகமாக்க வேண்டும்

பூசுவன எல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையும் சாத்திக்
காயக் குழலி கலவியொடும் கலந்து,
ஊசித் துளையுற, தூங்காது போகமே.

பூசத் தகுந்த வாசனைப் பொருட்களை எல்லாம் பூசிக் கொண்ட ஓர் ஆடவன், மணம் வீசும் மலர் மாலையை அணிந்த ஒரு பெண்ணுடன் புணர்ச்சியில் ஈடுபடும் பொழுது அவன் உள்ளம், தலை உச்சியில் உள்ள பிரமரந்திரத்தின் மீது நிலைத்திருந்தால் அந்தப் புணர்ச்சி தளர்ச்சி அடையாது.

#826. நாத விந்துக்களாக மாறிவிடும்!

போதத்தை உன்னவே போகாது வாயுவும்
மேகத்தை வெள்ளியும் மீளும் வியாழத்தில்
சூதொத்த மென் முலையாளும் நல் சூதனும்
தாதில் குழைந்து தலை கண்டவாறே.

உச்சித் தொளையாகிய பிரமரந்திரத்தில் விளங்குகின்ற பேரறிவு பொருந்திய சிவனை எண்ணியபடி ஓர் ஆடவன் புணர்ச்ச்சியில் ஈடுபட்டால், அவனது காம வாயு விரைவாகத் தொழில் புரியாது. . நீரின் தன்மை கொண்ட அவன் சுக்கிலம் பெண்ணின் சுரோணிதத்தில் கலக்காமலேய திரும்பிவிடும். சூதாடும் கருவியைப் போன்ற ஸ்தனங்கள் உடைய பெண்ணும், உடல் என்னும் தேரைச் செலுத்தும் ஆடவனும், செய்த இந்தக் கூட்டுறவால் வெளிப்பட்ட சுக்கிலமும் சுரோணிதமும் நாத விந்துக்களாக மாறித் தலையில் சென்று பொருந்தும்.

இந்த யோகத்தில் ஈடுபடுபவன், தன் தலையில் நாதமாகிய சிவனும் விந்துவாகிய சக்தியும் விளங்குவதைக் காண்பான். பிரமரந்திரத்தை நினைவில் கொள்வதால் காம வாயு சுக்கிலத்தை நீக்கம் செய்யாது. அது நேராக மூலாதாரத்திலிருந்து தலையைச் சென்று அடைந்துவிடும்

#827. உடல் தளராது

கண்டனும் கண்டியும் காதல்செய் யோகத்து,
மண்டலம் கொண்டுஇரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேல்கொண்டு வான் நீர் உருட்டிடத்
தண்டு ஒருகாலும் தளராது அங்கமே.

ஒரு தலைவனும் தலைவியும் விருப்பத்துடன் கூடிப் புணரும் போது; அக்கினி மண்டலம், கதிரவன் மண்டலம் என்ற இரண்டையும் கடந்து மேலே சென்று; சந்திர மண்டலத்தில் தலையின் மேலே உள்ள வெளியை உணருவர். அங்கு சந்திர மண்டலத்தில் வான் கங்கை ஒளியைப் பெருக்கும். அதனால் அவர்கள் உடல் ஒரு போதும் தளர்ச்சி அடையாது.

#828. விந்துவை வெற்றி பெறலாம்

அங்குஅப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்க தலைவனும் ஆமே.

புணர்ச்சியின் போது காமத் தீ உடலிலிருந்து விந்துவை நீக்கம் செய்யும். அவ்வாறு நிகழாமல் விந்துவைப் பாதுகாத்து யோகத்தால் விந்து நீக்கத்தை வெற்றி கொண்டவன் ஒரு தலைவன் ஆவான்.

#829. உடல் வசப்படும்

தலைவனும் ஆயிடும் தன் வழி ஞானம்
தலைவனும் ஆயிடும் தன் வழி போகம்
தலைவனும் ஆயிடும் தன் வழி உள்ளே
தலைவனும் ஆயிடும் தன் வழி அஞ்சே.

இவ்வாறு வெற்றி பெற்ற தலைவன் தன் ஆன்மாவை அறிந்தவன் ஆவான். அவனைச் சிவயோகம் தானே வந்தடையும். தன்னைத் தானே வசப்படுத்தி ஆளும் திறமை அவனுக்கு வரும். அவன் சொற்படி ஐந்து பூதங்களும் நடக்கும்.

#830. ஐந்து நாழிகை போதும்!

அஞ்சிக் கடிகைமேல், ஆறாம் கடிகையில்
துஞ்சுவது ஒன்றத் துணைவி துணைவன் பால்
'நெஞ்சு நிறைந்தது வாய்கொளாது' என்றது
பஞ்சக் கடிகை பரியங்க யோகமே.

பரியங்க யோகம் ஐந்து நாழிகைப் பொழுது மட்டுமே செய்ய வேண்டும். ஆறாம் நாழிகையில் துணைவி தன் துணைவனுடன் பொருந்தி உறங்குவாள். ஐந்து நாழிகைப் பரியங்க யோகமே அவளுக்கு மன நிறைவை அளித்துப் போதும் இனி வேண்டாம் என எண்ணச் செய்யும். இதற்கு மேலே பரியங்க யோகம் நீடித்தால் விந்து வெளிப்படும்.

#831. குண்டலினியைக் கடக்க இயலும்

பரியங்க யோகத்துப் பஞ்சக் கடிகை
அரியஇவ் யோகம் அடைந்தவர்க்கு அல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவர்க்கு ஒண்ணாதே.

நழுகின்ற வளையல்கள் அணிந்த கைகளை உடைய, மணம் பொருந்திய கொங்கைகளை உடைய குண்டலினி சக்தியைக் கடந்து மேலே செல்வது மிகவும் அரிது. பரியங்க யோகத்தில் அரிதாக ஐந்து நாழிகை இருக்க முடிந்தவனுக்கே இந்த திறமை வாய்க்கும்.

#832. பரியங்க யோகம் மேன்மை தரும்

ஒண்ணாத யோகத்தை உற்றவர் ஆர் என்னில்,
விண் ஆர்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ஆர் அமுதினைப் பஞ்சக் கடிகையில்
‘எண்ணாம்’ என் எண்ணி இருந்தான் இருந்ததே.

யாவருக்குமே அடைவதற்கு அரிதாகிய இந்த யோகத்தைச் செய்து அதை அறிவித்தவர் யார் தெரியுமா? வான் கங்கையை ஜடையில் தரித்த ருத்திரன் ஆவான். அவன் உருவத்தை எண்ணாமல், நாதத்துடன் கூடிய ஒளியை ஐந்து நாழிகைப் பொழுது எண்ணமல் எண்ணி அனுபவித்திருந்தான்.

#833. யோகத்துக்கு உரிய வயது

ஏய்ந்த பிராயம் இருபதும் முப்பதும்
வாய்ந்த குழலிக்கும் மன்னர்க்கும் ஆனந்தம்
ஆய்ந்த குழலியோடு ஐந்தும் மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமும் சோர்வு இல்லை வெள்ளிக்கே.

இந்தப் பரியங்க யோகம் செய்வதற்கு ஏற்ற வயது பெண்ணுக்கு இருபதும், ஆணுக்கு முப்பதும் ஆகும். அப்போது இந்த யோகத்தில் பொருந்திய இருவருக்கும் ஆனந்தம் உண்டாகும். பெண்ணின் ஐம் பொறிகளும் இன்பத்தில் மலர்ந்திடும். ஆனால் ஆணுக்கு விந்து நீக்கம் ஏற்படாது.

#834. கள்ளத் தட்டானார்

வெள்ளி உருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பரியக் குழல் வழியே சென்று
வள்ளி உள்நாவில் அடக்கி வைத்தாரே.

வெண்மையான சுக்கிலம் உருகிப் பொன்னிற சுரோணிதத்தில் கலக்காமல் தடுத்தார் மறைந்து இருந்த சிவன் என்னும் தட்டானார். அவர் கரியாகிய அருளினால் பக்குவம் செய்வார். தீ என்ற அக்கினிக் கலை உண்டாகும் வண்ணம், ஊதுகுழல் ஆகிய சுழுமுனை வழியே சென்று; உள்நாவில் ஒளிமயமான சந்திர மண்டலத்தை விளங்க வைப்பார்.

#835. சிவசூரியன் விளங்குவான்

வைத்த இருவரும் தம்மில் மகிழ்ந்து உடன்
சித்தம் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தகனாய் நிற்கும் வெங்கதிரோனே.

காம வயப்படாமல் தெய்வ காரியமாக எண்ணிப் பரியங்க யோகத்தைச் செய்ய வேண்டும். விந்து நீக்கம் இல்லாமல் ஆணும் பெண்ணும் புணரும் போது இருவரும் இன்பம் அடைவர். அவர்களுக்குப் பத்து திசைகளுக்கும் தலைவனான பதினெட்டு வகைத் தேவர்களுக்கும் தலைவனான சிவசூரியன் விளங்குவான்.

#836. நாதத்தில் திளைப்பர்

வெங்கதி ருக்கும் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கு ஓர் ஆனந்தம்
தங்களில் பொன் இடை வெள்ளிதாழா முனம்
திங்களில் செவ்வாய் புதைந்திருந்தாரே.

விருப்பத்தைத் தருபவன் கதிரவன். பிறப்பைத் தருவது கருவாய். பரியங்க யோகம் செய்யும் ஆடவன் இவை இரண்டுக்கும் இடையில் ஆனந்தம் அடைவான். அவ்வகைப் புணர்ச்சியில் சுக்கிலம் சுரோணிதம் வழியே பாயாது. எனவே இருவரும் சந்திர மண்டலத்தில் உள்ள செந்நிறம் உடைய சக்தியாகிய நாதத்தில் திளைத்து இருப்பர்.

#837. ஊர்த்துவரேதசு

**திருத்திப் புதனைத் திருத்தல் செய்வார்க்குக்
கருத்தழகாலே கலந்து அங்கு இருக்கில்
வருத்தமும் இல்லையாம் மங்கை பங்கற்கும்
துருத்தியில் வெள்ளியும் சோராது எழுமே.**

அறிவைத் திருத்தி அமைத்து, மனத்தைத் தூய்மைப் படுத்தி, கருத்தழகுடன் பரியங்க யோகம் செய்யும் போது. எந்தத் துன்பமும் இராது. உடலில் விந்து நீக்கமும் இராது. அதன் விளைவு என்ன? விந்துவைச் செலுத்தும் காம வாயு மேல் நோக்கிச் செயல்படும் ஊர்த்துவரேதசு வந்து அமையும்.

#838. உடல் உருகும்

**எழுகின்ற தீயை முன்னே கொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும் பரிசு எய்திடும் மெய்யே
உழுகின்றது இல்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்றது இல்லை வெளி அறிவார்க்கே.**

சுவாதிஷ்டானத்தில் உள்ள காமத்தீயை மேலே ஏற்றிப் புருவ மத்திக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்போது தீயின் முன் வைத்த மெழுகைப் போல யோகியின் உடல் உருகிவிடும். புருவ மத்தியைத் தாண்டிச சென்று துவாசாந்தப் பெருவெளியையும் அங்குள்ள ஒளியையும் அறிந்தவரின் உடல் ஒருநாளும் கீழே விழாது. மெழுகு போல உருகிவிடும்.

#839. ஒளி தெரிந்தால் உலகம் தெரியாது

**வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறியின் உளிமுறி ஆமே
தெளிவை அறிந்து, செழு நந்தியாலே
வெளியை அறிந்தனன் மேல் அறியேனே.**

வானத் தானத்தை அறிந்து கொண்டு, அங்கே விளங்கும் பொன்னிற ஒளியைக் காண அறிந்து கொண்டால் என்ன ஆகும்? உள்ளம் வேறுபடாமல் தெளிந்த ஞானம் கிடைக்கும். சிவன் அருளால் வானமும் அதன் நடுவில் ஒளியும் தெரியும். வேறு எதுவும் தெரியாது. ஒளி தெரிந்தால் உலகம் தெரியாது.

#840. உடலில் உறையும் தெய்வங்கள்

மேல்ஆம் தலத்தில் விரிந்தவர் ஆர்எனின்,
மால்ஆம் திசைமுகன் மாநந்தி யாயவர்
நால்ஆம் நிலத்தின் நடுஆன அப்பொருள்
மேலாய் உரைத்தனர் மின் இடையாளுக்கே.

ஒருவருக்கு மேலாக ஒருவர் என்று நம் உடலில் விளங்கும் தெய்வங்கள் யார் யார்? திருமால், நான்முகன், உருத்திரன், பராசக்தி, பரமசிவம் என்னும் தெய்வங்கள் நம் உடலில் உறைகின்றனர். துரிய பூமியில் பராசக்தியை விட மேலே இருப்பான் சிவன்.

#841. நெடுங்காலம் வாழ இயலும்

மின்இடை யாளு மின்னாளனும் கூட்டத்துப்
பொன்இடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னோடு தன்னைத் தலைப்பெய்ய வல்லிரேன்
மண் இடைப் பல்ஊழி வாழ்தலும் ஆமே.

மின்னல் போன்ற இடையை உடைய சக்தி தேவியையும், அவளை ஆளும் சிவனையும், அவர்கள் கூட்டத்தையும் பொன் ஒளி கொண்ட வானத்தில் நிலை பெறச் செய்ய வேண்டும். அந்தக் கூட்டத்தில் தன் ஆன்மாவையும் காண அறிந்தவர் இந்த உலகில் நெடுங்காலம் வாழ இயலும்.

#842. ஆன்மாவே யாகப் பொருள்

வாங்கல் இருதலை வாங்கிலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகு அறிவார் இல்லை
வீங்க வலிக்கும் விரகு அறிவாளரும்
ஓங்கிய தன்னை உதம் பண்ணினாரே.

காம வாயுவை உள்ளே இழுத்துச் சுக்கிலம் கெடுமாறு செய்தலையும், அவ்வாறு உள்ளே இழுத்த காம வாயுவை மேலே செலுத்தும் வழியினை அறிபவர் இல்லை. அத்தகைய மாற்றங்களைச் செய்ய அறிந்து கொண்டவர் தன்னையே சிவனிடம் ஹோமப் பொருளாக அர்ப்பணிப்பவர் ஆவார்.

#843. முடி கறுக்கும்!

உதம் அறிந்து அங்கே ஒருசுழிப் பட்டால்
கதம் அறிந்து அங்கே கபாலம் கறுக்கும்
இதம் அறிந்து எ ன்றும் இருப்பாள் ஒருத்தி
பதம் அறிந்தும் உளே பார் கடிந்தாளே.

ஆன்மாவை இறைவனுக்கு ஓமப் பொருளாக்கி அதைச் ஸஹஸ்ர தலத்தில் பொருத்தினால், அப்போது தலை மயிர் கறுத்து விடும்.சக்தியும் அவனது இதம் அறிந்து செயல் புரிவாள். அவன் பக்குவத்தை அறிந்து கொண்டு, பிருத்விச் சக்கரத்தின் செயலை மாற்றி அருளுவாள் . மேலே சென்று விட்ட காம வாயு மீண்டும் கீழே சென்று விடாமல் தடுப்பாள்.

#844. அடியும் இல்லை நுனியும் இல்லை!

பார் இல்லை, நீர் இல்லை, பங்கயம் ஒன்று உண்டு;
தார் இல்லை, வேர் இல்லை, தாமரை பூத்தது ;
ஊர் இல்லை, காணும் ஒளி அது ஒன்று உண்டு
கீழ் இல்லை, மேல்இல்லை, கேள்வியிற் பூவே.

ஆயிரம் இதழ்த் தாமரை ஒன்று உண்டு. ஸஹஸ்ரதளம் என்று அதன் பெயர். அது சிதாகாசத்தில் இருப்பதால் அங்கு நிலமோ நீரோ இல்லை! இந்தத் தாமரை மலர்ந்தே உள்ளது. அதனால் அதற்கு அதற்கு மொட்டும் இல்லை, வேரும் இல்லை. அதில் ஒளியால் நிரம்பி உள்ளது. ஒளி எங்கும் பரவி இருப்பதால் அதற்குக் குறிப்பிட்ட இடம் என்று எதுவும் இல்லை. நாதத்துக்குக் காரணம் இந்த தாமரையே என்றாலும் அதற்கு அடியும் இல்லை நுனியும் இல்லை!

மூன்றாம் தந்திரம் -
20. அமுரி தாரணை

அமுரி = வீரியம்
வீரியம் உடலில் தங்குவதற்குச் செய்ய வேண்டியவை.

#845. வருந்தாமல் இருக்கும் வழி

உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்
கடலில் சிறு கிணறு ஏற்றம் இட்டால் ஒக்கும் ;
உடலில் ஒருவழி ஒன்றுக்கு இறைக்கில்
நடளிப் படாது உயிர் நாடலும் ஆமே.

உடலுள் நீங்காது இருந்து உறுதியை அளிப்பது உணர்வு நீர் ஆகும். கடலின் அருகே ஒரு சிறு கிணறு தோண்டிவிட்டு அதன் நீரை ஏற்றம் இட்டு இறைக்கலாம். அதைப் போன்றே உடலில் கீழே செல்லும் உணர்வு நீரை வேறு வழியாக மேலே போகச் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் உயிர் வருத்தம் அடையாமல் காப்பாற்றலாம்.

விளக்கம்:

உடலில் உள்ள அமுதமயமான வீரியத்தை வீணாக்கக் கூடாது. அதை ஓர் ஆக்கப் பொருளாக மாற்ற வேண்டும். உடலில் ஒளியை அமைத்து உடலுக்கு உறுதி தருவது அமுரி நீர். இல்லற வாழ்வில் உள்ளவர்கள் காம வாயு செயல் படும் போது சிவத் தியானம் செய்து போகத்தையே யோகமாக மாற்றி விடுவர். யோகியர் மூல பந்தனம் செய்து, குதத்தை நெருக்கிப் பிடித்து, சிவத்தியானம் செய்து, மூல வாயுவுடன் காம வாயுவைக் கலந்து, உடலுள் மேலே ஏற்றுவர்.

#846. பொன் போல் உடல் ஒளிரும்

தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன்றில்லை
வளியுறு மெட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயம் கனகம தாமே.

தெளிந்த இந்த அமுரியை ஓராண்டு காலம் பருகி வந்தால் உடலில் ஒளியினைக் காண இயலும். கேடற்ற இந்த நீர் காற்றுடன் கலந்து உடலில் மேலே ஏறுவது. எட்டு ஆண்டுகள் பயிற்சி செய்தால் மனம் கீழே நோக்குவதைத் துறந்து விடும். எப்போதும் மேலேயே நிற்கும். உடல் பொன் போல் ஒளிரும். மனம் எப்போதும் மகிழ்வுடன் இருக்கும்.

#847. தலை மயிர் கறுக்கும்

நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறு மிதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறு மிதற்கு மறுமயிராமே.

சிவ நீர் ஆகிய அமுரி கீழே உள்ள குறியை நெருக்கிப் பிழியும். அதனால் அது உடலில் நீடித்து நிற்கும். இதை விட நல்ல மருந்து வேறு ஒன்றும் இல்லை. மக்கள் இதன் நுட்பத்தை கண்டு கொண்டு அமுரியைத் தலையில் பாயச் செய்தால் வெளுத்த மயிர் மீண்டும் கறுக்கும் விந்தையினைக் காணலாம்.

#848. பருவத்தே பருக வேண்டும்

கரையரு கே நின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீங்கி நுகர வல்லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே.

மதி இல்லாத மாந்தர்கள் சிறு நீர் குழாய்க்கு அருகில் உள்ள சுக்கிலத்தையும் கழித்து விட வேண்டும் என்பர். தகுந்த பருவத்தில் அமுரி நீரை அருந்த அறிந்து கொண்டவர்களுக்கு வெளுத்த மயிர் மீண்டும் கருக்கும். சுருங்கிய தோல் மாற்றம் அடையும். இங்ஙனம் அமுரி நீரை அமைத்துக் கொள்பவர்களுக்குக் கூற்றுவனால் அச்சம் இல்லை.

#849. உடல் மென்மையாகும்

அளக நன்னுத லாயோர் அதிசயம்
களவு காயங் கலந்தவிந் நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே.

அழகிய கூந்தலை உடையவளே! ஒரு விந்தை உள்ளது. மறைவாக இந்த அமுரி நீர் உடலில் மேலே சென்று சிரத்தை அடையும் போது மிளகு, நெல்லி, மஞ்சள், வேப்பம் பருப்பு இவற்றைக் கலந்து நன்றாக அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் உடல் மேன்மை அடையும். தலை மயிர் கறுப்பாக ஆகும்.

#850. அமுரியின் பெருமை

வீர மருந்துஎன்றும் விண்ணோர் மருந்து என்றும்
நாரி மருந்து என்றும் அந்தி அருள் செய்தான்,
ஆதி மருந்து என்று அறிவார் அகலிடம்
சோதி மருந்து இது, சொல்ல ஒண்ணாதே.

வீரியத்தால் உண்டாகும் மருந்து இது. எனவே வீர மருந்து என்பர். இது வான் வெளியில் ஒளி மயமாக ஆவதால் விண்ணவர் மருந்து என்பர். பெண் சம்பத்தால் அடையப்படுவதால் இது நாரீ மருந்து எனப்படும். இதுவே முதன்மையான மேலான மருந்து என்று யோகியர் அறிவர். பேரொளி மயமான இதைச் சாமானியமான மனிதர்களுக்குச் சொல்லக் கூடாது.

மூன்றாம் தந்திரம் -
21. சந்திர யோகம்

சந்திரனை உடலில் விளங்கச் செய்யும் யோகம் இது.

#851. உடலில் உள்ள சந்திரனின் நிலை

எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்தும் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்து காயமே.

சந்திர கலை பருவுடலில் இருந்து நுண்ணுடலுக்கு ஏறும். பிறகு நுண்ணுடலிலிருந்து பருவுடலுக்கு இறங்கும். இரண்டு பக்ஷங்களில் வளர்பிறையில் வளர்ந்தும், தேய் பிறையில் தேய்ந்தும் வரும் நிலவைப் போலவே இதுவும் அமையும். சந்திர கலையால் நுண்ணுடல் எத்தனை தூய்மை அடைகின்றதோ அதற்கேற்ப பருவுடலும் தூய்மை அடையும்.

#852. யோகியர் நன்கு அறிவர்.

ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈர் எட்டொடு ஆறு இரண்டு ஈர்ஐந்துள்
ஏகின்ற அக்கலை எல்லாம் இடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே.

உடலுள் விளங்கும் சந்திரனுக்கும் பதினாறு கலைகள் உண்டு. உடலுள் விளங்கும் சூரியனுக்குப் பன்னிரண்டு கலைகளும், அக்கினிக்குப் பத்துக் கலைகளும் உள்ளன. இவை அனைத்தும் நடுநாடியாகிய சுழுமுனை வழியே இயங்குபவை என்பதை யோகியர் நன்கு அறிவர்.

#853. கதிரவனும், தீயும், நிறைமதியும்!

ஆறுஆறு அது ஆம்கலை ஆதித்தன், சந்திரன்
நாறா நலங்கினார், ஞாலம் கவர்கொளப்
பேறுஆம்; கலை முற்றும் பெறுங்கால் ஈரெட்டும்
மாறாக் கதிர்கொள்ளும், மற்றங்கி கூடவே.

பன்னிரண்டு கலைகளை உடைய சூரியனைச் சந்திரனுடன் சேர்க்க அறிந்து கொண்டவர் உலகம் விரும்பும் பேறுகளை அடைவர். பதினாறு கலைகள் கொண்ட சந்திரனில் சூரியன் மட்டுமின்றி அக்கினியும் ஒடுங்கும்.

#854. பிரணவம் அறுபத்து நான்கு கலைகளாகப் பரிமளிக்கும்.

பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினொடு ஆறும் உயர்கலை பால் மதி,
ஒத்தநல் அங்கியது எட்டு எட்டு உயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்து கொள்வீரே.

கதிரவனின் கலைகள் பன்னிரண்டு. பால் போன்ற நிலவின் கலைகள் பதினாறு. இவற்றுடன் அக்கினியின் கலைகள் இணையும் போது அறுபத்து நான்கு கலைகளாகப் பரிமளிக்கும். இதை நன்கு ஆராய்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். தலைக்கு மேல் கலைகள் அறுபத்து நான்காக விளங்கும். அவையே பிரணவத்தின் கலைகள் ஆகும்.

#855. தொண்ணூற்றாறு கலைகள்

எட்டெட்டு அனலின் கலையாகும் ஈராறுள்
சுட்டப் படுங்கதி ரோனுக்கும் சூழ்கலை
கட்டப்படும் ஈர் எட்டா மதிக்கலை
ஓட்ட படாஇவை யொன்றொடொன்றாகவே.

அக்கினிக் கலைகள் அறுபது நான்கு. சூரியனின் கலைகள் பன்னிரண்டு. சந்திரனின் கலைகள் பதினாறு. இவை கட்டப் படும் மூலாதாரத்தின் நாள்மீனுக்கு நான்கு கலைகள். மொத்தம் தொண்ணூற்றாறு கலைகள் கூடித் தொழில் புரியும்.

#856. மூலாதாரத்தில் தொண்ணூற்றாறு கலைகள் உள்ளன

எட்டெட்டும், ஈராறும், ஈரெட்டும், தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றும் கலை என்ப
கட்டப்படும் தாரகைக் கதிர் நால்உள;
கட்டிட்ட தொண்ணூற்றோடு ஆறும் கலாதியே.

அக்கினி, கதிரவன், சந்திரனின் இவற்றின் கலைகள் முறையே அறுபத்து நான்கு, பன்னிரண்டு, பதினாறு என்பர். இவை சேர்ந்துள்ள மூலாதாரத்தில் உள்ள நட்சத்திரத்துக்கு உள்ளன நான்கு கலைகள். இவ்வாறு மூலாதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலைகள் மொத்தம் தொண்ணூற்றாறு ஆகும்.

#857. யோகியரின் சிவத்தியானம்

எல்லாக் கலையும் இடை, பிங்கலை, நடுச்
சொல்லா நடுநாடி ஊடே, தொடர் மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணி நிற்பாரே.

சந்திரன், சூரியன், அக்கினி இவற்றின் எல்லாக் கலைகளும் இடைகலை, பிங்கலை நடுநாடி இவற்றின் வழியே தொடர்பு உடையவை. இயல்பாகக் கீழே நோக்கும் இவற்றைத் தடுத்து, அவற்றை பார்வையை மாற்றிச் சிரசின் மேல் உள்ள சஹஸ்ரதளத்தில் பொருந்தி இருக்கும்படிச் செய்வர் சிவ யோகியர். அதனால் அவர்கள் எப்போதும் சிவத் தியானத்திலேயே பொருந்தி இருப்பர்.

#858. சந்திர மண்டலம் காணும்

அங்கியில் சின்ன கதிர் இரண்டு ஆட்டத்துத்
தங்கிய தாரகை ஆகும் சசி பானு
வாங்கிய தாரகை ஆகும் பரை ஒளி
தங்கு நவச் சக்ரம் ஆகும் தரணிக்கே.

மூலாதாரத்தில் உள்ள அக்கினி, இடைகலை, பிங்கலைகளின் அசைவினால் ஒளிரும். சந்திரக் கலைகள், சூரியக் கலைகள் நாதத்தை எழுப்பிக் கொண்டு உடலில் மேலே செல்லும். அப்போது அவை நாள்மீன்களைப் போலத் ஒளியுடன் தோன்றுவதால் அங்கே சந்திர மண்டலம் போலக் காட்சி அளிக்கும்.

#859. பிரணவம் என்னும் பெருநெறி

தரணி சலம் கனல் கால் தக்க வானம்
அரணிய பானு, அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவம் ஆகும் பெருநெறிதானே.

நிலம், நீர், ஒளி, வளி, வெளி, சூரியன், சந்திரன், அக்கினி, சீவ ஒளி என்னும் ஒன்பதும் பிரணவம் என்னும் பெருநெறியாகும்.

#860. வளர்பிறை, தேய்பிறை வேறுபாடு.

தாரகை மின்னும் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னா சசிவளர் பக்கத்துத்
தாரகைப் பூவில் சகலத்து யோனிகள்
தாரகை தாரகை தான் ஆம் சொரூபமே.

தேய் பிறையில் சந்திரன் கீழ் முகமாகப் போகும். அப்போது மூலாதாரத்தில் ஒளி பிரகாசமாகும். வளர் பிறையில் சந்திரன் மேல் முகமாகப் போகும் போது மூலாதாரம் பிரகாசிக்காது. மூலாதாரத்தில் உள்ள ஒளியில் எல்லா யோனிகளும் இருக்கின்றனன. சீவனின் வடிவம் மூலாதாரச் சக்கரத்துக்குக் காரணமான ஒளியைப் பொறுத்து அமையும்.

தேய்பிறையில் மூலாதாரத்தின் சக்தி அதிகரிக்கும்
வளர்பிறையில் மூலாதாரத்தின் சக்தி குறையும்.
அப்போது சீவனின் மனம் மேல் நிலையை நாடும்.

#861. வளர்பிறை அறிந்தால் திருவடி சேரலாம்

முற்பதி னைஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதி னைன்சிற் பெருத்துச் சிறித்திடும்
அப்பதி னைஞ்சு மறிய வல்லார்க்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே.

சந்திரனின் கலைகள் முதல் பதினைந்து நாட்கள் சிறிது சிறிதாக வளர்ந்து முழுமை அடையும். அடுத்த பதினைந்து நாட்கள் சிறிது சிறிதாகத் தேய்ந்து குறைந்து விடும். 'அ ' என்ற எழுத்தால் குறிக்கப்படும் நிலவின் வளர்பிறையை நன்கு அறிந்தவர் செப்பரிய பெருமை வாய்ந்த சிவன் அடிகளைச் சேரவும்.

#862. பிரணவம் ஒளிரும்

அங்கி எழுப்பி அருங்கதிர் ஊட்டத்துத்
தங்கும் சசியால்; தாமம் ஐந்தும் ஐந்து ஆகிப்
பொங்கிய தாரகையாம் புலன் போக்கு அற,
திங்கள், கதிர், அங்கி சேர்கின்ற யோகமே.

மூலாதாரத்தில் உள்ள தீயை எழுப்ப வேண்டும். அது கதிரவன் மண்டலத்தைத் தாண்டி சந்திர மண்டலத்தை அடையும் போது 'அ ' , 'உ' , 'ம' நாதம், விந்து என்ற ஐந்தும் கலந்த பிரணவம் விளங்கும். ஐம் புலன்கள் வழியே செல்லாமல் சந்திர, சூரிய, அக்கினி மண்டலங்கள் இணைகின்ற நல்ல யோகம் வாய்க்கும்.

#863. பிறப்பு இறப்பு என்னும் சக்கரம்

ஒன்றிய ஈரெண் கலையும் உடல்உற,
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வார் திகைப்பு ஒழியாரே.

உடலில் சந்திரனின் பதினாறு கலைகளும் பொருந்தியுள்ளதை அறிகிலார் தாழ்ந்த அறிவு கொண்டவர். இந்த உண்மையை அறியாமல் அவர்கள் வாழ்வதால் கூற்றுவன் சினம் கொண்டு அவர்களுடைய ஆவியைப் பறிக்கின்றான். அவர்களும் அவன் விருப்பபடியே பிறப்பு இறப்பு என்னும் சுழலில் வீழ்கின்றனர். மயக்கத்திலிருந்து நீங்க மாட்டார்.

#864. பிரணவம் விளங்கும்

அங்கி மதிகூட ஆகுங் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகும் மதியொளி
அங்கி சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே.

சந்திரன் ஆண் குறியில் பொருந்தி உள்ளான். கதிரவன் மணி பூரகத்தில் பொருந்தி உள்ளான். மூலாக்கினியுடன் சந்திரன் பிரமரந்திரத்தை நோக்கி மேலே செல்லும் போது கதிரவனின் ஒளியும் கிடைக்கும். இந்த மூன்று ஒளிகளும் பிரமரந்திரத்தில் ஒன்றானால் அப்போது பிரணவம் விளங்கும். அந்த நிலையே எல்லாமும் ஆகும்.

#865. நிலைத்த இன்பம் கிட்டும்

ஈராறு பெண்கலை யெண்ணிரெண் டாண்கலை
போராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தொன்றும் நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்த மானந்த மானதே.

பன்னிரண்டு கலைகள் கொண்ட கதிரவன் ஒரு பெண். பதினாறு கலைகள் கொண்ட சந்திரன் ஒரு ஆண். இவர்கள் இருவரையும் வெளியில் செல்லாதவாறு பிடித்து நிறுத்தி முகத்துக்கு முன்னே தோன்றும் ஒளியில் கலக்கும்படிச் செய்தால் நிலைத்த திருவடி இன்பம் கிடைக்கும்.

#866. ஆயிரம் ஆண்டுகள் வாழலாம்

காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வளத்திட்டுப்
பேணியே இவ்வாறு பிழையாமல் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.

சிறந்த சந்திரனின் நோக்கு இடக் கண் நோக்கு. கதிரவனின் நோக்கு வலக் கண் நோக்கு. குரு அருளிய வழியில் இடக் கண் நோக்கினை வலக்கண் நோக்குடன் பொருத்தி அது முறை தவறாமல் பாதுகாத்து வந்தால் ஆயிரம் ஆண்டுகளுக்கு உடல் கெடாது வாழலாம்.

#867. ஞானம் தோன்றும் முன் நாதம் கேட்கும்!

பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளியாய் நிற்கும்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே.

சீவக் கலை உடலில் மேலே மேலே செல்லும் போது கதிரவனும் சந்திரனும் இரு பக்கங்களிலும் தீபஒளி போலத் தோன்றுவார்கள். சீவக் கலை ஸஹஸ்ரதளத்தை அடையும் போது தலையில் ஒரு நாதம் ஒலிக்கும். அந்த நாதத்தில் சிவ பெருமான் திகழ்வான். கதிரவனின் உதயத்துக்கு முன்பு சங்கொலி மக்களைத் தட்டி எழுப்புவது போன்றே ஞான சூரியன் உதிக்கும் முன்பு தலையில் இந்த நாதம் ஒலிக்கும்.

#868. ஈசன் வெளிப்படுவான்!

கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிர் அவன் உள்ளே பொழி மழை நிற்கும்
அதிரவன் அண்டப்புறம் சென்று அடர்ப்ப,
எதிரவன் ஈசன் இடம் அது தானே.

காலத்தைக் கணிப்பதற்குச் சூரிய சந்திரர்களின் இயக்கம் பயன்படும். உடலில் இவர்கள் இருவரும் ஒன்றாகப் பொருந்தியுள்ள பிரணவ நிலையில் சிவ சக்தியர் விளங்குவர். அவர்கள் இருவரும் ஒன்று சேரும் போது அங்கே அமுதம் விளையும். நாதத்துடன் கூடி உடலில் உள்ள அண்டத்தின் எல்லையான துவாதசாந்தத்துக்குச் செல்லும் போது ஈசன் அங்கே வெளிப்பட்டு நமக்கு எதிர்ப்படுவான்.

#869. சிவ ஒளியும் சீவ ஒளியும்

உந்திக் கமலத்து உதித்து எழும் சோதியை
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிகிலர்
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே.

மணிபூரகம் கதிரவனுக்கு உரியது. சுவாதிஷ்டானம் சந்திரனுக்கு உரியது. மணிபூரகத்தில் வெளிப்படும் ஒளியை அடைந்து பிரணவத்தின் உண்மையை அறிந்து கொள்ளலாம். ஆனால் அதை யாரும் அவ்வாறு அறிவதில்லை. பிரணவத்தை அடைந்து, பிரணவத்தை அறிந்து கொண்டவர்களுக்குச் சிவ ஒளி சீவ ஒளிக்கு முன்பு தோன்றும்.

(சிவ ஒளியே சீவ ஒளிக்கு ஆதாரம் ஆவதால் அவை முறையே தந்தையாகவும் மகனாகவும் குறிப்பிடப் பட்டுள்ளன.)

#870. ரசவாதம் போலச் சிவம் வெளிப்படும்

ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லீரேல்
வேதியன் அங்கே வெளிப்படும் தானே.

அறிவிலிகள் உண்மையத் தாமே உணர் வல்லார் அல்லர். பிறர் அந்த உண்மைகளை எடுத்துச் சொன்னாலும் அவற்றை அறியார் அறிவிலார். திங்களின் முதல் கலையாகிய மேதாவை இறுதிக் கலையாகிய உன்மனியுடன் சேர்க்க அறிந்து கொண்டால் ரசவாதம் நிகழ்வது போல அங்கே சிவம் வெளிப்படும்.

#871. சிவன் நீங்கிச் செல்ல மாட்டான்

பாம்பு மதியைத் தினல் உறும் பாம்பது
தாங்கு கதிரையும் சோதித்து அனல் உறும்;
பாம்பும் மதியும் பகை தீர்ந்து உடன் கொளீ இ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே.

குண்டலினி சக்தியாகிய பாம்பு திங்கட் கலையை வளர விடாது. குண்டலினி சுவாதிஷ்டானத்தில் பொருந்தி அங்கே விந்து நீக்கத்தைச் செய்து கொண்டிருக்கும். குண்டலினி மணிபூரகத்தில் உள்ள கதிரவனை அசைத்துக் அனல் வீசும்படிச் செய்யும். குண்டலினி மதியின் மீது கொண்ட பகைமையை நீங்கச் செய்ய வேண்டும். குண்டலியும் மதியும் பகைமை இன்றி சிரசின் மேல் இணைந்து இருந்தால் அப்போது அருள் கொண்ட சிவபெறுமான் அந்த யோகியை விட்டு ஒரு நாளும் அகன்று செல்ல மாட்டான்.

விளக்கம்

சிவனை தியானிப்பதால் குண்டலினி சக்தி உடலின் கீழேருந்து மேலே செல்லும். அதனால் திங்கட் கலை நன்கு வளரும். அதனால் வெப்பம் மிகுந்த கதிரவனும் தன் வெப்பத்தைத் தராமல் இருப்பான். மனம் சிவனிடம் பொருந்தி இருக்கும் போது குண்டலினிப் பாம்பு, கதிரவன், மதி என்ற மூன்றும் தலையில் நிலை பெறும். அவை தீங்கு செய்யும் ஆற்றலை இழந்து விடும்.

#872. விழித்திருக்க வேண்டும்

அயின்றது வீழ்வு அளவும் துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழிதில் துயின்று
நயம் தரு பூரணை உள்ள நடத்தி
வியன் தரு பூரணை மேவும் சசியே.

குண்டலினியுடன் மேலே சென்ற திங்கள் சிரசின் மீது நிற்கும் போது அதை உறங்காமல் கவனிக்கும். அதன் பின் கீழே இறங்கும் திங்கள், இறங்கிய போது உறங்கியும் நன்மையைத் தரும். ஒளியை மனத்தில் பொருந்தி இருக்கச் செய்தால் அப்போது முழுமையாகத் திங்கள் யோகியினிடம் பொருந்தும்.

#873. திங்கள் இறங்கியதும் யோகி உறங்கலாம்

சசி உதிக்கும் அளவும் துயில் இன்றி,
சசி உதித்தானேல் தனது ஊண் அருந்திச்
சசிசரிக் கின்ற அளவு துயிலாமல்
சசிசரிப் பின்கட்டன் கண் துயில் கொண்டதே.

திங்கள் தலையில் தோன்றும் அளவும் உறங்காமல் ஒரு யோகி தியானம் செய்ய வேண்டும். காலையில் எழுந்ததும் யோகி தியானம் செய்ய வேண்டும். தலையில் திங்கள் தோன்றிய பிறகே உணவை உட்கொள்ள வேண்டும். சந்திரன் தலையில் சஞ்சரிக்கும் வரையில் யோகி உறங்காமல் இருக்க வேண்டும். சந்திரன் கீழே இறங்கிய பின்பு யோகி உறங்கலாம்.

#874. தன்னொளி பெற்று விளங்குவர்.

ஊழி பிரியாது இருக்கின்ற யோகிகள்
நாழிகை ஆக நமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வர் உலகினில்
தாழவல் லார்இச் சசிவன்ன ராமே.

ஊழிக்காலம் வரையில் பிரியாதிருப்பர் யோகியர். இவர்கள் நாழிகையைக் கொண்டு காலனின் காலத்தையே அளந்து விடுவர். ஐந்தொழில்களை ஆற்றும் ஊழி முதல்வனான சதாசிவனின் நிலையைப் பெறுவர். ஆணவம் என்பதே சிறிதும் இல்லாமல், சிவனை ஆதாரமாகக் கொண்டு, அமுத மயமான கதிர் ஒளியுடன், தண்ணொளியாகிய தன்னொளி பெற்று இவர்கள் திகழ்வார்கள்.

#875. அமுதத்தைப் பருகுவர்.

தண்மதி பானுச்சிச் சரி பூமியே சென்று,
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு,
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்த பின்
தண்மதி வீழ்வள வில்கணம் இன்றே.

குளிர்ந்த திங்களும், கதிரவனும் உச்சி வழியில் சென்று தலையில் ஸஹஸ்ரதளத்தை அடைந்தால், யோகி மண்ணுலகத்தோர் மதிக்கும் வண்ணம் முக்காலங்களையும் உணர முடியும். முழுத் திங்களையும் காண முடியும். அப்போது அதிலிருந்து விளையும் குறைவில்லாத அமுதம்.

#876. யோகியர் அறிவர்.

வளர்கின்ற ஆதித்தன் தன் கலை ஆறும்
தளர்கின்ற சந்திரன் தன் கலை ஆறும்
மலர்ந்து ஏழு பன்னிரண்டு அங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை ஆர் அறிவாரே.

கதிரவனின் ஆறு கலைகள் மேடம், ரிடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி ராசிகளில் வளரும், சந்திரனின் ஆறு கலைகள் அகரம். உகரம், மகரம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதினி குறையும். மூச்சு தொண்டைக்குகே கீழே எட்டு விரற்கடை ஓடுவதையும் தொண்டைக்கு மேலேயும் குறையாமல் நான்கு விரற்கடை ஓடுவதையும் அறிய வல்லவர் யார்?

#877. திங்கட் கலை பூரணமாகும்

ஆம் முயிர்த்தேய் மதி நாளே எனல் விந்து
போம் வழி; எங்கும் போகாது யோகிக்குக்
காமுற இன்மையின்; கட்டுண்ணும் மூலத்தில்
ஓம் மதியத்துள் விட்டு, உரை உணர்வாலே.

விந்து கழியும் வழியே உயிர் தேயும் வழியாகும். யோகியருக்கு காமத் தொடர்பு இராது. அதனால் விந்து நீக்கமும் இராது. யோகியின் விந்து மூலாதாரத்தில் கட்டுப் பட்டு விடும். யோகி தன் உணர்வை பிரணவம் விளங்கும் மதி மண்டலத்தில் செலுத்த வேண்டும். அப்போது திங்கட் கலை பூரணம் அடையும்.

#878. பௌர்ணமி நாள் போலாகும்

வேறுஉறச் செங்கதிர் மெய்க்கலை ஆறொடும்
சூறுஉற நான்கும் தொடர்ந்து அற வேநிற்கும்
ஈறு இல் இனன் கலை ஈரைந் தொடேமதித்
தாறுள், கலியுள் அகல் உவா ஆமே.

சிரசின் வலப் பக்கத்தில் மேடராசி முதல் கன்னி ராசி வரை விளங்கும் கதிரவனின் கலைகள் ஆறு. இவற்றுடன் மூலாதாரத்தில் உள்ள அக்கினிக் கலைகள் நான்கும் கலந்தே விளங்கும். கதிரவன், அக்கினியின் பத்துக் கலைகளுடன் திங்கள் விளங்கும் துலா ராசி முதல் மீன ராசி வரை உள்ள ஆறு கலைகளும் அறிவில் பொருந்தும் போது அந்தத் திங்கள் பௌர்ணமி நாலின் முழு நிலவாக விளங்கும்.

#879. நுண்ணுடல் பருவுடல் ஒக்க நிற்க வேண்டும்

உணர்விந்து சோணி உறவினன் வீசும்
புணர்விந்து வீசும் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் உவை ஒக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே.

உணர்வுகளால் ஆன விந்து சுரோணிதத்துடன் உறவு கொண்டால் கதிரவன் மிகுந்த ஒளி வீசுவான். கதிரவனின் ஆற்றல் குறைந்து இருந்தால் புணர்ச்சியில் வெளிப்படும் விந்து தலையின் மீது ஒளியாக விளங்கும். யோகியின் நுண்ணுடல், பருவுடல் ஒளிமயமான இந்த உணர்வு இவை மூன்றும் ஒத்து நின்றால் அவை மூன்றுமே அழியா.

#880. ஐம்புலன் கட்டுண்ணும்

விடாத மனம் பவனத்தொடு மேவி
நடாவு சிவசங்கின் நாதம் கொளுவிக்
கடா விடா ஐம்புலனும் கட்டுண்ணும்; வீடு
படாதன இன்பம் பருகார் அமுதே.

வெளியே செல்லாமல் கட்டுப் படுத்தப்பட்ட மனம் காற்றுடன் சென்று இடப் பக்க மூளையில் பொருந்தி விடும். யாவற்றுக்கும் காரணமான சிவபெருமானின் சங்கொலியைக் கேட்டு ஐம் புலன்களும் தம் ஆசைகளைத் துறந்து நிற்கும். அங்கனம் அவை பிரணவத்தால் கட்டப் படும் போதே ஒரு யோகி இன்பமயமான அமுதத்தை அருந்த முடியும். அன்றேல் முடியாது.

#881. அழிவே இல்லை

அமுதப் புனல் வரும் ஆற்றங் கரைமேல்
குமிழிக் குள்சுடர் ஐந்தையும் கூட்டிச்
சமையத் தண்டு ஓட்டித் தரிக்க வல்லார்க்கு
நமன் இல்லை, நற்கலை, நாள் இல்லை தானே.

சந்திர மண்டலத்தின் ஒளி வெள்ளம் பிடரிக் கண்ணிருந்து பாயும். ஸஹஸ்ரதளத்தில் குமிழ் போல உயர்ந்து நிற்கும் அதன் கரணிகையில் சிவம், சக்தி, நாதம், விந்து, சீவன் என்ற ஐந்தையும் ஒன்று படுத்த வேண்டும். மூலாதாரத் தீயைச் சுழுமுனையில் செலுத்த வேண்டும். இதைச் செய்ய வல்லவருக்கு என்றும் அழிவே இல்லை.

#882. மூச்சின் இயக்கம்

உண்ணீர் அமுதம் உறும் ஊறலைத் திறந்து
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர் சமாதி யமர்ந்து தீரா நலங்
கண் ஆட்றோடே சென்று கால் வழி மாறுமே.

அமுதம் என்னும் அனுபவிக்கக் கூடிய ஊரலைத் திறக்க வேண்டும். பிரபஞ்சத்தின் கலப்பினால் மாற்றம் அடையாது விளங்கும் கதிரவன் சந்திரன் பொருந்திய ஸஹஸ்ர தளத்தை அடைய வேண்டும். அங்கே தெளிந்த நீரினுள் இருப்பது போன்ற ஒரு உணர்வு நிலவும். அங்கே சமாதியில் நிலைக்க வேண்டும். முடிவில்லாத இன்பத்தை விளைவிக்கும் சிவன் உணர்த்தும் வழியில் இருந்து கொண்டு மூச்சின் இயக்கத்தை மாற்ற முடியும்.

#883. இன்பம் பொங்கும் எங்கும்

மாறு மதியும தித்திரு மாறின்றித்
தாறு படா மற்றண் டோடே தலைப் படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்குமே.

கீழ் நோக்குதல் இல்லாத சந்திர கலையை என்றும் மாறுபடாமல் போற்றுங்கள். சுழுமுனை வழியே ஸஹஸ்ரதளத்தை அடைந்தால் உடல் அழியாது. செய்யும் யோகம் கைக் கூடும். எங்குமின்பம் பொங்கும்.

இத்துடன் மூன்றாம் தந்திரம் முற்றுப் பெற்றது.

நான்காம் தந்திரம்

நான்காம் தந்திரம் -
1. அசபை

உச்சரிக்கப் படாமல் பிரணவத்துடன் சேர்ந்து இயங்கும் மந்திரம் அசபை. பிரணவம் என்பதும் இதுவேயாகும். மந்திரம் என்பதும் இதுவேயாகும். இது ஓம் என்னும் ஓரெழுத்துச் சொல்லாகும். மனத்திலேயே உணரத் தகுந்தது பிரணவம். அனைத்து மந்திரங்களுக்கும் ஆதாரமாக நிற்பது.

#884. பிரணவத்தைப் போற்றுவீர்

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின்றேன்சிந்தை நாயகன் சேவடி;
சாற்றுகின் றேன் அறையோ சிவயோ கத்தை;
ஏற்றுகின் றேன்நம் பிரான்ஓர் எழுத்தே.

நான் போற்றுகின்றேன் புகழ்ந்து பேசப்படும் ஞானத்தைப் பற்றி. தெளிவடைகின்றேன் மனத்தில் உலகத்தின் நாயகன் சிவன் திருவடிகளே நமக்குத் துணையாகும் என்று. அந்தச் சேவடிகளை அடையும் சிவ யோகநெறியைக் கூறுகின்றேன். அந்த சிவபெருமானுடைய ஓரெழுத்து மந்திரமான பிரணவத்தை நான் ஓதுகின்றேன்.

#885. யாவும் பிரணவமே!

ஓரெழுத்தாலே உலகு எங்கும் தான் ஆகி,
ஈரெழுத்தாலே இசைந்து அங்கு இருவர் ஆய்,
மூஎழுத்தாலே முளைக்கின்ற ஜோதியை
மா எழுத்தாலே மயக்கம் உற்றதே.

ஓம் என்ற ஓரெழுத்தில் 'அ' என்பது முதல் பகுதி. இது சிவன் உலகம் எங்கும் பரவிப் பல உயிர்களாக இருப்பதைக் குறிக்கும். 'உ' என்பது இரண்டாம் பகுதி. இது சீவனின் உடலினுள் சிவசக்தியர் பரவியுள்ளதைக் குறிக்கும். மூன்றாம் பகுதியாகிய 'ம்' என்பது மாயையைக் குறிக்கும். இதுவே ஒளிரும் சிவனை சீவனிடமிருந்து மறைத்து அதற்கு மயக்கத்தைத் தருவது.

விளக்கம்:
அ = சிவம், உ = சக்தி, ம் = மாயை எனலாம்.

மற்றொரு விளக்கம்:
அகரம் = விழிப்பு நிலை = சாக்கிரம்
உகரம் = சொப்பன நிலை = கனவு நிலை

மகரம் = சுழுத்தி நிலை= மயக்கமான நித்திரை நிலை

#866. வலப்பக்கம் அம்பலம் ஆகும்.

தேவ ருறைகின்ற சிற்றம் பலமென்றும்
தேவ ருறைகின்ற சிதம்பர மென்றும்
தேவ ருறைகின்ற திருவம் பலமென்றும்
தேவ ருறைகின்ற தென்பொது வாமே.

சிரசில் வலது புருவத்துக்கு மேல் உள்ள வலப் பக்கத்தைத் தேவர்கள் உறையும் சிற்றம்பலம் என்றும், வானவர் உறையும் சிதம்பரம் என்றும், விண்ணவர் உறையும் அம்பலம் என்றும் கூறுவார்கள். சிற்றம்பலம் என்பது சிதாகாய ஒளியுடைய மண்டலம் ஆகும். சிதம்பரம் என்பது அறிவு விளங்குகின்ற ஆகாயம் ஆகும். திருவம்பலம் என்பது ஒரு அழகிய அம்பலம் ஆகும். சீவனின் உடலில் இதுவே சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் ஆகும்.

#887. கூத்தம்பலம்

ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயம் ஆகும் அத்தாண்டவம்
ஆமே சங்காரத்து அருந்தாண்ட வங்களே.

பொன்னம்பலத்தில் அற்புதத் தாண்டவமும், ஆனந்தத் தாண்டவமும் நிகழும். அனவரதத் தாண்டவமும் அங்கேயே நடக்கும். பிரளயத் தாண்டவமும் அங்கேயே நடக்கும். சங்காரத் தாண்டவமும் அங்கேயே நடக்கும்.

அற்புதத் தாண்டவம் = உயிர்களின் படைப்பை நிகழ்த்தும் செயல்.
ஆனந்தத் தாண்டவம் = உயிர்களுக்கு இன்பம் அளிக்கும் செயல்.
அனவரதத் தாண்டவம் = உயிர்களின் இயக்கத்துக்குக் காரணமான செயல்
பிரளய தாண்டவம் = உயிர்களுக்கு உறக்கத்தைத் தந்து ஓய்வைத் தரும் செயல்.
சங்காரத் தாண்டவம் = உயிர்களின் பக்குவத்துக்கு ஏற்பத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் செயல்.

#888. பொன்னம்பலக் கூத்து

தாண்டவம் ஆன தனிஎழுத்து ஓர் எழுத்து;
தாண்டவம் ஆனது அனுக்கிரகத் தொழில்;
தாண்டவக் கூத்து தனி நின்ற தற்பரம்;
தாண்டவக் கூத்து தமனியம் தானே.

பிரணவம் என்னும் ஒப்பற்ற ஓரெழுத்தே திருக்கூத்து ஆகும். அருள் புரிவதற்கென்றே நிகழும் இயல்புடையது அந்தக் கூத்து. எல்லாவற்றுக்கும் மேலான சிவ தற்பர நிலையே அந்தக் கூத்து. இது பொன்னம்பலத்தில் நிகழும் அற்புதக் கூத்து.

#889. யாவற்றுக்கும் ஆதாரம் இதுவே

தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்கும்
தானே அகார உகாரம தாய்நிற்கும்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந்தானே.

இதுவே ஒப்பில்லாத பேரொளிப் பிழம்பு ஆகும். எக்காலத்துக்கும் அழிவில்லாத ஒன்றினைப் போல எங்கும் நிறைந்திருக்கும் உண்மைப் பொருள் இதுவே ஆகும். அகார, உகாரமான பிரணவத்தின் உறுப்புக்கள் இதுவே ஆகும். தன் ஒளியைத் தந்து அனைத்துத் தத்துவங்களை இயக்கும். ஆயினும் இதற்கு வேறொரு ஆதாரம் தேவை இல்லை, தனக்குத் தானே ஆதாரமாக நிற்கும்.

#890. வேறு வேறு நிலைகள்

தராதல மூலைக்குத் தற்பரம் மாபரன்
தராதல வெப்பு 'நமசிவாய' வாம்
தராதலம் சொல்லின் தான் 'வா சிய' ஆகும்.
தராதலம் யோகம் தயாவாசி ஆமே.

மூலாதாரத்தில் எழுந்தருளிய சிவன் அக்கினி மண்டலத்தில் 'நமசிவாய' என்ற பெயரால் விளங்குவான். மேலே திகழ்கும் ஒளி மண்டலத்தில் இதுவே "வாசிய' என்று மாறிவிடும். அதற்கும் மேலே உள்ள சஹாஸ்ரதல்தில் இது 'யவாசி' என்று மாறிவிடும்.

விளக்கம்:

'ந', 'ம' என்ற எழுத்துக்கள் குறிப்பது நான்முகன், திருமால் இவர்களைத் தலைவர்களாக் கொண்ட ஸ்வாதிஷ்டன, மணிபூரகச் சக்கரங்கள்.
சக்தியையும், சிவத்தையும் உணர்த்தும் எழுத்துக்கள் 'வா', 'சி'.
ஆன்மாவை உணர்த்தும் எழுத்து 'ய'.

#891. பேரின்பம் வாய்க்கும்

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்;
ஆமே பரங்கள் அறியா இடம் என;
ஆமே திருக்கூத்து அடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்தம் ஆமே.

நான்முகனும், திருமாலும் சீவனின் அறிவு, உணர்வு, பக்குவம் இவற்றைப் பொறுத்துப் பாசத்தையும், பாச நீக்கத்தையும் அமைக்கின்றனர். 'ய' என்னும் ஆன்மா சிவத்தை அடையும் போது தத்துவங்களை உணராது. கூத்தை நடத்தியவன் கூத்தை ஒழித்துவிட்டு உயர்ந்த அறிவு பெற்றுவிடுவான். அதனால் சித்தி கிடைக்கும். அதனால் பேரின்பம் விளையும். சிற்பரமாகிய சிவத்தில் கலக்கும் உயிரும் பரமாகிவிடும்.

#892. சிவாய என்றிருப்பதுவே ஆனந்தம்

ஆனந்தம் மூன்றும், அறிவு இரண்டு, ஒன்று ஆகும்;
ஆனந்தம் 'சிவாய' ; அறிபவர் பலர் இல்லை;
ஆனந்தமோடும் அறிய வல்லார்கட்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படுந் தானே.

'அ', 'உ', 'ம' என்ற மூன்றும் ஆனந்தம் ஆகும். விந்து நாதம் இவையிரண்டும் அறிவு ஆகும். இவை அனைத்தும் ஒன்றாக இணைந்து பிரணவம் என்ற ஒன்றாகும். 'சி 'என்னும் சிவனை 'நம' என்பதுடன் பொருத்தாமல் 'வாய' என்று சக்தியால் ஆன்மாவிடம் பொருத்தினால் சிவானந்தம் உண்டாகும். இந்த உண்மையைப் பலரும் அறிவதில்லை! இந்த உண்மையை அறிந்து கொண்டவர்களுக்குச் சிவன் ஆனந்தக் கூத்தன் என்ற உண்மை விளங்கும். அவன் நிகழ்த்தும் ஆந்தக் கூத்தும் புலப்படும்.

#893. பயன் விந்து நாதமே ஆகும்!

படுவது இரண்டும் பலகலை வல்லார்;
படுவது ஓங்காரம் பஞ்சாக் கரங்கள்;
படுவது சங்காரத்தாண்டவப் பத்தி;
படுவது கோணம் பரந்திடும் வாறே.

பல நூல்களைக் கற்று தேர்ந்தவர்கள் விந்து, நாதம் இவற்றைப் பெறுவர். பிரணவம் ஆகிய ஓங்காரம் அல்லது திரு ஐந்தெழுத்தாகிய 'நமசிவாய' இவற்றைக் கொண்டும் நாதம், விந்து விளங்கும் குருமண்டலத்தை அடைய முடியும். இதை விளக்குவது ஈசனின் சங்காரத் தாண்டவம் ஆகும். அது சஹஸ்ர தலத்தில் விந்துத் திரி கோணம் என்ற பெயரில் விரிந்து பரந்து உள்ளது.

விளக்கம்

பிரணவ யோகத்தால் நாதம் விந்து விளங்குவது குருமண்டலதில். பஞ்சாக்ஷர யோகத்தால் விளங்குவது 'சிவாய' என்னும் சக்தி மண்டலம். செபம் அற்ற போது இந்தச் சக்தி மண்டலம் விந்து நாதமாக ஆகிவிடும். இரண்டு யோகங்களுக்கும் பயன் ஒன்றே. அதுவே விந்து நாதத்தைப் பெறுவது.

#894. பொதுச் சபையும் சிவமும்

வாறே சதாசிவ மாறுஇலா ஆகமம்;
வாறே சிவகதி வண்துறை; புன்னையும்;
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே பொது ஆகும் மன்றின் அமலமே.

சதாசிவனால் அளிக்கப்பட்ட ஆகமம் சிவ நெறிக்கு மாறாத வேத நெறியாகும். வளமை மிகுந்த இவற்றை அடைந்தால் பாச நீக்கம் ஏற்படும். இதுவே சைவ ஆகமங்கள் கூறும் உண்மை அறிவு. இதுவே எல்லோருமே சென்று அடையும் பொதுச் சபையாகும். இதுவே குற்றமற்ற சிவன் விளங்கும் இடம் ஆகும்.

#895. சதாசிவம் என்னும் ஆதாரம்

அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம் ;
அமலம் திரோதாயி ஆகும் ஆனந்தமாம்;
அமலம் சொல் ஆணவம் மாயை காமியம்
அமலம் திருக் கூத்து அங்கு ஆம் இடம் தானே.

அமலனான சிவனே பதி, பசு, பாசங்களுக்கு ஆதாரம் ஆனவன். அந்தச் சிவமே மாயையின் மறைப்புக்கும், சீவனின் ஆனந்தத்துக்கும் ஆதாரம். ஆணவம் கன்மம், மாயை இவற்றுக்கும் அந்த அமலன் சிவனே ஆதாரம். அந்தச் சிவன் விலங்குகின்ற இடம் சங்காரத் தாண்டவம் நிகழும் இடமாகும்.

#896. சிவன் ஒப்பற்றவன்

தானே தனக்குத் தலைவனு மாய்நிற்கும்
தானே தனக்குத் தன்மைலை யாய்நிற்கும்
தானே தனக்குத் தன்மய மாய்நிற்கும்
தானே தனக்குத் தலைவனு மாமே.

சிவசக்தியாக ஒன்றி விளங்குவதால், தானே தன் உடலின் ஒரு பாதியில் உள்ள சக்திக்குத் தலைவன் ஆவான். தான் விளங்கும் மலையாகவும் தானே விளங்குகின்றான் சிவபெருமான். பிறவற்றுடன் கலந்து விளங்கும் போதும் தன்னுடைய இயல்பில் எந்த மாறுபாடும் இல்லாமல் குறையின்றி விளங்குகின்றான். தன்னை ஏவும் தலைவன் என வேறு யாருமில்லாததால் தனக்குத் தானே தலைவன் ஆக விளங்குகின்றான்.

#897. தானே அனைத்துக்கும் தலைவன்

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனை
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே.

நிர்மலமான சிவனே உயிரினத்துக்குத் தலைவன் ஆவான். அந்த சிவனே அந்த உயிர்களைத் தாங்கும் தலைவனாகவும் உள்ளான். சஹஸ்ரதளத்தில் விளங்கிச் சீவன்களுக்கு ஞானத்தைத் தரும் கதிரவனும், மதியும் அவனது இரு திருவடிகள் ஆகும்.

#898. எழுத்துக்கள் எல்லாம் சிவனே!

இணை ஆர்திருவடி எட்டு எழுத்து ஆகும்;
இணை ஆர்கழல் இணை ஈரைஞ்சு அதுஆகும்;
இணை ஆர்கழல் இணை ஐம்பத்தொன்று ஆகும்;
இணை ஆர்கழல் இணை ஏழாயிரமே.

'எட்டு' என்னும் எண்ணைக் குறிக்கின்ற 'அ ' சிவபெருமானின் திருவடிகள் ஆகும்.

(ஈரைஞ்சு) பத்து என்ற எண்ணைக் குறிக்கும் 'ய' சிவன் ஆன்மாவில் விளங்குவது ஆகும்.

ஐம்பத்தொன்று எழுத்துக்களிலும் விளங்குபவன் சிவபெருமானே ஆவான்.

சிவபெருமான் எழுத்து வடிவில் உள்ள ஒலியுலகமாக எங்கெங்கும் விளங்குகின்றான்.

ஏழு வகை சக்திகள் அல்லது ஆற்றல்கள் இவைகள்:

ஏழு சக்தியர்..............தொழில்கள்..................தலைவியர்

1. கலைமகள்............. படைத்தல்.....................வாணி
2. அலைமகள்............ காத்தல்........................திருமகள்
3. உலைமகள்............ அழித்தல் ....உமை
4. சலமகள்............... மறைத்தல்.....................மகேசை
5. மலைமகள்............. அருளல்.......................மனோன்மணி
6. நிலைமகள்............. கலப்பித்தல்....................விந்து
7. தலைமகள்............. களிப்பித்தல்...................சக்தி

#899. மந்திரங்களின் வகைகள்

ஏழா யிரமாய், இருபதாய், முப்பதாய்,
ஏழா யிரத்தும் எழுகோடி தான் ஆகி,
ஏழா யிரத்து உயிர் எண் இலா மந்திரம்
ஏழாய், இரண்டாய் இருக்கின்ற வாறே.

ஏழாயிரம் என்று கூறப்படும் மந்திரங்கள் இருபது, முப்பது என்ற எண்ணிக்கையில் அமைந்த எழுத்துக்களால் ஆனவை. இந்த ஏழாயிரம் மந்திரங்களுக்கும் முடிவு ஏழு வகைப்படும். எண்ணிலடங்காத பிரிவுகளை உடைய ஏழாயிரம் மந்திரங்களில், இந்த ஏழு முடிவுகளைக்கொண்ட மந்திரங்கள் யாவும் விந்து, நாதங்களில் முடிவடையும்.

மந்திரங்களின் ஏழு முடிவுகள் இவையாகும்:
1). நம:, 2). சுவதா, 3). சுவாஹா, 4). வஷடு, 5). வௌஷடு, 6). ஹூம், 7). ஹூம்பட்

#900. மந்திரமே சிவன் வடிவம்

இருக்கின்ற மந்திர மேழா யிரமாம்
இருக்கின்ற மந்திர மெத்திற மில்லை
இருக்கின்ற மந்திரம் சிவன்றிரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ் வண்ணந் தானே.

அசபை என்னும் பிரணவ மந்திரமே ஏழாயிரம் மந்திரங்கள் ஆகும். எத்திறம் பெறவில்லை அசபை மந்திரம்? அசபை மந்திரமே சிவபெருமானின் திருமேனியாகும். அசபை மந்திரமே யாவுமாக உள்ளது.

#901. மந்திரங்களின் இயல்பு

தானே தனக்குத் தகுநட்டந் தானாகும்
தானே யகார விகாரம தாய் நிற்கும்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே யுலகில் தனிநடந் தானே.

பிறர் ஒருவரின் தூண்டுதல் இல்லாமலேயே, சிவன் தானே தகுந்த கூத்தை நடத்துவான். தானே தன்னிடமிருந்து சக்தியை பிரித்துப் பிறப்பிப்பான். தானே மஹாமாயையால் நடைபெறும் ஐந்தொழில்களுக்கும் ஏற்ற நிகரற்ற கூத்தைக் கைக் கொள்ளுவான்.

902. கூத்தின் பயன்

நடம் இரண்டு ஒன்றே நளினம் அது ஆகும்
நடம் இரண்டு ஒன்றே நமன் செய்யும் கூத்து
நடம் இரண்டு ஒன்றே நகை செயா மந்திரம்
நடம் சிவலிங்கம் நலம் செம்பு பொன்னே.

'நடம்' என்னும் கூத்து இரண்டு வகைப்படும். அவை (1) . சங்காரக் கூத்து; (2) அற்புதக் கூத்து.

சங்காரக் கூத்து என்பது சிவன் உயிர்களின் பக்குவத்துக்கு ஏற்பத் தன்னிடம் அவற்றை இணைத்துக் கொள்வது ஆகும். ஆதலால் அது நம்மை தருவது ஆகும். மற்றொரு கூத்தாகிய அற்புதக் கூத்து உயிர்களைப் பிறவியில் செலுத்துவது. இதுவே யமனுக்கு வேலை தரும் கூத்து. சங்காரக் கூத்து நன்மை பயப்பதால் அதுவே பழிப்புக்கு ஆளாகாத பிரணவ மந்திரம். சென்பு பொன்னாக மாறுவதைப் போல இந்தக் கூத்தினால் உடல் சிவமயமாக ஆகிவிடும்.

#903. மலம் நீங்கும்

செம்பு பொன்ஆகும் சிவாய நம என்னில்;
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்;
செம்பு பொன் ஆகும் ஸ்ரீயும் கிரீயும் எனச்;
செம்பு பொன் ஆன திருவம்பலமே.

'சிவாயநம' என்னும் திரு ஐந்தெழுத்தை ஓதினால் உயிரின் மலங்கள் நீங்கிவிடும். செம்பு பொன்னாக மாறுவதைப் போல உடலின் குற்றங்கள் நீங்கித் தூய்மை அடையும். அறிவு மயமான சிற்பரம் உடலில் பொருந்தும். ஸ்ரீம், ஹ்ரீம் என்று உச்சரிக்கும் போதும் உடல் தூய்மை அடையும். செம்பு பொன்னாகும் போது அதில் திருவம்பலம் வந்து பொருந்தினால் சீவனின் மலங்கள் நீங்கப் பெற்று அது சிவமாகத் திகழும்.

#904. திருவம்பலச் சக்கரம்

திருவம்பலம் ஆகச் சீர்ச் சக்கரத்தைத்
திரு அம் பலம் ஆக ஈராறு கீறித்
திரு வம்பு அலமாக இருபத்தைஞ்சு ஆக்கி
திருவம்பலம் ஆகச் செபிக்கின்ற வாறே.

திருவம்பலச் சக்கரத்தை அமைக்க ஆறு கோடுகள் குறுக் கும் நெடுக்குமாக வரைந்து அதை இருபத்திஐந்து அரைகளாக ஆகவேண்டும். அவற்றில் திரு ஐந்தெழுத்தை முறையாக அமைத்து உச்சரிக்கவேண்டும்.

#905. இன்பம் தரும்

வாறே சிவாயநம, நமச்சி வாயநம
வாறே செபிக்கில், வரும் பேர் பிறப்பு இல்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வரும்செம்பு பொன்னே.

“சிவாயநம சிவாயநம” என்று உறுதியாக செபித்தால் பிறப்பு உண்டாகாது. வளர்ச்சியைத் தரும் திருக் கூத்தினைக் காண இயலும். சீவனின் ஆன்மா மலம் நீங்கிப் பொன்னைப் போல விளங்கும்.

#906. செபிக்கும் முறை

பொன்ஆன மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்ஆன மந்திரம் பொறிகிஞ்சு கத்து ஆகும்;
பொன்ஆன மந்திரம் புகை உண்டு, பூரிக்கின்
பொன்ஆகும் வல்லோர்க்கு உடம்பு பொற்பாதமே.

பொன்போன்ற திரு ஐந்தெழுத்து மந்திரத்தை வாய் விட்டு உரக்கச் சொல்லக் கூடாது. இந்த பொன் போன்ற மந்திரத்தை ஓசை இல்லாமல் உதட்டளவில் மட்டும் உச்சரிக்க வேண்டும். இந்த மந்திரத்தைத் தியானிக்கும் போது சிரசின் தென்கிழக்கு (அக்கினியின்) திசையில் இருந்து வட கிழக்கு (ஈசான) திசைக்கு உணர்வு பாய்ந்து பெருகும். இங்ஙனம் பெருகிப் பாய்ந்தால் உடல் பொன்னாக மாறும். ஈசனின் திருவடிப் பேறும் கிடைக்கும்.

#907. சிறந்த மாணவர் அமைவர்

பொற்பதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பதத் தாணையே செம்பு பொன்னாயிடும்
பொற்பதம் காணத் திருமேனி யாயிடும்
பொற்பத நன்னடஞ் சிந்தனை செல்லுமே.

தி ருவைந்தெழுத்தைத் தியானித்தால் திருவடிகளின் காட்சியைப் பெறலாம். சிறந்த ஆசானாக உருவாகலாம். சிறந்த பல மாணவர்கள் வந்து அமைவர். அவர்களின் குற்றங்களும் சிவன் அருளால் அகன்று செல்லும். பொன்னடிகளைக் காணும் தகுதி வந்து சேரும். அதனால் எப்போதும் திருவடிக் கூத்தினைச் சிந்தித்த வண்ணம் இருங்கள்.

#908. திருக்கூத்தின் பயன்கள்

சொல்லு மொரு கூட்டில் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயத்துடனே வரும்
சொல்லிலும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடும்
சொல்லும் திருக்கூத்தின் சூக்குமம் தானே.

திருவைந்தெழுத்துத் தியானத்தால் மற்றொரு உடலில் புகுந்து சுகமுறலாம். அழகியர் இத்தகையவரை நயந்து அணுகுவர். இவர் சொல்லலும் சொல்லால் பிறரின் பந்த பாசம் நீங்கி விடும். இவை அனைத்தும் திருக் கூத்தினால் விளையும் பயன்கள் ஆகும்.

#909. தியானத்தின் பயன்

சூக்குமம் எண்ணா யிரம்செபித் தாலும், மேல்
சூக்கும மான வழியிடைக் காணலாம்;
சூக்கும மான வினையைக் கெடுக்கலாம்
சூக்குமமான சிவனது ஆனந்தமே.

மௌனமாக தியானிக்கப்படும் திருவைந்தெழுத்தைத் ஆயிரம் முறை ஜபித்தாலும், நுண்மையான சஹஸ்ர தளத்தைக் காண இயலும். சஞ்சித வினைகள், ஆகாமிய வினைகள் அனைத்தையுமே அழித்து விடலாம்.

#910. பீஜ எழுத்துக்கள்

ஆனந்தம் ஆனந்தம் ஒன்று என்று அறிந்தி இட
ஆனந்தம் ஆனந்தம் ஆ ஈ ஊ ஏ ஓம் என்ற ஐந்து இடம்;
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சுமது ஆயிடும்
ஆனந்தம் அம்-ஹ்ரீம்-ஹம்-க்ஷம்-ஆம் ஆகுமே.

சீவன் சஹஸ்ரதளத்தை அடைந்து, சிவனுடன் ஒன்றிவிடும் நிலைக் கூறுவது ஆனந்தம் தரும். ஆ, ஈ, ஊ, ஏ , ஓம் என்னும் படிச் சிவனின் தன்மையும் சீவனின் தன்மையும் பிரிக்க முடியாதபடி ஒன்றாக இருக்கின்ற இடத்தைச் சென்று அடைவது அதைவிடவும் ஆனந்தம் தரும். இவை அனைத்தும் ஒன்றாகும் நாதாந்தத்தை அடைவது அதை விடவும் ஆனந்தம் தரும். விந்து எழுத்துகளாகிய அம், ஹ்ரீம், ஹம், க்ஷம் , ஆம் என்ற ஐந்தும் சிறந்த ஆனந்தத்தைத் தரும்.

#911. இறைவனது இருவகை நடனங்கள்

மேனி இரண்டும் விலங்காமல் மேற்கொள்ள
மேனி இரண்டும் மிக்கரா, அவிகாரி ஆம்
மேனி இரண்டும் ஊ ஆ ஈ ஏ ஓ என்று
மேனி இரண்டும் ஈ ஓ ஊ ஆ ஏ கூத்ததே.

மேலை மந்திரத்தில் உயிரெழுத்துக்களாகவும், திருவைந்தெழுத்தாகவும் சொல்லப்பட்ட இருவகை மந்திரங்களும் சிவனது திருமேனிகளாய் நிற்றற்கு உரியனவாம். அவற்றைப் பிழை யின்றி ஓதுதலைச் செய்தால், சிவனது திருமேனி திரிபின்றி அமையும். இனி அவ்விருவகை மந்திரங்களையும் இருவேறு வகையாக மாற்றி உச்சரிக்க, இறைவனது இருவகை நடனங்களும் அமைவனவாம்.

#912. ஒளி பொருந்தும் விதம்

கூத்தே சிவாய நமநம சிவாயிடும்
கூத்தே ஈ ஊ ஆ ஏ ஓம் சிவாயநம வாயிடும்
கூத்தே ஈ ஊ ஆ ஏ ஓம் சிவாயநம ஆயிடும்
கூத்தே இ ஊ ஏ ஓம் நமசிவாய கோளொன்றுமாறே

மேற்கூறிய இருவகை நடனங்களுள் ஞான நடனம், `சிவாயநம` என்பதனா லேயும் அமையும். அம் மந்திரம் இவ்வாறு தனியாக உச்சரிக்கப் படுதலேயன்றி ஈம், ஊம், ஆம், ஏம், ஓம் என்னும் வித்தெழுத்துக்களுள் ஒன்றேனும் பலவேனும் கூட்டியும் உச்சரிக்கப்படலாம். இனி, மேற்கூறிய அவ்வெழுத்துக்கள் நெடிலாய் இல்லாமல் குறிலாய் நிற்கவும் கொண்டு உச்சரித்தற்கு உரியன. `சிவாய நம` என்னும் சூக்கும பஞ்சாக்கரமே நகாரம் முதலாய தூல பஞ்சாக்கரமாய் நிற்குமாதலின் அது ஊன நடனத்திற்கு உரியதாய் மேற்கூறியவாறே வித்துக்களைக் கூட்டாதும், கூட்டியும் உச்சரிக்கப் படும்.

#913. ஈசன் ஆடினால் இயங்கும் உலகு!

ஒன்றில் இரண்டு ஆட, ஒன்றொன்று உடன் ஆட
ஒன்றினில் மூன்று ஆட, ஓரேழும் ஒத்து ஆட
ஒன்றினில் ஆட, ஓர் ஒன்பதும் உடன் ஆட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே.

வான் ஒன்றாக விளங்கும். காற்று இரண்டாக விளங்கும். தீ மூன்றாக விளங்கும். இந்த மூன்றுமே ஈசனின் கூத்தினால் இயங்கும். அப்போது வானில் இந்த மூன்றின் ஒளியும் விளங்கும். பஞ்ச பூதங்களின் அணுக்களுடன், விந்து அணுக்களும், நாத அணுக்களும் சேர, இவை ஏழும் இந்த மூன்றின் ஒளியில் ஆடும். சிவன் ஒருவனாக ஆடுவான்.

சிவன், சக்தி, நாதம், விந்து, சாதாக்கியம் , மகேசுரம், உருத்திரன், திருமால், நான்முகன் என்ற ஒன்பது தத்துவங்களும் ஆடும்படிச் சிவன் சிற்றம்பலத்தின் சிவந்த ஒளியில் நடனம் ஆடுவான். சிவன் இயங்கினால் உலகு முழுவதும் இயங்கும் என்பது கருத்து.

நான்காம் தந்திரம் -
2. திருவம்பலச் சக்கரம்

திருவம்பலச் சக்கரம் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகளை வரைந்து அந்தக் கட்டங்களில் எழுத்துக்களை எழுதி வழிபடுவதற்கு உரியது. சிதாகாசத்தில் ஆனந்த நடனமாடும் சிவன் சக்தியுடன் மந்திர வடிவாக இருப்பதை விளக்கும் சக்கரம் இது.

#914. அம்பலச் சக்கரம் அமைப்பது

இருந்த இவ்வட்டங்கள் ஈராறு ரேகை;
இருந்த இரேகை மேல் ஈராறு இருத்தி,
இருந்த மனைகளும் ஈராறு பத்து ஒன்று
இருந்த மனை ஒன்றில் எய்துவன் தானே.

இந்தச் சக்கரம் வரைவதற்கு பன்னிரண்டு கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக வரைய வேண்டும். இதில் 121 அறைகள் அமைத்திருக்கும். நடுவில் உள்ள அறையில் சிவன் இருப்பான்.

#915. சிவம் பொருந்துமிடம்

தான் ஒன்றி வாழ் இடம் தன் எழுத்தே ஆகும்;
தான் ஒன்றும் அந் நான்கும் தன் பேர் எழுத்து ஆகும்;
தான் ஒன்றும் நாற்கோணம் தன் ஐந்தெழுத்து ஆகும்;
தான் ஒன்றிலே ஒன்றும் அவ்வரன் தானே.

சிவம் வீற்றிருக்கும் இடம் 'சி' என்ற எழுத்து இருக்குமிடம். 'வ', 'ய', 'ந', 'ம' என்ற நான்கு எழுத்துக்கள் அவன் திருப் பெயரை உணர்த்துவன. நாற்கோணத்தில் சூழ்ந்து இருப்பதது சிவனின் திருவைந்தெழுத்து. நடுவில் உள்ள அறையில் 'சி' அமைந்திருக்கும். அதைச் சுற்றி உள்ள சதுரக் கட்டங்களில் முறையே 'வ', 'ய', 'ந' , 'ம' விளங்கும். நான்கு மூலைகளிலும், நான்கு திசைகளிலும் 'சி' என்ற எழுத்து அமையும்.

#916. பிறவியை அழிக்கும் "அரகர" தியானம்

அரகர என்ன அரியது ஒன்றுஇல்லை;
அரகர என்ன அறிகிலர் மாந்தர்;
அரகர என்ன அமரரும் ஆவர்;
அரகர என்ன அறும் பிறப்பு அன்றே.

'அரகர' என்று தியானிப்பவர்களுக்குச் செய்வதற்கு அரியதென்று எச்செயலும் இராது. எதையுமே எளிதாகச் செய்ய முடியும். இந்தப் பெயருக்கு அத்துணை சிறப்பு இருந்த போதிலும் அதை ஓதிப் பயன் அடைவதை மக்கள் அறிந்திருக்க வில்லை. 'அரகர' தியனம் ஒளிமயமான உடலைத் தரும். 'அரகர' என்று தியானித்தல் வினைகள் அற்றுவிடும். அதனால் பிறவி அழிந்து விடும்.

அரன் + கரன் = அரகரன்
அரன் = சீவனின் வினைகளை அறுப்பவன்.
கரன் = மாயையின் காரியத்தை ஒடுக்குபவன்.

#917. ஒன்பது வடிவில் சிவலிங்கம்

எட்டு நிலை உள எங்கோன் இருப்பிடம் ;
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்;
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பால்மொழிபாலே.

சிவன் வீற்றிருக்கும் எட்டு இடங்கள் அம்பலச் சக்கரத்தின் நான்கு திசைகளிலும், நான்கு கோணங்களிலும் உள்ளன. இந்த எட்டு இடங்களிலும் திருவைந்தெழுத்துப் பொருந்தும். இந்த எட்டு இடங்களுடன் மையத்தில் இருக்கும் இடத்தையும் சேர்த்தால் மொத்தம் ஒன்பது இடங்கள் சிவனின் இருப்பிடங்கள் ஆகும். சிவனுக்கு ஒன்பது வடிவங்கள் உள்ளன . இவை : நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், சக்தி, சிவன். இவ்வாறு சிவனை வழிபடும் போது, வழிபடுபவருடைய சிரசில் விந்துவின் ஒளியும் நாதத்தின் ஒளியும் பொருந்தும்.

#918. உடலில் உயிரை நிறுத்தலாம்

மட்டு அவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்ட வல்லார் உயிர் காக்க வல்லாரே.

தேன் சிந்துகின்ற சஹஸ்ர தளத்தில் சிவனும், சக்தியும் பொருந்தி இருக்கும் உண்மையைப் பலரும் அறியவில்லை . கதிரவன், மதி இவற்றின் செயல்களை மாற்றிவிட அறிந்து கொண்டவர்கள், தம் உடலில் உயிரை நிலை நிறுத்தும் வல்லமை பெறுவர்.

#919. இறைவன் இருக்குமிடம்

ஆலயம் ஆக அமர்ந்த பஞ்சாக்கரம்
ஆலயம் ஆக அமர்ந்த இத்தூலம் போய்,
ஆலயம் ஆக அறிகின்ற சூக்குமம்
ஆலயம் ஆக அமர்ந்திருந் தானே.

பஞ்சாக்ஷரம் இறைவனின் ஆலயமாக விளங்கும். சீவனின் தூல உடலும் இறைவனின் ஆலயமே. இந்த பருவுடலைக் கடந்த சூக்கும உடலிலும் சிவன் கோவில் கொண்டுள்ளான்.

#920. ஐந்தெழுத்தின் பயன்

இருந்த இவ்வட்டம், இரு மூன்று இரேகை
இருந்த அதனுள் இரேகை ஐந்தாக,
இருந்த அறைகள் இருபத்தைஞ்சு ஆக,
இருந்த அறை ஒன்றில் எய்தும் அகாரமே.

இந்தச் சக்கரம் ஆறு கோடுகளை உடையது. அதில் கட்டங்களையும் ஐந்து ஆக்கினால், அறைகள் (ஐந்து X ஐந்து) இருபத்து ஐந்து ஆகும். அதில் நடுக் கட்டத்தில் சிவனைக் குறிக்கும் ‘அ ‘ சென்று பொருந்தும்.

921. நுண்ணிய சிவாயலாம் அமைக்கலாம்

மகாரம் நடுவே; வளைந்திடும் சத்தியை
ஒகாரம் வளைத்திட்டும் பிளந்து ஏற்றி,
அகாரம் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரம் நற்காலது நாடுமே.

மண்டலமிட்ட குண்டலினி சக்தியை கீழே நோக்க விடாமல் மேலே ஏற்றிச் செல்ல வேண்டும். அகாரமும், உகாரமும் பொருந்துகின்ற இடமாகிய புருவ மத்திக்கு அதைச் செலுத்த வேண்டும். சிவன் அறிவு மயமாக விளங்கும் இடமே தலை. அவன் அக்கினி விளங்கும் இடமே இரு கண்கள். சுவாதிஷ்டனத்தில் உள்ள நகாரமும், விசுத்தியில் இருக்கும் வகாரமும் சுழுமுனை வழியே விருப்புடன் அடையப் படும்.

#922. பிரணவம்

நாடும் பிரணவம் நடு இரு பக்கமும்
பாடும் அவர்வாய் பரந்து அங்கு நின்றது
நாடும் நடுவுள் முகம் நமசிவாய
ஆடும் சிவாய புறவட்டத்து ஆயதே.

பிரணவ மந்திரத்தை புருவ மத்தியில் இரண்டு கண் பார்வையையும் பொருத்தி நோக்க வேண்டும். அப்போது அண்ணாக்கு பகுதியில் ஓர் உணர்வு தோன்றிப் பரவும் அதுவே 'நமசிவாய' என்பது ஆகும். பிறகு அந்த உணர்வே சிரசை அடைந்து தலையைச் சுற்றியுள்ள பகுதியில் 'சிவாயநம' என்று விளங்கும்.

#923. மாறி மாறி அமையும்

ஆயும் சிவாய நமமசி வாயந
ஆயும் நமசிவாய யநமசிவா
ஆயுமே வாயநமசி எனும் மந்திரம்
ஆயும் சிகாரம் தொட்டு அந்தத்து அடைவிலே

சக்கரத்தில் 'நமசிவாய' என்பது மாறி மாறி அமையும். 'சிவாயநம', 'மசிவாயந', 'நமசிவாய', 'யநமசிவா', 'வாயநமசி' என்று மந்திரம் 'சி' என்ற எழுத்தில் தொடங்கிச் 'சி' என்ற எழுத்தில் முடியும்.

#924. சக்கரத்தில் ஐம்பத்தோரு எழுத்துக்கள்

அடைவினில் ஐம்பதும் ஐயைந்து அறையின்
அடையும் அறை ஒன்றுக்கு ஈரெழுத்து ஆக்கி ,
அடையும் மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்து ஐம்பதொன்றும் அமர்ந்ததே.

'க்ஷ' என்ற எழுத்தைத் தவிர மற்ற ஐம்பது எழுத்துக்களையும், இருபத்து ஐந்து அறைகளில், அறைக்கு இரண்டாக அடைக்க வேண்டும். இறுதியில் பிரணவ வட்டமாகிய நடு அறையில் 'க்ஷ' என்ற எழுத்தை மூன்றாவதாக அமைக்க வேண்டும். இப்போது ஐம்பத்தொன்று எழுத்துக்களும் அம்பலச் சக்கரத்தில் அடங்கிவிடும்.

#925. சக்கர அமைப்பு

அமர்ந்த அரகர ஆம் புற வட்டம்
அமர்ந்த அரிகரி ஆம் அதன் உள்வட்டம்
அமர்ந்த அசபை ஆம் அதனுள் வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.

அச்சக்கரத்தின் வெளிவட்டத்தில் 'அரகர' என்பதையும், அதன் உள்வட்டத்தில் 'அரிகரி என்பதையும், அதற்கும் உள்வட்டத்தில் 'அம்சம்' என்கின்ற அசபையையும் இடவேண்டும். சக்கரத்தின் கோடுகளின் முடிவில் சூலத்தை இடவேண்டும்.

#926. சிவன் பொருந்தும் இடம்

சூலத் தலையில் தோற்றிடும் சத்தியும்
சூலத் தலையில் சூழும்ஓங் காரத்தால்
சூலத்து இடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்து
ஆலப் பதிக்கும் அடைவது வாமே.

சூலத்தின் முடிவில் சக்தியின் எழுத்தான 'ஹ்ரீம்' என்பதை எழுத வேண்டும். சூலத்தை வளைத்துச் சுற்றி 'ஓ' என்பதை எழுதவேண்டும்.சூலத்தின் இடைவெளியில் ஐந்தெழுத்தை எழுத வேண்டும். இதுவே சிவபெருமான் பொருந்துகின்ற இடம் ஆகும்.

#927. சக்கரத்தின் அமைப்பு

அதுஆம் அகார இகார உகாரம்
அதுஆம் எகார ஒகாரம் அது அஞ்சாம்;
அதுஆகும் சக்கர வட்டம் மேல் வட்டம்
பொது ஆம் இடைவெளி பொங்கு நம் பேரே.

அ, இ, உ, எ, ஒ என்பவை அந்த ஐந்து திரு எழுத்துக்கள் ஆகும். சக்கர வட்டத்தில் இடைவெளியில் இவற்றை எழுத வேண்டும். இவற்றைச் சுற்றி சிவ சிவ என்பதை ஒரு வட்டமாகச் சூழ்ந்து இருக்கும் வண்ணம் எழுத வேண்டும். சூலத்தின் இடைவெளியில் இந்த ஐந்து எழுத்துக்களை எழுதி, அவற்றைச் சுற்றி ஒரு வட்டம் அமைத்து, அதில் சிவ சிவ என்பதை அமைக்கலாம்.

#928. தரும் பெரும் சம்பத்து

பேர் பெற்றது மூல மந்திரம் பின்னது
சேர்வுற்ற சக்கர வட்டத்துக் சந்நிதியில்
நேர் பெற்று இருந்த இடம் நின்றது சக்கரம்
ஏர் பெற்று இருந்த இயல்பு இது ஆமே.

அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து குறில் உயிர் எழுத்துக்களை முதலில் அடைத்த பிறகு 'சிவ சிவ' என்னும் புகழ் பெற்ற பெயரை இடைவெளி இல்லாமல் மேல் வட்டத்தில் அமைக்க வேண்டும். இந்தச் சக்கரத்தை வழிபட்டால் அது பெரும் சம்பத்தைத் தரும்.

#929. ஐம்பூதங்களின் தானங்கள்

இயலும் இம்மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கும் நாதன்
புயலும் புனலும் பொருந்துஅங்கி மண் விண்
முயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே.

திருவம்பலச் சக்கரத்தில் நிலம், நீர், தீ, வலி, வெளி என்ற ஐம் பூதங்களுக்கும் உரிய எழுத்துக்கள் ல, வ, ரம், ய, அ என்பவை ஆகும்.

நம் உடலில் ஐம்பூதங்களின் இடம் இவை:
நிலம் ….மூலாதாரம்
நீர்……….கொப்பூழ்
தீ…………இதயம்
வளி……..கழுத்து
வெளி…..புருவ மத்தி

#930. மும்மலங்கள் நீங்கும்

ஆறெட்டு எழுத்தின் மேல் ஆறும் பதினாலும்
ஏறிட்டு அதன்மேலே விந்துவும் நாதமும்
சீறிட்டு நின்று, 'சிவாய நம' என்ன,
கூறு இட்டு மும்மலம் கூப்பிட்டுப் போமே.

(6x8=48) நாற்பத்தெட்டாவது எழுத்தாகிய 'ஸ'காரத்தை, ஆறாவது எழுத்தாகிய 'ஊ'காரத்துடனும், பதினான்காவது எழுத்தாகிய 'ஔ' காரத்துடனும் சேர்த்தால் பராசக்தியின் பீஜ அக்ஷரமாகிய 'சௌ' கிடைக்கும். இதனுடன் விந்துவும் நாதமும் பொருந்தும் வண்ணம் அமைக்க வேண்டும். அதை மேலே எழும்பும் வண்ணம் செய்து 'சிவாய நம' என்று ஜபிக்க வேண்டும் அப்படிச் செய்தால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் ஜபம் செய்பவரின் உடலை விட்டு ஓலமிட்டபடி ஓடி மறைந்து விடும்.

ஸ + ஊ = ஸூ
ஸூ + ஔ = சௌ
சௌ என்பது பராசக்தியின் பீஜ அக்ஷரம் ஆகும்.

#931. நாத ஒலி கேட்கும்

அண்ணல் இருப்பது அவள் அக்கரத்துளே;
பெண்ணின் நல்லாளும் பிரான் அக்கரத்துளே;
எண்ணி இருவர் இசைந்து அங்கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருள் அறிவார்களே.

'சௌ' என்ற பீஜாக்ஷரத்தில் சிவனும் இருப்பான், சக்தியும் இருப்பாள். சிவசக்தியர் இங்ஙனம் இணைந்து சிரசில் ஈசானத்தில் இருப்பதை அறிந்து கொண்டவர், அதைப் பின்பக்க மூளையில் நாத ஒலியாகக் கேட்பர்.

#932. சிவதாண்டவம்

அவ் இட்டு வைத்து அங்கு அர இட்டு மேல் வைத்து
இவ் இட்டு பார்க்கில் இலிங்கம் - அதாய் நிற்கும்;
மவ் இட்டு மேலே வளி உறக் கண்டபின்
தொம் இட்டு நின்ற சுடர்க்கொழுந்து ஆமே.

ஈசானிய திசையில் 'ஹர' என்று சிவாக்கினியைத் தூண்ட வேண்டும். அப்போது ஹரி என்னும் ஞானலிங்கம் விளங்கும். தொண்டையிலுள்ள விசுத்திச் சக்கரத்திலிருந்து, சுழுமுனை வழியே, பிராணவாயு தொண்டைக்கு மேலே செல்லும் போது, தொம் தொம் என்று கூத்தாடும் ஒளிவடிவான இறைவன் விளங்குவான்.

#933. சக்தியின் தலைவன் சதாசிவன்

அவ் உண்டு, சவ் உண்டு, அனைத்தும் அங்கு உள்ளது
கவ்வுண்டு நிற்கும் கருத்து அறிவார் இல்லை
கவ்வுண்டு நிற்கும் கருத்தறி வாளர்க்குச்
சவ் உண்டு சத்தி சதாசிவன் தானே.

'ஹம்சம்' என்ற அசபை மந்திரத்தில் 'ஹ' என்ற எழுத்துச் சிவனையும், 'ச' என்ற எழுத்துச் சக்தியையும் குறிக்கும். உடலில் சிவலிங்கம் அமையும் போது அதில் சிவசக்தியர் விளைவிக்கும் உலகப் பொருட்கள் யாவையும் நுண்ணியமானவைகளாக காரண வடிவில் அமைந்திருக்கும். காரண வடிவில் சூக்குமமாக இவை அமைந்துள்ளதை அறிந்தவர் எவருமில்லை. காரண வடிவாக உலகப் பொருட்கள் கலந்து அமைந்துள்ளதை கண்டு அறிய வல்லவரிடம் சக்தியின் தலைவனாகிய சதாசிவன் திகழ்வான்.

#934. ஐந்தெழுத்துக்கள்

அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத்தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத்து ஆகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந் தானே.

சிவன் ஐந்தெழுத்துக்களின் வடிவாக விளங்குகின்றான்.
பஞ்சாக்கரம் ஐந்து சொற்களின் முதல் எழுத்துக்களால் ஆனது.

இந்த ஐந்தெழுத்துக்களாலேயே சக்கரங்கள் அமைக்கப்படும்.
இந்த ஐந்தெழுத்துக்களில் அமர்ந்துள்ளவன் ஆதி பிரான் ஆன சிவன்.

#935. கூத்தபிரானைக் காணுவது எவ்வாறு?

கூத்தனைக் காணும் குறி பல பேசிடில்
கூத்தன் எழுத்தின் முதல் எழுத்து ஓதினார்
கூத்தனொடு ஒன்றியி கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணும் குறிஅது ஆமே.

கூத்த பிரானைக் காண்பதற்கு உள்ளன பல நெறிகள். அவன் பெயரின் முதல் எழுத்தாகிய 'சி' என்பதை ஓதுபவர்கள் சிவனிடமிருந்து பிரிவே இல்லாது விளங்குவர். அவனை எளிதில் காணும் நெறி இதுவே ஆகும்.

#936. சிவன் உறவினன் ஆவான்

அத்திசைக்கு உள்நின்ற அனலை எழுப்பியே
அத்திசைக்கு உள்நின்ற 'ந' எழுத்து ஓதினால்
அத்திசைக்கு உள்நின்ற அந்த மறையனை
அத்திசைக்குள் உறவு ஆக்கினன் தானே.

மூலாதாரத்தில் இருக்கும் மூலக் கனலை எழுப்ப வேண்டும். 'ந' காரத்தை நன்கு அறிந்து கொண்டு ஓதினால் மறைந்து உறையும் சிவனை நம் உறவினன் ஆக்கிக் கொள்ள முடியும். 'ந' காரம் என்பது 'நமசிவாய' என்பதைக் குறிக்கும். இந்த நாமத்தை உச்சரிக்கும் போது அது ஆதாரத் தானங்கள் கழுத்து, இதயம், உந்தி, சுவாதிஷ்டானம் இவற்றின் வழியே சென்று மூலாதாரத்தை அடையும்.

#937. குண்டலினி சக்தி

தானே யளித்திடும் தையலை நோக்கினால்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடும்
தானே யளித்த மகாரத்தை யோதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே.

மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி விட்டால் மற்ற அனைத்தும் தானே நடைபெறத் தொடங்கும். அந்த குண்டலினி சக்தியே அருளை வாரி வழங்கும். அதுவே சஹஸ்ர தளத்தின் மேல் சென்று பொருந்தும். 'ம' காரத்தை ஓதினால், அது தலையின் மீது தோன்றும் ஒளியில் சென்று பொருந்தும்.

#938. மணி போல ஒளிர்வான்

கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றனன் இந்திரன்
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டி நின்றானே.

சிரசில் மூளையின் இடப்பக்கத்தில் (தலையின் வடக்கு திசையில்) சிவபெருமான் எழுந்தருளுவான். என்றாலும் முகத்தின் முன்புறத்திலும் (இந்திரனின் திசையாகிய கிழக்கிலும்) ஒளி வீசியது. இவ்வாறு ஒளிரும் சிவபெருமான் எனக்கு அக்கினியின் நிறத்தில் ஒரு மணியைப் போலத் தோற்றம் அளித்தான்.

939. சிந்திப்பவருக்குச் சிவன் வெளிப்படுவான்

தானே எழுகுணம், தண்சுட ராய் நிற்கும்;
தானே எழுகுணம், வேதமு மாய் நிற்கும்;
தானே எழுகுணம் ஆவதும் ஓதிடின்
தானே எழுந்த மறையவன் ஆமே.

பிறரால் வேண்டப்படாத போது சிவன் குளிர்ந்த சந்திர கலையில் விளங்குவான். பிறரால் அறிவிக்கப் படாமலேயே தானே அறிவு மயமாக விளங்குவான். உண்மையில் எல்லா நற்குணங்களும் சிவனே ஆவான். அவனையே எப்போதும் சிந்திப்பவருக்கு அவன் தன்னை வெளிப்படுத்துவான்.

#940. ஐந்தெழுத்தின் வடிவம்

மறையவன் ஆக மதித்த பிறவி
மறையவன் ஆக, மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத்துள் நிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத்தாம் அது வாகுமே.

பிறவி அளிக்கப் பட்டது சிவத் தன்மைக் காண்பதற்காகவே.
சிவத்தன்மையை அடைந்தால் பிறர் எல்லோரும் மதிப்பர்.
நாத வடிவினனாகிய சிவன் ஐந்தெழுத்தில் அடங்குவான்.
நாத வடிவம் அடைந்த சீவனும் ஐந்தெழுத்து வடிவம் பெறும்.

#941. ஐந்தெழுத்தில் திருமேனி

ஆகின்ற பாதமும் அந் 'ந' ஆய் நின்றிடும்;
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்;
ஆகின்ற 'சி' இரு தோள், 'வ' ஆய்க் கண்டபின்,
ஆகின்ற அச்சுடர் அவ் இயல்பு ஆமே.

பாதத்தில் பொருந்தும் 'ந'காரம்.
நாபியுள் பொருந்தும் 'ம'காரம்.
இரு தோளில் பொருந்து 'சி'காரம்
வாயில் அமையும் 'வ'காரம்
இதுவே ஐந்தெழுத்தில் திருமேனியாகும்.

#942. பிரணவத் தியானம்

அவ் இயல்பு ஆய இரு மூன்று எழுத்தையும்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்;
'ஒ' இயல்பு ஆகா, ஒளி உற ஓங்கிடின்
'ப' இயல்பு ஆகப் பரந்து நின்றானே.

பஞ்சாக்கரத்தில் உள்ள இரண்டு எழுத்துக்கள் ' நம' . மூன்று எழுத்துக்கள் 'சிவாய'. இந்த இயலை அறிந்தவர்களிடம் சிறந்த முறையில் சிவம் என்னும் பர பொருள் விளங்கும். 'ஒ' என்ற பிரணவத்தை ஒளி பொருந்தும் படித் தியானம் செய்தால் சிவ பரம் நாத மயமாக எங்கும் பரவி நிற்கும்.

#943. ஓங்காரத் தியானம்

பரந்தது மந்திரம் பல்லுயிர்க்கு எல்லாம்
வரம் தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரம் சூழ்பகை போக
உரம் தரும் மந்திரம் 'ஓம்' என்று எழுப்பே.

'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் நாதம் உலகம் எங்கும் பரவி விரியும். உயிர்கள் விரும்புவதை எல்லாம் அந்த மந்திரம் அளிக்க வல்லது. அது ஓதுபவருடைய பகையாகிய இருட்டை நீக்கும். நன்மை தரும் இந்த மந்திரத்தை 'ஓம்' என்று எழுப்புவீர்!

#944. சீவ ஒளியில் சிவ ஒளி!

'ஓம்' என்று எழுப்பித்தன் உத்தம நந்தியை,
நாம் என்று எழுப்ப, நடு எழு தீபத்தை
ஆம் என்று எழுப்பி, அவ்வாறு அறிவார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்து இருந்தாரே.

பிரணவ யோகத்தால் உடலில் உள்ள ஒளி மண்டலத்தை எழுப்ப முடியும். அந்த ஒளி மண்டலமே சீவனின் ஒளி மண்டலம் என்று அறிந்து கொள்ள வேண்டும். நடு நாடியாகிய சுழுமுனையிலே விளங்கும் ஒளியே சிவபெருமான் என்று அறிந்தவர்கள் சீவ ஒளியில் சிவ ஒளியைக் கண்டு மகிழ்ந்து இருப்பார்கள்.

#945. திருவம்பலச் சக்கரம்

ஆகின்ற சக்கரத் துள்ளே யெழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத்தோ ரெழுத் துண்ணிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே.

திருவம்பலச் சக்கரத்தில் ஐந்து எழுத்துக்களும் ஐந்து அறைகளில் அழகுறப் பொருந்தும். உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் ஆகிய ஐம்பத்தொன்றும் அதில் பொருந்தும். இவற்றுடன் மேலான சிவபெருமானும் அதில் நன்கு பொருந்துவான்.

#946. மாறி மாறி வரும் எழுத்துக்கள்

பரம் ஆய அஞ்செழுத்து உள் நடு ஆக,
பரம் ஆய 'நமசிவ' பார்க்கில் , 'மவயநசி'
பரம் ஆய 'சியநமவ ' ஆம் பரத்து ஓதில்
பரம் ஆய 'வசிமநய' மாய் நின்றே.

'சிவாய நம' என்ற ஐந்தெழுத்துக்களில் நடுவில் உள்ளது 'ய'கரம். இந்த ஐந்தெழுத்து மந்திரத்தை கீழ்க் கண்டவாறு 'யநமசிவ' , 'மவயநசி' , 'சியநமவ, 'வசிமயந' என்று நான்கு வகைகளாக மாற்றி மாற்றி தியானிக்க வேண்டும். அப்போது தான் பொருள் நன்கு புலனாகும் . மனதில் பதியும்.

#947. ஐம்பூதங்களும் ஐந்தெழுத்தும்

நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துகள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே.

திருவைந்தெழுத்துக்கள் ஐந்து பூதங்களையும் தூண்டி இயக்கும் வல்லமை படைத்தவை. சக்கரத்தில் உள்ள எழுத்துக்கள் திருவைந்தெழுத்துக்களின் வடிவத் தை புலனாக்கும். இந்தச் சக்கரத்தில் எழுத்துக்கள் முறையாக இருந்தால் அவற்றில் சிவத்தின் வடிவமும் சிறந்து விளங்கும்.

#948. அமுதம் தருவான்

நின்றது சக்கரம் நீளும் புவி எல்லாம்
மன்றுஅது ஆய்நின்ற மாய நல் நாடனைக்
கன்றுஅது வாகக் கறந்தனன் நந்தியும்
குன்றிடை நின்றிடும் கொள்கையன் ஆமே.

சிதாகாயப் பெருவெளியில் நாத மாயமான சக்கரம் திகழும். அது உலகம் முழுவதும் பரவும் இயல்புடையது. சித் என்ற திருவம்பலத்தையே தன் இடமாகக் கொண்டு அங்கு மறைந்து நிற்பவன் சிவன். கன்று மடியில் பால் அருந்தும் போது பசு அதற்கு ஒளிக்காமல் பாலை வழங்கும். அது போல இந்தச் சக்கரத்தை பூசிப்பவருக்குச் சிவபெருமான் தன் அருளை மறுக்காமல், மறைக்காமல் வழங்குவான். அவருக்குச் சிரசில் அமுதத்தை விளைவித்து இன்பம் தருவான்.

#949. சக்கரத்தில் திருக் கூத்து

கொண்டவிச் சக்கரத் துள்ளே குணம் பல
கொண்டவிச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டவிச் சக்கரங் கூத்த னெழுத்தைந்துங்
கொண்டவிச் சக்கரத் துண்ணின்ற கூத்தே.

திருவம்பலச் சக்கரத்தின் சிறப்புகள் பலப் பல. ருத்திரன், நான்முகன், திருமால், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்து தெய்வங்கள் இதில் உள்ளனர். கூத்த பிரானின் நமசிவாய என்னும் ஐந்தெழுத்துக்கள் இதில் உள்ளன. இறைவனின் திருக் கூத்தும் இங்கேயே நடை பெறுகின்றது.

#950. விந்துவும் நாதமும் உண்டாகும்

வெளியில் இரேகை, இரேகையில் அத்தலை
சுளியில் உகாரமாம் சுற்றிய வன்னி
நெளிதரு கால் கொன்பு நேர் விந்து நாதம்
தெளியும் பிரகாரம் சிவமந் திரமே.

சிதாகாயப் பெருவெளியில் சந்திர கலை உள்ளது. அந்தப் பெருவெளியில் ஸஹஸ்ர தளம் உள்ளது. அதில் உகாரத்தால் வளைக்கப்பட்ட அக்கினிக் கலை உள்ளது. சஹஸ்ர தளத்தை அசைக்கும் உள்ள கொம்பினால் விந்து நாதம் உண்டாகும். இதை அறிந்து கொண்டு அவற்றைப் பெறும் வடிவில் சக்கரம் அமைக்கப் பட்டுள்ளது.

#951. சதாசிவன் தோன்றுவான்

அகார உகார சிகார நடுவாய்
வகார மோடாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன் சிந்தை செய்ய
ஒகார முதல்வன் உவந்து நின்றானே.

மூலாதாரத்தில் விளங்குவது குண்டலினி சக்தி. இதை மூல வாயுவினால் மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். ஆறு ஆதாரச் சக்கரங்களையும் கடந்து புருவ மத்தியை அடைய வேண்டும். புருவ மத்தியில் உள்ள சிவாக்கினியில் சிவனைத் தியானம் செய்தால் பிரணவத்தின் நாயகனாகிய சதாசிவன் விருப்பத்துடன் அங்கே தோன்றுவான்.

#952. சீவனின் குற்றங்கள் மறையும்

அற்ற விடத்தே யகாரம தாவது
உற்ற விடத்தே உறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்ற மறுத்த பொன் போலும் குளிகையே.

உடலைக் கடந்து சுழுமுனை மேலே செல்பவரிடம் ‘அ’ காரமாகிய சந்திர கலை நன்றாகப் பொலியும். உரிய பொருளை உயிர்கள் அறிய முடியாததற்குக் காரணம் அவற்றின் குற்றமாகிய இருள் ஆகும். சிதாகாயப் பெருவெளியில் இந்த இருளை மாற்றிச் சிவந்த ஒளியாகச் சிவன் தோன்றுவான். பொன்னின் மாசை நீக்கும் குளிகையைப் போலவே ஒளிரும் சிவன் உயிர்களின் குற்றங்களைப் போக்கி விடுவான்.

#953. தியானத்தின் மேன்மை

‘அ’ என்ற போதினில் ‘உ’ - எழுத்து ஆலித்தால்
உவ் வென்ற முத்தி உருகிக் கலந்திடும்
ம என்று என் உள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வணம் சொல்லுகேன் எந்தை இயற்கையே.

அகரக் கலையாகிய சந்திரன் இடக் கண்ணில் தோன்றும். உகரக் கலையாகிய சூரியன் வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கத்துக்கு மாற வேண்டும். ஈசான திசையில், இடப்பக்க மூளையில் அ , உ , ம என்ற மூன்றும் பொருந்த வேண்டும். உகரமாகிய கதிரவனின் ஒளியினால் மறைந்திருப்பது அப்போது வெளிப்படும். ‘ம’ என்று என் உள்ளே நான் வழிபடும் என் தந்தை நந்தியம் பெருமானின் பெருமையை எங்கனம் கூறுவேன்?

#954. தலை எழுத்து இனி இல்லை

நீரில் எழுத்து இவ் உலகர் அறிவது
வானில் எழுத்து ஒன்று கண்டு அறிவார் இல்லை'
யார் இவ்வெழுத்தை அறிவார் அவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் ஆமே.

உலக அறிவு நீரில் மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போன்றே நிலைத்து நிற்காது. சிதாகாசத்தில் திகழும் அந்த ஒரு எழுத்தை கண்டு அறிபவர் இல்லை. இந்த ஓரேழுத்தைக் கண்டு கொண்டு விட்டால் பிறகு அவர்களுக்குப் பிரமன் எழுதும் தலை எழுத்து என்பதே இராது. பிறவிப் பிணி நீங்கி விடும்.

#955. வீடு பேறு கிட்டும்

காலை நடுஉற, காயத்தில் அக்கரம்
மலை நடுஉற ஐம்பதும் ஆவன
வேலை நடுஉற வேதம் விளம்பிய
மூலம் நடு உற முத்தி தந்தானே.

உடலில் ஆறு ஆதாரங்களில் சிவன் ஐம்பது எழுத்துக்களாகப் பிரிந்து அமைந்துள்ளான். உயிர் மயக்கத்தை அடைந்துள்ள போது இந்த ஐம்பது எழுத்துக்களும் தெளிவாகத் தோன்றி அமையும். சுழுமுனை வழியே சிரசை அடைந்து, அங்கே மறையால் புகழப்படும் பிரணவத்தை சஹஸ்ர தளத்தின் அமைக்கும் போது ஐம்பது எழுத்துக்களும் பிரணவத்தில் சென்று அடங்கி விடும். அப்போது சிவன் வீடு பேற்றை அளிப்பான்.

#956 . சக்தியும் சிவனும் அருள்வர்

நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியும் தானும் திகழ்ந்திருந் தானே.

நாபியில் உள்ள மணிபூரகச் சக்கரத்தின் கீழே அமைந்துள்ளது சுவாதிஷ்டனச் சக்கரம். அதற்கு உரிய எழுத்து 'ந'காரம் ஆகும். அந்த எழுத்தின் சிறப்பைப் பாவிகள் அறிவதில்லை. அங்கு அமர்ந்துள்ள நான்முகனாலும் அதன் சிறப்பைச் சொல்ல இயலாது. அந்த எழுத்தில் சக்தியும் சிவனும் சிறப்புடன் அமர்ந்துள்ளனர்.

#957. அம்ச மந்திரம்

அவ்வொடு சவ்வென்ற தரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரு மறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரு மறிந்தபின்
அவ்வொடு சவ்வு மனாதியு மாமே.

அம்சம் என்பது அரனாகிய சிவன் விளங்குகின்ற மந்திரம். இந்த மந்திரத்தை எவரும் உண்மையாக அறியவில்லை. உண்மையில் இந்த மந்திரம் உடல் தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய மந்திரம் என்பதை இதை அறிந்தவர் அறிவர்.

#958. தேவையில்லை ஆரவாரம்!

மந்திரம் ஒன்றுஉள் மலரால் உதிப்பது,
உந்தியின் உள்ளே உதயம் பண்ணா நிற்கும்,
சந்தி செய்யா நிற்பர் தாம்அது அறிகிலர்,
அந்தி தொழுது போய் ஆர்த்து அகன்றார்களே.

சந்திரகலை ஒரு பிரசாத கலை. அது உடலில் உள்ள மூலாதாரத்திலிருந்து தோன்றுவது. அது மூலாதாரத்தில் உள்ள தீயிலிருந்து தோன்றுவது. உடலில் உள்ள கதிரவனையும், சந்திரனையும் சேர்த்து வழிபட அறியாமல், அந்தியிலும் சந்தியிலும் சந்தியா வந்தனம் செய்பவர்கள், கதிரவன் சந்திரன் சேரும் நேர்த்தை அறிந்திவர்கள் அல்லர். அவர்கள் வீணே ஆரவாரம் செய்பவர்கள் . உண்மையை அறிவதிலிருந்து தவறியவர்களே ஆவர்.

#959. அம்ச மந்திரமும், ஐம்பொறிகளும்!

சேவிக்கும் மந்திரம் செல்லும் திசை பெற
ஆவிக்குள் மந்திரம் ஆதாரம் ஆவன
பூவுக்குள் மந்திரம் போக்குஅற நோக்கில்
ஆவிக்குள் மந்திரம் அங்குசம் ஆமே.

அம்ச மந்திரம் உபாசனையால் உடல் முழுவதும் பரவும் ஆற்றல் படைத்தது. மூலாதாரத்தில் தொடங்கி அனைத்து ஆதாரச் சக்கரங்கள் வழியாகப் பாய்ந்து செல்ல வல்லது. இது ஒளி மயமானது. இது எங்கும் செல்லவோ எங்கிருந்தும் வரவோ தேவை இல்லை. அங்குசம் போல ஆவியில் பொருந்தி இந்த மந்திரம் ஐம்பொறிகள் என்னும் யானைகளைக் கட்டுப் படுத்தும் வலிமை பெற்றது.

#960. பிரணவம் சிறப்படையும்

அருவினில் அம்பரம் அங்கு எழும் நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி, யகார சிகார நடுவாய்
உருவிட ஊறும் உறு மந்திரமே.

பரவெளி கண்களால் காண முடியாதது. நாதம் தோன்றுவது அந்தப் பரவொளியில்! அந்த ஒலியில் தோன்றுவது ஒளியாகிய விந்து. சிகாரம் ஆகிய இரு கண் பார்வைக்கும் நடுவே யகாரம் ஆகிய ஆன்மாவை தியானிக் வேண்டும். அப்போது பிரணவம் சிறப்புற்று விளங்கும்.

புருவங்களின் மத்தியில் . இரு கண்களுக்கு நடுவில், தியானம் செய்தால் அம்ச மந்திரம் தோன்றும்.

தலையின் இடப் பக்க மூளையில் (வடகிழக்குப் பகுதியில்) அ + உ + ம + நாதம் + விந்து சேர்ந்த 'அசபை' விளங்கும்.

#961. பிரணவமே சிறந்த ஆகுதி

விந்து நாதமு மேவி யுடன் கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே.

சிரசில் வடகிழக்கில் (இடப் பக்கத்துக்கு மூளையில்) ஒளியும், ஒளியும் (நாதமும், விந்துவும்) பொருந்துமானால் பரம ஆகாயத்தில் ஒளி வீசும். அமுதம் ஊறிடும். அங்கு ஒலித்துக் கொண்டிருக்கும் பிரணவமே சிறந்த ஆகுதியாகும்.

#962. பிரணவத்தால் உயிர் விளங்கும்

ஆறெழுத் தோது மறிவா ரறிகிலர்
ஆறெழுத் தொன்றாக ஓதி யுணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்ப வல்லார்கட்கு
ஒரேழுத்தாலே யுயிர் பெறலாமே.

'ஓம் நமசிவாய' என்று ஆறு எழுத்துக்களால் ஓதுபவர்கள் ஒரே எழுத்தில் இந்த ஆறு எழுத்துக்களை தோன்றச் செய்வதை அறியவில்லை. திருவைந்தெழுத்து தியானத்தால் அந்த ஓரேழுத்தைத் தோன்றச் செய்வதையும் அறியவில்லை. பிரணவத்துடன் வேறு எழுத்துக்களைச் சேர்க்காமலேயே பிரணவ வித்தையை அறிந்து கொண்டவர்களுக்கு அந்த பிரணவமே உயிரை நன்கு விளக்கும்.

#963. அகரத்துடன் உகரத்தைச் சேர்க்க வேண்டும்

ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்து அவை ஐம்பதோடு ஒன்று என்பர்,
சோதி எழுத்தினில் ஐ இருமூன்று உள;
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே.

எழுத்துக்கள் எல்லாமே வாய் பேசும் போது பிறப்பவை. இவற்றில் அகரத்துடன் மேலும் பதினைத்து உயிர் எழுத்துக்கள் உள்ளன. மொத்த எழுத்துக்கள் ஐம்பத்தொன்று. சோதியாகிய அகரத்தில் (சந்திரகலையில்) மற்ற எழுத்துக்கள் நுட்பமாக அடங்குகின்றன. நாத எழுத்தாகிய உகாரத்தை அகாரத்துடன் சேர்த்து அறிந்து கொள்வீர்!

#964. சக்தியே எழுத்துக்கள் ஆவாள்

விந்து விலும்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலைவி பதினாறு கலையதாம்,
கந்தர ஆகரம் கால் உடம்பு ஆயினள்,
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன்று ஆயதே.

சிரசில் நாதம் எழுந்து விரிந்து பரந்து வான மண்டலத்துடன் தொடர்பை ஏற்படுத்தும். பந்தத்தைத் தரும் (குண்டலினி) சக்தி அகாரம் முதல் உன்மனி ஈறாக பதினாறு கலைகளாக விளங்குகின்றாள். அவளே கழுத்து, கை, கால் உடம்பு என்று எல்லா அங்கங்களாகவும் ஆகின்றாள். அவளே ஐம்பத்தொன்று எழுத்துக்களாகவும் ஆகின்றாள்.

#965. சிவ சொரூபம் பெறலாம்

ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும் போய் அஞ்செழுத்தாமே.

ஐம்பது எழுத்துக்களில் வேதங்கள் அமைந்துள்ளன. ஐம்பது எழுத்துக்களில் ஆகமங்கள் அமைந்துள்ளன. ஐம்பது எழுத்துக்கள் தெரிவிப்பது எது என்று அறிந்து கொண்டால், ஐம்பது எழுத்துக்கள் ஐந்தெழுத்துக்களில் அடங்கிவிடும். ஐம்பது எழுக்களையும் கடந்து, ஐந்தெழுத்துக்களையும் கடந்து, ஒரேழுத்தாகிய பிரணவத்தை அறிந்து கொள்பவர் சிவ சொரூபத்தை அடைவர்.

#966. அனைத்திலும் ஐந்தெழுத்துக்கள்

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடம் தாங்கினான்
அஞ்செழுத் தாலே யமர்ந்து நின்றானே.

பஞ்ச பூதங்களைத் தோற்றுவித்தன ஐந்தெழுத்துக்கள். அருவமான உயிர்கள் பஞ்ச பூதங்களுடன் பொருந்தி வாழப் பல யோனிகளைப் படைத்தன. பஞ்ச பூதங்களாக உலகைத் தாங்குவதும், உலகில் வாழும் உயிர்களிடையே திகழ்வதும் இந்த ஐந்தெழுத்துக்களே.

#967. சிவன் அழைப்பான்

வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கு மொருவர்க்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடு மென்னும் புரி சடையோனே.

சிவன் ஒருவராலும் படைக்கப்படாதவன் ஆவான். சோர்வின்றி அவன் திரு நாமத்தைத் தொடர்ந்து ஓதுபவரின் வினைகளும் அவற்றின் பயனாகிய துன்பங்களும் நீங்கிவிடும். நீங்கிவிட்டால் பிரணவ ஒலியில் சிவன் “என்னோடு வாருங்கள் ” என்று நம்மை அழைப்பான்.

#968. யாவுமாகி இருப்பான்

உண்ணும் மருந்தும், உலப்பு இலி காலமும்
பண்உறு கேள்வியும் பாடலு மாய் நிற்கும்
விண் நின்று அமரர் விரும்பி அடி தொழ
எண் நின்று, எழுத்து அஞ்சும் ஆகி நின்றானே.

அனுபவிக்கப் படும் பொருட்கள் அனைத்தும் சிவனே. காலத்தைக் கடந்து நித்தியமாக விளங்குபவன் சிவனே. இசையுடன் பொருந்திய வேதமாகவும் பாடலாகவும் இருப்பவன் அவனே. வானவர் வணங்க நிற்பவனும் அவனே. ஐந்தெழுத்தின் வடிவமாக இருப்பவனும் அவனே.

#969. காப்பவன் சிவனே

ஐந்தின் பெருமையே யகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகை செயப் பாலனு மாமே.

காணப்படும் விரிந்து பரந்த உலகம் ஐந்தெழுத்துக்களின் பெருமையினாலேயே. ஆலயங்கள் இருப்பதும் ஐந்தெழுத்துக்களின் பெருமையாலேயே. அறமும் நீதியும் நிலை பெறுவதும் ஐந்தெழுத்துக்களின் பெருமையினாலேயே. ஐம்பூதங்களிலும் விளங்கும் சிவபெருமான் அவற்றுக்குக் காவலனாகவும் உள்ளான்.

#970. சிவனே ஒளிரும் பிரணவச் சுடர்.

வேர் எழுத்து ஆய் விண் ஆய் அப்புறமாய் நிற்கும்
நீர் எழுத்து ஆய் நிலம் தாங்கியும் அங்கு உளன்
சீர் எழுத்து ஆய் அங்கி ஆய் உயிராம் எழுத்து
ஓர் எழுத்து ஈசனும் ஒண் சுடர் ஆமே.

எழுத்துக்களின் வேராகிய அகரமாகவும், அதற்கு மேலே விளங்கும் வானமாகவும், அதற்கும் மேலே இருக்கும் நாதமாகவும் விளங்குபவன் சிவன். மகாரத்தில் அவனே நீராக விளங்குகின்றான். நகாரத்தில் அவனே நிலமாக விளங்குகின்றான். சிகாரத்தில் சிவனே தீயாக விளங்குகின்றான். யகாரத்தில் சிவனே உயிராக விளங்குகின்றான். ஒளிரும் பிரணவச் சுடர் சிவனே ஆவான்.

#971. சக்தியே அனைத்துக்கும் ஆதாரம்

நாலாம் எழுத்து ஓசை ஞாலம் உரு அது ;
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று;
நாலாம் எழுத்தே நவில வல்லார்கட்கு
நாலாம் எழுத்து அது நன்னெறி தானே.

திருவைந்தெழுத்தில் நான்காவது எழுத்து வகரம். இது சக்தியைக் குறிக்கும். உலகே சக்தி மயம் ஏனென்றால் உலகை உருவாக்கி இயங்கச் செய்வது மாயை. மாயை சக்தியில் அடங்கும். எனவே உலகம் சக்தியில் அடங்கிவிடும். உலகம் சக்தியின் ஆணைகளின் வழி நடக்கும். குண்டலினி சக்தி சிரசை அடிந்தால் அங்கே அது பிரணவ சக்தியாக மாறிவிடும் அதுவே நமக்கு நல்ல நெறிகளைக் காட்டும்.

#972. ஞானம் கிடைக்கும்

இயைந்தனள் ஏந்திழை என் உளம் மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
பயம்தனை ஓரும் பதம் அது பற்றும்
பெயர்ந்தனன் மற்றும் பிதற்று அறுத்தேனே.

சக்தி விரும்பி வந்து என் உள்ளத்தில் பொருந்தினாள். அந்த உள்ளதையே நயந்து சக்தி அங்கேயே அமர்ந்து விட்டாள். “நான் சிவனுக்கு அடிமை!” என்ற உண்மையை ஆராய்ந்து உணருங்கள். பிரணவம் என்ற மந்திரத்தைப் பற்றிக்

கொள்ளுங்கள். உலகப் பற்றையும், மற்ற பிதற்றல்களையும் முற்றிலுமாக ஒழித்துவிட்டால் அப்போது தெளிந்த ஞானம் கிடைக்கும்.

#973. உடலில் நிலவி நிற்பாள்

ஆமத்து இனிது இருந்து அன்ன மயத்தினை
ஓமத்திலே உதம் பண்ணும் ஒருத்திதன்
நாமம் நமசிவ என்று இருப்பார்க்கு
நேமத் தலைவி நிலவி நின்றாளே.

தானியங்களில் பொருந்தி அடியார்கள் உயிர் வாழ உதவுபவள் சக்தி. வயிற்றில் உள்ள ஓம குண்டத்தில் அன்னத்தை ஆகுதி பண்ணுபவள் சக்தி. அவள் நாமமாகிய 'நமசிவ' என்று இருப்பவர்களுக்குச் செயல்களைத் தூண்டுகின்ற குண்டலினி சக்தியாக விளங்குவதும் சக்தி.

#974. உள்ளும் புறமும் உள்ளாள் சக்தி

பட்ட பரிசே பரம் அஞ்செழுத்து அதின்
இட்டம் அறிந்திட்டு இரவும் பகல்வர
நட்டம் அது ஆடும் நடுவே நிலையம் கொண்டு
அட்ட தேசு அப்பொருள் ஆகி நின்றானே.

'சிவாயநம' என்ற ஐந்தெழுத்துகள் நல்வினை உள்ளவர்களுக்கு கிடைக்கும் அரிய பரிசுப் பொருள் ஆகும். உயிர்களின் விருப்புக்கு ஏற்றவாறு இரவும் பகலும் நடனம் ஆடுபவன் சிவபெருமான். அவன் எட்டு ஒளிவீசும் பொருட்களாக எங்கும் விளங்குகின்றான். அவை நிலம் , நீர், ஒளி, வளி, வெளி, கதிரவன், சந்திரன் அக்கினி என்பவை ஆகும்.

#975. ஐந்தெழுத்துக்கள் உணர்த்துபவை

அகாரம் உயிரே; உகாரம் பரமே;
மகாரம் மலமாய் வரும் முப்பதத்தில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவமா
யகாரம் உயிர் என்று அறையலும் ஆமே.

பிரணவ என்பது ஓம் (அ + உ + ம) ஆகும். இவற்றில் 'அ' என்பது ஆன்மாவையும், 'உ'என்பது இறைவனையும், 'ம' என்பது மலம் அல்லது மாயையையும் குறிக்கும். சிவாய என்ற மூன்று எழுத்துக்களில் 'சி' என்பது சிவனையும் 'வ' என்பது சக்தியயும், 'ய' ஆன்மாவையும் குறிக்கும்.

#976. அக்கினிக் கலைக்கு உரியவன் சிவன்

நகாரம் மகாரம் சிகாரம் நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஒகாரம் முதல்கொண்டு ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

அசபை மந்திரத்தை மூச்சுக் காற்றுடன் பொருத்திவிட வேண்டும். மூச்சை உள்ளே இழுக்கும் போதும் வெளியே விடும் போதும் சிவனைத் தியானித்தபடி இருந்தால், அக்கினிக் கலைக்கு உரிய சிவன் நம் உள்ளத்தை விட்டு அகலவே மாட்டான்.

#977. ஐந்து யானைகளை அடக்க வல்ல அங்குசம்

அஞ்சு உள ஆனை அடவியில் வாழ்வன;
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குசம் ஆவன;
அஞ்சையும் கூடத்து அடக்க வல்லார் கட்கே
அஞ்சு ஆதி ஆதி அகம் புகலாமே.

உடல் என்னும் காட்டுக்குள் ஐம்பொறிகள் என்னும் ஐந்து யானைகள் வாழ்கின்றன. அந்த ஐந்து யானைகளையும் அடக்கவல்ல ஒரே அங்குசம் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம். இந்த ஐந்தெழுத்துக்களால் அந்த ஐந்து யானைகளை அடக்குபவர்கள் அந்த ஐந்துக்கும் முதன்மையான ஆன்மாவில் புக இயலும்.

(#921, #922, #950, #975 இவற்றையும் மீண்டும் ஒரு முறை படிக்கவும்)

எழுத்து..........................பொறி......................................தன்மாத்திரை
ந...மெய்...ஸ்பரிசம் = தொடு உணர்ச்சி
ம ....நாக்கு ....ரசம் = சுவை
சி ....கண் ....ரூபம் = ஒளி
வா ....மூக்கு ....கந்தம் = நாற்றம்
ய ....காது ....சப்தம் = ஓசை.

#978. புறவழிபாடு தேவையில்லை

ஐந்து கலையில் அகர ஆதி தன்னிலே
வந்த நகர ஆதி மாற்றி, மகராதி,
நந்தி யை மூலத்தே நாடிப் பரை யொடும்
சாந்தி செய்வார்கட்குச் சடங்கு இல்லை தானே.

நிவிருத்தி முதலான கலைகள் ஐந்து ஆகும். சந்திர கலைகள் பதினாறு அகும். உடலில் உள்ள முக்கிய ஆதாரச் சக்கரங்கள் குறி, கொப்பூழ், இதயம், கழுத்து, நெற்றி என்ற ஐந்து ஆகும். . மூலாதாரத்தில் உள்ள கனலைக் காமக் கழிவில் வீணாக்காமல் மேலே ஏற்றிச் சென்று, புருவங்களின் நடுவில் பொருந்துமாறு செய்து, அங்குள்ள ஒளியுடன் அதை இணைக்க அறிந்து கொண்டவர்களுக்கு, உடலால்செய்ய வேண்டிய புற வழிபாடுகள் தேவையில்லை.

#979. வீடுபேறு என்பது என்ன?

மருவும் "சிவாய" மே மன்னும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமும் ஆகும்
தெருள் வந்த சீவனார் சென்று இவற்றாலே
அருள் தங்கி அச்சிவம் ஆவது வீடே.

'சி' என்ற சிவனுடனும், 'வா' என்னும் சக்தியுடனும், 'ய' என்னும் ஆன்மா சஹஸ்ர தளத்தில் பொருந்தி இருப்பதே அரிய சிவயோகம் ஆகும். இதுவே அரிய சிவ ஞானம் ஆகும். மலங்கள், கன்மங்கள் நீங்கித் தெளிவு பெற்ற ஆன்மா, சிவ சக்தியரின் திருவருள் பெற்றுச் சிவமாகவே மாறிவிடுவதே வீடுபேறு எனப்படும்.

#980. அனைத்து மலங்களும் நீங்கி விடும்

அஞ்சு உக அஞ்செழுத்து உண்மை அறிந்தபின்
நெஞ்சகத்துள்ளே நிறையும் பராபரம்;
வஞ்சகம் இல்லை, மனைக்கும் அழிவில்லை,
தஞ்சம் இது என்று சாற்றுகின் றேனே.

மிக அதிக இன்பத்தைத் தருபவை ஐந்தெழுத்துக்கள். இவற்றின் உண்மையை அறிந்து கொண்டவரின் மனத்தையே தங்கும் இடமாகக் கொண்டு பரமும் அபரமும் ஆகிய சிவசக்தியர் அங்கு விளங்குவர். இது சற்றும் பொய் அல்ல. முற்றிலும் உண்மையே. இதனால் ஆன்மா வாழும் உடலுக்கும் அழிவில்லை. சிவனிடம் தஞ்சம் அடைவதே சிவனை அடைவதற்குச் சிறந்த வழி என்று நான் கூறுகின்றேன்.

#981. சிவ தரிசனம் கிடைக்கும்

சிவாய வொடு 'அவ்'வே தெளித்து உள்ளத்து ஓதச்
சிவாய வொடு 'அவ்'வே சிவன் உரு ஆகும்;
சிவாய வொடு 'அவ்'வும் தெளிய வல்லார்கள்
சிவாய வொடு 'அவ்'வே தெளிந்திருந்தாரே.

'அ' என்னும் சந்திர கலையை அறிந்து கொண்டு; 'சிவாய' என்று தெளிந்த மனத்துடன் ஓதினால்; அந்தச் சந்திர கலையினால் அவரும் சிவன் வடிவத்தைப்

பெறுவார். சந்திர கலையையும், 'சிவாய' என்ற மந்திரத்தின் பொருளையும், உணர்ந்து தெளிந்தவர்கள் சிவ வடிவத்துடன் அந்தச் சந்திர கலையில் திகழ்வார்கள்.

#982. சிவன் வெளிப்படுவான்

சிகார வகார யகாகர முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகாரமுடனே யொருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்து நின்றானே.

'சிவாயநம' என்பதில் நடுவில் அமைந்துள்ள 'ய'காரத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சுழுமுனையில் பிரணவத்தைக் கேட்க அறியும் போது அக்கினிக் கலையின் தலைவனான சிவன் தானே வெளிப்படுவான். அக்கினிக் கலையில் ஒளிரும் சிவன், நாதக் கலையில் விளங்கும் சிவன், அசபையில் உள்ள சிவன் அனைவரும் ஒருவனே ஆவான்.

#983. சதாசிவனும், உருத்திரனும்.

நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தின் அடங்கிய வல்வினை;
சிம்முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்
தம்முதல் ஆகும் சதாசிவம் தானே.

நீங்கள் விரும்பும் செயல்கள் நன்றாக நடைபெற 'நமசிவாய' மந்திரத்தின் உதவியை நாடுங்கள். அதன் தலைவனான உருத்திரன் வல்வினைகளையும் செய்து முடிக்கும் வல்லமை பெற்றவர். 'சி'காரத்தைத் தம் மனத்தில் உணர்ந்து தெளியும் வல்லமை உடையவர்களுக்குச் சதாசிவனே உருத்திரனைச் செயல்படச் செய்வார்.

#984. சிவத்துடன் சேர்ந்த ஆத்மா பரம் ஆகும்

நவமும் சிவமும் உயிர்பரம் ஆகும்
தவம் ஒன்றிலாதன தத்துவம் ஆகும்
சிவம் ஒன்றி ஆய்பவர் ஆதரவால் அச்
சிகம் என்ப தான்ஆம் எனும் தெளிவு உற்றதே.

நட்புடன் சிவத்தை பொருந்தும் ஆன்மாவும் பரம் ஆகிவிடும். சிவத்துடன் நட்புக் கொள்வதற்கு உயிரை வருத்துகின்ற கடினத் தவம் செய்ய வேண்டாம். சிவத்துடன் ஒன்றி விடும் அருள் பெற்றவர் அறிவர் தானும் அந்த சிவமும் ஒன்றே என்று.

#985. குரு அருள் பெற வேண்டும்!

கூடிய எட்டும் இரண்டும் குவிந்து அறி
நாடிய நந்தியை ஞானத்துளே வைத்து
ஆடிய ஐவரும் அங்கே உறவு ஆவார்கள்
தேடி அதனைத் தெளிந்து அறியீரே.

எட்டு = சந்திர கலை = இடக் கண்
இரண்டு = சூரிய கலை = வலக் கண்

சூரிய கலை, சந்திர கலைகளாகிய இரண்டு கண் பார்வைகளையும் சேர்த்துப் பார்க்கும் போது சிவன் என்னும் ஒளியை நாம் குருமண்டலத்தில் காண இயலும். சலனம் கொண்டுள்ள ஐம்புலன்களும், அவற்றை இயக்கும் நான்முகன் முதலான ஐந்து தெய்வங்களும் அந்த குரு மண்டலத்தில் இன்பம் அடைவர். எனவே நீர் குருவை நாட வேண்டும். அவர் அருளைத் தேட வேண்டும்.

#986. பத்து என்னும் எண்ணின் சிறப்பு

எட்டும் இரண்டும் இனிது அறிகின்றிலர்;
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இரு மூன்று நான்கு எனப்
பட்டது சித்தாந்த சன் மார்க்க பாதமே.

எட்டு என்பதும் இரண்டு என்பதும் இனியவை என்று மூடர்கள் அறியவில்லை. எட்டும்(சூரிய கலையும்), இரண்டும் (சந்திரகலையும்) சேர்ந்தால் கிடைக்கும் பத்து என்னும் எண். ஆறும் (ஆதாரச் சக்கரங்களும்) நான்கு (அவற்றுக்கு மேலே விளங்கும் நான்கு தத்துவங்களும்) சேர்ந்தால் கிடைப்பதும் பத்து என்னும் எண்.

#987. சக்கரமும் மந்திரமும்

எட்டு வரையின் மேல் எட்டு வரை கீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்து ஒன்றில்,
வட்டத்திலே அறை நாற்பத்தெட்டும் இட்டுச்,
சிட்ட அஞ்செழுத்தும் செபி சீக்கிரமே.

எட்டுக் கோடுகளுக்குக் குறுக்கே எட்டுக் கோடுகள் வரைந்தால் நாற்பத்தொன்பது அறைகள் கிடைக்கும். நடு அறையில் சிவனின் எழுத்தான 'சி' யை அமைத்துச் சுற்றியுள்ள மற்ற அறைகளில் மற்ற எழுத்துகளை நிரப்பி அதன் பின்னர் ஐந்தெழுத்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

#988. சிவச் சக்கரம்

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆன இம்மூவரோடு ஆற்றவர் ஆதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும்
சேனையும் மெய்சிவச்சக்கரம் தானே.

அட்ட திக்குப் பாலகர்கள்:

(1). நிருதி (2). வருணன் (3). வாயு (4). குபேரன் (5). ஈசானன் (6) இந்திரன் (7) அக்கினி (8) இயமன்

சட்டர்:

(1) அசிதாங்க பைரவர் (2) குரு பைரவர் (3). சண்ட பைரவர் (4). குரோத பைரவர் (5). உன்மத்த பைரவர் (6). கபால பைரவர் (7). பீடண பைரவர் (8). சம்மார பைரவர்

சதிரர்:

(1). நந்தி (2). மகா காளர் (3). பிருங்கி (4). விநாயகர் (5). விருஷபர் (6). ஸ்கந்தர் (7). தேவி (8). சண்டிகேஸ்வரர்

இவர்களை வெளிச் சுற்று வட்டங்களில் அமைக்க வேண்டும். உள் சுற்றுப் பதினாறு கட்டங்களில் உயிர் எழுத்துக்களை 'அ' முதல் 'அ :' வரையில் அமைக்க வேண்டும். நாத, விந்து எழுத்துக்களை அதன் உள் கட்டங்கள் எட்டில் அமைக்க வேண்டும். இதுவே சிவச் சக்கரம் அமைக்கும் முறை.

#989. இறையருளைப் பற்றிப் பேசுவேன்

பட்டன மாதவம் ஆறும் பராபரம்
விட்டனர் தம்மை, 'விகிர்தா நம' என்பர்;
எள் தனை ஆயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்று அறியேனே.

ஆறு ஆதாரங்களும் ஒன்று பட்டு அமைவது பெரிய தவம் ஆகும். இந்த உண்மையை அறிந்து கொண்டவர்கள் தற்போதத்தைக் கை விட்டு விட்டு "எல்லாம் சிவன் செயல்" என்று நம்பிச் சிவனின் அடிமையானவர்கள். எள் அளவு செயல் புரிந்தாலும் அதிலும் நான் சிவன் அருளைப் பற்றியே பேசுவேன் வேறு எதுவும் நான் அறியவில்லை.

#990. சங்கரன் என்ற பெயர் ஏன்?

சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவை முதல் ஆறு இரண்டு ஒன்றோடு ஒன்று ஆன
அவை முதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவை முதல் சங்கரன் தன் பெயர் தானே.

சிவன், உருத்திரன், நான்முகன் , திருமால் என்று மூவராக விளங்குவான். சிவன் திருச் சிற்றம்பலத்தில் உருத்திரன், நான்முகன், திருமால், மகேசுரன், சதாசிவன் என்று ஐவராகவும் விளங்குவான். ஆறு ஆதாரங்களும், மகேசுரம், சதாசிவம் என்ற இரண்டும் பொருந்திய சஹஸ்ரதளம் அந்த அவையாகும். அதில் நாதமும் விந்துவும் பொருந்தும் போது சிவன் சங்கரன் என்ற பெயர் பெறுவான்.

#991. துணைச் சக்கரம்

வித்துஆம் சகமயம் ஆக வரை கீறி
நாத்துஆர் கலைகள் பதினாறு நாட்டிப், பின்
உத்தாரம் பன்னிரண்டு ஆதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்கு பார்த்து ஓதிடே.

விந்து மயமான பதினாறு சந்திர கலைகளை பிருத்வீயிலிருந்து கணக்கிட வேண்டும். அவற்றை நிலைப் படுத்திக் கொள்ள வேண்டும். மறு பகுதியான சூரியனின் பன்னிரண்டு கலைகளை இவற்றுடன் சேர்க்க வேண்டும். பத்து அக்கினிக் கலைகளும் இவற்றுடன் பொருந்தினால் பிரமத்தை அறிந்து கொள்ளலாம். அகரமும் உகாரமும் சேரும் போது விளங்கும் ஒளியில் பிரமம் நன்கு விளங்கும்.

#992. ஆண்டவனின் அடிமை

கண்டெடுந் தேன்கம லம்மலர் உள்ளிடை
கொண்டெழுந் தேன்உடன் கூடிய காலத்துப்
பண்டழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென வாமே.

சஹஸ்ரதளத்தில் இறைவனைக் கண்டதும் நான் எழுந்தேன். சிவத்துடன் ஒன்றி நான் அகத்துள் நின்ற போது உடலை விட்டு அழியாத சிவச் சக்கரத்தின் வழியே போனேன். சிவனுக்கும் எனக்கும் இடையே உள்ள ஆண்டவன் அடிமை என்னும் உறவு கெடாதபடி அவன் திருநாமத்தை ‘சிவாய நம’ என்று ஓதிக் கொண்டே இருந்தேன்.

#993. சிவத்துடன் கலந்து நிற்கலாம்

புண்ணிய வானவர் பூமி தூவி நின்று
எண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நமவென்னு நாமத்தை
கண்ணென உன்னிக் கலந்து நின்றாரே.

நல் வினைப் பேற்றால் அண்ணலின் அருள் பெற்றவர் விண்ணுலகம் செல்வர். அங்கும் அவர்கள் சிவனைப் பூக்களால் பூசித்து செய்து அவன் மந்திரத்தை ஓதுவர். சிவனின் அடிமை என்று அவனுடன் கலந்து நிற்பர்.

#994. பிறவி நீங்கும்

ஆறெழுத் தாவது ஆறு சமயங்கள்
ஆறுக்கு நாலே யிருப்பது நாலென்பர்
சாவித் திரியில் தலைஎழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவி யற்றார்களே.

ஆறு எழுத்துக்கள் 'சிவாயநம ஓம்' என்பவை. ஆறு சமயங்கள் சிறப்பாகப் பேசுவது இருபத்து நான்கு தத்துவங்களையே ஆகும். ஒரெழுத்தாகிய பிரணவம் சீவன் உடலில் உள்ள போதே அதைச் சிவனுடன் சேர்த்து வைக்கும். அதனால் பிறவாநெறி பிரணவ யோகமே ஆகும்.

#995. நாதாந்த அறிவு

எட்டினில் எட்டு அறை இட்டு, ஓர் அறையிலே
கட்டிய ஒன்று எட்டாய்க் காணும் நிறை இட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவம் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட்கு உமாபதியான் உண்டே.

எட்டு அறைகள் வெளியிலும் ஓர் அறை உள்ளேயும் இருக்க அமைக்க வேண்டும். நடு அறையில் உள்ள சிகாரம் என்ற அக்கினி மற்ற எட்டு அறைகளிலும் உயிர் எழுத்துக்களின் வடிவில் பரவியுள்ளதாகக் கருத வேண்டும். பிரணவத்தை இதனைச் சுற்றி எழுத வேண்டும் . இந்த எல்லைக்குள் இருந்து சிவனை நினைப்பவருக்கு உமாபதி வெளிப்படுவான்.

சுரம் எனப்படுபவை

"அ" முதல் "அ:" வரையில் உள்ள பதினாறு உயிர் எழுத்துக்கள் சாந்தியாதீதக் கலையில் உள்ளன. சிகாரம் ஒளி மயமானது. இந்த ஒளியையும் சுரத்தையும் சிரசில் அறிவது சாந்தியதீதக் கலையை அறிவது ஆகும். இவ்வாறு அறிந்து கொள்வது உடலைக் கடந்த நாதாந்த அறிவாக விளங்குவது ஆகும்.

#996. சிரசில் சிவன் விளங்குவான்

நம் முதல் அவ்வொடு நாவினர் ஆகியே
அம் முதலாகிய எட்டு இடை உற்றிட்டு,
உம் முதலாக உணர்பவர் உச்சிமேல்
உம் முதல் ஆயவன் உற்று நின்றானே.

'நமசிவாய' என்னும் திருவைந்துடன் தியானம் செய்ய வேண்டும். அ முதலாகிய பதினாறு உயிர் எழுத்துக்கள் எட்டு அறைகளில் அமைவதை அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் இடையே உகாரத்தை முதலாகக் கொண்டு அதை உணரவேண்டும். அப்போது தலை உச்சியில் உமையின் தலைவன் விளங்குவான்.

#997. தம்பனம் என்னும் கட்டுதல்

நின்ற வரசம் பலகை மேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு வோலையில் சாதகம்
துன்று மேழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே.

``நேராக ஒன்றிட`` என்றது, ``சக்கரத்தின் மேல்வரிசை யாகிய வடக்கு விளிம்பில்`` என்றவாறு. `ம இட்டு` `மகாரத்தை முதலிலே பொருந்த எழுதி` என்றதாம். இம்மந்திரம் `மசி` எனத் தொடங்குவதால், தம் பனத்திற்கு உரியதாம்; ``தன் தன்`` என்றதில் இரண்டாவது `தன்`, சாரியை, `வெதுப்பில் இட` என்க. இங்குக் கூறிய சக்கர அமைப்பு வருமாறு:-

இதனுள் மேல் விளிம்பில் உள்ள மந்திர எழுத்துக்கள் ஈசான மூலை தொடங்கி நிருதி மூலையில் முடியும் ஒரு கோடு தொடங்கி முன்னோக்கி அமைந்திருத்தல் காண்க.

இது `மோகனம்` என்னும் வித்தை கூறுகின்றது. மோகனம் - மயக்குதல். பொதுமக்கள், அரசர், செல்வர், மாதர், பகைவர், தெய்வம், பேய், பூதம், விலங்கு முதலிய அனைத்துயிர்களையும் தம்மிடத்து மயங்கித் தம்வழி நிற்கப்பண்ணுதலே மோகனம் என்க.

#998. மோகனம் (மயங்க வைத்தல்)

கரண இரளிப் பலகை யமன்றிசை
மரணமிட்டெட்டின் மகார எழுதிட்டு
வரணமி லைங் காயம் பூசியடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே.

இதற்குப் பலகை கொன்றை மரப்பலகை. மந்திரம் மேற்சொல்லியவாறேயாம். மகாரத்தை முதலிற் கொண்டு நிற்றலால் இதுவே மாரண மந்திரமுமாம். (மலம்.

`மிருத்தியு` எனவும், `மூர்ச்ை\\u2970?` எனவும் சொல்லப்படுதலால், அதனைக் குறிக்கும் எழுத்தை முதலில் உடைய இம் மந்திரமே அவற்றை யெல்லாம் தருவதாம். இவ்வாறன்றி, `நசி என மாறித்தொடர்வதே மாரண மந்திரம்` என்னும் கருத்திற்கு இங்கு ஆசிரியர் நேர்ச்சி காணப்படவில்லை). மந்திரம் மேற்கூறிய வாறே யாயினும், அவற்றைச் சக்கரத்திலும், ஏட்டிலும் யமன் திசையாகிய தெற்கில் உள்ள வரிசையை முதலாகவும், வடக்கில் உள்ள வரிசையை இரண்டாவதாகவும் கொண்டு முறையே எழுதி ஓலையில் ஐங்காயத்தை அரைத்துப் பூசி அதனை அடுப்பு வாயில் அழுந்தப் புதைத்துச் சக்கரத்தை வழிபட்டு, மந்திரத்தைக் கீழ் விளிம்பு தொடங்கி மேற்கூறிய முறையிலே செபித்து வர, `மோகனம்` என்னும் வித்தை கைவரும்.

#999. உச்சாடனம் (விரட்டிவிடல்)

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்து விட்
டோங்காரம் வைத்திடும் உச்சா டனத்துக்கே.

இஃது உச்சாடனம் என்னும் வித்தை கூறுகின்றது. உச்சாடனம் - ஓட்டுதல். மேல்மயங்கிப் பண்ணின உயிர்களையே விலகி ஓடப் பண்ணுதல் உச்சாடனம் என்க. இதற்குப் பலகை புரசம் (பூவரசம்) பலகை. சக்கரத்திலும், ஏட்டிலும் எழுத வேண்டிய மந்திரம் மேற்கூறிய வாறேயாம். ஓலையில் கரியும், நஞ்சும் பூசி, ஓங்காரத்தில் மகாரத்தை நீக்கி ஓகாரம் மட்டும் பலகையிலும், ஓலையிலும் சக்கரத்தைச் சுற்றி வளைத்து எழுதி, அதை ஒருமுறை பலகையோடு வழிபட்டு ஓலையைக் கொண்டுபோய் ஐயனார் கோவிலில் வடமேற்கு மூலையில் பாதுகாப்பாகப் புதைத்து விட்டுச் சக்கரத்தை வழிபட்டு, மந்திரத்தை மேற்கூறியவாறே செபித்து வர, `உச்சாடனம்` என்னும் வித்தை கைவரும்.

#1000. மாரணம் (மந்திரத்தால் அழிப்பது)

உச்சியம் போதி லொளி வன்னி மூலையில்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சமற மேலோர் மாரணம் வேண்டிலே.

இது `மாரணம்` என்னும் வித்தை கூறுகின்றது. மாரணம் - மரணத்துன்பம். `அழிக்கப்படற்பாலன` என்று எண்ணும் உயிர்களை அழித்தொழிப்பதே மாரணம் என்க. உச்சாடனத்திற்குமேல் மாரணம் செய்ய விரும் பினால், மேலே சொல்லியவாறு செய்தபின் மற்றோர் ஓலை அதுபோல எழுதி, ஐங்காயம் பூசி உச்சி வேளையில் (நண்பகற்போதில்) சுடு காட்டிற் கொண்டுபோய் அக்கினிமூலையில் ஒன்றின்மேல் ஒன்றாய் எட்டு மூலை உண்டாக இரண்டு சதுரங்களையும் அவற்றின்

உள்ளே ஒரு சதுரத் தையும் வரைந்து உள்ளே புதைத்துவிட்டு வந்து வழிபாட்டினையும், செபத்தையும் முன்போலச் செய்துவர, `மாரணம்` என்னும் வித்தை கைவரும்.

#1001. வசியம் (கவர்ச்சி)

ஏய்ந்த வரிதார மேட்டின்மே லே பூசி
மேய்ந்த வகார முகார மெழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வப் பலகை வசியத்துக்குக்
கேய்ந்தவைத் தெண் பதினாயிரம் வேண்டிலே.

இது, `வசியம்` என்னும் வித்தை கூறுகின்றது. மோகனம் செய்யப்பட்டேனும், அது செய்யப்படாது இயல்பாகவேனும் தம்வழி நிற்கும் உயிர்களை எவ்வாற்றானும் பிரிந்து போகாதபடி தம்வசப் படுத்தி வைப்பதே வசியம் என்க. இதற்குப் பலகை, வில்வமரப் பலகை. மந்திரம் அகார உகாரங்கள், அகார உகாரங்கள் விந்துவோடு கூடினவையாக மேற் சொல்லிய சக்கரத்தில் ஈசான மூலையிலிருந்து தொடங்கிப் பொறித்து, ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் அரிதாரத்தை (மஞ்சள் நிறமுடைய ஒன்றை)ப் பூசி, அதனை அந்தப் பலகைமேலே வைத்து வழிபட்டு அம்மந்திரத்தை எண்பதினாயிரம் உருச் செபித்தால், `வசியம்` என்னும் வித்தை கைகூடுவதாகும்.

#1002. ஆகர்ஷணம் (அழைப்பு)

எண்ணாக் கருடனை யேட்டின் உகாரமிட்டு
எண்ணாப் பொன்னாளி லெழு வெள்ளி பூசிடா
வெண்ணாவற் பலகை யிலிட்டுமேற் கேநோக்கி
எண்ணா வெழுத்தொடெண்ணாயிரம் வேண்டிலே.

இஃது, `ஆகருடணம்` என்னும் வித்தை கூறுகின்றது. உயிர்ப் பொருளாயினும், உயிரல் பொருளாயினும் தொலைவில் உள்ளவற்றைத் தான் இருந்த இடத்தில் இருந்தே வரவழைத்தல் `ஆகருடணம்` என்னும் வித்தையாம். இதற்குப் பலகை வெண்ணாவல் மரப்பலகை. மந்திரம் மேற்கூறிய ஐந்தெழுத்து மாறலில் யகராம் முதலாக அமைவது யகாரம் முதலாக உள்ளது முதல் ஐந்து தொடர்களையும் முறையே ஐந்து வரிசை அறைகளில் பொறித்து, ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் யாதேனும் ஒரு வெண்பூச்சினைப் பூசி வியாழக் கிழமையில் மேற் சொன்ன பலகை மேல்வைத்து வழிபட்டு அன்று முதலாக மேற்கு நோக்கி அமர்ந்து அம் மந்திரங்களை அசபாமந்திரத்தோடே எண் ஆயிர உரு விரும்பிச் செபித்தால், `ஆகருடணம்` என்னும் வித்தை கைவரும்.

நான்காம் தந்திரம் -
3. அருச்சனை

மலர்களாலும், நறுமணப் பொருட்களாலும் இறைவனை பூசிப்பது.

1003. உகந்த மலர்கள்

அம்புய நீலம் கழுநீ ரணிசெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே.

இயந்திரத்தில் மந்திர உருவில் எழுந்தருளிய இறைவனை வழிபட உகந்த மலர்கள் தாமரை, நீலம், செங்கழுநீர், கரு நெய்தல், பாக்குப் பூ, மகிழம்பூ, மாதவி, மந்தாரம், புன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகியவை.

#1004. உகந்த நறுமணப் பொருட்கள்

சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கற்பூரங் காரகில்
பாங்கு படப்பனி நீரால் குழைத்து வைத்
தாங்கே யணிந்து நீர் அர்ச்சியும் அன்பொடே.

புனுகு, கஸ்தூரி முதலிய சாந்துகள், சந்தனம், குங்குமம், பச்சைக் கற்பூரம், அகில் இவற்றை பன்னீர் கலந்து முறையாகப் பூசி வழிபட வேண்டும்.

#1005. தூப தீபம் காட்டுதல்

அன்புட னேநின் றமுதமு மேற்றியே
பொன் செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்ப மகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடு முத்தியே.

அன்புடன் நிவேதனந்தைப் படைக்க வேண்டும். விளக்கை ஏற்றி வைக்க வேண்டும். தூப தீபம் காட்ட வேண்டும். இவ்விதம் இம்மைப் பேறும் மறுமைப் பேறும் பெறலாம்.

#1006. எல்லாப் பேறும் தாமே வரும்!

எய்தி வழிபடில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படி லிந்திரன் செல்வமுன்
எய்தி வழிப்படி லெண்சித்தி யுண்டாகும்
எய்தி வழிப்படி லெய்திடு முத்தியே.

இங்ஙனம் வழிபடும் போது அடைய முடியாத பேறு என்று எதுவும் இராது. இந்திரனின் செல்வம் கிடைக்கும். தம்பனம் முதலிய எட்டு சித்திகளும் கிடைக்கும். மறுமையில் வீடுபேறும் கிடைக்கும்.

#1007. மனம் அடங்கும்

நண்ணும் பிறதார நீத்தா ரவித்தார்
மண்ணிய நைவேத் திய மனுசந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னும்
மன்னும் மனபவ னத்தொடு வைகுமே.

இவ்வாறு வழிபடுபவர்கள் ஐம்பொறிகளை அடக்கி ஆள்வர். தானே விரும்பி வரும் பர தாரத்தையும் விரும்ப மாட்டார். இவர் படைக்கும் நிவேதனம், இடையூறு இல்லாத யோகம், ஐந்து அங்கங்கள் (சிரசு, இரு கரங்கள், இரு முழங்கால்கள்) தரையில் பொருந்த செய்யும் வணக்கம், செபம் இவற்றால் மனம் பிராணனோடு நிலை பெற்று விளங்கும்.

#1008. புறவழிபாடுகள் வேண்டா!

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்ம மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்ம மிகுதியோ ராயந்தன்பே.

இறைவனுக்கு அடிமையானவர்கள் கர்மத்தை விரும்ப மாட்டார்கள். கர்மத்தில் இச்சை கொள்ளாததனால் இவர்கள் கிரியைகள் மூலம் சிவனை வழிபட விரும்ப மாட்டார்கள். கர்மத்தை புரியவிரும்பாமல் சிவன் அருள் வழியே நின்று இவர்கள் சிவனைத் தொழுவார்கள்.

#1009. மணியின் ஒளி

அறிவரு ஞானத் தெவரு மறியார்
பொறி வழித் தேடித் புலம்புகின்றார்கள்
நெறிமனை யுள்ளே நிலை பெற நோக்கில்
ஏறிமணி யுள்ளே யிருக்கலும் ஆமே.

சிவயோகம் என்பதை அறிவு வழியால் மட்டுமே அடைய முடியும் என்ற உண்மையை, சிவ யோகத்தைப் பொறி வழியே தேடுபவர்கள் அறிவதில்லை. கிரியையால் வழிபடுபவர்களின் கவனம் எல்லாம் மூர்த்தி, பூஜை, மந்திரம், செபம், திரவியங்கள் இவற்றில் நிலை பெற்றிருக்கும். இறைவன் மீது அல்ல. கிடைதுள்ள உடலிலேயே நெறிப் படுத்தப் பட்ட மனத்துடன் நோக்கினால் மணியுள் ஒளி போல உடலுள் இறைவனைக் காணலாம்.

#1010. மயக்கம் என்பதே இராது

இருளும் வெளியும்போ லிரண்டா மிதயம்
அருளறி யாமையு மன்னு மறிவும்
அருளிவை விட்டெறி யாமை மயங்கும்
அருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே.

உள்ளம், இருள் ஒளி என்ற இரண்டு இயல்புகளுடனும் பொருந்தக் கூடியது. உள்ளம் ஒளியைச் சேர்ந்தால் அப்போது அருளைப் பெறும். மயக்கம் அறும். உள்ளம் மயக்கும் இருளைச் சேர்ந்தால் அறியாமையில் விழும். மயக்கம் உறும். உள்ளத்தில் மயக்கம் நீங்காவிட்டால் அறிவும் மயங்கும். மயக்கத்தைத் துறந்தவரே மெய்யான சிவனடியார்கள் ஆவர்.

#1011. அனைத்தும் அவன் செயல்

தானவ னாக வவனேதா னாயிட
ஆன விரண்டி லறிவன் சிவமாகப்
போனவ னன்பிது நாலா மரபுறத்
தானவ னாகுமோ ராசித்த தேவரே.

“தானே சிவன்” என்றும் “சிவனே தான்” என்றும் இரண்டு வழிகளில் தன்னையே சிவமாகக் காணுவர் சிவனடியார். சிவனிடம் கொண்ட பக்தியால், தன் அறிவைச் சிவன் அறிவில் கொண்டு சேர்ப்பது சாயுஜ்யம் என்னும் வீடுபேற்றின் நான்காவது நிலையினை அடைவது ஆகும். இந்தச் சித்தியைப் பெற்றவர்கள் “எல்லாம் அவன் செயல்” என்று நம்பித் தான் நன்மை தீமை என்று எதையுமே சிந்தியாமல் இருப்பார்கள்.

#1012. விந்து நாதங்கள் மேல் நோக்கிச் செல்லும்

ஓங்கார முந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே.

உந்திக்குக் கீழே மூலாதாரத்தில் இருப்பது அணையாத அக்கினிக் கலையாகும். இந்த மூலாக்கினியைச் சிவாக்கினியாக்கிச் சிவத் தியானம் செய்ய வேண்டும். அப்போது குண்டலினி சக்தி மேல் நோக்கிச் சென்று கழுத்தில் 'வ'காரமாக விளங்குவாள். சுவாதிஷ்டானத்தில் இருக்கும் 'ந'காரம் நெற்றிக்கு இடம் பெயரும். இந்த இடத்திலிருந்து தோன்றும் விந்துவும் நாதமும் மேல் நோக்கிச் செல்லும்.

#1013. வீடுபேறு என்றால் என்ன?

நமவது வாசனமான பசுவே
சிவமது சிதீஷ் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்றாம்
சிவமாகு மாமோனஞ் சேர்த்தல் மெய் வீடே.

'நம' என்ற இரண்டு எழுத்துக்கள் மறைக்கும் சக்தியான திரோதனத்தையும், மலத்தையும் குறிக்கும். ஆன்மாக்கள் இந்த இரண்டையும் இருப்பிடமாகக் கொண்டு இயங்கும் இயல்பின. அதுவே ஆன்மா பசுத் தன்மை பெற்று இருப்பதன் காரணம் ஆகும். இந்தப் பசுத் தன்மையை மாற்ற வேண்டுமெனில் சிவத்தைச் சார்ந்து சிவத்தைச் சிந்திக்க வேண்டும். அப்போது பசுத் தன்மை கேட்டு சிவத் தன்மை தோன்றும். வெறும் ஜபத்தினால் மட்டும் இது நிகழாது. 'நான் இந்த உடம்பு அல்ல' என்ற எண்ணத்துடன் சிவத்துடன் சேர வேண்டும். இதுவே உண்மையான வீடுபேறு ஆகும்.

#1014. சீவ ஒளியும் சிவ ஒளியும் ஒன்றி விடும்

தெளிவரு நாளில் சிவஅமு தூறும்
ஒளிவரு நாளில் ஓரெட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்ததே.

"தான் உடல் அன்று" என்று உணரும் அன்று சீவனின் மன மண்டலத்தில் சிவனின் ஒளி வீசும். அது சந்திர கலையாகத் தோன்றும். இங்ஙனம் ஒளி வீசும் போது, பிரிந்திருந்த சீவனின் நிலை சிவத்துடன் ஒன்றாகும். அதன் பின்னர் சீவ ஒளியும், சிவ ஒளியும் கலந்து நிற்கும்.

நான்காம் தந்திரம் -
4. நவகுண்டம்

ஒன்பது வகைப்பட்ட ஓம குண்டங்கள்:

(1). சதுரம், (2). யோனி, (3). பிறை, (4). முக்கோணம், (5). வட்டம், (6). அறுகோணம், (7). பத்மம், (8). அட்டகோணம், (9). வர்த்துவம்.

இவற்றுக்கு உரிய ஒன்பது திசைகள்:

(1). கிழக்கு, (2). தென் கிழக்கு, (3). தெற்கு, (4). தென் மேற்கு, (5). மேற்கு, (6). வடமேற்கு, (7). வடக்கு, (8). ஈசானியம், (9). ஈசானியத்துக்கும் கிழக்குக்கும் நடுவே

#1015. நன்மை அளிக்கும்

நவகுண்டம் ஆனவை நான் உரை செய்யின்
நவகுண்டத்துள் எழு நல் தீபம் தானும்
நவகுண்டதுள் எழு நன்மைகள் எல்லாம்
நவகுண்டம் ஆனவை நான் உரைப்பேனே.

நவ குண்டத்தைப் பற்றி நான் கூறுவது இதுவே. நவ குண்டங்களில் பேரொளி எழுந்து நிற்கும். அந்த நவ குண்ட சோதி எல்லா நலன்களையும் நமக்குத் தரும்.

#1016. நாற்கோணக் குண்டம்

உரைத்திடும் குண்டத்தின் உள்ளே முக்காலும்
நகைத்துஎழு நாற்கோணம் நன்மை கள்ஐந்தும்
பகைத்திடும் முப்புரம் பார்அங்கி யோடே
மிகைத்துஎழு கண்டங்கள் மேல்அறி யோமே.

இந்த ஒன்பது குண்டங்களில் நாற்கோணக் குண்டத்தின் சிறப்புகள் இவையாகும். நாற்கோணக் குண்டம் மகிழ்ச்சியைத் தரும். ஐந்தொழில்களும் நன்மை அடையும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களும் கெடும். மூலாதாரத்தின் அக்கினி மேல் நோக்கிச் செல்லும். அது உடலில் உள்ள மண்டலங்களைக் கடந்து விளங்கும்.

#1017. ஒரே பேரொளியானது!

மேல்அறிந்து உள்ளே வெளிசெய்த அப்பொருள்
கால்அறிந்து உள்ளே கருத்து உற்ற செஞ்சுடர்
பார்அறிந்து, அண்டம் சிறகுஅற நின்றது
நான்அறிந்து, உள்ளே நாடிக் கொண்டேனே.

மூலாதாரத்து அக்கினி மேல் நிலையை அடைந்து வான பூதத்தைப் பற்றிக் கொண்டது. அப்போது உள்ளே இருந்த செஞ்சுடர் பிருத்வி முதல் துவாதசாந்தம் வரையில் ஒரே ஒளிப் பிழம்பாகக் காட்சி அளித்தது.

#1018. ஆக்கி அழிக்கலாம்

கொண்டஇக் குண்டத்தின் உள்எழு சோதியாய்
அண்டங்கள் ஈரேழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பு எலாம்
இன்று சொல் நூலாய் எடுத்துரைத் தேனே.

இங்ஙனம் அகத்தில் உள்ள குண்டத்தில் ஒளி வடிவாகத் திகழ்பவர் ஈரேழு மண்டலங்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்தவர். பண்டைய வேதங்கள் இந்த குண்டத்தின் பெருமைகளைக் கூறியுள்ளன. நானும் அவற்றை இந்த நூலில் உரைத்தேன்.

#1019. வல்வினைகள் வந்து பொருந்தா!

எடுத்தஅக் குண்டத்து இடம் பதினாறில்
பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்
கதித்து அனல் உள் எழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்து எழும் வல்வினை கூடகி லாவே.

இத்தகைய குண்டத்தில் பதினாறு கலைகளும் விளங்கும். காம ஜெயத்துடன், மூலாக்கினி சுழுமுனை வழியே மேலே செல்வதை அறிந்து கொள்ளலாம். இதைச் செய்யவல்லவர்களை வல்வினைகள் வந்து பற்றிக் கொள்ளா!

பதினாறு கலைகள்

அகரம், உகரம், மகரம், விந்து, அர்த்தச் சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோமரூபினி , அனந்தை , அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனி.

#1020. சிவசூரியன்

கூட முக்கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம் புறம்பாய் நிற்கும்;
பாடிய பன்னீர் இராசியும் அங்கு எழ
நாடிக் கொள்வார்கட்கு நற்சுடர் தானே.

முக்கோண வடிவ குண்டத்தில் ருத்திரன், நான்முகன், திருமால், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்து தெய்வங்களும் சத்யோஜாதம், வாம தேவம், தத்புருடம்,

அகோரம், ஈசானம் என்ற ஐந்து முகங்கள் கொண்ட சிவனாக உடலின் உள்ளேயும் வெளியேயும் விளங்குவர். உறுதியாகத் தியானம் செய்பவர்களின் சிரசின் மீது சூரியனின் பன்னிரண்டு ராசிகளும் முழுமையாக அமையும். சூரிய வட்டம்முழுமை அடையும். அப்போது சிவ சூரியன் தலை மேல் தோன்றுவான்.

#1021. உடல் ஒளிரும்!

நற்சுடர் ஆகும் சிரம் முக வட்டமாம்
கைச்சுடர் ஆகும் கருத்து உற்ற கைகளில்
பைச்சுடர் மேனி பதைப்புற்று இலிங்கமும்
நற்சுடராய் எழும் நல்லது என்றாளே.

நவகுண்ட வழிபாடு செய்பவரின் உடல் ஒளிரும். அவர் தலையும், முகமும் நல்ல ஒளி பெறும். இடைகலை, பிங்கலை என்னும் இரு கைகளில் சுழுமுனை ஒளிரும். அன்னமய கோசத்தில் இலிங்கம் உள்ளேயும் வெளியேயும் ஒளியுடன் விளங்கும். "இது நன்மை அளிக்கும்!" என்று சக்தி தேவி உரைத்தாள்.

#1022. ஒளி மயமான சக்தி

நல்லதுஎன் றாளே நமக்குற்ற நாயகம்
சொல் அது என்றாளே சுடர்முடி பாதமா
மெல்லநின் றாளை வினவகில் லாதவர்
கல்அதன் தாளையும் கற்கும் வின்னாளே.

"திவ்விய லிங்கம் நன்மை அளிக்கும்!" என்று சக்தி கூறினாள். அவளே "ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்கு உரிய சொல் பிரணவம்" என்று கூறினாள். முடி முதல் பாதம் வரையில் சுடர் போல ஒளிரும் சக்தியைப் பற்றி நல்ல குருவிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்யாதவர் கற்ற கல்வி நல்ல கல்வியாகாது. அவர்கள் அறிவும் சிறந்து விளங்காது.

#1023. அகத்துள் இடம் கொண்டது.

வின்னா இளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டும் சுடர் நாகம் திக்கு எங்கும்
பன் நாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என் அகத்துள்ளே இடங்கொண்ட வாறே.

ஒளிவீசும் இளம் பிறைக் குண்டத்திலிருந்து இடைகலை பிங்கலை என்னும் இரண்டு நாடிகள் பாம்புகளைப் போலப் பின்னிப் பிணைந்து எல்லா ஆதாரச் சக்கரங்களையும் சென்று அடையும். சஹஸ்ரதலத்தை அடைந்த பின்னர் வானக்

கூற்றில் பரவும் அதன் பேரொளி, பின்னர் என் உள்ளத்திலும் இடங்கொண்டு விளங்கியது.

#1024. சிவாக்கினியைக் காணலாம்

இடம் கொண்ட பாதம் எழிற்சுடர் ஏகம்;
நடம் கொண்ட பாதங்கள் நண்ணீரதற்குச்
சகம் கொண்ட கை இரண்டாறும் தழைப்ப
முகம் கொண்ட செஞ்சுடர் முக்கண்ண னார்க்கே.

சிவாக்கினி மூலாதாரத்தை இடமாகக் கொண்டது. இந்த சிவாக்கினிக்கு ஊன்றிய கால் சூரிய நாடியாகிய பிங்கலை ஆகும். நீர்ப்பகுதியாகிய மணிபூரகத்தை நோக்கித் தூக்கிய திருவடி இடகலை ஆகும். இந்த இரண்டு கலைகளால் மூலாதாரம் முதலான ஆறு ஆதரங்களையும் நாம் செழிப்படையச் செய்ய வேண்டும். அப்போது நம் முகத்தின் முன்னர் சிவாக்கினி வந்து தோன்றும்.

#1025. தலைவன் அவனே!

முக்கணன் தானே முழுச் சுடராயவன்
அக்கணன் தான அகிலமு முண்டவன்
திக்கண னாகி த திசையெட்டும் கண்டவன்
எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே.

முழுச் சுடராக விளங்குபவன் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண்களை உடைய சிவபெருமானே ஆவான். அந்த விதமாகக் கண்களை உடைய சிவனே அகிலத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளான். திசைகளில் எல்லாம் கண்கள் உடையவனாக அவன் அனைத்துத் திசைகளையும் காண்கின்றான். எல்லாக் கணங்களுக்கும் தலைவன் சிவபெருமானே ஆவான்.

#1026. சீவனே ஆவான் சிவன் மைந்தன்

எந்தைப் பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்த னிவனெற்று மாட்டிக்கொள் ளீரே.

எந்தையாகிய சிவபிரானிடம் ஆறு தீப்பொறிகள் தோன்றின. அவை ஆறும் இணைந்து அதிலிருந்து ஆறுமுகன் தோன்றினான். சிவன் அந்தத் தீப்பொறிகளில் கலந்திருப்பதால் கந்தன் சிவனின் மைந்தன் ஆனான். சிவன் திருவருள் பெற்ற சீவனின் ஆறு ஆதாரங்களும் ஒன்றாகிவிடும். அப்போது சீவனே சிவன் மைந்தன் கந்தன் ஆகி விடுவான்.

#1027. தேவர் ஆகிவிடுவர்

மாட்டிய குண்டத்தின் உள்எழு வேதத்துள்
ஆட்டிய கால்ஒன்றும் இரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கை இரண்டு ஒன்று பதைத்து எழ
நாட்டும் சுரர் இவர் நல்லொளி தானே.

மூலாதாரம் நான்கு இதழ் தாமரையின் வடிவம் கொண்டது. அதில் சுழுமுனை நாடியானது, இடைகலை நாடி, பிங்கலை நாடிகளின் தன்மையை விரிவடையச் செய்யும். அவை இரண்டும் பக்குவம் அடையும் போது சுழுமுனையில் அக்கினிக் கலை விரைவாக மேலே எழும். இந்த ஆற்றல் பெற்றவர் தேவர் ஆவார்.

#1028. கண்களில் அருள் பெருகும்

நல்லொளி யாக நடந்து உலகு எங்கும்
கல்ஒளி யாகக் கலந்து உள் இருந்திடும்
சொல்ஒளி யாகத் தொடர்ந்த உயிர்க்கு எலாம்
கல்ஒளி கண்ணுளும் ஆகிநின் றானே.

முன்னம் கூறிய வண்ணம் ஒளி உடல் பெற்றவர் நிலையான ஒளியுடன் இந்த உலகில் உலவுவார். ஒளிரும் சொல்லாகிய பிரணவத்தை அறிந்து கொள்ள விரும்பும் உயிர்களுக்கு எல்லாம் அவர் தன் அருட்கண்ணால் நிலையான ஒளியை வழங்குவார். அவர் கண்களில் ஆருளாக நிற்பாள் சக்தி அன்னை.

#1029. பிரணவ உடலுடன் எங்கும் செல்லலாம்

நின்ற இக் குண்டம் நிலைஆறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்து எழும் ஆறாறும்
கொண்ட இத் தத்துவம் உள்ளே கலந்து எழ,
விண்ணுளும் என்ன எடுக்கலும் ஆமே.

பிரணவ குண்டம் ஒளியின் இருப்பிடம் ஆகும். இதில் ஆறு ஆதாரச் சக்கரங்களும், அவற்றுடன் தொடர்பு கொண்ட முப்பத்தாறு தத்துவங்களும் அடங்கும். பிரணவம் உள்ளேயும் உள்ளது; வெளியிலும் உள்ளது. எனவே பிரணவ உடல் பெற்ற ஒருவர் எந்த உலகத்துக்கும் சென்று வர இயலும்.

#1030. பிரணவத்தின் வடிவம்

எடுக்கின்ற பாதங்கள் மூன்ற தெழுத்தைக்
கடுத்த முகம் இரண்டு; ஆறு கண் ஆகப்
படித்து எண்ணும் நா ஏழு; கொம்பு ஒரு நாலும்;
அடுத்து எழு கண் ஆனா அந்த மிலாற்கே.

பிரணவத்துக்கு மூன்று பாதங்களும் , இரண்டு கூரிய முகங்களும், ஆறு கண்களும், ஏழு நாக்குகளும், நான்கு கொம்புகளும் பொருந்தி விளங்கும்.

#1031. ஆன்மா அழிவற்றது

அந்தம் இலானுக்கு அகலிடம் தான் இல்லை;
அந்தம் இலானை அளப்பவர் தாம் இல்லை;
அந்தம் இலானுக்கு அடுத்த சொல் தான் இல்லை;
அந்தம் இலானை அறிந்து கொள் பத்தே.

எல்லை இல்லாத ஆன்மாவே பிரணவம் ஆகும். அதற்கு என்று ஒரு இருப்பிடம் இல்லை; அதை வரையறுக்க முடியாது; அதைச் சொற்களால் விளக்கவும் முடியாது. அதன் வடிவம் தமிழில் 'பத்து' என்ற எண்ணின் குறியீடாகிய 'ய' என்பது . இதுவே சூலத்தின் வடிவம் ஆகும். பிரணவத்தில் இரண்டு முகங்களையும் இந்த 'ய'காரம் இணைக்கும்.

#1032. சிரசின் மேல் தோன்றுவாள் சக்தி

பத்து இட்டு, அங்கு எட்டு இட்டு, நால் இட்டு,
மட்டு இட்ட குண்டம் மலர்ந்து எழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்த மெய் ஆகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே.

இரு கண்களில் விளங்கும் சந்திர, சூரிய கலைகளாகிய 'அ 'கார, 'உ'காரங்களை புருவத்தின் நடுவில் ஒன்றாகச் சேர்க்க வேண்டும். 'எட்டு' என்னும் எண்ணைக் குறிக்கும் 'அ' காரமாகிய சந்திர கலையினால் ஆறு இதழ்கள் கொண்ட சுவாதிஷ்டானத்தையும், நான்கு இதழ்கள் கொண்ட மூலாதாரத்தையும் மாற்றம் அடையச் செய்ய வேண்டும். சுவாதிஷ்டானச் சக்கரம் மலரும் போது விந்து ஜெயம் ஏற்பட்டும். ஆறு ஆதாரங்களும் ஒன்று படும். உணர்வாகக் கலந்து சென்று சிரசின் மேல் உள்ள பார்வதி தேவியாகிய சக்தியுடன் சேந்து நிற்கும்.

#1033. சதாசிவன் பொருந்தும் வகை.

பார்ப்பதி பாகன் பரந்தகை நால்ஐஞ்சு
காற்பதி பத்து, முகம் பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர் முடி
நாற்பது சோத்திரம் நல்இரு பத்தஞ்சே.

பார்வதி பாகனாகிய சதாசிவனுக்கு மூலாதாரத்தில் உள்ள கலைகள் நான்கு (வ , ஷ , ச', ஸ) ஆகும். இவரே பஞ்சப் பிராணன்களுக்குத் தலைவர். ஐந்து பூதங்களிலும் சிவனும், சக்தியும் விளங்குவர். பத்து முகங்களும் அவற்றில் ஒளிமயமாக உள்ளதை அறியும். இடை கலை, பிங்கலை என்ற நாடிகள் சுவாதிஷ்டானத்தில் விளங்கும். ஒளிமயமான முடி ஒன்று இருக்கும். இடைகலை, பிங்கலை நாடிகள் ஐந்து பூதங்களில் உண்டாக்கும் நாதம் பத்து ஆகும். மொத்தத் தத்துவங்கள் இருபத்து ஐந்து ஆகும்.

#1034. முத்தி என்பது என்ன?

அஞ்சு இட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்,
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்து அங்கு இருத்தலால்
பஞ்சு இட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முக்தியே.

ஆன்மாவுக்கு ஐந்து கோசங்கள் உள்ளன. அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்தமய கோசம். உடலில் உள்ள தத்துவங்கள் இருபத்தைந்து. சஹஸ்ரதளம் பனிப் படலம் போன்று தெளிவில்லாமல் இருக்கும். குண்டம் விரியும் போது பரந்து விரியும் கதிர்கள் சென்று சுடரும் நாதமும் ஆன அக்கினியுடன் கூடுவது முத்தி எனப்படும்.

#1035. பற்று அறும் இன்பம் வரும்

முத்த நற்சோதி முழுச்சுடர் ஆனவன்
கற்று அற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்று அற நாடிப், பரந்த ஒளியூடுபோய்
செற்றற்று இருந்தவர் சேர்ந்திருந்தாரே.

சிவபெருமான் மலங்கள் இல்லாத பரஞ்சோதிச் சுடர் ஆவான். கற்றவற்றைக் கடந்து, அவற்றில் மயங்காமல் நிற்பவர்களின் கருத்தில் சிவன் எழுந்தருள்வான். உலகப் பற்றை ஒழித்து விட்டு, பரவிச் செல்லும் இயல்புடைய குண்டலினியின் ஒளியின் உதவியால், ஆதாரங்களைக் கடந்து சென்று சிவனுடன் சேர்ந்து இருப்பவர்கள் இன்பம் ற்று மகிழ்வுடன் இருப்பர்.

#1036. மூலக் கனலை வெறுத்தவர்

சேர்ந்த கலை அஞ்சும் சேருமிக் குண்டமும்;
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்த ஐம்பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே.

பிரணவம் என்னும் குண்டம் நிவிருத்தி முதலான ஐந்து கலைகள் பொருந்துகின்ற இடம். இதில் நிலை பெறும் வண்ணம் திசைகளும் வந்து பொருந்தும். ஐம்பூதங்களையும் இயக்குவது மூலத் தீ. இதை கீழே நோக்க விடாமலும், ஐம்பூதங்களை இயக்காமலும் காய்பவர் பிரணவத்துடன் கலந்தவர் ஆவர்.

#1037. சிவனை விட்டுப் பிரியாதீர்கள்!

மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்
உய்கண்டஞ் செய்த வொருவனைச் சேருமின்
மெய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்ட மில்லாப் பொருள் கலந்தாரே.

பரந்த நீரால் சூழப்பட்ட ஏழு உலகங்களையும் உய்யும்படிச் செய்யும் ஒப்பற்ற தலைவன் சிவனைச் சேருங்கள்! பலன்களில் விருப்பம் கொண்டு செய்யும் யாகம் முதலியவற்றால் பெற்ற அரிய சித்திகளை விடப் பலன்களை எதிர்பாராமல் இறைவனுடன் இணைவதே நல்லது என்ற ஞானம் பெற்ற தேவர்கள், பொய் என்ற ஒன்றினால் மாசுபடாத மெய்யான தலைவன் சிவனுடன் பிரிவின்றிச் சேர்ந்து இருப்பார்கள்.

#1038. சிவனைச் சிரசில் தியானிப்பீர்!

கலந்திரு பாத மிருகர மாகு
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் ணெற்றி
உணர்ந்திருங் குஞ்சியங் குத்தம னார்க்கே.

தாமரை மலர் போல மலர்ந்துள்ள சஹஸ்ரதளத்தில் உறைபவன் சிவ பெருமான். இடைகலை, பிங்கலை நாடிகளே அவன் இரு திருவடிகள்; சுழுமுனையே அவன் மூக்கு; மலர்ந்து சிவந்த ஒளியே அவன் திருமுகம். திங்கள், கதிரவன் இவற்றுடன் விளங்கும் அக்கினியே அவன் நெற்றிக் கண். சிவனைச் சிரசில், குடுமிக்கு மேல் உள்ள இடத்தில், இவ்வாறு தியானிப்பீர்!

#1039. அனைத்தையும் தருவான் சிவன்

**உத்தமன் சோதி உளன் ஒரு பாலனாய்;
மத்திமன் ஆகி மலர்ந்து அங்கு இருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குளிர்ந்தன,
சத்திமான் ஆகத் தழைத்த கொடியே.**

மூலாதாரத்தில் விளங்கும் பொழுது சிவன் ஒரு சிறிய பாலகன். அது குண்டலினி சக்தியின் வாலைப் பருவம் ஆகும். சிவன் இளைஞன் பருவத்தை அடையும் போது சஹஸ்ரதளத்தில் ஈசான மூர்த்தியாகி விடுவான். அது குண்டலினி சக்தியின் தருணீப் பருவம். அப்போது தலையின் பின் பக்கத்தில் இருக்கும் சிறு மூளையில் ஆற்றல் பெருகும். அது மேலே சென்று பிரமரந்திரம் என்னும் உச்சிக் குழியை அடையும். ஆறு ஆதாரங்களையும் கடந்து செல்லும் அக்கினிக் கலையே ஆன்மாவைத் தழைக்கச் செய்யும்.

#1040. நாம் பெறும் பெரும் செல்வம்

**கொடி ஆறு சென்று குலாவிய குண்டம்
அடி இரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படி ஏழ் உலகும் பரந்த சுடரை
முடியாது கண்டவர் மாதனம் ஆமே.**

சித்திரணி என்னும் நாடி, தாமரை நூல் போல, முதுகுத் தண்டின் ஊடே கீழிருந்து மேல் வரை செல்லும். இதன் வழியே மூலாதாரத்தில் உள்ள தீ உடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும், சஹஸ்ர தளத்தையும் கடந்து மேல் நோக்கித் தலை வரை செல்லும். இவ்வாறு விரிந்து பரவிச் செல்லும் மூலாதார ஒளியைச் சோம்பல்இன்றிக் காண்பவர் மிகப் பெரிய செல்வதை பெற்றவர் ஆவர்.

#1041. மாதனத்தைப் பாதுகாப்பீர்!

**மாதனம் ஆக வளர்கின்ற வன்னியைச்
சாதனம் ஆகச் சமைந்த குரு என்று
போதனம் ஆகப் பொருந்த உலகு ஆளும்
பாதனம் ஆகப் பரிந்தது பார்த்தே.**

மிகப் பெரிய செல்வமாக விரிந்து பரவும் மூலத் தீயைப் பயிலும் சாதனமாகக் கொள்வார் சிறந்த குரு. அவர் போதனம் செய்யும் ஆற்றலில் பொருந்தியவர். பாதனம் என்னும் அருள் வீழ்ச்சி ஏற்படாமல் அவர் சீடர்களைப் பாதுகாப்பார்.

#1042. சோதியைக் கண்டால் அழிவில்லை

பார்த்திடம் எங்கும் பரந்துஎழு சோதியை
ஆத்தம்அது ஆகவே ஆய்ந்து அறிவார் இல்லை
காத்து உடல் உள்ளே, கருதி இருந்தவர்
மூத்து உடல் கோடி உகம் கண்டவாறே.

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமறப் பரவி எழும் சோதி சிவபெருமான். அவனை அன்புடன் ஆராய்ந்து அறிந்து கொண்டவர் எவருமில்லை. உடல் என்னும் ஓம குண்டத்தில் அந்த சிவப் பேரொளியைக் காத்து தியானம் செய்பவர் அறிவில் முதிர்ச்சி அடைவர். அவருக்கு வயது முதிர்ந்தாலும் பல கோடி யுகங்களைக் காண்பர்.

#1043. சகம் இருக்கும் அகத்தின் உள்ளே.

உகம் கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகம் கண்ட யோகி உள்நாடி எழுப்பும்
பகம் கண்டு கொண்ட இப்பாய் கருஒப்பச்
சகம் கண்டு கொண்டது சாதனம் ஆமே.

உடலில் ஒன்பது குண்டங்கள் உள்ளன. அவை உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள், குவிந்த சஹஸ்ரதளம், நிமிர்ந்த சஹஸ்ரதளம் மற்றும் யோனி என்பவை. இவை ஒன்பதையும் ஒளி மயமாக எழும்படிச் செய்வான் ஒரு சிவயோகி. கருவில் குழந்தையின் வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துமே அடங்கி இருப்பது போலவே யோகியின் உள்ளே உலகம் முழுவதும் அடங்கி இருக்கும். இங்ஙனம் அகத்தினுள் சகத்தைக் காண்பதே பெரிய சாதனை.

#1044. ஒன்பது குண்டங்கள்

சாதனை நாலு, தழல் மூன்று, வில்வயம்,
வேதனை வட்டம், வினை ஆறு, பூநிலை,
போதனை, போது, தைஞ்சு பொற்கய வாரண
நாதனை நாடும் நவகோடி தானே.

நாற்கோணம், முக்கோணம், அர்த்த சந்திரன், வட்டம், அறுகோணம், எண் கோணம், பதுமம், யோனி, நீள் வட்டம் என்னும் ஒன்பதும் ஒன்பது வகைக் குண்டங்கள் ஆகும்.

நான்காம் தந்திரம் - 5. சக்தி பேதம்

சக்தி என்னும் திவருட்செல்வி கலைமகள், மலைமகள் என்னும் பேதங்களை உடையவள்.

இவளே பரமேச்வரனுடன் வேறுபடாமல், பிரியாமல் இருந்து ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றாள்.

#1045. எல்லாம் சக்தி மயம்

மாமாயை, மாயை, வயிந்தம் வைகரி
ஓ மாயை உள் ஒளி ஓர் ஆறு கோடியில்
தாம் ஆன மந்திரம் சத்தி தன் மூர்த்திகள்
ஆம் ஆய் அலவாம் திரிபுரை ஆங்கே.

சுத்த மாயை, அசுத்த மாயை, விந்து, வைகரி வாக்கு , ஓம் என்னும் பிரணவம், உள்ளொளி, ஆறு தொகுதிகளில் மந்திரம், சக்தியின் மூர்த்தி இவை அனைத்தும் சக்தியின் பல வடிவங்களே!

#1046. சக்தியின் பல வடிவங்கள்

திரிபுரை, சுந்தரி, அந்தரி, சிந்தூரப்
பரிபுரை, நாரணி, ஆம் பால வன்னத்தி
இருள்புரை, ஈசி, மனோன்மணி, என்ன
வருபல வாய் நிற்கும் மாமாது தானே.

அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் மூன்று கண்டங்களாக விளங்குவாள் திரிபுரை. அவள் பேரழகு வாய்ந்தவள்; வானத்தைத் தன் வடிவாகக் கொண்டவள்; செவ்வொளியுடன் திகழ்ந்து உலகினைத் தாங்குபவள்; நாராயணி என்ற பெயர் கொண்டவள்; பல வேறு வர்ணங்களில் மிளிர்பவள்; கரிய நிறத்தில் இருப்பவள், ஈசனின் சக்தியானவள்; நினைப்பவர் மனத்தில் ஒளிர்பவள்; மாறுபட்ட இவை அனைத்துமே அந்தத் திரிபுரையின் பல வேறு வடிவங்கள் ஆகும்.

#1047. கல்வி, செல்வம், முக்தி தருவாள்!

தானா அமைந்தவ முப்புரம் தன்இடைத்
தான் ஆன மூ உரு ஓர் உருத் தன்மையள்
தான் ஆன பொன் செம்மை வெண்ணிறத்தாள் கல்வி
தான் ஆன போகமும் முத்தியும் நல்குமே.

இயற்கையாகவே அமைந்துள்ள முப்புரங்களில் தானே மூவுருவெடுத்து மலைமகள், அலைமகள், கலைமகள் என்று திகழ்வாள். அந்த மூன்று உருவங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு ஒரே உருவில் சதாசிவனின் நயகியாவாள். தானே பொன்னிறம், செந்நிறம், வெண்ணிறம் கொண்டு விளங்குவாள். தானே கல்வி, செல்வம், முத்தி என்னும் மூன்றையும் தருவாள்.

#1048. அன்புடன் அறிவைத் தருவாள்

நல்கும் திரிபுரை; நாத நாதாந்தங்கள்
பல்கும் பரவிந்து பார் அண்டம் ஆனவை
நல்கும் பரை, அபிராமி, அகோசரி
புல்கும் அருளும் அப்போதந்தம் தாளுமே.

திரிபுரை அன்னை நாதத்தையும், நாதத்தைக் கடந்து விளங்கும் நாதாந்தம் என்னும் நிலையையும் தன் அன்பனுக்கு அருள்வாள்.அவளே பரவிந்துவாக இருந்து கொண்டு உலகம் முதலிய அண்டங்களை தருவாள். அவள் பரை, அவள் அபிராமி, அவள் வாக்குக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்ட அகோசரி என்ற போதிலும் அன்புடன் நம்மைத் தழுவிக் கொண்டு நல்ல அறிவை வழங்குவாள்.

#1049. இராசேசுவரியின் வடிவம்

தாள் அணி நூபுரம், செம்பட்டுத் தான் உடை
வார் அணி கொங்கை, மலர்க் கன்னல்வாளி வில்
ஏர் அணி அங்குசபாசம் எழில் முடி
காரணி, மாமணிக் குண்டலக் காதிக்கே.

காலணிகளான அழகிய சிலம்புகள்; சிவந்த பட்டாடைகள்; கச்சை அணிந்த கொங்கைகள்; மலர் அம்புகள்; கரும்பு வில்; அங்குச பாசம், அழகிய தலை முடி, கருநீல நிறக் குண்டலங்கள் இவை இராசேசுவரி தேவியின் வடிவத்தில் அமைந்திருக்கும்.

#1050. சண்டிகையின் வடிவம்

குண்டலக் காதி, கொலைவில் புருவத்தள்,
கொண்ட அரத்த நிறம் மன்னு கோலத்தள்
கண்டிகை ஆரம் கதிர்முடி மாமதிச்
சண்டிகை, நால்திசை தாங்கி நின்றாளே.

சண்டிகை என்னும் அம்பிகையின் திருவடிவம் இது. அவள் காதுகளில் அழகிய குண்டலங்களை அணிந்தவள்; கொல்லும் தன்மை கொண்ட வில் போல வளைந்த புருவத்தை உடையவள்; செந்நிற மேனியுடன் திகழ்பவள்; தோள்

அணிகள், கழுத்தில் ஆரங்கள், ஒளி வீசும் திருமுடி, சந்திரன் இவற்றைத் தரித்தவள்; உலகின் நாகு திசைகளையும் காத்து அருள்பவள்.

#1051. வித்தையில் விளங்குபவள்

நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றில் மோகினி, மாதிருக்குஞ் சிகை,
நன்று அறி கண்டிகை, நாற்கால் கரீடணி,
துன்றிய நச்சுத் தா மரைச் சுத்தையே.

உயிர்களை உய்விக்க அவற்றுடன் கலந்து நிற்பவள் திரிபுரை. அவள் மிகவும் புராதனமானவள். குறைவில்லாத நிறைந்த அழகு உடையவள்; சீவனின் சிரசின் மேல் உள்ள சிகையில் விளங்குபவள்; அனைத்தையும் கண்டு அறியும் கண்கள் படைத்தவள்; நான்கு திசைகளில் இருப்பவற்றைத் தன் பால் வசீகரிப்பவள்; சஹஸ்ரதளத்தில் விளங்கும் வித்தியா தேவி இவள்.

#1052. அருள் புரியும் இறைவி

சுத்தவம் பாரத் தனத்தி சுகோதயள்
வத்துவ மாயாளு மாசக்தி மாபரை
அத்தகைய யான மனோரணி தானுமாய்
வாய்த்த அக்கோல மதியவள் ஆகுமே.

இறைவி தூய கச்சினை அணிந்தவள்; மாலைகள் சூடியவள்; இன்பத்தின் ஊற்றானவள்; சீவர்களை பொருளாகக் கொண்டு ஆட்கொள்ளும் மகா சக்தி; பராபரை; மனம் என்னும் ஆரண்யத்தில் வாழ்பவள்; தானே தனக்கு வடிவம் படைத்துக் கொண்ட ஞான வடிவானவள்; தானே சந்திர மண்டலம் ஆக விளங்குபவள்.

#1053. அவள் அளிப்பாள் வீடுபேறு

அவளை அறியா அமரரும் இல்லை
அவள் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவள் அன்றி ஐவரால் ஆவது ஒன்றில்லை
அவள் அன்றி ஊர்புகும் ஆறு அறியேனே.

அவளை அறியாத அமரர்கள் எவருமே இல்லை. அவளைக் குறித்துச் செய்யாத அருந்தவம் என்று எதுவுமே இல்லை. சீவர்களைத் தொழிற்படுத்தும் ஐந்து மூர்த்திகளும் அவள் இன்றேல் எதுவுமே செல்ல இயலாதவர். அவளை அறிந்து கொள்ளாமல் வீடுபேறு அடையும் வழியை நான் அறியேனே.

#1054. சக்தியின் ஆற்றல்

அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அருவுரு வாம்அவள் என்பர்
அறிவார் கருமம் அவள் இச்சை என்பர்
அறிவார் பரனும் அவளிடத்தானே.

அனைத்தும் அறிந்த ஞானியர் கூறுவது இதுவே:
பராசக்தி ஆனந்த வடிவானவள்;
பராசக்தி அறிவு வடிவானவள்;
நிகழ்பவை அனைத்தும் அவள் இச்சையே;
சிவனும் பராசக்தியிடம் அமைந்தவன் தான்.

#1055. சிவசக்தியர் இணைந்து செயல் புரிவர்.

தான் எங்குளன், அங்கு உள்ள் தையல் மாதேவி,
ஊன் எங்கு உள , அங்கு உள உயிர்க்காவலன்;
வான் எங்கு உள அங்குளே வந்து மப்பாலாம்
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே.

எங்கெங்கு சிவம் உள்ளதோ அங்கெல்லாம் உடன் இருப்பாள் சக்தி. எங்கெங்கு ஊன் உள்ளதோ அங்கெல்லாம் உயிருக்குக் காவல் ஆவாள். எங்கெங்கு வான் உள்ளதோ அங்கெல்லாம் விளங்குவாள் தலைவியாகிய சக்தி. அதைத் தாண்டிய பரவெளியிலும் அவள் நிறைந்து நிற்கும் குறிகளை ஆராய்ந்து அறிவாய்!

#1056. யாவுமானவள் சக்தி

பராசத்தி, மாசத்தி, பல்வகை யாலும்
தராசத்தி யாய்நின்ற தன்மை உணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணியம் ஆகிய போகமே.

பலவிதங்களிலும் பராசக்தியே சிறப்பு வாய்ந்தவள். அவளே அனைத்தையும் தங்குகின்ற ஆதாரசக்தி. அவளே எல்லா ஊழிகளிலும் உயிர்களைக் காப்பவள். அவளே புண்ணியச் செயல்களின் பலனை நமக்குத் தருபவள்.

#1057. ஞானமும் இன்பமும் நல்குவாள்

போகம் செய் சத்தி , புரிகுழ லாளொடும்
பாகம் செய்து ஆங்கே பராசத்தியாய் நிற்கும்,
ஆகம் செய்து ஆங்கே அடியவர் நாள்தோறும்
பாகம் செய் ஞானம் படர்கின்ற கொம்பே.

உயிர்களுக்கு இன்பத்தைத் தருபவள் சக்தி. அவள் குண்டலினி சக்தியுடன் இணைந்து பராசக்தியாக உயிர்களைப் பரிபாகம் செய்வாள். தன் அடியவர்களை மனதில் வைத்து தினமும் அவர்களுக்கு பரி பக்குவம் தருகின்ற கொழு கொம்பு அவள்.

#1058. மனத்திடை திரிபுரை

கொம்புஅனை யாளை, குவிமுலை மங்கையை,
வம்புஅவிழ் கோதையை, வானவர் நாடியைச்,
செம்பவள திருமேனிச் சிறுமியை
நம்பி என்னுள்ளே நயந்துவைத் தேனே.

உயிர்களுக்குக் கொழுகொம்பானவள் சக்தி. குவிந்த கொங்கைளை உடையவள் சக்தி. தேன் சிந்தும் மலர்களைத் தன் முடியில் அணிந்தவள் சக்தி. விண்ணவர் விரும்பும் விழுப் பொருள் ஆனவள் சக்தி. செம்பவளம் போன்ற நிறம் கொண்டவள் சக்தி. அத்தகைய சக்தியை நான் நம்பி, மிகவும் விரும்பி என் உள்ளத்தில் குடியிருத்தினேன்.

#1059. கலைகளின் தலைவி

வைத்த பொருளு மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சாதியம் வித்தைத் தலையவ ளாமே.

உலகில் உண்டு பண்ணப் பட்ட பொருட்கள்அனைத்தும் சக்தியின் வடிவம். அவற்றுடன் நன்றாகப் பொருந்தியுள்ள உயிர்க் கூட்டம் சக்தியின் வடிவம். பத்து முகங்களுடன் பத்து திசைகளிலும் பரந்து நிறைந்து காப்பவள் சக்தி. அவள் உயர்ந்தவள். உயர்ந்தவற்றுக்கெல்லாம் உயர்ந்தவள். நம் சித்தம் முதலான அந்தக்கரணங்கள் நான்கையும் செயல்படச் செய்யும் சக்தியே வித்தைகளின் தலைவியும் ஆவாள்.

#1059. கலைகளின் தலைவி

வைத்த பொருளு மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சாதியம் வித்தைத் தலையவ ளாமே.

உலகில் உண்டு பண்ணப் பட்ட பொருட்கள்அனைத்தும் சக்தியின் வடிவம். அவற்றுடன் நன்றாகப் பொருந்தியுள்ள உயிர்க் கூட்டம் சக்தியின் வடிவம். பத்து முகங்களுடன் பத்து திசைகளிலும் பரந்து நிறைந்து காப்பவள் சக்தி. அவள் உயர்ந்தவள். உயர்ந்தவற்றுக்கெல்லாம் உயர்ந்தவள். நம் சித்தம் முதலான அந்தக்கரணங்கள் நான்கையும் செயல்படச் செய்யும் சக்தியே வித்தைகளின் தலைவியும் ஆவாள்.

#1061. இரண்டறக் கலந்து நின்றாள்

நின்றவள் நேரிழை நீள்கலை யோடுஉற;
என்றன் அகம்படிந்து ஏழ் உலகும் தொழ
மன்று அது ஒன்றி மனோன்மணி, மங்கலி
ஒன்று எனோடு ஒன்றி நின்று ஒத்து அடைந்தாளே.

எங்கும் நிறைந்து நிற்கும் பராசக்தி என் உள்ளத்தில் முழுக் கலைகளுடன் வந்து பொருந்தினாள். ஏழு உலகத்தினரும் தொழும்படி சஹஸ்ரதலத்தில் மனோன்மணியாக நின்றாள் . மங்கலப் பொருளாகிய அவள் பிரித்து அறிய முடியாதபடி இரண்டறக் கலந்து நின்றாள்.

#1062. அடையும் வழியை அறிய வேண்டும்

ஒத்து அடங்கும் கமலத்திடை ஆயிழை,
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்து அடைகின்ற மனோன்மணி, மங்கலி
சித்து அடைக்கும் வழி தேர்ந்து உணராார்களே.

சஹஸ்ரதளத்தில் ஒத்து அடங்கித் திகழும் பராசக்தி, அவளுடைய பெருந் தலைவனாகிய இறைவன் சிவபெருமானுடன் மகிழ்வுடன் பொருந்தி மனோன்மணியாகவும் மங்கலையாகவும் திகழ்கின்றாள். அவர்களை உள்ளத்தில் நிறுத்தி அடைத்து வைக்கும் வழியைப் பலர் தெளிவாக அறிவதில்லையே!

#1063. நற்கதி நல்குவாள்

**உணர்ந்து உடனே நிற்கும் உள்ளொளி ஆகி,
மணம் கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்து உடனே நிற்கும்; போதரும் காலைக்
கணிந்து எழுவார்க்குக் கதி அளிப்பாளே.**

உணர்ந்து உடன் நிற்கும் சக்தி உள்ளொளியாவாள். மணம் பொருந்திய மலர்களைச் சூடிய சக்தி, தானும் சிவனும் புணர்ந்து நிற்கும் அந்தப் போதினில் நினைவு கூர்பவருக்கு நற்கதி நல்குவாள்.

#1064. சிவகதி காட்டினாள்

**அலி ஒத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளி உறு புன்பழம் போல் உள்ளே நோக்கி
தெளி உறுவித்து, சிவகதி காட்டி
ஒளி உறவைத்து என்னை உய்ய உண்டாளே.**

அருள் புரிவதில் எல்லோரிடமும் ஒத்து விளங்குபவள் சக்தி. அவள் ஆனந்தமே வடிவானவள். அவள் அழகியவள். ஓட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் புளியம்பழத்தைப் போல இருந்த என் உள்ளதை அவள் பக்குவப்படுத்தினாள். எனக்குச் சிவ கதியைக் காட்டினாள். பிறகு என்னையும் தன் ஒளியில் இணைத்துக் கொண்டாள்.

#1065. ஆதிகாரணி பராசக்தி

**உண்டு இல்லை என்றது உருச்செய்து நின்றது
வண்தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடும்
மண்டலம் மூன்று உற மன்னி நின்றாளே.**

உண்டு என்றும் இல்லை என்றும் உலகினர் தேவியைக் குறித்துக் கூறுவார். ஆனால் அந்த சக்தியே ஜீவனின் நுண்ணிய உடலைப் பரு உடலாகச் செய்பவள். அவளே வண் தில்லை அம்பலம் எனப்படும் சஹஸ்ர தளத்தில் நிலைபெற்று நிற்பவள். சிவபெருமான் அறிவு வடிவமாக இருந்து கொண்டு ஆன்மாவின் பந்த மோட்சங்களுக்குக் காரணம் ஆகின்றான். ஆனல் அதைச் செயல்படுத்துவது சக்தி என்பதை உலகத்தோர் அறிவதில்லை. சூரிய மண்டலம், சந்திரமண்டலம் அக்கினி மண்டலம் என்ற மூன்றிலும் திகழ்பவள் ஆதி காரணி பராசக்தி.

#1066. பரஞ்சுடர் ஆகிய பராசக்தி

நின்றாள் அவன்தன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசக்தி
ஒன்றாக என்னுள் புகுந்து உணர்வு ஆகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடு அங்கை யாளே.

சீவர்களின் உயிரும் உடலும் ஆனவள் சக்தி தேவி. சீவனைச் சிவனிடம் சேர்ப்பதற்குச் சக்திதேவி சந்திர மண்டலத்தை நோக்கி ஊர்த்துவ முகமாகச் சென்றாள். அவள் வேத வாக்கை ஏந்தி நிற்கும் ஒளி மயமானவள். என் உடலில் அவள் விளங்கிய போது என் உணர்வில் புகுந்து கலந்து நின்றாள்.

விளக்கம்

கலைமகள் நான்முகனின் தேவி,. இவள் சுவாதிஷ்டானச் சக்கரத்தில் ஒளி மயமாக விளங்குவாள். இவள் கீழ் நோக்கிச் சென்றால் காம உணர்வாக மாறி விடுவாள். மேல் நோக்கிச் சென்றால் சீவனைச் சிவகதியில் சேர்ப்பாள்.

#1067. ஏடு அங்கை கொண்ட நங்கை

ஏடு அங்கை நங்கை, இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம், விரும்பும் வெண்டாமரை'
பாடும் திருமுறை, பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

சொல்லின் வடிவத்தில் விளங்குவாள் இறைவி. அவள் முக்கண்களை உடையவள். தூய்மையான படிகத்தைப் போன்ற வெண்ணிறம் கொண்டவள். வெண்தாமரை ஆகிய சஹஸ்ர தலத்தில் விரும்பி அமர்பவள் அவள் நாத மயமானவள். அவள் திருவடிகளைத் தலை மேல் சூடுங்கள். அவள் புகழைப் பாடுங்கள்.

#1068. ஆதித் தலைவி இவளே

தோத்திரம் செய்து, தொழுது துணை அடி
வாய்த்திட ஏத்தி வழி படு மாறிரும்பு
ஆர்த்திடும் அங்குச பாசம் பசுங் கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை ஆகும் ஆதிக்கே.

சக்தி தேவியைத் துதியுங்கள். அவள் இரு திருவடிகளையும் வணங்குங்கள். சூரிய சந்திரர்கள் இணைந்து விளங்கும் வண்ணம் ஒலியையும் ஒளியையும் ஒன்றாக்குங்கள். தியானத்தில் பாசம், அங்குசம், கரும்பு வில் ஏந்திய மெல்லியலாளைக் காணுங்கள்.

#1069. முக்காலமும் தோன்றும்.

ஆதி விதமிகுத்த, அண்டந் தமால் தங்கை
நீதி மலரின் மேல் நேர்இழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகால் பயில்விரேல்
சோதி மிகுந்து முக் காலமும் தோன்றுமே.

படைப்பு பெருகுமாறு செய்பவன் பாற்கடலில் உள்ள நாரணன். அவன் தங்கையான நாராயணி சஹஸ்ரதளத்தில் வீற்றுள்ளாள். இவள் திரு நாமத்தைச் சிவசக்தியாக எண்ணித் தியானித்து வந்தால் நுண் உடல் ஒளி மயமாகி விடும். அப்போது முக்காலங்களும் நன்கு தோன்றும்.

#1070. அருட் சக்தி ஆனவள்

மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதாரம் ஆகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்துள் நல்லாருளாளே.

அகாரம் முதல் உன்மனி ஈறாக உள்ள பதினாறு கலைகளும் தேவியின் வடிவம் ஆகும். வேதம் முதலிய நூல்களில் பரமாகவும், அபரமாகவும் போற்றப்படுபவள் தேவி. இவளே ஆவாள் உயிர்களுக்கு ஆதாரம். நாதம், நாதாந்தம் இவற்றில் விளங்கும் சிவபெருமானுடைய அருட் சக்தியும் இவளே.

#1071. மயக்கத்தை மாற்றுவாள்

அருள் பெற்றவர் சொல்ல வாரீர் மனிதர்
பொருள் பெற்ற சிந்தை புவனா பதியார்
மருள் உற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருள் உற்ற சேவடி போற்றுவன் நானே.

அனுபவத்தில் தேவியின் அருள் பெற்ற மனிதர்களே! முன்னே வந்து எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்! உண்மைப் பொருளைத் தன்னுடையது ஆக்கிக்கொண்டவள் அந்தத் தேவி. அவள் அருள் புரிவதிலும் வள்ளன்மை வாய்ந்தவள். உலகத்தைப் பற்றிக் கொண்டு மயக்கத்தில் ஆழும் சீவர்களின் சிந்தையை மாற்றிப் பந்தம் இல்லாதபடிச் செய்பவள் தேவி. அவள் சேவடிகளை நான் போற்றுகின்றேன்.

#1072. வராக முகத்தினள்

ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தொடு
ஏனைய யுழுபடை ஏந்திய வெண்ணகை
ஊனம் அற உணர்ந்தார் உள்ளத்து ஓங்குமே.

தேவியைச் சுற்றியுள்ள எழுவரில் ஒருவள் வராகி. இவள் பன்றி முகம் உடையவள். இழிந்தவர்களின் உடலை இடித்துத் துன்புறுத்த உலக்கை, கலப்பை போன்ற ஆயுதங்களை ஏந்தியவள். குற்றங்கள் இல்லாத இவளை, ஊன் உடலைக் கடந்து தியானிப்பவர்களின் மனத்தில் இந்த சக்திச் சிறந்து விளங்குவாள்.

#1073. தேவி வழிபாடு

ஓங்காரி என்பாள் அவள் ஒருபெண் பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்,
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே.

ஓம் என்ற பிரணவ வடிவம் கொண்டவள் தேவி. ஐந்தொழில்களின் தலைவியும் அவளே. நீங்காத பச்சை நிறம் கொண்டவள் தேவி. அஹங்காரத் தத்துவத்துடன் அவள் பொருந்தி விளங்கும்போது தன்னுடைய அம்சங்களாகச் சதாசிவன், மகேசுரன், உருத்திரன், திருமால், நான்முகன் என்ற ஐந்து தெய்வங்களை உருவாக்கினாள். ஹ்ரீம் என்னும் மந்திர பீஜத்துள் தேவி இனிதாக வீற்றிருப்பாள்.

#1074. பதினான்கு வித்தைகள்

தானே தலைவி என நின்ற தற்பரை
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமும், மனமும் நற்புத்தியும்
தானே சிவகதித் தன்மையும் ஆமே.

பராசக்தியே எல்லாவற்றுக்கும் தலைவி. வாக்குவடிவமாக விளங்கும் பதினான்கு வித்தைகளுக்கும் அவளே தலைவி. தேவர்களின் வான மண்டலம், மன மண்டலம், நல்ல அறிவு எல்லாம் அவளே. நாதாந்ததைக் கடந்த சிவகதியை அளிப்பவளும் அவளே.

பதினான்கு வித்தைகள்:
வேதங்கள்................... 4
அங்கம்......................6
நியாயம்.....................1

நான்காம் தந்திரம் - 6. வயிரவி மந்திரம்

வயிரவி என்னும் சக்தியை நினைவு கொள்வது வயிரவி மந்திரம்.

#1075. மேதா கலை

பன்னிரண்டாம் கலை ஆதி பயிரவி
தன்னில் அகாரமும் மாயையும் கற்பித்துப்
பன்னிரண்டு ஆதியோடு, அந்தம் பதினாலும்
சொல் நிலை சோடசம் அந்தம் என்று ஓதிடே.

பன்னிரண்டாவது உயிர் எழுத்தாகிய 'ஐ' என்ற எழுத்தால் உணர்த்தப் படுபவள் பயிரவி. அதனுடன் மாயையாகிய 'ம்' என்பதை இணைத்தால் 'ஐம்' என்னும் வாக்கு தேவியின் பீஜ மந்திரம் கிடைக்கும். பிரணவத்துடன் 'ம்' பொருந்தினால் 'ஓம்' என்ற மந்திரம் கிடைக்கும். இவற்றை செபித்தால் தேவி வாக்கு வடிவமான தன் பதினான்கு வித்தைகளையும் அளிப்பாள், அத்துடன் தன்னையும் வெளிப் படுத்திக் கொள்வாள்.

#1076.ஆதியும் அவளே அந்தமும் அவளே

அந்தம் பதினாலு அதுவே வயிரவி
முந்தும் நடுவும் முடிவு முதலாகச்
சிந்தைக் கமலத்து எழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியும் ஆகி நின்றாளே.

பதினான்கு வித்தைகளாக விளங்கும் வயிரவியே ஐந்து கர்மேந்த்ரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், நான்கு அந்தக்கரணங்கள் என்னும் பதினான்கினையும் சீவர்களுடன் பொருத்து கின்றாள். அவளே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய செயல்களைச் செய்கின்றாள். சிந்தையில் உள்ள பெரிய தாமரையில் விளங்குகின்ற தேவியும் அவளே. அவளே ஆதியும், அந்தமுமாக விளங்குகின்றவள் ஆவாள்.

#1077. வயிரவியை வழிபடுமின்

ஆகின்ற மூவரும் அங்கே யடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோர்க்கே!

சீவர்களைச் செலுத்துகின்ற நான்முகன், திருமால், உருத்திரன் என்ற மூவரும் வயிரவியை வழிபட்டால் செயல்திறன் அடங்கி விடுவர். அழிகின்ற இயல்பு உடையது சீவனின் உடல். அது ஐம் பூதங்களால் ஆனது. உடலில் பொருந்திய சீவனை அநாதியான ஆத்மாக்கள் உள்ள இடத்தை அடையச் செய்பவர் யார்? ஆற்றல் மிகுந்த திரிபுரையை வழிபட்ட புண்ணியர்களே அவர்கள் ஆவர்.

#1078. சிவம் ஆவார்.

புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்பதி
பண்ணிய வன்னி பகலோன் மதி ஈறு
திண்ணிய சிந்தை தன் தென்னனும் ஆமே.

சிவன் புண்ணியன் ஆவான்; சிவன் நந்தி ஆவான்; சிவன் தூயவன் ஆவான். வான ராசி மண்டலத்தைச் சந்திரன் சுற்றி வருவது வட்டம் ஆகும். இந்த வட்டத்தில் சூரியனும் சுற்றி வருவான். அந்த வட்டம் முழுமையடையும் போது, தலையின் வடகிழக்குப் பகுதியில் சூரியனும் சந்திரனும் ஒன்றாகப் பொருந்துவதால் அக்கினிக் கலை தோன்றும் . அந்தக் அக்கினிக் கலையை அறிந்து கொண்டு அதன் மீது தியானிப்பவர் நிறைந்த சிந்தை உடையவராகிச் சிவமாகவே ஆகி விடுவார்.

#1079. திரிரையின் அருள்

தென்னன் திருநந்தி சேவகன் தன்னோடும்
பொன்னங் கிரியில் பூதலம் போற்றிடும்
பண்ணும் பரிபிடி அந்தம் பகவனோடு
உன்னும் திரிபுரை ஓதி நின்றானுக்கே.

சிவபெருமான் நம்மைக் காக்கும் அழகிய வீரன். கயிலை மலையில் அவனுடன் பெண்யானை போல வீற்றிருக்கும் அம்மையும் நம்மைக் காக்கின்றாள். இடையறாது அவர்கள் இருவரின் திருவடிகளை எண்ணுபவர்களுக்கு இறைவனும் அவனுடன் உறையும் திருபுரையும் அருள் புரிவர்.

#1080. ஞானம் தருவாள்

ஓதிய நந்தி உணரும் திருவருள்
நீதியில் வேத நெறிவந்து உரைசெய்யும்
போதம் இருபத் தெழுநாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம் வந்து ஆளுமே.

குருமண்டலத்தில் யோகி தியானித்து இருப்பதன் உண்மை நிலையினை பராசக்தி அறிவாள். நீதியை, நேர்மையான வழியில் உயிர்களுக்கு உபதேசித்து உணர்த்துவாள். இங்ஙனம் பராசக்தியிடம் உபதேசம் பெற்றவரிடம் சந்திரனின் வட்டமான பதினாறு கலைகளும் வந்து பொருந்தும். கதிரவன், திங்கள், அக்கினி என்ற மூன்று ஒளிரும் பொருட்களை முத்தலையாகக் கொண்ட சூலம் வந்து அவர் உடலில் பொருந்தி சோதியாக மாறி விடும்.

#1081. சூலினி சூலியின் அங்கம் ஆவாள்

சூலம் கபாலம் கை ஏந்திய சூலிக்கு
நாலாம் கரம் உள; நாக பாச அங்குசம்
மால் அங்கு அயன் அறியாத வடிவுக்கு
மேல் அங்கமாக நின்ற மெல்லிய லாளே.

துர்க்கா தேவிக்கு நான்கு கரங்கள் உள்ளன. கபாலம், சூலம் இரு கரங்களில் ஏந்தியவள் அங்குசம், பாசம் இவற்றையும் பிற கரங்களில் ஏந்தியுள்ளாள். நான்முகனும் திருமாலும் கண்டு அறியாத வடிவினை உடைய சூலியான சிவனுக்குச் சூலினியாகிய இவள் ஒரு மேலான அங்கமாக மிக மென்மையுடன் திகழ்பவள். அங்கியாகிய சிவனின் அங்கமாகத் தேவி திகழ்வதன் பெயர் ‘அங்காங்கி பாவம்’.

#1082. வயிரவியின் வடிவழகு

மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறம் மன்னு சேயிழை
கல்இயல் ஒப்பது காணும் திருமேனி
பல்இயல் ஆடையும் பன்மணி தானே.

வயிரவி மெல்லியலாள்; வஞ்சிக்கொடி போன்றவள்; நெறி தவறுகின்றவர்களைத் தண்டிப்பதில் நஞ்சைப் போன்றவள்; எல்லாக் கலைகளிலும் சிறந்த கலை ஞானம் கொண்டவள்; முள் முருங்கைப் பூவைப் போன்று சிவந்த நிறம் கொண்டவள்; மணியைப் போல ஒளிரும் உடலைக் கொண்டவள்; பல வித மணிகளால் ஆன ஆடைகளை உடுப்பவள்.

#1083. வயிரவியின் வனப்பு

பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி உழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின்றாளே.

பல கலைகளைக் கொண்ட சந்திர மண்டலம், பல மணிகள் பதிக்கப்பட்டத் தேவியின் அழகிய திருமுடியாகும். வானத்தையே தன் காதுகளாகக் கொண்டவள் தேவி. அருகில் உள்ள ஒரு நல்ல தோழியைப் போன்றவள். ஒளி வீசும் சூரிய சந்திரர்களைத் தன் இரு விழிகளாகக் கொண்டவள். தேவி பொன் போன்ற ஒளியை எங்கும் பரப்புகின்றாள்.

#1084. சக்தியின் பல சகிகள்

பூரித்த பூ இதழ் எட்டினுக்குள்ளே ஓர்
ஆரியத்தாள் உண்டு, அங்கு எண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபது நால்வரும்
சாரித்துச் சக்தியைத் தாங்கள் கண்டாரே.

தலையின் மீது விரிந்துள்ள எட்டு இதழ்க் கமலத்தின் நடுவில் ஒப்பற்ற தேவி திகழ்வாள். அவளைச் சுற்றிக் எட்டுக் கன்னியர் இருப்பர். அந்த எட்டுக் கன்னியர் ஒவ்வொருவருக்கும் எட்டு எட்டுக் கன்னியர் உடன் இருப்பர். இவர்கள் அனைவரும் தேவியைத் தரிசித்து அமைவர்.

வாமை, சேட்டை, ரெளத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பல பிரதமனி , சர்வபூத தமனி என்பவர்கள் அந்த எட்டு கன்னியர் ஆவர். இவர்களின் ஆளுகையில் பிரணவத்தின் அறுபத்து நான்கு கலைகளும் செயல்படுபவை.

#1085. பூசிக்கத் தகுந்தவள் தேவி

கண்ட சிலம்பு, வளை, சங்கு, சக்கரம்,
எண் திசை யோகி இறைவி பராசக்தி
அண்டமொடு எண்திசை தாங்கும் அருட்செல்வி
புண்டரி கத்துள்ளும் பூசனை யாளே.

பராசக்தி தேர்ந்து எடுக்கப்பட்ட சிலம்பு, வளை, சங்கு, சக்கரம் இவற்றை அணிந்தவள். அவள் எட்டு திசைகளிலும் நிறைந்து நிற்பவள். அவள் அனைத்து அண்டங்களையும் தாங்கி நிற்பவள். அவள் தலையின் மீதுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் இருத்திப் பூசிக்கத் தகுந்தவள்.

#1086. பூசை செய்யும் விதிகள்

பூசனை கெந்தம் புனை மலர் மாகோடி,
யோசனை பஞ்சத்து ஒலிவந்து உரைசெய்யும்
வாசம் இலாத மணிமந்திர யோகம்
தேசம் திகழும் திரிபுரை காணே.

பூசைக்கு உகந்த நறுமணப் பொருட்கள், மணம் வீசும் நறு மலர்கள், புதிய ஆடைகள், நெடுந்தொலைவு கேட்கும் ஐந்து வாத்தியங்களின் முழக்கம், சொல்வதற்கு அரியதாகிய திரு ஐந்தெழுத்தால் ஆன அரிய மந்திரம் இவற்றுடன் செய்யும் பூசையை திரிபுரை மிகவும் விருப்பத்துடன் ஏற்பாள்.

ஐந்து இசைக் கருவிகள்:
தோற்கருவி, தொளைக் கருவி, நரம்புக் கருவி, தாளக் கருவி, மிடற்றுக் கருவி.

#1087. அனைத்துத் தெய்வங்களும் அவளே

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பல பொன்போலத் தோற்றிடும்
பேணும் சிவனும் பிரமனு மாயனும்
காணும் தலைவிநற் காரணி தானே.

ஒரே பொன் வெவ்வேறு அணிகலன்களாகத் தோன்றுவது போலவே, ஒரே அன்னை வெவ்வேறு தெய்வங்களாகத் தோன்றுகின்றாள். உலகம் புகழும் சிவனும், நான்முகனும், திருமாலும் மற்ற தெய்வங்களும் விளங்குவது அகில உலகின் ஆதி காரணியாகிய தேவியினால் என்று அறிவீர்!

#1088. வேதங்களின் அந்தமும் அவளே

காரணி, மந்திரம், ஓதும் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரண நந்தி நடு, அங்கு உரை செய்த
ஆரண வேதம் நூல் அந்தமும் ஆமே.

ஆதி காரணி, மந்திரங்களுக்குக் காரணமானவள். ஆயிரம் இதழ்த் தாமரையில் அவளைத் தியானிக்கும் போது, வாயுவை வெளிப்படுத்தும் பூரண கும்பகத்தில் அவள் விளங்குவாள். அவளே வேதங்களின் அந்தமாகிய உபநிடதங்களிலும் உள்ளாள்.

#1089. மந்திரம் கூறும் முறை

அந்தம் நடுவிரல், ஆதி சிறுவிரல்
வந்த வழி முறை மாறி உரை செய்யும்
செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நலம் உரைத்தானே.

கைகளில் மோதிரவிரல், சிறுவிரல் முதலாகத் தொடங்கி வலமாகப் பெருவிரலின் நுனியால் வரைகளைத்தொட்டு உருவை எண்ணி நடுவிரலில் முடிக்கும் வகையால் மீள மீள உருவேற்றப்படும் தமிழ்மந்திரம் முதலிய மந்திரங்களை அவ்வவற்றிற் குரிய தெய்வங்களாகவே தெளிந்து வழிபடுங்கள்; (பயன் விளையும்.) இதனை எங்கள் நந்திபெருமான் நான் உணரும் வண்ணம் உரைத்தருளினார்.

#1090. நியமம் செய்தான்

உரைத்த நவசத்தி ஒன்று முடிய
நிரைத்த ராசி நெறிமுறை எண்ணிப்
பிரைச் சதம் எட்டும் முன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமம் செய்தானே.

நவ சக்திகளில் ஒருவளான மனோன்மணியைச் சிரசின் மேலும் மற்ற எட்டு சக்தியரைச் சிரசைச் சுற்றியும் பொருந்தும்படி எண்ண வேண்டும். பிரசாத கலைகள் பதினாறில் எட்டு கலைகள் உடலிலும், எட்டுக் கலைகள் உயிரிலும் விளங்கிடும்படி நந்தி நியமம் செய்துள்ளான்.

#1091. ஒளி மண்டலத்தை உண்டாக்குவாள்

தாமக் குழலியைக் கண்ணி உள்நின்ற
ஏமத்து இருள் அற வீசும் இளங்கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள் எழு நுண்புகை
மேவித்து அமுதொடு மீண்டது காணே.

மலர் மாலைகள் சூடிய குழலி தேவி; கருணை பொழியும் கண்களை உடையவள்; அவள் உயிருக்கு மயக்கத்தைத் தரும் அறியாமையின் இருளைப் போக்கும் குண்டலினி சக்தியாக ஒளி வீசுகின்ற இளங்கொடி ஆவாள். மூலாதாரத்தில் எழுகின்ற மூலக் கனல் எழுப்பும் மூல வாயுவுடன் சேர்ந்து ஒளிமணடலத்தை உருவாக்குவாள். அவளை இனம் கண்டு கொள்வீர்!

#1092. மூன்று கிரியை மந்திரங்கள்

காணும் இருதய மந்திரமும் கண்டு
பேணும் நமஎன்று பேசும் தலைமேலே
வேணு நடுவு மிக நின்ற ஆகுதி
பூணும் நடுஎன்ற அந்தம் சிகையே.

இருதய மந்திரத்தின் பொருள் உணர்ந்து கொண்டு, தலையுச்சியில் வீற்றுள்ள சக்திக்கு நாம் வணக்கம் செய்ய வேண்டும். மூங்கில் குழல் போன்ற நடுநாடியின் வழியே மேலே சென்று, உச்சியில் பொருந்தியுள்ள அவள், நாம் அளிக்கும் ஆகுதியைப் பெற்றுக் கொள்வாள். உச்சியின் நடுவே விளங்குவது 'சிகா' மந்திரம் என்பதை அறிந்து கொள்வீர்.

#1093. உடல் முழுவதும் வியபித்திடுவாள்

சிகை நின்ற அந்தக் கவசம் கொண்டு ஆதிப்
பகை நின்ற அங்கத்தைப் பார் என்று மாறித்
தொகை நின்ற நேத்திரம் முத்திரை சூலம்
வகை நின்ற யோனி வருத்தலும் ஆமே.

தேவி சிகையால் உணர்த்தப்படும் ஆயிரம் இதழ்த் தாமரையில் ஒளியாகத் திகழ்வாள். காமம் முதலிய குற்றங்கள் பொருந்தி உயிருக்குப் பகைவர்களாக இருந்த அங்கங்களை அவள் மாற்றிவிடுவாள். மூன்று கண்களை உடைய தேவி உடலில் யோனி முதல் கபாலம் வரையில் ஒளிமயமாக விரவி விளங்குவாள்.

#1094. ஒளியை உண்டாக்கலாம்!

வருத்தம் இரண்டும் சிறுவிரல் மாறிப்
பொருத்தி அணிவிரல் சுட்டிப் பிடித்து
நெரித்து ஒன்ற வைத்து, நெடிது நடுவே
பெருத்த விரல் இரண்டு உல் புகப் பேசே.

கைகளை உள்முகமாகக் கொண்டு முயற்சியோடு சிறுவிரல் இரண்டையும் ஒன்றின்மேல் ஒன்றாக மாறி வைத்து அணிவிரல்களையும் அவ்வாறே சுட்டு விரல்களால் மாறிப்பிடித்து மோதிர விரல்களின் மேல் நீண்டதாகிய நடுவிரல் ஒவ்வொன்றையும் நிமிர்த்திப் பொருந்த வைத்துப் பெருவிரல் இரண்டையும் மாற்றமின்றி உள்ளே புகச் செய்தபின், நேத்திர மந்திரத்தைச் சொல்லுக.

#1095. பிராணன் வசப்படும்

பேசிய மந்திரம் இகாரம் பிரித்து உரை
கூசம் இலாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராணன் உபதேசம் ஆகைக்குக்
கூசிய விந்துவுடன் கொண்டு கூடவே.

பிராணனை வசப்படுத்தும் மந்திரம் இது. கூறுவதற்கு அரிய 'ச'காரத்துடன் 'இ' காரத்தைச் சேர்த்து விட்டு அத்துடன் பிந்துவிடன் கூடிய 'ம'காரத்தையும் சேர்த்துச் சொல்லவும். ச + இ + ம் = சிம்

#1096. நாதத்தின் நடுவே தேவி

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய 'ச' உடன் பண்ணும் 'யகாரத்தை'
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவில் திகழ்ந்து நின்றாளே.

இவ்வாறு கூறும் சீவன் பிராணன் மேல் எழும். 'ச'என்னும் சிவத்துடன் 'ய' என்னும் சீவன் உடன் உறையும். சுத்த மாயை விளங்கும் பொழுது சங்கின் ஒலி தோன்றி விரியும். அந்தச் சங்கொலியின் நடுவே திரிபுரைத் தோன்றுவாள்.

#1097. அடியவருக்கு அருள்வாள்!

நின்ற வயிரவி, நீலி, நிசாசரி,
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்று அருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்று அருள் ஞானத்து நாடிடும் சாற்றியே.

வயிரவி நீல நிறம் கொண்டவள். இரவில் இயங்குகின்றவள். சத்துவம், இராசதம், தாமசம் என்னும் முக்குணங்களுடன் கூடிய சீவனின் உள்ளத்தில் தானே வலியச் சென்று அருள் புரிகின்ற தேவி. தேவர்களுக்கு எல்லாம் தேவனாகிய சிவபெருமான் ஏவலின் படி நன்மைகளை அளிப்பவள். அவளை நாடிப் புகழ்ந்து போற்றுங்கள்.

#1098. யாவும் அவளே ஆவாள்

சாற்றிய வேதம், சராசரம், ஐம்பூதம்,
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி,
தோற்றும் உயிர்ப்பன்மை, சோதி, பராபரை,
ஆற்றலோடு ஆய் நிற்கும் ஆதி முதல்வியே.

சிவபெருமான் அருளிய வேதங்கள்; அசையும் பொருட்கள், அசையாப் பொருட்களால் நிறைந்த இந்த உலகம், இவற்றுக்குக் காரணமாகிய ஐந்து பூதங்கள், நான்கு திசைகள் இவை அனைத்துமே மூன்று கண்களை உடைய தேவியின் வடிவங்கள் ஆகும். இருள், வெளி, ஆன்மாக்களின் கூட்டம் இவை அனைத்தும் ஆவாள் ஒளிப் பிழம்பான அந்த தேவி. இவற்றுக்குக் காரணமும் அவளே! இவற்றுக்கு ஆற்றலைத் தருபவளும் அவளே.

#1099. பிறவிகள் நாசமாகும்

ஆதி வயிரவி, கன்னித் துறை மன்னி,
ஓதி உணரில் உடல், உயிர் ஈசன் ஆம்;
பேதை உலகில் பிறவிகள் நாசமாம்
ஓத உலவாத கோலம் ஒன்று ஆகுமே.

மூலாதாரத்தில் மண்டலமிட்டுச் சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியை எழுப்பிச சிரசில் அமைந்துள்ள சகசிர தளத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் அப்போது சாத்திரங்கள் கூறும் உண்மைகளை உண்மை அனுபவமாகப் பெற முடியும். அப்போது உடலும் உயிரும் சிவத் தன்மை அடையும். பேதை உலகினில் பிறவிகள் அழியும். வார்த்தைகளால் கூற முடியாத சிறந்த அழகு வந்து சேரும்.

#1100. சிவத்தை வெளிப்படுத்துவாள்

கோலக் குழலி, குலாய புருவத்தள்,
நீலக் குவளை மலரன்ன கண்ணினாள்,
ஆலிக்கும் இன்னமுது, ஆனந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத்தாளே.

அழகிய கூந்தலை உடையவள்; நன்கு விளங்குகின்ற புருவத்தினள்; கருங்குவளைக் கண்ணினாள்; இனிய அமுதினை நிகர்த்தவள்; ஆனந்தம் நிரம்பிய அழகி. இவள் மேலான சிவத்தை நமக்கு வெளிப்படுத்துவாள்.

#1101. அடியவரை ஆட்கொள்ளுவாள்

வெளிப்படு வித்து விளைவு அறிவித்துத்
தெளிப்படு வித்து என் சிந்தையின் உள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
ஒளிப்படு வித்து என்னை உய்யக் கொண்டாளே.

தேவி எனக்குச் சிவத்தை வெளிப்படுத்தினாள். அதனால் விளையும் பயனையும் அறிவித்தாள் . உள்ளத் தெளிவைத் தந்தாள் . என் சிந்தையில் களிப்பை

ஏற்படுத்தினாள். ஒளிக் கதிர்களுடன் விளங்கும் சிவனை மேலும் ஒளி மிகச் செய்தாள். எளியோனை உய்வித்து ஆட்கொண்டாள்.

#1102. அனைத்தும் தாங்குபவள் அவளே

கொண்டனள் கோலம் கோடி அனேகங்கள்
கண்டனன் என்னென் கலையின் கண் மாலைகள்
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையும்
தண்டலை மேல் நின்ற தையல் நல்லாளே.

சிரசின் உச்சியில் உள்ள குளிர்ந்த சந்திர மண்டலத்தில் விளங்குபவள் தேவி. பல கோடி சீவர்களிடம் பொருந்திப் பல கோடி உயிர்களைத் தாங்குகின்றாள் அந்தத் தேவி. பதினாறு கலைகளையும் வரிசையாகத் தன்னிடம் பொருத்திக் கொண்டுள்ளாள். வானத்தில் விரிந்து ஒளி வீசும் சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்று ஒளிரும் பொருட்களையும் படைத்தவள் அவளே.

#1103. இனிப் பிறவி இராது

தையல் நல்லாளை, தவத்தின் தலைவியை ,
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பைய நின்று ஏத்திப் பணிமின், பணிந்தபின்
வெய்ய பவம் இனி மேவகி லாவே.

தையல் நாயகி ஆகிய தேவி துறவிகளுக்கு அருள் புரிபவள்; உலகத்தோரின் மயக்கத்தைத் தன் அருட் கண்களால் அகற்றுபவள்; அவளை மெல்ல நின்று துதித்துப் பணியுங்கள். அங்கனம் பணிந்தவரைக் கொடிய பிறவிப் பிணி இனிமேல் அண்டாது.

#1104. உள்ளத்தில் உள்ளாள்

வேய் அன தோளி, விரைஉறு மென்மலர்
ஏய குழலி, இளம் பிறை ஏந்திழை,
தூய சடைமுடிச் சூலினி, சுந்தரி,
ஏய்எனது உள்ளத்து இனிது இருந்தாளே.

தேவி மூங்கில் போன்ற அழகிய தோளை உடையவள். சந்திர மண்டலத்தில் விளங்குபவள். பொருந்திய குழலைப் போன்ற சித்திரணி நாடியில் விளங்குபவள். இளம் பிறையை முடிமேல் அணிந்தவள். தூய கதிர்களைச் சடைமுடியாகக் கொண்டவள். அவள் சூலினி. அவள் சுந்தரி. அவள் என் உள்ளதைத் தன் இருப்பிடமாகக் கொண்டு அமர்ந்திருப்பாள்.

#1105. சார்பினை மாற்றி அமைப்பாள்

இனிய தென் மூலை இருக்கும் குமரி
தனி ஒரு நாயகி, தானே தலைவி,
தனிப்பட்டு வித்தனள் சார்வு படுத்து
நனிபடு வித்து உள்ளாம் நாடி நின்றாளே.

இனிய மூலாதாரத்தில் இருக்கு குமரிப் பெண் அவள்; ஒப்பற்றவள் தேவி அவள்; தானே தனக்குத் தலைவி ஆனவள்; அவள் என் மனத்தின் மலச் சார்புகளை அகற்றினாள். என்னை அவற்றிலிருந்து பிரித்த பின்னர் அந்த உள்ளம் அவள் திருவடிகளைச் சார்பாகக் கொள்ளச் செய்தாள். அவள் என்னை விரும்பி நின்றாள்.

#1106. பொற்சிலம்பின் ஒலி

நாடிகள் மூன்று நடுஎழு ஞாளத்துக்
கூடி யிருந்த குமரி, குலக்கன்னி
பாடகச் சீறடிப் பைம் பொன் சிலம்பு ஒலி
ஊடகம் மேவி உறங்குகின்றாளே.

மூன்று நாடிகளில் நடுவில் உள்ள நாளம் போன்ற நாடியில் பொருந்தி தேவி இருப்பவள். அந்தக் கன்னித் தன் காலில் அணிந்துள்ள பொற் சிலம்பு எழும் ஒலியுடன் என் உள்ளத்தில் பொருந்தி அமைதியாக இருகின்றாள்.

#1107. "உறங்க வேண்டாம்" என உபாயம் சொன்னாள்

உறங்கும் அளவில் மனோன்மணி வந்து
கறங்கு வளைக் கை கழுத்து ஆரப் புல்லி
பிறங்கு ஒளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு
"உறங்கல் ஐயா" என்று உபாயம் செய்தாளே.

நான் உறங்கிய போது மனோன்மணி என்னிடம் வந்தாள். வளைகள் ஒலிக்கும் கரங்களால் (சுழுமுனை நாடியால்) என் கழுத்தை இறுகத் தழுவினாள்.(இது தலையில் ஒலியும், ஒளியும் பரவும்போது மூச்சுக் கீழே செல்லாத வண்ணம் தொண்டை இறுக்கம் அடைவது). அவள் சக்தியை என் வாயில் தந்தாள். (இது தலையில் அடங்கி இருந்த சக்தியைத் தேவி வெளிப்படுத்துதல்) "ஐயா உறங்க வேண்டாம்!" என்று கூறி (இறைவனைச் சென்று அடைவதற்கான) உபாயத்தையும் சொன்னாள்.

#1108. உபாயமும், அபயமும் தந்தாள்

உபாயம் அளிக்கும் ஒருத்தி என் உள்ளத்து
அபாயம் அறக் கெடுத்து, அன்பு விளைவித்துச்
சுவாவை விளைக்கும் சுழியகத்துள்ளே
அவாவை அடக்கி வைத்தி “அஞ்சல்” என்றாளே.

இறைவனை அடையும் நல்ல உபாயத்தை எனக்கு அளித்தாள் தேவி. அவளே என் உள்ளத்தில் காமக் குரோதங்கள் முதலிய கொடிய பகைவர்களால் ஏற்படும் அபாயங்களையும் போக்கினாள். என்னுள் இறைவனிடம் நீங்காத அன்பை விளைவித்தாள். நாயைப் போலத் தறிகெட்டு அலைகின்ற உள்ளத்தில் எழுகின்ற ஆசைகளை அடக்கி வைத்தாள். “அஞ்சேல் ” என்று எனக்கு அபயமும் தந்தாள்.

#1109. சேவடி சேர்பவர் இன்பம் பெறுவர்

அஞ்சொல் மொழியா ளருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்கு
இன்சொ லளிக்கும் இறைவியென் றாரே.

அழகிய பிரணவ ஒலியை எழுப்புபவள்; அரிய தவத்தால் அடையக் கூடிய பெண் தெய்வம்; சீரிய சொற்களையே சொல்பவள்; சிவந்த ஒளியில் திகழ்பவள்; சேயிழை; தஞ்சம் என்று அவள் திருவடிகளை அடைந்தவருக்கு “அஞ்சேல்” என்ற இனிய சொல்லைக் கூறும் தேவி. மனோன்மணியைக் குறித்து இவ்வண்ணம் சிறப்பாக உரைப்பர்.

#1110. உள்ளம் குலாவி நிற்பாள்

ஆருயிர் ஆயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரிய கோதையள் காரணி, நாரணி,
ஊரும் உயிரும் உலகும் ஒடுக்கிடும்
கோரிஎன் உள்ளம் குலாவி நின்றாளே.

நல்வினை ஆற்றியதன் பயனாகவே ஒருவரால் அந்த தேவியை ஆராய முடியும். செய்யும் அருந்தவமே அவளிடம் கொண்டு சேர்க்கும். அவள் கரிய நிறம் உடையவள்; அனைத்துக்கும் காரணமானவள்; நாரணனின் அன்புத் தங்கை; உடல், உயிர், உலகம் என்று அனைத்தையும் ஒடுக்கும் வல்லமை கொண்ட கோரமானவள். அவள் என் உள்ளத்துள்ளே மகிழ்வுடன் வீற்றிருந்தாள்.

அஞ்ஞானத்தில் மூழ்கியுள்ள சீவர்களிடம் கோரமாகவும், ஞான மயமான சீவர்களிடத்தில் இனிமையாகவும் இருப்பவள் தேவி.

#1111. உச்சியில் உலாவுவாள்

குலாவிய கோலக் குமரி, என் உள்ளம்
நிலாவி யிருந்து, நெடு நாள் அனைந்தும்
உலாவி இருந்து உணர்ந்து உச்சியின் உள்ளே
கலாவி இருந்த கலைத்தலை யாளே.

உள்ளத்தில் குலாவிய கோலக் குமரி நீண்ட காலம் என் உள்ளத்தில் நிலாவி இருந்தாள். அவள் சீவனின் உடலில் நாதத்தை வெளிப்படுத்துவாள். உணர்வுடன் கலந்து மேலே சென்று, சந்திர மண்டலத்தை அடைவாள். அங்கே சந்திர கலைகள் தன் தலையில் நன்கு பொருந்திட தலை உச்சியில் உலாவுவாள்.

#1112. படர்கின்ற சுடர்க்கொடி

கலைத்தலை நெற்றிஓர் கண்உடை கண்ணுள்
முலைத்தலை மங்கை முயங்கி இருக்கும்
சிலைத்தலை ஆறு தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கொம்பினள் அங்கு இருந்தாளே.

நெற்றியிலிருந்து தலை உச்சி வரையில் அமைந்துள்ளது சந்திர மண்டலம். சந்திரனின் ஒளியால் சிறப்புற்றது இந்த மதி மண்டலம். இங்கு மேருமலையின் உச்சியில் சக்தி சிவத்துடன் கூடிப் படரும் கொடி போல அசைந்து ஆடிக் கொண்டிருப்பாள். ஏனெனில் அசையும் ஒளிஅணுக்களால் ஆனவள் தேவி.

#1113. சிவத்துடன் ஒன்றி இருப்பாள்

இருந்தனள் ஏந்திழை என் உள்ளம் மேவிப்
பொருந்திய நால்விரல் புக்கனள் புல்லித்
திருந்திய தாணுவில் சேர்ந்து, உடன் ஒன்றி
அருந்தவம் எய்தினள் ஆதியி னாளே.

சக்தி என் மனதில் மெல்லிய இழை போன்ற வடிவத்துடன் விளங்கினாள். உள் நாக்குக்கு மேலே நான்கு விரற்கடையளவு உள்ள பாதையில் புகுந்தவுடன் திருந்திய சிறந்த அறிவு வடிவாகிய சிவத்துடன் சக்தி ஒன்றாகி விட்டாள். அதன் மூலம் அவள் அருந்தவக் கூத்தினை அடைந்தாள்.

#1114. பிரியாமல் இருப்பாள்

ஆதி அனாதி அகாரண காரணி
சோதி, அசோதி, சுகபர, சுந்தரி
மாது, சமாதி மனோன்மணி, மங்கலை
ஓதிஎன் உள்ளத்து உடன் இயைந் தாளே.

இவள் எல்லாவற்றுக்கும் முன்னே இருந்தவள். இவளுக்கு முற்பட்டது என்று எதுவும் இல்லை.
இவள் எல்லாவற்றுக்கும் காரணம் ஆனவள். இவளுக்கு ஒரு காரணம் என்று எதுவும் இல்லை.
இவள் சோதியாகவும் இருப்பாள். இவளே சோதியின்றியும் இருப்பாள்.
சுகம் பொருந்தியவள். எல்லோரையும் விடவும் மிகவும் அழகானவள்.
இவள் இன்பத்தையும் அளிக்க வல்லவள். தூய சமாதி நிலையையும் அளிக்க வல்லவள்.
இவளே மனோன்மணி, இவளே மங்கலை, இவள் பிரிவின்றி என் உள்ளத்தில் உள்ளாள்.

#1115. திரிகால ஞானம் உண்டாகும்

இயைந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
அயன் தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத்தாளே.

என்னுள்ளம் மேவிய பராசக்தி என்னிடமிருந்து பிரியாமல் இருந்தாள். அவள் என்னை விரும்பி இருந்தாள். சிவ வடிவமான தேவியை நான் வணங்கினேன். அதுவே நான்முகனின் படைப்பினை ஆராய்ந்து உணர்ந்து கொள்ளும் வல்லமையை நமக்கு அளிக்கும். தேவி என் பற்றுகளை அகற்றி அருளினாள். அவற்றுடன் நூல்களைக் கற்றதன் பயனாக பெற்ற அறிவினால் நான் பிதற்றிய மொழிகளையும் போக்கிவிட்டாள்.

#1116. முத்தி அருளும் முதல்வி

பிதற்றிக் கழிந்தனன்ர் பேதை மனிதர்,
முயற்றியில் முத்தி அருளும் முதல்வி
கயல் திகழ் முக்கண்ணும் கம்பலைச் செவ்வாய்
முகத்து அருள் நோக்கமும் முன்உள்ள தாமே.

பேதை மனிதர்கள் வாதம் செய்வதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழிகின்றனர். உண்மையை அறிந்து கொள்ள முயல்வதில்லை. அவள் முயற்சியால் வீடுபேற்றை அருளுபவள் அந்த முதல் தலைவி. மீன் போன்ற மூன்று கண்களை உடையவள். ஒலியை எழுப்புகின்ற சிவந்தி ஒளி படைத்தவள். அருள் பொழிகின்ற திருமுகம் கொண்டவள். இவற்றை எல்லாம் அறிந்து கொள்ளாமல் சிலர் விளங்குகின்றனரே.

#1117. கள்ள ஒளி தெள்ளத் தெளிவாகும்

உள்ளத்து, இதயத்து, நெஞ்சத்து ஒரு மூன்றுள்
பிள்ளைத் தடம் உள்ளே பேசப் பிறந்தது
வள்ளல் திருவின் வயிற்றினுள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்து ஆகும் கன்னியே.

மூலாதாரத்தில் விளங்க முடியாத ஓர் ஒளியாக இருப்பாள் தேவி. உள்ளம், இதயம், நெஞ்சு என்று மேலே சென்று அண்ணாக்குப் பகுதியில் தொடங்கி பிரமரந்திரம் வரை உள்ள சிறிய சீரிய பாதையில் நாதத்துடன் விளங்குவாள். வள்ளல் சிவாபெருமானின் கருத்துப் படி தொழில் ஆற்றுகின்ற சுத்த மாயையாகிய தேவி படைத்தலில் கருத்து ஊன்றிய கன்னி ஆவாள்.

#1118. மாயை என்னும் இருள்

கன்னியும் கன்னி அழிந்திளல், காதலி
துன்னி அங்கு ஐவரைப் பெற்றனள் தூய் மொழி
பண்ணிய நன்னூற் பகவரும் அங்குளன்
என்னே இம்மாயை இருள் அது தானே.

சக்தி மூலாதாரத்தில் இருக்கும் போது கன்னித் தன்மை அழியாதவள். அவளே சிவனின் காதலியாகி அவனுடன் பொருந்தி ஐந்து மக்களைப் பெற்றனள். (நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவர்). அவள் தூய நாத வடிவுடையவள்; மறைகள் புகழும் சிவனும் அங்கே உள்ளான். இதே மாயை அறியாமையின் இருளாகவும் விளங்குகின்றது! என்ன ஆச்சரியம் இது!

#1119. ஆதிப் பிரான் அருள் செய்வான்

இருளது சத்தி, வெளியது எம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்,
தெருளது சிந்தையைத் தெய்வம் என்று எண்ணில்
அருளது செய்யும் எம் ஆதிப் பிரானே.

இருள் மயமாக இருக்கும் சக்தி. சிவன் ஞான வெளியில் விளங்குபவன். சிவனுடன் கலந்து இருக்கும் இன்பமயமான சிவயோகமே புண்ணியர்கள் விரும்புகின்ற சிவபோகம். தேடும் பொருள் சிவனே என்ற தெளிந்த சிந்தையுடன் ஒருவர் நாதத்தை வணங்கினால், சிவன் அந்த நாதத்தை இடமாகக் கொண்டு அவருக்கு அருள் புரிவான்.

#1120. விரிந்து பரந்து நிரம்பும் மனம்

ஆதி அனாதியும் ஆய பராசத்தி,
பாதி, பராபரை, மேல்உறை பைந்தொடி,
மாது, சமாதி, மனோன்மணி, மங்கலி
ஓதும் என் உள்ளத்து உடன் முகிழ்ந்தாளே.

பராசக்தி ஆதியானவள்; அனாதியானவள்; சிவனின் பாதித் திருமேனியை தனதாக்கிக் கொண்டவள்; எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவள்; எல்லா தெய்வங்களுக்கும் மேலே நாதமயமாக விளங்குபவள்; உயரிய மாது, பெருமைகளை தன்னிடம் நிலைக்கச் செய்பவள்; மனோன்மணி, நித்திய மங்கலி. அவளை எண்ணித் தொழுபவர் மனத்தை அவள் விரிந்து பரந்து நிரப்புவாள்.

#1121. சாதியையும் பேதமும் சக்தியே

ஓதிய வண்ணம் கலையின் உயர்கலை
ஆதியில் வேதமேயாம் என்று அறிகிலர்
சாதியையும் பேதமும் தத்துவமாய் நிற்பள்
ஆதி என்று ஓதினள் ஆவின் கிழத்தியே.

"கலைகளில் உயர்வானது பிரணவம். அந்தப் பிரணவமே யாம் என்ற உண்மையை அறியாத மக்கள் உள்ளனர்!" சாதிகள், அவற்றால் விளையும் பேதங்கள், அவற்றின் தத்துவங்கள் அனைத்துமே சக்தியே என்ற உண்மையை ஆதிசக்தியே எனக்கு அறிவித்தாள்.

#1122. வினைகளைக் கடிந்து களைவாள்

ஆவின் கிழத்தி நல் ஆவடு தண்துறை
நாவின் கிழத்தி, நலம் புகழ்ந்து ஏத்திடும்,
தேவின் கிழத்தி, திரு ஆம் சிவ மங்கை,
மேவும் கிழத்தி வினை கடிந்தாளே.

உயிர்களின் தலைவி சக்தி தேவி. உயிர்களை பக்குவம் செய்யும் வீணாத் தண்டில் இவள் வாகீசுவரியாக விளங்குவாள். நன்மைகளைத் தருபவள் என்று அவளைத் தேவர்கள் புகழ்ந்து பேசும் தலைவி. சிவபெருமானின் மங்கை இவள்; விரும்பி வழிபடும் அடியவரின் வினைகளைக் கடிந்து களைபவள்.

#1123. சிவனுக்கும் அவள் அனாதி ஆவாள்

வினை கடிந்தார் உள்ளத்து உள்ளொளி மேவித்
தனை அடைந்தோர்க்கு எல்லாம் தத்துவமாய் நிற்பள்
எனை அடிமை கொண்ட ஏந்திழை, ஈசன்
கணவனைக் காண அனாதியும் ஆமே.

வினைப் பயன்களை அழித்து விட்டவர்களின் உள்ளத்தில் இவள் ஒளியாக விளங்குவாள். தன்னையே அடைக்கலம் என்று தஞ்சம் அடைந்தவருக்கு தத்துவம் என்னும் உண்மைப் பொருளாக விளங்குவாள். இவள் என்னை அடிமை கொண்டுவிட்ட ஏந்திழை. இவள் கணவன் ஆகிய சிவனைக் காட்டிலும் இவளே அனாதி ஆனவள் என்று அறிவீர்.

#1124. சக்தியே சிவனின் வடிவம்

ஆதி, அனாதி, அகாரணி, காரணி,
வேதம் அது ஆய்ந்தனள், வேதியர்க்காய் நின்ற
சோதி தனிச் சுடர் சொருபமாய் நிற்கும்
பாதி, பராரை, பன்னிரண்டு ஆதியே.

தேவி அனைத்துக்கும் முதன்மையானவள்; அனைத்துக்கும் பழமையானவதள். தனக்கு என்று காரணம் ஒன்றும் இல்லாதவள்; எல்லாவற்றுக்கும் தானே காரணம் ஆனவள்; வாக்கின் தெய்வமாக இருந்து வேதியர்களுக்கு ஆராயும் திறனைத் தந்தவள்; தனி பெருஞ்சுடரான சிவத்தின் வடிவம் ஆனவள்; அவன் மேனியில் பாதியைத் தனதாக்கிக் கொண்டவள்; பன்னிரண்டு ஆதவர்களைப் போல ஒளிவீசுபவள் ஆதிசக்தி.

நான்காம் தந்திரம் -
7. பூரண சக்தி

பூரண சக்தி என்றால் முழுமையான சக்தி.

#1125. ஆராய்ச்சியின் முடிவு

அளந்தேன் அகலிடத்துஅந்தமும் ஈறும்,
அளந்தேன் அகலிடத்து ஆதி பிரானை,
அளந்தேன் அகலிடத்து ஆணொடு பெண்ணும்,
அளந்தேன் அவன் அருள் ஆய்ந்து உணர்ந்தேனே.

உலகங்களின் முடிவையும், அவை முடிகின்ற இடத்தையும் நான் ஆராய்ந்தேன். அனைத்துமே ஆதிப் பிரான் ஆகிய சிவனிடம் சென்று லயம அடைவதை அறிந்து கொண்டேன். ஆண் பெண் என்னும் மாறுபட்ட பாலுணர்ச்சி முடிவடையும் இடத்தையும் நான் அறிந்து கொண்டேன். சிவசக்திய எங்கனனம் அருள் புரிகின்றனர் என்பதையும் நான் ஆராய்ந்து அறிந்து கொண்டேன்.

#1126. ஆன்மாவின் லயம்

உணர்ந்திலர்; ஈசனை ஊழி செய் சத்தி
புணர்ந்தது பூரணம்; புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன் அருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பகம் ஆமே.

ஆன்மாவின் மீது ஈசன் செலுத்தும் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் பராசக்தியை மக்கள் அறிந்து கொள்ளவில்லை. குண்டலினி சக்தி பராசக்தியுடன் கலக்கும் போது முழுமை அடையும். பராசக்தி புண்ணியம் செய்தவர்களைத் தன்னருளில் நிலைத்திருக்கச் செய்பவள்; ஆன்மா உடலின் பொருந்திட உதவியது போலவே பராசக்தி ஆன்மா லயம் அடைவதற்கும் உதவுவாள்.

விளக்கம்

ஆன்மா உடலில் இருந்து பிரிந்த பிறகு, மகேசுவரர் அதன் மீது செலுத்திய ஆட்சி முடிந்து விடும். குண்டலினிசக்தி சிற்சக்தியுடன் பொருந்திப் பூரணம் அடையும் போது உடல் நினைவு அழிந்து விடும். அப்போது மூச்சின் இயக்கம் முழுமையாகவே நின்று விடும். இயல்பாகவே கும்பகம் அமைந்திடும்.

#1127. அன்பே வடிவம் ஆகும்

கும்பக் களிறு ஐந்தும், கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிது உறை தையலும்
அன்பின் கலவியு ளாய்ஒழிந் தாரே.

மதம் கொண்ட ஐந்து யானைகளே நம் ஐம்புலன்கள். அவற்றை செலுத்துவது நம் மனம் என்னும் பாகன். குண்டலினி சக்தி கீழ் முகமாகப் பாயும் பொழுது காமச் செயலில் விருப்பம் ஏறபடுத்தி சீவர்களுக்குச் சிற்றின்பத்தைத் தருவாள். அவளே சிவன் காதல் கொண்டு மேலே சென்று சகசிரதளத்தை அடைபவர்களுக்கு கலவி இன்பதை ஒழித்துப் பேரின்பத்தை அளிப்பாள்.

#1128. இன்பக் கலவியும், துன்பக் குழம்பும்

இன்பக் கலவியில் இட்டு எழு கின்றது ஓர்
அன்பில் புகவல்ல னாம் எங்கள் அப்பனும்,
துன்பக் குழம்பில் துயர் உறும் பாசத்துள்
என்பில் பராசக்தி, என் அம்மை தானே.

சீவர்களை இன்பக் கலவியில் செலுத்தி அங்கே எழும் ஆனந்தத்தில் நுழைய வல்லவன் சிவபெருமான். துன்பக் குழம்பாகிய சுக்கில சுரோணிதச் சேர்க்கையில் சிவன் விருப்பம் கொள்வான். சீவர்களுக்குப் பந்தத்தை விளைவிப்பான். இந்தச் செயலுக்குத் துணையாகப் பராசக்தியும் சீவனின் முதுகுத் தண்டாகிய வீணாத் தண்டில் பொருந்தி உள்ளாள்.

#1129. அப்பனும், அம்மையும் சிவசக்தியர்

"என் அம்மை, என் அப்பன்" - என்னும் செருக்கு அற்று
உன் அம்மை ஊழித் தலைவனும் அங்கு உளன்
மண் அம்மை ஆகி மருவி உரை செய்யும்
பின் அம்மையாய் நின்ற பேர் நந்தி தானே.

உம் உற்பத்திக்குக் காரணம் உடல் உறவு கொண்ட உம் தாயும் தந்தையும் என்ற மயக்கம் தரும் எண்ணத்தை நீக்கி விடுவீர். சுத்த வித்திய மண்டலம் என்னும் சுத்த மாயையில் உள்ள அன்னையும், சிவனும் நம் தாயும் தந்தையும் ஆவர். இந்த அம்மை நிலையாக உம்மைப் பொருந்தி நாதத்தைத் தந்தருள்வாள். அவள் விளங்குகின்ற ஒளி மண்டலம் நந்தி என்னும் குருமண்டலம் ஆகும்.

#1130. நாமேல் உறையும் நாயகி

தார் மேல் உறைகின்ற, தண்மலர் நான்முகன்
பார் மேல் இருப்பது, ஒரு நூறு தான் உள,
பூ மேல் உறைகின்ற போதகம், வந்தனள்
நா மேல் உறைகின்ற நாயகி ஆணையே.

உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள் ஒரு மாலையைப் போல விளங்குபவை. அவற்றில் ஒன்றான சுவாதிட்டானத்தில் வீற்றிருக்கும் நான்முகன் படைக்கும் சீவர்களின் ஆயுள் நூறு ஆண்டுகள் ஆகும். சுவாதிட்டானத்தில் இருந்து கொண்டு படைப்புக்கு உதவுபவள் நாமகள். அவளே ஞானவாணியாக சிரசின் மேலே எழுந்தருளுவாள். சீவனைத் தாழ்ந்த காமத்தை விட்டுவிட்டு உயரிய ஞானத்தை நாடச் செய்கின்றாள்.

#1131. பரத்தை அறிந்த பிறகு…

ஆணைய மாய், வருந் தாதுஇருந்தவர்
மாண் ஐயம் ஆய மனத்தை ஒருக்கிப் பின்
பாணையம் ஆய பரத்தை அறிந்தபின்,
தாண் நயம் ஆய தனா தனன்தானே.

உண்மையாகவே இறைவனிடம் நம்பிக்கை வைப்பவர் "எல்லாம் அவன் செயல்" என்று கவலை இன்றி இருப்பார்கள். மனத்தில் இருந்த நுட்பமான ஐயங்கள் தெளிவடைந்த பிறகு, மனத்தை அடக்கி நாதமயமான பரத்தை அறிந்து கொள்வார்கள். அதன் பிறகு இறைவன் தன்னை விட்டு அகலாதபடி அவன் இருப்பிடம் ஆகிவிடுவார்கள்.

#1132. மதி மண்டலம் அமையும்

தானே எழுந்த இத்தத்துவ நாயகி
வான்நேர் எழுந்து, மதியை விளக்கினள்,
தேன்நேர் எழுகின்ற தீபத்து ஒளியுடன்
மானே நடம் உடை மன்று அறியீரே.

தத்துவ நாயகி சீவனின் மீது தன் அருள் மிகுந்தால் மூலாதாரத்தில் இருந்து தானே மேலே எழுவாள். மதி மண்டலத்தில் ஒளி வீசச் செய்வாள். வான மண்டலத்தை நன்கு புலப்படச் செய்வாள். தேன் தாரையை போன்று இடைவிடாத விருப்பத்தால் எழும் ஒளியில் பராசக்தி நடனம் செய்யும் இடம் பொன்னம்பலம் ஆகும். இதை அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

#1133. விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்

அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்து
அறிவான மங்கை அருள் அது சேரின்,
பிரியா அறிவு அறிவார்; உளம் பேணும்
நெறியாய சித்தம் நினைத்து இருந்தாளே.

ஐந்து தன்மாத்திரைகளை (சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவற்றை) அறிய உதவுபவை ஐந்து ஞானேந்திரியங்கள் (செவி, த்வக்கு, கண், நாக்கு, மூக்கு). இவை அனைத்தும் ஐம்பொறிகளின் உதவி இல்லாமல் அறியக் கூடிய பராசக்தியைச் சேர வேண்டும். அப்போது நீங்காத ஆறிவு பிறக்கும். அங்ஙனம் அவளைப் பொருந்தி நிற்பவரின் விருப்பங்கள் எல்லாம் அவள் அருளால் நிறைவேறும்.

#1134. நாத சக்தி

இரவும் பகலும் இலாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை நாடி,
அரவம் செய்யாமல் அருளுடன் தூங்கப்
பருவம் செய்யாததோர் பாலனும் ஆமே.

சந்திரன், சூரியன் இயங்காத இடத்தில், மகிழ்ச்சியைத்தரும் நாதசக்தியுடன், ஆரவாரம் செய்யாமல், அருளுடன் அமைந்திருந்தால், பருவம் மாறாத பாலகனாகவே எப்போதும் இருக்கலாம். நாதசக்தியாகிய தேவியுடன் பொருந்தி இருப்பவர் என்றும் இளமையோடு இருப்பார்.

#1135. சக்தி விளங்கும் இடம் எது?

பாலனும் ஆகும் பராசக்தி தன்னோடு,
மேல் அணுகா, விந்து நாதங்கள் விட்டிட,
மூலம் அது ஆம் எனு முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே.

தேவியாகிய நாதசக்தியோடு பொருந்தியிருந்தால் என்றும் இளமையோடு இருக்கலாம். ஆனால் விந்து நாதங்களைக் கடந்து விட்டால் வீடுபேற்றினை அளிக்கும் பாதையில் பராசக்தி விளங்குவதைக் காணலாம். மூலத்தை அடைவதே முத்தி எனில் விந்து நாதங்களைக் கடக்கும்போது அங்கு பராசக்தியைக் காணலாம்.

#1136. முத்தி நிலை என்பது என்ன?

நின்ற பராசத்தி நீள் பரன் தன்னொடும்
நின்று அறி ஞானமும் இச்சையுமாய் நிற்கும்,
நன்று அறியும் கிரியா சக்தி நண்ணவே
மன்றன அவற்றுள் மருவிடும் தானே.

சக்தி இச்சா சக்தி, கிரியா சக்தி , ஞான சக்தி என மூவகைப் படும். சீவன் கீழ் நோக்குடன் இருக்கும் போது இச்சா சக்தியாகவும், கிரியா சக்தியாகவும் விளங்குவாள் பராசக்தி. சீவன் மேல் நோக்குடன் ஞானத்தைத் தேடிச் செல்கையில் அவளே ஞான சக்தியாக விளங்குவாள். நாதாந்ததில் நிலை பெற்ற பராசக்தி சிவத்துடன் ஒன்றி விடுவாள். சீவனின் சித்தம் சிவம் ஆகும் போது சீவனும், சிவனும், சக்தியுள் அடங்கிவிடுவர். மூவகைச் சக்திகளும் பராசக்தியில் அடங்கி விடும். பரன், பராபரை, பரம் ஆகிவிட்ட சீவன் மூன்றும் ஒன்றிவிடும் நிலை முத்தி நிலை எனப்படும்.

#1137. மலரும் மணமும் போலச் சிவசக்தியர்

மரு ஒத்த மங்கையும் தானும் உடனே
உரு ஒத்து நின்றமை ஒன்றும் உணரார்,
கரு ஒத்து நின்று கலக்கின போது,
திரு ஒத்த சிந்தை வைத்து எந்தை நின்றானே.

மணமும் மலரும் போலச் சிவசக்தியர் பிரிக்க முடியாத படி இணைந்துள்ளனர். அவர்கள் இவ்வாறே ஆன்மாக்களிலும் பிற தத்துவங்கள் அனைத்திலும் பொருந்தியுள்ளனர். ஆயினும் இதை உலகத்தோர் சிறிதும் உணர்வதில்லை. இங்ஙனம் சிவசக்தியர் சமமாகக் கலந்த நிலையில் சிவன் சக்தியின் மேல் வைத்த சிந்தையை என் மேலும் வைத்து அருளினான். அவன் எனக்கு நன்கு விளங்கினான்.

#1138. ‘அ’ முதல் ‘க்ஷ’ வரை

சிந்தையின் உள்ளே திரியும் சிவசக்தி
விந்துவும் நாதமும் ஆயே விரிந்தனள்,
சந்திர பூமி, சடாதரி, சாத்தவி,
அந்தமொடு ஆதியது ஆம் வண்ணத்தாளே.

சிந்தைக்குள் உலவிடும் சக்திதேவி நாதம், விந்துக்களாக விரிவடைந்தாள். அவள் சந்திர மண்டலத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டவள். அவள் உடலின் ஆறு ஆதாரங்களிலும் விளங்குபவள். அவள் சத்துவ குணம் நிரம்பியவள். அவள் ‘அ ‘ முதல் ‘க்ஷ ‘ ஈறாக ஐம்பத்தொன்று எழுத்துக்களிலும் உறைபவள்.

#1139. சிந்தையில் ஊறும் சுந்தரி

ஆறி இருந்த அமுத பயோதரி
மாறி இருந்த வழி அறிவார் இல்லை,
தேறி இருந்து நல் தீபத்து ஒளியுடன்
ஊறி இருந்தனள் உள் உடையார்க்கே.

சந்திர மண்டலத்தைத் தன்னிடமாகக் கொண்டவள் சக்தி தேவி. அவள் தன் ஆற்றலைக் குறைத்துக் கொண்டு அமுது ஊறும் அழகிய கொங்கைகளுக்குக் கீழேயும் விளங்குவாள். இவ்வாறு மேலும் கீழுமாக இரண்டு மாறுபட்ட நிலைகளில் சக்தி தேவி அமைவதை அறிந்தவர் எவரும் இல்லை. மனம் தெளிவடைந்து, புருவ மத்தியில் விளங்கும் ஒளியைக் காணும் அன்பர்களின் சிந்தையில் அந்த சுந்தரி ஒரு வற்றாத ஊற்றாக விளங்குவாள்.

#1140. அங்கி வடிவான உருத்திரன்

உடையவன் அங்கி , உருத்திர சோதி,
விடையவன் ஏறி விளங்கி இருக்கும்,
கடையவர் போயிடும், கண்டவர் நெஞ்சத்
தடை; அது ஆகிய சாதகர் தாமே.

தீ வடிவான உருத்திரனின் அடிமை நான். மூலாதாரத்தில் இவன் சோதியாக விளங்குவான். இவனே விந்து மண்டலத்தை அடைந்து அங்கு சிறப்புடன் அமர்வான். இந்த உண்மையினை அறியாதவர்கள் சென்று விடுங்கள்! இதனை அறிந்தவர் சிறந்த யோகசாதகர் ஆவார்.

#1141. சகசிர தளத்தில் சக்தி தேவி

தாம் மேல் உறைவிடம் ஆறு இதழ் ஆனது;
பார்மேல் இதழ் பதினெட்டு இருநூறு உள,
பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மேல் உறைகின்ற பைங்கொடியாளே.

ஆறு இதழ்த் தாமரையான சுவாதிட்டானம் தேவி உறையும் இடம். பூமித் தத்துவமாகிய இதற்கும் மேலே இன்னும் 218 உலகங்கள் உள்ளன. பூமித் தத்துவத்தில் விளங்கிய நாதசக்தியே மேலே சென்று சகசிரதளத்துக்குப் புண்ணிய வசத்தினால் வந்து சேர்ந்தாள்.

அண்டகாயத்தில் 224 உலகங்கள் உள்ளன. பூமித் தத்துவமாகிய ஆறு இதழ்த் தாமரையாகிய சுவாதிட்டானத்துக்கு மேலே இன்னும் 218 உலகங்கள் உள்ளன. இவை அனைத்துக்கும் மேலே அமைந்துள்ளது சகசிரதளம்.

#1142. இயக்குபவள் சக்தி தேவி

பைன்தொடியாளும் பரமன் இருந்த இடம்
திண்கொடியாகத் திகழ் தரு சோதியாம்,
விண்கொடி யாகி விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்தது உலகே.

சிவபெருமான் இருந்தபடி இருப்பான். சக்தியே செயலாற்றுவாள். வல்லமை மிகுந்த சோதி வடிவான சிற்சக்தி இவளே. வான் கூற்றில் விளங்கும் தேவியும் இவளே. உலகம் இயங்குவது பெண்கொடியாகிய சக்தியின் அருளால் மட்டுமே.

#1143. குண்டலினியே நவசக்தியானது

நடந்தது அம்மலர் நாலுடன் அஞ்சாய்,
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றாய்,
படர்ந்தது தன் வழி பங்கயத்துள்ளே,
தொடர்ந்து உள்வழி சோதி அடுத்தே.

நான்கு இதழ்த் தாமரையாகிய மூலாதாரத்தைத் தன் இருப்பிடம் ஆகக் கொண்டது குண்டலினி சக்தி. அதற்கு மேல் உள்ள சுவாதிட்டானம், மணிபூரகம் , அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஐந்து ஆதாரங்களிலும் அது பொருந்தியது. சகசிரதளத்தை அடைந்து அங்கே நவசக்தியராக மாறியது. அதுவே உள்வழியாகிய வீணா தண்டின் ஊடே போரொளியாகப் புகுந்து சென்றது.

#1144. சகசிரதளத்தில் குண்டலினி சக்தி

அடுக்குந் தாமரை ஆதியின் இருப்பிடம்
எடுக்குந் தாமரை இல்லகத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்த கத்தேசெல
முடுக்குந் தாமரை முச்சது ரத்தே.

சகசிரதளம் ஆதிசக்தியின் இருப்பிடம். இதன் ஆற்றல் உடலில் உள்ள மற்ற சக்கரங்களிலும் உள்ளது. இது உடலையும் சிதாகாசத்தையும் இணைப்பது. குண்டலினி சக்தியை மேல் நோக்கிச் செலுத்தி சகசிரதளத்தை அடையச் செய்வது முக்கோணமும் நாற்கோணமும் பொருந்திய மூலதாரமே ஆகும்.

#1145. குண்டலினி பரவிச் செல்வாள்

முச்சது ரத்தி லெழுந்த முளைச்சுடர்
எச்சது ரத்து மிடம் பெற ஓடிடக்
கைச்சது ரத்துக் கடந்துள்லொளி பெற
எச்சது ரத்து மிருன்தனள் தானே.

முச்சதுர வடிவான மூலாதாரத்தில் முளை போல விளங்குவாள் குண்டலினி சக்தி. அவளே எல்லா ஆதாரச் சக்கரங்கள் வழியே பரவிச் செல்வாள். சுழுமுனையின் உச்சியில் விளங்கும் சகசிரதளத்தில் அமைந்துள்ள பிரமரந்திரதைக் கடந்து உள்ளம் ஒளி பெற உதவுவாள்.

#1146. பத்து திசைகளிலும் பரவுவாள்

இருந்தனள் தன்முகம் ஆறொடு நாலாய்,
பரந்தனள் வாயு திசை திசை தோறும்,
குவிந்தன முத்தின் முகஒளி நோக்கி
நடந்தது தேறல்; அதோ முகம் அம்பே.

பத்துத் திசைகளிலும் பத்து முகங்களைக் கொண்டவள் தேவி. அதனால் அவள் பத்துத் திசைகளிலும் பரவி இருப்பாள். சிரசை நோக்கிக் குவிந்துள்ள சகசிரதளம் முத்தைப் போல ஒளி வீசும். அதைக் கண்டு இனிமை தரும் காம வாயு அதோ முகத்திலிருந்து திசை மாறி நீரோட்டம் போல மேலே சென்று சகசிரதளத்தை அடையும்.

#1147. நம்பனை நோக்கி நவில்வது என்ன?

அம்பு அன்ன கண்ணி, அரிவை, மனோன்மணி,
கொம்பு அன்ன நுண் இடைக் கோதை, குலவிய
செம்பொன் செய் யாக்கை செறிகமழ், நாள்தொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே.

அம்பைப் போன்ற கண்களையும், கொம்பைப் போன்ற மெலிந்த இடையையும் கொண்டவள் மனோன்மணி.அவள் செம்பொன் நிற மேனிச் சிவனிடம் அரிய உயிர்களுக்கு இன்பம் தரும் அரிய மறையை நாள்தோறும் நவிலுகின்றாள்.

#1148. அண்டம் முழுதும் நிற்பாள்

நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சக்தி
துகில்உடை ஆடை, நிலம்பொதி பாதம்,
அகிலமும் அண்ட முழுதும் செம்மாந்தும்
புகலும் சோதி புனைய நிற்பாளே.

புகழ்ந்து பேசப்படும் சக்தி பெருந்தெய்வம் ஆவாள். பிரணவத்தில் விளங்கும் இன்பத்தைத் தருவாள். அவள் உடுக்கும் ஆடை பவளம் போன்ற செவ்வொளி. அவள் பாதங்கள் பாதாளம் வரை பதியும். அண்டங்களைக் கடந்து ஒளி வீசுகின்ற கதிரவன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களை அவள் புனைந்து நிற்பாள்.

#1149. போற்றுவீர் இறையொரு பாகத்தினளை!

புனைய வல்லாள் புவனத்தி திறை எங்கள்
வனைய வல்லாள் அண்ட கோடிகள் உள்ளே
புனைய வல்லாள் மண்டலத்து ஒளி தன்னைப்
புனைய வல்லாளையும் போற்றி என்பேனே.

தன் மேனியின் ஒரு பாதியில் புவனத்து இறைவனைப் புனைய வல்லவள் அவள். அண்டங்களின் உள்ளே தன் சங்கற்ப சக்தியினால் மாற்றங்களைச் செய்ய வல்லவள் அவள். தன்னிடம் அண்டங்களின் அனைத்து ஒளியையும் ஒருசேரப் பெற்றுள்ளாள் அவள். அனைத்தையும் புனையும் ஆற்றல் படைத்த அவளை நான் போற்றுகின்றேன்.

#1150. கூற்றுவனை வெல்லலாம்

போற்றி என்பேன் புவனாதிபதி அம்மை என்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண் பிள்ளை,
சீற்றம் கடிந்த திருநுதல் சேயிழை
கூற்றம் துரக்கின்ற கொள்பைந் தொடியே.

அந்த புவனாதிபதி அம்மையை நான் அன்புடன் போற்றுவேன். என் அருந்தவத்தின் ஆற்றலுள் நிற்கும் பெண் அவள். என் மனத்தின் சினத்தை மாற்றியவள் அவள். சிற்றம்பலத்துள் விளங்கும் சொவ்வொளி மயமானவள் அவள். கூற்றுவனை விரட்டும் திறமை படைத்தவள் அவள்.

#1151. ஆதிப் பரம்பொருள் அவளே

தொடி ஆர் தடக்கை சுகோதய சுந்தரி
வடிவு ஆர் திரிபுரை யாம் மங்கை, சங்கைச்
செடி ஆர் வினை கெடச் சேர்வரை என்றென்
அடியார் வினை கெடுத்து ஆதியும் ஆமே.

சுழுமுனையில் நாதமாக விளங்கி இன்பத்தைத் தரும் அழகிய பெண் அவள். வடிவழகு படைத்த திரிபுரை என்னும் இனிய மங்கை அவள். கங்கையாற்றைப் போலப் பெருகுகின்ற தீவினைகளைப் போக்கும் வழியினைக் கூறுபவள் அவள். அடியார்களின் வினைகளைப் போக்கும் ஆதி சக்தியும் அவள்.

#1152. மெல்லியலாள் மனம் புகுந்தாள்

மெல்லிசைப் பாவை, வியோமத்தின் மென்கொடி,
பல்லிசைப் பாவை, பயன்தரு பைங்கொடி,
புல்லிசைப் பாவையைப் போதந் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே.

சக்தி நுட்பமான நாதத்தில் விளங்குகின்றவள். அவள் பராகாசதில் உள்ள மெல்லிய ஒளி அணுக்களால் ஆன மென் கொடி. எல்லோராலும் புகழப்படுபவள். அடியவர்களின் பக்குவத்துக்கு ஏற்பப் பயன்களைத் தருபவள். அற்பமான புகழ்

மொழிகளில் உள்ள விருப்பத்தைப் போக்கி, வலிமை மிகுந்த நாதமயமான பராசக்தி என் உள்ளதில் புகுந்தாள்.

#1153. படைப்பவள் பராசக்தி

தாவித்த அப்பொருள் தான் அவன்; எம் இறை;
பாவித்து உலகம் படைக்கின்ற காலத்து,
மேவிப் பராசக்தி மேலொடு கீழ்தொடர்ந்து
ஆவிக்கும், அப்பொருள்தான் அது தானே.

அவள் அருளால் தாபிக்கப்பட்டவன் தான் என் இறைவன் சிவன். சங்கற்பத்தால் அவள் உலகைப் படைக்கின்ற போது அவள் மேலும் கீழுமாகப் பரவுகின்றாள். தானே அப்பொருளாகித் தானே அதற்கு உயிரையும் தருகின்றாள்.

#1154. திரிபுரையை வழிபடுங்கள்

அதுஇது என்பர் அவனை அறியார்
கதிவர நின்றது ஓர் காரணம் காணார்
மதுவிரி பூங்குழல், மாமங்கை நங்கை
திதம்அது உன்னார்கள் தேர்ந்துஅறி யாரே.

சிவத்தின் பெருமையை அறியாதவர்கள் அது, இது என்று சென்று பலவேறு தெய்வங்களை வழிபடுவார்கள். முத்தியைத் தரும் மூலநாதன் சிவன் என்பதை அவர்கள் அறியார். தேன் சிந்தும் மலர்களை அணிந்த அம்மையின் (குழலை நிகர்த்த சித்திரணி என்னும் நாடியில் விளங்குகின்ற அம்மையின்) அருளால் இது நிகழ்கின்றது என்று அவர்கள் அறிய மாட்டார்கள். அவர்கள் தெளிவினைச் சிறிதும் பெறாதவர்கள் ஆவர்.

நான்காம் தந்திரம் -
8. ஆதாரம், ஆதேயம்

திரிபுடி என்பது நெருங்கிய தொடர்புடைய மூன்று சொற்களாகும்.
ஆதாரம், ஆதேயம், தாரணம் என்பவை ஒரு திரிபுடி
ஆதாரம் = தாங்கும் இடம்
ஆதேயம் = தாங்கப் படும் பொருள்
தாரணம் = தாங்கும் சக்தி
சக்தி தேவியே ஆதாரமாகவும், ஆதேயமாகவும் விளங்குகின்றாள்.

#1155. சக்தியே ஆதாரங்கள் ஆவாள்

நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தான்இதழ் ஆனவை நாற்பது நால் உள
பால்இதழ் ஆனவள் பங்கயம் மூலமாய்த்
தான்இதழ் ஆகித் தரித்திருந் தாளே.

நான்கு இதழ்த் தாமரை ஆகிய மூலாதாரத்துக்கும், ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞைக்கும் இடையே தொண்ணூறு நரம்புகளல் செயல்படுகின்றன. சுவாதிட்டானம் (6 இதழ்கள்); மணிபூரகம் (10 இதழ்கள்); அனாகதம் (12 இதழ்கள்)விசுத்தி (16 இதழ்கள்) என இவ்விரண்டு ஆதாரங்களுக்கு இடையே உள்ள நான்கு ஆதாரங்களில் மேலும் நாற்பத்து நான்கு இதழ்கள் உள்ளன. ஆக்ஞைச் சக்கரத்தில் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பவள் சக்திதேவி. உடலின் மற்ற ஆதாரங்களைத் தாங்குபவளும் அவளே! அவற்றில் விளங்குபவளும் அவளே!

உடலில் தொண்ணூறு உணர்வு சக்திகள் உள்ளன. நாம் ஒரு செயல் புரிவதும், புரிந்த செயலை அறிவதும் இந்த உணர்வுகளாலேயே. சீவன் ஆக்ஞைச் சக்கரத்தில் உள்ளபோது இந்த உணர்வுகள் பணி புரியும். ஆக்ஞையில் இரண்டு உணர்வுகளும் மற்ற ஆதாரங்களில் 88 உணர்வுகளும் அமையும்.

#1156. மாது நல்லாள் நம்மை இயக்குவாள்

தரித்திருந் தாள்அவள் தன் ஒளி நோக்கி,
விரித்திருந் தாள்அவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாள் அவள் கூறிய ஐந்து
மறித்திருந்தாள் அவள் மாது நல்லாளே.

தன் ஆளுமையில் உள்ள ஆறு ஆதாரங்களின் அறிவை அறிந்து கொள்வதற்காகத் தேவி அவற்றைத் தன் திரு மேனியிலே தரித்துக்கொண்டு இருக்கின்றாள். அவள் தன் அறிவைச் செயல்படுத்த உடலில் மூலாதாரம் வரையில் நரம்புகளை வலை போல விரித்திருக்கொண்டு இருக்கின்றாள். அவள் கழுத்துக்குக் கீழே உள்ள ஐந்து சக்கரங்களின் இயக்கத்தைக் கவனித்துக் குறித்துக் கொண்டு இருக்கின்றாள். யோகியர்களின் உடலில் இவை ஐந்தும் செயல் படாமல் அவற்றை மறித்துத் தடுத்துக் கொண்டு இருக்கின்றாள்.

யோகியரின் நோக்கம் விந்துவும், நாதமும். அதனால் அவர்களுக்குக் கண்டத்துக்குக் கீழே நிகழும் மற்ற செயல்களின் அவசியம் இல்லை.

#1157. வேதனைகள் தீர்ப்பாள்

மாதுநல் லாளு மணாள னிருந்திடப்
பாதிநல் லாளும் பகவனு மானது
சோதிநல் லாளைத் துணைப் பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.

கண்டத்துக்குக் கீழே நிகழ்வதை அறியும் ஆவல் இல்லாத போது , சக்தி தேவிய சிற்சக்தியாகச் சிவனுக்குச் சமமான அறிவுடன் விளங்குவாள். இங்ஙனம் சமமான நிலையில் இறைவனும் இறைவியும் இருக்கும் போது ஒளி வடிவான அன்னையைத் தியானிக்க வேண்டும். அப்போது செயல்வழிச் செல்லும் சக்தி நிலை கெடும். துன்பங்கள் மறையும். சாதகன் உடலைத் தாண்டி விட்டு வெளியில் வந்து விளங்குவான்.

#1158. சக்தியின் தன்மை வந்து பொருந்தும்

வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மனம்
அள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவி பெண்ணாமே.

வெளி வானத்தில் சிவனுடன் பொருந்தியவன்; சகசிரதளத்தில் உள்ள பேரின்பத்தை அனுபவித்தவன்; மணம் மிகுந்த மலர் சூடும் பெண்களின் இதயத்தில் இடம் பெறாதவன்; சக்தி தேவியை வழிபடும் போது தானும் சக்திதேவியின் பெண் தன்மை அடைவான்.

#1159. பேரின்பத்தில் பேச்சறும்!

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே.

ஒரு பெண் ஆசை கொண்டு மற்றொரு பெண்ணைச் சேர்வது அறியாமை. ஆனால் பராசக்திக்குப பெண் தன்மையும் உண்டு; ஆண் தன்மையுமுண்டு. சக்தி இங்ஙனம் இரண்டுமாக இருப்பானேன்?சாதகனைக் கவர்ந்திடும் போது, சிவன் ஆண் தன்மை கெட்டுச் சக்தி மயமாகப் பெண் தன்மை பெறுவான். சக்தியைத் தொழுபவன் சக்தியின் பெண் தன்மை பெறுவான். பின்னர் சிவத்துடன் கூடுவான். சிற்றின்பத்தில் பேச்சற்று இருப்பது போலவே பேரின்பத்திலும் பேச்சு அறும்!

#1160. சக்தி மன மகிழ்ச்சி தருவாள்

பேச்சுஅற்ற நற்பொருள், காணும் பெருந்தகை,
மாச்சு அற்ற சோதி, மனோன்மணி மங்கையாம்
காச்சு அற்ற சோதிக் கடவுளுடன் புணர்ந்து,
ஆச்செற்றுள னுள் புகுந்து ஆலிக்கும் தானே.

சொற்களைக் கடந்த நற்பொருள்; காண்பதற்கரிய பெருந்தகை; மாசற்ற சோதி; மனோன்மணியாகிய மங்கை; சினம் இல்லாத சோதிக் கடவுடன் கூடி என்னுள்ளம் புகுந்தாள். எனக்கு மன மகிழ்ச்சியைத் தந்தாள்.

#1161. சிவசக்தியர் ஐந்தொழில் புரிவர்

ஆலிக்கும் கன்னி யரிவை மனோன்மணி
பாலித் துலகிற் பரந்து பெண்ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஆலித் தொருவன் உகந்து நின்றானே.

வாலையாக மூலாதாரத்தில் இருந்து கொண்டு சீவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவாள் சக்தி. சிவத்தினிடமிருந்து வேறாக இருந்து கொண்டு உலகினை விளக்குவாள் பார்வதி தேவி. உலகில் எல்லா உயிர்களையும் காத்துப் பரந்த பெண் வடிவம் ஆவாள் மனோன்மணி. ஐந்தொழிகளின் தலைவி, வேதத்தின் முதல்வியாகிய அவளுக்கு மகிழ்வூட்ட சிவன் விரும்பி நின்றான்.

#1162. சிவசக்தியர் உயிர்களைக் காப்பர்

உகந்துநின் றானம்பி யொண்ணுதற் கண்ணோடு
உகந்துநின் றாநம் முழைபுக நோக்கி
உகந்துநின் றானிவ் வுலகங்க ளெல்லாம்
உகந்துநின் றானவ டன்றோ டொகுத்தே.

சிவபெருமான் நெற்றிக் கண்ணுடன் மகிழ்ச்சியாக நின்றான். அவன் சீவர்களிடம் எழுந்தருள விழைந்தான். அதனால் சிவன் எல்லா உலகங்களையும் விரும்பி நின்றான். போகியாகிச் சக்தி தேவியின் தோளைத் தழுவியபடி நின்றான்.

#1163. பேரின்பம் சொல்ல இயலாதது

குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரித்த சுணங்கின் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்துச் சொல்லகில் லேனே.

பெருத்த முலைகளை உடையவள்; மென்மையான இடையை உடையவள்; புள்ளிகள் பரவிய தேமலை உடையவள்; தூய மொழி பேசுபவள்; மயில் தோகை போன்ற மெல்லிய அடிகளை உடையவள். இத்தகைய சக்தியை அடைந்ததால் விளைந்த இன்பத்தை எடுத்துக் கூற இயலாது.

#1164. மல்லவொண்ணாத மனோன்மணி

சொல்லவொண் ணாத அழற்பொதி மண்டலம்
செல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மனோன்மணி தானே.

தீ மண்டலம் விளங்கும் காமபீடத்தின் வலிமையை வெறும் வாய் வார்த்தைகளால் உரைக்க இயலாது. செல்ல இயலாமலும், அளந்து அறிய இயலாமலும், மக்கள் திகைத்து அங்கேயே இருப்பார்கள். வினைப் பயன்களை வெல்ல அரிதாகும்படிச் செய்கின்றாள் ஒப்பில்லாத தலைவியாகிய சக்தி. ஆற்றல் மிகுந்த மனோன்மணியைச் செயலாற்றாத வண்ணம் பந்தித்து நிறுத்தவும் இயலாது.

#1165. ஐம்பெரும் பூதங்கள் அவளே

தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே.

மண்ணுலகத்தைத் தாங்குபவள் மனோன்மணி.
விண்ணாய் நிற்பவளும் மனோன்மணி ஆவாள்.
அக்கினி, கதிரவன், திங்கள் இவைகளும் அவளே.
அருள் மழை பொழியும் சக்தி தேவியும் அவளே.
சிரசின் வடக்கில் இருக்கும் வடவரையும் அவளே.
குளிர்ந்த கடலில் உள்ள வடவாக்கினியும் அவளே.

#1166. தேவர்களைக் காணலாம்

கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனித்தரில் கூட்டொணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற்றி ருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே.

நெற்றிக் கண்ணை உடைய சக்தியுடன் கூடி மதி மண்டலத்தில் இருந்தவர்கள் ஞானியர். அவர்கள் மண்ணுலகத்தோர் ஆயினும் தெய்வத் தன்மை

பெற்றவர் ஆவர். அவர்களால் விண்ணுலகவாசிகளாகிய தேவர்களைக் காண இயலும்.

#1167. பலரும் தொழுது எழுவர்

கண்டெண் திசையும் கலந்து வரும்கன்னி
பண்டெண் திசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் டிசையுந் தொழ நின்ற கன்னியே.

குண்டலினி சக்தி வாலையாக எல்லா திசைகளிலும் பரந்து நிற்பாள். சீவனின் உடல் உருவாகும் முன்னர் இவளே பராசக்தியாக எல்லாத் திசைகளிலும் நிறைந்து இருந்தவள். கீழே இருந்த குண்டலினி சக்தி மேலே எழும்பிச் சென்று சகசிரதளத்தை அடையும் போது, அந்த சீவனை எல்லாத் திசைகளிலும் உள்ளவர்கள் தொழுது எழும் வண்ணம் மாற்றி அமைத்து விடுவாள்.

#1168. பதினாறு கலைகள் பராசக்தியின் நிலையம்

கன்னி யொளியென நின்றவிச் சந்திரன்
மன்னி இருக்கின்ற மாளிகை செந்நிறம்
சென்னி இருப்பிடம் சேர்பதி னாறுடன்
பன்னி யிருப்பப் பராசத்தி யாமே.

செந்நிறம் வாய்ந்த சுவாதிஷ்டானத்தில் பிறைத் திங்கள் போலப் பொருந்தி இருக்கும் ஒளியே, சிரசை அடையும் போது பதினாறு கலைகளுடன் பூரணம் ஆகிவிடும். இதுவே பராசக்தி இருக்கும் நிலையம் ஆகும்.

#1169. சக்தியின் பலச் சிறப்புகள்

பராசத்தி என்றென்று பல்வகை யாலும்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள வாகமத்த ளாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே.

பராசக்தி பலவகையாலும் எல்லாவற்றையும் எப்போதும் தாங்கி நிற்பவள்; முதன்மையான பிரமாணியாகத் திகழ்பவள் சக்தி தேவி; இராசக்தியாக உருத்திர யாமளம் என்னும் ஆகமத்தால் விளக்கப்படுபவள்; குரு வடிவானவள். இங்ஙனம் பல சிறப்புகள் பொருந்தியவள் சக்தி தேவி.

#1170. பன்னிரு யோகினி சக்திகள்

உணர்ந்த உலகு ஏழையும் யோகினி சக்தி
உணர்ந்து, உயிராய் நிற்கும், உள்ளத்தின் ஈசன்
புணர்ந்து ஒரு காலத்துப் போகம் அது ஆதி,
இணைந்து, பரம் என்று இசைந்திது தானே.

உடலின் ஏழு ஆதாரங்களையும் உணர்ந்து கொண்டு, அவற்றை உயிர்களுக்கு உணர்த்துபவர் பன்னிரு யோகினி சக்தியர் .உள்ளத்தில் உள்ள ஈசன் இவர்களைப் புணர்ந்து பரம் என்னும் தன்மை அடைந்தான். இந்த சக்தியரின் தொகுப்பு பராசக்தியானது.

பன்னிரு யோகினியர்:
(1). வித்தியா, (2). ரேசிகா, (3). மோசிகா, (4). அமிர்தா, (5). தீபிகா, (6). ஞானா, (7). ஆபியாயதி, (8). வியாபினீ, (9). மேதா, (10). வியோமா, (11). சித்திரூபா, (12). லக்ஷ்மி

#1171. யோகமும், போகமும் தருபவள் சக்தி

இதுஅப் பெருந்தகை எம்பெரு மானும்
பொதுஅக் கலவியும் போகமும் ஆகி,
மதுவக் குழலி மனோன்மணி மங்கை
அது அக் கலவியுள் ஆயுழி யோகமே.

சக்தியும், சிவனும் வான் கலப்பில் ஒன்று சேருகின்றனர். அதனால் அவர்கள் கலவியும், அதில் விளையும் இன்பமும் போல ஒன்றாக விளங்குகின்றனர். இன்பம் பொருந்தியுள்ள சுழுமுனையில் விளங்கும் தேவியே அந்த யோகமும் ஆவாள்; அதில் விளையும் போகமும் ஆவாள்.

#1172. ஒளியே அவளது பீடம் ஆகும்

யோகநற் சத்தி யொளிபீடத் தானாகும்
யோகநற் சத்தி யொளிமுகம் தெற்காகும்
யோகநற் சக்தி யுதர நடுவாகும்
யோகநற் சக்திதாள் உத்தரந் தேரே.

புருவ மத்தியில் உள்ள ஒளியைத் தன் பீடமாகக் கொள்வாள் யோகத்தை விளக்கும் சக்தி தேவி. யோக நற்சக்தியின் ஒளிவீசும் முகம் வலக்கண் என்னும் நம் முகத்தின் தென் பகுதியாகும். நாபிப் பிரதேசத்தில் உள்ள மணிபூரகச் சக்கரத்தில் யோக நற்சக்தி கதிரவனாக விளங்குவாள். யோக நற்சக்தி திங்களாக விளங்குவது முகத்தின் வடக்குப் பகுதியாகிய இடக் கண் ஆகும்.

#1173. சிவாக்கினியும், குண்டலினி சக்தியும்

தேர்ந்துஎழும் மேலாம் சிவன் அங்கி யோடுஉற,
வார்ந்துஎழும் மாயையும் அந்தம் அது ஆய் நிற்கும்,
ஓர்ந்துஎழு விந்துவும் நாதமும் ஓங்கிட,
கூர்ந்துஎழு கின்றாள் கோல்வளை தானே.

சிவாக்கினியைத் தூண்டி, அதை மேல் நோக்கிச் செலுத்தி, ஒளி பீடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்போது ஒழுகும் தன்மையுடைய விந்துவை வென்றதால் காமஜயம் ஏற்படும். ஆராய்ந்து அறியவேண்டிய விந்துவும் நாதமும் பெருகும். சுழுமுனை நாடியில் வளைந்து உயரே செல்லும் இயல்புடைய குண்டலினி சக்தியும் முளைத்து எழுவாள்.

#1174. பரவாதனை

தான் ஆனவாறு எட்டதாம் பறைக்குள்; மிசை
தான் ஆனவாறும் ஈர்ஏழும் சமகலை;
தான் ஆன விந்து சகமே, பரம் எனும்
தான் ஆம்; பரவாதனை எனத் தக்கதே.

ஆறு ஆதாரங்களிலும் விளங்குபவள் பராசக்தி. பதினாறு கலைகள் பொருந்தி விளங்குபவள் பராசக்தி. பதினாறு கலைகளில் ஒன்பதாம் கலை வரை அதிகம் விரிவு பெறாதவை. அவை சிரசுக்குள் தொழிற்படும் கலைகள். கலை வடிவமாக அமைந்த சக்தி உலகத்திலும் கலந்து இருப்பாள். அவளே பரத்திலும் கலந்து இருப்பாள். இந்த விதமாக அவள் இரண்டுடனும் கலந்து இருக்கும் நிலையே பரவாதனை எனப்படும்.

#1175. வான மண்டலம் விளங்கும்

தக்க பராவித்தை தான் இருபானேழில்
தக்கு எழும் ஓர் வுத்திரம் சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண் சக்தி, வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தொன்முத்திரை யாளே.

தலையைச் சுற்றிப் பன்னிரண்டு ராசிகள் உள்ளன. அவற்றில் பராசக்தியே இருபத்தேழு விண்மீன்களாக விளங்குவதை அறிந்து கொள்ள வேண்டும். தக்க மந்திரங்களைச் சொல்லி வந்தால் முதலில் எட்டு சக்தியரும் வெளிப்படுவர். பின்னர் அவர்களோடு பராசக்தியும் வெளிப்பட்டு அருள்வாள். தலைச் சுற்றியுள்ள ராசி வட்டம் பூர்த்தியானால் வான மண்டலம் நன்கு விளங்கும்.

#1176. சிற்றின்பமும் பேரின்பமும்

முத்திரை மூன்றில் முடிந்த மெய்ஞ் ஞானத்தள்
தத்துவ மாய் அல்ல ஆய சகலத்தள்
வைத்த பராபரன் ஆய பராபரை
சாதியம் ஆனந்த சத்தியும் கொங்கே.

கதிரவன் மண்டலம், திங்கள் மண்டலம், அக்கினி மண்டலம் என்னும் மூன்றிலும் நிறைந்து இருப்பவள் பராசக்தி. அவள் அனைத்துத் தத்துவங்களாக விளங்குகின்றாள். அவள் தத்துவம் அல்லாத பொருட்களிலும் நிறைந்து விளங்குகின்றாள். பராபரனைத் தன்னுள் கொண்டவள் பராபரையாகிய பராசக்தி. அவன் சிற்றின்பமும் தரவல்லவள்; பேரின்பமும் தர வல்லவள்.

#1177. தகுதிக்கேற்பத் தயை புரிவாள்

கொங்கு ஈன்ற கொம்பின் குரும்பைக் குலாம் கன்னி
பொங்கிய குங்குமத்தோளி பொருந்தினள்
அங்குச பாசம் எனும் அகிலம் கனி
தங்கும் அவள் மனை தான்; அறிவாயே.

தேனைத் தருவது போல நாம் விரும்பும் பொருளைத் தரும் சக்தி வீணாத் தண்டில் பல வேறு சக்திகளுடன் கூட்டாகப் பொருந்தியுள்ளாள். அவள் குங்குமம் போன்ற செவ்வண்ணம் கொண்டவள். அங்குசமாக யோகியரின் ஐம்பொறிகளை அடக்கவும்; பாசமாக அஞ்ஞானிகளைப் பிணிக்கவும்; உதவுகின்ற அகிலம் அவள் விரும்பித் தங்கும் இடம் ஆகும்.

#1178. தாய், மகள், தாரம் அவளே.

வாயு மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயு மறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே.

சீவர்களின் மூச்சையும், மனதையும் கடந்து விளங்குபவள் மனோன்மணி. பல பேய்களையும், பூத கணங்களையும் தான் ஏவுகின்ற படைகளாகக் கொண்டவள். ஆராய்கின்ற அறிவைக் கடந்த சிவனுக்கு அவளே தாய், அவளே மகள் அவளே தாரம்! சக்தி தத்துவத்திலிருந்து சாதாக்கிய தத்துவ வாசியாகிய சதாசிவன் தோன்றுவதால் சக்தி சிவனின் தாய் ஆகின்றாள். சிவத் தத்துவத்தில் இருந்து சக்தி தத்துவம் தோன்றுகின்றது. எனவே சக்தி சிவனின் மகள் ஆகின்றாள். சிவசக்தியர் ஒன்றாக உலகையும், உயிர்களையும் படைக்கின்றனர்.எனவே சக்தி சிவனின் தாரம் ஆகின்றாள்.

#1179. பாரளவாகிய புராதனி

தாரமும் ஆகுவள் தத்துவமாய் நிற்பள்
காரணி, காரியம் ஆகும் கலப்பினள்,
பூரண விந்து பொதிந்த புராதனி
பார் அளவாம் திசை பத்து உடையாளே.

மனோன்மணி சிவனுக்கு மனைவி ஆவாள். சக்தி தத்துவமாக இருந்து கொண்டு நாத விந்துக்களைத் தோற்றுவிப்பாள். சிவனுடன் சேர்ந்து அனைத்தையும் படைக்கும் போது காரணி ஆவாள். படைப்பின் போது பிரிந்து அவளே காரியம் ஆவாள். இங்ஙனம் காரண காரியம் என்னும் இரண்டும் கலந்தவள் அவள். விந்து சக்தி பொருந்தியுள்ள புராதனி அவள். பத்து திசைகளையும் தன் உடைமையாகக் கொண்டு பாரெங்கும் நிறைந்து நிற்பாள்.

#1180. சகசிர தளத்தில் சக்தி தேவி

பத்து முகம் உடையாள் நம் பராசக்தி
வைத்தனள் ஆறு அங்கம், னாலுட தான் வேதம்
ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றாள் எம் நேரிழைக் கூறே.

சக்தி பத்து முகங்களை உடையவள். நான்கு இதழ்த் தாமரை மூலாதாரத்தை நான்கு வேதங்களாகவும், ஆறு இதழ்த் தாமரை சுவாதிட்டானத்தை ஆறு அங்கங்களாகவும் அமைத்துள்ளாள். சகசிரதளத்தில் சிவனுடன் பொருந்துகையில் அவனுக்குச் சமமாக நிற்பாள். அவளே நிலையான பொருள். அவளே எம் தலைவி.

#1181. புருவ மத்தியில் திரிபுரை

கூறிய கன்னி, குலாய புருவத்தள்,
சீரியள் ஆய்உலகு ஏழும் திகழ்ந்தவள்,
ஆரிய நங்கை அமுத பயோதரி
பேருயிர் ஆளி பிறிவு அறுத்தாளே.

குண்டலினி சக்தி தன் சக்திக் கூட்டத்துடன் புருவ மத்தியில் விளங்குவாள். அவள் சீர்மை நிறைந்தவள். உலகு ஏழினும் நிறைந்தவள். மகிமை பொருந்திய மங்கை. அமுதம் ஊறும் முலைகளை உடையவள்; எண்ணற்ற உயிர்களின் மீது ஆளுமை கொண்டவள்; பிரிவே இல்லாமல் நமக்கு அருள் செய்த வண்ணம் இருப்பாள்.

#1182. சக்தி அறிவுக்கு அறிவானவள்

பிறிவு இன்றி நின்ற பெருந்தகைப் பேதை,
குறி ஒன்றி நின்றிடும் கோமளக் கொம்பு,
பொறி ஒன்றி நின்று புணர்ச்சி செய்து, ஆங்கே
அறிவி ஒன்றி நின்றனள் ஆருயி ருள்ளே.

பிரிவு இன்றிச் சிவனுடன் எப்போதும் விளங்கும் பெருமாட்டி. இவள் புருவ நடுவில் அழகிய கொம்பினைப் போலக் காட்சி தருவாள் மனம் ஒன்றித் தியானம் செய்பவர்களுக்கு. உயிர்களின் அறிவுக்குள் அறிவாய் பொருந்துவாள். உயிர்களின் அறிவுக்குள் அறிவாகக் கலந்து நிற்பாள்.

#1183. ஆசைகளை அழித்துவிடுவாள்

உள்ளத்தின் உள்ளே உடன் இருந்து ஐவர்தம்
கள்ளத்தை நீக்கிக், கலந்து உடனே புல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளல் தலிவி மருட்டிப் புரிந்தே.

வள்ளல் தன்மை நிறைந்தவள் அன்னை பராசக்தி. அவள் நம் உள்ளத்தில் தங்குவாள். அங்கு கள்ளத்தனம் செய்யும் ஐம்புலன்களை அடக்குவாள். உயிருடன் ஒன்றிவிடுவாள். தவ நெறியில் உள்ள இன்பத்தை நமக்குக் காட்டுவாள். அதில் மிகுந்த விருப்பத்தை ஏற்படுத்துவாள். அதன் மூலம் உலக ஆசைகளை அறவே ஒழித்து விடுவாள்.

#1184. மலரும் மணமும் போலச் சிவசக்தியர்

புரிந்து அருள் செய்கின்ற போக மாசத்தி
இருந்து அருள் செய்கின்ற இன்பம் அறியார்,
பொருந்தி இருந்த புதல்வி பூவண்ணத்து
இருந்த இலக்கில் இனிது இருந்தாளே.

சீவனின் மனத்துள் இருந்து கொண்டு, விருப்பத்துடன் அந்த உயிருக்கு இன்பத்தைத் தருபவள் போகத்தைத் தருபவளாகிய பராசக்தி. இந்த உண்மையைப் பலரும் அறியார். இந்த அழகிய பெண் மலரில் மணம் போலச் சிவத்தில் பொருந்தி இருக்கின்றாள். இனிதாக விளங்குகின்றாள்.

#1185. தடுக்கும் எண்ணங்களை அகற்றுவாள்

இருந்தனள் ஏந்திழை என் உளம் மேவித்,
திருந்து புணர்ச்சியில் தேர்ந்து உணர்ந்து, உன்னி,
நிரந்தரம் ஆகிய நிரதி சயமொடு
பொருந்த, இலக்கில் புணர்ச்சி அதுவே.

விருப்பத்துடன் என் உள்ளத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டாள் சக்தி அன்னை. அவளை எண்ணி, ஆராய்ந்து, உணர்ந்து, அறிந்து, தெளிந்து அவளுடன் நிரந்தரமாக நிரதிசயத்துடன் பொருந்தி இருப்பதே சக்தி கலப்பு என்னும் உயர்ந்த நிலையாகும்.

#1186. ஊழையும் உப்பக்கம் காணலாம்

அதுவிது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள் சொன்ன மண்டல மூன்றே.

“அது வேண்டும், இது வேண்டும்” என்று உலகப் பொருட்களின் மீது கொண்டுள்ள அவாவினை அகற்ற வேண்டும். அவளைப் புகழ்ந்து போற்ற வேண்டும். தலை உச்சியில் உள்ள தொளையாகிய பிரமரந்திரத்தின் மீது தியானம் செய்ய வேண்டும். இங்ஙனம் செய்பவர் விதியையும், வினைகளையும் வென்று விடலாம். மதி மண்டலத்தில் உறையும் அன்னை சொன்ன மண்டலங்கள் மூன்று என்று அறிவீர்.

#1187. மோகினியின் மூன்று மண்டலங்கள்

மூன்றுள மண்டலம் மோகினி சேர்விடம்
ஏன்றுள வீரா றெழுகலை யுச்சியில்
தோன்று மிலக்குற வாகுதன் மாமாயை
ஏன்றன ளேழிரண் டிந்துவொ டீறே.

மோகினி உறையும் மண்டலங்கள் அக்கினி, கதிரவன் திங்கள் என்ற மூன்றாகும். பன்னிரண்டு கலைகள் கொண்ட கதிரவ மண்டலத்தின் உச்சியில் பொருந்துதல் சுத்த மாயையாகும். நன்மைகளை நல்குகின்ற நாயகி அப்போது திங்கள் மண்டலத்தில் விளங்குவாள்.

அக்கினி மண்டலம் தாமச குணம் நிறைந்தது.
கதிரவன் மண்டலம் ராஜச குணம் நிறைந்தது.
திங்கள் மண்டலம் சத்துவ குணம் நிறைந்தது.

சந்திர மண்டலம் முழுமை அடையும் போது
நாதத்தைக் கடந்த நாதாந்தம் விளங்கும்.

#1188. சிந்தனயில் நாதம் தோன்றும்

இந்துவினின்று எழு நாதம், இரவி போல்
வந்தபின் நாக்கில், மதித்து எழும் கண்டத்தில்
உந்திய சோதி இதயத்து எழும் ஒலி
இந்துவின்மேல் உற்ற ஈறு அது தானே.

ஒளி மயமான அநாகதத்தில் எழும் இதயத் துடிப்பின் ஒலி மேல் நோக்கிச் செல்லும், கழுத்தினின்று மேல் நோக்கி எழும்பும். பிடரியில் உள்ள சிறு மூளைப் பகுதியில் பரவிப் படரும். அது இறுதியாகச் சந்திர கலையைச் சென்று அடையும். திங்கள் மண்டலத்தில் எழும் நாதம் மலை போல ஓங்கி விளங்கும்.

#1189. ஆதியும் அவளே! அந்தமும் அவளே!

ஈறுஅது தான் முதல் எண் இரண்டு ஆயிரம்
மாறுதல் இன்றி, மனோவச மாய் எழில்
தூறுஅது செய்யும் சுகந்தச் சுழி அது;
பேறுஅது செய்து பிறந்து இருந் தாளே.

படைப்புக்கு முதன்மையாக அமைவது திங்கள் கலைகளின் பதினாறின் முடிவு ஆகும். அந்த நிலையில் ஆயிரம் மாற்றங்களை அடையாமல் மனம் சம நிலையில் இருக்கும். மனம் முழுதுமாகச் சீவனின் கட்டுக்குள் அடங்கி வசப்படும். எழிலும், மணமும் நிறைந்த இடம் போலாகிவிடும். சக்தி அதையே ஒரு பேறாகக் கருதி அதில் இனிதாக விளங்குவாள்.

#1190. சந்திர கலையில் சக்தி தேவி

இருந்தனள் ஏந்திழை, ஈறு அது இல் ஆகத்
திருந்திய ஆனந்தம், செந்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றி செய்து ஏத்தி,
வருந்த, இருந்தனள் மங்கை நல்லாளே.

சக்தி தேவி சந்திர கலையின் இறுதியில் விளங்குகின்றாள். சிறந்த இன்பம் பெறுவதற்காக நன்னெறியில் நடந்தும், அவள் புகழைப் போற்றியும், மக்கள் ஏங்கி இருக்கும் போது அவள் நன்மைகள் செய்யும் சக்தியாக அங்கே அமைந்து இருக்கின்றாள்.

#1191. ஐந்தொழில் புரிபவள் சக்தி

மங்கையும், மாரனும் தம்மோடு கூடி நின்று
அங்குலி கூட்டி, அகம் புறம் பார்த்தனர்
கொங்கை நல்லாளும் குமாரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்கு செய்தாரே.

சக்தியும், சிவனும் பொருந்தி நின்றனர். பிரணவத்தின் உச்சியிலிருந்து கொண்டு சீவர்களைப் படைக்க விரும்பினர். அவர்கள் சீவர்களின் உடம்புக்குத் தேவையானவை எவை என்றும், உயிருக்குத் தேவையானவை எவை என்றும் முதலில் கணக்கிட்டனர். அழகிய தனங்களை உடைய அன்னையும், அவளது ஐந்து குமாரர்களும் அதன் பின்னர் படைத்தல் என்னும் தொழிலைச் செய்தனர்.

#1192. அகவழிபாடும், புறவழிபாடும்

சடங்குஅது செய்து தவம் புரிவார்கள்
கடம்தனில் உள்ளே கருதுவா ராகில்
தொடர்ந்து எழுசொதி துளை வழி ஏறி,
அடங்கிடும் அன்பினது ஆயிழை பாலே.

உடலால் செய்யும் சடங்குகளால் புற வழிபாடு செய்வதைக் காட்டிலும், அகவழிபாடாகிய தியானதத்தைத் தொடர்ந்து செய்து வரவேண்டும். அப்போது மூலாதாரத்தில் மூண்டு எழும் மூல அக்கினி, உடலில் உள்ள ஆறு ஆதரங்களையும் கடந்து மேலே சென்று சக்தி தேவியுடன் பொருந்தி நிற்கும்.

#1193. ஆறு ஆதாரங்களிலும் ஒளி

பாலித்து இருக்கும் பனி மலர் ஆறினும்
ஆலித்து இருக்கும் அவற்றின் அகம் படி
சீலத்தை நீக்கித் திகழ்ந்து எழும் மந்திரம்
மூலத்து மேலது முத்துஅது ஆமே.

மூலத்தில் உள்ள முத்தைப் போன்ற வீரியம் வற்றி ஒளியாக மாறவேண்டும். அப்போது உடலின் ஆறு ஆதாரங்களிலும் பொருந்திய திங்கள் கலை தன் ஆற்றலை நன்கு வெளிப்படுத்தும். இதற்கு பிரணவம் உதவும். இது இன்பத்தைத் தரும்.

#1194. உள்ளக் கோவிலில் குடி கொண்டாள்

முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி என்னுள்ள மேவி நின்றாளே.

முத்துப் போன்ற சுக்கில நாடியில் முகம் உடையவள், கதிரவன், திங்கள் , அக்கினி என்னும் முக்கண்களை உடையவள்; ஆற்றல் உடையவள்; திறமை உடையவள்; சகளி; சடாதரி; பத்து நாடிகளிலும் செயல் புரிபவள்; மேலான சிவனின் நாயகி; இத்தகைய வித்தகி என் மனத்தைத் தன் கோவிலாகக் கருதிக் குடி கொண்டாள்.

#1195. ஓவினும் மேவுவாள் சக்தி

மேவிய மண்டலம் மூன்றுடன் கீழ் எரி
தாவிய நற்பதத் தண்மதி அங்கதிர்
மூவரும் கூடி முதல்வியாய் முன்னிற்பர்
ஓவினும் மேவிடும் உள்ளொளி ஆமே.

தான் பொருந்தியுள்ள மூன்று மண்டலங்களில் சக்தி தேவி தீ மண்டலத்தில் திருவடிகளை உடையவள். கதிர் மண்டலத்தில் உடலை உடையவள்; திங்கள் மணடலத்தில் முகத்தை உடையவள். அவள் மூன்று மண்டலங்களின் தலைவியாக இருப்பவள். நாம் விலக்கினாலும் விலகிச் செல்லாமல் நம்முடன் மேவி நிற்பாள். உள்ளத்தின் விளங்கும் உள்ளொளியாக நம்மை விட்டு விலகாமல் இருப்பாள்.

#1196. தேவி இன்பம் அருள்வாள்

உள்ளொளி, மூவிரண்டு ஓங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடும்
கள் அவிழ் கோதை கலந்து உடனே நிற்கும்
கொள்ள விசுத்திக் கொடி அமுது ஆமே.

குண்டலினி சக்தி உடலின் உள்ளொளியாகும். இது ஆறு ஆதாரச் சக்கரங்களைக் கடந்து மேலே சென்று அங்கு வெள்ளொளியாகிய சிவத்துடன் பொருந்தி நிற்கும். அங்கே உடலில் அமுது விளையும். விசுத்திச் சக்கரத்தைத் தாண்டிய பிறகு அமுது விளைகின்ற அற்புதமான மண்டலம் தொடங்கும்.

#1197. இன்ப வடிவானவள் சக்தி

கொடியது இரேகை குருவருள் இருப்ப,
படியது வாருணைப் பைங்கழல் ஈசன்
வடிவு அது; ஆனந்தம் வந்து முறையே
இடும் முதல் ஆறங்கம் ஏந்திழை யாளே.

நடு நெற்றியிலிருந்து பிரமரந்திரம் என்னும் உச்சித் தொளை வரையில் உள்ளது சகசிரதளம். அதில் சதாசிவம் பரம குருவாக விளங்குவான். அங்கு தேவியும் தேவனும் கலந்து விளைவிப்பது ஆனந்தம் தரும் அமுதக்கள் ஆகும்.

பைங்கழல் ஈசனின் வடிவமே ஆனந்தம் ஆகும். மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களையும் தன் உடலாகக் கொண்ட சக்திதேவி ஆனந்தம் தரும் இன்ப வடிவானவள்.

#1198. பராசக்தியைப் பரவுபவர்கள்

எந்திழையாளும் இறைவர்கள் மூவரும்
காந்தாரம் ஆறும், கலைமுதல் ஈரெட்டும்
ஆந்த குளத்தியும் மந்திர ராயவும்
சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே.

குண்டலினி சக்தியும், மும்மூர்த்திகளும், அஞ்ஞானத்தின் வனங்களாகிய ஆறு ஆதாரங்களும், சந்திரகலை பதினாறும், சதாசிவனின் பத்தினியும், ஈசானவரும் போற்றிப் பரவிடப் பராசக்தி விளங்குவாள்.

#1199. ஆரவார பக்தி வேண்டாம்

சத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி யென்ப தறிகிலர்
பத்தியைப் பாழி லுகுத்தவப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே.

வாலை வடிவில் குண்டலினி சக்தி நம் உடலில் உள்ளாள். அவள் இயல்புகளை நன்கு அறிந்து கொண்டு அவளை உடலில் மேலே மேலே எழச் செய்தால் அவளே வீடுபேற்றினைத் தரும் நாயகி ஆகிவிடுவாள். இந்த உண்மையை அறியாதவர்கள் பக்தி என்னும் பெயரில் வீணே ஆரவாரம் செய்து, கத்திக் கொண்டு, காலத்தைக் கழிக்கின்றார்களே!

#1200. சேவடி சிந்தை வைத்தாள்

ஆரே திருவின் திருவடி காண்பார்கள்?
நேரே நின்று ஓதி நினையவும் வல்லார்க்குக்
கார் ஏர் குழலி கமல மலர் அன்ன
சீர் ஏயும் சேவடி சிந்தை வைத்தாளே.

திருவின் திருவடிகளை யார் காண்பார்கள்?
சக்தி தேவியின் நேரே நின்று, ஒளியில் அவளைத் தியானம் செய்பவர்களின் சிந்தையில், அவள்தான் சிவந்த தாமரை போன்ற மலரடிகளைப் பதித்து அருள்வாள்.

#1201. சிந்தனையில் பதித்து சமாதி செய்வீர்

சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதிலே வைத்துச்
சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே.

சக்தியைக் குறித்து இடைவிடாது சிந்திக்க வேண்டும். புருவ மத்தியில் அவளைத் தியானிக்க வேண்டும். ஒளிமுகமாக அவளை முன்னிலைப் படுத்த வேண்டும். கீழ் முகமாக உள்ள குண்டலினி சக்தியின் திசையை மாற்றி மேல் முகமாக ஆக்க வேண்டும். உலக நிகழ்வுகளில் கவனம் வைக்காமல் அவளையே நினைக்க வேண்டும். ஐம்பொறிகள் கூடும் இடத்தில் அவளை நிறுத்திச் சமாதி மேற்கொள்ள வேண்டும்.

#1202. சந்திரக்கலையில் சக்தி தேவி

சமாதி செய்வார்கட்குத் தான் முதல் ஆகிச்
சிவஆதியில் ஆரும் சிலை நுத லாளை
நவாதியில் ஆக நயந்து ஓதில்
உவாதி அவளுக்கு உரைவிலது ஆமே.

சமாதி செய்பவர்களுக்குச் சக்தி முதன்மையானவள் ஆகி விடுவாள். அவளைச் 'சிவாயநம' என்னும் சிவாதி மந்திரத்தால் நன்கு அனுபவிக்கலாம். அவளே ஒன்பது வடிவங்களில் பேதமாகக் காட்சி தருவாள். அவளே தலை உச்சியைத் தன் இருப்பிடமாகக் கொண்டு சந்திர கலையில் விளங்குவாள்.

சிவசக்தியர் சம நிலையில் இருக்கும்போது சக்தி ஒன்பது வடிவங்களில் விளங்குவாள். அவை : சிவம், சக்தி, நாதம், பிந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், திருமால், நான்முகன்.

#1203. தினைப் பொழுதில் எய்தலாம்

உறைபதி தோறும் முறைமுறை மேவி,
நறைகமழ் கோதையை நாடொறும் நண்ணி,
மறையுடனே நிற்கும் மற்றஉள்ள நான்கும்
இறைதினைப் போதினில் எய்திட லாமே.

சக்தி தேவி உடலில் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும் விளங்குகின்றாள். அவளை நாள் தோறும் இடையறாது சிந்திக்க வேண்டும். அப்போது மூலாதாரத்தில் இருந்து மற்ற நான்கு ஆதாரங்களை விரைந்து கடந்து புருவ மத்தியில் உள்ள அவளை எளிதில் அடைந்து விடலாம்.

#1204. எளிதில் எய்திடலாம்

எய்திடலாகும் இருவினைப் பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாம் கன்னி,
மைதவழ் கண்ணி நன் மாதுரி கையொடு
கைதவம் இன்றிக் கருத்து உறும் வாறே.

அன்னையை வழிபடாதவர்கள் இரு வினைப் பயன்களை அடைந்திடலாம். ஆனால் இருவினைப் பயன்களைக் கொய்ய வல்லவள் இளந் தளிர் மேனியும், மாறாத குமரிப் பருவமும், மை வழியும் கருங்குவளைக் கண்களும் கொண்ட அம்மை! ஆதலால் அவளை நெஞ்சில் வஞ்சனை இன்றிப் போற்றிப் புகழ்ந்து வழிபடுவீர்.

#1205. எண் குணங்கள் உண்டாகும்!

கருத்து உறும் காலம் கருது மனமும்
திருத்தி இருந்து, அவை சேரும் நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு; மண் மேல்
இருத்திடும், எண் குணம் எய்தலும் ஆமே.

இன்பம் பொங்கும் நேரத்திலும் அன்னையை மறவாமல் வழிபடு. மனதைத் திருத்தியமை. அவளை அங்கு அமர்த்தி நன்கு வழிபடு. அது நீண்ட ஆயுளைத் தரும். அதன் பின்னர் இறைவனின் எண்குணங்களும் தாமே வந்து சேரும்.

#1206. திங்கள் மண்டலத்தில் திகழ்வாள்

ஆமை ஒன்று ஏறி, அகம்படி யான்என
ஓம் என்ற ஓதி, எம் உள்ளொளியாய் நிற்கும்
தாம நறுமலர் தையலைக் கண்ட பின்
சோம நறுமலர் சூழ நின்றாளே.

ஆமை தன் ஐந்து உறுப்புக்களை அடக்கிக் கொள்வது போல ஐம்பொறிகளையும் அடக்க வேண்டும். “நான் செருக்கு இல்லாதவன்!” என்ற பொருள்படும் ஓங்காரத்தில் உள்ள மகாரதைத் தொண்டைப் பகுதிக்கு மேலே நினைக்க வேண்டும். அப்போது மூலாதாரத்தில் உள்ள சோதியாகிய சக்தியைத் திங்கள் மண்டலத்தில் காண முடியும்.

#1207. பொன்னம்பலத்தில் பொற்கொடி

சூடிடும் அங்குசத் பாசத் துளைவழி,
கூடும் இருவளைக் கோலக்கை, குண்டிகை
நாடும் இருபதம் நன்னெடு உருத்திரம்,
ஆடிடும் சீர்புனை ஆடகம் ஆமே.

மூலாதாரம் முதல் பிரமரந்திரம் என்னும் உச்சித் தொளை வரை செல்லும் சித்திரணி என்னும் நாடி. அதில் தேவி அங்குச, பாசத்துடன் விளங்குவாள். அவற்றுடன் இரு கரங்களில் பெரிய சங்கமும், அமுதக் கலசமும் இருக்கும். அன்பர்கள் நாடும் அழகிய இரு பாதங்களுடன், சிவனின் மந்திரமாகிய ஐந்தெழுத்தை விரும்பிப் பொன்னம்பலத்தில் அன்னை நடனம் புரிவாள்.

விளக்கம்:
பாசம் = தேவையற்ற தத்துவங்களைக் கட்டுப்படுத்துவது.
அங்குசம் = தேவையான தத்துவங்களைத் தூண்டி விடுவது.

#1208. உடலில் பேரொளி ஆவாள்

ஆமயன், மால், அரன், ஈசன், சதாசிவன்,
தாம் அடி சூழநின்று எய்தினர் தம்பதம்
காமனும், சாமன், இரவி, கனலுடன்
சோமனும் வந்து அடிசூட நின்றாளே.

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவரும் சக்தி தேவியின் அடிகளைத் தம் முடி மேல் சூடித் தம் பதவிகளைப் பெற்றனர். காமன், அவன் இளையவன் சாமன், சூரியன், சந்திரன், அக்கினி இவர்களும் வந்து தேவியின் திருவடியில் பொருந்திட, அவள் ஒரே பேரொளியாக நின்றாள்.

#1209. அண்ட முதல்வி ஆடுவாள்

சூடும் இளம்பிறை சூலி கபாலினி
நீடும் இளங்கொடி, நின்மலி, நேரிழை,
நாடி நடு இடை ஞானம் உருவ நின்று
ஆடும் அதன்வழி அண்ட முதல்வியே.

சக்தி தேவி இளம் பிறையைச் சூடுபவள்; சுழுமுனை நாடியில் பொருந்திச் சூரியன், சந்திரன், அக்கினி தோற்றுவிக்கும் சூலத்தைத் தன் வடிவாகக் கொண்டவள்; கபாலினி, மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரை நீண்டு செல்லும் கொடி போன்ற சித்திரணி நாடியில் செல்பவள்; நிர்மலமனவள். அழகிய பெண்,

இவள் நடுநாடியாகிய சுழுமுனையில் ஞானம் விளங்குமாறு நடனம் புரிவதால் அண்டத்தில் தலைவி ஆனாள்.

#1210. எல்லாம் சக்தி மயம்.

அண்டம் முதல் அவனி பரியந்தம்
கண்டது ஒன்று இல்லைக் கனங்குழை அல்லது
கண்டனும் கண்டியும் ஆகிய காரணம்
குண்டிகை,கோளிகை கண்டத னாலே.

விண் முதல் மண் வரை பரவியும், விரவியும், நிலையாக இருப்பது பொற்குழை அணிந்த காதுகளை உடைய பராசக்தியே ஆவாள். அவளைத் தவிர வேறு எவரும் இல்லை, வேறு எதுவும் இல்லை. அவள் சிவனும் சக்தியுமாக இரண்டு உருவங்கள் ஆனதன் காரணம் ஆண் பெண் கூட்டுறவால் உயிர்களைப் படைப்பதற்காகவே.

#1211. நஞ்சை அமுதாக்கும் நாயகி

ஆலம் உண்டான் அமுது ஆங்கு அவர் தம்பதம்
சால வந்து எய்தும், தவத்து இன்பம் தான் வரும்,
கோலி வந்து எய்தும் குவிந்த பதவையோடு
ஏல வந்து ஈண்டி, இருந்தனள் மேலே.

பராசக்தி நஞ்சை உண்ட தன் நாயகனுக்கு அமுதம் ஆனவள்; அவன் அடைந்த பதவியும் அவள் தந்தது; கடின தவம் தரும் சீரிய இன்பமும் அவளே ஆவாள்; அவள் எல்லா ஆதாரங்களின் வழியே சென்றடையும் குவிந்த சுழுமுனையில் பொருந்தி, தலை உச்சியில் சிறந்து விளங்குகின்றாள்.

#1212. வழிபடாது இருந்து அழிந்து விடாதீர்

மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்துஎய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலாம் நளினம் நின்று ஏத்திநட் டுச்சிதன்
மேலாம் எழுதினள் ஆமத்தி னாளே.

தேவியை வழிபட்டால் மேன்மேலும் பெருகும் நம் செய்யும் மேலான அருந்ததவம். காற்றின் இயக்கத்தால் வாழ்ந்து அழிந்து படும் மக்கள் இதனை அறிந்து கொள்வதில்லை. அவர்கள் கண நேரத்தில் அழிந்து போய்விடுவார்கள். தூல உடலில் நான்கு இதழ் தாமரையாகிய மூலாதாரத்தில் நாம் வழிபடும் தேவியே பிறகு தலை உச்சியில் பிரணவமாகத் தோன்றுவாள்.

#1213. நேமத் துணைவி நன்மை செய்வாள்

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்
நாம நமசிவ என்றிருப் பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றாளே.

அன்னமய கோசத்துக்குச் சக்தி உணவுப் பொருளாக இருப்பாள்; ஓம குண்டத்தில் சிவார்ப்பணம் செய்பவருக்கு அங்கே சோதியாக விளங்குவாள். “நான் சிவன் அடிமை” என்று இருப்பவரின் மூலாதாரத்தில் தேவி பொருந்தி விளங்குவாள்.

#1214. கலா மயமாகக் கலந்து நிற்பாள்

நிலாமயம் ஆகிய நீள்படி கத்தின்
சிலாமயம் ஆகும் செழுந்த ரளத்தின்
கலாமயம் ஆகும் கரிகுழல் கோதை
கலாமய மாகக் கலந்து நின்றாளே.

நிலவை ஒத்த வெண்பளிங்கின் நிறத்தினள்; செழுமையான முத்துச் சிலை போன்றவள்; சுருண்ட குழல் போன்ற நடு நாடியில் ஒளிர்பவள். அவள் ஐந்து கலைகளாக அனைத்திலும் கலந்து நிற்பாள்.

ஐந்து கலைகள்:
(1). நீக்கல், (2). நிலை பெறுத்தல், (3). நுகரச் செய்தல், (4) அமைதி ஆக்கல், (5) அப்பால் ஆக்கல்.

#1215. கற்பனைக்கு எட்டாதவள்

கலந்துநின் றாள் கன்னி காதல னோடும்
கலந்துநின் றாளுயிர் கற்பனை யெல்லாம்
கலந்துநின் றாள்கலை ஞானங்க ளெல்லாம்
கலந்துநின் றாள்கன்னி காலமு மாமே.

மூலாதாரத்தில் உருத்திரனுடன் குண்டலினி சக்தியாகப் பொருந்தி நிற்பாள்.
சீவராசிகளின் கற்பனைகளுக்கு எல்லாம் அவளே காரணமாக நிற்பாள்.
கலைகளிலும், கலை ஞானங்களிலும் அவளே கலந்து நிற்பாள்.
காலத் தத்துவத்துடன் அவள் பிரியாமல் கலந்து நிற்பாள்.

#1216. மாலினி என்னும் பாலினி

காலவி எங்கும் கருத்தும் அருத்தியும்
கூலவி ஒன்றாகும் கூடல் இழைத்தனள்,
மாலினி, மாகுலி, மந்திர சண்டிகை,
பாலினி, பாலவன் பாகம்அது ஆமே.

காலத் தத்துவமாக இருப்பவள்; சீவர்களுக்கு அனேக அனுபவங்களைத் தருபவள்; அன்பர்களுக்கு அவர்கள் விரும்பும் பொருளைத் தந்து அனுகூலம் செய்பவள்; பிரிவில்லாத கூட்டணி அமைப்பவள். மாலின் தங்கையாகிய மாலினி, மூலாதாரத்தில் இவள் குண்டலினி; சண்டிகை மந்திரத்தில் விளங்குபவள்; சீவர்களைக் காக்கும் பாலினி. அவள் பால் வண்ணச் சிவபெருமானின் ஒரு பாகம் ஆவாள்.

#1217. சக்தியின் அழகிய வடிவம்

பாகம் பராசத்தி, பைம் பொன் சடைமுடி,
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புயம்
மோகமுகம் ஐந்து, முக்கண் முகந்தொறும்,
நாகம் உரித்து நடம் செய்யும் நாதர்க்கே.

சிவபெருமானின் உடலில் ஒரு பாகம் ஆவாள் பராசக்தி. பொன்னிறக் கதிர்களே இவள் தலை முடி. உடல் ஒன்று எனினும் திண்ணிய புஜங்கள் பத்து, அழகிய முகங்கள் ஐந்து, ஒவ்வொரு முகத்திலும் கண்கள் மூன்று. இருட்டைப் பிளந்து கொண்டு பிரணவத்தில் ஒளிரும் சிவபெருமானுக்கு இவள் இடப்பாகம்.

#1218. ஆதியும் அவளே அந்தமும் அவளே

நாதனும் நால்ஒன் பதின்மரும் கூடி நின்று
ஓதிடும் கூட்டங்கள் ஓர் ஐந்து உள; அவை
வேதனும் ஈர் ஒன்பதின்மரும் மேவி நின்று
ஆதியும் அந்தமும் ஆகி நின் றாளே.

ஆன்மாவும் முப்பத்தாறு தத்துவங்களும் ஒன்றாகக் கூடி நின்று செயல்படுகின்றன. அந்தக் கூட்டம் ஐந்து ஐந்தாக சேர்ந்து கொண்டு ஐந்து கூட்டங்களாக விளங்கும். வேதனும் பதினெட்டு கணத்தவரும் மேவி நின்றிடத் தேவி ஆதியும் ஆனாள்! அவளே அந்தமும் ஆனாள்!

ஐந்து கூட்டங்கள்:

1. பஞ்ச பூதங்கள்
2. பஞ்ச கர்மேந்திரியங்கள்

3. பஞ்ச ஞானேந்திரியங்கள்
4. ஐந்து தன்மாத்திரைகள்
5. கலை, காலம், நியதி, மாயை புருடன் என்னும் ஐந்து.

#1219. ஆயிழையுடன் ஆகி நின்றான்

ஆகின்ற நாள் கலை ஐம்பத் தொருவர்கள்
ஆகிநின் றார்களில், ஆருயிராம் அவள்;
ஆகிநின் றாளுடன் ஆகிய சக்கரத்து
ஆகிநின் றான்அவன் ஆயிழை பாடே.

ஆறு ஆதாரச் சக்கரங்களில் உள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களிலும் பராசக்தியின் சக்தி பொருந்தி உள்ளது. அந்த எழுத்துக்களின் உயிராக உள்ளவள் சக்தி. இங்ஙனம் எழுத்துக்களுடன் கலந்து நிற்பவளுடன் கலந்து பொருந்தி நின்றான் சிவபெருமான்.

#1220. வார் குழலி இனிது நிற்பாள்

ஆயிழை யாளொடும் ஆதி பரமிடம்
ஆயதோ ரண்டவை யாறு மிரண்டுள
வாய மனந் தோ றறுமுக மவைதனில்
ஏயவார் குழலி யினிதுநின் றாளே.

ஆயிழையும், ஆதிப் பிரானும் சேர்ந்து உறைவது எட்டு இதழ்களைக் கொண்ட அண்டவை என்னும் சக்கரத்தில். உடலின் உள்ள ஆறு ஆதாரங்களிலும் பொருந்தி நிற்கும் அன்னை, சாதகனின் உள்ளம் எந்த எந்தக் குறிக்கோளைப் பற்றிக் கொண்டு நிற்கின்றதோ அதற்கு ஏற்ப அருள் புரிவாள்.

#1221. ஓதி உணர்ந்து நிற்பாள்

நின்றனள் நேரிழையோடு உடன் நேர்பட,
இன்றுஎன் அகம்படி ஏழும் உயிர்ப்பு எய்தும்,
துன்றிய ஓர்ஒன் பதின்மரும் சூழலுள்
ஒன்றுஉயர்வு ஓதி, உணர்ந்து நின்றாளே.

சுழுமுனையுடன் நேர்பட்டுச் சக்தி அன்னை என்னுள் மேல் நோக்கியபடி நின்றாள். அதனால் உயிர் மூச்சு ஏழு ஆதாரச் சக்கரங்களின் வழியே உந்தப்பட்டு மேல் நோக்கிச் சென்றது. அதனால் சகசிரதளம் நன்கு விளங்கியது. ஒன்பது வாயுக்கள் மேல் நோக்கிச் செல்வது உயர்ந்தது என்று எனக்கு அன்னை அறிவித்தாள். தானும் அவற்றோடு பொருந்தி நின்று மேல் நோக்கிச் சென்றாள்.

#1222. ஊர்த்துவ உயிர்வளி சிவனின் காதலி!

உணர்ந்து எழு மந்திரம் 'ஓம்' எனும் உள்ளே
மணந்து எழுமாம் கதி ஆகியது ஆகும்;
குணர்ந்து ஏழு சூதனும் சூதியும் கூடிக்
கணந்து எழும், காணும் அக் காமுகை யாமே.

மேல் நோக்கி எழும் உயிர் மூச்சு, 'ஓம்' என்னும் பிரணவத்துடன் சேர்ந்து எழுவது வீடுபேறு அடைகின்ற நெறியாகும். அப்போது சிவத்தை நோக்கிச் செல்லும் சக்தி, சீவனுடன் சேர்ந்து மேலே எழும்பும். இந்த நிலை ஒரு காதலனைத் தேடி ஒரு காதலி செல்வதற்கு சமமாகும்.

#1223. கோதை கோதண்டம் ஆவாள்

ஆம் அது அங்கியும் ஆதியும் ஈசனும்,
மாமது மண்டலம் மாருதம் ஆதியும்
ஏமது சீவன்; சிகை அங்கு இருண்ட இடம்
கோமலர்க் கோதையும் கோதண்டம் ஆகுமே.

மேல் நோக்கிய சகசிரதளத்தில் ஆதி சக்தி, மகேசுரன், வாயு, கதிரவன், சந்திரன் அக்கினி என்பவை திகழும் இடம். சிகை என்னும் மந்திரம் உடலறிவைக் கடந்து செல்லும் போது இருண்டு போய்விடும். அப்போது பராசக்தியும் இறைவன் உறையும் வீணாத் தண்டினில் விளங்குவாள்.

சிகை எனும் அங்க மந்திரம் கவிழ்ந்த நிலையில் உள்ள சகசிரதளத்துக்கு உரியது.
நிமிர்ந்த விட்ட சகசிரதளத்தில் சிகை என்னும் அறிவு இருண்டு போய் விடும்.

#1224. ஐந்தொழில் புரிபவள்

ஆகிய கோதண்டத்து ஆகும் மனோன்மணி
ஆகிய ஐம்பது உடனே அடங்கிவிடும்;
ஆகும் பராபரை யோடுஅப் பரைஅவள்
ஆகும் அவள் ஐங்கருமத்தன் தானே.

மனோன்மணி நடுநாடியாகிய சுழுமுனையில் விளங்குபவள். ஐம்பத்தொரு எழுத்துக்களிலும் அவள் அடங்குபவள்; பெரிய அறிவும், பெரிய ஆற்றலும் கொண்ட சக்தி தேவியே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரிகின்றாள்.

#1225. சீவனில் விளங்குவான் சிவன்

தான் நிகழ் மோகினி, சார்வான யோகினி
போன மயம் உடை யார்அடி போற்றுவர்
ஆனவர் ஆவியின் ஆகிய அச்சிவம்
தான்ஆம் பரசிவ மேலது தானே.

தானாக வந்து விருப்பத்தை ஏற்படுத்துபவள் மோகினி. விருப்பத்தின் பயனை அளிப்பவள் யோகினி. பராசக்தியின் மீது அன்பு கொண்டவர், மோகினியையும் யோகினியையும் கடந்து சென்று விடுவார். அவர் சக்தியின் வயப்பட்டு அவள் மயமாகவே மாறி அவள் திருவடிகளைப் போற்றுவார். அவர் சீவனில் சிவன் விளங்குவான். அவனே பரமசிவன் என்று அறியப்படுபவன்.

#1226. பிரணவ நெறி என்பது எது?

தான்அந்தம் மேலே தரும் சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி அம்பொன் திருவொடு
மோனையில் வைத்து மொழிதரு கூறுஅது
ஆனவை ஓம்எனும் இவ்வுயிர் மார்க்கமே.

மோகினியாகிய பராசக்தி, உடலில் தலை உச்சியில் உள்ள சகசிரதளத்தில், பொன்னொளியில் விளங்கும் சிவத்துடன் தானும் விளங்குவாள். மோன நிலையில் அவள் நமக்கு கூறுவது சீவன் சென்று அடைய வேண்டிய 'அ'கர,' உ'கர, 'ம'கர, விந்து, நாதங்கள் பொருந்திய பிரணவ வழிபாடு ஆகும்.

#1227. வாக்கும் மனமும் ஒன்றிட வேண்டும்

மார்க்கங்கள் ஈன்ற மனோன்மணி, மங்கலி,
யார்க்கும் அறிய அரியாள் அவள் ஆகும்;
வாக்கும், மனமும் மருவி ஒன்றாய்விட,
நோக்கும் பெருமைக்கு நுண்ணறிவு ஆமே.

உலகத்தோரை உய்விப்பதற்காகச் சமய நெறிகளை வகுத்துத் தந்தவள் சக்தி தேவி. அவள் தன் கணவனை விட்டுப் பிரியாமல் இருக்கும் மங்கலி. அவள் எவராலும் அறிந்து கொள்வதற்கு அரியவள் ஆவாள். வாக்கும், மனமும் மருவி ஒன்றாகி விட்டச் சீரிய மனிதரின் சிறந்த நுண்ணறிவில் அவள் விளங்குவாள்.

#1228. சன்மார்க்கம் சிவகதி தரும்

நுண்ணறிவு ஆகும் நுழை புலன் மாந்தர்க்குப்
பின்அறிவு ஆகும் பிரான் அரிவத் தடம்
செல்நெறி ஆகும் சிவகதி சேர்வார்க்குத்
தன்நெறி ஆவது சன்மார்க்கம் ஆமே.

கூர்மையான புலன்களின் உதவியுடன் நாம் பெறும் நுண்ணிய அறிவுக்குக் காரணம் சிவன் அந்தக் கருவிகளுடன் பொருந்தி இருப்பதே ஆகும். இது பின் அறிவு என்று கூறப்படும். கருவிகளைத் துறந்துவிட்டு, அவற்றிம் உதவி இன்றிச் சிவனுடன் பொருந்தி நாம் பெறும் அறிவே செந்நெறி எனப்படும். சிவகதி அடைவதே ஆத்மா பெறவேண்டிய சிறந்த நெறியாகும். அதை அடைவதற்கு உதவுவதே சன்மார்க்க நெறியாகும்.

#1229. சக்தியே சன்மார்க்க தேவி

சன்மார்க்கம் ஆகும் சமைதரும் மார்க்கமும்;
துன்மார்க்க மானவை எல்லாம் துரந்திடும்;
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி ஆவதும்
சன்மார்க்கத் தேவியும் சத்தி என்பாளே.

உயர்ந்த குறிக்கோளில் பொருந்திய நெறி சன்மார்க்கம். இது துர்மார்க்கத்தைத் துரத்திவிடும். நல்ல நெறி வழி நடக்கும் போது நல்ல ஒழுக்கம் வளரும். அத்தகைய நல்ல நெறிகளை நமக்குக் காட்டுபவள் சக்தி தேவியே ஆவாள்.

#1230. சிவசக்தியர் நடுவில் இருக்க வழி

சத்தியம் நானும் சயம்புவு மல்லது
முத்தியை யாரு முதலறி வாரில்லை
அத்திமேல் வித்திடி லத்தி பழுத்தக்கான்
மத்தியி லேற வழியது வாமே.

சிவனும், சக்தியும், ஆன்மாவும் அறியாத வண்ணம் ஒரு சீவன் முத்திடைவது என்பது சாத்தியமே இல்லை. சீவன் பிரணவத்தின் மேல் அரை மாத்திரை ஸ்வரமாகிய ‘ம’கரத்தை இட்டு ஓத வேண்டும். அது கனிந்து பக்குவம் அடைந்தால், அந்த சீவனுக்குச் சிவசக்தியரின் நடுவில் இருக்க வழி கிடைக்கும்.

#1231. விதியை வெல்லலாம்

அது இது என்று அவமே கழியாதே
மது விரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதி அது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடல் ஆமே.

“அது சிறந்து, இது சிறந்தது” என்று மயங்கி ஒரே நெறியில் நில்லாமல் காலத்தை வீணே கழியாதீர். இன்பம் தரும் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியைச் சிரசில் இருக்கும் சிவத்துடன் பொருத்துங்கள். அங்கு சந்திர மண்டலத்தில் பெருகும் அமுதத்தைப் பருகும் திறனை அடையுங்கள். அப்போது அருள் வழியில் நிற்கும் நீங்கள் விதியையும் வெல்லும் வல்லமை பெறுவீர்கள்.

#1232. வென்று விட முடியும்

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதான் மெய்யுணர் வோர்க்கே.

வெற்றியின் மங்கையாகிய சக்தி தேவியை மெய்யாக உணர்ந்து கொண்ட ஒருவரால் விதியை வெல்ல முடியும்; இரு வினைகளையும், வினைப் பயன்களையும் வெல்ல முடியும்; சீவனை அல்லற்படுத்தி ஆட்டிப் படைக்கும் ஐம் புலன்களையும் வெல்ல முடியும்.

#1233. பரம் பொருள் இதுவே

ஓர்ஐம் பதின்மருள் தோன்றியே நின்றது
பாரம்பரியத்து வந்த பரம் இது;
மாரன் குழலாளும் அப்பதி தானும்முன்
சாரும் பதம் இது; சத்தியம் ஆமே.

பாரம்பரியமாக வந்த பரம்பொருள் ஐம்பத்தொரு எழுத்துக்களிலும் தோன்றி நின்றது. காமச் சுவையைத் தந்து விந்து நீக்கத்தைச் செய்யும் குண்டலினியும் அவள் பதியகிய சிவனும் சாருமிடம் இது என்பது சத்தியம்.

#1234. வித்து இன்றியே விளையும்

சத்தியினோடு சயம்புவும் நேர்படில்
வித்துஅது இன்றியே எல்லாம் விளைந்தன
அத்தகை ஆகிய ஐம்பத்தொருவரும்
சித்து - அது மேவித் திரிந்திடுவாரே.

சக்தியுடன் சிவன் சேரும் போது மூலப் பொருட்களின் தேவையில்லை. வெறும் சங்கற்பதாலேயே எல்லாப் பொருட்களும் தோன்றிவிடும். அத்தகைய ஐம்பத்தொரு எழுத்துக்களும் சீவனின் அறிவில் பொருந்தும் போது அந்த சீவனின் கருத்துக்கு ஏற்ற பிரபஞ்சம் ஒன்று உருவாகும்.

#1235. அமுதூற அமைவாள்

திருந்து சிவனும் சிலைநுத லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய்து ஏத்த,
அருந்திட அவ்இடம் ஆரமுது ஆக
இருந்தனள் தான்அங்கு இளம்பிறை என்றே.

சிவனும், சக்தியும் வானவர்கள் வந்து வழிபட்டுப் போற்றிடும் வண்ணம் சந்திர மண்டலத்தில் அமைவர். அவர்கள் இருக்குமிடம் ஓர் அரிய அமுத ஊற்றாகும். இளம் பிறை போல இருப்பாள் தேவி அங்கே.

#1236. சோதி நிற்பாள்

என்றும் எழுகின்ற ஏரினை எய்தினார்
அன்றது ஆகுவர் தார்குழ லாளொடு,
மன் தரு கங்கை, மதியொடு, மாதவர்
துன்றிய தாரகை சோதி நின்றாளே.

மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கிச் செல்லும் எழுச்சியை உடையவர்கள் சக்தி தேவியின் தன்மையைப் பெறுவார்கள். ஒளி குறையாத சந்திர மண்டலத்தில் மாதவம் செய்யும் முனிவர்களின், ஆன்ம ஒளியான சோதியாகவும் சக்தி நிற்பாள்.

1237. ஞானங்கள் தோன்றிடும்

நின்றனள் நேரிழை யாளொடு நேர்பட
ஒன்றிய உள்ளொளி யாலே உணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடும், ஞானங்கள் தோன்றிடும் தானே.

அங்ஙனம் நிற்கின்ற சக்தியுடன் சந்திர மண்டலத்தின் ஒளியில் பொருந்தி இருந்தால், அந்த உயிர்களின் சிந்தையில் அதுவரையில் மறைந்திருந்த, அவர்களுக்குத் தேவையான ஞானங்கள் தாமே வெளிப்படும்.

#1238. ஆன்மா சக்திதேவியை அறியும்

தோன்றிடும் வேண்டு உருஆகிய தூய்நெறி,
ஈன்றிடும் ஆங்கு அவள் எய்திய பல்கலை,
மான்தரு கண்ணியம் மாரனும் வந்து எதிர்
சான்று அது ஆகுவர் தாம்அவள் ஆயுமே.

விரும்பிய உருவத்தை அடைவதற்கான ஒரு நல்ல வழி தோன்றும். பல கலைஞானங்கள் பராசக்தியின் அருளால் கிடைக்கும். மான் விழி கொண்ட சக்தி தேவியும், மன்மதனை நிகர்த்த பரமசிவனும் ஆன்மாவுக்கு எதிரில் தோன்றுவர். ஆன்மாவிடம் சிறிதும் பேதம் இன்றித் தாம் இருப்பதை உணர்த்துவர்.

#1239. அடையும் பொருளும், அடையும் வழியும் அவளே.

ஆயும் அறிவும் கடந்தஅணு வாரணி
மாயம் அது ஆகி, மதோமதி ஆயிடும்
சேய அரிவை, சிவானந்த சுந்தரி,
நேயமதா நெறியாகி நின்றாளே.

அவள் தன்னை ஆராய்கின்ற அறிவின் திறனைக் கடந்தவள்; அவள் அணுவுக்கு அணுவானவள். அவள் சீவனை மயக்கும் மாயையாக இருந்து மிகுந்த களிப்பினை எய்துபவள்; அவள் சிவந்த ஒளியில் விளங்கும் தேவி; அவள் சிவனுக்கு ஆனந்தம் தரும் அழகிய பெண்மணி. ஆன்மா அடைய வேண்டிய பொருள் அவளாகி, அதை அடைவிக்கும் வழியாகவும் அவளே ஆகி நின்றாள்.

#1240. அறிவு செறிந்த சமாதி

நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னோடும்
குறியது கூடிப் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிட லாமே.

நெறியாக நிற்கும் பராசக்தியைப பிரிவின்றிச் சிவனோடு வழிபடுபவருக்கு அறிவு குன்றாத உயர்ந்த சமாதி நிலை கிடைக்கும்.

#1241. மாமயம் எய்தலாம்

ஆம் அயன் மால் அரன் ஈசன் மாலாங்கதி
'ஓம்' மயம் ஆகிய ஒன்பதும் ஒன்றிடத்
தேம்மயன் நாளும் 'தெனாதென' என்றிடும்
மாமய மானது வந்து எய்தலாமே.

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன் ஆன்மாவுக்கு மயக்கத்தைத் தரும் நிலையில் உள்ளனர். பிரணவ வடிவான சிவத்தில் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், சூரியன், சந்திரன், அக்கினி, விண்மீன் என்ற ஒன்பதின்மரையும் ஒடுக்கி விட்டால், அதன் பின்னர் தேனை அருந்திக் களிக்கும் வண்டைப் போல நாமும் சிவசக்தியின் உருவமாகும் மாமயத்தை அடையலாம்.

#1242. வந்தனை செய்யும் வழி

வந்துஅடி போற்றுவர் வானவர் தானவர்,
இந்து முதலாக எண்திசை யோர்களும்
கொந்துஅணி யும்குழ லாளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழி நவில் வீரே.

பூங்கொத்தினைக் குழலில் அணியும் சக்தி தேவியையும், அவள் கோனாகிய சிவபெருமானையும் சகசிரதளத்தில் இருத்தி வழிபடும் நெறியை உலகுக்கு உரைப்பீர். அங்ஙனம் உரைத்தால் இந்திரன் முதலான எட்டு திசைக் காவலர்களும் பிற வானவர்களும் தானவர்களும் வந்து உங்களை வணங்கி நிற்பர்.

#1243. சக்தி வழிபாடு சிவத்தையும் சென்று சேரும்

நவிற்றும் நல் மந்திரம், நன் மலர், தூபம்
கவற்றிய கந்தம், கவர்ந்து எரி தீபம்,
பயிற்றும் உலகினில் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கு ஓர் அர்ச்சனை தானே.

நவில்கின்ற நல்ல மந்திரங்களும், நல்ல மணமலர்களும், மணம் கமழும் தூபமும், பிற நறுமணப் பொருட்களும், இருளை அகற்றும் தீபமும் கொண்டு செய்கின்ற தேவியின் பூசை வேள்வியில் இடும் அவியை ஏற்கும் அண்ணலுக்கும் ஓர் அர்ச்சனையாக அமையும்.

#1244. பராசக்தியைப் போற்றுக

தாங்கி உலகில் தரித்த பராபரன்,
ஓங்கிய காலத்து ஒருவன், உலப்பு இலி,
பூங்கிளி தங்கும் புரிகுழலாள் அன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே.

சக்தியைத் தன் உடலின் ஒரு பக்கத்தில் தாங்குகின்றான் சிவன். அத்துடன் அவன் உலகத்தையும் தாங்குகின்றான். ஆயினும் அவள் தரும் மேன்மையால் அவன் நிகரற்றவனாகவும் அழிவற்றவனாகவும் இருக்கின்றான். சுருண்ட கூந்தலை

உடைய சக்தி அழகிய கிளியை ஏந்தியுள்ளாள். சிவனைத் தன் உடலில் ஒரு பக்கத்தில் கொண்டதால் அவளை நன்கு வழிபடுக.

#1245. சக்தியைத் தொழுபவரைப் பிறர் தொழுவர்

பொற்கொடி மாதர் புனை கழல் ஏத்துவர்
அற்கொடி மாதுமை ஆர்வத் தலைமகள்,
நற்கொடி மாதை, நயனங்கள் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே.

உமை ஒரு கரிய கொடி போன்றவள்; அன்பர்களுக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவள்; முக்கண்களை உடைய நல்ல மாது, வில் போன்ற புருவங்கலின் நடுவில் உள்ள ஆக்ஞை சக்கரத்தில் விளங்கும் அவளை மாறாத அன்புடன் வழிபடுபவர்களை, உலகத்தில் உள்ள பிற அழகிய பெண்கள் வந்து தொழுது நிற்பர்.

#1246. முயன்றால் ஆற்றலை மாற்றலாம்

விளங்கு ஒளி ஆய விரிசுடர் மாலை
துளங்கு பராசக்தி துங்கு இருள் நீங்கக்
களம் கொள் மணியுடன் காம வினோதம்
உளம் கொள் இலம்பியம், ஒன்று தொடரே.

ஒளி வீசும் மூலாதாரச் சக்கரத்தின் அசைவு கீழ் நோக்கிச் செல்லாமல், மாலையைப் போலப் பின்னிப் பிணைந்துள்ள சக்கரங்களின் வழியே மேல் நோக்கிச் செல்ல வேண்டும். இதற்கு மூலாதாரத்தில் ஏற்படும் அசைவினை வாய் வழியாகப் பேசாமல் கழுத்தில் உள்ள உண்ணாக்கின் வழியாக மூளைக்கு அனுப்ப வேண்டும். அங்கு அது தன் அதிர்வினை ஏற்படுத்தும். இவ்வாறு முயன்று நம் ஆற்றலை நம்மால் மாற்றி அமைக்க முடியும்.

மூலாதாரத்திலிருந்து மேலே எழும் அசைவு தொண்டையில் வாய்ச் சொற்களாக மாறும். சொற்களைப் பேசாமல் மனதில் நினைத்தால் அவை சிரசுக்குச் சென்று அங்கு சிறு அதிர்வை ஏற்படுத்தும். இதுவே நுண்மையாகச் சிரசைக் கடந்து செல்வது எனப்படும்.

#1247. ஓர் உரு ஆவர்

தொடங்கி உலகினில், சோதி மணாளன்
அடங்கி இருப்பது என் அன்பின் பெருமை ;
விடம் கொள் பெருஞ்சடைமேல் வருகங்கை
ஒடுங்கி, உமையொடும் ஓர் உரு ஆமே.

சோதி மாயமான சக்தியின் மணாளன் ஏன் எனக்குள் அடங்கி இருகின்றான்? அது என் அன்பின் பெருமையால் மட்டுமே. விந்துவைக் காமக் கழிவுகளைச் செய்து வீணாக்காமல் மேலே கொண்டு சென்று சிரசை அடைந்தால், அங்கு பொங்கி வரும் கங்கை போன்ற ஒளி வெள்ளத்தில் சிவசத்தியர் பிரிவின்றி ஓர் உரு ஆவர்.

#1248. புரிவளைக் கைச்சி

உருவம் பல உயிராய் வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிற்
புரிவளைக் கைச்சி எம் பொன் அணி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே.

இறைவன் எல்லா உயிர்களையும் தன் வடிவாகக் கொண்டவன். இவ்வாறு அவன் எல்லா சீவன்களிலும் பொருந்தி வெளிப்படுவது ஏன்? உண்மையை ஆராய்ந்தால், ஒலிக்கின்ற வளையல்களை அணிந்த சக்தி தேவியைச் சிவன் மகிழ்வுடன் பொருந்தி இந்த உலகைப் படைத்தான் என்று கூறுவது வெறும் உபசார வார்த்தைகளே.

#1249. உடலில் உறைபவன் சிவன்

மாயம் புணர்க்கும் வளர்சடையான் அடித்
தாயம் புணர்க்கும் சலம் தீ அமலனைக்
காயம் புணர்க்கும் கலவியுள் மா சத்தி
ஆயம் புணர்க்கும் அவ் யோனியும் ஆமே.

மாயை ஆகிய சக்தியைப் பொருந்துபவன் சிவன். ஒளிமண்டலத்தில் அவன் திருவடிகளுடன் தொடர்பு கொண்ட சீவன்கள் உள்ளன. அவனே தன் கலப்பினால் அந்த சீவன்களின் மேனியைப் படைப்பான். அவனே அவற்றில் பொருந்தி அவற்றைச் சக்திக் கூட்டத்துடன் இணைத்து வைப்பான்.

#1250. அருளைப் பெறலாம்

உணர்ந்து ஒழிந்தேன் அவனாம் எங்கள் ஈசனைப்
புணர்ந்து ஒழிந்தேன் புவனபதியாரை;
அணைந்து ஒழிந்தேன் எங்கள் ஆதி தன் பாதம்
பிணைந்து ஒழிந்தேன் தன் அருள் பெற்றவாறே.

“நான் சிவனிலிருந்து வேறுபட்டவன் அல்லன்” என்பதை நான் உணர்ந்து அறிந்தேன். என் தனித்துவத்தை விட்டு விட்டுச் சிவனுடன் நான் ஒன்றியபோது நான் பரந்த நிலையை அடைந்தேன். சிவனின் தொடர்பினைப் பெற்ற பின்னர் கீழே

உள்ள உலகத் தொடர்புகளை நீக்கினேன். ஆதி சக்தியின் அடிகளைப் பற்றி அவள் அருளைப் பெற்று உலக பந்தம் நீங்கி இறைவனுடன் கூடினேன்.

#1251. கற்றதன் பயன் இறைவனைப் பற்றுவதே

பெற்றாள் பெருமை, பெரிய மனோன்மணி
நற்றாள், இறைவனே நற்பயன் என்பர்,
கற்றான் அறியும் கருத்து அறிவார்கட்குப்
பொற்றாள் உலகம் புகழ் தனி ஆமே.

நவ சக்தியரில் முதன்மையானவள் மனோன்மணி. அவள் அடிகளைப் பற்றியவர் கூறுவர் இறைவனின் அடிகள் அழிவற்ற நல்ல பயனைத் தரும் என்னும் உண்மையை. ஒருவர் கற்ற கல்வியின் பெரும் பயன் சிவன் திருவடியாகிய பொன்னுலகத்தில் சென்று புகுவதே.

#1252. கனியாய் நினைவது எதனால் அம்மையே?

தனி நாயகன் தனோடு என் நெஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழ் உலகு என்பர்
பனியால் மலர்ந்தவை போதுகை ஏந்திக்
கனியாய் நினைவது என் காரணம் அம்மையே?

தனித் தன்மை வாய்ந்த தன் தலைவன் சிவனோடு என் உள்ளாத்தில் விரும்பி உறையும் இனிய சக்தியின் தேவியின் இருப்பிடங்கள் ஏழு உலகங்கள் என்பர். பனி மண்டலத்தைப் போன்ற சகசிர தளத்தில் இருக்கும் என் அம்மையே! நீ என்னைக் கனிவுடன் நினைப்பதற்கு என்ன காரணம் என்று எனக்குக் கூறுவாய்!

#1253. மனோன்மணியும், குண்டலினியும்

அம்மனை அம்மை அரிவை மனோன்மணி
செம்மனை செய்து, திரு மங்கை யாய்நிற்கும்
இம்மனை செய்த இன்னில மங்கையும்
அம்மனை ஆகி அமர்ந்து நின்றாளே.

ஏழாவது உலகமாகிய சகசிர தளத்தில், நல்ல வீட்டுலகை உருவாக்கி, அங்கு நல்ல ஞானச் செல்வியாக உறைந்து இருப்பாள் மனோன்மணி. இந்த உலகில் நாம் எடுத் உடலைப் பக்குவப் படுத்தி மேலே சகசிரதளத்துக்குக் கொண்டு சென்ற குண்டலினி சக்தியும் அங்கே அவளுடன் இருப்பாள்.

#1254. அம்மையும் அத்தனும்

அம்மையும் அத்தனும் அன்பு உற்றது அல்லது
அம்மையும் அத்தனும் ஆர் அறிவார் என்னை;
அம்மையோடும் அத்தனும் யானும் உடன் இருந்து
அம்மையோடு அத்தனை யான் புரிந் தேனே.

என்னை பெற்ற தாயும் தந்தையும் தாம் கொண்ட காதலால் உறவு கொண்டனர். அவர்கள் என்னைப் பெற்றவர்கள் ஆயினும் அவர்கள் என்னை அறிந்ததில்லை. சிவனும், சக்தியும் எப்போதும் என் ஆன்மாவுடன் ஒன்றி இருந்து என்னை நன்கு அறிந்து கொண்டவர்கள். என்னை விட்டு எப்போதுமே பிரியாத அந்த அம்மையையும் அத்தனையும் வணங்கி நான் உய்வடைந்தேன்.

நான்காம் தந்திரம் -
9. ஏரொளிச் சக்கரம்

ஏர் ஒளிச் சக்கரம் = எழுச்சி கொண்டு உடலில் மேல் முகமாக நோக்கும் ஒளி வடிவான சக்கரம்.

மூலாதாரத்தில் உள்ள அக்கினி எலாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டு பரந்து ஒன்றாகி நிற்பது.

#1255. மையத்தில் தீ மயமான சிவன்

ஏர் ஒளி உள் எழு தாமரை நால் இதழ்;
ஏர் ஒளி விந்துவினால் எழுநாதமாம்;
ஏர் ஒளி அக்கலையெங்கும் நிறைந்தபின்
ஏர் ஒளிச் சக்கர அந்நடு வன்னியே.

மூலாதாரத்தில் தோன்றி எழும் ஒரு நான்கு இதழ்த் தாமரை. அது ஒளி மிகுந்தது. தூல விந்து மாற்றம் அடைந்து மேலே எழுந்து சிரசை அடையும் போது அதன் ஒளி சிரசில் நாதமாக மாறிவிடும். அதன் கலை முழுவதுமாக எழுந்த பிறகு அதன் மையத்தில் தீ வடிவாகச் சிவம் விளங்கும்.

#1256. சிரசில் அமையும் சக்கரம்

வன்னி எழுத்து அவை மாபலம் உள்ளன;
வன்னி எழுத்து அவை வான் உற ஓங்கின;
வன்னி எழுது அவை மாபெருஞ் சக்கரம்,
வன்னி எழுத்து இடுவாறு அது சொல்லுமே.

மூலாதாரத்தில் உள்ள நான்கு இதழ்த் தாமரையில் உள்ள நான்கு எழுத்துகள் 'வ', 'ச', 'ஷ', 'ஸ'. அவை வானளாவி ஓங்கி நிற்பவை. அவை அங்கு வலிமை வாய்ந்த சக்கரமாக அமைகின்றன. அதை நான் இப்போது கூறுவேன்.

#1257. நூற்று நாற்பத்து நான்கு சக்திகள்

சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாம்;
சொல்லிடும் அப்பதி அவ்வெழுத்து ஆவன
சொல்லிடும் நூறொடு நாற்பத்து நால் உரு
சொல்லிடு சக்கரமாய் வரும் மேலதே.

வீரியமாகக் கீழே இருந்த விந்து மாற்றி அமைக்கப்படும் போது பன்னிரண்டு கலைகளைக் கொண்ட கதிரவனாகச் சிரசில் விளங்கும். மூலாதாரத்தில் இருந்த அக்கினியாகிய 'வ', 'ச', 'ஷ', 'ஸ' என்னும் நான்கும் மூலாதாரத்தில் இருந்து இடைகலை , பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளின் வழியே மேலே செல்லும். அவை அங்கு நூற்று நாற்பத்து நான்கு சக்திகளாக மாறித் தலையின் வட்ட வடிவத்தில் அமையும்.

#1258. பூமித் தத்துவம்

மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்து ஆய்விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல்வரும் சக்கர மாய்வரும் ஞாலமே.

மேல் நோக்கி வரும் விந்துவும் 'அம்' என்ற அந்த எழுத்து ஆகிவிடும். அதை விளக்கச் சந்திர மண்டலம் தலை மேல் அமையும். அதன் ஒளியுடன் அங்கு நாதமும் ஓங்கி நிற்கும். தலயின் மேல் சந்திர மண்டலம் சிறப்பாக அமைந்து விட்டால் அங்கு பூமித் தத்துவம் நுண்மையாக அமையும்.

#1259. நுண்மையே பருமையாக மாறிவிடும்

ஞாலம் அது ஆக விரிந்தது சக்கரம்;
ஞாலம் அது ஆயிடும் விந்துவும் நாதமும்;
ஞாலம் அது ஆயிடும் அப்பதி யோசனை;
ஞாலம் அது ஆக விரிந்தது எழுத்தே.

மேலே விளங்குகின்ற நூற்று நாற்பத்து நான்கு அறைகளையுடைய மண்டலமே உலகமாக விரிவடையும். அதில் விளங்குகின்ற நாதமே உலகமாக விரிவடையும். அது இறைவனின் சங்கற்பத்தால் உலகமாக விரிவடையும். சூரிய

சந்திர மண்டலங்களில் உள்ள நுட்பமான ஒலியே இந்தப் பருவுலகமாக விரிவடையும்.

#1260. நிலமும், நீரும் தோன்றும்

விரிந்த எழுத்து அது விந்துவும் நாதமும்;
விரிந்த எழுத்து அது சக்கரமாக;
விரிந்த எழுத்து அது மேல் வரும் பூமி
விரிந்த எழுத்தில் அப்புறம் அப்பே.

அகரக் கலை முதலில் விரிவடைந்து விந்துவாகவும், நாதமாகவும் விளங்கும். அதில் உள்ள சக்கரம் விரிவடையும் போது நிலத் தத்துவம் தோன்றும். அதன் பின்னர் அது மேலும் விரிவடையும் போது நீர்த் தத்துவம் தோன்றும்.

#1261. தீயும், வளியும், வெளியும் தோன்றும்

அப்புஅது வாக விரிந்தது சக்கரம்,
அப்பினில் அப்புறம் அவ்வனல் ஆயிடும்,
அப்பினில் அப்புறம் மாருத மாய்எழ,
அப்பினில் அப்புறம் ஆகாசம் ஆமே.

அந்தச் சக்கரம் நீராக விரிவடைந்தது. அந்த நீர்த் தத்துவத்தில் இருந்து அதன் பிறகு தீயின் தத்துவம் தோன்றியது. தீயின் தத்துவத்தில் இருந்து காற்றுத் தத்துவமும், காற்றுத் தத்துவத்தில் இருந்து வான் தத்துவமும் தோன்றின.

#1262. சிவானந்தம் தரும்

ஆகாச அக்கரம் ஆவது சொல்லிடில்,
ஆகாச அக்கரத் துள்ளே எழுத்து அவை
ஆகாச அவ்எழுத்து ஆகிச் சிவானந்தம்
ஆகாச சக்கரம் ஆவது அறிமினே.

வானத் தத்துவத்துக்கு உரிய எழுத்துப் பற்றி சொல்ல வேண்டும்மென்றால், வானத் தத்துவத்தின் பீஜ எழுத்து அகரக் கலையாகும். அது மாறாத சிவானந்தத்தைத் தரும் என்று அறிவீர்!

விளக்கம்:
நிலத் தத்துவத்துக்கு உரிய எழுத்து ....ல
நீர்த் தத்துவத்துக்கு உரிய எழுத்து..........வ
தீத் தத்துவத்துக்கு உரிய எழுத்து...........ர
காற்றுத் தத்துவத்துக்கு உரிய எழுத்து..... ய

வானத் தத்துவத்துக்கு உரிய எழுத்து........அ

#1263. எப்போது சிவம் விளங்கும்?

அறிந்திடும் சக்கரம் ஐ யஞ்சு விந்து;
அறிந்திடும் சக்கரம் நாதம் முதலா;
அறிந்திடும் அவ்வெழுத்து அப்பதி யோர்க்கும்;
அறிந்திடும் அப்பகலோன் நிலையாமே.

இந்தச் சக்கரத்தில் பத்து ஒளி வட்டங்கள் அமைந்துள்ளன. இதை நாதத்தை முதலகக் கொண்டு அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு மண்டலத்திலும் அதன் தலைவன் அமைந்திருப்பான். இவை அனைத்தையும் கடந்து சென்றால் அங்கே சிவ சூரியனைக் காணலாம்.

பத்து ஒளி வட்டங்கள் இவை:
(1). மூலாதாரம், (2). சுவாதிஷ்டானம், (3). மணிபூரகம், (4). அநாஹதம், (5). விசுத்தி, (6). ஆக்ஞை, (7) கதிரவன், (8). திங்கள், (9). தீ, (10). நாள்மீன்

#1264. ஆத்ம சோதி மண்டலம்

அம்முத லாறுமவ் வாதி எழுத்தாகும்
அம்முத லாறுமவ் வம்மை யெழுத்தாகும்
இம்முதல் நாலு மிருந்திடு வன்னியே
இம்முத லாகும் எழுத்தவை யெல்லாம்.

முதல் ஆறு சக்கரங்களில் இருப்பது ஆதி எழுத்தாகிய பிரணவம். இது சக்தி தேவிக்கு உரியது. இவற்றுக்கு மேலே அமைந்துள்ள நான்கு சக்கரங்களில் கதிரவனும், திங்களும், தீயும், நாள்மீனும் சேருவதால் அவை அமைப்பது ஆத்ம சோதி மண்டலம் ஆகும். எழுத்து வடிவானவை அனைத்தும் இந்த ஆத்மசோதி மண்டலத்தில் இருந்து தோன்றுகின்றன.

#1265. முதலும் முடிவும் ஆனவை

எழுத்து அவை நூறொடு நாற்பத்து நாலும்
எழுத்து அவை ஆறு அது, அந்நடு வன்னி
எழுத்து அவை அந்நடு, அச்சுடர் ஆகி,
எழுத்து அவை தான் முதல், அந்தமும் ஆமே.

மூலாதாரம் முதலான சக்கரங்கள் நூற்று நாற்பது நான்கு கலைகளாக விரிவடையும். ஆறு ஆதாரங்களிலும் தோன்றி எழுவது அக்கினி நாடி. அதனால்

அக்கினி எழுத்துக்கள் ஆறு ஆதாரங்களின் முதலாகவும் விளங்கும். அவையே மேலே சென்று சிரசைக் கடந்து செல்லும் போது முடிவானவையாகவும் அமையும்.

#1266. நாதத்தைக் கடந்தால் சிவத்தை அடையலாம்

அந்தமும் ஈறு முதலா னவை அற,
அந்தமும் அப்பதி னெட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்த பின்
அந்தமும் இந்துகை ஆருடம் ஆனதே.

அந்தத்தில் உள்ள எழுத்துக்களும், முதலாகிய தூலமும், முடிவாகிய சூக்குமமும் நீங்கும் இடத்தில் விசுத்திச் சக்கரமும் ஆக்ஞை சக்கரமும் முடிவடைகின்றன. விசுத்தியில் உள்ள பதினாறு எழுத்துக்களையும், ஆக்ஞையில் உள்ள இரண்டு எழுத்துக்களையும் கடந்து செல்ல வேண்டும். பதின்மூன்றவதுஎழுத்தாகிய 'ஓ' காரத்தில் அமைந்த பின்னர் அதற்கு மேல் உள்ள மண்டலத்தைக் கடப்பதே முடிவு எனப்படும். எனவே நாதத்தைக் கடந்து மேலே சென்றால் சிவத்தைக் காணலாம்.

#1267. கதிரவன் வருகையால் நாட்கள் உண்டாகும்

ஆ இனம் ஆனவை முந்நூற்றறுபதும்
ஆ இனம் அப்பதினைந்து இன மாய்உறும்;
ஆ இனம் அப்பதினெட்டுடனாய் உறும்;
ஆ இனம் அக்கதி ரோன்வர வந்ததே.

முன்னூற்று அறுபது நாட்கள் ஒரு ஆண்டு ஆகவும்; பதினைந்து நாட்கள் ஒரு பட்சம் ஆகவும்; ருதுக்கள் ஆறு ஆகவும், மாதங்கள் பன்னிரண்டாகவும் அமையும். இவை அனைத்தும் தோன்றுவது சிவக் கதிரவன் உதிப்பதால் தான்.

#1268. ஓரைகள் அமையும் விதம்

வந்திடும் ஆகாசம் ஆறுஅது நாழிகை,
வந்திடும் அக்கரம் முப்பது இராசியும்
வந்திடும் நாள் அது முன்னூற் றறுபதும்
வந்திடும் ஆண்டு, வகுத்துரை அவ்வியே.

பகல், இரவு காலங்களில் ஐம்பெரும் பூதங்கள் முறையே ஆறு ஆறு நாழிகைகள் நீளும். ஓரை என்னும் ராசியும் முப்பது கலைகளாக அமையும். முந்நூற்றறுபது கலைகள் ஓராண்டில் அமையும். இதிலிருந்து கதிரவனின் பன்னிரண்டு ராசிகளைக் கணக்கிட முடியும்.

#1269. கதிரவனின் வீதிகள் மூன்று

அவ்இனம் மூன்றும் அவ்ஆடு அதுவாய் வரும்;
எவ்வினம் மூன்றும் கிளர் தரும் ஏரதாம்,
சவ்வினம் மூன்றும் தழைத்திடும் தண்டுஅது ஆம்;
இவ்வினம் மூன்றும் இராசிகள் எல்லாம்.

ஓரைகள் மூன்று வகைப்படும். கதிரவனின் வீதிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை முறையே
(1). மேட வீதி (இடபம், மிதுனம், கடகம், சிம்மம் என்ற நான்கும் அமைந்திருக்கும்)
(2). இடப வீதி (கன்னி, துலாம், மீனம், மேடம் என்ற நான்கும் அமைந்திருக்கும்)
(3). மிதுன வீதி(விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் என்ற நான்கும் அமைந்திருக்கும்)

#1270. ராசியினுள் இருக்கும் ஒளிமயமான சக்கரம்

இராசியுள் சக்கரம் எங்கும் நிறைந்தபின்,
இராசியுள் சக்கரம் என்றுஅறி விந்துவாம்;
இராசியுள் சக்கரம் நாதமும் ஒத்தபின்
இராசியுள் சக்கரம் நின்றிடு மாறே.

சிரசில் உள்ள சகசிரதளம் கதிரவனின் வீதியாகும். அது ஒளி மயமாகிய விந்துவினால் நிறைந்து விரிவடையும். அதனுடன் நாதத்தின் இயக்கமும் ஒத்தபடி அமைந்திடும் போது, அதுவரையில் கவிழ்ந்து இருந்த சகசிரதளம் நிமிர்ந்து நிற்கத் தொடங்கும்.

விளக்கம்:
சிரசில் உள்ள சகசிரதளம் இராசியாகும். சக்கரம் உடலில் உள்ளது. உடலில் உள்ள ஆறு ஆதாரங்களும் காரியப் பகுதிகள் எனப்படும். விந்துவின் இயக்கத்துக்கும், நாதத்தின் இயக்கத்துக்கும் ஏற்றபடி சகசிரதளம் மெல்ல மெல்ல மென்மை அடையும். அது மென்மை அடைந்த பிறகு அதில் ஏற்படும் அசைவும் ஒளியும் சாதகனின் முயற்சிக்கு ஏற்ப அதிகரிக்கும். இவை சிரசைத் தாண்டிய பிறகு கவிழ்ந்திருந்த சகசிரதளம் மேல் நோக்கி நிமிர்ந்துவிடும்.

#1271. ஆன்மா தாரகை ஆகிவிடும்

நின்றிடும் விந்து என்று, உள்ள எழுத்து எல்லாம்
நின்றிடும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்;
நின்றிடும் அப்பதி அவ் எழுத் தேவரின்
நின்றிடும் அப்புறம் தாரகை ஆனதே.

அக்கினி, கதிரவன், திங்கள் கண்டங்களுக்கு உரிய எழுத்துக்கள் தத்தம் தன்மைக்கு ஏற்ற அசைவுகளைக் கீழே தூலத்திலும் மேலே சூக்குமத்திலும் ஏற்படுத்தும். இந்த அசைவுகள் அந்த மூன்று மண்டலங்களைச் சீராக வளர்த்து வரும். சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்கள் வளர்ந்து ஒளிமயமாகி நிறைவடையும் போது ஆன்மா ஒரு தாரகை போல ஒளிரும்.

#1272. ஆன்ம அறிவாக விளங்கும்

தாரகை யாகச் சமைந்தது சக்கரம்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திர னற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே.

ஒளிரும் சகசிரதளம் நாள் மீன்களின் ஒளியாக ஆயிற்று. இந்த நாள் மீன்களின் ஒளிக்கு மேலே சிவம் என்னும் ஒரு பேரொளிப் பிழம்பு இருக்கின்றது. இந்த நாள் மீன்களின் ஒளியே, கதிரவன் தந்த அறிவுடனும், சந்திரனும் தந்த அறிவுடனும் கலந்து ஆன்ம அறிவாக விளங்கும்.

#1273. தீக் கொழுந்தும், காரொளியும்!

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாம்
கண்டிடு நாதமும் தன்மே லெழுந்திடக்
கண்டிடும் வன்னிக் கொழுந்தன வொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே.

இங்ஙனம் ஒளி வளர்ந்து சக்கரம் அமைந்திடும். ஒளிக்குப் புற எல்லையில் நாதமும் அமைந்திடும். தீபத்தைப் போன்ற தீக்கொழுந்தை அடுத்து சக்தி தேவியின் காரொளியும் காணப்படும்.

#1274. அண்டகோசமும் ஒளிமயமாதல் வேண்டும்

காரொளி அண்டம் பொதிந்தது உலகு எங்கும்
பார்ஒளி, நீர்ஒளி, சார்ஒளி, கால்ஒளி,
வான்ஒளி ஒக்க வளர்ந்து கிடந்த பின்
நேர்ஒளி ஒன்றாய் நிறைந்து அங்கு நின்றதே.

உலகு எங்கும் சூழ்ந்து உள்ள அண்டமே ஒவ்வொரு உயிரையும் சூழ்ந்து உள்ளது. ஐம்பெரும் பூதங்கள் ஊழியின் முடிவு வரையில் மாறாமல் நிலையாக உள்ளன. இதைக் காணும் போது சீவர்களின் மூலம் ஆவதும் இந்த அண்டகோசமே என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒளிமயமாவது அண்டங்களுக்குச் சிறந்த வலிமை தரும்.

#1275. உயிரின் அண்டகோசம்

நின்றது அண்டமும் நீளும் புவிஎலாம்
நின்ற இவ் அண்டம் நிலை பெறக் கண்டிட
நின்ற இவ் அண்டமும் மூல மலம் ஒக்கும்
நின்ற இவ் அண்டம் பலம் அந்த விந்துவே.

ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்திருக்கும் அண்டம் தான் இந்த உலகமாகப் பரவி இருகின்றது. இந்த அண்டம் நிலை பெற்று இருப்பதைக் காண்கின்ற போது இந்த அண்டமே அனைத்துப் பொருட்களுக்கும் மூலம் ஆக இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றகின்றது. ஒளி மயமாகும் அண்டத்தின் ஒளியே அதற்கு வலிமையைச் சேர்க்கின்றது.

#1276. ஒளியும் ஒலியும் பொருத்தமாக இருக்க வேண்டும்

விந்துவும், நாதமும், ஒக்க எழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரை அது ஆம்;
விந்தில் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண் மடி கொண்டது வீசுமே.

பொருத்தமாக இருக்கும் விந்துவும் (ஒளியும்) நாதமும் (ஒலியும்) வானக் கூற்றான ஆண்ட கோசத்துக்கு விதையாக அமையும். விந்து (ஒளி) குறைவாகவும் நாதம் (ஒலி) அதிகமாகவும் இருந்தால் ஒலி ஒளி யைப் போல எட்டு மடங்கு உள்ளது என்று கூறுவர்.

எண்ணமும், செயலும் முரண்படாமல் பொருத்தமாக இருந்தால் அப்போது அண்டகோசம் வளர்ந்து விரிவடையும். ஆன்ம ஒளியில் ஐம் பெரும் பூதங்களும், எட்டு அக்கினிக் கலைகளும் பொருந்த வேண்டும். ஒரு தூல வீரிய அணு தன்னுள் எட்டு வான் கூற்றில் உள்ள அணுக்களைக் கொண்டிருக்கும்.

#1277. ஒளி அணுக்களும், மண்டலங்களும்

வீசும் இரண்டு உள நாதத்து எழுவன;
வீசமும் ஒன்று விரைந்திடும் மேலுற;
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்த பின்,
வீசமும் விந்து விரிந்தது காணுமே.

இரண்டு வகை ஒளி அணுக்கள் உள்ளன. ஒரு வகை ஒளி அணுக்கள் அண்டகோசத்துக்குச் சென்று விந்து , நாத மண்டலங்களை அமைக்கும். இந்த ஒளியும், ஒலியும் ஒத்து அமைந்த பின்னர் அண்டகோசம் விந்து மண்டலங்களாக விரிவடையும்.

#1278. விந்து மண்டலம் இன்றியமையாதது.

விரிந்தது விந்துவும் கெட்டது வீசம்;
விரிந்தது விந்துவும் நாதத்து அளவினில்
விரிந்தது உட்கட்டம் எட்டெட்டும் ஆகில்
விரிந்தது விந்து விரையது ஆமே.

விந்து மண்டலம் விரியும் போது விதைகளாகிய ஒளி அணுக்கள் மறைந்துவிடும். விரியும் விந்துவின் தன்மைக்கு ஏற்றவாறு அங்கு நாதமும் அமையும். விந்து விரிந்தால் சந்திர கலை பதினாறும் பூரணமாக அமையும். ஒளி மண்டலம் விரிவடைந்து ஒளியின் பீஜங்களாக அமையும்.

#1279. திருவடியை விந்து விளக்கும்

விரையது விந்து விளைந்தன வெல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்
விரையது விந்து விளைந்தவன் தானே.

தோன்றியுள்ள எல்லாப் பொருட்களுமே விந்துவாகிய ஒளியைத் தமக்குக் காரணமாகக் கொண்டவை. விந்துவால் விளையும் சீவர்களின் உயிர்கள். விந்துவால் விளையும் இந்த உலகம். இந்த விந்துவே சிவன் திருவடிகளை நமக்கு விளக்கும்.

#1280. பிரணவமும், விந்து நாதமும்

விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்;
விளைந்த எழுத்தது சக்கரம் ஆக,
விளைந்த எழுத்து அவை மெய்யினுள் நிற்கும்
விளைந்த எழுத்து அவை மந்திரம் ஆமே.

எல்லா எழுத்துக்களுக்கும் மூலமாக அமைந்தது பிரணவம். அந்தப் பிரணவமும் விந்து நாதங்களால் ஆனது. அந்தப் பிரணவமே சீவனின் தலையில் ஒரு சக்கரமாக அமையும். அந்தப் பிரணவமே சீவனின் உடலுக்குள் நிற்கும். அந்தப் பிரணவம் எல்லா எழுத்துக்களின் தொகுப்பாகிய அரிய மந்திரம் ஆகும்.

#1281. பிரணவ தியானம்

மந்திரம் சக்கரம் ஆனவை சொல்லிடில்
தந்திரத்துள், எழுத்து ஒன்று எரிவட்டம் ஆம்;
கந்தரத்துள்ளும் இரேகையில் ஒன்றில்லை,
பந்தமும் ஆகும் பிரணவம் உன்னிடே.

மந்திரம் , தந்திரம் யந்திரம் இவற்றைப் பற்றிக் கூறப் போனால் சீவனின் உள்ளே காணப்படும் பிரணவம் என்னும் ஒளி வட்டம் நல்லதொரு உபாயம் ஆகும். பிரணவத்தைக் கண்டத்தில் நிறுத்தி எண்ணுவதாலும், அல்லது தகடுகளில் பொறிப்பதனாலும் எந்த நன்மையும் விளையாது. அசைவின் வடிவாக உள்ள பிரணவத்தை முதன்மையாகக் கொண்டு தியானம் செய்ய வேண்டும்.

#1282. பிரணவச் சக்கரத்தின் பயன்

உன்னிட்ட வட்டத்தில் ஒத்து ஏழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தான் இல்லை
த்ன்னிட்டு எழுந்து தகைப்பு அறப் பின்நிற்கப்
பண்ணிட்ட மந்திரம் பார்க்கலும் ஆமே.

அகவழிபாடகிய தியானத்தில் பிரணவத்தை முன்னிறுத்தும் போது அது பிரணவ வட்டத்தில் பொருந்தி விளங்கும். .பிறகு அது அந்தச் சக்கரக் கோடுகளைத் தாண்டுவதோ தவறுவதோ நிகழாது. சீவனுக்குத் தானாக உண்டாகிய தடைகள் எல்லாம் பிரணவச் சக்கரம் அமைந்தால் தகர்ந்து போய் விடும். அந்தப் பிரணவ மந்திரம் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

#1283. சிவனை அடையலாம்

பார்க்கலும் ஆகும் பகை அறு சக்கரம்
காக்கலும் ஆகும், கருத்தில் தடம் எங்கும்
நோக்கலும் ஆகும், நுணுக்கமற்ற நுண் பொருள்
ஆக்கலும் ஆகும் அறிந்து கொள் வார்க்கே.

ஜனனம் மரணம் என்னும் பகைவனை அழிகின்ற வல்லமை கொண்டது இந்தச் சக்கரம். இதைப் பார்க்கவும் முடியும். தன் உள்ளத்துக்குள் இதைக் காக்கவும் முடியும். நுட்பமானவற்றுள் நுட்பமாகிய சிவனைக் நம்மால் நோக்கவும் முடியும். உள்ளபடி உணர்ந்து கொண்டவரால் இதை அடையவும் முடியும்.

#1284. பெருமை சொல்லில் அடங்காது

அறிந்திடும் சக்கர மாதி யெழுத்து
விரிந்திடும் சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடும் சக்கரம் பாரங்கி நாளும்
குவிந்திடும் சக்கரம் கூறலு மாமே.

இந்தச் சக்கரத்தின் முதல் எழுத்து 'அ'கரம் ஆகும். அதற்கும் அடுத்த எழுத்து தேவிக்கு உரிய எழுத்தாகிய 'உ'கரம். இந்தச் சக்கரத்தில் மாயையின் செயல்களாகிய

நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்களும் அமைந்திருக்கும். இவை அனைத்தும் குவிந்துள்ள இந்தச் சக்கரத்தின் பெருமையைப் புகலவும் முடியுமோ?

#1285. ஆறு இயல்புகள் கொண்ட மந்திரம்

கூறிய சக்கரத் துள் எழுமந்திரம்
ஆறு இயல்பாக அமைந்து விரிந்திடும்;
தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரணம்
ஆறு இயல்பாக மதித்துக் கொள்வர்க்கே.

தெளிவான ஐந்து எழுத்துக்கள் கொண்ட மந்திரம் மாரணம். சொல்லப் பட்ட சக்கரத்துடன் எழும் அம மந்திரம் ஆறு செயல்களைச் செய்வதாக விரிந்து அமையும் அவை (1). தம்பனம், (2). மோகனம், (3). உச்சாடனம், (4). வித்வேடனம், (5). மாரணம், (6). வசியம்.

#1286. ஐம்பூதங்கள் பகையை வெல்ல உதவும்

மதித்திடும் அம்மையும் மாமாதும் ஆகும்,
மதித்திடும் அம்மையும் அங்கனல் ஒக்கும்,
மதித்து அங்கு எழுந்தவை காரணம் ஆகில்,
கொதித்து அங்கு எழுந்தவை கூடகி லாவே.

குறிப்பிட்ட சக்கரத்தின் தலைவி எல்லா சீவர்களுக்கும் அருளும் அன்னை ஆவாள். அவளைத் துதிக்கின்ற அன்பர்களுக்கு அவள் பகையை வெல்ல உதவுவாள். ஐம் பெரும் பூதங்களும் அன்னையின் ஆணைப்படித் தொழில் புரிபவை. அவள் ஆணையின்றி அவை எதுவும் செய்யா.

#1287. பகைவர் என்பவர் இரார்.

கூடிய தம்பனம் மாரணம் வசியம்
ஆடுஇயல் பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறார்
தேடிஉள் ஆகத் தெளிந்துகொள் வார்க்கே.

தனக்குள்ளே தேடித் தெளிவு பெற்ற அடியவர்களுக்குத் தம்பனம், மாரணம், வசியம் போன்றவை தானாகவே வந்து பொருந்தி விடும். இவர்களுக்குப் பகைவர் என்று எவரும் இரார்.

#1288. அகாரத்தைத் தியானிப்பீர்

தெளிந்திடும் சக்கரம் மூலத்தின் உள்ளே
அளிந்த அகாரத்தை அந்நடு ஆக்கி,
குளிர்ந்த அரவினைக் கூட்டி உள் வைத்து,
நலிந்தவை அங்குஎழு நாடிய காலே.

மூலாதாரத்தில் உள்ள சக்கரத்தை நன்கு அறிந்து தெளிவீர். மண்டலமிட்ட, குளிர்ந்த, குண்டலினியின் வட்டத்துக்குள் கனிந்த அகாரத்தை வைப்பீர். மூலவாயுவைச் சுழுமுனை வழியே மேலே ஏற்றுவீர்.

#1289. காமம் ஆதிப் பகைவர் அறுவர்

கால் அரை முக்கால் முழுது எனும் மந்திரம்
ஆலித்து எழுந்த ஐந்து ஊறி எழுந்ததாய்ப்
பாலித்து எழுந்து பகை அற நின்றபின்,
மால்உற்ற, மந்திரம் மாறிக்கொள் வார்க்கே.

கால், அரை, முக்கால், முழுது என்று வளர்ந்து முழுமை அடையும் பிரணவம். இது மூலாதாரத்துக்கு மேலே உள்ள ஐந்து ஆதாரங்களையும் கடந்து செல்லும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் சீவனின் ஆறு உட்பகைவர்களும் கெடும்படி இது நிலைத்தால் அப்போது பிரணவம் ஓங்கும், சீவனின் மன மலங்கள் நீங்கும்.

#1290. பிரணவ வழி சிவனை அடைவிக்கும்

கொண்ட இம் மந்திரம் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டை யுள் நாவிற் பகையற விண்டபின்
மன்று நிறைந்த மணிவிளக்கு ஆயிடும்
இன்றும் இதயத்து எழுந்து “நம” எனே.

கூத்தபிரானின் எழுத்தாகிய இந்தப் பிரணவம் முன்பு வெளிப்படாமல் மறைந்து நின்றது. உட்பகைவர்களை ஒருவர் வென்ற பின்னர் அது வெளிப்பட்டுத் தலையை நோக்கிச் செல்லும். அங்கு சகசிர தளம் விரிந்து ஒளியுடன் விளங்கும். அங்கே இருப்பது மன்றுள் மணிவிளக்காகிய சிவன் என்று அறிவீர். பிரணவ வழி சிவபெருமானை அடைவிக்கும்.

நான்காம் தந்திரம் -
10. வயிரவச் சக்கரம்.

வயிரவர் சிவபெருமானின் பல வடிவங்களுள் ஒருவர் ஆவார்.
பகை போன்ற இடையூறுகளை வெல்ல இவரை வழிபடுவர்.
வயிரவர்க்கு உரிய சக்கரம் வயிரவச் சக்கரம் ஆகும்.

#1291. வயிரவரை தியானிக்கும் முறை

அறிந்த பிரதமையோடு ஆறும் அறிஞ்சு
அறிந்த அச் சத்தமி மேலிவை குற்ற
அறிந்தவை ஒன்றுவிட்டு ஒன்று பத்து ஆக
அறிந்து, வலம்அது வாக நடவே.

வளர் பிறையில் பிரதமை முதல் சஷ்டி வரை உடலின் ஆறு ஆதாரங்களிலும் வயிரவரைத் தியானிக்க வேண்டும். அதன் பின் ஒன்பதாவது திதியாகிய நவமியில் நெற்றிக்கு மேல் தியானிக்க வேண்டும். பதினோராவது திதியாகிய ஏகாதசியில் வலது காதின் பக்கம் தியானிக்க வேண்டும். பதின்மூன்றாவது திதியாகிய திரயோதசியில் பிடரியில் தியானிக்க வேண்டும். பதினைந்தாம் திதியாகிய பௌர்ணமியன்று இடது காதின் பக்கம் தியானிக்க வேண்டும். இங்கனம் தியானிப்பவருக்கு வெற்றி கிட்டும்.

#1292. பகைவனைப் பந்தாடலாம்

நடந்த வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கி
தொடர்ந்த வுயிரது உண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாடலமே.

தன்னைக் குறித்துத் தியானம் செய்பவரின் மனதில் வயிரவர் தோன்றுவார். சூலத்தையும், கபாலத்தையும் கைகளில் ஏந்தி இருப்பார். பகைவன் மீது அருள் காட்ட மாட்டார். அவர் பகைவனை வென்ற பிறகு அந்த பகைவனுடலைப் பந்தாட முடியும்.

#1293. வயிரவர் வடிவம்

ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக் கொண்டு அங்கு
ஆமே தமருக பாசமும் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே.

சீவர்களின் பக்திக்குத் தகுந்தபடி அருள் புரியும் வயிரவர் தன் இரு கரங்களில் கபாலமும், சூலமும் ஏந்தி இருப்பார். மற்ற இரண்டு கரங்களில் உடுக்கையையும், பாசக் கயிற்றையும் வைத்து இருப்பார். ஐந்தாவது ஆறாவது கரங்களில் துண்டிக்கப்பட்ட ஒரு தலையும் , ஒரு வாளும் விளங்கும்.

#1294. பூசனை செய்வீர்

கையவை யாரும் கருத்தது நோக்கிடும்
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யருள் ளத்தில் துளங்கு மெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே.

வயிரவரின் ஆறு கரங்களையும் அவற்றில் அவர் ஏந்தியுள்ளவற்றையும் மனம் ஒன்றித் தியானம் செய்வீர்.செந்நிறம் கொண்டது அவர் திருமேனி. தூயவர்களின் உள்ளத்தில் அவர் நன்கு துலங்குவார். பொய் வகை பூசைகளை விட்டு விட்டு மெய்யுற்றதாகப் பூசை செய்வீர்.

#1295. வயிரவரைப் பூசிக்கும் முறை

பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னாடுமால்
பூசனை சாந்து சவ்வாது புழுகு நெய்
பூசனை செய்து நீர் பூசலை வேண்டுமே.

வயிரவரை ஆயிரம் உரு செபித்து வழிபடுவீர். நல்ல தேனைப் படைத்தது பூசை செய்வீர். சாந்து, சவ்வாது, புனுகு, போன்ற வாசனைப் பொருட்களை அவருக்குச் சாத்தி பகை நீங்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வீர்.

#1296. விரும்பியவற்றை அடையலாம்

வேண்டிய வாறு கலகம் ஆயிடும்
வேண்டிய ஆறினுள் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வரும் வழி நீ நட
வேண்டிய வாறது வாகும் கருத்தே.

நீ விரும்பிய வண்ணம் பகைவர்கள் இடையே கலகம் மூளும். ஆறு கர்ம வித்தைகளையும் நீ முறையாகப் பெற வேண்டும். அதன் பின்னர் நீ விரும்பிய வழிகளில் நடக்கலாம். நீ விரும்புகின்ற அனைத்துமே உனக்குக் கிடைக்கும்.

நான்காம் தந்திரம் -
11 சாம்பவி மண்டலச் சக்கரம்

சாம்பவி என்பது சிவசக்தி.

சிவனும் சக்தியும் ஒன்றாக விளங்கும் சிவலிங்கத் திருமேனி அமைந்துள்ள சக்கரம் சாம்பவி மண்டலச் சக்கரம்.

#1297. நாட்டு மக்கள் தொழுது நிற்பர்

சாம்பவி மண்டலச் சக்கரம் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக விட்டிடன் மேலதாம்
காண்பதம் தத்துவ நாலுள் நயனமும்
நாம்பதம் கண்டபின் நாடறிந் தோமே.

சாம்பவி மண்டலச் சக்கரத்தின் அமைப்பு:

இது எட்டு இதழ்கள் கொண்டது. மேலானதாகக் காணப்படும் நான்கு இதழ்களில் விந்து, நாதம், சிவம், சக்தி அமைவர். இவற்றுள் விந்துவை நயனமாக அறிந்து கொண்டவரை நாட்டு மக்கள் வந்து தொழுது நிற்பர்.

#1298. நாடறிந்த மண்டலம்

நாடறி மண்டலம் நல்லஇக் குண்டத்துள்
கோடற வீதி கொணர்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நெடுவீதி
ஈடற நாலைந் திடவகை ஆமே.

நாடறிந்த மண்டலமான இந்த நல்ல சக்கரத்தில் நேராகச் செல்லும் வீதிகளை நாற்புறமும் அமைக்க வேண்டும். நெடிய வீதிகளில் உள்ள அறைகள் பதினாறு. வீதிக்குள் அமைந்த அறைகளின் எண்ணிக்கை முப்பது ஆறு. உட்சுற்றில் உள்ள அறைகளின் எண்ணிக்கை இருபது.

#1299. இலிங்கங்கள்

நாலைந் திடவகை உள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நந்நால் இலிங்கமா
நாலுநற் கோணமும் நண்ணால் இலிங்கமா
நாலுநற் பூநடு நண்ணல்அவ் வாறே.

இருபது அறைகள் ஒவ்வொன்றும் தனித் தனி வட்டமாக நிற்கும். வீதிகள் நான்கிலும் திசைக்கு நான்காகப் பதினாறு இலிங்கங்கள் இருக்கும். நடுவில் உள்ள

நான்கு அறைகளிலும் நான்கு இலிங்கங்கள் இருக்கும். நடுவில் உள்ள ஒவ்வொரு இலிங்கமும் நான்கு தாமரை மலர்களின் நடுவில் ஒரு தாமரை மலரில் இருக்கும்.

#1300. குறைகளும் இல்லையே!

ஆறிரு பத்துநால் அஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறிநீர் உம்மில் சிவாய நமஎன்று
கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே.

எட்டு எட்டு(8X8) அறுபத்து நான்கு அறைகள் உள்ள இச்சக்கரத்தில் சுற்று வீதியில் உள்ளவை இருபத்தெட்டு, நடுவில் உள்ளவை நான்கு ஆக முப்பத் திரண்டுடன் திசைக்கு இரண்டாக நான்கு திசைகளிலும் இடைவெளியாக நிற்கும் அறைகள் எட்டுக் கூட அறைகள் நாற்பது. நடுவு நான்கு அறைகளின் நடுவையும் ஓர் அறை யாகக் கொள்ள, கூடிய அறைகள் நாற்பத் தொன்று இவைகளில்.

உடலெழுத்துக்களில் ஐவருக்கத்து இருபத்தைந்தையும் இருபத்தைந்து இலிங்கங்கட்கும் உரிய எழுத்துக்களாக நடுவண் ஐந்தில் தென்கிழக்கு முதலாகத் தொடங்கிப் பின் மேற்கு முதலாக வலஞ்சென்று இலிங்கங்கட்கு அணியவான கீழ் அறைகளில் அடைத்தல் வேண்டும். பின்னர் யகரமாதி நான்கு, ‹ கரமாதி நான்கு ஆக எட்டினையும் சுற்று வீதியில், இடைவெளியாக உள்ள எட்டு அறைகளில் மேற்கு முதல் வலமாக அடைத்து, உட்சென்று வெற்றிடமாய் உள்ள எட்டு அறைகளில் முறையே, `ள, க்ஷ, ஓம், சி, வா, ய, ந, ம` என்னும் எட்டு எழுத்துக்களையும் அடைத்து நிரப்பிச் செபித்தல் வேண்டும். செபிக்கின் குறையின்றி வாழலாம்.

#1301. குரைகழல் கூடும்

குறைவதும் இல்லை குரைகழல் கூடும்
அறைவதும் ஆரணம் அவ்வெழுத் தாகில்
திறம்அது வாகத் தெளியவல் லாருக்
கிறவில்லை என்றென் றியம்பினர் காண.

வேதம் மூல மந்திரமாகச் சொல்லுவது திரு ஐந்தெழுத்து. இதனை அவ்வாறே அறிந்து கொண்டவர்களுக்கு உலகப் பயன்களில் எந்தக் குறையும் இராது. `இறப்பு` என்பது அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள சிவபெருமானின் அரிய திருவடிகள் கிடைக்கும் என்று கற்றறிந்தோர் உறுதிபடக் கூறியுள்ளார்கள்.

#1302. சாம்பவி மண்டலச்சக்கர வழிபாடு

காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமும் தானாகக்
காணுங் கனகமும் காரிகை யாமே.

ஐம்புல நுகர்வுக்குத் தேவையான பல சிறந்த பொருட்களும், விரும்பும் தெய்வங்களை வழிபடுகின்ற வாய்ப்புக்களும், போற்றப்படுகின்ற திவ்ய தலங்களில் வாழும் நற்பேறும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடும் நல்ல சந்தர்ப்பங்களும், இவற்றால் கிடைக்கும் நற்பயன்களும், நல்லறிவும், அமைதியான உறக்கமும், தானாகக் கிடைக்கும் பொன்னும் இந்தச் சாம்பவி மண்டலச் சக்கர வழிபாட்டினால் கிடைக்கும்.

#1303. பகைவரும் இரார்

ஆமே எழுத்தஞ்சும் ஆம்வழி யேஆகப்
போமே அதுதானும்? போம்வழி யேபோனால்
நாமே நினைத்தன செய்யலும் ஆகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே.

திருவைந்தெழுத்து எப்போதும் நன்மை தரும். அது நல்ல வழி உண்டாகச் செய்யும். அதனால் அதில் தெளிந்து வல்லமை அடைதல் யாருக்குக்கும் கைக்கூடும்! அங்ஙனம் கைக்கூடுமாயின் அவர் நினைத்தவற்றை நினைத்தவாறு முடிக்க முடியும். உலகில் அவருக்குப் பகைவரும் இரார்.

#1304. நன்மையே விளையும்.

பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாணாளும் நன்மைகள் ஆகும்
வினையில்லை என்றும் விருத்தமும் இல்லை
தகையில்லை தானும் சலமது வாமே.

திருவைந்தெழுத்தை ஓதுபவருக்குப் பகைவர்கள் இல்லை.
அவர்களைப் பெரியோர் இகழும் இகழ்ச்சி என்பதும் இல்லை.
இருவினைகள் இல்லை; பொருந்தாச் செயல்கள் இல்லை.
இடையூறு என்பவை இல்லை. நாளும் நன்மையே விளையும்.
அம்மந்திரம் மலத்தைக் கழுவித் தூய்மையைத் தரும் ஜலமாகும்.

#1305. இன்பமும் மிகும்

ஆரும் உரைசெய்ய லாம்அஞ் செழுத்தாலே
ஆரும் அறியாத ஆனந்த ரூபம்ஆம்
பாரும் விசும்பும் பகலும் மதியதில்
ஊரும் உயிரும் உணர்வது மாமே.

மண்ணும், விண்ணும் ஆகிய எல்லா இடங்களிலும்; பகலும், இரவுமாகிய எல்லாக் காலங்களிலும்; வாழுகின்ற எல்லா உயிர்களும்; அந்த உயிர்களின் உணர்வுமாக இருப்பது திருவைந்தெழுத்து. அதனால் எதை விரும்புகின்றரும் அந்த மந்திரத்தை ஓதலாம். அதை ஓதுவதால் உலகில் பிறர் அறியாத இன்பமும், இறை இன்பமும் மிகும்.

நான்காம் தந்திரம் -
12. புவனாபதிச் சக்கரம்

புவனாபதிச் சக்கரம் = புவனத்தின் அதிபதிக்கு உரிய சக்கரம்

#1306. சூதனும், சூதியும்

உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
அணைந்தெழும் ஆங்கதன் ஆதியது ஆகும்
குணர்ந்தெழு சூதனும் சூதியும் கூடி
கணந்தெழும் காணும் அக்காமுகை யாலே

ஓம் என்னும் பிரணவம் சீவனின் உள்ளே உணர்ந்து எழும். சிவசக்தியருடன் சீவனை இணைப்பது அந்த மந்திரம்தான். உயிர்களைச் செலுத்துகின்ற சிவனும் சக்தியும் ஒன்றாகக் கூடி இணைந்து எழுந்து அருள் புரிவார்கள்.

#1307. போகமும், மோட்சமும் தரும்

ககாராதி ஓர்ஐந்தும் காணிய பொன்மை
அகாராதி ஓர் ஆ றரத்தமே போலும்
சகாராதி ஓர்நான்கும் தாம்சுத்த வெண்மை
ககாராதி மூவித்தை காமிய முத்தியே.

‘க’காரத்தை முதலில் உடைய ஐந்தெழுத்துக்களும் பொன்னிறம் உடையன;
‘அ’ காரத்தை முதலில் உடைய ஆறெழுத்துக்களும் செந்நிறம் உடையன;

'ச'காரத்தை முதலில் உடைய நான்கெழுத்துக்களும் தூய வெண்ணிறம் உடையன.

இந்த மூன்று வித்தைகளும் `போகம், மோட்சம்` என்ற இரு பயன்களையும் தரும்.

#1308. சிவன் வடிவாகும்

ஓரில் இதுவே உறையும் இத் தெய்வத்தைத்
தேரில் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோணம் மாவின்ப முத்தியும்
தேரில் அறியும் சிவகாயந் தானே.

மாணவனே! நான் உனக்கு ஒன்று சொல்லுகின்றேன். நன்கு கேள். உண்மையையில் இந்தப் பதினைந்து எழுத்து மந்திரமே மந்திரங்கள் அனைத்திலும் தலையாயது. இந்த மந்திரத்திற்கு உரிய தேவியின் பெருமையை ஆராய்ந்திடில் இவளை அன்றி வேறு தெய்வம் இல்லை. இந்த மந்திரத்தைக் கொண்ட ஸ்ரீசக்கரம் என்னும் முக்கோணச் சக்கரமே பேரின்ப வீடு. இதுவே தெளிந்தவர்கள் அறிந்து கொள்ளும் சிவன் வடிவாகிய சிதாகாசம்.

#1309. சக்திக்கு எட்டு வடிவங்கள்

ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
ஆகம் பராவித்தை ஆம் முத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவன்உரு
யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே.

பராசத்தி ஒன்றே. அவளே பரசிவத்தின் வடிவம். அந்தச் சத்திக்கு வடிவம், `பராவித்தை` எனப்படும் ஸ்ரீ வித்தை. அந்த ஸ்ரீ வித்தையால் முத்தி, சித்தி இரண்டும் சித்திக்கும். பராசத்தி ஒன்று என்றாலும் சிவன் அங்கியாய் நிற்கச் சத்தி அவனுக்கு அங்கமாய் நிற்பதால் சக்தி எட்டாகத் தோன்றுகின்றாள்.

#1310. பராவித்தை பராசக்தியின் வழிபாடு

எட்டாகிய சத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகும் நாதாந்தத் தெட்டும் கலப்பித்த (து)
ஒட்டாத விந்துவும் தான்அற் றொழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே.

பராசத்தி வழிபாடு பராவித்தை. இது சத்தியின் பேதங்களாகிய எட்டினையும் அட்டாங்க யோகத்தின் வழியே அடையச் செய்து, முடிவில் நாதாந்தத்தில் கொண்டு சேர்க்கும். அதன் பின்னர் பரசிவத்தை அடைவதற்குத் தடையாக இருந்த விந்து

நாதங்களும் அகலும் .அப்போது சீவன் பரசிவத்தைக் கூடிப் பராமானந்தம் எய்தலாம். பராவித்தை வழிபாடு அறிவிலும், ஆற்றலிலும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் செய்ய இயலாதது.

#1311. அறுகோண யந்திரம்

ஏதும் பலமாம் இயந்திரரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச் செம்பில் சட்கோணந் தான்இடே.

புவனாபதி சக்கரம் வழிபடுவோர் விரும்பும் பயனைத் தரும். இயந்திர ராசன் எனப்படும் இந்த புவனாபதி சக்கரத்தை எந்தத் துதியினாலும் துதிப்பாய். அதனை வழிபடும் முறையைக் குருவின் உபதேசத்தால் அறிவாய் . கர நியாச, அங்க நியாசங்களை இந்த வழிபாட்டிற்கு ஏற்ற முறையில் செய்வாய். பிறவிப் பிணியின் நீக்கத்தை விரும்புவாய். செப்புத் தகடு ஒன்றில் முதலில் அறுகோணச் சக்கரத்தை வரைவாய்.

#1312. அறு கோணச் சக்கரம்

சட் கோணந் தன்னில் சிரீம்இரீம் தானிட்டு
அக்கோணம் ஆறின் தலையில்இரீங் காரம்இட்
டெக்கோண முஞ்சூழ் எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரெட் டக்கரம் அம்முதல் மேல்இடே.

வரையப்பட்ட அறுகோணச் சக்கரத்தின் அறைகளில் `ஸ்ரீம், ஹ்ரீம்` என்னும் பீசங்களைப் பொறிக்க வேண்டும். அந்தச் சக்கரத்தின் ஆறு மூலைகளின் `ஹ்ரீம்` என்னும் பீசத்தை மட்டும் எழுதவேண்டும். எல்லா மூலைகளும் உள்ளே அடங்கும்படி அவற்றைச் சுற்றி ஒரு பெரிய வட்டம் வரைய வேண்டும். அந்த வட்டத்திற்கு வெளியில் திசைக்கு ஒன்றாக எட்டுத் தாமரை இதழ்களை அமைக்க வேண்டும். அந்த இதழ்களின் கீழே, வட்டத்தில் வடக்கில் அகாரத்திலிருந்து இதழ் ஒன்றுக்கு இரண்டு, இரண்டாக உயிரெழுத்துப் பதினாறையும் முறையாக எழுத வேண்டும்.

#1313. அறுகோணச் சக்கர அமைப்பு

இட்ட இதழ்கள் இடைஅந் தரத்திலே
அட்டஹவ் விட்டிட் டதன்மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்
இட்டுவா மத் (து) ஆம் கிரோம்என் மேவிடே.

சக்கரத்தைச் சூழ்ந்த வட்டத்திற்கு வெளியில் உள்ள இதழ்களின் இடைநிலம் எட்டிலும் எட்டு ஹகார மெய்யை உகார உயிர் புணர்த்து எழுதி, அவ் இதழ்கள் எட்டிலும் பொருந்தி நிற்க, `க்ரோம், ஹ்ரோம்` என்பவற்றைப் பொறித்து, இதழ்களின் இடப்பக்கங்களில் `ஆம், க்ரோம், என்னும் பீசங்களை எழுதுக.

#1314. புவனாதிபதியை பூசிப்பாய்

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யுடைய குரோம்சிரோம் என்றிட்டுத்
தாவில் இரீங்காரத் தால்சக் கரஞ்சூழ்ந்து
பூவை புவனா பதியைப்பின் பூசியே.

பொருந்திய சக்கரத்தின் வெளியே உள்ள இதழ்களின் வலப்பக்கங்களில் எங்கும் வரிசையாக, `க்ரோம், ஹ்ரோம்` என்பவற்றை எழுதி, எல்லாவற்றையும் கேடில்லாத ரீங்காரத்தால் வளைத்து முடித்தபின், புவனாபதியாகிய அம்மையை வழிபடு.

#1315. வழிபடும் முறை

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிப் பிராணப்பிர திட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே.

புவனாபதி அம்மையை வழிபடும் விதம்:
முதலில் மனத்தில் உள்ள காமம் ஆதி குற்றங்களை நீக்கித் தூய்மையுடையதாகப் பண்ணவேண்டும். அகத்தில் அம்மையின் உருவத்தை நினைவு கூர வேண்டும். வெளியில் கும்பம், பிம்பம், சக்கரம் இவற்றில் அவற்றுக்கு உரிய மந்திரங்களால் ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம் என்பவற்றைச் செய்ய வேண்டும். எல்லா உபசாரங்களையும் செய்து முடித்த பின் ஒளிமிக்க அம்மையின் வடிவம் மனத்திலே நன்கு பொருந்தும்படி அவளை நன்கு தியானிக்க வேண்டும்.

#1316. அம்மையின் வடிவம்

செய்ய திருமேனி செம்பட் டுடைதானும்
கையில் படைஅங் குசபாசத் தோடபயம்
மெய்யில் அணிகலன் ரத்தின மாம்மேனி
துய்ய முடியும் அவயவத் தோற்றமே.

புவனாபதி அம்மையின் வடிவம்:

அவள் நிறம் செம்மை; அணியும் உடை செம்பட்டு; இரு கரங்களில் ஏந்துபவை அங்குசம், பாசம்; இரு கரங்கள் அளிப்பது அபய வரதம்; மற்றும் அங்கங்களுக்கு ஏற்ற அழகிய அணிகலன்கள், தலையில் இரத்தின கிரீடம்.

#1317. பால் அடிசில் நிவேதனம்

தோற்போர்வை நீக்கித் துதித்தடைவில் பூசித்துப்
பாற்போ னகம்மந் திரத்தால் பயின்றேத்தி
நாற்பால "நாரதாயா சுவாகா` என்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றியபின் சேவியே.

புவனாபதிக்கு வழிபாடு செய்யும் பொழுது, மேலாடையை எடுத்து அரையில் கச்சு போலக் கட்டிக் கொள்ள வேண்டும். நிவேதனம் பால் அடிசில். நிவேதிக்கும் மந்திரம் "ஓம் நாரதாயா சுவாஹா:" இந்த மந்திரத்தால் நான்கு திசைகளிலும் நிவேதனம் செய்தல் வேண்டும். வழிபாடு முடிந்த பின்பு பாரங்முக அர்க்கியத்தால் அம்மையை முகம் மாற்றிய பின்பே நிர்மாலிய நிவேதனத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்.

#1318. விரும்பியது கிடைக்கும்

சேவிப் பதன்முன்னே தேவியைஉத் வாபனத்தால்
பாவித் திதய கமலம் பதிவித்தங்
கியாவர்க்கு மெட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்த தருமே.

நிவேதனப் பொருளைக் கைக் கொள்வதற்கு முன்னர், கும்ப விம்ப சக்கரங்களில் நிறுவப்பட்ட தேவியை உரிய மந்திரம், கிரியை, பாவனைகளால் தன் இருதயத்தில் ஒடுக்க வேண்டும். யாவர்க்கும் அணுகுதற்கு அரிய மேலான சக்கரத்தை நீ உள்ளத்திலே மறவாது வைத்தால் பின்பு இது நீ விரும்புகின்ற எல்லாம் உனக்குக் கொடுக்கும்.

நான்காம் தந்திரம் -
13. நவாக்கரி சக்கரம்

#1319. ஒன்பது ஒன்பது எழுத்துக்கள்

நவாக்கரி சக்கரம் நான்உரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக் கரியாக
நவாக்கரி எண்பத் தொருவகை யாக
நவாக்கரி அக்கிலீம் சௌம்முதல் ஈறே.

நவாக்கரி சக்கரத்தின் இயல்பை நான் உனக்குச் சொல்லுவேன்.

ஒன்பது எழுத்துத் தொகுதியில் ஒவ்வொன்றும் ஒன்பது எழுத்தாகின்ற முறையால், ஒன்பது ஒன்பது எழுத்துக்கள், எண்பத்தோரெழுத்து என்னும்படி நிற்கும். அந்தத் தொகுதி `ஸௌம்` என்று தொடங்கி, `க்லீம்` என்று முடியும்.

#1320. நவாக்கரியின் உரு

சௌம்முதல் அவ்வொடும் ஔவுடன் ஆம்கிரீம்
கௌவுமும் ஐமும் கலந்திரீம் சிரீம்என்
றொவ்வில் எழும்கிலீம் மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாயநம என்னவே.

The Nine Mantras: 1) Srim 2) Hrim 3) Aim 4) Gaum 5) Krim 6) Haum 7) Aum 8) Saum 9) Klim ஒவ்வொரு முறையும் முடிவில் `சிவாய நம` என்று சொன்னால் நவாக்கரி சக்கர வழிபாடு கைவரும்.

#1321. நலம் தருவாள்

நவாக் கரியாவதும் நானறி வித்தை
நவாக் கரியுள்எழும் நன்மைகள் எல்லாம்
நவாக் கரிமந்திரம் நாவுளே ஓத
நவாக் கரிசத்தி நலந்தருந் தானே.

நவாக்கரி சக்கர வழிபாடு நான் அறிந்த சிறந்த வழிபாடாம். அதனால் நலங்கள் விளையும். நவாக்கரி மந்திரத்தை நாம் உருச் செய்தால் அந்த மந்திரத்திற்குரிய சத்திதேவி நமக்கு எல்லா நன்மைகளையும் தருவாள்.

#1322. தீவினைகள் ஓடி விடும்

நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை உம்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே.

நவாக்கரி சக்கர வழிபாடு பெரும் நன்மை புரியும் அனுபவ ஞானம் தரும். அதற்கு ஏதுவாகிய கலா ஞானம் வலியுறும். உம் வல்வினைகள் உம்மை விட்டு ஓடிவிடும். இந்த வழிபாட்டினால், வேண்டுபவர் வேண்டுவதைத் தருகின்ற சிவனது திருவருள் கைக்கூடும். அது உமக்குத் துன்பத்தைத் தரவிருந்த தீய வினைகளை ஓட்டி விடும்.

#1323. நினைத்த மாத்திரத்தில் பயன்கள்

கண்டிடும் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை
வென்றிடும் மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடும் சக்கரம் நினைக்கு மளவே.

நவாக்கரி சக்கரத்தை வெள்ளி அல்லது பொன் அல்லது செம்புத் தகட்டிலே அமையுங்கள். பின்பு மனத்தில் அதை ஊன்றி நினையுங்கள். உள்ளத்தில் நிலை பெறுகின்ற அந்தச் சக்கரம் உம்மை நோக்கி வருகின்ற வினைகளை நீங்கள் வெல்ல உதவும். உம்மால் உலகத்தை வெற்றி கொள்ள இயலும். அது நினைத்த அளவிலே நினைத்த பயன்களைத் தரும்.

#1324. தேவிக்கு உகந்த அர்ச்சனை

நினைத்திடும் அச்சிரீம் அக்கிலீம் ஈறா
நினைத்திடும் சக்கரம் ஆதியும் அந்தமும்
நினைத்திடும் நெல்லொடு புல்லினை உள்ளே
நினைத்தி (டு) அருச்சனை நேர்தரு வாளே.

நினைக்கத் தகுந்த ‘க்லீம்’ என்பதை ஈறாக உடைய நவாக்கரங்களை, நினைக்கின்ற சக்கரத்தின் முதலெழுத்து முதல் ஈற்றெழுத்து முடிய, இந்தச் சக்கரத்தின் சக்தி விரும்புகின்ற செந்நெல், அறுகம்புல் என்பவற்றைக் கொண்டு அருச்சனை செய்தால் அந்த அருச்சனையை அந்த சக்தி ஏற்றுக்கொள்வாள்.

#1325. எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம்

நேர்தரு மந்திர நாயகி யானவள்
யாதொரு வண்ணம்? அறிந்திடு பொற்பூவை
கார்தரு வண்ணம் கருதின கைவரும்
நார்தரு வண்ணம் நடந்திடு நீயே.

வழிபடுபவருக்கு நேரே வந்து அருள் புரிகின்ற அந்தச் சக்கரத்தின் சக்தி என்ன நிறத்தை உடையவள்? அழகிய தேவியாகிய அவள் மேகம் போன்ற நிறத்தை உடையவள். இதனை அறிந்து கொண்டு அவளிடம் மாறாத அன்பு செலுத்து. அப்பொழுது நீ எண்ணியவற்றை எண்ணியவாறு எய்தலாம்.

#1326. பராசக்தி பொருந்திட நடந்து கொள்!

நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாம்
கடந்திடும் காலனும் எண்ணிய நாளும்
படர்ந்திடும் நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடும் வண்ணம் அடைந்திடு நீயே.

உலகில் எல்லா நன்மைகளும் கிடைக்கும். காலன் விதித்த வாழ்நாட்கள் கடந்திடும். பரவிச் செல்லும். கதிரவன் கதிர்கள் போல உன் புகழ் புகழ் நாற்றிசையும் பரவிச் செல்லும். இவை அனைத்தும் நிகழப் பராசக்தி உன்னிடம் வந்து பொருந்தும் வண்ணம் நீ நடந்து கொள்ள வேண்டும்.

#1326. பராசக்தி பொருந்திட நடந்து கொள்!

அடைந்திடு பொன் வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடும் ஆதி அருளும் திருவும்
அடைந்திடும் அண்டத்து அமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே.

பொன்னும், வெள்ளியும், மணியும் உன்னிடம் தாமே வந்து சேரும். பராசக்தியின் அருளும், ஞானமும் தாமே கைவரும். அமரர்களின் வாழ்வினை நீ அடையலாம். இதற்கு அந்தப் பராசக்தியை அடையும் வழியை முதலில் நீ அறிந்து கொள்ள வேண்டும்.

#1328. சிவனை அடைய முயற்சி செய்

அறிந்திவார்கள் அமரர்களாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய் புனல் சூடி
முறிந்திடு வானை முயன்றிடு நீரே

அமர வாழ்வு பெறுவதற்காக மக்கள் நவாக்கரியை அறிந்து கொள்கின்றார்கள். தன்னைத் தெரிந்து கொண்ட தன் அன்பர்களுக்குத் தேவர்களின் தேவன் சிவபெருமான் பரிந்து வந்து அருள்வான். பாய்ந்து வந்த கங்கையின் பொங்கும் நீரைத் தன் புரிசடையால் முறித்த அந்தச் சிவபெருமானை அடைவதற்கு நீ முயற்சி செய்வாய்.

#1329. மேக மண்டலத்தில் காணலாம்

நீர்பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பாரணி யும்'ஹ்ரீம்' முன் 'ஶ்ரீம்' ஈறாகத்
தார்அணி யும்புகழ்த் தையல்நல் லாள்தன்னைக்
கார்அணி யும்பொழில் கண்டு கொள்ளீரே.

நீங்கள் வணங்கும் இந்த நவாக்கரிச் சக்கரத்தில் பொருந்தியுள்ளன பாரோர் பணியும் 'ஹ்ரீம்' முதல் 'ஶ்ரீம்' ஈறாக ஒன்பது எழுத்துக்கள். இதனை நீங்கள் நன்கு வழி பட்டால், தார் அணிந்த, புகழ் மிகுந்த, தையல் நல்லாளைக் கார்மேகம் போன்ற மண்டலத்தில் உங்களால் காண முடியும்.
சரியான உச்சரிப்பு இதோ!

(1). Hrim, (2). Aim, (3). Gaum, (4). Krim, (5). Haum, (6). Aum, (7). Saum, (8). Klim, (9). Srim.

#1330. முகம் வசீகரம் அடையும்

கண்டு கொள்ளுந் தனிநாயகி தன்னையும்
மொண்டு கொளும் முக வசியம தாயிடும்
பண்டு கொளும் பரமாய பரஞ்சுடர்
நின்று கொளுந் நிலை பேறுடையாளையே.

தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாத அந்தத் தனிநாயகி சக்தி தேவியைக் கண்டு கொண்டால், அள்ளி அருந்தும் வண்ணம் அழகிய முகப் பொலிவு உண்டாகும். மேன்மை பொருந்திய பரமசிவன் மஞ்சமாக இருந்து தாங்குகின்ற பேறு பெற்ற சக்தி தேவியை நிலையாக உங்கள் உள்ளத்தே கொள்ளுங்கள்.

#1331. மன்னன் வசமாகிப் பகை அழியும்

பேறுஉடை யாள் தன் பெருமையை எண்ணிடல்
நாடுஉடை யார்களும் நம்வசம் ஆகுவர்,
மாறுஉடை யார்களும் வாழ்வது தான் இலை;
கூறுஉடை யாளையும் கூறுமின் நீரே.

நீங்கள் அடையும் பேற்றினால் நாட்டை ஆளும் மன்னன் உங்கள் வசமாவான். உங்கள் பகைவர் அழிவர். ஆகையால் தன் உடலின் ஒரு பாதியில் இறைவனைக் கொண்டுள்ள அந்தச் சக்தி தேவியைத் இடையறாது துதியுங்கள்.

#1332. பிறவிப் பிணி அறுப்பீர்

கூறுமின் எட்டு சைதலைவியை,
ஆறுமின் அண்டத்து அமரர்கள் வாழ்வுஎன,
மாறுமின் வையம் வரும்வழி தன்னையும்,
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே.

எட்டு திசைகளுக்கும் தலைவியாகிய சக்திதேவியை வழிபடுங்கள். அமரர்களின் வாழ்வை பெறக் கொண்ட அவாவினை மாற்றி விடுங்கள். மீண்டும் மீண்டும் பிறந்து இந்த பூமிக்குத் திரும்பும் வழியினை அகற்றி விடுங்கள். நாயகியின் சேவடிகளைச் சேர்ந்து பிறவியில் முன்னேற்றமடையுங்கள்.

#1333. திருவடிகளைக் காணுவர்.

சேவடி சேரச் செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்று நின்றேத்துவர்
பூவடியிட்டுப் பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே.

சக்திதேவியின் திருவடிகளை இடையறாது நினைவில் கொள்ளுபவர்கள் அவள் திருநாமத்தை நாவசையாமல் மௌனமாக மனதில் செபம் செய்வர். அங்ஙனம் தங்கள் பார்வையும் அகத்துள்ளே செலுத்தி இருப்பவர்கள் அவள் பெருமை வாய்ந்த திருவடிகளைக் காணும் பேறு பெறுவார்.

#1334. நவாக்கரியின் பீச மந்திரம்

ஐம் முதலாக வளர்ந்து எழு சக்கரம்
'ஐம்' முதலாக அமர்ந்து, 'இரீம்' ஈறாகும்;
ஐ முதலாகிய யவர்க்கு உடையாள் தனை
'ஐம்' முதலாக வழுத்திடு நீயே.

'ஐம்' முதலாக வளர்ந்து தோன்றும் இந்தச் சக்கரம். ஐம் முதலாகப் பிற பீசங்களுடன் இறுதியில் 'ஹ்ரீம்' என்ற பீசம் வரும். அகர எழுத்தின் பொருளாகிய சிவனுக்கு உரிய சக்தி தேவியை மாயைக்கு முதல்வியாகப் போற்றுவாய் நீ!

#1335. வாகீஸ்வரி தோன்றுவாள்

வழுத்திடும் நாவுக்கரசு இவள் தன்னைப்
பகுத்திடும் வேதம் மெய் ஆகமம் எல்லாம்
தொகுத்து ஒரு நாவிடை சொல்ல வல்லாளை
முகத்துளும் முன் எழக் கண்டு கொளீரே.

வாகீஸ்வரியாகிய சக்தி தேவியை, வேதங்களும் ஆகமங்களும் போற்றிப் புகழ்ந்திடும். அந்த வேதங்களையும், ஆகமங்களையும் நாம் பயின்றிட வாகீஸ்வரியின் அருள் மிகவும் அவசியம். அவளைத் துதித்து அவளை நாம் முகத்தின் உள்ள அண்ணாக்குக்கு முன்னே எழச் செய்ய இயலும்.

#1336. எல்லாம் அறியும் அறிவு தரும்

கண்ட இச்சக்கரம் நாவில் எழுதிடில்
கொண்ட இம் மந்திரம் கூத்தன் குறியதாம்;
மன்றினுள் வித்தையும் மானுடர் கையதாய்
வென்றிடும் வையகம் மெல்லியல் மேவியே.

இந்தச் சக்கரத்தை ஒருவர் நாவில் எழுதினால் அது கூத்த பிரானின் வடிவமாகிவிடும். பொன்மன்றில் விளங்கும் உயரிய சபாவித்தையும் கைகூடும். மெல்லியல் நங்கையாகிய நவாக்கரியின் அருள் இருந்தால் ஒருவர் உலகையே வெல்ல இயலும்.

#1337. நல்லியல்பாகிய நாட்களை நல்கும்

மெல்லியல் ஆகிய மெய்ப்பொருளாள் தன்னைச்
சொல்இயலாலே தொடர்ந்து அங்கு இருந்திடும்
பல்லியல் ஆகப் பரந்துஎழு நாள் பல
நல்லியல் பாலே நடந்திடும் தானே.

மெல்லியல் ஆகிய அந்த மெய்ப்பொருள் சக்தி தேவியைக் குருவின் உபதேசத்தின்படி நீங்கள் இடையறாது தியானம் செய்யுங்கள். இன்பமும், துன்பமும் கலந்த மனித வாழ்வு அப்போது துன்பம் அற்ற, இன்பம் உற்ற வாழ்வாக மாறிவிடும்.

#1338. சொல்லும் வண்ணம் செயல்கள் நிகழும்

நடந்திடும் நாவினுள் நன்மைகள் எல்லாம்
தொடர்ந்திடும் சொல்லொடு சொற்பொருள் தானும்
கடந்திடும் கல்விக்கு அரசு இவனாகப்
படர்ந்திடும் பாரில் பகை இல்லை தானே.

நல்ல செயல்கள் பல இவன் நாவால் கூறிய வண்ணம் நிகழும். இவன் செப்பியவாறே செயல்களின் பயன்களும் விளையும். கல்வியின் அரசி இவன் நாவில் குடி இருப்பாள். எனவே இவனும் நாவரசனாகத் திகழ்ந்திடுவான். பரந்து விரிந்த இந்த உலகில் இவனுக்கு பகைவர் என்று எவரும் இரார்.

#1339. வந்து வணங்கி நிற்கும்

பகை இல்லை 'கௌ' முதல் 'ஐ' ஈறா
நகை இல்லை சக்கர நன்று அறிவார்க்கு
மிகை இல்லை சொல்லிய பல் உரு எல்லாம்
வகை இல்லை ஆக வணங்கிடும் தானே.

பகையைக் கெடுக்கும் 'கௌம்' முதல் 'ஐம்' இறுதியாய் உள்ள இந்தச் சக்கரத்தை நன்கு அறிந்த ஒருவனை, எவரும் இகழ்ந்து பேச மாட்டார். பல வேறுபட்ட வடிவங்களாக இருப்பவை எல்லாம் இவருக்கு மாறுபட்டவை அல்ல. அவை வேறு வழியின்றி வந்து இவரை வணங்கி நிற்கும்.

#1340. எண்ணிய எண்ணிய வண்ணம் எய்துவர்

வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு நல்லுயிரானவை யெல்லாம்
கலங்கிடும் காம வெகுளி மயக்கம்
துலங்கிடும் சொல்லிய சூழ்வினை தானே.

இந்தத் தத்துவ நாயகியை எல்லோரும் வணங்கி நிற்பர். நல்ல சீவன்கள் எல்லாம் அவளுடன் நன்கு பொருந்தி நிற்கும். அவர்களைக் கலங்கச் செய்யும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களும் அகன்று விடும். அவர்கள் எண்ணியவற்றை எண்ணிய வண்ணம் எய்துவர்.

#1341. நினைத்ததைப் பேசுவான்

தானே கழறித் தணியவும் வல்லனாய்,
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்
தானே தனி நடம் கண்டவள் தன்னையும்
தானே வணங்கித் தலைவனும் ஆமே.

மேற்குறிய மனிதன் தானே தனக்கு மேலே எவரும் இல்லாத வண்ணம் பேசுவான். தானே எண்ணியவற்றை எல்லாம் ஒளிக்காமல் பேசுவான். தானே ஊழிக் காலத்தில் சிவபெருமானின் சங்காரத் தாண்டவம் காண்பான். தானே வணங்கித் தலைவனும் ஆவான்.

#1342. தீவினைகள் போகும் புண்ணியம் வரும்

ஆமே யனைத்துயி ராகிய அம்மையும்
தாமே சகலம் ஈன்றவத் தையலும்
ஆமே யவளடி போற்றி வணங்கினால்
போம் வினைகளும் புண்ணிய னாகுமே.

சக்தியே அனைத்து உயிர்களாகவும் தோன்றி உள்ளாள். அனைத்து உயிர்களின் அன்னையும் அவளே ஆவாள். அவள் திருவடிகளைப் போற்றிப் பணிந்தால் நம் தீ வினைகள் அகன்று செல்லும். புண்ணியம் வந்து சேரும்.

#1343. அவனியில் இனியவன் ஆவான்

புண்ணியன் ஆகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணியன் ஆகிக் கலந்து அங்கு இருந்திடும்
தண்ணியன் ஆகித், தரணி முழுதுக்கும்
அண்ணியன் ஆகி அமர்ந்திருந் தானே.

புண்ணியன் ஆனவன் உலகம் முழுவதும் பொருந்தும் ஒரு கண்ணியன் ஆவான். அனைவருடன் கலந்து சிறந்து விளங்குவான். அவன் அனைத்துயிர்களின் மீதும் தண்ணருள் கொண்டிருப்பான் . அவனியில் அனைவருக்கும் அவன் மிகவும் இனியவனாக இருப்பான்.

#1344. வையம் கிளர் ஒளியாவாள்

தான் அது கிரீம் 'கௌ' - அது ஈறாம்
நான் அது சக்கரம், நன்று அறிவார்க்கு எல்லாம்
கான் அது கன்னி கலந்த பராசத்தி
கேள் அது வையம் கிளர் ஒளியானதே.

நவாக்கரிச் சக்கரத்தின் பீசம் 'கிரீம்' முதல் 'கௌம்' வரை ஆகும். "அது நானாக உள்ள சக்கரம்" என்ற உண்மையை நன்கு அறிந்தவர்களுக்கு; அஞ்ஞானம் என்கின்ற வனத்தில் இருள் மயமாக இருந்து வந்த த சக்தி தேவி அழியாத உறவாக ஆகிவிடுவாள். அவள் அறிவு நிலையில் ஒளியாகி எல்லா உயிர்களிடமும் பொலிவாள்.

#1345. அறிந்து கொண்டவர் அருள் பெறுவர்

ஒளிக்கும் பராசக்தி உள்ளே அமரில்
களிக்கும் இச்சிந்தையில் காரணம் காட்டித்
தெளிக்கும் மழையுடன் செல்வம் உண்டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்து கொள்வார்க்கே.

ஒளிரும் பராசக்தி உள்ளத்தில் ஒருவரின் எழுந்தருளினால், அவர் மனம் களிக்கும்வண்ணம் உண்மைப் பொருள் அவருக்கு நன்கு விளங்கும். நல்ல தெளிவு பிறக்கும். அருள் மழை பொருட் செல்வதை உண்டாக்கும். இவளை நன்கு அறிந்து கொண்டவருக்கு இவை அனைத்தும் நிகழும்.

#1346. வழிபாடு தரும் நன்மைகள்

அறிந்திடும் சக்கரம் அர்ச்சனையோடே
எறிந்திடும் வையத்து இடர் அவை காணின்;
மறிந்திடும் மன்னனும் வந்தனை செய்யும்
பொறிந்திடும் சிந்தை புகையில்லை தானே.

நவாக்கரிச் சக்கரத்தைப் பூசித்து இவற்றை நீ அறிந்து கொள்ளலாம். அதனால் உன்னுடைய உலகத் துன்பம் விலகும். அது உன் பகைவர்களைத் தடுத்து நிறுத்தும். மன்னனும் தேடி வந்து உன்னை வணங்குமாறு செய்யும். சிந்தையைக் கலக்கும் துன்பங்கள் உனக்கு நேரா.

#1347. பகை, புகை, சினம் வாரா

புகையில்லை சொல்லிய பொன்னொளி யுண்டாம்
குகையில்லை கொல்வ திலாமையி னாலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாம்
சிகையில்லை சக்கரம் சேர்ந்தவர் தாமே.

நவாக்கரிச் சக்கர வழிபாடு செய்பவர்களுக்கு மனவருத்தம் ஏற்படாது. அவர்களின் உடல் பொன் போன்ற ஒளி பெறும். அவர்கள் பிற உயிர்களை கொல்லாதவர்கள். ஆதலால் மீண்டும் கர்ப்ப வாசம் என்னும் குகை அவர்களுக்கு இல்லை. வாழ விரும்பும் உயிர்களுக்கு இதைவிடச் சிறந்த வகை வேறு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு முடிவும் என்பதும் இல்லை.

#1348. ஞான ஒளி படரும்

சேர்ந்தவர் என்றும் திசை ஒளி ஆனவர்
காய்ந்தெழும் மேல்வினை காண்கிலாதவர்
பாய்ந்தெழும் உள்ளொளி பாரினில் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாறு ஒளி தானே.

நவாக்கரிச் சக்கரத்தைத் தியானித்தவர் சிறந்த ஒளியுடல் பெறுவார். காய்ந்து எழுகின்ற தீ வினைப் பயன்களை இவர் அனுபவிக்க மாட்டார். இவர் உடலில் எழும் உள்ளொளி அவர் இருக்கும் இடத்தில் படர்ந்து செல்லும். அங்கு நிலவிய அஞ்ஞானம் மறைந்து விடும். ஞானமயமாக ஆகிவிடுவார் அங்கு உள்ள மனிதர்கள் எல்லோருமே.

#1349. தெளிவடையும் ஞானமும் சிந்தையும்!

ஒளியது ஹௌமுன் கிரிமது ஈறாம்
களியது சக்கரம் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமும் சிந்தையும் தேறப்
பணியது பஞ்சாக் கரமது வாமே.

'ஹௌம்' என்ற பீசம் முதல் 'கிரீம்' என்னும் பீசம் இறுதியாக உள்ள, மகிழ்ச்சி தரவல்ல, நவாக்கரிச் சக்கரத்தை நன்கு கண்டு அறிந்து கொண்டவர்களுக்குத் தெளிந்த சிந்தையும் ஞானமும் உண்டாகும். சிவபெருமானின் பஞ்சாக்கரத்துடன் கூடிய நவாக்கரியை அவர்கள் வணங்கி வழிபடுகின்றார்கள் அல்லவா?

#1350. அறிவும் ஆற்றலும் அடைவர்

ஆமே சதாசிவ நாயகி ஆனவள்;
ஆமே அதோமுகத்து உள்அறிவு ஆனவள்;
ஆமே சுவை ஒளி ஊறு ஓசை கண்டவள்;
ஆமே அனைத்துயிர் தன்னுளும் ஆமே.

இவளே சதாசிவ மூர்த்தியின் அருள்சக்தி ஆனவள். இவளே கீழ் நோக்கில் இருந்து கொண்டு அனைத்து உயிர்களையும் செயல் புரியும்படிச் செலுத்துபவள். சுவை, ஒளி, ஊறு, ஓசை இவற்றை உணர உதவிடும் அறிவு வடிவானவள் இவளே. அருவ நிலையில் உள்ளபோது அனைத்து படைப்பினையும் தனக்குள் அடக்கிக் கொள்பவள் இவளே.

#1351. எங்கும் எதிலும் நிறைந்தவள்

தன்னுளும் ஆகித் தரணி முழுதும் கொண்டு
என்னுளும் ஆகி இடம் பெற நின்றவள்
மண்ணுளும், நீர், அனல், காலுளும் வானுளும்
கண்ணுளும் மெய்யுளும் காணலும் ஆமே.

எல்லா உலகங்களையும் தன்னுள் கொண்ட ஈசன் வடிவில் அவள் என்னுள் இடம் பெற்று நின்றாள். அந்த தேவியை நாம் மண்ணிலும், நீரிலும், ஒளியிலும், காற்றிலும், விண்ணிலும், கண்ணின் கருமணியிலும், உடலிலும் காண இயலும்.

#1352. கருத்துற நிற்கவேண்டும்

காணலு மாகும் கலந்துயிர் செய்வன
காணலு மாகும் கருத்துள் இருந்திடின்
காணலு மாகும் கலந்து வழிசெயக்
காணலு மாகும் கருத்துற நில்லே.

உயிருடன் கலந்து நிற்கும் சக்தி அந்த உயிர்களுக்குச் செய்யும் நன்மைகளைக் காண இயலும். அவளைக் காண வேண்டும் என்பதில் ஒரே குறியாக இருப்பவர்கள் சீவ பேதம் அழிந்து அவளைக் காணவும் இயலும். உயிருடன் கலந்து நிற்கும் அவளை முன்னிட்டுக் கொண்டு சீவன்கள் செயல் படுவதையும் காண முடியும். இவை அனைத்தும் நிகழ்ந்திட நீ அவளுடன் பிரியாத வண்ணம் உன் கருத்தைப் பொருத்தி இருப்பாய்.

#1353. மெய்ப் பொருள் ஆகிவிடுவர்

நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றாகக்
கண்டிடும் உள்ளம் கலந்து எங்கும் தானாகக்
கொண்டிடும் வையம் குணம் பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொருள் ஆகுமே.

இந்தப் பயிற்சியாளருக்கு ஏழு உலகங்களும் ஒன்றாகத் தோன்றும். எல்லாப் பொருட்களிலும் அவர் தன்னையே காண்பார். உலகில் நிலவும் எல்லா இயல்புகளையும் உள்ளவற்றை உள்ளவாறு அவர் அறிவார். செய்த வல்வினைப் பயன்கள் வந்து எய்தாத வண்ணம் விலக்கும் மெய்ப் பொருளாகி விடுவார்.

#1354. நற்பொருளாகி நடுவில் இருப்பாள்

மெய்ப்பொருள் 'ஔ' முதல் 'ஹௌ ' அது ஈறாகக்
கைப்பொருளாகக் கலந்து எழு சக்கரம்
தற்பொருளாகச் சமைந்து அமுதேசுவரி
நற்பொருளாக நடு இருந்தாளே.

மெய்ப் பொருளான 'ஔம் ' முதல் 'ஹௌம் ' ஈறாக உள்ள எழுத்துக்கள் விளங்கும் இந்த நவாக்கரிச் சக்கரத்தில் சிவன் விளங்குவான். அவனுடன் நன்மைகள் புரியும் அமுதேசுவரியும் நடுவில் விளங்குவாள்.

#1355. காயம் அது அழியாது

தாள்அதின் உள்ளே சமைந்த அமுதேசுவரி
கால்அது கொண்டு கருத்து உற வீசிடில்
நாள்அது நாளும் புதுமைகள் கண்டபின்
கேள்அது காயமும் கேடுஇல்லை காணுமே.

உடலில் மூலாதாரம் முதல் பிரரந்திரம் வரை பேரொளியாக விளங்கும் அமுதசுவரியுடன், மூலாதாரத்தில் இருக்கும் மூல வாயுவை மேலே கொண்டு வந்து பொருந்தச் செய்ய வேண்டும். அப்போது நாள் தோறும் புதுமைகளைக் காணலாம்.

அத்துடன் அந்தப் பயிற்சியாளனின் உடலுக்குக் கேடு எதுவும் விளையாது. காயம் அழியாது.

#1356. அருள் வரும் வழி காண்பீர்

கேடு இல்லை காணும் கிளர்ஒளி கண்டபின்,
நாடு இல்லை காணும் அந்நாள் முதல் அற்றபின்,
மாடு இல்லை காணும் வரும் வழி கண்டபின்,
காடு இல்லை காணும் கருத்துற்றி டத்துக்கே.

மூலாதாரத்தில் இருந்து கிளர்ந்து மேலே எழும் பேரொளியைக் கண்ட பின்னர் ஒருவருக்கு எந்தக் கேடும் வராது. பேரொளியைக் கண்டவருக்கு நாடு முதலிய பேதங்கள் இரா. கால வேறுபாடு மறைந்த பின்னர் மேலே, கீழே, முன்னே, பின்னே என்ற வேறுபாடுகள் எதுவும் இரா. அமுதேசுவரியின் அருள் வரும் வழியைக் கண்டறிந்து கொண்டவருக்கு துன்பம் என்னும் காடு இராது.

#1357. சலிப்பு அற நின்றிடு!

உற்றிடம் எல்லாம் உலப்பு இலி பாழ் ஆக்கி
சுற்றிடம் எல்லாம் சுடுவெளி யானது
மற்றிடம் இல்லை, வழி இல்லை, தான் இல்லைச்
சற்று இடம் இல்லை, சலிப்பு அற நின்றிடே.

தான் வந்து அடைந்த உலகம் தோன்றாதபடிப் பாழ் செய்தால், அங்கு இருந்த எல்லாப் பொருட்களும் மறைந்து உலகம் வெட்ட வெளி ஆகிவிடும். தானே எங்கும் நிறைந்து நிற்பதால் வேறு இடம் என்று எதுவும் இராது. உலவுவதற்கும் வழியும் இராது. தான் என்பது இராது. சலித்துக் கொள்ளாமல் நீ இந்த அனுபவத்தில் நிலை பெற்று நிற்பாய்.

#1358. சிரசின் மேல் ஒளி அமையும்

நின்றிடும் ஏழ்கடல் ஏழ் புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தானே
நின்றிடும் சத்தி நிலை பெறக் கண்டிட,
நின்றிடும் மேலை விளக்கொளி தானே.

சாதனையாளருக்கு முன்னால் ஏழு கடலும், ஏழு உலகங்களும் வந்து நிற்கும். அவர் எண்ணியதெல்லாம் கண்ணெதிரே வந்து தோன்றும். சக்தி தேவி தன்னிடம் நிலை பெற்றதைக் கண்பவரின் சிரசின் மேல் ஓர் ஒளி அமையும்.

#1359. மின்னாற் கொடியாள்

விளக்கொளி சௌமுதல் ஔவது ஈறா
விளக்கொளிச் சக்கரம் மெய்ப் பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடியாளை
விளக்கொளியாக விளங்கிடு நீயே.

ஒளிரும் 'சௌம்' முதல் 'ஔம்' வரை உள்ள ஒன்பது பீசங்களைக் கொண்ட நவாக்கரி சக்கரம் இதுவே மெய்ப் பொருளாகும். அதில் விளங்குகின்ற மின்னற் கொடியாளை உன் ஞானத்தால் நீ அறிந்து கொள்வாய்!

#1360. இந்த அறிவே மெய் ஞானம்

விளங்கிடும் மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடும் மெல்லிய லானது ஆகும்
விளங்கிடும் மெய்நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே.

இவற்றால் விளங்கும் உண்மை இதுவே. எங்கும் விளங்குபவள் சக்தி தேவியே ஆவாள். இவ்வாறு பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து விளங்குபவள் சக்தி தேவி என்னும் மெய்ப்பொருளை அறிந்து கொண்டவரே உண்மையில் மெய்ஞானம் பெற்றவர் ஆவார்.

#1361. அவளே அனைத்தும் ஆனவள்

தானே வெளி என எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளி அது ஆனவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்;
தானே அனைத்து உள அண்ட சகலமே.

சக்தி தேவி நுண்ணிய வானத்தைப் போல எங்கும் நீக்கமற நிறைந்திருப்பாள். அவளே பரமாகாசம் ஆகி நிற்பாள். அவளே அனைத்துப் பொருட்களையும் ஆக்குபவள், அழிப்பவள், தனக்குள் அடக்குபவள். எல்லா அண்டங்களாகவும் காட்சி தருபவள் சக்தி தேவியே ஆவாள்.

#1362. சிரசின் மேல் விளங்குவாள் சக்தி

அண்டத்தினுள்ளே அளப்பரிது ஆனவள்
பிண்டதினுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தின் உள்ளே குணம் பல காணினும்
கண்டத்தின் நின்ற கலப்பு அறியார்களே.

அனைத்து அண்டங்களிலும் அளப்பதற்கு அறியவளாக இருப்பவள் இவள். பிண்டம் ஆகிய சீவனின் உடலில் ஞானம் விளங்கும் பெருவெளியில் இருப்பவள் இவள். குண்டத்தில் செய்யும் ஓமங்கள் மூலம் பல நன்மைகள் பெறுபவர்களும் கண்டத்துக்கு மேலே இவள் கலந்து உறைவதை அறியாது இருக்கின்றார்களே!

#1363. நாதத்தை அறியாது நலிந்தவர்

கலப்பு அறியார் கடல் சூழ் உலகு எல்லாம்
உலப்பு அறியார் உடலோடு உயிர் தன்னைச்
சிலப்பு அறியார், சில தேவரை நாடித்
தலைப் பறியாகச் சமைந்தவர் தானே.

கடல் சூழ்ந்த உலகம் எங்கும் சக்தி தேவி கலந்திருப்பதை சிலர் அறியார். உடலுடன் கூடிய உயிர் ஒரு நாள் உடலை விட்டுப் பிரிந்துவிடும் என்பதை அவர்கள் அறியார். சிறு சிறு தெய்வங்களை நாடியதால் அவர்கள் நாதத்தை அறியார். இங்ஙனம் அவர்கள் நடந்து கொள்வதற்குக் காரணம் அவர்களின் தலையெழுத்து

#1364. நவாக்கரி சக்கரத்தின் அமைப்பு

தானே எழுந்த அச்சக்கரம் சொல்லிடின்
மானே மதி வரை பத்து இட்டு வைத்தபின்
தேனே இரேகை திகைப்பு அற ஒன்பதில்
தானே கலந்த அறை எண்பத்தொன்றுமே.

மானே! தானே தோன்றிய இந்தச் சக்கரத்தின் அமைப்பு இதுவே. குறுக்கும் நெடுக்குமாகப் பத்துப் பத்துக் கோடுகள் கீறி வரைக.தேனே! இந்த ரேகைகளுக்குள் ஒன்பது ஒன்பது என எண்பத்தொரு அறைகள் அமையும்.

#1365. சக்கரத்தில் அமையும் நிறங்கள்

ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்,
வென்றிகொள் மேனி மதி வட்டம் பொன்மையாம்;
கன்றிய ரேகை கலந்திடும் செம்மையில்,
என்று இயல் அம்மை எழுத்து அவை பச்சையே.

கட்டங்களுக்கு வெளியான மதி மண்டலம் பொன்னிறம் கொண்டது. கட்டங்களில் அமைந்துள்ள கீற்றுகள் செந்நிறம் கொண்டவை. சக்தி தேவியின் எழுத்துக்கள் அடைக்கும் கட்டங்கள் பச்சை நிறம் கொண்டவை.

#1366. நவாக்கரி சக்கரத்துக்கு நிவேதனம்

ஏய்ந்த மர உரி தன்னில் எழுதி
வாய்ந்த இப்பெண் எண்பத்தொன்றில் நிரைத்தபின்
காய்ந்த ஆவி, நெய்யுள் கலந்து உடன் ஓமமும்
ஆந்தலத்து, ஆம்உயிர் ஆகுதி பண்ணுமே.

பொருத்தமான மரப் பட்டையில் எண்பத்தொரு அறைகளில் சக்தி பீசங்களை அடைக்க வேண்டும். பின்பு அவிசை நெய்யுடன் கலந்து ஹோமமும் ஆஹூதியும் செய்யவேண்டும்.

#1367. சிவனுடன் சேர வேண்டும்

பண்ணிய பொன்னைப் பரப்பு அற நீ பிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்த பின்
துண்ணென நேயநற் சேர்க்கலும் ஆமே.

சக்கரத்தில் அமைக்கப்பட்ட பொன் போன்ற சக்திதேவியை நீ சிக்கெனப் பிடித்துக் கொள். தியானம் செய்யத் தொடங்கிய நாள் முதலே இன்பம் உண்டாகும். வேள்விகளின் தலைவன் நான்முகனைச் சேர்ந்தபின் சிவபெருமானைச் சேர வேண்டும்.

#1368. நறுமணப் பொருட்கள் ஒன்பது

ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகு நெய்
ஆகின்ற கற்பூரம் ஆகோ சனநீரும்
சேர்கின்ற ஒன்பதும் சேர நீ வைத்திடே.

அரைக்கப்பட்ட சந்தனம், குங்குமப் பூ, கத்தூரி, சவ்வாது, புனுகு, நெய், பச்சைக் கற்பூரம், பசுவின் கோரோசனை, பன்னீர் என்ற ஒன்பது நறுமணப் பொருட்களையும் கலந்து சக்கரத்துக்குச் சார்த்த வேண்டும்.

#1369. தியானிக்கும் முறை

வைத்திடும் பொன்னுடன் மாதவம் நோக்கிடில்,
கைச்சிறு கொங்கை கலந்துஎழு கன்னியைத்
தச்சு இதுவாகச் சமைந்த இம்மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே.

பொன் போன்ற சக்தியுடன் சாதகனைச் சேர்த்து வைக்கும் இந்தத் தவத்தை செய்வதற்கு , இளங் கொங்கைகள் உடைய வலைக் குமரியாக அவளை எண்ணி, நவாக்கரி மந்திரத்தை பல ஆயிரம் முறைகள் உருச் செய்ய வேண்டும்.

#1370. நவாக்கரி சக்தியின் ஆறு ஆயுதங்கள்

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் இரு மூன்றும் உள்ளது
பந்தமா சூலம் படை பாசம் வில்லம்பு
முந்த கிலீஎழ முன்னிருந்தாளே.

தந்தையும் தாயுமாக நம் உள்ளத்தில் ஒளி வடிவாக உள்ள நவாக்கரி சக்திக்கு ஆறு கரங்கள். அவற்றில் அவள் மழு, சூலம், அங்குசம், பாசம், வில், அம்பு என்ற ஆறு ஆயுதங்களை ஏந்தி இருப்பாள். கிலீம் என்ற பீசத்தை உடைய தேவி முதலில் சாதகன் முன்னால் வெளிப்படுவாள்.

#1366. நவாக்கரி சக்கரத்துக்கு நிவேதனம்

ஏய்ந்த மர உரி தன்னில் எழுதி
வாய்ந்த இப்பெண் எண்பத்தொன்றில் நிரைத்தபின்
காய்ந்த ஆவி, நெய்யுள் கலந்து உடன் ஓமமும்
ஆந்தலத்து, ஆம்உயிர் ஆகுதி பண்ணுமே.

பொருத்தமான மரப் பட்டையில் எண்பத்தொரு அறைகளில் சக்தி பீசங்களை அடைக்க வேண்டும். பின்பு அவிசை நெய்யுடன் கலந்து ஹோமமும் ஆஹூதியும் செய்யவேண்டும்.

#1367. சிவனுடன் சேர வேண்டும்

பண்ணிய பொன்னைப் பரப்பு அற நீ பிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்த பின்
துண்ணென நேயநற் சேர்க்கலும் ஆமே.

சக்கரத்தில் அமைக்கப்பட்ட பொன் போன்ற சக்திதேவியை நீ சிக்கெனப் பிடித்துக் கொள். தியானம் செய்யத் தொடங்கிய நாள் முதலே இன்பம் உண்டாகும். வேள்விகளின் தலைவன் நான்முகனைச் சேர்ந்தபின் சிவபெருமானைச் சேர வேண்டும்.

#1368. நறுமணப் பொருட்கள் ஒன்பது

ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகு நெய்
ஆகின்ற கற்பூரம் ஆகோ சனநீரும்
சேர்கின்ற ஒன்பதும் சேர நீ வைத்திடே.

அரைக்கப்பட்ட சந்தனம், குங்குமப் பூ, கத்தூரி, சவ்வாது, புனுகு, நெய், பச்சைக் கற்பூரம், பசுவின் கோரோசனை, பன்னீர் என்ற ஒன்பது நறுமணப் பொருட்களையும் கலந்து சக்கரத்துக்குச் சார்த்த வேண்டும்.

#1369. தியானிக்கும் முறை

வைத்திடும் பொன்னுடன் மாதவம் நோக்கிடில்,
கைச்சிறு கொங்கை கலந்துஎழு கன்னியைத்
தச்சு இதுவாகச் சமைந்த இம்மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே.

பொன் போன்ற சக்தியுடன் சாதகனைச் சேர்த்து வைக்கும் இந்தத் தவத்தை செய்வதற்கு , இளங் கொங்கைகள் உடைய வலைக் குமரியாக அவளை எண்ணி, நவாக்கரி மந்திரத்தை பல ஆயிரம் முறைகள் உருச் செய்ய வேண்டும்.

#1370. நவாக்கரி சக்தியின் ஆறு ஆயுதங்கள்

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் இரு மூன்றும் உள்ளது
பந்தமா சூலம் படை பாசம் வில்லம்பு
முந்த கிலீஎழ முன்னிருந்தாளே.

தந்தையும் தாயுமாக நம் உள்ளத்தில் ஒளி வடிவாக உள்ள நவாக்கரி சக்திக்கு ஆறு கரங்கள். அவற்றில் அவள் மழு, சூலம், அங்குசம், பாசம், வில், அம்பு என்ற ஆறு ஆயுதங்களை ஏந்தி இருப்பாள். கிலீம் என்ற பீசத்தை உடைய தேவி முதலில் சாதகன் முன்னால் வெளிப்படுவாள்.

#1371. அறுபத்து நான்கு சக்தியர்

இருந்தனர் சக்தியர் அறுபத்து நால்வர்;
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்;
இருந்தனள் சூழ எதிர் சக்கரத்தே
இருந்த கரம் இரு வில் அம்பு கொண்டே.

அன்னையைச் சுற்றி அறுபத்து நான்கு சக்தியர் இருப்பார். வாமை, சேட்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரதமனி, சர்வபூத தமனி என்ற எட்டு கன்னிரும் இருப்பர். அவர்கள் தங்கள் இரு கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தி இருப்பர். இந்த யோகினி சக்தியர் அனைவரும் சக்கரத்தைப் பார்த்த வண்ணம் அதைச் சூழ்ந்து இருப்பர்.

#1372. சக்தியின் வடிவழகு

கொண்ட கனகம், குழை, முடி, ஆடையாய்க்
கண்ட இம் மூர்த்தம் கனல்திரு மேனியாய்ப்
பண்டு அமர் சோதிப் படர் இதழ் ஆனவள்
உண்டு அங்கு ஒருத்தி, உணர வல்லார்க்கே.

பொற் காதணிகள் அணிந்து, பொன் முடி விளங்க, பொன்னே ஆடையாக உடையவள் அன்னை. அக்கினியே இவள் திருமேனி. முன்பிருந்தே பேரொளியைத் தன் இருப்பிடமாகக் கொண்டு வசிப்பவள் இவள். இந்தக் கோலத்தில் இவளை தியானிப்பவர்களுக்கு அன்னை இவ்விதமான வடிவழகுடன் வெளிப்பட்டு அருள் புரிவாள்.

#1373. ஊர்த்துவ சகசிரதளம் அமையும்

உணர்ந்து இருந்து, உள்ளே ஒருத்தியை நோக்கில்
கலந்திருந்து எங்கும் கருணை பொழியும்,
மணந்து எழும் ஓசை ஒளி அது காணும்
தணந்து ஏழு சகரம் தான் தருவாளே.

ஒப்பரும் மிக்காரும் இல்லாத சக்தியை நன்கு அறிந்து கொண்டு அவளை தரிசனம் செய்தால், அவள் பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைந்து நமக்கு அருள் புரிவாள். அதன் பின் நாதமும் ஒளியும் ஆகிய, எங்கும் கலந்துள்ள, பிரணவம் தோன்றும். உடலைத் தாண்டிய மேல் நோக்கிய ஊர்த்துவ சகசிர தளம் அமையும்.

#1374. ஞானமும், வீடுபேறும் தரும்

தருவழி யாகிய தத்துவ ஞானம்
குருவழி யாகும் குணங்களுள் நின்று
கருவழி யாகும் கணக்கை அறுத்துப்
பெருவழி யாக்கும் பேரொளி தானே.

குருமண்டலத்தில் இருந்து கொண்டு, பேரொளி வடிவினளாகிய சக்தி, உண்மையான தத்துவ ஞானத்தை அன்பருக்கு அருள்வாள். அவர்களிடம் தெய்வ குணங்கள் ஓங்கி விளங்கச் செய்வாள். அவர்கள் கருவில் வாசம் செய்து மீண்டும்

உலகில் பிறவி எடுக்கும் செயலை நீக்குவாள். அவர்களுக்கு பெருநெறியாகிய வீடு பேற்றினைத் தருவாள்.

#1375. பாரொளியாகப் பரவி நிற்பாள்

பேரொளி ஆய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி,
கார்ஒளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பார்ஒளி யாகிப் பரந்து நின்றாளே.

பேரொளியும், பெருஞ்சுடரும் ஆகி ஒளிருபவள் தேவி. சீரோளியாகித் திகழும் தனிநாயகி. காரொளி போன்ற கன்னியான அவள், பொன்னிறத்துடன் பூமித் தத்துவத்தின் ஒளியாகப் பாரெங்கும் பரவி நின்றாள்.

#1376. தேவியின் வடிவழகு

பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரம்இரு கொய்தளிர்ப் பாணி,
பரிந்தருள் கொங்கைகள் முத்துஆர் பவளம்
இருந்தநல் லாடை மணி பொதிந் தன்றே.

மேலே தூக்கிய இரு கரங்களில் சக்தி தேவி இரு தாமரை மலர்களை ஏந்தி இருப்பாள். குவிந்த இரு தளிர்க் கரங்களில் அபயமும், வரதமும் அளிப்பாள். தனங்கள் மேல் முத்து மாலைகளும், பவழ மாலைகளும் புரளும். நல்ல மணிகள் பதித்த ஆடைகள் அணிந்திருப்பாள்.

#1377. பணிவோர்க்குப் பரகதி தருவாள்

மணிமுடி, பாதம் சிலம்பு அணி மங்கை
அணிபவள் அன்றி அருள் இல்லை ஆகும்
தணிபவர் நெஞ்சினுள் தன்அருள் ஆகிப்
பணிபவர்க்கு அன்றோ பரகதி ஆமே?

சக்தி தேவி தன் தலையில் அழகிய மணிமுடி தரித்திருப்பாள். பாதங்களில் சிலம்பு அணிந்திருப்பாள். அவளைத் தவிர அருள் வழங்குவதற்கு வேறு எவரும் இல்லை. புலன்களின் வழியே போகாமல், அவற்றை அடக்கி ஆள்பவர்களின் மனத்தில், இவள் அருள் புரிந்து எழுந்தருள்வாள். தன் அன்பர்களுக்குப் பரகதி தருவாள்.

#1378. சக்தியர் புடை சூழ விளங்குவாள்

பரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிக எப்படி சூழ
மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்
சிறந்தவ ரேத்தும் சிறீதன மாமே.

நவாக்கரிச் சக்கரத்தைச் சூழ்ந்து உள்முகமாக மறைந்து உறைவர் அறுபது சக்தியரும் எட்டுக் கன்னியரும். அவர்களின் நடுவே, இரு கரங்களிலும் மலர்களை ஏந்தி, 'ஸ்ரீம்' என்னும் பீசத்துக்கு உரிய, செல்வத்தின் அதிபதியாகச் சக்தி தேவி விளங்குவாள்.

#1379. சிவசூரியனைச் சேரலாம்

தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி மரிக்கிலோ ராண்டிற்
கனமவை அற்றுக் கருதிய நெஞ்சம்
தினகர னாரிட செய்திய தாமே.

செல்வத்தின் நாயகியாகிய தேவியை இங்கனம் உள்ளத்தில் நிறுத்தித் தியானிக்க வேண்டும். உள்ளம் வெளியுலகை நோக்கி ஓடாமல் இருந்தால், ஓராண்டில் ஆசைகள் அறவே அழிந்து மனச் சுமை விலகிப் போகும். கருதியவை கைக் கூடும், சிவ சூரியனிடம் சென்று பொருந்த இயலும்.

#1380. ஒளி மண்டலம் ஆகும்

ஆகின்ற மூலத்து எழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி ஆய மலரது ஆய்,
போகின்ற பூரணமாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டலம் ஆனதே.

மூலாதாரத்தில் எழும் முழு மலருக்கு நான்கு இதழ்கள். அதில் ஏழு பேரொளி உடலின் ஆறு ஆதாரங்களையும் கடந்து செல்லும் போது பூரணமாகி விடும். அப்போது மூலாதாரம் முதல் துவாதசாந்தம் வரை ஒளி மண்டலமாக விளங்கும்.

#1381. சக்திகளின் நடுவே வீற்றிருப்பாள்

ஆகின்ற மண்டலத்துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத் தறுவகை ஆனவள்
ஆகின்ற ஐம்பத் தறு சக்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத் தறு வகை சூழவே.

இந்த சோதி மண்டலத்தில் விருப்பத்துடன் இருப்பவள் சக்தி தேவி. உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், வித்து எழுத்துக்கள் என்ற ஐம்பத்தாறு எழுத்துக்களை இயக்கும் ஐம்பத்தாறு சக்திகளின் நடுவே அவள் வீற்றிருப்பாள்.

#1382. சக்தியின் எழில்

சூழ்ந்து எழு சோதி சுடர் முடி பாதமாய்
ஆங்கு அணி முத்தம் அழகிய மேனியும்
தாங்கிய கை அவை தார் கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே.

அடி முதல் முடி வரை சக்தி ஓர் ஒளிப் பிழம்பாகக் காட்சி தருவாள். அவள் திருமேனி பெரிய முத்தைப் போல விளங்கும். அவள் அழகிய கரங்கள் இரண்டில் மஞ்சள் வரையுடைய பைங்கிளியையும் ஞான முத்திரையையும் ஏந்தி இருப்பாள். மேலே தூக்கிய இரு கரங்களில் பாசமும், அங்குசமும் ஏந்தி இருப்பாள்.

#1383. கண்ணுதல் ஆகிவிடலாம்

பாசம தாகிய வேரை அறுத்திட்டு
நேசம தாக நினைந்திரு மும்மளே
நாசம தெல்லா நடந்திடும் ஐயாண்டில்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே.

சக்தி தேவியின் நாதமாகிய ஞான முத்திரையை உணருங்கள். பாசமாகிய வேரை அறுத்து விடுங்கள். இடையறாது மனதில் சத்தியை நினைத்த வண்ணமே இருங்கள். இங்கனம் செய்தால் ஐந்தாண்டுகளில் உள்ள கேடுகள் எல்லாம் அகன்றுவிடும். அதன் பின்னர் சாதனையாளன் மண்ணுலகத்துக்கு மேல் அமர்ந்துள்ள கண்ணுதல் ஆகி விடலாம்.

#1384. சக்தி மண்டலம் அமையும்

கண்ணுடை நாயகி தன்அருள் ஆம்வழி
பண்உறு நாதம் பகை அற நின்றிடில்,
விண்அமர் சோதி விளங்க ஹிரீங்காரம்
மண்உடை நாயகி மண்டலம் ஆகுமே.

முக்கண்களை உடைய நாயகியின் அருளைப் பெறும் வழி இதுவே. தடையில்லாத நாதம் தனக்குள்ளே அமையும் என்றால், வான மண்டலத்தில் உள்ள பேரொளி விளங்கும் வண்ணம் ஹ்ரீம் என்னும் பீசத்துக்கு உரிய சக்தியின் மண்டலம் அமையும்.

ஹ்ரீம் என்பது சக்தி மண்டலத்தின் முடிவு. இதற்கு அப்பால் நாதாந்தம் தோன்றும். நாத தரிசனம் பெற்றவருக்கு சக்தி மண்டலம் அமையும்

#1385. ஆதாரங்கள் ஒரேவழியை அடையும்

மண்டலத்துள்ளே மலர்ந்து எழு தீபத்தைக்
கண்டு, அகத்துள்ளே கருதி இருந்திடும்
விண்டகத்துள்ளே விளங்கி வருவதால்
தண்டகத்துள் அவை தாங்கலும் ஆமே.

ஹ்ரீங்கார மண்டலத்தில் எழும் பேரொளியை மனத்தில் நினைவில் நிறுத்துங்கள். அது மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி உடலின் உள்ளே எழும். அப்போது வீணாத் தண்டில் தொடர்பு கொண்ட ஆறு ஆதாரங்களும் ஒரே வழியை அடைந்து தமக்குள் ஒருமைப்பாட்டை அடையும்.

#1386. நாதம் வன்மையுடன் மேலெழும்

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்து
ஓங்கி எழும் கலைக்கு உள்ளுணர்வு ஆனவள்
ஏங்க வரும் பிறப்பு எண்ணி அறுத்திட
வாங்கிய நாதம் வலியுடன் ஆமே.

நாபிக் கமலத்தில் பிரணவம் ஓங்கி மேல் நோக்கி எழும். அதன் உள்ளுணர்வாக உள்ளவள் சக்தி. வருத்தம் தரும் பிறவியை நீக்கிவிட்டால், அதுவரையில் அடங்கி இருந்த நாதம், மிகுந்த வலிமையுடன் ஓங்கி மேலே எழுந்து விளங்கும்.

#1387. உயிர்களின் தலைவி மனோன்மணி

நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தாள்
ஆவுக்கு நாயகி யங்கமர்ந் தாளே.

வாகீசுவரியாக நல்ல அணிமணிகளை அணிந்திருப்பாள். திருமகளாகப் பொன் முடியும் பொன் ஆடையும் கொண்டிருப்பாள். கலைமகளாகப் பா இயற்றும் ஆற்றலை அருளி வெண்ணிற ஒளியில் விளங்குவாள் உயிர்களின் தலைவியாக மனோன்மணி சகசிரதளத்தில் எழுந்தருளுவாள்.

#1388. காரணியைக் காணலாம்

அன்றுஇரு கையில் அளந்த பொருள்முறை
இன்று இரு கையில் எடுத்தவெண் குண்டிகை
மன்று அது காணும் வழிஅது வாகவே
கண்டு அங்கு இருந்தஅக் காரணி காணுமே.

சக்தி வழிபாட்டுக்கு முன்பு இடைகலை, பிங்கலை வழியே வெளிச் சென்று கொண்டிருந்தது உயிர் வளியின் இயக்கம். சக்தியை வழிபட்ட பிறகு, வெண்ணிற அமுத கலசங்களாகப் பொன்னம்பலத்தைத் தரிசிக்கும் வழியாக ஆனது. அதை அறிந்து கொண்டு அங்கு இருப்பவர் தத்துவங்களை இயக்குகின்ற சக்தி தேவியைக் காணலாம்.

#1389. தன் அருளாகி நிற்பாள்

காரணி சத்திக ளைம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சக்கரத்துள்ளே கரந்தெங்கும்
காரணி தன்னரு ளாகி நின்றாளே.

காரணிகளாகிய எழுத்துச் சக்திகள் ஐம்பத்து இரண்டு. காரணியாக இருந்து அவற்றை இயக்குபவர் ஐம்பத்து இருவர். இவாறு காரணி பொன்னம்பலத்தில் வெளிப்படுவாள். மற்ற தத்துவங்களில் மறைந்து உறைவாள். தன் அருளால் அவள் தன அன்பர்களுக்கு வெளிப்படுவாள்.

#1390. மன்றிலாடும் மணி காணும்

நின்றவிச் சத்தி நிலைபெற நின்றிடில்
கண்டவிவ் வன்னி கலந்திடு மோராண்டிற்
கொண்ட விரதநீர் குன்றாமல் நின்றிடின்
மன்றி லாடு மணியது காணுமே.

காரணியாகிய இந்த சக்தி சகசிரதளத்தில் நிலை பெற்றிருக்கும் போது ஓராண்டு காலம் பயிற்சி செய்ய வேண்டும். அப்போது அந்த சக்தி நம்மை விட்டு விலகிச் செல்லாமல் நம்முடனே இருப்பாள். மேற்கொண்ட விரதம் பங்கம் ஆகாமல் இருந்தால் அதன் பின்னர் மன்றில் ஆடும் மணியினைக் காண இயலும்.

#1391. மனத்தில் இனிது இருந்தாள்

கண்ட விச் சத்தி யிருதய பங்கயம்
கொண்டவித் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை அறுத்திட
இன்றென் மனத்து ளினிதிருந் தாளே.

அன்பர்களின் மனம் உலகப் பொருட்களுடன் பொருந்தி இருக்கும் போது சக்தி தேவி இதயத் தாமரையில் இருந்து வருவாள். உலகப் பொருட்களுடன் தொடர்பினை விலக்கி விட்டு; உலக காரணமாகிய நாதம், விந்து இவற்றுடன் அன்பரின் சித்தம் பொருந்தும் போது; தேவி சீவன், அதன் உடல் இவற்றின் மீது இருந்து வந்த வாயுவின் கட்டினை நீக்கி விடுவாள். சீவனின் மனதில் இன்பம் பெருக்குபவளாக ஆகி விடுவாள்.

#1392. தேவியின் தோற்றம்

இருந்த இச்சத்தி இரு நாலு கையில்
பரந்த இப் பூங்கிளி, பாசம், மழு வாள்
கரந்திடு கேடகம் வில் அம்பு கொண்டு அங்கு
குரந்தங்கு இருந்தவள் கூத்து உகந்தாளே.

இந்த சக்தி தன் எட்டுக் கரங்களில் விரிந்த மலர், கிளி, பாசம், மழு, வாள், கேடயம், வில், அம்பு என்னும் எட்டு பொருட்களைத் தங்கி இருப்பாள். ஆரவாரம் செய்த வண்ணம் தன் கூத்தையும் விருப்பத்துடன் புரிந்தாள்.

#1393. பச்சை நிறம் அவள் மேனி

உகந்தனள் பொன்முடி முத்தாரமாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான் பச்சையாமே.

சக்தி தேவி பொன் முடியையும், முத்து மாலைகளையும் மிகவும் விரும்புவாள். பவழ மாலை அணிந்து கொண்டு, செம்பட்டு ஆடையை உடுத்துவாள். மலர்ந்து எழும் கொங்கைகளில் அவள் மணிகள் பதித்த கச்சையை அணிந்திருப்பாள். விரும்பி அன்பர் உள்ளத்தில் உறையும் அந்தத் தேவியின் நிறம் பச்சை.

#1394. பாங்கிமார் நாற்பத்தெண்மர்

பச்சை யிவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு
கொச்சை யாரெண்மர்கள் கூடி வருதலால்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச இடைச்சி இனிதிருந் தாளே.

பச்சை நிறம் கொண்ட இந்தத் தேவிக்குப் பாங்கிமார் நாற்பது எட்டுப் பெண்கள். எப்போதும் கூடவே இருக்கும் எட்டுத் தோழியர் இனிய மழலையில் மிழற்றுவர். எனவே இரு புறங்களிலும் காவல் உடையவளாகக் கச்சணிந்த தேவி மெலிந்த இடையுடன் இனிதாக அமர்ந்திருப்பாள்.

#1395. பரந்தெழு விண்ணில்!

தாளதின் உள்ளே தயங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகொள் என்று
மாலது வாக வழிபாடு செய்து நீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே.

மூலாதாரத்தில் இருக்கும் சக்தி பேரொளி வடிவானவள். அவளைச் " சுழுமுனை வழியே மேலே சென்று சிவனுடன் கலந்து கொள்!" என்னும் போது அவள் விருப்பமும் அதுவே ஆகும். மூலாதார வாயுவை மேல் நோக்கிச் செலுத்தினால் காதலனைக் கூடச் செல்லும் காதலியைப் போல நீயும் விண்ணில் பரந்தெழ இயலும்.

#1396. சந்திர மண்டலம் தழைக்கும்

விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபம் கலந்து வருதலால்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தன்னமர் கூபம் தழைத்தது காணுமே.

நாபிக்கும் இருதயத்துக்கும் இடையே உள்ளான் கதிரவன். அவன் கண்ணில் விளங்கும் சந்திரனுடன் சென்று சேர்ந்தால் ஞானசக்தி தரும் ஞானக் கதிரவன் ஆகிவிடுவான். இது சந்திர மண்டலம் விரிவடைவதைக் காட்டுகின்றது.

#1397. சூலம் பாசத்தை அறுக்கும்

கூபத்துச் சத்தி குளிர் முகம் பத்துள
தாபத்து சத்தி தயங்கி வருதலால்
ஆபத்துக் கைக ளடைந்தன நாலைந்து
பாசம் அறுக்கப் பரந்தன சூலமே.

விழிகளுக்கு மேலாக விளங்குகின்ற சக்தி தேவிக்கு பத்து திசைகளே பத்து முகங்கள். தாபத்தை உண்டாக்கும் கதிரவன் தன்னிலையை விட்டு வெளியேறி சந்திர மண்டலத்தில் மெல்ல அடங்குவான். அப்போது ஆபத்தைச் செய்கின்றதும், மேலும் கீழுமாக ஓடுகின்றதும் ஆகிய பத்து நாடிகள் செயல் அடங்கும். சாதகன் பாசத்தினை அறுக்க, முத்தலைச் சூலம் போன்ற சுழுமுனையை சக்தி நன்கு விளங்கச் செய்வாள்.

#1398. தேவியின் கரங்களில் உள்ளவை

சூலந்தண் டொள்வாள் சுடர்பறை ஞானமாய்
வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி கைக் கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே.

சூலம், தண்டு, வாள், பறை, ஒளிரும் ஞான வடிவானவேல், அம்பு, உடுக்கை, கிளி, வில், காலம், பூ, பாசம், மழு, கத்தி, இவற்றுடன் சங்கு, அபயம், வரதம் விளங்குகின்ற தேவியின் கரங்களைத் தியானிப்பாய்.

#1399. எண்ணங்களைக் கடந்து நிற்பாள்

எண்அமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண அமர் கன்னிகள் நாற்பது நால்வராம்
எண்ணிய பூவிதழ் உள்ளே இருந்தவள்
எண்ணிய எண்ணம் கடந்து நின்றாளே.

சாதகனின் எண்ணத்தில் மிகுந்த விருப்பத்துடன் அமர்ந்து இருக்கும் சக்தியர் நாற்பத்து நால்வர். அவர்களுடன் அமர்ந்திருக்கும் தோழியரும் நாற்பது நால்வர் ஆவர். சகசிர தளத்தில் இருக்கும் சக்தி தேவி, சாதகன் உலகத்தைப் பற்றிய எண்ணங்களைக் கடந்து நிற்கும்போது சாதகனுக்கு நன்கு விளங்கும்படி நின்றாள்.

#1400. வாலை, குமரி, குண்டலினி, பராசக்தியே!

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தஅணி முத்து, பவளம்கச்சு ஆகப்
படர்ந்த அல்குல் பட்டாடை, பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்து நின்றாளே.

உலக எண்ணங்களைக் கடந்து நிற்கின்ற தேவி; பொன் முடி, முத்துக்களும், பவழங்களும் விரவிய கச்சு, பட்டாடைகள், சிலம்பு இவற்றை அணிந்து வாலைப் பெண் வடிவில் வீற்றிருந்தாள்.

#1401. மெய்யறிவு பிறக்கும்

நின்ற இச்சத்தி நிரந்தர மாகவே
கண்டிடு மேரு அணிமாதி தான்ஆகிப்
பண்டைய ஆனின் பகட்டை அறுத்திட
ஒன்றிய தீபம் உணர்ந்தார்க்கு உண்டாமே.

இவ்வாறு வீற்றிருக்கும் சக்தி புருவ மத்தியில், இடையீடு இல்லாமல், அணிமா முதலிய எட்டு சத்திகள் ஆவாள். முன்பு கற்றிருந்த சாத்திர அறிவினை அகற்றி விடுவாள். அவள் பேரொளியை உணர்ந்தவருக்கு மெய்யறிவு பிறக்கும்.

#1402. சதாசிவ நாயகியின் வடிவம்

உண்டு ஓர் அதோ முகம், உத்தம மானது
கண்ட இச்சக்தி சதாசிவ நாயகி
கொண்ட முகம் ஐந்து, கூறும் கரங்களும்
ஒன்றுஇரண் டாகவே மூன்று நால் ஆனதே.

கீழ் நோக்கிய சகசிர தளத்தில் இருப்பவள் சதாசிவ நாயகியாகிய மனோன்மணி. இவள் நாயகனைப் போலவே இவளுக்கும் முகங்கள் ஐந்தும் கரங்கள் பத்தும் உள்ளன.

#1403. சதாசிவ நாயகியின் வடிவழகு

நன்மணி சூலம் கபாலம் கிளியுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகும்
கண்மணி தாமரை கையில் தமருகம்
பொன்மணி பூணாரம் பூசனை யானதே.

நன்மணியுடன் சூலம், கபாலம், கிளி, பன்மணிகளை உடைய பாம்பு, மழு, கத்தி, மாணிக்கம் போன்று சிவந்து ஒளிரும் தாமரை, உடுக்கை இவற்றை அவள் தன் கரங்களில் கொண்டுள்ளாள். பொன்னும் மணியும் பூண்டுள்ளாள்.

#1404. நாற்பது சக்தியர் நடுவே பராசக்தி

பூசனை சத்திகள் எண்ஐவர் சூழவே
நேசவள் கண்ணிகள் நாற்பது நேரதாய்க்
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவள்
மாசு அடையாமல் மகிழ்ந்திருந் தார்களே.

தன்னைப் பூசிக்கும் நாற்பது சக்தியரும் தன்னைச் சூழ்ந்திருக்க, சீவனின் மீது நேசம் கொண்ட பராசக்தி அந்த நாற்பது கன்னியருக்கு நேராகச் சீவனின் உடலில் உள்ள சகசிர தளத்தில் கலந்திருப்பாள். அவர்கள் அனைவரும் எந்தக் குற்றமும் சராதபடி மகிழ்ச்சியுடன் அங்கே வீற்றிருபார்கள்.

ஸ்ரீ சக்கரத்தில் மொத்தம் நாற்பது மூன்று முக்கோணங்கள் உள்ளன. நடுவில் உள்ள மூன்று முக்கோணங்கள் நீங்கலாக மீதம் நாற்பது முக்கோணங்கள் உள்ளன. அவற்றில் இந்த நாற்பது சக்தியர் வீற்றிருப்பர்.

#1405. பராசக்தி வெளிப்படுவாள்

தாரத்தின் உள்ளே தயங்கிய சோதியைப்
பாரத்தின் உள்ளே பரந்து உள் எழுந்திட
வேர் அது ஒன்றி நின்று எண்ணும் மனோமயம்
கார் அது போலக் கலந்து எழு மண்ணிலே.

பிரணவத்துள் ஒரு பேரொளி விளங்கும். சுமையான உடலுள். அது மேல் நோக்கி எழும். எழுந்து சீவனின் உடலைக் கடக்கும். தனக்கு ஆதாரம் அதுவே என்பதை சீவன் உணரவேண்டும். அந்தப் பிரணவத்தில் மனோலயம் அடைய வேண்டும். இதைச் செய்யும் வல்லமை இருந்தால், நீரைப் பருகிவிட்டு மண்ணிலிருந்து மேலெழும் கார் மேகம் போலப் பராசக்தி அவர் தலையில் வெளிப்படுவாள்.

#1406. விந்து நாதங்களாக வெளிப்படும் தேவி

மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாய நாம என்று
கண்ணில் எழுந்தது காண்பரிது அன்று கொல்
கண்ணில் எழுந்தது காட்சிதர என்றே.

அகார, உகாரங்கள் சுவாதிட்டனச் சக்கரத்தில் நிலை கொண்டுள்ளன. இவை சகசிர தளத்தை அடையும் போது, அகக் கண்களுக்குப் புலப்படும் வண்ணம் விந்து நாதங்களாக மாறிச் 'சிவாயநம' என்று வெளிப்படும். இது காண்பதற்கு அரிய காட்சி அன்று. இது இங்ஙனம் எழுவது சாதகனைத் தன் திருவடியில் வைத்துக் கொள்ளும் பொருட்டே ஆகும்.

#1407. ஒளியாக விளங்குவாள்

என்று அங்கு இருந்த அமுதக் கலையிடைச்
சென்று அங்கு இருந்த அமுதபயோதரி
கண்டம் கரம் இரு வெள்ளி பொன் மண்ணடை
கொண்டு அங்கு இருந்தது வண்ணம் அமுதே.

சந்திர கலையிடை அமுதம் விளங்கும். பராசக்தி அதைத் தன் அழகிய கொங்கைகளில் ஏந்தி அமுத பயோதரி ஆவாள். அவள் சுவாதிட்டானத்தில் செயல்படும் சுக்கிலத்தையும், சுரோணிதத்தையும் இடைகலை, பிங்கலைகளின் உதவியினால் அக்கினிக் கண்டத்துக்குக் கொண்டு வந்து கொண்டு அங்கு அமுத மயமாக இருப்பாள்.

#1408. வெண்ணிற ஒளியாக வெளிப்படுவாள்

அமுதம தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு முள்ளே
குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெமுதம தாகிய கேடிலி தானே.

நீல மலரும் முத்தும் கலந்தது போன்ற குளிர்ந்த ஒளியில்; ஆனந்த மயமாகி அழிவு என்பதே இல்லாத சக்தி தேவி; அமுதம் போன்ற அழகிய மேனியுடன்; படிகம் போன்ற வெண்ணிற ஒளியுடன் வெளிப்டுவாள்.

#1409. சூழ்ந்திருக்கும் சக்தியரும் பாங்கியரும்

கேடுஇலி சக்திகள் முப்பத் தறுவரும்
நாடுஇலி கன்னிகள் நால்ஒன் பதின்மரும்
பூஇலி பூவிதழ் உள்ளே இருந்திவர்
நாள்இலி தன்னை நணுகிநின் றார்களே.

அழிவு என்பது இல்லாத முப்பத்தாறு சக்திகளும், நாடுவதற்கு அறியவராகிய அவர்களது முப்பத்தாறு தோழியரும் அம்மையின் சக்கரத்தில் வசிப்பவர்கள். சக்கரத்தின் இதழ்களில் இவர்கள் குடியிருப்பார்கள். காலம் என்னும் தத்துவத்தைக் கடந்து நிற்கும் அம்மையை இவர்கள் சூழ்ந்து நிற்பார்கள்.

#1410. பீச எழுத்து சித்திக்கும்

நின்றது புந்தி நிறைந்திடு வன்னியும்
கண்டது சோதி கருத்து ளிருந்திடக்
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
விண்டவென காரம் விளங்கின அன்றே.

புத்தித் தத்துவத்தில் சிவம் நாதமாக நிறைந்து நின்றது. ஒளியாகிய சோதி உள்ளத்திலிருந்து நீங்காமல் நின்றது. ஓராண்டு சாதனைக்குப் பின்னர் பீச எழுத்து வசப்பட்டது.

#1411. வானவரும் வந்து வணங்குவர்

விளங்கிடும் வானிடை நின்றவை எல்லாம்
வணங்கிடும் மண்டலம் மன்னு யிராக,
நலம் கிளர் நன்மைகள் நாரணன் ஒத்துச்
சுணங்கிடை நின்று, அவை சொல்லலும் ஆமே.

சாதனையாளரை மண்ணில் வாழ்பவர்கள் மட்டுமின்றி விண்ணில் வாழும் உயிர்களும் வந்து வணங்கி நிற்கும். திருமாலைப் போன்று ஒருவர் பெரும் இன்பங்களைப் பற்றித் துன்பங்கள் நிறைந்த ஓர் இடத்தில் இருந்து சொல்ல முடியாது அல்லவா?

#1412. பூமேல் வரும் பொற்கொடி

ஆமே அதோமுகம், மேலே அமுதமாய்த்
தானே உகாரம் தழைத்து எழுஞ் சோமனும்,
கா மேல் வருகின்ற கற்பகம் ஆனது,
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே.

மூலாதாரத்தில் கீழே நோக்குபவளாக இருந்தவள் குண்டலினி சக்தி. பின்னர் அவள் உகாரத்துடன் பொருந்தி இடை நாடியில் விளங்கினாள். பின்பு ஒளியாக எழுந்து மேலே சென்று சகசிர தளத்தை அடைந்தாள். அங்கு நிலைபெற்றாள். சீவன் எண்ணும் எண்ணங்களை நிறைவு செய்யும் கற்பகத் தரு ஆனாள். அனைத்து சித்திகளையும் நல்கிடும் இலக்குமி தேவியும் அவளே ஆவாள்.

#1413. ஆங்காரம் நீங்கிவிடும்

பொற்கொடி யாளுடன் பூசனை செய்திட
அக்களி ஆகிய ஆங்காரம் போயிடும்,
மற்கடம் ஆகிய மண்டலம் தன்னுள்ளே
பிற்கொடி ஆகிய பேதையைக் காணுமே.

பொற்கொடி போன்ற பராசக்தியை பூசியுங்கள். அப்போது உங்கள் அகங்காரம் நீங்கி விடும். நிலை பெற்று விளங்கும் பரமாகாயத்தில் பின்னியகொடி போன்ற இந்த மின்னல் கொடியாளைக் காணலாம்.

#1414. மண்ணுலகம் ஒரு திலகம்

பேதை இவளுக்குப் பெண்மை அழகு ஆகும்,
தாதை இவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்,
மாது ஐ அவளுக்கு மண்ணும் திலகமாய்க்
கோதையர் சூழக் குவிந்த இடம் காணுமே.

பெண்மையே பராசக்திக்கு அழகு ஆகும். சிவபெருமானே இவளுக்குத் தந்தை ஆவான். பரந்து, விரிந்த இந்த மண்ணுலகு பராசக்தியின் சிறு திலகம் போன்றது. பல சக்தியர் சூழ்ந்திருக்க இவள் மேலே ஒரு குவிந்த இடத்தில் இருப்பாள்.

#1415. பரந்த இதழ் பங்கயம்

குவிந்தனர் சக்தியர் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்த இதழ் ஆகிய பங்கயத் துள்ளே
இருந்தனர் காணும் இடம் பல கொண்டே.

கன்னியராகிய சக்தியர் முப்பத்திருவர் உள்ளனர். பரவிய இதழ்களைக் கொண்ட சகசிரதளத்தில் பராசக்தி பல இடங்களைத் தனதாக்கிக் கொண்டாள்.

#1416. சக்தி சாதகனை ஆட்கொள்வாள்

கொண்டு அங்கு இருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்ட அங்கு இருந்தனர் காரணத்து உள்ளது
பண்டை மறைகள் பரந்து எங்கும் தேடுமால்
இன்று என் மனத்துளே இல் அடைந்து ஆளுமே.

நவாக்கரி சக்கரத்தில் இருக்கும் சக்தியர் கூத்த பிரானுடைய ஒளியைக் கண்ட வண்ணம் மேல் நோக்கிய சகசிர தளத்தில் இருப்பார்கள். இந்த சக்தியரும் சிவ பெருமானும் உலகத்தின் தோற்றத்துக்கு காரணமானவர்கள். வேதம் தேடும் உண்மைப் பொருளும் இவர்களே. இதனை பெருமை வாய்ந்த சிவசக்தி என் உடலிலும் என் மனதிலும் வந்து பொருந்தி என்னை ஆட்கொண்டது.

#1417. இல்லாதது ஒன்றில்லை

இல் அடைந்தானுக்கும் இல்லாதது ஒன்றில்லை
இல் அடைந்தானுக்கு இரப்பது தான் இல்லை
இல் அடைந்தானுக்கு இமையவர் தாம் ஒவ்வார்
இல் அடைந்தானுக்கு இல்லாதது இல் ஆனையே.

சிவசக்தியால் ஆளப்படுபவருக்கு இல்லாதது என்றும் எதுவும் இல்லை. இவர் எவரிடமும் சென்று எதுவுமே இரப்பது இல்லை. இவருக்கு வானவரும் ஈடாக மாட்டர்கள். சிவசக்தி இவர் ஆன்மாவில் குடி கொண்டுள்ளதால் இவர் இல்லாத இடம் என்பதே இல்லை.

#1418. அறுபத்து நான்கும் ஆன்மாவும்

ஆனை மயக்கும் அறுபத்து நால் தறி,
ஆனை இருக்கும் அறுபத்து நால் ஒளி,
ஆனை இருக்கும் அறுபத்து நால் அறை,
ஆனையும் கோடும் அறுபத்து நாலிலே.

தத்துவங்களின் தலைவனாகிய ஆன்மா அறுபத்து நான்கு தரிகளால் கட்டப்பட்டுள்ளது. ஆன்மாவாகிய பிரணவம் அறுபது நான்கு ஒளிக் கதிர்களால் ஆனது. ஆன்மா அறுபத்து நான்கு கலைகளில் விளங்குகின்றது. ஆன்மாவும் பிரணவமும் இங்ஙனம் அறுபத்து நான்கு விதங்களாக விளங்கும்.

திருமந்திரம் நான்காம் தந்திரம் முற்றுப் பெற்றது.

ஐந்தாம் தந்திரம்

ஐந்தாம் தந்திரம் -
1. சுத்த சைவம்

சடங்குகளோடு நின்று விடாமல் பதி (தலைவன்), பசு (சீவன்), பாசம் (தளை) இவற்றை நன்கு உணர்ந்து கொண்டு தளைகளிலிருந்து நீங்கித் தலைவனை அடைவது சுத்த சைவம்.

சைவத்தில் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ் சுத்த சைவம் என்று நான்கு வகைகள் உண்டு.

#1419. இறைவன் பெருமை

ஊரு முலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவு மூவுல காளியி லங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே.

ஊர், உலகங்களை ஒரு சேரப் படைக்கும் பேரறிவாளன் பெருமையைக் கூறப்புகுந்தால் மேரு மலையும், மூவுலகாளும் இறைவன் தோற்றுவித்த உலகமும், நால் வகைச் சைவமும் இவன் பெருமைக்கு சமமானவை.

விளக்கம்:

மேருமலையின் உயரத்தைம், உலகின் அகலத்தையும், சமயத்தின் ஆழத்தையும் ஒருங்கே கொண்டவன் ஈசன்.

#1420. சிவமாதல் சுத்த சைவம்

சத்துஅ சத்தும் சதசத்தும் தான்கண்டு
சித்துஅ சித்தும் சேர்வுறா மேநீத்தும்
சுத்த மசுத்தமுந் தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ் சுத்த செய்வார்க்கு நேயமே.

அழியும் பொருள் எது, அழியாத பொருள் எது என்ற வேறுபாட்டினை அறிந்து கொள்ள வேண்டும். அறிவும் அறியாமையும் ஒன்று சேராமல் இருத்த வேண்டும். சுத்த மாயை அசுத்த மாயை என்னும் இரண்டிலும் பொருந்தாமல் நிற்க வேண்டும். நித்தமும் நித்தியமான பரம்பொருளான இறைவனைப் பார்த்தபடி இருப்பது சுத்த சைவருக்கு ஏற்றது.

சத்து = உண்மைப் பொருள் = சிவபெருமான்.

அசத்து = பொய்யானது = பாசம்
சதசத்து = ஆன்மா = உயிர் = சீவன்
சித்து = அறிவு
அசித்து = அறியாமை

#1421. சைவ சிந்தாந்தர் யார்?

கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம் ,
முற்பத ஞானம் முறை முறை நண்ணியே
சொற்பதம் மேவி, துரிசு அற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தரே.

கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். பதினாறு கலைகளை உடைய சந்திர கலையை அறிந்து கொள்ள வேண்டும். சிவ யோகத்தைப் பயில வேண்டும். அகர, உகர, மகர விந்து நாதங்களைப் பற்றிய சரியான அறிவைப் பெற வேண்டும். பிரணவத்தைப் புரியவைக்கும் சந்தீயாதீத கலைகளில் பொருந்த வேண்டும். மாயையை விலக்கி விட்டு உண்மைப் பொருளான சிவனைக் காண்பவர் உண்மையான சைவ சிந்தாந்தர் ஆவர்.

#1422. அறிந்து கொள்ள வேண்டியது யாது?

வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்தம் போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதந்த பூரணர் ஞானதே யத்தரே.

சுத்த சைவ சித்தாந்தமே வேதாந்தம் ஆகும். இந்த நல்ல நெறியில் நிற்பவரே நாதாந்தமாகிய சிவனைத் தரிசிப்பவர்கள். அவர்கள் எந்த விதச் சலனமும் இன்றி உலகில் வாழ்வர். பூதாந்தமாகிய தத்துவ முடிவைப் போதாந்தமாகப் (ஞான மயமாகப்) பயன்படுத்தினால் நாதாந்ததில் பூரணனாகிய சிவன் நம்மால் அறியப்படவேண்டிய பொருள் ஆவான்.

ஐந்தாம் தந்திரம் -
2. அசுத்த சைவம்

சைவ வேடம் பூண்டுச் சரியை, கிரியை என்னும் இரண்டு நெறியில் நிற்பவர்களைப் பற்றிக் கூறுவது அசுத்த சைவம் ஆகும்.

#1423. சரியை கிரியையினர்

இணைஆர் திருவடி ஏத்தும் சீர் அங்கத்து
இணைஆர் இணைக்குழை, ஈரணை முத்திரை
குணம் ஆர் இணைக் கண்டமாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியை யினார்க்கே.

இறைவனின் இணையடிகளைச் சரியை கிரியை என்பவற்றால் தொழும் அடியவர்களின் அடையாளங்கள் இவை ஆகும். ஒவ்வொரு காதிலும் இரண்டு இரண்டாகப் பொருந்தியுள குண்டலங்கள்; திருநீற்றுப் பூச்சு; தலையில் அணியும் உருத்திராக்க மாலை; கண்டத்தில் அணியும் செப மாலை, கண்ட மாலை என்னும் இரண்டு மாலைகள்.

சரியை - இது உடலால் இறைவனுக்குத் தொண்டு செய்வது
கிரியை - இது உடலாலும் உள்ளத்தாலும் இறைவனை வழிபடுவது.

#1424. அசுத்த சைவரில் ஒருவகை

காதுப்பொ னார்ந்த கடுக்க னிரண்டுஞ்சேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து வுபதேச மார்க்கராய்
ஓதி இருப்பார் ஒரு சைவ ராகுமே.

காதில் பொன்னால் ஆகிய இரண்டு கடுக்கன்கள் அணிந்து கொண்டு ; இடையில் ஓராடை, மேலே ஓராடை அணிந்து கொண்டு; அத்துவா சோதனை செய்து கொண்டு; குருவுடம் உபதேசம் பெற்றுக் கொண்டு; சைவ ஆகமங்களைச் சொல்லிக் கொண்டு இருப்பவர் அசுத்த சைவர்களில் ஒரு வகையினர் ஆவர்.

#1425. கடுஞ் சுத்த சைவர்

கண்டங்க ளொன்பதும் கண்டவர் கண்டனர்
கண்டங்க ளொன்பதும் கண்டா யாரும்பொருள்
கண்டங்க ளொன்பதும் கண்டவர் கண்டமாம்
கண்டங்கள் கண்டோர் கடுஞ் சுத்த சைவரே.

மண், நீர், ஒளி, வளி, வெளி, கதிரவன், திங்கள், அக்கினி, விண்மீன் என்னும் ஒன்பதும் நம் உடலிலும் உள்ளன என்று அறிந்து கொண்டவர் அறிய வேண்டியவற்றை அறிந்து கொண்டவர் ஆவர். நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், சக்தி, சிவன் என்னும் ஒன்பதாக விளங்கும் மேலான சிவத்தை அறிந்து கொண்டவர் அறிய வேண்டியவற்றை அறிந்து

கொண்டவர் ஆவர். இங்கனம் ஒன்பதாக விளங்கும் சிவத்தைத் தமக்குளே கண்டு கொண்டவர் உலகங்கள் அனைத்தையும் கண்டு கொண்டவர் ஆவர்.

#1426. ஞானியர் அறிவாற்றல் உடையவர்

ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையு முழு வெண்ணெண் சித்தியும்
ஏனை நிலமு மெழுதா மறையீறும்
கோனொடு தன்னையும் காணும் குணத்தனே.

ஞானியர் உலகில் தோன்றும் ஞான நூல்கள், மோன நிலை, எண் பெரும் சித்திகள், பிற உலகங்களைப் பற்றிய அறிவு, உபநிடத அறிவு இவை மட்டுமன்றிச் சிவனையும், தன்னையும் நன்கு அறிந்து கொள்ளும் அறிவாற்றல் பெற்றவர்.

ஐந்தாம் தந்திரம் -
3. மார்க்க சைவம்

சைவ மார்க்கத்தில் நின்று; வேதாந்தம் , சித்தாந்தம் இவற்றில் நுண்ணிய அறிவு பெற்று, தன் ஆத்ம போதம் முற்றும் இழந்து சிவபோதத்திலேயே நிலைத்திருப்பது மார்க்க சைவம்.

#1427. சுத்த சைவ நெறியினரின் ஒழுக்கம்

பொன் னாற்சிவ சாதனம், பூதி சாதனம்,
நன்மார்க்க சாதனம், மாஞான சாதனம்,
துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனனம்
சன்மார்க்க சாதனமாம் சுத்த சைவர்க்கே.

பொன்னால் செய்யப்பட்ட உருத்திராக்கம் அணிதல், திருநீற்றுப் பூச்சு, ஞான சாதனமாகிய ஐந்தெழுத்து மந்திரம், தீயவருடன் சேராமல் நல்லவர்களுடன் சேர்ந்து இருத்தல் இவை சுத்த சைவ நெறி பற்றியவருக்கு உரிய சன்மார்க்கம் ஆகும்.

#1428. ஞானி எனப்படுபவர் யார்?

கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே.

குற்றங்கள் நீங்கிய ஒரு ஞானி ஒளிரும் ஞானத்துக்கு மன்னன் ஆவான். துன்பங்களைப் போக்கும் வேதாந்த சித்தாந்தங்களில் சிறந்தவன் உண்மையான முத்தி நிலையை அறிந்தவன் ஆவான். சிறந்த சுத்த சைவத்தில் பற்றுக் கொண்டவன் அழிவில்லாத நித்தியன் ஆவான்.

#1429. சுத்த சைவமும் ஆகமங்களும்

ஆகமம் ஒன்பான், அதில் ஆன நால் ஏழு,
மோகம் இல் நாலேழும் முப்பேதம் உற்று உடன்
வேகம் இல் வேதாந்த சித்தாந்த மெய்ம்மை ஒன்று
ஆக முடிந்த அருஞ் சுத்த சைவமே.

ஆகமங்கள் ஒன்பது:

(1). காரணம், (2). காமிகம் (3). வீரம் (4). சிந்தம் (5). வாதுளம் (6). யாமளம் (7). காலோத்தரம் (8) சுப்பிர பேதம் (9) மகுடம்.

இவையே பின்பு விரிவடைந்து இருபதெட்டு ஆகமங்களாயின. அவை சைவம், ரௌத்திரம், ஆரிடம் என்று மூன்று வகைகள் ஆயின. சுத்த சைவருக்கு வேதாந்தம், சித்தாந்தம், உண்மை என்ற மூன்றும் ஒன்றாயின.

#1430. அத்தனின் அருட்சக்தியே அம்மை

சுத்தம் அசுத்தம் துரியங்கள் ஓர்ஏழும்
சத்தும் அசத்தும் தணந்த பராபரை
உய்த்த பராபரை உள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாய்எங்கும் ஆமே.

பிறவிக்கு முன்பும், சீவன் பிறவி எடுத்த பின்பும் ஆன்மா மொத்தம் ஏழு வேறு பட்ட நிலைகளில் இருக்கும். அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து வேறுபட்ட நிலைகளில் அடங்கும். இவற்றையும், சத்து, அசத்து என்பவற்றையும் கடந்து விளங்கும் பராபரையே சீவனைச் செலுத்துபவள். அவளே சீவனின் உயிரில் உயிராகப் பொருந்தி இருப்பவள். அவள் சிவனின் அருட் சக்தியாக எங்கும் பரவியும், விரவியும், நிறைந்தும் உள்ளாள்.

#1431. ஞானி எல்லாம் வல்ல சித்தர் ஆவார்

சத்தும் அசத்தும் தணந்தவர் தான் ஆகிச்
சித்தும் அசித்தும் தெரியாச் சிவோகமாய்,
முத்தியுள், ஆனந்த சத்தியுள் மூழ்கினோர்
சித்தியும் அங்கே சிறந்துள தானே.

சத்து, அசத்து என்ற இரண்டையும் கடந்துவிட்ட ஒரு ஞானி; அறிவு, அறியாமை என்னும் இரண்டையும் கடந்து;

'நானே சிவம்' என்னும் உயரிய நிலையினை அடைவார். சீவனும், சிவனும் ஒன்றிவிட்ட முத்தி நிலையில், ஆனந்த சக்தியுள் மூழ்கி இருக்கும் அவரிடம் அனைத்துச் சித்திகளும் தாமே சிறந்து விளங்கும்.

#1432. சுத்த சைவர் உபாயம்

தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே.

ஆன்மாவாகிய தன்னையும், பரனாகிய சிவனையும், சதாசிவன் என்னும் மன்னனையும், பதி, பசு, பாசம் என்ற மூன்றினையும், அனாதியாகிய பாசத் தளையினையும், முத்தி நிலை என்னும் வீடு பேற்றினையும் தடைகளை நீக்கும் வழிகளாகக் கருதுவர் சுத்த சைவர்.

#1433. ஆன்ம போதம் கெட்டால் சிவ போகம் கிட்டும்

பூரணம் தன்னிலே வைத்துஅற்ற அப்போதம்
ஆரணம் அந்தம் மதித்து, ஆனந்தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும் போகம்
காரணம் ஆம்சுத்த சைவர்க்குக் காட்சியே.

பூரணனாகிய சிவத்தில் சித்தத்தைப் பொருத்த வேண்டும். ஆன்ம போதத்தை அறவே அழிக்க வேண்டும். வேதாந்தத்தைப் பெரிதாக எண்ண வேண்டும். இதைச் செய்யும் சுத்த சைவர், துவாதசாந்த நிலையில் உயரிய சிவபோகம் அடைந்து அதில் திளைப்பர்.

#1434. மார்க்க சைவ ஞானி

மாறாத ஞான மதிப்பற மாயோகத்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறி நிற்றல்
கூறாகும் ஞானி சரிதை குறிக்கிலே.

ஞானிக்கு உரிய சரியை எது தெரியுமா?

சிறந்த ஞானத்தில் மதிப்பு இல்லாமல்; சிறந்த யோகம் பெரிது என்று அறியாமல் இருக்கும் சிந்தையைத் தெளியச் செய்ய வேண்டும். அதில் சிவத்தை

குடியேற்ற வேண்டும். ‘சிவோகம்’ என்ற பாவனையுடன் நிலைத்து இருப்பதே ஞானிக்கு உரிய சரியை ஆகும்.

#1435. சிவத்துடன் சேர்பவர் யார்?

வேதாந்தம் கண்டோர் பிரமமித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தம் கண்டுளோர்
சாதாரண மன்ன சைவ ருபாயமே.

வேதாந்தத்தை அறிந்தவர்கள் பிரம்ம வித்தையை அறிந்தவர்கள். நாதந்தத்தை அறிந்து கொண்டவர்கள், நன்மைகள் வரும்போது துள்ளாமலும், தீமைகள் வரும் போது துவளாமலும் இருக்கும் சலனமற்ற யோகியர் ஆவர். வேதாந்தக் கொள்கையிலிருந்து மாறுபட்டச் சித்தாந்த அனுபவம் உடையவர்களும் தகுந்த வேறு ஒரு உபாயத்தால் சிவனைச் சேருவர்.

வேதாந்தம் (ஞான மார்க்கம்) கூறுவது: “வைராக்கியத்தால் சிவனைச் சென்று அடையலாம்”

சித்தாந்தம் (பக்தி மார்க்கம்) கூறுவது: “அன்பால் சிவனைச் சென்று அடையலாம் ”
எல்லா மார்க்கங்களும் ஒரே ஈசனிடம் அவன் அன்பர்களைச் செலுத்தும்.

#1436. பசுவும், பாசமும் பதியை அணுகா!

விண்ணினைச் சென்று அணுகா வியன் மேகங்கள்,
கண்ணினைச் சென்று அணுகாப் பல காட்சிகள்,
எண்ணினைச் சென்று அணுகாமல் எனப்படும்
அண்ணலைச் சென்று அணுகா பசு பாசமே.

வானைத் தம் இருப்பிடமாகக் கொண்ட மேகங்கள், வானத்தில் ஒட்டிக் கொள்ளா! கண்ணில் காணும் காட்சிகள் எல்லாம் கண்களில் வந்து ஒட்டிக் கொள்ளா. அது போன்றே எண்ணங்களைக் கடந்து விளங்கும், சிவபெருமானிடம் பசுவான சீவனைத் தளைப்படுத்தும் பாசம் சென்று ஒட்டிக் கொள்ளாது.

விளக்கம்:
முகில்கள் வானில் உலவினாலும் அவற்றால் வானம் முழுவதும் பரவ இயலாது. காணும் காட்சி ஒன்றானாலும் அது மனிதரிடம் ஏற்படுத்தும் உணர்ச்சிகள் வேறுபாடும். சிவத்தை வழிபடும் சீவர்களின் தகுதி அவரவர் பாசநிலைக்கு ஏற்ப மாறுபடும். பசுத் தன்மை மிகுந்துள்ளவர்களால் சிவத்தை அறிந்து கொள்ள முடியாது.

#1437. சித்தாந்தம் தரும் சித்தி என்ன?

ஒன்றும், இரண்டும், இலதுமாய், ஒன்றாக
நின்று, சமய நிராகாரம் நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால்
சென்று, சிவமாதல், சித்தாந்த சத்தியே.

"பிரமம் ஒன்றே!" என்று கூறும் அத்வைத வேதாந்தம். "சிவன் வேறு சீவன் வேறு!" என்று கூறும் துவைத வேதாந்தம். "இயல்பினால் வேறுபடும் பொருட்கள் கலப்பினால் ஒன்றாகும்!" என்று கூறும் சுத்தாத்வைத வேதாந்தம். இந்த சுத்தாத்வைத பாவனையில் நிலை பெற்றுச் சமய நிந்தனையை ஒழிக்க வேண்டும். பராபரையை என்னும் இனிய பொருளைத் திருவடி ஞானத்தால் பெற்ற ஒருவரைச் சிவமாகவே மாற்றிவிடுவது சித்தாந்தம் தரும் சித்தி ஆகும்.

ஐந்தாம் தந்திரம் -
4. கடுஞ் சுத்த சைவம்

ஆடம்பரமும், ஆரவாரமும் இன்றி ஞான நிலையில் 'தானே அவனாக' நிற்கும் நிலை கடுஞ் சுத்த சைவம். கிரியைகளைத் துறந்து விட்டுத் தூய ஞானம் பெறுவதன் மூலம் கடுஞ் சுத்த சைவர் சாயுச்சியம் அடைவர்.

#1438. யார் சுத்த சைவர்?

வேடங் கடந்து விகிர்தன்தன் பால்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சம் செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவாபோத கர்சுத்த சைவரே.

சுத்த சைவர்கள் வெளிக் கோலங்களில் விருப்பம் கொள்ளார். அவர்கள் உலகியல் ஆடம்பரம் இல்லாதவர். ஆசைகளையும், பற்றுகளையும் நீத்து விட்டுப் பிறவிப் பிணியில் பிணைக்கின்ற சீவ போதத்தையும், பாசத்தையும் அழித்து விட்டு அவர்கள் இறைவனைச் சென்று அடைவர்.

#1439. எது சித்தாந்த நெறி?

உடலான ஐந்தையு மோராறு மைந்து
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
பாடலான கேவல பாசம் துடைத்துத்
திடமாய்த் தனையுற்றல் சித்தாந்த மார்க்கமே.

உடல் என்று எண்ணி நாம் மயங்கும் ஐந்து கோசங்கள் இவை:

(1). அன்னமய கோசம், (2). பிராணமய கோசம், (3). மனோமய கோசம், (4). விஞ்ஞானமய கோசம், (5). ஆனந்தமய கோசம்.

உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள் இவை:

(1). மூலாதாரம், (2). சுவாதிட்டானம், (3). மணிபூரகம், (4). அனாஹதம், (5). விசுத்தி, (6). ஆக்ஞா

சிவ தத்துவங்கள் ஐந்து எனப்படுபவை இவை:

(1). சுத்த வித்தை (2). மகேசுரம் (3). சாத்க்கியம் (4). விந்து (5). நாதம்.

இவற்றையும், இவற்றைச் சார்ந்ததவற்றையும் முற்றிலுமாக நீக்கிவிட்டுச் சீவன் தன் உண்மை நிலையினை அறிந்து கொண்டு, அதில் நிலைத்து நிற்பதுவே சித்தாந்த நெறி.

#1440. ஞானமே பெரிது!

சுத்த சிவனுரை தானத்தில் தோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்
மத்தகை யான்மா அரனை யடைந்தற்றால்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே.

சிவன் அருளிய ஆகமங்கள் முக்தியின் நான்கு நிலைகளைக் கூறும். (1). சாலோகம், (2). சாரூபம், (3). சாமீபம், (4). சாயுச்சியம் எனப்படும் இந்நான்கு நிலைகளையும் சாராமல், பிரணவ நெறியின் மூலம் நேராக சாயுச்சியம் அடைவது சாலச் சிறந்தது. முக்தர்கள் பிரணவ நெறியின் மூலம் முக்தி அடைவது பரமுக்தியின் மூலம் ஆகும். ஆன்மா உலகப் பொருட்களை வெறுத்து நீக்கிவிட்டுப் பிரணவப் பொருளான இறைவனை அறிந்து கொண்டால் அதுவும் சுத்த சிவமாகவே மாறிவிடும். இத்தகைய முக்தர்கள் சுத்த சைவர்.

#1441. “அது நீ ஆகின்றாய்!”

நானென்றும் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டில்லாத் தற்பதம்
தானென்று நானெற்ற தத்துவ நல்கலால்
தானென்றும் நானெற்றுஞ் சாற்றகில் லேனே.

அறிபவன் நான், அறியப்படும் பொருள் சிவன் என்று எண்ணி ஆராய்ந்து நான் சிவனைச் சென்று சேர்ந்தேன். அப்போது சிவன், சீவன் என்ற இரு வேறு நிலைகள் இல்லை! சீவனே சிவன் என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். அதனால் நான், அறிபவன் அறியப்படும் பொருள் என்ற நிலைகளைக் கடந்து, பிரித்து அறிய இயலாத பெரு நிலையை அடைந்து விட்டேன். 'அது'வாக நானே மாறிவிட்டேன். சிவன், சீவன் என்ற வேறுபாடுகள் இன்றி அவனுடன் ஒன்றி விட்டேன்.

#1442. பர சாயுச்சிய நிலை

சாற்றரிதாகிய தத்துவம் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிவிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய் நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே.

சொல்ல இயலாத அந்தப் பெரு நிலையை அடைந்துவிட்டால், அடக்குவதற்கு அரிதாகிய ஐம்பொறிகளும் தாமே செயல் இழந்து அடங்கி விடும். அதன் பின்னர் ஞானம் விளக்கின் ஒளி போன்று நன்கு ஒளிரும். சிரசின் மேல் சீவன் சிவனுடன் ஒன்றி நிற்றல் கூடும்.

ஐந்தாம் தந்திரம் -
5. சரியை

பலத் திருத் தலங்களுக்குச் சென்று சிவனைப் புகழ்ந்து படுவதும், அவனைக் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதும் சரியை என்று கூறப்படும்.

#1443. சரியை உயிர்நெறி ஆகும்

நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத் துயிரதே.

காலாங்கி, கஞ்ச மலையமான், கந்துரு என்னும் மாணவர்களே கேளுங்கள்! வீடு பேற்றை அடைவதற்கு முதல் அங்கமான சரியை, சுத்த சைவர்களுக்கு உயிரைப் போன்று மிகவும் உயர்ந்தது ஆகும்.

#1444. சிவ பூசை

உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண் ஞான பூசை,
உயிர்க்குஒளி நோக்கல் மகாயோக பூஜை,
உயிர்பெறும் ஆவாகனம் புறப்பூசை
செயிற்கு அடை நேசம் சிவபூசை யாமே.

உயிரின் உயிராக இறைவன் இருப்பதை அறிந்து கொள்ளுதல் சிறந்த ஞான பூசை.

உயிருக்கு ஒளி தருபவன் இறைவன் என்று அறிந்து கொள்ளுதல் உயர்ந்த யோக பூசை.

இறைவனைப் பிராணப் பிரதிட்டையாகச் செய்து அன்போடு வழிபடுவது புற பூசை.

வெளியே செய்யும் சிவனின் புறபூசை பின்னர் ஞானபூசையின் வாயிலாக அமையும்.

#1445. நெஞ்சமே அவன் ஆலயம்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

நாடுகள், நகரங்கள், நல்ல திருக்கோவில்கள் இவற்றைத் தேடிச் செல்லுங்கள். சிவன் வீற்றிருக்கும் தலங்களைப் பாடுங்கள். பாடி அன்புடன் வணங்குங்கள். வணங்கிய அன்பரில் நெஞ்சத்தையே தன் ஆலயமாகக் கொண்டு சிவன் அங்கே விருப்புடன் உறைவான்.

#1446. பக்தி செய்யும் வகைகள்

பத்தர் சரியை படுவோர், கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள் வேடத்து ஆகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் செய்து எய்து வோர்களே.

கோவிலில் வழிபாடுகள் செய்து சரியை நெறியில் நின்று சிவனிடம் பக்தி செய்பவர் பக்தர்.

கிரியை வழியில் நின்று சிவ சாதனங்களை அணிந்து கொண்டு சிவ வேடம் தாங்குபவர் தொண்டர்.

அட்டாங்க யோக நெறிகளை உணர்ந்தோ கொண்டு அந்தத் தூய நெறியில் நிற்பவர் தூய யோகியர்.

சிவத்தைத் தனக்குள்ளேயே கண்டு கொண்டு அதனுடன் ஒன்றி நிற்பவர் அனைவரிலும் சிறந்த சித்தர்.

#1447. நெறிகளுக்குரிய செயல்கள்

சார்ந்த மெய்ஞ்ஞானத்தோர் தான் அவனாயினோர்
சேர்ந்தஎண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அர்ச்சனை தப்பாதோர்;
தேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே.

இறைவனோடு இரண்டற ஒன்றி விட்டவர்கள் ஞானம் மெய் அடைந்தவர்கள்.
அட்டாங்க யோக நெறியில் நின்று அதன் மூலம் சமாதி அடைந்தவர் யோகியர்.
தவறாமல் பூசை, அர்ச்சனை இவற்றைச் செய்பவர்கள் கிரியை செய்பவர்.
திருத்தலங்களுக்குப் பிரயாணம் செய்பவர் சரியை நெறியில் நிற்பவர்கள்.

#1448. உருவ, அருவ வழிபாடுகள்

கிரியை, யோகங்கள், கிளர் ஞான பூசை
அரிய சிவன்உரு அமரும் அரூபம்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத்து உயர் பூசை யாமே.

கிரியை நெறியில் நிற்பவர்கள் சிவனுடைய உருவ வழிபாட்டை மேற்கொள்ளுவர். மெய் ஞானம் அடைந்தவர் அருவ வழிபாட்டினை மேற்கொள்ளுவர். அன்பர்கள் தம் மனப் பக்குவத்துக்கு ஏற்ற வண்ணம் இறைவனை உருவமாகவோ அல்லது அருவமாகவோ வழிபடுவார்கள்.

#1449. மருளும் அருளும்

சரியா ஆதி நான்கும், தரும் ஞானம் நான்கும்,
விரிவான வேதாந்த சித்தாந்தம் ஆறும்
பொருளானது; நந்தி பொன்னகர் போந்து
மருள் ஆகும் மாந்தர் வணங்க வைத்தானே.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினாலும் பெறுகின்ற ஞானம் நான்கு வகையானவை. இவை வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் இவற்றால் பெறும் ஆறு வகை முடிவுகளைக் கொண்டவை. மருள் கொண்டு மயங்கி நிற்கும் சீவர்களுக்கு, அருள் தந்து அறிவைத் தருவதற்குச்

சிவன் சரியை முதலிய நான்கு நெறிகளையும், ஆறு அந்தங்களையும் ஏற்படுத்தி வைத்துள்ளான்.

#1450. தீட்சைகளின் வகைகள்

சமையம் பலசுத்தி தன் செயல் அற்றிடும்
அமையும் விசேடமு மரன்மந் திரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தியாகும்
அமைமன்னு ஞானமார்க்கம் அபி டேகமே.

ஆன்மாவில் குடி கொண்டுள்ள மலங்களை அகற்ற சமய தீட்சை உதவிடும். மந்திரதீட்சை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை அகற்ற உதவும். நிர்வாண தீட்சை கலைகளில் உள்ள மலங்களை நீக்கி ஆன்மாவை மேன்மைப் படுத்தும். திரு முழுக்கட்டு என்னும் அபிடேகம் ஆன்மா ஞான மார்க்கத்தில் நிலை பெற உதவும்.

ஐந்தாம் தந்திரம் -
6. கிரியை

மலர்த் தூவி இறைவனை உள்ளத்திலும் புறத்திலும் பூசித்தல் கிரியை எனப் படும்.

#1451. வினைகள் வாரா! வினைகள் சாரா!

பத்துத் திசையும் பரம் ஒரு தெய்வம் உண்டு
எத்திக்கு இவர் இல்லை என்ப அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரண் எனத்
ததும் வினைக்கடல் சாராது காணுமே.

பத்துத் திக்குகளிலும் சிவம் பரவி நிற்கின்றது. எத்திக்கில் இல்லை சிவம்? எக்காலத்தில் இல்லை சிவம்? எங்கும் எப்போதும் உள்ளது சிவம். மலம் நீங்கித் தூய்மை அடைந்தவர்கள் அரன் திருவடிகளே சரண் என்று பற்றிக் கொண்டால், தத்தியும் தாவியும் வருகின்ற கடலை ஒத்த வினைகள் நம் அருகில் வாரா! நம்மைச் சாரா!

#1452. உடல் பற்றை ஒழிக்க வேண்டும்

கானுறு கோடி கடிகமழ் சந்தானம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க்கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.

காட்டில் மணம் வீசும் சந்தனம், வானளவாக வளர்ந்த மரங்களின் நறுமண மலர்கள், இவற்றால் இறைவனைப் பூசை செய்தாலும்: உடல் பற்றை முற்றிலுமாக ஒழித்தால் அன்றி, ஒருவனால் சகசிரதளத்தில் தேன் போன்று இனிக்கும் இறைவனின் திருவடிகளை அடைய முடியாது.

#1453. அருளுக்குப் பாத்திரம் ஆகலாம்

கோனக் கன்று ஆயே குரைகழல் ஏத்துமின்
ஞானக் கன்று ஆகிய நடுவேஉழிதரும்
வானக் கன்று ஆகிய வானவர் கைதொழும்
மானக் கன்று ஈசன் அருள் வள்ளம் ஆமே.

ஆவினைத் தொடரும் பசுங் கன்று போல, இறைவனின் ஒலிக்கும் கழல் அணிந்த திருவடிகளைத் தொடர்ந்து போற்றுங்கள். அப்போது ஞானத்தைத் தரும் சுழுமுனையின் நடுவே தோன்றும் ஈசனை வானக் கன்றுகளாகிய தேவர்கள் வந்து பணிவர். பெருமை மிகுந்த காளையை ஊர்தியாகக் கொண்ட இறைவனின் திருவருளுக்குப் பாத்திரம் ஆவீர்கள்.

#1454. பக்தியும் அன்பு தான்

இது பணிந்து எண்திசை மண்டலம் எல்லாம்
அது பணி செய்கின்றவள் ஒரு கூறன்
இதுபணி மானிடர் செய்பணி, ஈசன்
பதி பணி செய்வது பத்திமை காணே .

இவனை வணங்கி எட்டு திசைகளிலும் உள்ள மண்டலங்கள் எல்லவற்றிலும் இவன் பணியைச் செய்பவள் சக்தி. அவளைத் தன் உடலின் ஒரு அங்கமாகக் கொண்டவன் ஈசன். அவன் பெருமைகளைப் போற்றிப் புகழ்வதே நாம் செய்ய வேண்டிய பணி . இங்ஙனம் அவனிடம் பக்தி செய்வதும் அன்பின் வெளிப்பாடே.

#1455. சித்தம் சிவமயம் ஆகும்

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசு அற்ற யோகத்தில்
உய்த்த நெறி உற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருஅருளால் சிவம் ஆகுமே.

பக்தன் சரியை, கிரியை இவற்றைப் பயின்று சுத்த மாயையின் அருள் தரும் ஆற்றலைப் பெறுவான். குற்றமற்ற யோகம் கூறும் நெறியில் தன்னைப் பொருத்திக் கொண்டு, அவன் மெய் ஞானம் அடையும் போது, குரு மண்டல பிரவேசத்தால் அவன் சித்தம் சிவமயம் ஆகிவிடும்.

#1456. விழைவது இறையருளே!

அன்பின் உருகுவன் நாளும் பணி செய்வன்
செம்பொன் செய் மேனிக் கமலத் திருவடி
முன்பு நின்று ஆங்கே மொழிவது எனக்குஅருள்
என்பினுட் சோதி இலங்குகின் றானே.

அன்பினால் உள்ளம் உருகுவேன். தினமும் வழிபாடு செய்வேன். “செம்பொன் போன்ற சகசிர தளத்தில் விளங்குகின்ற உன் திருவடிகளை வணங்கித் துதிக்கும் பேற்றினை எனக்கு அருள்வாய்!” என்று வேண்டுவேன். அப்போது இறைவன் என் தலையின் மேல் சோதி வடிவில் விளங்கி எனக்கு அருள் புரிவான்.

ஐந்தாம் தந்திரம் -
7. யோகம்

யோகம் = பொருந்துதல்

மூலாதாரத்தில் குண்டலினியுடன் உள்ள பிராணனை மேலே ஏற்றிச் சென்று, துவாதசாந்தத்தில் உள்ள சிவத்துடன் பொருத்துதல் யோகம் எனப்படும். இவ்வாறு பொருத்தி தியானம் செய்தால் ஒளி தோன்றும்.

#1457. உடல் நினைவு கெடும்.

நெறி வழியே சென்று, நேர்மையுள் ஒன்றித்
தறி இருந்தாற் போலத் தம்மை இருத்திச்
சொறியினும் தாக்கினும் துண் என்று உணராக்
குறிஅறி வாளர்க்குக் கூடலும் ஆமே.

மூலாதாரத்தில் இருந்து நேராகச் சென்று பிரமரந்திரத்தை அடைய வேண்டும். அங்கு மெய்ப்பொருளாகிய சிவத்துடன் பொருந்தி இருக்க வேண்டும். மரக்கட்டை போல உடல் உணர்வு என்பதே இல்லாமல் இருக்க வேண்டும். உடலைச் சொரிந்தாலும் அன்றித் தாக்கினாலும் அதை அறியாமல் இருக்க வேண்டும். சிவத்தை அறிந்து அவனுடன் பொருந்தியவருக்கு இதைச் செய்ய இயலும்.

#1458. உச்சியில் உள்ளான்

ஊழி தோறு ஊழி உணர்ந்தவர்க்கு அல்லால்
ஊழிதோறு ஊழி உணரவும் தான் ஒட்டான்
ஆழி அமரும் அரி அயன் என்று உளர்
ஊழி முயன்றும் ஓர் உச்சி உள்ளானே.

நெடுங்காலம் யோகம் பயின்று ஞானம் பெற்றவர்கள் நீங்கலாக வேறு எவராலும் நெடுங் காலமாக உணரப்படாதவன் சிவன். ஆழியில் துயிலும் அரி, அவன் உந்தித் தாமரையில் உள்ள அயன் போன்ற தெய்வங்கள் எத்தனை காலம் முயன்றாலும் அடைய முடியாத உயர்ந்த இடத்தில் உள்ளான் சிவன்.

#1459. சிவயோகத்தின் பயன்

பூவினில் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்து அறிவாளர்க்கு
நாவி அணைந்த நடுத்தறி ஆமே.

இயற்கையாகவே பூவில் மணம் பொருந்தியுள்ளது. ஆனால் அது மலர் மலரும் போது வெளிப்படுகின்றது. அது போன்றே சீவனுள் சிவம் பொருந்தியுள்ளது. சீவன் பக்குவம் அடைந்தவுடன் சிவம் வெளிப்படும் . ஓவியம் போன்று அசைவின்றி இருந்து சிவத்தை அறிந்து கொண்டவர்கள் புனுகுப் பூனையால் நறுமணம் பெரும் தூணைப் போலச் சிவ ஒளி பெறுவர்.

#1460. பிறவிப் பிணியின் வித்து

உய்ந்தனம் என்பீர், உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரில் கரக்கின்ற நந்தியைச்
சிந்தை உறவே தெளிந்து இருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூலவித்து ஆமே.

உய்ந்தோம் என்று கூறுவீர் ஆனால் உள்ளே உறையும் உண்மைப் பொருளைக் காண்கிலீர். இன்பம் தரும் சுவதிட்டன மலரில் ஒளிந்திருக்கும் சிவனை

சிந்தையில் பொருத்தித் தெளிவு அடைய மாட்டீர். இங்ஙனம் பொருத்தி சிந்தை தெளிந்து அறியாமை இருளை நீக்கிவிட்டால், தொன்று தொட்டு வரும் பிறவிப் பிணியின் விதை நீங்கிவிடும்.

#1461. பிறவி நீங்கும்!

எழுத்தொடு பாடலு மெண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கார்
அழித்தலைச் சோமனோடங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.

இலக்கண அறிவோ, இலக்கிய அறிவோ, ஆய கலைகள் அறுபத்து நான்கின் அறிவோ, பழியைத் தரும் பாசத்தின் விளைவாகிய பிறவிப் பிணியை அகற்றா. கீழ் நோக்கிய நிலையில் அழிவைத் தரும் மதி, கதிரவன், அக்கினி இவற்றை வகைப் படுத்தி மேல் நோக்கிச் செலுத்தினேன்! அங்கே ஒளி அமைவதை நான் உணர்ந்தேன்.

#1462. மெய்த்தவம்

விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின்மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயின் விண்ணவ னாகுமே.

மதி, கதிரவன், அக்கினிகளைச் சிரசில் கொண்டு சேர்க்கும் யோகத்தை விருப்பத்துடன் செய்பவர் மெய்த்தவர் ஆவர். இங்ஙனம் விரும்பிச் செய்பவரின் உரை மெய்யுரை ஆகும். இங்ஙனம் விரும்பிச் செய்பவரின் தவம் மெய்த்தவம் ஆகும். இங்ஙனம் விரும்பிச் செய்பவன் தேவனாகி விடுவான்.

சிவ வடிவம் பெற்றவன் பிரணவ தேசிகன் என்ற பெயர் பெறுவான். இதுவே ஒரு மனிதன் ஒரு தேவ உடல் பெறுவது ஆகும்.

#1463. உடலின் வெம்மை சிவனே

பேணிப் பிறவா உலகு அருள் செய்திடும்;
காணின் தனது கலவியுளே நிற்கும்
நானின் நரக வழிக்கே வழி செய்யும்
ஊனில் சுடும் அங்கி உத்தமன் தானே.

உடலின் வெப்பமாக இருந்து வருவது சிவனே! அது ஆண் பெண் கொள்ளும் உறவில் அக்கினி மண்டலத்தில் மேலும் விளக்கம் அடையும். இதை மேலே எழும்படிச் செய்தால் மீண்டும் பிறவி இல்லாத ஒளி உலகினை அடைவிக்கும்.

நாணம் கொண்டு இதைச் செய்யத் தவறினால், அதுவே நம்மை நரகத்தில் செலுத்தி, மீண்டும் மீண்டும் வந்து உலகில் பிறக்கச் செய்யும்.

#1464. அத்தனிடம் அன்புறுவர்!

ஒத்தசெங் கோலா ருலப்பிலி மாதவர்
எத்தனை ஆயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்த னிவனென்றே அன்புறு வார்களே.

இந்த உண்மையை அறியாமல் எத்தனையோ செங்கோல் அரசர்களும் , மாதவம் புரிந்த முனிவர்களும் அழிந்து பட்டனர்! இந்த யோகத்தை அறிந்த சித்தரும், தேவரும், மூவரும் தலைவன் சிவன் என்று அறிந்து கொண்டு அவன் மேல் அன்பு செய்வார்கள்.

#1465. அன்பு வைத்தேன்

யோகிக்கு யோகாதி மூன்றுஉள கொண்டு உற்றோர்
ஆகத் தகுகிரியாதி சரியையாம்
தாகத்தை விட்ட சரியை ஒன்றாம், ஒன்றுள்
ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே.

யோகம், கிரியை, சரியை என்ற மூன்று நெறிகள் மூலம் யோகியர் மேன்மை அடைவர். கிரியையில் சரியையும், சரியையில் கிரியையும், ஆசைகள் அற்ற சரியையும் உயர்ந்த பயன் தருபவை. உடலில் கதிரவ மண்டலத்தில் உள்ள கதிரவன், சிரசில் ஒளிமண்டலத்தில் சிவசூரியனாக விளங்குவான். அவனிடம் நான் அன்பு கொண்டேன்.

#1466. தீட்சையும் பயனும்

யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோக நிர்வாணமே உற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண் சித்தி யுற்றலே.

யோக நெறியில் சமய தீட்சை பலவேறு யோக நெறிகளைக் குறித்து சிந்தித்தல் ஆகும்.
யோக நெறியில் சிறந்த தீட்சை அட்டாங்க யோக நெறியில் நிற்பது ஆகும்.
யோக நெறியில் நிர்வாண தீட்சை பராசக்தியின் தரிசனம் பெறுவது ஆகும்.
யோக நெறியில் அபிடேகம் ஒளி மிகுந்த சித்திகளை பெறுவது ஆகும்.

பல வகை யோகங்கள்:

அட யோகம், ராஜ யோகம், இலய யோகம், மந்திர யோகம், குண்டலினி யோகம், சிவ யோகம் முதலியவை.

ஐந்தாம் தந்திரம் - 8. ஞானம்

#1467. ஞானம் சிறந்தது

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரனின் மிக்காரே.**

ஞானத்தை விட சிறந்த அறநெறி எதுவும் இல்லை. ஞானத்தைத் தராத சமயமும் நல்ல சமயம் அன்று. ஞானத்துக்கு விரோதமானது வீடு பேற்றினை அளிக்காது. ஞானத்தில் சிறந்தவர் உலகில் உள்ள மனிதர்களில் மேலானவர்.

#1468. ஞானியர் பெற்ற நெறியே ஞானம்

**சத்தமும், சத்த மனமும், தகு மனம்
உய்த்த உணர்வும் உணர்த்தும் அகந்தையும்
சித்தம் என்ற இம்மூன்றும் சிந்திக்கும் செய்கையும்
சத்தம் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே.**

நாதம்; நாதத்தின் வடிவாகிய மனம்; அதன் பிரிவுகளாகிய சித்தம், புத்தி, அஹங்காரம்; இவற்றின் உதவியுடன் உள்ள சிந்திக்கும் செயல் இவற்றை கடந்து நிற்பதே ஞானியரின் நெறியாகும். அதுவே ஞானம் எனப்படும்.

#1469. சிவோகம் எய்துவர்

**தன்பால் உலகும் தனக்கு அருகு ஆவதும்
அன்பால் எனக்கு அருளாவதும் ஆவன
என்பார்கள் ஞானமும் எய்து சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடும் தானே.**

சிவன் சங்கற்பத்தில் உருவாவது உலகு. 'புறத்தே உள்ள உலகு எனக்கு அருள் தருவதாக அமைந்தது" என்று கூறுவர் ஞானியர். இத்தகைய ஞானம் பின்னர்

அவர்களுக்குச் சிவபாவனையைத் தரும். அவர்கள் சிவோகம் என்று கூறும்படிச் சிவத்தை நன்கு அறிந்து கொள்வர்.

#1470. மேலான ஒழுக்கம்

சேரும் சேம இடம் பிரமம் ஆகும்
வருக்கம் சராசரம் ஆகும் உலகம்
தருக்கிய ஆசாரம் எல்லாம் தருமே
திருக்கம் இல் ஞானத்தைத் தேர்ந்து உணர்ந்தோர்க்கே.

அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் இவற்றால் உருவாகிய உலகம் ஞானியாருக்கு மேலான ஒழுக்கத்தைத் தரும். முரண்பாடு இல்லாத ஞானத்தை உணர்ந்தவர்கள் சென்று சேரும் பாதுகாப்பான இடம் பிரமம் என்னும் மெய்ப்பொருள் ஆகும்.

#1471. நீர்த்தொனி அறிவுறுத்தும்

அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர் மன்னும் பேரருளாளன்
குறியும் குணமும் குரைகழல் நீங்கா
நெறிஅறிவார்க்கு இது நீர்த்தொனி ஆமே

அறிவு, அடக்கம், அன்பு என்னும் மூன்று நற்குணங்கள் பொருந்திய உள்ளக் கோவிலில் குடி கொள்பவன் பேரருள் மிகுந்த சிவபெருமான். அவன் தன் திருவடிகளை இடையறாது எண்ணும் அடியவர்களுக்குத் தன் வருகையும், தன் இருப்பிடத்தையும் அவர்கள் தலையில் அருவி நீரின் சலசலப்பை அமைத்து அதன் மூலம் உணர்த்துவான்.

#1472. உடலைக் கடந்த ஒளி

ஞானம் விளைந்து எழுகின்றது ஓர் சிந்தையுள்
ஏனம் விளைந்து எதிரே காண்வழி தொறும்
கூனல் மதி மண்டலத்து எதிர் நீர் கண்டு
ஊனம் அறுத்து நின்று ஒண் சுடர் ஆமே.

ஞானம் விளைந்து சிந்தையில் எழும் போது முகத்தின் முன்பு இளம் பிறை போன்ற ஒளி மண்டலம் விளங்கும். இது தலையை ஒட்டித் தோளின் இரு புறங்களிலும் அமையும். அப்போது இழிந்த உடலைக் கடந்து அவர்கள் ஒளிமயம் ஆவார்கள்.

#1473. ஞானத்தின் நான்கு வகைகள்

ஞானிக்கு உடன் குணம் ஞானத்தில் நான்குமாம்,
மோனிக்கு இவை ஒன்றும் கூடா; முன் மோகித்து
மேல் நிற்றலாம் சத்தி வித்தை விளைந்திடும்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே.

ஞானத்தில் ஞானம், ஞானத்தில் யோகம், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை என்ற நான்கும் ஞானியாரின் இயல்புகள். பிரணவ சித்தி பெற்ற அனுபவம் மிகுந்த ஞானிக்கு இவை நான்கும் தேவை இல்லை.சந்திர மண்டலதின் ஒளியில் விளங்குகின்ற சக்தி மகிழ்வடைந்து அவர்களுக்கு மெய் ஞானத்தைத் தந்துவிடும். ஆதாரங்களில் பொருந்தி யோகம் செய்யும் மற்றவர்களுக்குச் சரியை கிரியை என்பவை உரியவை.

#1474. நான்கு நிலைகள்

ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்
ஞானத்தின் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன் முத்தி நாடலே.

ஞானிக்கு ஞானம் அடைவதில் நான்கு நிலைகள் உள்ளன. 'நான்' எனும் அகப் பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் அகலுவது ஞானத்தில் ஞானம் பெறுவது. நாதாந்ததில் பேரொளியைக் காண்பது ஞானத்தில் யோகம் அடைவது. நல்ல வீடு பேற்றினை விரும்புவது ஞானத்தில் கிரியை ஆகும்.

#1475. சுத்தன் முத்தன் சித்தன் ஆவான்

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவம் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரை ஞானம் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவ முத்தன் சித்தனே.

ஞானத்தில் ஞானம் போன்ற நான்கையும் பெற்றவன் நல்வினைகள் தரும் நற்பயனையும், தீ வினைகள் தரும் தீப் பயனையும் கடந்து நிற்பான். கண்ணிய நேயத்தின் ஞான வரம்பைக் கடந்து நிற்பான். திண்ணிய மலங்கள் நீங்கி அவன் சுத்தன், முத்தன், சித்தன் ஆவான்.

#1476. ஞான சமயம் முதலியவற்றின் பயன்

ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞான நிர்வாணமே நன்றி வானருள்
ஞானாபிடேகமே நற்குரு பாதமே.

ஞானத்தில் சமய தீட்சை:
மெய்ப்பொருளை நாடும் ஞானி தானும் மெய்ப்பொருளைப் போன்று ஒளி உருவானவன் என்று உணர்வது.

ஞானத்தில் விசேட தீட்சை:
அங்ஙனம் ஒளியுடன் விளங்குவது

ஞான நிர்வாண தீட்சை:
மெய்ப்பொருளின் அருளைப் பெறுவது

ஞான அபிடேகம்:
குருமண்டலத்தில் இரண்டறக் கலத்தல்.

ஆன்ம தரிசனம் = ஆன்மா தன்னை அறிதல்.
சிவ தரிசனம் = ஆன்மா பராசக்தியை அறிதல்.
சிவ யோகம் = ஆன்மா இடையறாது பரையில் நிற்றல்.
சிவ போகம் = ஆன்மா குரு மண்டலத்தில் அழுந்துதல்.

ஐந்தாம் தந்திரம் -
9. சன்மார்க்கம்

சன்மார்க்கம் = நன்னெறி அல்லது ஒளி நெறி.
இது சிவமாகும் தன்மையை அடைவிக்கும்.

#1477. சன்மார்க்கம்

சாற்றுஞ்சன் மார்க்கமாம் தற்சிவ தத்துவம்
தோற்றங்க ளான சுருதிச சுடர் கண்டு
சீற்ற மொழிந்து சிவயோகச் சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறி ந்தார்களே.

புகழ் பெற்ற சன்மார்க்க நெறி இதுவே. சிவத்தின் உண்மையான வடிவை நாத விந்துக்களில் விளங்கும் சுடரில் காண வேண்டும். சினத்தைக் கை விட வேண்டும். சிவ யோகத்தில் நிலையாகச் சித்தத்தை வைக்க வேண்டும். கூற்றுவனை வென்ற சிவனின் உள்ளக் குறிப்பு அறிந்தவர் பற்றும் சன்மார்க்க நெறி எனப் பெயர் பெற்றது இது.

#1478. சைவநெறி அது தெய்வநெறி

சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு,
தெய்வச் சிவநெறி, சன்மார்க்கம் சேர்ந்து உய்ய
வையத்து உள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

பெருமை வாய்ந்த சைவத்தின் தன்னிகரற்ற தலைவன் சிவபெருமான். சீவர்கள் உய்வதற்காகச் சிவன் வகுத்த நெறி ஒன்று உண்டு. அதுவே ஒளி நெறி அல்லது தெய்வநெறி எனப்படும் சன்மார்க்கம். அதன் வழி நடந்து சீவர்கள் உய்வதற்காகச் சிவ பெருமான் அதை அமைத்து அருளியுள்ளான்.

#1479. குருபக்தி தரும் முக்தி

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கச் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யும் குவலயதோர்க்குத்
தருமுத்தி சார்பூட்டுஞ் சன்மார்க்கம் தானே.

தரிசித்து, பூசித்து, தியானித்து, ஸ்பரிசித்து, புழ்ந்து, திருவடிகளைத் தலைமேல் சூடிக் குரு பக்தி செய்பவர்களுக்கு சன்மார்க்கம் தரும் முக்தி.

விளக்கம்:
குருவும் சிவனின் வடிவமே. குருவிடம் பொருந்தி இருப்பது சிவனின் ஆற்றல்.
எனவே அன்பர்கள் குரு பக்தி செய்வதன் மூலம் முக்தி அடையலாம்.

#1480. பிறவிப் பிணி ஒழியார்

தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவை அறியாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரர் பிறப்பே.

மனத் தெளிவு இல்லாதவரால் சிவபெருமானை அறிய முடியாது.

அவரால் பரந்து விரியும் சீவனின் ஆற்றலையும் அறிய முடியாது.
அதனால் அவரால் ஒரு நாளும் சிவமாக மாற முடியாது.
அதனால் அவரால் பிறவிப்பிணியை ஒழிக்கவும் முடியாது.

#1481. ஞான அநுபூதியில் இன்பம்

தான் அவன் ஆகித் தான் ஐந்தாம் மலம் செற்று
மோனம் அது ஆம் மொழிப்பால் முத்தர் ஆவதும்,
ஈனம் இல் ஞான அனுபூதியில் இன்பமும்,
தான் அவனாய் அற்றல் ஆனசன் மார்க்கமே.

சன்மார்க்கம் அடைவிப்பது எவற்றை?

ஆன்மாவாகிய தன்னையே சிவமாக ஆக்கி விடுவது, தன்னிடம் பொருந்தியுள்ள ஐந்து மலங்களை அகற்றுவது; மௌனமான பிரணவத்தை அடைந்து முத்தன் ஆவது; ஈனம் இல்லாத ஞான அநுபூதியில் இன்பம் அடைவது, தன்னிலை அற்றுத் தானே சிவமாக மாறிவிடுவது என்பவை கிட்டும்.

ஐந்து மலங்கள்: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி.

#1482. சன்மார்கத்தார் மேன்மை

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமும்
சன்மார்க்கத் தார்க்கு மிடத்தொடு தெய்வமும்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந்த் தரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இய்ச்ம்புவன் கேண்மினோ.

சன்மார்க்க நெறியினர் முகம் சிவனின் இருப்பிடம் ஆகும்.
அவர்கள் இருப்பிடமே தெய்வம் உறையும் கோவில் ஆகும்.
அவர்களைக் காண்பதே சிவ தரிசனம் செய்வது ஆகும்.
எந்த மார்க்கத்தில் உள்ளவர்களுக்கும் நான் கூறுவது இதுவே.

#1483. துரியத்தில் துரிசு நீங்கும்

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்
சன்மார்க்கர் தானவ னாகும்சன் மார்க்கமே.

சன்மார்க்க சாதனம் ஒன்றே சிவத்தை உணர்த்தும் ஞானம் ஆகும். இந்த மார்க்கத்தைத் தவிர்த்த பிற அனைத்தும் பேதையர்களுக்கு உரியது. தீமைகளைத்

தரும் மார்க்கத்தை விட்டு விட்டுத் துரியத்தில் பொருந்தி நின்று குற்றங்கள் நீங்கி விளங்குவதே சீவனைச் சிவனாக ஆகும் சன்மார்க்க நெறி.

#1484. வேத மார்க்கமே நன் மார்க்கம்

சன்மார்க்க மெய்த வரும்பெருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பிறவியல் பாமென்றால்
நன்மார்க்கந் தானேசிவ னொடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதி கைக் கொள்ளுமே.

சன்மார்க்கத்தை பயில்பவர்களுக்கு பிற மூன்று மார்க்கங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்பவை இயல்பாகவே அமையும். அவர்கள் விரும்புவது சிவத்துடன் பொருந்தும் நன்மார்க்கம். இதுவே வேதம் கூறும் பிரணவ நெறி என்று அறிக.

#1485. தானே சிவப் பேரொளி!

அன்னிய பாசமு மாகும் கருமமும்
முன்னு மவத்தையு மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமும்
தன்னொடும் கண்டவர் சன்மார்க்கத் தோரே.

தனக்கு அன்னியமாகிய பாசம்; அந்தப் பாசத்தினால் விளையும் கருமம்; அந்தக் கருமத்தினால் விளையும் பிறப்பு, இறப்பு என்னும் இரு பிணிகள்; இந்தப் பிணிகளுக்குக் காரணமாகிய பிரகிருதி; இவற்றோடு பொருந்தி இவற்றை நன்கு அறிந்து கொள்ளும் ஞானம்; இவற்றுள் நிலவுகின்ற பல வேறுபாடுகள்; இவற்றுடன் ஆன்மாவான தன்னையும் கண்டு கொண்டவர் சன்மார்க்கத்தவர் ஆவார்.

#1486. அசைவானதில்லாமை

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து
ஒசியாத உண்மை சொரூபோ தயதுற்று
அசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.

ஆன்மாவை பாசத்திலிருந்து பிரித்துப் பதியுடன் சேர்க்க வேண்டும். கனியாத மனத்தை நன்கு கனிய வைக்க வேண்டும். அழியாத மெய்ப் பொருளுடன் சேர்ந்து சிறிதும் அசைவில்லாமல் சமாதியில் இருக்க வேண்டும். இதுவே சிறந்த சன்மார்க்கம் எனப்படும் நன்னெறி ஆகும்.

#1487. சித்த யோகம் தரும்

மார்க்கம் சன்மார்க்கிகட்கு இட்ட வகுப்பது
மார்க்கம் சன்மார்க்கமே அன்றி, மற்றொன்று இல்லை
மார்க்கம் சன்மார்க்கம் எனும் நெறி வைகாதார்
மார்கம்சன்மார்க்கம், ஆம் சித்த யோகமே.

சன்மார்க்கத்தில் உள்ளவர்கள் வகுத்துச் செல்லும் மார்க்கமே சன்மார்க்கம் எனப்படும். சன்மார்க்கத்தில் பொருந்தாதவர்கள் செல்லும் மார்க்கம் சித்திகளைத் தருகின்ற யோக நெறி எனப்படும்.

ஐந்தாம் தந்திரம் -
10. சக மார்க்கம்

இது தோழமை நெறி எனப்படும். இந்நெறியில் நிற்பவர்கள் சிவ வடிவினை அடைவார்கள்.

#1488. முத்தியும் சித்தியும் தரும்

சன்மார்க்கம் தானே சகமார்க்கம் ஆனது,
மன்மர்க்கம் ஆம்முத்தி சித்திக்கும் வைப்பதாம்
பின்மார்க்கம் ஆனது, பேராப்பிறந்து இறந்து
உன்மார்க்கம் ஞானத்து உறுதியும் ஆமே?

சன்மார்க்கமே சகமார்க்கமாக ஆனது. ஞானநெறியினைத் தோழமை நெறியால் அடையலாம். மார்க்கங்களில் மன்னன் போன்ற இது முக்தியும் சித்தியையும் அளிக்க வல்லது. வேறு பிற்பட்ட மார்க்கங்கள் பிறவி மரணம் இவற்றை நீக்கா. பிறப்பு இறப்பு இவற்றை அளித்து அவை ஞானத்தை எண்ணி எண்ணி உறுதி அடைவதற்கு வழி வகுக்கும்.

#1489. துவாதச மார்க்கம்

மருவும் துவாதச மார்க்கம் இல்லாதார்
குருவும் சிவனும் சமயமும் கூடார்
வெருவும் திருமகள் வீட்டு இல்லையாகும்
உருவும் கிளையும் ஒருங்கு இழப்பாரே.

தலையின் மீது பன்னிரண்டு அங்குலத்தில் பொருந்தியுள்ள துவாதச மார்க்கத்தை அறியாதவர்கள், அங்கே இருக்கும் குருமண்டலத்தையும் அறியார்.

அந்த ஒளி மண்டலத்தில் விளங்கும் சிவத்தையும் அறியார். அவர்கள் இல்லத்தில் இருக்க அஞ்சித் திருமகளும் விலகிச் சென்றிடுவாள். அவர்கள் தங்கள் உருவத்தையும் உறவுகளையும் ஒருங்கே இழந்து நிற்பர். துவாதச மார்க்கம் என்னும் பிரசாத நெறி அகரம் முதலான பன்னிரண்டு வழிகளில் இறைவனை அடைதல். இதை அறிந்து கொண்டவர்கள் இறவாத நிலையை அடைவர்.

#1490. யோகசமாதி

யோக சமாதியி னுள்ளே அகலிடம்
யோக சமாதியி னுள்ளே உளரொளி
யோக சமாதியி னுள்ளே உளசத்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே.

துவாதசாந்தத்தில் பொருந்தி நிற்பவர் யோக சமாதியை அடைவர்.அங்கே நுட்ப வடிவில் அண்டத்துள் உள்ள அனைத்துமே உள்ளன. அங்கே சிவ சக்தியர் உள்ளனர். உள்ளம் விரும்பி இந்த யோக சமாதியில் அமைபவர் உண்மைச் சித்தர் ஆவர்.

#1491. யோகமும் போகமும் பொருந்தும்!

யோகமும் போகமும் யோகியார்க்கு ஆகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளதோர்
போகம் புவியில் புருடார்த்த சித்தியாம்
ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே.

யோகம், போகம் இரண்டும் யோகியர்க்குப் பொருந்தும். யோகத்தினால் ஒரு யோகி சிவ சாரூப்யம் அடைவார். போகத்தால் புருடார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பெறுவார். இதனால் அழியாத யோகிக்கு யோகம், போகம் இரண்டுமே நன்றாகப் பொருந்தும்.

#1492. சக மார்க்கம் என்பது எது?

ஆதார சோதனையால் நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ஒளி
போதாலயத்துப் புலன் கரணம் புந்தி
சாதாரணம் கெடலாம் சக மார்க்கமே.

குருவின் அருளால் ஞானம் பெற்றுச் சாதனை செய்வதால் நாடிகள் தூய்மை அடையும். அத்துவா சக்தி வந்து அமையும். மேதை முதலான பதினாறு கலைகளில் விளங்கும் வானமும் ஒலியும் நன்கு புலப்படும். அறிவின் ஆலயம் ஆகிய ஆன்மாவை, ஐம்புலன்களும் ஐம்பொறிகளும் கீழ் நோக்கி இழுக்கும் தம்

இயல்பிலிருந்து மாறுபட்டு மேல் நோக்கிச் செலுத்தும் இயல்பை அடைவதே சகமார்க்கம் எனப்படும்.

#1493. சிவன் வந்து பொருந்துவான்

பிணங்கி நிற்கின்ற வைஐந்தையும் பின்னை
அணங்கி எறிவன் அயிர்மன வாளால்,
கணம் பதினெட்டும் கருதும் ஒருவன்
வனாக வல்லான் சிந்தை வந்து நின்றானே.

மாறுபட்டு நின்று ஆன்மாவைக் கீழ் நோக்கி இழுக்கின்ற ஐம்பொறிகளையும் மனம் என்னும் கூறிய வாளால் நான் வருத்தித் துன்புறுத்துவேன். அப்போது பதினெட்டுக் கணங்களும் வணங்குகின்ற, எல்லோரும் வணங்கத் தக்க இறைவன் ஆகிய சிவபெருமான் என் சிந்தையில் வந்து பொருந்தி நிற்பான்.

பதினெட்டுக் கணங்கள்:
அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பாசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாய வாசியர், போக பூமியர்.

#1494. உளங் கனிந்து நிற்பான்

வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்,
உளங் கனிந்துள்ளம் ம் உகந்திருப்பார்க்கு
பழங் கனிந் துள்ளே பகுந்து நின்றானே.

நன்கு விளைந்த கனியினைப் போன்ற செம்மையாளர்களுக்கும், நல்ல ஒரு கனியினைப் போன்று இன்பம் தரும் உண்மைப் பொருள் இறைவனே ஆவான். இறைவன் கனியிலிருந்து சாற்றை வேறுபடுத்துவது போலவே , உள்ளம் கனிந்து உகந்து இருப்பவர்களைத் தத்துவங்களிலிருந்து வேறுபடுத்தி விடுவான். அதன் பிறகு தானும் அவர்களுடன் ஒன்றாகி விடுவான்.

ஐந்தாம் தந்திரம் -
11. சற்புத்திர மார்க்கம்

மகனாகும் தன்மை உடைய நன்னெறி. இதற்கு உரிய செயல்கள் கிரியை, பூஜை முதலியவை. நல்ல ஒரு மகன் தன் அன்புத் தந்தைக்குச் செய்யும் தொண்டு போன்றது இது.

#1495. ஞானம் பெறுவர்

மேவிய சற்புத்திர மார்க்கம் மெய்த்தொழில்
தாவிப்பதாம், சகமார்க்கம், சகத்தொழில்
ஆவது இரண்டும் அகன்று, சகமார்க்கத்
தேவியோடு ஒன்றல், சகமார்க்கத் தெளிவே.

கிரியை வழி நிற்பது சற்புத்திர மார்க்கம். யோகத்தை அளிப்பது சக மார்க்கம். சன்மார்க்கத்தால் தெளிவும் ஞானமும் பெற்றவர்கள், இந்த இரு மார்க்கங்களையும் கடந்து சென்று, யோக சக்தியுடன் பொருந்தி இருப்பர்.

#1496. சற்புத்திர மார்க்கம்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம், வாய்மை, அழுக்கின்மை
நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன் மற்று
ஆசற்ற சற்புத்திர மார்க்க மாகுமே.

குற்றமற்ற சற்புத்திர மார்க்கத்தின் எட்டு அங்கங்கள் இவை:-

1. பூசை செய்தல்,
2. பாராயணம் செய்தல்,
3. இறைவன் புகழைப் போற்றி வணங்குதல்,
4. சில மந்திரங்களைச் செபம் செய்தல்.
5. நல்ல தவ நெறிகளை மேற்கொள்ளுதல்,
6. உண்மையே பேசுதல்,
7. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற ஆறு உட்பகைவர்களை நீக்குதல்,
8. ஹம்ச பாவனையை அன்புடன் செய்து வருதல்.

#1497. ஒரே நெறியைப் பின்பற்ற வேண்டும்

அறுகால் பறவை அலர்தேர்ந்து உழலும்
மறுகால் நரை அன்னம் தாமரை நீலம்
குறுகால், நறுமலர் கொய்வன கண்டும்
சிறுகால் அறநெறி செல்லுகிலாரே.

ஆறு கால்களை உடைய வண்டு, தேனைத் தேடிப் பல மலர்களை நாடி அலைந்து திரியும். வெண்ணிற அன்னம் தாமரை மலரை மட்டுமே நாடும். வண்ணம் மிகுந்த கவர்ச்சியான நீல மலரை நாடாது. கிரியை நெறியைப் பற்றிக் கொண்டவர்

நறு மலர்களைக் கொண்டு சிவனை வழிபடுவதைக் கண்ட பின்பும் அங்ஙனம் செய்யாமல் பிற வழிச் சென்று வண்டுகளைப் போலத் திரிபவர்கள் அறிவிலிகள்.

#1498. திருவடியே நாம் அடையவேண்டிய கரை

அருங்கரை யாவது அவ்வடி நிழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞகன் ஆணை
வருங்கரை ஏகின்ற மன்னுயிர்க்கு எல்லாம்
ஒருங்கு அரையாய், உலகு ஏழின் ஒத்தானே!.

பிறவிப் பெருங்கடலின் அரிய கரை எனப்படுவது இறைவனின் திருவடிகளே! அந்தப் பெரிய கரையும் அரன் இடும் ஆணைப்படியே அமைந்திடும். திருவடிக் கரையினை அடையும் அழிவில்லாத உயிர்களுக்கு எல்லாம் ஒரே தலைவனாக ஏழு உலகங்களிலும் விளங்குபவன் நம் சிவபெருமானே ஆவான்.

#1499. தாங்குபவன் சிவன்.

உயர்ந்தும் பணிந்தும் முகந்தும் தழுவி
வியந்தும் மரனடிக் கைமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்தும் பரிக்கிலர் பான்மைய னாமே?

தன் நிலையில் இருந்து உயர்ந்தும், அரன் திருவடிகளைப் பணிந்தும், அதில் மிகுந்த இன்பம் அடைந்தும், அவற்றைத் தழுவிக் கொண்டு ஆனந்தம் அடைந்தும், மீண்டும் அவனிடமே விண்ணப்பம் செய்வீராகுக!

எடுக்க இருக்கும் பல பிறவிகளைத் தடுத்து, எடுத்த பிறவியைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு அது ஒன்றே நல்ல வழியாகும். மீண்டும் மீண்டும் இழிந்த நிலையை அடையாமல் தடுத்துத் தாங்குமாறு தன்னிடம் வந்து இறைஞ்சுபவர்களை, இறைவன் ஆதாரமாகத் தாங்கி நின்று தானே அருள் புரிவான்.

#1500. பிரான் வெளிப்படுவான்!

நின்று தொழுவன், கிடந்துஎம் பிரான் தன்னை
என்றும் தொழுவன் எழில்பரஞ் சோதியை
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தொறும்
சென்று வெளிப்படும் தேவர் பிரானே.

நான் நின்ற வண்ணம் சிவபெருமானைத் தொழுவேன். நான் கிடந்த வண்ணமும் அந்தப் பிரானை என்றும் தொழுவேன். எழில் பரஞ்ஜோதியாகிய நம் சிவபெருமானை அழகிய, மணமிகுந்த நெருக்கமான மலர்களால் நீங்களும்

அன்புடன் வழிபடுங்கள். அப்போது அவன் தன்னைத் தொழுது வணங்கும் தன் அடியவர்களின் சிந்தையில் வெளிப்பட்டு அருள் புரிவான்.

#1501. இன்பத்தில் நிலைபெறுவீர்!

திருமன்னு சற்புத்திர மார்க்கச் சரியை
உருமன்னி வாழு முலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங்கை கூம்பத் தொழுது
இரு மன்னு நாடோறு மின்புற் றிருந்தே.

வீடுபேற்றினை அளிக்க வல்லது சற்புத்திர மார்க்கம். அந்த மார்க்கத்துக்கு வாயிலாக அமைவது தொண்டு செய்யும் நன்னெறியாகும். வினைப் பயன்களால் உருவமும் உயிரும் பெற்று வாழும் உலகத்தோரே! நான் கூறுவதைக் கேளுங்கள்! கருவில் செலுத்தி உங்களை உலக வாழ்வில் சிறைப் படுத்தும் வினைப் பயன்கள் அகன்று செல்ல இறைவனை நாள்தோறும் வணங்குவீர்! மாறாத இன்பத்தில் நிலை பெற்று வாழ்வீர்.

ஐந்தாம் தந்திரம் -
12. தாச மார்க்கம்

இது ஒரு அடிமையைப் போலத் தொண்டுகள் செய்யும் நெறி.
ஆலயம் சென்று தன் உடலால் தொண்டு புரிகின்ற நெறி இது.

#1502. தாச மார்க்கம்

எளியனல் தீபம் இடல், மலர் கொய்தல்
அளிதின் மெழுகல், அது தூர்த்தல், வாழ்த்தல்,
பளிமணி பற்றல், பல்மஞ் சனம் ஆதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.

தொண்டு நெறி என்பது செய்வதற்கு எளிதான சிறிய பணிகளைச் செய்வது ஆகும். ஆலயத்தில் தீபம் ஏற்றுவது, மலர்களைக் கொய்வது, ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வது, ஆலயத்தை மெழுகுவது , இறைவனை வாழ்த்துவது , பூசை நேரத்தில் மணி அடிப்பது, திருமஞ்சனத்துக்கு நீர் கொண்டு வந்து தருவது போன்ற எளிய திருப்பணிகள் செய்வதே தாச மார்க்கம் எனப்படும் தொண்டுகள் செய்யும் நன்னெறி ஆகும்.

#1503. நம் வேந்தனை நாடுவீர்.

அது, இது ஆதிப்பரம் என்று அகல்வர்,
இதுவழி என்று அங்கு இறைஞ்சினர் இல்லை,
விதிவழியே சென்று வேந்தனை நாடும்
அது விது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.

ஆதிப் பரம் பொருள் அதுவோ இதுவோ என்று ஐயம் கொண்டவர்கள் துணிவும் உறுதியும் இன்றி மனம் மயங்குவர். "இதுவே பரம் பொருள் . இதனை வழிபடுவதே சிறந்தது!" என்று உறுதியாக வழிபடுபவர் எங்கும் இல்லை! உங்கள் விதி வழிப்படி உங்களுக்கு எந்த இறைவனிடம் பற்று உள்ளதோ அவனையே சென்று வணங்குவீர். பரம் பொருள் அதுவோ இதுவோ என்ற ஐயங்களைப் போக்கும் வழி இது ஒன்றே ஆகும்.

#1504. அரன் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவன்!

அந்திப்பன் திங்கள் அதன் பின்பு ஞாயிறு
சிந்திப்பான் என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்பர் வானவர் தேவனை நாள் தோறும்
வந்திப்பது எல்லாம் வகையின் முடிந்ததே.

திங்களால் உண்டாகின்ற தாழ்ந்த உணர்வுகளை நான் முயன்று அடக்குவேன். அதன் பின்னர் அறிவினால் நிகழும் உயர்ந்த ஆராய்ச்சிகள். ஆராய்ச்சிகளின் பயனாக நான் திடமான ஞானம் பெறுவேன். எங்கும் நிறைந்துள்ள அரன் திருவடிகளை இடையறாது எப்போதும் எண்ணிக்கொண்டே இருப்பேன். அந்த தேவதேவனை நான் வணங்குவேன். இந்த விதமான் வழிபாட்டினால் எல்லா வழிபாடுகளும் ஒரு முடிவில் பொருந்தும் நிலை ஏற்படும்.

#1505. தொழுதால் வழுத்துவான்!

அண்ணலை வானவர் ஆயிரம் பேர் சொல்லி
உன்னுவர், உள் மகிழ்ந்து, உள் நின்று அடித் தொழக்
கண் அவன் என்று கருது மவர்கட்க்கு ,
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே.

ஆயிரம் திருப் பெயர்களை சொல்லித் தேவர்கள் இறைவனைத் தொழுவார்கள். அர்ச்சனை செய்வார்கள். ஆனாலும் அவன் அவர்களை விடுத்து அரன் தன் உள்மனம் மகிழ்வது எவரிடம் என்று அறிவீரா? கண் போன்று அவனைக் கருத்தில் கொண்டு அவன் திருவடிகளைத் தொழுது நிற்கும் அடியவர்களிடமே! நாத வடிவாகிய இறைவன் தன் அன்பர்களின் அன்புக்கு ஆட்பட்டு அவர்களுக்கு அருளுடன் வெளிப்படுவான்.

#1506. நேசித்தவர் நினைவறியார்!

**வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம் பார்க்கின்
மாசற்ற சோதிமணி மிடற்ற ண்ணலை
நேசித்திருந்த நினைவறி யாரே.**

பாசி படர்ந்த குளத்தில் ஒரு கல்லை வீசினால் பாசி விலகிக் குளம் சிறிது தெளியும். மீண்டும் பாசி மூடி விடும். அதுபோலவே இறைவனின் புகழை வாசித்தாலும், அவனை பூசித்தாலும், வாச மலர்களைக் கொய்திட்டாலும், மனம் சிறிது நேரம் மட்டுமே தெளிவடையும். மாசற்ற சோதியாகிய, மணி வண்ண மிடற்றினை உடைய, நீல கண்டப் பெருமானை நினைவில் நிறுத்திக் கொண்டவர் உலக நினைவு அற்றவர் ஆகிவிடுவார்.

ஐந்தாம் தந்திரம் -
13. சாலோகம்

சிவனது உலகத்தை அடைவது சாலோக முக்தி.
அதை அடையும் விதம் இங்கு கூறப்படுகின்றது.

#1507. சரியை சாலோகம் தரும்!

**சாலோகம் ஆதி, சரியாதி யின் பெறும்
சாலோகம் சாமீபம் தங்கும் சரியையாம்
மாலோகம் சேரின் வழியாகும், சாரூபம்
பா லோகம் இல்லாப் பரன்உரு ஆமே.**

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பவை நன்கு வகை முக்தி நெறிகள் ஆகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை நான்கும் அவற்றை அடையும் வழிகளாகும். சரியை என்னும் நன்னெறியைப் பின்பற்றுபவர் இறைவன் வாழும் உலகத்தை அடைவார். அவன் அருகில் விளங்குவார். அவன் வடிவையும், ஒளியையும் பெறுவார். இவர் சிவபெருமானுடன் லயம் அடையாமல், அவன் வடிவைப் பெற்று, அவன் உலகில், அவன் அருகில் வாழ்வார்.

#1508. நான்கு செயல்கள்

**சமயங் கிரியையில் தன்மனம் கோவில்
சமய மனுமுறை தானே விசேடம்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றாம்
சமயாபி டேகந் தானாஞ் சமாதியே.**

சமயத்தைப் பற்றி நிற்பவர் இந்த நான்கு செயல்களைச் செய்ய வேண்டும்.

1. தான் வழிபடும் இறைவனைத் தன் மனக் கோவிலில் இருத்துவது முதல் செயல் ஆகும்.
2. இறைவனுக்கு உரிய மந்திரத்தை நினைப்பது சமயத்தில் விசேடம் ன்னும் இரண்டாவது செயல் ஆகும்.
3. மூல மந்திரத்தில் தெளிவு பெறுவது மூன்றாவது செயலாகிய நிர்வாண தீட்சை எனப்படும்.
4. இறைவனை எண்ணியபடி அவனுடன் சமாதியில் கூடுதல் சமயாபிடேகம் என்னும் நான்காவது நெறியாகும்.

ஐந்தாம் தந்திரம் -
14. சாமீபம்

இறைவனின் அருகில் தங்குவது சாமீபம்.

#1509. பாசம் பதியுடன் சேர்க்கும்

பாசம் பசுவானது ஆகும் சாலோகம்
பாசம் அருளான் அது ஆகும் சாமீபம்
பாசம் சிரம் ஆனது ஆகும் இச்சாரூபம்
பாசம் கரைபதி சாயுச்சியமே.

சாலோக முக்தியில் பாசத் தன்மை கெடாது இருக்கும்.
சாமீபத்தில் பாசம் கட்டுப்படுத்தாத அருளாக மாறிவிடும்.
சாரூபத்தில் பாசத்தன்மை மேலும் மேன்மையைத் தரும்.
சாயுச்சியத்தில் பாசத்தன்மை குன்றி பதியுடன் இணையச் செய்யும்.

ஐந்தாம் தந்திரம் -
15. சாரூபம்

தானும் இறைவனின் வடிவத்தைப் பெறுவது சாரூபம்.

#1510. சாரூபம்

தங்கிய சாரூபம் தான் எட்டாம் யோகம் ஆம்
தங்கும் சன்மார்க்கம் தனில் அன்றிக் கைகூடா
அங்கத்து உடல் சித்தி சாதனர் ஆகுவர்
இங்கு இவர் ஆக இழிவு அற்ற யோகமே.

சாரூபம் என்னும் முக்தியை அட்டாங்க யோகத்தின் எட்டாவது உறுப்பாகிய சமாதியால் அடைய முடியும். ஞான நெறியைப் பற்றி நின்றவர்களே இதனை அடைய முடியும். இவர்களுக்குச் சித்தி கைகூடும் .யோகத்தால் இவர்களின் உடல் குற்றமற்றதாக மாற்றி அமைக்கப்படும்.

#1511. கயிலை இறைவனின் கதிர் வடிவம்

சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகும் சராசரம் போலப்
பயிலும் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவனின் கதிர்வடி வாமே.

மேருமலையைச் சார்ந்த உடனேயே பொருட்கள் அனைத்தும் மேருவின் பொன்னிறத்தை அடைந்துவிடும். அதைப் போலவே அரனின் அன்பர்கள் அவன் நாதத் தத்துவத்தில் விளங்குகின்ற குரு மண்டலத்தை அடைந்தவுடனேயே கயிலை இறைவனின் கதிர் வடிவினைப் பெற்று விடுவர்.

ஐந்தாம் தந்திரம் -
16. சாயுச்சியம்

இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவது சாயுச்சிய முக்தி.

#1512. சாயுச்சியமே சிவானந்தம்!

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவன் தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சி யமே.

முதல் நிலை சைவம் என்பது சிவனுடன் பொருந்தி நிற்றல் ஆகும்.

இரண்டாம் நிலை சைவம் சிவதத்துவத்தை அறிந்து கொண்டு சிவபெருமானுடன் விளங்குதல்.

மூன்றாம் நிலை சைவம் என்பது சமாதியில் சிவனுடன் பொருந்தாமலேயே, சிவன் தன்னிடம் ஒளிர்வதை மட்டும் நன்றாக உணர்ந்து கொள்ளுதல்

நான்காவது நிலை சைவம் என்பது சமாதி நிலையில் முற்றிலுமாகச் சிவத்துடனேயே பொருந்திச் சிவானந்தப் பேற்றினை அடைவது.

இதுவே அனைத்திலும் உயர்ந்த சாயுச்சிய முக்தி எனப்படும்.

#1513. சாயுச்சியமே பேரின்பம்!

சாயுச்சியம் சாக்கிரதீதம் சாருதல்,
சாயுச்சியம் உபசாந்தத்துத் தங்குதல்
சாயுச்சியம் சிவம் ஆதல் முடிவு இலாச்
சாயுச்சியம் மனத்து ஆனந்த சக்தியே.

தன்னை மறந்த சாக்கிர அதீத நிலையைச் சாருதல் சாயுச்சியம்.
விருப்பு வெறுப்புக்களைக் கடந்த நிலையை அடைவது சாயுச்சியம்.
சிவத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றி விடுதல் சாயுச்சியம்.
எல்லை இல்லாப் பேரின்பத்தில் திளைப்பது சாயுச்சியம்.

ஐந்தாம் தந்திரம் -
17. சக்தி நிபாதம்

சக்தி நிபாதம் = சக்தி நன்கு பதிவது.

ஆன்மா விளக்கம் அடையாத வண்ணம் அதைக் கட்டுபடுத்தும் மலங்களை அழித்து அங்கு அருளைப் பெருக்கும் சக்திகள் பதிவது. அருள் பதிவதற்கு ஏற்ப அறிவு ஒளி வீசத் தொடங்கும். இது நான்கு வகை மனிதர்களுக்காக ஏற்படுத்தப் பட்டது.

1. மந்தம் = குறைந்த அறிவை உடையவன்
2. மந்தர தரம் = மந்தமாக இருந்தாலும் மந்திரங்களை உபாசிப்பவன்
3. தீவிரம் = யோகப் பயிற்சி செய்பவன்
4. தீவிர தரம் = ஞானநெறியைப் பின்பற்றுபவன்.

#1514. மணம் புரிந்தாள்

இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டியவனை மணம் புரிந்தாளே.

சுவாதிட்டானதுக்கும் கீழ இருக்கும் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி இருளாகிய அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாவுக்கு ஞானம் ஏற்படுத்த விரும்புவாள். ஆன்மாவின் அஞ்ஞானத்தை அகற்றிப் பசு, பதி, பாசம் இவற்றின் இயல்புகளை அறிந்து கொள்ளும் ஆவலை ஆன்மாவுக்கு ஏற்படுத்துவாள். சீவனைச் சிவத்துடன் சேர்க்க முயற்சி செய்வாள்.

#1515. பந்தம் தெளிவு இரண்டும் தரும்

தீம்புனல் ஆன திசைஅது சிந்திக்கில்
ஆம்புலனாய் அறிவார்க்கு அமுதாய் நிற்கும்,
தேம்புனலான தெளிவு அறிவார்கட்குக்
கோம்புனல் ஆடிய கொல்லையும் ஆமே.

சீவர்களுக்கு இன்பத்தைத் தருவது மூலாதாரம். அதுவே சிவனைச் சிந்தனை செய்பவர்களுக்கு அவனை அறியும் இடமாக மாறிவிடும். அதன் பின் அமுதம் போல இனிக்கும். தேன் புனல் போன்று அறிவில் தெளிவு பெற்றவர்களுக்கு மூலாதாரம் பசுக்கள் இன்பமாக மேயும் கொல்லைப் புறமாக மாறிவிடும்.

#1516. பொருள் நீங்கா இன்பம் பொருந்தும்

இருள் நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள் நீங்கா வண்ணமே ஆதி அருளும்
மருள் நீங்கா வானவர் கோனொடும்
பொருள் நீங்கா இன்பம் புலம்பயில் தானே.

ஆணவம் என்னும் இருளால் சீவன் எடுக்கும் எண்ணற்ற பிறவிகளைக் கடக்க உதவுவாள் ஆதி சக்தி. அண்ணலின் திருவருள் சீவனிடமிருந்து என்றும் நீங்காத வண்ணம் அவள் காப்பாள். விண்ணவர்கள் ஆனபோதிலும் மருள் நீங்கப் பெறாத அமரர்களின் தலைவன் ஆன சிவத்துடன், சீவன் பொருந்தி விந்து கெடாமல் இன்பம் துய்க்கும் இடம் மூலாதாரம்.

#1517. அப்பனும் அம்மையும் அருளுவர்

இருள் சூழ் அறையில் இருந்தது நாடின்,
பொருள் சூழ் விளக்கு அது புக்கு எரிந்தாற்போல்
மருள் சூழ் மயக்கத்து, மாமலர் நந்தி
அருள் சூழ் இறைவனும் அம்மையும் ஆமே.

இருள் சூழ்ந்த அறையாகிய மூலாதாரத்தில் குண்டலினி சக்தி இருந்ததன் காரணத்தை ஆராய்ந்தால் அப்போது பொருள் சூழ்ந்த அறையில் விளக்கு எரிவது போல மாற்றங்கள் நிகழும். ஆணவம் என்ற இருள் சூழ்ந்த மயக்கம் தெளிந்து அம்மையும், அப்பனும் குரு மண்டலத்தில் அருளுடன் வெளிப்படுவர்.

#1518. மந்த தரம்

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
அருள் திகழ் ஞானமது புரிந்தாளே.

ஆன்மா ஆணவ மலத்தின் தொடர்பால் மயங்கி இருக்கும் நிலையைப் போக்குவாள் குண்டலினி சக்தி. வினைப்பயன்களை விலக்கி விடுவாள். இன்பம் விளைவிப்பாள். அறியாமையை அகற்றுவாள் சிவனின் அருட்குணங்களை விளங்கச் செய்வாள். ஆன்மா அருள் மயமான ஞான சக்தியாக விளங்கச் செய்வாள்.

#1519. பிறவிப் பிணி இல்லை

கன்னித் துறை படிந்தாடிய ஆடவர்
கன்னித் துறை படிந்தாடுங் கருத்திலர்
கன்னித் துறை பதிந்தாடும் கருதுண்டேல்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே.

பெண்ணுடன் பொருந்தும் ஆடவர் குண்டலினியின் ஆற்றலை மாற்றி அமைக்கும் வழியினை அறிந்து கொள்ளவில்லை. ஆண், பெண் கூட்டுறவைத் தெய்வக் கூட்டுறவாக மாற்றி அமைக்கும் வழியை அறிந்து கொண்டவருக்கு இனிமேல் பிறவிப் பிணி என்பது இல்லை.

#1520. அக்கினிக் கலையில் விளங்குவான்

செய்யன், கரியன், வெளியன்நற் பச்சையன்
எய்த உணர்தவர் எய்வர் இறைவனை
மைவென்று அகன்ற பகடு உரி போர்த்தவெங்
கையன் இவன் என்று காதல் செய்வீரே.

சுவாதிட்டானம் என்னும் நிலத்தில் விளங்கும் நான்முகன், மணி பூரகத்தில் விளங்கும் கரிய திருமால் , மற்றும் உருத்திரன், மகேசுரன், சதாசிவன் இவர்களை நன்கு அறிந்து கொள்பவர் இறைவனை அடைவர். மையை வெல்லும் கரிய நிறம் கொண்ட, உயர்ந்து அகன்ற, கரிய பெரிய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு அக்கினிக் கலையில் விளங்குபவன் நம் இறைவன்

#1521. ஞானம் விளையும்

எய்திய காலங்கள் எத்தனை ஆனாலும்
தையலும் தானும் தனி நாயகம் என்பர்
வைகலும் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமம் செய் காட்டது ஆமே.

இந்த உலகத்தில் தோன்றிய உயிர்கள் எத்தனை முறை அழிந்து, அழிந்து தோன்றினாலும், என்றுமே அழியாத பொருட்களாக விளங்குவது சிவமும் சக்தியும் மட்டுமே. விடியற் காலையில் தம்மை வணங்குபவர்களின் சுழுமுனையில் வந்து பொருந்துவர் சிவசக்தியர்.

#1522. இருள் நீங்கும்

கண்டு கொண்டோம் இரண்டும் தொடர்ந்து ஆங்கு ஒளி
பண்டு பண்டு ஓயும் பரமன் பரஞ்சுடர்
வண்டு கொண்டாடும் மலர்வார் சடை அண்ணல்
நின்று கண்டார்க்கு இருள் நீக்கி நின்றானே.

உடலில் விளங்கும் கதிரவன், மதி என்னும் இரண்டையும் தொடர்ந்து சென்று உடலில் உள்ள ஒளியைக் கண்டு கொண்டோம். அது பண்டு தொட்டு உடலில் விளங்கும் பரமசிவன் என்னும் பேரொளிப் பிழம்பில் சென்று கலந்தது. வண்டுகள் கொண்டாடும் தாமரை மலர் போன்ற சகசிர தளத்தில் அண்ணலைக் கண்டு கொண்டவர்களில் மன இருட்டை அவனே மாற்றி அமைப்பான்.

#1523. சிவன் என்னும் கனி

அண்ணிக்கும் பெண்பிள்ளை, அப்பனார் தோட்டத்தில்
எண்நிற்கும் ஏழ்ஏழ் பிறவி உணர்விக்கும்
உள்நிற்பது எல்லாம் ஒழிய, முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனி அது ஆமே.

குண்டலினி சக்தி உலக இயலில் விஷயானந்தமான இன்பத்தைத் தரும். அதுவே அனைவருக்கும் அப்பனாகிய சிவபெருமானின் தோட்டமாகிய சகசிரதளத்தில் அளவைக் கடந்து நிற்கும். ஏழேழு பிறவிகளை உணர்த்தும். நல்வினைப் பயன்கள் தீவினைப் பயன்கள் என்னும் இரண்டையும் அழிந்துவிடும். அப்போது சீவன் சிவனைக் கண்டு அவனுடன் பொருந்திச் சிவக்கனியின் சுவையாக மாறி விடலாம்.

#1524. பெருந்தவம் நல்கும்!

பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கும்
மறுப்பை யாருக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலைக் கோமளவல்லி
சிறப்பொடு பூசனை செய்ய நின்றார்க்கே.

குவிமுலைக் கோமள வல்லியாகிய குண்டலினி சக்தி, சிறப்பாகத் தன்னை வணங்குபவர்களின் பிறவிப் பிணியை நீக்குவாள். பெருந் தவத்தைத் தருவாள். அறியாமையை அகற்றுவாள். தன்னை வணங்ககச் செய்வாள்.

#1525. குண்டலினியினை ஏன் வணங்க வேண்டும்?

தாங்குமி னெட்டுத் திசைக்கும் தலைமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரு மறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலம் தொடர்தலு மாமே.

எட்டுத் திசைகளுக்கும் தலைவன் ஆனவன் சிவன். ஆறு ஆதாரங்களில் விளங்கும் அழகிய தாமரை மலர்களை மாலையாகக் கொண்டு, சித்ரணி நாடியில் விளங்கும் குண்டலினி சக்தியுடன் பொருந்தி அவனைத் துதியுங்கள். அவ்வாறு செய்தால் அப்போது தோன்றும் நீல நிற ஒளியைப் பின்தொடர்ந்து அருள் பெற முடியும்.

#1526. தீவிர பக்குவம்

நணுகினும், ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகிலும் பான் மலர்த் தூவிப் பணிவன்
அணுகியது ஒன்று அறியாத ஒருவன்
அணுகும் உலகெங்கும் ஆவியும் ஆமே.

இவ்வாறு சக்தியின் அருள் பெற்ற ஒருவனை நாடும் அனைவருமே அவனைப் போல ஞானம் பெறுவார். அனைவரும் தன்னை வணங்கினாலும் அவன் அன்னையை மலர்த் தூவி வழிபடுவான். தன்னை எல்லோரும் வணங்குவதால் ஆணவம் கொள்ள மாட்டான். எப்போதும் சமத்துவ நிலையில் இருப்பான். அவன் எந்த உலகுக்கும் சென்று வரும் ஆற்றலை அடைவான்.

#1527. தீவிர தரம்

இருவினைநேர் ஒப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும் எனும் ஞானத்தால் தன் இயல் அற்றால்
திரி மலம் தீர்ந்து, சிவன் அவன் ஆமே.

நல்வினை, தீவினை இரண்டும் சமமாக உள்ளபோது அருட்சக்தி குரு மண்டலத்தில் விளங்குவாள். ஆன்மா மெய்யறிவு பெறாமல் தடுக்கும் குணங்களைப் போக்குவாள். தன் முனைப்பு அற்று எல்லாம் அவன் செயல் என்று இருப்பவனின் மும்மலமும் கெடும். அவன் சிவமாகத் திகழ்வான்.

#1528. அருளாட்சி அமையும்

இரவும் பகலும் இறந்த இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை உன்னி
அரவம் செய்யாமல் அவளோடு சேர
பரிவு ஒன்றில் ஆளும் பராபரை தானே.

விந்து, நாதங்களைக் கடந்த நாதாந்தத்தில் ஒலியை உண்டாக்கும் சக்தியைத் தியானிக்க வேண்டும். மந்திரம் இல்லாத நாதந்தத்தில் அந்த சக்தியுடன் பொருந்தினால் அவளும் அன்போடு இவனிடம் வந்து பொருந்துவாள்.

#1529. ஊனை விளக்கி உடன் இருப்பாள்

மாலை விளக்கும், மதியமும், ஞாயிறும்
சால விளக்கும் தனிச் சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன் என்னுள் புகுந்து
ஊனை விளக்கி, உடன் இருந்தானே.

கதிரவன், மதி போன்ற ஒளிரும் பொருட்களுக்கு ஒளியைத் தருபவன் சிவன். ஒப்பில்லாத, பரஞ்சுடர் ஆகிய சிவன் உண்மை ஞானத்தை எனக்கு விளக்கிய தலைவன் ஆவான். அவன் என் ஊனை விளக்கி என் உயிருடன் பொருந்தினான்.

ஐந்தாம் தந்திரம் -
18. புறச்சமய தூஷணம்

புறச் சமயம் = அயல் சமயம்.
இறைவனைப் புறத்தில் காண வேண்டும் என்று கூறும் சமயம்.

#1530. பாசத்தில் உற்று பதைப்பார்

ஆயத்துள் நின்ற அறு சமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா,
மாயக் குழியில் விழுவர் மனை மக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.

ஆறு விதமான சமயங்களும் நம் உடலினுள் உறையும் கடவுளைக் காண உதவுவதில்லை. அந்தச் சமயங்களைப் பின்பற்றுபவர்கள் மயக்கத்தைத் மாயக் குழியில் விழுவர். மனைவி, மக்கள் என்னும் பாசத்தில் கட்டுண்டு மனம் பதைபதைப்பர்.

#1531. உள்ளத்தே கரந்து நிற்பான்

உள்ளத்து உளே தான் கரந்து, எங்கும் நின்றவன்,
வள்ளல் தலைவன் மலர் உறை மாதவன்
பொள்ளல் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்து அறியார்களே.

எங்கும் நிறைந்தவன் இறைவன். எனினும் ஒவ்வொரு உயிரின் உள்ளத்தில் உள்ளே ஒளிந்து மறைந்து உறைவான். அவன் ஒரு சிறந்த கொடை வள்ளல். சகசிரதளத்தில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் சக்தியுடன் தானும் பொருந்தி நிற்பான். ஒன்பது வாயில்களைக் கொண்ட உடலில் புகுந்து கொண்டு மேல் நோக்கிச் செல்லும் அந்தக் கள்ளத் தலைவனின் செயல்முறைகளை இந்த உலகத்தவர் எவருமே அறிந்து கொள்ளவில்லை.

#1532. பற்றற்றவனைப் பற்றிடல் வேண்டும்!

உள்ளது முள்ளன் புறத்துள னென்பவர்க்கு
உள்ளது முள்ளன் புறத்துள னெம்மிறை
உள்ளது மில்லை புறத்தில்லை யென்பவர்க்கு
உள்ளது மில்லைப் புறத்தில்லை தானே.

உள்ளத்தில் உள்ளான் இறைவன் என்னும் அன்பரின் உள்ளத்தில் இருந்து அருள் புரிவான் இறைவன். புறத்தே இருந்து உயிர்களை நடத்துவான் இறைவன் என்ற பேதமான ஞானம் உடையவருக்கு அவரிலும் வேறாக நின்று அருள் புரிவான் இறைவன். உள்ளத்திலும் இல்லை, புறத்திலும் இல்லை என்று நாத்திகம் பேசுபவர்களுக்கு அவன் இரண்டு இடங்களிலுமே இருப்பதில்லை.

#1533. தெளிந்த பின் மனை புகலாம்

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனவன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்த பின்
மாறுத லின்றி மனை புக லாமே.

ஆறு சமயங்களையும் உணர்ந்தவர் இறைவனை உண்மையாக உள்ளது உள்ளபடி அறிந்துகொண்டவர் அல்லர். ஆறு சமயங்கள் கூறும் முடிவான மெய்ப் பொருள் அவன் அல்ல என்பதும் மெய். எனவே நீங்கள் இறைவனைப் பற்றி நன்கு ஆராயுங்கள். ஆராய்ந்து தெளிவு பெறுங்கள். தெளிவு பெற்றால் வீடு பேற்றை மிக எளிதில் பெற்றுவிடலாம்.

#1534. நந்திதாள் சார்வது உய்விக்கும்

சிவம் அல்லது இல்லை, அறையே, சிவமாம்
தவம் அல்லது இல்லை, தலைப்படு வோர்க்கு இங்கு,
அவம் அல்லது இல்லை அறு சமயங்கள்.
தவம் அல்ல, நந்திதாள் சார்ந்து உய்யும் நீரே.

சிவனை விடச் சிறந்த தெய்வம் என்று ஒன்று இல்லை. ஆன்மாவில் கரந்து மறைந்து உறையும் சிவனை அறிந்து கொள்வதே சிறந்த தவம் ஆகும். வேறு எதுவுமே தவம் அல்ல. இதை அறியாமல் ஆறு சமயங்களிலும் சிறப்பினை அடைய விரும்புபவர்களுக்கு அவை எல்லாம் வீணே. தவத்தின் பயனை அடையக் குரு மண்டலத்தில் விளங்கும் சிவத்தைக் கண்டு கொண்டு உய்வடைவீர்!

#1535. மண் நின்று ஒழியும் வகை

அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவராக மிகவும் விரும்பியே
உள் நின்று அழிய முயன்றிலர் ஆதலால்,
மண் நின்று ஒழியும் வகை அறியார்களே.

ஆறு சமயங்களின் நெறிகளில் நின்று கொண்டு அண்ணலைத் தேடுபவர்கள், விண்ணவர்களாகும் விருப்பம் கொள்வர். அதனால் அவர்கள் இறைவனை அறிந்து கொள்ளாமல், பிறவிப் பிணியை ஒழிக்காமல் மயக்கம் கொண்டு அழிவர்.

#1536. சிவகதியே கதி !

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னோடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் அவ்வகை யாமே.

சிவநெறியே அனைத்திற்கும் மேலான நெறியாகும். பிற நெறிகள் எல்லாமே பிறவியைத் தரும் நெறிகள். அவற்றைச் சார்ந்தால் பாசத்தினால் உண்டாகும் சம்சாரத் தளைகள் விலகா! சீவனின் உள்ளத்தில் சிவனின் ஒளி தோன்றுவதே சிறந்த தவ நெறியாகும். மும் மூர்த்திகளாகிய நான்முகன், திருமால், உருத்திரன் என்பவர்களும் பிறவியை அளிக்கின்ற தெய்வங்களே அன்றிப் பிறவியை அழிக்கின்ற தெய்வங்கள் அல்ல.

#1537. சிவநெறியே பரநெறி!

நூறு சமயம் உளவாம்; நுவலுங்கால்
ஆறு சமயம் அவ் ஆறுள் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறி நில்லா
ஈறு பறநெறி இல்ஆம் நெறி அன்றே.

பல நூறு சமயங்கள் உலகில் நிலவுகின்றன. ஆறு சமயங்களும் அந்த நூறு சமயங்களில் அடங்கும். எல்லா சமயங்கள் கூறும் நெறிகளிலும் சிறந்தது சிவநெறியாகும். இது ஒன்றே முக்தியைத் தரும் நன்னெறியாகும்.

#1538. பித்தேறிப் பிறந்திறப்பர்!

கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்கும் தொய்வுற்று நிற்கின்றான்
குற்றந் தெரியார் குணக் கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப்பாரே.

பொருள் அறியாத மூடர்கள் கத்தும் கழுதைகளுக்கு சமம் ஆனவர்கள். எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன் சிவன் என்ற போதிலும் இவர்கள் தம் குறைகளை நீக்க முயற்சி செய்வதில்லை. சிவன் பெருமைகளை எண்ணிப் புகழ்ச்சி செய்வதும் இல்லை. உண்மையை அறிந்து கொள்ளாமல் இவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் துயரம் அடைவர்.

#1539. பயம் கெட ஒரு பரநெறி

மயங்குகின்றாரும், மதி தெளிந்தாரும்
முயங்கி, இருவினை முழைமுகப் பாச்சி
இயங்கி பெறுவரேல், ஈறு அது காட்டில்
பயம் கெட்டவருக்கு ஓர் பறநெறி ஆமே.

பக்தி நெறியில் மயங்கி நிற்பவர்களும், ஞான நூல்களைக் கற்று மதி தெளிந்தவர்களும், இருவினைப் பயன்களை அனுபவித்து, அதன்பின் சுழுமுனை வழியே மேலே சென்று, அங்குள்ள பிரமரந்திரத்தில் இறையருளைப் பெறுவதே, பிறவிப் பிணியைப் பற்றிய பயம் கெடுவதற்கு உள்ள ஒரு பரநெறியாகும்.

#1540. காயம் விளைக்கும் கருத்து

சேயன் அணியன், பிணி இலன், பேர் நந்தி
தூயன் துளக்கு அற நோக்க வல்லார்கட்கு;
மாயன், மயக்கிய மானிடராம் அவர்
காயம் விளைக்கும் கருத்து அறியார்களே.

சிவன் தன்னைத் தொலைவில் இருந்து வந்து வணங்குபவர்களுக்கும், அருகில் இருந்து வந்து வணங்குபவர்களுக்கும் அருள் புரிபவன்; பாசப் பிணிகள் நீங்கியவன்; அவன் பேர் நந்தி; அவன் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி அவனைத் தொழுபவர்களுக்குத் தூய பேரொளியாகத் தோன்றுவான். மாயையில் மயங்கி நிற்பவர்களுக்குப் புலப்படான். மாயையில் மயங்கி நிற்கும் மனிதர்கள் இந்த உடல் எடுத்த பயனை அறிய மாட்டார்கள்.

#1541. பழி நெறியும், சுழி நெறியும்

வழிஇரண் டுக்கும் ஓர்வித்து அதுவான
பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழிஅறி வாளன் தன் சொல் வழிமுன் நின்று
அழிவு அறிவார் ,நெறி நாட நில்லாரே.

பழி நெறி வழி வாழ்பவர் உலகில் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் துயர் உறுவர். சுழி நெறி வாழ்பவர் பிறவிப் பிணியை ஒழித்து விடுவர். இந்த இரு வழிப்பட்டவர்களுக்குமே கிடைத்துள்ள உடல் ஒரு அரிய வித்து ஆகும். பிரமரந்திரத்தை அடைந்து பிறவா வரம் பெறும் வழியினை அருளும் குருவின் மொழிப்படி வாழ்ந்து சீவன் பரந்த வெளியுடன் கலந்து விடுவதே சுழி நெறியாகும்.

#1542. இறைவன் வெளிப்படுவான்

மாதவர் எல்லாம் மாதேவன் பிரான் என்பர்,
நாதம் அது ஆக அறியப்படும் நந்தி
பேதம் செய்யாதே 'பிரான்' என்று கைத் தொழில்
ஆதியும் அந்நெறி ஆகி நின்றானே.

பெருந் தவசீலர்கள் மகாதேவனைத் தம்மைச் செலுத்தும் பிரான் என்று கூறி வழிபடுவர். அவன் குரு மண்டலத்தில் நாத வடிவாகத் தோன்றுவான். அவனை வீணாத் தண்டியின் வழியாக வழி பட்டு நின்றால் அவனும் அந்த நெறியின் வழியே தன்னை வெளிப்படுத்துவான்.

1543. பரன் அருள வேண்டும்

அரநெறி அப்பனை, ஆதிப் பிரானை,
உரநெறி ஆகி வந்து உள்ளம் புகுந்தானை
பரநெறி தேடிய பக்தர்கள் சித்தம்
பரன் அறியாவிடில் பல்வகை தூரமே.

அனைத்து சமயங்களுக்கும் தலைவன் ஆனவனை; எல்லாவற்றுக்கும் முதன்மை ஆனவனை; சிறந்த பக்தி நெறியில் வழிபடுபவர்களின் உள்ளம் தேடிவந்து குடி புகுபவனை;மேலான நெறியை விரும்பித் தொழும் பக்தர்களின் சித்தத்தை அறிந்து கொண்டு அவன் வெளிப்பட்டு அவர்களுக்கு அருள வேண்டும். அன்றேல் அவர்களால் உண்மையை அறிய முடியாமல் போய் விடும்.

#1544. துரிசு அற நீ நினை!

பரிசறி வானவன் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழுந்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறநெறி தானே.

சீவர்களின் தன்மையை நன்கு அறிந்தவன்; தன்னை விரும்பியவரை ஆதரிக்கும் உயர்ந்த பண்பு உடையவன்; கதிரவன் போல ஒளி வடிவானவன்; வானவர் பெற்றுள்ள அனைத்துப் பேறுகளுக்கும் பெருந் தலைவனாக உள்ளவன்; அவனைக் குறித்து நீ ஐயங்களை அகற்றிச் சிந்தனை செய்வாய்! தூய மணியினைப் போல ஒளி வீசும் அவன் வைத்த அற நெறிகள் அரிய நெறிகள் ஆகும்.

#1545. கானம் கடந்த கடவுளை நாடுமின்!

ஆன சமயம் அதுஇது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி ;
கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உருவது ஆமே.

“இந்தச் சமயம் சிறந்தது! அந்தச் சமயம் சிறந்தது!” என்று கூறும் மக்களின் மயக்கும் சூழலை விட்டு நீங்கி மயக்கம் நீங்குவீர். நாதாந்தத்தில் உள்ள சிவபெருமானை நாடுங்கள். பஞ்சபூதங்களால் ஆன ஊன் உடம்பினை ஒழித்துப் பிரணவ உடல் பெறும் வழி அதுவே ஆகும்.

#1546. சென்னெறி செல்லாது திகைப்பது ஏன் ?

அந்நெறி நாடி அமரரும் முனிவரும்
செந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றார் பின்
முன்னெறி நாடி முதல்வனரு ளிலார்
சென்னெறி செல்லார் திகைகின்ற வாறே.

அமரர்களும், முனிவர்களும் சிவநெறியே சிறந்தது என்று அறிந்து கொண்டு சிவமாகும் பேற்றினைப் பெற்றனர். முதல்வனாகிய சிவபெருமான் அருளைப் பெற விரும்புபவர் செல்ல வேண்டிய நெறியில் செல்லாமல் திகைத்து நின்று மக்கள் வகுத்த வேறு பிற நெறிகளைப் பின் பற்றிச் செல்வது ஏன்?

#1547. உள் நின்ற சோதி

உறும் ஆறு அறிவதும், உள் நின்ற சோதி
பெறும்ஆறு அறியின் பிணக்கு ஒன்றும் இல்லை;
அறும் ஆறு அதுவானது அங்கியுள் ஆங்கே
இறும் ஆறு அறிகிலர் ஏழைகள் தாமே.

நாம் அடைய வேண்டிய நெறியை அறிந்து கொண்டு, உயிரில் உயிராய்ச் சுடர் விட்டு உள் நிற்கும் அந்த அரிய சோதியைப் பெற முயற்சித்தால் பிணக்கு எதுவும் இல்லை. நம் கர்மங்களைத் தொலைக்கும் வல்லமை கொண்ட அந்தச் சிவசோதியில் கலந்து நின்று சுய போதம் கழிவதை மக்கள் அறிந்து கொள்ளவில்லை எனில் இவர்கள் அறிவற்ற ஏழைகள் தாமே.

#1548. வழி நடக்கும் பரிசு

வழி நடக்கும் பரிசு ஒன்று உண்டு, வையம்
கழி நடக் குண்டவர் கற்பனை கேட்பர்,
சுழி நடக்கும் துயரம் அது நீக்கிப்
பழி நடப்பார்க்குப் பரவலும் ஆமே.

இறைவனை அடையும் வழி என்று ஒன்று உண்டு. உலக இன்பத்தில் விருப்பம் கொண்டு ஒழுகுபவர் தான் பிறர் கூறுகின்ற கற்பனைக் கதைகளைக் கேட்பர். பிறவி என்னும் சுழலில் அகப்பட்டுக் கொள்ளும் துன்பத்தைப் போக்கி, உலக இன்பத்தைப் பழித்து நடப்பவர்கள் பிறரால் போற்றப் படுவார்.

#1549. உம்பர் தலைவன் முன் ஆவான்

வழி சென்ற, மாதவம் வைகின்ற போது
பழி சொல்லும் வல்வினைப் பற்று அறுத்து, ஆங்கே
வழி செல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்டு
உழி செல்லில் உம்பர் தலைவன் முன் ஆமே.

சிறந்த சிவநெறியைப் பின்பற்றி அதில் நன்கு நிலை பெற வேண்டும். பழி பாவங்களில் செலுத்தும் வலிமை வாய்ந்த வினைப் பயன்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும். அந்த வினைகளில் வழியே ஒழுகும் தீவினையாளர்களையும் முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும். பிரமரந்திரத்தின் வழியே மேலே செல்பவர்களுக்குத் தேவர்களுக்குத் தேவனாகிய சிவன் வெளிப்படுவான்.

ஐந்தாம் தந்திரம் -
19. நிராகாரம்

நிராகாரம் என்றால் வடிவம் இல்லாதது என்று பொருள். அருவமான உயிரில் அருவமாக இறைவன் கலந்திருப்பதைப் பற்றிக் கூறும் இந்தப் பகுதி.

#1550. கலந்து நிற்பான்

இமயங்களாய் நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
அமைவு அறிந்தோம் என்பர் ஆதிப் பிரானும்
கமை அறிந்தாருள் கலந்து நின்றானே.

உயர்ந்த தெய்வத் தன்மை பெற்றவர்கள் தத்தம் இயல்புக்கு ஏற்ப ஆறு சமயங்களைப் உருவாக்கினர். அவர்கள் சாத்திரங்களை நன்கு கற்றுத் தேர்ந்துச் சமயங்கள் அமைவதை அறிந்து கொண்டோம் என்பார்கள். ஆனால் சிவன் பொறுமையுடனும் அடக்கத்துடனும் உள்ள ஞானியர் உள்ளத்தில் மட்டுமே கலந்து நிற்பான்.

#1551. நினைக்காதவர் ஏங்கி அழுவர்

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்
நீங்கிய வண்ண நினைவு செய்யாதவர்
ஏங்கி யுலகி லிருந்தழு வாரே.

அன்பர்களின் அறிவு மண்டலம் என்னும் பொன்னொளி மண்டலத்தில் பொருந்தியுள்ள, கொன்றை மலர் சூடிய சிவபெருமானைத் தன்னிலும் வேறாகக் கருதாமல் நினைப்பவர் அவனுக்கு நிகராக ஆகி விடுவர். சிவனைத் தன்னிலும் வேறாகக் கருதி அவனை நினையாமல் இருப்பவர்கள் உலகில் உழன்று துன்புற்று ஏங்கி அழுவர்.

#1552. பெருந்தன்மை நல்குவான்

இருந்தழு வாரும் இயல்பு கெட்டாரும்
அருந்தவ மேற்கொண் டங்கு அண்ணலை எண்ணில்
வருந்தா வகை செய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பிலி தானே.

துன்புற்று அழுபவர்களும், நல்ல இயல்புகளை இழந்து விட்டவர்களும், பெருமையுடைய சிவனை தியானித்து அருந்தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அப்போது சிவன் அவர்கள் துயரங்களைப் போக்கி வருத்தத்தை நீக்குவான். பிறப்பிலியாகிய சிவன் அவர்களுக்குப் பெரிய தகுதிகளையும் நல்குவான்.

#1553. கார்முகில் போல் உதவுவார்.

தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் தானுண்பர்
காரறி வாளர் கலந்து பிறப்பார்கள்
நீரறி வார்நெடு மாமுகி லாமே.

'இறைவன் எங்கோ தொலைவில் இருக்கின்றான்' என்று எண்ணி அவனை வணங்குபவர், அவன் தன்னுடனேயே துணையாக இருந்து தனக்கு

வேண்டியவற்றைத் தருவதை அறிந்து கொள்வதில்லை. உலகில் உள்ள பொருட்களையும், அவை தரும் இன்பத்தையும் விரும்புபவர்கள், அதன் வினை பயனையும் அடைந்து வருந்த நேரிடும். அறியாமையில் அழுந்திய இந்த இரு சாராரும் பிறவிக் கடலில் விழுவர். சிவன் எப்போதும் தன்னை விட்டு அகலாமல் இருப்பவன் என்பதை உணர்ந்து கொண்டவர்கள் கைம்மாறு கருதாத கார்முகில் போல உலகத்துக்கு நம்மை புரிபவர்கள்.

#1554. சேவடி நினைகிலர்!

அறிவுடன் கூடி யழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்தும்
குறியது கண்டும் கொடு வினையாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே.

பிரணவம் என்னும் தோணி, சீவன் அறிவுடன் கூடிச் சிவனை அறிந்து அவனை அனுபவிப்பதற்கு உதவுகின்றது. அந்தச் சிவம் என்னும் பேரொளியாகிய தூண் வினைப் பயன்களைச் சேமிக்கும் காரண உடலை அழிக்க வல்லது என்ற உண்மையை அறிந்திருந்தும் கொடு வினையாளர்கள் சிவனின் சேவடியை நினைப்பதில்லையே!

#1555. தொழுபவருக்குச் சிவப் பேறு!

மன்னும் ஒருவன் மருவு மனோமயன்
என்னின் மனித ரிகழ்வரிவ் வேழைகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையும் அங்கே தலைப் பட லாமே.

மன்னும் சிவன் மனத்தோடு பொருந்திய பரம் பொருள் என்ற போதிலும், அதனை உணராமல் அவனை இகழ்பவர்கள் அறிவில்லாத ஏழைகள் ஆவர். உண்மையான செல்வமாகிய சிவனை இகழாமல், அவன் சிறப்பினை உணர்ந்து கொண்டு, அவனை உள்ளத்தில் இறுத்தி வணங்குங்கள் . அப்போது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிவத்தினை உணர்ந்து சிவப் பேற்றினை அடைய முடியும்.

#1556. நீங்காச் சமயம் நின்று ஒழிவர் !

ஓங்காரத்து உள்ளொளி உள்ளே உதயம் உற்று,
ஆங்காரம் அற்ற அனுபவம் கை கூடார்,
சாம்காலம் உன்னார், பிறவாமை சார்வுறார்,
நீங்காச் சமயத்துள் நின்று ஒழிந் தார்களே.

மயக்கம் தரும் சமயங்களைச் சார்ந்தவர்கள் பிரணவத்தின் உள்ளே ஒளிரும் சிவனைக் காணார்; தன் தனித் தன்மை கெட்டு அவனுடன் ஒன்றாகச் சேரார் ; உடல் அழியும் என்ற உண்மையை அறியார்; பிறவிப் பிணியை ஒருநாளும் ஒழியார்.

ஐந்தாம் தந்திரம் -
20. உட்சமயம்

சீவன் சிவசோதியை அறியச் செய்வது. சன்மார்க்கம் என்னும் ஒளிநெறி இதுவே.

#1557. ஆறு சமயங்களும் அவனை நாடும்

இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்,
சமையங்கள் ஆறும் தன் தாளினை நாட
அமைய அங்கு உழல்கின்ற ஆதிப் பிரானே.

உடல், கருவிகள் ,கரணங்கள் முதலியவற்றைத் தந்து விண்ணவர்களையும் , மண்ணவர்களையும் உலகில் பொருந்தி அனுபவம் பெறுமாறு செய்தவன் சிவன். அவன் மிகவும் பழமையானவன். ஆறு சமயங்களும் அவன் திருவடியை நாடுகின்றன .அவன் அவற்றில் கலந்து விளங்குவதால் அவனே அனைத்துக்கும் முதல்வன் ஆவான்.

#1558. குன்று குரைக்கும் நாய்

ஒன்று அது பேரூர் வழி ஆறு அதற்குள்,
என்றது போல, இரு சமயமும்
நன்று இது, தீது இது என்று உரையாளர்கள்
குன்று குரைத்து எழு நாயை ஒத்தாரே.

ஒரே ஊருக்குச் செல்வதற்கு ஆறு வேறு வேறு வழிகள் உள்ளன. அதைப் போலவே ஆறு சமயங்களும் ஒரே பொருளை அடைவிக்கின்றன. அவற்றில் இது நன்று இது தீது என்று உரைக்கும் அறிவிலிகள், குன்றை நோக்கிக் குரைக்கும் நாயைப் போன்றவர்கள்.

#1559. வையத் தலைவனை அடைந்து உய்வீர்

சைவப் பெருமைத் தனிநாயகன் தன்னை,
உய்ய உயிர்க்கின்ற ஒண் சுடர் நந்தியை
மெய்ய பெருமையர்க்கு அன்பனை, இன்பம் செய்
வையத் தலைவனை வந்து அடைந்து உய்மினே.

உய்ய விரும்புபவர்கள் செய்ய வேண்டியது என்ன ?

பெருமை வாய்ந்த சைவ சமயத்தின் ஒப்பற்ற தனித் தலைவனான சிவனை வந்து அடைய வேண்டும்.

உயிர்களை உய்விக்கும் ஒண் சுடர் சோதியான சிவனை வந்து .அடைய வேண்டும். மெய்யறிவு பெற்ற அடியார்களுக்கு அன்பன் ஆன சிவனை, இந்த வையத்தின் ஒரே தலைவனை வந்து வணங்க வேண்டும்.

#1560. பழ வழி நாடுவீர்

சிவன் அவன் வைத்தது ஓர் தெய்வ நெறியில்
பவன் அவன் வைத்த பழவழி நாடி,
“இவன் அவன் ” - என்பது அறியவல்லார்கட்கு
அவன் அவன் அங்கு உளதாம் கடன் ஆமே.

உயிர்கள் உய்யும் பொருட்டுச் சிவபிரான் ஒரு தெய்வநெறியை ஏற்படுத்தியுள்ளான். அந்தப் பழமையான வழியில் சென்று இந்த சீவனே அந்தச் சிவன் என்னும் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போது சிவன் அந்த வழியில் செல்லும் சீவனுக்கு அங்கு தவறாமல் தோன்றுவான்.

#1561. ஆதார சக்தி தாங்குவாள்

ஆமாறு உரைக்கும் அறு சமயாதிக்குப்
போமாறு தான் இல்லை புண்ணியம் அல்லது அங்கு
ஆம்ஆம் வழி ஆக்கும் அவ்வேறு உயிர்கட்குப்
போம் ஆறு; அவ் ஆதாரப் பூங்கொடியா ளே.

சீவர்கள் உய்யும் வழிகளை உரைக்கும் ஆறு சமயங்களின் உச்சியைச் சீவர்கள் தாமாக ஏறி அடைந்து விட முடியாது. அவர்கள் முன்பு நல்வினைப் பயன்களே அவர்களுக்கு அந்த வழியை அமைத்துத் தரும். அப்படி மேலே செல்லும் சீவர்களைத் தாங்குவது ஆதார சக்தியின் திருவருள் என்று அறிவீர்.

#1562. தனிச் சுடர் தரும் நெறி

அரநெறி யாவ தறித்தேனு நானுஞ்
சிலநெறி தேடித் திருந்தவந் நாளும்
உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறும்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே.

சிவனை அடையும் வழிகளை அறிந்து கொண்டு நான் வேறு சில நெறிகளைத் தேடித் திரிந்தேன். அந்த நாட்களில் உண்மையான நல்ல நெறியில், எண்ணங்கள் என்னும் கடலை நீந்திக் கடந்து கரை ஏற எனக்கு உதவி செய்தது நிகரற்ற சிவச் சுடரே ஆகும். சீவனில் உறையும் சிவசோதியை அறிந்து கொள்வதே அனைத்துக்கும் மேலான சிவநெறியாகும்.

#1563. பரமுக்தி தருவது சிவநெறி

தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி
பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள் நெறி
போந்து புனைந்து புணர்நெறி ஆமே.

ஆராய்ச்சிகளும், அனுபவங்களும் உணர்த்கின்ற உண்மை சிவனே பரம்பொருள் என்பது ஆகும். அவனை அடைவிக்கின்ற சிவநெறியில் பிற சமயங்களைச் சார்ந்தவர்களும் மீண்டும் வந்து ஒன்றிவிடுவர். சீவர்கள் தங்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப வேறு வேறு உலகங்களை அடைவதற்கும் இந்த நெறியே உதவுகின்றது. அந்த முத்தி நிலைகளில் நின்ற பின்பு மீண்டும் வந்து அவர்கள் பொருந்துவது இந்தச் சிவநெறியில் தான்.

#1564. சுடரொளி தோன்றும்

ஈரு மனதை இரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை யோதுமி னோதியே
வாரும் அறநெறி மன்னியே மன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே.

புறவுலகை நாடி செல்கின்ற மனதைத் திசை திருப்பி அகப் பொருளாகிய சிவன் மீது அதைப் பொருத்துங்கள். அதற்குச் 'சி'காரத்தால் உணர்த்தப்படுவதும், மூலாதாரத்தில் இருந்து மேல் நோக்கிச் செல்வதும் ஆகிய திரு ஐந்தெழுத்து மந்திரத்தை கூறுங்கள். இந்த சாதனையைச் சிவநெறியில் பொருந்தி செய்து வந்தால், நெற்றிக்கு முன்பாக ஒரு சிவந்த ஒளி தோன்றும்.

#1565. இதுவே அரநெறி ஆகும்

மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனக் குறியாளனை ஆதிப் பிரான் தன்னை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தின்
நயக் குறி காணி லரநெறி யாமே.

யோகப் பயிற்சி செயப்வனுக்கு மின்னல் ஒளி போன்று வெளிப்படுவான் சிவன். அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயில் வெளிப்படுவான் சிவன். எந்த உருவில் அவனை நினைத்தாலும் அந்த உருவில் வெளிப்படுவான் சிவன். ஞானக் கொழுந்தாகிய அவனை ஒளி மயமாகக் காண்பதுவே அரநெறி என்னும் சிவநெறியாகும்.

#1566. அரன் நெறி தரும் இன்பம்

ஆய்ந்துண ரார் களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற அரனெறி
பாய்ந்துணர் வாரரன் சேவடி கைதொழுது
ஏய்ந்துணர் செய்வதோ ரின்பமு மாமே.

ஆராய்ந்து ஒளி நெறியே சிறந்தது என்று உணராதவர்கள் பல நெறிகளிலும் பொருந்தி நின்றாலும் அரன் நெறியில் புக முடியாது. ஒளி நெறியில் சிறப்பை உணர்ந்து கொண்டு, அரன் நெறியில் புகுந்து, அவன் மேன்மையை உணர்ந்து, அவன் சேவடிகளைக் கைதொழுபவர் பெறுவது ஒப்பில்லாத பேரின்பம் ஆகும்.

#1567. ஒளி நெறியே சிவநெறி

சைவ சமயத் தனி நாய கனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே.

சைவச் சமயத்தில் ஒப்பற்ற தனித் தலைவன் சிவபெருமான். அவன் உயிர்கள் உய்வதற்கு ஒரு ஒளி நெறியை அமைத்துத் தந்துள்ளான். அதுவே தெய்வத் தன்மை வாய்ந்த சிவநெறி எனப்படும் சன்மார்க்கம். வையத்தோர் உய்வடைடைய உலக மக்களுக்கு சிவன் தந்த நன்னெறியாகும்.

#1568. வீடுபேறு அடையலாம்

இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி
யெத்தவ மாகிலென் எங்கு பிறக்கிலென்
ஒதுணர் வார்க் கொல்லை யூர்புக லாமே.

இந்தத் தவம் சிறந்தது! அந்தத் தவம் சிறந்தது என்று பேதப்படுத்திப் பேசும் அறிவற்றவர்களைக் கண்டால் சிவ பெருமான் சிரிப்பான்! எந்தத் தவத்தை மேற்கொண்டால் என்ன? எங்கே சென்று பிறந்தால் என்ன? இறைவனோடு வேறுபாடு இன்றி ஒன்றி நின்று அவனை உணர்பவர்களே வீடு பேற்றினை அடைய முடியும்.

#1569. தெய்வத் தன்மை பெறலாம்

ஆமே பிரான்முகம் ஐந்தொடு ஆருயிர்
ஆமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்
நாமே பிரானுக்கு நரரியல் பாமே.

உயிர்களுடன் பொருந்தி விளங்கும் சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. தத் புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், ஈசானம் என்ற ஐந்து முகங்களுடன் என்னும் ஐந்து முகங்களுடன் அதோமுகம் என்னும் ஆறாவது முகமும் உண்டு. சிவனை உணர்ந்து கொண்டவர்களுக்கு அதோமுகம் மேல் நோக்கியபடி விளங்கும். ஆறு முகங்களும் சதாசிவன் போல ஆகிவிடும். சிவத்தை அறியாதவர்களுக்கு அதோமுகம் கீழ் நோக்கியபடி இருக்கும்.

#1570. சக்தியின் செயல்கள்

ஆதிப் பிரானுல கேழு மளந்தவன்
ஓதக் கடலு முயிர்களு மாய்நிற்கும்
பேதி பிலாமையி னின்ற பராசக்தி
ஆதிக்கண் தெய்வமு மந்தமு மாமே.

ஆதிப் பிரானாகிய சிவன் ஏழு உலகங்களிலும் கலந்து விளங்குகின்றான். அலை கடலாகவும், கடல் சூழ்ந்த உலகமாகவும், உலகில் உள்ள உயிர்களாகவும் இருக்கின்றாள் சக்தி. சிவனிடமிருந்தி பிரியாமல் இருக்கும் சக்தி, ஆதியில் உலக உற்பத்திக்கு உதவி புரிகின்றாள். அவளே அந்தத்தில் உலகினைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்கின்றாள்.

#1571. இம்மையில் மறுமையைக் காணலாம்

ஆய்ந்தறி வார்க ளமரர் வித்தி யாதரர்
ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி
ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ
ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே.

அமரர், வித்தியாதரர் போன்றவர்கள் ஆராய்ந்தால் உண்மையை அறிந்து கொள்ள முடியும். ஆயினும் அவர்கள் இன்பம் வேண்டி இறைவனை வழிபடுவதால் உண்மையை அறிந்து கொள்வதில்லை. ஆராய்ச்சியால் அறிய முடியாத அரன் நெறியை அவன் சேவடிகளைக் கை தொழுது நான் அறிந்து கொண்டேன். அதனால் நான் இம்மையிலேயே மறுமை இன்பத்தை அடைந்தேன்

#1572. சிவனை அறிவதே மேலான சமயம்

அறியவொண் ணாதவ் வுடம்பின் பயனை
அறியவொண் ணாத அறவகை யாக்கி
அறியவொண் ணாத வறு வகைக் கோசத்து
அறியவொண் ணாததோ ரண்டம் பதிந்ததே.

மனித உடலைப் பெற்றதன் பயன் இறைவனை அறிந்து கொள்வதற்கே என்ற இந்த உண்மையை மக்கள் அறிந்து கொள்ளவில்லை! அறிய ஒண்ணாத சிவம் சீவனின் கூடு போன்ற அண்டமாக உள்ளது. அறிய ஒண்ணாத வானத்தைச் சிவம் உடலின் ஆறு ஆதாரங்களில் இயங்க வைத்தது. சிவம் அறிய ஒண்ணாதவற்றை உடலின் ஆறு கோசங்களில் அனுபவிக்கச் செய்தது.

ஆறு கோசங்கள்:
1. பூத ஆத்மா, 2. அந்தராத்மா, 3. தத்துவாத்மா, 4. சிவாத்மா, 5. மந்திராத்மா, 6. பரமாத்மா.

இத்துடன் திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் முற்றுப் பெற்றது.

ஆறாம் தந்திரம்

ஆறாம் தந்திரம் -
1. சிவகுரு தரிசனம்

உள்ளத்தில் உள்ள சிவனையே தன் குருவாகக் காணுதல்.

#1573. சித்தம் இறையே சிவகுரு

பத்திப் பணிந்துப் பரவும் அடி நல்கிச்
சுத்த உரையால் துரிசு அறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் , சதசத்தும் காட்டலால்
சித்தம் இறையே சிவகுரு ஆமே.

பக்தியை உண்டாக்குவான் சிவன்; தன் சேவடிகளை வணங்கச் செய்வான் சிவன்; பிரணவ உபதேசத்தால் ஆன்மாவின் குற்றங்களை நீக்குவான் சிவன்; சத்து (சிவம் அல்லது பதி) ; அசத்து (உலகம் அல்லது பாசம்); சதசத்து (ஆன்மா அல்லது பசு) என்பவற்றின் உண்மையான இயல்புகளை உயிருக்கு உணர்த்துபவன் சிவன். ஆதலால் சிவனே சிறந்த குரு ஆவான்.

#1574. ஆசு அற்ற சற்குரு

பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர் நேரே
கூசு அற்ற முத்தியில் கூட்டலால் , நாட்டத்தது
ஆசு அற்ற சற்குரு அம்பலம் ஆமே.

சீவன் ஆணவத்தில் அமிழ்ந்து, "உடலே நான்!" என்று மயங்கிக் கிடக்கின்றது. அதன் மாய மலத்தைக் கழித்தும், அதன் ஆணவத்தை நீக்கியும், அது உடல் மீது கொண்ட நேசத்தைப் போக்குவதும் சிவகுரு ஆவான். முத்தியில் நேருக்கு நேராகச் சேர்த்து வைக்கும் சிவனே உபாசகனின் ஒளி மண்டலத்தில் உள்ள குற்றமற்ற குரு ஆவான்.

#1575. நாதன் அருள் நல்குபவை இவை

சித்திக லெட்டொடும் திண்சிவ மாக்கிய
சுத்தியு மெண்முத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியு மந்திர சாதக போதமும்
பத்தியு நாத னருளில் பயிலுமே.

நாதன் அருள் நமக்கு நல்குபவை இவை : அணிமா முதலிய சித்திகள் எட்டும் கைக் கூடும் . சாதகன் சிவனைப் போன்ற பக்குவ நிலை அடைவான். வாமை

முதலிய எட்டு சக்திகளுக்கும் கட்டுப்படாத தூய்மை அடைவான். யோகத்தால் நிரம்ப ஆற்றல் ஏற்படும். மந்திர தியானத்தால் ஞானம் விளையும். இறைவனிடத்தில் மிகுந்த அன்பு தோன்றும்.

எட்டு சித்திகள்:
அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்,

எட்டு சக்திகள்:
வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூத தமனி.

#1576. சுத்த சிவமே நற்குரு

எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லா ருள்ளத்து மிக்கருள் நல்கலால்
எலாரு முய்யக்கொண் டிங்கே அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே.

எல்லா உலகங்களுக்கும் அப்பாற் பட்டவன் சிவன்; இந்த உலகிலும் நிறைந்து இருப்பவன் சிவன்; நல்லோர் உள்ளத்தில் உறைந்து அருள்பவன் சிவன்; எல்லோரும் உய்யுமாறு அருள்பவன் சிவன்; இவ்வுலகிலேயே எல்லோரும் உய்யுமாறு அருள்பவன் சிவன் .ஆதலால் பிரணவ வடிவு கொண்ட சிவனே ஒரு நல்ல குரு ஆவான்.

#1577. முத்தி நல்குவான்

தேவனும் சுத்த குருவும் உபாயத்துள்
யாவையும் மூன்றாயுளக் கண்டு, உரையாலே
மூவாப் பசு பாசம் மாற்றியே முத்திப் பால்
ஆவையும் நல்கும் குருபரன் அன்புற்றே.

தேவனாகவும், தூய குருவாகவும் விளங்குபவன் சிவன். நூல்களில் பதி , பசு, பாசம் என்ற மூன்றாகக் கூறப்படுவதைத் தன் உபதேசத்தால் மாற்றி விடுவான். அழிவற்ற சீவனைத் தளைப் படுத்தும் பாசத்தை நீக்கிவிடுவான். சீவனுக்கு அன்புடன் முக்தியையும் அளிப்பான்.

#1578. குருவாய் அருள்பவன் சிவன்

சுத்த சிவன் குருவாய் வந்து, தூய்மை செய்து
அத்தனை நல்கு அருள் காணா அதி மூடர்
பொய்த்தகு கண்ணால் , நமர் என்பர், புண்ணியர்
அத்தன் இவன் என்று அடி பணிவாரே.

சிவனே சீவனிடத்தில் அருள் கொண்டு குருவாக உருவெடுத்து வருவான். சீவனின் மலங்களை அகற்றுவான். அவன் அருளை அறியாத அறிவற்றவர்களும் , உலக இன்பத்தில் ஈடுபாடு உடையவர்களும், பாசம் என்னும் தளைப் பட்டவர்களும் குருவைத் தமக்குச் சமமாகவே எண்ணுவர். ஞானியரோவெனில் குருவைச் சிவனாகவே கருதுவர்.

#1579. பொய்மை ஒழியும்

உண்மையிற் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும், எட்டெட்டுச் சித்தி மயக்கமும்
அண்ணல் அருள் அன்றி யார் அறிவாரே?

ஞானத்தால் பொய்மையை ஒழிக்க வேண்டும். உண்மையைக் கண்டறியும் திண்மை பெற வேண்டும். சிவனின் அருளைப் பெற வேண்டும். எட்டு சித்திகள் தரும் மயக்கத்தை வெல்ல வேண்டும். அண்ணலின் அருள் அன்றி இவை அனைத்தும் சாத்தியமாகுமா?

#1580. நன் முத்தி நண்ணும்

சிவனே சிவஞானி யாதலால் சுத்த
சிவனே எனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முக்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே.

சிவனே உருவெடுத்து உபதேசம் செய்யச் சிவஞானி ஆக வருவான். தனக்கு உபதேசம் செய்யும் குருவைச் சிவனாகக் கருதுபவருக்கு சிவபெருமானின் நட்பும் நல்ல முத்தியும் கிடைக்கும். அவர் பிறவிப் பிணையை வென்று சிவ லோகப் பதவியை அடைவர்.

#1581. குருவே சிவன்

குருவே சிவமெனக் கூறினான் நந்தி
குருவே சிவமென் பது குறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணா வற்றதோர் கோவே.

என் ஒளி மண்டலத்தில் உள்ள சிவன், “குருவே சிவன் ஆவான்!” என்று கூறினான். குருவே ஒளி மண்டலத்தில் உயிரின் தலைவனாகவும், ஒப்பற்ற மன்னனாகவும் விளங்குகின்றான். இத்தகைய குரு மண்டலத்தில் சிவன் உள் நின்று ஒளிர்வதை உணராதவர்கள் பேதைகள்.

#1582. அத்தன் சித்தத்தில் அமர்வான்

சித்தம் யாவையும் சிந்தித்திருந் திடும்
அத்தம் உணர்த்துவ தாகும் அருளாலே ;
சித்தம் யாவையும் திண்சிவம் ஆனக்கால்
அத்தனும் அவ் விடத்தே அமர்ந்தானே.

சீவனின் சித்தம் தான் அறிந்தவை எல்லாவற்றையும் குறித்து எப்போதும் சிந்தித்த வண்ணம் இருக்கும். அத்தன் அருள் பெற்றவர்களால் மட்டுமே அவனைக் குறித்து மட்டும் சிந்திக்க முடியும். இங்ஙனம் சித்தம் முழுவதையும் வேறு நினைவுகள் இன்றிச் சிவமயமாக ஆக்கிவிட்டால் சிவனும் அங்கு வந்து அமர்ந்து கொள்வான்.

#1583. தனிச் சுடர் ஆவான்

தான் நந்தி நீர்மையுட் சந்திக்கச் சீர்வைத்த
கோன் நந்தி , எந்தை குறிப்பு அறிவார் இல்லை
'வான் நந்தி' என்று மகிழும் ஒருவற்குத்
தான் அந்தி அங்கித் தனிச் சுடர் ஆகுமே.

தந்தையைப் போன்ற சிவபெருமான் தானே வந்து குருமண்டலத்தில் பொருந்தும் சீர்மையை உணர்பவர் இலர். சிவன் வானத்தில் குருமண்டலத்தில் திகழ்பவன் என்று எண்ணுவார்கள். அக்கினி மண்டலத்தில் விளங்குகின்ற மன்னனே ஒப்பில்லாத சிவசூரியன் ஆவான்.

#1584. வேதாந்த போதம்

திரு ஆய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளாது அருளும் மயக்கறும் வாய்மைப்
பொருள் ஆய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் அருளாவிடில் ஓர் ஒண்ணாதே.
குருவருளால் கிடபிப்பவை எவை?

செல்வமாகிய சித்தியும், அதன் பயனாகிய முக்தியும், மயக்கம் நீங்கிய தெளிவும், ஐயங்கள் அகன்று நன்கு உணர்ந்த மெய்ப்பொருளும், வேதங்களின் ஞானமும் இவை அனைத்துமே குரு அருளும் பொழுது மட்டுமே கிடைப்பவை. அவர் அருளாவிட்டால் யாருக்குமே கிடைக்காதவை.

#1585. ஞானம் என்னும் பயிர்

பத்தியும் ஞான வைராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்தலால்
முத்தியின் ஞானம் முளைத்தலால் அம்முளை
சத்தி அருள் தரில் தான் எளிதாமே.

பர சித்தி அடைய உதவும் வித்துக்கள் சிவனிடத்தில் கொண்ட பக்தியும், ஞானம் அடைய வேண்டும் என்னும் வைராக்கியமும் ஆகும். சிவோகம் அல்லது 'நானே சிவன்' என்ற எண்ணம் உண்டாகி அது முதிர்ச்சி அடையவேண்டும். சக்தியின் அருளால் ஞானம் என்னும் பயிர் எளிதாக வளர்ந்து முத்தியை அளிக்கும்.

#1586. சிவனை அடைய உதவும் மனம்

பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்தும் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த மைத்த மனமது தானே.

வீடு பேறு அடைவதற்காகவே இறைவன் எனக்கு இந்த உலகில் ஒரு பிறவியை அளித்துள்ளான். முன்னமே எனக்கு இவ்வாறு உதவி செய்த இறைவனை நான் ஞானத்தின் துணை கொண்டு நெருங்கும் பொழுது அவனே தன்னை வெளிப்படுத்துவான். இங்கனம் சிவனைச் சென்று அடையப் பேருதவி செய்வது என் மனம்.

#1587. சிவானந்தம் நல்கும்

சிவமான ஞானம் தெளியவொண் சித்தி
சிவமான ஞானம் தெளியவொண் முத்தி
சிவமான ஞானம் சிவபரத் தேயேகச்
சிவமான ஞானம் சிவானந்த நல்குமே.

சிவஞானம் தெளிவடையும் போது நல்ல சித்திகள் உண்டாகும். சிவஞானம் தெளியும் போது உயரிய முத்தி உண்டாகும். சிவஞானம் பெருகும் போது சிவம் ஆன்மாவில் நிலை பெறும். சிவஞானத்தால் உயர்ந்த சிவானந்தம் உண்டாகும்.

#1588. பிறவி ஒழிந்தேன் நானே

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றும்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே.

நான் கற்ற கல்வியினாலும், பெற்ற அனுபவங்களினாலும் இந்த விரிந்து பரந்த உலகத்தை அறிந்து கொண்டேன். சிவனுடன் பொருந்தி, அவன் பெயரை ஓதி அவன் திருவருளைப் பெற்று விட்டேன். அறிவிலிகளின் கூட்டத்தை விட்டு விலகியே நின்றேன். இவற்றின் காரணமாக நான் பிறவி என்பதை ஒழித்து விட்டேன்.

1589. ஈசனைக் கண்டு கொண்டேன்!

தரிக்கின்ற பல்லு யிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்;
பிரிக்கின்ற இந்தப் பிணக்கு அறுத்து, எல்லாம்
கருக் கொண்ட ஈசனைக் கண்டு கொண்டேனே.

வினைப் பயனாகப் பெற்ற உடலைத் தரிக்கும் அனைத்து சீவராசிகளுக்கும் தலைவன் சிவன். சீவன் சிவனிடம் பொருந்தி இருப்பதை பலரும் அறிவதில்லை .சீவர்கள் அறியாத வண்ணம் அவற்றின் பிணக்குகளை எல்லாம் அறுத்து விட்டு அவற்றைத் தன் கருவில் வைத்துக் காக்கும் சிவனை நான் கண்டு கொண்டேன்.

ஆறாம் தந்திரம் -
2. திருவடிப் பேறு

திருவடி = இறைவன் அருள்
அடி = குண்டலினி சக்தி
குண்டலினி சக்தி சிரசை நோக்கிச் செல்வதே திருவருள்.
குண்டலினி சக்தி தலையில் பொருந்தி இருப்பது திருவடிப் பேறு.

#1590. குருபதம் உள்ளத்து வந்தது

இசைந்து எழும் அன்பில் எழுந்த படியே
பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னியில் வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்ததே.

மனதில் இசைந்து எழும் அன்பின் வழியே எழும்பி மேலே எழ வேண்டும். அன்பு கொண்ட ஈசனை நம் அன்பால் பற்ற வேண்டும். சிவந்த ஒளி சிரசை அடைந்ததும் நான் விரும்பிய இறைவனின் பதம் என் உள்ளத்தில் தோன்றியது.

மூலாதாரத்திலும், சுவாதிட்டானத்திலும் உள்ள சக்கரங்கள் சிவந்த ஒளி கொண்டவை. இவை பிடரி வழியாகச் சென்று பிரமரந்திரத்தை அடையும் போது குருமண்டலம் விளங்கும். ஆனந்தம் பெருகும்

#1591. அந்தம் இன்றி வீடு ஆள்க!

தாள்தந்தபோதே தனைத் தந்த எம் இறை
வாள்தந்த ஞான வலியையும் தந்திட்டு,
வீடு அந்தம் இன்றியே ஆள்க என விட்டு அருள்
பாடு இன்முடி வைத்துப் பார்வந்து தந்ததே.

தன் திருவடிகளைச் சிவன் எனக்கு அளிக்கும் போதே தன்னையும் எனக்குத் தந்து விட்டான். வலிமை மிக்கக் கூரிய ஞான வாளையும் எனக்குத் தந்தான்."அந்தம் இல்லாக் காலத்துக்கு நீ வீட்டுலகை ஆளுவாய்!" என்று எனக்கு அருள் புரிந்தான். இவை அனைத்தையும் சிவன் இந்த உலகுக்கு வந்து எனக்குத் தந்தான்.

#1592. சிவ சொரூபம் வரும்

தான் அவன் ஆகிச் சொரூபத்து வந்திட்டு
ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின
ஏனைய முத்திரை ஈந்தாண் ட நன் நந்தி
தான் அடி முன் சூட்டித் தாபித்தது உண்மையே.

சிவன் என்னை வந்து ஆட்கொண்டபோது நானும் சிவனின் வடிவம் பெற்றேன். அதற்கு முன்பு என்னிடம் விளங்கிய நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன் என்ற வடிவங்கள் நான்கும் அகன்று விட்டன. ஏனைய நான்கு முத்திரைகள் ஆகிய அருவமாகிய சதாசிவம், விந்து, நாதம், சத்தி என்பனவற்றை என்னிடம் விளங்கச் செய்தான். அவன் திருவருளை நான் முன்னமே பெற்றுள்ளவன் என்பதை நிரூபணம் செய்தான்.

#1593. சொல் இறந்தோமே

உரை அற்று, உணர்வு அற்று, உயிர் பரம் அற்று,
திரை அற்ற நீர் போல் சிவமாதல் தீர்த்துக்
கரை அற்ற சத்தாதி நான்கும் கடந்த
சொரூபது இருத்தினான்; சொல் இறந்தோமே.

இத்தகைய இன்பத்தை அனுபவிக்கும் போது உரை அற்றுவிடும்; உணர்வு அற்று விடும்; தன்னிலை மறந்து விடும்; தெளிந்த அலையற்ற நீரைப் போன்று அசைவற்ற சிவத்தன்மையும் கெடும். நான்கு வகை வாக்குகளையும், நாதத்தையும் கடந்து, எல்லையில்லாத தன் வடிவத்துடன் சிவன் என்னை ஒன்றாக்கி விட்டான்.

அதனால் பிறப்பு இறப்பு இவற்றின் எல்லையாகிய பிரணவத்தை நான் கடந்து விட்டேன்.

#1594. உய்யக் கொண்டான்

குரவ னுயிர்முச் சொரூபமும் கைக் கொண்டு
அரிய பொருள் முத்திரை யாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்று
உருகிட வென்னையங் குய்யக் கொண்டானே.

உத்தம குரு செய்ய வேண்டியது எது?

தன்னிடம் தீட்சை பெற வந்துள்ள மாணவனின் மூன்று உடல்களாகிய பருவுடல், நுண்ணுடல், காரண உடல் இவற்றில் உள்ள தடைகளை நீக்க வேண்டும்.உயிரைக் குருவிடம் வேண்டும். உயிர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானிடம் மாணவனை மௌன யோகத்தில் பொருந்தச் செய்து ஆட்கொள்ள வேண்டும்.

#1595. மாளாப் புகழும், தாளும் தருவான்

பேச்சற்ற இன்பத்துப் பேரானந்தத்திலே
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதிக் கடன் மூன்றும் கைக் கொண்டு
வாச்ச புகழ் மாளத் தாள்தந்து மன்னுமே.

என் குற்றங்குறைகளை சிவன் அகற்றிவிட்டான். என்னையும் அவன் சிவமாக்கிவிட்டான். வாக்குக்கு அப்பாற்பட்ட பேரின்பத்தில் என்னை ஆழ்த்தி விட்டான். அவன் சோதி நம்மைக் காய்வதில்லை! எனினும் அது என் ஆன்மாவின் மூன்று குற்றங்களையும் முற்றிலுமாக அழித்து விட்டது. சிவன் என் ஆணவத்தை அழித்துத் தன் திருவடிகளை என் மீது சூட்டி நிலை பெற்று விளங்கினான்.

#1596. விளம்ப ஒண்ணாதே!

இதயத்து நாட்டத்து மென்தன் சிரத்தும்
பதிவித்த வந்தப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் மெய்காட்டிய வாறும்
விதிவைய்த்த வாறும் விளம்ப ஒண்ணாதே.

குரு தன் திருவருளை என் இதயத்தின் மீதும், என் பார்வையிலும், என் தலை மீதும் பதித்தார். கீழ் நோக்கியவாறு மண்டலமிட்டிருந்த குண்டலினி சக்தியை மேல் நோக்கியவாறு செய்தார். விந்து நாதங்களையும் அவை செயல்படும்

முறைகளையும் எனக்கு உணர்த்தினார். இவற்றை எல்லாம் என்னால் வேறு ஒருவருக்கு விளம்பவும் ஒண்ணாது.

#1597. ஞான தீட்சை பெற்றேன்

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடிவிற் கண்ட கோனை எங்கோவை
கருவழி வாற்றிடக் கண்டு கொண்டேனே.

தன் திருவடியை என் தலை மீது சூட்டினான். அருள் வழிய என்னை நோக்கினான். எங்கும் நிறைந்துள்ள தன் பெருவடிவினை எனக்குத் தந்தான்.குரு வடிவில் வந்த என் மன்னனை நான் என் பிறவிப் பிணி உலர்ந்து போகும் வண்ணம் நன்கு கண்டு கொண்டேன்.

#1598. திருவடி ஞானம் முத்தி தரும்!

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருவடி ஞானம் அளிப்பவை இவை :சாதகனைச் சிவமயமாக்கி விடும்; அவனைச் சிவலோகத்தில் கொண்டு சேர்க்கும்; ஆன்மாவைச் சிறைப் படுத்தி இருந்த மலங்களில் இருந்துஅதை மீட்கும்; அணிமா முதலிய எண் சித்திகளையும் அதன் பின்னர் உயர்ந்த முத்தியையும் தரும்.

#1599. தாள் வைத்துத் தரிப்பித்தான்

மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப்ப் படரொளி வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே.

கீழ் நோக்கியவாறு இருந்த குண்டலினி சக்தியை மேல் நோக்கும் படிச் செய்யாவிடில், பண்டு செய்த வினைகளின் பயன்கள் மீண்டும் உள்ளதை மயக்கி மாயையின் வழியில் செலுத்திவிடும். பால் போன்ற வெண்மையான ஒளி பொருந்திய மண்டலத்தில் உள்ள இறைவன் தன் திருவடியை என் மேல் பதித்து என்னை விட்டு அகலாது இருந்தான்.

#1600. உடல் பற்று அழியும்

கழல்ஆர் கமலத் திருவடி என்னும்
நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானும்
குழல் சேரும் என் உயிர் கூடும் குலைத்தே.

தாமரையில் விளங்குகின்ற கழல் அணிந்த ஈசன் திருவடி நிழலை அடைந்தேன்.அழல் சேர்ந்த அக்கினி மண்டலத்தில் விளங்குகின்றவரும், திருமாலும் அறிந்திடாதவரும் ஆன உருத்திரர், என் உடல் பற்றினை அழித்து விட்டு சுழு முனை உச்சியில் சிவமாகச் சென்று அமர்ந்தார்.

#1601. அளவற்ற இன்பம்

முடிமன்ன ராகின் மூவுலகம தாள்வர்
அடிமன்ன ரின்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்க ளீசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்று நின்றாரே.

முடி சூடிய மன்னன் மூவுலகையும் ஆள்வான். அவன் அடையும் இன்பம் மிகப் பெரிது. எனினும் சிவன் அடியார்கள் என்னும் அன்பின் மன்னர்கள் பெறுகின்ற இன்பத்துக்கு ஓர் எல்லையே இராது. முடி மன்னர்கள் சிவனடி தொழும் அடியவர்கள் ஆனால் அவர்கள் குற்றம் குறைகள் எல்லாம் நீங்கிவிடும்.

#1602. வேதத்தின் அந்தம்

வைத்தேன் அடிகள் மனத்தி னுள்ளே நான்
பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல்;
எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு
மெய்த்தேன் அறிந்தேன் அவ்வேதத்தின் அந்தமே.

என் மனத்தில் இறைவனின் திருவடிகளைப் பதித்துக் கொண்டேன். அதனால் பொய்யை மெய் போலக் காட்டித் துன்புறுத்தும் வலிமை வாய்ந்த புலன்களின் வழியே நான் செல்லவில்லை. உலக வாழ்வில் உழலச் செய்யும் இருவினைத் துன்பங்களை மாற்றிவிட்டேன். மறைகளின் முடிவாகிய வேதாந்தத்தை நான் அடைந்தேன்.

#1603. இன்ப வெள்ளத்தில் திளைப்பர்

அடிசார லாமண்ணல் பாத மிரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.

எவரும் இறைவனின் திருவருளைப் பெறலாம். பண்டு வயோதிக முனிவர்கள் யுவ சிவகுருவின் திருவடிகளைத் தம் தலை முடிமீது அணிந்து கொண்டனர்.. படிப்படியாக பேரின்ப வெள்ளத்தை அடைந்து அதில் குடி கொண்டு திளைப்பதற்கு இதுவே ஒரு நல்ல வழியாகும்.

#1604. திருவடிகள் தருபவை இவை

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்ற னிணையடி தானே.

ஈசன் திருவடிகள் அவற்றை உன்னுபவரைக் காக்கும் உயரிய மந்திரம் ஆகும்; பிறவிப் பிணியைத் தீர்க்கும் அரு மருந்து ஆகும்; இறைவன் திருவருளைப் பெற்றுத் தருகின்ற சிறந்த தந்திரம் ஆகும்; இறையருளைப் பெற்றுத் தரும் அரிய தானங்களாகும். வீடு பேற்றினைத் தரும் தூய நன்னெறியாகும்; இவை அனைத்துமாக ஆவது எந்தைப் பிரானின் இனிய திருவடிகளே.

ஆறாம் தந்திரம் -
3. ஞாதுரு, ஞானம், ஞேயம்

ஞாதுரு = காண்பவன் => ஆன்மா / சீவன்
ஞானம் = பெறும் அறிவு => சிவ ஞானம்
ஞேயம் = காணப்படும் பொருள் => சிவம்.

#1605. அமுத நிலை பெறலாம்

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி யதநிலை நிற்கவே
நீங்கா அமுத நிலை பெறலாமே.

ஆன்மா நீங்காத சிவானந்தத்தில் நிலை பெற்று இருந்தால் அறிவுத் திறனை ஆணவம் மறைக்காது. அப்படி மறைக்க முயன்றாலும் குருவின் அருளால் அகங்காரம் நீங்கி எப்போதும் சிவானந்தத்தில் திளைத்து அதன் மூலம் அமுத நிலையை அடையலாம்.

#1606. அறிவு அறிவார்கள்

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி வாரே.

அறியப் படும் பொருள் சிவன் என்று அறிந்து கொண்டு, அந்த நெறியில் உறுதியாக நிற்பவர்களிடம் ஞானத்துக்கு உரிய பிற நலன்கள் அனைத்தும் பொருந்தி அமையும். அறியப் படும் பொருளான சிவத்தை அறிந்து கொண்ட ஆன்மா தானும் சிவமாகவே மாறி விடுவது வீடுபேறு ஆகும். ஞேயத்தின் ஞேயமாகச் சிவனைப் பிரியாது விளங்கும் சக்தி தேவியை உணர்ந்தவர் மெய்ஞான அறிவினைப் பெற்றவர் ஆவார்.

#1607. தானே சிவனாதல்

தான் என்று அவன் என்று இரண்டாகும் தத்துவம்
தான் என்று அவன் இரண்டும் தனில் கண்டு
தான் என்ற பூவை அவனடி சாத்தினால்
நான் என்று, அவன் என்கை நல்லதொன்று அன்றே.

உண்மைப் பொருட்கள் 'நான்' என்றும் 'அவன்' என்றும் வேறுபட்ட இரண்டு போலத் தோன்றும். சகசிர தளம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரை கவிழ்ந்த நிலையில் உள்ளபோது, 'நான்', 'அவன் ' என்ற இரண்டும் வேறு வேறாத் தோன்றும். கவிழ்ந்த சகசிரதளத் தாமரையை நிமிர்த்தி விட்டால் அதன் பிறகு 'நான்' என்றும் 'அவன்' என்'றும் தோன்றும் வேறுபாடுகள் அகன்று விடும். நானே நீ!' என்று அவன் என்னிடம் சொல்வது நல்லது அல்லவா?

#1608. அச்சம் கெடுப்பான்!

வைச்சன வாறாறு மாற்றி யெனை வைத்து
மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு
நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்
அச்சம் கெடுத் தென்னை யாண்டனன் நந்தியே.

என்னிடம் அமைந்திருந்த முப்பத்தாறு தத்துவங்களையும் மாற்றி அமைத்தான் என் குருநாதன். என்னை நிலைபெறச் செய்தான் உலகத்தவர் மெச்சிக் கொள்ளும் வண்ணம். சிவனின் எல்லைக்குள் என்னை இருத்தி என்னையும் சிவமாகவே செய்துவிட்டான். என் அச்சங்களையையும், அறியாமையையும் நீக்கி என்னை ஆட்கொண்டான்.

#1609. ஆன்மாவைப் பரனாக்கியது

முன்னை அறிவு அறியாதஅம் மூடர்போல்
பின்னை அறிவுஅறி யாமையைப் பேதித்தான்
தன்னை அறியப் பரன் ஆக்கித் தற்சிவத்து
என்னை அறிவித்து இருந்தனன் நந்தியே.

தீட்சை பெறும் முன்பு அறிவுக்கும், அறியாமைக்கும் உள்ள வேறுபாடு அறியாத மூடன் போல இருந்தேன். தீட்சைக்குப் பின்னர் அறிவுக்கும், அறியாமைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொண்டேன். ‘தான்’ என்று இருந்த என் ஆன்மாவுக்குப் பரம்பொருளாகிய ‘தத்’ என்பதின் இயல்பினை அளித்தான்.

#1610. செறிந்த அறிவைத் தருவான்

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணாயென வந்து காட்டினான் நந்தியே.

“கண்கள் கண்டிராத காட்சிகள், செவிகள் கேட்டிராத சொற்கள், குறையாத சிவானந்தம், கிடைப்பதற்கு அறிய யோகக் கூட்டு, குறைவில்லாத நாதம், நாதாந்ததில் உள்ள தூய அறிவாகிய போதம் இவை அனைத்தையும் வந்து காண்பாய்!” என எனக்குக் காட்டினான் என் நந்தியாகிய சிவபெருமான்.

#1611. ஐந்தொழில் ஆற்றும் வல்லமை

மோனங்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமு முன்னுமே.

மோனமாகிய பிரணவ யோகம் கைவரப் பெற்றவர்களுக்கு முக்தியும் கைக்கூடும். அவர் முன்பு எட்டு பெருஞ் சித்திகளும் கை கட்டி நின்று ஏவல் செய்யும். அவருக்குப் பேசாத மோன மொழியாகிய அசபை கைக் கூடும். படைத்தல்,

காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்னும் ஐங் கருமங்களையும் ஆற்றும் வல்லமையை அவர் பெறுவார்.

#1612. பிறந்து இறவார்!

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றன் பால்
வைத்த கலைகால் நால்மடங் கால்மாற்றி
உய்த்த 'வத்து ஆனந்தத்து' ஒண் குரு பாதத்தே
பெத்தம் அறுத்தோர் பிறந்து இறவாரே.

மூன்று முத்திரைகள் சாம்பவி, கேசரி, பைரவி என்பவை. இவற்றின் காரியம் எப்போது முடிந்துவிடும் என்று அறிவீரா ? காண்பவன், காட்சி, காணும் பொருள் என்ற மூன்றும் வேறுபாடுகள் இன்றி ஒன்றிவிடும் போது! இடைகலை பிங்கலை வழியாகச் செல்லும் காற்றை உள்நாக்கின் வழியே அதன் மேலுள்ள நான்கு விரற்கடைப் பகுதியில் உலவ விட வேண்டும். குருவின் திருவடிகளில் அமர வேண்டும். பந்தப் படுத்தும் தளைகளை விட்டு விட வேண்டும். இவற்றைச் செய்பவர் மீண்டும் உலகில் பிறக்கவோ இறக்கவோ மாட்டார்.

#1613. மூல சொரூபன்

மேலைச் சொரூபங்கள் மூன்றும் சக்தி
பலித்த முத்திரை பற்றும் பரஞானி;
ஆலித்த நட்டமே ஞேயம் ; புகுந்தற்ற
மூலச் சொரூபன் மொழி ஞாதுருவனே.

மிகுந்த சக்தி விளங்கும் மேலான மூன்று சொரூபங்கள் விந்து, நாதம், சாதாக்கியம் என்பவை. இதுவே முதல் நிலை. இதைப் பற்றியுள்ள பரம ஞானி செய்யுன் நடனமே ஞேயம் என்னும் காணப் படும் பொருள். தன்னிலை அழிந்துவிட்ட பரன் ஞாதுரு என்னும் காண்பவன் ஆகிவிடுவான்.

ஆறாம் தந்திரம் -
4. துறவு

அன்பால் இறவனைப் பற்றிக் கொண்டு இயல்பாகவே பாசங்களில் இருந்து விடுபடுவது துறவு.

#1614. அறப் பதி காட்டுவான் அமரர் பிரான்

இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்கும் தவம் கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய் நித்தம் வாய்மொழி வார்கட்கு
அறப்பதி காட்டும் அமரர் பிரானே.

சிவன் பிறப்பு, இறப்பு என்ற இரண்டையும் நீக்கிவிடுவான். இயல்பாகவே இந்த உலக இன்பங்களைத் துறக்கும் அருந்தவத்தையும் அருள்வான். ஒளி வடிவினனாகிய சிவனை மறவாமல் அவனை வாய் மொழியும் அன்பர்களுக்கு அவன் அறப்பதியாகிய சிவலோகத்தைத் தருவான்.

#1615. உயிர்க்குச் சுடரொளி

பிறந்தும் இறந்தும் பல் பேதமை யாலே
மறந்து மலவிருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பருவத்துத்
துறந்த உயிர்க்குச் சுடரொளி யாமே.

வினைப் பயன்களின் படிச் சீவன் பிறக்கின்றான்; பிறகு இறக்கிறான். அறியாமை இருளில் அவன் அழுந்தி விடுகின்றான். செய்ய வேண்டியவை எவை, விலக்க வேண்டியவை எவை என்று மறந்து விடுகின்றான். மலங்களால் அறிவு மறைக்கப் படுகின்றான். எனினும் சிவன் அருள் வெளிப்படும் போது தகுந்த பருவத்தில் பற்றுக்களைத் துறந்து விடுவதன் மூலம் சீவன் சுடரொளியாக ஆகிவிடுவான்.

#1616. பிறவி அறுப்பான்

அறவன் பிறப்பிலி யாரு மிலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனும் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி அறுத்திடும் பித்தன் கண்டீரே.

அவன் அறநெறிப் பட்டவன்; பிறப்பில்லாத அநாதியானவன்; அதனால் தன்னந் தனியன்; அவன் தங்கும் இடம் தத்துவங்கள் சுட்டு எரிக்கப் பட்ட இடம்; அவன் ஏற்பது பிச்சை. அவன் அனைத்தையும் துறந்து விட்டவன். பற்றுக்களை விட்டு விட்டவர்களின் பிறப்பை அறுக்கும் பித்தன் அவன் என்று அறிந்து கொள்ளுங்கள்!

#1617. நெருஞ்சில் முள் பாயாது

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முள் பாயும்
நெறியின் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முள் பாயகில்லாவே.

இறைவன் கைக் கொள்ள வேண்டிய நல்ல நெறிகளையும் படைத்தான் ; ஒதுக்கித் தள்ள வேண்டிய நெருஞ்சில் முட்களைப் போன்ற செயல்களையும் படைத்தான். அறவழி செல்லாமல் தவறான வழியில் செல்பவர்கள் நெருஞ்சில் முள் பாய்ந்ததைப் போலத் துன்புறுவர். அற வழியில் செல்பவர்களுக்கு இந்தத் துன்பம் நேராது.

#1618. திருவடி கூடும் தவம்

கேடும் கடமையும் கேட்டு வந்து ஐவரும்
நாடி வளைந்தது நான் கடவேன் அலேன்
ஆடல் விடை உடை அண்ணல் , திருவடி
கூடும் தவம் செய்த கொள்கையன் தானே.

ஐம்பொறிகள் எனக்குக் கேடு விளைவிக்க எண்ணி என்னை அலைக் கழிக்கும். ஆனால் நான் அவைகள் வசப்பட்டுச் செயல்படக் கடமைப்பட்டவன் அல்லன். ஒளி மண்டலத்தில் நடனம் செய்யும் விடையேறும் ஈசனின் திருவடிகளை எப்போதும் பிரியாத சிறந்த தவத்தை மேற் கொண்டவன் நான்.

#1619. உழவன் உழவு ஒழிவான்

உழவன் உழ, உழ, வானம் வழங்க,
உழவன் உழவினில் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண் ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவு ஒழிந் தானே.

ஞான சாதனை செய்பவன் விருப்பத்துடன் அதனை மேன் மேலும் தீவிரமாகச் செய்வான். வான மண்டலம் அதனால் மேன் மேலும் விகசிக்கும். ஒரு நீல நிற ஒளி தோன்றும். சாதகன் அது அருள் மிகுந்த சக்தியின் ஒளி என்று அறிந்து கொள்வான். மேலும் சாதனை செய்யத் தேவை இல்லை அதனால் அவன் சக்தியின் அருளில் நாட்டம் கொள்வான்.

#1620. பார் துறந்தார்க்குப் பதம்

மேல்துறந்து அண்ணல் விளங்குஒளி கூற்றுவன்
நாள்துறந்தார்க்கு அவன் நண்பன், அவாவிலி,
கார்துறந்தார்க்கு அவன் கண்ணுதலாய் நிற்கும்
பார்துறந்தார்க்கே பதம்செய லாமே.

சிவன் அனைத்தையும் துறந்து விட்டவன்; அவன் மேலே ஒளிரும் ஒளியாக இருந்து கொண்டு அனைவருக்கும் வழி காட்டுபவன்; அவன் எல்லோருக்கும் நண்பன்; எந்த ஆசையும் இல்லாதவன். இருளாகிய அஞ்ஞானத்தை விட்டு விட்டு ஞானத்தைத் தேடுபவருக்குத் தன் நெற்றிக் கண்ணால் அருள்பவன். உலக ஆசைகளை முற்றிலுமாகத் துறந்தவர்களுக்கே அவன் தன் திருவடிகளைத் தருவான்.

#1621. உடம்பு இடம் ஆமே

நாகமும் ஒன்று படம் ஐந்து நால் அது
போகமும் புற்றில் பொருந்தி நிறைந்தது ;
ஆகம் இரண்டும் படம் விரித்து ஆட்டு ஒழிந்து,
ஏகப் படம் செய்து உடம்பு இடம் ஆமே.

குண்டலினி சக்தி என்னும் நாகம் ஒன்று. அதன் ஐந்து படங்கள் ஐம்பொறிகள் ஆகும். அந்தக்கரணங்கள் நான்கும் இவற்றுடன் தொடர்பு கொண்டு போகம் அடைகின்றன. இது புற்றுப்போன்ற உலக அனுபவங்களில் நிறைந்துள்ளது. பருவுடல் நுண்ணுடல் இரண்டிலும் இது படம் எடுத்து ஆடும். எப்போது குண்டலினி சக்தி சிற்சக்தியுடன் இணைந்து விடுகின்றதோ அப்போது இது ஆடுவதை விட்டு விடும். இரண்டு படங்களையும் ஒன்றாக்கி விட்டு உடலை இடமாகக் கொண்டு கிடக்கும்.

#1622. நயன்தான் வரும் வழி

அகன்றார் வழி முதல் ஆதிப் பிரானும்
இவன்தான் என நின்ற எளியனும் அல்லன்;
சிவன்தாள் பல பல சீவனும் ஆகும்
நயன்தான் வரும் வழி நாம் அறியோமே.

துறவு மேற்கொண்டவர்களில் முதல்வன் சிவன் ஆவான். 'இவனே அவன்!' என்று சுட்டிக் காட்டும் அளவுக்கு அவன் எளிமையானவன் அல்லன். சீவனுக்குச் சிவன் அருளைப் பெறப் பல பல பிறவிகள் தேவைப்படலாம். நயந்து அவன் நம்மிடம் வரும் வழியை நம்மால் அறிந்து கொள்ள முடியுமா?

சீவனின் பக்குவத்துக்கு ஏற்ப சிவன் அருள் புரிவான். இலயம் விரும்புபவர்களுக்கு இலயம் அளிப்பன். போகம் விரும்பியவருக்குப் போகம் அளிப்பான். அதிகாரத்தை விரும்பியவருக்கு அதிகாரம் தருவான்.

#1623. உலகம் கசக்கும்

தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்,
ஆம்பற் குழலியின் கஞ்சுளிபட்டது,
வேம்பேறி நோக்கினென், மீகாமன் கூரையில்,
கூம்பு எறிக் கோவில் பழுக்கின்ற வாறே.

அற்புதமான அந்த வழி திறந்துவிட்டவுடன், உடலின் ஒன்பது வாயில்களும் ஆம்பல் மலர்களைச் சூடிய அன்னையின் அருளால் அடைபட்டுவிடும். உடலின் அனுபவம் முடிந்து விடும். உலகம் கசந்து விடும். அதுவரை உடலைச் செலுத்தி வந்த ஆன்மா தலை உச்சியில் மேல் தலைவன் விளங்கும் சகசிர தளத்தில் தானும் அமைந்து விளங்கும்.

ஆறாம் தந்திரம் -
5. தவம்

தனக்குள் மறைந்து உறையும் உண்மைப் பொருளைத் தேடும் முயற்சி.

#1624. பற்று விட்டோர்

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவது இல்லை நமனும் அங்கு இல்லை
இடும்பையும் இல்லை இராப் பகல் இல்லை
படும் பயன் இல்லை பற்று விட்டோர்க்கே.

சிவத்திடம் உள்ளத்தை ஒடுக்கி அங்கே நிலை பெற்றவர்கள் எந்தத் துன்பத்தையும் கண்டு அஞ்சி நடுங்குவது இல்லை. காலன் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குத் துன்பம் என்பதே கிடையாது. இரவும் இல்லை, பகலும் இல்லை. உலகப் பொருட்களின் மேல் உள்ள பற்றினைத் துறந்தவர்களுக்கு இதைவிட நல்ல பயன் என்று வேறு எதுவும் இல்லை.

#1625. தவத்தின் சிறப்பு

**எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமும்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்
அம்மான் திருவருள் பெற்றவர்க்கல்லாது
இம்மா தவத்தினியல்பறி யாரே.**

உயிர் உலகில் வந்து பிறப்பதையும், அது ஓர் உடலுடன் கூடிப் பிறப்பதையும், அது அனுபவிப்பதற்கு உலகம் ஏற்படுத்தப் பட்டதையும், தவத்தின் மேன்மையையும் சிவன் அருள் பெற்றவர்களுக்கு மட்டுமே தெரியும். பிறர் இந்த மாதவத்தின் மேன்மையை அறிகிலர்.

#1626. பிறப்பை நீக்கும் பெருமை

**பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவார்
மறப்பில ராகிய மாதவம் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றோரே.**

பிச்சை பெற்று உயிர் வாழும் மாதவத்தவர் இனிப் பிறவியை அறியார். அவர்களுக்கு சிறப்பும் உயரிய அருட் செல்வமும் நிரம்பவும் கிடைக்கும். மறக்காமல் சிவனை நினைந்து தவம் செய்பவர் பிறவிப் பிணியை நீக்கும் பெருமை பெறுவார்.

#1627. சிந்தை சிவன் பால்

**இருந்தி வருந்தி எழில் தவம் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந் திந்திரனே எவரே வரினும்
திருந்துந்தஞ் சிந்தை சிவனவன் பாலே.**

சிவன் மீது சிந்தையை இருத்தி, உடலை வருத்தி மாதவம் செய்பவர்கள, இந்திரனோ அன்றி வேறு எவரேனும் வந்து அவர்கள் தவத்தைக் கலைக்க முயற்சி செய்தாலும், சிறிதும் சிந்தை கலங்காமல் தன் உள்ளக் கருத்தைச் சிவன் மீதே பொருத்தி இருப்பார்.

#1628. அணுகுவதற்கு அரியவன் சிவன்

**கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையன் பசும்பொன் நிறத்தன்
அருந்தவர்க் கல்லா லணுகலு மாகான்
வரைந்து தொழப்படும் வெண்மதி யானே.**

சிவன் தவம் செய்யாதவர்களுக்கு மறைந்து உ றைவான்; தவம் செய்பவர்களுக்கு மறையாமல் தெரிவான். சிவன் புறக் கண்களுக்குப் புலப்படமாட்டான். அவன் அகக் கண்களுக்கு நன்கு புலப்படுவான். பரந்து விரிந்த வீசும் சடையை உடையவன். ஆணிப் பொன்னின் நிறம் கொண்டவன். பக்குவம் அடைந்த சீவர்களின் மதி மண்டலத்தில் சிவன் விளங்குவான்.

1629. தானே வெளிப்படுவான்

பின்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே.

பின்னால் அடைய வேண்டிய இனிய பிறப்பை முன்னமேயே நியதியாக அமைப்பவன் சிவன். சீவன் சிவனை அறிய முயற்சி செய்யும் போது, சிவன் சீவன் முன்பு தானே வெளிப்படுவான். சாதகனின் தளராத மன உறுதியே இதைச் சாத்தியம் ஆகும்.

#1630. தவத்தைக் கைவிடார்

அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்து எழும் பூசலுள் பட்டார் நடுவே
அமைத்தது ஓர் ஞானமும் ஆக்கமும் நோக்கி
இமைத்து அழியாது இருப்பார் தவத்தோரே.

அமைச்சர்கள், யானைகள், அரசர்கள் போன்றோர் பகைத்து எழுந்து புரியும் போர் களத்தின் நடுவில் இருந்தாலும், ஞானமும் ஈசன் மீது மாறாத அன்பும் கொண்டவர் தம் கொண்ட தவத்திலிருந்து சிறிதும் மாறுபடார்.

#1631. ஆர்த்த பிறவி அகன்று விடும்

சாத்திர மோதும் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகல விட்டோடுமே.

சாத்திரங்களை ஓதி அதனால் மிகுந்த பெருமை அடைபவர்களே! ஒரு கணமாவது வெளியே பாய்ந்து செல்லும் உங்கள் உள்ளதைத் தடுத்து அதை உள்முகமாகத் திருப்புங்கள். இத்தகைய உள் நோக்கிய பார்வை பசுமரத்தில் அடித்த ஆணி போலப் பதிந்திருக்கும் பிறவிப் பிணியை இனி இல்லாமல் விரட்டி ஓடச் செய்துவிடும்.

#1632. தவப் பயன் பெற்றபின் தவம் தேவையில்லை

**தவம் வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதி கை கூடில்
தவம் வேண்டா மச்சக சமார்க்கத் தோர்க்குத்
தவம் வேண்டா மாற்றம் தனையறி யாரே.**

ஞானம் பெறுவதற்குத் தவம் தேவை.
ஞான சமாதி கைவந்த பின்னர் அதற்குரிய தவம் தேவை இல்லை.
சகச மார்க்கத்தைப் பின்பற்றும் இல்லறதோருக்கு ஞான சமாதிக்கு தேவை இல்லை.
தவத்தால் பெறுகின்ற ஞானத்தைப் பெற்ற பின்பு தவம் தேவை இல்லை.

ஆறாம் தந்திரம் -
6. தவ தூடணம்

தவ தூடணம் = தவம் + தூடணம்
தூடணம் = நிந்தை
புற நோக்கை நீக்கி அக நோக்கைக் கொண்டவருக்குப் புறச் செயல்கள் தேவை இல்லை.

#1633. புலன் வழி போகாதவர்

**ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளூற்றாற்
காதலும் வேண்டா மெய்க் காயமிடங் கண்டால்
சாதலும் வேண்டா சமாதியைக் கை கூடினால்
போதலும் வேண்டா புலன் வழி போகார்க்கே.**

உயிரில் உயிராக உள்ள உண்மைப் பொருளைக் கண்டு கொண்ட பின்னர் ஒருவர் கற்று அறிந்து வேண்டியது எதுவும் இல்லை. உடலில் உறைந்துள்ள சிவத்தைக் கண்டு கொண்ட பின்னர், அவன் மேல் காதல் கொள்ளத் தேவை இல்லை.சமாதி நிலை கை வந்த பின்னர், இறக்க வேண்டிய தேவை இல்லை. மனம் புலன்களின் வழியே புறவுலகு செல்வதைத் தடுத்து நிறுத்தக் கற்றவர் வேறு ஓர் இடத்துக்குச் சென்று தவம் புரியத் தேவை இல்லை.

விளக்கம்:

காதல் செய்ய இருவர் தேவை. சிவனும் சீவனும் ஒன்றான பிறகு காதல் செய்வது எப்படி? சாதல் எனபது உடலிலிருந்து உயிர் பிரிந்து நிற்பது. சமாதியில் உயிர் உடலை விட்டுத் தனியே நிற்கும். எனவே சமாதியில் சாதல் தேவை இல்லை

புலன்களின் வழியே பொறிகள் செல்லாமல் தடுக்கக் காடு அல்லது மலைக்குச் சென்று தவம் புரிவது வழக்கம். மனம் புலன் வழிப் போகாமல் தடுக்கக் கற்றவர்களுக்கு தனியிடம் செல்லத் தேவை இல்லை.

#1634. சமாதி கூடிய பின்பு

சுத்தவும் வேண்டா கருத்தறிந் தாறினால்
சத்தமும் வேண்டா சமாதிகை கூடினால்
சுத்தமும் வேண்டாம் துடக்கற்று நிற்றலால்
சித்தமும் வேண்டாம் செயலற் றிருக்கிலே.

மெய்ப் பொருளை உணர்ந்து, ஐம் பொறிகளையும் அடக்கிய ஒருவருக்கு இறைவனை உணர்த்தும் நூல்களை உரக்கப் படிக்க வேண்டிய தேவை இல்லை. சமாதியில் சீவன் சிவனுடன் கூடிய பின்பு மந்திரங்களும் ஆரவாரமான பூசைகளும் அவசியம் இல்லை. உலகத் தொடர்பை விட்டு விட்ட பின்பு ஒருவர் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ளும் செயல் செய்யத் தேவை இல்லை.

#1635. வானவரிலும் உயர்ந்தவர்

விளைவறி வார்பண்டை மெய்த்தவம் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுறஞ் செய்வார்
விளைவறி வார் விண்ணின் மண்ணின் மிக்காரே.

தான் செய்யும் தவத்தின் உண்மைப் பயனை அறிந்து கொண்டவரே உண்மையான தவம் செய்பவர் ஆவார். இத்தன்மை கொண்டவரே மாணவனுக்கு உண்மையை உணர்த்தும் நல்ல குரு ஆவார் . இவரே ஒளியுடல் பெற்று வானவரிலும் சிறந்தவர் ஆவார்.

#1636. கண்டேன் சிவகதி

கூடித் தவம் செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவம் செய்து கண்டேன் சிவகதி
வாடித் தவம் செய்வதே தவம் இவை களைந்து
ஊடில் பல உலகோர் ஒத்தவரே.

இறை அருளுடன் கூடி நிற்கும் தவம் செய்து ஒலி வடிவான சிவனைக் கண்டு கொண்டேன். இங்கனம் நீண்ட காலம் தவம் செய்து சிவகதி அடைந்தேன். ஐம் பொறிகளையும் அடக்கிச் செய்யும் அருந் தவமே மெய்த் தவம். இதை விட்டு விட்டு மாறுபட்ட வழிகளில் தவம் செய்பவர்கள் எத்தகைய தவத்தைச் செய்தவர் ஆவார்?

#1637. தவத்தவரைச் சார்ந்தால் சிவத்தைக் காணலாம்

மனத்து உறை மாகடல் ஏழும் கைநீந்தித்
தவத்திடை யாளர் தம் சார்வத்து வந்தார்
பவத்திடையாகார் அவர் பணி கேட்கின்
முகத்து இடை நந்தியை முந்தலும் ஆமே.

மனத்தில் ஆணவத்தின் செயலான ஏழு குற்றங்கள் உள்ளன. அந்த ஏழையும் நீந்திக் கடந்த பின்பு ஒருவர் நல்ல தவம் செய்தவரைச் சார வேண்டும். அவரோடு இணங்கி இருப்பவருக்கு மீண்டும் பிறவி என்பது இராது. தவத்தவரின் இவள படி நடப்பவருக்குச் சிவனைத் தன் முகத்தின் முன்னே காணும் நற்பேறும் கிடைக்கும்.

#1638. சிவ ஒளி சீவ ஒளி யாகும்.

மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டு அற ஈர்த்துப்
புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை ஆறு ஒளி தன்ஒளி ஆமே.

உள்ளம் என்னும் உறைக்குள் ஒளிந்திருக்கும் ஞான வாளை உருவ வேண்டும். உலகத் தொடர்பையும், மன மலங்களையும் அறுக்க வேண்டும். சீவன் வேறுபாடுகள் இன்றிச் சிவத்துடன் ஒன்றாகிப் பொருந்த வேண்டும். பொறிகளைப் புலன்களின் வழியே போகாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இத்தகைய தவத்தில் வெளிப்படும் சிவ ஒளியே சீவ ஒளியாகும்.

#1639. சிவத்தை சிந்தையில் வைப்பதே தவம்

ஒத்து மிகவுநின் றானை உரைப்பது
பக்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கும் முனிவன் எனும்பதம்
சத்தான செய்வதுந் தான்தவந் தானே.

சிவனுடன் பொருந்தி நிற்கும் சிவனை உணர்வது அவன் மீது பக்தியைத் தரும். சிவனடியார்களைத் தொழுவது உயர்ந்த முக்தியைத் தரும். “உலகை வெறுப்பவன் ஒரு முனிவன்!” என்ற சொல்லை மெய்யாக்கும் வண்ணம் செய்வதே உயர்ந்த தவம் ஆகும்.

#1640. தவம் சந்திரகலையைத் தோற்றுவிக்கும்

இல்லை தொட்டு, பூப் பறித்து, எந்தைக்கு என்று எண்ணி
மலர் தொட்டுக் கண்டேன், வரும் புலன் காணேன்
தலை தொட்ட நூல் கண்டு தாழ்ந்தது என் உள்ளம்
தலை தொட்டுக் கண்டேன் தவம் கண்ட வாறே.

இலைகளைப் பறித்தும் , மலர்களைக் கொய்தும் இறைவனுக்கு மாலைகள் தொடுத்தேன். ஆனால் தலையில் வான் கங்கையாகிய சந்திர கலையின் ஒளியைக் காண முடியவில்லை .மூலாதாரத்திலிருந்து தலை வரை செல்லும் சுழுமுனை நாடியைக் கண்டேன் அதனால் என் உள்ளம் அடங்கி ஒடுங்கியது. அந்தத் தவம் தலையில் சந்திர கலையை விகசிக்கச் செய்தது.

#1641. இடர் வராது ஈசன் காப்பான்

படர்சடை மாதவம் பற்றிய பக்தருக்கு
இடர்அடையா வண்ணம் ஈசன் அருளும்
இடர்அடை செய்தவர் மெய்த்தவம் நோக்கில்
உடர்அடை செய்வதுஒரு மனத் தாமே.

படர் சடையானை மாதவத்தில் பற்றிக் கொண்ட உண்மை அன்பர்களுக்குத் துன்பம் நேராத வண்ணம் ஈசன் காப்பான். இங்கனம் துன்பம் நேராத வண்ணம் ஈசன் காக்கும்படித் தவம் செய்தவர் செய்த தவத்தை ஆராய்ந்தால், அவருக்குக் கிடைத்த பெருமை எல்லாம் அவர் மனத்தின் ஒருமைப் பாட்டினால் என்ற உண்மை விளங்கும்.

#1642. சோற்றுக்கு நின்று சுழல்வர்

ஆற்றிற் கிடந்த முதலை கண்டஞ்சிப் போய்
ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்
நோற்றுத் தவம் செய்யார் நூலறியாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே.

நூலைக் கற்று அறியாது , சிறந்த தவம் செய்யாமல், எப்போதும் வயிற்றுக்கு உணவு தேடி அலைவது ஆற்றில் உள்ள முதலைக்கு அஞ்சி, அண்மையில் குட்டியை ஈன்ற தாய்க் கரடியிடம் சென்று வருந்துவதைப் போன்றது ஆகும்.

#1643. மூச்சின் இயக்கம்

பழுக்கின்ற வாறும் பழம் உண்ணு மாறும்
குழக்கன்று துள்ளி அக்கோணியைப் பல்கால்
குழக்கன்று கொட்டிலில் கட்ட வல்லார்க்கு உள்
இழுக்காது நெஞ்சத்து இட, ஒன்று மாமே.

உயிர் மூச்சு சீவனின் உடலில் உலவுகின்ற போது, அது சிவக்கனியைப் பழுக்கச் செய்யும். சீவன் அதனை உண்ணச் செய்யும். ஆனால் உயிர் மூச்சைச் சுழு முனையில் அடக்கும் பொழுது மூச்சு இயங்குவது நின்று நின்று விடும். மேல் நோக்கியுள்ள சகசிர தளத்தில் மனம் அடங்கும் பொழுது மூச்சின் இயக்கமும் நின்றுவிடும்.

#1644. சித்தம் சிவமாவது தவம்

சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தம் சிவானந்தம் சேர் ந்தோர் அற உண்டால்,
சித்தம் சிவமாக வேசித்தி முத்தியாம்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே.

இடையறாது சிவனை நினைந்து நினைந்து தன் சித்தத்தையே சிவமயம் ஆக்கி விட்ட ஒருவருக்குச் செய்ய வேண்டிய தவம் என்று எதுவும் இல்லை. சித்தம் சிவமயமான ஒருவரைச் சார்ந்த மற்றவர்களுக்கும் சித்தம் சிவ மயமாகி விடும். அத்துடன் அவர்களுக்குச் சித்தியும் முத்தியும் உண்டாகும். இங்ஙனம் சித்தம் சிவமயமாவது ஒருவர் முன்பு செய்த தவப் பயனால் மட்டுமே விளையும்.

ஆறாம் தந்திரம் -
7. அருளுடைமையின் ஞானம் பெறுதல்

அருள் = நாதம் விந்து ஆகிய திருவடி.
நாத விந்துவான திருவடி பொருந்தியபோது ஞானம் பெறுவது.

#1645. பிரானிடம் அனைத்தும் அமையும்

பிரானருள் உண்டெனில் உண்டு நற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டு நன் ஞானம்
பிரானருளிற் பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளில்பெருந் தெய்வமு மாமே.

சிவன் அருள் உண்டானால் ஒருவருக்குக் கிடைப்பவை எவை எவை? நல்ல செல்வம், நல்ல ஞானம், பெருந்தன்மை என்பவை அவரிடம் பொருந்தி அவர் ஒரு பெருந் தெய்வம் போல ஆகிவிடுவார்.

#1646. தமிழ் மண்டலம் ஐந்து

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவர்
அவிழும் மனமும் எம் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமே.

தமிழ் மண்டலம் ஐந்து என்பது தமிழ், மலையாளம், கன்னம், தெலுங்கு, துளுவு என்னும் ஐந்து மொழிகள் பேசப்படும் நாடுகளின் தொகுப்பு. தமிழ் மண்டலத்தில் உள்ள புண்ணிய தலங்களுக்குச் சென்று வணங்கினால் தமக்குள் மறைந்துள்ள ஞானம் வெளிப்படும் என்று எண்ணி பலர் அங்கெல்லாம் சுற்றித் திரிவர். ஒப்பற்ற இறைவனாகிய ஒரு சிவமே பல சக்திகளாக விளங்கும் உண்மையை ஞானியர் அறிவார். அதனால் அவர்கள் தல யாத்திரைகள் செல்லாமலேயே தாம் இருக்கும் இடத்தில் இருந்து வழிபட்டுப் பெரும் பயனைப் பெறுவார்.

#1647. வினைகளை வேரோடு அறுக்க வேண்டும்

புண்ணிய பாவம் இரண்டு உள பூமியில்
நண்ணும் பொழுது அறிவார் சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேர் அறுத்துப் அப்புறுத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்ளீரே.

புண்ணியம் பாவம் என்று இரண்டு செயல்கள் உள்ளன. அவை நாம் செய்யும் வினைகளுக்கு ஏற்ப இன்பம் துன்பம் என்று உருவெடுத்து மீண்டும் நம்மிடம் வந்து பொருந்து கின்றன. இந்த இரண்டையுமே விலக்கிவிட உள்ள ஒரே வழி வினைகளை வேருடன் அறுத்துத் தள்ளுவதே ஆகும். இதைச் செய்த பின்பு அண்ணல் ஆகிய சிவனை நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்வீர்!

#1648. முன்னும் பின்னும் நின்று உதவுவான்

முன் நின்று அருளும் முடிகின்ற காலத்து
நன் நின்று உலகில் நடுவுயிராய் நிற்கும்
பின் நின்று அருளும் பிறவியை நீக்கிடும்
முன் நின்று எனக்கொரு முத்தி தந்தானே.

வினைகள் முடிகின்ற காலத்தில் சிவன் சீவனின் முன் தோன்றி வீடு பேற்றை அளிப்பான். அந்த நிலை வருவதற்கு முன்பு சிவன் உயிரில் உயிராக இருந்து கொண்டு, சீவனை வினைப் பயன்களை அனுபவிக்கச் செய்வான். சிவன் மறைந்து இருந்து சீவனுக்கு அருள் செய்துப் பிறவியை நீக்குவான். இங்கனம் முன்னும் பின்னும் இருந்து சீவனுக்கு நலம் தருபவன் சிவன்.

#1649. சிவலோகம் கிடைக்கும்

சிவனரு ளாற் சிலர் தேவரு மாவார்
சிவனரு ளாற்சில தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறில் அச்சிவலோக மாமே.

சிவனருள் கிடைப்பதனால் ஒருவருக்கு அதனால் மேலும் கிடைப்பவை எவை எவை? சிவனிடம் அன்பு கொண்டவர்களில் சிவர் தேவ வடிவம் பெறுவார். சிலர் தெய்வத் தன்மை பெறுவார். சிவன் அருளால் அவர்களை வினைகள் வந்து பற்றா. இந்த மூன்று அன்பர்களுமே சிவலோகம் பெறுவார்.

#1650. ஞானியராகலாம் வானவராகலாம்

புண்ணிய னெந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவ னருள் பெற்ற போதே.

சிவன் நாம் செய்த புண்ணியத்தின் பயன் ஆவான். அவன் நம் எல்லோருக்கும் ஒரே தந்தை. அந்தப் புனிதனின் இணையடிகள் என் உள்ளத்தில் பொருந்திய போது விளக்கின் ஒளி போன்று ஞானம் தோன்றியது. சிவன் அருள் பெற்றவர்கள் இவ்வுலகில் இருக்கும் போது ஞானியர் ஆவார். விண்ணுலகில் அவர்கள் தேவ வடிவம் பெறுவார்.

#1651. இவன் அவனாக ஆகிவிடுவான்!

காயத்தேர் ஏறி மனப்பாகன் கை கூட்ட
மாயத் தேர் ஏறி மயங்கு மவை உணர்
நேயத் தேர் ஏறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத் தேர் ஏறி அவன் இவனாமே.

சீவன் உடல் என்னும் தேரில் ஏறும். அத்தேரை மனம் என்னும் பாகன் இயக்குவான். உலகில் நிலவும் தத்துவங்கள் என்னும் உணர்வுகளில் ஈடுபட்டு மனம் மயங்கும் அந்த சீவன். அந்த சீவனே நேயத் தேர் சென்று நிர்மலனாகிய சிவன்

அருள் பெற்றுவிட்டால் சிவனடியார்களில் ஒருவனாக ஆகிவிடுவான். அவன் சிவ வடிவமும் பெறுவான்.

1652. சிவனடி சேர்வர்

அவ்வுல கத்தே பிறக்கி லுடலொடும்
அவ்வுல கத்தே யருந்தவம் நாடுவர்
அவ்வுல கத்தே யரனடி கூடுவர்
அவ்வுல கத்தே யருள் பெறுவாரே.

சிவலோக ஞானத்தோடு ஒருவன் பிறவி எடுத்தால், அவன் மீண்டும் அந்த சிவலோகத்தை நாடி அரிய தவம் புரிவான். சிவலோகத்தில் சிவனைடியைப் பெறுவான். சிவசக்தியின் ஆற்றலை அடைவான்.

#1653. ஈசன் எழில் வடிவானவன்

கதிர் கண்ட காந்தம் கனலின் வடிவாம்
மதி கண்ட காந்தம் மணி நீர் வடிவாம்
சதி கொண்ட சாக்கி ஏரியின் வடிவாம்
ஏரி கொண்ட ஈசன் எழில்வடி வாமே.

சூரிய காந்தக் கல் சூரிய ஒளியில் கனல் போல ஒளிரும். சந்திர காந்தக் கல் நிலவொளியில் முத்துப் போன்ற நீர்மை வடிவம் ஆகும். சக்கி முக்கிக் கற்கள் உரசும் போது தீயின் வடிவம் எடுக்கும். ஆனால் அக்கினி மண்டலத்தைத் தன்னுள் கொண்டுள்ள ஈசன் மிகுந்த எழில் வடிவானவன்.

#1654. சிவனை நாடி அவனைத் தேடுவேன்

நாடும் உறவும் கலந்து எங்கள் நந்தியைத்
தேடுவன் தேடிச் சிவபெருமான் என்று
கூடுவன் கூடிக் குரைக் கழற்கே செல்ல
வீடும் அளவும் விடுகின் றிலேனே.

நான் நாடித் தேடும் உறவினன் என் குருவாகிய சிவபெருமான், நான் தேடிக் கூடும் என் உறவினன் சிவ பெருமான். கூடிய அந்தக் குரை கழல்களை நாடி நான் செல்வதற்கு என் உடலிலிருந்து என் உயிரைப் பிரித்து அறிந்து கொளும் வரையில் நான் முயன்று கொண்டே இருப்பேன்.

ஆறாம் தந்திரம் -
8. அவ வேடம்

அவ வேடம் = பயனற்ற சின்னங்களை அணிந்து கொள்வது.

#1655. சிவன் தாள் தேடுவீர்!

ஆடம் பரம் கொண்டு அடிசில் உண்பான் பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்!
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவனவன் தாள்களே.

ஆடம்பரத்துடன் உணவு உண்பதற்காக பலப் பலப் பொய் வேடங்களைத் தரித்து உலகத்தோரை மயக்கியும் அச்சுறுத்தியும் வாழும் அறிவிலிகளே!
உங்கள் அவ வேடங்களைக் கை விடுங்கள். சிவனை நினைத்து ஆடுங்கள்; பாடுங்கள்; அழுது அரற்றுங்கள். எப்படியேனும் அவன் தாள்களைக் கண்டறியுங்கள்.

#1656. நலம் கெடும் புவி

ஞான மிலார் வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்
மான நலங் கேடுமப் புவி யாதலால்
ஈனவர் வேடம் கழிப்பித்தல் இன்பமே.

சிவ ஞானம் இல்லாத ஒருவர் தவ வேடம் மேற்கொண்டு பிச்சை எடுத்து உண்டால் வசிக்கின்ற அந்த நாட்டின் பெருமை குன்றி விடும். ஆதலால் அருடைய அவ வேடத்தைக் கலைப்பது இன்பம் தருவதாக ஆகும்.

#1657. வையம் வாழும்

இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்து உள
நன் செயல், புன் செயலால் அந்த நாட்டிற்கு ஆம்
என்ப இறைநாடி நாள்தோறும் நாட்டினில்
மன்பதை செப்பம் செயின் வையம் வாழுமே.

ஒரு நாட்டில் நிலவுகின்ற இன்ப துன்பங்கள் அந்த நாட்டு மக்கள் செய்த நல்வினை, தீவினைகளின் பயன் என்று கூறுவார். இதை நன்கு உணர்ந்து கொண்ட கொண்ட ஒரு மன்னன் தன் நாட்டில் பொய்யக் கோலம் பூண்டு திரிபவர்களை நல் வழிப்படுத்த வேண்டும். அப்போது அந்த நலம் பெற்று வாழும்.

#1658. களையப்பட வேண்டியவர்கள்

இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத்து ஆகிய பாழ் சண்ட ரானார்
கழிகுலததோர்கள் களையப் பட் டோரே.

தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்கள் மேன்மை அடைய விரும்பித் தவவேடம் தரிப்பர். வழி வழியாகத் தொண்டு செய்பவர், இறை அருளைப் பெற விரும்பித் தவ வேடம் பூணுவர். பழிக்கத் தக்க செயல்களைச் செய்யும் குலத்திற் பிறந்து தவ வேடம் பூண்பவர் பாழ் சண்டாளர்கள் ஆவர். அவர்களின் பொய் வேடம் கழித்துக் களையப்பட வேண்டியதே.

#1659. ஞானம் தாங்கும் தவம்

பொய்த் தவம் செய்வார் புகுவர் நரகத்து
பொய்த் தவம் செய்தவர் புண்ணியர் ஆகார்,
பொய்த் தவம் மெய்த்தவம் போகத்துள் போக்கியம்
சத்தியம் ஞானத்தால் தாங்கும் தவங்களே.

பொய்த் தவக் கோலம் பூணுகின்றவர் நரகம் சென்று புகுவர்! அவர் ஒரு நாளும் புண்ணியம் எய்தார்! மெய்த் தவத்தைப் போன்றே பொய்த் தவமும் இந்த உலக இன்பங்கள் சிலவற்றை ஒருவருக்கு அளிக்கலாம். ஆனால் உண்மையான ஞானத்தினால் மட்டுமே மெய்த் தவம் கைக்கூடும்.

#1660. பொய் வேடமும் உய் வேடமாகும்

பொய் வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகு பிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய் வேடமாகும் உணர்ந்தறிந் தோர்க்கே.

நன்கு புசிப்பதற்காகவே சிலர் பொய்த் தவ வேடம் தரிப்பர். உண்மைத் தவம் செய்பவர் உடலில் உயிர் பொருந்தி இருப்பதற்குப் பிச்சை ஏற்று உண்பர். பொய் வேடம் பூண்டவரும் அதையே உய்வேடமாக ஆக்க முடியும் - அவர் அந்தக் கோலத்துக்கு உரிய மேன்மையாலும், உண்மையான ஞானத்தைப் பெறுவதாலும்.

ஆறாம் தந்திரம் -
9. தவ வேடம்

தவத்துக்கு உரிய சின்னங்களைத் தரிப்பது.
அவை திருநீறு, உருத்திராக்கம், குண்டலம் போன்றவை.

#1661. தவக் கோலம் சிறக்கும்

தவம்மிக் கவரே தலையான வேடர்
அவம்மிக் கவரே அதி கொலை வேடர்
அவம்மிக் கவர் வேடத்து ஆகார் அவ்வேடம்
தவம்மிக் கவர்க்கு அன்றித் தாங்கஒண் ணாதே.

தவத்தில் சிறந்தவர்கள் அணிவது தலையான தவக் கோலம். தாழ்ந்தவர்கள் பொய்யாகத் தவக் கோலம் புனைவது கொடுமையிலும் கொடுமை ஆகும். தாழ்ந்த இழி செயல் புரிபவர்கள் தவக் கோலம் பூணத் தகுதி இல்லாதவர்கள். தக்கோலத்தைத் தவத்தில் சிறந்தவர்களுக்கே தாங்க ஒண்ணும்.

#1662. தவக்கோலச் சின்னங்கள்

பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதிய வர்க்கும் உருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.

தவக் கோலம் பூண ஏற்றவை இவை. நெற்றியில் சிறந்த திருநீறு, காதுகளில் தாமிரக் குண்டலம், கழுத்தில் உருத்திராக்க மாலை. இவை வேத ஆகமங்களை அறிந்த ஒருவருக்கு ஏற்ற சின்னங்கள்.

#1663. மற்ற சிவச் சின்னங்கள்

யோகிக் கிடுமது உட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்கு பாசத்துச் சுற்றுஞ் சடைய தொன்று
ஆகத்து நீரணி யாங்கக் கபாலம்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே.

சிவ யோகிக்கு உரிய பிற சின்னங்கள் இவை:
உள்ளாடை ஆகிய கோவணம், ஒரு கைப் பை, மயில் இறகுக் குல்லாய், சுற்றிக் கட்டிய சடை, உடல் முழுவதும் திருநீறு, கையில் ஒரு திருவோடு, ஒரு அழகிய பிரம்பு என்பவை ஆகும்.

#1664. சிவயோகியின் சீரிய சின்னங்கள்

காதணி குண்டலம் கண்டிகை நாதமும்
ஊதுநற் சங்கும் உயர்கட்டிக் கப்பரை
ஏதம்இல் பாதுகம் யோகாந்தம் ஆதனம்
ஏதம்இல் யோகபட்டம் தண்டம் ஈரைந்தே.

காதணியாகக் குண்டலம், கழுத்தணியாக உருத்திராக்கம், சிவசிவ என்னும் ஒலி, ஊதுகின்ற வெண் சங்கு, ஆறுகட்டி, திருவோடு, பாதக் குறடு, ஆதனம், யோகப் பட்டம், யோக தண்டம் என்னும் பத்துப் பொருட்கள் சிவ யோகிக்கு உரியவை.

ஆறாம் தந்திரம் -
10. திரு நீறு

திரு நீறு = விபூதி

#1665. ஓங்காரம் ஒன்றாக்கி விடும்

நூலும் சிகையும் உணரார் நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் , நுண் சிகை ஞானமாம்
பால் ஒன்றும் அந்தணர் பார்ப்பார் பரம் உயிர்
ஓர் ஒன்று இரண்டினில் ஓங்காரம் ஓதிலே.

பூணூல், சிகை இவற்றை அணிந்திருக்கும் மூடர்கள் அவற்றின் உண்மை இயல்பை அறிவதில் வேதாந்தத்தை உணர்த்துவது பூணூல் ஆகும். சிகையில் உள்ள குடுமி வேதாந்த ஞானத்தைக் குறிக்கும். சிவனிடத்தில் ஒன்றிவிட்டவர்கள் சிவனும் சீவனும் ஒன்று என்று காண்பர். இன்னமும் சிவனுடன் ஒன்றி விடாதவர்கள் ஓங்காரத்தை ஓதுவதன் மூலம் சிவனுடன் ஒன்றும் தன்மையும், மேன்மையும் அடைவர்.

#1666. திருவடி சேர்வர்

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் கதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

கபால மாலையை அணிந்த சிவன் பூசிக் கொள்ளும் கவசத் திருநீற்றை நீங்களும் மங்காமல் பூசி மகிழுங்கள் அப்போது நீங்கள் செய்துள்ள வினைகள்

அழிந்து விடும். உங்களுக்கு அரிய சிவகதி கிடைக்கும். நீங்களும் சிவனின் சிங்காரத் திருவடிகளைச் சென்று சேரலாம்.

#1667. உயர் குலத்தவர் ஆகலாம்

அரசுட னாலத்தி யாகுமக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தாள் பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே.

அரசு, ஆல், அத்தி போன்ற மரங்களின் சமித்துக்கள் வேள்வித் தீக்கு இரையாகும் போது, அவை உருமாறித் திருநீறாக மாறி விடும். அது போன்றே அவயவங்களோ, மலங்களோ இல்லாத சிவனின் அருளைப் பெற்றவர்கள் தம் உருவம் மாறி உயர் குலத்தை அடைவர்.

ஆறாம் தந்திரம் -
11. ஞானவேடம்

#1668. சிவ ஒளியில் பொருந்தலாம்

ஞானமிலார் வேடம் பூண்டும் நரகத்தர்;
ஞான முள்ளார் வேடம் இன்று எனின் நன் முத்தர்
ஞானம் உளதாக வேண்டுவோர் நக்கன் பால்
ஞானம் உள வேடம் நண்ணி நிற்போரே.

சிவஞானம் பெறாத ஒருவன் சிவ ஞானியைப் போல வேடம் தரித்தால் அவன் நரகத்தை அடைவான். சிவஞானம் அடைந்த ஒருவர், சிவ ஞானி வேடம் தரிக்காவிடினும் அவர் நல்ல முக்தர் ஆவார். சிவஞானம் பெற விரும்புகின்ற ஒருவர் அவன் அண்மையிலேயே எப்போதும் தன்னை இருத்திக் கொள்வார்.

#1669. பயனற்ற வாதம் புரிய மாட்டார்.

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர் வேடம் பூணார் அருள் நண்ணித்
துன்ஞானத் தோர் சமயத் துரிசுள்ளோர்
பின்ஞானத் தோரோன்றும் பேச கில்லாரே.

தாழ்ந்த ஞானம் உடைய ஒருவர் உயர்ந்த சிவ ஞானியின் கோலத்தைத் தரித்தாலும், அதனால் அவருக்கு எந்தப் பயனும் விளையாது. சிவ ஞானம் பெற்ற

ஒருவர் அதில் அமிழ்ந்து விடுவதால் அதற்குரிய கோலத்தைத் தரிப்பதில் கருத்தைச் செலுத்த மாட்டார். மாறுபட்ட ஞானத்தை உடையவர் சமய விரோதப் போக்கு மேற்கொள்வார். நல்ல ஞானம் உடையவர்கள் இது போன்ற சமய விரோதிகளிடம் வீண் வாதம் செய்து தம் பொன்னான காலத்தை வீணாக்க மாட்டார்கள்.

#1670. உவமையற்றவன் சிவன்

சிவ ஞானிகட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதன மாகாது தேரில்
அவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொருள் உள்ளூற லாமே.

ஆராய்ந்து நோக்கினால் மெய்யான சிவ ஞானிகளுக்கும், சிவயோகிகளுக்கும் புறச் சாதனங்கள் தேவை இல்லை. திருநீறு, சடை முடி, உருத்திராக்கம், ஐந்தெழுத்து என்னும் நான்கு புறச் சாதனங்களும் வீண். இவைகளின் உதவி இன்றியே அவர்கள் உவமையற்ற சிவனுடன் உள்ளூறப் பொருந்தி வாழலாம்.

#1671. ஆசைகளை வென்றவனே ஞானி

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியு முடலு மிருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யார்களே.

செப்பிடு வித்தைக்காரர்கள் கழு மரத்தின் அடியில் ஊனையும், உதிரத்தையும் சுவைக்க அலைகின்ற நாயைப் போலக் கத்தித் திரிவார்கள். மாய வித்தைகள் செய்பவர் கழுகு போலக் கொத்திப் பறித்துக் கொள்வர் ஏமாந்த மனிதர்களின் செல்வத்தை! உடலும் பொறிகளும் நல்ல நிலையில் இருந்த போதிலும், உலக இன்பங்களை வெறுத்து ஒதுக்கி விட்டு இறந்தவரைப் போலத் திரிவார் ஒரு மெய் ஞானி.

#1672. ‘சிவனே!’ என்று இருப்பவரே அடியார்

அடியா ரவரே யடியார லாதார்
அடியாரு மாகாரவ் வேடமு மாகார்
அடியார் சிவஞான மானது பெற்றோர்
அடியா ரலாதார் என்றே.

தன் முனைப்பு என்று ஒன்றும் இல்லாமல் சிவன் திருவருளின்படி நடப்பவர் மட்டுமே உண்மையான சிவனடியார். அந்தத் தகுதியை அடையாத ஒருவர்

சிவனடியார் அல்லர். அவர் தரித்துள்ள சிவக் கோலமும் மெய்க் கோலம் அன்று. சிவன் அருள் பெற்றவரே மெய்யடியார். மற்றவர்கள் பொய்யடியார்.

1673. ஞான சாதனம் ஆகும்

ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாம்
தான் உற்ற வேடமும் தற் சிவயோகமே
ஆன அவ்வேடம் அருள் ஞான சாதனம்
ஆனதும் ஆம் ஒன்றும் ஆகாதவனுக்கே.

சிவ ஞானிக்கு அழகிய சிவக் கோலம் நல்லதே! அந்தக் கோலத்தின் உண்மையை உணர்ந்து கொண்டு அதன்படி ஒழுகுவது சிவயோகம். அப்போது அந்த சிவக் கோலம் ஒரு ஞான சாதனம் ஆகிவிடும். இந்த உண்மையை அறியாத ஒருவனுக்கு அந்தக் கோலம் வெறும் ஒரு புறத் தோற்றம் மட்டுமே. அது ஞான சாதனம் ஆகாது.

#1674. சிவ ஞானி

ஞானத்தில் நாற்பதம் நண்ணும் சிவஞானி
தானத்தில் வைத்தல் தனி ஆலயத் தனாம்
மோனத்தன் ஆதலின் முத்தனாம் சித்தன்;
எனைத் தவசி இவன் என லாகுமே.

திருவடி உணர்வினால் ஞானம் பெற்றுச் சிவன் நிலையை ஒரு சிவஞானி அடைந்து விடுவான். அவன் நடமாடும் ஓர் ஒப்பற்ற சிவாலயம் ஆவான். அவன் மோனத்தில் மூழ்கி இருப்பதால் ஒரு சிறந்த சித்தனும் முத்தனும் ஆவான். இவனைப்பற்றிப் பேசுவதற்கு மற்றவர்களுக்குத் தகுதி இல்லை.

#1675. நந்தி பதம் முத்தி தரும்

தானன்றித் தன்மையும், தான் அவ னாதலும்,
ஏனைய அச்சிவ மான இயற்கையும்,
தான் உறு சாதக முத்திரை சாத்தலும்
மோனமும் நந்திபதம் முத்தி பெற்றதே

பிரணவ சித்தியும், சிவபதவியும் பெற்றவர்களின் இயல்பு இது.

தன்னறிவை இழந்து இருப்பது, சிவத்துடன் இரண்டறக் கலந்து விளங்குவது, எந்தப் பொருளுக்கும் உரிய மூன்று காலங்களையும் அறிகின்ற ஆற்றல் பெறுவது, ஞானம் பெறும் தகுதி படைத்தவர்களுக்குத் தன் பார்வையினால் அல்லது பரிசத்தால் சிவ ஞானத்தை வழங்குவது.

ஆறாம் தந்திரம் -
12. சிவ வேடம்

சிவ வேடம் = சிவபெருமானின் அடிமை என்று தன்னை எண்ணிக் கொள்பவர் ஏற்கும் வேடம்.

#1676. சிவ வேடத்தார்

அருளால் அரனுக்கு அடிமை அது ஆகிப்
பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி,
இருளானது இன்றி இருஞ் செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவ வேடத்தாரே.

சிவன் அருளால் அவனுக்கே அடிமை ஆகித் தன் உடலுக்கு மேலே விளங்குகின்ற ஒளி மயமான அண்ட கோசத்தை அறிந்து கொண்டு, அறியாமை இருள் நீங்கித் தன் செயல் என்று எதுவும் இல்லாமல், உடல், பொருள் ஆவி அனைத்தையும் சிவனுக்கே அர்ப்பணித்தவரே தெளிந்த சிவ வேடம் பூண்டவர்.

#1677. கடலில் அகப்பட்ட கட்டை

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்கு ஆகா,
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும,
உடல் உயிர் உண்மை என்று ஓர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே.

உடலில் ஏற்றுக் கொண்ட புறக் கோலங்கள் உள்ளே உள்ள ஆன்மாவுக்கு எந்தப் பயனையும் தராது. ஆன்மா உடலில் இருந்து நீங்கும் போதே அந்த வேடமும் கலைந்து விடும். உடல் அசத்து, ஆன்மா சத்து என்ற வேறுபாட்டினை உணராதவர்கள் கடலில் விழுந்த கட்டை கடலுக்கும் கரைக்கும் இடையில் அல்லாடுவதைப் போலவே பிறப்பு, இறப்பு என்ற இரண்டின் இடையே ஊசலாடுவர்.

#1678. செயல் அற்று இருப்பர்

மயல் அற்று, இருள் அற்று, மாமனம் அற்றுக்
கயல் உற்ற கண்ணியர் கை இணக்கு அற்றுத்
துயல் அற்றவரோடும் தாமே தாமாகிச்
செயல் அற்று இருப்பார் சிவ வேடத்தாரே.

சிவ வேடத்தார் ஆணவ மலம் தரும் மயக்கத்தை நீக்குவர். அதன் விளைவாகிய அறியாமை இருளை அகற்றுவர். மனத்தால் எண்ணும் செயலைத

துறப்பர். மீன் விழியாரின் தழுவலையும் துறப்பர். தெளிந்த ஞானிகளுடன் கூடித் தமக்கு என்று ஒரு செயலும் இல்லாமல் இருப்பர்.

#1679. இன்பப் பொருளை எய்தலாம்

ஓடுங் குதிரைக் குசை திண்ணம் பற்றுமின்
வேடங் கொண்டென் செய்வீர் வேண்டா மனிதரே
நடுமின் நந்தியை நம்பெருமான் தன்னைத்
தேடுமின் பப்பொருள் சென்றெய் தலாமே.

மனிதர்களே! புறக் கோலம் தரித்துக் கொள்வதால் மட்டும் என்ன பயன்? பிராண வடிவமாக இருந்து கொண்டு உங்களுக்கு உள்ளே ஓடும் அந்தக் குதிரையின் கடிவாளத்தைக் கைப் பற்றுங்கள் !அதை உங்கள் வசப்படுத்துங்கள்! வீணான புறக் கோலத்தைக் கைவிட்டுவிட்டுச் சிவபெருமானை நாடுங்கள்! நீங்காமல் அவனிடத்தில் மனத்தை வைத்தால் இன்பப் பொருளான அவனைச் சென்று அடைந்திட இயலும்.

ஆறாம் தந்திரம் -
13. அபக்குவன்

அபக்குவன் = பக்குவம் இல்லாதவன்.

#1680. இரு குருடர்கள்

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழி விழுமாறே.

தன் அறிவால் மாணவனின் அறியாமையைப் போக்கும் நல்ல குருவை ஏற்றுக் கொள்ள மாட்டார். தானே அறியாமையில் அழுந்தியுள்ள ஒரு குருவை ஏற்பார். இது ஒரு குருடனுக்கு இன்னொரு குருடன் வழி காட்டி அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு குழியில் விழுவதைப் போன்றது.

#1681. புறக்கடை இச்சிப்பர்

மனத்தில் எழுந்தது ஓர் மாயக் கண்ணாடி
நினைப்பின் அதனில் நிழலையும் காணார்
வினைப் பயன் போக விளக்கியும் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்றவாறே.

மனத்தில் இருந்தே பிரதிபலிக்கின்றன நாம் காண்கின்ற, உணர்கின்ற, எண்ணுகின்ற அனைத்துமே. ஆன்மாவை மறைக்கும் அந்தத் திரையின் நிழலைக் கூட இவர்கள் காண்பதில்லை. தம் வினைப் பயன்கள் வீணாகிவிடுவதற்கு சிறிதும் முயற்சி செய்வதும் இல்லை. மீண்டும் மீண்டும் அறியாமையின் விளைவாக உலக இன்பங்களையே நாடுகின்றார்கள்

#1682. ஊன் நிலை செய்யும் உருவிலி

‘ஏய்‘ எனில் ‘என்’ என மாட்டார்கள் பிரசைகள்
வாய் முலை பெய்ய மதுரம் நின்று ஊறிடும்,
தாய் முலை யாவது அறியார் தமர் உளோர்
ஊன் நிலை செய்யும் உருவிலி தானே.

‘ஏய்!’ என்று அழைத்தாலும் மறுமொழி கூறார் வெறும் மனிதர்கள்! ஆனால் நம் கண்ணுக்குத் தெரியாத உருவிலியாகிய சிவபெருமான் செய்வது என்ன தெரியுமா ? பிறந்த குழந்தையின் உடலில் உயிர் நிலைத்திருப்பதற்கு அதன் தாயின் மார்பில் இனிமையான பாலைச் சுரக்கச் செய்கின்றான். இந்த மாயம் நிகழ்வது எங்கனம் என்று வேறு எவரும் அறியார்!

#1683. முக்கரணங்களின் தூய்மை

வாய் ஒன்று சொல்லி, மனம் ஒன்று சிந்தித்து
நீ ஒன்று செய்யல், உறுதி நெடுந்தகாய்!
தீ என்று இங்கு உன்னைத் தெளிவன் தெளிந்த பின்
பேய் என்று இங்கு என்னைப் பிறர் தெளியாரே.

உறுதி படைத்த நெடுந்தகையோனே! நீ வாயால் ஒன்றைக் கூறி, மனத்தால் வேறு ஒன்றை எண்ணி, செயலால் பிறிதொன்றைச் செய்யாதே! மனம், மொழி, மெய் என்னும் மூன்று கரணங்களும் தூய்மையாக இருந்தால் மட்டுமே நீ சிவாக்கினி பெற்றவன் என்று நான் உன்னைக் கூறுவேன். அப்போது தான் என் சொல்லைப் பித்தனின் பேச்சு என்று எவரும் கூற மாட்டார்கள்.

1684. பஞ்ச மா பாதகங்கள்

பஞ்சத் துரோகத்திப் பா தகர் தம்மை
அஞ்சச் சமயத்தோர் வேந்த னருந் தண்டம்
விஞ்சச்செய் திப்புவி வேறு விடாவிடில்
பஞ்சத்து ளாய் புவிமுற்றும் பாழாகுமே.

பஞ்ச மா பாதகங்கள் செய்பவரை மன்னன் அஞ்சும் வண்ணம் தண்டித்து அவர்களை நாடு கடத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அந்த நாடு பஞ்சம், வறுமை இவற்றால் பாழாகிவிடும்.

#1685. பவத்திடை நின்று பரிதவிப்பர்

தவத்திடை நின்றவர் தாம் உண்ணும் கன்மம்
சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறியாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடு அது ஆமே.

தவத்தை மேற் கொள்பவருக்குப் பல துன்பங்கள் நேரலாம். அவை அனைத்தும் சாதகனின் கன்மம் கழிவதற்காகச் சிவத்தினால் ஏற்படுத்தப் பட்டவை என்று அறிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையைத் தேவரும் அறிகிலர். தவத்திடை நிலையாக நிற்க இயலாதவர்கள் பவம் என்னும் பிறவித் துன்பத்தில் சிக்கிக் கொண்டு வருந்துவர்.

1686. இறைபால் இயற்கை இல்லாதவை

கன்றலுங் கருதலுங் கருமம் செய்தலும்
தின்றலும் சுவைத்தலும் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறை பால் இயற்கை அல்லவே.

இந்த ஒன்பது குற்றங்கள் இறை மீது அன்பு கொண்டவருக்கு ஏற்றவை அல்ல.

1. பிறரிடம் சினம் கொள்ளுவது,
2. எதையாவது சிந்தித்துக் கொண்டே இருப்பது,
3. எப்போதும் ஏதோ செயல்கள் புரிந்து கொண்டே இருப்பது,
4. ஓயாமல் தின்பது,
5. எதையாவது சுவைப்பது,
6. பிறருக்குத் தீங்கிழைப்பது,
7. குறைவாக எண்ணுவது,
8. நிறைவாக எண்ணுவது,
9. தற்பெருமை பேசுவது.

#1687. சிவ ஒளி இடரை நீக்கும்

விடிவது அறியார், வெளி காண மாட்டார்,
விடியில் வெளியில் விழிக்கவும் மாட்டார்
கடியது ஓர் உள், இமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கு அது ஆமே.

பக்குவம் அற்றவர்கள் தமக்கு நன்மை தருவதை அறியமாட்டார். பரமாகாயத்தைக் காண மாட்டார். பரவெளியில் பார்வையைச் செலுத்த மாட்டார் . பக்குவம் அடையாதவர்களே ! கண் இமைகளைக் காவலாக்கி விடுங்கள். கண்பார்வை வெளியே செல்லாது தடுத்து நிறுத்துங்கள். அதை உள்முகமாகத் திருப்புங்கள். அப்போது இடர்களை நீக்கும் சிவபெருமானின் ஒளி உங்களுக்குப் புலப்படும்.

#1688. பித்தான சீடனுக்கு ஈயாதீர்!

வைத்த பசுபாசம் மாற்றும் நெறி வைகிப்
பெத்தம் அற முத்தன் ஆகி, பிறழ்வுற்றுத்
தத்துவம் உன்னித் தலைப்படா தவாறு
பித்தான சீடனுக்கு ஈயப்பெறா தானே.

ஆணவ மலம் அனாதி காலமாக ஆன்மாவுடன் இணைந்துள்ளது. சாதகன் அதை மாற்றும் வழியில் செல்லவேண்டும். தன் மலங்கள் நீங்கி முத்தன் ஆகிவிட விழைய வேண்டும். உலகத்தோரின் இயல்பிலிருந்து மாறுபட்டு இருக்க வேண்டும். உண்மைப் பொருளை நாட வேண்டும். இவற்றைச் செய்யாதவனும் மனவுறுதி இல்லாதவனும் ஆன ஒரு சீடனுக்கு ஞானத்தை ஒருபோதும் ஈயாதீர்கள்.

#1689. விலக்கப்பட வேண்டிய மாணவன்

மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை ஓரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன் , பிறப்பு இறப்பு அஞ்சாதான்
அன்னிய னாவான் அசற் சீடனாமே.

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம் , திரோதாயி ஐந்து மலங்களை நீக்குகின்ற வழிகளை ஆராயாதவன் ; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் இவற்றில் தோய்ந்த செயல்களை விலக்காதவன்; பொய் கலந்து பேசுபவன்; பிறவிப் பிணியைக் கண்டு அஞ்சாதவன் குருவால் விலக்கப் பட வேண்டிய மாணவன் ஆவான்.

ஆறாம் தந்திரம் -
14. பக்குவன்

பக்குவன் = தகுதி உடையவனும், குருவின் சொற்படி நடப்பவனும் ஆன நல்ல மாணவன்.

#1690. நல்வழி அறிவாளர்

தொழுது அறிவாளர் சுருதி கண்ணாகப்
பழுது அறியாத பரம குருவை
வழி அறிவார் நல் வழி அறிவாளர்
அழிவு அறிவார் மற்றை அல்லாதவரே.

வழிபட்டுத் தொழும் இயல்புடைய மாணவன் வேதாகமத்தின் இன்றியமை யாமையை உணர்ந்து கொண்டு, குற்றமற்ற ஒரு பரம குருவை நாடிச் செல்வான். இவன் முக்தியை விரும்பும் நல்லறிவு படைத்தவன். உலகியலில் ஆர்வம் கொண்டு முக்தியை விரும்பாத மாணவனோ எனில் அழியும் வழியையே அறிவான்.

#1691. உகந்து ஆண்டருளாயே

பதைத்து ஒழிந்தேன் பரமா உனை நாடி
அதைத்து ஒழிந்தேன் , இனி யாரோடும் கூடேன்,
சிதைத்து அடியேன் வினை சிந்தனை தீர
உதைத்து, உடையாய் உகந்து ஆண்டருளாயே.

பரமா! உன்னை நாடி நான் வீணே பதை பதைப்பதைக் கை விட்டேன். உலகத்தில் உழன்று களைத்துப் போனேன். இனி யாருடனும் நான் சேர மாட்டேன். என் வினைகளைச் சிதைத்து அழித்து விடு! என் சிந்தாகுலம் தீரும் வண்ணம் என்னை உவந்து ஏற்றுக்கொள்வாய்!

#1692. இசைக்கின்ற அன்பருக்கு ஈயலாம்

பதைக்கின்ற போதே பரம் என்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக்கு ஈயலும் ஆமே.

ஞானம் பெறவேண்டும் என்னும் பதைபதைப்பு இருக்கும் போதே மாணவனிடம் பரம் என்னும் விதையை விதைப்பான் நல்ல ஆசிரியன். சிந்தையைச்

சிதறாமல் ஒருமுகப் படுத்தி மேலே சகசிர தளத்தில் நிலை நிறுத்தி இசைவாக இருக்கும் அன்பனுக்கு மெய் ஞானம் உறுதியாக ஈயப்படும்.

#1693. நல்ல குருவை நாடுவீர்

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்க
உள்ள பொருளுடல் ஆவி யுடனீக
எள்ளத் தனையு மிடைவிடாதே நின்று
தெள்ளி யறியச் சிவ பதந் தானே.

நாடுவதாயின் நல்ல குருவை நாடுவீர்! அவருக்கு உம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கை ஆக்குவீர் ! அவர் காட்டும் நல்ல வழியில் எள்ளளவும் தடங்கல் தொடர்ந்து நடந்தால் உமக்குச் சிவபதம் தானே தெளிவாகும்.#1693. நல்ல குருவை நாடுவீர்.

#1694. உபதேசம் பெற உகந்த நாட்கள்

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள் நண்டு
ஓதிய நாளே யுணர்வது தானென்று
நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது
ஆதியு மேது மறிய கிலானே.

உபதேசம் பெறுவதற்கு உகந்த நட்சத்திரங்கள் சுவாதியும் விசாகமும். உபதேசம் பெற உகந்த ஓரைகள் விருச்சிகமும் , கடகமும். இதன் காரணம் யான் அறியேன். எனினும் குருமுகமாக உபதேசம் பெறுவதற்கு ஆதி முதல் இவையே உகந்தவையாக இருந்து வருகின்றன.

#1695. திருவடி கண்டு அருள் பெறலாம்

தொழில் ஆர, மாமணித் தூய்து ஆன சிந்தை
எழிலால் இறைவன் இடம் கொண்ட போதே
அழல் ஆர் விறலாம் வினைஅதுபோகக்
கழல் ஆர் திருவடி கண்டு அருள் ஆமே.

நல்ல குருவின் உபதேசம் சாதகனின் சிந்தையைத் தூய்மையாக்கி விடும். பெரிய மணியைப் போன்ற அவன் சிந்தையில் ஒளிருகின்ற எந்தை எழுந்தருள்வான். அக்கணமே அவனைப் பிணித்திருந்த வல் வினைகள் நீங்கி விடும். அவன் இறைவனின் கழல் ஒலிக்கும் திருவடியைக் கண்டு நாத உணர்வாகிய சிவன் அருளைப் பெறலாம்.

#1696. நல்ல சீடன் யார்?

சாத்திகனாய்ப், பரதத்துவம் தான் உன்னி
ஆத்திக பேத நெறி தோற்றம் ஆகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த வல்லான் அவன் சற் சீடனாமே.

நல்ல சீடனின் இலக்கணம் இது.

சத்துவ குணம் கொண்டிருக்க வேண்டும்; சிவத்தைத் தியானித்து வர வேண்டும்; ஏதாவது ஒரு ஆத்திக நெறியைப் பின் பற்ற வேண்டும். வினைப் பயனாக விளையும் பிறவிப் பிணிக்கு அஞ்ச வேண்டும். மேன்மையான அறநெறிகளைப் பின் பற்ற வேண்டும்.

#1697. ஆனந்த சக்தியில் இச்சை

சத்தும் அசத்தும் எவ்வாறு எனத் தான் உன்னிச்
சித்தை உருக்கிச் சிவனருள் கை காட்டப்
பத்தியில் ஞானம் பெறப் பணிந்துஆனந்தச்
சத்தியில் இச்சை தருவோன் சற் சீடனே.

இந்த உலகில் உள்ளவற்றில் 'சத்து' என்னும் நிலையான, அழியாத பொருள் எது? 'அசத்து' என்னும் என்னும் நிலையற்ற, அழிகின்ற பொருள் எது? என்று சிந்தித்துக் கண்டறிய வேண்டும்.சிவனையே சிந்திதது அவனருள் பெற வேண்டும். பத்தி செய்து சிவஞானம் பெற வேண்டும். சிவனைப் பணிந்து ஆனந்த வடிவாகிய சிவ சக்தியின் விருப்பத்துக்கு ஏற்ற வண்ணம் தன்னை பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

#1698. ஆசு அற்ற ஞானத்தான்

"அடிவைத்து அருளிதி ஆசான் இன்று" உன்னா
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட் சத்தியாலே
அடி பெற்ற ஞானத்தான் ஆசு அற்றுளானே.

'குருநாதன் சிவபெருமான் இன்று எனக்கு அருள் புரிவான்" என்று எண்ணித் தன் குருவின் வடிவைத் தன் தலையின் மீது வைத்து தியானிக்க வேண்டும். மாயப் பிறவியைச் சினந்து அழிக்கும் வல்லமை கொண்ட அருள் சக்தியின் அருளைப் பெற்றுத் தூய ஞானம் அடைந்த மாணவனே குற்றமற்ற சிறந்த மாணவன் ஆவான்.

#1699. காதல் குருபரன் பாலாகும்!

சீராரும் ஞானத்தின் இச்சை செலச் செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதகம் நான்கும்தன் பால் உற்றோன்
ஆராயும் ஞானத்தனாம் அடி வைக்கவே.

சாதகனுக்குச் சிறந்த அனுபவ ஞானத்தின் மீது இச்சை அதிகரிக்கும் போது, அதுவரையில் அவனுக்கு வாராத காதல் குருபரன் சிவபெருமான் மேல் ஏற்படும். அதுவரையில் அவனிடம் அமைந்திராத ஒழுக்கம்,நோன்பு, செறிவு , அறிவு என்ற நான்கு சாதகங்கள் வந்து அமையும். இத்தகைய மாணவன் திருவடி தீட்சை பெற்ற பின்பு ஞானத்தின் அனுபவத்தை ஆராயத் தொடங்குவான்.

#1700. பக்குவத்துக்கு ஏற்ப உணர்த்துவீர்

உணர்த்தும் அதிபக்குவர்க்கே உணர்த்தி
இணக்கு இல் பராபரத்து எல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்கு உத்தர பச்சிமம் கொண்டு
உணர்த்துமின் ஆவுடையாள் தன்னை உன்னியே.

பக்குவம் அடைந்த மாணவனுக்கு அவன் அடைந்துள்ள பக்குவத்துக்கு ஏற்ப ஒரு உத்தம குரு உபதேசம் செய்ய வேண்டும். பசுக்கள் ஆகிய சீவர்களுக்கு உதவுபவள் பராசக்தி. அவளை மாறாத நினைவில் கொள்ளுங்கள். சிவன் ஒன்றுடனும் பற்றில்லாத பராபரன். அவன் கிழக்கு எல்லைக்கு மாணவனை அழைத்துச் செல்லுங்கள். ஈசனின் ஐந்து முகங்களையும் அவை அமைந்துள்ள திசைகளையும் உணர்த்துங்கள். குருபரன் சிவபெருமானின் ஐந்து முகங்களும் சாதகனின் மூலாதாரமும் இணையும் போது அவனுக்குச் சதாசிவன் விளங்குவான்.

#1701. சன்மார்க்க உபதேசம்

இறைஅடி தாழ்ந்து, ஐ வணக்கமும் எய்தி
குறை அது கூறிக் குணங் கொண்டு போற்றச்
சிறை உடல் நீ அறக் காட்டிச் சிவத்தோடு
அறிவுக்கு அறிவிப்போன் சன்மார்க்கி ஆமே.

குருவுக்கு ஐந்து விதமான வணக்கத்தையும் செய்ய வேண்டும். அவர் திருவடிகளில் விழுந்து வணங்க வேண்டும். மாணவன் ஆன்மாவின் குற்றம் குறைகளைக் கூறிக் குணம் நல்குமாறு அவரிடம் வேண்டும் போது அவர், "சிறைப் பட்டுள்ள உடலையே நீ என்று நம்பி இருக்கும் மாணவனே! நீ எல்லையற்ற சிவமாக ஆவாய்!" என்று அவனுக்கு உணர்த்துவார். ஒரு நல்ல சன்மார்க்க குரு சிவ அறிவையும் ஆன்ம அறிவையும் ஒன்றாக ஆக்கிவிடுவார்.

#1702. தாழுந் தலையோன் சற் சீடன்

**வேட்கை விடுநெறி வேதாந்தம் ஆதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினோன் சற் சீடனாமே.**

வேதாந்தம் கூறும் உலக வேட்கைகளை அழிக்கவேண்டும் என்று! உலக வாழ்வு என்பது புலன்களை நாடிச் செல்கின்ற பொறிகளின் வழியே நடப்பது. அதை மாற்றிச் சித்தாந்த நெறியினில் சாதகன் செல்ல வேண்டும். விருப்பங்களை விட்டு விட்ட வேதாந்தியாகிய தன் சற்குருவின் பாதங்களில் தன் தலையைத் தாழ்த்தி வணங்குபவன் ஒரு நல்ல மாணவன் ஆவான்.

#1703. அற்புதம் தோன்றும்

**சற்குணம் வாய்மை தயாவிவேகந் தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ் சற்சீடனே.**

பக்குவம் உடைய மாணவனின் இலக்கணம் : சத்துவ குணம், வாய்மை, தயை, விவேகம், எளிமை, குருவின் திருவடிகளை விட்டு நீங்காமை, சிற்பர ஞானத்தைத் தெளிந்து அறிதல், அற்புதத்தை உணருதல் என்பவை ஆகும்.

இத்துடன் திருமந்திரத்தின் ஆறாம் தந்திரம் முற்றுப் பெற்றது.

ஏழாம் தந்திரம்

ஏழாம் தந்திரம் -
1. ஆறு ஆதாரங்கள்

உடலில் அமைந்துள்ள ஆறு சக்கரங்கள்:
மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்பவை.

#1704. ஈசன் திருவடியை நேசன் காணலாம்

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலி து கொண்ட மேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலம் கண்டு ஆங்கே முடிந்த முதல் இரண்டும்
காலம் கண்டான் அடி காணலும் ஆமே.

நான்கு இதழ்த் தாமரை வடிவம் கொண்ட மூலாதாரம்; ஆறு இதழ்த் தாமரை வடிவம் கொண்ட சுவாதிட்டானம் , பத்து இதழ்கள் கொண்ட மணி பூரகம், பன்னிரண்டு இதழ்கள் கொண்ட அநாகதம், பதினாறு இதழ்கள் கொண்ட விசுத்தி என்னும் ஐந்து ஆதாரச் சக்கரங்களையும் தரிசித்து விட்டால் ஆக்ஞை சக்கரத்தில் ஈசன் திருவடிகளை அவன் நேசன் காணலாம்.

#1705. பரமசிவன் விளங்குவான்

ஈராறு நாதத்தில், ஈரெட்டாம் அந்தத்தில்
மேதாதி நாதாந்தம் மீது ஆம் பராசக்தி
போதா ஆலயத்து அவிகாரம் தனில், போத
மேதாதி ஆதாரம் மீதானம் உண்மையே.

கதிரவன் மண்டலம் பன்னிரண்டு கலைகள் கொண்டது. இதுவே தலையைச் சுற்றியுள்ள வானவீதி ஆகும். மேதை முதலான பதினாறு கலைகள் கொண்டது சந்திர மண்டலம். இதன் வீதி மூலாதாரத்தில் இருந்து செங்குத் தாக மேல் நோக்கிச் செல்லும். நாதாந்தம் எனப்படுவது உடல் முடியும் இடம். இதுவே பிரமரந்திரம் என்னும் உச்சித் தொளை. இங்கு நிராதாரத்தில் விளங்குவாள் பராசக்தி. பிரசாத நெறியில் விகாரம் அற்ற அறிவுடன் மேல் நோக்கிச் செல்லும் போது எல்லா ஆதாரங் களையும் கடந்த நிலையில் பரம சிவன் விளங்குவான்.

#1706. கார் ஒன்றிய கற்பகம் ஆவான்

மேல் என்றும் கீழ் என்று, இரண்டு அறக் காணுங் கால்
தான் என்றும் நான் என்றும் தன்மைகள் ஓர் ஆறும்
பாரெங்கும் ஆகிப் பரந்த பராபரம்
கார் ஒன்று கற்பகம் ஆகி நின்றானே.

பிரசாத நெறியில் நின்று மேற்பக்கம் கீழ்பக்கம் என்ற வேறுபாடுகளைக் கடந்து சென்றால், இறைவன் ஒரே பேரொளியாகக் காட்சி தருவான். அவன் இறைத் தன்மையின் ஆறு சீரிய குணங்களும் பெற்று இருப்பான். பார் எங்கும் பரந்து நிற்பான் அந்தப் பராபரம். கற்பகத் தருவைப் போல வேண்டியவருக்கு வேண்டியதைத் தருவான். கார் மேகம் போல் அன்பர்களின் மீது தன் அருள் மழையைப் பொழிவான்.

விளக்கம்:

இறைவனின் ஆறு சீரிய குணங்கள்
அவா இன்மை, இறைத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம்.

#1707. சகமார்க்கம் யாது?

ஆதார சோதனையால் நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ஒளி
போதாலயத்துப் புலன் கரணம் புந்தி
சாதாரணங் கெட்டான் றான்சக மார்க்கமே.

ஆறு ஆதாரங்களையும் அவற்றுக்கு உரிய மந்திரங்களைச் சொல்லித் தூய்மை ஆக்க வேண்டும். இதனால் நாடி சுத்தி ஏற்பட்டு, இடைகலை ,பிங்கலை நாடிகளும் தூய்மை அடையும். மேதை முதலான பதினாறு கலைகளின் முடிவில் வானத்தில் ஒளி தோன்றும் . சாதகனின் அறிவாலயம் எனப்படும் ஆன்மாவை வெளி உலகை நோக்கிச் செலுத்துகின்ற ஐந்து பொறிகள், நான்கு அந்தக் கரணங்கள், புத்தி என்பவை தம் இயல்பிலிருந்து மாறுபட்டு ஆன்மாவைக் கீழ் நோக்கி இழுப்பதை நிறுத்தி விடும். இதுவே சக மார்க்கம் எனப்படும் தோழமை நெறி ஆகும்.

#1708. இன்ப மயமானது பிரணவ உபாசனை

மேதாதி யாலே விடாதுஓம் எனத் தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாது ஆதாரமாகவே தான் எழச் சாதித்தால்
ஆதாரம் செய்போகம் ஆவது காயமே.

பிரணவத் தியானம் செய்து மேதை முதலிய பதினாறு கலைகளையும் நன்றாகத் தூண்ட வேண்டும் . வீரியத்தைத் தன் இடமாகக் கொண்டுள்ள, கீழ் நோக்கிப் பாய்கின்ற தன்மை உள்ள, குண்டலினி சக்தியை உடலின் ஐந்து மற்ற ஆதாரங்களின் வழியே மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். அது அப்போது அத்துவா என்னும் ஒரு தூயவழியை உண்டு பண்ணும். இதனால் உடலின் ஆறு ஆதாரங்களிலும் ஒளி உண்டாகும். அங்கு இன்பம் விளையும். பிரணவ உபாசனை இன்ப மயமானது.

#1709. எழுத்துக்கள் ஒடுங்கி நாதமாகும்

ஆறு அந்தமும் கூடி ஆகும் உடம்பினில்
கூறிய ஆதாரம் ஆறும் குறிக் கொண்மின்
ஆறிய அக்கரம் ஐம்பதின், மேலாக
ஊறிய ஆதாரத்து ஓர் எழுத்தாமே.

ஆறு ஆதாரங்கள் உடலில் உள்ளன. அவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் மீது தியானம் செய்து அவைகளின் வழியே படிப் படியாக மேலே ஏற வேண்டும். அந்த ஆறு ஆதாரங்களில் ஐம்பது எழுத்துக்கள் பொருந்தி உள்ளன. அவற்றைக் கடந்து செல்லும் போது அவை அனைத்தும் 'ஓம்' என்ற ஓரெழுத்தாகிய பிரணவத்தில் அடங்கி விடும்.

#1709. எழுத்துக்கள் ஒடுங்கி நாதமாகும்

ஆறு அந்தமும் கூடி ஆகும் உடம்பினில்
கூறிய ஆதாரம் ஆறும் குறிக் கொண்மின்
ஆறிய அக்கரம் ஐம்பதின், மேலாக
ஊறிய ஆதாரத்து ஓர் எழுத்தாமே.

ஆறு ஆதாரங்கள் உடலில் உள்ளன. அவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் மீது தியானம் செய்து அவைகளின் வழியே படிப் படியாக மேலே ஏற வேண்டும். அந்த ஆறு ஆதாரங்களில் ஐம்பது எழுத்துக்கள் பொருந்தி உள்ளன. அவற்றைக் கடந்து செல்லும் போது அவை அனைத்தும் 'ஓம்' என்ற ஓரெழுத்தாகிய பிரணவத்தில் அடங்கி விடும்.

#1710. நுண்ணுடல் பருவுடல் பொருந்தும்

ஆகும் உடம்பும் அழிகின்ற அவ் உடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறு அந்தமாமே.

பருவுடல் நுண்ணுடலின் இயல்புக்கு ஏற்ப அமையும். ஆகின்ற நுண்ணுடலும் போகின்ற பருவுடலும் நன்றாக ஒன்றாகப் பொருந்துவது எங்கனம்? நுண்மையாக நாதத்தில் ஒடுங்கிவிடுகின்ற, ஆனால் ஆதாரங்களில் ஐம்பதாக விரிகின்ற, எழுத்துக்களும், தத்துவங்களும் அந்த இரு உடல்களையும் நன்கு பொருந்தச் செய்கின்றன.

#1711. தூய அறிவு சிவானந்தம் ஆகும்

ஆயும் மலரின் அணிமலர் மேலது
ஆய இதழ் பதினாறும் அங்கு உள,
தூய அறிவு சிவானந்த மாகிப் போய்
மேய அறிவாய் விளைந்தது தானே.

ஆராயத் தகுந்த இதயத் தாமரைக்கு மேல் பதினாறு இதழ்த் தாமரை ஒன்று கழுத்தில் விசுத்திச் சக்கரத்தில் உள்ளது. அங்கு ஆன்மா தூய சிவானந்தமே தன்வடிவாகக் கொள்ளும். செறிந்த அறிவாக நீக்கமற நிறைந்து எங்கும் சென்று பொருந்தும்.

ஏழாம் தந்திரம் -
2. அண்ட லிங்கம்

அண்டம் = உலகம்
லிங்கம் = குறி / அடையாளம்
உலகம் முழுவதுமே சிவனது அடையாளம் ஆகும்.

#1712. உலகம் சிவன் வடிவம்

இலிங்கம் அது ஆகுவது ஆரும் அறியார்
இலிங்கம் அது ஆகுவது எண்டிசை எல்லாம்
இலிங்கம் அது ஆவது எண்ணெண் கலையும்
இலிங்கம் அது ஆக எடுத்தது உலகே.

உலகத்துக்குக் காரணம் ஆனது இலிங்கம் எனப்படும் சிவம் என்ற உண்மையை யாரும் அறியார். எட்டுத் திசைகளிலும் நிறைந்திருப்பது உலகலிங்கம் என்று அறிவீர். அறுபத்து நான்கு கலைகள் உடைய பிரணவமும் சிவலிங்கம் ஆகும். உலகம் முழுவதும் காரண வடிவில் ஒடுங்கி இருப்பது சிவலிங்கத்திடமே.

#1713. உலகம் எடுத்த சதாசிவம்

உலகு இல் எடுத்தது சக்தி முதலா
உலகு இல் எடுத்தது சத்தி வடிவாய்
உலகு இல் எடுத்தது சத்தி குணமாய்
உலகம் எடுத்த சதாசிவம் தானே.

உலகைப் படைக்க விரும்பிய சதாசிவன், தன்னை விட்டு இணை பிரியாத சக்தியின் துணையுடன் அதைத் தோற்றுவித்தான். குண்டலினி சக்தி உலகுக்கும் உயிர்களுக்கும் வடிவத்தைத் தந்தது. சிவ சக்தியரின் சிற்சக்தி சீவர்களுக்கு அறிவைத் தந்தது.

#1714. அனைத்தையும் அளிப்பவன் சிவன்

போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத்து அப்பாலாம்
ஏகமும் நல்கி இருக்கும் சதாசிவம்
ஆகம் அது அத்துவாவறும் சிவமே.

உலக வாழ்வில் இன்பம், முக்தி, சித்தி, புத்தி, அனைத்தையும் நமக்குத் தருபவன் சிவன். பெற்றுள்ள உடலையும் மற்றும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து ஒன்றாக விளங்கச் செய்பவனும் சிவன். ஆகமங்கள் உணர்த்துகின்ற ஆறு அத்துவாக்களின் வழியே சென்று அடையப்படுகின்றவனும் சிவன் .

1715. அண்டங் கடந்து காப்பவன் சிவன்

ஏத்தின ரெண்ணிலி தேவரெம் ஈசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ள லென்று
ஆர்த்தன ரண்டம் கடந்தப் புறநின்று
காத்தன னென்னும் கருத்தறி யாரே.

எண்ணற்ற தேவர்கள் எம் ஈசனாம் சிவனைப் போற்றித் தொழுதனர். அவர்கள் நறுமணம் பரப்பும் குளிர் தென்றல் போன்ற வள்ளல் என்று சிவனைப் போற்றிப் புகழ்ந்தனர். ஆரவாரம் செய்து கொண்டாடினர். எனினும் சிவன் அண்டங்களைக் கடந்து நின்று கொண்டு அவற்றைக் காப்பதை அவர்களும் அறியார்.

#1716. தண்சுடராகிய தற்பரம்

ஒண்சுட ரோனயன் மால்பிர சாபதி
ஒண்சுட ரான இரவியோ டிந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்கும் தேவர்கள்
தண்சுட ராயெங்கும் தற்பரமாமே.

ஒளிவீசும் சுடராகிய அக்கினி, பிரமன், திருமால், பிரசாபதி, காயும் கதிரவன், இந்திரன் இவர்களுடன் கண்ணில் ஒளி போலக் கலந்து நிற்பவன் சிவன். பிற தேவர்களிடம் குளிர்ந்த நிலவைப் போலக் கலந்து நிற்பவன் சிவன். இங்ஙனம் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து இருப்பவன் சிவன்.

#1717. மா பரத்தில் உள்ளான் சிவன்

தாபரத்துள் நின்று அருள வல்லான் சிவன்
மாபரத்து உண்மை வழிபடுவார் இல்லை;
மாபரத்து உண்மை வழிபடு வாளர்க்கும்
பூவகத்துள் நின்ற பொற்கொடி ஆகுமே.

அசையாப் பொருட்களில் லிங்கமாக உறைந்து சீவர்களுக்கு அருளுபவன் சிவன். அவனே ஞான ஆகாயமான பரமாகாயத்தில் மறைந்து உறைவதை அறிந்து கொண்டு அவனை வழிபடுபவர்கள் இல்லை. அவன் பரமாகாயத்தில் மறைந்து உறைந்து அருள் புரிவதை அறிந்து கொண்டவர்களுக்குச் சிவன் உடலின் ஆறு ஆதாரங்களிலும், சகசிரதளத்திலும், பொற்கொடி போன்ற குண்டலினி சக்தியாக விளங்குவான்.

#1718. ஆலயத்தில் அமையும் இலிங்கங்கள்

தூய விமானமும் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலி பீடம் பத்திர லிங்கமாம்
ஆய வரனிலை யாய்ந்து கொள்வார் கட்கே.

அரன் ஆலயத்தைப் பற்றி அறிந்து கொள்பவருக்கு கருவறையின் மேல் அமைந்த விமானமே பருலிங்கம் ஆகும். கருவறையில் உள்ள லிங்கம் நுண் இலிங்கம் ஆகும். பலி பீடத்தில் இருப்பது இதழ் வடிவில் அமைந்துள்ள பத்திரலிங்கம்.

#1719. இலிங்கம் அமைக்க உகந்தவை எவை?

முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமும்
கொத்துமக் கொம்பு சிலை நீறு கோமளம்
அத்தன்ற னாகம மன்ன மரிசியாம்
உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே.

இலிங்கம் அமைக்க உகந்த பொருட்கள் இவை: முத்து, மாணிக்கம், பவளம், மரக் கொம்பு, கல், திருநீறு, மரகதம், சிவாகமம், சாதம், அரிசி, பூ, மணல்.

#1720. சிவலிங்கம் அமைக்கலாம்

துன்றுந் தயிர்நெய் பால் துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தம்சலம்
வன்திறல் செங்கல் வடிவுடைவில்வம் பொன்
தென்றியங் கொன்றைத் தெளி சிவலிங்கமே

இறுகிய கட்டித் தயிர், தூய்மையான நெய், பால், பசுஞ் சாணம், செம்பு, அக்கினி, பாதரசம், சலம், நன்கு வேகவாய்த்த செங்கல், வில்வம், பொன் இவற்றாலும் சிவலிங்கம் செய்யலாம். திரவங்களை கலசத்தில் பெய்து அதை லிங்கமாக வழிபட வேண்டும்.

#1721. இலிங்கங்களின் வகைகள்

மறையவர் அர்ச்சனை வண்படிகம் தான்
இறையவ ரர்ச்சனை ஏயபொன் னாகும்
குறைவிலா வசியர்க்குக் கோமளமாகும்
துறையுடைச் சூத்திதிரர் தொல்வாண லிங்கமே.

வளமிக்க படிக இலிங்கம் வேதியர்கள் பூசை செய்வதற்கு உரியது.
பொன்னால் ஆன இலிங்கம் மன்னர்கள் பூசை செய்வதற்கு உகந்தது.
செல்வ வளமிகுந்த வைசியர்கள் மரகத இலிங்கதைப் பூசிக்கலாம்.
தொண்டு செய்வதில் சிறந்த சூத்திரரகள் வாண லிங்கத்தை வழிபடலாம்.

#1722. சீவனின் உடலே ஓர் ஆலயம்

அது வுணர்ந் தோனொரு தன்மையை நாடி
ஏதுவுண ராவகை நின்றனன் ஈசன்
புதுவுணர் வான புவனங்கள் எட்டும்
இது உணர்ந் தென்னுடல் கோயில் கொண்டானே.

இலிங்கத்தில் மட்டும் சிவனைக் காணும் இயல்பினை உடைய ஒருவன் சிவபெருமான் உலகில் உள்ள அனைத்துப் பொருட்களிலும் கலந்து உறைவதை உணர முடியாது. மண், நீர், நெருப்பு, வளி, வெளி , கதிரவன், சந்திரன், ஆன்மா என்னும் இந்த எட்டிலும் இறைவன் கலந்து இருப்பதைத் தெரிந்து கொண்டபோது அவன் என் உடலையும் தன் கோவிலாகக் கொண்டு விளங்கினான்.

#1723. உள்ளமே ஓர் ஆலயம்

அகலிடமாய், அறியாமல் அடங்கும்
உகல்இடமாய், நின்ற ஊன் அதனுள்ளே
பகல்இடமாம் முனம் பாவ வினாசன்
புகலிடமாய் நின்ற புண்ணியன் தானே.

சிவன் அகன்று விரிந்த பிரபஞ்சம் ஆவான். அதனுடன் அவன் யாரும் அறியாத வண்ணம் கலந்து உறைகின்றான். உயிர்கள் அனைத்தும் சென்று ஒடுங்கும் உகளிடமும் ஆவான் சிவன். சீவன் முன்பு வினைகள் புரிந்து ஈட்டிய

பாவங்களை நாசனம் செய்பவன் சிவன். அவனிடம் புகல் அடைந்தவர்களின் உடலுள் ஒளியை ஏற்படுத்துபவன் சிவபெருமான்.

#1724. அண்டமே அவன் திருமேனி

போது புனை கழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியுள் ஈசன் உடல் விசும்பாய் நிற்கும்
ஆதியுற நின்ற தப்பரி சாமே.

ஆதாரங்களை மாலையாக அணிந்துள்ள ஈசனின் திருவடி நிலம் ஆகும். ஒளியுடைய கங்கை திகழும் திருமுடி வானம் ஆகும். ஆதி பகவானான ஈசனின் உடல் விசும்பாக நிற்கும் தன்மை இதுவே. இந்த அண்டமே அவன் அரிய திருமேனி.

#1725. அண்ட இலிங்கம்

தரையுற்ற சத்தி தனி லிங்கம் விண்ணாம்
திரை பொரு நீரது வரை மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை
கரையற்ற நந்திக் கலையும் திக்காமே.

நிலம் என்னும் சத்தி பீடத்தின் மேல் விளங்கும் அண்ட இலிங்கம் விண்ணளாவ நிற்கும். அலை கடலே இதன் திரு மஞ்சன சாலை! மலை முகிலே இதன் திரு மஞ்சன நீர். விண்ணில் மின்னும் விண் மீன்களே அண்ட இலிங்கம் அணிந்துள்ள மாலை. எட்டுத் திசைகளே அண்ட இலிங்கம் அணிந்துள்ள ஆடை.

ஏழாம் தந்திரம் -
3. பிண்ட இலிங்கம்

பிண்டம் = உடல்
சீவனின் உடலே ஒரு சிவலிங்கம்.

#1726. மானுடராக்கை ஒரு சிவலிங்கம்

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக் கூத்தே.

மனித உடலின் வடிவமே ஒரு சிவலிங்கம்.
மனிதனின் உடலே ஆகும் ஓர் அறிவாலயம்.
மனிதனின் உடல் சதாசிவனின் திருவடிவம்.
மனிதனின் அசைவுகள் சிவனின் திருக்கூத்து!

மனித உடலில் இடை வரை அமைவது பிரம்ம பீடம். அதற்கு மேலுள்ள உடற்பகுதி ஆகும் சக்தி பீடம். மனிதனின் தலை ஆகும் சிவலிங்கம். தலையின் மேலே விளங்குவது ஞான ஆகாசம் ஆகிய சிம்பரம். எல்லா அசைவுகள் நிகழுகின்ற உடல் சிவனின் திருக் கூத்து நடக்குமிடம்.

#1727. வந்தனை செய்வீர்!

‘உலந்திலர், பின்னும் உளர்’ என நிற்பர்
நிலம் தரு நீர், தெளி யூனவை செய்யப்
புலம் தரு பூதங்கள் ஐந்தும் ஒன்றாக
வளம் தரு தேவரை வந்தி செய்யீரே.

‘அழியவில்லை இவர். நுண்ணுடலில் ஒடுங்கி உள்ளார்’ என்று கூறும்படி ஒருவரால் வாழ இயலும். ஐம் பெரும் பூதங்களில் நிலம் நீரில் ஒடுங்கும்; நீர் நெருப்பில் ஒடுங்கும்; நெருப்பு காற்றில் ஒடுங்கும்; காற்று வானத்தில் ஒடுங்கும். இங்ஙனமே ஐம்பெரும் பூதங்களுக்குக் காரணமான சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்னும் ஐந்து தன் மாத்திரைகளும் ஒடுங்கிவிடும். இந்த விந்தையைச் செய்யவல்ல ஈசனைச் சிந்தையில் கொள்ளுங்கள். அப்போது பருவுடல் அழிந்தாலும் நுண்ணுடல் அழியாமல் நிலை பெற்று விளங்கும்.

#1728. ஈசன் ஆளவந்தான்

கோவில் கொண்ட அன்றே குடிகொண்ட ஐவரும்;
வாயில் கொண்டு ஆங்கே வழி நின்று அருளுவர்;
தாய் இல் கொண்டாற்போல் தலைவன் என்னுள் புக,
வாயில் கொண்டு ஈசனும் ஆள வந்தானே.

உடல் உண்டான போதே ஐந்து பூதங்களின் தலைவர்களும் அதில் குடியேறினார்கள். அவரவர் தொழிலை, அதன் அதன் நுழைவாயிலில் நின்று கொண்டு நன்கு செய்து, ஆன்மாவுக்குத் தேவையான அறிவை அளித்து உதவினார்கள். அன்னை வீட்டுக்குப் போவது போல விருப்பத்துடன் ஈசன் என் உள்ளத்தில் குடி புகுந்தான். அந்த நுழை வாயில்களைத் தனதாக்கிக் கொண்டு என்னை ஆள வந்தான்.

#1728. விளக்கம்:

1. நான்முகன்.....மண் .... ..மூக்கு.....மணம்
2. திருமால் ....நீர்............நாக்கு....சுவை
3. உருத்திரன்......நெருப்பு...கண்........ஒளி
4. மகேசுரன்........காற்று......தோல்....ஊறு
5. சதாசிவன்........வான் ....செவி....ஓசை

#1729. நாடிகளை இயக்குபவன்

கோயில் கொண்டான் அடி கொல்லைப் பெருமறை
வாயில் கொண்டான் அடி நாடிகள் பத்து உள
பூசை கொண்டான் புலன் ஐந்தும் பிறகிட்டு
வாயில் கொண்டான் எங்கள் மாநந்தி தானே.

எங்கள் நந்திப் பிரான் இந்த உடலையே அவன் உறையும் அழகிய ஆலயமாக ஏற்றுக் கொண்டான். மூலாதாரத்தில் உள்ள நான்கு இதழ்த் தாமரையைத் தன் இருப்பிடமாகக் கொண்டான். உடலின் பத்து முக்கிய நாடிகளின் செயலை அவன் செய்விக்கின்றான். ஐம்புலன்கள் தறி கேட்டுத் திரியாத வண்ணம் அவன் காவல் செய்கின்றான்.

பத்து முக்கிய நாடிகள்:
இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, அலம்புடை, சிங்குவை, புடை, சங்கினி, குரு.

ஏழாம் தந்திரம் -
4. சதாசிவ லிங்கம்

#1730. சதாசிவனின் வடிவம்

கூடிய பாதம் இரண்டும் படிமிசை;
பாடிய கை இரண்டு எட்டுப் பரந்து எழும்
தேடும் முகம் ஐந்து; செங்கையின் மூவைந்து
நாடும் சதாசிவ நல்லொளி முத்தே.

திருவருள் மிகுந்த இரு திருவடிகள் பூமியின் மேலே அமைந்து இருக்கும். பாடிப் பரவும் பத்துக் கரங்கள் எல்லாத் திசைகளிலும் பரவி நிற்கும். அன்பர்கள் காண விழைந்து தேடும் முகங்கள் ஐந்தாக அமையும். செம்மை நிற விழிகள்

மூலவைந்தாக அந்த ஐந்து முகங்களில் விளங்கும். முத்துக்களின் நிறத்துடனும் ஒளியுடனும் மிளிரும் சதாசிவனின் அழகிய வடிவம் இதுவே என்று அறிவீர்.

#1731. யாவரும் சதாசிவமே!

வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சக்தியும் அந்தச் சிவனொடும்
சாதா ரணமாம் சதாசிவந் தானே.

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், குண்டலினி சக்தி என்னும் இவை யாவும் சதாசிவமே!

#1732. ஒளிமயமானவன் சதாசிவன்

ஆகின்ற சத்தியி னுள்ளே கலைநிலை
ஆகின்ற சக்தியி னுள்ளே கதிரெழ
ஆகின்ற சத்தியி னுள்ளே யமர்ந்தபின்
ஆகின்ற சத்தியு ளத்திசை பத்தே.

சதாசிவம் என்னும் அனைத்துமாய் ஆகின்ற சக்தியில் நிலை பெரும் ஐந்து கலைகள் இவை:-
1. நிவிருத்தி, 2. பிரதிட்டை, 3. வித்தை, 4. சாந்தி, 5. சாந்தியாதீதை என்பவை.
இந்த ஐந்து கலைகளால் அங்கே சிவ சூரியன் உதிப்பான்.
அதன் ஒளி அண்டகோசத்தை உள்ளும் புறமும் முழுதாக நிறைத்து விடும். அந்த பேரொளியில் எண்திசைகளுடன், மேலும் கீழுமாகப் பத்து திசைகளும் ஒளி மயமாகி விடும்.

#1733. அறிவின் இருப்பிடம் அண்டகோசம்

அத்திசைக் குள்ளே அமர்ந்தன ஆறங்கம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன சரியையோடு
அத்திசைக் குள்ளே அமைந்த சமயமே.

பத்துத் திசைகள் கொண்டது அண்டகோசம். அதில் ஆறு பெரிய சாத்திரங்களின் அறிவும் நிறைந்து இருக்கும். அங்கே நான்கு வேதங்களின் அறிவும் நிரம்பி இருக்கும். சரியை முதலிய நன்னெறிகளின் சமய அறிவும் அங்கே அமைந்திருக்கும்.

#1734. உருவ அருவ இடைநிலை

சமயத் தெழுந்த அவத்தையீ ரைந்துள
சமயத் தெழுந்த இராசி யீராருள
சமயத் தெழுந்த சதிரீரா றெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவம் தானே.

சமயத்தில் ஐந்து கீழ் அவத்தைகளும், ஐந்து மேல் அவத்தைகளும் உள்ளன. சமயத்தில் கதிரவனின் ஈராறு பன்னிரண்டு ராசிகள் உள்ளன. சமயத்தில் ஈரெட்டுப் பதினாறு சந்திர கலைகளும் உள்ளன. காணும் உருவத்துக்கும் காண இயலாத அருவதுக்கும் இடைநிலையில் உள்ளது சதாசிவம்.

கீழ் அவத்தைகள் ஐந்து:-
சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை மேலிருந்து மூலாதாரம் வரையில் கீழே இறங்கும் முறையில் அமைவது.

மேல் அவத்தைகள் ஐந்து:-
சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை மூலாதாரம் முதலாக ஏறுமுகமாக அமைவது.

#1735. முகங்களின் நிறங்கள்

நடுவு, கிழக்குத் தெற்குத்தரம், மேற்கு
நடுவு படிகம் நற்குங்கும வன்னம்
அடைவு உள அஞ்சனம், செவ்வரத்தம், பால்
அடியாற்கு அருளிய முகம்இவை அஞ்சே.

திசை......................முகம்.....................நிறம்
உச்சி.......................ஈசானம்.................படிகம்
கிழக்கு...................தத்புருடம்..............மஞ்சள் குங்குமம்
தெற்கு....................அகோரம்...............அஞ்சனம்
வடக்கு ....வாமதேவம்.......... சிவப்பு
மேற்கு....................சத்தியோசாதம் .. ..பால்
இந்த ஐந்து முகங்களும் அடியவர்களுக்கு அருள் செய்யும் முகங்கள் ஆகும்.

#1736. சதாசிவன் தோற்றத்தின் ஏற்றம்

அஞ்சு முகமுள ஐம்மூன்றும் கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலம் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பி என்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே.

சதாசிவனுக்கு ஐந்து அழகிய முகங்கள் உள்ளன; பதினைந்து சிவந்த கண்கள் உள்ளன; காக்கும் கரங்கள் பத்து உள்ளன, அவற்றில் பத்து அரிய படைக்கலன்கள் உள்ளன. இத்தகைய ஏற்றம் வாய்ந்த தோற்றத்துடன் சதாசிவன் என் நெஞ்சம் புகுந்து நிறைந்து நிற்கின்றான்.

#1737. முப்பத்தாறு தத்துவங்கள்

சத்தி தராதலம் அண்டம் சதாசிவம்
சத்தி சிவமிக்க தாபர சங்கமம்
சத்தி யுருவம் அருவம் சதாசிவம்
சத்தி சிவதத்துவ முப்பத் தாறே.

சக்தி பூமி என்றால் சதாசிவம் அண்டம் ஆவான். அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் என்னும் அனைத்தும் சிவ சக்தியரே. உருவம் படைத்த அனைத்தும் சக்தியின் வடிவம். அருவமாவது சதாசிவன். சக்தியும் சதாசிவனும் பொருந்திய தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும்.

முப்பத்தாறு தத்துவங்கள்:-
ஆன்ம தத்துவங்கள்............24
வித்தியா தத்துவங்கள் … …. ..7
சிவ தத்துவம்....................5

#1738. சுகோதயம் சதாசிவம்

தத்துவ மாவ தருவம் சராசரம்
தத்துவ மாவ துருவம் சுகோதயம்
தத்துவ மெல்லாம் சகலமு மாய்நிற்கும்
தத்துவ மாகும் சதாசிவன் தானே.

தத்துவமாக இருக்கும் போது அருவமாக இருக்கும். அதுவே உருவெடுத்துக் கொண்டால் சரம், அசரமாக மாறிவிடும். உருவெடுத்து விரியும் போது தத்துவம் சுகோதயம் ஆகிச் சுகத்தை விளக்கும். இங்ஙனம் அனைத்துமாக விளங்கும் தத்துவம் சதாசிவமே ஆகும்.

#1739. ஊறு சதாசிவனைக் கூறுமின்!

கூறுமின், ஊறு சதாசிவன், எம் இறை
வேறு உரை செய்து மிகைப் பொருளாய் நிற்கும்
ஏறுரை செய்தொழில் வானவர் தம்மொடும்
மாறு செய்வான் என் மனம் புகுந்தானே.

உள்ளத்தில் உறையும் சதாசிவனைப் போற்றிப் புகழுங்கள்! அவன் வேறு வகையான பிற நூல்களால் சிறிதும் அறியப்படாதவன். அவன் அவற்றைக் கடந்து நிற்பவன். தம் மேன்மைக்காகத் தன்னைப் புகழும் வானவருடன் இவன் மாறுபட்டு நிற்பான். இத்தகைய சிறப்பு வாய்ந்தவன் உவந்து வந்து என் மனம் புகுந்தான்.

#1740. உள்ளம் தெளிந்தேன்

இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவும்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தைஎம் ஆதிப் பிரானைத்
தெருளார்ந்தென் னுள்ளே தெளிந்திருந் தேனே.

கரிய நிறம் கொண்ட கண்டமும், வலக் கரத்தில் ஏந்திய மழுவும், சுருண்ட செஞ்சடையில் ஒளிரும் பிஞ்சு மதியும், அருள் சிந்தையும் கொண்ட ஆதிப் பிரானாகிய சதாசிவனைத் தெளிந்திருக்கும் என் சிந்தையில் இருத்தி நானும் தெளிவடைந்திருந்தேன்.

#1741. முடி முதல் அடி வரை தொழுமின்!

சத்திதான் நிற்கின்ற ஐம்முகஞ் சாற்றிடில்
உத்தமம் வாம முரையத் திருந்திடும்
தத்துவம் பூருவம் தர்புரு டன்சிர
மத்த குகோரம் மகுடத்தீ சானனே.

சீவர்களுக்கு அருள் செய்திட இருக்கும் சதாசிவனின் ஐந்து முகங்கள் பற்றிக் கூறினால், மௌனமாக வடக்கு திசையில் விளங்கும் வாமதேவம் அனைத்திலும் உத்தமமானது. கிழக்கில் உள்ள தத்புருடம் உடலில் உள்ள தத்துவங்களை இயக்குவது. தெற்கு நோக்கிய அகோரம் சிரசை நிகர்த்தது. மகுடத்தில் உள்ள வடகிழக்கு திசையை நோக்கியுள்ள முகம் ஈசானம்.

#1742. வணங்கும் விதிகள்

நாணுநல் லீசான நடுவுச்சி தானாகும்
தாணுவின் தன்முகம் தற்புருட மாகும்
காணும் அகோர மிருதயம் குய்யமாம்
மாணுற வாமமாம் சத்தி நற்பாதமே.

ஈசான முகத்தைத் தொழும்போது தலையைத் தொட்டு வணங்க வேண்டும். தத்புருட முகத்தைத் தொழும்போது முகத்தைத் தொட்டு வணங்க வேண்டும். அகோர முகத்தை வணங்கும் போது இதயத்தைத் தொட்டு வணங்க வேண்டும். வாமதேவ முகத்தை வணங்கும் போது குறியைத் தொட்டு வணங்க வேண்டும்.

சத்தியோ சாதத்தை வணங்கும் போது பாதத்தை தொட்டு வணங்க வேண்டும்.

#1743. குண்டலினி சக்தி

நெஞ்சு சிரம்சிகை நீள் கவசங் கண்ணாம்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சை யாம்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னாகும்
செஞ்சுடர் போலுந் தெசாயுதம் தானே.

ஆறு சைவ மந்திரங்கள் உடலின் ஆறு அங்கங்களைப் பற்றி அமைந்தவை. அவை முறையே இதயம், தலை, சிகை , கவசம், நேத்திரம், அத்திரம் என்பவை. வஞ்சனை இன்றி சீவனுக்கு அறிவு விளக்கம் தரும் சக்தியின் நிறம் வளர் பச்சை. இவள் உடல் எல்லாம் ஒளி மயமாகி இருக்கும் போது மின்னல் போல விளங்குவாள். கரங்களில் பற்றி இருக்கும் பத்து ஆயுதங்களும் உதிக்கும் சூரியனின் ஒளியுடன் மிளிரும்.

சைவமந்திரங்கள் ஆறு:-

1. இருதயாய நம: 2. சிரசாய நம: 3. சிகாய நம: 4. கவசாய நம: 5. நேத்திராய நம: 6. அத்திராய நம:

#1744. ஐந்து சக்திகள்

எண்ணில் இதயம் இறைஞான சக்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே.

எண்ணிப் பார்த்தால் இது விளங்கும். இருதய மந்திரம் என்பது இறைவனின் ஞான சக்தி; சிரசு மந்திரம் என்பது விண்ணில் விளங்கும் உயர்ந்த பராசக்தி; சிகை மந்திரம் என்பது ஆதி சக்தி; கவச மந்திரம் என்பது இச்சா சக்தி; நேத்திரம் என்பது கிரியா சக்தியாகும்.

#1745. சத்தி உருவாம் சதாசிவம் தானே

சத்தி நாற்கோணம் சலம் உற்று இருந்திடும்
சத்தி அறுகோணம் சயனத்தை உற்றிடும்
சத்தி நல் வட்டம் சலம் உற்று இருந்திடும்
சத்தி உருவாம் சதாசிவம் தானே.

குண்டலினி சக்தி சீவனின் உடலில் தான் இருக்கும் இடத்துக்கு ஏற்ப மாறுபட்டு விளங்கும். நாற்கோண வடிவமாகிய மூலாதாரத்தில் இருக்கும் போது

இது ஜலதாரையை நோக்கிய வண்ணம் இருக்கும். குண்டலினி மேலே நகர்ந்து அறுகோண வடிவம் கொண்ட கழுத்தை அடையும் போது உறக்க நிலை ஏற்படும். குண்டலினி வட்ட வடிவம் கொண்ட நெற்றியை அடையும் போது நீரோட்டம் போன்ற ஒரு உணர்வைத் தோற்றுவிக்கும். இத்தகைய ஒளிமயமான சக்தியின் வடிவமே சதாசிவன் வடிவம் ஆகும்.

#1746. பஞ்சப் பிரமத்தின் ஒன்பது நிலைகள்

மானந்தி எத்தனை காலம் அழைக்கினும்
தான்நந்தி அஞ்சின் தனிச்சுடராய் நிற்கும்
கால்நந்தி, உந்தி கடந்து கமலத்தின்
மேல், நந்தி ஒன்பதின் மேவிநின் றானே.

எத்தனை காலம் தொழுத போதிலும் சதாசிவன் பஞ்சப் பிரமமாகவே விளங்குவான். மூலாதாரத்தில் இருந்து எழுந்து, உடலின் எல்லா ஆதாரங்களையும் கடந்து சென்று, ஊர்த்துவ சகசிர தளத்தை அடையும் போது சதாசிவன் ஒன்பது நிலைகளிலும் ஒன்றி நிற்பான்.

#1747. உடலிலும் உயிரிலும் கலந்து நிற்பான்

ஒன்றியவாறும், உடலினுடன் கிடந்து
என்றும் எம் ஈசன், நடக்கும் இயல்பு அது;
தென்தலைக்கு ஏறத் திருந்து சிவனடி
நின்று தொழுதேன் என் நெஞ்சத்தின் உள்ளே.

சீவனின் உடலிலும் உயிரிலும் கலந்து உறைவது சிவபெருமானின் இயல்பு ஆகும். சிவன் திருவடிகள் சூரிய கலை, சந்திர கலைகளைக் கடந்து மேலே நிராதாரத்துக்குச் சென்ற போது நான் அவனை என் நெஞ்சத்தில் உள்ளே நினைந்து தொழுதேன்.

#1748. பகலவன் பாட்டு ஒலியே!

உணர்ந்தேன் உலகினில் ஒண்பொரு ளானைக்
கொணர்ந்தேன் குவலயம் கோயில் என் நெஞ்சம்
புணர்ந்தேன், புனிதனும் பொய் அல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே.

உலகம் முழுவதும் ஒளிப் பொருளாக மிளிரும் பரமசிவனை அவன் அருளால் நான் உணர்ந்து கொண்டேன். சீவர்கள் உய்யும் வண்ணம் அவனைப் பூமித் தத்துவதிற்குக் கொண்டு வந்தேன். என் உள்ளக் கோவிலில் புனிதனாகிய சிவபெருமானுடன் நான் கூடினேன். தூய இறைவன் எனக்கு நாத வடிவமாகத்

தோன்றினான். சிவசூரியனை நான் பாடிப் பணிந்தேன். அவனோ தன் நாதத்தால் என்னுடன் கூடி இருந்தான்.

#1749. ஆதியும், அந்தமும், இந்துவும் ஆகும்

ஆங்கு அவை மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழும் தான் நடுவான் அதில்
ஓங்கிய ஆதியும் அந்தமும் ஆம் என
ஈங்குஇவை தம் உடல் இந்துவும் ஆமே.

அக்கினி மண்டலம், கதிரவன் மண்டலம், சந்திர மண்டலம் என்னும் மூன்றும் ஆரழல் வீசிடும். ஒன்பது நிலைகளிலும் தானே பொருந்தியுள்ள சதாசிவன், ஈரேழு பதினான்கு உலகங்களையும் தாங்கி நிற்பான். ஆதியும் அவனே, அந்தமும் அவனே, உடலில் சந்திர மண்டலத்தை விளங்கச் செய்பவனும் அவனே.

ஒன்பது நிலைகளில் உள்ள முதல் நால்வரும் (நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன்) உருவம் கொண்டவர்கள். நடுவில் உள்ள சதாசிவம் அருவுருவம் கொண்டவன். மற்ற நான்கும் (நாதம், விந்து, சக்தி, சிவம்) அருவம் ஆனவை.

#1750. ஞானி தானே சிவம் ஆகிவிடுவான்

தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடும்
தன்மேனி தானும் சதாசிவ மாய்நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாம்
தன் மேனி தானாகும் தரற்பரந் தானே.

மேலே கூறிய வண்ணம் மாறிய உடல் ஒரு சிவலிங்கம் ஆகிவிடும். அதுவே சதாசிவம் ஆகிவிடும். அந்த உடல் அடைவது கிடைப்பதற்கரிய சிவானந்தம் ஆகும். அந்த உடலே உயரிய சிவமாகி விடும்.

#1751. சதாசிவ நிலை இதுவே

ஆரும் அறியார் அகாரம் அவன் என்று;
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி;
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடும் ஓசையது ஆமே.

அகாரமே சிவன் என்பதை யாரும் அறியார். உகாரம் ஆகிய சக்தி உலகப் பொருட்கள் அனைத்திலும் கலந்து நிற்பாள். சிவனும் சக்தியும் பொருந்தி இந்த

உலகத்தை உண்டாக்கினர். இந்த சிவசக்தியர் தலையைத் தாண்டும் போது நாத ஒலியை ஏற்படுத்துவர்.

#1752. பிரணவம்

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கம் நற்கண்டம் நிறையும் மகாரம்
இலிங்கத்து உள்வட்டம் நிறையும் உகாரம்
இலிங்க அகாரம் நிறைவிந்து நாதமே.

சதாசிவ லிங்கத்தின் பீடம் ஆகும் ஓங்காரம்.
லிங்கத்தின் கண்டப் பிரதேசம் ஆகும் மகாரம்.
சதாசிவ லிங்கத்தின் உள்வட்டம் ஆகும் உகாரம்.
லிங்கத்தின் மேற்பகுதி அகாரம், நாதம் விந்து ஆகும்.

ஏழாம் தந்திரம் -
5. ஆத்தும லிங்கம்

ஆத்தும லிங்கம் = ஆத்துமாவே ஒரு சிவலிங்கம் ஆகுதல்.

#1753. சிவசக்தியரின் வடிவம்

அகார முதலா அனைத்துமாய் நிற்கும்
உகார முதலா யுயிர்ப் பெய்து நிற்கும்
அகர வுகார மிரண்டு மறியில்
அகார உகார மிலிங்கம் தாமே.

அகரம் ஆகிய சிவம் அனைத்துப் பொருட்க்களுடன் கலந்து இருக்கும். உகரமாகிய சக்தி அப்பொருட்கள் உயிர்பெற உதவும். அகரம் சிவம் என்றும், உகரம் சக்தி என்றும் அறிந்து கொண்டால் அகர உகரம் பொருந்தியதே சிவலிங்கம் என்று புரிந்து விடும்.

#1754. ஆன்மலிங்கம்

ஆதாரம், ஆதேயம் ஆகின்ற விந்துவும்
மேதாதி நாதமும் மீதே விரிந்தன;
ஆதார விந்து அதி பீட நாதமே
போதா இலிங்கப் புணர்ச்சி அது ஆமே.

விந்துவை ஆதாரம் ஆகக் கொண்டு மேதாதி நாதம் அதன் மேல் ஆதேயமாக விரிந்தது. ஆதார விந்துவே ஆதி பீடம் ஆகும். மேதாதி நாதம் அதனுடன் இணைந்து சிவலிங்கம் ஆனது.

#1755. சக்தி சிவம்

சத்தி சிவமாம் இலிங்கமே தாபரம்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமம்
சத்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவம்
சத்தி சிவமாகும் தாபரம் தானே.

இடம் பெயர்ந்து செல்ல முடியாத பொருட்கள் அனைத்துமே சக்தி சிவனின் சேர்க்கையில் உருவானவை. அசைந்து இடம் பெயரும் உயிரினங்களும் சக்தி சிவனின் சேர்க்கையில் உருவானவை. சதாசிவனும் சக்தி சிவனின் சேர்க்கையில் தோன்றியவன். ஆனால் சக்தியும் சிவமும் பிறப்பற்றவர்கள்!

#1756. பூ நேர் எழும் பொற்கொடி

தான்நேர் எழுகின்ற சோதியைக் காணலாம்
வான்நேர் எழுகின்ற ஐம்பது அமர்ந்திடம்
பூநேர் எழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானேர் எழுகின்ற அகாரம் அது ஆமே.

சிவசக்தியரின் வடிவமாகிய ஆத்தும லிங்கத்தில் ஒரு பேரொளியைக் காணலாம். வான் கூற்றில் ஐம்பது அக்கரங்கள் தோன்றும் இடமும் அதுவே ஆகும். உடலின் ஆதாரச் சக்கரங்களில் எழுகின்ற பொற்கொடியாகிய குண்டலினி சக்தியுடன் அகரமாகிய சிவனும் பொருந்திக் கலந்து விளங்குவான்.

#1757. நாதமும் விந்துவும்

விந்துவும் நாதமும் மேவு மிலிங்கமாம்
விந்துவ தேபீட நாத இலிங்கமாம்
அந்தவிரண்டும் ஆதார தெய்வமாய்
வந்த கருஐந்துஞ் செய்யு மவை ஐந்தே.

ஆன்மாவிடம் பொருந்தியுள்ள விந்து நாதங்களின் சேர்க்கையே ஆன்ம லிங்கம் ஆகும், விந்துவே இதன் ஆதாரம். நாதமே இதில் ஆதேயம். இவற்றில் சேர்க்கையில் உருவான ஆன்ம லிங்கத்தை ஆதாரமாகக் கொண்டு மற்ற ஐந்து தெய்வங்கள் தத்தம் தொழில்களை சரிவர இயற்றுகின்றார்கள்.

#1758. தத்துவங்கள் ஆன்மலிங்கம்

சத்தி நற்பீடம் தகு நல்ல வான்மா
சத்தி நற்கண்டம் தகு வித்தை தானாகும்
சத்தி நல் லிங்கம் தகுஞ்சிவ தத்துவம்
சத்திநல் லான்மாச் சதாசிவம் தானே.

சக்தியின் பீடமாக அமைவது ஆன்ம தத்துவங்கள்.
சக்தியின் கண்டமாக அமைவது வித்தியா தத்துவம்.
சக்தியின் இலிங்கமாவது சிவதத்துவம்.
சக்தியின் ஆத்மாவாக ஆவது எப்போதும் சதாசிவம்.

#1759. இலம் புகுவான்

மனம் புகுந்து என் உயிர் மன்னிய வாழ்க்கை
மனம் புகுந்து இன்பம் பொழிகின்ற போது
நலம் புகுந்து என்னொடு நாதனை நாடும்
இலம் புகுந்து ஆதியும் மேற்கொண்ட வாறே.

சிவபிரான் என் மனத்தில் புகுந்து கொண்டான். என் உயிரில் கலந்து என் வாழ்வில் பேரின்பம் சுரக்கச் செய்தான். நலம் தருகின்ற அந்த நாதனை நீங்களும் நாடுவீர். அப்போது அவன் நம் தலை உச்சியில் விளங்கி நம்மை ஆட்கொள்ளுவான்.

#1760. மனத்து உறைவான்

பராபரன், எந்தை, பனிமதி சூடி,
தராபரன், தன்அடி யார்மனக் கோயில்
சிராபரன், தேவர்கள் சென்னியில் மன்னும்
அராபரன் மன்னி மனத்துள் உறைந்தானே.

பராபரன் சிவன் மேலானவற்றுக்கு எல்லாம் மேலானவன். அவன் நம் அனைவரின் தந்தை ஆவான். பனி மதியைச் சூடிய அவன் அடியவர்களின் மனக் கோவிலில் குடியிருப்பான். தேவர்களின் சிரசின் மீது ஒளிமயமாக விளங்குவான். மண்டலமிட்ட குண்டலினி சக்தியின் தலைவனாகிய அவன் நீங்காமல் என் உள்ளத்தில் உறைந்து விட்டான்.

#1761. உள்ளமே ஆலயம்

'பிரான் அல்லன் , நாம்' எனின், பேதை உலகம்
குரால் என்னும் என்மனம் கோவில் கொள்ஈசன்
அராநின்ற செஞ்சடை, அங்கியும் நீரும்
பெரா நின்றவர் செய் அப்புண்ணியன் தானே.

"சிவன் பிரான் அல்லன். நானே பிரான்!" என்று கூறுபவன் அறியாமையில் முழுவதுமாக அமிழ்ந்துள்ளவன். கட்டப்பட்ட பசுவின் தன்மையை உடைய என் மனத்தில் அவன் கோவில் கொண்டுள்ளான். அவன் செஞ்சடையில் நீரும், மேனியில் பாம்பும், கரத்தில் நெருப்பும் உடையவன். நாம் செய்யும் புண்ணியச் செயல்களின் பலன் அவனே ஆவான்.

#1762. என்றும் நின்று ஏத்துவன்

அன்று நின்றான் , கிடந்தான் அவன் என்று
சென்று நின்று எண்டிசை ஏத்துவர் தேவர்கள்;
என்றும் நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றி என்உள்ளத்தின் உள்இருந் தானே.

'அன்று இறைவன் அங்கு நின்றான்', 'அன்று இறைவன் இங்கு கிடந்தான்' என்று கூறித் தேவர்கள் அவனை எண்திசைகளிலும் சென்று வணங்குவர். என் உயிருக்கு உயிராக என் மனதில் பொருந்தி நிற்கும் அவனை நான் என்றும் ஏத்திப் புகழ்ந்து தொழுவேன்.

ஏழாம் தந்திரம் -
6. ஞான லிங்கம்

ஞான லிங்கம் = உணர்வே சிவமாவது.

#1763. "தருக!" என நல்குவான்!

உருவும் அருவும் உருவோடு அருவும்
மருவும் பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவும் என நிற்கும் கொள்கையன் ஆகும்
தருஎன நல்கும் சதாசிவன் தானே.

சதாசிவன் உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று வகைப்பட்ட திரு மேனிகளையும் தனதாக உடையவன். பல உயிர்களுக்கும் குருவாகும் உயர்ந்த கொள்கை உடையவன். கற்பகத் தருவினைப் போலச் சதாசிவனும் வேண்டுபவர்களுக்கு அவர்கள் வேண்டியவற்றை அளிக்கும் அருள் படைத்தவன்.

#1764. ஒன்பது நிலைகளும் பரசிவனே!

நாலான கீழ துருவ நடுநிற்க
மேலான நான்கு மருவு மிகநாப்பண்
நாலான வொன்று மறுவுரு நண்ணலால்
பாலா மிவையாம் பரசிவன் தானே.

சதாசிவனுக்குக் கீழே உள்ள நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன் என்னும் நான்கு தெய்வங்களும் உருவம் உடையவர்கள். சதாசிவனுக்கு மேலே உள்ள நாதம், விந்து, சக்தி, சிவன் என்னும் நான்கும் அருவமானவை. இவற்றின் நடுவே அமைந்த சதாசிவன் அருவுருவமாக இருப்பான். உண்மையில் இவை ஒன்பதும் பரசிவனின் ஒன்பது வேறுபட்ட நிலைகள் ஆகும்.

#1765. அண்ணலின் அடிகளை அண்ணலும் ஆமே!

தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை, நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரான் என்று இறைஞ்சுவர்? அவ்வழி
ஆவர்; பிரான் அடி அண்ணலும் ஆமே.

தேவர்களின் தெய்வத்தை; நான்கு திசைகளில் நான்கு முகங்கள் உடைய நாதனை; உருவம் படைத்த நான்கு தெய்வங்களையும் இயக்குபவனை; உருவங்களுக்கும், அருவங்களுக்கும் இடைப்பட்ட அருவுருவான சதாசிவவனை; வணங்கு பவர்களுக்கு அவன் தோற்றம் தருவான். அவர்களால் அண்ணலின் அடிகளின் அண்மையை அடையவும் முடியும்.

#1766. வினைகள் அறும்!

வேண்டி நின்றே தொழுதேன் வினை போய் அற;
ஆண்டு, ஒரு திங்களும் நாளும் அளக்கின்ற
காண்தகை யானொடும் கன்னி உணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது ஆமே.

வினைகளும், வினைப் பயன்களும் கெடும் வண்ணம் சதாசிவனையும், சக்தியையும் வழிபடுவர் அன்பர்கள். கால ஓட்டத்தை ஆண்டு, திங்கள், நாள் என்று வேறுபடுத்தும் சிவசூரியனாகிய சதாசிவனையும், சக்தி தேவியையும் தனித்தனியாக வழிபடுவதன் பயனும்; அவர்களை ஒன்றாக சிவலிங்க ரூபத்தில் சிவசக்தியராக வழிபடுவதன் பயனும் ஒன்றே அன்றோ!

#1767. பரனுள் பாதி பராசக்தி!

ஆதி பரம்தெய்வம் அண்டத்து நல்தெய்வம்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வம் நின்மல னெம்மிறை
பாதியுள் மன்னும் பராசக்தி யாமே.

சதாசிவம் ஆதிப் பரம் பொருள்; அவன் அண்டத்தின் நல்ல தெய்வம்; அடியார் சோதி வடிவில் வணங்கும் பெருந் தெய்வம்; நீதி வடிவான தெய்வம்; நிர்மலமான தெய்வம்; இத்தகைய பராபரனான சதாசிவத்தின் உடலில் சரிபாதியாக இருப்பவள் பராசக்தி.

#1768. அப்பாலுக்கு அப்பாலாம்!

சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே
சுத்த சிவபதம் , தோயாத தூவொளி
அத்தன் திருவடிக்கு அப்பாலைக்கு அப்பாலாம்;
ஒத்தவும் ஆம் ஈசன் தானான உண்மையே.

சக்திக்கு மேலே விளங்குவது பராசக்தி. அதன் உள்ளே விளங்குவது சுத்தமான சிவபதம். குறையாது நிறைந்து விளங்கும் அந்தத தூய ஒளியில் சிவபதம் அப்பலுக்கு அப்பாலாகும். இதுவே சதாசிவ நிலைக் கடந்து ஈசன் விளங்கும் உண்மை நிலை.

#1769. ஞானலிங்கம் தோன்றும்

கொழுந்தினைக் காணின் குவலயம் தோன்றும்
எழும்திடம் காணில் இருக்கலும் ஆகும்
பரந்திடம் காணின் பார்ப்பதி மேலே
திரண்டு எழக் கண்டவன் சிந்தை உளானே.

ஞானலிங்கம் என்னும் ஒளிவடிவான சுடரைக் கண்டால் அங்கு நுண்மையான வடிவில் உலகம் தோன்றும். திடமான முயற்சியால் ஒருவர் இந்த உலகினில் அழியாமல் இருக்கவும் கூடும். தத்துவங்களைத் துறந்து விட்ட ஆன்மா திடமாக முயன்றால், சக்திக்கு மேலே நிராதாரக் கலைகளில் ஞான லிங்கத்தை அருவமாக உணர முடியும்.

#1770. ஞானம் என்பது என்ன?

எந்தை பரமனும் என் அம்மைக் கூட்டமும்
முந்த உரைத்து , முறை சொல்லின் ஞானமாம்;
சந்தித் திருந்த இடம்பெருங் கண்ணியை
உந்தியின் மேல் வைத்து உகந்திருந் தானே.

என் தந்தையாகிய சதாசிவனையும், அறுபது நான்கு பிரணவ சக்திகளின் கூட்டமாகிய என் அன்னையையும் நன்றாக ஓதி உணர்ந்து கொள்வதே ஞானம் ஆகும். ஞானம் உதிக்கும் நமது புருவ மத்தியில். விசாலமான கண்களை உடைய சக்தியுடன் சிவன் உந்தியின் மேல் உள்ள இதயத்தில் மிகுந்த அன்பு கொண்டு உறைகின்றான்.

#1771. சித்தம் புகுந்து சிவம் அகம் ஆக்கும்!

சத்தி சிவன் விளையாட்டாம் உயிர் ஆகி
ஒத்த இரு மாயா கூட்டத்திடை ஊட்டிச்
சுத்தம் அது ஆகும் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவம் அகம் ஆக்குமே.

சிவசக்தியரின் விளை யாட்டு இதுவே. சீவனின் தகுதிக்கு ஏற்ப அதன் உயிர் நிலையை விளங்கச் செய்வர். அதற்கு ஏற்ற வண்ணம் சுத்த மாயை அசுத்த மாயைகளின் கூட்டத்தில் சேர்த்துவிடுவர் . சீவன் பக்குவம் அடைந்துவிட்டால் சுத்த மாயையில் விளங்குகின்ற ஒளி மண்டலத்தை உணர்த்துவர். பின்னர் அதனைக் கடக்க உதவுவர். சீவனின் சித்தத்தில் சிவன் புகுவான். அப்போது சீவன் சிவன் உகந்து உறையும் ஓர் ஆலயம் ஆகிவிடும்.

#1772. சக்தி சிவத்தின் உருவாகும்

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாம் சிவன்சத்தியு மாகும்
சத்தி சிவமன்றி தாபரம் வேறில்லை
சத்தி தானென்றும் சமைந்துரு வாகுமே.

தாரணி முழுவதும் சிவசக்தியரின் அலகிலா விளையாட்டு ஆகும். சக்தி வடிவம் உடையவள் என்றால் சிவம் தூய அறிவு மயமானவன். சக்தி சிவனாக மாறுவாள். சிவன் சக்தியாக மாறுவான். சிவசக்தியரின் கலப்பு இன்றி உயிர்கள் இருக்க முடியாது. சக்தியே தேவைக்கு ஏற்பப் பற்பல வடிவங்களை எடுப்பாள்.

ஏழாம் தந்திரம் -
7. சிவலிங்கம்

இதுவே சிவகுரு ஆகும்.

#1773. வரித்து வலம் செய்ய அறியேன்!

**குறைக்கின்ற வாரிக் குவலயம் நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறு இவை நீண்டு அகன்றானை
வரைத்து வளம் செய்யு மாறுஅறி யேனே.**

ஒலிக்கும் அலைகடல் சூழ்ந்த உலகம், நீர், பரவிச் செல்லும் காற்று, எரிக்கும் நெருப்பு என்னும் நான்கும் தத்தம் நிலையும், முறையும் மாறாமல் ஒழுங்காக நிலை பெற்று விளங்குவதற்கு உதவிடும் வானமும் எவரால் இயங்குகின்றன என்று தெரியுமா? இவை நிகழ்வது நீண்டும் அகன்றும் விளங்கும் சிவபெருமானால் தான். அத்தகைய பெரியவனை நான் ஒரு வரைமுறைக்கு உட்படுத்தி வணங்கும் முறையை அறியேன்.

#1774. புரிசடையான் பிரிந்து செல்லான்!

**வரைத்து வலம் செய்யுமாறு இங்கு ஒன்றுண்டு
நிரைத்து வரு கங்கைநீர், மலர் ஏந்தி
உரைத்து அவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்து எங்கும் போகான் புரிசடை யோனே.**

இங்கு அங்கு என்னதபடி எங்கும் பரவி நிற்கும் இறைவனை ஒரு வரைமுறைக்குள் அடக்கி வணங்கும் வழி ஒன்று உண்டு. பொங்கி எழும் உணர்வு நீரோட்டத்தை உடைய சுவாதிட்டான மலரை ஏந்திக் கொள்ள வேண்டும். அவன் திரு நாமத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போது சிவன் அந்த சீவனின் உடலில் உள்ள நவத் துவாரங்களைத் துளைத்துக் கொண்டு பிரிந்து வெளியே சென்று விடாமல் எப்போதும் சீவனுடனேயே பொருந்தி நிற்பான்.

#1775. ஆதிப் பிரான் அருள் செய்வான்!

**ஒன்று எனக் கண்டேன்எம் ஈசன் ஒருவனை
நன்று என்று அடியிணை நான் அவனைத் தொழ
வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்தது இன்புற
அன்று என்று அருள்செய்யும் ஆதிப் பிரானே.**

உலகத்தின் முதல்வன் அவனே என்று எம் ஈசனை அறிந்து கொண்டேன். அவன் திருவடிகள் நன்மை பயக்கும் என்று அவற்றைத் தொழுது நின்றேன். வென்று விட்ட ஐம் புலன்கள் வழிச் செல்லாமல் என் அறிவு சிவனுடன் பொருந்தி இன்பம் அடைந்தது. அப்போது ஆதிப் பிரான் ஆகிய சிவன் தன் தண்ணருளை எனக்கு அள்ளித் தந்தான்.

#1776. ஒன்பது வித இலிங்கங்கள்

மலர்ந்தயன் மாலு முருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே.

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், சக்தி, சிவன் என்னும் ஒன்பதும், ஒன்பது வித இலிங்கங்கள் ஆகும்.

#1777. பரகதி பெறலாம்!

மேவி எழுகின்ற செஞ்சுட ரூடு சென்று
ஆவி எழும் அளவு அன்றே உடல் உற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித்து அடக்கின் பரகதி தானே.

மூலாதாரத்தில் இருந்து மேல் நோக்கி எழுந்து, நாடு நாடி வழியே செல்கின்ற, சிவந்த ஒளிதை உடைய குண்டலினி சக்தியுடன் சேர்ந்து மேலே எழும்பிச் செல்ல வேண்டும். பிராண வாயுவை வசப்படுத்த வேண்டும். உடலில் உள்ள ஆதாரக் கலைகளிலும், உடலை விட்டு நீங்கி இருக்கும் நிராதாரக் கலைகளிலும் பொருந்தியும் நீங்கியும் நிற்பதற்கு உள்ளதைப் பழக்கினால் பரசிவகதியை அடையலாம்.

ஏழாம் தந்திரம் -
8. சம்பிரதாயம்

மரபு அல்லது தொன்று தொட்டு வழங்கி வரும் முறை.

#1778. தீட்சை தரும் முறை

உடல் பொருள் ஆவி உதகத்தால் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக் கைவைத்து
நொடியினடி வைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினான் நந்தியே.

மாணவன் தன உடல் பொருள் ஆவி அனைத்தையும் நீரால் தத்தம் செய்ய வேண்டும். குரு அவற்றை சுவீகரிக்க வேண்டும். படர்ந்து வரும் வினைகளையும், மாணவனின் பற்றையும் தம் விழிப் பார்வையினால் குரு போக்க வேண்டும். மாணவனின் மீது தன் கரத்தை வைத்து, அவன் சிரத்தின் மேல் தன் அடியை வைத்து, நொடியில் ஞானத்தைத் தர வேண்டும். மாணவனின் பிறவிப் பிணியை நீக்கி அருள வேண்டும்.

#1779. உய்யக் கொள்வான்!

உயிருஞ் சரீரமும் ஒண்பொரு ளான
வியவார் பரமும்பின் மேவும் பிராணன்
செயலார் சிவமும் சிற்சத்தி யாதிக்கே
உயலார் குருபரன் உய்யக் கொண் டானே.

உயிர், உடல், ஒளிரும் பரம் ஆகிவிட்ட ஆன்மா, பிராணன், இவை அனைத் தையும் இயக்குகின்ற சிவன், சக்தி என்பனவற்றை நான் அறிந்து கொண்டு உய்வ டையும்படி என் குருநாதன் என்னை ஆட்கொண்டு உய்வித்தான்.

#1780. மேற்கு திசை ஒளிரும்!

பச்சிம திக்கிலே வைத்த ஆசாரியன்
நிச்சலு மென்னை நினையென்ற அப்பொருள்
உச்சிக்குக் கீழது உண்ணாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே.

தன்னுடைய வலப் புறத்தில் என்னை அமர்த்திக் கொண்ட குருநாதர், “தினமும் என்னை இங்கே மனனம் செய்” என்று கூறினார். அந்த இடம் என் உச்சிக்குக் கீழேயும், உண்ணாக்குக்கு மேலேயும் உள்ள மேலான பதம் ஆகும். இதைப் பற்றி நாம் வாயினால் பேசி விட முடியாது.

#1781. இருள் அறும்!

**பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
ஒட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினான் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே.**

அனுபவம் எதுவும் இல்லாமல் நான் விரும்பியபடி பிதற்றிக் கொண்டும் திரிந்து கொண்டும் இருந்தேன் நான். குரு நாதர் என்னிடம் உள்ள மாசுகளை எல்லாம் அகற்றி என்னைத் தூயவனாக்கினார். என்னையும் தன்னையும் தராசுத் தட்டுக்களில் உள்ள பொருட்களைப் போல சமம் ஆக்கினார். என்னுடைய முயர்சியும் இறைவனுடைய திருவருளும் கொண்டு பண்டமாற்று முறையில் நல்ல வாணிபம் நடந்தது.

#1782. கண்டு கொண்டேன் அவனை நான்!

**தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்;
பிரிக்கின்ற இந்தப் பிணக்கு அறுத்து, எல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டு கொண்டேனே.**

இருக்கின்ற அனைத்து உயிர்த் தொகைகளுக்கும் அவனே ஒரு தனித் தலைவன். சிவன், சீவன், உலகம் என்று மூன்றாகவும் அவன் ஒருவனே இருப்பதை உலகத்தோர் அறிகிலர். 'நான்' என்று என்னை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தும் பிணக்கினை அறுத்த பின்பு, அனைத்தையும் தன் கருவிலே கொண்டுள்ள அந்த ஈசனை நான் கண்டு கொண்டேன்.

#1783. பற்றற நீக்குவான்!

**கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருள்ஞான சத்தியால்
பாடல் உடலினில் பற்றற நீக்கியே
கூடிய தானவ னாம் குளிக் கொண்டே.**

சீவனுடன் கூடித் தொடர்ந்து வரு உடல், பொருள், ஆவி இவற்றிலிருந்து சீவனை விடுவிக்க எண்ணம் கொண்டான் சிவகுருநாதன். தன் திருவடியை என் சென்னி மேல் பதித்தான். எனக்கு ஞானம் தந்தான். பெருமை இல்லாத இந்த உடலின் மீதுள்ள பற்றை நீக்கினான். தானும் நானும் ஒன்றாகும்படி சிவனையும் சீவனையும் ஒன்றாகப் பொருத்தினான்.

#1784. கொண்டான் உடல், பொருள், காயம்!

**கொண்டான் அடியேன் அடிமை குறிக் கொள்ளக்
கொண்டான் உயிர், பொருள், காயக் குழாத்தினை
கொண்டான் பலமுற்றும் தந்தவன் கோடலால்
கொண்டான் என ஒன்றும் கூறகி லேனே.**

நான் பக்குவம் அடைந்தவுடன் என்னைத் தன் அடிமையாக ஏற்றுக் கொள்ள அவன் முடிவு செய்தான். அவன் என் ஆவி , பொருள், சரீரக் கூட்டம், கருவிகளின் கூட்டத்தைத் தனதாக்கிக் கொண்டு விட்டான். என்னிடம் இருந்த எல்லாவற்றையும் தந்த அவனே அவற்றை எடுத்துக் கொண்டு விட்டதால், “என்னுடையவற்றை அவன் எடுத்துக் கொண்டு விட்டான்!” என்று நான் சொல்ல முடியாது அல்லவா?

#1785. பேயுடன் ஒப்பர்!

**குறிக்கின்ற தேகமும் தேகியுங் கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பிரிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறக்க அறியாதார் பேயுட னொப்பரே.**

சீவன் தன் குறியாகக் கொள்வது உடல். அந்த உடலை இயக்குவது உயிர். இவற்றை நெறியுடன் இணக்குவது பிராணனுடன் நிலைபெற்றுள்ள ஆன்மா. இந்த உண்மைகளை யமன் சீவனின் உடலை பறிக்கும் முன்பே, சீவன் உடலுடன் கூடி இருக்கும் போதே, அறிந்து கொள்ள முடியாதவர்கள் பேய்க்கு ஒப்பானவர்கள்.

#1786. உணர்வுடையார் உணர்வர்!

**உணர்வுடை யார்கட்கு உலகமும் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்க ளுணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்து கண்டாரே.**

“நான் உடல் அல்ல! நான் ஆன்மா” என்ற உண்மை உணர்வினை உடையவர்களால் எல்லா நுண்ணிய உலகங்களையும் காண இயலும். இவர்கள் உலக நிகழ்வுகளை தம் அனுபவ நிகழ்வுகளாக உணராமல் வெறும் சாட்சியாக இருந்து நோக்குவதால் அவர்களுக்கு எந்த துன்பமும் விளையாது. இவர்கள் தன்னையும் உணர்ந்து கொள்வர். தம் தலைவனையும் உணந்து கொள்வர்.

#1787. என்ன சொல்லி வழுத்துவேன்?

காயப் பரப்பில் அலைந்து துரியத்துச்
சாயல் விரிந்து, குவிந்து சகலத்தில்
ஆய அவ்வாறே அடைந்து திரிந்தோர்க்குத்
தூய அருள் தந்த நந்திக்கு என் சொல்வதே!

சகல நிலையில் முப்பத்தாறு தத்துவங்களுடன் கூடி இருந்தும்; உடலின் பரப்பில் இருக்கும் போது அலைந்து திரிந்தும்; துரிய நிலையில் ஒளி மண்டலத்தில் மிகவும் விரிந்தும், சிவத்துடன் பொருந்திக் குவிந்தும் இருக்கும் அன்பருக்குத் தூய அருள் தந்த நந்தியின் பெருமையை நான் என்ன சொல்லி வழுத்துவேன்?

#1788. தேன் என இன்பம் விளையும்!

நான்என நீஎன வேறு இல்லை நண்ணுதல்
ஊன்என ஊன்உயிர் என்ன உடன் நின்று
வான்என வானவர் நின்று மனிதர்கள்
தேன்என இன்பம் திளைக்கின்ற வாறே.

"நான் வேறு என்றும் நீ வேறு என்றும் பிரித்து உணருகின்ற நிலையில் நாம் உண்மையில் இல்லை!". உடலும், உடலில் உள்ள உயிரும் போலச் சீவன், சிவன் இருவரும் பொருந்தி இருக்கின்றனர். வானும் வானவரும் போலவும், தேனும் தேனின் இன்சுவையைப் போலவும், சீவனும் சிவனும் இரண்டறக் கலந்து உள்ளனர்.

#1789. அவன் இவன் ஆவான்

அவனும் அவனும் அவனை அறியார்
அவனை அறியில் அறிவானும் இல்லை
அவனை அவனும் அவனை அறியில்
அவனும் அவனும் அவன் இவன் ஆமே.

சிவனைத் தன்னிலும் வேறாகக் கருதி வழிபடும் சரியை, கிரியை நெறிகளில் நிற்பவர் அந்த இறைவனை அறிந்து கொள்ளார். இவன் அவனை அறிந்து கொண்டு விட்டால் அறிபவனும் அறியும் பொருளும் ஒன்றாகிவிடும். சரியை, கிரியை நெறிகளில் நிற்பவர் சீவனையும் சிவனையும் ஒன்றாகக் கருதினால்; அறியும் பொருளான சிவமும், அறிகின்ற அவனும், பொருந்தி ஒன்றாகி விடுவார்கள்.

#1790. அம்பர நாதன் ஆகலாம்!

"நான்இது தான்" என நின்றவன், நாடொறும்
ஊன்இது தான் உயிர் போல் உணர்வான் உளன்
வான்இரு மாமுகில் போல் பொழி வான்உளன்
நான் இது அம்பர நாதனும் ஆமே.

"நான் இந்த உடல் " என்று ஒவ்வொரு உயிரும் எண்ணும். அது போன்றே "நான் இந்த சீவன் " என்று சிவன் எண்ணுவான். கன மழை பொழியும் வான் மேகத்தைக் காட்டிலும் அவன் அதிக அருள் மழை பொழிவான். அவன் அருள் மழையால் நானும் அவனாகவே மாறி அம்பர நாதன் ஆகி விட்டேன்.

#1791. உடலில் உயிர் போலப் பொருந்துவான்!

பெருந்தன்மை தானென யானென வேராய்
இருந்தது மில்லையது ஈச னறியும்
பொருந்து முடலுயிர் போலுமை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே.

பெருந்தன்மை உடைய சிவனும், 'நான்' என்று தன்னை வேறாக எண்ணும் சீவனும் ஒருபோதும் வேறு வேறாக இருந்தது இல்லை. இந்த உண்மையை ஈசன் இயல்பாகவே அறிவான். ஆனால் சீவன் அறியான். சீவனைச் செம்மைப் படுத்துகின்ற சிவன் எப்போதும் உடலில் உயிர் போலச் சீவனுடன் தானும் பொருந்தி இருப்பான்.

ஏழாம் தந்திரம் -
9. திருவருள் வைப்பு

திருவருள் வைப்பு = திருவடிகளைப் பதிதல்.
சூரிய சந்திர கலைகளே இறைவனின் திருவடிகள்.

#1792. அருளாவது அறமும் தவமும்

இருபத மாவது இரவும் பகலும்
உருவது ஆவ துயிரும் உடலும்
அருளது வாவது அறமும் தவமும்
பொருளது வுள்நின்ற போகம தாமே.

அறிய வேண்டிய நெறிகள் இரண்டு. அவை கதிரவ நெறியும், திங்கள் நெறியும் ஆகும். உயிர் உடலுடன் இணைந்து இருப்பதன் பயன் இதுவே. அருள் என்னும் தெய்வ சக்தியை அடைவதற்கு உள்ள வழிகள் இரண்டு. அவை திங்கள் நெறியைப் பற்றியவர்களுக்கு அறம்; கதிரவ நெறியைப் பற்றியவருக்கு தவம்.
இந்த இரு நெறிகளுமே மனத்தின் பண்புக்கு ஏற்பப் பயனைத் தரும்.

#1793. இருள் அறும்!

காண்டற்கு அரியன் கருதிலன் நந்தியும்
தீண்டற்கும் சார்தற்கும் சேயனாத் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளியான் நெஞ்சம்
ஈண்டிக் கிடந்தது அங்கு இருள் அறுமே.

இறைவன் கண்களால் காண்பதற்கு அரியவன்; கருத்தினால் அறிவதற்கும் அரியவன்; தீண்டுவதற்கும் சார்வதற்கும் வெகு தொலைவில் இருப்பவன் என்று தோன்றும். ஆனால் அவனையே நினைந்து இருப்பவருக்கு அவன் அகத்தில் விளக்கொளி ஆவான். அவனையே சார்ந்திருந்தால் ஒருவன் மனத்தின் இருள் அறும்.

#1794. விகிர்தன் நிற்பான்

குறிப்பினுள் உள்ளே குவயலாம் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும்வம் நிற்கும்
செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே.

சிவ ஒளியை நோக்கி நிற்கும் போது அகக் கண்களில் உலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் கருவாகக் காட்சி தரும். வெறுக்கத் தக்க ஆணவ இருள் நீங்கி விட்டால். உயிரில் உயிராகக் கலந்து நிற்கும் விகிர்தனைக் காண முடியும். அவனிடம் சிந்தையைச் செலுத்தி அதை ஆராய்ந்தால் ஞான ஒளி பிறக்கும். தேவ வடிவும் கிடைக்கும்.

#1795. அறிவார் அறிவே துணையாகும்!

தேர்ந்து அறியாமையின் சென்றன காலங்கள்
பேர்ந்து அறிவான் எங்கள் பிஞ்ஞகன் எம்இறை
ஆர்ந்து அறிவார் அறிவே துணையாம் எனச்
சார்ந்து அறிவான் பெருந்தன்மை வல்லானே.

ஆராய்ந்து தெளிவு பெறாததால் அறியாமையில் என் காலம் வீணாகக் கழிந்தது. எம் இறைவன் தன் நிலையிலிருந்து பெயர்ந்து ஒரு குருவாக வந்து

தன்னை வெளிப்படுத்தினான். அறிவைத் துணையாகக் கொண்டு தன்னை உணர்பவரிடம் பொருந்தி விளங்கும் தன்மை உடையவன் சிவன்.

#1796. இறைவன் இன்பம் அளிப்பான்

தானே அறியும் வினைகள் அழிந்தபின்
நானே அறிகிலன் நந்தி அறியுங்கொல்
ஊனே உருகி உணர்வை உணர்ந்தபின்
தேனே அனையன் நம் தேவர் பிரானே.

என் இருவினைப் பயன்கள் அழிந்தவிட்ட பின்பு சிவன் தானே என்னை அறிந்து கொள்வான். நான் அதை அறிய மாட்டேன். ஆனால் சிவன் என் மனத்தின் பக்குவத்தை அறிந்து கொள்வான். ஊன் உருகி உணர்வு மயமான அவனை நான் அறிந்து கொண்ட பின்னர் அவன் தேன் போல இனிப்பான்.

#1797. உள்ளே உள்ள ஒண்சுடர்

நான் அறிந்து அன்றே இருக்கிறது ஈசனை
வான் அறிந்தார் அறியாது மயங்கினர்
ஊன் அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண் சுடர்
தான் அறியான், பின்னை யார் அறிவாரே?

இந்த உடல் தோன்றிய அன்றே நான் அறிந்திருந்தேன் என்னுள் ஒளியாகவும், உயிர்ப்பாகவும் உள்ள என் ஈசனைக் குறித்து. ஆனால் வானவர் அவனை அறியாது மயங்குவர். என் உடலினுள் உயிராகவும், உயிர்ப்பாகவும் உள்ள அவனை நானே அறிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் அறிந்து கொள்ளுவார்?

#1798. அருள் எங்கும் உளது!

அருள் எங்கும் ஆன அளவை அறியார்
அருளை நுகர அமுது ஆனதும் தேரார்
அருள்ஐங் கருமத்து அதி சூக்கம் உன்னார்
அருள் எங்கும் கண்ஆனது ஆர்அறி வாரே?

இறைவனின் அருளே எங்கும் நிறைந்துள்ளது என்று உலகத்தோர் அறிகிலர். இறை அருளை உணர்ந்து கொண்டவருக்கு அது அமுதம் போல இனிக்கும் என்றும் இவர்கள் அறிகிலர். ஐந்தொழில்களை ஆற்றுவது சக்திதேவி என்பதையும் இவர்கள் அறியார். அருள் சக்தியே விழியாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் காண்பதையும் இவர்கள் அறிகிலர்.

#1799. அடியருள் நல்கும் சிவம் ஆயினரே!

அறிவில் அணுக அறிவுஅது நல்கிப்
பொறிவழி ஆசை புகுத்திப் புணர்ந்திட்டு
அறிவு அது ஆக்கி அடியருள் நல்கும்
செறிவோடு நின்றார் சிவம் ஆயினாரே.

சிவன் சீவனுக்கு அறிவு மயமான தன்னுடன் பொருந்துவதற்கு ஏற்ற அறிவைத் தந்தான். சீவன் பொறிகள் வழியே சென்று புலன்களை நாடும் ஆசைகளையும் அவனே தந்தான். ஆன்ம அறிவையும் அருளையும் கலந்து தந்து உயரிய சிவனடியார்களின் சகவாசத்தையும் தந்தான். சிவனிடம் செறிவோடு நின்றவர் சிவம் ஆயினர்.

#1800. என் அகம் புகுந்தான் நந்தி

அருளில் பிறந்திட்டு, அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பு ஆறி, மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுதூட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந் தானே.

இறைவனின் அருளால் நான் பிறந்தேன், வளர்ந்தேன், அழிந்தேன், இளைப்பாறினேன், மறைந்துள்ள ஞானத்தை அடைந்தேன், ஆரமுதாகிய ஆனந்தத்தை அடைந்தேன், நந்தியும் என் அகம் புகுந்தான்.

#1801. நந்தி என் அகம் புகுந்தான்

அருளா லமுதப் பெருங்கட லாட்டி
அருளால் அடிபுனைந் தார்வமும் தந்திட்டு
அருளான வானந்தத்து ஆரமுதூட்டி
அருளா லென் நந்தி யகம்புகுந் தானே.

என் தலைவன் தன் அருளால் என்னை அமுதப் பெருங் கடல் ஆட்டினான்.
என் தலைவன் தன் அருளால் என் சென்னி மீது தன் அடிகளைப் பதித்தான்.
என் தலைவன் தன் அருளால் எனக்குப் பக்தி என்னும் ஆர்வத்தைத் தந்தான்.
என் தலைவன் தன் அருளால் இனிய அமுதத்தை எனக்கு ஊட்டினான்.
என் தலைவன் தன் அருளால் என் நெஞ்சம் புகுந்து எழுந்தருளினான்.

#1802. சக்தி அருள் செய்வாள்

பாசத்தில் இட்டது அருள் அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டது அருள் அந்த நேசத்தில்
கூசமுற்ற முத்தி அருள், அந்தக் கூட்டத்தில்
நேசத்துத் தோன்றா நிலைஅருள் ஆமே.

அவன் அருள் என்னைப் பாசத்தில் பொருத்தி அனுபவங்களைப் பெறச் செய்தது.
அவன் அருள் என்னைப் பாசத்தின் மீது நான் கொண்ட நேசத்தில் இருந்து விடுவித்தது. அவன் அருள் எனக்கு முக்தியைத் தந்தது. பின்னர் அதுவே முக்தியைக் கடந்த நிலையையும் தந்தது.

#1803. உறவாகி உளம் புகுவான்

பிறவா நெறி தந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்
உறவாகி வந்து என் உளம்புகுந் தானே.

பிறவிக்குக் காரணமான அறியாமையை நீக்கி மெய்யறிவு என்னும் ஒளியைத் தந்தவன் பெருங் கருணை கொண்ட என் இறைவன். உலக இயலில் ஆழ்ந்து நான் அவனை மறந்துவிடாது இருக்க அருள் புரிந்தவன் என் நந்தி. அவன் அறவாழி அந்தணன், அவன் ஆதிப் பராபரன்; அவன் என்னைத் தன் உறவாகக் கருதி என் உள்ளம் புகுந்தான்.

#1804. நந்தி தருவான் ஆனந்தம்

அகம் புகுந்தான் அடியேற்கு அருளாலே,
அகம் புகுந்தும் தெரியான் அருளில்லோர்க்கு,
அகம் புகுந்து ஆனந்தமாக்கிச் சிவமாம்
அகம் புகுந்தான் நந்தி ஆனந்தி யாமே.

இறைவன் தன் தண்ணருளால் என் மனத்தில் புகுந்தான். இருளில் மூழ்கி இருப்பவர்கள் அவன் தம் உள்ளம் புகுந்திருந்தாலும் அவனை அறிந்து கொள்ள இயலார். என் மனத்தில் புகுந்த இறைவன் என்னை ஆனந்த மயமாக்கி என்னைச் சிவம் ஆக்கினான். அவன் அருட் செயலால் நானும் ஓர் ஆனந்தி ஆகிவிட்டேன்.

#1805. அருட்செய்கை

ஆயும் அறிவோடு, அறியாத மாமாயை
ஆய கரணம், படைக்கும் ஐம்பூதமும்
ஆய பல இந்திரியம் அவற்றுடன்
ஆயவருள் ஐந்தும் ஆம் அருட் செய்கையே.

ஆராய்ந்து அறியும் அறிவை என் இறைவன் எனக்குத் தந்தான். ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாத மாமாயையும் அவன் தந்தான். மாயையின் காரியமாகிய நான்கு அந்தக் கரணங்கள், ஐம் பெரும் பூதங்கள், பத்து இந்திரியங்கள் இவை அனைத்தையும் படைத்தவன் என் இறைவன். இவற்றுடன் பராசக்தி, ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்ற ஐம் பெரும் சக்திகளைத் தந்தவனும் என் இறைவனே.

#1806. அருளே அவன் திருமேனி

அருளே சகலமும், ஆய பவுதிகம்
அருளே சராசரம் ஆய அமலமே,
இருளே, வெளியே எனும் எங்கும் ஈசன்
அருளே சகளத்தன் அன்றி இன்று ஆமே.

என் இறைவனின் அருளே உலகில் உள்ள அனைத்தும் ஆகும். பூத காரியம் என்னும் பௌதிக காரியம் அனைத்தும் அவன் அருளே. அசையும் பொருட்கள் அசையாப் பொருட்கள் அனைத்தும் அவன் அருளே. இருள் வெளிச்சம் இரண்டும் அவன் அருளே. சிவம் என்பதன் பொருள் அவன் திருவருளே ஆகும்.

#1807. நவமாகி நடிப்பவன் சிவன்

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா
நவம்அவை யாகி நடிப்பவன் தானே.

சிவம், சக்தி, நாதம், விந்து, உயரிய சதாசிவன், மகேசுரன், உருத்திரன், பிறவிகள் எடுக்கும் திருமால், நான்முகன் என ஒன்பது வடிவங்களாகப் பிரிந்தும்; மீண்டும் ஒரே பரம் பொருளாக ஒன்றாகப் பொருந்தியும் நடிப்பவன் என் இறைவன் ஆகிய சிவன்.

#1808. அருட்கண் அரனைக் காணும்!

அருட்கண் இலாதார்க்கு அரும்பொருள் தோன்றா;
அருட்கண் உளோர்க்கு எதிர்தோன்றும் அரனே
அருட்கண்ணி னோர்க்கு இங்கு இரவியும் தோன்றாத்
தெருட்கண்ணி னோர்க்கு எங்கும் சீரொளி ஆமே.

குருட்டுக் கண்கள் உள்ளவர்களால் ஒளி வீசும் கதிரவனையும் கூடக் காணமுடியாது. தெளிவான பார்வை உடையவர்கள் கதிரவனின் ஒளியால் உலகம் முழுவதையும் காண இயலும். அருட்கண்கள் பெறாதவர்களால் சிவன், சக்தி, நாதம், விந்து இவற்றைக் காண இயலாது. அருட்கண்கள் பெற்றவர்களால் இவற்றைத் தம் கண் எதிரில் காண இயலும்.

#1809. ஐந்தொழில் புரிவர்

தானே படைத்திடும் தானே அளித்திடும்
தானே துடைத்திடும் தானே மறைத்திடும்
தானே இவை செய்து தான் முத்தி தந்திடும்
தானே வியாபித் தலைவனு மாமே.

சக்தியுடன் கூடிய சிவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அருள்வான்; அவனே அதைக் காத்து அருள்வான்; அவனே அதை அழித்து அருள்வான்; அவனே அதை மறைத்து அருள்வான். அவனே சீவனுக்கு முக்தியையும் நல்குவான். அத்தகைய என் இறைவனே காணும் பொருட்கள் அனைத்திலும் பரந்தும், கரந்தும், உறையும் மேலான தலைவன் ஆன சிவன்.

#1810. பரசிவத்தின் பெருமை

தலையான நான்கும் தனதரு வாகும்
மலையா வருஉரு வாகும் சதாசிவம்
நிலையான கீழ் நான்கு நீடுரு வாகும்
துலையா இவை முற்று மாயல்ல தொன்றே.

மேன்மையான சிவம், சக்தி, நாதம், விந்து என்ற நான்கும் சிவனின் நான்கு அருவ நிலைகள் ஆகும். சதாசிவன் என்னும் நிலை அருவுருவ நிலை ஆகும். மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்னும் நான்கு நிலைகளும் உருவ நிலை ஆகும். இவை ஒன்பது நிலைகளைக் கடந்து நிற்பவன் பரமசிவன். இந்த ஒன்பது நிலைகளை இயக்குபவனும் பரமசிவன்.

#1811. அலகிலா விளையாட்டு

ஒன்று அதுவாலே உலப்பிலி தான் ஆகி,
நின்றது தான் போல் உயிர்க்கு உயிராய் நிலை
துன்றி அவை அல்ல ஆகும்; துணை என்ன
நின்றது தான் விளையாட்டு என்னுள் நேயமே.

அழிவில்லாத சிவம் ஒப்பற்ற தன்மையால் தானேயாகி நிற்கின்றது. உயிரில் உயிராக அனைத்திலும் சிவம் பொருந்தி நிற்கின்றது. ஆனாலும் அது அவைகளாக ஆவது இல்லை. உற்ற துணைவனாக, ஒரு நல்ல நண்பனாகச் சிவன் அனைத்து சீவன்களிலும் உறைகின்றான். இதுவே அவன் ஆடுகின்ற ஓர் அலகிலா விளையாட்டு.

#1812. விந்து ஆக விளையும்

நேயத்தே நின்றிடு நின்மலன் சத்தியோடு
ஆயக் குடிலையுள் நாத மடைந்திட்டுப்
போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து ஆக விளையுமே.

என் உள்ளத்தில் நேயத்துடன் உறையும் நிர்மலனாகிய சிவன் பிரணவத்தில் சக்தியுடன் கூடி அதை இயங்க வைத்தான். அதிலிருந்து நாதம் தோன்றியது. அது மேலும் விரிந்து ஐந்து கலைகளாகக் கூடும். அப்போது அதிலிருந்து அழிவில்லாத விந்து தோன்றும்.

#1813. அளவு என்று ஒன்று இல்லை

விளையும் பரவிந்து தானே வியாபி
விளையும் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொன்று இலாவண்ட கோடிக ளாமே.

பரவிந்துவில் நிலைபெற்றுள்ள சக்தியே அனைத்துத் தத்துவங்களிலும் பரவி நிற்கின்றாள். அசுத்த மாயை, சுத்த மாயை இரண்டும் அவளிடம் விளங்குகின்றன. இந்த இரண்டு மாயைகளில் இருந்து தேவர்கள், வேதங்கள், மந்திரங்கள், அண்டங்கள் என்று அனைத்துமே தோன்றுகின்றன.

ஏழாம் தந்திரம் -
10. அருள் ஒளி

அருள் ஒளி இன்பம் தரும்.

#1814. அருளில் பிறந்தவர் அருளை அறிவர்

அருளில் தலை நின்று, அறிந்து அழுந்தாதார்
அருளில் தலை நில்லார், ஐம்பாசம் நீங்கார்,
அருளின் பெருமை அறியார், செறியார்
அருளில் பிறந்திட்டு, அறிந்து அறிவாரே.

'எல்லாம் அவன் செயல். அவன் திருவருளே ஏற்ற துணை' என்று உணர்ந்து கொண்டு, இறையின் அருளில் அழுந்தித் தன் செயல் ஒழியாதவர் இறைவனின் திருவருள் இயக்கத்தில் பொருந்த மாட்டார். இவர்கள் சீவனைப் பிணிக்கும் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரேதாயி என்னும் ஐந்து பாசங்களில் இருந்து விடுபட மாட்டார். அருளின் பெருமையை அறியாதவர் இறையருளில் அழுந்த மாட்டார். திருவருளில் தோன்றி அந்த அருளே அனைத்துக்கும் காரணம் என்று அறிந்து கொண்டவர் அனைத்தையும் அறிவர்.

#1815. "அருட்கடல் ஆடுக!"

வாரா வழி தந்த மாநந்தி பேர் நந்தி
ஆரா அமுது அளித்தான் பேர் நந்தி
பேர் ஆயிரம் உடைப் பெம்மான் பேர் ஒன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுக என்றானே.

மீண்டும் பிறவிக்கு வாராத நெறியை என் குருநாதன் நந்தி எனக்கு அருளினான். தெவிட்டாத தெள்ளமுதினை அவன் எனக்கு அருளினான். அவன் ஆயிரம் திரு நாமங்களை உடையவன். அவற்றில் ஒரு நாமத்தில் ஒன்றி மாறாத அருட்கடல் ஆடுவீர் என்று கூறினான்.

விளக்கம்:

இறைவனின் திரு நாமத்தைச் சிந்திக்கச் சிந்திக்க அவன் அருள் ஒளி பெருகும். அது உள்ளும் புறமும் மேலும் கீழும் நிறைந்து அந்த அடியவனை அருட் கடலில் மூழ்கச் செய்யும்.

#1816. ஆடிப் பாடி அழுது அரற்றுவீர்!

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன் பெருந் தன்மையை,
கூடியவாறே குறியாகக் குறிதந்து என்
ஊடு நின்றான் அவன் தன் அருள் உற்றே.

அவன் அருள் தரும் ஆனந்தத்தில் நான் பாடினேன், ஆடினேன், அழுதேன், அரற்றினேன். இங்ஙனம் அவன் பெருந்தன்மையை நான் தேடிக் கண்டு கொண்டேன். அவன் என்னுடன் பொருந்திய போதே வடிவம் இல்லாத ஒளி வெள்ளத்தினால் என் உள்ளும், புறமும், மேலும், கீழும் நிறைந்து விட்டன.

#1817. கற்றன விட்டுக் கழல் பணிந்தேன்!

உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயாப் படல மெனப்பண்ணி
அத்தனை நீயென் றடிவைத்தான் பேர் நந்தி
கற்றன விட்டேன் கழல் பணிந்தேனே.

"ஆணவ மலத்தின் காரணமாக சீவனுக்குப் பிறவி உண்டாகின்றது. அந்தப் பிறவியினால் மேலும் பல மாயாக் காரியங்கள் நிகழ்கின்றன. இவை அனைத்தும் இடையில் வந்து சீவனைப் பிணித்த பிணிகள்" என்ற மெய் ஞானத்தைத் தந்தான் என் இறைவன். நான் கற்றவற்றை எல்லாம் துறந்து விட்டு அவன் அருட் கழல்களை விடாது பற்றிக் கொண்டேன்.

#1818. விளக்கில் விளங்கும்!

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

ஞானம் என்ற விளக்கை ஏற்றுங்கள். எல்லையற்றத் தூய பரம்பொருளை அறிந்து கொள்ளுங்கள். அந்த எல்லையற்ற இறைவன் அண்மையில் நமக்குத் தொல்லை தரும் துன்பங்களும் வேதனைகளும் மறைந்து போய்விடும். ஒளி விளக்காகிய இறைவனை விளக்கும், திரு விளக்காகிய மெய் ஞானத்தை அடைந்தவர் தாமே அந்தச் சிவ ஒளியுடன் சீவ ஒளியாகக் கலந்து நிற்பார்.

#1819. இருள் நீங்க உயிர் சிவம் ஆம்!

ஒளியும் இருளும் ஒருகாலும் தீர
ஒளியு ளோர்க்கு அன்றே ஒழியாது ஒளியும்
ஒளி இருள் கண்டகண் போலவேறாய் உள்
ஒளி இருள் நீங்க, உயிர் சிவம் ஆமே.

ஒளியும் இருளும் ஒருக்காலும் தீரா. ஒளியைக் கண்ட கண்களுக்கு அதன் பின்னர் இருள் என்பது இல்லை. உயிர் வெளி உலகில் காண்பது அறியாமையின் இருள். உயிர் தனக்குள்ளே உள்ளே காண்பது இறையாகிய ஒளி. சீவன் இருள் நீங்கி உள்ளே உள்ள ஒளியைக் கண்டு கொண்டு விட்டால் அப்போது சீவன் சிவமாகி விடும்.

#1820. எனக்கு ஆரமுது ஈந்த திறம்!

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டிப்
நிறமே புகுந்து, என்னை நின்மலன் ஆக்கி,
அறமே புகுந்த எனக்கு ஆரமுது ஈந்த
திறம் ஏது என்று எண்ணித் திகைத்திருந்தேனே.

ஆணவத்துடன் வெளியுலகில் திரிந்து கொண்டிருந்த என் தலை மீது உன் பொற்கழல்களைச் சூட்டினாய். என்னுள் புகுந்து என் குற்றங்களை நீக்கி என்னை நிர்மலன் ஆக்கினாய். உன் தண்ணருளால் எனக்கு ஆரா அமுது ஊட்டினாய். உன் அன்பின் திறத்தை எண்ணி எண்ணி நான் திகைத்து நின்றேனே.

#1821. சிவகதி ஆகும்!

அருளது வென்ற வகலிட மொன்றும்
பொருளது வென்ற புகலிட மொன்றும்
மருளது நீங்க மனம் புகுந்தானை
தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே.

அருள் தரும் சக்தி தேவி வேறு என்றும், மெய்ப் பொருளாகிய சிவன் வேறு என்றும் எண்ணி மயங்கி நின்றேன். என் மயக்கத்தைப் போக்கிச் சிவனும் சக்தியும் ஒன்றில் ஒன்றாக ஒன்றி உறைபவர் என்ற தெருளை எனக்குத் தந்த இறைவன் பின்னர் சிவகதியும் தந்தான்.

#1822. தேரணிவோம் எனச் செப்புவீர்!

கூறுமின் னீர்முன் பிறந்திங்கு இறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணியும் முடல் வீழவிட் டாருயிர்
தேறணி வோமிது செப்ப வல்லீரே.

சிவம் பிறந்ததாகவோ மறைந்ததாகவோ எவரேனும் கேட்டதுண்டோ? பிறந்து, இறந்தும் இயங்கிகின்ற பிற தெய்வங்கள் மெய்ப் பொருள் ஆக முடியுமா? இந்தப் பருவுடல் பருந்துக்கு உணவாகில் என்? உம் உயிரைக் காத்துக் கொள்ளும் வழியினைத் தெரிந்து கொள்வீர். இந்த உண்மையைப் பிறருக்கு எடுத்துச் சொல்வீர்.

ஏழாம் தந்திரம் -
11. சிவ பூசை

#1823. காளா மணிவிளக்கே

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

சீவனின் உள்ளமே இறைவன் உறையும் கருவறை; சீவனின் உடலே அவன் வாழும் ஓர் ஆலயம்; வள்ளலாகிய அவனைச் சென்று வழிபடும் கோபுர வாசல் சீவனின் வாய்; மெய்யறிவு பெற்றவருக்குச் சீவனே சிவலிங்கம். இவர்களுக்கு கள்ளப் புலன்கள் ஐந்தும் காளா மணி விளக்குகளாக மாறி விடும்.

#1824. பாடல் அவி பால் அவி ஆகும்!

வேட்டு அவிஉண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாம் இலம் காலையும் மாலையும்
ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவிகாட்டுதும் பால்அவி ஆமே.

விரிசடை நந்தி விரும்பி ஏற்கும், வேள்வித் தீயில் இடும், சிறந்த அவிப் பொருள் நம்மிடம் இல்லை. அவனுக்குக் காலையும் மாலையும் நம்மால் படைக்க இயல்வது அவனைப் போற்றும் இனிய துதிப் பாடல்கள் ஆகும். அவை அவனை மகிழ்விக்கின்ற செவிக்குச் சிறந்த செறிந்த உணவாகும். பாடல் அவியே அவன் விரும்பும் பால் அவி ஆகும்.

#1825. சிவன் அவன் ஆகும்

**பால் மொழி பாகன் பராபரன் தான் ஆகும்
மான சதாசிவன் தன்னை ஆவாகித்து
மேல் முகம் ஈசான மாகவே கைக் கொண்டு
சீல் முகம் செய்யச் சிவனவன் ஆமே.**

பால் போன்ற இன்மொழி பேசும் பராசக்தியைத் தன் உடலில் பாதியாகக் கொண்ட சதாசிவனைத் தலையில் ஆவாகிக்க வேண்டும் .உச்சித் தலையாகிய ஈசானத்தைத் துதித்து அதை நன்கு விளங்கச் செய்தால் சீவன் சிவன் ஆவான்.

#1826. காண்பதற்கு அரியவன்

**நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லாற்
கனைகழ லீசனைக் காண அரிதாம்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்ற வல்லரே.**

சிவனைக் குறித்து இடையறாது எண்ணி இருப்பது, சிவனைக் குறித்துப் பிறருக்கு எடுத்துக் கூறுவது, என்ற இந்த இரண்டு வழிகளை அன்றிச் சிவனை அறிந்து கொள்வது இயலாத செயல். நாத வடிவான சிவனை அறிந்து கொள்பவர் யார்? நீரைத் தன்னிடமாகக் கொண்ட சுவாதிட்டானத்தில் விளங்கும் மூல வாயுவை எழுப்பி மேலே கொண்டு சென்று சிவனைத் தொட வல்லவர் அவனை அறிந்து கொள்பவர் ஆவர்.

#1827. அஞ்சலியோடு அர்சிப்பீர்

**மஞ்சனம், மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சு அமுதாம், உபசாரம் எட்டு எட்டொடும்
அஞ்சலியோடும் கலந்து அர்ச்சித்தார்களே.**

திரு மஞ்சனம், மலர் மாலைகள், வானவர் நெஞ்சம் இவற்றினுள் ஈசன் உறைந்து விளங்குவது ஏன்? தேவர்கள் பூலோக பக்தர்களுடன் கலந்து கொண்டு, பஞ்ச கவ்வியத்துடனும், பதினாறு விதமான உபசாரங்களுடனும், அஞ்சலியோடும், ஈசனை அன்போடு தொழுவதே இதன் காரணம்.

#1828. புண்ணியருக்குப் பூ உண்டு

புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு நீர் உண்டு
அண்ணல் அது கண்டு அருள் புரி யாநிற்கும்
எண் இலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகினன் றாரே.

புண்ணியச் செயல் ஆகிய சிவ பூசை செய்பவர்களுக்கு 'ஊர்த்துவ காமினி' என்னும் மேல் நோக்கிச் செல்லும் உணர்வு உண்டு. சுவதிட்டான மலரும் உண்டு. சிவன் இவ்வாறு பூசிப்பவர்களுக்கு அருள் தருவான். எண்ணற்ற பாவிகள் சிவனைச் சிந்தியாமல் அவமே தம் வாழ்நாட்களைக் கழிக்கின்றனரே!

#1829. முத்தியாம் என்பது மூலன் மொழி

அத்தன் நவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தவர் பதத்தைச்
சுத்தம தாகவே விளங்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே.

நவ தீர்த்தம் என்னும் ஒன்பது நிலைகளில் சிவன் ஆடித் திளைக்கும் தன்மையைக் கேட்பீர்! உயர்ந்த மெய்யறிவு பெற்று விட்ட தூயவர்களின் பாதங்களைக் கழுவி, அந்த நீரைத் தன தலையில் தெளித்துக் கொண்டவருக்கு, உயரிய முத்தி கிடைக்கும் என்பது மூலன் வாக்கு.

#1830. உன்னை மறவா வரம் தருக!

மறப்புற்று இவ்வழி மன்னி நின்றாலும்
சிறப்பொடு பூநீர் திருந்த முன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப் பெற வேண்டும் அமரர் பிரானே.

அமரர் பிரானே! அறிவு பூர்வமாக இல்லாமல் நான் உலக வழிப் படுவேன் ஆயினும் எனக்கு நீ ஒரே ஒரு வரம் தருவாய். சிறப்பான பூவையும், நீரையும் ஏந்திய வண்ணம் நான் மறவாமல் உன்னை என்றும் வழிபடும் வரம் தருவாய்.

#1831. எங்கள் ஆதிப் பிரான்

ஆரா தனை யமரர் குழாங்களும்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேராயிரமும் பிரான்றிரு நாமமும்
ஆரா வழியெங்க ளாதிப் பிரானே.

ஆயிரம் திரு நாமங்களையும், 'சிவசிவ' என்னும் திருப் பெயரையும் ஓயாது கூறி வழி பட்டால் இறைவன் நன்கு விளங்குவான். அப்போது வழிபாடுகள், தேவர்கள், அலை ஓயாதத் திரைக் கடல் இவை அனைத்தும் உம் ஆணை வழிப்பட்டு நிற்கும்.

#1832. பாரைப் படைத்து நின்றான்

ஆனைந்தும் ஆட்டி அமரர் கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவ னருளது
தேனுந்த மாமலருள்ளே தெளிந்ததோர்
பாரைங் குணமும் படைத்தது நின்றானே.

பஞ்ச கவ்வியதால் இறைவனை நீராட்டித் தேவர் கணங்கள் தொழுது நிற்கும். தனக்கு என்று ஒரு அந்தம் இல்லாத தனிப் பெரும் தலைவனின் அருள், தேன் சிந்தும் சுவாதிட்டான மலரில் விளங்கும். ஐம் பெரும் பூதங்களையும் அவற்றின் குணங்களையும் படைத்தவன் நம் இறைவன்.

#1833. பெருமான் அருள்வான்

உழைக்கொண்ட பூநீர் ஒருங்குட னேந்தி
மழைக்கொண்ட மாமுகில் மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசம் தயங்கி நின் றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே.

சுவாதிட்டானச் சக்கரத்திலிருந்து மேல் நோக்கிப் பாய்கின்ற உணர்வு நீரை ஒருங்குடன் ஏந்திக் கொள்ள வேண்டும். கருக் கொண்ட முகில்கள் செல்வது போல மேல் நோக்கிச் செல்ல வேண்டும். வானவர்கள் பற்றுக்களில் சிறைப் பட்டுத் தயங்கித் தயங்கி ஈசனை வணங்குவது போல் அன்றிப் பிழையில்லாமல் இறைவனை ஒருமனதுடன் வழிபட்டால் அவன் அருள் உறுதியாகக் கிடைக்கும்.

#1834. அள்ளற் கடலுள் அழுந்துவர்

வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
அல்லற் கடலுள் அழுந்துகின் றாரே.

விரிசடையில் கங்கை வெள்ளத்தை உடைய எம் பெருமானை, அசையாத நம்பிக்கை கொண்ட உள்ளத்துடன், நீண்டு உயர்ந்த மேல் நோக்கிய ஆயிரம் இதழ்த் தாமரையைக் கொண்டு அன்புடன் வழிபடவேண்டும். இங்ஙனம் தொழ அறியாதவர்கள் வஞ்சனை மிகுந்த பிறவிக் கடலில் இருந்து விடுதலை பெற

முடியாது. அவர்கள் மீண்டும் மீண்டும் சேறு நிறைந்த இந்தப் பிறவிக் கடலில் விழுந்து அழுந்தி மேலும் மேலும் துன்பம் அடைவர்.

#1831. எங்கள் ஆதிப் பிரான்

ஆரா தனை யமரர் குழாங்களும்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேராயிரமும் பிரான்றிரு நாமமும்
ஆரா வழியெங்க ளாதிப் பிரானே.

ஆயிரம் திரு நாமங்களையும், 'சிவசிவ' என்னும் திருப் பெயரையும் ஓயாது கூறி வழி பட்டால் இறைவன் நன்கு விளங்குவான். அப்போது வழிபாடுகள், தேவர்கள், அலை ஓயாதத் திரைக் கடல் இவை அனைத்தும் உம் ஆணை வழிப்பட்டு நிற்கும்.

#1832. பாரைப் படைத்து நின்றான்

ஆனைந்தும் ஆட்டி அமரர் கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவ னருளது
தேனுந்த மாமலருள்ளே தெளிந்ததோர்
பாரைங் குணமும் படைத்தது நின்றானே.

பஞ்ச கவ்வியதால் இறைவனை நீராட்டித் தேவர் கணங்கள் தொழுது நிற்கும். தனக்கு என்று ஒரு அந்தம் இல்லாத தனிப் பெரும் தலைவனின் அருள், தேன் சிந்தும் சுவாதிட்டான மலரில் விளங்கும். ஐம் பெரும் பூதங்களையும் அவற்றின் குணங்களையும் படைத்தவன் நம் இறைவன்.

#1833. பெருமான் அருள்வான்

உழைக்கொண்ட பூநீர் ஒருங்குட னேந்தி
மழைக்கொண்ட மாமுகில் மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசம் தயங்கி நின் றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே.

சுவாதிட்டானச் சக்கரத்திலிருந்து மேல் நோக்கிப் பாய்கின்ற உணர்வு நீரை ஒருங்குடன் ஏந்திக் கொள்ள வேண்டும். கருக் கொண்ட முகில்கள் செல்வது போல மேல் நோக்கிச் செல்ல வேண்டும். வானவர்கள் பற்றுக்களில் சிறைப் பட்டுத் தயங்கித் தயங்கி ஈசனை வணங்குவது போல் அன்றிப் பிழையில்லாமல் இறைவனை ஒருமனதுடன் வழிபட்டால் அவன் அருள் உறுதியாகக் கிடைக்கும்.

#1834. அள்ளற் கடலுள் அழுந்துவர்

வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
அல்லற் கடலுள் அழுந்துகின் றாரே.

விரிசடையில் கங்கை வெள்ளத்தை உடைய எம் பெருமானை, அசையாத நம்பிக்கை கொண்ட உள்ளத்துடன், நீண்டு உயர்ந்த மேல் நோக்கிய ஆயிரம் இதழ்த் தாமரையைக் கொண்டு அன்புடன் வழிபடவேண்டும். இங்ஙனம் தொழ அறியாதவர்கள் வஞ்சனை மிகுந்த பிறவிக் கடலில் இருந்து விடுதலை பெற முடியாது. அவர்கள் மீண்டும் மீண்டும் சேறு நிறைந்த இந்தப் பிறவிக் கடலில் விழுந்து அழுந்தி மேலும் மேலும் துன்பம் அடைவர்.

#1839. மழைக் கொண்டல்

உழைக்கவல் லோர்நடு நீர்மல ரேந்தி
பிழைப்பின்றி ஈசன் பெருந்தவம் பேணி
இழைக்கொண்ட பாதத்து இனமலர் தூவி
மழைக் கொண்டல் போலவே மன்னி நில்லீரே.

இறைவனை நினைக்க வல்லவர் நடுநாடியாகிய சுழுமுனை வழியே மேல் நோக்கிச் செல்லும் உணர்வு நீரைச் செலுத்த வேண்டும். பிழைகள் எதுவும் இன்றி ஈசன் பெருந்தவம் பேண வேண்டும். இரு கண்மலர்களைச் சேர்க்கும் போது தோன்றும் ஈசன் திருவடிகளைப் பற்றி நிற்க வேண்டும். மழைக் கொண்டல் போன்று நீவிர் மன்னி நிற்கும் வழி இதுவே.

#1840. துன்று சலமலர் தூவித் தொழுவீர்

வென்று விரைந்து விரைப்பணி யென்றனர்
நின்று பொருந்த இறைபணி நேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடில்
கொண்டிடும் நித்தலும் கூறிய வன்றே.

இறைவனை நேர்படத் தொழும் வழி இதுவே. ஐம் பொறிகளை வெல்லுங்கள். விரைந்து இறைவனிடம் செல்லுங்கள். விழுந்து அவனைப் பணியுங்கள். சுவாதிட்டானத்தில் உள்ள சலத்தையும் மலரையும் ஈசனுக்கு அர்ப்பணியுங்கள். அவனுடன் பொருந்தும் வழி இதுவே என்று என்றோ கூறப்பட்டுள்ளது.

#1841. மா திக்குச் செல்லும் வழி.

சாத்தியும் வைத்தும் சயம்புவென் றேத்தியும்
ஏத்தியும் நாளும் மிறையை யறிகிலார்
ஆத்தி மலக்கிட் டகத்திழுக் கற்றக்கால்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே.

சுவாதிட்டான மலரை இறைவனுக்குச் சாத்தியும், அதை அவன் அடிகளில் வைத்தும், அவனைச் சுயம்பு என்று ஏத்தியும், நாளும் புகழ்ந்து போற்றிய பிறகும் உலகினர் ஈசனை அறிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். மனத்தில் உள்ள துன்பத்தை நீக்கிவிட்டு, ஆறு மன மலங்களை முற்றிலுமாக அகற்றி விட்டால் அதுவே அவர்களை அவனிடம் கொண்டு சேர்க்கும் வழியாக ஆகிவிடும்.

#1842. தாவிக்கும் மந்திரம் தாமறியார்

ஆவிக் கமலத்தில் அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடை
தாவிக்கும் மந்திரம் தாமறி யாரே.

உயிர்த் தாமரைக்கு மேல் சீவனுக்கு இன்பம் உண்டாகும் வண்ணம் சீவனின் உடலில் பொருந்தி இருப்பவன் விரிசடை நந்தி. அவனைக் கருதிக் கூவினால் தவறாமல் அவனிடம் கொண்டு சேர்க்கும் அந்த விந்தை மந்திரத்தை உலகத்தோர் அறியார்.

#1843. மாணிக்க மாலை மனம் புகுவான்

சாணாகத் துள்ளே அழுந்திய மாணிக்கம்
காணும் அளவும் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருகிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம் புகுந்தானே.

சாண் அளவு உடைய அகத்தின் உள்ளே அழுந்திக் கிடக்கும் மாணிக்கம் போன்ற ஈசனை உள்ளபடி அறிந்து கொண்டவர் எவரும் இல்லை. அவனை உள்ளத்தில் எண்ணி எண்ணிப் பேணிப் பெருக்கிய அவன் நினைவு உடையவர்களுக்கு அவன் ஒளி வீசும் மாணிக்க மாலையாக மனத்தில் விளங்குவான்.

#1844. தலைவனைத் தாங்கி நிற்பர்

பெருந்தன்மை நந்தி, பிணங்கு இருள் நேமி
இருந்தன்மை யாலும்என் நெஞ்சு இடம் கொள்ள
வரும்தன்மை யாளனை, வானவர் தேவர்
தரும்தன்மை யாளனைத் தாங்கி நின்றாரே.

சிவன் பெருந்தன்மை உடைய ஈசன்; அவன் சீவன் அறிவில் மாறுபாட்டைச் செய்யும் அறியாமை இருளைக் களையும் ஓர் ஒளிரும் சக்கரப் படை; என் மனத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்ட பேரருள் வாய்ந்தவன்; வேண்டியவருக்கு வேண்டியதைத் தரும் வள்ளல்; அவனை வானவர் தேவர்கள் தாங்கி நிற்பர்.

#1845. ஞான மார்க்க அபிடேகம்

சமைய மலசுத்தி தன் செய லற்றிடும்
அமையும் விசேடமும் ஆனமந் திரசுத்தி
சமைய நிர்வாணம் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமா னார்க்கபி டேகமே.

சமய தீட்சையால் மலங்கள் நீங்கி உடல் தூய்மை அடையும். அது தன் செயல் அற்றிடும்.

விசேட தீட்சையால் மந்திர சுத்தி ஏற்படும். நிர்வாண தீட்சையால் கலைகள் சுத்தி அடையும்.

அபிடேக தீட்சை என்பது சிவஞானம் உடையவருக்குச் செய்யப் படும் ஒரு திருமுழுக்காட்டு.

#1846. ஊழி கடந்தும் உச்சி உள்ளான்

ஊழிதோறு ஊழி உணர்ந்தவர்க்கு அல்லது
ஊழில் உயிரை உணரவும் தான் ஒட்டான்
ஆழி அமரும் அரிஅயன் என்று உளோர்
ஊழி கடந்தும் ஓர் உச்சி உள்ளானே.

எத்தனையோ ஊழிக் காலங்களில் உணர்ந்து வழிபட்டவரால் அன்றி வேறு எவராலும் அழிவில்லாத ஆன்மாவை உணர்ந்து கொள்ள முடியாது. ஆழியில் அமரும் மாலும், அவன் நாபியில் அமரும் அயனும் பல ஊழிகள் தேடிய போது அவர்களுக்கு எட்டாத ஈசன் ஞானியரின் தலை உச்சியில் விளங்குகின்றான்.

ஏழாம் தந்திரம் -
12. குரு பூசை

குரு பூசை = குரு மண்டல பூசை.

#1847. போற்றுவன் யானே

ஆகின்ற நந்தி அடித்தாமரை பற்றிப்
போகின்ற உபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதாரம் ஆறாறு அதனின் மேல்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே.

நந்தியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, மூலாதாரத்தில் இருந்து சுழுமுனை நாடி வழியே மேலே எழும்பிச் செல்லும் விதத்தையும், அங்கு சென்ற பின் ஈசனைப் பூசிக்கும் விதத்தையும், உடலின் தத்துவங்களான முப்பத்து ஆறினையும் கடந்த ஆன்மா பரம் ஆவதையும் நான் புகழ்ந்து போற்றுவேன்.

#1848. ஊனினை நீக்கி உணர்பவர்

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.

கானகத்தில் நன்கு விளைந்த சந்தனத்தைச் சாந்தாக அரைத்துத் தடவினாலும், வண்ண வண்ண மலர்களை வானளவாகத் தூவி வழி பட்டாலும், தேனமர் பூக்கள் செறிந்த சிவன் கழல்களைச் சென்று சேருவதற்கு, ஊன் மேல் உள்ள பற்றினை ஒருவன் முற்றிலும் துறந்திட வேண்டும். ஈசனைத் தான் பெற்ற ஞானத்தால் பற்றிட வேண்டும்.

#1849. சேவடி சேரல் செயல் அறல் தானே

மேவிய ஞானத்தில் மிக்கிடின் மெய்ப்பரன்
ஆவயின் ஞானநெறி நிற்றல் அர்ச்சனை
ஓ அற உட்பூசனை செய்யில் உத்தமம்
சேவடி சேரல் செயல் அறல் தானே.

'மெய்ப் பொருளின் காட்சி' என்பது மெய் ஞானத்தில் சிறந்து இருத்தல்.
'அரன் அர்ச்சனை' ஆகும் அங்ஙனம் ஞான நெறியில் நிலைத்து இருப்பது.
'உத்தம வழிபாடு' இடையறாது சிவனைச் சித்தத்தில் சிந்தித்து இருத்தல்.

'அவன் சேவடிகளைச் சென்று சேருதல்' தன் செயல் அற்று இருப்பதுவே.

#1850. ஈசனை நச்சுமின்

உச்சியும் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி 'நம' என்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயகன் ஆகுமே.

காலை, மதியம், மாலை என்னும் முப்பொழுதுகளிலும் ஈசனை நீங்கள் நச்சுங்கள். விருப்பத்துடன் 'நமசிவாய' என்னும் அவன் பெயராகிய விதையைத் தெளியுங்கள். அந்த விதை கதிரவன், திங்கள், அக்கினி என்று சுடர் விடும் மூன்று மண்டலங்களிலும் விரைந்து விளைந்து பயிராவதைப் பாருங்கள். அந்தப் பயிரே நந்தி என்னும் பெயருடைய நம் சிவபெருமான் ஆகும்.

#1851. ஞானி ஊண் பார்க்கில் விசேடமே

புண்ணிய மண்டலம் பூசை நூறாகுமாம்
பண்ணிய மேனியும் பத்து நூறாகுமாம்
எண்ணிலிக் கைய மிடிற் கோடி யாகுமால்
பண்ணிடின் ஞானியூண் பார்க்கில் விசேடமே.

சிவத்தலங்களில் சிவனுக்குப் பூசை செய்வது நூறு மடங்கு சிறந்தது ஆகும். தவம் செய்பவர் சன்னதியில் செய்யும் சிவபூசை ஆயிரம் மடங்கு சிறந்தது ஆகும். ஆசைகளைத் துறந்து விட்ட சிவயோகிக்கு உணவு அளித்தல் கோடி மடங்கு சிறந்தது ஆகும். அந்த சிவ ஞானியர் உணவு உண்பதைக் காணுதல் அனைத்திலும் சாலச் சிறந்தது ஆகும்.

#1852. இந்துவும் பானுவும் இயங்காத் தலம்

இந்துவும் பானுவும் இயங்கும் தலத்திடை
வந்தித்தது எல்லாம் அசுரர்க்கு வாரியாம்;
இந்துவும் பானுவும் இயங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.

திங்கள் கலை (இடகலை என்னும் இடது நாசித் துவாரம்), கதிரவன் கலை (பிங்கலை என்னும் வலது நாசித் துவாரம்) இவை இரண்டின் வழியாகவும் மூச்சு இயங்குகின்ற போது இறை வழிபாடு செய்வது அசுரர்களுக்கு உரிய செயல். இந்த இரண்டு கலைகளும் இயங்காமல் நடு நாடியாகிய சுழுமுனையில் பிராணன் பொருந்தி இருக்கும் பொழுது வழிபாடு செய்வது சிவனுக்கு உகந்த சிறந்த பூசை ஆகும்.

#1853. நந்தியின் பூசை நற்பூசை ஆமே

இந்துவும் பானுவும் என்று எழுகின்றது ஓர்
விந்துவும் நாதமும் ஆகி, மீதானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை ஆமே.

சூரிய மண்டலம், சந்திர மண்டலத்தைக் கடந்த மேலான இடத்தில் அருவமான விந்துவும், நாதமும் விளங்குகின்றன. சீவன் சிந்தனை, சாக்கிரதத்தைக் கடந்து சாக்கிராதீதத்தை அடைந்து அங்கு நந்தியை பூசித்தால் அதுவே நந்திக்கு மிகவும் நல்ல பூசை ஆகும்.

#1854. தனியுறு பூசை சதாசிவனுக்கு.

மன பவனங்களை மூலத்தால் மாற்றி
அனித உடல் பூதம் ஆக்கி அகற்றிப்
புனிதன் அருள் தனில் புக்கிருந்து இன்பத்
தனியுறு பூசை சதாசிவற்கு ஆமே.

மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதை மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். மூச்சு, மனம் ஆகியவற்றை தம் நிலையில் இருந்து மாற்றி அமைக்க வேண்டும். அநித்தியாமகிய இந்த பூத உடலை அதற்குக் காரணமான பஞ்ச பூதங்களில் ஒடுக்க வேண்டும். அந்த பஞ்ச பூதங்களைப் பின்னர் பஞ்ச தன் மாத்திரைகளில் ஒடுக்க வேண்டும். சிவன் அருட்கடலில் மூழ்கி மிகுந்த இன்பத்துடன் செய்யும் தனிப் பெரும் பூசையே தலைவன் சதாசிவனுக்கு ஏற்ற பூசை ஆகும்.

#1855. தாழ் சடையோன் தான் கொள்வான்

பகலும் மிரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை ஈசற் கிணை மலராக
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமும் தான்கொள்வன் தாழ்சடை யோனே.

கதிரவன் கலை, திங்கள் கலை இவை இயங்கும் போது செய்யும் சிவபூசை இறைவனுக்கு இரு மலர்கள் கொண்டு பூசிப்பது போல மிகவும் இயல்பானது. கதிரவன் கலையும், திங்கள் கலையும் இயங்காமல், பிராணன் சுழுமுனையில் இருக்கும் போது செய்யும் சிவபூசையோ எனில் விரிசடை பெருமானுக்கு மிக மிக விருப்பமானது.

#1856. இராப் பகல் அற்ற இடம்

இராப் பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.

இரவு பகல் என்னும் பேதங்கள் இல்லாத சாக்கிராதீத நிலையில் நான் இருந்தேன். வேறு எந்த வித எண்ணங்களும் இல்லாமல் சிவானந்தத் தேனை நான் அருந்தினேன். இரவோ அன்றிப் பகலோ இல்லாத இறைவனின் திருவடி இன்பத்தில் நான் திளைத்தேன். இரவும் பகலும் போன்ற அசுத்த, சுத்த மாயைகள் இரண்டையும் நான் களைந்தேன்.

ஏழாம் தந்திரம் -
13. மகேசுவர பூசை

அடியவர்களுக்குச் செய்யும் பூசை இறைவனுக்குச் செய்யும் பூசை.

#1857. நடமாடக் கோயில் நம்பர்

படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில் பரமற்கு அது ஆமே

தீட்டிய ஓவியம் போன்ற அழகிய மாடங்களை உடைய கோயிலில் உறையும் இறைவனுக்கு ஏதேனும் படைத்தால், அது நடமாடும் ஆலயங்கள் ஆகிய அவன் அடியார்களுக்குச் சென்று சேராது. ஆனால் நடமாடும் ஆலயங்களாகிய சிவனடியார்களுக்கு ஏதாவது கொடுத்தால், அது தீட்டிய ஓவியம் போன்ற மாடங்களை உடைய கோவிலில் உறையும் ஈசனைச் சென்று அடையும்.

#1858. எண்டிசை நந்தி எடுத்து உரைத்தான்

தண்டறு சிந்தைத் தபோதனர் மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்று
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே.

தீமைகள் அற்ற தூய சிந்தை உடைய தவச் செல்வர்கள் மகிழ்வுடன் உண்பது, மூன்று உலகங்களும் உண்பதற்குச் சமம். அவர்கள் உவந்து ஏற்றுக் கொள்வதோ எனில், மூன்று உலகங்களும் ஏற்றுக் கொண்டதற்குச் சமம். இதை எண்திசைக்கும் தலைவன் ஆகிய என் நந்தி எடுத்து உரைத்தான்.

#1859. ஆத்தனுக்கு ஈந்த அரும் பொருள்

மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்து உறை
ஆத்தனுக்கு ஈந்த அரும் பொருளானது
மூர்த்திகள் மூவருக்கும் மூவேழ் குரவர்க்கும்
தீர்த்தம் அதுஆம் அது தேர்ந்து கொள்வீரே.

ஒரு மாத்திரையாகிய 'அ'கரத்தில் உறைபவன் சிவன். அவன் அடியவருக்குத் தரும் அரிய பொருள் என்பது மும் மூர்த்திகளுக்கும் மற்றும் மூவேழு தலைமுறையினருக்கும் அளித்ததற்கு ஒப்பாகும்.

#1860. பகலூண் பலத்துக்கு நிகரில்லை

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரம்செய்து முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை எனபது நிச்சயம் தானே.

இல்லங்கள் ஆயிரம் கட்டி அவற்றை அந்தணர்களுக்கு ஈவதனால் என்ன பயன்? சிறந்த விமானம் அமைந்த ஆயிரம் கோவில்களைக் கட்டுவதானால் என்ன பயன்? உண்மையில் இவை இரண்டும் ஒரு சிவஞானிக்கு ஒருவர் ஒரு நாள் அளித்த பகலுணவு தரும் பயனுக்கு சிறிதும் ஒப்பாகா.

#1861. நீறிடும் தொண்டர் நினைவின் பயனிலை

ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிப்பே ருண்பதில்
நீறிடும் தொண்டர் நினிவின் பயனிலை
பேறெனில் ஓர் பிடி பேறது வாகுமே.

வாழ்க்கையை ஆற்றுப்படுத்தும் வேள்விகளைப் புரிகின்ற, வேத வல்லுனர்களாகிய, முப்புரி நூலணிந்த ஒரு கோடி க்கு உஅந்தணர்களுக்கு உணவு அளிப்பதை விட, திருநீறு அணிந்த சிவனடியார் ஒருவருக்கு உணவு அளிப்பது பெரும் பேறு ஆகும்.

#1862. ஆறு அணி செஞ்சடை அண்ணல் இவர்

"ஏறுஉடை யாய்இறை வாளம் பிரான்" என்று
நீறிடுவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறு அணி செஞ்சடைஅண்ணல் இவர் என்று
வேறுஅணி வார்க்கு வினை இல்லை தானே.

"விடை ஏறும் பெருமானே! எம் இறைவா! எம் பிரானே!" என்று கூறிக் கொண்டு நீறு பூசிக் கொள்பவர்கள் பூலோகத் தேவர்கள் ஆவர். "கங்கையைச் சென்னி மேல் அணிந்த சிவன் இவனே" என்று எண்ணப் படுபவருக்கு வினைகள் எதுவும் இல்லை.

#1863. நந்தி என்னும் பிதற்று ஒழியேன்

சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி என்னும் பிறங்கு சடையனை
நான் நொந்து நொந்து, வரும் அளவும் சொல்லப்
பேர் நந்தி என்னும் பிதற்று ஒழியேனே.

சிறந்த ஒளி மண்டலத்தில், அழகிய திருமுகத்துடன் விளங்கும், நந்தி என்னும் பெயர் படைத்த, ஒளிரும் செஞ்சடையனைச் சிவனை, நான் மனம் நெகிழ்ந்து இடைவிடாது எண்ணிக் கொண்டே இருப்பேன். அவன் என் முன் தோன்றும் வரை அவன் பெயரை இடையறாது உச்சரித்த வண்ணமே இருப்பேன்.

#1864. தொழுது எழ இன்பம் ஆம்

அழி தகவு இல்லா அரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கு இருள் நீங்கும்
பழுது படா வண்ணம் பண்பனை நாடித்
தொழுது எழ வையகத்து, ஓர் இன்பம் ஆமே.

அழியும் தன்மை அற்ற அரன் அடிகளைத் தொழுதால் உலகத்தோரின் அறியாமை என்னும் இருள் அகலும். அந்த நிலையில் பழுது வராமல் பார்த்துக் கொள்ள, பண்பாளனாகிய சிவனை நாடி அவனைத் தொழுது எழுந்தால் சீவனின் துன்பம் நீங்கும்; சீவனுக்கு இன்பம் விளையும்.

#1865. ஆய்ந்து ஒழிந்தார்

பகவற்கு ஏது ஆகிலும் பண்பு இலர் ஆகிப்
புகும் மாத்தராய் நின்று பூசனைசெய்யும்
முகமத்தோடு ஒத்து நின்று ஊழி தோறு ஊழி
அகமத்தர் ஆகி நின்று ஆய்ந்தொழிந் தாரே.

ஒருவரிடம் இறைவனை அறிந்து கொள்வதற்கு ஏற்ற உயரிய பண்பு சிறிதும் இல்லாதிருக்கலாம். அவர் மதத்துடனும் கர்வத்துடன் பூசைகள் செய்து வரலாம். ஆனால் இறைவழிப்பாட்டின் உபசாரங்களுடன் அவர் வெகு காலம் பொருந்தி நின்றால், உள்ளத்தில் களிப்பு எய்துவார். காலப் போக்கில் அறிவில் நிலை பெற்றுத் தெளிந்து ஆராய்ந்து தன் பாசத் தளைகளைத் துணித்து விடுவார்.

#1866. சேடம் பருகிடில் முத்தியாம்

வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று மூலன் மொழிந்தானே.

திருந்திய ஞானம் படைத்த மெய்யடியவர் உண்ணும் ஊண் தெய்வத்துக்கு ஏற்ற உணவாகும். அது திருமால், அயன் அத்தன் என்னும் மும்மூர்த்திகள் உண்ணும் உணவுக்குச் சமம். சித்தம் தெளிந்த ஞானியர் உண்ட உணவின் மிச்சத்தை உண்பது முக்திக்கு வழி என்று மூலன் மொழிந்துள்ளான்.

#1867. போழ்வினை தீர்க்கும் பொன்னுலகம்

தாழ்விலார் பின்னும் முயல்வர் அருந்தவம்
ஆழ்வினை யாழ அவர்க்கே அறஞ்செய்யும்
ஆழ்வினை நீக்கி அருவினை தன்னொடும்
போழ்வினை தீர்க்குமப் பொன்னுல காமே.

தம் முயற்சியில் சிறிதும் தளராமல் மகேசுவரன் அருந்தவம் செய்து கொண்டே இருப்பார். சீவனைத் துன்பத்தில் ஆழ்த்தும் பிராரப்த வினைகள் நீங்கிட மகேசுரனுக்கே அறம் செய்ய வேண்டும். அது வரும் வினைகள், வந்த வினைகள், வரப்போகும் வினைகள் என்னும் மூன்றையுமே முற்றிலுமாக அழித்து விடும்.

#1868. பார் மழை பெய்யும்

திகைக்கு உரியான் ஒரு தேவனை நாடும்
வகைக்கு உரியான் ஒரு வாதி இருக்கின்
பகைக்கு உரியார் இல்லைப் பார்மழை பெய்யும்
அகக்குறை கேடு இல்லை அவ்வுல குக்கே.

திசைகளைத் தன் உரிமையாகக் கொண்டு உடையாக அணிந்துள்ள ஈசனை நாடுகின்ற, வகையில் அமைந்துள்ள அவன் அடியவர்கள் இருக்கும் நாட்டில், பகைவர்கள் என்று எவரும் இறார். காலம் தவறாமல் மழை பெய்யும் அகக் குறைகள் என்று அங்கு எதுவும் நிலவாது.

ஏழாம் தந்திரம் -
14. அடியார் பெருமை

#1869. அவ்வுலகத்தே அருள் பெறுவர்

அவ்வுல கத்தே பிறந்தவ் வுடலோடும்
அவ்வுலகத்தே அருந்தவம் நாடுவர்
அவ்வுலகத்தே அரனடி கூடுவர்
அவ்வுலகத்தே அருள் பெறுவாரே.

முன்பு செய்த நல்வினைப் பயனால் மண்ணுலகில் சிவநேசத்துடன் கூடிய பிறவி எடுப்பவர், அந்த உடலுடன் அந்த உலகில் நல்ல தவம் செய்வர். அந்த உலகத்தில் அரன் அருள் பெற்று அவ்வுலகத்தில் அரன் அடியினில் கூடுவர்.

#1870. நாம் உய்ந்து ஒழிந்தோம்

கொண்ட குறியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத்து அமரரும் ஆதியும்
எண்டிசை யோரும் வந்து என் கைத்தலத்தினுள்
உண்டு எனில், நாம் இனி உய்ந்தொழிந் தோமே.

சிவனை அடை வது நான் கொண்ட குறிக்கோள். குலவரையின் உச்சியாகிய சகஸ்ராரத்தில், என் சுழுமுனை நாடியின் முடிவில், இந்த அண்டங்களில் வாழும் அனைவரும், அமரர்களும், ஆதிப் பிரானும், எட்டுத் திசைகளில் வசிக்கின்ற உள்ள அனைவரும் வந்து அமையப் பெற்றால், அப்போதே நான் உய்ந்து ஒழிவேன்.

#1871. அவன் அன்றி இல்லையே!

அண்டங்கள் எழும் அகண்டமும் ஆவியும்
கொண்ட சராசர முற்றும் குணங்களும்
பண்டை மறையும் படைத்து அளிப்பு ஆதியும்
கண்ட சிவனும் என்கண் அன்றி இல்லையே.

ஏழு உலகங்களும், அகண்ட வானமும், உயிர்த் தொகைகளும், உலகில் உள்ள அசையும் அசையாப் பொருட்களும், அவற்றின் மாறுபடும் குணங்களும், பண்டைய மறைகளும், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழில்களும், அவற்றை நடத்துகின்ற சிவனும், என்னுள் அன்றிப் புறத்தில் வேறு எங்கும் இல்லை.

#1872. அண்ணல் பெருமை ஆய்ந்தது மூப்பே

பெண் அல்ல ஆண் அல்ல பேடு அல்ல மூடத்துள்
உள் நின்ற சோதி ஒருவர்க்கு அறி ஒணாக்
கண் இன்றிக் காணும் செவி இன்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆஐந்தது மூப்பே.

இறைவன் ஆண் அல்லன், பெண் அல்லள், பேடு அல்ல. தன் அறியாமையினுள் மறைந்து உறைகின்ற ஒருவராலும் அவனை அறிந்து முடியாது. கண்கள் இல்லாமலே அவன் காண வல்லவன்; செவிகள் இல்லாமலேயே அவன் கேட்க வல்லவன். இத்தகைய அண்ணலின் பெருமையை ஆராய்ந்து அறிந்து கொள்வதே முதிர்ந்த ஞானம் ஆகும்.

#1873. வானுலகு ஆள்வர்

இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர், வானுலகு ஆள்வர்;
புயங்களும் எண்திசை போதுபா தாளம்
மயங்காப் பகிரண்டம் மாமுடி தானே.

இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகில் சிவனடியார்கள் அறியாமையால் மயங்கி நில்லார். அவர்கள் அறிவு வழியே என்றும் தொடர்ந்து செல்வர். அவர்கள் வானுலகையும் ஆளும் வல்லமை கொண்டவர். அவர்களின் புயங்களே எட்டுத் திசைகள் ஆகும், அவர்களின் தாமரைத் திருவடிகள் பாதளம் வரை நீளும். அவர்கள் திருமுடியோ மயக்கம் தராத அண்ட வெளியில் அமையும்.

#1874. நுண்ணுடலையும் அழிக்கலாம்

அகம் படிகின்ற நம் ஐயனை ஓரும்
அகம் படி கண்டவர் அல்லலில் சேரார்
அகம் படி உள் புக்கு அறிகின்ற நெஞ்சம்
அகம் படி கண்டாம் அழிக்கலும் எட்டே.

தன் மனத்தில் படிந்திருக்கும் இறைவனிடம், தன் மனத்தைப் படிய வைத்து, தன் மனம் அடங்கப் பெற்றுள்ள அடியவர், துன்பத்தில் துவள மாட்டார். தன் அகங்காரத்தை வென்றுத் தன்னுள்ளே ஈசனைக் காண அறிந்து கொண்டவர், தன் புரியட்டகம் ஆன நுண் உடலை அழிக்க வல்லவர்.

விளக்கம்:

மனம் விரும்பும் போது அடியவரால் இறைவனை அடைய முடியும். அப்போது அவருடைய அகங்காரம் அழிந்து விடும். அதனால் பிரபஞ்சம் மறைந்து விடும். அப்போது புரியட்டகம் என்னும் ஓசை, ஊறு, ரூபம், கந்தம், ரசம், மனம், புத்தி, அகங்காரம் என்பவற்றால் அமைந்துள்ள நுண்ணுடல் இல்லாமல் போய்விடும்.

#1875. என் ஆவி உழவு கொண்டான்

கழிவும் முதலும், எம் காதல் துணையும்
அழிவும் அது ஆய் நின்ற ஆதி பிரானைப்
பழியும் புகழும் படு பொருள் முற்றும்
ஒழியும் என் ஆவி உழவு கொண் டானே.

எனக்கு வரவும் சிவனே. எனக்குச் செலவும் சிவனே. என் காதல் துணைவனும் அவனே. என் அழிவும் அவனே. நான் அவனை எண்ணிய வேளையில் எனது பழியை நீக்கினேன்; என் புகழை நீக்கினேன். அவற்றின் பயன்களையும் நீக்கினேன். இவை அனைத்தும் நீங்கிய என் உள்ளத்தை அவன் நன்கு உழுது பண்படுத்திப் பக்குவம் செய்தான்.

#1876. ஒன்றாய் உலகம் படைத்தான்

என் தாயோடு என் அப்பன் ஏழ் ஏழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்
ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில் வண்ணன் நேரேழுத்தாமே

எந்தையும் சிவனே. என் தந்தையும் அவனே. என் ஏழு ஏழு பிறவிகளிலும் நான் அவனுக்கே அடிமை என்ற சாசனத்தைத் தன் ஒருவனாக உலகைப் படைத்த நான்முகன் என்றோ எழுதக் கார் வண்ணத் திருமால் அதில் சாட்சிக் கையொப்பம் இட்டான்.

#1877. கணிந்தாரைக் கைவிடலாமோ?

துணிந்தார் அகம்படி துன்னி உறையும்
பணிந்தார் அகம்படி பாற்பட்டு ஒழுகும்
அணிந்தார் அகம்படி ஆதி பிரானைக்
கணிந்தார் ஒருவர்க்குக் கைவிட லாமே.

“இவனே என் இறைவன்!” என்று உறுதியாக அவனைப் பணிபவரின் உள்ளத்தில் அவன் வந்து உறுதியாகப் பொருந்துவான். தன்னை உறுதியாக வணங்குபவரின் உள்ளக் கிடக்கைகளை அவன் உறுதியாக நிறைவேற்றுவான்.

தன்னை ஓர் அணிகலன் போல எப்போதும் உள்ளத்தில் இருத்திக் கொண்டும், தன்னையே இடையறாமல் நினைத்துக் கொண்டும் உள்ள ஓர் அன்பனை அவனால் கைவிட முடியுமா?

#1878. பொன்னுலகு ஆளும் பலம்

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலை மிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
புலமிசை நீக்கிய பொன்னுலகு ஆளும்
பலம் இசை செய்யும் படர் சடையோனே.

தாழ் சடை நந்தியின் தாள்களை தம் தலை மேல் வைத்துத் தொழுகின்றனர் அமரர்கள். அவன் என்னைப் பார்மிசைப் படைத்துப் பணித்தான் தன் மெய்ப் பணியைச் செய்திட. அவன் என்னை மேலும் மேலும் உயர்த்துவான். ஊன் உடல் உணர்வுகளை நீக்கி எனக்குப் பொன்னுலகு ஆளும் பலனையும் தருவான் அந்தப் படர் சடை உடைய சிவபெருமான்.

#1879. புனல் மூழ்க மாதவமே

அறியாப் பருவத்து அரன் அடியாரைக்
குறியால் அறிந்து, இன்பம் கொண்டது அடிமை
குறியார் சடை முடி கட்டி நடப்பார்
மறியார் புனல் மூழ்க மாதவ மாமே.

அறியாத இளம் பருவத்திலேயே நான் சிவன் அடியாரை, அவர்கள் அணிந்துள்ள கோலத்தால் அறிந்து கொண்டேன். அவர்களுக்கு நான் அடிமை ஆனேன். அதில் ஆனந்தம் அடைந்தேன். அந்தச் சிவனடியார் உலகில் வாழ்ந்திருந்தாலும், உலகைக் குறித்து சிந்தனை செய்யார். சிவக்கோலம் பூண்டு உலகில் அவர்கள் நடந்த போதிலும், அவர்கள் சிந்தனை சிவனைக் குறித்த நினைவுக் கடலில் மூழ்கி இருக்கும். இதுவே அவர்கள் செய்யும் மாதவம் ஆகும்.

#1880. அணுகி அன்பு செய்வர்

அவன்பால் அணுகியே அன்பு செய்வார்கள்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்;
அவன்பால் அணுகியே நாடும் அடியார்
இவன்பால் பெருமை இலயம் அது ஆமே.

தன்னிடம் அன்பு செலுத்துபவர்களைச் சிவனிடம் மேலும் நெருங்கி அணுகும்படிச் செய்யும் வல்லமை படைத்தவர்கள் சிவன் அடியார்கள். ஒருவன்

சிவன் அடியாரை அணுகி அவரிடம் அன்பு செலுத்தினால், அந்தச் சிவனடியாரின் ஏற்றமும் பெருமையும் இவனுக்கும் வந்து சேரும்.

#1881. பன்னிரு காதம் பதம் செய்யும் பார்

முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்து
எண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ் செய்யும் பாரே.

எட்டு கணங்களைச் சேர்ந்த விண்ணவர்களும் சிவன் மீது கொண்ட எல்லை இல்லாத அன்பின் காரணமாக மண்ணுலகம் வந்து குழுமுவர். அப்போது எட்டுத் திசைகளும் காண்பதற்கு வானுலகம் போலத் தோற்றம் தரும். பன்னிரண்டு காத எல்லைக்குள் வாழும் அனைவருக்கும் நலம் உண்டாகும்.

#1882. பவயோகம் போம்! பரலோகம் ஆம்!

சிவயோகி ஞானி செறிந்த அத் தேசம்
அவயோக மின்றி அறிவோருண் டாகும்
நவயோகம் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே.

சிவயோகி செறிந்திருக்கும் ஒரு நாட்டில் தீயவர்கள் தொல்லை இராது. அறிவுடையவர் தோன்றிப் பெருகுவர். புதுப் புது யோகப் பயன்கள் விளையும். மக்களிடம் நற் பண்புகள் மேலோங்கும். உலகப் பிறவிக்குக் காரணமான மலங்கள் அழிந்து படும். பவ ரோகம் நீங்கிப் பரலோக யோகம் கிடைக்கும்.

#1883. மேலுணர்வார் சிவன் மெய்யடியார்கள்

மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலம் கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே.

மேலான அறிவு செறிந்த சிவன் பல உலகங்களைப் படைத்துள்ளான். மேலான அறிவு செறிந்த சிவன் தான் படைத்த உலகங்களைக் கடந்துள்ளான். மேலான அறிவு படைத்த அமரர் கணங்கள் அவனை நன்கு அறியும். மேலான மெய்யடியார்களும் அவனை நன்கு அறிவர்.

ஏழாம் தந்திரம் -
15. போசன விதி

போசன விதி = உணவு விதி
உடலைப் போஷிக்க உணவை ஏற்பது.

#1884. விருப்பு அறியார்

எட்டுத் திசையும் இறைவன் அடியவர்க்கு
அட்ட அடிசில் அமுது என்று எதிர்கொள்வர்
ஒட்டி ஒருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பு அறியாரே.

இறைவன் அடியவர்கள் எட்டுத் திசைகளில் எங்கு யார் சமைத்த உணவினை அளித்தாலும் அதை அமிர்தம் என்று கருதி ஏற்றுக் கொள்வர். எடுத்த உடல் ஒரு சிவாலயம் என்று அதைப் போற்றிப் பிழைப்பிக்க உணவு உண்பர். நிலம் தரிசாக கிடந்து வீணாவதை உடமைக்காரன் விரும்ப மாட்டான் அது போன்றே தம் உடல் உணவின்றி வீணாவதை இவர்களும் விரும்ப மாட்டார்கள்.

#1885. இச்சை விட்டு எகாந்தம் ஏறி இருப்பார்

அச்சிவன் உள் நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக, உள் அமர் கோவிற்குப்
பிச்சை பிடித்து உண்டு, பேதம் அறநினைந்து
இச்சை விட்டு, ஏகாந்தத்து ஏறி இருப்பரே.

சிவன் தன் உடலினுள் உயிரில் உயிராக உறைவதை உணர்ந்தவர் உண்மை அடியவர். 'ஒரு நாள் ஒரு பொழுது' என்னும்படி உச்சிப் பொழுதில், தன் இச்சைகளை விட்டு விட்டு, பிச்சை ஏற்று உண்பார். ஏகாந்தத்தில் இறைவன் நினைவில் மூழ்கி சகசிரதளத்தில் ஏறி இருப்பார்.

ஏழாம் தந்திரம் -
16. பிட்சா விதி

பிட்சா விதி = பிட்சை ஏற்கும் முறை.

#1886. இச்சைக்குப் பிச்சை இரக்கலாமோ?

**விச்சுக் கலமுண்டு வேலிச்செய் ஒன்றுண்டு
உச்சிக்கு முன்னே உழவு சமைந்தது
அச்சங் கெட்டச்செய் யறுத்துண்ண மாட்டாதார்
இச்சைக்குப் பிச்சை இரக்கின்ற வாறே.**

விந்து என்னும் விதையைச் சேமித்து வைக்க உடல் என்ற ஒரு கலம் உண்டு. அந்த விதையை விதைப்பதற்கு தலை உச்சியில் வேலியிட்டுப் பாதுகாக்கப் பட்ட ஒரு நிலம் உண்டு. அச்சம் இன்றி அங்கு அதைப் பயிர் செய்தால், மேல் நோக்கிய சகசிர தளத்தில் சமாதி என்னும் பயிரை சாதகன் விளைவிக்கலாம். அதன் பயனாக பசியும் தாகமும் இல்லாமல் இருக்கலாம். இந்தப் பயிரின் பயனை அடைய அறியாதவர் வெளியே சென்று உடலைப் பேணும் இச்சைக்கு பிச்சை இரக்கின்றார்களே!

#1887. பிச்சை ஏற்பது பரம் ஆகவே!

**பிச்சையது ஏற்றான் பிரமன் தலை தன்னில்,
பிச்சையது ஏற்றான் பிரியா அறம் செய்ய,
பிச்சையது ஏற்றான் பிரமன் சிரம் காட்டிப்
பிச்சையது ஏற்றான் பிரமன் பரம் ஆகவே.**

படைப்புக்கு உரிய இடமாகிய சுவாதிட்டானச் சக்கரத்தில், பிரமன் படைப்பான வீரியத்தை, ஈசன் பிச்சையாக ஏற்றான். காம வெளிப்பாட்டில் விந்து வீணாகி விடாமல் நன்மை செய்வதற்கே ஈசன் விந்துவை பலியாக ஏற்றான். நான்முகன் தலையைக் கொண்டே காம வாயுவை மேலே ஏற்றிச் செல்ல ஈசன் பலி கொண்டான். சீவன் சிவன் ஆவதற்கே ஈசன் இங்ஙனம் விந்துவை பலி கொண்டான்

#1888. இரந்துண்டால் கழல் எட்டலாம்

**பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையு மடியார்
இரந்துண்டு தன் கழல் எட்டச்செய் தானே.**

உலகு ஏழையும் படைத்து, அவற்றில் பரந்து உறைகின்ற ஈசனைப் 'பிச்சை எடுத்து உண்பவன்' என்று ஏளனம் செய்வார்கள் சிலர். அவன் பிச்சை எடுப்பதன் காரணம் என்ன என்று அறிவீரா? இடையறாது தன்னையே உன்னும் தன் அடியவரின் விந்துவை பலியாக ஏற்றுக் கொண்டு, அவர்களைத் தன் கழல்களை எட்டச் செய்வதற்கு மட்டுமே அவன் இரந்துண்கின்றான்.

ஏழாம் தந்திரம் -
17. முத்திரை பேதம்

கரணம், கருவி இவற்றின் அறிவை விட்டு மாற்றி முதல் நிலைக்குச் செல்லும் வழி.

#1889. புகலே புகல் ஆகும் என்பது ஆமே.

வரஇருந் தான்வழி நின்றிடும் ஈசன்;
தரஇருந் தான் தன்னை, நல்லவர்க்கு இன்பம்;
பொரஇருந் தான் புகலே புகல் ஆக
வரஇருந் தால், அறியான் என்பது ஆமே.

ஈசன் தன்னிடம் நெருங்கி வரும் அன்பர்களின் பாதையின் நின்று உதவுவான். தன் மெய்யடியாருக்குத் ஈசன் தன்னையே இன்ப வடிவில் தந்து உதவுவான். அடியார்கள் அடையும் அடைக்கலமாக அவன் நிற்பான். இங்ஙனம் அன்பர்களின் வரவை எதிர் நோக்கி நின்று அருள் புரியும் ஈசனை ஒருவன் "அவன் என்னை அறியாதவன்!" என்று கூறுவது சரியோ?

#1890. சிவனைத் தலைப்படுவர்

அங்கார் பசியு மவாவும் வெகுளியும்
தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடைப்
பொங்கார் புவனத்துப் புண்ணிய லோகத்தும்
தங்கார் சிவனைத் தலைப் படுவாரே.

சிவனடியார்கள் தீயைப் போன்றுச் சுடும் கடும் பசி, ஆசை, சினம் போன்ற குற்றங்கள் எதுவும் இல்லாதவர். அவர்கள் உடல் இன்பத்தை நாட மாட்டார்கள். அவர்கள் மண்ணுலகம் விண்ணுலகம் என்ற எவற்றிலும் வாழ விரும்ப மாட்டார்கள். அவர்கள் விரும்புவது ஒன்றே ஒன்று தான். அது சிவனைத் தலைப்படுவது என்ற ஒன்றே.

#1891. வையகம் எல்லாம் வரவிருந்தார்

மெய்யக ஞானம் மிகத்தெளிந் தார்களும்
கையக நீண்டார் கடைத்தலைக் கேசெல்வர்
ஐயம் புகாம லிருந்த தவசியார்
வையக மெல்லாம் வரவிருந்தாரே.

மெய்ஞானம் பெற்று தெளிவடைந்த அடியவர்களும், ஐயம் ஏற்பதற்குக் கொடுக்கும் வள்ளல் தன்மை மிக்க உடையரிடமே செல்வர். ஐயம் ஏற்கச் செல்லாத தவசியருக்கு வையகமே வந்து ஐயம் இடும்

#1892. நன்முக்தி கூடும்

நாலேழு மாறவே நண்ணிய முத்திரை
பாலான மோன மொழியுள் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீது உய்யக்
கோலாகலம் கெட்டுக் கூடும் நன் முத்தியே.

சீவனுக்குக் கிடைத்துள்ள பதினொரு கருவிகள் ஆகும் ஞானேந்திரியங்கள் ஐந்து + கர்மேந்திரியங்கள் ஐந்து + மனம் என்பவை. இவற்றைச் சீவ போதத்திலிருந்து சிவபோதத்திற்கு மாற்ற வேண்டி நண்ணும் முத்திரை சீவனைப் பிரணவத்தில் பதிவிக்கும். மேலான சிவனடிகளில் சேர்த்து உய்விக்கும். வீண் ஆரவாரங்களை அடக்கி நல்ல முத்தியைத் தரும்.

#1893. ஞானத்தைப் பெருக்கும்

துரியங்கள் மூன்றும்சொருகுஇடன் ஆகி,
அரிய உரைத்தாரம் அங்கே அடங்கி
மருவிய சாம்பவி கேசரி உண்மை
பெருகிய ஞானம் பிறழ் முத்திரையே.

சீவ துரியம், பர துரியம், சிவ துரியம் என்னும் மூன்று துரியங்களும் உண்ணாக்கருகில் பொருந்தி அடங்கும். அரிய உரைகளை நிகழ்த்தும் நாவினை அங்கே சொருகி அடக்க வேண்டும். சாம்பவி, கேசரி முத்திரைகளில் ஒருவன் இருந்தால் அப்போது மெய்ஞானம் பெருகும்.

சாம்பவி முத்திரை:
கண் பார்வையை நாசித் துவாரங்களின் பக்கமாக மார்பு வரைப் பார்த்தல்.
இந்த முத்திரையினால் வெளியுலகப் பார்வை முற்றிலுமாக நீங்கி விடும்.

கேசரி முத்திரை:
புருவ மத்தியில் தொடங்கி அகநோக்கில் தலை உச்சியை நோக்கிச் செல்லல்.
இந்த முத்திரையினால் மனம் அடங்குவதால் வெளியுலகை அறிய முடியாமல் போய்விடும்.

#1894. மெய் ஞான முத்திரை

சாம்பவி நந்திதன் அருள் பார்வையாம் ;
ஆம்பவம் இல்லா அருட்பாணி முத்திரை
ஓம்பயில் ஓங்கிய உண்மைய கேசரி
நாம்பயில் நாதன் மெய்ஞ்ஞான முத்திரையே.

சாம்பவி முத்திரை குருநாதனின் அருட்பார்வையை நம்மிடம் கொண்டு வரும். அந்த அருள் மிகுந்த முத்திரைச் சங்கிலித் தொடர் போல் தொடர்ந்து வரும் பிறவிப் பிணியை அகற்றி விடும். 'ஓம்' என்ற பிரணவத் தியானத்துடன் பொருந்தி இருக்கும் கேசரி முத்திரை, நாம் பயில்கின்ற குருநாதனின் மெய்ஞ்ஞான முத்திரை ஆகும்.

#1895. மோனத்து முத்திரை

தானத்தின் உள்ளே சதாசிவன் ஆயிடும்
ஞானத்தின் உள்ளே நற்சிவம் ஆதலால்,
ஏனைச் சிவமாம் சொரூபம் மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே.

ஓர் ஆதாரத்தில் விளங்குவது சதாசிவன். ஆதாரம் எதுவுமின்றி நிராதாரத்தில் ஞானவடிவாக இருப்பது பரசிவம். எனவே உருவம் கொண்ட நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற ஐவர்களைக் கடந்து விட்ட மோன நிலையே முத்தி நிலையாகும். இங்கு அருவமான சதாசிவம் மட்டும் இருப்பார். மற்ற ஐந்து தெய்வங்களும் இரார். இங்கு சீவனின் மனமும் அறிவும் செயல்படா.

#1896. வாக்கும் மனமும் மௌனமாம்

வாக்கும் மனமும் இரண்டும் மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்;
வாக்கும் மனமும் மவுனமாம் சுத்தரே
ஆக்கும் அச் சுத்தத்தை யார்அறி வார்களே.

மோன நிலை என்பது வாக்கு, மனம் என்னும் இரண்டும் தொழில் படாமல் மௌனமாக இருக்கும் உயரிய நிலை. மனம் அடங்காமல் இருக்கையில் வாக்கு மட்டும் தொழில் படாவிட்டால் அது ஓர்ஊமையின் நிலை. வாக்கு மனம் என்னும் இரண்டையும் கட்டுப் படுத்தி வெல்பவரே உண்மையில் தூய்மை உடையவர். அங்ஙனம் அமையும் அந்தத் தூய்மை நிலையை யார் அறிவார்?

#1897. யோக, ஞான முத்திரைகள்

யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியா
மேகத்த ஞானத்து முத்திரை யெண்ணுங்கால்
ஆகத் தகுவேத கேசரி சாம்பவி
யோகத்த கேசரி யோகமுத் திரையே.

யோகம் வந்து பொருந்தி விட்டது என்பதைக் காட்டும் முத்திரை அட்ட சித்திகள் வந்து அமையப் பெறுவது ஆகும். இறைவனுடன் ஒன்றாகப் பொருந்தும் ஞான முத்திரைகளை ஆராய்ந்தால் வேதங்கள் சிறப்பாகப் பேசுவது கேசரி, சாம்பவி என்ற இரண்டு முத்திரைகளையே. யோகத்தின் முத்திரை கேசரியே ஆகும்.

#1898. ஒன்றில் எய்தி நின்றான்

யோகி எண் சித்தி அருளொளி வாதனை;
யோகி தன் புத்தி புருடார்த்த நன்னெறி;
ஆகும் நன் சத்தியும் ஆதார சோதனை;
ஏகமும் கண்டு, ஒன்றில் எய்தி நின்றானே.

ஒரு யோகியானவன் எட்டு சித்திகளையும் பெற்றுவிட்டவன்; அவன் அருள் ஒலி வாதனையில் இருப்பவன்; அவன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களை அறிந்து கொண்டு அனுபவிப்பவன். அவன் தன் குண்டலினி சக்தியை உடலின் ஆறு ஆதாரங்களின் வழியே மேலே ஏற்றியவன். அவன் ஒன்றாகிய சிவனைக் கண்டு அவனுடன் ஒன்றி நிற்பவன் ஆவான்.

#1899. நவா அகமோடு உன்னல்

துவாதச மார்க்கம் என் சோடச மார்க்கமாம் என்
அவாவறும் ஈர்ஜ வகை; அங்கம் ஆறும்
தவா அறு வேதாந்த சித்தாந்தத் தன்மை
நவா அகமோடு உன்னல் நற்சுத்த சைவமே.

துவாதச மார்க்கம் எனப்படும் பன்னிரெண்டு கலைப் பிரசாத நெறியுள்ள யோக மார்க்கம், பிறகு சோடச மார்க்கம் என்னும் பதினாறு கலைப் பிரசாத நெறியாக ஆகும். இதன் பயனாக ஞான இந்திரிங்கள் ஐந்தும் கர்ம இந்திரியங்கள் ஐந்தும் தம் விருப்பத்தை விட்டு நிற்கும். காமம் முதலிய அறு பகைவர்களின் வழியில் செல்லா! இதுவே கேடற்ற வேதாந்த சித்தாந்தத்தின் இயல்பாகும். ஒருவன் தூய்மையான மனத்துடன் ஈசனைச் சிந்தித்திருப்பதே நல்ல சுத்த சைவம் ஆகும்.

#1900. முத்திரைகளின் பயன்கள்

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
கானிக்குமுத்திரை கண்ட சமயமே.

சீவன் முக்தருக்கு உரிய முத்திரை மனம் தொழிற்படாத மோன முத்திரை. குருவாக விளங்குபவருக்கு உரிய முத்திரை ஞான முத்திரை. சித்தாந்த நெறியின் அடையாளம் குண்டலினி யோகம் ஆகும். காற்றை அடக்கும் முத்திரை ஈசனைக் காண உதவும் முத்திரை.

#1901. நீனெறி நின்மலன் ஆக்கும்

தூநெறி கண்ட சுவடு நடுவெழும்
பூநெறி கண்டது பொன்னக மாய்நிற்கும்
மேனெறி கண்ட வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள்ள நின்மலன் ஆமே.

தூய்மையாகிய கழுத்தை இடமாகக் கொண்டு, உயிர்வளி நடுநாடியின் வழியே உச்சிக்குச் செல்லும். அது பொன்னகமாக விளங்கும் சகஸ்ராரத்தில் சென்று பொருந்தி நிற்கும். அதற்கும் மேலே மதி மண்டலம் வெண்ணிறமாக விளங்கும். இங்ஙனம் உயிர்வளியின் நெறியைக் கண்டு உணர்ந்து கொண்டு ஒருவன் தூயவன் ஆகலாம்.

ஏழாம் தந்திரம் -
18. பூரணக்குகைநெறி சமாதி

முடிவின் பின் அடையும் பயன்.

#1902. யோகி உடலை விட்டால்…

வளர்பிறையில் தேவர்தம் பாலின் மன்னி
உளர் ஒளி பானுவின் உள்ளே ஒடுங்கித்
தளர்வுஇல் பிதிர்பதம் தங்கிச் சசியுள்
உளது உறும், யோகி உடல் விட்டால் தானே.

வினைப் பயன்களைத் துய்ப்பதற்காகத் தாங்கிய தன் உடலை ஒரு சிவயோகி விட்டு விடும் போது என்ன என்ன நிகழும்? வளர்பிறைக் காலத்தில் அவன் தன்

உடலைத் துறந்தால், அவன் ஆன்மா முதலில் தேவர்களுடன் சென்று தங்கும். பின்னர் கதிரவன் மண்டலத்தில் சென்று தங்கும், அதன் பிறகு பித்ருக்கள் உள்ள பூமியைச் சென்று அடையும். அது இறுதியாகச் சந்திர மண்டலத்தைச் சென்று அடையும்.

#1903. அருளின் சார்வு ஆகுவர்.

தானிவை யொக்கும் சமாதிகை கூடாது
போன வியோகி புகலிடம் போந்துபின்
ஆனவை தீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வர் அருளின்சார் வாகியே.

சமாதி கை கூடினால் மேற் கூறியபடி அனைத்தும் நிகழும். சமாதி கை கூடாமலேயே சிவயோகி உடலை விட்டு விட்டால் என்ன ஆகும்? அவன் தன் கன்மங்களுக்கு தகுந்த பதவியை அடைவான். அங்கு இருந்து விட்டு வந்து மீண்டும் உலகில் பிறவி எடுப்பான். தன் கன்மகள் தீரும்வரை வினைப் பயன்களைத் துய்த்தும், யோகத்தில் ஈடுபட்டு அதைச் சிவன் அருளால் நிறைவு செய்வான்.

#1904. சித்தி வந்து ஓர் காயம் ஆகும்

தான் இவ்வகையே புவியோர் நெறிதங்கி
ஆன சிவயோகத்து ஆம்ஆறு அம் அவ்விந்து
தான தில் அந்தச் சிவயோகி யாகும் முன்
ஊனத்தோர் சித்தி வந்து ஓர் காயம் ஆகுமே.

இவ்வாறு உலகில் வந்து பிறந்த யோகி, மற்றவர்களைப் போலவே உண்டும், உடுத்தும், நடந்தும், கிடந்தும் உலகில் வாழ்வான். அவன் மீண்டும் சிவயோகத்தில் தீவிரமாக ஈடுபடுவான். அவன் பல சித்திகளைப் பெறுவான். சிவயோகப் பயனாக ஓர் ஒழி வடிவம் பெறுவதற்கு முன்பு அவன் எல்லோரும் மதிக்கத்தக்க ஓர் உடலை அடைவான்.

#1905. புவலோகம் போற்றும் புண்ணியர்

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்
தவலோகம் சேர்ந்துபின் றான்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்
புவலோகம் போற்றுநற் புண்ணியத்தோரே.

சிவயோகம் நிறைவு பெறாமலேயே தன் உடலைத் துறந்து விட்ட ஒரு ஞானியின் ஆன்மா முதலில் தவலோகத்தைச் சென்று அடையும். பின்பு மீண்டும்

உலகில் வந்து பிறவி எடுக்கும். சிவயோகத்தில் மீண்டும் முயன்று இவர் சிவஞானம் பெறுவார். இவர்களைப் புவலோக வாசிகளும் புகழ்ந்து போற்றுவர்.

#1906. பூலோகம் மீளார்

ஊனம்இல் ஞானிநல் யோகி உடல்விட்டால்
தான்அற மோனச் சமாதியுள் தங்கியே
தான்அவ னாகும் பரகாயம் சாராதே
ஊனமில் முத்தராய், மீளார் உணர்வுற்றே.

குறையில்லாத சிவஞானியாகவும், நல்ல யோகியாகவும் உள்ள ஒருவர் தன் உடலை விட்டுப் பிரிந்தால் என்ன செய்வார்? தான் என்ற நினைவு இல்லாதவராக, மோன நிலையில் இருந்து, சிவம் ஆகும் தன்மையை அடைந்து விடுவார். அவர் வேறு ஒரு உடலைச் சேரார். அவர் மீண்டும் உலகில் பிறவி எடுக்க மாட்டார். அவர் ஒரு நிர்மலமான முக்தராக ஆகி விடுவார்.

#1907. மும்மலங்கள் நீங்கியவர்

செத்தார் பெரும்பய னாவது ஏதெனில்
செத்து நீர் சேர்வது சித்தினைக் கூடிடில்
செத்த ரிருந்தார் செகத்தில் திரிமலம்
செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே.

இறந்தவர் பெறுகின்ற பெரும் பயன் என்ன என்று தெரியுமா? அது அவர் அதனால் அடையும் சித்தியே ஆகும். சித்தி கைக்கூடிச் சிவனுடன் சேர்ந்துவிட்டால் அவர் இறந்தவர் ஆயினும் இருந்தவர் ஆவார். அவர் மும்மலங்களையும் அழித்துவிட்டவர் ஆவார்.

#1908. பரன் அருட்குலம் பாலிப்பான்

உன்னக் கரு இட்டு, உரவோன் அரன் அருள்
பன்னப், பரனே அருட்குலம் பாலிப்பன்
என்னப் புதல்வர்க்கும் வேண்டி இடு ஞானி
தன் இச்சைக்கு ஈசன் உருச்செய்யும் தானே.

இடையறாது தன்னை உன்னும் ஒருவனுக்கு, வல்லமை படைத்த அரன் மனம் கனிந்து அருள் செய்வான். சிவனே அவனைத் தன் அடியவர் குழுவில் சேர்த்துக் கொள்வான். அவனுக்கு வேண்டியவற்றை எல்லாம் அளித்து அவனையும் தன் உருவைப் பெறச் செய்வான்.

#1909. எங்குமாய் நிற்கும் ஈசன்

எங்கும் சிவமாய், அருளாம், இதயத்துத்
தங்கும் சிவஞானிக்கு எங்கும் ஆம் தற்பரம்
அங்கங்கு என நின்று, சகம் உண்ட வான்தோய்தல்
இங்கே இறந்து எங்குமாய் நிற்கும் ஈசனே.

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் சிவத்தின் அருளின் நடுவில் நிலைபெற்றுள்ள சிவ ஞானிக்கு, எங்கு எங்கு நோக்கினும் சிவமே காட்சி தரும். பஞ்ச பூதங்களில் வானம் நுண்மையாகக் கலந்துள்ளதைப் போலவே, அந்த சிவஞானியும் தன் உடல் உணர்வை விட்டு விட்டு, உலகப் பொருட்கள் அனைத்திலும் கலந்து நிற்பான்.

ஏழாம் தந்திரம் -
19. சமாதிக் கிரியை

ஒரு ஞானி தன் உடலைத் துறந்துவிட்ட பின்பு செய்ய வேண்டிய சடங்குகள்.

#1910. ஞானியின் உடல் கெடின் கேடு வரும்!

அந்தமில் ஞானிதன் ஆகம் தீயினில்
வெந்திடின் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரின் நுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே.

முடிவு இல்லாத ஒரு சிவஞானியின் பூதவுடல் எரியூட்டப் படுமானால், அந்த நாட்டில் உள்ள அனைவரும் வெப்புநோயால் பிடிக்கப் பட்டு நொந்து போவர். சிவஞானியின் உடல் நல்லடக்கம் செய்யப்படாமல் நாயும், நரியும் அவர் பூத விடலைத் தின்றுவிட்டால், நுண்ணிய பகை மூளும். அந்த நாட்டு மக்கள் அனைவரும் அழிந்து படுவர். நாய்கள் நரிகளுக்கு இரையாகி விடுவர்.

#1911. எரி இடக் கூடாது!

எண்ணிலா ஞானி உடலெரி தாவிடின்
அண்ணல் தன் கோவில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணில் மழைவீழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பா ரரசே.

எண்ணுவதற்கு அரிய ஒரு சிவஞானியின் உடலுக்கு எரியிடுவது என்பது, அண்ணல் சிவன் உறையும் திருக் கோவிலுக்கு நெருப்பு வைப்பதற்குச் சமமாகும். அந்த நாட்டில் வானம் பொய்த்து விடும். வரட்சியும் பஞ்சமமும் உண்டாகும். எண்ணுவதற்கு அரிய பெருமை உடைய மன்னன் தன் அரச பதவியை இழந்து நிற்பான்.

#1912. புண்ணியர் உடலைப் புதைக்க வேண்டும்

புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணி யனல் கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணில் அழியி லலங்கார பங்கமா
மண்ணுலகெல்லாம் மயங்கும் அனல் மண்டியே.

சிவஞானியின் உடலை கண்ணியமாகப் புதைப்பது ஒரு புண்ணியமான செயல் ஆகும். அவர் உடலுக்கு எரியிட்டால் அந்த நாடு அழிந்து விடும். அவர் உடல் மண்ணில் கிடந்தது கெட்டு அழியும் வண்ணம் விட்டு விட்டால் உலகின் அழகு கெடும். காணும் இடம் எங்கும் தீப்பற்றி எரியும்.

#1913. குகையில் அமைக்க வேண்டும்

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்தவுடல் தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப அருள்பெறு வாரே.

அழிவில்லாத சிவஞானி ஒருவர், சிவன் அருளைப் பெற்ற பிறகு தன்உடலைத் துறந்திருந்தால், அவர் உடலை ஓர் அழகிய குகையை அமைத்து அதில் இருத்த வேண்டும். அப்போது அந்த நாட்டு மன்னனும் அவன் குடி மக்களும் அளவற்ற இறை அருளைப் பெற்று இன்பம் அடைவர்.

#1914. பதுமாசனத்தில் இருத்த வேண்டும்

நவமிகு சாணாலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணாகக் கோட்டித்து
அவ மிகு குகைமுக் கோணமுச் சாணாக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே.

ஒன்பது சாண் ஆழத்துக்கு ஒரு குழியைத் தோண்ட வேண்டும். வெட்டி எடுத்த மண்ணை அந்தக் குழியைச் சுற்றிலும் ஐந்து சாணுக்கு அப்பால் வளைத்துக் கொட்ட வேண்டும். முக்கோண வடிவமாக அந்த குகையைச் செய்ய வேண்டும்.

அதன் பக்கங்கள் மூன்று சாண் அளவு இருக்க வேண்டும். அதில் அந்த ஞானியின் பூதவுடலைப் பத்மாசனத்தில் இருத்த வேண்டும்.

#1915. குகை அமைக்க ஏற்ற இடங்கள்

தன்மனை சாலை குளங்கரை ஆற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூ மி
உன்னரும் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக்கு எய்து மிடங்களே.

சிவஞானியின் உடலை நல்லடக்கம் செய்வதற்கு அமைக்கும் குகைக்கு ஏற்ற இடங்கள் இவை: குகையை அமைப்பவன் மனை, சாலையின் பக்கம், குளக்கரை, ஆற்றின் படுகை, நந்தவனம், நகரத்தில் நல்ல பூமி, சிறந்த வனம் மற்றும் உயர்ந்த மலைச் சாரல்.

#1916. இன்னொரு வகைச் சமாதி

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமு மூன்றுக்கு மூண்றணி
நிற்பவர் தாம்செய்யு நேர்மைய தாமே.

குழியின் நான்கு பக்கங்கள் ஒவ்வொன்றும் ஐந்தடி இருக்க வேண்டும். அதன் ஆழம் நேராக ஒன்பது அடி இருக்க வேண்டும். குகையின் குறுக்களவு மூன்றுக்கு மூன்றாக இருக்க வேண்டும்.

#1917. இடவேண்டிய பொருட்கள்

பஞ்ச லோகங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
முஞ்சிப் படுத்து வெண்ணீ றிட்டடதன் மேலே
பொன் செய் நற்சுண்ணம் பொதியலுமாமே.

பஞ்ச உலோகங்களையும், ஒன்பது உயர்ந்த மணிவகைகளையும் குகையினுள் மிகுதியாகப் பரப்ப வேண்டும். அதன் மேல் ஆசனத்தை அமைக்க வேண்டும். தர்ப்பைப் புல்லைப் பரப்ப வேண்டும். வெண்ணீறு இட வேண்டும். பொற் சுண்ணப் பொடியைப் போட வேண்டும்.

பஞ்ச லோகங்கள்: பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.
ஒன்பது மணிகள்: நவ ரத்தினங்கள்.

வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம், முத்து, பவழம், கோமேதகம், புஷ்பராகம், குருவிந்தம்.

பொற்சுண்ணம்: மஞ்சள் பொடி போன்றவற்றின் ஒரு கலவை.

#1918. தூபம் காட்ட வேண்டும்

நள்குகை நால்வட்டம் படுத்தன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமம் கலாபம்கத் தூரியும்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே.

குகையின் நடுவில் ஒரு சதுர வடிவில் தேன் சிந்தும் மலர்கள், சந்தனம் , கஸ்தூரி, களபச் சாந்து, புனுகு, பன்னீர் இவற்றைக் கலந்து தெளியுங்கள். அதனுள் ஓர் ஒளி வீசும் தீபத்தைக் காட்டுகள்.

#1919. வெண்ணீறும் மலரும் அணிவியுங்கள்

ஓதிடும் வெண்ணீற்றால் உத்தூளம் குப்பாய
மீதினி லிட்டா சனத்தின் மேல் வைத்துப்
போதறு சுண்ணமு நீறும் பொலிவித்து
மீதில் இருத்தி விரித்திடு வீரே.

ஒரு சட்டை போலத் திருநீற்றை ஞானியின் உடல் மேல் பூச வேண்டும். அவர் உடலை இருக்கையின் மேலே இருத்த வேண்டும். மலர்கள், அறுகம் புல், நறுமணப்பொடி, திருநீறு ஆகியவற்றை உடல் மேல் அணிவிக்க வேண்டும். குகையில் வைத்து நலப் புறங்களிலும் மண்ணை விரித்துச் சமாக்க வேண்டும்.

#1920. குருவைப் போல் அலங்கரியுங்கள்.

விரித்தபின் நாற்சாரும் மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னாகமிள நீரும்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல் வட்டம் சாத்திடு வீரே.

இங்ஙனம் நான்கு புறங்களிலும் வெண்ணீறு போன்றவற்றைப் பரப்பிய பின்பு, குருவைப் போன்ற ஒரு உருவத்தை அங்கு அமைத்திடுங்கள். அதற்கு முகம், கண்கள் இவை இருக்க வேண்டும். அந்த உருவத்துக்கு மேலாடையைப் போர்த்த வேண்டும். பின்பு பொரிக்கறி, இளநீருடன் கூடிய உணவை நிவேதனம் செய்ய வேண்டும்.

#1921. உபசாரம் செய்ய வேண்டும்

**மீது சொரிந்திடும் வெண்ணீறும் சுண்ணமும்
போது பல கொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத உதகத்தால் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலம் செய்யுமே.**

திருநீறு, நறுமணப் பொடிக் கலவை, தர்ப்பைப் புல், வில்வ மலர் கொண்டு பாத்தியம், ஆசமனம், அர்க்கியம் தரவேண்டும். பின்பு மூன்றடிக்கு மூன்றடி மேடை ஒன்றை அங்கே அமைக்க வேண்டும்.

#1922. சிவலிங்கம் அமைக்க வேண்டும்

**ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினி லொன்றைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவு உத்தரம் பூர்வம்
காதலிற் சோடசம் காண்உப சாரமே.**

அந்த மேடை மீது ஒரு சிவலிங்கம் அல்லது ஓர் அரச மரக்கன்றைத் தாபிக்க வேண்டும். சமாதியின் சந்நிதி வடக்கு திசை அல்லது கிழக்கு திசை நோக்கி இருக்குமாறு அமைத்து, அதற்கு அன்புடன் பதினாறு வகையான உபசாரங்களையும் செய்ய வேண்டும்.

ஏழாம் தந்திரம் -
20. விந்து உற்பனம்

விந்து உற்பனம் = விந்துவின் தோற்றம்.

#1923. நிவிருத்தி கலை

**உதயத்தில், விந்துவில் ஓங்கு குண்டலியும்
உதயக் குடிலை வயிந்தவம் ஒன்பான்
விதியின் பிரமாதி கள் மிகு சக்தி
கதியில் கரணம் கலைவை கரியே.**

படைப்பின் உதய காலத்தில் ஓங்கிய குண்டலினி சக்தியும், பரமாகாய மண்டலத்தில் படைப்புக் காரணமான விந்துவின் காரியமாகிய நான்முகன் முதலிய ஒன்பது பேதங்களும், அவரவர்களின் சக்திகளும், இவற்றின் இயக்கத்திலிருந்து

நான்கு அந்தக் கரணங்கள், ஐந்து கலைகள், வைகரி முதலிய வாக்குக்களும் தோன்றின.

#1924. முப்பத்தாறு தத்துவங்கள்

செய்திடும் விந்துவின் பேதத்திறன் ஐயைந்தும்
செய்திடும் நாத பேதத்திறன் நாலாறும்
செய்திடும் மற்றவை ஈரிண்டில் திறம்
செய்திடும் ஆறாறு சேர்தத்து வங்களே.

விந்துவில் செயலால் இருபத்தி ஐந்து பேதங்கள் தோன்றும். நாதம் பேதங்களில் பத்தாகப் பிரியும்.

சிவசக்தியர் மாறுபாடு அடைவதில்லை. நாதத்தையும், விந்துவையும் அவர்கள் இயக்குகின்றார்கள்.

#1925. பரவிந்துவில் பொருந்துபவை

வந்திடும் பேதம் எலாம் பரவிந்து;
தந்திடும் மாமாயை; வாகேசி தற்பரை
உந்து குடிலையோடு ஏமுறு குண்டலினி
விந்துவில் இந்நான்கும் மேவா விளங்குமே.

பேதங்கள் எல்லாம் பரவிந்துவால் ஏற்படுகின்றன. தோற்றத்தைத் தருகின்ற மாமாயை, வாக்குத் திறன், தற்பரை, ஓங்கி உயர்ந்து செல்லும் குண்டலினி சக்தி என்னும் இந்த நான்கும் விந்துவில் பொருந்தி நிற்கும்.

#1926. மனம் அந்தம் ஆகும்

விளங்கு நிவர்த்தாதி மேலக ராதி
வளங்கொள் உகாரம் மகாரத் துள்விந்து
களங்கமில் நாதாந்தம் கண்ணினுள் நண்ணி
உளங்கொள் மனாதியுள் அந்தமும் ஆமே.

நிவிருத்தி முதலிய ஐந்து கலைகள் அகரம் முதலிய கலைகளில் அடங்கும். வளம் மிகுந்த உகரம் மகரத்துக்குள் அடங்கிவிடும். குற்றம் இல்லாத விந்து நாதாந்தத்தை அடைந்து விட்டு மனம் முதலிய நான்கு அந்தக் காரணங்களுக்குள் முடிவை எய்தும்.

#1927. காரண காரியம்

அந்தமும் ஆதியும் ஆகிப் பராபரன்
வந்த வியாபி எனல் ஆய அந்நெறி
கந்தம் அது ஆகிய காரண காரியம்
தந்து ஐந்கருமமும் தான் செய்யும் வீயமே.

ஆதியும் சிவனே! அந்தமும் அவனே! பராபரனாகிய சிவன், எல்லாவற்றையும் ஒரு கிழங்கைப் போலத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டுள்ளான். எங்கும் வியாபித்துள்ள சிவன், தானே பிரபஞ்ச சிருஷ்டியின் காரணமாகவும் இருக்கின்றான். அவனே பிரபஞ்ச சிருஷ்டியின் காரியமாகவும் விளங்குகின்றான். ஐந்து தொழில்களையும் செய்யும் வித்தாகச் சிவன் இருக்கின்றான்.

விளக்கம்:

ஆதியில் பராபரன் ஆகிய சிவன் மட்டுமே இருப்பான். பின்னர் சக்தி சிவனிடம் இருந்து பிரிவாள். பின்பு பரை, மகாமாயை, சுத்த மாயை, மிசிர மாயை, பிரகிருதி மாயை என்று படிப்படியாக விரிவடைவாள். அதிலிருந்து சிருஷ்டி துவங்கும்.

லயம் அடையும் காலத்தில் பிரகிருதி மாயை மிசிர மாயையில் ஒடுங்கும். மிசிர மாயை சுத்த மாயையில் ஒடுங்கும். சுத்த மாயை மகா மாயையில் ஒடுங்கும். மகாமாயை பரையில் ஒடுங்கும். பரை சிவத்தில் ஒடுங்குவாள். சிவம் மட்டுமே எஞ்சி நிற்கும்.

எனவே படைப்பின் ஆதியும் சிவனே. அந்தமும் அவனே!

#1928. அகம் புறம் ஆகும்!

வீயம்அது ஆகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காய ஐம்பூதமும் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம் புறம் ஆகுமே.

விந்துவே படைப்பின் விதையாகும். அதன் ஆற்றலால் அண்டம் தோன்றியது. அதன் ஆற்றலால் அகண்டமும் தோன்றியது. வானம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐம் பெரும் பூதங்களும் தோன்றின. இங்ஙனம் விந்து அண்டம், அகண்டம் என்ற இரண்டின் அகத்திலும், புறத்திலும் விளங்கும்.

#1929. வீடு அளிக்கும்

புறம் அகம் எங்கும் புகுந்து ஒளிர் விந்து
நிறம் அது வெண்மை; நிகழ் நாதம் செம்மை,
உற மகிழ் சத்தி சிவபாதம் ஆயுள்
திறனொடு வீடு அளிக்கும் செயல் கொண்டே.

படைப்பில் உள்ளும் பபுறமும் விளங்கும் விந்துவின் நிறம் வெண்மை. நாதத்தின் நிறம் சிவப்பு. இவை இரண்டும் பொருந்துவது சிவசக்தியர் பொருந்துவது ஆகும். இதன் பயனாக சாதகனின் ஆற்றல் பெருகும்; ஆயுள் கூடும்; இறுதியாக வீடுபேறும் கிடைக்கும்.

#1930. விந்துவே மகாமாயை

கொண்ட இவ் விந்து பரமம்போல் கோதுஅற
நின்ற படம் கடமாய் நிலை நிற்றலின் ,
கண்டு அகல் ஆதியின் காரண காரியத்து
அண்டம் அனைத்துமாய் மாமாயை ஆமே.

விந்து எங்கும் நீக்கமற நிறைந்து அனைத்துப் பொருட்களிலும் நிறைந்து இருக்கும். காரணம் ஆகிய நூலிலிருந்து காரியம் ஆகிய ஆடையும், காரணம் ஆகிய மண்ணிலிருந்து காரியம் ஆகிய குடமும் உருவாவதைப் போன்றே நிலை பெற்ற கலைகள் என்னும் காரணத்திலிருந்து பிரபஞ்சம் என்னும் காரியம் விரியும். உலகம் அனைத்தும் மகா மாயையின் செயல் ஆகும்.

#1931. பொது வித்தில் நின்ற புண்ணியன்

அதுவித்திலே நின்று அங்கு அண்ணிக்கும் நந்தி
இதுவித்திலே உலவாற்றை உணரார்
மதுவித்திலே மலர் அன்னம் அதுஆகிப்
பொதுவித்திலே நின்ற புண்ணியன் தானே.

அண்டத்தில் வித்தாக இருக்கும் சிவனே பிண்டத்தில் விந்துவாக உள்ளான். இதை மக்கள் அறிந்து கொள்வது இல்லை. இன்பம் பொருந்தும் சுவாதிட்டானத் தாமரை மலரில் பொருந்துகின்ற அன்னப் பறவையும், அண்டத்தில் பொருந்து சிவனும் ஒருவரே ஆவார்.

#1932. வித்தின்றி முளை இல்லை

வித்தினி லன்றி முளையில்லை அம்முளை
வித்தினி லன்றி பெளிப்படு மாறில்லை
வித்து முளையும் உடனல்ல வேறல்ல
அத்தன்மை யாகும் அரனெறி காணுமே.

வித்தினில் அன்றி முளை வேறு எங்கும் இருக்க முடியாது. வித்தைத் தவிர வேறு எதிலிருந்தும் முளை வெளிப்பட முடியாது. வித்தும் முளையும் ஒன்றி இல்லாமல் இன்னொன்று இருக்க முடியாது. ஆகவே வித்தையும் முளையையும் ஒரே பொருளாகக் கருதலாம். அதைப் போன்றே விந்துவும் சிவமும் ஒன்றே ஆகும்.

#1933. உடலும் மனமும் உணவால் அமையும்

அருந்திய அன்னம் அவை மூன்று கூறாம்
பொருந்தும் உடல், மனம், போமலம் என்ன,
திருந்து முடல் மனமாம் கூறு சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம் அதுஆமே.

நாம் உண்ணும் உணவு மூன்று கூறுகளாகி உடலில் அமையும். ஒரு பகுதி உடலுக்குக் போகும். ஒரு பகுதி மனதுக்குப் போகும்,. ஒரு பகுதி மலமாக வெளியேறும். உடலுக்கும் மனதுக்கும் போகும் பகுதிகள் நாம் முன்பு உண்ட உணவின் சாற்றிலிருந்தே கிடைக்கின்றன அல்லவா?

#1934. மருவிய விந்து வளரும்

இரதம் முதலான ஏழ்தாது மூன்றின்
உரிய தினத்தின் ஒருபுல் பனிபோல்
அரிய துளி விந்துஆகும் ஏழ் மூன்றில்
மருவிய விந்து வளரும் காயத்திலே.

உணவின் சாரம் உடலின் ஏழு தாதுக்களுக்கும் போஷாக்கு அளிக்கும். முதலில் உணவின் சாரம் இரத்தமாகும். அதன் பின் ரத்தம் சுக்கிலமாகும். புல் நுனியில் உள்ள பனித் துளி போன்ற விந்து வளர்ந்து இருபத்தொரு நாட்களில் முதிர்ச்சி அடையும்.

#1935. மாயத்தே செல்வோர் மனத்தோடு அழியும்

காயத்திலே மூன்று நாளில் கலந்திட்டுக்
காயத்துட்டன் மனம் ஆகும் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோடு அழியுமே.

முதிர்ந்த விந்து உடலில் மூன்று நாட்கள் இருந்தால், அது மன மண்டலத்தின் ஒரு பகுதியாகி ஒரு ஒளி மண்டலம் ஆகும். இறையன்புடன் ஒன்றி நின்றோருக்கு விந்துக் கழிவு ஏற்படாது. அதன் ஒளி மண்டலமும் நீங்காமல் நிலையாக இருக்கும். காம காரியத்தில் ஈடுபட்டு உலக இன்பம் துய்ப்பவருக்கு விந்து கழிந்து விடும். ஒளி மண்டலம் அழிந்து விடும்.

#1936. கழிகின்ற விந்து அழிக்கும்

அழிகின்ற விந்து அளவை அறியார்;
கழிகின்ற தன்னை உள் காக்கலும் தேரார்
அழிகின்ற காயத்து அழிந்து அயர்வு உற்றோர்
அழிகின்ற தம்மை அறிந்தொழி யாரே.

அழிந்து போகும் விந்துவின் அளவை இவர்கள் அறிவதில்லை. இறந்து அழிந்து விடப் போகும் தன்னைக் காத்துக் கொள்வதையும் இவர்கள் அறிவதில்லை. அழியும் உடலில் வாழ்ந்து அழிந்து போகின்றவர்கள் அழிவை ஏற்படுத்துகின்ற விந்து நீக்கத்தை முயன்று அழிப்பது இல்லை. அதிலிருந்து இவர்கள் விலகி நீங்குவதும் இல்லை.

ஏழாம் தந்திரம் -
21. விந்து சயம் - போகசர ஓட்டம்

விந்து சயம் - போகசர ஓட்டம்
விந்து சயம் = விந்துவைக் காப்பதால் கிடைக்கும் வெற்றி.
போகசர ஓட்டம் = போகத்தின் போது மூச்சுக் காற்றின் இயக்கம்.

#1937. யோகி ஆவதற்குச் செய்ய வேண்டியவை

பார்க்கின்ற மாதரைப் பாரது, அகன்று போய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக, அழல் மூட்டிப்
பார்க்கின்ற கண், ஆசை பாழ்பட, மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே.

காம விருப்பத்துடன் நம்மை நோக்குகின்ற பெண்களை நாம் நோக்கலாகாது. அவர்களிடமிருந்து அகன்று சென்றுவிட வேண்டும். மூலக் கனலை எழுப்ப வேண்டும். உள்ளத்தை இறை அன்பினால் உருக்க வேண்டும். கண் பார்வையை புருவ மத்தியில் பதிக்க வேண்டும். இவற்றைச் செய்பவன் ஒரு சிறந்த சிவயோகி.

#1938. உயிர் ஓம்பா மாயும்

தானே அருளால் சிவயோகன் தங்காது
தானே அக் காமாதி தங்குவோனும் உட்கும்;
தானே அதிகாரம் தங்கின், சடம் கெடும்;
ஊனே அவற்றுள், உயிர் ஓம்பா மாயுமே.

காமவயப்படுபவன் அடையும் தீமைகள் இவை:

திருவருள் தருகின்ற சிவயோகம் அவனிடம் வந்து பொருந்தாது; காமவயப் பட்டவன் மன உறுதி அழிந்து மிகுந்த அச்சம் கொள்வான்; அவன் உடல் கெட்டு விடும், அவன் உயிர் அழிந்து விடும்.

#1939. மங்கையைச் சேருவதற்கான காலம்

மாயாள் வசத்தே சென்று இவர் வேண்டில்
ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்
ஏயா எண் நாள் இன்பமேல் பனி ; மூன்றிரண்டு
ஆய அபரத்துள் ஆதிநாள் ஆறு ஆமே.

பெண்ணிடம் சென்று இவர் கூட விரும்பினால் அதற்கு உரிய காலம் இது. மாதவிடாயின் இரு பக்கங்களையும் வளர் பிறை தேய் பிறை என்று வைத்துக் கொண்டால், வளர்பிறையின் முதல் எட்டு நாட்களும், தேய்பிறையின் இறுதி எட்டு நாட்களும் துன்பத்தைத் தருவன. வளர் பிறையின் பின் ஆறு நாட்களும், தேய் பிறையின் முன் ஆறு நாட்களும் பெண் கருத்தரியாமல் புணர்வதற்கு ஏற்றவை ஆகும்.

#1940. யோகி மங்கையைச் சேர உரிய காலம்

ஆறு ஐந்து பன்னொன்றும் அன்றிச் சக மார்க்கம்
வேறு அன்பு வேண்டுவோர் பூவாரின் பின்னம் தோடு
ஏறும் இருபத்தொரு நாளிடைத் தோங்கும்
ஆறின் மிகுந்து ஓங்கும் அக்காலம் செய்யவே.

வளர்பிறையின் முன் ஆறு நாட்களையும் தேய் பிறையின் பின் ஐந்து நாட்கள் ஆகிய பதினோரு நாட்களை விலக்கி விட வேண்டும். மற்ற நாட்களில் பெண்ணைக் கூடலாம். முதன் ஆறு நாட்கள் சத்தற்றதால் நுரை எனப்படும். இறுதி ஐந்து நாட்கள் தளர்ந்துவிடுவதால் திரை எனப்படும். நரையும் திரையும் அற்ற மற்ற நாட்கள் மங்கையுடன் இணைவதற்கு ஏற்றவை.

#1941. நான்முகூர்த்தம் நல்ல நேரம்

செய்யும் அளவில், திருநான் முகூர்த்தமே
எய்யும் கலை, காலம், இந்து பருதிகால்
நையும் இடத்து ஓடி, நன் காமநூல் நெறி
செய்க, வலம் இடம் தீர்ந்து விடுகவே.

பெண்ணுடன் பொருந்துவதற்கு ஏற்ற காலம் பொழுது விடிவதற்கு முன் உள்ள நான்கு முகூர்த்தம் ஆகும். (ஒரு முகூர்த்தம் என்பது ஒன்றரை மணி நேரம்) . பின்னிரவில், சந்திர கலை சூரிய கலையில் அடங்கி விடும். அந்த நேரத்தில் காம நூல் கூறியபடிப் பெண்ணைப் பொருந்திப் புணர வேண்டும். விந்துவை விடுவதானால் மூச்சை வலமோ இடமோ இல்லாமல் சுழு முனையில் பொருத்தி விந்துவை வெளிப்படுத்த வேண்டும்.

#1942. பற்று அற விட வேண்டும்

விடுங்கால் முனைந்து இந்திரியங்களைப் போல்
நடுங்காது இருப்பானும் ஐ ஐந்தும் நண்ணப்
படும்காதல் மாதின்பால் பற்று அற விட்டுக்
கடுங்கால் காரணம் கருத்துறக் கொண்டே.

விந்துவை விடும் போது செய்ய வேண்டியவை இவை:

புணர்கின்ற பெண்ணிடம் ஆசை கொள்ளாமல் விட்டு விட வேண்டும்; மூல வாயுவை அகமுகமாக்கி விட வேண்டும்; அந்தக் காரணங்களை அகமுகமாக்கிவிட வேண்டும். உடல் நடுங்காது சலனம் இன்றி இருக்க வேண்டும். பொறிகளும் புலன்களும் ஒருமைப்பாடு அடையும்படி விந்துவை விட வேண்டும்.

#1943. அந்தக்கரணம் அகமார்க்கம் ஆகவேண்டும்

கொண்ட குணனே நலனே நற்கோமலம்
பண்டை உருவே, பகர் வாய் பவளமே,
மிண்டு தனமே மிடைய விடும் போதில்,
கண்ட கரணம் உள் செல்லக் கண்டே விடே.

மங்கையர் கொண்ட நற்குணங்கள், அவர்கள் கொண்டுள்ள நலன்கள், அவர்களின் இளமை, வடிவழகு, பவழ வாய், சாயாத தனங்கள் இவற்றின் மீது மனத்தைச் செலுத்தாமல் அந்தக்கரணங்களை அகமார்க்கமாகச் செலுத்தி விந்துவை வெளிப்படுத்த வேண்டும்.

#1944. காலத்தை அறிந்து அனைத்தும் அறியலாம்

விட்டபின், கர்ப்ப உற்பத்தி விதியிலே
தொட்டுஉறும் காலங்கள் தோன்றக் கருதிய,
கட்டிய வாணாள், சாநாள், குணம், கீழ்மை, சீர்ப்
பட்ட நெறி இது என்று எண்ணியும் பார்க்கவே.

விந்துவை விட்ட பின்பு, கர்ப்ப உற்பத்தி விதியின்படிப் பெண்ணுடன் புணர்ந்த நேரத்தை ஆராய்ந்து, சிசுவின் வாழ் நாள், ஆயுட்காலம், குணங்கள், மேன்மை, கீழ்மை போன்றவற்றை ஆராய்ந்து அறிந்து கொள்வாய்.

#1945. கர்ப்ப உற்பத்தி நியதி

பார்த்திட்டு வையத்துப் பரப்பு அற்று, உருப் பெற்று
வார்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே
சேர்த்து உற்று, இரு திங்கள் சேராது அகலினும்
மூப்புற்றே பின்னாளில் ஆம் எல்லாம் உளவே.

இவற்றை எண்ணிப் பார்த்துவிட்டு உலகத் தொடர்பை விட்டுவிடு. அந்தப் பெண்ணிடம் மேலும் உடலால் தொடர்பு கொள்ளாதே! இரண்டு மாதங்களில் அவள் கருவில் உள்ள சிசு வளரத் தொடங்கும். உரிய காலத்தில் உலகில் பிறவி எடுக்கும். அதன் பின்பு நீ சிந்தித்தவை எல்லாம் கிரமப்படி நடக்கும்.

#1946. மத்தில் இருக்கும் ஓர் மாங்கனி

வித்து இடுவோர்க்கு அன்றி மேல் ஒர்விளைவு இல்லை
வித்து இடுவோர்க்கு அன்றி மிக்கு ஓர் அறிவு இல்லை
வித்தினில் வித்தை விது அற உணர்வரேல்
மத்தில் இருந்தது ஓர் மாங்கனி யாமே.

வித்தை விதைப்பவருக்கு அன்றி மற்றவருக்கு அதன் விளைவினால் பயன் இல்லை. விந்துவின் பயனை அறிந்து கொண்டவர்களுக்கு அன்றிப் பிறருக்கு அதன் பயனாகிய அறிவு கிடைப்பது இல்லை. விந்துவே ஒளியாக மாறுவதை உணர்ந்து கொண்டு, சலனம் இன்றி, அமைதியாக உண்பவருக்குத் தயிரிலிருந்து மத்து வெளிப்படுத்தும் வெண்ணையைப் போல உயிரிலிருந்து சிவம் வெளிப்படும்.

#1947. கருவில் பதிவாகும் எதிர்காலம்

கருத்தினில் அக்கரம், ஆயவும், யாவும்;
கருதுளன் ஈசன் கரு உயிரோடும்;
கருத்து அது வித்தாயக் காரண காரியம்
கருத்து உருமாறு இவை கற்பனை தானே.

'தலையெழுத்து' எனப்படும் பிரமன் எழுதும் எழுத்து, சிசுவின் ஆயுட்காலம், அதில் நடைபெறப் போகின்ற நிகழ்வுகள் முழுவதையும் நிச்சயிக்கும். இதை ஈசன் சாலப் பரிவோடு சிசு தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே பதிவிகின்றான். அப்படி இருக்கையில், சிசு பிறந்து வளரும் போது வாழ்வில் நிகழ்பவற்றுக்குக் காரண காரியங்களை ஆராய்ச்சி செய்வது வீண் கற்பனையே அன்றி உண்மை அல்ல.

#1948. விந்து வற்றினால் சித்தி உண்டாகும்

ஒழியாத விந்து உடல் நிற்க நிற்கும்
அழியாத பிராணன் அதி பலம் சத்தி ;
ஒழியாத புத்தி, தவம், செபம், மோனம்
அழியாத சித்தி உண்டாம் விந்து வற்றிலே.

விந்து கழியாமல் உடலிலேயே தங்கி இருந்தால் அப்போது ஒருவனின் பிராணன் அழியாது நிற்கும்; அதிக பலமும் சக்தியும் உண்டாகும்; எல்லையற்ற அறிவு உண்டாகும்; தவம், செபம், மௌனம், அட்ட சித்திகள் இவைத் தோன்றி மேம்படும்.

விளக்கம்:

விதை முளையாக மாறும். அது போலவே தூல விந்து ஒளியாக மாறும். ஒரு சாதகன் பன்னிரண்டு ஆண்டுகள் தீவிரப் பயிற்சி செய்தால் அவன் வீரியம் உலர்ந்து, மேலே ஒளி மண்டலம் தோன்றும்.

#1949. அமுதத்தைச் சென்று உண்பார்

வற்ற அனலைக் கொளுவி , மறித்துஏற்றித்
துற்ற சுழியனல் சொருகிச் சுடர் உற்று
முற்றும் மதியத்து அமுதை முறை முறை
சென்று உண்பவரே சிவயோகியாரே.

உண்மையான சிவயோகி செய்வது இவை:
தூல விந்து வற்றிப் போகும் வண்ணம் மூலாதாரத்தில் உள்ள கனலைப் பெருக்குவர்; அது உடலில் கீழ் நோக்கிச் செல்லாதவாறு தடுத்து, அதன் பாதையை மாற்றி, நடுநாடியின் மூலம் மேலே செலுத்துவர்; அங்கு ஞானத் தீயில் பொருந்தி ஒளி பெறுவர். சந்திர மண்டலத்தை அடைந்து அங்கு ஊறும் அமுதை பல முறை பருகுவர்.

#1950. விந்து அழியாத அண்ணல்

யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
போகியும் ஞான புரந்தரன் ஆவோனும்
மோகம் உறினும் முறை அமிர்து உண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே.

யோகியர், ஞானியர், உத்தம சித்தம் படைத்தவர், ஞான புரந்தரன் ஆகிவிட்ட போகி, மோக வயப்பட்ட போதும் முறை அறிந்து அமிர்தம் அருந்த வல்லவர் என்போர் விந்துவை வென்று விட்ட வீரர்கள் ஆவர்.

#1951. அமிர்தமாகி அறிவாகும்

அண்ணல் உடல் ஆகி அவ்வனல் விந்துவும்
மண் இடை மாய்க்கும் பிராணனாம் விந்துவும்
கண்ணும் கனலிடைக் கட்டிக் கலந்து எரித்து
உண்ணில் அமிர்தாகி யோகிக்கு அறிவாமே.

அண்டத்தின் விந்து அண்ணலின் உடல் ஆகும். பிண்டத்தின் விந்து மனிதனை மண்ணிடை மாய்க்கும் வீரியம் ஆகும். இந்த இரண்டு விந்துக்களையும் கலந்து மூலக் கனலில் எரித்து அதை உண்டால் அதுவே யோகிக்கு அமுதத்தையும் அறிவையும் ஒளியையும் தரும்.

#1952. செறிவாய் இருந்து சிவனைச் சேருவீர்!

அறியாது அழிகின்றது ஆதலால் நாளும்
பொறிவாய் அழிந்து புலம்புகின் றார்கள்
அறிவாய் நனவில் அதீதம் புரியச்
செறிவாய் இருந்து சேரவே மாயுமே.

‘விந்துவின் கழிவு தரும் அழிவு’ என்பதை அறியாத மாந்தர்கள் நாள்தோறும் அதைக் கழித்து வீணாக்குகின்றார்கள். அவர்கள் பொறிகளின் வசப்பட்டு, ஞானம் அழிந்து, உடல் தளர்ந்து வருத்தம் அடைகின்றார்கள். நனவிலேயே ஒரு யோகி ஞான வடிவாக வேண்டும். துரியாதீதம் என்ற நிலையில் அவன் சிவத்துடன் செறிந்து பொருந்தி இருக்க வேண்டும். அப்போது அவன் வீரியம் மேல் முகமாகி ஒளி மயமாகி விடும். தூல விந்துவோ மாய்ந்து விடும்.

#1953. காமம் அழிந்தால் சாதல் இல்லை

மாதரை மாய வருங் கூற்றம் என்று உன்னக்
காதலதாகிய காம கழிந்திடும்;
சாதலும் இல்லை சதகோடி ஆண்டினும்
சோதியின் உள்ளே துரிசு அறும் காலமே.

பெண்களைப் பார்க்கும்போது அவர்களைக் கொல்ல வருகின்ற யமன் என்று எண்ணிட வேண்டும். அப்போது காமமும் காதலும் தோன்றாமல் மறைந்து போகும். அதனால் காமக் கழிவு இராது. அதனால் நூறு கோடி ஆண்டுகள் சிவ ஒளியில் கலந்து நின்று ஆணவ மலம் என்னும் குற்றம் அழியலாம்.

#1954. விந்துவை வென்றவன் காலத்தை வென்றவன்

காலம் கடந்தவன் காண்விந்து செற்றவன்;
காலம் கடந்துஅழிந் தான்விந்து செற்றவன்;
காலங்களில் விந்து செற்று உற்ற காரிகை
காலின் கண் வந்த கலப்பு அறியாரே.

விந்துவை வென்றவன் காலத்தை வென்று விட்டவன். ஆனால் விந்துவை அழித்தவன் காலத்தால் வெல்லப்பட்டு அழிந்தவன். விந்துவை வென்றவன் அறியும் குண்டலினி சக்தி மூலவாயுவுடன் பொருந்தி மேலே எழுந்து செல்லும் போது உண்டாகும் இன்பத்தை விந்துவை வீணாக்கியவன் சற்றும் அறியமாட்டான்.

#1955. கூடுவதற்குக் குடல் தூய்மை வேண்டும்!

கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டின் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தத்தை
விலக்கு வன செய்து மேலணை வீரே.

மங்கையுடன் கலக்கும் நாளுக்கு முதல் நாள், அவள் வயிற்றைத் தூய்மை ஆனதாக ஆக்க வேண்டும். வாதம், பித்தம், சிலேத்துமம், மலம் இவை அனைத்தையும் விலக்க வேண்டும். அப்போது தான் கலவி இன்பம், மகப் பேறு என்ற காதலின் இரண்டு பயன்களையும் ஒருவன் பெற முடியும்.

#1956. விந்து நாதத்தில் பொருந்த வேண்டும்

மேலா நிலத்தெழு விந்துவும் நாதமும்
கோலால் நடத்திக் குறிவழி யேசென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினால்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே.

ஆஞ்ஞையில் உள்ளன விந்துவும் நாதமும். பிராணனை நடுநாடியின் வழியே மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். பிரமரந்திரத்தின் வழியே மேலே செல்ல வேண்டும். பால் போன்ற மதி மண்டலத்தில் ஊறும் அமுதினைப் பருக வேண்டும். உலகப் பற்றுக்களை விட்டு விட்டால் கீழ் முகமாகிய மயக்கம் அழிந்து படும். வீரியம் வற்றி விடும்.

#1957. விந்து சயம் ஆகும்

விந்து விளைவும் விளைவின் பயன் முற்றும்
அந்த வழிவும் அடக்கத்தி லாக்கமும்
நந்திய நாதமும் நாதத்தால் பேதமும்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே.

தூல விந்து உருவாகும் முறை, அது முதிர்வதால் ஏற்படும் நிலை, அது கழிவதால் ஏற்படும் அழிவு, அதை அடக்குவதால் ஏற்படும் பயன் இவற்றை அறியாதவர்கள் வாழ்வில் அழிவை அடைவார்கள். இவற்றை அறிந்தவர்கள் விந்துவை அடக்கி ஆண்டு நாதத்தைப் பெருக்குவர். அதனால் விளையும் பேதத்தையும் உணர்வர். இத்தகையோருக்கு விந்து சயம் உண்டாகும்.

#1958. தண்ணமுதாகும்

விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கியி னாலே நயந்தெரித்து
அந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே.

விந்து என்பது உடலின் விதை. அதை மூலாதாரத்தில் கொழுந்து விட்டு எரியும் அக்கினியில் எரித்துவிட வேண்டும். அதில் விளையும் சக்தியை உடலில் மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். கதிரவ மண்டலத்தை அடைந்து பின்பு அதையும் தாண்டி மதி மண்டலத்தை அடைவதே அங்கு குளிர்ந்த அமுதத்தை ஊறச் செய்யும்.

#1959. அமுதப் பலாவனம் யோகிக்கு உறும்

அமுதச்சசிவிந்து ஆம்விந்து மாள
அமுதப் புனல் ஓடி, அங்கியின் மாள
அமுதச் சிவயோகம் ஆதலால் சித்தி
அமுதப் பலாவனம் ஆங்கு உறும் யோகிக்கே.

தூல விந்து யோக சித்தியால் மாண்டு சந்திர மண்டலத்தில் உள்ள அமுதச் சசிபிந்துவாக மாறிவிடும். மூலக் கனலில் விந்து எரிந்து அழியும் போது, அமுதப்

புனல் பெருகி யோகியின் உடல் முழுவதும் பரவும். இங்ஙனம் அமுதப் புனல் ஆடுவதே சிவயோகம் ஆகும். இதனால் பல சித்திகள் யோகிக்குச் சித்திக்கும்.

#1960. விந்து ஒழியாமை சிவயோகம்

யோகம் அவ்விந்து ஒழியாவகை புணர்ந்து,
ஆகம் இரண்டும் கலந்தாலும் ஆங்கு உறாப்
போகம் சிவபோகம்; போகி நற்போகமாம்
மோகம் கெட முயங்கார் மூடர் மாதர்க்கே.

விந்து கழியாதபடிப் பெண்ணைப் புணருவதே யோக நெறி. ஆண் பெண் இருவர் உடல்கள் கலந்தாலும் அவன் விந்து கழிந்து அந்தப் பெண்ணிடம் சென்று சேராது. இந்த போகமே சிவபோகம் ஆகும். இதுவே யோகி தனக்கு பெண்ணிடம் உள்ள மோகத்தை வெல்லும் நல்ல வழியாகும். இதனை அறிந்து கொண்டு பெண்ணிடம் கொண்ட மோகத்தை வெல்லாதவர் மூடர்.

#1961. விந்து விடார் யோகம் கலந்தவர்

மாத ரிடத்தே செலுத்தினும் அவ்விந்து
காத லினால் விடார் யோகம் கலந்தவர்
மாதர் உயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர் போன்றங்கன் காதலாம் சாற்றிலே.

மாதரிடம் கலந்தாலும் யோகநெறியில் உள்ளவர், காதலினால் விந்துவை வெளிப்படுத்த மாட்டார். ஆனால் அந்த மாதரோ எனில் யோகியின் மீது கொண்ட காதலும், ஆசையும் நிறைவடையாமல் மிகுந்த மன வருத்தம் அடைவர்.

#1962. அமுதை அருந்த விந்து சயம்

சாற்றிய விந்து சயம் ஆகும் சக்தியால்
ஏற்றிய மூலத்தழலை எழ மூட்டி
நால்திசை ஓடா நடுநாடி நாதத்தோடு
ஆற்றி அமுதம் அருந்த விந்து ஆகுமே.

முன்பு கூறியபடி விந்து சயம் உண்டாகும். மூலக் கனலைச் சக்தியால் எழுப்பி அதை மேல் நோக்கிச் செலுத்த வேண்டும். அது நான்கு திசைகளிலும் சிதறி ஓடாத வண்ணம் நடுநாடியின் வழியே அதைச் செலுத்த வேண்டும். மேலே சென்று நாதத்துடன் அதைப் பொருந்தச் செய்து அங்கு விளையும் அமுதை உண்டால் உடலில் ஒளி மண்டலம் தோன்றும்.

#1963. சிவன் அகம் ஆக விந்து மாளும்

விந்துவும் நாதமும் மேவ, கனல் மூல,
வந்த அனல் மயிர்கால் தொறும் மன்னிடச்
சிந்தனை மாறாச் சிவம் அகம் ஆகவே
விந்துவும் மாளும் மெய்க்காயத்தில் வித்திலே.

விந்துவும், நாதமும் தலையின் மீது பொருந்தும் போது; மேலே எழும்பி வந்த மூலத் தீயின் வெப்பம் ஒவ்வொரு மயிர்க்காலிலும் நிறைந்திருக்க, சிந்தனைகளை முற்றிலும் ஒழித்து விட்டுச் சிவோகம் (நானே சிவம்) என்ற பாவனையில் இருந்தால்; மெய்க்காயத்தின் வித்தினில் தூல விந்து மறைந்து விடும்.

#1964. வித்து உண்ணாமல் வித்து வித்தான்

வித்துக்குற்று உண்பான் விளைவு அறியாதவன்;
வித்துக்குற்று உண்ணாமல், வித்துச் சுட்டு உண்பவன்
வித்துக்குற்று உண்பானில் வேறு அலன் ஈற்றவன்
வித்துக்குற்று உண்ணாமல் வித்துவித்தான் அன்றே?

விதையைக் குத்தி அதை உணவாக்கி உண்பவன், விதையினால் வரக் கூடிய விளைச்சலைப் பற்றி அறியாதவன். விதைக் குத்தி உண்ணாமல் விதையை வறுத்து உண்பவனும் முன்னம் கூறியவனைப் போலவே விதையினால் வரக் கூடிய விளைச்சலைப் பற்றி அறியாதவன். மூன்றாமவன் குத்தியோ அல்லது வறுத்தோ விதையை உண்ணாமல் அதை விதைத்து விதையின் பயனைப் பெருக்கிக் கொள்வான்.

வித்துக் குற்றி உண்பவன் = அறியாமையினால் விந்துவை வீணாக்குபவன்
வித்துச் சுட்டு உண்பவன் = யோகத்தின் மூலம் விந்துவை வற்றச் செய்தவன்
ஈற்றவன் = விந்துவை வீணாக்காமலும், அதை வற்றச் செய்யாமலும், உடலில் ஒளி மண்டலத்தை அமைத்துக் கொள்பவன்.

#1965. விந்து மாயும் காயத்திலே

அன்னத்தில் விந்து அடங்கும்படிக் கண்டு,
மன்ன, பிராணனாம் விந்து மறித்திட்டு
மின் ஒத்த விந்து நாதாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயும் காயத்திலே.

பிராண மயமான தூல விந்துவை வழி மறித்துக் கீழே செல்லாது உடலில் மேலே ஏற்ற வேண்டும். மின்னொளி போன்ற நதாந்தத்தில் அதைக் கொண்டு

சென்று விட்டு விட்டால் அப்போது தூலவிந்து அன்னம் என்னும் ஒளிமயமான அண்டத்தின் விந்துவில் ஒன்றாகக் கலந்து மறைந்து விடும்.

#1966. இரு விந்துக்கள்

அன்னம் பிராணன்என்(று) ஆர்க்கும் இருவிந்து
தன்னை அறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்னமுமாம் உருத்தோன்றும் எண்சித்தியாம்
அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே.

ஆடவர் எல்லோர்க்கும் அன்ன விந்து, பிராண விந்து` என இரு விந்துக்கள் உள்ளன. அந்த உண்மையை உணர்ந்து, அன்னத்தையும், பிராணனையும் நெறிபடுத்தி நிற்க வல்லவர்க்கு மேனி பொன்போல விளங்கும். அட்டமா சித்திகள் கூடும். மேலும் அத்தன்மை யுள்ள யோகிகள் யாவரும் நீண்ட காலம் வாழ்ந்தமை வெளிப்படை.

#1967. விந்து சயம் உரைப்பது உபதேசம்

நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனாய்
ஒன்று மகாரம் ஒரு மூன்றோடு ஒன்று அவை
சென்று , பராசத்தி விந்து சயந்தன்னை
ஒன்ற உரைக்க உபதேசம் தானே.

பஞ்சாக்கரத்தில் உள்ள முதல் எழுத்தான ‘சி’காரத்தை இடையறாது நினைக்கும் செயலை உங்கள் உயிர்வளியுடன் மௌனமாக இணைத்துவிட வேண்டும். பிரணவத்தில் உள்ள மூன்று எழுத்துக்களில் திளைத்துப் பராசக்தியை அடைய வேண்டும். இதுவே விந்து சயம். இதை உரைப்பதுவே உபதேசம்.

#1968. சிவகதித் தன்மை ஆம்

தானே உபதேசம், தானல்லாது ஒன்று இல்லை
வானே உயர்விந்து வந்த பதினான்கு
மான் நேர் அடங்க, அதன் பின்பு புத்தியும்,
தானே சிவகதித் தன்மையும் ஆமே.

உண்மையான உபதேசம் என்ன வென்று அறிந்து கொள்வீர். வானாக உயர்ந்த விந்துவாகிய அவனே இங்கு அனைத்திலும் கலந்துள்ளான். அவனன்றி இங்கு வேறு எதுவும் இல்லை. சீவனின் கர்ம இந்திரியங்கள் ஐந்து, ஞான இந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு என்ற பதினான்கும் அடங்கினால், சீவனின் ஆன்ம அறிவும் சிவனின் அகன்ற அறிவும் ஒன்றாகக் கலந்து விடும். அதுவே சீவன் சிவகதி அடைவது ஆகும்.

#1969. விந்து அடங்க விளையும் சிவோகம்

விந்துவும் நாதமும் விளைய விளைந்தது
வந்த இப் பல்லுயிர், மன் உயிர்க்கு எலாம்
அந்தமும் ஆதியுள் ஆம் மந்திரங்களும்
விந்து அடங்க விளையும் சிவோகமே.

நுண்ணிய விந்துவும், நாதமும் விளைவதால் இந்த உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் உடலும் வடிவமும் பெற்றன. இந்த விந்து, நாதங்களில் உயிர்களின் தோற்றம் அடங்கியிருப்பதைப் போலவே உயிர்களின் அந்தமும் அடங்கி உள்ளது. மந்திரங்களின் ஆற்றலும் இவற்றில் அடங்கியுள்ளது. அந்த விந்து அடங்கும் போது 'அகண்ட சிவம்' மாறிச் 'சிவம் அகம்' என்று ஆகிவிடும்.

#1970. அத்திப் பழம் வரும்

வறுக்கின்ற வாறும், மனத்து உலா வெற்றி
நிறுக்கின்ற வாறும் அன்நீள் வரை ஒட்டிப்
பொறிக்கின்ற வாறும் அப்பொல்லா வினையை
அறுக்கின்ற நாள் வரும் அத்திப் பழமே.

மறுபடியும் தோன்றாதபடி விந்துவை வறுக்கும் முறையை அறிந்து கொள்ள வேண்டும். இங்கும் அங்கும் உலாவிகின்ற மனத்தைத் நிறுத்தி வெற்றி கொள்ளும் முறையை அறிந்து கொள்ள வேண்டும். அதை உயரக் கொண்டு சென்று சகசிர தளத்தில் பொறிக்க அறிந்து கொள்ள வேண்டும். உள்ளம் நன்கு பக்குவம் அடைந்த பின்பு கொடிய வினைகளையும் வினைப் பயன்களையும் போக்கும் நாள் வரும். அப்போது பிறவி பிணி நீங்கும். சிவாக்கினி நன்கு பழுத்த ஒரு கனியாகும்.

#1971. அந்தர வானத்து அமுதம் வந்தூறும்

விந்துவும் நாதமும் மேவி யுடன் கூடிச்
சந்திர னோடேதலைப் படுமாயிடில்
அந்தர வானத் தமுதம் வந்தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே.

விந்துவும் நாதமும் மேவி, உடன் கூடி, உயரச் சென்று சந்திர மண்டலத்தில் அமையும் போது அந்தர வானத்தில் அமுதம் ஊற்றெடுக்கும். அங்கு உதிக்கும் பிரணவ மந்திரமே அங்குள்ள சிவாக்கினியில் இடுகின்ற ஆகுதி ஆகும்.

#1972. நாதனை நாடினால் நாதம் அமையும்

மனத்தொடு சத்து , மனம் செவி என்ன
இனைத்து எழுவார்கள் இசைந்தன நாடி;
மனதில் எழுகின்ற வாக்கு வசனம்
கனத்த இரதம் அக்காமத்தை நாடிலே.

மனத்தின் சத்து பாகம் கேள்விப் புலன் உணரும் நாத மயமானது. அது நாதமயமாக விந்துவுடன் சென்று பொருந்தும் போது, மனத்துடன் செவி போன்ற மற்ற புலன்களும் மேலே எழும்பிச் சென்று அங்கு ஈசனை நாடும். மனதின் அசத்து பாகத்தில் தோன்றுகின்ற நுன்மையான, பரு , வைகரி வாக்குகள் கீழான காமத்தை நோக்குமானால், அப்போது அது தூல வீரியமாகத் தோன்றும்.

#1973. ஒத்து அறியுமிடம் அத்தன் இருப்பிடம்

சத்தமும் சத்தமனமும் மனக்கருத்து
ஒத்துஅறி கின்ற இடமும் அறிகிலர் ;
மெய்த்து அறிகின்ற இடம் அறிவாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந் தானே.

நாதம், அதை உணரவல்ல மனம், அந்த மனத்தின் கருத்து என்று மூன்றையும் ஒருமித்துச் சிவன் அமைந்துள்ள இடத்தை எவரும் அறிவதில்லை. ஞானிகள், உள்ளத்தை உள்ளபடி அறிபவர்கள், சிவன் அமைந்துள்ள இடம் அதுவே என்ற அறிந்து கொள்வார்கள்.

#1974. பருவுடலில் பஞ்ச பூதங்கள்

உரம் அடி மேதினி; உந்தியில் அப்பாம்
விரவிய தன் முலை மேவிய கீழ் அங்கி
கருமுலை மீமிசை, கைக்கீழில் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி ஆமே.

வலிமையான பாதம் முதல் சுவாதிட்டானம் வரை நிலம் ஆகும். சுவாதிட்டானத்திலிருந்து நாபிப் பிரதேசம் வரை நீர் ஆகும். நாபியிலிருந்து மார்பு வரை தீயாகும். மார்பு முதல் தோள் வரை காற்றாகும். கழுத்தும் அதற்கு மேலும் வானம் ஆகும். பருவுடலில் பஞ்ச பூதங்கள் இங்ஙனம் அமைந்துள்ளன.

ஏழாம் தந்திரம் -
22. ஆதித்த நிலை

ஆதித்த நிலை - அண்டாதித்தன்
ஆதித்தன் = கதிரவன்
அண்டம் + ஆதித்தன் = அண்டாதித்தன்
அண்டத்தில் கதிரவன் விளங்கும் நிலையைக் கூறுவது.

#1975. தாம் சுடராகி ஒளிர்ந்திட வணங்குவர்!

செஞ்சுடரோன் முதலாகிய தேவர்கள்
மஞ்சு உடை மேரு வலம்வரு காரணம்
எம்சுடர், ஈசன், இறைவன் இணையடி
தம்சுட ராக வணங்கும் தவமே.

சூரியன் முதலான ஒளிரும் தேவர்கள், வெண்மேகம் சூழ்ந்த மேருமலையை வலம் வருவதன் காரணம் தெரியமா? சுடர்விட்டு ஒளிரும் ஈசனின் ஒளியைத் தாமும் பெறவேண்டும் என்ற ஆவலே அதற்குக் காரணம். மேரு மலையை வலம் வந்து வணங்குவதே அவர்கள் செய்கின்ற மா தவம்.

#1976. பல்லுயிர்க்கு பகலவன் ஆதி

பகலவன், மாலவன், பல்லுயிர்க் கெல்லாம்
புகல்அவனாய் நின்ற புண்ணிய நாதன்
இகலற ஏழு உலகும் உற ஓங்கும்
பகலவன், பல்லுயிர்க்கு ஆதியும் ஆமே.

கதிரவனே உயிர்களைக் காக்கும் கடவுளாகிய திருமால் ஆவான். கதிரவனே உயிர்களின் புகலிடமாகிய புண்ணிய நாதன் சிவபெருமான் ஆவான். ஏழு உலகங்களும் தழைத்து ஓங்கி வாழ உதவுகின்ற பகலவனே உயிர்களுக்கு முதல்வன் ஆவான்.

#1977. அன்பு பழுக்கின்றவாறே

ஆதித்தன் அன்பினோடு ஆயிர நாமமும்
சோதியின் உள்ளே சுடரொளியாய் நிற்கும்;
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே.

உள்ளன்புடன் கதிரவனின் ஆயிரம் பெயர்களையும் சொல்லி வணங்கினால் அவன் சீவனின் அண்டகோசத்தில் ஒரு பேரொளியாக நிற்பான். வேதியர்கள் கதிரவனைத் தொழுவதும், தேவர்கள் கதிரவனைத் துதிப்பதும் ஆதிப்பிரானின் அன்பைப் பெறுவதற்காகவே.

#1978. தானே தண்சுடர் ஆகும்

தானே யுலகுக்குத் தத்துவ னாய்நிற்கும்
தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்கும்
தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்கும்
தானே உலகுக்குத் தண்சுடர் ஆமே.

உலகின் தத்துவத்தின் தோற்றத்துக்குக் காரணம் ஆண்ட கோசத்தில் விளங்குகின்ற கதிரவனே ஆவான். அந்தக் கதிரவனே ஆன்மாவின் சக்தியும் ஆவான். அவனே ஆன்மாவில் உறையும் சிவனும் ஆவான். அவனே குளிர்ந்த நிலவொளி வீசும் சந்திரனும் ஆவான்.

#1979. அகத்தில் ஆதித்தனின் நிலை

வலையம் முக்கோணம், வட்டம் அறுகோணம்,
துலைஇரு வட்டம் துய்ய விதம் எட்டில்
அலையுற்ற மேல் வட்டத்தில் ஈரெட்டு இதழாம்
மலைவு அற்று உதித்தனன் ஆதித்தனாமே.

வட்டத்தினுள் முக்கோண வடிவம் கொண்ட மூலாதாரச் சக்கரம், வட்டத்தினுள் அறுகோண வடிவம் கொண்ட சுவாதிட்டானச் சக்கரம், தூய அகரக் கலை விளங்கும் மணிபூரகச் சக்கரம் இவற்றுக்கு மேலே அமைந்துள்ள, பதினாறு இதழ்களை கொண்ட விசுத்திச் சக்கரத்தில் உதிப்பான் கதிரவன்.

#1980. மூலாதாரத்தில் முக்கோணத்தில்

ஆதித்தன் உள்ளில் ஆன முக்கோணத்தில்
சோதித்து இலங்கும் நற்சூரியன் நாலாம்
கேதமுறுங் கேணி சூரியன் எட்டில்
சோதிதனில் நீட்டில் சோடசம் தானே.

உழலின் உள்ளே உள்ளான் கதிரவன். மூலாதாரத்தின் முக்கோணத்தில் கதிரவன் நான்கு கலைகளுடன் விளங்குவான். அவன் பதினாறு இதழ்களை உடைய விசுத்தியை அடையும் போது பதினாறு கலைகளை உடைய திங்கள் மண்டலம் அமையும்.

#1981. வேதப் பொருள் விளங்கும்

ஆதித்த னோடே அவனி இருண்டது
பேதித்த நாலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்குள் நின்று துடியிடை செய்கின்ற
வேதப் பொருளை விளங்குகிலீரே.

கதிரவன் மண்டலத்தை அடைந்தவுடன் உலக அறிவு கெட்டு விடும். உலக அறிவைப் பற்றிய சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும் பிதற்றல் ஒழியும். சோதியில் இருந்து கொண்டு வேதப் பொருளை உணர்த்துகின்ற சக்தி வெளிப்படுத்துகின்றதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை!

#1982. நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பான்

பாருக்கும் கீழே பகலோன் வரும்வழி;
யாருக்கும் காண ஒண்ணாத அரும் பொருள்
நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே.

நிலத்துக்கு உரிய சுவாதிட்டானத்துக்குக் கீழே உள்ளது மூலாதாரம். இங்கு கதிரவன் வரும் வழியை யோகியர் தவிர வேறு யாரும் அறியார். எவராலும் காண இயலாத கதிரவன் உடலில் உதிக்கும் இடம் எது தெரியுமா? நீருக்கு உரிய மணி பூரகத்துக்கும் நெருப்புக்கு உரிய அனாகதத்துக்கும் நடுவே யாருக்கும் எட்டாத ஆதித்தன் உதிப்பான்.

#1983. எண்ணும் கிழமைக்கு இசைந்து நிற்பான்

மண்ணை இடந்து அதின் கீழொடும் ஆதித்தன்
விண்ணை இடந்து வெளிசெய்து நின்றிடும்
கண்ணை இடந்து களிதந்த ஆனந்தம்
எண்ணும் கிழமைக்கு இசைந்து நின்றானே.

கதிரவன், மூலாதாரத்திலிருந்து நிலத்துக்கு உரிய சுவாதிட்டானத்தை இடர்ந்து கொண்டு மேல் நோக்கிச் சென்று, வானத்துக்கு உரிய ஆஞ்ஞையைப் பிளந்து கொண்டு, உடலுக்கு வெளியே பேரொளியாக நிற்பான். கண்ணை இடர்ந்து களி தரும் ஆனந்தத்தைத் தருகின்ற கதிரவன் நாம் எண்ணும் எண்ணங்களுக்கு இசைந்து நிற்பான்.

#1984. ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந்தார்

பாரை இடந்து பகலோன் வரும் வழி
யாரும் அறியார் , அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்
ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந்தாரே.

நிலத்தைப் பிளந்து கொண்டு கதிரவன் வரும் வழியை, உலகியல் அறிவைத் தரும் நூல்களை மட்டும் கற்றவர்களால் அறிய முடியாது. அவர்கள் மேரு மலையைக் கதிரவன் வலம் வருகின்றான் என்று கூறுவர். மேருமலையே சிரசு என்றும், சிவன் இருக்குமிடம் அதுவே என்றும், அறிந்து கொண்டவர் மட்டுமே உடலில் கதிரவன் வலம் வரும் முறையை அறிவர்.

ஏழாம் தந்திரம் -
23. பிண்டாதித்தன்

பிண்டம் = உடம்பு
ஆதித்தன் = கதிரவன்
உடலில் உள்ள கதிரவன் பிண்டாதித்தன்.

#1985. விரிசுடர் காணுமே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றாய நந்தி கருத்து ளிருன்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே.

நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல் என்ற பலவேறு செயல்களைச் செய்யும் போது, யானைக் கன்றினை ஒத்த சிவபெருமான் என் கருத்தினில் நிறைந்து இருந்தான். அதனால் நான் என் மன மலங்களை வெல்ல முடிந்தது. சூக்கும நாடி என்னும் சுழுமுனை வழியே நான் கீழே நோக்கமல் மேல் நோக்கிச் சென்றபோது பரந்த கதிர்களுடன் விளங்குகின்ற கதிரவனைக் காண முடிந்தது.

#1986. ஆதித்தன் அடங்கும் இடம்

ஆதித்தன் ஓடி அடங்கும் இடம் கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை உணர்ந்தவர்
பேதித்து உலகம் பிதற்றும் பிதற்று எல்லாம்
ஆதித்தனோடு அடங்குகின் றாரே.

ஆதித்தன் வலம் வந்த பின் அடங்கும் இடமாகிய ஈசானத்தைக் கண்டு கொண்டு, சகசிரதளத்தை அடைந்து அங்கு நிற்பவர் தம்மை உணர்ந்தவர் ஆவர். இதை அறியாமல் பல வேறு கருத்துக்ளைக் கொண்டவர், கீழே உள்ள கதிரவனை மேலே எழச் செய்யும் வகை அறியாமல் வீணே அழிந்து படுவர்.

#1987. உருகிக் கிடக்கும் உள்ளன்பு தானே

உருவிப் புறப்பட் டுலகை வலம் வந்து
சொருகிக் கிடக்கும் துறையறி வாரில்லை
சொருகிக் கிடக்கும் துறையறி வாளர்க்கு
உருகிக் கிடக்குமென் உள்ளன்பு தானே.

மூலாதாரத்திலிருந்து புறப்பட்டுக் கதிரவன், உலகம் ஆகிய உடலை வலம் வருகின்றான். பின்பு ஈசானத் திசையில் அவன் அடங்குகின்றான். இந்த உண்மையை மக்களில் பலரும் அறிவதில்லை.

இந்த உண்மையை அறியும் அறிவு உடையவர்களைக் கண்டால், என் உள்ளம் உருகி அன்பு அவரிடம் பாய்ந்து செல்லும்.

ஏழாம் தந்திரம் -
24. மனவாதித்தன்

மனத்தில் விளங்கும் கதிரவன்.

#1988. பௌர்ணமி ஆகும்

எறிகதிர் ஞாயிரும் மின்பனி சோரும்
எறிகதிர் சோமன் எதிர்நின்று ஏறிப்ப
இருகதிர் உள்ளே இயங்கும் என் ஆவி
ஒரு கதிர் ஆகில், உவாஅது ஆமே.

எரிக்கும் கதிர்களை எறியும் கதிரவன், மற்றும் ஒளியுடன் கூடிய பனியைச் சொரியும் திங்கள் இவை இரண்டும் மாறி மாறி உடலில் விளங்கும் போது, இந்த இரண்டு கதிர்களுடன் அவற்றின் உள்ளே இயங்குகின்ற என் ஆவியும் இணைந்து அவை முழுமை அடையும் போது தோன்றுவதே பௌர்ணமி என்னும் முழு நிலவு.

#1989. சிந்தை தெளிந்தவர் சிவம் ஆவார்

சந்திரன், சூரியன்தான் வரின் பூசனை;
முந்திய பானுவில் இந்து வந்து ஏய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்தில்
சிந்தை தெளிந்தார் சிவம்ஆயி னாரே.

முதலில் சூரியனிடம் சந்திர கலை வந்து முறைப் படிப் பொருந்தும். பின்பு சூரிய கலை சந்திர கலையில் வந்து பொருந்தும். இதுவே பூசனை முறை ஆகும். இந்த இரண்டு கலைகளும் தத்தம் இயக்கம் இன்றி மேல் நோக்கிய சகசிர தளத்தில் பொருந்தி நிற்கும் போது, சிந்தை தெளிந்தவர் சிவம் ஆகிவிடுவார்.

மூலாதாரத்தில் உள்ள அக்கினி திங்களுடன் பொருந்தினால் கதிரவன் உடலின் வலப்பக்கம் உதிப்பான். உதித்த கதிரவன் மூலாதாரத்தில் உள்ள அக்கினியுடன் கூடிப் பின்னர் சகசிர தளத்தில் மேல் நோக்கிச் செல்வான்.

#1990. பூரணையாகும்

ஆகும் கலையோ டருக்கன் அனல்மதி
ஆகும் கலையிடை நான்கென லாமென்பர்
ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற
ஆகுமப் பூரணை யாமென் றறியுமே.

திங்கள், கதிரவன், மூலாதாரத்தின் அக்கினி என்ற மூன்றும பொருந்தும் போது சீவனின் உடலில் மதி மண்டலம் உண்டாகும். இந்த மதி மண்டலத்தில் ஆன்ம ஒளியும் கலந்து நான்கு கலைகள் ஆகிவிடும். குண்டலினியின் அக்கினி, கதிரவன், சந்திரன் என்னும் மூன்றும் ஒன்றாகப் பொருந்துவதே பௌர்ணமி என்று அறிந்து கொள்வீர்.

#1991. பேரண்டத்தூடே பிறங்கொளி

ஈரண்டத்து அப்பால் இயங்கிய அவ்வொளி
ஓர் அண்டத்தார்க்கும் உணரா உணர்வது;
பேரண்டத்தூடே பிறங்கொளியாய் நின்றது
ஆர் அண்டத் தக்கார் அறியத்தக் காரே.

தீ மண்டலம், கதிரவ மண்டலம் என்னும் இரண்டு மண்டலங்களைக் கடந்து விளங்குவது ஆகும் சந்திர மண்டலம். அதன் ஒளி காம உணர்வோடு வாழும் மக்களுக்குப் புலனாகாது. தலைக்கும் மேலே விளங்குகின்ற பிரம்மண்டத்தைக் கிழித்துக் கொண்டு ஒளி விடுபவர் யார்? அந்த உயரிய நிலையை அடைந்தவரே அந்த ஒளியினை அறிந்து கொள்ள முடியும்!

#1992. அருள் இலார் இருள் நிற்பர்

ஒன்பதில் மேவி உலகம் வலம் வரும்,
ஒன்பதும் ஈசன் இயல் அறிவார் இல்லை
முன்பு அதில் மேவி முதல்வன் அருள் இலார்
இன்பம் இலார் இருள் சூழ நின்றாரே.

மன மண்டலத்தில் இருக்கும் கதிரவன், உடலில் உள்ள ஒன்பது தத்துவங்களிலும் பொருந்தி, உடல் என்னும் உலகத்தை வலம் வரும். இந்த ஒன்பது தத்துவங்களும் ஈசனின் சக்தி நிலை என்று அறிந்து கொண்டவர்கள் இல்லை. ஆன்மா இந்த ஒன்பது தத்துவங்களில் பொருந்தி உள்ளது. எனினும் சிவன் அருள் பெறாதவர் இன்பம் பெறமுடியாமல் இருள் சூழ்ந்த அண்ட காயத்தைச் சென்று அடைவர்.

விளக்கம்:

ஒன்பது தத்துவங்கள்:
1. மண், 2. நீர், 3. தீ, 4. காற்று, 5. வானம், 6. கதிரவன், 7. திங்கள்,. 8. அக்கினி, 9. விண்மீன்.

#1993. உள்ளத்தே அருணோதயம்

விந்து அபரம், பரம் இரண்டாய் விரிந்து
அந்த அபரம் பரநாதம் ஆகியே
வந்தன தம்மில் பரம்கலை ஆதி வைத்து
உந்தும் அருணோதயம் என்ன உள்ளத்தே.

ஒரே விந்து இரண்டாக விரியும். அது தூலமான அபரவிந்து என்றும் சூக்குமமான பரவிந்து என்றும் இரண்டாகும். தூல விந்துவே மேல் நோக்குடன் இருக்கும் போது பரநாதம் ஆகும். அப்போது நிவிருத்தி போன்ற ஐந்து பரங்கலைகள் தோன்றும். அதனால் ஞானக் கதிரவனின் உதயம் நிகழும்.

விளக்கம்:

தூல அபரவிந்து வீரியம் ஆகிவிடும். சூக்குமமான பரவிந்து ஒளி ஆகிவிடும்.

#1994. ஐங்கலைக்கு ஓர் உதயம்

உள்ள அருணோதயத்து எழும் ஓசை தான்
தெள்ளும் பரநாதத் தின்செயல் என்பதால்,
வள்ளல் பரவிந்து வைகரி ஆதிவாக்கு
உள்ளன ஐந்கலைக்கு ஒன்றாம் உதயமே.

மன மண்டலத்தில் உதய சூரியன் போல உதிக்கும் ஒலியே தெளிவான பரநாதத்தின் செயல் ஆகும். இந்தப் பரவிந்துவுடன் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் கூடும் பொழுது நிவிருத்தி போன்ற ஐந்து கலைகள் தோன்றும்.

#1995. திசைகள் பத்திலும் உதயம் செய்வான்

தேவர் பிரான்திசை பத்துஉத யம்செய்யும்
மூவர் பிரான் என முன் ஒரு காலத்து
நால்வர் பிரான் நடு வாய்உரை யாநிற்கும்
மேவு பிரான் என்பர் விண்ணவர் தாமே.

சிவன் பத்துத் திசைகளிலும் உதித்து வெளிப்படுவான். பண்டைக் காலத்தில் இவனை மூவர் பிரான் (மூவர் = நான்முகன், திருமால், உருத்திரன்) என்று கூறி வந்தனர். பிற்காலத்தில் இவனை நால்வருள் நடுநாயகம் (நால்வர் = நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன்) என்று புகலுகின்றனர். விண்ணகத் தேவர்கள் இவனைத் தங்களின் தன்னிகரற்ற தலைவன் என்று போற்றுவர்.

ஏழாம் தந்திரம் -
25. ஞானாதித்தன்

ஞானாதித்தன் = ஞானக் கதிரவன்.

#1996. கை இருள் நீங்கக் கலந்து எழுந்தான்

பொய் இலன்,மெய்யன்; புவனாபதி எந்தை
மை இருள் நீக்கும் மதிஅங்கி, ஞாயிறு,
செய் இருள் நீக்கும் திருவுடை நந்தி என்
கை இருள் நீங்கக் கலந்து எழுந்தானே.

உலகங்களின் தலைவனும், என் தந்தையும் ஆகிய சிவபெருமான் வெறும் கற்பனையின் படைப்பு அல்ல. அவன் உணமையாகவே உள்ளவன் தான். திங்கள், கதிரவன், அக்கினி என்ற மூன்றும் அண்ட கோசத்தில் கீழ் முகமாக இயங்கின. அப்போது அங்கு இருள் நிறைந்து இருந்தது. அந்த மை இருளை நீக்குவதற்காக என் நந்தி பிரான் கீழிருந்து மேல் வரைக் கலந்திருந்தான்.

#1997. கனிச் சுடராய் நின்ற கயிலை ஈசன்

தனிச்சுடர் ஏற்றித் தயங்கு இருள் நீங்க
அனித்திடும் மேலை அருங்கனி ஊறல்
கனிச்சுட ராய்நின்ற கயிலையில் ஈசன்
தனிச்சுடர் மேல் கொண்ட வண்ணமும் ஆமே.

சிவ ஒளியானது தன்னிகர் அற்ற ஒரு சுடர். அது அண்ட கோசத்தில் நிறைந்து இருந்த இருளை நீக்கியது. இனிக்கும் அருங் கனியின் சுவையைப் போல அமுதம் ஊறச் செய்தது.. கனிந்த சுடர் போல் நிற்கும் கயிலையின் ஈசன், ஒரு ஒப்பற்ற சுடராக என் தலை மீதும் விளங்கும் தன்மை உடையவன்.

#1998. ஆர் அறிவார் இது நாயகம் என?

நேர்அறி வாக நிரம்பிய பேரொளி
போர்அறி யாது, புவனங்கள் போய் வரும்;
தேர் அறியாத திசை யொளி ஆயிடும்
ஆர் அறிவார் இது நாயகம் ஆமே.

உண்மை அறிவாகத் திகழும் சிவப் பேரொளி ஆன்மாவிடம் நிரம்பி இருக்கும். அது தங்கு தடை இன்றி எல்லா உலகங்களிலும் விரவி நிற்கும். இதன் ஆழத்தை ஒருவனாலும் தெரிந்து கொள்ள முடியாது. இதுவே புவனங்களின் நாயகன் வீசும் ஒளி என்ற உண்மையை யார் அறிவார்?

#1999. நின்றவிடத்தே நிலை நேர் அறிவார்

மண்டலத் துள்ளே மலர்ந்து எழும் ஆதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி ஆயிடும்
சென்ற இடத்து எட்டுத்திசை எங்கும் போய்வரும்
நின்றிடத்தே நிலை நேர் அறிவார்க்கே.

சுவாதிட்டானத்தில் இருந்து மலர்ந்து எழுகின்ற கதிரவன், ஞான ஆதித்தனாக மன மண்டலத்தில் ஒளிர்வான். இதனைத் தான் இருக்கும் இடத்திலேயே அறிந்து உ ணர்ந்து கொண்ட ஒரு ஞானிக்குத் தான் இருக்கும் இடத்திலிருந்தே எட்டுத் திசைகளில் எங்கும் போய் வரும் ஆற்றல் வாய்க்கும்.

#2000. சுடர் விடும் சோதி

நாபி, கண், நாசி, நயனநடுவினும்
தூபியோடு ஐந்தும் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன், திருமால், பிரமனும்
மூவருமாக உணர்ந்திருந் தாரே.

உந்தி, கண், மூக்கின் நுனி, புருவங்களின் மத்தி, உச்சித் துளையாகிய பிரமரந்திரம் என்ற இந்த ஐந்து இடங்களிலும் சுடர் விட்டு ஒளிர்கின்ற சோதியைத் தேவர்களும், ஈசன், திருமால், பிரமன் என்ற மூவர்களும் நன்கு உணர்ந்து கொண்டு இருந்தனர்.

ஏழாம் தந்திரம் -
26. சிவாதித்தன்

சிவன் ஆகிய ஆதித்தன்.

#2001. அருணோதயத்தில் இருள்போல் நீங்கும்

அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்
சென்றிடும் ஞானச் சிவப் பிரகாசத்தால்;
ஒன்றும் இரு சுடராம், அருணோதயம்
துன்று இருள் நீங்குதல் போலத் தொலைந்ததே.

சீவனை பந்தப்படுத்தும் பாச இருளும், அதன் விளைவாகத் தோன்றும் அஞ்ஞானமும், சிவாதித்தனின் ஒளிக்கதிர் வீச்சில் அழிந்துவிடும். கதிரவன் உதிக்கும் முன்பு தோன்றும் அருணோதயத்தில், கரிய அடர்ந்த இருள் தொலைவதைப் போல அவை இரண்டும் தொலைந்து போய்விடும்.

#2002. மேவிய காயத்து அடங்கும் பரிசு

கடம்கடந் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடம் கொண்ட கண்டனும் மேவிய கையது
அடங்கிட நின்றதும் அப்பரி சாமே.

நீர் நிறைந்த குடங்கள் அனைத்திலும் கதிரவன் பிரதிபலிப்பான். அவனை அவற்றுள் அடங்கும்படி மூடி வைத்தாலும், அவன் அந்தக் குடங்களுக்குள் அடங்கிவிட மாட்டான். அவன் உலகெங்கிலும் ஒளி வீசிக் கொண்டு தான் இருப்பான். விடம் உண்ட நீலகண்டப் பெருமானும் அங்ஙனமே. அவன் விருப்பத்துடன் எல்லா சீவன்களிலும் எழுந்தருளினாலும், அவற்றில் அவன் அடங்கி விட மாட்டான்.

#2003. விரிசுடர் மூன்றும் ஒன்றாம்

தானே விரிசுடர்மூன்றும் ஒன்றாய் நிற்கும்
தானே அயன் மால் என நின்று தாபிக்கும்
தானே உடல், உயிர் வேறு அன்றி நின்றுளன்
தானே வெளி ஒளி தான் இருட்டு ஆகுமே.

சிவபெருமான், தானே பரந்த கதிர்களை உடைய சூரியன், தண்ணொளி பொழியும் நிலவு, சுட்டு எரிக்கும் அக்கினி என்ற மூன்றும் பொருந்திய ஒரு பேரொளியாக நிற்கின்றான். சிவபெருமான், தானே திருமால், தானே நான்முகன் என்று நின்று, தானே தலைவன் என்பதைத் தாபிக்கின்றான். சிவபெருமான் தானே சீவர்களின் அறிவற்ற உடலிலும், அறிவுற்ற உயிரிலும், பிரிவின்றிக் கலந்து நிற்கின்றான். அவனே ஒளியாகவும், அவனே வெளியாகவும், அவனே இருளாகவும் நிற்கின்றான்.

#2004. ஐவர்க்கு இடம் ஆறு அங்கம்

தெய்வச் சுடர் அங்கி, ஞாயிறும், திங்களும்,
வையம், புனல், அனல், மாருதம், வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க்கு இடம் இடை ஆறு அங்கமே.

தெய்வத் தன்மை பொருந்திய சிவாக்கினி, கதிரவன், திங்கள், வையகம், புனல், அனல், மாருதம், வானகம் என்னும் எட்டு இடங்களும் சிவபெருமான் உறைகின்ற திருமேனிகள் ஆகும். இந்தத் திருமேனிகளைத் தாங்குகின்ற பல்லுயிர்களும், சத்தியோசாதர், வாமதேவர், அகோரர், தத்புருடர், ஈசானர் என்ற ஐவரும் பொருந்து இடங்கள் ஆறு. அவை இதயம், தலை, சிகை, கவசம், நேத்திரம், அத்திரம்.

ஏழாம் தந்திரம் -
27. பசு இலக்கணம்

கட்டப்பட்ட பசுவின் இலக்கணம்.

#2005. ஈசன் அம்ச வடிவானவன்

உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னும் மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயம் என்று அறிந்து கொண்டேனே.

அவனை இடையறாது உன்னுவதம் மூலமே உணர்ந்து கொண்டு விடலாம் . அவனை மறைகள் அனைத்தும் பன்னிப் பன்னிப் புகழ்ந்து போற்றுகின்றன. என்னுள் அவன் ஒரு தூண்டா விளக்காக உறைந்துள்ளான். அவன் அம்ச வடிவினன் என்று நான் அறிந்து கொண்டேன்.

#2006. மடவன்னம் பேறு அணுகாது!

அன்னம் இரண்டு உள ஆற்றங் கரையினில்
துன்னி இரண்டும் துணை பிரியாதன்னம்;
தன்னிலை அன்னம் தனி ஒன்று அது என்றக்கால்
பின்ன மடவன்னம் பேறு அணுகாதே.

சீவனின் வாழ்வு என்னும் நதிக்கரையில் இரண்டு அன்னங்கள் இருக்கின்றன. அவை ஒன்றை விட்டு ஒன்று இணை பிரியாதவை என்றாலும், சீவன் ஆகிய அன்னம் சிவன் ஆகிய அன்னத்தைத் தன்னிலும் வேறானதாகக் கருதி வாழ்ந்திருந்தால், அறியாமையில் அமிழ்ந்துள்ள அந்த மட அன்னம் என்றுமே உயரிய சிவப் பேற்றை அடையாது.

ஏழாம் தந்திரம் -
28. புருடன்

புருடன்: காலம் முதல் அராகம் ஈறாக ஐந்தையும் பொருந்திப் போகத்துக்கு உன்முகப்பட்டு நிற்கும் ஆன்மா.

#2007. ஆத்மா ஞானம் பெறவதற்கே

வைகரி யாதியு மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானம் கிரியா விசேடத்துச்
செய்கரி ஈசனனாதி செய்ததே.

வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை என்னும் வாக்குகள், மாயை முதலிய மலங்களும், பொய்யான இன்பங்களை அனுபவிக்கும் புருடன் முதலிய வித்தியா தத்துவங்கள்; பிறவிப் பிணியை நீக்கும் ஞானம் இவற்றை ஈசன் அனாதி காலத்தில் செய்தது எதற்கு என்று தெரியுமா? உலகில் உதித்த உயிர்கள் அனைத்தும் உய்வடையும் பொருட்டே ஈசன் இவற்றை அமைத்துள்ளான்.

வாக்குகள் நான்கு:-
வைகரி = செவி ஓசை

மத்திமை = மிடற்று ஓசை
பைசந்தி = நினைவு ஓசை
சூக்குமை = நுண் ஓசை

மலங்கள் மூன்று:- ஆணவம், கன்மம், மாயை.

வித்தியா தத்துவங்கள் ஏழு:-
காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி

#2008. அணுவில் அணுவை அணுகலும் ஆமே

அணுவில் அணுவினை, ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரம் கூறு இட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே.

அணுவுக்குள் உள்ள அணுவை ஓராயிரம் கூறாக ஆக்குங்கள். அந்த ஆயிரத்தில் ஒரு கூற்றை உம்மால் நெருங்க முடிந்தால், அப்போது அணுவுக்குள் அணுவாக உள்ள ஆதிப் பிரானை உம்மால் அணுகவும் முடியும், அவனை அடையவும் முடியும்.

#2009. நடர் கொண்ட நல்வழி நாடலும் ஆமே

படர்கொண்ட ஆலதின் வித்துஅது போலச்
சுடர் கொண்ட அணுவினைத் தூவழி செய்ய,
இடர்கொண்ட பாச இருள்அற ஓட்டி
நடர் கொண்ட நல்வழி நாடலும் ஆமே.

எங்கும் படர்ந்து பரவி வளரும் தன்மை ஒரு சிறு ஆல விதைக்குள் ஒளிந்துள்ளது. அது போன்றே பாசங்களும், பந்தங்களும், அவற்றை நீக்குவதற்குத் தேவையானவையும் ஒரு சிறு ஆன்மாவில் ஒளிந்துள்ளன. ஆன்மாவை இறையருளால் நல்வழிப் படுத்த வேண்டும். அப்போது துன்பங்களைத் தோற்றுவிக்கும் அறியாமை என்ற இருளை முற்றிலுமாக அழித்துவிட முடியும். சீவன் சிவனையும் சிவகதியையும் நாடவும் அடையவும் முடியும்.

2010. அணுவுள் அவனும், அவனுள் அணுவும்

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுஅற நின்ற கலப்பது உணரார்
இணையிலி ஈசன் அவன் எங்கும் ஆகித்
தணிவுஅற நின்றான் சராசரந் தானே.

அணுவைப் போன்ற சீவனுக்குள் சிவன் இருக்கின்றான். அணுவைப் போன்ற சீவன் சிவனுக்குள் இருக்கின்றது. சிவனும் சீவனும் பிரிவு அறக் கலந்து நிற்பதை எவரும் உணருவதில்லை. இணையற்ற ஈசன் இங்கு அங்கு என்னாதபடி எங்கும் நிறைந்துள்ளான். அவன் இயங்கும் பொருட்கள், இயங்காப் பொருட்கள் என்று அனைத்திலும் இடைவெளி இன்றி நிறைந்துள்ளான்.

ஏழாம் தந்திரம் -
29. சீவன்

சீவன் = உயிர் = ஆன்மா.

#2011. ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே

மேவிய சீவன் வடிவுஅது சொல்லிடில்
கோவின் மயிர்ஒன்று நூறு உடன் கூறுஇட்டு
மேவிய கூறுஅது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே.

உடலில் பொருந்தி இருக்கும் உயிரின் அளவு என்ன என்று தெரியுமா? பசுவின் மயிர் ஒன்றை நூறு கூறாக ஆக்குங்கள். அதில் ஒன்றை எடுத்து அதை மேலும் ஆயிரம் கூறாக ஆக்குங்கள். அதுவே உயிரின் அளவு ஆகும். புருடன் பசுவின் ஒரு மயிர் அளவு என்றால் அவன் உயிர் அதில் லட்சத்தில் ஒரு பங்கு ஆகும்.

#2012. தானே அறியும் தவத்தின் அளவே

ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

ஏனைய தெய்வங்களைக் காட்டிலும் பெருமை வாய்ந்தவன் எம் ஈசன். ஆயினும் தன் தனிப் பெருங் கருணையினால் இந்த சிறு உடலிலும் அதன் உயிராக வந்து பொருந்துகின்றான். வானோர்களும் அறிந்து கொள்ள முடியாத அளவினனாகிய அவனைச் சீவன் தான் செய்யும் தவத்தின் அளவுக்கு ஏற்ப அறிந்து கொள்ள முடியும்.

#2013. சிவன் உருக் கொள்வர்

உண்டு, தெளிவன் உரைக்க வியோகமே
கொண்டு பயிலும் குணமில்லை ஆயினும்
பண்டு பயிலும் பயில் சீவனார் பின்னைக்
கண்டு சிவன் உருக் கொள்வர் கருத்துளே.

யோகத்தில் பொருந்திப் பயில்வதற்குத் தேவையான ஈடுபாடு இல்லாதவன் ஆயினும், யோகத்தால் தெளிவடைந்த ஒரு நல்ல குருநாதனிடம் பெறுகின்ற உபதேசத்தாலும், முன்பு கொண்டிருந்த பழைய வாசனையாலும், எத்தனையோ பிறவிகளில் செய்த தன் விடாமுயற்சியாலும், ஒருவன் சிவ வடிவம் பெற முடியும்.

#2014. ஆய துரியம் புகுந்து அறிவாகும்

மாயா உபாதி வசத்து ஆகும் சேதனத்து
ஆய குரு அருளாலே அதில் தூண்ட,
ஓயும் உபாதியோடு ஒன்றினொன் றாதுஉயிர்
ஆய துரியம் புகுந்து அறிவகுமே.

மாயையின் செயல் தனு, கரணம், புவனம், போகம் இவற்றால் உயிருக்கு ஓயாத துன்பம் விளைவிப்பது ஆகும். துன்பத்தில் தத்தளிக்கும் உயிரைக் காத்துத் துரிய நிலைக்குக் கொண்டு செல்வது எங்ஙனம்? ஆய அறிவுடைய குருவின் அருளால் அது தூண்டப் பட வேண்டும். மாயையின் உபாதிகளில் அது பொருந்தாமல் முயற்சியுடன் பயிற்சி செய்து வரவேண்டும். அப்போது உயிர் ஞான வடிவாகித் துரியத்தில் துயர் இன்றி விளங்கலாம்.

ஏழாம் தந்திரம் -

30. பசு

பசு = கட்டப்பட்டுள்ள உயிர்.

#2015. மற்றைப் பசுக்கள் வறள் பசுக்கள்

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
முற்ற பசுக்க ளொருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே.

வேதங்கள், ஆகமங்கள் இவற்றைக் கற்ற பின்பும் அனுபவ அறிவு இல்லாமல் புலம்பிக் கொண்டு உலகில் திரிவார்கள் சிலர். கோவலனிடம் கொண்டுள்ள செல்வாக்கையும், அவனிடம் பெற்ற விருதுகளையும் காட்டிக் கொண்டு உலகில் திரிவார்கள் சிலர். முதிர்ந்த அனுபவ அறிவு கொண்ட ஒருவரே உலகத்தோர்க்கு உதவுகின்ற ஞானப் பாலைத் தருகின்ற வள்ளல் பசு ஆவார். மற்றவர்கள் அனைவரும் பால் சுரக்காத வறண்ட பசுக்களைப் போன்றவர்களே.

#2016. கொல்லை செய் நெஞ்சம் குறிப்பு அறியாது

கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்வதுஎன்
எல்லை கடப்பித்து இறைவன் அடிகூட்டி
வல்ல செய்து ஆற்ற மதித்தபின் அல்லது
கொல்லை செய் நெஞ்சம் குறிப்பு அறியாதே.

சுவாதிட்டானம் என்னும் வயலில் மேய்ந்து காமச் செயல்களில் ஈடுபடும் பசுக்களை என்ன செய்வது?

முதலில் அவற்றைக் காம எல்லையைக் கடக்கச் செய்ய வேண்டும். பின்னர் அவற்றை ஈசன் அடிகளை நோக்கிச் செலுத்த வேண்டும். அவை திருவருளைப் பெறும் ஆற்றலை உண்டு பண்ண வேண்டும்.அவற்றைச் சிவஞானியர்கள் கூட்டத்தில் சேர்க்க வேண்டும். இல்லையேல் கொல்லை வயலில் மேயும் உள்ளக் கருத்தை அவர்கள் மாற்றிக் கொள்ள மாட்டார்கள்.

ஏழாம் தந்திரம் -
31. போதன்

போதன் = சிவஞானி
சிவஞானத்தைத் தன் அனுபவத்தால் கண்டு உணர்ந்து கொண்டவன்.

#2017. சீவனார் சிவனார் ஆகிவிடுவார்!

சீவன் எனச் சிவனார் என்ன, வேறு இல்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்;
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவன் ஆயிட்டு இருப்பரே.

சீவன், சிவன் என்று இரு வேறு பொருட்கள் இல்லை. சீவத் தன்மையில் இருக்கும் வரை சீவனால் சிவனை அறிந்து கொள்ள இயலாது. சீவன் சிவனை அறியும் ஞானம் பெற்றவுடன் சீவனே சிவனாக மாறிவிடுவான்.

#2018. கண விளக்கு ஆகிய கண்காணி ஆவான்

குணவிளக்கு ஆகிய கூத்தப் பிரானும்
மணவிளக்கு ஆகிய மன்உயிர்க் கெல்லாம்
பணவிளக்கு ஆகிய பல்தலை நாகம்
கணவிளக்கு ஆகிய கண்காணி ஆமே.

கூத்தர் பிரான் ஒரு அற்புதமான குணவிளக்கு. பக்குவம் அடைந்த பின்பு, பல தலைகளை உடைய ஒரு பாம்பின் படங்களில், விளக்கு போன்று அற்புத நாகமணிகள் ஒளிரும். அதைப் போன்றே உயிர்க் கூட்டத்தை மேற்பார்வை செய்யும் கண்காணி ஆகிய ஈசன், அவை பக்குவம் அடைந்தவுடன் அவற்றுக்குத் தன் ஒளியை அளிப்பான்.

#2019. அறியாமை நீங்கியவன்

அறிவாய், அறியாமை நீங்கி யவனே
பொறிவாய் ஒழிந்து எங்கும் தான் ஆன போதன்,
அறிவாய் அவற்றினுள் தானாய் அறிவன்
செறிவு ஆகி நின்ற அச்சீவனும் ஆமே.

அறிவு வடிவானவன் சிவன். அவன் அறியாமை என்பதே இல்லாதவன். ஐம்புலன்களின் உதவி இன்றியே அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஞான வடிவானவன். அறிவும் அவனே. அறிவை அறிபவனும் அவனே. அறிவில் பொருந்தி நிற்கும் சீவனும் அவனே.

#2020. ஆறாறுக்கு அப்புறம் ஆகி நின்றான்

ஆறாறின் தன்மை அறியாது இருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி;
ஆறாறின் தன்மை அருளால் அறிந்த பின்
ஆறாறுக்கு அப்புறம் ஆகி நின்றானே.

ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களை நான் அறியாமல் இருந்தேன். ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களை எனக்கு உணர்த்தினான் என் நந்திப் பெருமான். ஆறாறு தத்துவங்களை நான் அவன் அருளால் அறிந்து கொண்ட பின்னர், அவன் அந்த ஆறாறு தத்துவங்களைக் கடந்து நின்றான்.

முப்பத்தாறு தத்துவங்கள்:-

1. சிவ தத்துவங்கள்.............. 5
2. வித்தியா தத்துவங்கள்......7
3. ஆன்ம தத்துவங்கள்.........24

சிவதத்துவங்கள் ஐந்து:-

1. நாதம். 2. விந்து. 3. சாதாக்கியம் 4. ஈசுவரம். 5. சுத்த வித்தை

வித்தியா தத்துவங்கள் ஏழு:-

1. காலம், 2. நியதி, 3. கலை, 4. வித்தை, 5. ராகம், 6, மாயம், 7. புருடன் (ஆன்ம

ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு:-

பஞ்ச பூதங்கள் (நிலம், நீர், நெருப்பு, வளி, வெளி)..............................5
பஞ்ச தன்மாத்திரைகள் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம்)............5
பஞ்ச ஞானேந்திரியங்கள் (கண், நாசி, நாவு, செவி, தோல்).............5
பஞ்ச கர்மேந்திரியங்கள் (வாக்கு, பாணி, பாதம், குய்யம், குதம்).....5
அந்தக் கரணங்கள் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்)......................4

#2021. நவமான தத்துவம் நாடகிலரே

சிவம் ஆகிய அருள், நின்று அறிந்து ஓரார்
அவம் ஆம் மலம் ஐந்தும் ஆவது அறியார்
தவம் ஆன செய்து தலைப்பறி கின்றார்
நவமான தத்துவம் நாட கிலாரே.

பிரிவின்றி சிவத்துடன் சீவன் பொருந்தி இருக்கும் ததிருவருளை அறிந்து சித்தம் தெளிய மாட்டார். துன்பங்களைத் தரும் ஐந்து மலங்கள் தம்மிடம் எவ்வாறு பொருந்தி உள்ளன என்பதையும் அறியார் கடினத் தவம் செய்து தம்மைத் தாமே வருத்திக் கொள்கின்றனர். தோழமை நெறியில் எளியவனாக உள்ள சிவனை இவர்கள் அறியார். என்னே இவர் தம் அறியாமை!

#2022. நாதன் நல்லோர்க்கருள் நல்குவான்

நாள்தோறும் ஈசன் நடத்தும் தொழில் உன்னார்
நாள்தோறும் ஈசன் நயந்து ஊட்டல் நாடிடார்
நாள்தோறும் ஈசன் நல்லோர்க்கு அருள் நல்கலால்
நாள்தோறும் நாடார்கள் அந்நாள் வினையாளரே.

நாள் தோறும் வினைகளைச் செய்து வருபவர்கள் ஈசன் நமக்குச் செய்யும் அருட்செயல்களை நினைவில் கொள்ளார். நம் வினைகளுக்கு ஏற்ற பயன்களை அவன் அன்புடன் ஊட்டுவதையும் அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார். நாள் தோறும் ஈசன் நல்லவர்களுக்கு அருள் நல்குவதை அறியாதவர்கள், நாள் தோறும் பல்வேறு வினைகளில் ஈடுபடுகின்றனர்.

ஏழாம் தந்திரம் -
32. இந்திரியங்களை அடக்கும் அருமை

ஐம் பொறிகளையும் ஐம் புலன்களின் மேல் செல்லாமல் அடக்குகின்ற பெருமை.

#2023. ஆக மதத்தன ஐந்து களிறுகள்

ஆக மதத்தன ஐந்து களிறுகள் உள,
ஆக மதத்தறி யோடு அணை கின்றில;
பாகனும் எய்த்து, அவை தாமும் இளைத்த பின்
யோகு திருந்துதல் ஒன்று அறியோமே.

சீவன் உடலில் மிகுந்த மதம் பொருந்திய ஐந்து வலிமையான யானைகளைப் போல ஐந்து பொறிகள் உள்ளன. அவைகளைக் கட்டுத் தறியில் இணைப்பதும் மிகவும் கடினமான செயல். ஆன்மா என்னும் யானைப் பாகன் இளைத்துத் தளர்ந்து போன பிறகு, அந்த யானைகளும் வலுவிழந்த பிறகு, அவன் அவற்றை யோக நெறியால் திருத்துவது எதற்கு என்று எனக்குத் தெரியவில்லை. பொறிகள் நல்ல நிலையில் இருக்கும்போதே யோகத்தால் அவற்றை வசப்படுத்த வேண்டும்.

#2024. வருத்தினும் வழி நடவாதே

கருத்தின் நன்னூல் கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா,
எருத்து உற ஏறி இருக்கிலும் ஆங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே.

கருத்துள்ள நல்ல நூல்களைக் கற்றறிந்து, பிராண வாயுவைக் கட்டுபடுத்திய பின்பு, ஆன்மா தன் ஐந்து பொறிகளைத் திருத்தி அமைக்க வேண்டும். வேகமாகப் பாய்ந்து செல்லும் பொறிகளை திருத்தி அமைத்த பின்பு, பாகன் அதன் மீது வலிமையுடன் அமர்ந்து இருந்த போதிலும், அதை வருத்திச் செலுத்த முயன்ற போதிலும் அது முன்பு போன வழியில் நடவாது.

#2025. கோல் கொண்டு மேய்ப்பான் ஒருவன்

புலம் ஐந்து, புள் ஐந்து, புள் சென்று மேயும்
நிலம் ஐந்து , நீர் ஐந்து, நீர்மையும் ஐந்து,
குலம் ஒன்று, கோல் கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம் வந்து போம் வழி ஒன்பது தானே.

பஞ்ச பூதங்கள் ஆகிய இடங்கள் ஐந்து. ஞானேந்திரியங்கள் என்னும் பறவைகள் ஐந்து. அவை சென்று மேய்கின்ற நிலம் ஆகிய தன்மாத்திரைகள் ஐந்து. இயங்கும் தனமை கொண்ட கர்மேந்திரியங்கள் ஐந்து. அவற்றின் செல்பாடுகளும் ஐந்து. இவை அனைத்தையும் இணைக்கும் மாயை ஒன்று. அறிவு என்னும் கோலைக் கொண்டு இவற்றை மேய்க்கும் ஆன்மா ஒருவன். அவனை வருத்தும் உடலில் இருப்பதோ ஒன்பது வாயில்கள்.

#2026. எஞ்சாது இறைவனை எய்தலும் ஆம்

அஞ்சு உள சிங்கம், அடவியில் வாழ்வன,
அஞ்சும் போய் மேய்ந்து தம் அஞ்சு அகமே புகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே.

உடல் என்னும் காட்டில் பொறிகள் என்னும் ஐந்து சிங்கங்கள் உள்ளன. அவை ஐந்தும் தினமும் அகத்தை விட்டுப் புறத்தில் சென்று அங்குள்ள பொருட்களைப் பற்றி நிற்கும். பின்பு மீண்டும் அவை அகத்தே வந்து சேரும். புற விஷயங்களில் ஈடுபாடு கொண்டுள்ள மனத்தையும், புற விஷயங்களில் ஈடுபடுகின்ற கருவிகளையும், நாம் முயன்று அடக்கி விட்டோம் என்றால் உறுதியாக இறைவனைச் சென்று அடைய முடியும்.

#2027. ஐவரும் ஐந்து சினத்தோடே நின்றால்!

ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்,
ஐவரும் ஐந்தருஆளக் கருதுவர்,
ஐவரும் ஐந்து சினத்தோடே நின்றிடில்
ஐவர்க்கு இறை இறுத்து ஆற்றகி லோமே.

உடலின் ஐந்து பொறிகள் ஐந்து அமைச்சர்கள் என்றால், அவர்களுக்குத் தத்துவங்கள் என்ற பெயருள்ள தொண்ணூற்றாறு பிள்ளைகள் உள்ளார்கள். இந்த ஐந்து அமைச்சர்களும், அவர்களின் தொண்ணூற்றாறு பிள்ளைகளும் தத்தம் விருப்பம் போல நம்மை ஆள முயற்சி செய்வார்கள். இந்த ஐவரும் ஐந்து வகையான உணர்வுகளுடன் நம்மை ஆட்டிப் படைத்தால், அந்த ஐவரையும் காணிக்கை தந்து திருப்திப் படுத்த நம்மால் முடியாது.

#2028. கொல்ல நின்று ஓடும் குதிரை

சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறும்
செல்லகில் லேன்திரு மங்கையு அங்குஉள
வெல்லகில் லேன்புலன் ஐந்துடன் தன்னையும்
கொல்லநின்று, ஓடும் குதிரைஒத் தேனே.

சுடர் விடும் சோதிப் பிரானை நான் நாள் தோறும் துதிக்கும் வல்லமையைப் பெறவில்லை. திருவருள் அம்மையும் அங்கு இருப்பதைப் போற்றும் வல்லமையைப் பெறவில்லை நான். தறிகெட்டு ஓடும் ஐம்புலன்களையும், அவற்றின் வழியே செல்லும் உள்ளத்தையும், கட்டுப் படுத்தும் வலிமையைப் பெறவில்லை . கொல்வதற்கு அழைத்துக் கொண்டு போகும் குதிரையின் மேல் அமர்ந்தவன் போல ஆனேனே!

#2029. எண்இலி இல்லது ஓர் இன்பமது ஆமே

எண்இலி உடைத்து அவ் இருட்டறை
எண்இலி இல்லியோடு ஏகின் பிழைதரும்
எண்இலி இல்லியோடு ஏகாமை காக்குமேல்
எண்இலி இல்லது ஓர் இன்பமது ஆமே.

உடல் என்னும் இருட்டறை எண்ணற்ற தொளைகளை உடையது. மனம் இந்த எண்ணற்ற தொளைகளின் வழியே வெளியே ஓடிப் புற உலக இன்பங்களை நாடினால் அது உயிரின் குற்றம் ஆகும். ஆனால் உயிர் மனத்தைப் பின்பற்றி எண்ணற்ற தொளைகள் வழியே சென்று பொருள் இன்பத்தை நாடாமல் காத்துக் கொண்டால், எண்ணங்கள் அற்ற தெளிந்த உள்ளத்தில் அளவில்லாத இன்பம் தோன்றும்.

#2030. துதியின் பெருவலி தொல் வானுலகம்

விதியின் பெருவலி வேலைசூழ் வையம்
துதியின் பெருவலி தொல்வா னுலகம்
மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை
நிதியின் பெருவலி நீர்வலி தானே.

கடல் சூழ் உலகில் ஒருவன் வாழும் வாழ்வு அவன் செய்த வினைப்பயன்களுக்கு ஏற்ப அமையும். ஈசனைத் துதிப்பதற்கு ஏற்ப அவனுடைய விண்ணுலக வாழ்வு அமையும். ஒருவன் பெற்ற அறிவின் வல்லமைக்கு ஏற்ப அவன் வாழ்வு அமையும். உலக நோக்கை மாற்றி அமைக்கும் வலிமையால் எண்சித்திகள் அமையும்.

ஏழாம் தந்திரம் -
33. இந்திரியங்களை அடக்கும் முறை

இந்திரியங்களை அடக்கும் முறை.

#2031. இனி யாம் ஏதமிலோமே

குட்டம் ஒரு முழம் உள்ளது, அரை முழம்
வட்டம் அமைந்தது ஓர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன் பல, பரவன் வலை கொணர்ந்து
இட்டனம் யாம் இனி யேதமி லோமே.

சந்திர மண்டலம் என்னும்குளம் ஒரு முழ அகலமும் அரை முழஆழமும் கொண்டது. இதன் வடிவம் வட்டம். இந்தக் குளத்தில் விஷய வாசனைகள் என்னும் ஏராளமான மீன்கள் வாழ்கின்றன. ஈசன் என்ற வலைஞன் தன் வலையை அந்தக் குளத்தில் வீசினான். வலையில் அங்கிருந்த மீன்கள் எல்லாம் அகப்பட்டு கொண்டு விட்டன. அதனால் நான் துன்பமயமான பிறவிப் பிணியிலிருந்து விடுதலை பெற்று விட்டேன்.

#2032. அடக்கல் உறும் அவன் தானே அமரன்

கிடக்கும் உடலில் கிளர்இந் திரியம்
அடக்கல் உறும் அவன்தானே அமரன்
விடக்கு இரண்டு இன்புற மேவுறு சிந்தை
நடக்கின் நடக்கும், நடக்கும் அளவே.

அறிவு முடங்கிக் கிடக்கையில் உடலில் இந்திரியங்கள் கிளர்த்து எழும். அங்ஙனம் எழுந்து உடல் இன்பத்தை நாடுகின்ற பொறிகளை அடக்கும் வல்லமை படைத்தவனே ஓர் அமரன் ஆவான். உணவு அருந்துதல், பெண்ணுடன் பொருந்துதல் என்ற இந்த இரண்டு இன்பங்களில் ஒருவனது மனம் பொருந்தி இருக்கும் வரை அவன் மூச்சின் இயக்கம் இருந்து கொண்டுதான் இருக்கும். அவனுக்கு பிராண வெற்றி கிடைக்கவே கிடைக்காது.

#2034. முழக்கி எழுவன மும்மத வேழம்

முழக்கி எழுவன மும்மத வேழம்
அடக்க அறிவுஎன்னும் கோட்டையை வைத்தேன்
பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே.

ஐம்பொறிகள் ஆகிய யானைகள் மும்மதங்களால் பீடிக்கப்பட்டன. அவை பெருத்த ஓசையுடன் பிளிறிக் கொண்டு எழுந்தன. அறிவு என்ற கோட்டையில் நான் அவற்றை அடைத்து வைத்தேன். என்றாலும் அவை அறிவிக் கோட்டையில் இருந்து தப்பிச் சென்று விட்டன. அவைகள் கேடு விளைவிக்கும் புலங்களில் மண்டி, அங்கு உண்டு கொழுத்து அலைகின்றன.

#2035. ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது

ஐந்தில் ஒடுங்கில் அகல்இடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருள் உடையாரே.

பிரணவம் என்ற ஐந்தில் ஒடுங்கினால் நாதாந்தம் என்னும் அகன்ற இடம் சாதகனுக்கு அனுபவத்தில் கிடைக்கும். இங்ஙனம் பிரணவத்தில் ஒடுங்குவதே தவங்களில் சிறந்த அருந்தவம் ஆகும். இதுவே சிவபதம் அடையும் வழி ஆகும். பிரணவத்தில் ஒடுங்கி நிற்பவரே ஈசனின் அருள் பெற்றவர் ஆவர்.

பிரணவத்தில் உள்ள ஐந்து:-
அகரம் + உகரம் + மகரம் + நாதம் + விந்து

#2036. பெருக்கில் பெருக்கும், சுருக்கில் சுருக்கும்

பெருக்கப் பிதற்றில் என்? பேய்த்தேர் நினைந்து என் ?
விரித்த பொருட்கெல்லாம் வித்து ஆவது உள்ளம்,
பெருக்கில் பெருக்கும்; சுருக்கில் சுருக்கும்;
அருத்தமும் அத்தனை; ஆய்ந்துகொள் வார்க்கே.

நிறைய நிறையப் பேசுவதால் என்ன பயன்? கானல் நீரைப் போன்ற உலகத்தைப் பற்றி எண்ணுவதால் என்ன பயன்? உலகத்தில் பரந்து விரிந்து விரவியுள்ள பொருட்கள் அத்தனைக்கும் உள்ளமே ஒரு வித்து ஆகும். உலகத்தைப் பற்றி நினைக்க நினைக்க அது அத்தனை பெரிதாகவும், இன்றியமையாததாகவும் ஆகிவிடும். உலக சிந்தனையை ஒழித்துச் சிவனை நினைத்தால் உலகம் சுருங்கிவிடும். அதன் முக்கியத்துவம் குறைந்துவிடும். நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்பவருக்கு இதன் உண்மைப் பொருள் விளங்கும்.

#2037. துளைக் கொண்ட அவ்வழி தூங்கும்

இளைக்கின்றவாறு அறிந்து இன்னுயிர் வைத்த
கிளைக்குஒன்றும் ஈசனைக் கேடுஇல் புகழோன்
தளைக்கொன்ற நாகம் அஞ்சு ஆடல் ஒடுக்கத்
துளைக்கொண்டது அவ்வழி தூங்கும் படைத்தே.

பொறிகளின் வழியே சீவன் சென்று அழிந்துபடுவதை அறிந்து கொண்டவன் ஈசன். அது நிகழாமல் தடுக்க அவனே சிவனடியார்கள் என்னும் சிறந்த சுற்றத்தை அமைத்துத் தந்தான். பாசத் தளைகளில் இருந்து விடுபட்ட சீவன், ஐம்பொறிகளையும் அடக்கி, அவற்றின் ஐந்து விதக் குறும்புகளையும் அடக்கிவிட்டு,

பிரமரந்திரம் என்னும் உச்சித் தொளையை அடைந்து அங்கு இன்புற்று ஓய்ந்திருக்கும்.

#2038. மேலை விதி அது தானே

பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படர் ஒளி
சார்ந்திடு ஞானத் தறியினில் பூட்டிட்டு
வாய்ந்து கொள், ஆனந்தம் என்னும் அருள் செய்யில்
வேய்ந்து கொள் மேலை விதி அது தானே.

தூலத் தன்மை மாறிவிட்டால் ஐம்பூதங்கள் சூக்குமத் தன்மையை அடைந்து ஐந்து வகை ஒளியாக மாறிவிடும். அவற்றை மேல்முகமாக நிமிர்ந்து விட்ட, ஞானத்தறி ஆகிய சகசிர தளத்தில் பூட்டி விடுங்கள். ஆனந்த சக்தி உமக்கு வாய்த்தால் அதைச் சென்னி மேல் சூடிக் கொள்ளுங்கள். இதுவே சிறந்த பழமையான நெறி ஆகும்.

#2039. வடக்கொடு தெற்கு மனக் கோயிலாகும்

நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்
படர்கின்ற சிந்தையைப் பைய ஒடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குஏற்கும் றிவழி நோக்கில்
வடக்கோடு தெற்கு மனக்கோயி லாமே.

எல்லா சீவன்களிடமும் பொருந்தி, அவற்றை இயக்குபவன் சிவன். அவனை நாள் தோறும் இடையறாது சிந்தித்து வந்தால், உலக விஷயங்களில் படர்ந்து செல்லும் சிந்தனைகள் மெள்ள மெள்ளத் தாமாகவே ஒடுங்கிவிடும். எண்ணங்களை ஆதாரச் சக்கரங்களின் வழியே செலுத்தினால் தலையில் இடப் பக்கமான வடக்கும், வலப் பக்கமான தெற்கும் ஒரு மனக் கோவிலாக மாறிவிடும்.

#2040. குன்று விழவதில், தாங்கலும் ஆமே

சென்றன நாழிகை நாள்கள் சிலபல;
நின்றது நீள் பொருள் நீர்மேல் எழுத்து ஒத்து
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்;
குன்று விழவதில் தாங்கலும் ஆமே.

இந்த சாதனைகளில் பல காலம் கழிந்து போனது. அதன் பிறகு உலகப்பொருட்கள் நீர் மேல் எழுத்தைப் போன்று மறைந்து போயின. புலன்களின் வழியே புறவுலகுக்குச் செல்லும் விருப்பத்தை விரைவாக விட்டு விடுங்கள். அப்போது உங்களால் ஒரு குன்று விழுந்தாலும் அதைத் தாங்க இயலும்.

#2041. நாதனை உள்ளத்து ஒருங்கலும் ஆமே

போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றி செய்; மீட்டே புலன் ஐந்தும் புத்தி யால்;
நால் திசைக்கும், பின்னை, யாருக்கும் நாதனை
ஊற்றுகை உள்ளத்து ஒருங்கலும் ஆமே.

சகசிர தளத்தில் விளங்குபவன் ஈசன். போற்றியும் இசைத்தும் அந்தப் புனிதனின் திருமேனியைப் போற்றுங்கள். புறவுலகை நாடிச் செல்லும் ஐம்பொறிகளை புத்தியால் அடக்கி நாதனைத் தொழுவீர். நான்கு திசைகளுக்கும் அவனே நாதன். எல்லாவற்றுக்கும் அவனே நாதன். அப்போது அமுதம் போல இன்பத்தைச் சுரக்கும் உள்ளத்தில் ஒடுங்கி இன்புறலாம்.

#2042. சகளத்தினுள்ளே அரிக்கின்ற ஐவர்

தரிக்கின்ற நெஞ்சம் சகளத்தி னுள்ளே
அரிக்கின்ற ஐவரை யாருமுணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்
வரிக்கொண்ட மைசூழ் வரையது வாமே.

சீவனின் உடலில் பொருந்தியுள்ள அவன் உள்ளத்தின் உதவியுடன், அவனை அரித்துத் தின்கின்றன ஐந்து பொறிகள். இந்த ஐந்து கள்வர்களை எவரும் உணர்ந்து கொள்வதே இல்லை! நாம் நகைப்புக்கு இடமாகின்ற உலக விஷயங்களையே பேசிக் கொண்டு இருக்கும் வரை, அண்டகோசம் என்னும் உயர்ந்த இடம் எப்போதும் கரிய கனத்த இருளால் சூழப்பட்டே இருக்கும்.

#2043. கருத்தினுள் எய்தியவனை இசையால் ஏத்துமின்

கைவிடல் ஆவது ஒன்று இல்லை கருத்தினுள்
எய்தியவனை இசையால் ஏத்துமின்;
ஐவருடைய அவாவினில் தோன்றிய
பொய்வருடைய புலன்களும் ஐந்தே.

ஐம்பொறிகளை அடக்கி விட்ட பின்பு, விட்டு விடுவதற்கு என்று எதுவுமே இராது. உள்ளத்தில் வந்து பொருந்தியுள்ள ஈசானை நேசத்துடன் இனிய இசையால் ஏத்துங்கள். இல்லையென்றால் பொய்யான விஷயங்களைச் சென்று பொருந்துவதற்கு ஐம்பொறிகள் ஆவல் கொள்ளும்.

ஏழாம் தந்திரம் -
34. அசற்குரு நெறி

நல்ல மார்க்கத்தை அறியாத ஒரு குரு.
சற்குருவின் எதிர்மறைச் சொல் அசற்குரு

#2044. உண்மை ஓராதோன் அசற்குரு

உணர்வு ஒன்று இலா மூடன் , உண்மை ஓராதோன்
கணுவின்றி வேதாகம நெறி காணான்
பணிவு ஒன்று இலாதோன், பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குகு வாமே.

சிவனை உணர்ந்திராதவன், அறிவில்லாத மூடன், மெய்ப் பொருளை ஆராயாதவன், வேதங்கள் ஆகமங்களைக் கற்றுத் தெளியாதவன், பணிவு என்பதே இல்லாதவன், பிறரை நிந்திப்பவன், உலக வாழ்வைத் தன் குறிக்கோளாக உடையவன் அசற்குரு ஆவான்.

#2045. அந்தகர் ஆவோர் அசற்குரு

மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடும் தரிசித்துப் பார்ப்பவர்
சிந்தனை செய்யாத் தெளிவியா தூண் பொருட்டு
அந்தக ராவோர் அசற்குரு வாமே.

மந்திரம், தந்திரம், சிறந்த யோகம், ஞானம், பாசம், முக்தி இவற்றைச் சிந்தித்து அறிந்து கொள்வதற்கு எந்த முயற்சியும் செய்யாமல், உண்மை ஞானம் பெறுவதற்கு சிறிதும் முயற்சி செய்யாமல், வயிறு வளர்ப்பதற்காகத் திரிபவன், ஒரு குருடனக்கு ஒப்பான அசற்குரு ஆவான்.

#2046. காமாதி நீங்காதவன் அசற்குரு

ஆமாறு அறியாதோன், மூடன், அதிமூடன்,
காமாதி நீங்காக் கலதி, கலதிகட்கு
ஆமாறு அசத்து அறிவிப்போன் அறிவு இலோன்
கோமான் அலன்; அசத்து ஆகும் குரவனே.

முக்தி அடைவிக்கும் வழியை அறியாதவன், அறிவில்லாதவன், அறிவற்ற செயல்களைச் செய்பவன், காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்னும் மன மலங்கள் அகலாதவன், கீழ் மக்களுக்கு மெய்யை அறிவுறுத்தாமல்

பொய்யைக் கற்பிக்கின்றவன், இவன் சிறந்த சற்குருவாக மாட்டான். இவன் ஓர் அசற்குரு ஆவான்.

#2047. கற்பாய கற்பங்கள் நீங்காமல் கற்பித்தால் அசற்குரு

கற்பாய கற்பங்கள் நீங்காமல் கற்பித்தால்
தற்பாவங் குன்றும் தனக்கே பகையாகும்
நற்பா லாரசுக்கு நாட்டுக்குங் கேடென்ற
முற்பாலே நந்தி மொழிந்து வைத்தானே.

கற்பனைகள் தோற்றுவிக்கும் உலக வாழ்வைப் பற்றிய சிந்தனை நீங்காமல், ஒரு குரு மந்திர உபதேசம் செய்தால், அதில் சிவபாவம் சிறப்பாக வெளிப்படாது. அது அவனுக்கு கேடாக முடியும். சிவபாவமுமும், உலக போகமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு எதிர் மறையானவை. அதனால் தீமையே விளையும். இத்தகைய அசற்குரு வாழும் நாடும் கேடுறும் என்று அன்றே என் நந்திப் பெருமான் கூறியுள்ளான்.

#2048. குருடருக்குக் கோல் காட்டும் குருடன் அசற்குரு

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வார்கள் முன்பின்
குருடரும் வீழ்வார்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே.

ஒரு குருடனுக்குக் கோல் காட்டிச் செல்லும் இன்னொரு குருடன், தான் அறியாத வழியில் செல்லும் போது பழைய குழியில் விழுந்து விடுவான். அவன் கோலைப் பற்றிக் கொண்டு வந்த குருடனும் அதே குழியில் விழுவான் .அது போன்றே ஞானம் பெறாத ஓர் அசற்குரு காட்டும் வழியில் செல்கின்ற அறிவில்லாத மாணவர்கள் அந்த அசற்குருவுடன் ஒரு சேரக் குழியில் வீழ்வர்.

ஏழாம் தந்திரம் -
35. சற்குரு நெறி

‘சத்’ என்னும் உண்மைப் பொருளை உணர்ந்த ஒரு நல்ல குரு சற்குரு.

#2049. பாசம் தணிப்பவன் சற்குரு

தாள்தந்து அளிக்கும் தலைவனே சற்குரு
தாள்தந்து தன்னை அறியத் தரவல்லோன்
தாள்தந்து தத்துவாதீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசம் தணிக்குமவன் சத்தே.

சிவத்தின் திருவடி ஆகிய சிவ உணர்வை, ஒரு உத்தம குரு, தன் சீடன் தலையின் மீது பதிக்கும் ஆற்றல் பெற்றவனாக இருக்க வேண்டும். அத்தகைய உத்தம குரு சிவன் திருவடி உணர்வைத் தந்து சீவன் தன் உண்மையான வடிவத்தை அறியச் செய்யும் ஆற்றல் பெற்றவன். சிவன் தாளைத் தந்து, சீவனை முப்பத்தாறு தத்துவங்களையும் கடக்கச் செய்பவன் சற்குரு. சீவனின் பாசத் தளையை அகற்றி அவனுக்கு ஞானம் அளிக்க வல்லவன் சற்குரு.

#2050. தவிர வைத்தான் பிறவித் துயர்

தவிரவைத் தான்வினை தன்அடி யார்கோள்
தவிரவைத் தான் சிரத்தோடு தன் பாதம்;
தவிரவைத் தான் நமன் தூதுவர் கூட்டம்;
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.

ஒரு சற்குரு தன்னிடம் உபதேசம் பெறும் மாணவனின் தீவினைகள் நீங்கும்படித் திருவருள் செய்வான். நாடி வருகின்ற தீமைகள் அகன்று செல்லுபடி அவன் தன் மாணவனின் சிரசின் மீது தன் திருவடிகளைச் சூட்டி அருள் செய்வான். யமனும் அவன் தூதுவர்களும் தன் மாணவனை அணுகாத வண்ணம் சற்குரு காப்பாற்றுவான். அவன் தன் மாணவனின் பிறவித் துன்பம் நீங்கும்படிச் செய்வான்.

#2051. மறித்துப் பிறவியில் வந்து அணுகாரே

கறுத்த இரும்பே கனகம்அது ஆனால்
மறித்து இரும்புஆகா வகையது போலக்
குறித்தஅப் போதே குருவருள் பெற்றால்
மறித்துப் பிறவியில் வந்து அணுகாரே.

ரசவாதத்தால் கரிய இரும்பு பொன்னாக மாறும். ஆனால் ஒரு போதும் அது மீண்டும் இரும்பாக மாறாது. அது போன்றே பக்குவம் அடைந்து குருவருள் பெற்றுவிட்ட மாணவன், மீண்டும் பிறவிச் சுழலில் வந்து சிக்கிக் கொள்ள மாட்டான்.

#2052. நேசத்து நாடி மலமற நீக்குவோர்

**பாசத்தை நீக்கிப் பரனொடு தன்னையும்
நேசத்து நாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு ஆவோ ரறிவுற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே.**

மாணவனின் பாசத் தளைகளை நீக்கிவிட்டு, சிவனுக்கும் சீவனுக்கு உள்ள தொடர்பை நேசத்துடன் நாடச் செய்து, அவன் மனமலங்களை நீக்குபவன் ஒரு சற்குரு. சிவ அனுபவம் சிறிதும் பெறாமல், வீண் ஆரவாரத்துடன் பிறரிடம் விதண்டா வாதம் செய்பவன் ஒரு நல்ல குரு அல்ல.

#2053. நேயர்க்கு அளிப்பவன் நீடும் குரவனே

**நேயத்தே நிற்கும் நிமலன், மலம் அற்ற
நேயத்தை நல்கவல் லோன், நித்தன், சுத்தனே
ஆயத்தவர் தத்துவம் உணர்ந்தாங்கு அற்ற
நேயர்க்கு அளிப்பவன் நீடும் குரவனே.**

நேயப் பொருள் ஆகிய சிவனுடன் பொருந்தி இருக்கும் மலம் நீங்கிய ஒரு சற்குருவே தன் மாணவனுக்கும் மலம் நீங்கிய நேயப் பொருளாகிய சிவத்தை நல்க இயலும். அத்தகைய குரு நித்தியன், அவன் சுத்தன். அவன் தன் மாணவர்களின் மனப் பக்குவத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டு , குணம் குறைந்தவரின் குறைகளைப் போக்கும் சிறந்த குரு ஆவான்.

#2054. திரிமலம் தீர்ந்து சிவகதி ஆகும்

**பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும் பொன் வகையாகு மாபோல்
குருபரி சித்த குவலய மெல்லாம்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே.**

பரிசன வேதி என்னும் ரசவாதம் செய்யும் பொருள் தொட்ட பொருட்கள் எல்லாம் மேன்மை பெற்ற தூய பொன்னாக மாறிவிடும். அது போன்றே சற்குருவின் திருவடி பட்ட உலகத்தவர் யாவரும் தங்கள் மும் மலங்கள் அழியப் பெற்று சிவகதியை அடைவார்கள்.

#2055. தானே என்று நின்ற சற்குரு

தானே என் நின்ற சற்குரு சந்நிதி
தானே என நின்ற தன்மை வெளிப்படின் ,
தானே தனைப் பெற வேண்டும் சதுர்பெற
ஊனே எனநினைந்து ஓர்ந்துகொள் உன்னிலே.

தானே சிவன் என்பது போல் உள்ள சற்குருவின் சந்நிதியில், ஆன்மா தன் உண்மை நிலையைத் தானே உணர்ந்து கொள்ளும். நீயும் ஆன்மாவின் உண்மை நிலையை அறிந்து கொள்ள விரும்பினால், உன் சற்குருவை. உடலுடன் உன் எதிரே வந்து நிற்கும் சிவன் எனக் கருதுவாய் ஆகுக!

#2056. கருவழி கண்டவர் காணாத வழி

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெருவழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே.

பிறக்கும் வழி, போகும் வழி, இவை இரண்டும் அல்லாத இறவாத வழி ஒன்று உள்ளது. இதனைக் கரு இடுவதையே தம் வாழ்வின் செயலாகக் கொண்டவர் அறிகிலர். இந்த இறவாத வழியை, நந்திப் பிரான் ஏத்திப் புகழும் வழியை அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? சிவானுபவம் மிக்க ஒரு சற்குரு காட்டும் பாதையில் நடந்து சென்றாலே போதும்.

#2057. பாசம் நீக்குபவன் நல் குரவன்

குருவென் பவனே வேதாக மம்கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்து
ஒருசிந்தை யின்றி உயர்ப்பாசம் நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே.

சிவகுரு என்பவன் வேதங்கள், ஆகமங்கள் கூறும் பேரின்ப வடிவானவன். அவ்வடிவினன் உயரிய சிவயோகத்தைச் சீவனிடம் கொண்டு சேர்ப்பான். திருவடி உணர்வு பெற்ற அந்த சீவனிடம் வேறு எந்த சிந்தனைகளும் உண்டாவதில்லை. சீவனின் பாசத் தளைகளை அகற்றி, அவனை உயர்வடையச் செய்து சிவனிடம் கொண்டு சென்று சேர்ப்பவன் ஒரு சற்குரு.

#2058. சிவபரத்தே சேர்ப்பவன் சற்குரு

சத்தும் அசத்தும் சதசத்தும் தான் காட்டிச்
சித்தும் அசித்தும் சிவபரத்தே சேர்த்துச்
சுத்தம் அசுத்தம் அறச்சுக மானசொல்
அத்தன், அருட்குரு வாமனன் கூறிலே.

சத்து (அழிவற்ற சிவம்), அசத்து (அழிகின்ற மாயையின் காரியங்கள்), சதசத்து (ஆன்மா) என்ற இந்த மூன்று பொருட்களின் உண்மை இயல்பை உணர்த்துபவன் சற்குரு. சித்து (அறிவு மயம்) ஆகிய ஆன்மாவையும், அசித்து (அறிவற்றவை) ஆகிய முப்பத்தாறு தத்துவங்களையும், சிவத்துடன் சேர்ப்பவன் சற்குரு. சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டும் விலகும்படி இன்ப வடிவாகிய பிரணவத்தை உபதேசம் செய்பவன் சற்குரு.

#2059. தற்பரம் மேவுவோன் சாதகன் ஆவான்

உற்றிடும் ஐம்மலம் பாசம் உணர்வினால்
பற்றுஅறு நாதன் அடியில் பணிதலால்
சுற்றிய பேதம் துரியம் மூன்றால் வாட்டித்
தற்பரம் மேவுவோன் சாதக ராமே.

பாச உணர்வினால் சீவனிடம் ஐந்து மலங்கள் வந்து பொருந்தும். அவை ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி எனப்படும். நாதனின் அடிகளைப் பணிவதால் சீவனின் பற்று அற்று விடும். ஆன்மாவைச் சுற்றி இருப்பது பேத ஞானம். இதை மூன்று வகைத் துரியங்களால் அழித்து விட்டு மேலான தற்பரத்தைச் சென்று மேவுபவர் மேலான சாதகர் ஆவார்.

மூன்று வகைத் துரியம்:-

1. சீவ துரியம்

கேவல நிலையில் கனவு, நனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளையும் தாண்டிய நிலை.

2. சிவ துரியம்

பரத்தின் நிலை போலச் சிவத்துக்கு நின்மலத்தில் அமையும் நிலை

3. பர துரியம்

சகல நிலையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் நிலைகளையும் தாண்டிய நிலை

#2060. செல்ல சிவகதி சேர்த்தல் விளையாட்டே

எல்லாம் இறைவன் இறைவி உடன் இன்பம்;
வல்லார் புலனும்; வருங்கால் உயிர்தோன்றிச்
செல்லா மலம் ஐந்து அடங்கியிட்டு ஓங்கியே
செல்லாச் சிவகதி சேர்த்தல் விளையாட்டே.

சீவன்கள் அனைவரும் இன்பம் அனுபவிப்பதற்குத் தேவையான வலிமை மிகுந்த புலன்களுடன் தோன்றியுள்ளன. அவை இன்பம் நுகரச் செல்கையில், இறைவனும் இறைவியும் அந்த சீவனின் உள்ளத்தே வந்து தோன்றினர். அதனால் சொல்லாமலேயே அந்தச் சீவனின் ஐந்து மலங்களும் அகன்று சென்றன. சீவன் மீண்டும் வராத சிவகதியை அடையச் செய்வது சிவசக்தியருக்கு ஒரு விளையாட்டே!

#2061. மோனத்துள் வைத்தல் முத்தன் செய்கையே

ஈனப் பிறவியில் இட்டலும் மீட்டு ஊட்டி,
தானத்துள் இட்டுத் தனை ஊட்டித் தாழ்த்தலும்
ஞானத்துள் மீட்டலும், நாட்டலும் வீடுற்று
மோனத்தில் வைத்தாலும் முத்தன்தன் செய்கையே.

அனைத்தும் அவன் செயலே! சீவனை ஓர் இழிந்த பிறவியில் செலுத்துவது; பிறகு அதிலிருந்து அந்தச் சீவனை மீட்பது; போகத்தை அனுபவிக்கச் செய்வது; உயர்ந்த தானத்தில் கொண்டு இடுவது; அந்தப் பதவிகளின் இன்பத்தை அளிப்பது; மீண்டும் பிறவிக்கு கடலில் உந்துவது; மீண்டும் சிவஞானம் தருவது; வீடுபேற்றைத் தருவது; மோனப் பெருவாழ்வை அளிப்பது இவை அனைத்துமே முத்தியைத் தருகின்ற அத்தனின் செயல்களே.

#2062. அத்தனின் அருள் விளையாட்டு

அத்தன் அருளின் விளையாட்டு இடம் சடம்
சித்தொடு அசித்து அற, தெளிவித்துச் சீவனைச்
சுத்தனும் ஆக்கித் துடைத்து மலத்தினைச்
சத்துடன் ஐங்கரு மத்துஇடும் தன்மையே.

ஐந்தொழில்களைப் புரிந்து சிவன் விளையாடும் இடம் சீவனின் உடலாகிய சடம். சிவன் புரியும் இந்த ஐந்தொழில்களின் நோக்கம் தான் என்ன? சீவனுக்கு அறிவை அளித்து, அதன் அறியாமையை அகற்றி, சீவனைத் தெளிவித்து, சீவனின் மலத்தினைப் போக்கி, அவனைத் தூய்மை உடையவன் ஆக்கித் தன்னுடன் இணைத்து கொள்வதே சிவன் ஆற்றும் ஐந்தொழில்களின் நோக்கம் ஆகும்.

#2063. ஈசன் நேசத்துள்ளே நின்ற நின்மலன்

**ஈசத் துவங்கடந் தில்லையென் றப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியும் அண்ணலை
நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை
தேசத்தை எல்லாம் தெளியவைத் தானே.**

ஈசத்துவம் என்ற நிலையைக் கடந்து வேறு எதுவுமே இல்லை. அப்புறமாய் நிற்கும் அண்ணலைப் பாசம் உள்ளபோதே பாவியுங்கள். அவனைப் பற்றி நில்லுங்கள். நேசத்துள் நிற்கும் நின்மலன் ஈசன் பாசத்தில் பொருந்தினாலும் அதில் ஒட்டிக் கொள்ள மாட்டான். அவனே இந்த தேசத்தை எல்லாம் ஒளி மயம் ஆக்கினான்.

#2064. பிறப்பு அற்று இருந்தார்

**மாணிக்க மாலை மலர்ந்துஎழு மண்டலம்
ஆணிப்பொன் நின்று அங்கு அமுதம் விளைந்தது;
பேனிக் கொண்டு உண்டார் பிறப்பு அற்று இருந்தார்
ஊனுக்கு இருந்தார் உணராத மாக்களே.**

சிவந்த மாணிக்க மாலையைப் போல ஒளி வீசுகின்ற, புருவ நடுவான மண்டலத்தில், ஆணிப் பொன் போன்ற சிவபிரான் நின்று கொண்டு, அங்கு பேரின்பம் ஆகிய அமுதத்தை விளைவிக்கின்றான். இதை அறிந்து கொண்டு, விந்து சயம் மூலம் அந்த அமுதத்தைப் பருகுகின்றவர்கள் பிறப்பு அற்று விடுவர். அந்த அமுதத்தைப் பேணாமல் ஊண் உண்பதற்காகவே உயிர் வாழ்பவர்கள் விலங்குகளுக்குச் சமம் ஆவர்.

#2065. ஒன்ற அறிவிப்போன் இறையே

**அசத்தொடு, சத்தும் அசத்சத்தும் நீங்க
இசைத்திடு பாசப்பற்று ஈங்கு அறுமாறே
அசைத்து இருமாயை அணுத்தானும் ஆங்கே
இசைத்தானும் ஒன்றை அறிவிப்போன் இறையே.**

சீவனைப் பிடித்துள்ள சத்து, அசத்து சதசத்து என்னும் மூன்றும் நீங்குவதற்கும், முன்னமே கூட்டப் பட்டுள்ள பாசப் பற்றுக்கள் அகலவும் சிவன் செய்வது என்ன? சிவன் சுத்த மாயை அசுத்த மாயை என்ற இரண்டுடன் அணுவின் அளவுடைய ஆன்மாவை இணைத்து வைத்தான். அத்துடன் நில்லாமல் சிவன் பிரணவ உபதேசமும் செய்தான்.

#2066. பரனே குருவாம் இயல்பிலே

ஏறு நெறியே மலத்தை யெரித்ததால்
ஈறி லுரையால் இருளை யறுத்தலான்
மாறில் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயல்பிலே.

மூலாதாரத்திலிருந்து ஆறு ஆதாரங்களைக் கடந்து மேலே செல்லும் போது சீவனின் மலங்கள் எரிந்து அழிந்து விடுகின்றன. இடையறாது சிவன் பெயரை உரைப்பது சீவனின் அறியாமையை அகற்றி விடுகின்றது. சீவனின் இயல்பான பசு பாசத் தன்மைகள் கெடுமாறு அவனை வாட்டிப் பின்னர் சீவனை முத்தி நெறியில் செலுத்துகின்ற சிவனே சிறந்த சற்குரு

ஏழாம் தந்திரம் -
36. கூடா ஒழுக்கம்

மேற்கொள்ளக் கூடாத, தவிர்க்க வேண்டிய தீயொழுக்கம்.

#2067. கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே

“கண்காணி இல்’ என்று கள்ளம் பல செய்வார்;
கண்காணி இல்லா இடம் இல்லை, காணுங்கால்
கண்காணி யாகக் கலந்து எங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே.

மேற்பார்வை செய்யும் கண்காணி இல்லை என்று எண்ணிக்கொண்டு உலகத்தோர் கள்ளத்தனங்கள் பற்பல செய்து வருவர். எல்லோரையும் எப்போதும் கண்காணிக்கும் இறைவன் இல்லாத இடம் என்று எதுவுமே இல்லை. இங்கு அங்கு என்னாதபடி எங்கும் எதிலும் கலந்து உறைகின்ற இறைவன் என்ற கண்காணியைக் கண்டு கொண்டவர்கள் கள்ளத்தனத்தில், வஞ்சகச் செயல்களில் ஈடுபட மாட்டார்.

#2068. பொய் தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்

செய்தா னறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வான்
மைதாழ்ந் தலங்கு மிடறுடை யோனே.

செழுங்கடல் சூழ்ந்த உலகினைப் படைத்த இறைவன் மெய்யையும் பொய்யையும் நன்கு அறிவான். கரிய ஒளி வீசும் கழுத்தை உடைய ஈசன், பொய் பேசித் திரிகின்ற மக்கள் மெய் பேசுபவர்களாக மாறிவிட்டால், அவர்களைத் தேவர்களும் வந்து வழிபடுகின்ற மேன்மையை அவர்களுக்கு அளிப்பான்.

#2069. பித்தர்கட்கு என்றும் பிறப்பு இல்லை தானே

பத்தி விற்று உண்டு, பகலைக் கழிவிடும்
மத்தகர்க்கு அன்றோ மறுபிறப்பு உள்ளது?
வித்துக் குற்று உண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட்கு என்றும் பிறப்பு இல்லை தானே.

பக்தியை விற்றுப் பணமாக்கி, அதைச் செய்வதில் தன் காலத்தைக் கழிக்கின்ற, மதம் கொண்டவர்களுக்கு மறுபிறவி என்றுமே தொலையாது. குற்றிய விதையைப் போலக் காமம் முதலிய மலங்களை அகற்றி விட்டு, உடல் என்னும் விளைநிலத்தைப் பாழ் நிலம் ஆக்கிவிட்ட, இறை பக்தி என்னும் பித்துப் பிடித்தவர்களுக்கு மறுபிறப்பு என்பதே இல்லை அல்லவா?

#2070. நடக்க உறுவரே ஞானம் இலாதார்

வடக்கு வடக்கு என்பர்; வைத்தது ஒன்றும் இல்லை;
நடக்க உறுவரே ஞானம் இலாதார் ;
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடையோர்க்கே.

'வடக்கில் உள்ள மூர்த்தி, தீர்த்தம், தலம் சிறந்தவை!' என்று கூறுவர். வடக்கில் இவ்வாறு சிறந்தவை என்று எவையும் இல்லை. அறிவற்றவர்கள் மற்றவர்களை வடக்கே செல்லும்படி உந்திக் கொண்டே இருப்பார்கள். வடக்கில் உள்ளதாக அவர்கள் கூறுகின்ற மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற எல்லாம் ஒரு ஞானியின் உள்ளத்திலேயே அமைந்துள்ளன.

#2071. காயத்தினுள்ளே கமழ்கின்ற நந்தி

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்கும் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே.

சீவனின் உடலையும், உயிரையும் ஒன்றாக இணைப்பவன் இறைவன். சீவனின் உடலைத் தனது இருப்பிடம் ஆகக் கொண்டவன் இறைவன். சீவனின் உடலில் ஒளிந்து உறைந்து ஒளிர்கின்ற இறைவனை நாடெங்கும் தேடி

அலைகின்றார்களே! தனக்குள்ளே அவன் பொருந்தி விளங்குவதை எவரும் அறிவதில்லையே!

#2072. கண்காணியாகிய காதலன்

கண்காணி யாகவே வையகத் தேயெழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழி செய்யும்
கண்காணி யாகிய காதலன் தானே.

நம்மைக் கண்காணிப்பவனாக இறைவன் நம் மூலாதாரத்தில் எழுகின்ற தீயில் அமைந்துள்ளான். இறைவன் நம்மைக் கண்காணிப்பவனாக நம் கருத்தினுள் உறைகின்றான். இறைவன் நம்மைக் கண்காணிப்பவனாக நம் உடலிலும், உயிரிலும் கலந்து உறைகின்றான். இறைவன் மேல் அன்பு கொண்டவர்களுக்குக் கண்காணியாகிய காதலன் அவனே அன்றோ?

#2073. ஈசன் இயல்பு அறியார்

கன்னி ஒரு சிறை கற்றோர் ஒரு சிறை ;
மன்னிய மாதவம் செய்வோர் ஒரு சிறை ;
தன் இயல்பு உன்னி உணர்ந்தோர் ஒரு சிறை;
என்ன இது? ஈசன் இயல்பு அறியாரே.

காமத்தைத் தூண்டும் கன்னியரின் வலையில் வீழ்ந்தவர் ஒருவகைச் சிறையில் அகப்பட்டுக் கொண்டவர்; கற்றறிந்தவர் ஒரு வகைச் சிறையில் அகப்பட்டுக் கொண்டவர்; உடலை வருத்தித் தவம் செய்பவர் ஒருவகைச் சிறையில் அகப்பட்டவர்; ஆனால் அனுபவம் இல்லாமல் தன்னையும் தன் தலைவனையும் உணர்ந்து கொள்ள முயல்பவர் ஒரு வகைச் சிறையில் அகப்பட்டவர்; இந்த நால்வரில் எவருமே இறைவனின் உண்மை இயல்பினை அறியாதவர்கள் தான்!

#2074. காணாது கண்டார் களவு ஒழிந்தாரே

காணாத கண்ணிற் படலமே கண்ணொளி
காணாத வர்கட்கும் காணாத அவ்வொளி
காணாத வர்கட்கும் கண்ணாம் பெருங் கண்ணைக்
காணாது கண்டார் களவொழிந் தாரே.

கண் படலத்தால் மூடப்பட்ட விழிக்கு இருளே அதன் ஒளியாகும். ஒளிர்கின்ற கதிரவனையும் அதனால் காண முடியாது. அது போன்றே எங்கும் சிவ ஒளி பரவி இருந்தாலும் ஞானம் இல்லாத சாதாரண மனிதர்களால் அதைக் காண முடியாது. அகக் கண்ணாக இருந்து கொண்டு ஒளியைத் தருவது இறைவன் என்ற

பெருங் கண்ணொளி ஆகும். ஊனக் கண்ணால் காணாமல் ஞானக் கண்ணால் இறைவனைக் கண்டவர் களவுச் செயல்களில் ஈடுபடார்.

#2075. சித்தம் தெளிந்தேன் செயல் ஒழிந்தேன்

பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்து ஒன்று மாபோல், விழியுந்தன் கண்ணொளி
அத்தன்மை ஆதல் போல், நந்தி அருள் தரச்
சித்தம் தெளிந்தேன் செயல்ஒழிந் தேனே.

பித்துப் பிடித்தவன் வைத்தியன் தரும் மருந்தால் குணம் அடைந்து தெளிவடைவான். மீண்டும் தன் இயல்பு நிலையைப் பெறுவான். கண்ணில் உள்ள படலத்தை நீக்கி விட்டால் மீண்டும் கண் காணும் தன்மையைப் பெற்றுவிடும். சிவபிரான் எனக்கு அருள் செய்தான். உள்ளம் தெளிவடைந்தேன். என் செயல்கள் ஒழிந்தேன்.

#2076. நிராமயம் ஆக நினைப்பு ஒழிந்தார்

பிரான்மயம் ஆகப் பெயர்ந்தன எட்டும்
பராமயம் என்று எண்ணிப் பள்ளி உணரார்
சுராமயம் உன்னிய சூழ் வினையாளர்
நிராமயம் ஆக, நினைப்புஒழிந் தாரே.

நிலம், நீர், காற்று, நெருப்பு, விண், கதிரவன், சந்திரன், ஆன்மா என்ற எட்டும் சிவ மயமானவை. இவை அனைத்தும் சிவனுடைய சக்தியின் வெளிப்பாடு என்று அறியாதவர்கள், தம் அறியாமை என்னும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து என்றும் விழித்து எழார். வினைகளால் சூழப்பட்டு, மயக்கத்தில் ஆழ்ந்துள்ள இவர்கள், இன்ப மயமான இறைவனின் நினைப்பையே ஒழித்து விட்டார்களே!

#2077. ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா

ஒன்று, இரண்டு ஆகி நின்று, ஒன்றி ஒன்றாயினோர்க்கு
ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா,
ஒன்று இரண்டு என்றே உரைதரு வோர்க்கெலாம்
ஒன்று இரண்டாய் நிற்கும், ஒன்றொடு ஒன்றானதே.

கலப்பால் சிவனும், சீவனும் ஒன்றே ஆகும், ஆனால் தம் தன்மையால் அந்தச் சிவனும், சீவனும் இரண்டாகும். சீவ பாவம் கெட்டுச் சிவ பாவம் அடைந்தவருக்கு ஒன்று இரண்டு என்ற பேத பாவம் என்றுமே தோன்றாது. அவ்வாறு அல்லாது சிவன் வேறு, சீவன் வேறு என்று பேத அறிவுடன்

இருப்பவர்களுக்குச் சிவனும், சீவனும் என்றும் இரண்டு வேறுபட்ட பொருட்களாகவே இருக்கும்.

#2078. உள்ளப் பாங்கு அறியாரே

உயிர் அது நின்றால், உணர்வு எங்கும் நிற்கும்
அயரறி வில்லையால் உடல் வீழும்
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிரும் கிடந்த உள்ளப் பாங்கு அறியாரே.

உடலில் உயிர் நின்றால், உணர்வு உடல் எங்கும் பரவி நிற்கும். உணரும் அறிவில்லை என்றால் உடல் கீழே வீழும். உயிர், உடல் ஆகிய இரண்டுடன் சிவப் பயிரை விளைவிக்கும் தன்மையும் உள்ளத்தில் ஒருங்கி கிடப்பதை உலகத்தோர் அறிய மாட்டார்.

#2079. பெரும் பொருள் ஆங்கு அறியாரே

உயிர் அது வேறா, உணர்வு எங்கும் ஆகும்
உயிரை அறியில், உணர்வு அறிவு ஆகும்;
உயிர் அன்று உடலை விழுங்கும் உணர்வை
அயரும் பெரும்பொருள் ஆங்கு அறியாரே.

உயிர் வேறு, உணர்வு வேறு. உணர்வே உடல் எங்கும் பரவி நிற்கும். உயிரை அறிந்து கொண்டு விட்டால் உணர்வை அறிந்து கொள்ள முடியும். உடல் முழுவதும் பரவி நிற்பது உயிர் அன்று, அது நம் உணர்வே ஆகும். அந்த உணர்வில் கலந்து அதன் உள்ளே நிற்பவன் சிவன் என்பதை எவரும் அறிகிலர்.

#2080. தலைவாணி செய்வது தன்னை அறிவதே

உலகு ஆணி, ஒண்சுடர், உத்தம சித்தன்,
நிலவாணி ஐந்தனுள் நேருற நிற்கும்;
சிலவாணி ஆகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்து தன்னை அறிவதே.

உலகின் அச்சாணி இறைவன் ஆவான். அவன் ஒளிரும் ஒண்சுடர். அவன் உத்தம சித்தன். நிலம் முதலிய ஐம் பெரும் பூதங்களின் உள்ளும் புறமும் நிறைந்தவன். சில வாக்குகளின் வடிவாகிய தேவர்களின் தலைவன் அவன். தலையில் பிரணவத்தை விந்து நாதமாக உணர்வதே ஒருவன் தன்னை அறிந்து கொள்ளும் செயல் ஆகும்.

#2081. தானந்தமாமென நின்ற தனிச்சுடர்

தானந்த மாமென நின்ற தனிச்சுடர்
ஊனந்த மாயுல காய்நின்ற ஒண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீயொழி
கோனந்த மில்லாக் குணத்தரு மாமே.

அனைத்துப் பொருட்களும் இறுதியில் வந்து ஒடுங்கும் இடம் ஈசன். அவன் ஒரு தனிப் பெருஞ்சுடர். தானே உலகமாகவும், அதில் வாழும் உயிர்களாகவும், அதில் உள்ள பொருட்களாகவும் இருக்கும் ஒரே ஒளிரும் சுடர். இத்தகைய ஈசனின் எல்லை இல்லாத அருள் உன் மீது பொழிய நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா ? முதலில் இன்பத்தையும் பின்பு காமக் கழிவினால் சோர்வையும் தருகின்ற சிற்றின்பத்தைத் துறந்து விடு!

#2082. ஈசன் கருத்து அறிவாரில்லை

உன்முதல் ஆகிய ஊன்உயிர் உண்டு எனும்
கன்முதல் ஈசன் கருத்து அறிவார் இல்லை,
நன்முதல் ஏறிய, நாமம் அற நின்றால்
தன் முதல் ஆகிய தத்துவம் ஆமே.

ஈசன் உனக்கு முதல்வன். ஈசன் உன் உடலில் உள்ள உயிர். கயிலையின் நாதனின் உள்ளக் கருத்தினை அறிந்தவர் எவரும் இல்லை. நல்ல முதல்வன் ஆகிய சிவனின் பெயர் விளங்கும்படித் தன் தனித் தன்மையைத் தியாகம் செய்பவருக்கு அவன் சிறந்த பண்புகள் வந்து பொருந்தும்.

#2083. உளம் மன்னும் ஆறாறு முடிவிலே

இந்தியம், அந்தக் காரணம் இவை உயிர்,
வந்தன சூக்கம், உடலன்று, மான் அது
தந்திடும் ஐவிதத்தால் தற்புருடனும்
முந்து உளம் மன்னும் ஆறாறு முடிவிலே.

ஆன்மா ஐம்பொறிகள் அன்று; நான்கு அந்தக் காரணங்கள் அன்று; மூன்று உடல்கள் அன்று; உயிரும் அன்று. இவை அனைத்தும் மகத் தத்துவத்தில் தோன்றியவை. புருடனும் கலை, காலம், நியதி, வித்தை, அராகம் என்ற ஐந்தின் கூட்டத்தால் வந்து பொருந்துவது ஆகும். அனாதியாகிய ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களின் முடிவில் நிலை பெற்று நிற்பது ஆகும்.

ஏழாம் தந்திரம் -
37. கேடு கண்டு இரங்கல்

அழிவைக் கண்டு மன வருத்தம் அடைதல்.

#2084. முற்று ஒளித்தீயின் முனிகின்றவாறே

வித்துப் பொதிவார் விரைவிட்டு நாற்றுவார்
அற்றதம் வாணாள் அறிகிலாப் பாவிகள்,
உற்ற வினைத் துயர் ஒன்றும் அறிகிலார்,
முற்று ஒளி தீயின் முனிகின்ற வாறே.

தம் வாணாள் ஒவ்வொரு கணமும் வீணாள் ஆவதை அறியாத பாவிகள், தொடர்ந்து வினைகள் என்னும் விதைகளைச் சேமிப்பர். தம் உடலாகிய நாற்றங்காலில் அந்த வித்துக்களை முளைக்கச் செய்வர். வினைப் போகத்தை அறுவடை செய்வர். என்றாலும் அவர்கள் வினைப் போகத்தில் வரும் துன்பங்களை உணர்வதில்லை. வாழ்நாள் முடிவதற்குள் வினைகளை அழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், கொழுந்து விட்டு எரியும் தீயில் அகப்பட்டது போல அவர்கள் அழிந்து படுவர்.

#2085. ஆதியை அன்பில் அறிகில்லார்களே

போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது
நீதியு ளே நின்று நின்மலன் தாள்பணிந்து
ஆதியை யன்பில் அறியகில் லார்களே.

மனிதனின் வாழ்நாள் திடீர் என்று முடிவதைக் கண்ட பின்பும், சாதனைகளில் ஈடுபடாமல் வீண் வாதங்களில் ஈடுபடும் மனிதர்கள் பெறுவது தான் என்ன? நீதியுள்ளே நின்று நிர்மலன் ஆதிப்பிரான் சிவன் தாள்களை பணியாமல், அவனை அன்பினால் அறியாமல், உலகில் வாழ்கின்றார்களே!

#2086. உடம்பினை ஓம்பி உயிராத் திரிவர்

கடன் கொண்டு, நெற்குத்துக் கையரை ஊட்டி
உடம்பினை ஓம்பி உயிராத் திரிவார்;
தடங்கொண்ட சாரல் தழல்முருடு ஏறி
இடங்கொண்டு உடலார் கிடக்கின்ற வாறே.

கடனாகவேனும் நெல்லைப் பெற்றுக் கொண்டு வந்து அதை நன்கு குத்திச் சீராக்கி சமைத்து உண்பர். தம் பொறிகளைத் திருப்திப் படுத்திக் கொண்டு, தம் உடலைப் பேணி வளர்த்து, ' இந்த உடலே நான்!' என்று எண்ணிக் கொண்டு உலகில் திரிவர். ஒருநாள் அகன்ற மலைச் சரிவில், எரிகின்ற உருட்டுக் கட்டைகளில் இந்த உடல் கிடைத்தப்படும் என்பதைச் சிறிதும் சிந்தியார்.

#2087. பரம் தன்னை ஓராப் பழமொழியாளர்

விரைந்து அன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லால்நிழல் புண்ணியன் சொன்ன
பரம்தன்னை ஓராப் பழமொழி யாளர்
உரம் தன்மை ஆக ஒருங்கி நின்றார்களே.

அன்று ஒருநாள் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நான்கு முனிவர்களுக்குக் கயிலைநாதன் ஒரு கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து, புண்ணிய சிவகுருவாக உபதேசம் செய்தான். அந்த சிவத்தை எண்ணாமல் பழிச் சொற்களைப் பேசித் திரியும் மக்கள் நிலத்துக்கு உரமாக மாறிவிடுவதற்கு வரிசையில் நிற்கின்றார்களே!

#2088. என்றும் எம் ஈசன் அடியவர்க்கே நல்கும்

நின்ற புகழும் நிறைதவத்து உண்மையும்
என்றும்எம் ஈசன் அடியவர்க்கே நல்கும்
அன்றி உலகம் அது இது தேவு என்று
குன்றுகை யாலே குறைப்பாட்டை வாரே.

நிலைத்து நிற்கும் புகழையும், நிறைந்த தவத்தின் பயனையும் ஈசன் தன் மெய்யடியார்களுக்கு மட்டுமே தருவான். இதை அறிந்த பின்பும் “அது முதற் கடவுள்!”, “இது முதற்கடவுள்!” என்று கூறித் திரிபவர் வாழ்வில் குறைவை அடைவர். அழிந்து படுவர்.

#2089. துன்பதுள்ளே நின்று தூங்குகின்றார்களே

இன்பத்துள்ளே பிறந்து, இன்பத்துள்ளே வளர்ந்து
இன்பத்துள்ளே நினைக்கின்றது இது மறந்து
துன்பத்துள்ளே சிலர், சோறோடு கூரை என்று
துன்பத்துள்ளே நின்று தூங்குகின் றார்களே.

இன்பத்துள்ளே பிறந்து, இன்பத்துள்ளே வளர்ந்து, இன்பம் கொள்ளும் நேரத்தில் எல்லாம் இறைவனை நினைக்க வேண்டும். இதுவே வாழ்வில் இன்பம். இதை மறந்து விட்டுச் சிலர் சோறு, கூரை என்று அவற்றையே வாழ்க்கையாக

எண்ணித் துன்பம் அடைந்து அந்த அறியாமையிலேயே வாழ்வில் அவதிப் படுகின்றார்களே!

#2090. பெறுவதற்கரியதோர் பேறிழந்தாரே

பெறுதற் கரிய பிறவி பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேரிழந் தாரே.

கிடைப்பதற்கு அரிய மனிதப் பிறவியைப் பெற்றிருந்தும் கூடச் சில மனிதர்கள் கிடைப்பதற்கு அரிய சிவன் திருவடிகளைப் பேணுவதில்லை. பெறுவதற்கு அரிய பிறவியைப் பெற்ற பின்பும் வெறும் விலங்குகளைப் போல வாழ்பவர் பெறுவதற்கு அரிய பேற்றை இழந்து விட்டார்களே!

#2091. மாதவன் இன்பம் மறந்தொழிந்தாரே

ஆர்வ மனமும் அளவுஇல் இளமையும்
ஈரமும் நல்ல என்று இன்புறு காலத்துத்
தீர வருவது ஓர் காமத் தொழில் நின்று
மாதவன் இன்பம் மறந்தொழிந் தாரே.

ஆர்வம் கொண்ட மனமும், அளவு இல்லாத இளமையும், அன்பும் கொண்டு காமத்தொழிலில் ஈடுபட்டு இன்புறுவர் மனிதர்கள். இவர்கள் மாதவச் சிவன் தரவல்ல நிலையான பேரின்பத்தை மறந்தும் துறந்தும் ஒழித்து விட்டார்களே!

#2092. மெய்ப்பரிசே வினவாது இருந்தோமே

இப்பரிசே இளஞாயிறு போல் உரு
அப்பரிசு அங்கியின் உள் உறை அம்மானை
இப்பரிசே கமலத்து உறை ஈசனை
மெய்ப்பரிசே வினவாது இருந்தோமே.

உதிக்கும் கதிரவனைப் போன்றவன் சிவன்; குண்டலினியின் அக்கினியில் கலந்தவன் சிவன்; இதயத் தாமரையில் இருப்பவன் சிவன்; இத்தகைய ஈசனின் உண்மை இயல்பினை ஆராயாமல் விருதே இருந்தோமே! என்னே எம் அறியாமையின் அளவு!

#2093. நாடகில்லார் நயம் பேசித் திரிவர்

**கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார் நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்து
ஆடவல் லாரவர் பேறெது வாமே.**

குரு காட்டிய வழியில் பொருந்தி இவர்கள் சிவனைச் சென்று கூடுவதில்லை. தாம் கற்ற நூல்களின் நயத்தைப் பேசித் திரியும் இவர்கள் சிவனை நாடுவதில்லை. சிவன் பெருமைகளைப் பேசும் இனிய பாடல்களை இவர்கள் பாடுவதில்லை. வீண் களியாட்டம் ஆடுவதால் இவர்கள் பெறும் பயன் என்ன?

#2094. நாதனை நாள்தோறும் துஞ்சும் அளவும் தொழுமின்

**நெஞ்சு நிறைந்து அங்கு இருந்த நெடுஞ்சுடர்
நம்செம்பிரான் என்று , நாதனை நாள்தொறும்
துஞ்சும் அளவும் தொழுமின்; தொழாவிடில்,
அஞ்சற்று விட்டதோர் ஆனையும் ஆமே.**

நெஞ்சில் நிறைந்து நிற்பவன் சிவபிரான்; பேரொளிச் சுடர் ஆக நிற்பவன் சிவபிரான், அந்த நாதனை நீங்கள் நாள் தோறும் தொழுங்கள்; நீங்கள் வாழும் காலம் முழுவதும் தொழுங்கள்; அங்ஙனம் நீங்கள் தொழாது இருந்தால் உங்கள் ஐந்து பொறிகளும் கட்டறுத்துக் கொண்டு ஐந்து யானைகள் ஆகிவிடும்.

#2095. பருகுவர், ஓடுவர், பார்ப்பயன் கொள்வர்

**மிருகம், மனிதர், மிக்கோர், பறவை
ஒருவர் செய்த அன்பு வைத்து உன்னாதது இல்லை ;
பருகுவர், ஓடுவர், பார்ப் பயன் கொள்வர்
திருமரு மாதவம் சேர்ந்துணர்ந் தாரே.**

மிருகம், மனிதர், தேவர், பறவை என்பவர்களில் ஈசனை நேசத்துடன் நினைவில் கொள்ளாதவர்கள் எவரும் இல்லை. என்றாலும் ஞானம் பொருந்தி, மாதவம் செய்யும் முனிவர்கள் மட்டுமே சிவனை மனத்தில் எண்ணுவதுடன் நிறைவு அடையாமல் சிவ அமுதத்தைப் பருகுவர். மகிழ்வடைவர். பாரில் பிறந்த பயனைப் பெறுவர்.

#2096. நாதியே வைத்தது நாடுகின்றேனே

**நீதியி லோர்பெற்ற பொன்போல் இறைவனைச்
சோதியில் ஆரும் தொடர்ந்து அறிவார் இல்லை,
ஆதிபயன் என்று, அமரர்பிரான் என்ற
நாதியே வைத்தது நாடுகின் றேனே.**

நேர்மை இல்லாதவர்கள் தாங்களுக்குக் கிடைத்த பொன்னையும் கூடப் போற்றி பாதுகாக்க மாட்டர்கள். அதை வீணாக்கி விடுவார்கள். அது போன்றே சோதி வடிவான பொன் போன்ற இறைவனை யாரும் தொடர்ந்து சென்று அறிந்து கொள்வதில்லை. அவனை ஆதி பயன் என்றும், அமரர் பிரான் என்றும் அறிந்து கொண்டு நான் அநாதிகாலமாக அவனை நாடுகிறேன்.

#2097. அருந்தேனை யாரும் அறியகிலரே

**இருந்தேன் மலர் அளைந்து இன்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை ஓரார்
வரும்தேன் நுகராது வாய்புகு தேனை,
அருந்தேனை யாரும் அறிகிலாரே.**

தேனீக்கள் மலருக்கு மலர் தாவி, அளைந்து தேனை உண்டு இன்புறும். இதைவிட இனிப்பான உயர்ந்த தேன் ஒன்று உண்டு என்பதை யாரும் அறிகிலர். வண்டுகள் அருந்தாத, தானே வலிய வந்து நம் வாயில் புகுகின்ற அந்த அருந்தேனை எவரும் அறிகிலர்.

#2098. கருத்து அறியாது கழிந்தன காலம்

**கருத்து அறியாது கழிந்தன காலம்
அருத்தி உள்ளான் அமராபதி நாதன்
ஒருத்தன் உள்ளான் உலகத்து உயிர்க்கு எல்லாம்
வருத்தி நில்லாது வழுக்குகின் றாரே.**

கருத்தில் இறைவனை அறிந்து கொள்ளாமல் என் காலம் கழிந்து விட்டது. அமரர்கள் தலைவனாகிய அவன் அன்பில் உறைகின்றான். இந்த உலகில் உள்ள ஜீவராசிகள் அனைவருக்கும் அவன் ஒருவனே உயிராக உள்ளான். இருந்த போதிலும் அவன் நம்மை நெருங்கி வருமாறு செய்யாமல் வீணே தவற விடுகின்றோமே!

#2099. கொதிக்கின்ற கூழில் துடுப்பு இடலாமே

**குதித்து ஓடிப்போகின்ற கூற்றமும் சார்வாய்
விதித்தன நாள்களும் வீழ்ந்து கழிந்த;
விதிர்த்து இருந்து என் செய்தீர்? ஆறுதிர் ஆகில்
கொதிக்கின்ற கூழில் துடுப்பு இடலாமே.**

குதித்து ஓடுகின்றான் கூற்றுவன் உயிரைப் பறிக்க. வாணாளாக விதிக்கபட்டவைகளும் விரைந்து ஓடிக் கழிந்து விடுகின்றன. நீங்கள் விதிர்த்து நடுங்குவதால் மட்டும் ஆவது என்ன? நீங்கள் மன ஆறுதல் அடைய விரும்பினால் இதைச் செய்யுங்கள். கொதிக்கின்ற மூலாதாரத்தில் இருந்து அமுதத்தை விளைவிக்கத் உடனே துடுப்பை இடுங்கள்.

மூலாதாரத் தீயை சுழுமுனை வழியே செலுத்திச் சகசிர தளத்தை அடைந்தால் அங்கு அமுதம் விளையும். அதை அருந்தினால் நீண்ட காலம் வாழலாம்.

#2100. திரை அருகா முன்னம் சேர்ந்து இன்பம் எய்தும்

**கரைஅருகு ஆறாக் கழனி விளைந்த
திரைஅரு காமுன்னம் சேர்ந்து இன்பம் எய்தும்
வரைஅருகு ஊறிய மாதவம் நோக்கின்
நரைஉருவாச் செல்லும் நாள் இலவாமே.**

இடைகலை பிங்கலை என்னும் இரு கரைகளின் அருகில் சுக்கிலம் என்னும் வயல் விளைந்தது. வயது முதிர்ந்து விட்டால் அதன் வளங் குன்றி அழிந்து போகும். அதற்கு முன்னமே அதைக் கொண்டு நீங்கள் பேரின்பம் அடைய வேண்டும். குண்டலினி சக்தியை எழுப்பி மேல்முகமாகச் செலுத்திச் சிரசை அடைவித்தால் அங்கு இன்பம் விளையும். இந்த தவத்தைச் செய்தால் உங்களிடம் நரை, திரை, மூப்பு வந்து எய்தா.

#2101. அரவு அறிவார் இரவு அறிவானை அறிவார்

**வரவு அறிவானை, மயங்கு இருள் ஞாலத்து
இரவு அறிவானை, யெழுஞ் சுடர்ச் சோதி
அரவு அறிவார், முன் ஒரு தெய்வம் என்று
விரவு அறியாமலே மேல்வைத்த வாறே.**

உயிர்கள் உடலுடன் தோன்றும் வருகையை அவன் அறிவான். அறியாமை இருளில் உலகில் வாழ்கின்ற உயிர்கள் முடிவு அடைவதையும் அவன் அறிவான். தானே எழுந்து சுடர் விடும் பேரொளி அவன். குண்டலினி நாகத்தை எழுப்பி யோகம்

பயில்பவர் இந்த தெய்வத்தை நன்றாக அறிவர். மற்றவர்கள் இந்த இறைவனை அடையும் வழியை அறியாமல், இருண்ட அறியாமையினால் உலகப் பொருட்களின் மீது ஆசை வைத்து வீணே அழிந்து போகின்றனர்.

ஏழாம் தந்திரம் -
38. இதோபதேசம்

இதம் + உபதேசம் = இதோபதேசம்
சீவனுக்கு நன்மை பயக்கும் நல்ல மொழிகளைக் கூறுதல்.

#2102. சிறந்த சிவநெறி சிந்தை செய்யீரே

மறந்தொழி மண்மிசை மன்னாப் பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்
பறந்தல மந்து படுந்துயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தை செய்யீரே.

சிவனை மறக்கின்ற நமது இந்த உலக வாழ்வில் நிலை இல்லாதது நம் உடல். அதனால் வாழும் பொழுது அவனை எண்ணுங்கள். இறக்கும் காலத்தும் அவனை வணங்குங்கள்.சிறந்த சிவநெறியை மனத்தில் நிலை நிறுத்தினால், நாம் உலக வாழ்வில் அலமந்து படுந்துயரை அவன் தீர்த்து விடுவான்.

#2103. நல்ல அரனெறி நாடுமினீரே

செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம் இறை
நல்ல அறநெறி நாடுமி னீரே.

செலுத்த முடிந்த அளவுக்கு உமது சிந்தையைச் சிவன் மீது செலுத்துங்கள். உம்மால் முடிந்த அளவுக்கு சிவன் பெருமையைப் பேசுங்கள். ‘இறைவன் இல்லை!” என்று சிலர் கூறி வருகிறார்கள் என்றாலும் அவன் அங்கும், இங்கும், எங்கும் எப்போதும் உள்ளான். எனவே நல்ல சிவநெறியை நாடுங்கள்.

#2104. ஒன்றே குலம், ஒருவனே தேவன்

ஒன்றே குலம் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந் துய்மினே.

குலம் ஒன்றே ஆகும்! நம் தேவனும் ஒருவனே ஆவான்! எப்போதும் நீங்கள் நல்லவற்றையே எண்ணுங்கள். அப்போது உமக்கு நமன் இல்லை. நீங்களாக நாணாமல் சென்று புகும் கதியும் வேறு இல்லை. உம் சித்தத்தில் இறைவனை நிலை நிறுத்தி அவனை நினைந்து நினைந்து உய்வடையுங்கள்.

#2105. கூற்று உதைத்தான் தன்னைக் கூறி உய்மினே

போற்றிசெய் அந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் கும்நடு வாய்நின்ற நம்பனை
காற்றுஇசைக் கும்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு
கூற்றுஉதைத் தான்தன்னைக் கூறிநின்று உய்மினே.

அழகிய குளிர்ந்த கயிலை மலையின் நாதனை போற்றுங்கள். நான்கு திசைகளிலும் உள்ள நான்கு முகங்களின் நடுவே தன் ஈசான முகத்தினை உடையவன். அவன் நாம் நம்பாதத் தகுந்தவன். கூற்றுவனைக் காலால் உதைத்த அந்தப் பெருமானைக் காற்று இசைக்கின்ற உம் உடலைக் கொண்டு தொழுதும், துதித்தும் உய்வடையுங்கள்.

#2106. பிறவாமல் போம் வழி நாடுமின்

இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்கால் முன்ன அருள்பெற லாமே.

இந்த உடல் நீங்கிய பின்பு இன்னொரு உடலில் புகுந்து இந்த உலகத்தில் மீண்டும் பிறவாமல் இருக்கும் வழியை நாடுங்கள். 'எப்போது எனக்கு இந்த உடல் கிடைத்தது?' என்று அந்தக் காலத்தை நினைத்து ஆராய்ந்தால் ஈசன் அருள் கிடைக்கும். பிறவிப் பிணியும் நீங்கும்.

#2107. சாகின்ற போதும் தலைவனை நாடுமின்

போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போதும் அரன்அறி வான் உளன்
சாகின்ற போதும் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை ஆகுமே.

உங்கள் உயிரில் புகுந்து உடலில் கலந்துள்ள இறைவன் உங்கள் வாழ்நாள் முழுவதும் பிரியாமல் உங்களுடனேயே நடக்கின்றான். நீங்கள் மனப் பக்குவம் அடையும் காலத்தை அவன் அங்கு அறிவான். அவன் அப்போது உங்களுக்கு அருள் புரிவான். எனவே இருக்கும் காலத்தும் இறக்கும் காலத்தும் அவனை மறவாது

நினைவில் கொள்ளுங்கள். பிறவிப் பெருங்கடலைக் கடந்து வீடுபேறு என்னும் அக்கரையைச் சேர அவன் உதவுவான்.

#2108. இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்

பறக்கின்ற ஒன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேருல காமே.

உடலைத் துறந்து வெளியேறும் சீவன் அந்த உடலில் வாழ்ந்த பயனை அடைய விரும்பினால் இறக்கும் போதும் ஈசனைத் துதிக்க வேண்டும். அதைச் செய்தால் அந்தச் சீவனுக்குச் சிறப்பும் சிவகதியும் தாமே வந்து சேரும். பிறவியே இல்லாத பேருலக வாழ்வும் கிடைக்கும்.

#2109. நீடிய ஈற்றுப் பசு அது ஆகுமே

கூடியும் நின்று தொழுது எம் இறைவனைப்
பாடி உளே நின்று பதம் பணிமின்கள்,
ஆடிஉளே நின்று அறிவு செய்வார்கட்கு
நீடிய ஈற்றுப் பசுஅது ஆகுமே.

அடியவர்களுடன் கூடி நின்றும், தனித்து நின்றும் எம் இறைவனைத் தொழுங்கள். அவன் புகழைப் பாடி நின்று அவன் பதம் பணிமின்கள். தனக்குள்ளே ஆடி மகிழ்ந்து அவனை அறிந்து கொள்பவரை அவன் ஈன்ற பசு போலக் கனிவுடன் காப்பான்.

#2110. நடு நின்று நாடுமின் நாதன் பாதம்

விடுகின்ற சீவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்றன் பாதம்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
இடுகின்றான் உம்மை இமையவ ரோடே.

உடலைத் துறந்து சீவன் மேலே செல்லும் போது நடுநாடியில் நின்று நாதன் பாதங்களைத் தொழுங்கள். உங்கள் வல்வினைகள் அழிந்துபோகும். அழியாத புகழ் உடைய ஈசன் உம்மைத் தேவர்களுள் ஒரு தேவனாக ஆக்கி விடுவான்.

#2111. திருவடி அணிவார்க்கு வினை இல்லை தானே

“ஏறு உடையாய், இறைவா, எம் பிரான் ”
என்று நீறிடுவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறு அணி செஞ்சடை அண்ணல் திருவடி
வேறு அணிவார்க்கு வினைஇல்லை தானே.

“ஏறு உடையவனே! இறைவா! என் பிரானே!” என்று கூறிக் கொண்டு திரு நீற்றை அணிந்து கொள்பவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள். கங்கையை அணிந்த செஞ்சடைச் சிவபெருமானின் திருவடிகளைத் தனித்து இருந்து தியானிப்பவர் களுக்கு வினைகள் எதுவும் இல்லை அன்றோ?

#2112. எம் இறைவனை அன்புறுவீர்

இன்புறு வீரறிந் தேயெம் மிறைவனை
அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே.

ஓயாமல் பிறவிப் பிணியில் பிணைக்கப் பட்டுத் துன்பங்களைத் தருகின்ற பாசத்தில் உழல்பவர்களே! எம் இறைவனை நாடி இன்புறுங்கள். அவனைக் குறித்து அன்புடன் தவம் செய்வீர். அப்போது மெய்ஞ் ஞானம் பெற்று இறைவனின் தன்மையை நீங்கள் அடைவீர்கள்.

#2113. மேற்கொள்ள வல்ல மெய்த்தவம் ஒன்றுண்டு

மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவ மொன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளு மொன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்நெறி யொன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோர்க்கே.

உய்வடையவும், உயர்வடையவும் நீங்கள் உண்மையில் விரும்பினால் நீங்கள் செய்ய வேண்டிய உண்மையான தவம் ஒன்று உள்ளது. நீங்கள் அடைய வேண்டிய திருவடிகள் உள்ளன. இவற்றால் உங்களுக்குக் கிடைக்கும் மெய் நெறி ஒன்றும் உள்ளது.

#2114. கூர்ந்தவர்க்கு அங்கே குரைகழல் காட்டிடும்

சார்ந்தவர்க் கின்பம் கொடுக்கும் தழல்வண்ணன்
பேர்ந்தவர் கின்னா பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க் கங்கே குரை கழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே.

செந்தழல் வண்ணன் ஆகிய சிவபிரான் தன்னை வந்து சார்ந்தவர்களுக்கு இன்பத்தை அளிப்பான். தன்னிலிருந்து விலகிச் செல்பருக்குப் பிறவித் துன்பத்தை அளிப்பான். தன்னை இடையறாது நினைவு கூர்பவர்களுக்கு அவன் தன் திருவடிகளைக் காட்டுவான். அவனிடம் சென்று சேர்ந்தவர்கள் சென்று தேவர்களுடன் தங்குவர்.

#2115. நெய்த்தலைப் பால்போல் நிமலன் அங்குளான்

முத்தியை ஞானத்திற் முத்தமிழ் ஓசையை
எத்தனை காலம் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி யதுவிரும் பாரே.

சீவனுக்கு முக்தியைத் தருபவன் ஈசன். அந்த முத்திக்கு காரணம் ஆகிய ஞானத்தைத் தருபவன் ஈசன். அந்த ஞானத்துக்குக் காரணமான முத்தமிழ் ஆக இருப்பவனும் சிவன். இத்தகைய இறைவனை பல காலம் வெளியுலகில் வணங்கி வருவர். ஆனால் பாலில் மறைந்துள்ள நெய்யைப் போல சீவனுள் மறைந்திருக்கும் சிவனை அவர்கள் கண்டு கொள்ள முயற்சி செய்வது இல்லை.

#2116. சிவமத்தை ஒன்றும் தெளியகில்லார்.

நியமத்த னாகிய நின்மலன் வைத்த
உகமெத் தனையென் றொருவரும் தேறார்
பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லால்
சிவமத்தை யொன்றும் தெளிய கில்லாரே.

சீவன்கள் அனுபவிப்பதற்காக நின்மலனான ஈசன் தனு, கரணம், புவன போகங்களை நியமிக்கின்றான். அவன் அமைத்துள்ள காலம் எத்தனை என்பதை எவரும் அறியார். பிறவியில் வந்து அகப் பட்டுக் கொள்வதைத் தவிர ஈசனின் பெருமையையும் ஏற்றத்தையும் அவர்கள் அறிந்து கொள்வதே இல்லை.

#2117. நஞ்சற்றவர்க்கு அன்றி நாட ஒண்ணாதே

இங்கித்தை வாழ்வு மெனத்தோர் அகிதமும்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை
விஞ்சத் துறையும் விகிர்தா வெனநின்னை
நஞ்சற் றவர்க்கன்றி நாடவொண் ணாதே.

இங்கு இதையே வாழ்வு என்று எண்ணிக் கொண்டு எத்தனை துன்பம் அனுபவித்தாலும், துஞ்சும் காலத்தில் ஈசனை மறவாதீர்கள். "விஞ்ஞானத்தில் உறைகின்ற விகிர்தனே!" என்று ஈசனை உள்ளம் உருகப் போற்றுங்கள். பற்றுள்ள

உள்ளம் இறைவனைப் பற்றாது. எனவே உங்கள் பற்றினை அகற்றிவிட்டு இறைவனைப் பற்றுங்கள்.

#2118. செஞ்ச நிற்போரைத் தெரிசிக்கச் சித்தியே

பஞ்சமு மாம்புவி சற்குரு பால்முன்னி
வஞ்சக ரானவர் வைகி அவர்தம்மை
அஞ்சுவான் நாத னருநர கத்திடும்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் சித்தியே.

வஞ்சகம் கொண்ட நெஞ்சினர் சற்குருவை நாடினால் அந்த நாட்டில்கடும் பஞ்சம் தோன்றும். அந்தக் கொடியவர்களைக் கண்டு ஈசனே அஞ்சுவான். அவர்களை நரகக் குழியில் சேர்ப்பான். செம்மையான சிறந்த நெறியில் நிற்கும் சிறந்தவர்களைக் காண்பது சித்தியைத் தரும்.

#2119. குருவை வழிபடில் கூடலுமாமே

சிவனை வழிபட்டா ரெண்ணி லாத் தேவர்
அவனை வழிபட்டங்கு ஆமாறொன் றில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டும்
குருவை வழிபடின் கூடலு மாமே.

எண்ணற்ற தேவர்கள் சிவனை வழிபட்டனர். ஆனாலும் அவர்கள் சிவனை வழிபட்டதால் பயன் எதுவும் விளையவில்லை. சிவனை வழிபடுவதில் சிறந்தது ஆகும் சிவனை வழிபடும் நல்ல நெறியை உபதேசிக்கும் குருவை வழிபடுவது. அவன் உதவி இவனைச் சிவனிடம் கொண்டு சேர்க்கும்.

#2120. பரம் என்றலன்றிப் பகர்வொன்று மின்றே

நரருஞ் சுரரும் பசுபாசம் நண்ணிக்
கருமங்க ளாலே கழித்தலிற் கண்டு
குருஎன் பவன்ஞானி கோதில னானால்
பரமென்ற லன்றிப் பகர்வொன்று மின்றே.

மனிதர்களும்,தேவர்களும் பாசத்தில் அகப்பட்டு பல்வேறு வினைகளைச் செய்து அதனால் அழிந்து போகின்றனர். இதைக் கண்ட பின்பு ஒருவன் செய்ய வேண்டியது என்ன? ஒரு குற்றமற்ற ஞானியைத் தன் குருவாகப் பற்றிக் கொண்டாலே போதும். “பரத்துடன் கூடி நீயும் பரம் ஆவாய்” என்று உபதேசம் செய்வதன்றி அந்த குரு செய்ய வேண்டியது எதுவும் இல்லை.

#2121. நீர்க்கின்ற செஞ்சடை நீளன்

ஆட்கொண்ட வர்தனி நாயகன் அன்புற
மேற்கொண்ட வர்வினை போயற நாடொறும்
நிற்கின்ற செஞ்சடை நீளன் உருவத்தின்
மேற்கொண்ட வாறலை வீவித் துளானே.

ஒரு குருவாக வந்து மாணவனை ஆட்கொள்பவர் ஒப்பற்ற ஈசனே ஆவார். அவர் தன் மாணவனின் வினைகள் அழியும் வண்ணம் நாள்தோறும் உபதேசிக்கிறார். அவர் நீர்மலிந்த நீள் சடையை உடைய சிவனே அன்றி வேறு எவரும் அல்ல. சிவனே மனம் இரங்கியும் கீழே இறங்கியும் வந்து மாணவனின் வருத்துகின்ற வல்வினைகளை அழித்து விடுகின்றார்.

திருமந்திரம் - ஏழாம் தந்திரம் முற்றுப் பெற்றது.

எட்டாம் தந்திரம்

எட்டாம் தந்திரம் -
1. உடலில் பஞ்ச பேதங்கள்

உடலில் உள்ள ஐந்து வேறுபட்ட கோசங்கள்:

1. அன்னமய கோசம்
2. பிராணமய கோசம்
3. மனோமய கோசம்
4. விஞ்ஞானமய கோசம்
5. ஆனந்தமய கோசம்

#2122. காயப்பைக் குள்நின்ற கள்வன்

காயப்பை யொன்று சரக்கு பலவுள
மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணாய் மயங்கிய வாறே.

சீவனின் உடலில் 'காயப்பை' என்னும் அன்னமய கோசம் ஒன்று உண்டு. அதனுள் பலவிதமான பொருட்கள் நிரம்பி உள்ளன. காயப்பையின் உள்ளே மாயப்பை ஒன்று உண்டு. அதற்குள் வேறு ஒரு பையும் உண்டு. காயப் பைக்குள் வாழும் சீவன் என்னும் கள்வன் அதை விட்டு விட்டுப் புறப்பட்டால் பின்னர் அந்த மாயப்பை மண்ணோடு மண்ணாகி விடும்.

#2123. புரி அட்ட காயமே

அத்தன் அமைத்த உடல் இரு கூறினில்,
சுத்தம தாகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த, பரிச, ரூப, ரச, கந்தம்
புத்திமான் ஆங்காரம் புரியட்ட காயமே.

நம் தலைவன் சீவனுக்கு இரண்டு உடல் கூறுகளை அமைத்துள்ளான். தூல உடல் (பரு உடல்) என்றும் சூக்கும உடல் (நுண்ணுடல்) என்றும் அவை இரண்டு வகைப்படும். தூய நுண்ணுடலில் அமைத்து உள்ளவை சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம். கந்தம், புத்தி , மனம், அகங்காரம் என்பவை. அதனால் அதன் பெயர் புரியட்ட காயம்.

#2124. கண்ணுதல் காணுமே

**எட்டினில் ஐந்தாகும் இந்திரியங்களும்
கட்டிய மூன்றுங் கரணமு மாயிடும்
ஒட்டிய பாச முணர்வது வாகவே
கட்டி யவிழ்ந்திடும் கண்ணுதல் காணுமே.**

இந்த எட்டினில் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற முதல் ஐந்தும் தன்மாத்திரைகள் ஆகும் அவற்றிலிருந்து சீவனின் ஐம்பொறிகள் தோன்றும். புத்தி, மனம், அகங்காரம் என்ற மற்ற மூன்றும் அந்தக்காணங்கள் எனப்படும் உட்கருவிகள் ஆகும். இவற்றுடன் பாச உணர்வையும் கூட்டிச் சீவனைக் கட்டியும், கட்டவிழ்த்தும் கண்ணுதல் பிரான் அருள்வான்.

#2125. உடல் ஒன்று எனல் ஆமோ?

**இரதம், உதிரம், இறைச்சி, தோல், மேதை,
மருவிய அத்தி, வழும்பொடு, மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மாலால், உடல் ஒன்று எனல் ஆமே.**

பாழாகிய உபாதியின் காரியமான மயக்கத்தைத் தருகின்ற இந்த உடல் நிணநீர், உதிரம், இறைச்சி, தோல், மேதை, எலும்பு, வழும்பு, மச்சை சுக்கிலம் என்ற பலவற்றால் ஆனது. எனவே இந்த உடலை 'ஒரு பொருள்' என்று இயம்ப இயலுமா?

#2126. யாரே அறிவார்?

**ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றதை,
யாரே அறிவார் அறுபத்தெட்டு யாக்கையை
யாரே அறிவார் அடிக்காவல் ஆனதே.**

ஈசன் திருவடிகளின் பெருமையை யார் அறிவார்? சீவனின் உடலில் சிவன் உறைவதை யார் அறிவார்? அறுபத்தெட்டுத் தத்துவங்களைக் கொண்டுள்ள இந்த உடலை யார் அறிவார்? சிவன் சீவனின் அடிக்காவலாக அதன் மூலாதாரத்தில் இருந்து காப்பதை யார் அறிவார்?

அறுபத்தெட்டுத் தத்துவங்கள்

உடல் உறுப்புகளில் பஞ்சபூதங்களின் கூறுகள் வருமாறு:

1. மண்: எலும்பு, தோல், இறைச்சி, நரம்பு, மயிர்.

2. நீர் : உதிரம், மஞ்சை, உமிழ் நீர், நிணம், விந்து.

3. தீ : பயம், கோபம், அகங்காரம், சோம்பல், உறக்கம்.

4. காற்று : போதல், வருதல், நோய்ப்படுதல், ஒடுங்குதல், தொடுதல்.

5. ஆகாயம்: ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை.

6. கர்மேந்திரியங்கள் ஐந்து: வாக்கு, பாணி, பாதம்,குதம், குய்யம்

7. வாயுக்கள் பத்து:

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன் , கூர்மன், கிரிதரன், தேவதத்தன், தனஞ்ஜயன்

8. நாடிகள் பத்து

பிங்கலை, இடைகலை, சுழுமுனை, சிகுவை, காந்தாரி, புருடன், அத்தி, அலம்புடை, சங்கினி, குரு.

9. வாக்குகள் நான்கு: சூக்குமை, பைசந்தி மத்திமை, வைகரி

10. ஈஷணை மூன்று

11. குணம் மூன்று: சத்துவம், ராஜசம், தாமசம்

12, தன்மாத்திரைகள் ஐந்து: சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்

13. அந்தக்கரணம் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

#2127. எண் சாண் அளவாய் எடுத்த உடம்பு

எண்சாண் அளவாய் எடுத்த உடம்புக்குள்
கண், கால், உடம்பில் கரக்கின்ற கைகளில்
புண்கள் அறுபத்தெட்டு ஆக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்பு தன்னால் உடம்பு ஆகுமே.

எட்டு சாண் அளவு கொண்டது உடல். அதில் அறுபத்தெட்டு வான் கூறுகளும் மறைந்துள்ளன. கண்கள், கால்கள், கைகள் அமைந்துள்ள உடலில் பருவுடலும், நுண்ணுடலும் நண்பால் நன்றாகப் பொருந்தி ஒரே உடலாக அமைகின்றன.

#2128.பரனோடு ஒழியாப் பிரமம்

உடம்புக்கும் நாலுக்கும் உயிராய சீவன்
ஒடுங்கும் பரனோடு ஒழியாப் பிரமம்
கடந்தொறும் நின்ற கணக்கது காட்டி,
அடங்கியே அற்றது, ஆர்அறி வாரே?

பருவுடம்புக்கும், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற மற்ற நான்கு கோசங்களுக்கும் ஒரே உயிராக விளங்குவது சீவன். அந்த சீவன் பரத்துடன் ஒன்றி விளங்கும் சிவத்திடம் சென்று ஒடுங்கும். சிவன் சீவனில் கலந்து தொழிப்படுவது போன்றே, சீவன் ஐந்து கோசங்களுடன் கலந்து தொழிற்படும். பின்பு அவற்றை விட்டு நீங்கும். இந்த விந்தை முறைகளை யார் அறிவாரோ?

#2129. ஊறும் உடம்பை உயிருடம்பு எண்ணுமே

ஆறு அந்தம் ஆகி நடுவுடன் கூடினால்
தேறிய மூவாறும் சிக்கென்று இருந்திடும்
கூறும் கலைகள் பதினெட்டும் கூடியே
ஊறும் உடம்பை உயிருடம்பு எண்ணுமே.

உடலின் ஆறு ஆதாரங்களும் நடுநாடியால் இணைக்கப்பட்டால் அப்போது பத்து வாயுக்களும் புரியட்ட காயத்தில் உள்ள எட்டும் நன்கு இணைந்து பதினெட்டுக் கலைகள் அமையும். இந்த பதினெட்டுக் கலைகள் சேர்ந்ததே சீவன். அதுவே அந்த பரிச உணர்வுடன் கூடி இருக்கும் இந்தப் பருவுடலை வழி நடத்துகின்றது.

#2130. ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே

மெய்யினில் தூலம் மிகுந்த முகத்தையும்
பொய்யினில் சூக்கம் பொருந்தும் உடலையும்
கையினில் துல்லியம் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே.

கண்களால் காணமுடிகின்ற இந்தப் பருவுடலும், கண்களுக்குத் தெரியாது பொய்யாக மறைந்துள்ள சூக்கும உடலும், நுண்ணிய தூய காரண உடலும், ஐயன் திருவடிகளில் சென்று அடங்குபவையே.

#2131. ஏயுமவர் என்ன ஏய்ந்திடும் காயமே

காயும் கடும்பரி கால்வைத்து வாங்கல் போல்
சேய இடம் அண்மை செல்லவும் வல்லது
காய துகிர் போர்வை ஒன்று விட்டு,ஆங்கு ஒன்று இட்டு
ஏயுமவர் என்னஏய்ந்திடும் காயமே.

போர்ப் பயிற்சி பெற்ற ஒரு குதிரை மிகுந்த வேகத்துடன் பாய வல்லது. அது வேகமாக மீண்டு வரவும் வல்லது. அது போன்றே சீவனின் நுண்ணுடல் தொலைவுக்குச் செல்லவும் வல்லது. அங்கிருந்து மீண்டு வரவும் வல்லது. ஆடைகளை மாற்றி மாற்றி அணிந்து கொள்வதால், ஒருவரின் உடலுக்கு ஒரு தீங்கும் ஏற்படுவதில்லை. அது போன்றே செல்வதாலும், மீள்வதாலும் நுண்ணுடலுக்கு எந்தத் தீங்கும் வாராது.

#2132. ஏகும் இடம் சென்று இருபயன் உண்ணுமே

நாகம் உடல் உரி போலும், நல் அண்டசம்
ஆக, நனாவில் கனா மறந்தது போலும்
ஆகும் அரன் - அருளாலே சென்று அங்கங்கு
ஏகும் இடம் சென்று இருபயன் உண்ணுமே.

ஒரு நாகம் தான் உரித்த தோலை விட்டு விட்டுப் புதிய தோலுடன் செல்வதைப் போலவும், ஒரு முட்டையில் இருக்கும் கரு குஞ்சாக உருமாறி வெளியே வந்து தொடர்ந்து வாழ்வதைப் போலவும், மனிதர்கள் கனவை மறந்து விட்டு நனவில் வாழ்வைத் தொடர்வது போலவும், உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்றபின் வேறு ஒரு வாழ்வைத் தொடரும். அது தன் வாழ்வின் வினைப்பயன்களுக்கு ஏற்பச் சொர்க்கத்தில் இன்பமோ, அல்லது நரகத்தில் துன்பமோ அனுபவிக்கும்.

#2133. பரகாய யோகிபோல் பிண்டமெடுக்கும்

உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடுஞ் சூக்கங் காரண மாச்செலப்பு
பண்டு தொடரப் பரகாய யோகிபோல்
பிண்ட மெடுக்கும் பிறப்பிறப் பெய்தியே.

நரகத்திலோ அல்லது சுவர்க்கத்திலோ சீவன் தன் நுண்ணுடலுடன் இருந்து கொண்டு தன் முன்வினைப் பயன்களை உண்ட பிறகு; மீண்டும் உலகில் ஒரு புதிய பிறவி எடுக்கும். திறமை மிகுந்த ஒரு பரகாய யோகி ஓர் உடல் விட்டு இன்னொரு உடலுக்குத் தாவுவதைப் போல் மீண்டும் உலகில் வந்து பிறக்கும்.

#2134. வினைக் கெய்துமிடம் செல்லும்

தானவ னாகிய தற்பரம் தாங்கினோன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை உயிர்வினைக் கெய்து மிடம்சென்று
வானு நிலனும் புகுந்து வருந்துமே.

“தானே அவன்! அவனே தான்!” என்ற மேலான உண்மையைத் தம் அனுபவத்தில் கண்டு கொண்ட ஞானியர் இயல்பான இந்தப் போக்கில் இருந்து மாறிப் பரமம் என்ற மேலான நிலையைச் சென்று அடைவர். மற்றவர்கள் அவரவர் வினைகளுக்கு எற்ப மீண்டும் உடல் எடுத்துத் துன்பத்தில் உழல்வர்.

#2135. ஞானிக்கு காயம் சிவமே தனுவாகும்

ஞானிக்கு காயம் சிவமே தனுவாகும்
ஞானிக்கு காயம் உடம்பே அதுவாகும்
மேல் நிற்கும் காயமே விந்துவும் நாதமும்
மோனிக்கு காயம்முப் பாழ்கெட்ட முத்தியே.

சிவனையே எண்ணி இருப்பதால் ஒரு ஞானியின் உடல் சிவம் ஆகிவிடும். உடலின் தொழில்களைத் துறந்து விட்டதால் ஞானியின் உடல் சிவனுடையது ஆகிவிடும். சிரசின் உச்சியைச் சிந்தித்து இருக்கும் ஞானிக்கு விந்துவும், நாதமும் உடலாகும். பிரணவத்தை அறிந்து கொண்டு மோனத்தில் ஆழ்ந்துவிட்ட ஞானி, ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் கெட சிவ சாயுச்சியத்தைச் சென்று அடைவார்.

#2136. மெய்ஞ் ஞானத்தோர்க்குச் சிவதனு மேவுமே

விஞ்ஞானத்தோர்க்கு ஆணவமே மிகுதனு;
எஞ்ஞானத்தோர்க்குத் தனுமாயை தான் என்ப;
அஞ்ஞானத்தோர்க்குக் கன்மம் தனுஆகும்;
மெய்ஞ்ஞானத்தோர்க்குச் சிவதனு மேவுமே.

தெளிந்த அறிவைப் பெற்ற, ஒரு மலம் உடைய விஞ்ஞானகலருக்கு ஆணவமே உடல் ஆகும். அறிவைப் பெற்று வருகின்ற, இரு மலம் உடைய பிரளயாகலருக்கு மாயையே உடல் ஆகும். அஞ்ஞானத்துடன் பொருந்தி மூன்று மலமும் கொண்ட சகலருக்கு கன்மமே உடல் ஆகும். மும்மலங்களையும் அழித்து விட்ட மெய்ஞானிக்கு அகண்ட சிவமே உடலாக அமையும்.

#2137. நலமென்று இதனை நாடி இருந்தால்…

மலமென் றுடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கின்
பலமுள்ள காயத்தில் பற்றுமிவ் வண்டத்தே.

"இந்த உடல் மலத்தால் ஆனது!" என்று எண்ணி அதை ஒதுக்கிவிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் அதையே நல்ல தலம் என்று எண்ணி இன்பத்துடன் உடலைத் தரித்துக் கொண்டால், மேலும் உடலில் விளையும் நன்மைகளையே நாடிக்கொண்டு இருந்தால், அந்தப் பற்றின் காரணமாக மீண்டும் மீண்டும் ஒருவனுக்குப் பிறவிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

#2138. மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமல னகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே.

நல்ல மொழி, நல்ல வாக்கு, நல்ல மனம் போன்றவற்றைக் கொண்டவர்களின் உள்ளத்தில் சிவன் மெல்ல மெல்ல விளங்கத் தொடங்குவான். அங்ஙனம் இல்லாமல் தீய மொழி, தீய வாக்கு, தீய மனம், போன்றவற்றை உடையவர்ளின் உள்ளத்தில் சிவன் பிரகாசம் அடையாததால் அவர்கள் முக வாட்டத்துடன் உலகத்தில் வலம் வருவர்.

எட்டாம் தந்திரம் -
2. உடல் விடல்

உடலைப் பற்றிய நினைவுகளை விட்டு விடுதல்.

#2139. அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே

பண்ணாரும் காமம் பயிலும் வசனமும்
விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணாம் முடலில் பொருந்து மனத்தையும்
அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே.

இன்பம் தருகின்ற காமத்தை உண்டாக்கும் இனிய பேச்சு, வான் கூற்றில் செல்கின்ற பிராணன் , அங்கு உண்டாகும் ஓசை, புண்ணாகும் உடலில் பொருந்தும் மனம் இவற்றைச் சிரசின் மீது நிலை பெறச் செய்தால் அப்போது உடல் பற்றிய உணர்வு மறைந்து போய்விடும்.

#2140. ஒழிகின்ற ஊனுக்கு உறுதுணை இல்லையே

அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற ஊனுக்கு உறுதுணை யில்லையே.

அழியும் தன்மை உடைய உடம்பில் உள்ள செவி கண் போன்ற உறுப்புக்களும் அழியும் தன்மை கொண்டவை. காலத்தில் செய்த விரதங்கள்,

தானங்கள், நான்கு வித வாக்குகள், உடலின் நாடிகள் என்ற எல்லாம் அப்போது அழிந்து விடும். அழியும் உடலுக்கு இவைகள் நல்ல துணையாக ஆகா!

#2141. சித்தம் சிவனுக்கே

இலையாய மிடையி லெழுகின்ற காமம்
முலைவாய நெஞ்சத்து மூழ்கு முளைத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியும்
சிலையாய சித்தம் சிவமுன் னிடைக்கே.

அரச இலை போன்று அழகான வடிவுடன் விளங்கும் பெண்ணின் இடையை நோக்கியதால் எழுகின்ற காமம், அழகிய தனங்கள் பொருந்திய பெண்ணின் மார்பில் மூழ்கினாலும் இறுதியில் வருத்தம் அடையும். ஆனால் மலை போன்று நிலை கலங்காது சிவன் மீது சித்தம் தங்கி நிற்குமானால் ஒருவன் சிறந்த ஒளி உடல் பெற்று உலகில் திரியலாம்.

எட்டாம் தந்திரம் -
3. அவத்தை பேதம்

அவத்தை = நிலை
பேதம் = வேறுபாடுகள்

சீவன் உடலில் வாழும்போது அடைகின்ற ஐந்து வெவ்வேறு நிலைகள் இவை

1. சாக்கிரம் = விழிப்பு நிலை
2. சொப்பனம் = கனவு நிலை
3. சுழுத்தி = ஆழ்ந்த உறக்கம்
4. துரியம் = பேருறக்கம்
5. துரியாதீதம் = உயிர்ப்பு அடங்கிய நிலை

சாக்கிரத்திலிருந்து துரியாதீதம் செல்வது கீழாலவத்தை.

#2142. மெய் கண்டவன் உந்தி துரியமே

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரம்
கைகண்ட பன்னான்கிற் கண்டம் கனாஎன்பர்
பொய்கண் டிலாத புருடனித யம்சுழுமுனை
மெய்கண்ட வனுந்தி யாகும் துரியமே.

விழிப்பு நிலையில் சீவன் புருவ மத்தியில் இருபத்து ஐந்து கருவிகளுடன் நிலை கொண்டிருக்கும். கனவு நிலையில் சீவன் கழுத்தில் பதினான்கு கருவிகளுடன் நிலை கொண்டிருக்கும். சீவன் இதயத்தில் நிலை பெற்றுள்ள போது உறக்க நிலை ஏற்படும். ஆன்மா உந்தியில் பொருந்தி நிற்கும் போது துரிய நிலை ஏற்படும்.

சாக்கிரத்துக்கு உரிய 25 கருவிகள்:

1. ஞானேந்திரியங்கள் 5
2. கர்மேந்திரியங்கள்................5
3. வாயுக்கள்.....................10
4. அந்தக்கரணங்கள்................4
5. புருடன்.......................1

கனவு நிலைக்கு உரிய 14 கருவிகள்:

1. வாயுக்கள்.....................10
2. அந்தக்கரணங்கள்................4

சுழுத்தி நிலையில் பிராணவாயு, சித்தம் இரண்டும் இயங்கும்.
துரிய நிலையில் இயங்கும் ஒரே கருவி பிராணன் மட்டுமே.

#2143. முப்பத்தாறு தத்துவங்கள்

முப்பதோடு ஆறில் முதல் நனா ஐயைந்தாகச்
செப்புஅதின் நான்காய் திகழ்ந்தது இரண்டு ஒன்று ஆகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்பும் சிவம் ஈறாய்த் தேர்ந்து கொள்வீரே.

சாக்கிர நிலையில் முப்பத்தாறு தத்துவங்களுடன் சிவ தத்துவம் ஐந்தாகும். கனவு நிலையில் அது நான்காகும். துரியத்தில் அது இரண்டாகும். துரியாதீதத்தில் ஒன்று ஆகும். சுத்த வித்தை முதல் சிவன் ஈறாக அமைவது இவ்வாறே.

#2144. சாக்கிர அவத்தை

இந்தியம் ஈர்ஐந்து, ஈர் ஐந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்த அச்சாக்கிரப் பாலது ஆகுமே.

ஞான இந்திரியங்கள் ஐந்து + கர்ம இந்திரியங்கள் ஐந்து + தன்மாத்திரைகள் பத்து + வாயுக்கள் பத்து + அந்தக் கரணங்கள் நான்கு + ஆன்மா என்ற முப்பது ஐந்து கருவிகளும் சீவனைப் பந்தப் படுத்துகின்ற சாக்கிரத நிலையில் உள்ள கருவிகள்.

#2145. ஐம்பெரும் பூதங்களின் நிறங்கள்

பாராது பன்மை பசுமை யுடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதங் கறுப்பை யுடையது
வானகம் தூம மறைந்து நின்றாரே.

மண் பசும் பொன் நிறம் உடையது. நீர் வெண்ணிறம் கொண்டது. தீயின் நிறம் சிவப்பு. மேகம் போன்ற கரிய நிறம் கொண்டது காற்று. வானம் புகையின் நிறம் கொண்டது. இந்த நிறங்களில் ஐம் பெரும் பூதங்கள் இருக்கும்.

#2146. தொண்ணூற்றாறு கருவிகள்

பூதங்கள் ஐந்தும், பொறிவை ஐயைந்துளும்
ஏதம் படஞ் செய்து இருந்த புறநிலை
ஓதும் மலம் குணம் ஆகும் ஆதாரமோடு
ஆதி அவத்தைக் கருவிதொண் ணூற்றாறே.

ஐந்து பூதங்கள், ஐந்து பொறிகள், புறக் கருவிகள், இவற்றுடன் மும்மலம் முக்குணம் கலந்து விளைகின்ற தொண்ணூற்றாறு கருவிகள் சாக்கிர அவத்தைக்கு உரியன.

அறுபத்தெட்டுத் தத்துவங்கள்

உடல் உறுப்புகளில் பஞ்சபூதங்களின் கூறுகள் வருமாறு:

1. மண்: எலும்பு, தோல், இறைச்சி, நரம்பு, மயிர்.
2. நீர்: உதிரம், மஞ்சை, உமிழ் நீர், நிணம், விந்து.
3. தீ: பயம், கோபம், அகங்காரம், சோம்பல், உறக்கம்.
4. காற்று: போதல், வருதல், நோய்ப்படுதல், ஒடுங்குதல், தொடுதல்.
5. ஆகாயம்: ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை.
6. கர்மேந்திரியங்கள் ஐந்து: வாக்கு, பாணி, பாதம்,குதம், குய்யம்
7. வாயுக்கள் பத்து:
பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன் , கூர்மன், கிரிதரன், தேவதத்தன் , தனஞ்ஜயன்
8. நாடிகள் பத்து
பிங்கலை, இடைகலை, சுழுமுனை, சிகுவை, காந்தாரி, புருடன், அத்தி, அலம்புடை, சங்கினி, குரு.
9. வாக்குகள் நான்கு: சூக்குமை, பைசந்தி மத்திமை, வைகரி
10. ஈஷணை மூன்று

11. குணம் மூன்று: சத்துவம், ராஜசம், தாமசம்
12, தன்மாத்திரைகள் ஐந்து: சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்
13. அந்தக்கரணம் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

#2147. அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே

இடவகை சொல்லில், இருபத்தைஞ்சு ஆனை,
படுபர சேனையும், பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை உள்ளுறு நால்வர்
அடைய நெடுங்கதை ஐந்தொடு நான்கே.

சாக்கிரத நிலையில் ஆன்ம தத்துவங்கள் என்கின்ற இருபத்து ஐந்து யானைகளும், வசனம் ஆகிய காலாட்படையும், சத்தம் முதலிய ஐந்து பாய்ந்து செல்லும் குதிரைகளும் புருடனுடன் சேர்ந்து முப்பத்தாறும் புருவ மத்தியில் பொருந்தும். வாக்குக்கள் சென்று அடையும் நீண்ட வாயில்கள் ஒன்பது.

#2148. மடம் புகு நாய் போல் மயங்குவர்

உடம்பு முடம்பு முடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்போ டுயிரிடை நட்பறி யாதவர்
மடம்புகு நாய்போல் மரைந்து நின்றாரே.

பருவுடல், நுண்ணுடல், காரண உடல் என்ற மூன்றும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு ஒன்றாக இருக்கின்றன. ஆயினும் அவை உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்வதில்லை. பிராணனின் இயக்கம் பருவுடலுக்கு மட்டுமே உள்ளது. அறிவு நுண்ணுடலில் சென்று படிந்துவிட்டால் பருவுடலின் தொழில் கெடும். அதை அறியாதவர் மடத்தில் புகுந்த நாய் வெளியேற வழி தெரியாமல் மயங்குவது போல பருஉடலைக் கடக்க வழி தெரியாமல் மயங்கி நிற்பர்.

#2149. உடல் ஒழியாது

இருக்கின்றவாறு ஒன்று அறிகிலர் ஏழைகள்
முருக்கும் அசபையை மாற்றி முகந்து
கருக் கொண்டு காமாரி சாரமுகம் தேர்ந்து,
உருக் கொண்டு தொக்க உடல் ஒழியாதே.

அறிவிலிகள் அழியும் தங்கள் உடலை அழியாமல் நெடுநாள் காப்பாற்றி வைக்கும் முறையினை அறிய மாட்டார்கள். உள்முகம் வெளிமுகமாக இயங்குகின்ற பிராணவாயு அபான வாயுக்களின் போக்கை மாற்றி அவற்றை

உள்முகமாக அமைக்க வேண்டும். விந்துவை வெற்றி பெறச் செய்ய வேண்டும். சுழுமுனை வழியே மேலேசென்று சிவத்தை அடைய வேண்டும். இங்கனம் செய்து ஒளியுடல் பெற்று விட்டால் அது அழியாமல் நிலைத்து இருக்கும்.

#2150. அளித்தான் என்னுள்ளே ஆரியன் வந்து

ஒளித்திட்டு இருக்கும் ஒருபதி னாலை
அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அளிக்கும் கலைகளின் நாலாறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே.

அகரக் கலை நாபியில் அடங்கியுள்ளது. அது மாறி மாறி மேம்பாட்டு உடலைக் கடந்து விளங்கும் அனாசிருதை என்னும் பதினான்காவது கலையாக மாறிவிடும். இந்த விந்தையை எனக்கு உள்ளே உள்ள சிவன் எனக்கு அறிவித்தான். உடலின் அறுபது தத்துவங்களையும் சிவன் ஒடுங்கிய என் சித்தத்தில் ஒளித்து வைத்தான்.

#2151. பூத சயம் மேல் நோக்கிச் செல்துத்தினால்

மண்ணினில் ஒன்றும் மலர் நீரும் மருங்கு ஆகும்;
பொன்னினில் அங்கி புகல் வளி ஆகாசம்
மன்னும் மனோ புத்தி ஆங்காரம் ஓர் ஒன்றாய்
உன்னி முடிந்தது ஒரு பூத செயமே.

மண் தத்துவம் ஆகிய சுவாதிட்டானத்துக்கு அருகில் நீர் தத்துவம் ஆகிய மணிபூரகம் அமைத்துள்ளது. மூலாதாரத்தில் பொன்னின் நிறத்தில் ஒளிர்கின்ற நெருப்பு உள்ளது. மூல வாயவை எழுப்பி மேல் நோக்கிச் செலுத்தினால் அது காற்றுத் தத்துவம், ஆகாயத் தத்துவம் இவற்றுடன் சென்று பொருந்தும். மனம், புத்தி, அகங்காரம் இவற்றைப் பற்றி எண்ணி அவற்றையும் கடந்து சென்றால் அப்போது ஐம் பெரும் பூதங்களை வெற்றி கொள்ள முடியும்.

#2152. கன்னியைக் கன்னியே காதலித்தாளே

முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்மு னாளில்லை
கன்னியைக் கன்னியே காதலித்தானே.

முதல் பூதமாகிய வானுக்கு ஓசை என்னும் ஒரு மகன் உண்டு. வானிலிருந்து தோன்றிய காற்றுக்கு ஓசை, ஊறு என்ற இரண்டு மகன்கள் உண்டு. காற்றிலிருந்து தோன்றிய தீக்கு ஓசை. ஊறு , உருவம் என்னும் மூன்று மகன்கள்.

தீயிலிருந்து தோன்றிய நீருக்கு ஓசை, ஊறு, உருவம், சுவை என்ற நான்கு மகன்கள். நீரிலிருந்து தோன்றிய நிலத்துக்கு ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்ற ஐந்து மகன்கள். முதலில் சிவனுக்கும் சக்திக்கும் இந்தப் பிள்ளைகள் இருக்கவில்லை. பிரபஞ்சத்தைப் படைக்க விரும்பிய போது சக்தியே ஐம் பெரும் பூதங்களாகவும், அவற்றைலிருந்து வேறாகவும் நின்றாள்.

#2153. அண்டமும் தானாய் அமர்ந்து நின்றான்

கண்டன ஐந்தும் கலந்தன தான் ஐந்தும் சென்று
உண்டன நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்
பண்டையது ஆகிப் பரந்த வியாக்கிரத்து
அண்டமும் தானாய் அமர்ந்து நின்றானே.

கனவு நிலையில் ஐம்பொறிகளால் சீவன் அனுபவித்து உணர்ந்தவைகளும், ஐந்து கர்மேந்திரியங்களும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற பதிநான்கும் ஒன்றாகி நிற்கும். சீவன் விழிப்பு நிலையை அடைந்தவுடன் மீண்டும் உலகமே தானாக ஆன்மா நிற்கும்.

#2154. கனவு நிலை

நின்றவ னிற்பப் பதினாலிற் பத்துநீத்து
ஒன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்தில் கண்டான் கனவதே.

கனவு நிலையில் இருப்பவன் தன்னுடைய ஞான இந்திரியங்கள், கர்ம இந்திரியங்கள் என்னும் பத்து இந்திரியங்களையும் விட்டுவிடுவான். இப்போது இருப்பது நான்கு அந்தக் கரணங்கள் மட்டுமே. உலக வாழ்வில் தான் அனுபவித்தவற்றை அவன் ஒளிமயமாகக் கழுத்துக்கு மேலே கனவாகக் காண்பான்.

#2155. மேனி அழிந்து சுழுத்தி ஆகும்

தானம் இழந்து, தனிப்புக்கு இதயத்து
மானம் அழிந்து மதிகெட்டு மால் ஆகி
ஆன விரிவு அறியாஅவ் விதயத்தின்
மேனி அழிந்து சுழுத்தியது ஆமே.

கழுத்தைத் தானமாகக் கொண்டிருந்த ஆன்மா, இப்போது தனியே சென்று இதயத்தில் புகுந்து கொள்ளும். மானம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் அழிந்து விட்டதால் ஒன்றையும் அறிய முடியாத மயக்க நிலையில் உடல் தன்வசம் இழந்து இருப்பது சுழுத்தி என்னும் ஆழ்ந்த உறக்க நிலை ஆகும்.

#2156. விழுமாய் பொருளுடன் மேவி நின்றான்

சுழுமுனைச் சேர்ந்துள்ள மூன்றுடன் சாட்சி
கெழுமிய சித்தம் பிராணன்தன் காட்சி
ஒழுகக் கமலத்தி னுள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் றானே.

உறக்க நிலையில் இதயத்தில் புகுந்துள்ள ஆன்மாவுடன் சேர்ந்து கொண்டு பிராணன், சித்தம் என்னும் இரண்டும் தொழிற்படும். சித்தம், பிராணன் இவற்றின் அறிவும் நீங்கிய பின்பு ஆன்மா உந்தியில் மூலப் பிரகிருதி என்ற விழுமப் பொருளுடன் பொருந்தி நிற்கும். இதுவே துரிய நிலை ஆகும்.

#2157. ஊமன் நின்றான்

தானத்து எழுந்து தருக்கும் துரியத்தின்
வானத்து எழுந்து போய் வையம் பிறகிட்டுக்
கானத்து எழுந்த கருத்தின் தலையிலே
ஊனத்து அவித்தை இட்டு, ஊமன் நின்றானே.

துரியத்தின் நாபித் தானத்தில் இருந்து எழுந்து துரியாதீதம் என்ற வானத்துக்குள் ஆன்மா புகும். ஆன்மாவுக்கு அப்போது உலக நினைவுகள் எல்லாம் ஒழிந்து விடும். ஆன்மா உந்தியில் இருந்து எழுகின்ற நாதத்தில் ஏறி மேலே செல்லும் போது அதன் பிறவியுடன் இணைந்து வந்த அவித்தை என்னும் அறியாமை அகன்று விடும். மௌன நிலையை ஆன்மா அடைந்து ஊமை போல் ஆகி விடும்.

#2158. ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்

ஊமை எழுத்தொடு பேசும் எழுத்து உறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமயம் உற்றது;உள்ளொளி பெற்றது;
நாம்மயம் அற்றது; நாம்அறி யோமே.

பேசமுடியாத ஊமை எழுத்தாகிய ‘ம்’ என்பதுடன் பேசிக் கூடிய எழுத்துக்கள் ஆகிய அகார உகாரங்கள் பொருந்தினால் “ஓம்” என்னும் பிரணவம் தோன்றும். அதனால் ஆமையயின் ஐந்து உறுப்புக்களும் அதன் அகத்தினில் ஒடுங்குவது போன்றே ஐம்பொறிகளும் தத்தம் தொழில்களை விடுத்து அடங்கி விடும். ஆன்மா ‘ஓம்’ மயம் ஆகும் போது உள்ளொளி பெருகும். ‘நான்’ என்னும் அகங்காரம் முற்றிலும் அழிந்து படும். அதனை நாம் அறிய மாட்டோம்.

#2159. துரியம் இறந்த இடம் சொல்ல ஒண்ணாதே

துரியம் இருப்பதும் சாக்கிரத்துள்ளே
நரிகள் பதினாலும் நஞ்சுஉண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது;
துரியம் இறந்த இடம் சொல்ல ஒண்ணாதே.

பிரணவ யோகிகளின் துரியம் நிர்மலமான சாக்கிரம் ஆகும். அந்த நிலையில் இந்திரியங்கள் பத்தும் அந்தக்கரணங்கள் நான்கும் தொழில் படாமல் அடங்கி விடும். வேகமான மூலவாயு பரியினைப் போல பாய்ந்து சென்று வான் கூற்றை அடையும். துரியாதீத நிலையைப் பற்றிக் கூறுவதும் அரிது!

#2160. ஆறாத வல்வினையால் அடியுண்ணுமே

மாறா மலம் ஐந்தால் மன்னும் அவத்தையின்
வேறாய மாய தனு, கரண ஆதிக்கு இங்கு
ஈறு ஆகாதே எவ்வுயிரும் பிறந்து இறந்து,
ஆறாத வல்வினையால் அடியு ண்ணுமே.

பக்குவம் அடையும் வரையில் எல்லா சீவன்களிடமும் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்கள் மாறாமல் குடி கொண்டு இருக்கும். மாயையால் விளைகின்ற உடல்கள், கருவிகள் இவற்றுக்கு ஓர் எல்லையே இல்லை. எல்லா சீவன்களுமே பிறவி, மரணம் என்ற இரண்டிலும் அகப்பட்டுக் கொண்டு வல்லமை வாய்ந்த வினையால் வருந்திய வண்ணமே இருக்கும்.

#2161. எண்ணுறு ஞானத்து நேர் முத்தி எய்தும்

உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையும்
அண்ண லருள் பெற்ற முத்திய தாவது
நண்ண லிலாவுயிர் ஞானத்தி னால்பிறந்து
எண்ணுறு ஞானத்தின் நேர்முத்தி யெய்துமே.

சீவனுக்கு வினைப் பயன்களை நுகர்விக்கும் மாயை, அந்தச் சீவனை இடையறாது மாற்றி மாற்றி இந்த அவத்தைகளில் வைத்திருக்கும். இதுவும் அந்த சீவன் அண்ணலின் அருள் பெற்று வருந்தாமல் வீடு பேற்றினை அடைவதற்கே. ஞானத்தில் பிறந்த சீவனை மாயை நெருங்குவது இல்லை. சிவனையே எண்ணிப் பெறும் ஞானத்தால் அந்த சீவன் நேராக முக்தி அடைந்து விடும்.

#2162. ஐயவத்தைப் படுவானே

அதிமூட நித்திரை, ஆணவம் நந்த,
அதனால் உணர்வோன் அருங் கன்மம் முன்னித்
திதமான கேவலம் இத்திறம் சென்று
பரம் ஆகா ஐஅவத் தைப்படு வானே.

அனாதி கேவல நிலையில் சீவனுக்குக் கருவிகளும் கரணங்களும் இருப்பதில்லை. அப்போது முதலில் ஆணவம் செயல் படத் தொடங்கும். அதன் பின்னர் உணர்வுகள் செயல்படத் தொடங்கும். சீவன் செயல்களை செய்யத் தொடங்குவான். கேவல நிலையில் இருந்து பரம் என்னும் நிலையை அடையும் வரை சீவன் இந்த அவத்தைகளில் இருந்து தப்ப முடியாது.

#2163. ஏசாத மாயாள் தன்னாலே எழுப்புமே

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டா லெழுப்பும் செயல்போல்
நேசாய வீசனு நீடுஆண வத்தரை
ஏசாத மாயாள்தன் னாலே யெழுப்புமே.

ஆசான் தன் முன்னிலையில் உறங்குகின்ற மாணவனைப் பிரம்பால் அடித்து எழுப்பி விடுவார். அது போன்றே அனாதி காலமாக ஆணவமலத்தில் உறங்கிக் கிடைக்கும் சீவனைச் சிவபிரான் சுத்த மாயை என்னும் ஒளிவீசும் பிரம்பினால் அடித்து எழுப்பி விடுவான்.

#2164. இவ்வுடல் அஞ்சுணும் மன்னன் போமளவே

மஞ்சொடு, மந்தா கினிகுடம் ஆம்என
விஞ்சுஅறிவு இல்லோன் விளிம்பும் மிகுமதி
எஞ்சல்இல் ஒன்று எனு மாறுஎன இவ்வுடல்
அஞ்சுணும், மன்னன் அன்றே போமளவே.

வான் கங்கையின் நீர் ஒரு குடத்தின் அளவே என்று கூறுவது ஓர் அறிவில்லாதவன் அறிவுள்ளவன் போலச் சொல்லும் சொற்கள் ஆகும்.' குறைவில்லாத இறைவனும் குறைகள் மலிந்த சீவனும் ஒன்று!" என்று கூறுவதற்கு மாறாகச் சீவன் பக்குவம் அடைந்து சிவனுடன் சென்று பொருந்தும் வரையில் இந்த ஐந்து அவத்தைகளுக்கு ஆட்பட்டு நிற்கும்.

#2165. துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே

படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
.அடியுடை யைவரும் அங்குறை வோரும்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே.

நிலத் தத்துவத்தைத் தன் இடமாகக் கொண்டவன் சீவன். அவன் மூல வாயுவில் ஏறி அழகிய ஊர்த்துவ சகசிரதளத்தை அடையும் போது சீவனின் ஐந்து பொறிகளும், அவற்றுடன் உடலில் இருக்கும் அத்தனை தத்துவங்களும் உறங்கிப் போய்விடும்.

#2166. நேரம் பரத்துடன் நிற்பது நித்தமே

நேரா மலத்தை நீடைந் தவத்தையின்
நேரான வாறுன்னி நீடு நனவில்
நேரா மலமைந்து நேரே தரிசித்து
நேராம் பரத்துட னிற்பது நித்தமே.

மலங்கள் பல நிறங்களுடன் சீவனின் நுண்ணுடலைப் பற்றி நிற்பவை. இவை புறக் கண்களுக்குப் புலப்படாதவை. இவைகள் சுத்த அவத்தையில் புலப்படுமாறு அந்த மலக் குற்றத்தின் காரணங்களை சீவன் ஆராய வேண்டும். அப்போது நின்மல சாக்கிர நிலையில் ஐந்து மலங்களையும் சீவன் காட்சியில் காண முடியும். தன் முகத்துக்கு முன்பு காணப்படும் சிவனுடன் சீவன் பிரியாமல் பொருந்தி நிற்பதே சீவன் பக்குவம் அடைந்தத்தின் பயன் ஆகும்.

எட்டாம் தந்திரம் -
4. மத்திய சாக்கிராவத்தை

புருவ நடுவில் சீவன் ஐந்து அவத்தைகளை உணர்வது.
இவை ஐந்தும் விழிப்பு நிலையில் வருவன.

1. சாக்கிரத்தில் சாக்கிரம்
2. சாக்கிரத்தில் சொப்பனம்
3. சாக்கிரத்தில் சுழுத்தி
4. சாக்கிரத்தில் துரியம்
5. சாக்கிரத்தில் துரியாதீதம்

#2167. சாக்கிர சாக்கிரம்

சாக்கிர சாக்கிரம் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னில் சுழுத்தித்தற் காமியஞ்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே.

விழிப்பு நிலையில் விழிப்பு நிலை:
திரோதான சக்தி ஆன்ம விளக்கம் பெறமுடியாதபடி மறைத்துக் கொண்டு இருக்கும்.

விழிப்பு நிலையில் கனவு நிலை:
ஆன்மா மாயா காரியங்களில் அழுந்தி நிற்கும்.

விழிப்பு நிலையில் சுழுத்தி:
கருவிகள் ஓய்வடைந்துவிடும். ஆன்மா தான் விரும்பும் பொருளில் அதுவாக நிற்கும்

விழிப்பு நிலையில் துரியம்:
ஆன்மா தான் விரும்பிய பொருளில் நிற்கும் ஆற்றலை இழந்து விடும். மாயை வயப்பட்டு நிற்கும்.

#2168. மாயை எழுப்பும் கலாதியை

மாயை எழுப்பும் கலாதியை, மாற்று அதன்
நேய இராக ஆதி ஏய்ந்த துரியத்து
தோயும் சுழுமுனை, கானா, நானாவும் துன்னி
ஆயினன், அந்தச் சகலத்து உளானே.

மாயை ஆன்மாவிடம் கலைகள் முதலியவற்றை எழுப்பி விடும். அதனால் நேயம் இராகம் இவற்றுக்கு ஏற்பச் சீவனிடம் துரியம் பொருத்தும். அதன் பின்னர் சீவன் படிப் படியாகச் சுழுத்தி, கனவு, நனவு என்னும் நிலைகளில் பொருந்தி விட்டு கருவிகள் காரணங்கள் பொருந்திய சகல நிலையை அடையும்.

#2169. மூவயின் ஆன்மா முயலும் கருமமே

மேவிய அந்தகன் விழிகண் குருடன்ஆம்
ஆவயின், முன்அடிக் காணுமது கொண்டு
மேவும் தடி கொண்டு செல்லும்; விழிபெற
மூவயின் ஆன்மா முயலும் கருமமே.

பிறவிக் குருடனும், பிறந்த பிறகு குருடானவனும் நடந்து செல்கையில், முன்பு நடந்து சென்ற பழக்கத்தினால் செல்லும் வழியை அனுமானம் செய்துகொண்டு, ஒரு தடியின் உதவியுடன் நடந்து சென்று விடுவர். சகலர், பிரளயாகலர் , விஞ்ஞானகலர் என்ற மூன்று வகைப்பட்ட ஆன்மாக்களும் இது போன்றே முயன்று தம் சகல நிலையை அடையும்.

#2170. ஐந்தும் தான் உண்ணுமாறே

மத்திமம் ஒத்த சிலந்தி வலயத்துள்
ஒத்து அங்கு இருந்து, அங்கு உயிர் உண்ணுமாறுபோல்
அத்தனும் ஐம்பொறி ஆடு அகத்துள் நின்ற
சத்தம் முதல் ஐந்தும் தான் உண்ணுமாறே.

சிலந்திப் பூச்சி தான் கட்டிய வலையின் நடுவில் அமர்ந்து கொண்டு அங்கு வருகின்ற உயிர் இனங்களை உண்டு இன்புறும். அத்தனும் அது போன்றேச் சீவனின் ஐம்பொறிகளும் வந்து பொருந்துகின்ற இடத்தில் அமர்ந்து கொண்டு ஐம் புலன்களையும் அனுபவித்து இன்புறுகின்றான்.

#2171. நச்சியவனருள் செய்து நானுய்ந்தவாறே

வைச்சன வைச்சு வகையிரு பத்தைஞ்சு
முச்சு முடன் அணை வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி யென்றென்று
நச்சி யவனருள்செய்து நானுய்ந்த வாறே.

வைக்க வேண்டிய இருபத்தைந்து தத்துவங்களையும் சீவனுக்குள் ஈசன் அமைத்துள்ளான். உபாயமாக அவற்றையே கொண்டு எங்கும் உள்ள சிவன் சீவனிலும் பொருந்தி உள்ளான். அவனை நான் “பித்தன், பெரியவன், பிறப்பில்லாதவன் ” என்றெல்லாம் புகழ்ந்து அவன் அருளுக்குப் பாத்திரம் ஆனேன்.

#2172. நாலேழு வேதாந்த தத்வமே

நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான வையைந்து மெய்ப்புரு டன்பரங்
கூறா வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த தத்வமே.

ஆன்மத் தத்துவங்கள் இருபத்து ஐந்து என்பர். ஆனால் பிரம்மவாதிகள் கண்ட தத்துவங்கள் மொத்தம் இருபத்தெட்டு ஆகும். அவை இருபத்து ஐந்து ஆன்மத் தத்துவங்களுடன் ஆன்மா, ப்ரம்மம், பரமாகாயம் என்பவை சேர்த்து மொத்தம் 28 வேதாந்தத் தத்துவங்கள்.

விளக்கம்:

பூதங்கள் 5 + இந்திரியங்கள் 10 + தொழில்கள் 10 + ஆன்மா + பிரம்மம் + பரமாகாசம் = 28

#2173. காலங் கொண்டானடி காணலுமாமே

ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலும்
காலங்கொண் டானடி காணலு மாமே.

சீவன் தன் உயிர்வளியை இடைகலை பிங்கலை நாடிகளில் முறையாகப் பொருத்த வேண்டும். ரேசகம், பூரகம் இவற்றால் முறைப்படிப் பொருந்தி மூலாதாரத்தில் இருந்து மேலே செல்ல வேண்டும். சத்துவ குணத்துடன் கூடி நாடிகளில் உள்ள மூன்று முடிச்சுக்களையும் கடந்து சென்றால் காலத்தைக் கடந்த ஈசனின் திருவடிகளைக் காணலாம்.

#2174. நாடிய நல்ல மனம்

நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கி இருந்திடும்
கூடிய காமம் குளிக்கு மிரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே.

பத்து முக்கிய நாடிகளும், நன்மை புரிகின்ற பத்து வாயுக்களும் மூலாதாரத்தில் இருந்து மேலே செல்கின்ற சுழுமுனை நாடியில் ஒடுங்கிவிடும். சீவனுக்குக் காமப் புணர்ச்சியில் கிடைக்கும் இன்பமும், நன்மையை நாடுகின்ற நல்ல மனமும் உடலில் வந்து பொருந்தும்.

#2175. ஆவன ஆவ! அழிவ அழிவன!

ஆவன ஆவ அழிவ அழிவன
போவான போவ புகுவ புகுவன
காவலன் பேர் நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவனோ செய்யும் இலங்கிழை யோனே.

ஆகவேண்டியவை ஆகும்; அழிய வேண்டியவை அழியும்,போக வேண்டியவை போகும்; வர வேண்டியவை வரும். காக்கும் சிவபிரான் ஆன்மாக்களுக்குத் தகுந்த அனுபவங்களைத் தருவான். தானும் அவர்களைக் கண்டு கொண்டிருப்பான். இளகிய நெஞ்சம் கொண்ட அருளாளன் அவன்.

#2176. வேதாந்தத் தத்துவங்கள் 28

**பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமு முள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமும் மேலைத் துரியமும்
தத்துவ நாலே ழெனஉன்னத் தக்கதே.**

பொறிகள் பத்து, அவைகளின் தொழில்கள் பத்து, அந்தக் கரணங்கள் நான்கு என மொத்தம் இருபத்து நான்கு. இவற்றுடன் சீவன், பிராணன், பரமாகாயம், பிரம்மம் என்பவை சேர்ந்து வேதாந்தத் தத்துவங்கள் மொத்தம் இருபத்தெட்டு.

#2177. வணங்கிடும் ஐம் மலம்

**விளங்கிடு முந்நூற்று முப்பத்தோ டொருபான்
தளங்கொ ளிரட்டிய தாறு நடந்தால்
வணங்கிடு மைம்மலம் வாயு எழுந்து
விளங்கிடு மவ்வழி தத்துவம் நின்றே.**

முந்நூற்று முப்பதைப் பத்து மடங்காக்கி, அத்தனை முறை பிராண வாயுவைப் பன்னிரண்டு விரற்கடை மேல் நோக்கிச் செலுத்தினால் அப்போது சீவனின் ஐந்து மலங்களும் அகன்று விடும். அத்துடன் ஆன்ம தத்துவங்களும் ஆங்காங்கே நின்று விடும்.

#2178. தத்துவங்கள் மொத்தம் எத்தனை?

**நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிரம்
மேலுமோ ரைந் நூறு வேறா யடங்கிடும்
பாலாவை தொண்ணூறோடு ஆறுள் படுமவை
கோலிய ஐயைந்து ளாகும் குறிக்கிலே.**

தத்துவங்களை விரிவாகக் கணக்கிட்டால் அவை நான்கு கோடியே நாற்பத்தெட்டாயிரத்து ஐநூறு ஆகும். அவற்றைத் தொகுத்தால் அவை தொண்ணூற்றாறு தத்துவங்களுள் அடங்கும். அவற்றை மேலும் சுருக்கினால் அவை வெறும் இருபத்தி ஐந்து தத்துவங்களுள் அடங்கிவிடும்.

#2179. சமயங்களின் தத்துவங்கள்

**ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறா றருஞ் சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறை யையந்தும் மாயாவாதிக்கே.**

மாயையின் காரியம் எனப்படும் தத்துவங்கள் மொத்தம் தொண்ணூற்றாறு. சைவர்களின் தத்துவங்கள் மொத்தம் முப்பத்தாறு. வேதாந்திகளின் தத்துவங்கள் இருபத்தெட்டு. வைணவர்களுக்குத் தத்துவங்கள் இருபத்து நான்கு. மாயாவாதிகளின் தத்துவங்கள் இருபத்தைந்து.

#2180. வித்தகனாகி விளங்கி இருக்கலாம்

தத்துவமானது தன்வழி நின்றிடில்
வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமாவை போயிடு மவ்வழி
தத்துவ மாவது அகார வெழுத்தே.

சாதகன் வித்தகனாக விளங்குவதற்குத் தத்துவங்களைத் தன்வழிப்படி நடக்கச் வேண்டும். அகார எழுத்தின் அறிவு ஆகும் பிரணவ யோகம். பிரணவ நெறி பிற பொய்யான நெறிகளை அகற்றிவிடும்.

#2181. அறிகின்ற நான் என்று அறிந்து கொண்டேனே

அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்
அறிகின்ற வென்னை யறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள் செய்தார் நந்தி
அறிகின்ற நானென் றறிந்து கொண்டேனே.

முப்பத்தாறு ஆன்ம தத்துவங்களும் ஆன்மாவுடன் பொருந்தாதபோது அறிவற்றவை ஆகும். அவற்றை அறிவது ‘அறிவுள்ள நான்’ என்பதை நான் அறியாமல் இருந்தேன். என்னையே அறிந்து கொள்ளாமல் இருந்த என்னிடம் குருநாதர் கூறினார் ” அறிகின்ற ஆற்றல் கொண்டவன் நீ ” என்று. நான் அறிகின்ற ஆற்றல் உடையவன் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

#2182. ஒன்றாகித் தானாகி நிற்கும்

சாக்கிர சாக்கிரம் ஆதிதனில் ஐந்தும்
ஆக்கும் மலா அவத்தை ஐந்தும், நனவாதி
போக்கி, இவற்றோடு பொய்யான ஆறாறும்
நீக்கி நெறிநின்று ஒன்றாகித் தானாகி நிற்குமே.

நனவில் நனவு போன்ற ஐந்து நிலைகளில் தத்துவங்கள் ஐந்தும் பொருந்தும்.அந்த ஐந்து தத்துவங்களையும் ஐந்து வாதிகளால் போக்க வேண்டும். த்துடன் பொய்யான த்துவங்ளையும் அகற்றினால் ஒன்றாகி விடும்.

சாக்கிரத்தில் ஐந்து நிலைகள்:

சாக்கிரத்ததில் சாக்கிரம், சாக்கிரத்ததில் சொப்பனம், சாக்கிரத்ததில்சுழுத்தி, சாக்கிரத்ததில் துரியம், சாக்கிரத்ததில் துரியாதீதம்.

சிவத்துவங்கள் ஐந்து:
வித்தை, மகேசுவரம், சாதாக்கியம், விந்து, நாதம்.

#2183. ஐந்து தெய்வங்கள்

ஆணவ மாதி மலமைந் தலரோனுக்கு
ஆணவ மாதி நான்காமாற்கு அரனுக்கு
ஆணவ மாதிமூன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே.

நான்முகனுக்கு ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்கள் உள்ளன. திருமாலுக்கு ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி என்னும் நான்கு மலங்கள் உள்ளன. உருத்திரனுக்கு ஆணவம், கன்மம், திரோதாயி என்ற மூன்று மலங்கள் உள்ளன. மகேசுவரனுக்கு உள்ள இரண்டு மலங்கள் ஆணவமும், கன்மமும் ஆகும். சதாசிவனுக்கு உள்ள மலம் ஆணவம் ஒன்றே ஆகும்.

எட்டாம் தந்திரம் -
5. அத்துவாக்கள்

அத்துவாக்கள் = வழிகள்.
அத்துவாக்கள் ஆறு வகைப்படும்.
அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பன.
வினைகளை ஈட்டுவதுக்கும், ஈட்டிய வினைகளைத் துய்ப்பதற்கும் உண்டானவை.

#2184. வகையும் தொகையும்

தத்துவம் ஆறாறு; தன்மனு ஏழ் கோடி
மெய்த்தகு வன்னம்ஐம் பான்ஒன்று; மேதினி
ஒத்த இரு நூற்று இருபான் நான்கு; எண்பான் ஒன்று,
வைத்த பதம், கலை ஓர் ஐந்தும் வந்தவே.

தத்துவங்கள் முப்பத்தாறு வகைப்படும்; மந்திரங்கள் ஏழுவிதமான ஈறுகளை உடையவை. எழுத்துக்கள் ஐம்பத்தொன்று வகைப்படும்; புவனங்கள் இருநூற்று இருபத்து நான்கு வகைப்படும்; பதங்கள் எண்பத்தொன்று விதமானவை; கலைகள் ஐந்து விதமானவை ஆகும்.

#2185. திகைத்து இருந்தார்களே

நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்து
ஓடு மவரோடு யுள்ளிரு பத்தைஞ்சும்
கூடுமவர் கூடிக் குறிவழியே சென்று
தேடிய பின்னர் திகைத்திருந் தார்களே.

திங்கள், கதிரவன், அக்கினி மண்டலங்களைக் கடந்து மேல் நோக்கிச் செல்பவர்கள் தங்கள் உடலில் உள்ள இருபத்து ஐந்து தத்துவங்களுடன் ஒன்றாகக் கூடுவர். உயிர்ப்புடன் கூடி மேலே சென்று சகசிர தளத்தை அடையும் வழியைத் தேடிக் கண்டு கொள்வர். அதைச் சென்று அடைந்த பின்பு அவர்கள் அந்தத் தத்துவங்களின் வழியே செல்லாதவர் ஆயினர்.

#2186. திகைத்து இருந்தார்களே

நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்து
ஓடு மவரோடு யுள்ளிரு பத்தைஞ்சும்
கூடுமவர் கூடிக் குறிவழியே சென்று
தேடிய பின்னர் திகைத்திருந் தார்களே.

திங்கள், கதிரவன், அக்கினி மண்டலங்களைக் கடந்து மேல் நோக்கிச் செல்பவர்கள் தங்கள் உடலில் உள்ள இருபத்து ஐந்து தத்துவங்களுடன் ஒன்றாகக் கூடுவர். உயிர்ப்புடன் கூடி மேலே சென்று சகசிர தளத்தை அடையும் வழியைத் தேடிக் கண்டு கொள்வர். அதைச் சென்று அடைந்த பின்பு அவர்கள் அந்தத் தத்துவங்களின் வழியே செல்லாதவர் ஆயினர்.

எட்டாம் தந்திரம் -
6. சுத்த நனவாதி பருவம்

கருவிகள், கரணங்களுடன் கூடிய சகல நிலையில் சுத்த சாக்கிரம் முதலிய ஐந்து நிலைகள்.

#2187. கனவா நனவில் கலந்து இவ்வாறே

நனவு ஆதி தூலமே சூக்கப் பகுதி;
அனதான வைஐந்தும் விந்துவின் சத்தி;
தனதுஆம் உயர் விந்து தான் நின்று போந்து
கனவா நனவில் கலந்தது இவ்வாறே.

சுத்த சாக்கிரத்தின் ஐந்து நிலைகளிலும் தூலத் தத்துவங்களே நுண்மை போலத் தோன்றும். அந்த 25 தூலத் தத்துவங்களும் விந்துவின் சக்தி ஆகும். விந்து என்ற ஒளி மண்டலத்தில் வெளிப்படும் உயிர், அந்தத் தூலத் தத்துவங்களை நனவில் கனவு போல காணும்.

#2188. நனவில் அதீதம்

நனவு லதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவில் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவில் கனவோடே னன் செய்தி யானதே.

நனவில் துரியாதீதம் அடைந்தவர் பிறந்த குழந்தையைப் போல வெறுமையாகக் கிடப்பார். நனவில் துரியம் அடைந்தவர் தவழும் குழந்தையைப் போல கொஞ்சம் அறிவு பெற்றிருப்பார். நனவில் உடலை உறங்கச் செய்பவர் வளர்ந்து பருவம் அடைந்தவர் ஆவார். நனவில் கனவு நிலையில் இருப்பவர் தன் வாழ்வின் குறிக்கோளை நோக்கி ஓடுபவர்.

#2189. செறியும் கிரியை சிவ தத்துவம் ஆகும்

செறியும் கிரியை சிவ தத்துவம் ஆகும்;
பிறிவுஇல் சுகயோகம் பேரருள் கல்வி
குறி தன் திருமேனி குணம் பல ஆகும்
அறிவுஇல் சராசரம் அண்டத்து அளவே.

கிரியைகள் சிவத்துவங்களை நோக்கி நம்மைச் செலுத்தும். தொடரும் இடைவிடாத யோக சாதனை பேரருள், கல்வி இவற்றை நல்கும். இறைவனின் திருமேனியை எப்போதும் நினைவு கூறும் சரியை பல மேன்மைகளை அளிக்கும். ஞானம் அளிப்பதோ அண்டத்தில் உள்ள அனைத்து அசையும் அசையாப் பொருட்களின் அறிவு ஆகும்.

#2190. பரசிவம்

ஆதி பரம்சிவஞ் சத்தி சதாசிவம்
ஏதமி லீசனல் வித்தியா தத்துவம்
போதம் கலைகாலம் நியதி மாமாயை
நீதியீ றாக நிறுத்தின னென்னே.

ஆதியாகிய பரசிவம் முறையாக வரிசையாக அமைத்தவற்றை எல்லாம் நீ அறிந்து கொள்வாய்! சிவம், சக்தி, சதாசிவம், குற்றமற்ற மகேசன், வித்தியா

தத்துவங்கள், போதம், கலை, காலம், நியதி, மாமாயை என்பன அவை. இது என்ன ஓர் அருமை!

#2191. தத்துவங்கள் முப்பத்தாறு

தேசு திகழ் சிவஞ் சத்தி சதாசிவம்
ஈசனல் வித்தை இராகம் கலை கால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மா வீராறே.

ஒளிரும் சிவன், சக்தி, சதாசிவம், மகேசுவரன், வித்தை, இராகம், கலை, காலம், போதம், நியதி, மகாமாயை, புருடன் என்ற இந்தப் பன்னிரண்டையும் சீவன் மேல் நோக்கிச் சென்று கடக்க வேண்டும்.

#2192. பாசம் பிரித்தே பேணுவீர்

ஆணவம், மாயையும், கன்மமும், ஆம் மலம்
காணும் முளைக்குத் தவிடு, உமி, ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணும் வாய் மற்றுநின் பாசம் பிரித்தே.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் ஆன்மாவைப் பற்றியுள்ள உமி, தவிடு, முளையைப் போன்றவை. ஆன்மாவைச் சிவனிடம் நெருங்க விடாமல் இவை அரிசியை உமி, தவிடு, முளைகளைப் போல பிரித்து வைக்கும். எனவே உன்னிடம் உள்ள பாசத்தை விலக்கி விட்டு ஈசன் திருவடிகளைப் போற்றுவாய்.

#2193. பசுக்கள் பல வண்ணம் பால் ஒரு வண்ணம்

பசுக்கள் பல வண்ணம், பால் ஒரு வண்ணம்,
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் கோல் போடில்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

பசுக்கள் பல வேறு நிறத்தவை ஆயினும் பால் மட்டும் எபபோதும் ஒரே நிறம் ஆகும். அந்த பல வண்ணப் பசுக்களை மேய்க்கும் ஆயன் ஒருவனே ஆவான். அவன் தன் மேய்க்கும் கோலைக் காட்டினால் அந்தப் பசுக்கள் அவனை விட்டு அகன்று செல்லா.

#2194. அடைவது ஏழ் நரகம்

உடலிந் தியமன மொண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயம் மேலும் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே.

உடலில் உள்ள கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள், அறியாமையுடன் பொருந்திக் கெடும். பாசத் தளைகளால் சீவனின் மயக்கம் மேலும் பெருகினால் அந்த சீவன் ஏழு நரகங்களிலும் சென்று துன்பம் அடையும்.

#2195. கீழாலவத்தை

தன் தெரியாத அதீதம் தற்கு ஆணவம்,
சொல் தெரிகின்ற துரியம் சொல் காமியம்
பெற்ற சுழுத்திப் பின் பேசுறும் காதலால்
மற்றது உண்டிக் கன நன ஆதலே.

துரியாதீதத்தில் பொருந்தியுள்ள புருடன் தன்னையும் கூட தான் அறிய மாட்டான். நாபியைப் பொருந்தி புருடன் அடையும் துரியத்தில் பிரணவம் விளங்கும். இதயத்தில் புருடன் சுழுத்தியில் பொருந்தும் போது விருப்பங்களுடனும் வாசனைகளுடனும் விளங்குவான். அந்த நிலைகளில் கனவும் நனவும் அந்த வாசனைகளைப் பற்றியே அமையும்.

#2196. நனவில் கனவு இல்லை

நனவில் கனவு இல்லை ; ஐந்தும் நனவில்
கனவிலாச் சூக்குமம் காணும் சுழுத்தி
தனல் உண் பகுதியே தற்சுட்டு மாயை
நனவில் துரியம்; அதீதம் தலை வந்தே.

சுத்த சாக்கிர நிலைகளில் ஐந்திலும் கனவுகள் இரா. கனவு இல்லாத சுழுத்தியில் பொருந்தும் போது வித்து, நாதத்தை நன்கு உணரமுடியும். மாயை அந்த விந்து நாதங்களை ஆன்மாவுடன் கொண்டு வந்து பொருத்தும். பின்பு நனவில் துரியமும் துரியாதீதமும் வந்து பொருந்தும்.

#2197. அவத்தைகளில் நீங்குபவை

ஆறாறில் ஐயைந்து அகல நனா நனா;
ஆறாம் அவைவிட ஆகும் நானாக்கனா
வேறான ஐந்தும் விடவே நனாவினில்
ஈறாம் சுழுத்தி இதில்மாயை தானே.

உடல் தொடர்புடைய இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும் புருடனும் சேர்ந்த 25 தத்துவங்கள் மொத்தம் உள்ள முப்பத்தாறு தத்துவங்களில் இருந்து நீங்கினால் சுத்த நனவு நிலை வந்து பொருந்தும். அதாவது வித்தியா தத்துவத்தில் புருடன் நீங்கலாக உள்ள மற்ற ஆறும் சிவதத்துவங்கள் ஐந்தும் என்று பதினொன்று தத்துவங்கள் சுத்த நனவு நிலையில் செயல்படும். சுத்த சாக்கிர நிலையில் சிவ தத்துவம் ஐந்து மட்டும் செயல்படும். சுத்த சாக்கிர சுழுத்தி நிலையில் சுத்த மாயை ஒன்று மட்டுமே செயல்படும்

#2198. தனுவின் பயன் இல்லை

மாயையில் வந்த புருடன், துரியத்தில்
ஆய முறைவிட்டு அதுவும்தான் அன்றாகி,
சேய கேவல விந்துடன் செல்லச் சென்றக்கால்
ஆய தனுவின் பயன் இல்லை ஆமே.

மாயையில் விளங்கும் புருடன் நின்மலத் துரியத்தில் அவற்றை நீத்து விடுவான். அவனும் அங்கு இரான். அந்த நிலையில் புருடனுக்கு அப்பால் உள்ள விந்து மண்டலத்தின் ஒளியில் ஆன்மா சென்று விளங்கும். அந்த நிலையில் ஆன்மாவுக்கு இந்த உடலால் எந்தப் பயனும் இராது.

#2199. முதிய அனலில் துரியத்து முற்றுமே

அதீதத் துரியத்து அறிவான் ஆம் ஆன்மா,
அதீதத் துரியம் அதனால் புரிந்தால்
அதீதத்து எழுந்து அறிவாகிய மானன்
முதிய அனலில் துரியத்து முற்றுமே.

ஆன்மா சாக்கிரதத்தில் துரியாதீத நிலையில் அறிவே தன் வடிவாகப் பெற்றுவிடும். சாக்கிரத்தில் அதீதம் புரிந்து விழிப்பு நிலையில் தன்னை மறந்து இருந்தால் அறிவு மயமாகிய ஆன்மா சிவச் சோதியில் கலந்து விடும். அதனால் ஆன்மாவும் ஒளிமயமாகி விடும்.

#2200. மெய் கண்டவன் உந்தி மேவலிருவரே

ஐயைந்து பத்துட னானது சாக்கிரம்
கைகண்ட வைஅஞ்சிற் கண்டங் கனா வென்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுமுனையின்
மெய்கண்ட வன்உந்தி மேவ லிருவரே.

நனவு நிலையில் முப்பத்தைந்து கருவிகள் புருவ மத்தியில் இருந்து தொழில் புரியும். கனவு நிலையில் இருபத்தைந்து கருவிகள் கண்டத்தில் இருந்து கொண்டு தொழிற்படும். சுழுத்தி நிலையில் புருடன், பிராணன், சித்தம் என்ற மூன்றும் இதயத்தில் தொழிற்படும் துரிய நிலையில் புருடன், பிராணன் என்னும் இரண்டும் உந்தியில் வந்து பொருந்தும்.

#2201. புரியட்டகத்தில் அவத்தைகள்

புரியட் டகமே பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னில் மூன்று கனவு
புரியட் டகத்தி லிரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று புக்கல் துரியமே.

நனவில் ஐந்து தன்மாத்திரைகள், மனம், புத்தி, அகங்காரம் என்ற எட்டும் புருடனுன் பொருந்தும். கனவில் மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று மட்டும் புருடனுடன் பொருந்தும். சுழுத்தியில் புத்தி, அகங்காரம் என்ற இரண்டு மட்டும் புருடனுடன் பொருந்தும். துரியத்தில் அகங்காரம் மட்டுமே புருடனுடன் பொருந்தும்.

#2202. நனவில் நனவு புலனில் வழக்கம்

நனவில் நனவு புலனில் வழக்கம்
நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்
நனவில் சுழுத்தியுண் ணாடலிலாமை
நனவில் துரிய மதீதத்து நந்தியே.

சாக்கிரதத்தில் உள்ள நனவு நிலையில் புலன்களின் அறிவு சிறப்பாக இருக்கும். புலன்களை நீக்கி விட்டு அவற்றின் வாசனைகளுடன் மட்டும் இருக்கும் நிலை சாக்கிரத்தில் கனவு நிலை. அந்த வாதனைகளும் போவது நனவில் உறக்கம் என்ற நிலை. எதுவும் நாட்டம் ஏற்படுத்தாத நிலை நனவில் துரியம். நனவில் துரியாதீதம் என்பது சிவ அனுபவம் ஆகும்.

#2203. கனவில் நனவு

கனவின் நனவு போல் காண்டால் நனவாம்
கனவினிற் கண்டு மறத்தல் கனவாகும்
கனவில் சுழுத்தியும் காணாமை காணல்
அனுமதி செய்தலி லான துரியமே.

கனவில் நனவுபோலக் காண்பது கனவில் நனவு நிலை. கனவில் கண்டு மறப்பவை கனவில் கனவு நிலை. எல்லாவற்றையும் கண்டும் காணாமல் இருப்பது கனவில் உறக்க நிலை. கண்டவற்றைக் கொண்டு காணாதவற்றை அனுமானித்தால் அது கனவில் பேருறக்க நிலை.

#2204. சுழுத்தி துரியமாம் சொல்லறும் பாழே

சுழுத்தி நனவொன்றும் தோன்றாமை தோன்றல்
சுழுத்தி கனவத னுண்மை சுழுத்தியில்
சுழுத்தி யறிவறி வாலே அழிகை
சுழுத்தி துரியமாம் சொல்லறும் பாழே.

சுழுத்தியில் நனவு என்பது ஒன்றும் தோன்றாமல் உறங்குவது. சுழுத்தியில் கனவு என்பது ஆன்மாவின் இருப்பு மட்டும் தோன்றுதல். சுழுத்தியில் சுழுத்தி என்பது அறிவால் அறிவு அழிந்து படுதல். சுழுத்தியில் துரியம் என்பது சொல்லுக்கு அடங்காத சூனியம்.

#2205. துரியம் பரமெனத் தோன்றிடும்

துரிய நனவா இதமுணர் போதம்
துரியக் கனவா மகமுணர் போதம்
துரியச் சுழுத்தி வியோமம் துரியம்
துரியம் பரமெனத் தோன்றிடும் தானே.

துரியத்தில் நனவு நன்மை பயக்கும் சிவ உணர்வில் நிற்பது.
துரியத்தில் கனவு என்பது சீவனை அண்ட ஆகாயத்தில் அறிவது.
துரியத்தில் சுழுத்தி என்பது நிராதார வானத்தில் பொருந்துவது.
துரியத்தில் துரியம் என்பது தன்னையே பரமாக உணர்வது.

#2206. அறிவறிகின்ற அறிவு நனவாம்

அறிவறி கின்ற வறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே.

அதீதத்தில் நனவு நிலை: ஆன்ம அறிவு சிவ அறிவுடன் கூடி அறிவதை உணர்ந்து கொள்வது
அதீதத்தில் கனவு நிலை: இவ்வாறு அறியும் அறிவு, அறிகின்ற இயல்பும் சிந்தனையும் நீங்கி இருப்பது.
அதீதத்தில் சுழுத்தி: ஆன்ம அறிவு சிவ அறிவில் அடங்கி அறிவதை விட்டுத் தானாக வேறாக நிற்பது
அதீதத்தில் துரியம்: ஆன்ம அறிவு வேறாக நிற்காமல் சிவ அறிவாகவே ஆகி விடுவது.

#2207. தான் எங்கும் ஆயவன்

தான் எங்கும் ஆயவன் ஐம்மலம் தான் விட்டு
ஞானம் தன் உருஆகி நயந்த பின்
தான் எங்குமாய் நெறி நின்று, அது தான் விட்டு
மேல் நந்தச் சூக்கம் அவை வன்னம் மேலிட்டே.

பராகாயம் போன்று எங்கும் பரந்து விளங்கும் நிலையை அடைந்தவன் ஐந்து மலங்கள் நீங்கப் பெறுவான். சிவனை அறிந்து கொண்டு ஞானமே தன் வடிவாகப் பெறுவான். பின்பு அந்த நிலையையும் விட்டு விட்டுச் அவன் சூக்குமமான பிரணவ உடலை அடைவான்.

#2208. ஐயைந்து மாறும்

ஐயைந்து மாறுமோ ரைந்து நனாவில்
எய்யும் நனவு கனவு சுழுத்தியாம்
மெய்யும் பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
ஐயமும் தானவ னத்துரி அத்தனே.

முப்பத்தாறு தத்துவங்களில் இருபத்தைந்து நீங்கினால் சாக்கிரம். அதில் ஆறு நீங்கினால் கனவு. மேலும் ஐந்து நீங்கினால் சுழுத்தி. தூலமும் சூக்குமமும் சுத்த மாயையில் இருப்பவை. துரிய நிலையில் அத்தன் தத்துவங்களின் தலைவனாக நிற்பான்.

#2209. ஈது என்று அறிந்திலன் இத்தனை காலமும்

ஈது என்று அறிந்திலன் இத்தனை காலமும்
ஈது என்று அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்;
ஈது என்று அறியும் அறிவை அறிந்தபின்
ஈது என்று அறியும் இயல்புடை யோனே.

இந்த உண்மையை நான் இத்தனை காலமும் அறிந்து கொள்ளவில்லை.

இதை அறிந்து கொண்ட பின்பு அறிந்து கொள்ள வேறு எதுவும் இல்லை. இந்த உண்மையை அறிந்து கொள்ளும் அறிவினை நான் அடைந்த பின்னர் இதுவே நான் நானே இது என்ற உண்மையை நான் அறிந்து கொண்டேன்.

#2210. எல்லாம் இருள் மூடம் ஆகும்

உயிர்க்கு உயிர் ஆகி, உருவாய் அருவாய்
அயற் புணர்வு ஆகி, அறிவாய்ச் செறிவாய்
நயப்பு உறு சத்தியும் நாதன், உலகாதி
இயற்பு இன்றி, எல்லாம் இருள் மூடம் ஆமே.

உயிருக்கு உயிரானவன் சிவன். அவன் உருவாகவும் உள்ளவன், அருவாகவும் உள்ளவன். அயலில் உள்ள பொருளாகவும் உள்ளவன். அவன் அறிவாக எங்கும் பரந்து விரிந்து செறிந்துள்ளான். சீவர்கள் நயக்கும் எல்லாவற்றையும் தரும் சக்தியின் நாதன் அவன். உலகம், உடல், கரணங்கள், கருவிகள் இவற்றை சிவன் இயக்காமல் இருந்தால் உயிர்கள் எல்லாம் அறியாமை இருளில் மூழ்கி விடும்.

#2211. வைத்தனன் ஈசன் மலம் அறுமாறே

சத்தி இராகத்தில், தான் நல்லுயிர் ஆகி,
ஒத்துஉறு பாசமலம் ஐந்தொடு, ஆறாறு
தத்துவ பேதம் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மலம் அறுமாறே.

ஆன்மாவைப் பற்றியுள்ள மலங்கள் நீங்க வேண்டும் என்பதற்காக ஈசன் மிகுந்த அருளுடன் செய்துள்ளவை இவை: சக்தியுடன் பொருந்தி நல்லுயிர் ஆனான். பாசத்தையும், ஐந்து மலங்களையும், முப்பத்தாறு தத்துவங்களையும், கருவிகளையும், கரணங்களையும் அந்த உயிருடன் பொருத்தி அருள் செய்தான்.

#2212. பரன் உண்மை தங்கும்

சாக்கிரா தீதத்தில் ஆணவம்தன் உண்மை
சாக்கிரா தீதம் துரியத்தில் தான் உறச்
சாக்கிரா தீதத்தில் ஆணவம் தான் விடாச்
சாக்கிரா தீதம் பரன் உண்மை தங்குமே.

சாக்கிராதீதத்தில் ஆன்மாவும் ஆணவமலமும் இரண்டும் உள்ளன. சாக்கிராதீதத்தில் பொருந்தி இருக்கும் ஒளியில் ஆன்மா சேர்ந்து விட்டால் அப்போது அதனுடன் இருக்கும் ஆணவ மலம் அழிந்துவிடும் . ஆன்மா திருவருளின் பொருந்தி நின்றால் பரத்தின் உண்மை ஆன்மாவிடம் தங்கும்.

#2213. மலக் கலப்பற்றான் மதியொளி ஆமே

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப் பற்றான் மதியொளி ஆமே.

ஆன்மாவிடம் மலம் கலந்திருப்பதால் மாமாயை ஆகிய சக்தி மறைந்து இருக்கின்றாள். சீவனின் ஞானம் மறைந்து இருக்கின்றது. சீவனுள் இருக்கும் சிவனும் மறைந்து இருக்கின்றான். ஆன்மாவின் மலக் கலப்பு அகன்றுவிட்டால் அப்போது சீவனின் மதி மண்டலம் மதியொளி வீசும்.

#2214. பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால் இரண்டு ஆமே

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்று ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால் இரண்டு ஆமே.

நன்மை தீமைகளைப் பிரித்து அறியாமல் திகைக்கின்ற சிந்தையில் காமம், குரோதம், மோகம் என்ற மூன்று வலிய சிங்கங்கள் உள்ளன. விஷய அனுபவங்களை நாடும் வஞ்சக நெஞ்சுக்குள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு நரிக் குட்டிகள் உள்ளன. புலன் இன்பங்களை வகைப்படுத்தி அனுபவிக்க விரும்பும் வலிய ஐந்து யானைகள் உள்ளன. பகைபாராட்டும் நெஞ்சத்துக்கு வெளியிலும் உள்ளேயும் சென்று சேர்கின்ற இரண்டு மாறுபட்ட தன்மைகள் உண்டு.

#2215. அதிர வருவதோர் ஆனையுமாமே

கதறு பதினெட்டுக் கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி நின்றால்
அதிர வருவதோர் ஆனையு மாமே.

பதினெட்டு தத்துவங்கள் பொருந்தியுள்ள இந்த உடல் வெளியுலக இன்பங்களை நாடிச் செல்ல விரும்பும். இங்ஙனம் சிதறுண்டு எழுகின்ற உள்ளத்தை நீங்கள் இறைவனிடம் அடைவிக்கும் பாதையில் செலுத்த வேண்டும். அப்போது இந்தப் பதினெட்டுத் தத்துவங்களும் அதிரும்படி சீவனின் ஒப்பற்ற தலைவன் ஆகிய சிவன் வெளிப்படுவான்.

#2216. நினைவாகத் தின்றிச் சுழுத்தி நின்றானே

நனவகத் தேயொரு நாலைந்தும் வீடக்
கனவாகத் தேஉட்கரணங்க ளோடு
முனைவகத் தேநின் றுதறியுட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்தி நின்றானே.

நனவில் தொழிற்படும் இந்திரியங்கள் பத்தும் அவற்றின் தொழில்கள் பத்தும் நீங்கி விட்டவுடன் கனவுலகத்தில் ஆன்மா புகுந்துவிடும். அங்கு அந்தக்கரணங்கள் நான்கையும் துறந்து விட்டதும் சிந்தனைகள் இல்லாத ஆன்மா சுழுத்தியில் (நின்மலமான உறக்கத்தில்) பொருந்தி விடும்.

#2217. பரனாய் நின்மலனாகும்

நின்றவ னாசான் நிகழ்துரி யத்தனாய்
ஒன்றி யுலகின் நியமாதி களுற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகாலம்
நின்று பரனாய் நின்மல னாமே.

சுழுத்தியில் பொருந்தும் ஆன்மா அதன் பின்னர் குருவருளால் துரியத்தில் சென்று பொருந்தும். அட்டாங்க யோகத்தில் சாதனைகள் செய்து ஆன்மா துரியாதீதத்தை அடையும். அங்கு சமாதி நிலையில் சில காலம் நிற்கும். பின்பு மலநீக்கம் ஏற்பட்டுத் தூய ஆன்மாவாகிப் பரன் என்ற பெயரை அடையும்.

#2218. ஒளி மூலத்தனாமே

ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாகத்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும் போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்தொளி மூலத் தானமே.

இங்கனம் பரநிலையை அடைந்த சாதகன் எல்லா அறிவையும் அப்போதே பெறுவான். அனைத்து உலகத்தையும் தானே உண்டு அனுபவிப்பான். நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற ஐந்து தெய்வ நிலைகளையும் கடந்து சென்று தானே சிவமாகி விடுவான். பிரணவ உடலை அடைந்து ஸ்வயம் பிரகாசியாக அவன் ஒளி வீசுவான்.

#2219. அண்டமும் தானாய் அகத்தினுள்ளாமே

மண்டலம் மூன்றினுள் மாயநன் னாடனைக்
கண்டுகொண்டு, உள்ளே, கருதிக் கழிகின்ற
விண்டு அலர்தாமரை மேல் ஒன்றும்; கீழாலத்து
அண்டமும் தானாய் அகத்தினுள் ளாமே.

உடலில் உள்ள கதிரவன், சந்திரன், அக்கினி என்ற மூன்று மண்டலங்களிலும் மாயங்கள் செய்பவன் சிவபிரான். அவனை எனக்கு உள்ளே கண்டு கொண்டேன். அவனைக் கருதி சிரசில் விரிந்து விளங்கும் ஆயிரம் இதழ்த் தாமரை ஆகிய சகசிரதளத்தைக் கடந்து மேலே சென்றால் அப்போது அண்டங்கள் எல்லாம் தானாகவே வந்து உள்ளத்தில் விளங்கும்.

#2220. சூது அறிவார் உச்சி சூடி நின்றாரே

போது அறியாது புலம்பின புள்ளினம்
மாது அறியாவகை நின்று மயங்கின
வேது அறியாவணம் நின்றனன் எம் இறை
சூது அறிவார் உச்சி சூடி நின்றாரே.

தங்களுக்கு ஒளி எங்கிருந்து வருகின்றது என்பதை அறியாமல் சீவர்கள் திகைத்து நின்றனர். அகண்டத்தில் கருத்தைப் பாதிக்காத இவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்று அறியாமல் சக்தி மயங்கினாள். இந்த அறியாமையில் அமிழ்ந்துள்ள சீவர்களை மாற்றிட வகை அறியாமல் சிவன் நின்றான். ஆனால் உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் தம் சிரசின் மீது சிவத்தை இருத்தித் துதித்துக் கொண்டு இருந்தனர்.

#2221. மனம் மன்னி நின்றான்

கருத்தறிந் தொன்பது கண்டமு மாங்கே
பொருத்தறிந் தேன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந்தேன் மனம் மன்னி நின்றானே.

சிவன் சீவனின் உடலின் ஆறு ஆதாரங்களிலும், மூன்று மண்டலங்களிலும் நுண்மையாகப் பொருந்துவதை அறிந்து கொண்டேன். அண்டங்களின் தலைவன் அவனை நாடி அந்த ஒன்பது மண்டலங்களையும் புலன் வழிப் போகாமல் திருத்தி அமைத்தேன். ஈசனை என்னிடம் வருவிக்க அறிந்து கொண்டேன். அவனும் என் மனதில் நிலையாக நின்று பொருந்தி விட்டான்.

#2222. என மதி மண்டலம் கொண்டு எரியும்

ஆன விளக்கொளி தூண்டு மவன் என்னத்
தான விளக்கொளியாம், மூல சாதனத்து
ஆன விதி, மூலத் தானத்தில் அவ்விளக்கு
எனை மதி மண்டலம் கொண்டு எரியுமே.

சுடர் விளக்கு ஆயினும் அடிக்கடி தூண்டி விட வேண்டும். அது போன்றே மூலாதாரத்தில் உள்ள அக்கினியை அடிக்கடி தூண்டி விடவேண்டும். இவ்வாறு தூண்டி விடப்படும் ஒளி கதிரவ மண்டலம், சந்திர மண்டலம் இவற்றைக் கொண்டு பேரொளியாக விளங்கும்.

#2223. கண்ணாடி காணும் கருத்து அது என்றானே

உள்நாடும் ஐவருக்கு மண்டை ஒதுங்கிய
விண் நாட நின்ற வெளியை வினவுறில்,
அண்ணாந்து பார்த்து ஐவர் கூடிய சந்தியில்
கண்ணாடி காணும் கருத்துஅது என்றானே.

வெளியுலக நாட்டத்தைத் துறந்து விட்ட ஒருவனின் ஐம்பொறிகள், நிமிர்ந்த ஊர்த்துவ சகசிர தளத்தின் மேலேயுள்ள வான மண்டலத்தில் கூடி இருந்து, கண்ணால் நாடி உள்ளத்தைக் காணும் தன்மை உடையது.

#2224. அறியாது அறிவானை யார் அறிவாரே?

அறியாத வற்றை அறிவான் அறிவான்;
அறிவான் அறியாதான் தன்அறிவு ஆகான்
அறியாது அவத்தை அறிவானைக் கூட்டி
அறியாது அறிவானை யார் அறிவாரே?

யாரும் அறியாதவற்றைச் சிவன் அறிவான். சிவனிடம் பொருந்தி நிறைந்த அறிவு அடையாதவன் அறிவு உடையவன் ஆக மாட்டான். அறிவு பெறாமல் அவத்தைகளில் உழலும் சீவனை, அருளுடன் தன்னோடு சேர்த்துக் கொண்டுச் சீவன் அறியாத வண்ணம் அவனைக் கண்காணிக்கும் சிவனை யார் அறிவார்?

#2225. அரியது அதீதம்

தூய தரிசனம் சொற்றோம்; வியோமம்
அரியன்; தூடணம் அந் நனவாதி;
பெரியன கால பரம்பின் துரீயம்;
அறிய அதீதம் அதீதத்தது ஆமே.

நின்மல சாக்கிர துரியம் பற்றிக் கூறினேன். துரியாதீதம் மிகவும் அரிதானதாகும். நனவு, கனவு, உறக்கம் இவை நிகழும். பின்பு கழிந்து விடும். காலப் பரம்பின் துரியம் மிகப் பெரியது. துரியாதீதம் மிகவும் அரிது.

எட்டாம் தந்திரம் - 7. கேவலம், சகலம், சுத்தம்

கேவலம் = கருவிகள் கரணங்களுடன் கூடாமல் இருத்தல்.
சகலம் = கருவிகள் கரணங்களுடன் இணைந்து இருப்பது.
சுத்தம் = கருவிகள் கரணங்களைத் துறந்து விட்டுத் தூய்மையாக இருத்தல்.

#2226. சீவன் துரியத்துள் தோயும்

மாயையில் சேதனன், மன்னும் பகுதியோன்,
மாயையின் மற்றது நீவுதல், மாயையாம்
கேவல மாகும்; சகலமா யோனியுள்
தோயும் மனிதர், துரியத்துள் சீவனே.

அசுத்த மாயையில் இருக்கும் ஆன்மா அசுத்த மாயையின் பல நிலைகளில் சென்று பொருந்தும். இதன் பயனாக சகலர்கள் கேவல அவத்தையில் பொருந்தி பற்பல பிறவிகள் எடுத்து துயருறுவர். சுத்த மாயையில் பொருந்துகின்ற ஆன்மா சிவதத்துவத்தை அறிந்து கொள்ள முயலும். அதனால் இத்தகையோர் நின்மல துரியத்தை கண்டுகொண்ட சீவர்கள் ஆவர்.

#2227. மூன்று நிலைகள்

தன்னை அறிசுத்தன், தற்கேவலன் தானும்
பின்னம் உறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்துஅசத்து சதசத்துடன்
துன்னுவர் தத்தம் தொழிற்கு அளவாகவே.

தன்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொண்டவன் சுத்தன்; தன்னைப் பற்றி எதுவும் அறிந்து கொள்ளாதவன் கேவலன்; இவர்களில் இருந்து மாறுபட்டு நிற்கும் சில வகை பரிபாகம் அடைந்தவன் சகலன். இவர்கள் மூவரும் முறையே சத்து, அசத்து, சதசத்து இவற்றுடன் தம் பக்குவ நிலைக்கு ஏற்பப் பொருந்தி நிற்பர்.

#2228. வினைப் பயன்களே அனுபவங்கள்

தானே தனக்குப் பகைவனும் நாட்டானும்;
தானே தனக்கு மறுமையும், இம்மையும்;
தானே தனக்கு வினைப் பயன் துய்ப்பானும்,
தானே தனக்கு தலைவனும் ஆமே.

ஒருவனுக்கு நண்பனும் அவனே! அவனுடைய பகைவனும் அவனே! ஒருவன் அனுபவிக்கும் இம்மை, மறுமைப் பயன்களுக்குக் காரணம் ஆவதும் அவனே. தான் செய்த நற்செயல்களின் புண்ணியத்தையும், தீய செயல்களின் பாவத்தையும் அனுபவிப்பவன் அவனே. அதனால் ஒருவன் தானே தனக்குத் தலைவன் ஆவான்.

#2229. சகல நிலையை அடைதல்

ஆம்உயிர் கேவலம் மாமாயை யின்நடந்து
ஆம்உயிர் மாயை எறிப்ப, அறிவுற்றுக்
காமியம், மாமேய மும்கல வாநிற்பத்
தாம் உறு பாசம் சகலத்து ஆமே.

ஆன்மா கருவிகளுடன் கூடி இன்னமும் பிறவி எடுக்காத நிலையின் பெயர் கேவலம். ஆன்மா கருவிகளுடன் கூடிப் பிறவிக்குத் தயாராக உள்ள நிலை சகலம். கேவல நிலையில் இருக்கும் ஆன்மா சுத்த மாயையில் பொருந்திப் பக்குவம் அடையும். அறிவைப் பெறும். ஆன்மா முன்பு செய்த வினைகளின் பயன்களைப் பெறுவதற்குத் தாம் அடைந்த பாசத்தால் கேவல நிலையில் இருந்து சகல நிலையை அடையும்.

#2230. சகல அவத்தை

சகல அவத்தையில் சார்ந்தோர் சகலர்
புகலும் மலம்மூ வகையும் புணர்ந்தோர்,
நிகர்இல் மலரோன், மால்நீடு பல் தேவர்கள்
நிகழ்நரர், கீடம் அந்தமு மாமே.

கருவிகளுடன் சகல நிலையில் வருபவர் சகலர் எனப்படுவர். இவர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் பொருந்தி உள்ளவர்கள். நிகரற்ற நான்முகன், திருமால் முதலாகத் தேவர்கள், மனிதர்கள் உட்படப் புழு ஈறாக அனைத்து சீவர்களும் சகலர்களே.

#2231. பிரளயகலர்

தாவிய மாயையில் தங்கும் பிரளயம்
மேவிய மற்றது உடம்பாய் மிக்கு உள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயின் நூற்றெட்டு உருத்திரர் ஆகுமே.

பிரளயர் ஆணவம், மாயை என்னும் இரண்டு மலங்களை உடையவர். இவர்கள் அசுத்த மாயையாகிய தூவா மாயையில் இருப்பவர்கள். அசுத்த மாயையே தம் உடலாகப் பெற்றவர்கள். மற்ற மாயேயங்களை விட்டு விட்டவர்கள் பிரகிருதி மாயையால் கட்டுப் படுத்தப்பட மாட்டார்கள். பிரகிருதியைக் கடந்த மாயையில் உள்ளவர்கள் சிவத்துடன் பொருந்திய உருத்திரர் ஆவர்.

#2232. விஞ்ஞான கலர்

ஆகின்ற கேவலத்து ஆணவத்து ஆனவர்
ஆகின்ற வித்தேசாரம் அனந் தாதியர்
ஆகின்ற எண்மர், ஏழு கோடி மந்திரர்
ஆகின்ற ஈசர் அநேகரும் ஆமே.

விஞ்ஞான கலர் ஆணவம் என்னும் ஒரு மலத்தை மட்டும் உடையவர்கள். அனந்தர் முதலாக, எட்டு வித்துயேசுரர்கள், ஏழு கோடி மகா மந்திரர்கள், அவற்றின் மந்திரேசர்கள் என்னும் அனைவருமே விஞ்ஞான கலர் ஆவர்.

எட்டு வித்தியேசுரர்கள்:
அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி.

#2233. விந்து நாதத்தைக் கடப்பார்

ஆமவரில் சிவன் ஆரருள் பெற்றுள்ளோர்
போம்மலம் தன்னால் புகல் விந்து நாதம் விட்டு
ஓம் மாயம் ஆகி, ஒடுங்கலின், நின்மலம்
தோம்அறு சுத்தா வத்தைத் தொழிலே.

விஞ்ஞானகலரில் சிவன் அருளுக்குப் பாத்திரம் ஆனவர்கள் மிகுந்த பக்குவத்தை அடைவர். ஆணவ மலம் ஒடுங்கி விடுவதால் அதன் காரியமாகிய விந்து நாதங்களைக் கடந்து செல்வர். 'ஓம்' என்ற பிரணவ வடிவாகிய சிவனுடன் ஒன்றி லயமாகி விடுவர். அப்போது அவர்கள் மலங்கள் மூன்றும் முற்றிலுமாக நீங்கிக் குற்றங்கள் அற்ற சுத்த நிலையை அடைந்து விடுவர்.

#2234. மலம் அறுப்பான்

ஓரினும் மூவகை, நால்வகையும் உள;
தேரில் இவைகே வலம்மாயை சேர்இச்சை
சார் இயல் ஆயவை; தானே தணப்பவை
வாரி வைத்து ஈசன் மலம் அறுத்தானே.

ஆராய்ந்து பார்த்தால் ஆன்மாக்கள் மூன்றுவகைப் பிரளயகலர்களாகவும், நான்கு வகை விஞ்ஞானகலர்களாகவும் இருக்கின்றன்னார். உத்தம, மத்திம, அதம நிலை என்று பிரளயகலர் மூவகைப்படுவர். உடலுடன் உள்ள போதே சிவனுடன் பொருந்தும் சீவன் முக்தர், உடலை விடுத்த பின் சிவனுடன் இணையும் உத்தம, மத்திம, அதம நிலையில் உள்ளவர்கள் என்று விஞ்ஞான கலர்கள் மொத்தம் நன்கு வகைப்படுவர். மாயையும், இச்சையும், கேவல நிலையில் உள்ள ஆன்மாவுடன் சேரும் போது சீவன்கள் உருவாகின்றன. எனினும் பக்குவம் அடையும் பொழுது சீவனின் மாயையும், இச்சைகளும் தாமே அகன்று சென்று விடும். அந்த நிலையை சீவன் அடையும் போது ஈசன் தன் தண்ணருளைத் தந்து மாசுக்களாகிய சீவனின் மலங்களை முற்றிலுமாக அகற்றி விடுவான்.

#2235. சுத்த அவத்தை

பொய்யான போதாந்தம் ஆறாறும் விட்டு அகன்று,
எய்யாமை நீங்கவே, எய்தவன் தான் ஆகி,
மெய்யாம் சராசரமாய், வெளிதன்னுள் புக்கு,
எய்தாமல் எய்தும் சுத்தாவத்தை என்பதே.

பொய்யான மண் முதலாக நாதம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் அறிவையும், அவற்றின் மீது கொண்டுள்ள பற்றையும் விட்டு அகல வேண்டும். அடைய வேண்டிய மெய்ப் பொருளாகிய சிவனாகத் தானே ஆகிவிட வேண்டும். அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் என்று அனைத்திலும் ஆன்மா கலந்து நிற்பதே சுத்த அவத்தை எனப்படும்.

#2236. தூய நிலைக்குத் தூயவன் செலுத்துவான்

அனாதி பசு வியாத்தியாகும் இவனை
அனாதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி,
அநாதியில் கேவலம், அச் சகலத்து இட்டு,
அனாதி பிறப்பு அற, சுத்தத்துள் ஆகுமே.

பசுத் தத்துவத்தில் அனாதி காலமாகக் கட்டப் பட்டுள்ளது ஆன்மா. அதை ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்ற ஐந்து மலங்கள் அனாதி காலமாக வருத்திக் கொண்டு இருக்கின்றன. ஆன்மா அனாதி காலமாக இருந்து

வரும் கேவல நிலையிலிருந்து சகல நிலைக்கும், பின்பு சகல நிலையிலிருந்து தூய நிலைக்கும் நம் தூய இறைவனே அழைத்துச் செல்வான். ஆன்மாவைப் பிறவிப் பிணியில் இருந்து விடுவிப்பான்.

#2237. தன்னைத் தானே அறிந்து கொள்ள வேண்டும்

அந்தரம் சுத்தாவத் தைகே வலத்தாறு
தந்தோர், தம் சுத்த கேவலத்து அற்ற தற்பரத்
தின்பால், துரியத்திடையே அறிவுறுத்
தன்பால் தனை அறி தத்துவந்தானே.

சுத்த அத்தையை அடைவது எப்படி?

கேவல நிலையிலிருந்து ஞானத்தைப் பற்றிக் கொண்டு துரிய நிலையை அடைபவன் கேவல நிலை, சுத்த நிலைகளைக் கடந்து விளங்கும் தற்பரத்திடமிருந்து தூய அறிவைப் பெறுவான். துரிய நிலையில் அவன் தன்னைத் தானே அறிந்து கொள்வான். இதன் மூலம் அவன் சுத்த அவத்தையை அடைவான்.

#2238. தத்துவங்கள் ஒடுங்கிவிடும்

ஐயைந்து ஒடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டு, சுத்த அவத்தையில் வீடாகும்;
துய்ய அவ்வித்தை முதல் மூன்றும், தொல்சத்தி,
ஐயன் சிவம், சித்தி ஆம் தோற்றம் அவ்வாறே.

மண் முதல் புருடன் ஈறாகிய இருபத்து ஐந்து தத்துவங்களும் ஆன்மாவில் ஒடுங்கும். தூய நிலையை அடைந்து விட்ட ஆன்மா தன் வீட்டைச் சென்று அடையும். சிவ தத்துவதில் உள்ள சுத்த வித்தை, மகேசுரம், சாதாக்கியம் என்ற மூன்றும் சக்தியில் ஒடுங்கும் சக்தி சிவத்திடம் ஒடுங்கும். படைப்பின் போது சிவத்திடமிருந்து சக்தி தோன்றும். ஒடுங்கிய பிறவும் சக்தியிலிருந்து முறைப்படி வெளிப்படும்.

#2239. சிவசக்தியர் பொருந்தி விளங்குதல்

ஐயைந்தும் ஆன்மாவில் ஆறோடு அடங்கி விடும் ;
மெய்கண்ட மேல் மூன்றும் மேவும் மெய்யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத்தே காண
எய்யும்படி அடங்கும், நால் ஏழ் எய்தியே.

ஆன்ம தத்துவங்கள் 24 மற்றும் புருடன் என்னும் 25 தத்துவங்கள் 6 வித்தியா தத்துவங்களில் அடங்கிவிடும். அந்த 6 வித்தியா தத்துவங்களும் முதல் மூன்று சிவதத்துவங்களில் அடங்கிவிடும். இவை மூன்றும் சக்தி, பிந்து, நாதங்களில்

அடங்கி விடும். இருபத்தெட்டு தத்துவங்களும் பிற மூன்றில் அடங்கிவிடும் விதம் இதுவே. சக்தி, நாத, பிந்துவில் ஒடுங்கும் 28 தத்துவங்கள் = ஆன்ம தத்துவங்கள் 24 + புருடன் + சுத்த வித்தை + மகேசுரம் + சாதாக்கியம்.

#2240. மூவகையினர்

ஆணவத்தா ரொன் றறியாத கேவலர்
பேணிய மாயை பிரளயா கலராகும்
காணும் உருவினர் காணாமை காண்பவே
பூணும் சகலமும் பாசமும் புக்கோரே.

விஞ்ஞானக்கலர்:
ஆணவ மலம் மட்டும் உடையவர். கன்மம், மாயை என்னும் இரண்டும் இல்லாதவர்.
பிரளயாகலர்:
ஆணவம், மாயை இரண்டும் உடையவர். கன்மம் இல்லாதவர்.
சகலர்:
ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் உடையவர். உல் நோக்கம் இன்றி வெளி நோக்கம் மட்டுமே உடையவர்.

#2241. மூவரின் மூவகைக் குற்றங்கள்

ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையும் கன்மம் மூன்றுமே
காணுஞ் சகலருக்குக் காட்டு மலங்களே.

விஞ்ஞானகலரின் குற்றம் ஆணவ மலம்.
ஆணவத்துடன் மாயையையும் பற்றிக் கொள்வது பிரளயாகலரின் குற்றம்.
ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் பற்றிக் கொள்வது சகலரின் குற்றம்.

#2242. விந்து சக்தி

கேவலம் தன்னில் கிளர்ந்த விஞ்ஞானகலர்
கேவலம் தன்னில் கிளர் விந்து சத்தியால்;
ஆவயின் கேவலத்து அச்சகலத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே.

விஞ்ஞானக்கலர் ஞான வடிவநிலையில் கிளர்ந்து எழுபவர். ஞான வடிவம் கிளர்ந்து எழுவது விந்துவின் சக்தியால். கேவல நிலையில் இருந்து சகல நிலைக்கு வந்து பிரணவ வடிவ சக்தியை (மாமாயை) அறிந்து கொள்வது உண்மையில் நிகழ்வதே.

#2243. நூற்றட்டு உருத்திரர்கள்

மாயையின் மன்னு பிரளயாகலர் வந்து
மாயையும் தோன்றா வகை நிற்ப, ஆணவம்
மாய சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் நூற்றெட்டு உருத்திரர் என்பவே.

தூவா மாயையில் பொருந்திய பிரளயாகலர் அம்மாயையால் தளைப்படுத்தப் படுவதில்லை. ஆணவத்துடன் கூடிய தூமாயையில் காமியத்துடன் பொருந்தி இருப்பவர் நூற்றெட்டு ருத்திரர் ஆவர்.

#2244. சகலர் பிறவி எடுப்பர்

மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம மெய்ச் சகலத்தோர் தேவா சுரர்நரர்
மெய்மையில் வேதா வீரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் காரர்க்குஞ் சகலரே.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் பொருந்த அவற்றில் மயங்கி நிற்பவர் சகலர். அவர்கள் நான்முகன் முதலாகத் தேவர்கள், மனிதர்கள் உட்படப் புழு ஈறாக பிறவிப் பிணையில் தளைப் பட்டவர் அனைவரும் சகலரே.

#2245. சிவ சூரியன் மும்மலம் அகற்றுவான்

சுத்த அவத்தையிற் றோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் தனித்தனிப் பாசமும்
மத்த இருள் சிவனான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே.

தூய நிலையை அடைந்து அதில் பொருந்தி விட்ட ஆன்மா, சிவசூரியனின் அருள் வெள்ளத்தால் நித்தியமாகிய ஆணவ மலமும் அநித்யமாகிய கன்மம், மாயை என்னும் மலங்கள் நீங்கப் பெறும். பாசத் தளைகள், மயக்கம் தரும் இருள் இவை நீங்குவதால் ஆன்மாவின் தூய்மை நிறைவு பெற்று அது சுத்தன் ஆகிவிடும்.

#2246. மூன்று தூய நிலைகளின் பயன்கள்

தற்கே வலம்முத்தி தானே தனிமையாம்
பிற்பாற் சகலங் கலாதிப் பிரிவதாம்
சொற்பாற் புரி சுத்த கேவலம் சாக்கிரம்
தற்பாற் புரிவது தற்சுத்தவ மாமே.

ஆன்மா சிவனுடன் ஞான வடிவாகப் பொருந்தும் போது தனித்த வீடு பேற்றை அடையும். இந்த நிலைக்குப் பிற்பட்ட நிலையில் கலை முதலிய தத்துவங்கள் பிரிவது அமையும். தூய நின்மல சாக்கிரநிலை என்பது ஆன்மா பிரணவத்தில் பிரம்மத்துடன் பொருந்திச் சுத்த நிலையை அடைவது ஆம்.

#2247. கேவல நிலையில் ஆன்மா

அறிவு இன்றி முத்தன் , அராகாதி சேரான்
குறி ஒன்று இல்லா நித்தன், கூடான் கலாதி,
செறியும் செயல் இலான் தினம் கற்ற வல்லோன்
கிறியன், மலவியாபி, கேவலந்தானே.

கேவல நிலையில் உள்ள ஆன்மா அறிவு இல்லாதவன், அகராதி குணங்கள் பொருந்தாதவன், கொள்கை எதுவும் இல்லாதவன். நித்தியன், கலைகள் போன்ற அசுத்த மாயைகள் கூடாதவன், தத்துவங்களுடன் பொருந்திச் செயல் அற்றவன், இன்பத்தை அனுபவிக்க அறியாதவன், இருந்தும் இல்லாதவன், ஆணவ மலம் கொண்டவன்.

#2248. பிரளயாகலரின் பேறு

விந்துவு மாயையு மேவும் கிரியையும்
சந்தத ஞான பரையும் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே.

விந்துவின் உள்ளது ஒளி மண்டலம். அதை மறைக்கும் மாயை. அதை வெளிப்படுத்தும் கிரியை. அதனால் விளையும் ஞானம். இவை அனைத்தும் சீவனின் உடலில் உள்ள சக்திக்கு ஏற்ப அமையும். விந்து மண்டல ஒளியில் மெய்ஞ் ஞானத்தைப் பொருத்தும் பிரளயாகலர் பிறவி எடுக்கும் பொழுது தூய ஆன்மாக்கள் ஆவர்.

#2249. ஒன்பது நிலைப்பாடுகள்

கேவலம் ஆதியில் பேதம் கிளக்குறின்,
கேவலம் மூன்றும் கிளரும் சகலத்துள்
ஆவயின் மூன்றும் அதி சுத்தம் மூடவே
ஓவல் இலா ஒன்பான் உற்று உணர்வோர்கட்கே.

கேவலம் மூன்று நிலைப்பாடுகள் உடையது.

அவை முறையே கேவல கேவலம், கேவல சகலம், கேவலத் தூய்மை என்பவை. சகலம் மூன்று நிலப்பாடுகளை உடையது. அவை முறையே சகல

கேவலம், சகல சகலம், சகலத் தூய்மை என்பவை. தூய்மை மூன்று நிலப்பாடுகள் உடையது. அவை முறையே தூய கேவலம், தூய சகலம், தூய தூய்மை என்பவை. இங்ஙனம் ஒன்பது மாறுபட்ட நிலைகள் இருப்பது ஆராய்ந்து பார்த்தால் அறிந்து கொள்ளலாம்.

#2250. கேவல நிலைகளில் ஆன்ம அனுபவம்

கேவலத்தில் கேவலம் அதீதா தீதம்,
கேவலத்தில் சகலங்கள் வயிந்தவம்,
கேவலத்தில் சுத்தம் கேடுஇல் விஞ்ஞானகலர்க்கு
ஆவயின் நாதன் அருள்மூர்த்தி தானே.

கேவலத்தில் கேவலம்: இது கருவிகளை விட்டு விட்டு உறங்குவது போன்றது. கேவலத்தில் சகலம்: ஒளி மண்டலத்தில் அறிவு குன்றாமல் அமைத்தல் கேவலத்தில் தூய்மை: கேடுகள் நீங்கிய ஞானம் உடையவர் தன்னையும் உலகத்தையும் உள்ளபடி அறிந்து கொள்ளும் நிலை. இந்த நிலையில் சிவபிரான் இவர்களுக்குத் தன் தண்ணருள் தருவான்.

#2251. சகலத்தில் ஆன்ம அனுபவம்

சகலத்தில் கேவலம் சாக்கிரா தீதம்
சகல சகலமே சாக்கிர சாக்கிரம்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே.

சகலத்தில் கேவலம் : விழிப்பில் அறிவு ஆராய்ச்சியால் கருவிகள், கரணங்கள் செயற்படாமல் உறங்குவது போன்ற ஒரு நிலை சகலத்தில் சகலம்: விழிப்பு நிலை சகலத்தில் தூய்மை: விழிப்பு நிலையில் ஞான இந்திரியங்கள் பிரணவ ஒலியில் சென்று லயமடைவது.

#2252. சுத்தநிலையில் ஆன்ம அனுபவம்

சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலம் தொல்லுப சாந்தமாம்
சுத்த சகலம் துரிய விலாசமாம்
சுத்தத்தில் இம்மூன்றும் சொல்லலு மாமே.

தூய்மையில் தூய்மை : பழமையாகிய குற்றங்களை நீக்கிவிடும் சிவமாகவே ஆகிவிடுவது. தூய்மையில் கேவலம் : கரணங்களை விட்டு விட்டு, தன் மன மலங்கள் அகலும்படி ஈசனின் வியாபகத்தில், அலைகள் அற்ற நீர் போல அடங்கி இருப்பது.

தூய்மையில் சகலம் : தன்னையும் தன் தலைவனையும் உள்ளபடி அறிந்து கொண்டு அவன் அருளில் அமிழ்ந்து இருத்தல்.

#2253. சிவதத்துவம் தொழிற்படும் விதம்

சாக்கிர சாக்கிரம் தன்னில், கனவொடும்,
சாக்கிரம் தன்னில் சுழுத்தி துரியமே
சாக்கிரா தீதம் தனில் சுகானந்தமே
ஆக்கும் மறை ஆதி ஐம்மல பாசமே.

விழிப்பு சாக்கிரம் : புருவ மத்தியில் சிவ தத்துவங்கள் ஐந்தும் தொழிற்படும். நனவில் கனவு: பின் மூளையில் மகேசுரம், சாதாக்கியம், சக்தி, சிவன் என்னும் நான்கு தத்துவங்களும் தொழிற்படும். விழிப்பு உறக்கம்: தலையின் மீது சாதாக்கியம், சக்தி, சிவன் என்னும் மூன்றும் தொழிப் படும். விழிப்புப் பேருறக்கம் : நிராதாரத்தில் சக்தி, சிவம் என்னும் இரண்டும் தொழிற்படும். விழிப்பு உயிர்ப்பு அடங்கல்: துவாதசாந்த வெளியில் சிவம் மட்டுமே தொழிற்படும்.

சிவ தத்துவங்கள் ஐந்து ஆகும். இவை சிவனோடு அன்பு கொள்ளும் முறைகள். சிவதத்துவங்கள் வருமாறு:

1. சுத்த வித்தை: அறிவு குறைவாக இருந்து செயல் அதிகமாக இருத்தல். அதாவது தத்துவார்த்தமாக ஒன்றும் அறியாமல் இருந்து இறைவன் மேலுள்ள அன்பைச் செயலில் காட்டுவது.
2. ஈசுவரம்: அறிவு பெருகி செயல் குறைதல். அனைத்தும் அறிந்து அதனால் அமைதியாக இருப்பது. அனைத்தும் அறிந்தால் அடக்கம் வருகின்றது.
3. சாதாக்கியம்: சுத்த வித்தையும் ஈசுவரமும் கலந்தது. அதாவது அறிவும் செயலும் சமமாக இருப்பது.
4. விந்து: இது சக்தி வடிவம்.
5. நாதம்: இது சிவாநுபூதி.

#2254. சுத்த சாக்கிராதீதம்

சாக்கிராதீதத்தில் தான் அறும் ஆணவம்,
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது
ஆக்கு பரோபாதி யாம் உபசாந்தத்தை
நோக்கும் மலம் குணம் நோக்குதல் ஆகுமே.

சாக்கிராதீதத்தில் ஆன்மா சிவத்துடன் ஒன்றாகப் பொருந்தி விடும். அதனால் அப்போது ஆன்மாவின் மலங்கள் அகன்று விடும். சாக்கிராதீதம் என்பது நாதத்தைக் கடந்துவிட்ட நாதாந்த நிலை. அதனால் நாதத் தத்துவம் அதில் இருக்காது. ஆன்மாவுக்குப் பரசிவத்தின் தொடர்பினால்'உபசாந்தம்' என்று கூறப்படும் அசைவற்ற நீர்ப் பரப்பைப் போன்ற ஒரு நிறைவான மன அமைதி உண்டாகும்.

நாதத் தத்துவத்தை பற்றிக் கொண்டு நிற்கும் ஆன்மா மனமலங்களையும் அவற்றால் விளையும் குணங்களையும் நோக்காது.

#2255. அத்தன் அருளால் சித்தம் ஒடுங்கும்

பெத்தமும் முத்தியும், பேணும் துரியமும்,
சுத்த ஆதீதமும் தோன்றாமல் தான் உணும்
அத்தன் அருள் என்று அருளால் அறிந்த பின்
சித்தமும் இல்லை, செயல் இல்லை தானே.

சீவன் மன மலங்களால் கட்டப் பட்ட நிலை பெத்தநிலை. அவற்றில் இருந்து விடுபட்ட நிலை முத்தி நிலை. தநினைத்த தானே உணர்ந்து கொள்வது துரிய நிலை. சுத்த அவத்தை துரியாதீத நிலை. ஆன்மாவுக்கு இந்த நிலைகள் தோன்றாதபடிச் சிவன் சீவனை ஆட்கொள்வான் என்ற உண்மையைச் சிவன் அருளால் சீவன் அறிந்து கொண்டு விட்ட பின்பு, சீவனின் சித்தமும் அடங்கி விடும், செயல்களும் ஒடுங்கி ஓடும்.

#2256. எய்தும் உயிர் இறைபால் அறிவு ஆகும்

எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரன் அருளே;விளையாட்டோடு
எய்திடு உயிர் சுத்தத்து இடுநெறி என்னவே
எய்தும் உயிர்இறை பால்அறிவு ஆமே.

உயிர்கள் அடைகின்ற தளைகளால் கட்டுண்ட பெத்த நிலையும், அல்லது தளைகளில் இருந்து விடுபட்ட முத்தி நிலையும் ஈசன் அருளால் அமைவன. சிவனின் அருள் பெற்ற சீவன் உயரிய சுத்த நிலையை அடையும். இங்கனம் சிவனை அடைந்துவிட்ட சீவன் சிவனின் அறிவாகத் திகழும்.

#2257. கர்மப் பயன்கள்

ஐம்மலத் தாரும் மதித்த சகலத்தர்,
ஐம்மலத் தாரும் அருவினைப் பாசத்தார்,
ஐம்மலத் தார்சுவர்க்கம் நெறி யாள்பவர்
ஐம்மலத் தார்அர னார்க்கு அறிவோரே.

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்கள் கொண்ட சீவர்கள் தம்மைத் தாமே மதிக்கின்ற சகலத்தார் ஆவர். தாங்கள் செய்த கொடிய வினைப்பயன்களைத் துய்ப்பதற்காக ஐம்மலத்தார் பாசத் தளைப் படுகின்றனர். அவர்கள் வீடு பேற்றை விரும்புவதில்லை. சுவர்க்க போகத்தையே

விரும்புகின்றனர். இவர்கள் சிவனை அறியாது போனாலும், சிவன் இவர்களை நன்கு அறிந்து கொண்டுள்ளான்.

#2258. நனவு நிலை அமையும்

கருவில் அதீதம் கலப்பிக்கும் மாயை
அரிய துரிய மதில் உண்ணும் ஆசையும்
உரிய சுழுமுனை; முதல் எட்டும் சூக்கத்து
அரிய கனாத் தூலம் அந்நனவு ஆமே.

ஆன்மாவை பிறவிக்குச் செலுத்தச் சிவசக்தி அதன் கேவல அதீத நிலையில் மாயையைக் கலக்கச் செய்யும். துரிய நிலையில் அந்த ஆன்மா தான் விரும்பியவற்றைச் சுவைக்க எண்ணம் கொள்ளும். அந்த ஆன்மாவின் விருப்புக்கு ஏற்ப அதன் பிரமரந்திரம் அமையும். அதைச் சூழ்ந்துள்ள, கவிழ்ந்த சகசிரதளத்தில் தொழிற்படும் எட்டுச் சக்திகள் அமையும். ஆன்மாவின் குணம் எனப்படும் மனோமயகோசம் இவற்றுடன் இணைக்கப்பட்டதும் ஆன்மாவின் நனவு நிலை ஏற்படும்.

#2259. மலக் கலப்பு ஏற்படும் முறை

ஆணவம் ஆகும் அதீதமேல்; மாயையும்
பூணும் துரியம்; சுழுத்தி பொய்க் காமியம்;
பேணும் கனவு மாயேயம் திரோதாயி
காணும் நனவின் மலைக்கு கலப்பாகுமே.

ஆணவம் அகலாது நிற்கும் கேவல துரியாதீத நிலையில். துரிய நிலையில் மாயை வந்து பொருந்தும். பொய்யான கண்மங்கள் கேவலச் சுழுத்தி நிலையில் ஆன்மாவைப் பிணிக்கும். மாயேயம் வந்து பொருந்தும் கேவலக் கனவு நிலையில். நனவு நிலையில் திரோதாயியும் மற்ற மலங்களும் இவ்வண்ணம் ஆன்மாவைப் பற்றிக் கொள்ளும்.

#2260. பிறவி எடுக்கும் சுத்தன்

அரன் முதலாக அறிவோன் அதீதத்தன்
அரன் முதலா மாயைத்தங்கி சுழுமுனை
கருமம் உணாந்து, மாமாயைக் கைக்கொண்டோர்
அருளும் மறைவார் சகலத்து உற்றாரே.

அதீத நிலையில் இருக்கும்போது ஆன்மா பரசிவத்தை அறியும். துரிய நிலையில் உள்ள ஆன்மா சிவத்தை முதலாகக் கொண்ட சுத்த மாயையில் நிற்கும். சுழுத்தி நிலையில் மலங்கள் வந்து ஆன்மாவிடம் பொருந்தும். கனவு நிலையில்

ஆன்மாவை மாமாயை வந்து பற்றும். விழிப்பு நிலையில் திரோதாயி என்னும் மறைக்கும் சக்தி ஆன்மாவை வந்து பற்றும். சகல நிலையில் உள்ள ஆன்மா இவ்வாறு விளங்கும்.

#2261. சகல அவத்தையில் சீவன்

உரு உற்றுப் போகமே, போக்கியத்து உற்று,
மருவு உற்றுப் பூதம், மன அதீதம் மன்னி,
வரும் அச்செயல் பற்றிச் சத்த ஆதி வைகிக்
கரு உற்றிடும் சீவன் காணும் சகலத்தே.

சகல அவத்தையில் பிறக்கும் சீவன் செய்பவை இவை:

மாயையின் காரியமாக ஓர் உடலைப் பெறும். எடுத்த உடலுக்கு ஏற்ப இன்பங்களை அனுபவிக்கும். பஞ்ச பூதங்களை சார்ந்து நிற்கும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று நான்கு அந்தக் காரணங்களுடன் நன்கு பொருந்தும். சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளில் தங்கும். பிறவி எடுப்பதற்கு ஒரு கருப்பையை அடையும்.

#2262. பிறவாமை சுத்தமே

இருவினை ஒத்திட, இன்னருட் சக்தி
மருவிட ஞானத்தில் ஆதனம் மன்னிக்
குருவினைக் கொண்டு அருட்சக்தி முன் கூட்டிப்
பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே.

இருவினைகள் ஆகிய ஞானமும் கிரியையும் ஒத்து விளங்கும்போது, இன்பம் விளைவிக்கும் சிற்சக்தியில் ஆன்மா பொருந்தும். ஞான வடிவாகிய தூய சுத்த அவத்தையில் ஆன்மா பொருந்தும் போது ஆன்மாவுக்குக் குருவருள் கிடைத்தால், திருவருட் சக்தியினால் ஆன்மாவின் மலங்கள் நீங்கிவிடும். ஆன்மா மீண்டும் பிறவி எடுக்காமல் இருக்கும் நிலையை அடைவதே அதன் துரிய நிலை ஆகும்.

#2263. பரமசிவம் ஆதேயம் ஆகும்

ஆறாறும் ஆறுஅதின் ஐயைந்து அவத்தையோடு
ஈறா அதீதத் துரியது இவன் எய்தப்
பேறான ஐவரும் போம் பிரகாசத்து
நீறு ஆர் பரசிவம் ஆதேயம் ஆகுமே.

முப்பத்தாறு தத்துவங்களின் வழியாக, இருபத்து ஐந்து அவத்தை நிலைகளையும் ஆன்மா அடையும். நின்மல துரியாதீதத்தை சீவன் அடையும் போது சுத்தவித்தை, மகேசுரம், சதாசிவம், விந்து, நாதம் என்னும் சுத்த தத்துவத்துக்கு

உரிய ஐந்தும் நீங்கிவிடும். அப்போது ஒளியினை உடைய சீவன் பரசிவம் ஆகிவிடும். நீறு அணிந்த பரசிவம் ஆதேயம் ஆகிவிடும்.

#2264. பின்னையும் வந்து பிறந்திடும்

தன்னை அறியாது உடலைமுன் தான் என்றான்
தன்னைமுன் கண்டான், துரியம் தனைக்கண்டான்
உன்னும் துரியமும் ஈசனோடு ஒன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடும் தானே.

உடலிலிருந்து வேறுபட்டது அதில் உறையும் ஆன்மா. ஒருவன் 'தான் ஓர் ஆன்மா' என்பதை அறியாமல் 'தான் ஓர் உடல்' என்று எண்ணி மயங்கி இருந்தான். அவன் உணர்வு நிராதாரத்தில் சென்றபோது அவன் தன்னை ஓர் ஒளி வடிவினனாகக் கண்டு கொண்டான். துரியத்தில் உடலைத் தங்குவதும் ஓர் ஒளி என்று கண்டு கொண்டான். சீவனின் ஒளி உடல் சிவனின் ஒளி உடலுடன் ஒன்றாகாமல் போய் விட்டால் அந்த ஆன்மா மீண்டும் மீண்டும் உலகில் வந்து பிறந்து, தன் வினைகளுக்கு ஏற்ற உடலைப் பெறுவான்.

#2265. வாக்கும் மனமும் மருவல் செய்யாவே

சாக்கிரம் தன்னில் அதீதம் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மால் நந்த,
நோக்கும் பிறப்புஅறும் நோன் முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல் செய்யாவே.

நின்மல சாக்கிராதீதம் கைக் கூடினால் அதனால் ஆன்மாவுக்குப் பல நன்மைகள் விளையும். அந்த அதீத நிலையைத் தோற்றுவித்த சுத்த தத்துவம் ஆன்மாவுக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தரும். ஆன்மாவை எதிர்நோக்கிக் காத்திருந்த அதன் பிறவிப்பிணி நீங்கி விடும். பெருமை உடைய வீடுபேறு கிடைக்கும். அந்த நிலையில் வாக்கும், மனமும் செயல் புரியா. வாக்கும் மனமும் கடந்த மோன நிலையே ஆன்மாவின் முத்தி நிலை எனப்படும்.

#2266. அப்பும் அனலும் கலப்பது இவ்வாறே

அப்பும் அனலும் அகலத்துளே வரும்,
அப்பும் அனலும் அகலத்துளே வாரா,
அப்பும் அனாலும் அகலத்துள் ஏது எனில்
அப்பும் அனாலும் கலந்தது அவ்வாறே.

அகண்ட வானத்தில் நீரின் குளிர்ச்சியும், நெருப்பின் ஒளியும் கலந்து விளங்கும். ஆனால் அங்கே நீரின் நெகிழ்ச்சியோ நெருப்பின் வெப்பமோ இராது.

விரிந்த வானத்தில் நீரும், நெருப்பும் கலந்து எங்கனம் என்று கேட்டால் விரிந்த வானத்தில் நீரும், நெருப்பும் கலந்து விளங்குவது இங்ஙனமே.

#2267. மாயை உறும் ஆன்மாவிடம்

அறுநான்கு அசுத்தம்; அதி சுத்தாசுத்தம்
உறும்ஏழு மாயை, உடன் ஐந்தே சுத்தம்
பெறுமாறு இவை மூன்றும், கண்டத்தால் பதித்து
உறும்மாயை, மாமாயை ஆன்மாவி னோடே.

முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் அசுத்தமானவை. வித்தியா தத்துவங்கள் எழும், சிவ தத்துவங்கள் ஐந்தும் சுத்தமானவை. மாயை ஆன்மாவை இம் மூன்றுவகைத் தத்துவங்களையும் அடைவிப்பதற்காகத் தானும் மூன்று பிரிவுகளாகப் பிரியும். அவை பிரகிருதி மாயை, அசுத்தமாயை, சுத்த மாயை எனப்படும்.

#2268. சுத்த நிலையை அடையும்

மாயை கைத்தாயாக, மாமாயை ஈன்றிட,
ஆய பரசிவன் தந்தையாய் நிர்க்கவே
எயும் உயிர்க் கேவல சகலத்து எய்தி
ஆய்தரு சுத்தமும் தான் வந்து அடையுமே.

அசுத்த மாயை ஆன்மாவின் செவிலித் தாயை ஒத்தது. சுத்த மாயை ஆன்மாவின் ஈன்ற தாயை ஒத்தது. ஆன்மாவின் தந்தையாக நிற்பவன் சிவன். ஆன்மா கேவல, சகல நிலைகளை எய்தி, ஆராய்ந்து, அறிந்து தெளிவடைந்த பின்பு சுத்த மாயையைப் பொருந்தி சுத்த அவத்தையை அடையும்.

எட்டாம் தந்திரம் -
8. பராவத்தை

பராவத்தை = பரா + அவத்தை.
பரை = சக்தி
அவத்தை = நிலை
பராவத்தை = ஆன்மா சக்தியுடன் உள்ள நிலை

#2269. உடல் வேறு! உயிர் வேறு!

அஞ்சும் கடந்த அனாதி பரம் தெய்வம்
நெஞ்சம் அது ஆய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடல் உயிர் வேறு படுத்திட
வஞ்சம் திருந்தும் வகை அறிந்தேனே.

ஐந்து சிவதத்துவங்களையும் கடந்தவன் சிவன். அவன் அனாதி. அவன் பரம் தெய்வம். அவன் எல்லோர் நெஞ்சிலும் அஉறைகின்றான். அவன் நின்மலன். அவன் பிறப்பிலி. அவன் அகண்ட மெய்ப்பொருள். அவன் சீவனின் உடலில் இருந்து உயிரை வேறுபடுத்திட சீவனுள் மறைந்து உறைகின்றான். அவன் ஆன்மாவின் விருப்பத்தை நிறைவேற்றுவான். சுத்த மாயையை விரும்பும் சீவனை அதில் கொண்டு சேர்ப்பான். சீவன் அசுத்த மாயையை விரும்பினால் அதில் கொண்டு சேர்ப்பான்.

#2270. பராசக்தி அருள்வாள்

சத்தி பராபரம் சாந்தி தனில் ஆன
சத்தி பரானந்தம் தன்னில் சுடர் விந்து
சத்தியமாயை, தனுச் சத்தி ஐந்துடன்
சத்தி பெறும் உயிர் தான் அங்கத் தாறுமே.

பராபரையில் இருக்கையில் சக்தி பராசக்தி. சாந்தியில் இருக்கையில் அவள் சிற்சக்தி. பேரானந்தத்தில் இருக்கையில் அவள் இச்சா சக்தி. ஒளிமயமான விந்துவில் இருக்கையில் அவள் ஞான சக்தி. மாயையில் இருக்கையில் அவள் கிரியா சக்தி. சீவன் இந்தச் சக்திகளை அடையும்போது பராவத்தையை உணர்கின்றது.

#2271. அரன் இனிது ஆமே

ஆறாறுக்கு அப்பால் அறிவார் அறிபவர்;
ஆறாறுக்கு அப்பால் அருளார் பெறுபவர்,
ஆறாறுக்கு அப்பால் அறிவு ஆம் அவர்கட்கே
ஆறாறுக்கு அப்பால் அரன் இனிது ஆமே.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து உண்மையை அறிபவர் மட்டுமே உண்மையில் உண்மையை அறிபவர். அவர் அங்ஙனம் தத்துவங்களைக் கடந்த நிலையில் சக்தியின் பூரண அருளுக்குப் பாத்திரம் ஆவார். தத்துவங்களைக் கடந்த நிலையில் அவருக்கு நிறைந்த அறிவு உண்டாகும். அவர் சிவத்துடன் இனிதாகப் பொருந்தி இருப்பார்.

#2272. நஞ்சுற நாடி நயம் செய்யும்

அஞ்சொடு நான்கும் கடந்து அகமே புக்குப்
பஞ்ச அணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லியலாளொடு
நஞ்சுற நாடி நயம் செய்யு மாறே.

ஐந்து ஞானேந்திரியங்களும், நான்கு அந்தக்கரணங்களும் தத்தம் செயல்களைத் துறந்து உள்ளே அடங்கவும், ஐந்து இந்திரியங்களை அணிகலன்கள் போல அணிந்து கொண்ட ஆன்மா உறங்கும். அப்போது தேவர் தேவனும் மெல்லியலாள் சக்தியும் ஆன்மவின் மலங்களை அகற்றி அதற்கு நன்மை செய்வார்கள்.

#2273. திரிய வரும் துரியத்தில் சீவன் சிவம்

உரிய நனாத் துரியத்தில் இவனாம்;
அரிய துரியம் நனவு ஆதி மூன்றில்
பரிய பரதுரியத்தில் பரனாம்;
திரிய வரும் துரியத்தில் சிவமே.

நின்மல சாக்கிர துரிய நிலையில் சீவன் சுத்த நிலையில் இருப்பான். அந்தத் தூய நிலையில் நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளையும் கடந்து சென்று விட்டால், நின்மலத் துரியநிலையில் சீவன் பரனாகி விடுவான். சீவன் வேறு சிவன் வேறு என்று அறிய இயலாத உயரிய நிலையை அடைந்த சீவன் சிவன் ஆகி விடுவான்.

#2274. பரமாகார் பாசம் பற்றியவர்

பரமாம் அதீதமே பற்றறப் பற்றப்
பரமா மதீதம் பயிலப் பயிலப்
பரமா வதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றொன் றறாதே.

நின்மல சாக்கிராதீதத்தில் ஆன்ம தத்துவங்களை விட்டு விட்ட ஒரு சீவன் பரம் ஆகிவிடும். இந்த நின்மல சாக்கிராதீத நிலையைப் பயிலப் பயிலப் சீவனுடன் பரம் வந்து பொருந்தும். பரம் ஆக இயலாது இந்த நின்மல சாக்கிர அதீத நிலையை அடைய இயலாதவர்களுக்கு. இத்தகையவர் என்றுமே பாசத்தில் இருந்தும் பற்றுக்களில் இருந்தும் விடுதலை பெறார்.

#2275. தூய அறிவு சிவானந்தம்

ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயும் மனமும் கடந்த மயக்கறின்
தூய வறிவு சிவானந்தமாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே.

நாம் ஆராய்ந்து அறிய விரும்பும் மாயை ஒவ்வொரு சீவனின் உள்ளும் புறமும் சூழ்ந்துள்ளது. அது சீவனின் சிந்திக்கும் திறனையை மயக்கிச் சொல் வன்மையை அழிக்கிறது. சீவன் அந்த மாயையைக் கடந்து வந்தால் சீவனின் அறிவு தூய்மை அடைந்து விடும். அதுவே பின்னர் சிவானந்தமாக மாறி, சீவனின் அறிவை மயக்கும் மாயையை மூடிவிடும் ஒரு பொருளாக மாறிவிடும்.

#2276. நரிகளை ஓடத் துரத்திய நாதர்

துரியப் பரியி லிருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை யோடாத் துரத்திய நாதர்க்கு
உரிய வினைகள் நின்றோலமிட் டன்றே.

துரிய நிலை என்னும் பரியின் மேல் இருந்தது சீவன். அதை அங்கிருந்து பராவத்தை நிலையில் புகச் செய்தான் ஈசன். பராவத்தை நிலையில் இந்திரியங்கள் என்னும் நரிகள் நாதனால் விரட்டப்பட்டு ஓடிச் சென்று விட்டன. சீவனுக்கு உரிய வினைகள் அவனை அணுக முடியாமல் எட்ட நின்று ஓலம் இட்டன.

#2277. இவன் அவன் வடிவு ஆவான்

நின்றஇச் சாக்கிரம் நீள்துரியத்தினின்
மன்றனும் அங்கே மணம் செய்ய நின்றிடும்
மன்றல் மணம் செய்ய, மாயை மறைந்திடும்
அன்றே இவனும் அவன் வடிவு ஆமே.

சீவன் சாக்கிரத்தில் துரியாதீத நிலையை அடையும் போது மன்றில் ஆடும் செஞ்சடைப் பிரானும் அவனுடன் கலந்து நிற்பான். சிவனும், சீவனும் ஒன்றாகப் பொருந்தும் போது இருளாகிய மாயை விலகி விடும். அதனால் சீவனும் சிவனைப் போன்ற அகண்ட வடிவத்தை அடைந்து விடுவான்.

2278. துரியத்துத் தீது அகலாதே!

விரிந்திடில் சாக்கிரம் மேவும் விளக்காய்
இருந்த இடத்திடை ஈடான மாயை
பொருந்தும் துரியம் புரியல்தா னாகும்
தெரிந்த துரியத்துத் தீதுஅக லாதே.

விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது மனம் உலகை நோக்கி விரிந்தால், அப்போது மாயையின் காரியமாகிய உலகம் சீவனுக்கு நன்கு விளங்கும். வலிமை வாய்ந்த மாயை தான் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு தன்னைச் சார்ந்தவரை நன்கு பந்தப் படுத்திவிடும். சீவன் சிவனைப் பற்றுக் கோடாகக் கொண்டு மேலே சென்றால் சிவப் பேற்றினை அடைந்து சிவமாகவே மாறிவிடும். துரியத்தில் மாயையின் தொடர்பு இருந்தால் மாயையின் தீமை அகன்று செல்லாது.

#2279. அமலன் என்று அறிதியே

உன்னை அறியாது, உடலை முன் நான் என்றாய்,
உன்னை அறிந்து துரியத்து உறநின்றாய்
தன்னை அறிந்ததும் பிறவித் தணவாதால்
அன்ன வியாத்தான் அமலன் என்று அறிதியே.

முன்பு உன் ஆன்ம ஒளியை நீ அறிந்து கொள்ளாமல் 'என் உடல் தான் நான்' என்று கூறினாய். பின்னர் உன் ஆன்ம ஒளியை அறிந்து கொண்டு துரியத்தில் நின்றாய். உன் ஆன்மவொளி சிவவொளியில் லயம் பெற வேண்டும். அதுவரை பிறவித் துயர் அகலாது. ஆன்ம ஒளி சிவ ஒளியில் அடங்குவதே மலங்கள் நீங்கிய தூய நிலையை அடைவது என்று அறிந்து கொள்வாய்!

#2280. இருவரும் இன்றி ஒன்றாகி நின்றார்

கருவரம் பாகிய காயம் துரியம்
இருவரும் கண்டீர் பிறப்பிறப் புற்றார்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
யிருவரும் இன்றியொன் றாகிநின் றாரே.

துரியத்தில் உள்ள நுண்ணிய தேகம் கருவறையின் வரம்புக்கு உற்பட்டது. பிறவியின் காரணம் அகற்றப் படும் வரை பருவுடலும் நுண்ணுடலும் பொருந்திச் சீவன் பிரவிப் பிணியில் துயருறும். குருவருள் பெற்றுப் பருவுடல், நுண்ணுடலைச் சீவன் துறந்து விட்டால் அப்போது சீவன் சிவனுடன் ஒன்றாகிவிடும்.

#2281. பரதுரியம் பரம் ஆம்

அணுவின் துரியத்தில் ஆன நனவும்
அணுஅசை வின்கண் ஆன கனவும்
அணு அசைவிற் பராதீதம் சுழுத்தி
பணியின் பரதுரியம் பரம் ஆமே.

துரிய நிலையில் நனவு, கனவு, சுழுத்தி நிலைகளைக் கடந்து செல்லும் ஆன்மா பர துரீய நிலையை அடையும். அந்நிலையில் ஆன்மா உயரிய பரம் என்று ஆகிவிடும்.

#2282. சிவதுரியான உயிர்

பரதுரியத்து நனவும், பரந்து
விரிசனம் உண்ட கனவும் மெய்ச் சாந்தி
உருஉரு கின்ற சுழுத்தியும் ஓவ
தெரியும் சிவதுரி யத்தனும் ஆமே.

பரதுரிய நனவு நிலையை அடுத்து பரதுரிய கனவு நிலை அமையும். இந்நிலையில் பரவி விரிந்த உலகின் தூலநிலை அழிந்து போகும். இதனை அடுத்த பரதுரிய சுழுத்தி நிலை அமையும். இந்நிலையில் ஆன்மாவுக்கு உபசாந்தம் என்று விவரிக்க முடியாத ஒரு மனஅமைதி உண்டாகும். இந்த நிலையையும் கடந்து செல்லும் ஆன்மா சிவதுரியத்தை அடையும்.

#2283. உபசாந்தம் உற்றல் உண்மைத் தவம்

பரமா நனவின் பின், பாற்சகம் உண்ட
திறம்ஆர் கனவும் சிறந்த சுழுத்தி,
உரம் ஆம் உபசாந்தம் உற்றல் துறவே
தரன் ஆம் சிவதுரி யத்தனும் ஆமே.

பர அவத்தையில் நின்மல நனவு நிலைக்குப் பின்னர் தூல உலகம் காட்சி அளிக்காது. அந்நிலையில் தூல உலகம் ஒரு கனவு போலாகிக் காட்சி தரும். நின்மலச் சுழுத்தியில் ஆன்மாவின் சுட்டறிவு நீங்கி விடும். உபசாந்தம் என்னும் விவரிக்க முடியாத ஒரு மன அமைதி உண்டாகும். இதுவே உபசாந்தம் பொருந்திய உயரிய துறவு நிலை. இங்கு தங்கி இருப்பவன் உண்மையில் சிவனுடன் கலந்து இருப்பவன்.

#2284. நால் ஏழ் விடுத்தது நின்றான்

சீவன் துரியம் முதலாகச் சீரான
ஆவ சிவன் துரியாந்தம் அவத்தை பத்து
ஓவும் பாரா நந்தி, உண்மைக்குள் வைகியே
மேவிய நால்ஏழ் விடுத்துநின் றானே.

சீவனுக்குத் துரியம் முதல் சிவதுரியம் வரையில் உள்ள அவத்தை நிலைகள் பத்து ஆகும். இந்தப் பத்து நிலைகளையும் கடந்த சீவன், நிறைவான சிவத்தில் அடங்குவான். அந்தக் கரணங்கள் நான்கினையும், வித்தியா தத்துவங்கள் ஏழினையும் அவன் விடுத்து நிற்பான்.

#2285. அவத்தைகளுக்கு அப்பாற்பட்டவன்

பரஞ் சிவன் மேலாம் பரமம் பதத்தில்
பரம்பரன் மேலாம் பர நனவாக
விரிந்த கனா விடர் வீட்டுஞ் சுழுமுனை
உரந்தகு மாநந்தி யாமுண்மை தானே.

பரசிவனைக் காட்டிலும் உயர்ந்தது பரமம் என்னும் பிரம்மம். பரமத்திலும் உயர்ந்தது பரம்பரமம் என்னும் பரப்பிரம்மம். நனவுப் பரசிவம், கனவுப் பரசிவம், சுழுத்திப் பரசிவம் என்னும் நிலைகளின் வழியாக பரநந்தி நிலையை அடையும் சீவன்.

#2286. பற்றுக்கோடுகள் பதின்மர்

சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கி
பாலாய்ப் பிரம னரியம ராபதி
தேவாம் உருத்திரன் ஈசனாங் காணிலே.

சீவர்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பார்கள் பதின்மர் ஆவர். அருவ நிலையில் உள்ளவர்கள் பரம், சிவம், சக்தி, பரானந்தம், பரவிந்து, சதாசிவன் என்னும் அறுவர். உருவ நிலையில் உள்ள நால்வர் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன் ஆவார்.

#2287. உடலோடு உயிர் கலப்பு

கலப்புஅறி யார்கடல் சூழ்உல கேழும்
உலப்புஅறி யார்உட லோடுஉயிர் தன்னை
அலப்புஅறிந்து இங்குஅர சாளகி லாதார்
குறிப்பது கோலம் அடலது வாமே.

இந்தப் பத்து தெய்வங்கள் உயிருடன் கலந்து இயங்குகின்றன என்ற உண்மையை உலகத்தார் அறிவதில்லை. கடல் சூழ் உலகம் அழிந்துபடும் என்னும் உண்மையையும் இவர்கள் அறிவதில்லை. உடலுடன் உயிர் பொருந்தும் தன்மையை அறியாதவர்கள் இந்தத் தெய்வங்களை தியானிப்பது என்ன பயன் அளிக்கும்?

#2288. என்னை அறிந்து இன்புற்றேன்

பின்னை அறியும் பெருந்தவத்து உண்மைசெய்
தன்னை அறியில், தயாபரன் எம்இறை
முன்னை அறிவு முடிகின்ற காலமும்
என்னை அறியலுற்று இன்புற்ற வாறே.

மெய்த் தவம் செய்மின். உம்மை உண்மையாக உணர்மின். நேசம் மிகுந்த ஈசன் உமக்கு அருள் புரிவான். உம்மை உண்மையாக நீர் உணர்ந்தவுடன் முன்பு இருந்த அறிவும் ஆணவமும் நீங்கி விடும். அளவில்லாத ஆனந்தம் விளையும்.

#2289. தன்னை மறைத்தது தன் கரணங்கள்

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

பொன்னால் உருவான அணிகலனைக் காணும் போது பொன் காட்சி தராது. பொன்னின் தன்மை காட்சி தரும் போது அணிகலன் காட்சி தராது. அது போன்றே அந்தக்கரணங்கள் வெளி உலகை நாடும் போது ஆன்மா புலப்படாது. ஆன்மா புலப்படும் போது அந்தக்கரணங்கள் வெளியுலகை விடுத்து ஆன்மாவில் ஒடுங்கி மறைந்து விடும்.

#2290. பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே.

மரத்தல் செய்யப் பட்ட யானையைப் பார்க்கும் போது மரத்தின் தன்மை புலப்பட்டால் யானையின் உருவம் தெரியாது. யானையின் உருவம் தெரிந்தால் மரத்தின் தன்மை புலப்படாது. அது போன்றே பார் முதலான பூதங்களை நோக்கும்

போது பரம்பொருள் நமக்குப் புலப்படுவதில்லை. பரம்பொருள் புலப்படும்போது பார் முதலான பூதங்கள் நமக்குப் புலப்படா.

#2291. சீவன் சிவத்தில் அடங்குவதே முத்தி

ஆறாறு ஆகன்று, நமவிட்டு அறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் சிவாய அடங்கும் பின் முத்தியே.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த பின்பு ஆன்மா திரு ஐந்தெழுத்தில் உள்ள 'நம' வை விட்டு விடும். பேரறிவு பெறும். தத்துவங்களில் இருந்து மாறுபட்டு விளங்கும். ஆன்மா 'ய'காரமாகி 'வ'காரம் ஆகிய சக்தியுடன் முதலில் இணையும். பின்பு 'சி'காரமாகிய சிவனுடன் இணையும். சீவன் இங்கனம் 'சிவாய' ஆகும் நிலையே சீவனின் முத்தி நிலை.

#2292. பரமம் துரியம் தெரியும்

துரியத்தில் ஓரைந்தும் சொல்அக ராதி
விரியப் பரையில் மிகுநாதம் அந்தம்
புரியப் பரையில் பராவத்தா போதம்
திரியப் பரமம் துரியம் தெரியவே.

பராவத்தையில் சாக்கிரம், சுழுத்தி, கனவு, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து நிலைகள் இவ்வாறு அமையும். பரையில் நாதம் தோன்றும். நாதம் கனவில் ஒடுங்குப் பரையில் நின்மல சுழுத்தி என்னும் உறக்கம் அமையும். ஆன்மா நின்மல சுழுத்தியில் அழுந்தாது விளங்கும் போது உயரிய சிவதுரியம் அமையும்.

#2293. ஐம்மலங்கள் மாறுமே

ஐந்தும் சகலத்து, அருளால் புரிவற்றுப்
பந்திடும் சுத்த அவத்தைப் பதைப்பினில்,
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி இருள்போலும் ஐம்மலம் மாறுமே.

சகல நிலையில் உள்ள சீவனுக்கு பராவத்தைகள் ஐந்தும் அருள் புரிந்து அதன் பந்தங்களை நீக்கி விடும். ஆன்மாவைச் சுத்த அவத்தையில் பொருந்தச் செய்யும். இந்த நிலையில் ஆன்மாவிடம் சிவத்தை அடைவதற்கான விருப்பம் மேலிடும். மாலை நேரத்தில் நிலவொளியில் இருள் அகல்வது போன்றே, சீவனின் சிரத்தின் முன்பு விளங்கும் வெண்மையான ஒளியில் அதன் அனைத்து மலங்களும் அகன்று விடும்.

#2294. பராவத்தையுள் உறல் சுத்தம்

ஐஐந்தும், மட்டுப் பகுதியும், மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்டு
எய்யும் படியாய், எவற்றுமாய் அன்றாகி
உய்யும் பராவத்தை யுள்உறல் சுத்தமே.

ஆன்ம தத்துவங்கள் இருபத்து ஐந்தும் அசுத்த மாயை என்னும் தூவா மாயையைச் சார்ந்தவை. அவற்றைக் கடந்து முன்னேறும் சீவன் மாமாயை நிலையை அடையும். அந்த நிலையையும் கடந்து செல்லும் சீவன் பராவத்தை என்ற சுத்த நிலையை அடையும். இப்போது சீவன் எல்லாப் பொருட்களையும் அறிந்து கொண்டு அவைகளாகவும் இருக்கும். அதே நேரத்தில் அவற்றிலிருந்து விலகியும் இருக்கும். இதுவே ஆன்மாவின் உயரிய சுத்த நிலையாகும்.

#2295. நன்றான ஞானத்து நாதப்பிரான்

நின்றான் அருளும், பரமும்முன் நேயமும்
ஒன்றாய் மருவும் உருவும், உபாதியும்
சென்றான்; எனைவிடுத்து ஆங்கில் செல்லாமையும்
நன்றான ஞானத்து நாதப் பிரானே.

சிவன் அருளாகி நின்றான்; சிவன் பரமாகி நின்றான்; சிவன் அன்பாகி நின்றான்; சிவன் என்னுடன் ஒன்றாக மருவி நின்றான்; சிவன் ஆன்மாவுடன் பிரிவின்றிக் கலந்து இருந்த போதிலும் ஆன்மாவின் உபாதைகளால் வருந்தாமல் இருந்தான். என்னை விட்டு என்றும் அகலாதவன் என் நன்றாகிய ஞானத்து நாதப்பிரான் ஆன சிவபிரான்.

எட்டாம் தந்திரம் -
9. முக்குண நிர்குணம்

முக்குணங்கள்:
இராசதம் = மன எழுச்சி
தாமசம் = மயக்கம்
சாத்துவிகம் = அமைதி

#2296. அவத்தைகளுக்கு உரிய குணங்கள்

சாத்திகம் எய்தும் நனவெனச் சாற்றுங்கால்
வாய்ந்த இராசதம் மன்னும் கனவென்ப
ஓய்த்திடும் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாய்த்திடும் நிற்குணம் மாசில் துரியமே.

நனவு நிலையில் உயிரிடம் பொருந்துவது சாத்துவிக குணம். கனவு நிலையில் உயிரிடம் பொருந்துவது இராசத குணம். சுழுத்தி நிலையில் உயிரிடம் பொருந்துவது தாமச குணம். ஐம்பொறிகள், அந்தக்கரணங்கள் செயற்படாமல் இருக்கும் நிலையே துரியம் என்னும் பேருறக்கம்.

எட்டாம் தந்திரம் -
10. அண்டாதி பேதம்

அண்டத்தின் வகை
சீவனின் உடல் தொம்பைக் கூடு போன்ற ஒளி மண்டலங்களால் சூழப்பட்டுள்ளது. முட்டைக்குள் முழு வளர்ச்சி அடைந்தபின் குஞ்சு முட்டையை உடைத்துக் கொண்டு வெளியேறும். இது போன்றே அண்டகோசம் என்ற பிரணவத்தில் வளர்ந்து பக்குவம் அடைந்த ஆன்மா பிரணவத்தைக் கடந்து செல்கிறது.

#2297. தேவர் பிரான்

பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல்அள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும் அண்டாசனத் தேவர் பிரானே.

அண்டத்தைத் தன் இருக்கையாக்கி அதன் மேல் அமர்பவன் தேவர் பிரான் ஆகிய சிவன். பேரண்டத்தில் உள்ளன பல அண்ட கோசங்கள். அவை எண்ணிக்கையில் ஏழு கடற்கரையில் உள்ள மணல் துகள்கள் போன்றவை. பொன்னொளி வீசும் இவற்றின் மீது தன் பொன்வண்ண மேனி ஒளிரச் சிவன் அமர்வான்.

#2298. தான் அந்தம் இல்லாத தத்துவம்

**ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
மேனிஐந்தாக வியாத்தம்முப் பத்தாறாய்த்
தான்அந்த மில்லாத தத்துவம் ஆனவை
ஈனமி லா அண்டத்து எண்மடங்கு ஆமே.**

அண்டாசனத்தின் மீது அமர்ந்து கொண்டு ஆனந்தமாகத் தத்துவங்களைக் கடந்து சிவன் விளங்குகின்றான். அவன் திரு மேனிகள் ஐந்து. அவை சத்தியோசாதம், வாமதேவம், தத்புருடம், ஈசானம், அகோரம். அவன் கடந்து நிற்கும் தத்துவங்களின் எண்ணிக்கை அண்டங்களின் எண்ணிக்கையைப் போல எண் மடங்கு ஆகும்.

எட்டாம் தந்திரம் -
11. பதினோராம் தானம்

பதினோராம் தானமும் ஓர் அவத்தையே

துவாதச கலை அராகம் முதலாக உன்மனி ஈறாக பன்னிரண்டு ஆகும். ஒவ்வொரு கலைக்கும் ஓர் இடம் உண்டு. பதினோராவது கலையாகிய சமனையின் இடம் இருப்பது தலைக்கு மேலே. அவத்தை என்பது ஆன்மா அந்த இடத்தில் பொருந்தி இருப்பது.

#2299. உலக நோக்கு இருந்தால் நாதம் விளங்காது

**அஞ்சில் அமுதும், ஓர் ஏழின்கண் ஆனந்தம்
முஞ்சில்ஓங் காரம், ஓர் ஒன்பான் பதினொன்றில்
வஞ்சக மேநின்று வைத்திடில், காயமாம்
கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே.**

ஐந்தாவது கலையாகிய அர்த்த சந்திரனின் இடம் புருவமத்தி. இது விழிப்பு அடைந்து விட்டால் அமுத மயமான ஒளி பெருகும். ஏழாவது கலையாகிய நிரோதினி ஆன்மாவுக்கு ஆனந்தத்தை அளிக்கும். விந்து ஜெயம் பெறுவதே பிரணவம் ஆகும். ஒன்பதாவது கலைக்கு மேல் பிரணவம் விளங்கும். பதினோராவது நிலையாகிய சிவதுரியம் ஓர் அவத்தையே. இந்த நிலைகளே ஆன்மாவின் பராவத்தை.

2300. புரியட்டகம் ஒளிமயமாகும்

**புருட னுடனே பொருந்திய சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியும் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதினொன்று மாம்அவ் அவத்தையே.**

ஆன்மாவின் துரியாதீத நிலையில் புருடன் மற்றும் ஐந்து சிவத்துவங்கள் என்னும் ஆறும் விளங்கும். உறக்க நிலையில் புரியட்டகம் என்னும் நுண்ணுடல் விளங்கும். நனவு, கனவு நிலைகளில் வித்தியா தத்துவம் விளங்கும். இந்நிலைகளில் உட்கரணங்கள் நான்கும் பொருந்தி அமையும்.

புரியட்டகம்: மனம், புத்தி, அஹங்காரம், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் பொருந்திய நுண்ணுடல்

#2301. சிவத்தின் வழியே நிற்பது நன்மை

**காட்டும் பதினொன்றும் கைகலந் தால்உடல்
நாட்டி அழுத்திடின் நந்திஅல்லால் இல்லை
ஆட்டம்செய் யாத அதுவிதி யேநினை
ஈட்டு மதுதிடம் எண்ணலும் ஆமே.**

வித்தியாததுவங்கள் எழும், அந்தக் கரணங்கள் நான்கும் ஆகிய பதினோரு தத்துவங்களும் ஒன்று கூடினால் உடல் அமையும். இவை செயல் படாது நின்றால் அப்போது சிவன் அமைவான். அந்தக் கரணங்களின் வழி சென்று அலைந்து திரியாமல் சிவத்தின் வழியே நிற்பதுவே நன்மை பயக்கும் என்று நீ அறிந்து கொள்வாய்!

எட்டாம் தந்திரம் -
12. கலவு செலவு

கலவு = ஒன்று சேர்த்தல்; செலவு = பிரிதல்
கருவிகளுடன் கலத்தலும் பிரிதலும் இதில் கூறப்படும்.

#2302. ஆன்மாவின் தூயநிலை

**கேவலம் தன்னின் கலவச் சகலத்தின்
மேவும் செலவு விடவரு நீக்கத்துப்
பாவும் தனைக்கண்டால் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்தில் சுத்தமே.**

கேவல அவத்தையில் உள்ள ஆன்மா கருவிகள் கரணங்களுடன் கலந்து சகல அவத்தையை அடையும். ஆன்மா கருவிகள், கரணங்கள் இவற்றை விட்டு விட்டதும் சகல நிலையில் இருந்து பிரிந்து விடும். கேவலம், சகலம் என்ற இந்த இரண்டு நிலைகளையும் துறந்து விட்ட ஆன்மா தன்னைத் தானே அறிந்து கொள்ளும். இது மூன்றாவது நிலை. ஆன்மா இம்மூன்று நிலைகளையும் கடந்து சென்று சாக்கிராதீத நிலயை அடைந்து அங்கு பொருந்தி இருப்பதே ஆன்மாவின் தூய நிலை எனப்படும்.

#2303. சினத்தைத் துறந்தால் விளையும் பயன்

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே.

சினத்தை உங்களால் முடிந்த அளவுகுத் துறந்து விடுங்கள். உள்ளத்தை உங்களால் முடிந்த அளவுக்கு சிவன் மேல் செலுத்துங்கள். இரவும் பகலும் சிவன் நினைவுடன் துரியத்தில் சமாதியில் பொருந்தி இருங்கள். அப்போது கற்பாறை போன்ற கனத்த பாச இருள் அகன்று விடும். நீங்கள் பரம ஆகாய மண்டலத்தின் ஒளியை உணர்வீர்கள்.

எட்டாம் தந்திரம் -
13. நின்மலாவத்தை

நின்மலம் + அவத்தை = நின்மலாவத்தை
மலம் இன்றி ஆன்மா சிவத்தில் ஒடுங்கி இருக்கும் நிலை.

2304. பிரணவ உடல் மரணமில்லா வாழ்வு

ஊமைக் கிணற்றகத் துள்ளே உறைவதோர்
ஆமையின் உள்ளே அழுவைகள் ஐந்துள
வாய்மையின் உள்ளே வழுவாது ஒடுங்குமேல்
ஆமையின் மேலும்ஓர் ஆயிரத்து ஆண்டே.

மௌனம் என்னும் கிணற்றுக்குள் ஓர் ஆமையைப் போல உறைவார் பிரணவ வழிபாட்டாளர். அவரிடம் நின்மல சாக்கிரம் முதலிய ஐந்து நிலைகள் உண்டு. அவர் ஆன்ம ஒளியில் நழுவாத வண்ணம் தன் அறிவை ஒடுக்கினால் அவர் பிரணவ உடல் பெற்று மரணம் இல்லாப் பெருவாழ்வு வாழ்வார்.

#2305. எம பயம் இல்லை!

**காலங்கி நீர்,பூக் கலந்தஆ காயம்
மாலங்கி, ஈசன், பிரமன், சதாசிவன்
மேலஞ்சும் ஓடி, விரவவல் லார்கட்குக்
காலனும் இல்லை, கருத்தில்லை தானே.**

காற்று, தீ, நீர், நிலம், வானம் என்னும் ஐந்தினையும் இயக்குபவர்கள் உருத்திரன், திருமால், நான்முகன் , மகேசன், உருவம் உடைய சதாசிவம் ஆவர். இவர்களுக்கு மேலே அமைந்துள்ள அருவச் சதாசிவம், விந்து,நாதம், சக்தி, சிவன் என்னும் ஐவரை பொருந்தும் ஆற்றல் கொண்டவருக்கு காலனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. அவருக்கு இந்த உலகத்தைப் பற்றிய கருத்தும் இராது.

#2306. சிவத்தை சேரின் சிவகுமாரன்!

**ஆன்மாவே மைந்தன் ஆயினன் என்பது
தான்மா மறையறை தன்மை அறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக்கு இவன்என்றால்
ஆன்மாவும் இல்லையால் ஐஐந்தும் இல்லையே.**

ஆன்மா சிவனின் தன்மையைப் பெறும்போது சிவகுமாரன் ஆகிவிடும். மறைகள் “ஆன்மாவே சிவகுமாரன் ஆனான்” என்று கூறுவதன் பொருள் இதுவே. நின்மல அவத்தையில் ஆன்மா சிவனுக்கு மகன் ஆகும். அந்நிலையில் இருபத்து ஐந்து தத்துவங்களும் இரா. ஆன்மாவின் தன்மையுடன் வாழ்பவர் சிவப் பேற்றினை அடைய முடியாது. சிவகுமாரன் ஆக முடியாது.

#2307. ஆன்மா அதி சுபன் ஆகும்

**உதயம், அழுங்கல் ஒடுங்கல்இம் மூன்றின்
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்றாம் துரியத்து
அதிசுப னாய்,அனந் தான் அந்தி யாகுமே.**

நின்மல சாக்கிரத்தில் ஆன்ம ஒளி உதயமாகும். நின்மலக் கனவில் உலக சிந்தைகள் அழிந்து ஆன்மா தன்ஒளியில் அழுந்தும். நின்மல உறக்கத்தில் ஐம்பொறிகள் ஓய்ந்து அடங்கி விடும். சித்துப் பொருளை ஆன்மா தன் பற்றுக் கோடாகக் கொண்டு இருந்தால், பேருறக்க நிலையில் அது அதிசுபன் ஆகி மங்கள வடிவுடன் அழியாத பேறு அடையும்.

#2308. எய்துவதற்கரிய சிவகதி எய்தும்

எல்லாம்தன் னுட்புக யாவுளும் தானாகி
நல்லாம் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்
பொல்லாத ஆறாறுள் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றுஎய்தும் அன்றே.

சீவ ஒளி உடலைச் சூழும் போது ஆன்ம தத்துவம் அடங்கி விடும். தத்துவங்களின் உள்ளும், புறமும் சீவ ஒளி நிறையும் போது ஆன்மா துரிய நிலையை மேற்கொண்டால் அது சுத்த ஆன்மா ஆகிவிடும். அந்த நிலையில் ஆன்மாவுக்குத் தீமைகளை அளிக்கும் முப்பத்தாறு தத்துவங்களும் அகன்று விடும். ஆன்மா ஞான வடிவாகச் சென்று அடைவதற்கு அரியதாகிய சிவசக்தியை அடையும்.

#2309. கர்மத் துரிசு அகலாது

காய்ந்த இரும்பு கனலை அகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசுஅக லாதே.

தீயில் நன்கு காய்ச்சப்பட்ட இரும்பு தீயை விட்டு அகன்றாலும் அதனிடம் தீயின் நிறமும் வெப்பமும் அமைந்திருக்கும். அது போன்றே கரணங்களை விடுத்து நிற்கும் நின்மலத் துரியத்தில் முன்பு நிகழ்ந்த கிரியா வாசனைகள் ஆன்மாவிடம் அமைந்திருக்கும்.

#2310. மலமற்ற ஆன்மா பரம் ஆகும்

ஆன மறையாதி யாம் உரு நந்திவந்து
ஏனை அருள்செய் தெரிநனா அவத்தையில்
ஆன வகையை விடும்அடைத் தாய்விட
ஆன மாலதீதம் அப்பரந் தானே.

நனவு நிலையில் ஆன்மாவின் அனுபவங்கள் அநேகம். அவற்றை முற்றிலுமாகத் துறந்து விட்ட நிலையில் வேத விழுப்பொருளான சிவன் அருள் கிடைக்கும் என்றால், அந்த ஆன்மா அனைத்தையும் கடந்து அதீத நிலையை அடையும். அந்த ஆன்மா மலங்கள் நீங்கப் பெற்று இருக்கும். இத்தகைய மலமற்ற ஆன்மாவே பரம் ஆகும்.

#2311. அத்தனோடு ஒன்றலாம்

சுத்த அதீதம் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா ஆங்கணில் தானாகச்
சித்த சுகத்தைத் தீண்டாச் சமாதிசெய்து.
அத்தனோடு ஒன்றற்கு அருள்முத லாமே.

சுத்த அதீத நிலையை அடைந்தவர்கள் மீண்டும் சகல நிலைக்குத் திரும்பி விட்டாலும் அவர்கள் மீது அத்தன் கொண்ட அருள் மாறாது. நீங்காது. அவர்கள் உலக இன்பங்களை நாடாமல் சிவன் நினைவிலேயே நாதாந்தத்தில் சமாதி அடைந்து சிவத்துடன் பொருந்துவார்கள்.

#2312. உமையொரு பாகன் அருள் செய்தான்

வேறுசெய் தான்இரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தான்என்னை எங்கணும் விட்டுய்த்தான்
வேறுசெய் யாஅருள் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாஅத்தன் மேவிநின் றானே.

உமையொரு பாகன் ஆன சிவன் உலகத்து உயிர்களை எல்லாம் ஆண், பெண் என்ற இரு வேறு பாலர்களாகப் படைத்தான். உமையொரு பாகன் ஆன அவனே என்னை உலகத்துச் சுகங்களின் கவர்ச்சியில் இருந்து மீட்டான். எனக்கு அகண்ட வடிவம் தந்து, எங்கும் சென்று வரும் ஆற்றலையும் தந்தான். என் தந்தை போல என்னுடன் இருந்து என்னைக் காத்தான்.

#2213. சுவர்க்கமும் நரகமும் நீங்கும்!

கறங்குஓலை கொள்ளிவட் டம்கட லில்திரை
நிறஞ்சேர் ததிமத்தன் மலத்தே நின்றங்கு
அறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்த்து
கிறங்கா உயிர்அரு ளால்இவை நீங்குமே.

காற்றாடியின் ஓலையும், கொள்ளிக் கட்டையின் வட்டமும், கடலில் எழுகின்ற அலைகளும், தயிரில் சுழலும் மத்தும் தாமாகவே இயங்குவதில்லை. அது போன்றே உயிர்களும் தாமாக இயங்குவதில்லை. அவைகள் தங்கள் மலங்களால் இயக்கப்பட்டு பல்வேறு வினைகளை புரிகின்றன. தத்தம் வினைகளுக்கு ஏற்ப சுவர்க்கம் அல்லது நரகத்தை அடைகின்றன. மீண்டும் உலகத்தின் வந்து பிறக்கின்றன. சீவன்கள் இறைவனின் அருளை பெற்றால் பிறவிப் பிணியில் இருந்து விடுபடலாம்.

#2314. கதிரவன் முன்பு மதியொளி

தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமும்அப் பாச பேதமும்
ஆன குணமும் பரான்மா உபாதியும்
பானுவின் முன்மதி போல்படராவே.

சீவன் சிவனாகும் தன்மையை அடைந்துவிட்டால் அதனைப் பற்றி இருக்கும் பழமையான மலங்களும், அவற்றால் உண்டாகும் பாசத் தளைகளும், அதனால் அமைகின்ற மூன்று குணங்களும் அகன்று விடும். ஆன்மா தன் மேன்மையையும், உண்மையையும் அறிய விடாமல் தடுத்த தடைகள் அனைத்தும் கதிரவன் முன்பு மதியொளி போல ஒளிராமல் அகன்று சென்று விடும்.

#2315.தொழில் அற்று இருப்பர்

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்கு
அருக்கனும் சோமனும் அங்கே அமரும்
திருத்தக்க மாலும் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே.

நின்மலத் துரியத்தில் சீவனின் ஆன்ம ஒளியில் நுண்ணிய நிலயில் பஞ்ச பூதங்கள் அடங்கி இருக்கும். கதிரவனும் திங்களும் தங்கள் கலைகள் அடங்கி இருப்பர். படைப்புத் தொழில் ஆற்றும் நான்முகன், காக்கும் கடவுள் திருமால், அழிக்கும் செயல் புரியும் உருத்திரன் என்ற மூன்று தெய்வங்களும் தங்கள் தொழில் அற்று விளங்குவர்.

#2316. சிவலோகம் எளிதாகும்

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு
ஊனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழிஎளி தாமே.

ஐம்பொறிகள் என்னும் ஐந்து யானைகளை அடக்கி விட்டு, அறிவு என்னும் ஞானத் திரியை நன்கு தூண்டி விட்டு, அதில் காணும் ஒளியில் புகுந்து கொண்டு, தன் ஊன உடலைச் சோதி வடிவாகக் காண்பவர்க்கு சிவலோகம் செல்வது மிகவும் எளிதாகும்.

#2317. நாடியின் உள்ளே நாதம் கண்டேன்

ஆடிய காலில் அசைக்கின்ற வாயுவும்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி எழுகின்ற வேதாக மங்களும்
நாடியின் உள்ளாக நான்கண்ட வாறே.

ஆடிய திருவடி அசைக்கின்ற காற்றையும், தாடித்து எழுகின்ற டமருக ஓசையும், வேதங்கள் ஆகமங்கள் இசைகின்ற ஒலியையும் நான் என் நாடியின் உள்ளேயே கண்டு கொண்டேன்.

#2318. பேரறிவும், பேயறிவும்

முன்னை அறிவினில் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃ தன்றிப்
பின்னை அறிவது பேயறி வாகுமே.

முற்பிறவியில் பெற்ற நல்லறிவுடன் பயிற்சி செய்த நல்வினைகளின் பயன் இந்தப் பிறவியில் பெற்றுள்ள தூய பேரறிவு ஆகும். சீவனின் அறிவு ஒளி பெற்று விளங்கும் போது தான் சீவன் தன்னைப் பற்றிய உண்மைகளை அறிய முடியும். தன்னை உள்ளபடி தான் அறிந்து கொள்வதே உண்மையான அறிவு ஆகும். மற்றவை எல்லாம் பேயறிவு ஆகும். ஏனென்றால் அவை சீவனின் பிறவிப் பிணியை அகற்றுவதில்லை.

#2319. செயலற்று இருப்பார்க்குச் சிவனருள் சித்திக்கும்

செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகம் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.

உட்கருவிகள் என்னும் அந்தக்கரணங்கள் செயலற்று இருக்கும் போது ஆன்மாவுக்குச் சிவானந்தம் ஏற்படும். இந்த ஆனந்த நிலையை அடைந்தவர் சிவ யோகத்தையம் கூட நாடார். இங்கனம் செயலற்று இருப்பவர் இந்த உலகத்தோடும் ஒட்ட மாட்டார். இவ்வாறு செயலற்று 'சிவனே!' என்று இருப்பவர்களுக்குச் சிவனருள் கிடைக்கும்.

#2320. ஒளியுடல் கிடைக்கும்

தான்அவ னாகும் சமாதிகை கூடினால்
ஆன மலம்அறும் அப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்து
ஊனங்கள் எட்டும் ஒழித்தொன்று வோர்கட்கே.

சீவன் "தானே சிவன்!" என்று அறிந்து கொண்டு சிவனுடன் சமாதியில் இருந்தால், ஆன்மாவைப் பிணித்துள்ள மலங்கள் நீங்கும். ஆன்மாவை கட்டியிருக்கும் தளைகள் நீங்கும். பிறவியை உண்டாக்கும் நுண்ணுடலை ஒழித்துச் சிவனுடன் பொருந்துவோருக்கு மேலுலகில் ஓர் அழியாத ஒளியுடல் கிடைக்கும்.

#2321. நாதசக்தி நன்மை நல்கும்

தொலையா அரனடி தோன்றும் அம் சத்தி
தொலையா இருளொளி தோற்ற அணுவும்
தொலையாத் தொழின்ஞானம் தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தம்முத் திக்கிடை தோயுமே.

ஆன்மாவை விட்டு நீங்காத சிவன் அருளால் ஒரு நாதம் பிறக்கும். ஆன்மாவை விட்டு நீங்காத இருளும் ஒளியும் மாறி மாறி விளங்கும் போது ஆன்மா முறையே கிரியையிலும், ஞானத்திலும் மாறி மாறி தங்கும். இங்கனம் ஆன்மாவின் பத்த நிலையிலும் முத்தி நிலையிலும் அருட் சக்தி மாறாமல் விளங்கும்.

#2322. உள்ளொளிக்கு ஒளியாமே.

தோன்றிய பெத்தமும் முத்தியும் சூழ்சத்தி
மான்றும் தெருண்டும் உயிர்பெறும் மற்றவை
தான்தரு ஞானம் தன் சத்திக்குச் சாதனாம்
ஊன்றல்இல் லாஉள் ளொளிக்கு ஒளி யாமே.

பத்தத்திலும், முக்தியிலும் ஆன்மாவுக்கு தொடர்ந்து உதவுபவள் சக்தி. பத்த ஆன்மா அவளை மயங்கியும், முக்த ஆத்மா அவளைத் தெளிந்தும் உணர்ந்து கொள்ளும். ஆன்மாவுக்குச் சக்தி அளிக்கும் நல்லறிவே ஆன்மாவுக்கு நல்ல துணையாக அமையும். அதுவே சீவனின் ஒளிக்கு ஒளியினைத் தரும்.

#2323. அறிகின்ற நானென்று அறிந்து கொண்டேன்

அறிகின்றி லாதன ஐஏழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென்று அருள்செய்தான் நந்தி
அறிகின்ற நானென்று அறிந்துகொண் டேனே.

உண்மையில் முப்பத்தாறு தத்துவங்களும் அறிவற்றவை ஆகும். ஒரு சமயத்தில் நான் அவற்றுடன் நன்கு பொருந்தி அவைகளாகவே இருந்தேன். 'எல்லாவற்றையும் அறியும் அறிவின் வடிவம் நான்!" என்ற உண்மையை நான் அறியாமல் இருந்தேன். சிவனை நாடிய போது நாதசக்தியின் வழியே நந்தி உண்மையை எனக்குப் புரிய வைத்தான். 'நான் வெறும் சடம் அல்ல. நான் அறிவின் வடிவம்' என்று அறிந்து கொண்டேன். பின்னர் நான் என்னையும் அறிந்து கொண்டேன். ஆன்மத் தத்துவங்களையும் அறிந்து கொண்டேன்.

#2324. ஊனமிலாள் தனை ஊனிடைக் கண்டேன்

தான்அவ னாகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமில் ஞானத்து இன்னருள் சத்தியை
ஊனமிலாள்தன்னை ஊனிடைக் கண்டதே.

என்னை அவனாக (சீவனைச் சிவனாக) ஆக்கிவிட்ட ஞானப் பிரான் சிவன். வானவர்களின் முதன்மைத் தலைவன் அவன். மாமணிச் சோதியானவன் அவன். இத்தகைய சிவபெருமானையும், குற்றமற்ற மெய்ஞ்ஞானத்து இன்னருள் தரும், உடல் வடிவம் அற்ற சக்தியையும், என் உடலில் நான் கண்டு கொண்டேன்.

#2325. தெளியச் சிவானந்தம் விளையும்

ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளியது எனலாகும் ஆன்மாவை யன்றி
அளியும் அருளும் தெருளும் கடந்து
தெளிய அருளே சிவானந்த மாமே.

ஆன்மாவின் மீது சக்தியின் அருள் உள்ள போது ஒளியும். சக்தியின் அருள் இல்லாத போது இருளும் நிலவும். ஆன்ம போதம் அகலும் போது சக்தி தெளிவான அறிவைத் தருவாள். அதனால் நாத சக்தி உண்டாகும். அதனால் உயரிய சிவானந்தம் விளையும்.

#2326. "தத் தவம் அசி!"

ஆனந்த மாகும் அரனருட் சத்தியில்
தான் அந்த மாம்உயிர் தானே சமாதிசெய்து
ஊன்அந்த மாய் உணர் வாய்உள் உணர்வுறில்
கோன்அந்தம் வாய்க்கும் மகாவாக் கியமாமே.

தன்வயம் இழந்து ஆன்மா சிவனின் அருளில் அழுத்தி விட்டால் உயரிய ஆனந்தம் விளையும். சீவன் உடலைக் கடந்து சமாதி செய்யும் போது அது

உணர்வாகி, உள்ளுணர்வாகி, அகண்ட அறிவைப் பெறும். உடலைச் செலுத்தி வந்த சுட்டறிவு என்னும் ஆன்ம அறிவு மறைந்து விடும். அந்த நிலையில் “நீ அவன் ஆகின்றாய்!” என்ற மகா வாக்கியப்படிச் சீவன் சிவன் ஆகிவிடும்.

#2327. அறிவிக்க அறிவார் அறிவார்

அறிவிக்க வேண்டாம் அறிவற்று அயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற்று அறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்அறி வார்அறி வோரே.

தாமச குணம் பொருந்திய, ஆன்மா ஞானம் சிறிதும் இல்லாதவர்களுக்கு ஞான உபதேசம் செய்ய வேண்டாம். அது வீண்! முற்பிறவிகளில் செய்த பயிற்சிகளால் இயல்பாகவே ஞானம் பெற்று விளங்குபவர்களுக்கும் ஞான உபதேசம் செய்ய வேண்டாம். அது தேவை இல்லை! கல்வியின் மூலம் ஆன்ம ஞானத்தைக் கற்று அறிந்த பின்னும், அதன் அனுபவத்தைப் பெறமுடியால் அறியாமையில் இருப்பவர்களுக்கே ஞான உபதேசம் செய்து அவர்கள் ஆன்ம அனுபவம் பெறுவதற்கு உதவ வேண்டும். அவர்கள் ஆன்ம அனுபவம் பெற்றால் தம் உண்மை வடிவை அடைவார்கள்.

#2328. சொல் அற்றவர்கள்!

சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கூடிச்
சித்தும் அசித்தும் சிவசித்த தாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே.

சத்து, அசத்து, சதசத்து என்னும் மூன்று பொருட்களுடன் கூடி ஆன்மா முறையே சித்து (அறிவுள்ள பொருள்), அசித்து (அறிவற்ற பொருள்), சிவசித்து (பேரறிவுப் பொருள்) என்ற மூன்று நிலைகளை அடைகின்றது. துரிய நிலையில் சுத்த மாயை அசுத்த மாயை இரண்டுமே இரா. அங்கு ஆன்மா நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று அவத்தைகளையும் கடந்து பிரணவத்தையும் கடந்து மலங்கள் நீங்கப் பெற்றுத் தூய்மை அடையும்.

#2329. சிவத்துடன் தங்கும்

தானே அறியான் அறிவிலோன் தானல்லன்
தானே அறிவான் அறிவு சதசத்தென்று
ஆனால் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்
தானே அறிந்து சிவத்துடன் தங்குமே.

ஆன்மா தன் உண்மை வடிவைத் தானே அறிந்து கொள்ள முடியாது. அதே சமயம் ஆன்மா அறிவு அற்றவனுன் அல்லன். ஆன்மா தன் உண்மை வடிவத்தை அறிந்து கொண்ட பின்பு தான் அறிவும் அறியாமையும் கலந்தவன் எடன்றுஅறிந்து கொள்வான். அருள் சக்தியால் இந்த இரண்டு நிலைகளையும் அறிந்த பின்பு சிவத்துடன் பொருந்திப் பேரின்பம் அடைவான்.

#2330. தத்துவ ஞானம்

தத்துவ ஞானம் தலைப்பட் டவர்க்கே
தத்துவ ஞானம் தலைப்பட லாய்நிற்கும்
தத்துவ ஞானத்துத் தான்அவ னாகவே
தத்துவ ஞானானந் தந்தான் தொடங்குமே.

தத்துவ ஞானம் வாழ்வில் நம் அமைவதற்குத் தத்துவ ஞானங்கள் முப்பத்து ஆறையும் அறிந்து கொள்ள வேண்டும். இங்கனம் தத்துவ ஞானம் அடைந்த ஆன்மா சிவத்துடன் பொருந்தினால் அதன் தத்துவ ஞானத்தால் அதற்குச் சிவானந்தம் விளையும்.

#2331. ஞான முத்திரை நண்ணுமே

தன்னை அறிந்து சிவனுடன் தானாக
மன்னும் மலம்குணம் மாளும் பிறப்பறும்
பின்அது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே.

ஆன்மா தன்னை உள்ளபடி அறிந்து கொண்டுவிட்டுச் சிவனோடு பொருந்திச் சிவனாக மாறினால், அதனிடம் இருந்த மலங்கள், அதனால் விளைந்த குணங்கள் அழித்து விடும். பிறவிப் பிணியின் தளைகள் நீங்கும். அந்த ஆன்மாவிடம் முத்தி நிலையும், சன்மார்க்க ஒளியும், ஞான முத்திரையும் தாமே வந்து அமையும்.

#2332. ஞான முத்திரை பெறுவார்

ஞானம்தன் மேனி கிரியை நடுஅங்கம்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண்டு ஐங்கரு மத்தவித் தாதலான்
மோனிகள் ஞானத்து முத்திரை பெற் றார்களே.

சீவனின் ஞானம் என்பது சிவபிரான் திருமேனி . சீவனின் கிரியை என்பது அவன் நம் இதயத்தில் உறையும் செயல். இச்சை என்பது சிவன் தன் இச்சையை நம் இச்சை மேல் கொண்டு வந்து பொருத்துவது. படைப்பு முதலான ஐந்தொழில்களுக்கும் காரணம் ஆனவன் சிவன். பிரணவ யோகம் செய்தவர்

சிவனுடன் ஒன்றாகப் பொருந்துவார். அவர் தன் இச்சை, கிரியைகளைத் துறந்துவிடுவார். ஞான முத்திரையைப் பெறுவார்.

#2333. உயிர்க்கு ஊட்டுவான் சிவன்

உயிர்க்குஅறி உண்மை உயிர்இச்சை மானம்
உயிர்க்குக் கிரியை உயிர்மாயை சூக்கம்
உயிர்க்குஇவை ஊட்டுவோன் ஊட்டும் அவனே
உயிர்ச்சொல் அன்றி அவ்வுளத்து ளானே.

உயிரின் அறிவில் மெய்ப்பொருள் உள்ளது. உயிரின் அபிமானம் அதன் இச்சை. உயிரின் கிரியை உயிருடன் கலந்த மாயையின் அளவு ஆகும். உயிரின் ஞானம், இச்சை, கிரியை என்று மூன்றும் நுண்ணிய வடிவில் பரவிந்துவில் அமைத்திருக்கும். உயிருடன் இவற்றைச் சேர்பவன் சிவபெருமான். எனவே உயிரின் செயல்கள் எல்லாம் அதன் செயல்கள் அல்ல. அவை உயிரில் கலந்துள்ள சிவத்தின் செயல்கள் ஆகும்

#2334. அழிவற்ற சாந்தாதீதன் சிவன்

தொழில்இச்சை ஞானங்கள் தொல்சிவசீவர்
கழிவற்ற மாமாயை மாயையின் ஆகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்டு
அழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே.

சிவமாகிய தன்மையை முன்னமே அடைந்த சீவர்களின் கிரியை, இச்சை, ஞானம் இவைகள் அனைத்தும் மாமாயை, மாயையின் செயல்கள் ஆகும். காரண காரியங்களைக் கடந்த சாந்தியாதீத நிலையில் விளங்குபவன் அழிவற்ற சிவபெருமான் ஆவான்.

#2335. உயிர்க்கு உயிராவான்

இல்லதும் உள்ளதும் யாவையும் தானாகி
இல்லதம் உள்ளது மாய்அன்றாம் அண்ணலைச்
சொல்வது சொல்லிடில் தூராதி தூரமென்று
ஒல்லை உணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே.

நிலையற்ற மாயா காரியப் பொருட்களில் நிறைந்தவன் சிவன். நிலையான பரவிந்துவில் பொருந்திவனும் அவன். பொருட்களில் இருந்தும், இல்லாமலும், அவற்றிலிருந்து வேறாக இருப்பவன் அவன். அவன் சொற்பதம் கடந்த அற்புதமானவன் என்பத்தைச் சிவஞானத்தால் உணர்ந்து கொண்டவரின் உயிரின் உயிராகத் திகழ்வான் சிவன்.

#2336. உயிர் உயர் பதம் சேரும்

உயிரிச்சை யூட்டி உழிதரும் சத்தி
உயிரிச்சை வாட்டி ஒழித்திடும் ஞானம்
உயிரிச்சை யூட்டி யுடனுறலாலே
உயிரிச்சை வாட்டி உயர்பதஞ் சேருமே.

உயிர்களுக்கு இச்சைகளை உண்டாக்கித் துன்பம் தருவது இச்சா சக்தி. ஞான சக்தி ஓங்கும் போது உயிர்களின் இச்சைகள் அழிந்து விடும்.அப்போது உயிர்களுக்கு ஈசன் மேல் நேசம் ஏற்படும். அந்நிலையில் உயிர்கள் உலக இச்சைகளைத் துறந்துவிட்டு மேன்மை வாய்ந்த சிவகதியை அடையும்.

#2337. அவையும் அருளின் வெளிப்பாடே

சேரும் சிவமானார் ஐம்மலம் தீர்ந்தவர்
ஓர்ஒன்றி லார் ஐம் மலஇருள் உற்றவர்
பாரின்கண் விண்நர கம்புகும் பான்மையர்
ஆருங்கண் டோரார் அவையருள் என்றே.

உலக இச்சைகளை அழித்துவிட்டுச் சிவம் ஆனவர் உயிரின் ஐந்து மலங்களையும் நீக்கி விட்டவர். சிவத்துடன் இவ்வாறு பொருந்தாதவர் ஐந்து மலங்களை உடையவர். இவர்கள் உலகத்தில் வாழ்ந்து விட்டுச் சுவர்க்கம் அல்லது நரகம் சென்று விட்டு மீண்டும் உலகில் வந்து பிறவி எடுப்பர். இவர்கள் இப்படிப் பிறந்து உழல்வதும் அந்த சிவசக்தியரின் செயலால் என்பதை இவர்கள் உணர்வதில்லை.

#2338. எய்தினர் இறையருள் தானே

எய்தினர் செய்யும் இருமாயா சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞான சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞால சத்தியின்
எய்தினர் செய்யும் இறையருள் தானே.

உயிர்கள் தூமாயை (சுத்த மாயை), தூவா மாயை (அசுத்த மாயை) என்னும் இரண்டிலும் பொருந்தி அவற்றின் இயல்புக்கு ஏற்ற அனுபவங்களைப் பெற்றன.. ஞான சக்தியால் ஞானத்தை அடைந்தன. உலகப் பொருட்களால் கவரப் பட்டு பல நன்மைகளை அடைந்தன. இவை அனைத்தும் நிகழ்வது சிவன் அருளால்.

#2339. சிவமாய் ஆயினர்

திருந்தனர் விட்டார் திருவில் நரகம்
திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கம்
திருந்தனர் விட்டார் செறிமலர் கூட்டம்
திருந்தனர் விட்டார் சிவமாய் அவமே.

திருவடியின் ஞானம் பெற்றுத் திருந்திவிட்ட உயிர்கள் இன்பம் தராத நரகத்தையும் விடுத்தன. இன்பம் தரும் சுவர்க்கத்தையும் விடுத்தன. தம்மிடம் பொருந்தி இருந்த மலக்கூட்டத்தையும் விட்டனர். சிவத்துடன் பொருந்திச் சிவம் ஆகிய பின்பு பயனற்ற பிறவிகளை அவை விட்டு விட்டன.

#2340. அவமும் சிவமும் அவன் அருளாமே

அவமும் சிவமும் அறியார் அறியார்
அவமும் சிவமும் அறிவார் அறிவார்
அவமும் சிவமும் அருளால் அறிந்தால்
அவமும் சிவமும் அவனரு ளாமே.

பயன் தருவது எது, பயன் அற்றது எது என்பதை அறிவு இல்லாதவர் அறிய மாட்டார். பயன் உள்ளதையும் பயன் அற்றதையும் அறிவுடையவர் பிரித்து அறிவார். இங்கனம் பிரித்து அறியும் நல்ல அறிவு பெற்றவர் தமக்கு வரும் நன்மை, தீமை ஏமாற்ற இரண்டுமே சிவன் அருளாலே விளைவன என்பதையும் அறிவார்.

#2341. சிவ சக்தியர் அனலும் வெப்பமும் போல்வர்.

அருளான சத்தி அனல் வெம்மை போல
பொருள் அவனாகத்தான் போதம் புணரும்
இருள் ஒளியாய் மீண்டு மும்மல மாகும்
திருவருள் ஆனந்தி செம்பொருளாமே.

அனல் சிவன் என்றால் அதன் வெப்பம் சக்தி ஆவாள். சிவனைப் பொருளாகக் கொண்டு சக்தி சீவனை நடத்துவாள். இருளாகவும் ஒளியாகவும், சக்தி விளங்குவாள். மும்மலங்களாக விரிபவளும் அவளே. பின்பு சீவனைச் சிவனாக்கிச் சிவனந்தத்தைத் தருபவளும் அவளே!

#2342. அருட் பேதம் அல்ல காரணம்!

ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தம்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்தன் தன்கதி ரால்அவை சேட்டிப்பப்
பேதித்தப் பேதியா வாறுஅருட் பேதமே.

கதிரவன் உதித்ததும் பல பத்மங்கள் மலரும். சில பத்மங்கள் மலரா. கதிரவனின் ஒளி ஒரு போன்றே அவைகளின் மீது இருந்தாலும் மலர்களின் தன்மையின் வேறுபாட்டினால் இங்கனம் நிகழும். சீவர்கள் அடையும் மாறுபட்ட பக்குவமும் அவர்களின் மாறுபட்ட தகுதியினால் நிகழ்வதே அன்றி அவர்களுக்கு நேசத்துடன் ஈசன் புரியும் அருளில் உள்ள பேதத்தினால் அல்ல.

#2343. ஆன்மாவின் இச்சா சக்தி

பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்
போதம் புணர்போதம் போதமும் நாதமும்
நாத முடன்நாக நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருள்இச்சை யாமே.

கண்களால் காணும் உலகில் வேற்றுமைகளையும், ஒற்றுமைகளையும், வேற்றுமைகளில் ஒற்றுமைகளையும் காணும் ஆற்றல்; ஆன்மாவிடம் இயற்கையாகவே அமைந்துள்ள அறிவு; கல்வி, கேள்வியால் பெற்ற ஞானம்; நாதம்; நாதாந்தம் இவை அனைத்துமே ஆன்மாவிடம் அமைந்துள்ள இச்சா சக்தியின் அருளினால் அமைகின்றன.

#2344. ஆவியை நாட்டும் அரன் அருள்

மேவிய பொய்க்கரி யாட்டும் வினையெனப்
பாவிய பூதம்கொண்டு ஆட்டிப் படைப்பாதி
பூவியல் கூட்டத்தால் போதம் புரிந்தருள்
ஆவியை நாட்டும் அரன்அரு ளாமே.

பொம்மை யானையின் உருவத்தில் இரு மனிதர்கள் புகுந்து கொண்டு அதனுள் ஆடி அதை ஆட்டுவிப்பார்கள். அது போன்றே ஆன்மாவை ஐம்பூதங்களைக் கொண்டு ஆடச் செய்வதும், படைப்பு முதலிய ஐந்தொழில்களால் சுவர்க்கம், நரகம் இவற்றுடன் கூடச் செய்வதும், இறுதியில் ஞானம் நல்குவதும் இவை அனைத்துமே ஆன்மாவின் உடலில் உயிரை நிலைபெறச் செய்யும் சிவனின் அருட் சக்தியால் நிகழ்பவை ஆகும்.

#2345. தெளிவுற்றுத் தீண்டச் சிவம் ஆகும்!

ஆறாது அகன்று தனையறிந் தானவன்
ஈறாகி யாவினும் யாவும் தனில்எய்த
வேறாய் வெளிபுக்கு வீடுற்றான் அருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே.

ஆறு ஆறு முப்பத்தாறு தத்துவங்களையும் துறந்து விட்ட ஆன்மா; தன்னைத் தானே உள்ளபடி உண்மையாக அறிந்து கொண்ட ஆன்மா; எல்லா உயிர்களிடத்தில் தான் உறைபவனாகவும், தன்னிடத்தில் எல்லா உயிர்கள் உறைவதை அறிந்தவனாகவும், அவற்றில் இருந்து வேறாகி நிற்பவனும் ஆகிய ஆன்மா; பரவெளியில் பிரவேசித்து வீடு பேற்றினை அடைவான். அத்தகைய ஆன்மா தன் மயக்கம் ஒழித்துத் தெளிவுற்றுச் சிவமாகி விடுவான்.

#2346. சிவனுடன் சாரலும் ஆமே

தீண்டற்குரிய அரிய திருவடி நேயத்தை
மீண்டுற்று அருளால் விதிவழியே சென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலும் ஆமே.

இறைவனின் திருவடி அடைவதற்கு அரியது. எனினும் முற்பிறவிகளில் செய்த சாதனையின் பயனாக ஆன்மா இப்பிறவியில் ஈசனின் அருள் பெறும். சீரிய நெறி வழியே சென்று, சிவஞானத்தைத் தேடி, குண்டலினி சக்தியை எழுப்பி, அதனுடன் உடலின் ஆறு ஆதாரங்களையும் கடந்து சென்று நிராதாரத்தை அடைந்தால் ஆன்மா சிவனுடன் பொருந்த இயலும்.

#2347. சிவனைச் சார்ந்தவர்கள் எவர்?

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட ஆனந்தர்
சார்ந்தவர் சத்த அருள்தன்மை யாரே.

சிவபெருமானைச் சார்ந்தவர்கள் எவர்?

சாரணர்கள், சித்தர்கள், சமாதி பயின்றவர்கள், சிவஞானம் பெற்றவர்கள்; சிவனிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள், சிவானந்தத்தில் திளைப்பவர்கள், நாதத்தில் திளைப்பவர்கள் இவர்கள் அனைவருமே சிவபெருமானைச் சார்ந்தவர்கள் ஆவர்.

#2348. தான் இன்றித் தானாவது தத்துவ சுத்தம்

தான்என்று அவன்என்று இரண்டென்பர் தத்துவம்
தான்என்று அவன்என்று இரண்டற்ற தன்மையைத்
தான்என்று இரண்டுஉன்னார் கேவலத் தானவர்
தான்இன்றித் தானாகத் தத்துவ சுத்தமே.

சகல நிலையில் உள்ளவர்கள் “தான்” என்னும் ஆன்மா வேறு, “அவன்” என்னும் சிவன் வேறு என்று நினைப்பார்கள். “தான்” என்றும் ” அவன்” என்றும் உண்மைப் பொருட்கள் இரண்டு உண்டு என்பார்கள். அருள் கேவல நிலையில் உள்ளவர்கள் “தான் வேறு, அவன் வேறு!” என்று எண்ணாமல் உண்மைப் பொருள் ஒன்றே ஒன்று என்பார்கள். “தான்” என்பது அழிந்து சிவனுடன் சேருவது சுத்தத் தத்துவம் ஆகும்.

#2349. சார்வதற்கு அரியவன்

தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற்கு அரியவே

“தனக்குள் உறையும் தலைவன் சிவன்” என்று அறிந்து கொண்டு, தனக்குள்ளே சிவனைத் தேடுபவன் சிவனைத் தனக்குள் காண்பான். தனக்குள் உள்ள தலைவனைத் தேடாதவன் தன் தலைவன் சிவனை ஒரு நாளும் அடைய மாட்டான்.

#2350. உள்ளததுள் உறைவான் இறைவன்

அறியகி லேன்என்று அரற்றாதே நீயும்
நெறிவழி யேசென்ற நேர்பட்ட பின்னை
இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்துஎன் உள்ளத்துள் ஆமே.

“எனக்குச் சிவனருள் கிடைக்கவில்லை!” என்று நீ அரற்றாதே! நெறி வழியே நீ நடந்து சென்றால் உறுதியாக அவன் நேர்படுவான். சிவன், சக்தி என்ற இருசுடராக இருந்து அவன் அனைத்தையும் படைக்கின்றான். அவனே ஒரு சுடராகி வந்து உன் உள்ளத்தில் உறைவான்.

#2351. நம்மை அறிபவன்; நம்மால் அறிய முடியாதவன்

மண்ஒன்று தான்பல நற்கலன் ஆயிடும்
உண்ணின்ற யோனிகட்டு எல்லாம் ஒருவனே
கண்ஒன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகிநின்றானே.

மண் என்னும் ஒரு பொருளில் இருந்து சட்டி, பானை, குடம், கலயம் போன்ற பல பொருட்கள் உருவாகின்றன. இது போலவே இறைவன் என்னும் ஒரு மெய்ப் பொருள் பல உயிர்களாக உருவாகின்றது. கண் என்னும் பொறி உலகம் முழுவதையும் காணும்.ஆனால் கண் தன்னையே தானே காண முடியாது.

இறைவனும் அது போன்றே எல்லாவற்றையும் கண்டாலும் அவனை எவராலும் காண முடிவதில்லை.

#2352. கூப்புகில்லார் கொள்ளலும் ஆமே?

ஓம்புகின் றான்உலகு ஏழையும் உள்நின்று
கூம்புகின் றார்குணத் தின்னொடும் கூறுவர்
தேம்புகின்றார்சிவன் சிந்தைசெய் யாதவர்
கூம்பகில் லார்வந்து கொள்ளலும் ஆமே.

உயிர்களின் உயிராக இருந்து இறைவன் ஏழு உலகங்களையும் ஓம்புகின்றான். மனம் குவிந்து ஒருமுகப்பட்ட ஞானியர் இதை அறிந்து கொண்டு சிவனோடு கூடுவர். சிவனைத் தம் சிந்தையில் கொள்ளாதவர் அழுது புலம்பித் தேம்புகின்றார்கள். மனம் குவிந்து ஒருமுகப்படாத போது சிவனை அறிய முடியுமா?

#2353. அறிவறியா இருந்து அன்னமும் ஆமே.

குறிஅறி யார்கள் குறிகாண மாட்டார்
குறிஅறி யார்கடம் கூடல் பெரிது
குறிஅறி யாவகை கூடுமின் கூடி
அறிவறி யாஇருந்து அன்னமும் ஆமே.

தனக்குள் உறைகின்ற சிவனை அறிய முடியாதவர்கள் அவனை தனக்கு வெளியில் இருக்கு சிவத்தை எங்கனம் அறிந்து கொள்ள முடியும்? தனக்குள் சிவம் உறையும் உண்மையை அறியாதவர் பல பிறவிகள் எடுத்து உலகில் இன்ப துன்பங்களில் உழல்வர். “நான் வேறு சிவன் வேறு” என்று எண்ணாமல் அவனுடன் பிரிவின்றிக் கூடுங்கள். சிவனுடன் கூடி உங்கள் சுட்டறிவை இழக்கும்போது நீங்கள் ‘ஹம்சம்’ (நானே அவன்) என்னும் உயர்ந்த நிலையை அடைவீர்கள்.

ஹம்சம் = அஹம் + ஸ: = நானே அவன்

#2354. பிறப்போடு இறப்பறியாரே!

ஊனோ உயிரோ உறுகின்றது ஏதுஇன்பம்
வானோர் தலைவி மயக்கத்து உறநிற்கத்
தானோ பெரிதுஅறி வோம் என்னும் மானுடர்
தானே பிறப்போடு இறப்பறி யாரே.

சிவானந்தத்தை அனுபவிப்பது சீவனின் உடலா அல்லது சீவனின் உயிரா? இந்த இரண்டில் உண்மையில் ஆனந்தம் துய்ப்பது எது என்று வானோர் தலைவியே மயங்கி நிற்கின்றாள். “நான் எல்லாம் அறிவேன்!” என்று அறைகூவிக் கொண்டு

திரியும் மனிதர்கள் பிறப்பு, இறப்பு என்னும் சுழலில் சிக்கிக் கொன்டு அதிலிருந்து மீளும் வழியை அறியார்.

எட்டாம் தந்திரம் -
14. அறிவு உதயம்

சுட்டறிவு = புலன்களால் அறிந்து கொள்ளும் அறிவு.

ஆன்மாவிடம் சுட்டறிவு மட்டுமின்றி எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் நிறைவான அறிவும் உள்ளது.

#2355. தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.

தான் தூய அறிவின் உருவம் என்று ஆன்மா தன்னைத் தானே அறிந்து கொண்டால் அது துன்புற வேண்டிய அவசியம் இல்லை. அறிவு வடிவான தன் உண்மை உருவினை அறியாததால் ஆன்மா வருந்துகின்றது. ஞான உதயம் பெற்ற ஆன்மா தான் அறிவு மயமான ஒளி வடிவம் கொண்ட உண்மையை அறிந்து கொண்ட பின்பு உலகத்தோர் அர்ச்சிக்கும் உயர்வான தன்மை பெற்றுச் சிவ வடிவம் எய்தும்.

#2356. பொங்கார் குழலி “போற்றி!” என்பாள்

அங்கே அடற்பெரும் தேவரெல் லாம்தொழச்
சிங்கா தனத்தே சிவன்இருந் தானென்று
சங்குஆர் வளையும் சிலம்பும் சரேலெனப்
பொங்குஆர் குழலியும் போற்றிஎன் றாளே.

சிவவடிவம் பெற்ற ஆன்மா சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் போது வலிமையையும் பெருமையும் நிறைந்த தேவர்கள் வந்து அவனைத் தொழுவார்கள்.அதைக் கண்ணுற்ற பொங்கார் குழலி சக்தி தேவி அரியணையில் அமர்ந்திருப்பவர் சிவபெருமான் என்று கருதித் தன் சங்குவளையும், காற்சிலம்பும் ஒலிக்கும்படி வந்து “போற்றி!” என்பாள்.

#2357. அறிவு வடிவென்று அறிந்திருந்தேனே.

அறிவு வடிவென்று அறியாத என்னை
அறிவு வடிவென்று அருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென்று அருளால் அறிந்தே
அறிவு வடிவென்று அறிந்திருந் தேனே.

"நான் அறிவு வடிவானவன். நான் கருவிகள் கரணங்களின் உதவியின்றியே அறியும் ஆற்றல் பெற்றவன்" என்ற உண்மையை நான் அறியாமல் இருந்தேன். நான் அறிவு வடிவானவன் என்ற உண்மையை எனக்குத் தன் அருளால் சிவபெருமான் உணர்த்தினான். நான் அறிவு வடிவானவன் என்ற உண்மையைச் சிவன் அருளால் அறிந்து கொண்ட பின்பு நான் கருவிகள் கரணங்களை விட்டு விட்டு அறிவு வடிவினன் ஆக நின்றேன்.

#2358. அறிவே அறிவை அறிகின்றது

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின் றனமறை ஈறுகள் தாமே.

அறிவுக்கு ஆக்கமும் இல்லை, அழிவும் இல்லை. அறிவுக்கு அறிவற்ற பொருள் ஓர் ஆதாரம் ஆக முடியாது. எனேவ அறிவு மயமான ஆன்மாவுக்கு ஆதாரம் பேரறிவாகிய சிவன் மட்டுமே ஆவான். அறிவுருவாகிய ஆன்மா பேரறிவாகிய சிவனை அறிகின்றது. இந்த உண்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன மறைகளின் ஈறாகிய உபநிடதங்கள்.

#2359. தூய அறிவு சிவானந்தம் ஆகும்

ஆயு மலரின் அணிமலர் தன்மேலே
பாய இதழ்கள் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகியே
போய அறிவாய்ப் புணர்ந்திருந் தானே

ஆதாரத் தாமரைகளில் சிறந்தது இதயத்தில் உள்ள அநாகதம். அதற்கும் மேலே பரவியுள்ளது பதினாறு இதழ்த் தமரையாகிய விசுத்தம். தூய ஆன்ம அறிவு சிவானந்தத்துடன் கலந்து மேலே செல்லும். அது விசுத்திச் சக்கரத்தைக் கடந்து சென்று அதற்கும் மேலே உள்ள பேரறிவு ஆகிய சிவனுடன் புணர்ந்து விளங்கும்.

விளக்கம்: விசுத்திச் சக்கரம் விழிப்படைந்தால் நாதம் தலையில் பாயும். அந்த நாதத்தில் சிவன் விளங்குவான்.

#2360. “நீ பெரியை!” என்றான்

மன்னிநின் றாரிடை வந்தருள் மாயத்து
முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்வனும்
பொன்னின்வந் தானோர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேன்நீ பெரியையென் றானே.

இடையறாது சிவனைச் சிந்திப்பவர்களுக்குச் சுத்த மாயையின் காரியம் ஆகிய நாதத் தத்துவத்தில் சிவன் வெளிப்படுவான். அந்த முதல்வனையே நான் நினைவில் கொண்டேன். அந்த முதல்வனும் தன் பொன்னொளியில் சிறப்பாகத் திகழ்ந்தான். நிகரில்லாத பெருமையுடைய அவன் திரு மேனியுடன் நான் பின்னிப் பிணைந்து நின்றேன். அவனும் அருள் கூர்ந்து என்னிடம் “நீ பெரியவன்!” என்று கூறினான்.

#2361. அறிவு அறிவாக அறிந்தனன் நந்தி

அறிவுஅறி வாக அறிந்துஅன்பு செய்மின்
அறிவுஅறி வாக அறியும்இவ் வண்ணம்
அறிவுஅறி வாக அணிமாதி சித்தி
அறிவுஅறி வாக அறிந்தனன் நந்தியே.

ஆன்ம அறிவு பேரறிவின் வயப்பட்டது என்ற உண்மையை உணர்ந்து அதனிடம் அன்பு காட்டுங்கள். அப்போது அகண்ட பேரறிவாகிய சிவன் உங்கள் ஆன்ம அறிவில் வந்து பொருந்துவான். அவன் அறிவு உங்கள் அறிவாக மாறிய பின்பு அணிமா சித்திகள் கைக் கூடும். அதன் மூலம் தெளிவாகும் சிவன் அறிவும் உங்களறிவும் ஒன்றாகப் பொருந்தியுள்ள உண்மை.

#2362. அறிவு அறியாமை யாரும் அறியார்

அறிவுஅறி வென்று அங்கு அரற்றும் உலகம்
அறிவுஅறி யாமை யாரும் அறியார்
அறிவுஅறி யாமை கடந்துஅறி வானால்
அறிவுஅறி யாமை அழகிய வாறே.

அறிவு அறிவு என்று உலகம் முழுவதும் அரற்றுகின்றது. ஆனால் அது குறிப்பிடுவது பாசவயப்பட்ட அறியாமை என்று உலகம் உணர்வதில்லை. அறிவு பாச அறிவைக் கடந்து சிவஞானம் ஆகிவிட்டால் அப்போது பாச அறிவின் இலக்கணம் என்ன என்பது உலகுக்குப் புரியும்.

#2363. அறிவின் செறிவாகி நின்றவன் சிவன்

அறிவுஅறி யாமையை நீவி யவனே
பொறிவாய் ஒழிந்துஎங்கும் தானான போது
அறிவாய் அவற்றினுள் தானாய் அறிவின்
செறிவாகி நின்றவன் சிவனும் ஆமே.

அறிவையும், அறியாமையையும் நீக்கிய ஒருவன், தன் ஞான இந்திரியங்களைக் கடந்து சென்று, அகண்ட அண்டத்தில் தானும் ஒன்றி விடும் போது, அந்த அறிவாகவும், அந்த அறிவினுள் அடங்குபவனாகவும், அந்த அறிவின் செறிவாகவும் நிற்பவன் சிவபெருமானே ஆவான்.

#2364. ஞானியின் நெஞ்சமே சிவன் ஆலயம்

அறிவுடை யார்நெஞ்சு அகலிடம் ஆவது
அறிவுடை யார்நெஞ்ச அருந்தவம் ஆவது
அறிவுடை யார்நெஞ்சொடு ஆதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத்து அங்குநின் றானே.

மெய்ஞானியின் உள்ளமே இந்தப் பரந்து விரிந்த உலகம். ஞானியின் உள்ளமே அருந்தவம் நிறைந்தது. ஞானியின் உள்ளதையே தன் ஆலயமாகக் கொண்டு அங்கே சிவன் எழுந்தருள்வான்.

#2365. தித்திக்கும் தீங்கரும்பும் திகட்டாத அமுதும் சிவனே.

மாயனும் ஆகி மலரோன் இறையுமாய்க்
காயநன் னாட்டுக் கருமுதல் ஆனவன்
சேயன் அணியன் தித்திக்கும் தீங்கரும்
பாய்அமு தாகிநின்று அண்ணிக்கின் றானே.

மாயன் ஆகிய திருமாலாகவும், மலரோன் ஆகிய நான்முகனாகவும், இறைவன் உருத்திரனாகவும் மூன்று வடிவங்களில் உடல்களின் உற்பத்திக்குக் காரணம் ஆனவன் சிவன். அவன் நமக்கு மிகத் தொலைவில் எட்டாமல் இருப்பவன்; அதே சமயம் அவன் நமக்கு மிக மிக அருகில் இருப்பவன். தீங்கரும்பு போலத் தித்திக்கும் சிவன் திகட்டாத அமுதம் போன்றவன்.

#2366. என் நலத்தை உசாவுகின்றான்

என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலும் கைவிடாது
என்னையிட்டு என்னை உசாவுகின் றானே.

அறியாமை இருளிலும், பாசத்தளையிலும் நான் இருந்த போது என் உண்மை வடிவத்தை நான் அறியவில்லை. என்னை நான் உள்ளது உள்ளபடி அறிந்து கொண்ட பின்பு வேறு எதையுமே நான் அறியவில்லை. நான் என் உண்மை வடிவத்தை அறிந்து கொண்ட பின்பும் என்னை விட்டு அகலவில்லை என் பிரான். என்னுடனேயே இருந்து கொண்டு அவன் என் நலத்தை உசாவுகின்றான்.

#2367. சேய விளக்கைத் தேடுகின்றேன்.

மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனன்றிடும்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே.

பத்த நிலையில் உள்ளவர்களின் ஆன்ம வடிவம் உடலுடன் பொருந்தி இருக்கும். அதனால் அது தெளிவாக விளங்காமல் மறைந்திருக்கும். ஞானம் அடைந்தவர்களின் ஆன்ம வடிவம் ஒளி பெற்றுச் சுடர் விடும். அது உடலில் கனன்று வெப்பத்தை அளிக்கும். அத்தகைய செம்மையான விளக்கையே நான் தேடுகின்றேன்.

#2368. பாடுகின்றேன் பரமே துணை என

தேடுகின் றேன்திசை எட்டோ டு இரண்டையும்
நாடுகின் றேன்நல மேஉடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனைத் தாலே.

சிவம் என்னும் ஒளிவிளக்கை நான் எடுத்து திசைகளில் மட்டுமின்றி மேலும் கீழும் கூடத் தேடிகின்கின்றேன். இன்ப வடிவாகி அன்பர்களுக்கு நலம் பயக்கும் அவன் திருவடிகளை நான் நாடுகிறேன். பரம்பொருளே உற்ற துணையாகும் என்று அவனைப் பாடுகின்றேன். குறைவற்ற நிறைவான மனத்துடன் அவனைக் கூடுகின்றேன்.

#2369. சிவமாக வாரா பிறப்பே!

முன்னை முதல்விளை யாட்டத்து முன்வந்தோர்
பின்னை பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தன்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே.

நான்முகனின் படைப்பில் முதலில் தோன்றிய சீவர்கள் ஆணவ மலத்துடன் விளங்கினார். பின்பு அவர்கள் சிவன் அருளால் ஆணவ மலத்தை ஒழித்தனர். தம்

உண்மையான ஆன்ம வடிவத்தை அறிந்து கொண்டனர். பழமைக்கும் பழமையான சிவன் திருவடிகளைப் பொருந்தினர், சிவம் என்ற உயர்ந்த நிலையை அடைந்தால் பிறப்பு அதன் பின்பு வாராது.

எட்டாம் தந்திரம் -
15. ஆறாந்தம்

ஆறு + அந்தம் = ஆறாந்தம்
அந்தம் = முடிவு.
ஆறு முடிவுகள் இவை:
காலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம்.

1. கலாந்தம் = நிவிருத்தி முதலிய ஐந்து கலைகளை அறிந்து கொண்டு சாந்தியாதீத கலையை அடைவது.
2. நாதாந்தம் = நாதத்தின் முடிவால் அடைவது
3. யோகாந்தம் = எட்டு அங்கங்களைக் கொண்ட யோகத்தின் மூலம் அடைவது
4. போதாந்தம் = ஆத்ம விசாரணையின் மூலம் அடைவது
5. வேதாந்தம் = உபநிடதங்கள், ஆகமங்கள் இவற்றின் உதவியால் அடைவது
6. சித்தாந்தம் = சைவ ஆகமங்களின் முடிவு.

#2370. ஆறு அந்தங்கள் இவை

**வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் தகும்எட்டு யோகாநந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்தம் ஆமே.**

வேதங்களின் அந்தமான வேதாந்தமும், சிவ ஆகமங்களின் முடிவாகிய சித்தாந்தமும், நாதத்தின் முடிவாகிய நாதாந்தமும், ஆன்ம விசாரணையில் விளையும் போதாந்தமும், எட்டு அங்கங்களைக் கொண்ட யோகத்தின் முடிவில் அடையும் யோகாந்தமும், ஆதிக் கலாந்தமும் என அந்தங்கள் ஆறு வகைப்படும்.

#2371. அந்தமோடு ஆதி அறியஒண் ணாதே.

**அந்தம்ஓர் ஆறும் அறிவார் அதிசுத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறிவார் அமலத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறியார் அவர்தமக்கு
அந்தமோடு ஆதி அறியஒண் ணாதே.**

ஆறு அந்தங்களையும் அறிபவர் அதி சுத்தத் தத்துவத்தை அறிந்தவர். மலங்கள் அற்றவர் மட்டுமே ஆறு அந்தங்களையும் அறிய இயலும். இத்தகைய ஆறு அந்தங்களை அறியாதவர்களால் உலகத்தின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் அறிய இயலாது.

#2372. மலமற்று யாரும் சித்தியாதல் பயன்

தானான வேதாந்தம் தான்என்னும் சித்தாந்தம்
ஆனாத் துரியத்து அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரம் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற்று அரும்சித்தி யாதலே.

"நான் முழு முதற் கடவுள்" என்று கூறுவது வேதாந்தம். "நான் முழு முதற் கடவுள் ஆவேன்?" என்று கூறுவது சித்தாந்தம். துரீய நிலையில் ஆன்மா தன் இயல்பான ஒளிவடிவைக் காணும். பரபரமாகிய சிவத்துடன் ஒன்றாகச் சேரும். இவ்வாறு ஆன்மா தன் மலங்களை அகற்றிப் பெரும் சித்திகளைப் பெறும்.

#2373. அத்தன் பால் அடைவது சித்தாந்தம்

நித்தம் பரனோடு உயிருற்று நீள்மனம்
சத்தம் முதல்ஐந்தும் தத்துவத் தால்நீங்கச்
சுத்தம் அசுத்தம் தொடரா வகைநினைந்து
அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே.

சிவனைச் சிந்தையில் இருத்த வேண்டும். சத்தம் முதலிய ஐந்து புலன்களில் இருந்து விடுபட வேண்டும். சுத்த மாயை அசுத்த மாயைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். இங்கனம் அனைத்தையும் கடந்து தலைவனான முழு முதற் பொருளை அடைவதே சித்தாந்தம்.

#2374. அணு ஒன்றுளது

மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவுசெய் ஈசன் சதாசிவன் மிக்கு அப்பால்
மேவும் பரவிந்து நாதம் விடாஆறாறு
ஓவும் பொழுதுஅணு ஒன்றுஉள தாமே.

பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கடந்து; மகேசுரன், சதாசிவன் இவர்களையும் கடந்து, பரவிந்து, பர நாதம் இவற்றையும் கடந்து, முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து செல்லும் ஆன்மா தனியனும் இனியனும் ஆன சிவனுடன் ஒன்றாகப் பொருந்துகிறது.

#2375. நாதாந்தத்து எய்திடும் போதமே

உள்ள உயிர்ஆறாற தாகும் உபாதியைத்
தெள்ளி அகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்
உள்ள இருள்நீங்க ஓர் உணர் வாகுமேல்
எள்ளலில் நாதாந்தத்து எய்திடும் போதமே.

ஆன்மாவைப் பிணிக்கும் முப்பத்தாறு தத்துவங்களாகிய உபாதிகளை அழித்து வீட்டுக் கடந்து சென்று, மேலே நாதாந்தத்தையும் கடந்து சென்று, ஆணவம் என்னும் இருள் நீக்கப் பெற்று சிவத்துடன் ஆன்மா ஒருணர்வாகப் பொருந்தி நின்றால், நாதாந்தத்தில் ஞானம் உதிக்கும்.

#2376. உபசாந்தமே யோகாந்தக் கொள்கை

தேடும் இயம நியமாதி சென்றகன்று
ஊடும் சமாதியில் உற்றுப் படர்சிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே.

இயமம், நியமம் முதலிய எட்டு அங்கங்களை உடைய யோக நெறியில் சென்ற ஆன்மா சமாதியில் பரசிவத்துடன் பொருந்தி நிற்கும். அந்நிலையில் சீவனின் பற்றுக்கள் முற்றுமாக அகன்றுவிடும். ஆன்மா 'உபசாந்தம்' என்னும் விவரிக்க முடியாத மனஅமைதியை அடையும். இதுவே யோகாந்தத்தின் கொள்கையாகும்.

#2377. விந்துவின் உள்ளே ஒளிதலும் தெளிதலும்

கொள்கையில் ஆன கலாந்தம் குறிக்கொள்ளில்
விள்கையில் ஆன நிவிர்த்தாதி மேதாதிக்கு
உள்ளன வாம்விந்து உள்ளே ஓடுங்கலும்
தெள்ளி அதனைத் தெளிதலும் ஆமே.

கலாந்தம் என்ற கொள்கையை ஆராய்ந்தால் நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்று ஐந்து கலைகளையும் கடந்து சென்று, மேலே மேதை, அர்க்கீசம், விடம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வியோம ரூபிணி, ஆனந்தை, அநாதை, அனாசிருதை, சமனை, உன்மனை என்று அந்தப் பதினாறு கலைகளையும் கடந்து சென்று ஆன்மா விந்துவில் ஒடுங்குவதும் அதை நன்கு ஆராய்ந்து தெளிவு பெறுதலும் ஆகும்.

#2378. உள்ளன மேலும் ஐந்து வழிகள்

தெளியும் இவையன்றித் தேர்ஐங் கலைவேறு
ஒளியுள் அமைந்துள்ளது ஓரவல் லார்கட்கு
அளியவ னாகிய மந்திரம் தந்திரம்
தெளிஉப தேசஞா னத்தொடுஐந் தாமே.

இந்த ஐந்து வழிகளைத் தவிரச் சிவானந்தம் பெறுவதற்கு வேறு ஐந்து வழிகளும் உள்ளன. சிவானந்தத்தை நாடிச் செல்பவர்களுக்கு உள்ள அந்த வழிகள் மந்திரம், தந்திரம், சமாதி, உபதேசம், ஞானம் என்பவை ஆகும்.

#2379. சிவபோதகம் உபதேசமே

ஆகும் அனாதி கலைஆ கமவேதம்
ஆகும்அத் தந்திரம் அந்நூல் வழிநிற்றல்
ஆகும் அனாதி உடல்அல்லா மந்திரம்
ஆகும் சிவபோ தகம்உப தேசமே.

ஆகம வேதங்கள் மிகப் பழமையானவை. அவற்றில் கூறப்பட்டுள்ள சடங்குகளைச் செய்வது தந்திரம். மந்திரங்கள் உடலைக் கடந்தவை; அவை மனத்துடன் தொடர்பு உடையவை. சிவஞானத்தை விளக்குகின்ற அறிவு உபதேசம் ஆகும்.

#2380. வாசா மகோசர நந்தி

தேசார் சிவமாகும் தன்ஞானத் தின்கலை
ஆசார நேய மறையும் கலாந்தத்துப்
பேசா உரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே

ஆன்ம ஞானம் அடைவது என்பது சிவனுடன் ஒன்றுவது. காலாந்தத்தில் பக்தியுணர்வு மறைந்து விடும். வாக்கு, உணர்வு, இவற்றைத் துறந்துவிட்ட ஒரு ஞானி, சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாத பரசிவம் ஆவார்.

#2381. ஞேயம் ஞாதுரு ஆகுமே.

தான்அவ னாகும் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மென்ஞேய ஞாதுரு வாகுமே.

பயிற்சியினால் சீவன் சிவன் ஆகும் தன்மையை அடைத்து விட்டால் அப்போது கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், சித்தாந்தம் இவற்றின் மூலம் பெற்ற ஞானத்தால், அறியப்படும் பொருளாகிய சிவனும் அறியும் பொருளாகிய சீவனும் ஒன்றி ஒருவரே ஆகி விடுவார்.

#2382. தேறிய மோனம் சிவானந்தம்

ஆறந்த மும்சென்று அடங்கும்அந் நேயத்தே
ஆறந்த ஞேயம் அடங்கிடும் ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் வீடவே
தேறிய மோனம் சிவானந்த மாமே.

ஞானத்தில் ஆறு அங்கங்களும் சென்று ஒன்று சேரும். ஞானம் உதித்தபின் ஞாதுரு (அறிபவன் = சீவன்) ஞேயத்தில்(அறியும் பொருளில் = சிவத்தில்) அடங்கி விடுவான். ஞானமும், ஞானியும் ஒன்றாகி விடும் போது அங்கு சீரிய மோனம் விளையும். அதுவே உயரிய சிவானந்தம் ஆகும்.

#2383. உண்மைக் கலை ஓர் அந்தம் ஆமே

உண்மைக் கலைஆறுஓர் ஐந்தான் அடங்கிடும்
உண்மைக் கலாந்தம் இரண்டுஐந்தோடு ஏழ்அந்தம்
உண்மைக் கலைஒன்றில் ஈறாய நாதாந்தத்து
உண்மைக் கலைசொல்ல ஓர்அந்தம் ஆமே.

உண்மையான அந்த ஆறு கலைகளும் பிரணவத்தின் ஐந்து உறுப்புகளான (அ, உ, ம, விந்து, நாதம்) இவற்றுள் அடங்கும்.

சிவத்துவங்கள் ஐந்தும், வித்தியாததுவங்கள் எழும் உண்மையான இரண்டு காலாந்தத்தில் முடியும். காலாந்தம் இரண்டு: நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்ற ஐந்து. மந்திரம், தந்திரம், தெளிவு, உபதேசம், ஞானம் என்ற ஐந்து.

#2384. கோனைக் கருதுமே

ஆவுடை யானை அரன்வந்து கொண்டபின்
தேவுடை யான்எங்கள் சீர்நந்தி தாள்தந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி யருளிய கோனைக் கருதுமே.

ஆன்மாக்களை இயக்கி நடத்துகின்ற குண்டலினி சக்தியை சகசிரா தளத்தில் விளங்கும் நாதத்தின் தலைவன் சிவன் ஏற்றுக் கொண்டான். வானவர்களை வழி

நடத்தும் சிவன் தன் திருவடிகளை என் தலை மேல் சூட்டினான் அழிவற்ற வேதாந்த சித்தாந்தங்களின் மேன்மையை அவன் நாதாந்ததால் உணர்த்தினான். அந்தச் சிவகுரு நாதனைக் கருத்தில் நிறுத்துங்கள்!

#2385. வேதாந்த சித்தாந்த உண்மை

கருதும் அவர்தம் கருத்தினுக்கு ஒப்ப
அரனுரை செய்தருள் ஆகமந் தன்னில்
வருசமயப் புற மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த உண்மையே.

சிவபெருமான் அருளிய சிவாகமங்களின் மெய்ப்பொருள் சிவனை வணங்குபவரின் வழிபாட்டின் சிறப்புக்கு ஏற்பப் புலப்பட்டும். உண்மை அல்லாத மாயை, மாமாயை என்பவற்றைக் கடந்து நிற்பது வேதாந்த சித்தாந்தங்களால் உணர்த்தப்படும் உண்மைப் பொருள் ஆகும்.

#2386. மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே

வேதாந்தம் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேய
நாதாந்தம் ஆனந்தம் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே.

வேதாந்தம், சித்தாந்தம் என்னும் இரண்டு அந்தங்களும் ஒரே தன்மை வாய்ந்தவை. தமக்குள் வேறுபாடுகள் இல்லதாவை. ஞான உதயம் என்பது தூய ஆன்ம அறிவைப் பெறுவது. யோகாந்தம் ஆன்மா அறியவேண்டிய மெய்ப் பொருளைக் காட்டிக் கொடுக்கும். நாதாந்தத்தில் இன்பம் தருகின்ற ஒலி உண்டாகும். மோனத்தில் மூழ்கிப் பிரணவ சமாதியில் இருப்பது ஆன்மாவின் பழமையான முத்திரை ஆகும்.

#2387. அசி பதம் அடையும் ஆன்மா

வேதாந்தம் தன்னில் உபாதிமே லேழ்விட
நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி என்பவே

வேதாந்த நெறியில் சீவனுக்கு உரிய காரிய உபாதிகள் ஏழின் பிணைப்பு நீங்கிவிடும். நாதாந்தத்தில் சீவனின் பசுத்தன்மை நீங்கித் தொம்பதம் பொருந்தும். அப்போது காரண உபாதைகள் ஏழும் பொருந்தியுள்ள சிவன் தற்பதம் ஆகும். இந்த இரண்டு பதங்களும் பொருந்திவிடும் போது அசிபதம் பொருந்தும்.

சீவனுக்கு உரிய காரிய உபாதைகள் ஏழு:
அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்ச ஞானம், நித்தியாரோப ஞானம், துக்க விருத்தி, தடையற்ற ஆனந்தம்.

சிவனுக்கு உராய காரண உபாதைகள் ஏழு:
சர்வஞ்சத்துவம், சர்வ காரணத்துவம், சர்வாந்திரிகயாமித்வம், சர்வேசுரத்துவம், சர்வ சிருஷ்டி, சர்வ திதி, சர்வ சங்காரம்

தொம்பதம் = சீவன். தற்பதம் = சிவன். அசி பதம் = சீவனும் சிவனும் ஒன்றாகும் பதம்.

#2388. நின்றான் எங்கள் கோவே.

**அண்டங்கள் ஏழும் கடந்துஅகன்று அப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளாம் உளஒளி
பண்டுறு நின்ற பராசக்தி என்னவே
கொண்டவன் அன்றிநின் றான்எங்கள் கோவே.**

அண்டங்கள் ஏழினையும் கடந்து நிற்பவன் ஈசன். அவன் அண்டங்களுக்கு அப்பால் விளங்கும் ஒளியின் ஒளியாவான். பண்டு அவன் அங்கு பராசக்தியோடு நின்றான். அங்கே என் தலைவன் ஆகியசிவன் நிற்கின்றான்.

#2389. உண்டு ஒழியாத ஒருவனை அறியலாம்

**கோஉணர்ந் தும்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை பாரிப்ப
ஓஅனைத் துண்டுஒழி யாத ஒருவனே.**

மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியைக் குருவின் உபதேசப்படி வசப்படுத்து. சிவனை உணர்ந்து கொள்வதையே உன் வாழ்வின் லட்சியம் ஆகக் கொள். தெய்வத்தை உணர்த்தும் நற்கருமங்களையே செய். துதிப் பாடல்களையே அர்ச்சனையாகி அவனை அன்போடு வழிபடு. அப்போது பிரணவத்தின் உறுப்புக்கள் ஆகிய அகார, உகார, மகார, விந்து, நாதத்தைக் கடந்த சிவனை நீ உணரலாம்.

#2390. அருவனுமாகிய ஆதாரம் அவனே.

**ஒருவனை உன்னார் உயிர்தனை உன்னார்
இருவினை உன்னார் இருமாயை உன்னார்
ஒருவனு மேயுள் உணர்ந்திநின் றூட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே.**

ஒருவனாக இருக்கும் சிவனைக் குறித்து எண்ணார். உயிரைக் குறித்து எண்ணார். இன்ப துன்பங்களுக்குக் காரணம் ஆகிய இரு வினைகளைக் குறித்து எண்ணார். சீவனைக் கட்டுக்குள் வைத்திருக்கும் சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரண்டையும் குறித்து எண்ணார். ஒப்பற்ற ஒருவனாக உள்ள சிவபெருமானே ஆன்மாவினுள் உள்ளே இருப்பதையும் எண்ணார். அவனே ஆன்மாவுக்கு இவற்றை உணர்த்தி ஊட்டுவதையும் அறியார். கருமங்கள் ஆகிய இருவினைகள் கழியும்படிச் செய்து அருவமாக இருந்து ஆன்மாவுக்கு ஆதாரம் ஆனவன் அவனே என்பதையும் எண்ணார்.

#2391. சீவன் சிவானந்தி ஆகும்

அரன்அன்பர் தானம தாகிச் சிவத்து
வருமவை சத்திகள் முன்னா வகுத்திட்டு
உரனுறு சந்நிதி சேட்டிப்ப என்றும்
திரனுறு தோயாச் சிவாநந்தி யாமே.

சிவபெருமான் அன்பர்களின் நெஞ்சத்தியே ஆலயமாகக் கொண்டு எழுந்தருள்கின்றான். அன்பர்களின் ஆன்மா பக்குவம் அடைவதற்கான அவற்றுள் தன் சக்திகள் பலவற்றைப் பொருந்துகின்றான். வலிமை வாய்ந்த சிவசங்கற்பத்துக்கு ஏற்ப அந்தச் சக்திகள் ஆன்மாவினுள் தொழிற்படும். ஆன்ம சங்கற்பம் ஆன்மாவைப் பற்றாத போது சிவ சங்கற்பத்தில் நிலைத்திருக்கும் ஆன்மா சிவானந்தத்தில் திளைக்கும்.

#2392. சிவ சாயுச்சியம்

வேதாந்த தொம்பதம் மேவும் பசுஎன்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போய்இரண்டு ஐக்கியம்
சாதாரணம் சிவ சாயுச் சியமாமே.

வேதாந்தத்தில் கூறப்படும் தொம்பதம் ('த்வம்' என்னும் பதம்) பசுவாகிய ஆன்மாவைக் குறிக்கும். நாதாந்தத்தில் ஆன்மாவின் மலங்கள் நீங்கி அதன் பசுத்தன்மை அழிந்து விடும். போதாந்தத்தில் தற்பதம் என்னும் நிலையை அடைந்து, அதன் பின்னர் சீவன் சிவனுடன் இரண்டறக் கலப்பதே சிவ சாயுச்சியம் என்னும் அசி பதம் ஆகும்.

#2393. வேதாந்தம் சித்தாந்தம் ஞானம் தரும்

சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவம்அவம் ஆகும் அவ்வவ் இரண்டும்
சிவமாம் சதாசிவன் சேர்ந்துஒன்றானானால்
நவமான வேதாந்தம் ஞானசித் தாந்தமே.

வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டு அந்தங்களும் சீவன் சிவன் ஆகும் வழியினை உரைக்கும். மற்ற நான்கு அந்தங்களும் வியர்த்தமானவை. சதாசிவன் ஆனைப் படித்த தத்தம் தொழில்களை இயற்றுகின்றனர் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன் ஆகிய தெய்வங்கள். இவர்கள் தொழில்கள் முடிவுற்றுச் சதாசிவனும், சிவமும் ஒன்றானால் அப்போது வேதாந்தமும், சித்தாந்தமும் ஞானம் தரும்.

#2394. சிந்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே

சித்தாந்த தேசீவன் முத்திசித் தித்திலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்திவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சிந்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே.

சைவ சித்தாந்தத்தில் சீவனுக்கு முக்தி நிலை சித்திக்கும். அதனால் சைவ சித்தாந்தத்தில் நிற்பவர் முத்தி நிலை என்னும் சிவகதியைச் சென்று அடைவர். சித்தாந்தமும், வேதாந்தமும் சிவனையேக் காட்டுவதால் சித்தாந்தமும், வேதாந்தமும் உயரிய செம்பொருட்கள் ஆகும்.

#2395. தவமிக்கு உணர்ந்தவர் தத்துவத்தாரே

சிவனைப் பரமனுள் சீவனுள் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்தம் ஆனால்
நவமுற்று அவத்தையில் ஞானம் சிவமாம்
தவமிக்கு உணர்ந்தவர் தத்துவத் தாரே.

குற்றமற்ற வேதாந்தமும், சித்தாந்தமும் செப்புவது இது:

தத்துவங்களைப் பற்றாமல் பரமாக விளங்கும் ஆன்மாவின் உள்ளேயும் வெளியிலும் உறைகின்றது சிவன். ஆன்மாவின் துரியாதீத நிலையில் உதிக்கும் ஞானமே சிவம் ஆம். இந்தச் சிவஞானத்தை உணர்ந்து கொண்டவர் சிறந்த தத்துவ அறிவு கொண்டவர் ஆவர்.

#2396. சிவ சாயுச்சியம்

தத்துவம் ஆகும் சகள அகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதம் சதாசிவம்
தத்துவ மாகும் சீவன் தன் தற்பரம்
தத்துவ மாம்சிவ சாயுச் சியமே.

உருவம் உடையனவாகவும், உருவம் அற்றவைகளாகவும் உள்ளன ஆன்மாவின் முப்பத்தாறு தத்துவங்கள். விந்து, நாதம், சதாசிவம் இவைகளும்

தத்துவங்களே. ஆன்மாவின் நாதாந்த நிலையில் உள்ளது தற்பரம் என்னும் மெய்ப்பொருள். இதனை அடைவதே சிவசாயுச்சியம் என்னும் உயர்ந்த முக்தி நிலை ஆகும்.

#2397. பெரியோருக்கு இரண்டும் அபேதமே

வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும்என்று உள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே.

வேதங்களும், ஆகமங்களும் இறைவன் அருளியவை என்பது முற்றிலும் உண்மை. வேதம் பொதுவானதாக உள்ளது. ஆகமம் சிறப்பானதாக உள்ளது. அவற்றின் முடிவுகள் வேறு வேறு என்று சிலர் மொழிவர். ஆனால் தத்துவத்தை உணர்ந்த பெரியோருக்கு அவற்றில் எந்த வித பேதமும் காணப்படாது

#2398. உள்ளம் பூரிக்கும் ஆனந்தம்

பராநந்தி மன்னும் சிவானந்தம் எல்லாம்
பரானந்தம் மேல்மூன்றும் பாழுறா ஆனந்தம்
விராமுத்தி ரானந்தம் மெய்நடன ஆனந்தம்
பொராநின்ற உள்ளமே பூரிப்பி யாமே.

பரம் என்னும் நிலையை அடைந்துவிட்ட ஆன்மா அனுபவிக்கும் உயரிய ஆனந்தம் எல்லாம் சிவானந்தம் ஆகும். பாழாகிய மாயையில் பொருந்தாத ஆன்மா பெறும் ஆனந்தம்; பொருத்தமான சாம்பவி, கேசரி முதலிய முத்திரைகளால் விளையும் ஆனந்தம்; சிவ நடனத்தைத் தனக்குள்ளே கண்டு களிப்பதால் உண்டாகும் ஆனந்தம்; இவை அனைத்துமே ஆன்மாவை இன்பக் களிப்பில் ஆழ்த்துகின்ற சிவானந்தமே.

#2399. சிவன் என்னும் பஞ்சாந்தகன்

ஆகுங் கலாந்தம் இரண்டந்த நாதாந்தம்
ஆகும் பொழுதிற் கலைஐந்தாம் ஆதலில்
ஆகும் அரனேபஞ் சாந்தகன் ஆம் என்ற
ஆகும் மறைஆ கமம்மொழிந் தான்அன்றே?

கலாந்தம், நாதாந்தம் என்னும் இரண்டும் மாறுபட்ட அந்தங்கள். கலாந்தம் என்பது மேதை முதலிய சோடச கலைகளையும், நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளையும் பற்றியது. நாதாந்தம் பிரணவத்தின் ஐந்து உறுப்புகளைப் பற்றியது. சிவனே பிரணவமாகப் பொருந்தி அவற்றை ஒன்றாக்குகி விடுகின்றான். ஐந்து

வேறுபட்ட உறுப்புக்களை (அ + உ + ம் + விந்து + நாதம்) முடிவுக்கு கொணர்ந்து, பிராணவமாக ஒன்றாக்குவதால் சிவன் 'பஞ்சாந்தகன்' என்று வேதங்களிலும், ஆகமங்களிலும் பேசப்படுகின்றான்.

#2400. மன்றாடி பாதம் மருவலும் ஆமே.

அன்றாகும் என்னாதுஜ வகைஅந்தம் தன்னை
ஒன்றான வேதாந்த சித்தாந்தம் உள்ளிட்டு
நின்றால் யோகாந்தம் நேர்படும் நேர்பட்டால்
மன்றாடி பாதம் மருவலும் ஆமே.

கலாந்தத்தை எதிர்நோக்கி விருதே காலத்தைக் கழிக்க வேண்டா. வேதாந்த, சித்தாந்தங்கள் நெறியில் நிற்க. அவை உம்மை யோகாந்தத்துக்குக் கொண்டு செல்லும். அங்கே யோகத்தின் முடிவாகிய சமாதி நிலையில் மன்றில் ஆடும் மதியணி நாதனின் திருவடிகளை அடையலாம்.

#2401. சீவன் சிவம் ஆகிவிடும்

அனாதி சீவன்ஐம் மலமற்றுஅப் பாலாய்
அனாதி அடக்கித் தனைக்கண்டு அரனாய்த்
தனாதி மலம்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த உண்மையே.

அநாதியாகிய சீவன் அரன் திருவடிகளை பொருந்தும் போது அதன் ஐந்து மலங்களும் அழிந்து போகும்; ஆன்மாவின் அனாதியாகிய சுட்டறிவு மறைந்து விடும், தன் உண்மைநிலை ஆன்மா அறிந்து கொள்ளும், சிவவடிவம் பெறும். ஆன்மாவின் ஆதிமலம் ஆகிய ஆணவம் அழிந்தவுடன், அனைத்துத் தத்துவங்களையும் கடந்த ஆன்மா பாலுடன் சேர்ந்த நீரும் பாலாவது போலச் சிவத்துடன் சேர்ந்த சீவனும் சிவன் ஆகிவிடும்.

#2402. வேதாந்த சித்தாந்தம் ஆகும்

உயிரைப் பரனை உயிர்சிவன் தன்னை
அயர்வற்று அறிதொந் தத்தசி அதனால்
செயலற்று அறிவாகி யும்சென்று அடங்கி
அயர்வற்ற வேதாந்த சித்தாந்தம் ஆமே.

உம் உயிரை அறிமின்; நம் பரனை அறிமின்; நம் சிவனை அறிமின்; 'நான் அதுவாக ஆனேன்' என்ற வாக்கியத்தின் பொருளை அறிமின்; சுட்டறிவு அழிந்து பேரறிவுடன் ஒன்றி அடங்கி இருப்பதே அயர்வு இல்லாத வேதாந்த சித்தாந்தம் என்று அறிமின்.

#2403. மறை ஆய் பொருள் ஆகமம் ஆம்

மன்னிய சோகமாம் மாமறை யாளர்தம்
சென்னிய தான சிவயோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே.

ஸோஹம் (ஸ: + அஹம்) "அவன் நான்!" என்ற பாவனை மறையாளர்கள் பின்பற்றும் சீரிய சிவயோகம். சித்தாந்தம் சாதகனைப் பாவனை செய்யும்படிச் சொல்வதும் இதுவே ஆகும். வேதங்கள் ஆராய்ந்த விழுப் பொருளைக் கூறுவது ஆகமம் என்பது இதனால் நன்கு விளங்கும்.

#2404. வேதமே வேதாந்த, சித்தாந்தமானது

முதலாகும் வேத முழுதுஆ கமம்அகப்
பதியான ஈசன் பகர்ந்தது இரண்டு
முதிதான வேதம் முறைமுறை யால்அமர்ந்து
அதிகாதி வேதாந்த சித்தாந்தம் ஆகவே.

காலத்தால் முற்பட்டவை வேதங்கள். முழுமையானவை ஆகமங்கள். இவை இரண்டுமே ஆன்மாக்களின் தலைவன் ஆகிய அரன் அருளியவை. வேதமே மெல்ல மெல்ல உருமாறி வேதாந்தமாகவும், சித்தாந்தமாகவும் இரு வேறு அந்தங்களாக ஆனது.

எட்டாம் தந்திரம் -
16. பசு, பதி, பாசம்

பதி, பசு, பாசம் இவற்றின் தொடர்பு.

பதி = இறைவன் = சிவன்
பசு = உயிர் = சீவன்
பாசம் = தளை = பந்தம்

#2405. பதி பசுவில் பதியில் பிறப்பறும்

அறிவுஅறிவு என்ற அறிவும் அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியில் பிறப்பறுந் தானே.

அறிவு என்று கூறப்படும் ஆன்மா (பசு) மிகவும் பழமையானது.
ஆன்மாவின் தலைவன் ஆன சிவன் (பதி) மிகவும் பழமை ஆனவன்.
ஆன்மவைப் பிணித்துள்ள பாசம் (தளைகள்) மிகவும் பழமையானவை.
பதி பசுவிடம் விளங்குமானால் பாசம் அகன்று விடும்.
பிறவிப் பிணி தொலைந்து விடும்.

#2406. பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம்மூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கிஅப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

பிரம்மன் முதலான பசுக்கள் பல கோடி உண்டு. அந்தப் பசுக்களைக் கட்டியுள்ள பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று. பாசத்தை அறுத்து விட்டுப் பசுத் தன்மையை நீக்கினால் அந்தப் பசுக்கள் பதியாகிய தலைவனைப் விடாமல் பற்றி நிற்கும்.

தெய்வங்களும் அவர்களின் மலங்களும்

சதாசிவன் ....ஆணவம் மட்டும்
மகேசுரன்............ஆணவம் + திரோதாயீ
உருத்திரன்..........ஆணவம் + திரோதாயீ + கன்மம்
திருமால்............ஆணவம் + திரோதாயீ + கன்மம் + மாயை
நான்முகன் ....ஆணவம் + திரோதாயீ + கன்மம்+ மாயை + மாயேயம்.

#2407. குன்றில் இட்ட விளக்கது வாமே.

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடோ றும் நோக்கித்
தொடக்குஒன்றும் இன்றித் தொழுமின் தொழுதால்
குடக்குன்றில் இட்ட விளக்கது வாமே.

பாசத்தால் கட்டுண்டபோதும் பசுக்கள் காமியத்தோடு செய்யும் சரியை, கிரியை யோகம் என்பவற்றால் அவைகள் சாலோகம், சாமீபம், சாரூபம் என்ற மூன்று விதப் பயன்களை அடைய முடியும். இவற்றின் முடிவாகிய ஞானம் பெறுவதற்கு நாள் தோறும் பற்று இல்லாமல் தியானம் செய்யுங்கள். அப்போது குடத்தில் உள்ள விளக்கை எடுத்துக் குன்றின் மேல் வைத்தது போன்ற சிறந்த ஞானத்தை அடைவீர்கள்.

#2408. வாசம் செய் பாசத்துள் சிக்குண்ட சீவன்

பாசம்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசம்செய்து ஆங்கே நினைப்பர் நினைத்தாலும்
கூசம் செய்து உன்னிக் குறிக்கொள்வது எவ்வண்ணம்
வாசம்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே

விரிசடையுடைய சிவன் என்னும் தலைவனே சீவனுடன் பாசத்தைப் பொருந்தி உள்ளவன். ஞானியர் அவனிடம் நேசம் கொண்டு அவனையே எப்போதும் சிந்தையில் எண்ணுவர். அங்ஙனம் நினைத்துத் தியானத்தில் மூழ்குபவர் மீண்டும் எங்கனம் பாசத்தை எண்ணிப் பார்க்க முடியும்?பண்டு தொட்டு சீவனை வாசனையாகத் தொடர்ந்து வந்துள்ள பாசத்தில் சீவனை மீண்டும் விடுவது எங்கனம்?

#2409. நனவில் அதீதத்துள் தோன்றுமே.

விட்ட விடம்ஏறா வாறுபோல் வேறாகி
விட்ட பசுபாசம் மெய்கண்டோ ன் மேவுறான்
சுட்டிய கேவலம் காணும் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்துள் தோன்றுமே.

மந்திரத்தால் நீக்கப் பட்ட விடம் கடிபட்டவனின் உடலில் மீண்டும் ஏறாது. அது போன்றே மெய்யறிவு பெற்றுப் பசுத் தன்மையையும் பாசத் தன்மையையும் நீக்கிவிட்ட ஒருவன் மீண்டும் அவற்றோடு பொருந்த மாட்டான். கேவல அவத்தையிலும், சகல அவத்தையிலும் தன்னைப் பிணித்திருந்த பாசத் தளைகளை அவன் சுட்டெரிடத்து விட்டு விழிப்பு நிலையின் துரியாதீதத்தை அடைவான்.

#2410. நந்தி அளித்த பசுபாச நீக்கம்

நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமாம் நித்தன் நிலையறி வார்இல்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி அளித்ததே.

நாம் நாடுகின்ற பதியாகிய சிவன் நித்தியன். அது போன்றே சீவனின் பசுத்தன்மையும் பாசத்தன்மையும் நித்தியமானவை. நித்தியமான சிவனின் உண்மையான மேன்மையை அறிந்தவரெவருமில்லை. தன்னை நாடும் அன்பர்களின் பசுத் தன்மையையும் பாசத் தன்மையையும் நேசத்துடன் நீக்குவது ஈசனின் அருட்பார்வையே ஆகும்.

#2411. ஆய பதி அருட் சிவலிங்கம்

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே.

அருட்சிவ லிங்கம் என்பது ஆலயத்தின் மூலத் தானத்தில் இருக்கும் சிவ லிங்கம் ஆம். அங்கு நிற்கும் வலிய இடபம் பசு என்னும் சீவன் ஆகும். அங்குள்ள பலி பீடமே பாசம் ஆகும். இந்த உண்மை சிவாலயத்தை ஆராய்ந்து நோக்கினால் நன்கு தெளிவாகும்.

#2412. பதி, பசு, பாசம் பயில நில்லாவே.

பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க்கு ஆறாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே.

பதியாகிய சிவன் நமக்கு நித்தமும் பசு, பாசம் பற்றிப் பயில்விக்கின்றான்.
பதியாகிய சிவன் பசு, பாசம் பற்றி ஆராய்பவர்களுக்கு வழி காட்டுகின்றான்.
பதியாகிய சிவன் பாசத் தன்மையையும், பசுத் தன்மையையும் கெடுப்பான்.
பதியாகிய சிவனைத் தியானித்தால் பசுத் தன்மையும், பாசத் தன்மையும் நில்லாவே.

#2413. வைத்தனன் சுத்த சைவத்திலே.

பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமும் காட்டி
மதிதந்த ஆனந்த மாநந்தி காணும்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே.

பதியாகிய சிவனையும், பசுவாகிய சீவனையும், பாசமாகிய சீவனின் மலங்களையும், சீவன் அடைய வேண்டிய மேலான முக்தி நிலையினையும், பசுத்தன்மை பாசத் தன்மைகளை நீக்கும் வழியினையும், நாம் அறியும் வண்ணம் சுத்த சைவ நூல்களிலே அமைத்துத் தந்தான் மதியணியும் ஆனந்த மாநந்திப் பெருமான்.

#2414. பதி படைப்பான் அங்கு அவற்றையே

அறிந்தணு மூன்றுமே யாங்கணும் ஆகும்
அறிந்தணு மூன்றுமே யாங்கணும் ஆக
அறிந்த அனாதி வியாத்தனும் ஆவன்
அறிந்த பதிபடைப் பான்அங்கு அவற்றையே.

அறிவு செறிந்த சீவர்கள் மூவகைப் படுவர். அவர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலார், சகலர் எனப்படுவர். இத்தகைய சீவன்கள் உலகம் முழுவதும் நிறைந்துள்ளனர். அவர்களில் ஈசன் நிறைந்துள்ளான். சீவன்களின் பக்குவத்தை அறிந்த சிவன் அவற்றின் தகுதிக்கு ஏற்ப அவற்றைப் படைக்கின்றான்.

#2415. படைப்பின் ஆதி இதுவே

படைப்புஆதி யாவது பரம்சிவம் சத்தி
இடைப்பால் உயிர்கட்கு அடைத்துஇவை தூங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரன் செய்யப்
படைப்பாதி தூய மலம்அப் பரத்திலே.

படைப்பின் ஆதியில், பரம்பொருள் சிவசக்தியரைச் சீவனுடன் பொருத்தி விடும். அதைக் க் கேவல உறக்கத்தில் ஆழ்த்தும். சீவனின் சூக்குமதில் மாயை கலந்து அதனை எழுப்பி விடும். அதன் பின்பு சுத்த மாயை சீவனுடன் மலங்களைக் கலந்து விடும்.

#2416. ஐங்கருமம் செய்வோன் ஈசானன்

ஆகிய சூக்கத்தை அவ்விந்து நாதமும்
ஆகிய சத்தி சிவபர மேம்ஐந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கரு மம்செய்வோன்
ஆகிய தூயஈ சானனும் ஆமே.

இந்த நுண்மையான உடலில் ஈசானன்; அருவத்தில் உள்ள விந்து, நாதம், சக்தி, சிவம், பரம் என்பவற்றின் மூலம் சூக்குமமாகிய ஐந்து தொழில்களை செய்கின்றான். ஐந்து தொழில்கள்: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், துடைத்தல்.

#2417. படைப்போன் அரனே!

மேவும் பரசிவம் மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன் வேறுஈசன்
மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி
ஆகும் படிபடைப் போன்அர னாமே.

மேவும் பரசிவம், சக்தி, நாதம், பரவிந்து, ஐந்து முகங்களை உடைய சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், பிரம்மன் என்று ஒன்பது நிலைகள் விளங்கும்படிப் படைப்பவன் அரன் ஆகிய சிவனே!

#2418. அரன் ஆற்றும் ஐந்தொழில்கள்

படைப்பும் அளிப்பும் பயில்இளைப் பாற்றும்
துடைப்பும் மறைப்பும்முன் தோன்ற அருளும்
சடத்தை விடுத்த அருளும் சகலத்து
அடைத்த அனாதியை ஐந்தென லாமே.

படைத்தல், காத்தல், இளைப்பாறும் பொருட்டு அழித்தல், மறைத்தல், துடைத்தல் என்னும் ஐந்தொழில்கள் செய்வதோடு நின்றுவிடாமல் சிவன் ஆன்மா வாழும் போதும் அருளுகின்றான். ஆன்மா உடலைத் துறந்த பின்பும் அருளுகின்றான். அநாதியாகிய சிவபிரான் சகல நிலையில் இருக்கும் ஆன்மாவுக்கு இவை அனைத்தையும் செய்கின்றான்.

#2419. பதியால் பசு பாசம் விடும்

ஆறாறு குண்டலி தன்னின் அகத்திட்டு
வேறாகு மாயையில் முப்பால் மிகுத்திட்டுஅங்கு
ஈறாம் கருவி இவற்றால் வகுத்திட்டு
வேறாம் பதிபசு பாசம்வீ டாகுமே.

சிவபெருமான் முப்பத்தாறு தத்துவங்களுக்கும் குண்டலினி சக்தியுடன் தொடர்பை ஏற்படுத்தினான். ஆன்மாவிலிருந்து வேறாகிய மாயையில் சிவத்துவம், வித்தியா தத்துவம், ஆன்ம தத்துவம் என்ற மூன்று பகுதிகளை பொருத்தினான். ஆன்ம தத்துவத்தில் ஆன்மாவுக்குத் தேவையான கருவிகளைப் பொருத்தினான். இந்தப் பதியின் பாதங்களை பற்றிக் கொள்ளும் பசு அதைப் பிணித்திருந்த பாசத்திலிருந்து மீளும்.

#2420. 'நான்' என்னும் நற்பாசம் நண்ணும்

வீட்கும் பதிபசு பாசமும் மீதுற
ஆட்கும் இருவினை ஆங்குஅவற் றால் உணர்ந்து
தாட்கு நரசு சுவர்க்கத்தில் தானிட்டு
நாட்குற நான்தங்கு நற்பாசம் நண்ணுமே.

பதியாகிய சிவன் பசுவாகிய ஆன்மாவைப் பாசத்தில் கொண்டு வீழ்த்தும். ஆன்மாவுக்குப் பந்தங்களில் விருப்பம் உண்டாகச் செய்யும். ஆன்மாவை இருவினைளைப் புரியத் தூண்டும். அந்த வினைப் பயன்களாக ஆன்மா பெறுகின்ற

பாவம் புண்ணியம் இவற்றைக் கழிக்க ஆன்மாவை நரகம் சுவர்க்கம் இவற்றில் செலுத்தும். இறுதியில் ஆன்மாவிடம் 'நான்' என்னும் ஆணவம் மட்டுமே மிகுந்து இருக்கும்.

#2421. அண்ணல் அடிசேர் உபாயம்

நண்ணிய பாசத்தில் நான்எனல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டல் பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள்
அண்ணல் அடிசேர் உபாயமது ஆகுமே.

ஆன்மாவுடன் பொருந்தியுள்ள பாசத்தால் ஆன்மா தன் கருவிகளுடன் கூடி இருந்து அவற்றையே தான் என்று எண்ணுவது ஆணவம். ஆன்மாவை மாயையுடன் பொருத்தி வைத்துள்ளான் சிவன். ஆன்மா அறிவு பெறும் போது ஆணவத்தின் வலிமை குறையும். சிவன் பேரருள் ஆன்மாவை அவன் அடிகளில் கொண்டு சேர்க்கும்.

#2422. மோகம் அறச் சுத்தன் ஆக்கும்

ஆகும் உபாயமே யன்றி அழுக்கற்று
மோசு மறச்சுத்தன் ஆதற்கு மூலமே
ஆகும் அறுவை அழுக்கேற்றி ஏற்றல்போல்
ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே.

அத்தன் அருள் அவன் அடிகளை சென்று அடையும் ஓர் உபாயம் மட்டும் அல்ல. அவன் அருள் ஆன்மாவின் ஆணவத்தையும் ஆசைகளை அறவே அழிக்கின்றது. ஆன்மாவைத் தூய்மையாக்குகின்றது. அழுக்கு உவர் மண்ணைச் சேர்த்து அழுக்குத் துணிகளைத் துவைத்து வெளுக்கச் செய்வது போன்றே ஆன்மாவுடன் ஈசன் பாசத்தைச் சேர்ப்பது அதனைப் பற்றியுள்ள பாசத்தை அகற்றுவதற்கே ஆகும்.

#2423. பாசம் பயிலப் பதிபசு வாகுமே

பாசம் பயிலுயிர் தானே பரன்முதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலால்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே

பதியின் மீது பாசம் கொண்ட ஆன்மா பரம் என்ற நிலையை அடைகின்றது. பசுவின் மீது பாசம் கொண்ட ஆன்மா உலகை இயலில் ஆழ்கின்றது. பதி பாசத்தில்

நிலையாக நின்று பரம் ஆகும் பசு (ஆன்மா) இறுதியில் பசுபதியாகவே ஆகி விடுகின்றது.

#2424. தம்மை அடைந்து நின்றாரே.

அத்தத்தில் உத்தரம் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி
அத்தத்தி னாலே அணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை அடைந்து நின்றாரே.

சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனாதனர் என்ற அருந்தவ முனிவர்கள் தட்சிணா மூர்த்தியிடம் வேதத்தின் பொருளை வினவினர். பெருமான் சுட்டு விரலுடன் கட்டைவிரலைச் சேர்த்து ஞான முத்திரையினால் வேதப் பொருளை உணர்த்தினார். அருந்தவ முனிவர்கள் அண்ணலின் காலடிகளை அணையப்பற்றி வேதப் பொருளை உணர்ந்து கொண்டு தம் உண்மை வடிவில் ஒளியுடன் நின்றனர்.

கட்டை விரல் => சிவன்
சுட்டு விரல் => ஆன்மா
மற்ற மூன்று விரல்கள் => ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள். ஆன்மா மும்மலங்களை விலக்கிச் சிவனுடன் இணைந்தால் அப்போது தூய ஞானம் விளையும்.

எட்டாம் தந்திரம் -
17. அடி தலை அறியும் திறன்

அடி தலை அறியும் திறன் கூறல்
திருவடிகளைத் தலையில் உணரும் திறனைக் கூறுவது.

#2425. ஞானத்தைக் காட்ட வீடாகுமே

காலும் தலையும் அறியார் கலதிகள்
கால்அந்தச் சத்தி அருள்என்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலைஉயிர்
கால்அந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே.

வீணர்கள் “கால் எது? தலை எது?” என்று உண்மையை அறியார். ‘கால்’ என்பது குண்டலினி சக்தி. மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தி அன்னை சக்தியின் அருள் ஆகும். தலை என்பது ஒளி வீசுகின்ற ஞானத்தின் உறைவிடம். மூலாதாரத்தில் உள்ள குண்டனிலி சக்தி சுழுமுனை வழியாகத் தலை உச்சியை

அடைந்து அங்கு நாதத்தை உதிக்கச் செய்து ஞானம் ஆகிய சிவனைக் காட்டினால் ஆன்மா வீடுபேறு அடையும்.

#2426. தலை உச்சியில்; மூலம் அடியில்!

தலைஅடி யாவது அறியார் காயத்தில்
தலைஅடி உச்சியில் உள்ளது மூலம்
தலைஅடி யான அறிவை அறிந்தோர்
தலைஅடி யாகவே தான்இருந் தாரே.

உடலில் 'அடி' எனப்படும் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி, தலைக்குச் சென்று அங்கு பொருந்துவதை அறிவிலிகள் அறியார். தலை உள்ளது உச்சியில். மூலம் உள்ளது அடியில். மூலத்தில் உள்ள குண்டலினி சக்தி தலையைச் சென்று அடைவதை அறிந்து கொண்டவர் ஞானியர். அவர்கள் பேரறிவு படைத்தவர்கள்.

#2427. நந்தி தாள் இணை என் தலைமிசை ஆனதே

நின்றான் நிலமுழுது அண்டமும் மேலுற
வன்தாள் அசுரர் அமரரும் உய்ந்திடப்
பின்தான் உலகம் படைத்தவன் பேர்நந்தி
தன்தாள் இணைஎன் தலைமிசை ஆனதே.

மண்ணும், விண்ணும், உள்ளும், புறமும், இங்கு அங்கு என்னாதபடி எங்கும் கலந்து நிற்பவன் சிவன். எண்ணில்லாத அண்டங்களில் வாழுகின்ற வானவர், தானவர் உய்யும்படி அவன் உலகங்களைப் படைத்தான். நந்தி என்னும் அந்தப் பெருமான் தன் இரு திருவடிகளை என் தலை மீது பதித்தான்.

#2428. சிந்தையின் உள்ளே எந்தைத் திருவடி

சிந்தையின் உள்ளே எந்தை திருவடி
சிந்தையின் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை அறியகி லான்ஆகில்
எந்தையை யானும் அறியகி லேனே.

என் சிந்தையின் உள்ளே எந்தை சிவனின் திருவடிகள் உள்ளன. என் மனமும் அவன் திருவடிகளைப் பற்றியே நிற்கின்றது. என்னை அறிந்து கொண்டு, எந்தை சிவன் எனக்குத் தன்னை உணர்த்தாவிடில், நானும் எந்தை சிவனை அறியாமல் இருந்திருப்பேன்!

#2429. நாயகன் கழலிணைச் சூட்டி நின்றேன்

பன்னாத பாரொளிக்கு அப்புறத்து அப்பால்
என்நா யாகனார் இசைந்தங்கு இருந்திடம்
உன்னா ஒளியும் உரைசெய்யா மந்திரம்
சொன்னான்கழலிணை சூட்டிநின் றேனே.

என் தலைவன் ஆகிய சிவன் விரும்பி உறைகின்ற இடம் சொல்வதற்கு அரிய, ஒளி வீசுகின்ற, ஆறு ஆதாரங்களுக்கு அப்பால் உள்ள பரமாகாயம் ஆகும். எண்ண இயலாத ஞான ஒளியையும், சொல்ல இயலாத பிரணவ மந்திரத்தையும் அவன் எனக்கு உணர்த்தினான். நான் அவன் இருக்கழல்களை என் தலை மேல் சூட்டி நின்றேன்.

#2430. மலர் பதம் ஓதுமின்

பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பதம் ஓதும்
நதிபொதி யும்சடை நாரியோர் பாகன்
கதிசெயும் காலங்கள் கண்டுகொ ளீரே.

'பதி' என்பதன் பொருள் விளங்கும் இடமாகிய தலை மேல் உங்கள் உள்ளத்தை பதியுங்கள். திங்கள் கலையை விளங்காச் செய்யும் அவன் மலர்ப்பாதங்களை ஓதுங்கள். பொங்கும் கங்கையைத் தன் சடையில் பொதிந்துள்ள மாதொரு பாகன் உங்களுக்கு முத்தியை அளிப்பான். அவனை வழிபடுவதற்கு உகந்த காலத்தைக் கண்டு கொண்டு அவனை வழிபடுங்கள்.

#2431. சிந்தை பரித்து நின்றான்.

தரித்துநின்றானடி தன்னிட நெஞ்சில்
தரித்து நின்றான் அமராபதி நாதன்
கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் றான்அப் பரிபாகத் தானே.

அமராபதிநாதன் தன் திருவடிகளை இடையறாது நெஞ்சில் தரித்து இருப்பவர்களின் உள்ளத்தில் தன் திருவடிகளை நன்கு பதித்து நிற்பான். தன்னை சிந்தையில் கொள்ளாதவர்களை அவன் வெறுத்து அவர்கள் உள்ளத்தில் ஒளிந்து கொண்டு இருப்பான். இங்கனம் ஆன்மாக்களின் பக்குவத்துக்கு ஏற்ப தன் அருளைத் தருபவன் ஆன்மாக்களைப் பரித்து நிற்கும் அந்தப் பரிபாகத்தான்.

#2432. இன்றே சென்று ஈசனை எய்தலும் ஆமே.

ஒன்றுண்டு தாமரை ஒண்மலர் மூன்றுள
தன்தாதை தாளும் இரண்டுள காயத்துள்
நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய வல்லார்கட்கு
இன்றேசென்று ஈசனை எய்தலும் ஆமே.

உடலில் சகசிரதளத்தில் உள்ள தாமரை மலரில் நம் தந்தையாகிய சிவன் விளங்குவான். அவனை அங்கே வழிபடுவதற்குத் திங்கள், கதிரவன், அக்கினி என்ற மூன்று கண்கள் உள்ளன. அவனை வழிபடுவதனால் விந்து நாதம் என்னும் அவன் இரு திருவடிகள் விளங்கும். தன் உடலை யோகப் பயிற்சியால் காய்ச்சி பதம் செய்து புடம் இட்டவர்கள் எந்தை சிவனை இன்றே காண இயலும்.

#2433. செம்மை விளம்ப ஒண்ணாது

கால்கொண்டுஎன் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட என்னைப் பரன்கொள்ள நாடினான்
மேல்கொண்டென் செம்மை விளம்ப ஒண்ணாதே.

என் சென்னி மீது எந்தை தன் அடிகளை பதிக்கப் பதிக்க என் தளைகள் கட்டறுந்து விட்டன. உலக விஷயங்களில் ஆர்வம் கொண்டு மயக்கம் அடைந்திருந்த என் நெஞ்சத்தின் மயக்கமும் தளர்ச்சியும் நீங்கிவிட்டன. வெண்ணிற ஒளியைப் பற்றிக் கொண்ட என்னை ஆட்கொள்ளச் சிவன் மனம் கனிந்தான். அதனால் நான் அடைந்த மேலான பலன்களை என்னால் செப்பவும் இயலாதே !

#2434. செய்கைக்கு எய்தின செய்யுமே

பெற்ற புதல்வர்போல் பேணிய நாற்றமும்
குற்றமுங் கண்டு குணங்குறை செய்யவோர்
பற்றைய ஈசன் உயிரது பான்மைக்குச்
செற்றமி லாச் செய்கைக்கு எய்தின செய்யுமே.

பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் கொண்டுள்ள தொடர்பை விரும்புவர். அவர்கள் தங்கள் குழந்தைகளின் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்கள் குணங்களைக் கொண்டாடுவர். இறைவனும் அவ்வண்ணமே ஆன்மாக்களின் பான்மைக்கும் தன்மைக்கும் ஏற்பத் தன் அருளை பொழிவான்.

எட்டாம் தந்திரம் -
18. முக்குற்றம்

காமம், வெகுளி, மயக்கம் என்ற ஆன்மாவின் மூன்று குற்றங்கள்.

#2435. மூன்றினுள் பட்டு முடிவார்!

மூன்றுள குற்றம் முழுதும் நலிவன
மான்றுஇருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுள் பட்டு முடிகின்ற வாறே.

ஆன்மாவிடம் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங்கள் பொருந்தியுள்ள. அவை மிகவும் வலிமை வாய்ந்தவை. அவை ஆன்மாவுக்குத் துன்பத்தைத் தருபவை. இம் மூன்று குற்றங்களின் விளைவாக ஆன்மா தன் உண்மை வடிவை உணராமல், மாயையின் காரியமாகிய அறியாமை என்னும் இருளில் அழுந்தியுள்து . காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங்களில் இருந்து விடுதலை அடைந்தவர்கள்; பிறப்பு, இறப்பு என்று மாறி மாறி வரும் பிணியிலிருந்து விடுதலை அடைவர். இந்த மூன்று குற்றங்களை நீக்காதவர்கள் மாயையில் சிக்கித் துன்புறுவார்கள்.

#2436. ஓம் என்ற ஓசையின் உள்ளே உள்ள தாமம்

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்து
ஏமம் பிடித்திருந் தேனுக்கு எறிமணி
ஓமெனும் ஓசையின் உள்ளே உறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்ட வாறே.

என்னைப் பிணித்து இருந்த காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் களைந்துவிட்டு, என்னைப் பாதுகாக்கும் எந்தைத் திருவடிகளை நான் சிக்கெனைப் பிடித்திருந்தேன். மணியோசை போன்ற பிரணவத்தின் உள்ளே உறையும் ஒளியை நான் கண்டு கொண்டேன்.

எட்டாம் தந்திரம் -
19. முப்பதம்

மூன்று பதங்கள்:
அவை தத் பதம், தொம் பதம், அசி பதம் என்பவை.

#2437. மாளச் சிவமாய் இருக்குமே.

தோன்றிய தொம்பதம் தற்பதம் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோடு எய்தினோன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
ஏன்றனன் மாளச் சிவமாய் இருக்குமே.

தொம்பதம் (த்வம் பதம்) "நீ" என்னும் பதம், அதைச் சுற்றியுள்ள தற்பரம் (தத் பதம்) "அது" என்னும் பதம் இவற்றுடன் அசிபதம் (ஆகின்றாய்) என்ற பதம் இந்த மூன்றுடனும் நன்றாகப் பொருந்தியவன் பிறவியை நீக்கி அகண்ட சிவம் ஆகி விடுவான். இங்கனம் விடுதலை பெற்றவன் என்றென்றும் அழியாத சிவமாகவே ஆகிவிடுவான்.

#2438. வேதம்சொல் தொம்பதம் மெய்ம்மையே.

போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற்றியில் கைவிட்டு
வேதம்சொல் தொம்பத மாகுதல் மெய்ம்மையே.

போதத்தை அடைய விரும்புங்கள்! பஞ்ச பூதங்களையும், உடலில் உள்ள தொண்ணூற்றாறு கருவி பேதங்களையும் துறந்து விடுங்கள். நாதாந்த நிலையையும் கடந்து மேலே செல்லுங்கள். வேதங்கள் கூறும் "த்வம் பதம்" அங்கு இருப்பது மெய் என்று நீங்கள் உணருவீர்கள்.

#2439. கற்பனையின்றிக் கலந்து நின்றானே.

தற்பதம் என்றும் துவம்பதம் தான்என்றும்
நிற்பது அசியத்துள் நேரிழை யாள்பதம்
சொற்பதத் தாலும் தொடரஒண் ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே.

'தத் பதம்' என்பதும் 'த்வம் பதம்' என்பதும் ஒன்றாகப் பொருந்தும் நிலையே அசி பதம் ஆகும். இதில் இருப்பவள் நேரிழையாள் ஆகிய சக்தி அன்னை. சொற்பதத்தைக் கடந்தவன் சிவபெருமான் என்றாலும் 'அசி' பதத்தில் அவன் வெறும் கற்பனையாக இல்லாமல் உண்மையாகவே கலந்து நிற்கின்றான்.

#2440. பால், தேன், அமுதின் கலவை

அணுவும் பரமும் அசிபதத்து ஏய்ந்து
கணுஒன் றிலாத சிவமும் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்
துணையது வாயுரை யற்றிடத் தோன்றுமே.

உயிரும், பரமும் பிரிவின்றி ஒன்றாக அசி பதத்தில் பொருந்தும்போது, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிவனும் அங்கு வந்து அவற்றுடன் கலந்தால்; அந்த நிலை பாலும் தேனும் அமுதமும் ஒன்றாகக் கலந்து போல உணர்வினைத் தந்து; வாய்ச் சொற்கள் பேசாத உயர்ந்த மௌன நிலையை நிகழ்த்தும்.

எட்டாம் தந்திரம் -
20. முப்பரம்

முப்பரம் = மூன்று பரம்.

அக்னி மண்டலம், கதிரவ மண்டலம், சந்திர மண்டலம் என்பவற்றில் ஆன்மா நிற்கும் நிலை.

#2445. இளங்கொடி நலந் தருமாறே

தோன்றிஎன் உள்ளே சுழன்றுஎழு கின்றதோர்
மூன்று படிமண் டலத்து முதல்வனை
ஏன்றெய்தி இன்புற்று இருந்தே இளங்கொடி
நான்று நலம்செய் நலந்தரு மாறே.

என் உடலில் இயற்கையாகவே சுற்றி எழுகின்றன கதிரவன், திங்கள், அக்கினி என்பவற்றின் மூன்று மண்டலங்கள். இவற்றில் அனைத்துக்கும் முதல்வனான சிவன் விளங்குகின்றான். அவனை அடைந்து நான் ஆனந்தத்தில் அமிழ்திருந்தேன். இளங் கொடியாகிய குண்டலினி சக்தியையும் அவள் அருளை பெறுவதற்காக நான் விடாமல் பற்றிக் கொண்டு இருந்தேன்.

#2446. குன்று நிறைந்த குணவிளக்கு ஆமே.

மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியும்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக்கு ஆமே.

இறைவன் ஆனந்த நடனமாடும் மன்றம் வான மண்டலம் முழுவதும் பரவி நிறைந்துள்ளது. நந்திப் பெருமானும் நின்று அதை நிறைத்தான். கன்று நினைத்தவுடன் வந்து அன்புடன் பால் தரும் பசு போல அன்பன் நினைந்த உடன்வந்து அருள் பொழிவான் சிவன். சீவன் சிவன் அருளை பெற்ற பின்பு குன்றின் மேல் இட்ட விளக்கென ஒளிரும்.

#2447. பேணும் ஆனந்தம் பெருகவே.

ஆறாறு தத்துவத்து அப்புறத்து அப்பரம்
கூறா உபதேசம் கூறில் சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே.

ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு விளங்குவது பரம். அது வாய் விட்டுச் சொல்லாமல் மௌன மொழியில் வேதப் பொருளை உபதேசம் செய்தது. சிவபரம் குருவடிவம் தாங்கி வேதப் பொருளை அருளிய அந்த இன்பத்தைப் பெறுங்கள். அதைப் பேணி மேலும் பெருக்கிக் கொள்ளுங்கள்.

#2448. பற்றறப் பற்றில் பரம் பரமாமே.

பற்றறப் பற்றின் பரம்பதி யாவது
பற்றறப் பற்றின் பரனறி வேபரம்
பற்றறப் பற்றினில் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற்றில் பரம்பர மாமே.

உலக வேட்கைகளைத் துறந்து விட்டு அனைத்திற்கும் தலைவனான பதியின் பாதங்களை பற்றுங்கள். அப்போது நீங்களும் பதியின் பதத்தை அடைவீர்கள். உலக வேட்கைகளைத் துறந்து விட்டு அனைத்திற்கும் தலைவனான பதியின் பாதங்களை பற்றுங்கள். அப்போது நீங்களும் பதியின் ஞானத்தை அடைவீர்கள். உலக வேட்கைகளைத் துறந்து விட்டு அனைத்திற்கும் தலைவனான பதியின் பாதங்களை பற்றுங்கள். அப்போது நீங்களும் சிவபதவியை அடைவீர்கள்.

#2449. பரமாகப் படைப்பது அறிவே.

பரம்பர மான பதிபாசம் பற்றாப்
பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்பது அறிவே.

மேலான சிவபதவியை அடைந்தவர் பாசம் அணுகாத மிகவும் மேலான நிலையை அடைந்தவர் ஆவர். அங்கணம் அவர் சிவனுடன் பொருந்துகையில்

உயரிய சிவானந்தம் விளையும். இவ்வாறு ஆன்மாக்களை மேன்மையுறச் செய்வது அறிவின் வடிவமாகிய சிவபெருமான் ஆவான்.

#2450. தனையுற்றுத் தற்பரமாமே.

நனவில் கலாதியாம் நாலொன்று அகன்று
தனியுற்ற கேவலம் தன்னில் தானாகி
நினைவுற்று அகன்ற அதீதத்துள் நேயந்
தனையுற்று இடத்தானே தற்பர மாமே.

நின்மல சாக்கிரத்தில் கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஐந்து தத்துவங்களும் அகன்றுவிடும். கேவல நிலையில் கருவிகளின் அறிவையும் துறந்துவிட்டு ஆன்மா தனித்து நிற்கும். பின்பு ஆன்மா நினைவையும் விட்டு விட்டுத் துரியாதீத நிலையில் நேயப்பொருளான சிவத்தை சார்ந்து நிற்கும். அப்போது ஆன்மா அறிவு வடிவாகித் தற்பரம் என்ற உயர்ந்த நிலையை அடையும்.

#2451. நாடு அகர ஆதியே

தற்கண்ட தூயமும் தன்னில் விசாலமும்
பிற்காணும் தூடணம் தானும் பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமும் கலந்தற்ற
நற்பரா தீதமும் நாடுஅகர ஆதியே.

தன்னைத் தூய்மையாகக் காண்மின்; தன்னை எல்லைகள் அற்ற விரிவான அகண்டமாகக் காண்மின்; ஆன்மா கருவி கரணங்களுடன் கலந்து பொருந்திய நிலையை விட்டு நீங்குமின்; தற்பரமும், கால பரமும் கலந்து இருக்கும் பராதீத நிலை நாடுமின்; அகரத்தை முதலாகக் கொண்ட பிரணவ வடிவான சிவனை நாடுமின்.

எட்டாம் தந்திரம் -
21. பர இலட்சணம்

பரை ஒளியின் இயல்பு.

#2452. அறிவிலோன்

அதீதத்து ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி அறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே.

நின்மல துரியாதீதத்தில் விளங்கும் நந்தி பெருமான் பரந்து நிற்கும் அகண்ட தன்மை கொண்டவன் . அறிவு நிறைந்தவன். ஆனால் ஆன்மா துரியாதீதத்தில் தன் அறிவை இழந்து அறிவில்லாதவனாக இருப்பான். ஆன்மாவின் மதி மண்டலம் முழுமை பெற்றபின்பு, ஆணவமலத்தைத் துறந்துவிட்டு ஆன்மா சிவனுடன் பொருந்தினால், சிவன் அந்த ஆன்மாவில் பதிந்து அதன் அறிவையும் பரப்பையும் பெருக்குவான்.

#2453. பரபோதம் உணர்ந்தவர் புண்ணியத்தோரே.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் றாமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய அப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே.

சிவன் ஆதியும் அந்தமும் இல்லாத அருந்தலைவன். அவன் சோதி வடிவாகிப் பரஞ்சுடர் ஆனவன்! அவன் இங்கு அங்கு என்னாதபடி எங்கும் நிறைந்தவன். நல்லவர்கள் அவனைக் காண வல்லவர்கள். பொல்லாதவர்கள் அவனைக் காண இயலாதவர்கள். நீதிவடிவானவன் சிவன். அந்த சிவனைப்பற்றிய சிவஞானம் வாய்ந்தவர் மிகுந்த புண்ணியர்கள் ஆவர்.

#2454. துரிய வல்லார்க்குத் துரிசில்லை

துரியங் கடங்கு துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண்டு அம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே.

சீவன் நின்மலத் துரியத்தில் பரையோகத்தில் ஆழ்ந்துவிடும். ஆணவம் அற்று விளங்கும். அதைக் கடந்து துரியாதீதத்தை அடைந்த ஆன்மா தூய்மை அடையும். பரவெளியில் ஆனந்த நடனம் செய்பவன் சிவன். ஆன்மாவுக்கு வீடுபேறு அளிக்கவல்ல சிவபெருமானின் அற்புத நடனத்தைப் பிரணவத்தினுள் காண இயன்ற ஆன்மாவுக்கு எந்த விதக் குற்றமும் இருக்காது.

#2455. செம்மைச் சிவம் மேருசேர் கொடி அம்மை

செம்மைமுன் னிற்பச் சுவேதம் திரிவபோல்
அம்மெய்ப் பரத்தோடு அணுவன்உள் ளாயிடப்
பொய்மைச் சகமுண்ட போத வெறும்பாழில்
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே.

செந்நிறத்துடன் கலந்துவிட்ட வெண்மை நிறம் தன் உண்மைத் தன்மை கெட்டு சிவப்பு நிறம் அடைந்து விடும். அது போன்றே சிவத்துடன் இணையும் சீவன் தன் உண்மைத் தன்மை கெட்டு விடும். தன் முனைப்பை விட்டு விடும். உலகம் ஒரு மாயை என்ற போதம் அடைந்து, அதனுடன் ஒட்டாமல் எட்ட நின்று, எண்ண ஓட்டத்தையும் துறந்துவிட்ட சூனியத்தில், குண்டலினி சக்தி மேருவாகிய துவாதசாந்தத்தில் சிவனுடன் ஒன்றுவாள்.

#2456. அச்சம் அறுத்தென்னை ஆண்டவன் நந்தியே.

வைச்ச கலாதி வருதத்து வங்கெட
எச்ச இருமாயை வேறாக வேரறுத்து
உச்ச பரசிவ மாம்உண்மை ஒன்றவே
அச்சம் அறுத்தென்னை ஆண்டவன் நந்தியே.

சிவமேருவில் சிவன் சக்தியுடன் பொருந்தும் போது ஆன்மாவின் கலைகள் ஒடுங்கும். சுத்த மாயை, அசுத்த மாயைகளின் பிணைப்பு வேரறுக்கப்படும். துவாதசாந்தம் என்ற தலை உச்சியில் சிவன் விளங்கினான். பிரவிபி பிணி குறித்த என் அச்சத்தைப் போக்கினான். என்னைத் தன் அடிமையாக ஏற்றுக் கொண்டு எனக்கு ஞானத்தை நல்கினான்.

#2457. தன்னை அளித்தான் தற்பர மாகவே.

என்னை அறிய இசைவித்த என்நந்தி
என்னை அறிந்து அறி யாத இடத்துய்த்துப்
பின்னை ஒளியிற் சொரூபம் புறப்பட்டுத்
தன்னை அளித்தான் தற்பர மாகவே.

என் உண்மை சொரூபத்தை எனக்குச் சிவபெருமான் உணர்த்தினான். என்னை நான் அறிந்து கொண்ட பின்னர், நான் இதுவரை அறிந்திராத பரவெளியில் என்னை அறிவுடன் செல்லுமாறு செய்தான். பிரணவ ஒளியில் என் ஆன்ம வடிவம் வேறாக விளங்கியது. எனக்கு அவன் தன்னைத் தந்தான். என்னையும் தற்பரம் ஆக்கினான்.

#2458. தரந்த விசும்பு தாங்கி நின்றானே.

பரந்தும் சுருங்கியும் பார்புனல் வாயு
நிரந்தர வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அரன் நெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின் றானே.

பரந்தும் சுருங்கியும் இருக்கும் மண். விண், தீ, நீர், காற்று, கதிரவன், சந்திரன், அகண்ட வானம் இவை அனைத்தையும் சிவன் தான் தனி ஒருவனாகத் தாங்கி நிற்கின்றான்.

#2159. பரையே பரனின் உடல் ஆவாள்

சத்தின் நிலையினில் தானான சத்தியும்
தற்பரை யாய்நிற்கும் தானாம் பரற்கு உடல்
உய்த்தரும் இச்சையில் ஞானாதி பேதமாய்
நித்தம் நடத்தும் நடிக்கும்மா நேயத்தே.

பரன் (சிவன்), பரை (சக்தி) இரன்டும் ஒரே இடத்தில விளங்குபவை. இலயத்தில் பரனாக இருக்கும் சிவன், படைப்பின் போது பரை என்ற நிலையை அடைவான். பரையே பரனுக்கு உடல் ஆவாள். தனு, கரணங்கள், புவனம், போகங்கள், முதலியவற்றைச் சீவர்களுக்கு படைப்பதற்காகச் சக்திதேவி; ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று பல பேதங்களை தன் மேல் பொருத்திக் கொள்வாள். பரனிடம் பிரியாமல் இருந்து கொண்டு ஐந்தொழில்களையும் இயற்றுபவள் உண்மையில் பரை ஆகிய சக்தி தேவியே.

#2460. பரையில் பரையாகிய விந்து சக்தி

மேலொடு கீழ்பக்கம் மெய்வாய்கண் நாசிகள்
பாலிய விந்து பரையுள் பரையாகக்
கோலிய நான்சகு அவை ஞானம் கொணர் விந்து
சீலமி லாஅணுச் செய்திய தாமே.

விந்து சக்தி பரையில் பரையாக இருந்து கொண்டு, பரவி சீவனின் உடலின் மேலும், கீழும், உடலைச் சூழ்ந்தும் இருக்கும். மெய், வாய், கண், நாசி, செவி போன்றவற்றைக் காப்பது விந்து சக்தி. ஞானம் இல்லாத ஆன்மாவுக்கு அருவமாகிய சிவம், சக்தி, விந்து, நாதம் இவற்றின் ஞானத்தைத் தந்து ஆணவ மலத்தில் கட்டுண்ட ஆன்மாவை உலகில் நடத்தும்.

#2461. உயிர் உயிர்த்து, உண்டு, உறங்கும்!

வேறாம் அதன்தன்மை போலும்இக் காயத்தில்
ஆறாம் உபாதி அனைத்தாகும் தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமாய்
ஊறாய் உயிர்த்துண்டு உறங்கிடும் மாயையே.

பரையின் ஒளி வேறு வேறு இயல்புகளை உடையது. அது உடலின் ஆறு ஆதாரங்களில் பொருந்துகின்றது ஆறு விதமான வேறுபாடுகளை அளிக்கின்றது.

மாறு பட்ட தத்துவங்களை மாயையால் தொழிற்படுத்துகின்றது. சீவனை உயிர்த்து, உண்டு, உறங்கச் செய்கின்றது. எனினும் இத்தகைய மாயையின் செய்லகளைக் கடந்து சென்று பரஒளியில் பொருந்தி இருப்பதே ஆன்மா அடையத் தகுந்த பெரும் பேறாகும்.

#2462. மற்றது இங்கு ஒப்பில்லை

தற்பரம் மன்னும் தனிமுதல் பேரொளி
சிற்பரம் தானே செகமுண்ணும் போதமும்
தொற்பதம் தீர்பாழில் சுந்தரச் சோதிபக்கு
அப்புறம் மற்றதுஇங்கு ஒப்பில்லை தானே.

தற்பரம் என்ற உயர்ந்த நிலை, நிலை பெற்று இருப்பது ஒப்பில்லாத ஓர் பேரொளியில் ஆகும். அதுவே அனைத்திலும் உயரிய ஞானம் ஆகும். அதுவே தத்துவங்களை அழித்துவிடும் அறிவும் ஆகும். ஆன்மா தன்னுடைய ஆன்ம அறிவு நீங்கி, தன் ஒளி வடிவத்தை உணர்ந்து கொண்டு, தன் சுட்டறிவைத் துறந்து சிவப் பேரொளியில் கலந்து நிற்பதற்கு ஒப்பாக இங்கு வேறு எதுவும் இல்லை அல்லவா?

#2463. அவன் சுத்தன் ஆகான்

பண்டை மறைகள் பரவான் உடலென்னும்
துண்ட மதியோன் துரியாதீ தந்தன்னைக்
கண்டு பரனும்அக் காரணோ பாதிக்கே
மிண்டின் அவன்சுத்தன் ஆகான் வினவிலே.

பண்டைய மறைகள் பகரும் உண்மை இதுவே. முடிவில்லாத வானமே சிவபெருமானின் உடல் ஆகும். பிஞ்சு மதியைச் சூடிய சிவனைத் துரியாதீதத்தில் கண்டு அவனுடன் ஒன்றியவன் பரநிலை அடைவான் . தூய மாயையில் பொருந்திப் பிறவியின் காரணத்தை அழிக்காதவன் தூய்மை அடைய மாட்டான்.

#2464. வெளியாய சத்தி அவன் வடிவாமே.

வெளிகால் கனல்அப்பு மேவுமண் நின்ற
தளியா இயதற் பரங்காண் அவன்தான்
வெளிகால் கனல்அப்பு மேவுமண் நின்ற
வெளியாய சத்தி அவன்வடி வாமே.

வெளி, வளி, கனல், அப்பு, மண் என்ற பஞ்ச பூதங்கள் இலயமாகும் ஆலயமே துரிய நிலையில் விளங்கும் தற்பரன் ஆகிய சிவபெருமான். வெளி, வளி, கனல், அப்பு, மண் என்ற பஞ்ச பூதங்களில் நிறைந்து நின்று, வெளியாகும் சக்தியே அவனது வடிவமாகும்.

#2465. சீரார் தவம் செய்யில் சிவனருள் தானாகும்

மேருவி னோடே விரிகதிர் மண்டலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீரார் தவம்செய்யில் சிவனருள் தானாகும்
பேரவும் வேண்டாம் பிறிதில்லை தானே.

உடலின் மேருவாகிய துவாதசாந்தத்தில் விரிகதிர் மண்டலம் உடைய சிவத்துடன் பொருந்துவதை எண்ணித் தவம் செய்யம் சிவயோகிக்கு சிவன் அருள் தானாகவே வந்து பொருந்திவிடும். இந்தச் சீரிய நிலையில் இருந்து அந்தச் சிவயோகி நழுவாமல் இருந்தாலே போதுமானது. சிவன் அருளை நாடுகின்ற சீவர்களுக்கு இதை விடச் சொல்வதற்கு வேறு எதுவும் இல்லை அல்லவா?

எட்டாம் தந்திரம் -
22. முத்துரியம்

மூன்று விதத் துரியங்கள் இவை ஆகும்.
சீவ துரியம், பரதுரியம், சிவதுரியம்.

#2466. தொந்தத்தசி (த்வம் தத் அசி)

நனவாதி மூன்றினில் சீவ துரியம்
தனதுஆதி மூன்றினில் பரதுரி யந்தான்
நனவாதி மூன்றி னில்சிவ துரியமாம்
இனதாகும் தொந்தத் தசிபதத் துஈடே.

சீவன், சாக்கிர நிலையின் நனவு, கனவு, உறக்கம் இவற்றைத் தாண்டிய பின்பு அடையும் நிலையே சீவ துரியம் ஆகும். பரம், சீவ துரியத்தில் நனைவு, கனவு, உறக்கம் இவற்றைத் தாண்டிய பின்பு அடையும் நிலையே பர துரியம் ஆகும். சிவன், பர துரியத்தில் நனைவு, கனவு, உறக்கம் இவற்றைத் தாண்டிய பின்பு அடையும் நிலையே சிவ துரியம் ஆகும். இந்த மூன்று நிலைகளிலும் 'த்வம்', 'தத்', 'அசி' என்ற மூன்று நிலைகளையும் ஆன்மா முறையே அடையும்.

#2467. நனவில் துரியம்தன் தொம்பதம்

தானாம் நனவில் துரியம்தன் தொம்பதம்
தானாம் துரியம் நனவாதி தான்மூன்றில்
ஆனாப் பரபதம் அற்றது அருநனா
வானான மேல்மூன்றில் துரியம் அணுகுமே.

'த்வம் ' பதம் என்பது சீவனின் நனவில் பொருந்துகின்ற துரிய நிலை ஆகும். சீவ துரியம் முடிவடையும் இடத்தில் பரதுரியம் தொடங்கும். இது சகல சாக்கிரத்தில் உள்ள துரியத்தில் நிகழும். அந்தப் பரதுரியம் நீங்கிச் சிவதுரியம் நின்மல நனவில் நிகழும். சீவதுரியம், பர துரியம், சிவதுரியங்கள் இங்கனம் ஏற்படும்.

#2468. முந்நான்கு ஈரைந்தாகிவிடும்!

அணுவின் துரியத்து நான்கும துஆகிப்
பணியும் பரதுரி யம்பயில் நான்கும்
தணிவில் பரமாகிச் சாரமுத் துரியக்
கணுவில் இந் நான்கும் கலந்த ஈரைந்தே.

சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்று மூன்று துரிய நிலைகள் ஒவ்வொன்றிலும் நனவு, கனவு, சுழுத்தி, துரியம் என்று நான்கு வேறு வேறு நிலைகள் அமைந்திருக்கும். எனினும் ஒன்று முடியும் இடத்திலேயே மற்றொன்று தொடங்கிவிடும். அதனால் பன்னிரண்டு நிலைகள் சுருங்கிப் பத்து நிலைகள் ஆகக் குறைந்துவிடும். சீவதுரியம் முடியும் இடத்தில் பரநனவு நிலை தொடங்கும். பரதுரியம் முடியும் இடத்தில் சிவதுரியத்தின் நனவு நிலை தொடங்கி விடும்.

#2469. நேர் அந்தமாக நெறிவழியே செல்!

ஈர்ஐந்து அவத்தை இசைமுத் துரியத்துள்
நேர்அந்த மாகநெறிவழி யேசென்று
பார்அந்த மான பராபத்து ஐக்கியத்து
ஓர்அந்த மாம்இரு பாதியைச் சேர்த்திடே.

சீவ துரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்றிலும் இந்தப் பத்து அவத்தைகள் அடங்கி உள்ளன. பராபரனைச் சேர்வதையே சீவனின் குறிக்கோளாகக் கொண்டு, குருவின் உபதேசத்தின்படி முன்னேறு. சீவ துரியத்தையும், பரதுரிய சாக்கிரத்தையும் ஒன்றாகக் கருது. பரதுரிய துரியத்தையும், சிவதுரிய சாக்கிரத்தையும் ஒன்றாகக் கருது. இங்கனம் உன் சாதனையில் தடை இன்றி முன்னேறு! முன்னேறு!

#2470. தொட்டே இருமின் துரிய நிலத்தினை

தொட்டே இருமின் துரிய நிலத்தினை
எட்டாது எனின்நின்று எட்டும் இறைவனைப்
பட்டாங்கு அறிந்திடில் பல் நா உதடுகள்
தட்டாது ஒழிவதோர் தத்துவந் தானே.

துரிய நிலையை அடைந்து அங்கு நீங்காமல் பொருந்தி இருங்கள். துரிய நிலையை உங்களால் அடைய இயலாது போனால், இறைவனைப் பற்றிப் பேசும் ஞான நூல்கள் கூறும் இறைவனைச் சிந்தித்திருங்கள். அது உங்களை வாக்குக்கு அப்பாற்பட்ட உண்மைப் பொருளிடம் தானே கொண்டு சேர்க்கும்.

#2471. நெறியான அன்பர் நிலையறிந் தாரே.

அறிவாய் அசத்தென்னும் ஆறாறு அகன்று
செறிவாய மாயை சிதைத்துஅரு ளாலே
பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே.

அசத்து (பொய்யானவை) ஆகிய ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களையும் விட்டு விடுங்கள். சித்து (அறிவு) வடிவமாக மாறி விடுங்கள். சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டியும் ஈசன் அருளால் சிதைத்து எறிந்து விடுங்கள். பிரிவில்லாத சிவ சக்தியரைப் பொருந்திடும் இயல்பைச் சிவநெறியையில் செல்லும் அன்பர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

#2472. தத் பதம்

நனவின் நனவாகி நாலாம் துரியம்
தனதுயிர் தெம்பதம் ஆமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே.

நனவின் நான்காம் நிலை ஆகும் சீவ துரியம். இங்கு சீவன் 'த்வம்' பதத்தை அடைகின்றது. இங்கு சீவனின் கன்மங்கள் முடிவடைகின்றன. சாக்கிரதத்தில் உள்ள சீவதுரிய நிலையில் இருந்து முன்னேறி சீவன் பரதுரியத்தை அடைகின்றது. பரதுரியத்தில் உள்ள துரியமே நின்மல சாக்கிரம் என்ற நிலை. இதை முதலாகக் கொண்ட நான்கு நிலைகளில் உள்ள நின்மல துரியத்தை அடைந்து அதையும் கடந்த துரியாதீதத்தில் சீவன் 'தத்' பதத்தை அடையும்.

#2473. அம்புலி உன்னா அதி சூக்கம்

தொம்பதம் தற்பதம் சொன்முத் துரியம்போல்
நம்பிய மூன்றாம் துரியத்து நல்நாமம்
அம்புலி யுன்னா அதிசூக்கம் அப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே.

'த்வம்' பதம், 'தத்' பதம் இவற்றைக் கடந்து விட்ட சீவன் சிவதுரியத்தை அடையும். அதில் அமைந்துள்ளது 'அசி' பதம். அது அம்புவி எண்ண இயலாத அதி

சூக்குமமான பதம். அதற்கும் அப்பால் உள்ளான் அன்பர்களைத் தன்பால் சேர்க்கும் ஈசன் நந்தி எம்பெருமான்.

எட்டாம் தந்திரம் -
23. மும் முத்தி

மூன்று வித முக்தி நிலைகள்.
அவை சீவ முக்தி, பரம முக்தி, சிவமுக்தி என்பவை.

#2474. சிவமுத்தி ஆனந்தம்

சீவன்தன் முத்தி அதீதம் பரமுத்தி
ஓயுப சாந்தம் சிவமுத்தி ஆனந்தம்
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளும்நா தாந்தமே.

சீவன் முத்தி துரியாதீதத்தில் நிகழும். உலகம் பொய் என்று அறிந்து கொண்ட சீவன் பிறப்பதற்கான காரணத்தை ஒழித்து விட்டு உலகைத் துறந்து விட்டுத் தனியாக நிற்பது சீவன் முத்தி. பரமுக்தி என்பது தன் செயல் இன்றி ஈசனின் அருள் வழியே நிற்பது. பிறவி எடுக்கும் அவசியமும் இல்லாமல் சிவனின் பொருந்தும் எண்ணமுமில்லாமல் அரிதாகிய உபசாந்தம் என்ற அமைதியான நிலையை அடைவது. சிவ முத்தி என்பது உடலுடன் உள்ள போதே சிவானந்தத்தில் திளைப்பது. உடல் நினைவு மறந்து சிவனுடன் ஒன்றுதல். இந்த மூன்று நிலைகளும் பிரணவத்தின் வழியே விளையும் நாதாந்தத்தின் பயன்கள்.

#2475. சிவனுடன் ஒன்றாதல் முத்தி

ஆவது அறியா உயிர்பிறப் பாலுறும்
ஆவது அறியும் உயிர்அருட் பாலுறும்
ஆவது ஒன்றில்லை அகம்புறத் தென்றுஅகன்று
ஓவு சிவனுடன் ஒன்றாதல் முத்தியே.

பிறவிப் பயனை அறியாதவர்கள் உலகில் மீண்டும் பிறவி எடுப்பர். இறைவனை நாடுதல் பிறவிப் பயனென்று அறிந்து கொண்டவர்கள் ஈசன் திருவருளை நாடுவர். உலகையும், தன் கருவிகளையும், கரணங்களையும் துறந்துவிட்டு சிவனுடன் ஒன்றாகப் பொருந்துவதே முத்தி ஆகும்.

#2476. அமலன் தானே வெளிப்படுவான்

சிவமாகி மும்மலம் முக்குணம் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத்து அயிக்கியத்
துவம்ஆ கியநெறி சோகம்என் போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே.

சிவனையே நினைவில் கொண்டு; சிவமாகவே ஆகி; ஆணவம், கன்மம் , மாயை என்ற மூன்று மலங்களையும் அழித்து; தாமச குணம், ராஜச குணம், சத்துவ குணம் என்ற மூன்றையும் துறந்து; "நீ அது ஆகின்றாய்!" என்று மும் முத்தியைப் பெற அறநெறியில் நிற்பவருக்கு; அமலன் ஆகிய சிவன் தானே வெளிப்படுவான்.

#2477. பெத்தம் அறுத்த பெருமானே.

சித்தியும் முத்தியும் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்கும் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியும் ஆயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே.

சீவனின் பிறவித் தளைகளைக் களையும் தயாபர! அணிமா முதலிய எண்சித்திகளும், வீடுபேறும் மேலான சிவம் ஆகும். நின்மல துரியாதீதமும், சீவனுக்கு வருகின்ற (தன்னைப் பற்றிய துன்பம், பிற உயிர்களால் வரும் துன்பம், தெய்வத்தால் வரும் துன்பம்) என்ற மூன்று பெருந் துன்பங்களையும் நீக்கும் சிவானந்தமே சீவனுக்கு மேலான சமாதி நிலை ஆகும்.

எட்டாம் தந்திரம் -
24. முச் சொரூபம்

மூன்று சொரூபங்கள்:
அவை சீவ சொரூபம், பர சொரூபம், சிவ சொரூபம் என்பவை.

#2478. பரன் உண்மை செய்யுமே

ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைந்து
ஆறிய ஞானச் சிவோகம் அடைந்திட்டு
வேறும் எனமுச் சொரூபத்து வீடுற்று அங்கு
ஈறதில் பண்டைப் பரன்உண்மை செய்யுமே.

சாதகன் சாதனையில் முன்னேறும் போது ஆன்மாவைப் பிணித்துள்ள ஐந்து மலங்களைக் களைய வேண்டும்; ஞானத்தால் நிரம்பிய சோஹம் என்ற பாவணையைப் பெற வேண்டும்;மூன்று வித ஸ்வரூப முத்தியை அடையவேண்டும்; இறுதியில் பரசிவன் பரம் பொருளின் உண்மையில் அந்த சீவனையும் நிலை பெறச் செய்வான்.

#2479. காயக் கணக்கு அறும்!

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பத் தாறும் உதிப்புள
மூன்றினின் உள்ளே முளைத்தெழும் சோதியைக்
காண்டலும் காயக் கணக்கற்ற வாறே.

பிரகிருதி மாயை, தூ மாயை, தூவா மாயை என்று மூன்று மாய மாளிகைகள் உள்ளன. இவற்றில் சகலர், பிரளயாகலர், விஞ்சஞானகலர் என்ற மூவகை மனிதர்கள் வாழ்கின்றார்கள். இந்த மூன்று மாயைகளில் முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றும். இந்த மூன்று மண்டலங்களில் தோன்றி எழுகின்ற ஆன்மப் பேரொளியைக் காணும்போதே இனிப் பிறவி எடுக்க வேண்டிய உடலின் கணக்கு முடியும்.

#2480. ஈசன் பெருமையை யாரறிவார்?

உலகம் புடைபெயர்ந்து ஊழியம் போன
நிலவு சுடரொளி மூன்றும் ஒன்றாய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையும் ஆரறி வாரே.

உலகம் தோன்றுவதும் பின்பு உலகம் ஊழியில் அழிவதும் பல முறை நிகழ்ந்து விட்டன. ஊழியின் முடிவில் சீவன் பரனுடனும், பரன் சிவனுடனும் ஒன்றி விடும் !இந்த மூன்றுக்கும் ஆராய்ந்து அறியும் தன்மையைத் தரும் சிவனின் பெருமையையும் அளவையும் யாரோ கூற வல்லவர்?

எட்டாம் தந்திரம் -
25. முக்கரணம்

முக்கரணங்கள் = மூன்று கரணங்கள்
மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்கள்.

#2485. சிவன், பரன், சீவன் மூவரும் ஒருவரே!

**இடனொரு மூன்றில் இயைந்த ஒருவன்
கடன் உறும் அவ்வுரு வேறெனக்காணும்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுரை பேதமும் ஒன்றென லாமே.**

ஆன்மாவுக்குப் பருவுடல், நுண்ணுடல், காரண உடல் என்ற மூன்று உள்ளன. இந்த மூன்றுடன் ஆன்மா பொருந்திய போதும் ஆன்மா ஒன்றே! அது போன்றே சீவன், பரன், சிவன் என்ற வேறுபட்டுத் தோன்றும் மூன்று நிலைகளும் ஒரே சீவனுக்கு உரியவை என்று அறிவீர்!

#2486. தெளியத் தெளியும் சிவபதம் தானே.

**ஒளியைஒளிசெய்து ஓம்என்று எழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியும் சிவபதம் தானே.**

ஒளியுடைய உங்கள் கண் பார்வையை வெளியுலக ஒளியுடன் பொருத்தி அதை மேலும் ஒளி பெறச் செய்யுங்கள்! பிரணவ தியானத்தால் மூலாதாரத்தில் உள்ள கனலை எழுப்புங்கள். அது திங்கட் கலை, கதிரவக் கலையுடன் சுழுமுனையில் பொருந்துமாறு செய்யுங்கள். தலைக்கு மேலே உள்ள வெளியில் பொருந்தித் தியானம் செய்தால் சிவபதம் வந்து பொருந்தும்.

#2487. மனோன்மணியும், உன்மனியும்

**முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த்து ஆவதுஅக்
கைக்கா ரணம் என்னத் தந்தனன் காண்நந்தி
மிக்க மனோன்மணி வேறே தனித்துஏக
ஒக்குமது உன்மணி ஓதுஉள் சமாதியே.**

மனம், வாக்கு, காயம் என்ற முக்கருவிகளின் மூர்ச்சையைத் தீர்ப்பவன் சிவன். அவை சோர்வடையாமல் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் திறமையைத் தந்தவன் சிவன். சதாசிவ சக்தியாகிய மனோன்மணி கவிழ்ந்த சகசிர தளத்தில் நெற்றி, தலை இவற்றின் இடையே இருக்கும், மேலே நிமிர்ந்து விரிந்த சகசிர தளத்தில் உன்மனிக் கலையில் சமாதி நிலை பொருந்தும்.

எட்டாம் தந்திரம் -
26. முச் சூனிய தொந்தத் தசி

சூனியம் = இல்லாமை = பாழ்மை
முச் சூன்ய தொந்தத் தசி = முப்பதங்களும் இல்லாமை
முப்பதம் = தத் பதம், தொம் பதம், அசி பதம்.
முப்பதங்களும் நீங்கிய நிலையே பெருநிலை ஆகும்.

#2488. சொற்பதம் ஆகும் 'தொந்தத் தசி'

தற்பதம் தொம்பதம் தானாம் அசிபதம்
தொல்பதம் மூன்றும் துரியத்துத் தோற்றலே
நிற்பது உயிர்பரன் நிகழ்சிவ மும்மூன்றின்
சொற்பத மாகும் தொந்தத் தசியே.

'நீ' என்பது 'த்வம் பதம்' ஆகிய சீவன். 'அது' என்பது 'தற்பதம்' ஆகிய பரன். 'ஆக ஆகின்றாய்' என்பது அசிபதம் ஆகிய சிவன். இம்மூன்றும் நின்மலத் துரியத்தில் விளங்கும். அவற்றில் நிற்பவர் முறையே சீவன், பரன், சிவன் ஆவர். இம்மூன்றையும் இணைத்துக் கூறும் மகாவாக்கியம் 'தொந்தத் அசி' ஆகும்.

#2489. இந்துவின் முன்இருள் ஏகுதல் ஒக்குமே.

தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்கா மதமாதி
வந்த மலம்குணம் மாளச் சிவம்தோன்றின்
இந்துவின் முன்இருள் ஏகுதல் ஒக்குமே.

தொந்தத்தசி என்று மூன்று நிலைகளில் தொன்மையான ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்கள் மூன்றும் அழிய வேண்டும். தொந்தத்தசியில் பழமையான காமம், குரோதம், மோகம் மறைய வேண்டும். தொந்தத்தசியில் ராஜசம், தாமசம், சத்துவம் என்ற மூன்று குணங்கள் மறைய வேண்டும். இவை அழிந்து சிவன் அங்கு தோன்றினால் முழுமதியின் முன்பு இருள் ஓடி மறைவது போல அறியாமை மறைந்து ஆன்மப் பேரொளி துலங்கும்.

#2490. சிவன் முன்வைத்து ஓதிடே

தொந்தத் தசியைஅவ் வாசியில் தோற்றியே
அந்த முறைஈர் ஐந்தாக மதித்திட்டு
அந்தம் இல்லாத அவத்தைஅவ் வாக்கியத்து
உந்து முறையில் சிவன்முன்வைத்து ஓதிடே.

'தத் த்வம் அசி' என்ற ஆன்மாவின் நிலை பத்தாவது துரிய நிலை ஆகும். இதை அடைவதற்குப் பிராணப் பயிற்சி மூலம் சாதனையில் முன்னேறு. அந்தம் இல்லாத அவத்தைகளைக் கொண்டது இந்நிலை. இதை அடைவதற்கு 'தொந்தத்தசி' என்பதில் சிவனை முன்னிறுத்தித் 'தத்துவமசி' என்று கொள்வாய். இதனைத் தியானித்துச் சாதனையில் முன்னேறுவாயாகுக!

#2491. அத்தற்கு அடிமை அடைந்து நின்றான்

வைத்துச் சிவத்தை மதிசொரூ பானந்தத்து
உய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்து
அத்தற்கு அடிமை அடைந்துநின் றானே.

'தத்துவமசி' என்று கூறிச் சிவனை முன் நிறுந்து! அவன் சொரூப ஆனந்தத்தில் உன் சிந்தையைச் செலுத்து. அவன் பிரணவத்தை உன் நெஞ்சில் நிறுத்து. இங்கனம் தொடர்ந்து பயிற்சி செய்தால் உண்மையை உணரலாம். சிவனுக்கு அடிமை ஆகிய அந்த ஆன்மா இன்ப மயமாக விளங்கும்.

#2492. தொந்தத்தசி வாசியாமே

தொம்பதம் மாயையுள் தோன்றிடும் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணும்அவ் வாக்கியம்
உம்பர் உரைதொந்தத் தசிவாசி யாமே.

சீவன் ஆகிய 'தொம்பதம்' மாயையில் தோன்றும். 'தத்' என்னும் மேலான பதம் பரையில் தோன்றும். 'ஆகின்றாய்' என்னும் அசி பதம் சாந்தியில் தோன்றும். இந்த மகா வாக்கியம் மேலான தொடர் ஆகும். இதன் உரைக்கையில் வாசியான உணர்வு வந்து பொருந்தும்.

#2493. சீவன் பரசிவன் ஆமே

ஆகிய அச்சோயம் தேவதத் தன்இடத்து
ஆகிய வைவிட்டால் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறிவு
ஆகிய சீவன் பரசிவன் ஆமே.

இடம், காலம் இவற்றால் மாறுபடுகின்ற தேவதத்தன் என்பவன் வேறு வேறு மனிதர்கள் போலத் தோன்றலாம். இடம், காலம் இவற்றை நீக்கி விட்டால் தேவதத்தன் என்ற மனிதன் ஒருவனே என்று புரியும். அது போன்றே மாயையில்

மூழ்கிய சீவன் சிவனில் இருந்து மாறுபட்டது தோன்றும். மாயையிலிருந்து நீங்கி மெய்யறிவு பெற்று விட்டால் சீவன் பரசிவனாகி விடும்.

#2494. துரியமும் தொந்தத்தசியால் ஆகும்

தாமதம் காமியம் ஆதித் தகுகுணம்
மாமலம் மூன்றும் அகார உகாரத்தோடு
ஆம்அறும் மவ்வும் அவ் வாய்உடல் மூன்றில்
தாமாம் துரியமும் தொந்தத் தசியதே.

தாமசம், ராஜஸம், சத்துவம், என்ற மூன்று குணங்களும்; ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலமங்களும்; அகர, உகர, மகரங்களால் ஆகிய பிரணவத்தால் நீந்திவிடும். சீவன் பருவுடல், நுண்ணுடல், காரண உடல் என்ற மூன்றையும் கடந்து விளங்கும் துரியமும், தொந்தத்தசியால் நிகழும்.

எட்டாம் தந்திரம் -
27. முப்பாழ்

ஆன்மாவைப் பற்றியுள்ள மூன்றும் பாழாவது.
மாயைப் பாழ் = மாயை நீங்குதல்
போதப்பாழ் = சீவப்பாழ் = ஆன்ம அறிவு நீங்குதல்
உபசாந்தப் பாழ் = வியோமாப்பாழ் = உபசாந்த நிலையில் பரவெளியில் நிற்பது.

2495. முப்பாழ் முடிவுறும்!

காரியம் ஏழ்கண் டறும்மாயப் பாழ்விடக்
காரணம் ஏழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறும்
சீர்உப சாந்தமுப் பாழ்விடத் தீருமே.

ஞான விசாரணையால் மாயையின் செயல்களாகிய வித்தியா தத்துவங்கள் ஏழையும் பொய் என்று அறிந்து கொண்டதும் மாயைப் பாழாகும். தத்துவத் தூய்மை உண்டாகும். உடல் பிரக்ஞையும் அதற்குக் காரணமாகிய சிவநிலைகள் ஏழையும் கண்டு கொண்டு அவற்றில் இருந்து நீங்க, ஆன்மத் தூய்மை அடையும். காரிய காரண வேதனை நீங்கினால் உபசாந்தமும் பாழ் ஆகிவிடும். முப்பாழும் நிகழப் பிறவி நீங்கும்

#2496. தூய சொரூபத்தில் சொல் முடிவாகுமே.

மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யில் சீவன்
ஆய வியாப்தம் எனும்முப்பா ழாம்அந்தத்
தூய சொரூபத்தில் சொல்முடி வாகுமே.

மாயப்பாழ், போதப் பாழ், வியோமாப் பாழ் என்ற மூன்று பாழ்களும் சிவசக்தியரின் அருளில் சீவன் அடங்கி இருக்கும் மூன்று நிலைகள் ஆகும். அந்தத் தூய்மையான சிவசொரூபத்தில் சீவன் அடங்கி இருப்பது தான் 'தத்துவமசி' என்ற சொல்லின் உண்மைப் பொருளாகும்.

#2497. கற்பனை உதறிய பாழ்

எதிர்அற நாளும் எருதுஉவந்து ஏறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழை கடந்து அந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே.

நாளும் உவந்து எருதின் மீது ஏறுகின்ற, தனக்கு ஒப்பார் இல்லாத, பெருமானின் திருவடிகளை அடைய விரும்பிய நான் மாயப்பாழ், போதப்பாழ், உபசாந்தப்பாழ் என்ற முப்பாழையும் கடந்து, கற்பனைக்கு எட்டாத ஒரு நிலையில் ஒடுங்குகின்றேன்.

#2498. பரம்பரம் என்னும் அருநிலம்

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யார்அறி வாரே.

துரியம் கடந்த , சொல்வதற்கு அரிய, பாழினை அடைவது முடியாத செயல் என்று அறிவிலிகள் உரைப்பர். ஆனால் அறிவுடையோர் மேலான நிலை என்று கூறும் பரம்பரம் முப்பாழையும் கடந்த உயரிய நிலை என்பதை யார் அறிவார்?

#2499. சிவாய நம!

ஆறாறு நீங்க நமவாதி அகன்றிட்டு
வேறா கியபரை யாவென்று மெய்ப்பரன்
ஈறான வாசியில் கூட்டும் அதுவன்றோ
தேறாச் சிவாய நமவெனத் தேறிலே.

ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கிய பின்னர், நகாரம் (ஆணவம்), மகாரம் (மாயை) இவை இரண்டும் அகன்று விட, யகாரமாகிய சீவனுக்குப் பரை என்னும் சக்தி அன்னை தன் அருளைத் தருவாள். அந்த யகாரம் ஆகிய ஆன்மா 'சி' என்னும் சிவனுடனும் 'வ' என்னும் சக்தியுடனும் சென்று இணைந்து 'சிவாய' என்று ஆகிவிடும். இதுவே 'சிவாய நம' என்னும் திரு ஐந்தெழுத்தின் தாத்பரியம்.

#2500. உள்ளமும் இல்லை உருவில்லை தானே.

உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறித் தோரும் அவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடர்இல்லை பாழ்இல்லை
உள்ளமும் இல்லை உருவில்லை தானே.

உள்ளமே உருவம் என்றும், உருவமே உள்ளம் என்றும் கூறுவதன் உண்மையை அறிந்து கொண்டு, உள்ளத்துக்கும் உருவத்துக்கு உள்ள உண்மைத் தொடர்பை உணர்ந்து கொண்டவர் ஞானியர். இவர்களுக்கு துன்பம் தரும் நரகமும் இல்லை; இன்பம் தரும் சுவர்க்கமும் இல்லை. இவர்களுக்கு முப்பாழ்கள் இல்லை. உள்ளம் இல்லாததால், உலகியலில் நாட்டமும் இல்லை. இவர்கள் உடலைக் கடந்து விளங்குவர்.

எட்டாம் தந்திரம் -
28. காரிய காரண உபாதி

காரிய உபாதி = சீவ உபாதி
காரண உபாதி = பர உபாதி
உபாதி = கட்டு = தளை = பந்தம்.

#2501. சிவமாகும் அணுவனே.

செற்றிடும் சீவ உபாதித் திறன்ஏழும்
பற்றும் பரோபதி ஏழும் பகருரை
உற்றிடும் காரிய காரணத் தோட
அற்றிட அச்சிவ மாகும் அணுவனே.

மாயையின் காரியம் ஆகிய வித்தியா தத்துவங்கள் ஏழு. இவை சீவனுக்குத் துன்பத்தைத் தருவன. சுத்த வித்தை, ஈசுவரன், சதாசிவன், விந்து, நத்தம், சக்தி, சிவன் என்ற எழும் காரணமாகி நிற்பவை. இந்தக் காரியங்களும், காரணங்களும் நீங்கினால், திரு ஐந்தெழுத்து அமையும். சீவன் சிவன் ஆகும்.

#2502. தொம்பதம்

ஆறாறு காரியோ பாதி அகன்றிட்டு
வேறாய் நனவு மிகுந்த கனாநனா
ஆறாறு அகன்ற கழுத்தி அதில் எய்தாப்
பேறா நிலத்துயிர் தொம்பதம் பேசிலே.

ஆறாறு முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய காரிய உபாதிகள் அகல வேண்டும்! தத்துவங்களில் இருந்து மாறுபட்ட நின்மல நனவில் பொருந்தும்.
கனவு நிலையிலும், நனவோடு இருந்து கொண்டு, முப்பத்தாறு தத்துவங்கள் நீங்கிய நிலையிலும் உறக்கத்தை அடையாமல், அரிய துரியத்தில் சீவன் தங்கி இருப்பதே தொம்பதம் ஆகும்.

#2503. சிகாரம் சிவமே!

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரம் சிவமே வகாரம் பரமே
யகாரம் உயிரென்று அறையலும் ஆமே.

மூன்று எழுத்துக்கள் கொண்ட 'ஓம்' என்னும் பிரணவத்தில்
அகாரம் = உயிர், உகாரம் = பரம், மகாரம் = சிவம் என்று அறிவாய்.
சிவாய என்ற தெய்வீக மூன்று எழுத்துக்களில்
சிகாரம் = சிவம், வகாரம் = பரம், உகாரம் = உயிர் என்று அறிவாய்!

#2504. ஈசன் அருள் அன்றி இயலாது!

உயிர்க்குயி ராகி ஒழிவற்று அழிவற்று
அயிர்ப்புஅறும் காரணோ பாதி விதிரேகத்து
உயிர்ப்புறும் ஈசன் உபமிதத் தால்அன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாவே.

உயிருடன் ஒன்றிக் கலந்து நீக்கம் இல்லாமல் நிறைந்து இருப்பவை காரண உபாதிகள். இவை ஆன்மாவுக்கு அழிவையும், சோர்வையும் அளிப்பவை. நடுங்கச் செய்யும் இவற்றில் இருந்து ஆன்ம விடுபடுவதற்கு என்ன வழி? உயிர் பக்குவம் அடைந்தவுடன் அதனை விட்டுப் பிரியாமல் நிற்கும் ஈசன் கருணையினால் மட்டுமே இந்த உபாதிகளையும் ஆணவத்தையும் அழிக்க முடியும்.

#2505. காரணம் ஏழில் கலக்கும் பரசிவன்

காரியம் ஏழில் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழில் கலக்கும் பரசிவன்
காரிய காரணம் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே.

ஆணவ மலக் குற்றங்களால் சீவன் பசுத் தன்மை கொண்டு விளங்குகின்றது. இத்தகைய சீவன் காரிய உபாதிகள் ஏழில் மயங்கி நிற்கும். காரண உபாதிகள் ஏழில் சிவம் கலந்து நிற்கும். காரிய கரணங்கள் ஆன இவை அனைத்தும் கற்பனையே. அசி பதம் காட்டும் பொருளை உணர்ந்து கொண்டு, அதை அனுபவித்தால், அது நீங்கும் போது உண்டாகும் பாழில் மேலான பரன் வெளிப்படுவான்.

எட்டாம் தந்திரம் -
29. உபசாந்தம்

செயல்கள் ஒழிந்த, விருப்பு வெறுப்புக்கள் இல்லாத, ஓர் அடைவதற்கு அரிய, அமைதியான, மனோநிலை.

#2506. முத்திக்கு வித்து முதல்வன் ஞானமே

முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே.

முக்தி என்ற வீடுபேற்றை அடைவதற்கு உரிய வாயில் சீவன் சிவஞானம் பெறுவதே ஆகும். பக்தி செய்வதற்கு உரிய வாயில் சீவன் தன் முனைப்பினை விட்டு விட்டுப் பணிந்து சிவன் பாதங்களைப் பற்றுவதே ஆகும். அட்டமா சித்திகள் அடைவதற்கு உரிய வாயில் சீவன் சிவத்துடன் சிவனாகப் பொருந்துவதே ஆகும். சக்தியை அடைவதற்கு உரிய வாயில் சீவன் விருப்பு வெறுப்புக்கள் இன்றி அடங்கி இருத்தல் ஆகும்.

#2507. உபசாந்தம் அமையும்

காரியம் ஏழும் கரந்திடும் மாயையுள்
காரணம் ஏழும் கரக்கும் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும் உப சாந்தப் பரிசிதே.

சீவனின் காரிய உபாதைகள் ஏழும் முறைப்படித் தூவா மாயையில் ஒடுங்கி இலயம் அடைந்து விடும். சீவனின் காரண உபாதிகள் ஏழும் முறைப்படிச் சிவத்திடம் சென்று இலயம் அடையும். காரிய காரண உபாதிகளின் வாசனை அறவே நீங்கிய பின்னர், உபசாந்தம் என்ற விருப்பு வெறுப்பு அற்ற உயரிய அமைதியான மனோநிலை தோன்றும்.

#2508. சிவ வியாபகம் தரும் உபசாந்தம்

அன்ன துரியமே ஆத்தும சுத்தியும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னும் பரங்காட்சி யாவது உடனுற்றுத்
தன்னின் வியாத்தி தனில்உப சாந்தமே.

சாக்கிர துரியத்தில் ஆன்மா சுத்தி அடையும். பர துரியத்தில் (சாக்கிரதாதீத துரியத்தில்) பரம் வெளிப்படும். சீவன் சிவதுரியத்தில் சென்று சேர்வது சீவனுக்கு உபசாந்தம் அளிக்கும்.

#2509. உயரிய உபசாந்த நிலை

ஆறாது அமைந்துஆண வத்தையுள் நீக்குதல்
பேறான தன்னை அறிதல் பின் தீர்சுத்தி
கூறாத சாக்கிரா தீதம் குருபரன
பேறாம் வியாத்தம் பிறழ்உப சாந்தமே.

சீவன் ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களுடன் தொடர்பு உடைய ஆணவ மலத்தினை அகற்ற வேண்டும். தன்னைத் தானே உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும். இவை சாக்கிர துரியத்தில் சீவன் தானே தன்னைத் தூய்மைப் படுத்திக்க கொள்ளச் செய்யும் செயல்கள். பர துரியம் என்னும் சாக்கிராதீத துரியத்தில் கூற இயலாத பரனின் கருணை விளங்கும். இந்த நிலையைக் கடந்த பின்பு சிவ துரியத்தில் உயரிய உபசாந்தம் நிலவும்.

#2510. உபசாந்தத்தின் பத்துப் படிகள்

வாய்ந்த உபசாந்த வாதனை உள்ளப் போய்
ஏய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறல் மோனச் சுகானுபவத் தோடே
ஆய்ந்துஅதில் தீர்க்கை யானதுஈர் ஐந்துமே.

உபசாந்த நிலையில் சீவன் தானே சிவம் ஆதல்; சீவன் சிவானந்தத்தில் அமிழ்தல்; பின்பு சீவன் அந்த நினைவையும் விட்டு விடுதல்; சீவன் அளப்பரிய

ஆனந்த அனுபவம் பெறுதல், பின்பு சீவன் அதனையும் நீங்குதல் என்பன உபசாந்தம் அடையும் இரண்டாவது ஐந்து படிகள்.

ஆணவம் அழித்தல், தன்னை உணர்தல்; அதையும் ஒழித்தல்; நனவில் அதீதம், வியாத்தம் என்பவை முதல் ஐந்து படிகள். இவை இரண்டும் சேரப் பெற்று உபசாந்தம் அடைய அமைந்துள்ளன பத்துப் படிகள்.

#2511. ஆரமுது உணர்ந்தோன் கரை காண்பான்

பரையின் பரவ பரத்துடன் ஏகமாய்த்
திரையின்நின்று ஆகிய தெண்புனல் போலவுற்று
உரையுணர்ந்து ஆரமுது ஒக்க உணர்ந்துளோன்
கரைகண் டானுரை அற்ற கணக்கிலே.

சீவன் சிவசக்தியருடன் பிரிவு எதுவும் இன்றித் திரைகடலில் கலந்த குளிர்ந்த நீர் போல ஒன்றாகக் கலந்து விடும். அங்கு இருந்து கொண்டு குரு உபதேசத்தின் உண்மைப் பொருளை உணர்ந்து உயரிய சிவானந்தத்தை அனுபவிக்கும். வாக்குக்கு அப்பாற்பட்ட ஆனந்தத்தை அனுபவிக்கும் அந்தச் சீவன் பிறவிப் பெருங்கடலைக் கடந்து கரை சேர்ந்து விடும்.

எட்டாம் தந்திரம் -
30. புறங்கூறாமை

புறம் = வெளியே
கூறாமை = சொல்லாமல் இருப்பது
உபசாந்த நிலையை அடைந்த பின்பு அதை வெளியே சொல்லக் கூடாது.
புறத்தில் தன் பெருமையைப் பறை சாற்றாமல், அகத்தில் அதன் அருமையை உணர வேண்டும்.

#2512. நிறையறிவோம் என்பர் நெஞ்சிலர்!

பிறையுள் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாள்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனக் காண்குற மாட்டார்
நிறையறி வோம்என்பர் நெஞ்சிலர் தாமே.

நிலவில் உள்ள முயல் வடிவக் களங்கத்தை அழிப்பதற்கு மணிகள் பதித்த வாளை ஏந்திச் செல்பவனைப் போன்றவனே “கறை மணிக் கண்டனைக் நான் கண்டுள்ளேன்! உனக்கும் அவனைக் காண்பிப்பேன்!” என்று பொய் கூறுபவன்.

#2513. பெருமை பேசுவது நீஒழி நெஞ்சே!

கருந்தாள் கருடன் விசும்பூடு இறப்பக்
கருந்தாள் கயத்தில் கரும்பாம்பு நீங்க
பெருந்தன்மை பேசுதி நீஒழி நெஞ்சே
அருந்தான் அலைகடல் ஆறசென் றாலே.

கரிய கால்களை உடைய கருடன் வானில் பறந்து செல்லும் போது, கரிய நிறம் கொண்ட பாம்பு புற்றிலோ குளத்திலோ அஞ்சி ஒளிந்து கொள்ளும். அது போன்றே உன் பெருமையை எண்ணாமல், நீயும் அடங்கி இரு மனமே! அருந்த முடியாத உவர் நீர்க்க கடலில் ஆறு என்று கலப்பதை போல நீயும் அடங்குவாய் மனமே!

#2514. தனி உம்பர் ஆமே

கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்
தருவலர் கேட்ட தனியும்ப ராமே.

சீவன் தன் மலங்களைப் போக்குவதற்குக் பிறவிக் கடலின் கருவாயில் நின்று போர் செய்வதில் என்ன பயன்? அது அறிவிலிகள் செய்யும் செயல் ஆகும். உயர்ந்த உபசாந்த நிலையில் செய்கின்ற தவம் கைக்கூடினால், ஒருவன் மக்கள் விரும்பும் அனைத்தையும் அளிக்க வல்ல, ஒப்பற்ற, ஓர் தேவனாகவே ஆகி விடலாம்.

#2515. “எம் ஈசனே ஈசன்” என்று எண்ணுங்கள்!

பிணங்கவும் வேண்டாம் பெருநில முற்றும்
இணங்கிஎம் ஈசனே ஈசன்என்று உன்னில்
கணம்பதி னெட்டும் கழலடி காண
வணங்ககெழு நாடி அங்கு அன்புற லாமே.

சிவனிடம் பிணங்கிப் பிற தெய்வங்களை வீணாக நாடாதீர்கள்! பெருநிலம் ஆகிய அனைத்து உலகிற்கும் அவனே ஒப்பில்லாத ஒரு தனித் தலைவன் என்று உணருங்கள். அவனை அன்புடன் வழிபட்டால் தேவகணங்கள் பதினெண்மரும் வந்து உம் தாளைப் பணிந்து ஏத்துவர். அத்தகைய பெருமை வாய்ந்த சிவனையே எப்போதும் நாடி இன்பம் அடையுங்கள்.

#2516. உன்னுவீர் உன்னும் உறுவகையாலே!

என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னிலும் மாமணி யாய புனிதனை
மின்னிய எவ்வுய ராய விகிர் தனை
உன்னிலும் உன்னும் உறும்வகை யாலே.

என்னை விட எனக்கு உயிர் ஆனவன் என் இறைவன். அவன் பொன்னிலும் அதிக ஒளி படைத்த புனிதன். எவ்வுயிர்க்கும் உயிராக மின்னும் விகிர்தன் அவன். உன்னும் வகையை அறிந்து கொண்டு உன்னுவீர் அவன் நீர் உய்வடைவதற்கு!

#2517. ஒன்றாய் உணரும் ஒருவன் ஆவான்

நின்றும் இருந்தும் கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பல ராகிலும்
வென்றுஐம் புலனும் விரைந்து பிணக்கறுத்து
ஒன்றாய் உணரும் ஒருவனும் ஆமே.

நிற்கும் போதும், அமரும் போதும், கிடக்கும்போதும், நின்மலனாகிய சிவனையே இடையறாது எண்ணுங்கள். நீங்கள் அவனுடன் ஒன்றும் வழிகளை உறைப்பவர் ஆயினும், ஐம் புலன்களையும் வென்று விடுங்கள். பாசத் தளைகளை விரைந்து துணித்து விடுங்கள். அப்போது நீங்கள் அறிவின் செறிவாகிய சிவனுடன் பிரிவின்றி ஒன்றாவதை உணருவீர்.

#2518. விண்அறிவாளர் விரும்புகின்றாரே.

நுண்ணறி வாய்உல காய்உலகு ஏழுக்கும்
எண்ணறி வாய்நின்ற எந்தை பிரான்தன்னைப்
பண்அறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்அறி வாளர் விரும்புகின் றாரே.

சீவன்கள் அனைத்திலும் நுண்ணறிவாய் விளங்குபவன் எந்தை சிவன். ஏழு உலகங்களிலும் எண்ணறிவாக நிறைந்து நிற்பவன் எந்தை சிவன். தன்னை தியானத்தில் பாவிக்கும் மாந்தரின் உண்மையான தகுதியை அறிபவன் எந்தை சிவன். உய்ந்து விண்ணுலக வாழ்வைப் பெற விரும்பும் ஞானியர் எந்தை சிவன் மேல் சிந்தையைப் பொருத்தித் தவம் செய்கின்றனர்.

#2519. பராபரன் ஆகலாம்

விண்ணவ ராலும் அறிவுஅறி யான்தன்னைக்
கண்ணற வுள்ளே கருதிடின் காலையில்
எண்உற வாகமுப் போதும் இயற்றிநீ
பண்ணிடில் தன்மை பராபர னாமே.

விண்ணவரும் அறியாத வேத விழுப்பொருள் எந்தை சிவன். காலைப் பொழுதில் கண்களை புறவுலகிலிருந்து விலக்கி அகத்தில் செலுத்தி அவனைக் காண வேண்டும். மூன்று பொழுதிலும் எந்தை சிவன் மீது எண்ணத்தைச் செலுத்தி வந்தால், மேலான பரன் ஆகும் தன்மை தானே வந்து சேரும்.

#2520. பொன்றாத போது புனைக் கழலோன்

ஒன்றாய் உலகுடன் ஏழும் பரந்தவன்
பின்தான் அருள்செய்த பேரருள் ஆளவன்
கன்றா மனத்தார்தம் கல்வியுள் நல்லவன்
பொன்றாத போது புனை கழலோனே.

ஒப்பார் இல்லாத ஓர் தனித்தலைவனாக உலகு எழும் பரந்து நிறைந்தவன் சிவன். தன் கஞ்சம் நிகர் திருவகளைத் தஞ்சம் அடைந்தவர்களுக்குத் தன் திருவருளை நிறைவாகத் தருபவன் சிவன். தன்னிடம் பிணங்காத நல்ல மனம் உடையவர்களின் அறிவில் பொருந்தி ஒளிவீசுபவன். வாடாத சகசிரதளத் தாமரையையில் தாள் பதித்த கழலோன் ஆவான் சிவன்.

2521. மன்று கண்டேன் அன்று நான்!

போற்றியென் றேன்எந்தை பொன்னான சேவடி
ஏற்றியே தென்றும் எறிமணி தான்அகக்
காற்றின் விளக்கது காயம் மயக்குறும்
ஆற்றலும் கேட்டது மன்றுகண் டேனே.

“எந்தை தன் பொன்னடிகள் போற்றி!” என்றேன்! நான் அவன் திருவடிகளைப் போற்றுகையில், காற்றினால் அமைந்த என் உயிர் விளக்குச் சுடர் விட்டு ஒளி வீசியது. உடலுக்கு இன்பம் தரும் ஓர் இனிய நாதம் கேட்டது. அப்போது நான் என் ஈசன் ஆனந்த நடனம் செய்யும் மன்றிலைக் கண்டேன்!

2522. கண் மூடிக் கண்டேன் ஏழுலகு!

நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக் காரும் உணர்ந்தறி வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்
மூடிக்கண் டேனுல கேழுங்கண் டேனே.

எனக்குள் உறையும் என் நந்தி பெருமானைத் தேடினேன். தேடி அவனை நான் கண்டு கொண்டேன். உள்ளத்தில் உறையும் சிவனைத் தேடாதவர்கள் அவனை என்றுமே காண முடியாது. யோக சாதனை மூலம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களையம் கடந்து மேலே சென்றேன். உச்சித் தொளையை அடைந்தேன். மூடிய கண்களுக்குள் அவன் திருக் கோலத்தைக் கண்டேன். அங்கு நான் ஏழு உலகங்களையும் கண்டேன்.

#2523. வானத்தை உடலாகும் வீரன்

ஆன புகழும் அமைந்த தோர் ஞானமுந்
தேனு மிருக்குஞ் சிறுவரை யொன்றுடண்
டூனமொன் றின்றி யுணர்வுசெய் வார்கட்கு
வானகஞ் செய்யு மறவனு மாமே.

எந்தை சிவனைப் புகழுவதால் உண்டாகும் ஞானமும், சிவானந்தம் என்னும் இனிய தேனும் இருக்கின்ற சகசிர தளத்தை அறிந்து கொண்டு, தன் உடலைக் கடந்து சென்று , அங்கு தன் நினைவைப் பதித்தவருக்கு வானத்தை உடலாகக் கொண்ட வீரன் விளங்குவான்.

#2524. சாந்தி புக்கு அமைவர்

மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தந்
தாம்மதி யாகச் சகமுணச் சாந்திபுக்கு
ஆம்மல மற்றார் அமைவுபெற் றாரே.

மாதவம் செய்த முனிவர், மாமதி பெற்று, முழுமதி போல ஒளிர்வர். தூயமதி படைத்த அவர்கள் பரமானந்தத்தில் விளங்குவர். சிவ அறிவில் தம் சீவ அறிவினைப் பொருத்திப் பெறுவதற்கு அரிய உபசாந்தம் என்னும் விருப்பு வெறுப்பு அற்ற சாந்த நிலையை அடைவார்கள். சீவனைப் பீடித்திருந்த மலங்கள் அனைத்தும் அகல, இறையின் திருவடிகளில் அரிய அமைதி பெறுவார்.

#2525. திதம் உற்றவர் சிவசித்தர்

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு
இதமுற்ற பாச இருளைத் துரந்து
மதம்அற்று எனதுயான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே.

சாலோகம், சாமீப்யம், சாரூபம் என்ற மூன்று பதமுக்தியையும் நீக்கிவிட்டு; பாசம் என்னும் இருளைத் துறந்து விட்டு; ஆணவ மலத்தை அழித்து விட்டு; 'யான்', 'எனது' என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களைத் தொலைத்துவிட்டு; சிவத்துடன் பொருந்தி இருப்பவர்கள் சிவசித்தர் ஆவர்.

#2526. சதாசிவத் தன்மை பெறுவர்

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே.

சித்தர்கள் சிவத்தை கண்டறிந்தவர்கள். சித்தர்கள் சுத்த மாயை, அசுத்த மாயைகளில் தோய்த்து இருந்த போதிலும், தாமரை இலைத் தண்ணீர் போல அவற்றுடன் ஒட்டாதவர்கள். இவர்கள் முக்தர்கள். சாயுச்சிய முக்தியை பெற வல்லவர். மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தியை வசப்படுத்தியர்கள். இவர்கள் சதாசிவன் ஆகும் தன்மை பெற்று, உருவத்தில் பொருந்தி இருந்தாலும் அருவமாக விளங்குபவர்.

எட்டாம் தந்திரம் -
31. அஷ்டதளக் கமல முக்குணஅவத்தை

அஷ்ட தளக் கமலம் = எட்டு இதழ்த் தாமரை
முக்குணம் = இராசதம், தாமசம், சத்துவம்
அவத்தை = நிலை
தலையைச் சுற்றியுள்ள எட்டு இதழ்த் தாமரை மலரில்,
சீவன் முக்குணங்களால் அடையும் நிலை.

#2527. அகத்திலும் அஷ்ட திக்பாலகர்கள்

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன்நல் வாயு
மதிக்கும் குபேரன் வடதிசை யீசன்
நிதித்தெண் டிசையு நிறைந்துநின் றாரே.

வெளியில் உள்ள அட்ட திக்பாலகர்களைப் போலவே உடலின் உள்ளும் எண்மர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கிழக்கு திசை ....இந்திரன்
தென்கிழக்கு மூலை ......அக்கினி
தென்திசை...............இயமன்
தென்மேற்கு திசை........நிருதி
மேற்கு திசை.............வருணன்
வடமேற்கு திசை ....வாயு
வடக்கு திசை.............குபேரன்
வட கிழக்கு திசை ....ஈசனார்

#2528. ஒருங்கிய சோதியை ஓர்ந்து எழுமின்

ஒருங்கிய பூவுமோர் எட்டித ழாகும்
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே.

மாயா புரியாகிய உடலில் தலையைச் சுற்றி எட்டு திசைகளைக் காட்டும் எட்டு இதழ்த் தாமரை உள்ளது. தலையின் உள்ளே சுடர் விடும் சோதியாகிய சிவனை நினைந்தபடிச் சிறிய வீணா தண்டின் நடுவே உள்ள சுழுமுனை நாடி வழியே நீங்கள் மேலே எழும்புங்கள். அது உங்களை உய்விக்கும்.

#2529. தூல உடல் ஒரு கனவே!

மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்
எட்டல ருள்ளே இரண்டலர் உள்ளுறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங் கனாவே.

கவிழ்ந்த சகசிர தளத்தில் கதிரவன், திங்கள், அக்கினி என்ற மூன்று கலைகள் உள்ளன. இறைவன் தன் சுடரொளியைப் பாய்ச்சி ஆயிரம் இதழ் தாமரையையும் அந்த மூன்று கலைகளையும் நன்கு விரிவடையச் செய்கின்றான். அந்த நிலையில் தூல உடல் இருந்தும் இல்லாமல் ஒரு கனவு போல ஆகிவிடும்.

2530. விழுப்பொருள் விளங்கும்

ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொண்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுபொருள் தானே.

உடலின் ஆறு ஆதாரங்களின் வழியே நீர் போலப் பாய்ந்து செல்லும் உணர்வு. இது பிரமரந்திரம் என்னும் குளத்தைச் சென்று அடையும். இந்த ஆறு ஆதாரங்களையும் ஒருமுகப் படுத்தும் பயிற்சியே நூறுதல் என்னும் பிழிதல். இந்த நுண்ணிய நிலையில் சிவகதி அமைந்துள்ளது. பிரமரந்திரத்தில் குவிமுலை நுண்கொடி இடையாள் குண்டலினி சக்தியும் அவளில் இருந்து வேறாகிய சிவமும் இருப்பர்.

#2531. முகையெட்டும் உள்நின்று உதிக்கின்றவாறே.

திகையெட்டும் தேரேட்டும் தேவதை எட்டும்
வகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானை
வகையெட்டு நான்குமற் றாங்கே நிறைந்து
முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே.

ஆதி பிரான் சிவன் தானே எட்டுத் திசைகளாகவும், எட்டுத் தேர்களாகவும், எட்டுத் தேவதைகளாகவும், எட்டு மூர்த்திகளாகவும் பிரிந்து நிற்பவன். அவனுடன் ஐந்து கன்மேந்திரியங்களாலும், ஐந்து ஞானேந்திரியங்களாலும், இவற்றுடன் மனம், புத்தி என்ற இரண்டும் சேர்ந்த பன்னிரெண்டாலும் பொருந்தி நில்லுங்கள். அப்போது உலள்ளே இருக்கும் எட்டு இதழ்த் தாமரை வெளி முகமாக மலரும்.

#2532. பரநிலை, பராபர நிலை

ஏழுஞ் சகளம் இயம்பும் கடந்து எட்டில்
வாழும் பரமென்று அதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே.

எட்டு திசைகளில் கிழக்கு முதலாக வடக்கு வரையில் உள்ள ஏழு திசைகளும் சீவனின் உருவம் பொருந்தும் நிலைகள். எட்டாவது திசையாகிய ஈசான திசையில் பரம் ஆசிய ஈசானன் உள்ளான். நடுவில் ஒன்பதாவது நிலையில் பரம் அப்பறம் ஆகிய சதாசிவம் உள்ளது. மேல் நோக்கி நிமிர்ந்த பத்தாவது நிலையே ஆணவம் அற்ற ஆன்மா சிவத்துடன் பொருந்தி இருக்கும் சீரிய நிலை ஆகும்.

2533. ஊழி உச்சியில் பகவன்

பல்லூழி பண்பன் பகலோன் இறையவன்
நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற வூழிகள்
செல்லூழி அண்டத்துக் சென்றவவ் வூழியுள்
அவ்வூழி யுச்சியு ள்ஒன்றிற் பகவனே.

பல ஊழிகளைச் சீவர்களின் நன்மைக்காகச் செய்பவன் சிவன். அவனே சிவசூரியனும் ஆவான். அவனே இறைவனும் ஆவான். நிவிருத்தி முதலிய ஐந்து கலைகளில் சிவன் செய்யம் சம்ஹாரம் அண்டகோசத்திற்குள் நிகழ்வது. ஊழியிலும் இருந்து கொண்டு ஊழியைக் கடந்து நிற்கும் தன்மை உடையவன் சிவன்.

#2534. பரமாகாசத்தில் பரமனைப் பற்றுங்கள்

புரியும் உலகினிற் பூண்டவெட் டானை
திரியுங் களிற்றொடு தேவர் குழாமும்
எரியு மழையும் இயங்கும் வெளியும்
பரியுமா காசத்திற் பற்றது தானே.

சிவன் செயல் புரிவது இந்த உலகினில் என்றாலும் அவன் இங்கு இருந்து கொண்டு எட்ட முடியாதவன். அவனைப் பற்றிக் கொள்வதற்கு உகந்த இடம் எது என்று அறிவீரா? திக்கு யானைகள் இருக்கின்ற, தேவர்கள் திரிகின்ற, மழையும், வெய்யிலும், காற்றும் இயங்குகின்ற பரமாகாசம் ஆகும்.

#2535. சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரை

ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே.

சீவனின் தலை உச்சியில் உள்ள மேருவின் சிகரத்தில், ஆறுகள் இல்லாமலேயே நிறம்புகின்ற பிரம்மரந்திரம் என்ற அரிய குளம் ஒன்று உண்டு. அங்கே சேறு இல்லாமலேயே, உடலின் ஆறு ஆதாரங்கள் என்ற செழுங் கொடியில் மலர்ந்த, சகசிரதளம் என்ற தாமரை உள்ளது. ஒளிக் கற்றைகளை உடைய புரிசடையான் சிவன் அந்தத் தாமரையை அன்றி வேறு மலரைச் சூடிக் கொள்ள மாட்டான்.

#2536. விகிர்தனை நாடும் திருவுடையவர்

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்று மிருந்தும் விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவுடை யோரே.

மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் ஒருங்கி அடங்கிய ஒருவர் நின்றாலும், இருந்தாலும், உலக இயலை அலசினாலும், ஐம்புலன்களை வென்ற காரணத்தால் எப்போதும் விகிர்தன் சிவனையே நாடுவர். அவர்கள் செல்லும் போதும், இருக்கும் போதும், சிவனையே இடையறாது நாடுவதால் திருவுடையவர் ஆவர்.

எட்டாம் தந்திரம் -
32. நவாவத்தை, நவாபிமானி

நவாவத்தை = ஒன்பது வித அவத்தைகள்
அவத்தை = உணர்வுநிலை
சீவனின் ஒன்பது அவத்தைகள்:
சீவ சாக்கிரம், சீவ சொப்பனம், சீவ சுழுத்தி,
பர சாக்கிரம், பர சொப்பனம், பர சுழுத்தி,
சிவ சாக்கிரம், சிவ சொப்பனம், சிவ சுழுத்தி.
நவாபிமானி = இந்த ஒன்பதிலும் அபிமானம் உடையவன்.

#2537. ஒன்பது நிலைகளில் சீவனின் பெயர்கள்

தொற்பத விசுவன் தைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கர்ப்பன் அவ் யாகிர்தன்
பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே.

துவம்பத நிலையில் உள்ள சீவனின் பெயர்கள்: விசுவன், தைசதன், பிராஞ்ஞன். தற்பர நிலையில் உள்ள சீவனின் பெயர்கள்: விராட்டன், இரண்ய கர்ப்பன், அவ்யாகிர்தன். அசி பதத்தில் உள்ள சீவனின் பெயர்கள்: இதயன், பிரசாபத்தியன், சாந்தன்.

1. விசுவன்...சாக்கிர நிலையில் பருவுடலைப் பற்றிய சீவன்
2. தைசதன்...கனவு நிலையில் நுண்ணுடலைப் பற்றிய சீவன்
3. பிராஞ்ஞன்...சுழுத்தியில் காரணவுடலைப் பற்றிய சீவன்

4. விராட்டன்...பரு உடலுக்குக் கர்த்தா = உலகின் முதல்வன்.
5. இரண்யகர்ப்பன்...பொன்னிற வண்ணன் = சூக்கும உடலுக்கு கார்த்தாவானவன்
6. அவ்யாகிர்தன் = பிரிக்கப்படாதவன்
7. இதயன் = தாமத குணத்தைப் பற்றி நிற்பவன்
8. பிரசாபத்தியன் = இராசத குணத்தைப் பற்றி நிற்பவன்
9. சாந்தன் = சத்துவ குணத்தைப் பற்றி நிற்பவன்.

#2538. சீவன் சிவனுடன் பொருத்த வேண்டும்.

நவமாம் அவத்தை நன்வாதி பற்றில்
பவமாம் மலம்குணம் பற்றறும் அற்றால்
தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவம் ஆர் துரியம் சொருபம் அதுஆமே.

சீவனின் நவாவத்தைகள் ஆகிய ஒன்பது நிலைகளையும் கடந்து செல்ல வேண்டும். பிறவிக்கு காரணம் ஆன்மாவைப் பற்றியுள்ள மலங்களும் குணங்களும் ஆகும். அவற்றின் பிடியிலிருந்து விடுபட வேண்டும். அரிய தவத்தினால் அடையக் கூடிய, என்றும் மாறாத, அறிவு மயமாகிய ஞானவெளியில் சீவன் சிவனுடன் துரியத்தில் வேறுபாடுகள் இன்றிப் பொருந்த வேண்டும். இதுவே சீவனின் உண்மைச் சொரூபம் ஆகும்.

#2539. சீவன் சிவமாகித் தான் அல்ல ஆகும்.

சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதந்
தவமான மவையாகித் தானல்ல வாகுமே.

சிந்தையில் சிவனைப் பதித்திருப்பதால் சீவனின் தனித் தன்மை அழிந்துவிடும். பவமான பிறவிக்கு காரணம் ஆகிய மும்மலங்களும் ஒழியும். ஒன்பது அவத்தைகளில் இறுதியாகக் கூறப்பட்டது தவத்தினால் அடையமுடியும். அப்போது சீவன் சிவன் ஆகும் தன்மை கொண்டு விடும்.

#2540. சிவன் சீவனைத் தான் ஆகச் செய்வான்

முன்சொன்ன வொன்பானின் முன்னுறு தத்துவம்
தன்சொல்லில் எண்ணத்தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்
தன்செய்த வாண்டவன் தான்சிறந் தானே.

முன் சொன்ன நவாவத்தைகளைப் போலவே இன்னும் ஒன்பது அவத்தைகள் உள்ளன. இந்த பதினெட்டு அவத்தைகளையும் சீவன் ஒழித்துவிட வேண்டும். அப்போது சிவன், சீவனையும் சிவன் ஆக்கித் தானாகவே ஆக்கிவிடும்.

#2541. என் வல்வினை அறுப்பான்

உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரானென்னும் பண்பினை நாடி
அகந்து எம் பிரானென்பன் அல்லும் பகலும்
இகந்தன வல்வினையோடு அறுத் தானே.

தவத்தில் உயர்ந்தவர்கள் பொருட்டுச் சிவன் விரும்பத் தகுந்த பதினான்கு வித்தைகளை ஏற்படுத்தினான். நான் என்றும் அவன் உன்னத நிலையை நாடுவேன். அல்லும் பகலும் அவனை என் பிரான் என்று தேடுவேன். அவன் என் வலியை வினைகளை அவற்றின் மூலத்தோடு அழித்து விடுவான்.

#2542. நிலம் பல ஆறினன் நீர்மையன்

நலம்பல காலம் தொகுத்தன நீளம்
குலம்பல வண்ணம் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு கால நினையும்
நிலம்பல ஆறினன் நீர்மையன் தானே.

காலத்தின் நீண்ட வீதியில் அவனை அடையப் பல வேறு வழிகள் அமைக்கப் பட்டுள்ளன. அல்லும் பகலும் இடைவிடாது அவனையே உன்னுங்கள்! பல நிலங்களில் பல வடிவங்களில் நிலைத்திருக்கும் தன்மையான் ஆவான் நம் ஒப்பற்ற தலைவன்.

#2543. ஒன்பது பேதங்களாக நிற்பான்

ஆதி பராபரம் ஆகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநல் தத்துவம்
ஓதுங் கலை மாயை ஓரிரண்டு ஓர் முத்தி
நீதியாம் பேதம் ஒன்பானுடன் ஆதியே.

ஆதியாகிய பராபரம், பராபரை, சோதி வடிவான பரம், சீவன், தத்துவங்கள், கலைகள், சுத்த மாயை, அசுத்த மாயை, வீடு பேறு என்ற ஒன்பது பேதங்களாக ஆகி நிற்பான் ஆதி பிரான் ஆகிய சிவபெருமான்.

#2544. தெளியார் பிறவி ஒழியார்!

தேறாத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறாத நரக சுவர்க்கமும் மேதினி
ஆறாப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்
வேறாத் தெளியார் வினையுயிர் பெற்றதே.

தேறாத என் சிந்தையைத் தெள்ளத் தெளிவித்தவன் சிவன். சுவர்க்கமும் நரகமும் வேறு வேறாக இருக்கும்படி அமைத்தவன் அவனே. ஆறாத பிறவியை உயிர்களுக்கு அருளியவனும் அவனே. இந்த உண்மைகளைத் தெளிவாக அறியாதவர்கள் தொடரும் பிறவிகளை ஒழிக்க மாட்டார்கள்.

#2545. சிவமாதல் சித்தாந்த சித்தியே.

ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பால் பயிலும் நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே.

இந்த ஒன்பது அவத்தைகளையும் சீவன் விரும்பும். இந்த ஒன்பது அவத்தைகளிலும் சீவன் அபிமானத்துடன் பொருந்தும். இந்த ஒன்பது நிலைகளையும் கடந்து சென்று சீவதுரியம், பர துரியம், சிவதுரியம் இவற்றில் சிவத்துடன் பொருந்திச் சிவமாக ஆவதே, சித்தாந்தத்தினால் சீவன் அடையும் பயன் ஆகும்.

எட்டாம் தந்திரம் -
33. சுத்தா சுத்தம்

சுத்தா சுத்தம் = சுத்தம் + அசுத்தம்
சுத்தம் = அகத் தூய்மை இருப்பது
அசுத்தம் = அகத் தூய்மை இன்மை

#2546. ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்

நாசி நுனியினின் நான்குமூ விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே.

சீவனின் நாசி நுனியில் இருந்து ஈசன் பன்னிரண்டு விரற் கடை உயரத்தில் உள்ளான். எனினும் உலகினர் பலர் இதை அறிவதில்லை. சிவத்தை பற்றி விரிவாகப் பேசுகின்ற பெரிய வேதமும், ஈசனின் வடிவத்தை பற்றி விரிவாகக் கூறுவதற்குக் கூசி இருக்கின்றது. அதன் குணம் அதுவே ஆகும்.

#2547. கன்மக் கயத்துள் புகுமே.

கருமங்கள் ஒன்று கருதும் கருமத்து
உரிமையுங் கன்மமும் உன்னும் பிறவிக்கு
அருவினை யாவது கண்டு அகன்று அன்பிற்
புரிவன கன்மக் கயத்துள் புகுமே.

சீவன் புரியும் வினைகளின் பயன்கள், அவற்றைச் செய்பவன் மனக்கருத்தையும், அவன் விரும்பும் கர்ம பலனையும் பொறுத்து அமைகின்றன. இந்த வினைகளும், வினைப் பயன்களும் சீவனின் பிறவி தொடருவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. இந்த உண்மையை அறிந்து கொண்ட சீவன், எந்தப் பயனையும் விரும்பாமல், எந்த உரிமையும் கொண்டாடாமல், அன்பால் மட்டும் செய்யும் நல்ல வினைகள் அந்த சீவனின் கர்மத்தை அழித்து விடும்; பந்தத்தை நீக்கிவிடும்; பிறவியை ஒழித்து விடும்.

#2548. காயமும் இல்லை கருத்தில்லை தானே.

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லை கருத்தில்லை தானே.

மாயை ஒரு கனத்த திரையாகி சீவனின் உண்மை சொரூபமாகிய சிவத்தை அதனிடமிருந்து மறைக்கும். மாயை என்னும் திரை விலகியவுடன் சீவனின் உண்மை சொரூபம் ஆகிய சிவம் வெளிப்படும். மாயையை மறையச் செய்ய வல்லவர்களுக்கு உடலும் இல்லை, மனமும் இல்லை, பிறவி எடுக்கும் எண்ணமும் இல்லை.

#2549. வலிய சாதனையின் பயன்

மோழை யடைந்து முழைதிறந் துள்புக்குக்
கோழை யடைகின்றது அண்ணற் குறிப்பினில்
ஆழ அடைத்து அங்கு அனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே.

யோகப்பயிற்சியால் பிராணனைப் புருவ மத்தியை அடையச் செய்ய வேண்டும். உடலில் கோழை வந்து அடைக்கின்ற உண்ணாக்கு வழியை மேல் நோக்கித் திறக்க வேண்டும். கபாலத்துக்குச் செல்லும் வழியை அடைந்து அங்கு பிராணனைக் கீழே இறங்கி விடாமல் சிறைப் படுத்த வேண்டும். குண்டலிலி சக்தியின் அக்கினிக் கலையை நன்கு வளர்த்த வேண்டும். குண்டலினி தாழ்வான உலக விஷயங்களை பற்றிக் கொண்டு கீழே செல்லத்தவாறு தடுத்து நிறுத்துவதே வலிய சாதனையின் பயன் ஆகும்.

#2550. காயத்தினுள்ளே கமழ்கின்றான் நந்தி!

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே.

சீவனின் உடலில் ஒன்றாகக் கலந்து உறைபவனை, சீவனின் உடலை உலகில் நடத்துபவனை, சீவனின் உடலில் உயிரின் உயிராக இருந்து கமழ்கின்ற சிவபெருமானை, புற உலகு எங்கும் வீணாகத் தேடித் திரிகின்றார்களே! அவர்கள் அந்த ஈசன் நேசத்துடன் தம் காயத்தில் உறையும் மாயத்தைச் சற்றும் அறியாதவர்கள்.

#2551. மானிடமே ஆசூசம் ஆகும்!

ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிகிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிந்தபின்
ஆசூசம் மானிடம் ஆசூசம் ஆமே.

“பிறரைத் தீண்டுவது தமக்குத் தீட்டு! தீட்டு!” என்று கூறுபவர் சிறிதும் அறிவிலார். தீட்டு ஏற்படுத்தும் இடத்தை அவர்கள் அறிந்திலர். தீட்டு என்ன என்பதை மெய்யாக அறிந்து கொண்ட பின்பு, மனித உடலே உண்மையில் பெரிய தீட்டு என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

#2552. ஆசூசம் இல்லாத தூயவர்கள்!

ஆசூச மில்லை அருநிய மத்தருக்கு
ஆசூச மில்லை அரனை அர்ச் சிப்பவர்க்கு
ஆசூச மில்லையாம் அங்கி வளர்ப்போர்க்கு
ஆசூச மில்லை அருமறை ஞானிக்கே.

தம்மை உள்ளபடி உணர்ந்து கொண்ட தத்துவ ஞானிகளுக்கு ஆசூசம் என்னும் தூய்மையின்மை என்பது கிடையாது.

சிவனைச் சிந்தையில் நிலைபெறச் செய்த மெய்யன்பர்களுக்கு ஆசூசம் என்னும் தூய்மையின்மை என்பது கிடையாது.

மூலத்தீயை வளர்த்து அக்கினிக்கலையை வளர்ப்பவர்களுக்கு ஆசூசம் என்னும் தூய்மையின்மை என்பது கிடையாது.

அருமறைகளை அறிந்து உணர்ந்து தெளிந்த ஞானிகளுக்கு ஆசூசம் என்னும் தூய்மையின்மை என்பது கிடையாது.

#2553. கழி பட்டவர் மட்டுமே காண்பர்!

வழிபட்டு நின்று வணங்கு மவர்ககுச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்கும்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணாதே.

யோகத்தின் வழியில் நின்று சிவனை வணங்குபவர்களுக்கு, உச்சிக்கு குழியில் உள்ள சகசிர தளம் சிறப்பாக அமையும். அங்கு ஒளி பெருகி, அவர்கள் தூய்மை அடைவார்கள். உலக இன்பம் என்ற பாழும் குழியில் விழுந்துவிட்ட மனிதர்கள் யோகங்கள் உணர்த்துகின்ற குறிகளில் சென்று பொருந்தார். வீணா தண்டின் நுனியில் பொருந்தியுள்ள கீழ் நோக்கிய ஆயிரம் இதழ்த் தாமரையை மேல்முகமாகச் செய்பருக்கே சிவன் விளங்கும்.

#2554. தூயமணி தூய ஒளிவிடும்!

தூய்மணி தூயனல் தூய ஒளிவிடும்
தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்
தூய்மணி தூயனல் தூயவு மாமே.

சிவன் தூய மணி நிறத்தினன்; அவன் அனலும் தூய்மையானது; அவன் தூய ஒளியுடன் மிளிர்வான்; இந்த தூய மணியின் வேரையும் ஆதாரத்தையும் எவரும் அறிகிலர். இந்தத் தூய மணியில் ஒளிரும் அக்கினியின் ஆதாரத்தை அறிந்து கொண்டவர்கள் தாமும் தூய்மை அடைவார்கள்.

#2555. தூயது வாளா நாதன் திருநாமம்

தூயது வாளா வைத்தது தூநெறி
தூயது வாளா நாதன் திருநாமம்
தூயது வாளா அட்டமா சித்தியும்
தூயது வாளா தூயடிச் சொல்லே.

தூய மௌனத்தில் உள்ளது தூய நெறியடையும் வழி.
தூய மௌனத்தில் உள்ளது தலைவனின் திருநாமம்.
தூய மௌனத்தில் உள்ளன அட்டமா சித்திகள்.
தூய மௌனத்தில் உள்ளன ஈசனின் திருவடிகள்.

#2556. மருளால் சிந்தை மயங்குகின்றாரே

பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்
சுருளது வாய்நின்ற துன்பச் சுழியில்
மருளது வாச்சிந்தை மயங்குகின் றாரே.

எந்தை சிவன் புண்ணியன்; நம்மால் விரும்பிப் பெறப்பட வேண்டியவன்; அடியவர் அவன் அருளை நாடி அவனைப் போற்றி நிற்கின்றனர். மற்றவர் பிறவித் தளையில் பிணிபட்டுச் சுவர்க்கம், நரகம், உலகம் என்று உழன்று திரிந்து துன்புறுகின்றார்கள். அவர்கள் மருளால் மயங்கிச் சிந்தைத் தெளிவு சிறிதும் இல்லாதவர்.

#2557. வினையாளர் விளைவறியார்!

வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்
வினையாளார் மிக்க விளைவறி யாரே.

மயக்கத்தில் உள்ள சீவர்கள், தம் வினைகளால் அசத்து ஆகிய மாயை வலுவடைந்து, தமக்குத் துன்பத்தைத் தருகின்ற உண்மையை அறியார். கொடிய வினைகள் நீங்கிச் செல்வதற்குச் சீவன் தூய ஞானத்தைத் தேட வேண்டும் என்ற உண்மையையும் அறியார். “வினைகளைத் துறந்து விட்டால் வீடுபேறு கிடைக்கும்!” என்று வேதம் கூறும் உண்மையையும் அறியார். வினைகளை புரியும் சீவர்கள் அதன் காரண காரியங்களை அறிய மாட்டார்.

எட்டாம் தந்திரம் -
34. முத்தி நிந்தை

முத்தி நிந்தை கூடாது
முத்தி என்னும் வீடுபேறு உண்மை அல்ல என்று இகழ்ந்து பேசுதல் கூடாது!

#2558. பரகதி என்று ஒன்று உண்டு!

பரகதி யுண்டென இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறும்
துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே.

பரகதி (வீடுபேறு) என்ற முத்தி நிலை என்று ஒன்று உண்டு என்று கூறும் போது, அப்படி எதுவும் இல்லை என்று மறுத்துப் பேசுபவர்கள் தவறாமல் நரகத்தைச் சென்று அடைவர் என்று இந்த ஞாலம் அறியும். மேலும் வாழும்போதும் அவர்கள் உணவுக்காகப் பிச்சையெடுப்பர். குதிரை போலத் தாவிச் சென்று உணவைத் தேடி அலைவர்.

#2559. பரிசறிந்து பாடகில்லார்!

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்து
ஆடவல் லாரவர் பேறிது வாமே.

குருநாதன் காட்டிய வழியில் சென்று சிவத்துடன் கூட மாட்டார்கள்! இறைவன் அருளை நாடாமல் அலங்காரமாகப் பேசிக்கொண்டு திரிவார்கள். சீவர்களுக்குச் சிவன் செய்யும் நன்மையை எண்ணித் துதித்துப் பாடவும் மாட்டார்கள். இங்கனம் இறைவனைக் குறித்து ஆடவும் பாடவும் செய்யாதவர் இந்த பெரிய பேற்றை எய்துவாரோ?

#2560. இங்கு இது என்ன என்கின்றானே!

புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைப் தெய்வமென் றெண்ணி
அறப்பட்ட மற்றப் பதியென் றழைத்தேன
இறப்பற்றி னேன்இங் கிதென்னென்கின் றானே.

என் உள்ளத்தின் எண்ண ஓட்டம் வெளியே செல்வதும் பின்னர் மீண்டும் திருப்புவதும் ஆக இருந்தது. அது அவ்வண்ணம் செய்யாமல் தடுத்து நிறுத்தினேன். என் உள்ளத்தைச் செம்மையாக்கிச் சிவன் மீது செலுத்தினேன். அவனை "என் தலைவா!" என்று அழைத்தேன். என் உயிர் அறிவு கெட்டு ஒழியும்படி அவன் வெளிப்பட்டான். "இங்கு இது என்ன?" என்று என்னைக் கேட்டான்.

#2561. அடலெரி வண்ணன் அங்கு நின்றான்

திடரிடை நில்லாத நீர்போல் ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லா கலஞ்சேரு மாபோல்
அடலெரி வண்ணனும் அங்குநின் றானே.

மேடான நிலத்தில் தண்ணீர் தங்கி இராது! அதை போன்றே உடலில் பொருந்தி நிற்காமல் ஓடிவிடும் என் உள்ளத்தில் சிவன் தன் அருளைக் கூட்டினான். கடலில் நின்று விடாமல் கரையை நோக்கிச் செல்லும் மரக்கலம் போல என்னைச் செலுத்திப் பிறவிக் கடலில் இருந்து கரை ஏற்றுபவன் நெருப்பின் செம்மை நிறம் கொண்ட என் சிவபெருமான்.

#2562. தாமரை நூல்போல் தடுப்பார்

தாமரை நூல்போல் தடுப்பார் பரத்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணாக் கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே.

நீர்நிலையைக் கடப்பவரைத் தாமரைக் கொடி தடுக்கும். அது போலவே பரகதி நாடுபவரைச் சிலர் தடுப்பர். சிவத்தை அடையும் வழி வெளி உலகில் உள்ளது என்று கூறித் திரிவர். வீடுபேற்றை அடையும் வழியைக் காட்டினாலும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்த மூடர்கள் தீ நெறியைத் தேடி திரிபவர்கள்.

#2563. ஊடும் உருவினனை உன்னுவீர்!

மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையுங் கழனி கடந்தோறும்
ஊடும் உருவினை யுன்னகி லாரே.

அறியாமை இருளினால் மூடப்படாத ஞானியர்கள் சிவத்தைச் சிந்தையில் பொருத்தி அவனுடன் கூடி இருப்பார்கள். அறியாமையில் அழுந்திக் கிடைப்பவர்களோ எனில் காட்டிலும், மேட்டிலும், மலையிலும், கழனியிலும் ஊடுருவி நிற்கும் ஒப்பற்ற சிவனை எண்ணுவதில்லை அன்றோ !

#2564. சீவன் செல்லும் திசைகள்

ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவார் குடக்கும் குணக்கும் குறிவழி
நாவினின் மந்திர மென்று நடுவங்கி
வேவது செய்து விளங்கிடு வீரே.

உடலை விட்டுப் பிரிந்த பின்பு ஆன்மா தெற்கு நோக்கி நரகத்துக்கோ அல்லது வடக்கு நோக்கிச் சுவர்க்கத்துக்கோ செல்லும். அழியாத அமரத்தன்மை பெற்றவர்கள் ஓர் உண்மையை அறிவர். அறிவு உதயமாவது புருவ மத்தியாகிய கிழக்கு திசை ! அறிவு மறைவது பிடரிக் கண் ஆகிய மேற்கு திசை . இந்த இரண்டிற்கும் நடுவே, நாவுக்கு மேலே, பிரமரந்திரத்தில், உள்ளது ஒரு மந்திரப் பொருள். அமரத் தன்மை வாய்ந்தவர்கள் உடலில் உள்ள அக்கினிக் கலையை நன்கு வளர்த்துப் பிரமரந்திரத்தில் உள்ள சிவனுடன் பொருந்தி விளங்குவர்.

#2565. வல்வினை தாங்கி நிற்பார்

மயக்குற நோக்கினும் மாதவஞ் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்லினை தாங்கிநின் றாரே.

அழகிய பெண்கள் மயக்கம் தரும் பார்வையால் நோக்கினாலும் மாதவம் செய்பவர் அவர்களிடம் மயங்க மாட்டார். அவர்களை தீவினையாளர்கள் இழிவாகப் பேசினாலும் அதை நினைவில் கொள்ளார். ஆனால் இந்த ஞானிகளைத் தாறுமாறாகப் பேசியவர்கள் தம் செய்த தீவினையால் வல்வினைகள் வந்து தம்மைப் பொருந்திடும் வண்ணம் வருந்துவர்.

எட்டாம் தந்திரம் -
35. இலக்கணாத் திரயம்

இலக்கணா = லக்ஷணா
திரயம் = மூன்று
ஒரு பொருளின் இலக்கணையை மற்றொன்றுக்கு கூறுவது.
இது மூன்று வகைப்படும். அவை....

1. விட்ட இலக்கணை,
2. விடாத இலக்கணை,
3. விட்டும் விடாத இலக்கணை.

1. விட்ட இலக்கணைக்கு உதாரணம்:

கங்கையில் உள்ள சிற்றூர்.
இதில் 'கங்கை' என்ற சொல் கங்கை ஆற்றைக் குறிக்கவில்லை!
கங்கைக் கரையைக் குறிக்கின்றது!

2. விடாத இலக்கணைக்கு உதாரணம்:

அங்கே சிவப்பு ஓடுகின்றது!
இதில் 'சிவப்பு' என்பது சிவப்பு நிறக்குதிரையைக் குறிக்கும்.

3. விட்டும் விடாத இலக்கணைக்கு உதாரணம்:

அந்த தேவதத்தன் தான் இவன்!
முன்பு தேவதத்தனைப் பார்த்த காலத்தைக் கூறாமல் விட்டுவிட்டு பார்த்த மனிதன் தேவதத்தனை விட்டு விடாமல் குறிக்கின்றது.

#2566. இலக்கணாதீதம் சொரூபமே

**விட்ட இலக்கணைதான்போம் வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணா தீதம் சொருபமே.**

"ஆன்மா வானத்தில் செல்லும்!" என்பது 'விட்ட இலக்கணை'.
ஏனென்றால் போக்குவரவு இல்லாதது ஆன்மா. இங்கு 'ஆன்மா' என்ற சொல் நுண்ணுடலைகே குறிக்கின்றது.

"ஆன்மா உபசாந்தத்தில் அமையும்" இது விடாத இலக்கணை.
ஏனென்றால் துன்ப நிலையில் இருந்த அதே ஆன்மா இன்ப நிலையில் பொருந்தியுள்ளது.

"ஆன்மா சத்தம் முதலியவற்றை உணரும்!" இது விட்டும் விடாத இலக்கணை.
ஏனென்றால் சத்தம் முதலியவற்றை ஆன்மா தானே உணருவதில்லை. அவற்றை ஆன்மா ஐம்பொறிகளின் வழியே உணர்கின்றது.

#2567. கதிர் எதிராகும்!

**வில்லின் விசைநாணிற்கோத்து இலக்கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன
வில்லுள் இருந்து எறி கூரும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிரெதி ராமே.**

சீவன், பிரணவம் என்ற வில்லில், புருவ மத்தியையும் பிடரிக் கண்ணையும் இணைக்கும் நாணைப் பூட்ட வேண்டும். இந்த நாணின் விசையால் அம்பினை இலக்கை நோக்கி எய்ததும் ஐம்பொறிகள் ஆகிய யானைகள் சாய்ந்து விழுந்துவிடும். பிரணவ வில்லில் இருந்து உயரச் சென்றவருக்குக் கதிர் வீசி ஒளிரும் நவமணிகள் போன்ற சிவன் வெளிப்படுவான்!

எட்டாம் தந்திரம் -
36. தத்துவமசி

தத்துவமசி வாக்கியம்
தத் + த்வம் + அசி = அது + நீ + ஆகிறாய் = அது நீ ஆகிறாய்!

#2568. தத்துவமசி உண்மையே.

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி யத்து அற்ற தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பதம்
ஓவி விடும் தத் துவமசி உண்மையே.

சீவன் சீவ துரியத்தில் பொருந்தித் தத்துவங்களைத் துறந்துவிட்டு நிலை தொம்பதம் ஆகும். சீவன் பர துரியத்தில் பரத்தோடு பொருந்தி ஒருப்பது தத் பதம் ஆகும். சீவன் சிவதுரியத்தில் சிவனுடன் பொருந்தி இருப்பது அசி பதம் ஆகும். இல்லாத தத்துவங்களையும் துறந்துவிட்ட சீவன் தத்துவமசியால் உண்மையான பேறு பெறும்.

#2569. தொந்தத்தசி தத்வமசியே.

ஆறா றகன்ற அணுத்தொம் பதஞ்சுத்தம்
ஈறான தற்பதம் எய்துப சாந்தத்துப்
பேறா கியசீவன் நீங்கிப்பிர சாதத்து
ஈறான தொந்தத் தசிதத்வ மசியே.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்துவிட்ட ஆன்மா பொருந்துகின்ற தொம்பதம் ஒரு தூயநிலை ஆகும். ஆன்மா உபசாந்த நிலையில் தத் பதம் என்ற நிலையைஅடையும். சீவன் இதனையும் கடந்து அ சி பதம் ஆகிய சிவகதியை அடையும்போது தொந்தத்தசி, தத்துவமசி இரண்டும் ஒன்றே ஆகும்.

#2570. சீவன் பரன் சிவனாமே.

ஆகிய வச்சோயம் தேவதத் தன்னிடத்து
ஆகிய விட்டு விடாத விலக்கணைத்து
ஆருப சாந்தமே தொந்தத் தசியென்ப
ஆகிய சீவன் பரன்சிவ னாமே.

விட்டும் விடாத இலக்கணையின் உதாரணம் “அவனே இந்த தேவதத்தன்” என்ற கூற்றினில் உள்ள ‘தொந்தத்தசி’ மூன்று பதங்களிலும் சாந்தம் அடைந்த சீவனுக்குப் பொருந்தும். அதனால் அந்த சீவன் பரனாகவும், சிவனாகவும், ஆகிவிடும்.

#2571. சித்தாந்தம், வேதாந்தம்

துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவைமன்னா வந்து வயத்தேகமான
தவமுறு தத்துவ மசிவே தாந்த
சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே.

‘துவம் தத் அசி’ என்பதும் ‘தொந்தத் தசி’ என்பதும் ஒன்றே ஆகும். வேதாந்தம் கூறும் தவப் பயன் “தத்துவமசி” அல்லது ” நீ அது ஆகிறாய்” என்பது. சித்தாந்தம் செப்புவது ”தத்துவமசி” அல்லது “நீ சிவம் ஆகின்றாய்” என்பது ஆகும். எனவே இவை இரண்டும் ஒரு பொருளைக் கூறுகின்றன!

#2572. பரம்பரமாம் உதிக்கும் அருநிலம்

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரமென்பர் ஆதர்இது அன்று என்னார்
உரிய பரம்பர மாமொன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே.

சீவ துரியத்தில் சீவன் அடையும் சொல்ல இயலாத சீவப்பாழையே மேலான பரம் என்பர் சிலர். உண்மையில் இது பர நிலை அன்று. இதற்கும் மேலே உள்ளது பரநிலை. அதற்கும் மேலே உள்ளது பரம் ஆகிய சிவன் உதிக்கும் நிலை. இந்த அரிய இடத்தை யார் அறிவாரோ?

#2573. உம் பதம் மும்பதமாகும்

தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துரி யத்துமே னாடவே
யும்பத மும்பத மாகும் உயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே

தொம்பதம், தத் பதம், அசி பதம் என்ற மூன்று நிலைகளில் சீவ துரியம், பர துரியம், சிவதுரியம் என்ற மூன்று துரியங்கள் பொருந்தும். இவற்றுக்கும் மேலே சீவன் சிவனை விருப்பும்போது 'உம்பதம்' ஆகிய 'தொம்பதம்' பக்குவம் அடையும். அதனால் சீவன், பரன் ஆகிப் பின்னர் சிவன் ஆகிவிடுவான்.

#2574. சொரூப ஆனந்தம்

வைத்த துரிய மதிற்சொரு பானந்தத்து
உய்த்த பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்
வைத்த படியே யடைந்து நின்றானே.

சிவ துரியத்தில் முடிவில் சொரூப ஆனந்தம் தோன்றும். அந்த நிலையில் பிரணவ உபதேசத்தை எண்ணி அமைந்திருங்கள். அப்போது மெய்யுணர்வு பொருந்தி இருக்கச் சிவன் தோன்றுவான்.

#2575. மன வாசகம் கடந்த மன்னன் சிவன்

நனவாதி ஐந்தையும் நாதாதியில் வைத்துப்
பினமா மலத்தைப் பின்வைத்துப் பின்சுத்தத்
தனதாஞ் சிவகதி சத்தாதி சாந்தி
மனவா சகங்கடந்த மன்னனை நாடே.

நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், துரியாதீதம் என்று ஐந்து நிலைகளையும் நாதத்தில் பொருத்தி வைக்கவும். ஆன்மாவைப் பீடித்துள்ள மலங்களை முற்றிலுமாகத் துறந்துவிடவும். தூய நிலையை அடையவும். மேலே செல்லப் பரதுரியத்தில் உபசாந்தம் அமையும். அதைக் கடந்த சிவதியில், மனமும் வாக்கும் எட்ட இயலாத நிலையில் இருக்கும் பரம்பரனாகிய சிவன் இருக்கின்றான். அவனை நாடுங்கள்.

#2576. காரணம் இன்றியே காட்டும் தகைமைத்து

பூரணி யாது புறம்பொன்றி லாமையின்
பேரணி யாதது பேச்சொன்றி லாமையின்
ஓரணை யாததுவொன்றுமி லாமையிற்
காரண மின்றியே காட்டுந் தகைமைத்தே.

இறைவனின் எல்லையைக் கடந்து வேறு ஒரு பொருள் இருக்க முடியாது. அது அனைத்தையும் தனக்குள் அடக்கிக் கொள்ள வல்லது. அதனால் 'இறைவன் இத்துடன் நிறைவு பெற்றுவிட்டான்!' என்று நம்மால் கூற முடியாது. அது பெயர் இல்லாதது. அது வாக்கைக் கடந்து குணம் குறிகளையும் கடந்து விளங்குவது.

அதற்குச் செய்ய வேண்டிய செயல் இல்லை. அதனால் அதை அணுகுவதற்கு இயலாதது. எந்தக் காரணமும் இல்லாமலேயே அது தன்னைத் தானே வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தது.

#2577. அனந்த ஆனந்தி ஆகும்

நீயது வானா யெனநின்ற பேருரை
ஆயது நானானேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே.

குருவின் உபதேசம் "நீ அது ஆனாய்" என்பது. அதையே மாணவன் பாவிக்க வேண்டிய முறை " அது நான் ஆனேன்"என்பது ஆகும். அப்போது மாணவனின் பாச பந்தங்கள் நீங்கும். சிவன் அருளால் மாணவன் தானும் சிவமாகி விளங்குவான். அழிவில்லாத ஆனந்தத்தை அடைவான்.

#2578. ஓம் மயம் ஆகும்!

உயிர்பர மாக உயர்பர சீவன்
அரிய சிவமாக அச்சிவம் வேதத்
திரியிலுஞ் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற ஓம்மய மாமே.

சாதனையால் சீவன் பரம் ஆனது. பரம் பின்னர் சிவம் ஆனது. மூன்று வேதங்களும் அறிந்து கொள்வதற்கு அரியவன் ஆன அந்தச் சிவன் பராபரன் ஆவான். இவன் சீவர்களுக்கு வெறும் சொற்களால் உணர்த்த முடியாத உயர்ந்த பிரணவ வடிவு ஆனவன்.

#2579. சீவன் சிவகதி அடையும்

வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்கும்
தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி
சேய்நா டொளியெனச் சிவகதி யைந்துமே.

பிரணவம் உடலில் வாய் (உண்ணாக்கு), நாசி, புருவமத்தி, நெற்றி, தலையுச்சி என்ற ஐந்து இடங்களில் விளங்கும். சகலநிலையில் சுழுமுனை என்னும் தாய் நாடியில் விளங்குகின்ற நாதம் முதலான தத்துவங்கள் ஒளியாக மாறி இந்த ஐந்து இடங்களிலும் சென்று பாயச் சீவன் சிவகதியை அடையும்.

#2580. பிரிவறியாத பிரான் சிவன்

அறிவறி யாமை இரண்டும் அகற்றிப்
செறிவறி வாய்எங்கும் நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே.

சீவன் சிற்றறிவு படைத்தது. சிவன் பேரறிவு உடையவன். சீவனின் சுட்டறிவு, அறியாமை இரண்டையுமே சிவன் அகற்றி விடுவான். சிவன் செறிந்த அறிவின் வடிவமாக எங்கும் நிறைந்து இருப்பான். அவனை " என்னை விட்டுப் பிரிவதை அறியாத பிரானே!" என்று விரும்பிப் போற்ற வேண்டும். இதைச் செய்ய அறியாதவர் சிவனைத் தம்முடன் பொருத்திக் கொள்ளும் முறையை அறியாதவர்கள் ஆவர்.

#2581. அப்பும் அனலும் அறிவார்

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே.

உலகியல் அறிவு பெற்றவர் அறிவது அக்கினித் தத்துவமும் (உலக இன்பங்களை நாடச் செய்யும் மூலாக்கினியையும்) அப்புத் தத்துவமும்(நீர் வடிவாக வெளிப்படும் வீரியமும்) ஆகும். இவை அவர்களுக்குச் சுக துக்கங்களைத் தரும். தத்துவ ஞானிகள் அக்கினியைச் சிவனாகவும், நீரைச் சக்தி தேவியாகவும் காண்பர். எல்லாம் அறிந்த சிவன் சீவனோடு கலந்து இருந்து இதை புலப்படுத்தினால் மட்டுமே இது புலப்படும். இல்லாவிட்டால் சிற்றறிவு படைத்த சீவனால் பேரறிவு படைத்த சிவனை அறிந்து கொள்ள முடியாது.

#2582. பதியிற் பதியும் பரவுயிர்

அதீதத்துள் ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்துள் ளாகி அறிவிலோன் ஆன்மா
மதிபெற்று இருள்விட்ட மன்னுயி ரொன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே.

அதீதத்திற்குள்ளும் அதனைக் கடந்தும் விளங்குபவன் சிவன். அதீதத்தில் நுழையும் சீவன், அறிவையும் கருவிகளையும் இழந்தும் துறந்தும் ஒன்றும் அறியாத அஞ்ஞான நிலையில் இருப்பவன். மதி மண்டலம் விளங்கப் பெற்று அஞ்ஞான இருளை அகற்றிய பெருமை படைத்த சீவன் சிவனுடன் ஒன்றிச் சிவநிலையை அடையும். அந்த சீவன் பரம் என்ற பெயர் பெறும்.

#2583. கண்ணுதலான் கருணை

அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த தெல்லாங்
கடிதொழ காணன்னுங் கண்ணுத லானே.

சிவபெருமான் முன்னின்று தலை வணங்கி அவன் அடிகளைத் தொழுதேன். அவனும் என் முன்னர் வெளிப்பட்டு நின்றான். " முன்பு நீ என்னைத் தொழுதாய்! "நான் அது ஆனேன்" என்று என்னைக் குறித்து பாவித்தாய். அது இன்று மெய்ப்படுவதை பார்!"என்று எனக்கு அருள் செய்தான் கண்ணுதல் கடவுளான சிவன்.

#2584. நிமலன் சீவனின் மலம் நீக்குவான்

நின்மலன் மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவன் என்னடி யானென்று
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே.

நின்மலன், ஒளிரும் மேனி படைத்த நிமலன், பிறப்பு அற்றவன், பாசங்கள் அற்றவன்; என் மனதில் வீற்றிருந்து என்னைத் தன் அடியவன் ஆக்கிக் கொண்டவன், பொன் வண்ணம் உடைய பெருமான் என்னிடம், "நீ மலமற்று விளங்குவாய்" என்று சொல்லி என் மலங்களை நீக்கிவிட்டான்.

#2585. இறந்து பிறவாமல் ஈங்கு வைத்தானே.

துறந்துபுக் குள்ளொளிச் சோதியைக் கண்டு
பறந்ததென் உள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாவென்னை வானவர் கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே.

பாசப் பிணைப்புகள், ஆன்மதத்துவங்கள் அனைத்தையும் துறந்து நான் உடலில் உள்முகமாகச் சென்றேன். அங்கு ஒளிரும் சிவச்சோதியைக் கண்டேன். என் உள்ளம் உடலை விடுத்துப் புறத்தில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றது. ஆயினும் அவனை மறவாமல் அவன் அடிகளில் பணிவுடன் இருந்தேன். எனக்கு நிலவுகிலேயே மரணம் இல்லாத நீண்ட வாழ்வைத் தந்தருளினான் சிவன்.

#2586. இறைவன் ஆட்ட ஆடும் அகிலம்!

மெய்வாய் கண்மூக்குச் செவியென்னும் மெய்த் தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வா யியுரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலாநிறை எங்கும் மெய் கண்டதே.

மெய், வாய், கண், மூக்கு, செவி, என்ற ஐந்து ஞானேந்திரியங்களும்; மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும்; பிற ஆன்ம தத்துவங்களும்; எல்ல உயிரினங்களும்; இறையருளால் இயங்குபவை. எனினும் இவற்றை இயக்குவதற்குக் கைகளோ கூறுவதற்கு வாயோ இல்லாத சிவபிரான் தானே சீவர்களின் உடலாகவும், உயிராகவும், அறிவாகவும் நிறைந்து செறிந்து விளங்குகின்றான்.

எட்டாம் தந்திரம் -
37. விச்வகிராசம்

விச்வம் = உலகம்
கிராசம் = கவளம்.
விச்வ கிராசம் = உலக உயிர்ப்பு ஒடுக்கம்
இறைவனது பெரு நிலையில் அகிலம் கவளமாக விழுங்கப்படுத்தல்.

#2587. இவ்வுடற் போமப் பரத்தே.

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே.

வானத்தில் தோன்றும் நிழல் வடிவங்கள் வானிலேயே மறைந்துவிடும். நீரில் தோன்றும் நீர்க் குமிழில்கள் நீரிலேயே மறைந்து விடும். அது போன்றே தீயின் முன் உலா கர்ப்பூரம் தீயில் எரிந்து மறைந்து விடும். சிவத்தில் தோன்றிய சீவனின் உடல் சிவத்திலேயே சென்று ஒடுங்கி விடும்.

#2588. சிவசக்தியரோடு ஒன்றித் தானே பரமாம்

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்
படருஞ் சிவசத்தி தாமே பரமாம்
உடலைவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே.

ஒளி மயமான உயிருடன் பருவுடல் பிரிவின்றி ஒன்றிவிட்டால், சீவன் பர நிலை எய்தும். சிவசக்தியரோடு ஒன்றும். உடல் என்ற சிறையில் இருந்து விடுதலை பெற்ற சீவன், சிவத்தைப் போலவே எங்கும் பரவியும், விரவியும் நிறைந்திருக்கும்.

#2589. சராசரம் தவிர்க்க முடியாதது

செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந் திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்துங்
குவிவொன் றிலாமல் விரிந்தும் குவிந்தும்
தவிர்வொன் றிலாத சராசரந் தானே.

செவி, மெய், வாய், கண், மூக்கு என்ற ஐந்து பொறிகளும்; பக்குவம் அடையாத மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களுடன் புருடனும் சேர்ந்த ஐந்தும், உலக முகமாக குவிந்து விரிந்தும் இருக்கின்றன. இதனால் அசையும் ஆசையாப் பொருட்கள் நிறைந்த சராசரம் தவிர்க்க முடியாதது ஆகின்றது. காணும் பொருட்களின் மீது கருவிகள் விரிந்து செல்லும் போது உலகம் நிலைப்படுகின்றது. அகண்ட சிவத்தில் கருவிகள் குவியும் போது உலகம் மறைந்து விடுகின்றது.

#2590. உலகம் உண்டும் உமிழ்க்கும் வரம்

பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்கும்
திரனெங்கு மாகிச் செறிவெங்கு மெய்தும்
உரனெங்கு மாயுல குண்டும் உமிழ்க்கும்
வரமிங்ஙன் கண்டுயான் வாழ்ந்துற்ற வாறே.

முப்பத்தாறு ஆன்ம தத்துவங்களைத் துறந்து விட்ட ஆன்மா பரத்தின் நிலையை அடையும். யாண்டும் பரவிப் பொருந்தும். சிவனைச் சார்ந்து இருப்பதால் அவனைப் போலவே எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிடும். உலகத்த அழிக்கவும், ஆக்கவும், ஆற்றல் பெற்றதாகி விடும். நானும் சிவனருளால் இத்தகைய ஆற்றலைப் பெற்று வாழ்பவன் ஆனேன்.

#2591. வெட்ட வெளியனு மாமே

அளந்து துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரஞ்சகம் உண்ட தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ்சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனு மாமே

சீவன் துரியத்தில் அடைந்த தூயஅறிவினைத் துணையாகக் கொண்டு, உலக முகமாகச் சென்று தான் நுகர்ந்த அனுபவங்களை ஒழித்துத்; தெளிந்த பரம் சிவம் ஆகிவிட்டால் அவன் சிதாகாச வடிவினன் ஆகி விடுவான்.

#2592. நந்தி இதயத்துளானே.

இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒழிய விழுங்கி
இருந்தஎன் நந்தி இதயத்து ளானே.

தீயில் காய்ச்சிய இரும்பு தன் மீது விழும் நீரை உள்ளே இழுத்துக் கொள்ளும். அது போலவே சிவன் என்னை தனக்குள் வாங்கிக் கொண்டான். மேன்மையான பரம் கீழ்முகமாக நோக்குவது விட்டு விட்டு, வலிமை வாய்ந்த முப்பாழ்களையும் விழுங்கியது. அத்தகைய நந்திப்பெருமான் என் உள்ளத்தில் இருக்கின்றான்.

#2593. அகிலம் விழுங்கும் சிவபெருமான்

கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் னோதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமும் எல்லாம்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே.

யானை நோயால் பீடிக்கப்பட்ட விளாம் பழத்தில் ஓடு மட்டுமே இருக்கும் . கனியின் உள்ளே ஒன்றும் இராது. சிவன் முன்பு சீவனும் பரமும் இது போலவே விளங்குவர். சீவன் அரிய துரிய நிலையை அடைத்து விட்டால், சிவன் சீவனின் இயல்புகளை மாற்றித் தன்வசப்படுத்திக் கொள்வான்.

#2594. அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்

அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்
நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே யாந்தத்தே
நந்தி யிருந்தனன் நாமறி யோமே.

எல்லாத் தத்துவங்களின் முதலாகவும், முடிவாகவும் இருப்பவன் பராபரன் ஆகிய சிவன். அவனே அனைவரின் மேலான பரன் என்ற நிலையிலும் பொருந்தியுள்ளான். அவனை நெருங்கிச் செல்பவர்களின் பரத்தின் கீழான தத்துவங்களை அவன் உண்டு ஒழித்து விடுவான். இறுதியில் அவன் பரத்தையும் சீவனையும் ஆட்கொண்டு; ஞானம், ஞேயம், ஞாத்ரு என்ற மூன்றும் ஒன்றாகி விடும்படி செய்யும் உண்மையை நம்மால் அறிந்து கொள்ள முடியாது.

எட்டாம் தந்திரம் - 38. வாய்மை

வாய்மை = உண்மை
பொய்ப் பொருளை நீக்கி விட்டு மெய்ப் பொருளிடம் சென்று சேர்வது.

2595. செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே

அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் போலுங் கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற மாற்றிடின்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே

அருள்மொழிகளால் சீவன் மலம் நீங்கும் இயல்பு இத்தன்மை வாய்ந்தது. தீயில் புடம் இட்ட பொன் குற்றங்கள் நீங்கித் தூய்மை அடையும் சீவன் இறைவனைச் சிந்தையில் நிறுத்தித் தன் மலம் நீங்கும்படி தியானித்தால், அது செழுஞ் சுடராகத் திகழ்ந்து குற்றங்களை நீக்கிவிடும்.

#2596. எல்லாம் அறிந்த இறைவன் எனலாமே.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே.

எல்லாவற்றையும் அறியும் அறிவு வடிவானவன் சிவன். அவனை அறிவதை விட்டு விட்டு, வேறு உலகியல் பொருட்களை அறிந்து கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. 'எல்லாவற்றையும் அறியும் சிவன் தானே!' என்ற பாவனையில் இருக்கும் சீவன், தானும் எல்லாவற்றையும் அறியும் சிவனாகவே விளங்கும்.

#2597. கலை நின்ற கள்வன் சிவன்

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனை கண்டுகொண் டேனே.

தலையில் மீது உள்ள மேருமலையின் மீது இருந்து கொண்டு நான் இடைவிடாமல் தியானம் செய்தேன். நான் ஊன் பொருளாகிய உடலின் இயல்பைக் கடந்தேன். அருள் பொழியும் பார்வதி தேவியைத் தன் உடலின் ஒரு பாகத்தில்

கொண்ட சிவனை, சந்திர கலையில் ஒளிந்து நிற்கும் கள்வனை நான் கண்டு கொண்டேன்.

#2598. ஊனே உருகிய உள்ளம்

தானே யுலகில் தலைவ னெனத்தகும்
தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்
வானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றாமே.

'சிவன்' என்றதும் ஊனும் உருகும் உள்ளம் கொண்டவர்களின் சிறப்புக்கள் இவை. அவர் தானே உலகின் தலைவன் எனக் கூறும் தகைமை கொண்டவர்; அவர் தானே உலகுக்கு ஓர் தத்துவமாகி இருப்பர். அவர் காரணமாகவே உலகில் மாரி பொய்யாது பெய்யும் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றன வேதங்கள்.

#2599. அருள் பெற்ற காரணம் என்ன?

அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவோர் தாமே.

சீவன் சிவன் அருள் பெறக் காரணம் என்ன என்று வினவிடில் விடை இதுவே! பிரபஞ்சப் போரில், சிதறித் திரியும் சிந்தையை ஒன்றுபடுத்தி, அதைத் தன் வசப்படுத்தி, இவர் இறைவனிடம் செலுத்தினார். உலக மயக்கத்தில் உள்ள சிந்தையை மாற்றுவதற்கு ஒரே வழி சிவனின் சேவடிகளைப் போற்றி வழிபடுவது ஆகும்.

#2600. ஊழித் தலைவன் சிவன்

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்தன்னை
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனுமாய் நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே.

மெய்ப் பொருளில் கலந்து விட்ட அன்பர்களின் உடலிலும், உயிரிலும் பிரிவின்றிக் கலந்து நிற்பவன் சிவன். பொய்யான உலகத்தின் மீது பற்றுக் கொண்டவர்களின் முன்பு சென்று சேராதவன் சிவன். உய்கின்ற வழியினை நாடுபவரின் விருப்புக்களை அழித்து நிற்பவன் ஊழித் தலைவன் ஆன சிவன். மெய்யடியார்கள் உடலிலும், உயிரிலும் தானும் பொருந்தி அவர்தமக்கு பேரின்பத்தை விளைவிப்பவன் சிவன்.

#2601. கைக் கலந்தார் கருத்து உறலாம்.

**மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனை
கைகலந் தாவி எழும்பொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே.**

மெய்ப்பொருளாகிய சிவனுடன் பிரிவு இல்லாமல் இருப்பவனுடன் சிவன் ஒன்றாகக் கலந்து நிற்பான். பொய்ப்பொருளாகிய உலக இயலில் விருப்பம் கொண்டவருடன் சிவன் சேரமாட்டான். சுழுமுனை நாடியில் பொருந்தி உடலில் மேல் நோக்கிச் செல்பவர்கள், சுழுமுனை நாடியில் சிவனை எண்ணி இருந்தால் அவர்கள் சிவனுடன் பொருந்துவார்கள்.

#2602. ஐயனும் அவ்வழி யாகிநின் றானே.

**எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலை விதியது வாய்நிற்கும்
பொய்யும் புலனும் புகலொன்று நீத்திடில்
ஐயனும் அவ்வழி யாகிநின் றானே.**

சிவன் மேல் சிந்தையை நிறுத்திப் பகலும் இரவும் அவன் நம் உடலில் பொருந்தும்படி எண்ணி இருக்க வேண்டும். அப்போது அந்தப் பெருமான் நம் தலையின் மேல் சிறந்து விளங்குவான். புலன் வழி நடப்பதையும், பொய்யன உலகத்தில் நாட்டம் கொள்வதையும் துறந்து விட்டால், நாம் சிவனை நாடிச் செல்லும் அதே பாதையில் அவனே நமக்கு எதிர்ப்படுவான்!

#2603. உய்ய அருள் செய்த உத்தமன்

**எய்துவ தெய்தா தொழிவ திதுவருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன் சீர்நந்தி
பொய்செய்புலன் நெறியொன்பதுந்தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே.**

யோக சாதனையில் வெற்றி அடைவதும் அடையாததும் இறைவன் திருவருள் படி நிகழும்! ஆயினும் உத்தமன் நந்தி இந்த நெறியைச் சீவன் உய்வதற்காகச் செய்துள்ளான். பொய்யனை உலக வாழ்வு விளை நிலம் ஆகும் உடலில் உள்ள ஐம்பொறிகளுக்கு. ஒன்பது துவாரங்களை தாளிட்டுஅடைத்துவிட்டால், சீவன் மெய்யகிய வான் புரவியைக் கொண்டு சீவப் பிரயாணம் செய்யலாம்.

#2604. வேத முதல்வன் சிவன்

கைகலந் தானை கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்தன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே.

சிவன் சுழுமுனை நாடியில் கலந்து விளங்குபவன்; அன்பர்களின் சிந்தையில் சிறந்திருப்பவன்; அவர்கள் உடலிலும் கலந்து இருப்பவன்; மூலாதாரத்தில் நிலை பெற்று இருப்பவன்; வேத முதல்வன்; உலகப் பற்றுக் கொண்டவர்களிடம் வெளிப்படாதவன்; நின்மலமானவன்; இத்தகைய பெருமை வாய்ந்த இறைவன் பொய்யான உடல் பற்றினையும் உலகப்பற்றினையும் துறந்தவர்களுக்குப் புகலிடம் ஆவான்.

#2605. அதுவே பெரும் பேறு ஆகும்

மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டாருந் திறந்தறி வாரில்லை
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டுஅங்கு
அத்தாள் திறக்கில் அரும் பேற தாமே.

உண்மையான தன் திருவடிகளை அன்பர் மனத்தில் பொருத்தி வைப்பவன் நந்தி எம் பெருமான். அவனைச் சுழுமுனை வழிச் சென்று அங்குள்ள தாழ்ப்பாளைத் திறந்து காண்பவர் எவருமில்லை. துன்பத்தைத் தருகின்ற, உலகின் மீது கொண்ட பொய் பற்றுகளை நீக்கிச் சுழுமுனையைத் திறப்பவருக்குக் கிடைப்பதர்க்கு அரிய பெரும் பேறு கிடைக்கும்.

#2606. உணர்வினால் ஏத்துமின்

உய்யும் வகையால் உணர்வில் ஏத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றானே.

உய்வடைய விரும்பினால் சிவனை உங்கள் உணர்வால் போற்றி வழிபடுங்கள். அப்போது மெய்யான அரன் நெறி அங்கு நிலவும். திண்ணென்ற மன உறுதியுடன் பொய்யன உடலையும் உலகையும் ஒருவர் கடந்து விளங்கினால், அவரது சிரசில் சகசிரதளத்தில், தலைவன் சிவன் அந்தச் சீவனுடன் வேறுபாடு எதுவும் இன்றிப் பொருந்தி நிற்பான்.

#2607. செம்பொற் சிவகதி சென்றெய்தலாமே.

**வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டாது
அம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே.**

நறுமணம் கமழும் சகசிரதளத் தாமரை மலரில் ஓர் அரிய சிவக்கனி உள்ளது. சீவன் அந்தக் கனியை உண்ண விடாமல் தடுக்கின்றன விஷய வாசனைகள் என்னும் பறவைகள். அந்தப் பறவைகளைப் பிரணவ வில்லை வளைத்துச் சீவ சக்தி என்ற அம்பினால் விரட்டி விட வேண்டும். அப்போது சீவன் சிவக்கனியைச் சுவைக்கலாம்! செம்பொன் ஒளி வீசும் சிவகதியைச் சென்று அடையலாம்.

#2608. தூயவன் துயக்கறுப்பான்!

**மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத்தானைத் தொடர்மின்தொடர்ந்தால்
தியக்கஞ் செய்யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே.**

மயக்கத்தைத் தரும் ஐம்புலன் ஆசைகளை அறுத்து விடுங்கள்! மனக் கலக்கத்தை போக்கிய சிவனைப் பின் தொடருங்கள்! சிவனைத் தவிர வேறொரு தெய்வம் உண்டு என்று மயங்கி நிற்காதீர்கள். சிவனே என் இறைவன் என்று உறுதியாக அவனைத் தொடர்ந்தால் நான் உய்ந்து போகும்படி அவன் என்னைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

#2609. இருங்காயம் மேவும்!

**மனமது தானே நினையவல் லாருக்குக்கு
இனமெனக் கூறு மிருங்காய மேவல்
தனிவினில் நாதன்பால் தக்கன செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே.**

உள்ளத்தால் உலகத்தைப் பற்றிக் கொள்ளாமல், உள்ளத்தால் சிவனைப் பற்றிக் கொள்ளும் அன்பர்களுக்குச் சிவம் பதிந்துள்ள மேலான நுண்ணுடல் வந்து பொருந்தும். உலகத்தைப் பற்றி எண்ணாமல் சிவனைத் தியானம் செய்தால் ஞான பூமியில் தூய சிவன் அருள் பெறலாம்.

எட்டாம் தந்திரம் -
39. ஞானியின் செயல்

தன்னை உணர்ந்து கொண்ட ஞானி செய்ய வேண்டிய செயல் தன் முன்னை வினைகளைக் கடிதல் ஆகும்.

#2610. தன்னை அறிந்த தத்துவ ஞானிகள்

முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் ததுவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே.

முன்னைப் பழவினைப் பயன்கள் வந்து உற்றால் ஞானிகள் அவற்றை அனுபவித்துக் கழித்து விடுவர். இந்தப் பிறவியில் புதிய வினைகளும், வினைப் பயன்களும் சேராமல் பார்த்துக் கொள்வர். தன்னை உள்ளபடி அறிந்த இந்தத் தத்துவ ஞானிகள், நன்மை தராத ஐம்புலன்களை வசப்படுத்தி அடக்கி விடுவர்.

#2611. சென்னியில் வைத்த சிவன் அருள்

தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்பவர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியின் வைத்த சிவனரு ளாலே.

தன்னை உள்ளபடி அறிந்து கொண்ட தத்துவ ஞானிகள் சிவசிந்தனையால் பழ வினைகளைப் போக்கி விடுவர். சென்னியின் மேல் விளங்கும் சிவன் அருளால் இன்னும் புது வினைகள் வரும் முன்பே அவற்றை அழித்து விடுவர்.

#2612. மனவாக்குக் கெட்டவர்

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே.

மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணங்களின் செயலால் சீவனை வல்வினைகள் வந்து பற்றிக் கொள்ளும். சீவனின் இந்த முக்கரணங்கள் உலகினைப்

பற்றாமல் சிவனை பற்றி நின்றால் அப்போது சீவனுக்குப் புதிய வினைகள் எதுவும் வந்து சேராது. சாதனையால் மனம், வாக்கு, செயல் என்ற மூன்றையும் அழித்துவிட்டவர் வினைகளில் இருந்து விடுபடும் வழியினை அறிந்த ஞானி ஆவார்.

எட்டாம் தந்திரம் -
40. அவா அறுத்தல்

உலகப் பொருட்களின் மீது நாம் கொள்ளும் அவாவே நம் பிறவிக்குக் காரணம் ஆகின்றது. எனவே அவா அறுப்பது ஞானியின் முக்கிய கடமை ஆகும்.

#2613. ஈசன் இருந்த இடம் எளிதாமே.

வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி இருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே.

பிரம்மரந்திரத்தை நோக்கிச் செல்லும் 'வாசி' என்னும் பிராணவாயுவையும் , 'ஊசி' என்று சொல்லபப்டும் சுழுமுனையையும் பற்றி பேசுவதாலும் பிறருக்கு அவற்றைப் பற்றிக் கூறுவதாலும் எந்த பனும் விளையாது. உலகப் பொருட்களின் மேல் கொண்ட ஆசையையும், மக்கள் மேல் கொண்ட அன்பையும் அகற்றினால் ஈசன் இருக்கும் இடம் தெள்ளத் தெளிவாகவும் எளிதாகவும் தெரிந்து விடும்.

#2614. வேட்கை விட்டார் நெஞ்சில் உளான் சிவன்!

மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே.

சிவ பெருமான் இருக்கும் இடம் வீட்டுச் சுவரில் உள்ள மாடம் அல்ல; உயர்ந்த மண்டபங்கள் அல்ல; வீட்டில் உள்ள கூடம் அல்ல; அழகிய கோவில் அல்ல; வேடம் கொண்ட மனிதர்களின் கள்ள உள்ளம் அல்ல; ஆசைகளை அறுத்துவிட்ட அரிய மனிதர்களின் உள்ளத்தில் இருந்து கொண்டு அவர்களை இயக்கி முத்தி தருபவன் சிவன்.

#2615. ஆசையறுமின்கள்!

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே.

ஆசையை விட்டு விடுங்கள்; ஆசையை விட்டு விடுங்கள்; ஈசன் மேல் கொண்ட ஆசையையும் விட்டு விடுங்கள். சீவன் ஆசைப் படத் தொடரும் துன்பங்கள்! சீவன் ஆசைகளை விட விடப் படரும் தூய இன்பம்!

#2616. படுவழி செய்யும் பற்றறுங்கள்!

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானம்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே.

நுண்மையாக சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்தும் சீவனை உலக முகமாக இயங்கச் செய்கின்றன. சீவனுக்கு எண்ணற்ற துன்பங்களைத் தருகின்றன. சீவன் கூடவே இருந்துகொண்டு அதைத் தீய வழிகளில் செலுத்துகின்றான். எனவே பற்றுக்களைத் துறந்து விட்டு, ஆசைகளை அழித்துவிட்டு, மெய்ஞ்ஞானம் அடைவதே சீவன் தனனை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்வதற்கு ஏற்ற ஒரே வழி.

#2617. ஈசன் தரித்து நின்றான்

உவாக்கடல் ஒக்கின்ற வூழியும் போனது
உவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோர்
அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்து நின்றானே.

பௌர்ணமி நிலவில் பொங்கி எழும் கடல் போலப் பொங்கி உலகை அழித்த பல ஊழிகள் கடந்து சென்றன. இன்பம் துன்பம் என்ற இரு கடலில் ஆழ்ந்து இறந்தனர் வானோர் முதலிய வகையினர். ஆசைக் கடலில் அகப்பட்டு உலகில் பிறவியை விடாமல் உள்ளனர் உலகத்தோர். நிலையாக ஆனந்தக் கடலில் நின்று கொண்டுருப்பவன் ஈசன் ஒருவன் மட்டுமே.

#2618. அருள் நேரே பெறுபவர் ஞானியர்

நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
துந்தொழி லற்றுச் சுத்தம தாகலும்
பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்
துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே.

தொடர்ந்து வந்த பழைய வினைகளில் இருந்து விடுபட்டு; பாசத் தளைகளை அறுத்து எறிந்து விட்டு, நெடுங் காலம் செயல்கள் அற்று இருந்து; ஒரு சீவன் சுத்த நிலையை அடைகின்றது. ஈசனின் ஐந்தொழில்களைக் கடந்து நின்று அவன் அருளை பெறுகின்ற இத்தகைய சீவர் தூய ஞானி ஆவார்.

#2619. ஒண் சித்தி முத்தி ஆகும்

உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்
பெண்மயற் கெட்டறப் பேறட்ட சித்தியாம்
திண்மையின் ஞானி சிவகாயம் கைவிட்டால்
வண்மை யருள்தான் அடைந்தன்பில் ஆறுமே.

சீவன் தன் உண்மையான வடிவம் ஒளிமயமானது என்று அறிந்து கொண்டால் சீவனிடம் அறிவுடன் கூடிய சித்தியும் முத்தியும் உண்டாகும். பெண்ணாசையைத் துறந்து விட்டால் சீவனுக்கு அட்டமா சித்திகளும் கைக் கூடும். உண்மையான உறுதியான சிவப் பற்றுக் கொண்ட ஒரு ஞானி தன் தேகத்தை விட்டு விட்டால் சிவத்தில் அருளை பெறுவார். பின்னர் சிவத்துடனேயே ஒன்றி விடுவார்.

#2620. சிவன் இவன் ஈசன்

அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்
சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே.

சீவன் சிவன் ஆக வேண்டும் என்று உறுதி பூண்டு அன்புடன் ஈசனை நாடுகின்றது. அதனால் சீவன் சிவனாகவே மாறி பதி என்னும் நிலையை அடைகின்றது. இந்த உண்மையை உலகத்தோர் உணர்வதில்லை. பின்பு சீவன் ஏன் பல பிறவிகள் எடுத்து பல உலகங்களுக்குச் செல்கின்றது? சீவன் உண்மைப் பொருளை அறிந்து கொண்டு அதனை நாடாமல் பொய்ப் பொருட்களாகிய உலக விஷயங்களில் ஈடுபடுவதே இதற்குக் காரணம்.

#2621. விதிக்கின்ற ஐவர்

கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
நொதிக்கின்ற காயத்து நூலொன்று மாமே.

உலகம் முழுவதும் துன்புறமாறு சீவர்களுக்குப் பரு உடலைத் தருவதும், பின்னர் அதை நீக்குவதும், மீண்டும் அவர்களைப் பிறவியில் கொண்டு தள்ளுவதும் செய்வது நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்ற ஐந்து தெய்வங்கள். அறிவுடையோர் இந்த ஐவரையும் விரும்ப மாட்டார். பரு உடலில் இருந்து நுண் உடலுக்குச் செல்லும் சுழுமுனை நாடியில் இவர்கள் பொருந்தி இருப்பதே அதற்குக் காரணம்.

#2622. மூல வித்து ஆகும்

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தையில் வைத்துத் தெளிவுறச் சேர்த்திட்டால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே.

"உய்ந்து விட்டோம்! ஞானம் பெற்றோம்! இனிப் பிறவி இல்லை!" என்பீர்கள். அந்த ஞானத்துக்கு அடிப்படை இன்னதென்று அறிவீரா? மூலாதாரத்தில் வீரிய சக்தியாகக் கலந்துள்ளார் உருத்திர மூர்த்தி. சிந்தனையால் மூலாக்கினியை மேலே எழச்செய்து அதை ஒளிமயமாகக் காண்பதே வரவிருக்கும் பிறவிகளை ஒழிப்பதற்கு உரிய வழியாகும்.

எட்டாம் தந்திரம் -
41. பக்தியுடைமை

அகண்ட சிவத்தின் மீது அளவற்ற அன்பு கொள்வது பக்தியுடைமை ஆகும்.

#2623. பக்தர் பரவும் பசுபதி!

முத்திசெய் ஞானமும் கேள்வியு மாய்நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரான்தனைச்
சுத்தனை தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தர் பரசும் பசுபதி தானென்றே.

இறைவன் சீவர்களுக்கு முக்தியைத் தருகின்ற ஞான வடிவானவன். அந்தத் தலைவனே மந்திர வடிவாகவும் உள்ளான். மாயாத அமரர்களை வழி நடத்தும் பிரான் அவனே. அவன் தூயவன். தூய நெறியாக விளங்குபவன். அடியார்கள் போற்றிப் புகழும் உயிர்த்தொகைகளின் தலைவன் ஆகிய பசுபதி அவனே!

#2624. என்னை அடிமை கொண்டான்

அடியார் அடியார் அடியார்க் கடிமைக்கு
அடியவனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே.

சிவன் அடியவர் பரம்பரையில் தோன்றிய அடியவரின், அடியவரின், அடியவரின், அடிமைக்கு அடியவன் ஆனேன். அவரிடம் அடிமையும் பூண்டு கொண்டேன். அந்த அடியாரின் அருளால் சிவஞானம் பெற்றேன். சிவன் என்னையும் தன் அடியார்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்டான்.

#2625. உமாபதி ஆகிநின்றான்

நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆரிக் கடனந்தி யாமா ரறிபவர்
பாரிற் பயனாரைப் பார்க்கிலும் நேரியர்
ஊரில் உமாபதி யாகிநின் றானே.

தன்னைச் சார்ந்தவர்களுக்கு சிவன் நீரை விடக் குளிர்ந்தவன்! உலகத்தைச் சார்ந்தவருக்கு அவன் நெருப்பை விடச் சூடானவன். சிவனின் இந்தச் செயல்களை உள்ளபடி யார் அறிவார்? அவன் உலகில் செய்யும் செயலுக்குப் பயன் தருகின்றவரை விடவும் மிகவும் நேர்மையானவன். தன்னைச் சிந்தையில் பொறுத்தி வந்தனை செய்பவருக்கு உள்ளத்தின் உமாபதியாக உமை அம்மையுடன் எழுந்தருள்வான்.

2626. உலகு ஏழும் அறியாத ஒருவன்

ஒத்துல கேழும் அறியா ஒருவனென்
அத்தன் இருந்திடம் ஆரறிவார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படில் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே?

ஏழு உலகங்களில் உள்ள அனைவரும் ஒன்றாகக் கூடி ஆராய்ச்சி செய்தாலும் அறிந்து கொள்ள முடியாத ஒப்பற்றவான் சிவன். எனில் என் தலைவன் சிவன் எழுந்தருளிய இடத்தை யாரால் அறிந்து கொள்ள முடியும்? பக்தரின் பக்திக்கு

இரங்கி அத்தன் தன்னைத் தானே வெளிப் படுத்தினால் அன்றி முத்தைப் போன்ற அந்த முத்தி நாதனைப் பற்றிக் கூறுவதற்கு முந்துபவர் யாரோ உளர்?

#2627. கன்றாய் நாடி அழைத்தேன் நாதனை!

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே.

ஆவின் கன்று தன் தாயை நாடி “அம்மா!” எனக் கதறி அழைக்கும். அது போன்றே பசுத் தன்மை வாய்ந்த நான் என் தாயாகிய சிவனை பக்தியுடன் கதறி அழைத்தேன். அமரர்களுக்கும் அப்பாற்பட்ட என் தலைவன், ஊனால் ஆகிய உடலில் குடியிருக்கும் என்னை நாடி, என் மனதில் வந்து எழுந்தருளினான்.

#2628. பணி ஒன்றும் இல்லையே

பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலால்
முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும் இல்லையே.

பாசத்தால் கட்டுண்டவர்கள் பிறவியைக் கடவாதவர்கள். அதனால் அவர்கள் செயலால் பயன் எதுவும் விளையாது. பாசத் தளைகளைத் துணித்து விட்டவர்கள் நேசத்துடன் ஈசனைச் சிந்தித்து அமைந்திருப்பர். அதனால் அவர்கள் செய்ய வேண்டிய செயலென்று ஒன்றுமில்லை. பாசத் தளையில் அகப்பட்டவருக்குப் பிறவியும், பாசத் தளைகளைத் துணித்தவருக்கு முக்தியும் அருள்வது ஈசன் செயல். அதனால் நேசத்துடன் ஈசனைப் பற்றிக் கொண்டு இருப்பவர்கள் செய்ய வேண்டிய செயல் என்று ஒன்றும் இல்லை.

#2629. நந்தி அல்லாது வேறு தெய்வம் இல்லை

பறவையிற் கற்பமும் பாம்பும் மெய்யாக
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி லாவே.

உடலின் காயகல்பமாகக் குண்டலினி சக்தி விளங்குகின்றது. அதை எழுப்பி, உடலில்,மேல் நோக்கிச் செலுத்தி, நாத ஒலி கேட்கும் தலை உச்சியாகிய மேருமலையை அடைந்தேன். அங்கு விளங்கும் ஒளி மண்டலத்தில் ஏறினேன். தேன் சிந்தும் சகசிர மலரைக் கொண்டு என் பெருமானை நான் வழிபட்டேன். என்

தலைவன் சிவனைத் தவிர்த்து வேறு தெய்வங்களை வழிபடுவதற்கு என் மனம் என்றும் ஒப்பாது!

#2630. பிறப்பறுத்து உய்மின்!

உறுதுணை நந்தியை உம்பர் பிரானை
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்மின்
செறிதுணை செய்து சிவனடி சிந்தித்து
உறுதுணை யாயங்கி யாகிநின் றானே.

தன் அடியவருக்கு சிவன் உறுதுணை ஆவான்! அவன் உம்பர்களின் ஒப்பற்ற பிரான்! அவனைத் துணையாகப் பெற்றுப் பிறவிப் பிணியை அறுத்து எறியுங்கள்! உய்வடைந்து கடைத்தேறுங்கள்! சிவனைச் செறிந்த துணைவனாகக் கொண்டு சிந்தையை அவன் சீரடிகளில் கொண்டு பொருத்தினால், உறுதுணையாக நிற்பான் அந்த ஒளிவடிவான பிரான்!

#2631. முப்புரம் செற்ற முதல்வன்

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் முப்புரஞ் செற்ற தலைவனைக்
கானவன் என்றுங் கருவரை யானென்றும்
ஊனத னுள்நினைந் தொன்றுபட் டாரே.

ஒளி மண்டலத்தில் வாழ்பவர்கள் வானவர்கள். இருள் மண்டலத்தில் வாழ்பவர்கள் தானவர்கள். வானவர்களை அடக்கி ஆண்ட தானவர்களின் முப்புரத்தைச் சிரித்தே எரித்து விட்டவன் சிவன்! அவன் நாத மாயம் ஆனவன். வீரிய கோசத்தில் விளங்குபவன். ஊனால் ஆகிய சீவர்களின் உடல்களில் உறைபவன்.

#2632. மூழ்கி நின்றேன்!

நிலைபெறு கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்தும் மூழ்கிநின் றேனே.

சீவனுக்குப் பிறவி ஒரு பிணியைப் போன்றது. சீவன் குண்டலினியை சகசிர தளத்தில் கொண்டு சேர்த்து நிலை பெறலாம். அல்லது அதைச் செய்ய அறியாமல் வாழ்வில் கேடுறலாம் எனக் கருவிகள் கரணங்களுடன் சீவர்களைப் படைத்தவன் சிவன். அவனை நான் தலை உச்சியில் உள்ள மலையிலும், நெற்றியில் உள்ள

வானவெளியிலும், சகசிரதளத்திலும், மூலாதாரத்திலும், மனமண்டலத்திலும் ஆழ்ந்து தியானித்து இருந்தேன்.

எட்டாம் தந்திரம் -
42. முத்தியுடைமை

முத்தி = விடுதலை = வீடுபேறு
முத்தியுடைமை = பக்தியினால் முக்தி அடைவது.

#2633. பரானந்த போதர்

முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே.

பரானந்த போதர்கள் எவர்?

இவர்கள் முத்தி நிலையில் சிவபெருமானின் முழு அருளையும் பெற்றவர் கள். முப்பாத்தாறு தத்துவங்களும் ஆன்மாவிலிருந்து வேறுபாட்டன என்பதை அறிந்தவர்கள். தன்பணி இறைவனை எண்ணி இருப்பதே என்று மெய்தவத்தை மேற் கொண்டவர்கள். தாம் செய்கின்ற வினைகளையும் செயல்களையும் விட்டு ஒழிந்தவர்கள். உண்மையான இறை பக்தியில் அமிழ்ந்து சிவானந்தத்தில் திளைப்ப வர்கள்.

#2634. நலம் கொண்ட நால்வர் நாடுவர்

வளங்கனி தேடிய வன்தாள் பறவை
உளங்கனி தேடி உழிதரும் போது
களங்கனி அங்கியிற் கைவிளக் கேற்றி
நலங் கொண்ட நால்வரும் நாடுகின்றாரே.

சிவக்கனியை நாடும் மூலாதாரத்தில் கால்களை பதித்துள்ள சீவன் என்னும் பறவை. தன் உள்ள மண்டலத்தில் உள்ள சிவக்கனியை சீவப் பறவை நாடும் போது, கழுத்துக்கும் மேலே உள்ள அக்கினியால் சுழுமுனையில் விளக்கை ஏற்றும். அப்போது அந்தக் கரணங்கள் நான்கும் உடல் அற்ற இடத்தில் சிவானந்தத்தில் திளைத்து இருக்கும்.

எட்டாம் தந்திரம் -
43. சோதனை

மாணவன் குருநாதரின் அருளால் உண்மையை உணருதல்.

#2635. அருட்கடல் ஆடினேன்

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்து
அம்மான் அடிதந் தருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே.

பேச்சற்ற பேரின்ப நிலையில் விளங்கும் பெருமை வாய்ந்தவன் சிவபெருமான். அந்தப் பெருமான் அடிமலர்கள் தந்த ஞானத்தால் நான் அருட்கடலில் மூழ்கினேன். என்னை அவன் எல்லா மாயங்களையும் கடக்கச் செய்தான். அவற்றில் இருந்து என்னை வேறுபடுத்தினான். என்னைச் செயல் அற்று இருக்கும் படிச் செய்தான் . இதுவே சிவன் செய்த சோதனை ஆகும்.

#2636. சிவனுடன் கூடுவேன்!

அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குந் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த
குறியுடை யானொடுங் கூடுவன் நானே.

அகண்ட அளவில்லாத அறிவு உடையவன் சிவன்; மா மறைகள் போற்றிப் புகழும் மறைகளின் நாயகன் சிவன்; தேவர்களின் தலைவன் சிவன்; ஐம்புலன் அறிவினைகே கடந்து அகண்ட அறிவினைப் பெற்றவன் சிவன்; இத்தகைய குறிகளைக் கொண்ட என் தலைவனுடன் நான் பொருத்தி நிற்பேன்

#2637. அறிவு அறியாமை

அறிவு அறிவு என்றங் கரற்றும் உலகம்
அறிவு அறியாமையை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்தஅறிவு ஆனால்
அறிவு அறியாமை அழகிய வாறே.

அறிவு அறிவு என்று உலகம் முழுவதும் அரற்றுகின்றது. ஆனால் அது குறிப்பிடுவது பாசவயப்பட்ட அறியாமை என்று உலகம் உணர்வதில்லை.

அறிவு பாச அறிவைக் கடந்து சிவஞானம் ஆகிவிட்டால் அப்போது பாச அறிவின் இலக்கணம் என்ன என்பது உலகுக்குப் புரியும்.

#2638. சீவன் சிவன் ஆகும் தன்மை

குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்து
அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றும்
செறியாச் செறிவே சிவமென லாமே.

சீவன் தன் சுட்டறிவு அகன்று எல்லாவற்றையும் ஒருசேர அறியும் அறிவுநிலையில் நின்றுகொண்டு; கீழான மலங்களுடன் சென்று சேராமல் இருந்து கொண்டு ; தம் அறிவு கெட்டுச் சிவன் அறிவுடன் தானும் பொருந்தி; தான் என்னும் தனித்தன்மை இல்லாமல்; சிவனுடன் இரண்டறக் கலத்தலே சீவன் சிவம் ஆகும் தன்மையை அடைவது எனப்படும்.

#2639. எங்கும் கலந்து நிற்பான் சிவன்!

காலினில் ஊறுங் கரும்பினில் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே.

காற்றிலிருந்து பரிசை உணர்வைப் பிரிக்க முடியாது. கரும்பில் இருந்து இனிய சுவையைப் பரிக்க முடியாது. பாலினுள் மறைந்த நெய் போலவும், பழத்தினுள் மறைந்த பழ ரசத்தைப் போலவும், மலருள் மறைந்த மணம் போலவும், சீவனுடன் சிவன் கலந்து நிற்கின்றான். அவன் காணப்படும் அனைத்துப் பொருட்களிலும் கலந்து நிற்கின்றான்.

#2640. மனத்திடை இருப்பான் சிவன்

விருப்பொடு கூடி விகிர்த்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை எங்கள் பிரானார்
நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே.

சிவனையே தன் கணவனாக அடைய விரும்பி உமை அன்னை விருப்பத்துடன் இமயம் சென்று சேர்ந்தாள். அதே போன்று சீவனும் சிவனையே தன் தலைவனாக ஏற்றுத் தன்னிச்சை என்று ஒன்றும் இல்லாமல், அவன் இச்சைப் படி வாழ்ந்தால் அந்தச் சீவன் மனத்தில் சிவன் ஒளி வடிவாக நிற்பான்.

#2641. சிந்தையிலுள்ளே சிவனிருந்தானே.

நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண் டான்கொள்ள
எந்தைவந் தானென் றெழுந்தேன் எழுதலுஞ்
சிந்தையி லுள்ளே சிவனிருந் தானே.

என் தலையின் மீது ஒரு பெருவெளி விளங்குகிறது. என் தலைவன் சிவன் என் மனமண்டலத்தைத் தன் ஆலயமாக்கி அதில் எழுந்தருளினான் . அப்போது எந்தை வந்துவிட்டான் என்று நானும் என் ஆன்ம அறிவு கெட்டு நின்றேன். என் மனத்துள் சிவன் சிறந்து விளங்குவதைக் கண்டு கொண்டேன்.

#2642. பரிசு செய்வானே.

தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை
நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானே.

சிவன் சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று உயரிய பண்புகளை உடையவன். அவனே நாம் செய்யும் தவத்தின் பயன் ஆவான். அவன் தவம் செய்பவருக்கு நன்மைகள் செய்பவன்; அவன் கள்ளமற்ற உள்ளத்தின் நடுவில் வீற்று இருப்பவன்; அவன் அழியாத இயல்பினன்; இத்தகைய பெருமைகள் வாய்ந்த சிவனையே நீங்கள் நாடுங்கள். நாடினால் சிவன் எண்ணற்ற சீவராசிகளில் இருந்து உம்மை மேலானவன் ஆக்குவான்.

#2643. நல்ல வழி காட்டுவான்

தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றானல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின் றாதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே.

என்னை சோதிக்கும் போது சிவன் அங்கு தொடர்ந்து நின்றான். நல்ல நாதனாகவும் சிவன் அங்கேயே தொடர்ந்து நின்றான். அனைத்திலும் சிவன் தானும் கலந்து நின்றான். மேலும் அவன் அனைத்தையும் கடந்தும் நின்றான். அவன்அனைத்தையும் கடந்து செல்வதற்கு எனக்கு நல்ல வழி காட்டினான்.

#2644. தந்தை, தாய், கேளியான் ஒப்பான்!

அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தை தாய் கேளியான் ஒக்குஞ்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்
இவ்வழி நந்தி இயல்பது தானே.

அமரரும் அறிவதற்கு அரிய பொருள் ஆகிய சிவன், எனக்கு நல்வழி காட்டுவான். இந்த வாழ்வில் அவனே எனக்குத் தந்தையும், தாயும், இனிய தோழனும் ஆவான். என்னைச் சிறந்த வழியில் செழுத்திச் சிவலோகத்தை அடைவிப்பான். இந்த வழிகளில் எல்லாம் நந்தி எனக்கு உதவுவான்.

#2645. தேவர்க்கும் தேவர் சிவபிரான்

எறிவது ஞானத் துறைவாள் உருவி
அறிவது னோடேயவ் வாண்டகை யானைச்
செறிவது தேவர்க்குத் தேவர் பிரானைப்
பறிவது பல்கணப் பற்றுவி டாரே.

சோதனையின் பயன் ஞானவாளை அதன் உறையிலிருந்து உருவி எடுத்து, அஞ்ஞானம் என்னும் இருளைப் போக்குவது ஆகும். இந்த அரிய திறமையைத் தந்த இறைவன் இருப்பதை அறிவதும் ஆகும். அறிவதோடு நின்று விடாமல் தேவர் தேவனை நெருங்கிப் பொருத்தவதும் ஆகும். சீவன் தன்னை அஞ்ஞான இருளை ஆழ்த்திடும் பல கூட்டங்களை விட்டு அப்போது விலகிச் செல்ல இயலும்.

#2646. ஆதிப் பிரான் சிவன்

ஆதிப் பிரான்தந்த வாள்அங்கைக்கொண்டபின்
வேதித்து என்னை விலக்கவல் லாரில்லை
சோதிப்பன் அங்கே சுவடு படாவண்ணம்
ஆதிக்கண் தெய்வம் அவன்இவன் ஆமே.

நான் சிவகுரு தந்த ஞானவாளைக் கையில் எடுத்த பின்பு, என்னை நன்னெறியில் இருந்து வேறுபடுத்தி நீக்கும் வல்லமை எவருக்கும் இல்லை! என் சிந்தையைச் சோதனை செய்து நான் சிவன் அல்லாத எல்லாவற்றையும் நிலை பெறாதபடிச் செய்து விடுவேன். அப்போது ஆதி மூர்த்தியாகிய சிவனைப் பொருந்தி நானும் சிவமாகவே ஆகிவிடுவேன்.

#2647. சதுரர்க்கே சாதிக்க இயலும்!

அந்தக் கருவை யருவை வினைசெய்தற்
பந்தம் பணியச்சம் பல்பிறப் பும்வாட்டிச்
சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே.

சீவனின் பிறவிக்கு காரணம் ஆவது அதைத் தளைப்படுத்தும் பாசம்; அருவமாகிய மாயை; சீவன் புரியும் கன்மங்கள் உண்டாக்கும் வினைப் பயன்கள்; கன்மங்கள் புரியும் போது எழுகின்ற அச்சம்; அந்த அச்சத்தினால் உண்டாகும் பிறவி. இவற்றைப் போக்கச் சோதனை செய்ய வேண்டும். குருவின் போதனையால் தீநெறி செல்லாதவாறு மாணவன் தன் சிந்தையைச் சீர்ப்படுத்த வேண்டும். இங்கனம் சோதனை செய்யும் ஆற்றல் படைத்தவருக்கே சிவத்தைச் சார்ந்து தானும் சிவம் ஆக முடியும்.

#2648. என்னுள் புகும் தற்பரனே.

உரையற்ற தொன்றை யுரைத்தான் எனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட் டறுத்துத்
திரையொத்த என்னுடல் நீங்கா திருத்திப்
புரையற்ற என்னுட் புகுந்தற் பரனே.

சொற்களால் சொல்ல முடியாத பிரணவ உபதேசத்தை என் அகவுணர்வில் விளங்கும்படி என் குருநாதன் உபதேசம் செய்தான். கரை கடந்த கல்வியிலும் ஆராய்ச்சியிலும் இருந்த என் விருப்பதையொழித்தான். அலை போல வந்து வந்து மறைந்துவிடும் இயல்பை உடைய என் உடலை அழியாத வண்ணம் செய்தான். குற்றம் நீங்கிய என்னிடம் என் பெருமான் வந்து பொருந்தினான்.

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் முற்றுப் பெற்றது.

ஒன்பதாம் தந்திரம்

ஒன்பதாம் தந்திரம் -
1. குருமட தரிசனம்

ஒளியை உடைய இடத்தைத் தரிசிப்பது.

#2649. தளிரும் மலரடி சார்ந்து நின்றாரே.

பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும் எம் ஈசன் தனக்கென்றே உள்கிக்
குவியும் குருமடம் கண்டவர் தாம்போய்த்
தளிரும் மலரடி சார்ந்துநின் றாரே.

வேல்வித் தீயில் இடப்படும் அவிசு, ஆஹூதி, அன்னம், அதிலிருந்து எழுகின்ற ஹோமத் தீ, ஹோமப் புகை, வேத ஒலி, இவை அனைத்தும் சிவ பெருமானைக் கருதி செய்கின்றேன் என்று மனதில் எண்ணிக் கொண்டு; குருவடிவாக உள்ள ஒளியை தரிசனம் செய்தவர்; இறைவனை குளிர்ந்த மலர் அடிகளைச் சார்ந்து நிற்பர்.

#2650. அவனுக்கு இவனே இல்லம்!

இவன்இல்லம் அல்லது அவனுக்கு அங்கு இல்லை
அவனுக்கும் வேறு இல்லம் உண்டா அறியில்?
அவனுக்கு இவனில்லம் என்றென்று அறிந்தும்
அவனைப் புறம்புஎன்று அரற்றுகின் றாரே.

சிவனுக்கு உறைவிடம் அன்பர் உள்ளதைக் காட்டிலும் வேறு ஒன்றும் இல்லை. உண்மையில் சிவனுக்கு வேறு உறைவிடம் உள்ளதா? அன்பர் உள்ளமே சிவபெருமானின் உறைவிடம் என்று அறிந்திருந்தும், சிவன் தன்னிலும் வேறாக இருக்கின்றான் என்று மக்கள் கூறுவது என்ன அறியாமை!

#2651. தேட அரியன் சிவன்!

நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடும் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட அரியன் சிறப்பிலி எம்இறை
ஓடும் உலகுயிர் ஆகிநின் றானே.

சிவனை நாடும் வழியினை நான் கண்டு கொண்டேன். எனக்குள்ளேயே அவன் மலரடிகளைத் தேடித் சென்று அவனுடன் கூடினேன். தேடிக் காண்பதற்கு

அரியவன் சிவன். அவன் இருக்கும் இடமே சிறப்பு வாய்ந்தது! உருண்டோடும் உலகுக்கு அவனே உயிராக நிற்கின்றான்!

#2652. இயம்புவன் ஈராறு இருநிலத்தோருக்கே!

இயம்புவன் ஆசனத் தோடு மலையும்
இயம்புவன் சித்தக் குகையும் மடமும்
இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈராறு இருநிலத் தோர்க்கே.

பதினான்கு உலகத்தவருக்கும் நான் கூறுவேன் இவற்றை! இறைவனின் ஆசனம் எது; அவன் அமரும் மலை எது; இறைவன் ஒளியும் குகை எது; அவன் விளங்கும் மடம் எது; ஆறு ஆதாரங்களுடன் உள்ள காடு எது; என்ற எல்லாவற்றையும் நான் அறிந்தபடிக் கூறுவேன்.

#2653. ஞானியின் முகம் ஈசனின் பீடம்

முகம்பீடம் மாமடம் முன்னிய தேயம்
அகம்பர வர்க்கமே ஆசில்செய் காட்சி
அகம்பர மாதனம் எண்எண் கிரியை
சிதம்பரம் தற்குகை ஆதாரம் தானே.

ஞானியின் முகமே ஈசனின் பீடம்; குருவின் மடமே ஈசனின் முன்னிய தேசம்; தூய நோக்குடைய அடியவர் கூட்டமே அவன் இருப்பிடம்; உள்ளத்தில் கள்ளமின்றி பதினாறு வகையான உபசாரங்கள் செய்பவனே ஈசன் அமரும் சிம்மாசனம்; உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள் ஈசன் மறைந்து கொள்ளும் குகைகள்.

#2654. சகத்தின் தெய்வம் சிவமே ஆகும்!

அகமுக மாம்பீடம் ஆதார மாகும்
சகமுக மாம்சத்தி யாதன மாகும்
செகமுக மாம்தெய்வ மேசிவ மாகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே.

சீவனின் உடலின் ஆறு ஆதாரங்கள் சிவனது அகமுகமாகும் பீடம்; சிருஷ்டியின் ஆதாரமான சக்தியே அவன் அமரும் ஆதனமாகும்; உலகம் முழுவதற்கும் சிவமே ஒப்பற்ற தெய்வமாகும். உள்முகமாகச் சென்று ஆராய்ந்தவர் அறிந்து கொண்ட உண்மைகள் இவை.

#2655. தூய பரஞ்சுடர் தோன்றும்

மாயை இரண்டும் மறைக்க மறைவுறும்
காயம்ஓர் ஐந்தும் கழியத்தா னாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொருபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்த ராமே.

தூய மாயை, தூவா மாயை என்னும் இரண்டும் ஆன்மாவை மறைக்கும். அதனால் ஆன்மாவின் அறிவு விளங்காமல் இருக்கும். அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்னும் ஐந்து திரைகளும் நீங்கினால் அங்கு பரஞ்சுடர் ஆகிய ஆன்மஒளி தோன்றும். அந்த ஒளியில் ஞானம், ஞாதுரு, ஞேயம் என்ற மூன்றும் ஒன்றாகிவிடும். இத்தகைய ஞானி பிரணவ யோகத்தை அறிவான்.

ஒன்பதாம் தந்திரம் -
2. ஞானகுரு தரிசனம்

ஞானத்தைத் தரும் குருவை தரிசித்தல்

#2656. சிவபதம் அளித்திடும்

ஆறொடு முப்பதும் அங்கே அடங்கிடில்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபதம் மேலாய் அளித்திடும்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே.

சீவனின் முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவில் ஒடுங்கிவிட்டால் அப்போது சிவன் வெளிப்பட்டு அந்த ஆன்மாவைத் தனக்குள் அடக்கிக் கொள்வான். அந்த நிலையில் அந்தச் சீவனுக்குச் சிவப்பேறு கிடைக்கும். சீவன் உலக விஷயங்களைத் துறந்து விட்டு சிவபோகத்தை அடையும். சீவன் சிவானந்தத்தில் திளைத்து இருக்கும்.

#2657. குருபதம் பேச ஒண்ணாதே

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர்சோதி
அரிய பரசிவம் யாவையும் ஆகி
விரிவு குவிவுஅற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசஒண் ணாதே.

ஞான குருவானவர் மாணவனுக்கு அருளும் இயல்பு இதுவே. இவர் சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்றையும் கடந்து விளங்குவார். அறிவுச் சுடராக அரிய பரசிவமாக இருப்பார். போக்கும் வரவும் இல்லாத நிலையில் இருப்பார். இவர் பெருமையைப் பேசவும் இயலாது.

#2658. பிறவிப்பயன் இறை வழிபாடே

ஆயன நந்தி அடிக்குஎன்தலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தஎன் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணஎன் கண்பெற்றேன்
சேயன நந்திக்குஎன் சிந்தைபெற் றேனே.

தாயைப் போன்ற கருணை மிகுந்த நந்தியின் அடியை என் தலை மீது பெற்றேன். வாய் போன்ற கோபுர வாயிலில் விளங்கும் நந்தியை வாழ்த்த என் வாயைப் பெற்றேன். உலகத்தின் விதை ஆன நந்தியைக் காண்பதற்கு என் கண்களைப் பெற்றேன். புலன்களுக்கு எட்டாத தூரத்தில் உள்ள நந்தியை அறிவதற்கு என் சிந்தையைப் பெற்றேன்.

2659. சிவன்அவன் ஆமே.

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்த அப் போதே
திரிமலம் தீர்ந்து சிவன்அவன் ஆமே.

கருடனின் வடிவத்தை நினைத்தவுடனேயே நாகத்தல் கடிபட்டவனின் கொடிய விடம் நீங்கிவிடும். மரண பயம் நீங்கி அவன் பிழைத்து எழுவான். அது போன்றே ஞானம் தேடும் முயற்சி செய்யும் மாணவன் தன் ஞான குருவின் வடிவத்தை நினைவு கூரும் போதே, தன் மும்மலங்களும் அகன்றுவிடச் சிவனாகவே ஆகிவிடுவான்.

#2660. அவன் இவன் ஆமே

அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன்இவன் ஆமே.

சிவபெருமானின் உறைவிடம் எது என்பதை யாரும் அறிகிலர். ஞான விசாரணையால் சிவனது உறைவிடம் சீவன் தான் என்று அறிந்து

கொண்டவர்களின் உள்ளத்தில் சிவனின் நிலையாகக் குடியிருப்பான். தனக்குள்ளேயே உள்ள சிவகுருநாதனைக் காண்பவர் தாமும் சிவமாக ஆகிவிடுவார்.

#2661. துரியங்கள் மூன்றும் நீங்கும்

தோன்ற அறிதலும் தோன்றல் தோன்றாமையும்
மான்ற அறிவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள் மூன்றற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே.

முகத்தின் முன் தோன்றிய ஒளியை அறிவதும், அறியாமல் இருப்பது, அறிந்தும் அறியாமல் இருப்பதும் மயக்க அறிவு ஆகும். இது சீவனிடம் நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று நிலைகள் மாறி மாறி வருவதால் உண்டாகும் நிலைமை. சீவன் சீவ துரியம், பர துரியம், சிவ துரியம் என்ற மூன்று துரியங்களையும் கடந்துசெல்லும் பொழுது நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று நிலைகளும் நீங்கிச் செல்லும். அப்போது சிவகுருநாதன் அந்தச் சாதகனை பிரணவ உடலில் விளங்கச் செய்வான்.

#2662. இரண்டிதழ்த் தாமரையின் கன்னி

சந்திர பூமிக் குள்தன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்தம் இலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரம்குரு பற்றே.

இரண்டு புருவங்களுக்கு நடுவில், சந்திர மண்டலத்தில், கந்தம் நுகரும் நாசியின் உச்சியில், உள்ளது ஒரு தாமரை. இரண்டு இதழ்கள் கொண்ட இந்தத் தாமரையாகிய ஆக்ஞா சக்கரத்தில் உள்ள சக்தி பந்தம் அற்றவள். பளிங்கு போன்றவள். பந்தங்கள் அகற்றும் குருவின் வடிவானவள் இவள். பந்தங்கள் அறுக்க இவளை பற்றிக் கொண்டு உங்கள் தியானத்தைத் தொடங்குங்கள்.

#2663. அவன் ஊர் வடக்கே உள்ளது

மனம்புகுந் தான்உலகு ஏழும் மகிழ
நிலம்புகுந் தான்நெடு வானிலம் தாங்கிச்
சினம்புகுந் தான்திசை எட்டும்நடுங்க
வனம்புகுந் தான்ஊர் வடக்கென்பது ஆமே.

ஏழு உலகங்களும் மகிழும்படி சிவன் சீவர்களின் உள்ளத்தில் புகுந்தான். வானுலகைத் தாங்க அவன் நிலத்தில் புகுந்தான். எட்டு திசைகளும் நடுக்கும்

வண்ணம் அவன் சினத்தில் புகுந்தான். வனம் புகுந்த அவன் ஊர் இருப்பது வடக்கு திசையில்.

#2664. சீவப் பறவையின் வனம் எனத் தக்கன!

தானான வண்ணமும் கோசமும் சார்தரும்
தானாம் பறவை வனமெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தாமாம் தசாங்கமும் வேறுள்ள தானே.

அன்னமய கோசம் முதலான ஐந்து கோசங்களைச் சீவன் தான் என்று தவறாக எண்ணிக் கொண்டு இருந்தது. ஆனால் உண்மையில் அவை சீவன் அல்ல! அவற்றைச் சீவன் என்னும் பறவை தங்குகின்ற காடு என்று நாம் கூறலாம். சீவன் தன் உண்மை நிலையை உணர்வதற்கு உதவுவது சோடச கலை மார்க்கம். இதைத் தவிர தச காரியங்களும் சீவன் தன்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவும்.

#2665. அருவினை கண் சோரும்!

மருவிப் பிரிவுஅறி யாளங்கள் மாநந்தி
உருவம் நினைக்க நின்று உள்ளே உருக்கும்
கருவில் கரந்துஉள்ளம் காணவல் லார்க்குஇங்கு
அருவினை கண்சோரும் அழிவார் அகத்தே.

சீவனின் பக்குவத்தை அறிந்து கொண்டு வந்து அதனுடன் கலந்து விட்ட நந்தி பிறகு அதனை விட்டுப் பிரியவே மாட்டான். அவன் பெருமையை நினைக்கும் போதே சீவனின் சீவபோதம் கெடும். அவன் பேரொளியில் கலந்து அவனை உள்ளத்தகால் உணர முடிந்தால் அப்போது அந்த சீவனின் வினைகள் அழித்து படும்! அந்த வினைகளுக்குக் காரணம் ஆகிய மாயையும் மறைந்து போகும்.

#2661. துரியங்கள் மூன்றும் நீங்கும்

தோன்ற அறிதலும் தோன்றல் தோன்றாமையும்
மான்ற அறிவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள் மூன்றற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே.

முகத்தின் முன் தோன்றிய ஒளியை அறிவதும், அறியாமல் இருப்பது, அறிந்தும் அறியாமல் இருப்பதும் மயக்க அறிவு ஆகும். இது சீவனிடம் நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று நிலைகள் மாறி மாறி வருவதால் உண்டாகும் நிலைமை. சீவன் சீவ துரியம், பர துரியம், சிவ துரியம் என்ற மூன்று

துரியங்களையும் கடந்துசெல்லும் பொழுது நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று நிலைகளும் நீங்கிச் செல்லும். அப்போது சிவகுருநாதன் அந்தச் சாதகனை பிரணவ உடலில் விளங்கச் செய்வான்.

#2662. இரண்டிதழ்த் தாமரையின் கன்னி

சந்திர பூமிக் குள்தன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்தம் இலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரம்குரு பற்றே.

இரண்டு புருவங்களுக்கு நடுவில், சந்திர மண்டலத்தில், கந்தம் நுகரும் நாசியின் உச்சியில், உள்ளது ஒரு தாமரை. இரண்டு இதழ்கள் கொண்ட இந்தத் தாமரையாகிய ஆக்ஞா சக்கரத்தில் உள்ள சக்தி பந்தம் அற்றவள். பளிங்கு போன்றவள். பந்தங்கள் அகற்றும் குருவின் வடிவானவள் இவள். பந்தங்கள் அறுக்க இவளை பற்றிக் கொண்டு உங்கள் தியானத்தைத் தொடங்குங்கள்.

#2663. அவன் ஊர் வடக்கே உள்ளது

மனம்புகுந் தான்உலகு ஏழும் மகிழ
நிலம்புகுந் தான்நெடு வானிலம் தாங்கிச்
சினம்புகுந் தான்திசை எட்டும்நடுங்க
வனம்புகுந் தான்ஊர் வடக்கென்பது ஆமே.

ஏழு உலகங்களும் மகிழும்படி சிவன் சீவர்களின் உள்ளத்தில் புகுந்தான். வானுலகைத் தாங்க அவன் நிலத்தில் புகுந்தான். எட்டு திசைகளும் நடுக்கும் வண்ணம் அவன் சினத்தில் புகுந்தான். வனம் புகுந்த அவன் ஊர் இருப்பது வடக்கு திசையில்.

#2664. சீவப் பறவையின் வனம் எனத் தக்கன!

தானான வண்ணமும் கோசமும் சார்தரும்
தானாம் பறவை வனமெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தாமாம் தசாங்கமும் வேறுள்ள தானே.

அன்னமய கோசம் முதலான ஐந்து கோசங்களைச் சீவன் தான் என்று தவறாக எண்ணிக் கொண்டு இருந்தது. ஆனால் உண்மையில் அவை சீவன் அல்ல! அவற்றைச் சீவன் என்னும் பறவை தங்குகின்ற காடு என்று நாம் கூறலாம். சீவன் தன் உண்மை நிலையை உணர்வதற்கு உதவுவது சோடச கலை மார்க்கம். இதைத்

தவிர தச காரியங்களும் சீவன் தன்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவும்.

#2665. அருவினை கண் சோரும்!

மருவிப் பிரிவுஅறி யாஎங்கள் மாநந்தி
உருவம் நினைக்க நின்று உள்ளே உருக்கும்
கருவில் கரந்துஉள்ளம் காணவல் லார்க்குஇங்கு
அருவினை கண்சோரும் அழிவார் அகத்தே.

சீவனின் பக்குவத்தை அறிந்து கொண்டு வந்து அதனுடன் கலந்து விட்ட நந்தி பிறகு அதனை விட்டுப் பிரியவே மாட்டான். அவன் பெருமையை நினைக்கும் போதே சீவனின் சீவபோதம் கெடும். அவன் பேரொளியில் கலந்து அவனை உள்ளத்தகால் உணர முடிந்தால் அப்போது அந்த சீவனின் வினைகள் அழித்து படும்! அந்த வினைகளுக்குக் காரணம் ஆகிய மாயையும் மறைந்து போகும்.

#2666. தத்துவனைத் தலைப் படலாம்!

தலைப்பட லாம்எங்கள் தத்துவன் தன்னைப்
பலப்படு பாசம் அறுத்துஅறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற உள்கில்
தலைப்பட லாகும் தருமமும் தானே.

சிவஞானம் தருகின்ற சிவபெருமானைச் சீவன் தன் முயற்சியினால் அடைய முடியும். சீவனைப் பலமாகப் பந்தப்படுத்தியுள்ள பாசத்தை அறுத்து எறிய முடியும். சீவன் இடையறாது சிவனைச் சிந்தித்துத் தன் சிந்தையை அவன் மேல் நிலைப் பெறச் செய்தால் தருமத்தைச் சென்று அடையலாம்.

#2667. சோதியை உள்ளுபவர் உயர்ந்தவர்!

நினைக்கின் நினைக்கும் நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும்
கனத்த மனத்தடைந் தால்உயர்ந் தாரே.

குருநாதர் காட்டிய வழியில் சிவனைச் சிந்தித்திருப்பவர்களைச் சிவனும் தன் சிந்தையில் கொள்வேன். சிரசில் உள்ள அற்புதச் சுனையில் மலரும் சோதியினை இடையறாது உன்னுபவர் தினையைப் பிளந்ததை போன்ற சிறியவர் ஆனபோதும் சிவனை இடையறாது நினைக்கும் தன்மையினால் பெருமை உடைய பெரியவர் ஆவர்.

#2668. அனைத்துலகாய் நின்ற ஆதிப்பிரான்

தலைப்படும் காலத்துத் தத்துவம் தன்னை
விலக்குறின் மேவை விதியென்றும் கொள்க
அனைத்துஉல காய் நின்ற ஆதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி தேடிக் கொள்வாரே.

சிவனைக் குறித்து சாதனை செய்கையில் ஏதாவது தடங்கல்கள் ஏற்பட்டால் அது உம் தீவினைகளால் ஏற்படுவது என்று அறிந்து கொள்வீர். எந்தத் விதத் தடைவந்தாலும் எத்தனை தடைகள் அதை எதிர்கொண்டு, இடையறாது சாதனை செய்பவர்கள் சிவனின் அருளை உறுதியாகப் பெறுவார்கள்.

#2669. புகழ் வழிகாட்டிப் புகுந்து நிற்பான்

நகழ்வுஒழிந் தார்அவர் நாதனை யுள்கி
நிகழ்வுஒழிந் தார்எம் பிரானொடும் கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையின் உள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே.

சிவனை இடையறாது உள்குபவர் அவனை விட்டுப் பிரிதல் ஒழிவர். அவனுடன் பிரியாமல் இருக்கும் அரிய பரிச யோகம் பெறுவார். சிவனுடன் பொருந்திய சிந்தையினால் உலக விஷயங்களில் அக்கறை காட்ட மாட்டார். உலகச் சிறப்பை விரும்ப மாட்டார். இத்தகைய அன்பர்களுக்குச் சிவன் புகழத் தக்க மெய்யுணர்வைத் தருவான். என்றும் அவர்களை விட்டுப் பிரியாமல் இருப்பான்

#2670. சுந்தரச் சோதியுள் சோதியாகும்!

வந்த மரகத மாணிக்க ரேகைபோல்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை இலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுள் சோதியும் ஆமே.

பச்சை மரகதக் கல்லின் மேல் சிவப்பு மாணிக்க கல்லை வைத்தால் இரண்டு ஒளிகளும் கலந்து ஒரு புதிய ஒளி தோன்றும். அது போன்றே சற்குருவின் உபதேசம் சன்மார்க்கத்தில் உள்ள மாணவனிடம் ஓர் ஒளியை உண்டாக்கும். இது புருவ மத்தியில் விளங்கும் சீவ ஒளியினுள் சென்று கலக்கும் மற்றும் ஓர் ஒளியாகும்.

#2671. பஞ்ச பூதங்களைக் கடந்தவர்

உண்ணும் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணுமா யோகக் கடவுள் இருப்பது
மண்ணு நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியானோர் மேனியே.

மாணவனிடம் அவன் உண்கின்ற வாயாகவும், அவன் உடலாகவும், அவன் உயிராகவும், காணும் அவன் கண்களாகவும் அனைத்துமாக விளங்குபவர் அவனுடைய யோககுரு. அவர் மேனியோவெனில் மண், நீர், கனல், காற்று, வானம் என்னும் பஞ்ச பூதங்களைக் கடந்து விளங்கும்.

#2672. பரசிவன் ஆணை நடக்கும்

பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரசிவன் ஆணை நடக்கும் பாதியால்
பெரிய பதிசெய்து பின்னாம் அடியார்க்கு
உரிய பதியும்பா ராக்கி நின்றானே.

பார் முழுவதும் பதியாகிய சிவபெருமானின் ஆணைப்படி நடக்கும். அவன் தன் பாதி உடலைக் கருணைக் கடலாகிய சக்திக்கு அளித்தான். மீதிப் பாதி உடலைத் தன் அடியவர்கள் வந்து தன்னை அடைவதற்குக் கொடுத்தான். அந்தத் தலைவன் உலகைப் படைத்தது இதற்காகவே.

#2673. அருள் பெற்றவர் அவனை அறிவார்!

அம்பர நாதன் அகலிடம் நீள்பொழில்
தம்பர மல்லது தாமறியோம் என்பர்
உம்பருள் வானவர் தானவர் கண்டிலர்
எம்பெரு மான்அருள் பெற்றிருந் தாரே.

விரிந்தும், உயர்ந்தும், விரவியும், பரவியும் நிற்கும் சிவபெருமானின் அருளால் உலகு நடக்கின்றது. இதைத் தவிர நான் ஒன்றும் அறியேன் என்று அறிஞர் கூறுவர். வானத்தில் வாழும் வானவர்களும், மற்றும் தானவர்களும் கூடச் சிவனைக் கண்டறியார். சிவன் அருளை பெற்றவரே அவனைக் கண்டறிவார்.

#2674. போய் வணங்கும் பொருள் ஆனோம்

கோவணங் கும்படி கோவண மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி அருள்செய்தான்
தேவணங் கோம்இனிச் சித்தம் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே

பசுத் தன்மை மிகுந்த ஆன்மாக்களைச் சிவன் பிறர் வந்து வணங்கும் படித் தலைமைத் தன்மை பெறச் செய்தான். பிறர் நாவால் வணங்கும்படி அருள் செய்தான். ஆதலால் நாங்கள் இனிப் பிற தெய்வங்களைச் சென்று வணங்கோம். பிற தெய்வங்கள் சிவனிடமிருந்தே தம் ஆற்றலைப் பெறுகின்றனர் என்ற உண்மையயை அறிந்து கொண்டோம். இதை அறிந்து கொண்டதால் நாமே பிற மக்கள் வந்து வணங்குகின்ற தெய்வத் தன்மையை அடைந்தோம்.

ஒன்பதாம் தந்திரம் -
3. பிரணவ சமாதி

பிரணவம் = ஓங்காரம்
சமாதி = ஒடுக்கம்
பிரணவம் இரு வகைப்படும்.
அ + உ + ம் = பருமைப் பிரணவம்
விந்து + நாதம் = நுண்மைப் பிரணவம்

#2675. வேதாந்த வீதி

தூலப் பிரணவம் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைப் சொரூபப்பெண்
ஆலித்த முத்திரை ஆங்கதிற்காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே.

ஓம் என்று ஒலிக்கும் பிரணவம் 'அ', 'உ' , 'ம்' என்னும் இவற்றால் ஆனது. இதுவே தூலப் பிரணவம். இது தூல உடலுக்கு இன்பத்தைத் தரும். நுண்மைப் பிரணவம் மறைகளால் காக்கப்படும் விந்து நாதம் ஆகும். இதுவே மேலான பராசக்தியின் வடிவம். இது உள்ளக் களிப்பைத் தரும். சூக்குமப் பிரணவத்தை அறிந்து கொள்வது மேலான வேதாந்த வீதியாகும்.

#2676. ஓம் எனும் ஓங்காரம்

ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.

ஓம் எனும் பிராணவத்தின் உள்ளே ஒளிந்துள்ளது ஓர் உபதேச மொழி. ஓம் என்ற பிரணவத்தின் உள்ளே ஒளிந்துள்ளன உருவும் அருவும். ஓம் எனும்

பிரணவத்தின் உள்ளே உள்ளன பல பேதங்கள். ஓம் எனும் பிரணவத்தை அறிந்து கொள்வதே ஒளிரும் முத்தியும், சித்தியும் ஆகும்.

#2677. சீவ, பர, சிவ ரூபம் ஓங்காரம்

ஓங்காரத் துள்ளே உதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்கார தீதத்து உயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே.

அகண்ட பிரணவத்தில் இருந்து தோன்றின ஐம்பெரும் பூதங்கள். பிரணவம் ஆகிய ஓங்காரத்தில் இருந்து தோன்றின அசையும் அசையாய் பொருட்கள் அனைத்தும். பிரணவம் ஆகிய ஓங்காரத்தைக் கடந்த அதீதத்தில் உள்ளனர் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற மூன்று வகை சீவர்கள். பிரணவம் சீவன், பரன், சிவன் என்னும் மூவருக்கும் உரிய உயரிய நிலை ஆகும்.

#2678. ஓங்காரமே அனைத்தும் ஆகும்.

வருக்கம் சுகமாம் பிரமமும் ஆகும்
அருக்கம் சராசரம் ஆகும் உலகில்
தருக்கிய ஆதாரம் எல்லாம்தன் மேனி
சுருக்கம்இல் ஞானம் தொகுத் துணர்ந் தோரே.

ஓம் என்னும் ஓங்காரம் பிரம்மத்தின் இன்ப வடிவு ஆகும். சுருங்கியுள்ள ஓங்காரமே விரிந்து பரந்து சராசரம் என்னும் காணப் படும் உலகம் ஆகும். ஆறு ஆதாரங்கள் அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. இந்த உண்மையை அறிந்து கொண்டவர்கள் மெய்ஞானிகள் ஆவர்.

#2679. நலம் தரும் நல்ல உபதேசம்

மலையும் மனோபவம் மருள்வன ஆவன
நிலையில் தரிசனம் தீப நெறியாம்
தலமும் குலமும் தவம்சித்த மாகும்
நலமும்சன் மார்க்கத்து உபதேசம் தானே.

சீவன் மயக்கம் அடைந்து மலைக்கும் மனோபாவத்தால் அதன் பிராணனின் இயக்கம் நடைபெறும். சீவனின் உள்ளம் அலைபாயும். ஞான குருவின் உபதேசத்தால் சீவனின் மயக்கம் தீர்ந்ததும் பிறக்கும் ஓர் ஒளிநெறி. இதற்குத் தலம், குலம், தவம் என்பவை அனைத்தும் சீவனின் சித்தமே ஆகும். இத்தகைய சன்மார்க்க உபதேசம் சீவனுக்கு நன்மை பயக்கும்.

#2680. ஞான, ஞேய அந்தம்

சோடச மார்க்கமும் சொல்லும்சன்மார்க்கிகட்கு
ஆடிய ஈராறின் அந்தமும் ஈரேழிற்
கூடிய அந்தமும் கோதண்ட மும்கடந்து
ஏறியே ஞானஞே யாந்தத்து இருக்கவே.

பதினாறு கலைப் பிரசாதநெறி கூறுவது சன்மார்க்கம். இந்த நெறியில் உள்ளவர்களின் தலையின் மேல் உள்ள துவாதசாந்த வெளியின் முடிவும், பதினாறு கலைகளின் முடிவும், பிரணவ வில்லைக் கடந்து செல்லும். அவை ஞானம், ஞேயம், ஞாதுரு என்ற மூன்றும் ஒன்றாகும் இடத்தில் சென்று முடிவுறும்.

ஒன்பதாம் தந்திரம் -
4. ஒளி

சிவன் ஒளி வடிவானவன்
சீவனும் ஒளி வடிவானவன்.
சீவ ஒளி சிவ ஒளியில் கலந்தால் பிறவி நீங்கும்.

#2681. ஒளியும் உருவமும்

ஒளியை அறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடனிருந் தானே.

சீவன் ஆன்மஒளியை அறிந்து கொண்டால், சீவனின் உருவம் ஆகிய உடல் ஒளிந்து கொள்ளும். சீவன் ஒளிந்து நிற்கும் தன் உடலை அறிந்து கொண்டால், சீவனின் பிறவிகள் தொடரும். ஆன்மஒளியின் உருவம் சீவன் அறிந்து கொண்டால், சீவன் உருவம் ஒளிமயம் ஆகிவிடும்.சீவன் ஆன்ம ஒளியில் தோய்ந்து நின்றால், சீவனுக்குச் சிவன் அங்கு விளங்குவான்.

#2682. புவனங்கள் புகல் எளிதாகும்

புகல்எளி தாகும் புவனங்கள் எட்டும்
அகல்ஒளி தாய்இருள் ஆசற வீசும்
பகல்ஒளி செய்தும் அத்தா மரையிலே
இகல்ஒளி செய்துஎம் பிரான்இருந் தானே.

ஆன்மஒளியை அறிந்து கொண்டு அதில் நிலை பெற்று இருப்பவர்களுக்கு எட்டுத் திசைகளிலும் தங்கு தடையின்றிச் சென்று வரும் ஆற்றல் உண்டாகும். அவர்கள் உள்ளத்தில் கரிய கனஇருளையும் போக்கும் ஒளி வீசும். அன்னாரின் சகசிரதளத் தாமரைப் பகலவன் போல ஒளி வீசும். சீவனின் மலங்களின் இருளைப் போக்கிய ஈசன் அதில் பொருந்தி நிற்பான்.

#2683. பேரொளியாகக் கலந்து நின்றான்

விளங்கொளி அங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்து நின்றானே.

பேரொளியாகிய சிவன் சீவனின் ஆன்மாவில் விளங்கியது. அதனால் ஒளிமயமாக விளங்கும் அக்கினி, விரிந்த கதிர்களை உடைய சூரியன், குளுமையான நிலவு என்ற மூன்றும் சீவனின் ஆன்மாவில் ஒளிர்ந்தன. இதனால் ஆன்மா அடையும் பயன் என்ன என்றால் பேரொளியாகிய சிவனுடன் சேர்ந்து மற்ற மூன்று ஒளிரும் பொருட்களும் அதனுள் ஒளிர்வதே ஆகும்.

#2684. இளங்கு ஒளி ஈசன் பிறப்பிலி!

இளங்கொளி ஈசன் பிறப்பொன்றும் இல்லி
துளங்கொளி ஞாயிறும் திங்களும் கண்கள்
வளங்கொளி அங்கியும் மற்றைக்கண் நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காய மாமே.

பிறப்பிலியாகிய ஈசன், விளங்குகின்ற ஒளியையே தன் திருமேனியாகக் கொண்டவன். ஒளி வீசுகின்ற கதிரவனும் நிலவும் அவனது இரு கண்கள்.வளங்கொளி வீசுகின்ற அக்கினி அவனது மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண். மெய்ஞானியின் உடலும் இது போன்றே ஒளி பெற்று விளங்கும்.

#2685. தலை மேல் ஒருங்கொளியாகும்

மேல்ஒளி கீழ்அதன் மேவிய மாருதம்
பால்ஒளி அங்கி பரந்தொளி ஆகாசம்
நீர்ஒளி செய்து நெடுவிசும்பு ஒன்றிலும்
மேல்ஒளி ஐந்தும் ஒருங்கொளி யாமே.

தலை மேல் உள்ள வானம் ஒளி மயமானது. அதன் கீழேயுள்ள காற்றும் ஒளி மயமானது. காமஉணர்வினைத் தூண்டும் மூலாக்கினியும் ஒளி மயமானது. நீரைத் தன் முகமாகக் கொண்ட அபானனும் ஒளி மயமானது. சுழுமுனை வழியே

ஆதாரங்களைக் கடந்து சிரசை அடைந்தால் அங்கு ஐந்து பூதங்களின் ஒளியும் ஒன்றாகி ஒரே பேரொளியாகத் திகழும்.

#2686. உன்னியவாறு ஒளி ஒன்றாகும்

மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்து பரத்தொளி
துன்னிய ஆறுஒளி தூய்மொழி நாடொறும்
உன்னிய வாறுஒளி ஒத்தது தானே.

மின்னலை நிகர்த்த தூய ஒளிக் கீற்று, மாட்சிமை மிகுந்த செந்நிற ஒளி, மறைகள் புகழும் ஆன்மாவின் ஒளி,உடலின் ஆறு ஆதாரங்களில் பொருந்தியுள்ள ஒளி என்னும் இந்த பல்வேறு ஒளிகளைக் கனிமொழி பேசும் சிற்சக்தி தேவி, சீவனின் கோரிக்கைக்கு ஏற்ப, ஒரே பேரொளியாக அமைத்துத் தருவாள்.

#2687. எங்கும் மருவி நின்றானே.

விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி ஈசனைச் சொல்லும்எப் போதும்
உளங்கொளி ஊனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின் றானே.

சீவனின் ஆன்மாவினுள் ஒளிந்து கொண்டு, ஒளிரும் மின்னலின் ஒளிக்கீற்றைப் போல விளங்கும் ஈசனை, இடையறாது உம் சிந்தையில் சிந்தியுங்கள். அப்போது உம் உள்ளத்தைத் தன் இருப்பிடம் ஆகக் கொண்ட ஈசன் மிகுந்த நேசத்துடன் உம் பிராணசக்தியை வளப்படுத்தி உம் உடலில் பொருந்தி நிறைந்த அருள் செய்வான்.

#2688. நஞ்சும் அமுதாகும்!

விளங்கொளி அவ்வொளி அவ்விருள் மன்னும்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
அளங்கொளி ஆரமு தாகநஞ் சாரும்
களங்கொளி ஈசன் கருத்தது தானே.

சீவன் தன் ஆன்மா ஒளிமயமானது என்று அறியாமல் காம வயப்பட்டு அறியாமை என்னும் கொடிய இருளில் ஆழ்ந்துவிடும். ஆனால் ஒளி வடிவாகிய சிவன், தன்னை வணங்குபவரின் ஆன்ம ஒளியைப் பெருக்குவான். உப்பு நீர் பாயும் கடலில் உதித்த கொடிய நஞ்சினைத் தன் கழுத்தில் அமுதமாக மாற்றியவன் ஈசன். அது போன்றே சீவனின் உடலில் அமுதமாகிய பிரணவம் விளையும் இடம் அதன் கழுத்துப் பகுதி ஆகும்.

#2689. மூன்று விரிச்சுடர் ஒன்றாகி விடும்.

இயலங்கியது எவ்வொளி அவ்வொளி ஈசன்
துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே ஒருங்கிகின் றானே.

இயல்பாகவே பேரொளி வீசுவது சிவத்தின் இயல்பு. சக்தி ஒளிமயமாகச் சிவத்தின் விருப்பப்படி செயல்களை செய்து முடிப்பாள். ஆன்மா, சக்தி தேவியின் வசத்தில் இருக்கும்போது திங்கள், கதிரவன், அக்கினி என்ற மூன்றும் வேறு வேறு ஒளிச் சுடர்களாக விளங்கும். சீவன் சிவத்தை பற்றிக் கொண்டவுடன் அந்த மூன்று ஒளிகளும் ஒன்றாகிவிடும். அந்த ஒளியில் சிவன் தன் அருள் ஒளியையம் சேர்த்துச் சீவனுக்கு அருள் செய்வான்.

#2690. மாமணிச் சோதி

உலங்கொளி யாவதுஎன் உள்நின்ற சீவன்
வளங்கொளி யாய்நின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி ஆயத்து ளாகிநின் றானே.

மனமண்டலத்தில் ஒளியாக விளங்குவது சீவனின் நுண்ணுடலில் உள்ள ஆன்மா ஆகும். சீவனை விட்டு விலகாத சிவன் அந்த ஒளிக்குள் ஒளியாக விளங்குவான். மாமணியைப் போல ஒளிரும் அவன் பேரொளி மின்னல் போல விண்ணை அடைந்து அங்கு சீவ ஒளியுடன் இரண்டறக் கலந்து நிற்கும்.

#2691. உள் மனத்து ஒன்றி நின்றான்!

விளங்கொளி யாய்நின்ற விகிர்தன் இருந்த
துளங்கொளி பாசத்துள் தூங்கிருள் சேராக்
களங்கிருள் நட்டமே கண்ணுதல் ஆட
விளங்கொளி உள்மனத்து ஒன்றிநின் றானே.

விளங்கும் ஒளியையுடைய விகிர்தன் ஆவான் சிவன். சீவனைப் பாசத்தில் பிணைக்கும் இருள் மிகுந்த மாயையில், இருள் நீங்கும்படி வெண்ணிற ஒளியுடன் நடனம் செய்பவன் சிவன். இந்த அற்புத சிவநடனம் அடியார்களின் மனமண்டலத்தில்நிகழும்.

#2692. சிவன் சீவனின் நள்ளிருள் நீக்கும்

போது கருங்குழற் போனவர் தூதிடை
ஆதி பரத்தை அமரர் பிரானொடும்
சோதியும் அண்டத்துஅப் பாலுற்ற தூவொளி
நீதியின் நல்லிருள் நீக்கிய வாறே.

ஞானப் பயிற்சி செய்பவர் ஆதிப் தேவர்களின் தலைவனை, தலை உச்சியில் உள்ள சகசிர தளத்தில் சென்று சேருவர். அவர் ஆன்மப் பேரொளி அடைவார். அண்டத்தில் உள்ள பேரொளியும் ஆவார். இந்த விதமாகப் பரம்பொருளாகிய சிவன், சீவனை மாயையைக் கடக்கச் செய்யும்.

#2693. உள்ளே உள்ள விளக்கொளி

உண்டில்லை என்னும் உலகத்து இயல்பிது
பண்டில்லை என்னும் பரங்கதி யுண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை உள்ளே விளக்கொளி யாமே.

உலகத்தினர், "உலகுக்குக் காரணம் ஆன இறைவன் என்று ஒருவன் உண்டு!" என்றும் "இல்லை!" என்றும் பலவாறாகக் கூறுவர். "ஆன்மாவைப் விடப் பழமையானது ஒன்றும் இல்லை!" என்று கூறுபவர்க்குப் பரகதி கிடைக்குமோ? "இறைவனைக் கண்டதில்லை!" என்று கூறுபவர்களும் கூட சிவனை அறிய விரும்பினால் அவனைத் தில்லை ஆகிய தம் மனமண்டலத்தில் ஒளியாக விளங்கும் ஈசனாகக் காணலாம்.

#2694. சாதகன் ஞாலத் துறவி ஆவான்

சுடருற ஓங்கிய ஒள்ளொளி ஆங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையின் ஆரிருள் வீசில்
உடலுறு ஞாலத் துறவியன் ஆமே

ஒண்சுடர் பொருந்திய, ஓர் உயரிய ஒளி வடிவானவன் ஈசன். அவன் சாதகனின் உள்ளத்தில் கதிரவன் போலப் படர்ந்து விரிந்து காட்சி தருவான். அந்த ஒளியின் உதவியுடன், தன் உள்ளத்தில் அடர்ந்து படர்ந்திருந்த மாயையின் இருளை நீக்கினால், உடலுடன் கூடி இருக்கும் போதே சாதகன் இந்த உலகைத் துறக்க முடியும்.

#2695. செம்பொன் ஆதிப்பிரான்

ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்சொம்பொன் ஆதிப் பிரானும்
களிபவ ளத்தினன் காரிருள் நீங்கி
ஒளிபவ ளத்தென்னோடு ஈசன்நின் றானே.

ஒளி வீசுகின்ற பவளம் போன்ற மேனியை உடையவன் சிவன். அந்தப் பவளமேனியில் ஒளி வீசும் வெண்ணீறு தரித்தவன் சிவன். முதிர்ந்த பவள மேனியினன் ஆகிய சிவன் மூலாதாரத்தில் இருந்து சீவனுக்குக் களிப்பைத் தருபவன். கரிய பாச இருளை என்னிடம் இருந்து நீக்கி விட்டான் பால்வண்ண நிறம் படைத்த, என்னுடன் எப்போதும் பிரியாது இருக்கும் என் ஈசன்.

#2696. வாசம் வீசும் மலர் போன்றவன்

ஈசன்நின் றான்இமை யோர்கள்நின் றார்நின்ற
தேசம்ஒன் றின்றித் திகைத்துஇழைக் கின்றனர்
பாசம்ஒன் றாகப் பழவினை பற்றற
வாசம்ஒன் றாம்மலர் போன்றது தானே.

இறைவன் வான் மண்டலத்தில் இருந்தான். அமரர்களும் வான் மண்டலத்தில் இருந்தனர். என்றாலும் ஒளியற்றவர்களாக அவர்கள் மக்களை பூமியை நோக்கிச் செலுத்துகின்றனர். சீவனின் இருவினைகளும், மேலும் வரும் வினைகளும் ஈசன் அருளால் அடியோடு நீங்கி விட்டதால், மலரும் பொழுது மலர் நறுமணம் வீசுவதைப் போலவே சிவன் சீவனிடம் நன்கு வியாபிப்பான்!

#2697. பானாய் இருக்கப் பரவலும் ஆமே.

தானே யிருக்கும் அவற்றில் தலைவனும்
தானே யிருக்கும் அவனென நண்ணிடும்
வானாய் இருக்கும்இம் மாயிரு ஞாலத்துப்
பானாய் இருக்கப் பரவலும் ஆமே.

வானவர்கள் மானவர்களை உலகத்தில் செலுத்துவர். வானவர் கோன் ஆகியவன் சிவன். சீவனுக்கு முக்தியை அளித்துத் தன்னுடன் இணைத்துக் கொள்வதில் அவனைவிடச் சிறந்தவர்கள் எவரும் இல்லை. அளவில்லாத வானமாக பரவி உள்ளவன் சிவன். சீவன் சிவனுடன் இணைந்தால் அவனும் பரவியும் விரவியும் வானத்தைப் போல ஆகிவிடுவான்.

ஒன்பதாம் தந்திரம் -
5. தூல பஞ்சாக்கரம்

தூலம் = பருமை
பஞ்சாக்கரம் = திரு ஐந்தெழுத்து = சிவாயநம
இதை மானசீகமான உச்சரித்தால் அந்த நுண்ணிய அசைவுகள் வானத்தில் பொருந்தும்.
மூலாதாரம் முதலாக இருக்கும் இறைவனை, சீவனின் உடலில் பொருத்திவிடும்.
வேத நெறியில் புற வழிபாட்டுக்கு உகந்தது 'நமசிவாய' என்பது.
ஆகம நெறியில் அக வழிபாட்டுக்கு உகந்தது 'சிவாயநம' என்பது.

#2698. ஐம்பது எழுத்து அஞ்செழுத்து ஆமே

**ஐம்பது எழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்துஆக மங்களும்
ஐம்பது எழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்பது எழுத்தே அஞ்செழுத் தாமே.**

அனைத்து வேதங்களும் ஐம்பது எழுத்துக்களால் கூறப்பட்டுள்ளன. அனைத்து ஆகமங்களும் ஐம்பது எழுத்துக்களில் கூறப்பட்டுள்ளன. இந்த ஐம்பது எழுத்துக்களும் நம் உடலில் உள்ள ஆதாரங்களில் பொருந்தியுள்ளன. அந்த முறையினை அறிந்து கொண்டால் அந்த ஐம்பது எழுத்துக்கள்ளால் பெறும் நன்மையை 'நமசிவாய' என்னும் ஐந்து எழுத்துக்களால் பெற்றுவிடலாம்.

#2699. நந்தியின் நாமம்

**அகார முதலாக ஐம்பத்தொன்று ஆகி
உகார முதலாக ஓங்கி உதித்து
மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந்து ஏறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே.**

'அ' முதலாக 'ஓம்' உட்பட ஐம்பத்தொன்று எழுத்துக்கள் உள்ளன. இந்த எல்லா எழுத்துக்களும் வாயைத் திறப்பதனால் பிறக்கின்றன. இவைகள் உதடுகள் குவிவதால் நிலை பெறுகின்றன. இவைகள் உதடுகள் இணைவதால் இறுதியை அடைகின்றன. 'ந'காரத்தை அடைந்தவுடன் நந்தியின் நாமம் 'நமசிவாய' என்பது தோன்றும்.

#2700. 'நமசிவாய' என்னும் மூலமந்திரம்

அகராதி ஈரெண் கலந்த பரையும்
உகராதி தன்சத்தி உள்ளொளி ஈசன்
சிகராதி தான்சிவ வேதமே கோணம்
நகராதி தான்மூலமந்திரம் நண்ணுமே.

அகரம் முதலிய பதினாறு உயிர் எழுத்துக்களில் கலந்து இருப்பவள் பரை என்னும் சக்தி. மெய் எழுத்துக்களை இயக்குபவர்கள் பிராமி, வைணவி, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப் பிரதமணி, சர்வ பூத தமனி என்னும் எட்டு சக்தியர். இவர்களுடன் கலந்து சிவம் ஒளிமயமாகித் திகழும். அங்குசம் போன்ற மூல மந்திரம் ஆகும்' நமசிவாய'. இதை அறிந்தவருக்கு இந்த தெய்வீக உணர்வு உடலில் உடனே வந்து பொருந்தும்.

#2701. ஆறு சக்கரங்களில் ஆறு எழுத்துக்கள்

வாயொடு கண்டம் இதயம் மருவுந்தி
ஆய இலிங்கம் அவற்றின்மேல் அவ்வாய்த்
தூயதோர் துண்டம் இருமத் தகம்செல்லல்
ஆயதுஈ றாம்ஐந்தோடு ஆம்எழுத்து அஞ்சுமே.

திரு ஐந்தெழுத்தாகிய 'நமசிவாய' என்பதும் 'ஓம்' என்ற பிரணவமும் உடலில் ஆறு சக்கரங்களில் பொருந்தும் முறை இது: மூலாதாரத்தில் 'நகாரம்' பொருந்தும். சுவாதிட்டானத்தில் 'மகாரம்' பொருந்தும். நாபிப் பிரதேசத்தில் 'சிகாரம்' பொருந்தும். இதயப் பகுதியில் 'வகாரம்' பொருந்தும். கண்டப்பகுதியில் 'யகாரம்' பொருந்தும். புருவ மத்தியில் 'ஓம்' என்னும் பிரணவம் பொருந்தும்.

#2702. அரணம் ஆவது ஐந்தெழுத்தே

கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போது
மரணம்கை வைத்துஉயிர் மாற்றிடும் போதும்
அரணம்கை கூட்டுவது அஞ்செழுத் தாமே.

யோகிகளுக்கு வானவில்லின் ஏழுவர்ணங்களும் தலைமீது ஒளிமயமாக விளங்கும். இவர்கள் தங்கள் கருவிகள் கரணங்களைத் துறந்து ஆன்மாவைத் தலைக்கு மேலாக விடுத்தலும் சரி அல்லது இயற்கையாகவே சீவன் தன் கருவிகள் கரணங்களைத் துறந்து உடலைவிட்டு வெளியேறினாலும் சரி, சீவனுக்கு அரணாக நின்று பாதுகாவல் செய்வது 'நமசிவாய' என்னும் திரு ஐந்தெழுத்துக்களே.

#2703. வாயுற ஓதி வழுத்துங்கள்

ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திரம் ஆரும் அறிகிலார்
சேயுறு கண்ணி திருஎழுத்து அஞ்சையும்
வாயுறு ஓதி வழுத்தலும் ஆமே.

கதிரவனும், திங்களும் உதிக்கும் பொழுது அழகிய ஒளியாக விளங்கும் அந்த மந்திரத்தை எவரும் அறிந்து கொள்ளவில்லை. செம்மை நிறம் வாய்ந்த குண்டலினி சக்திக்கு உரிய ஐந்தெழுத்துக்கள் 'சிவாய நம' என்பவை. இவற்றை வாயுற ஓதி சிவ சக்தியரை வழுத்துங்கள்.

#2704. சிவாயநம என்றால் தெள்ளமுதூறும்

தெள்ளமுது ஊறச் சிவாய நமஎன்று
உள்ளமுது ஊற ஒருகால் உரைத்திடும்
வெள்ளமுது ஊறல் விரும்பிஉண்ணாதவர்
துள்ளிய நீர்போல் சுழல்கின்ற வாறே.

உள்ளத்தில் ஒளி பெருகவும், தெளிந்த அமுதத்தைப் பருகவும் 'சிவாயநம' என்று ஒரு முறை உரையுங்கள். வெள்ளம் போலப் பெருக்கெடுக்கும் சீவ ஒளியினை விரும்பாதவர்கள், துள்ளிய நீர் ஒரு நீர்க் குமிழயாகி நீரிலேயே இருப்பதை போலப் பிறவிக்கு கடலில் எப்போதும் கிடப்பர்.

#2706. குரை கழல் ஒலிக்கும்!

வெறிக்க வினைத்துயிர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருஎழுத்து ஓதும்
குறிப்பது உன்னில் குரைகழல் கூட்டும்
குறிப்பறி வான்தவம் கோன்உரு வாமே.

உள்ளம் தடுமாறும்படி முற்பிறவிகளில் செய்த தீவினைப் பயன்களால் வாழ்வில் துன்பங்கள் வந்து சேரலாம். அப்போது உம்மிடம் பொருந்தியுள்ள சிவத்தைக் குளிர்விக்கும் 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்தினை ஓதுங்கள். உம் உள்ளக் கருத்தை அறிந்து கொண்ட சிவன், தன் குரைகழல்கள் ஒலியின் மூலம் உமக்கு உறுதுணையாகத் தான் இருந்து வருவதை உணர்த்துவான். இந்த ஆற்றல் பெற்றவர் செய்யும் தவம் அவருக்குச் சிவ வடிவத்தைத் தரும்.

#2707. அஞ்சில் விளங்குபவன் அருள் புரிவான்

நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரான்என்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரண்என்று
மஞ்சு தவழும் வடவரை மீதுரை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே.

நெஞ்சாரச் சிவனை நினையுங்கள்! வாயாறச் சிவனை வாழ்த்துங்கள்! துஞ்சும் போதும் "நின்தாள் சரணம்!" என்று அஞ்சாமல் கூறுங்கள்! அப்போது அஞ்செழுத்தில் விளங்குகின்ற நம் ஈசன், மஞ்சு தவழும் வடவரையின் மீது உறையும் அன்பர் நேசன், தன் தண்ணருளைப் அருளைப் பொழிவான்.

#2708. அகலிடம் அவர் புகலிடம் ஆகும்!

பிரான்வைத்த ஐந்தின் பெருமை யுணராது
இராமாற்றம் செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றும் கீழோடு பல்வகை யாலும்
அராமுற்றும் சூழ்ந்த அகலிடம் தானே.

திரு ஐந்தெழுத்துக்களில் உறைகின்ற பிரானின் பெருமையை உள்ளபடி உணராமல் ஒருவன் தன் அஞ்ஞான இருளை அகற்ற முடியுமோ? முடியாது! இறைவனின் புகழை அறியாமல் அவனைப்பற்றி வேறு விதமாக எண்ணும் அறிவற்றவர்கள் அரவுகளும், பலவகைக் கணங்களும் சூழ்ந்துள்ள இருண்ட உலகினைச் சென்று அடைவார்கள்.

ஒன்பதாம் தந்திரம் -
6. சூக்கும பஞ்சாக்கரம்

நுட்பமான பஞ்சாக்கரம்
ஒளியை நினைத்து 'சிவாயநம' என்று ஓதுவது நுண்மையான ஐந்தெழுத்து ஆகும்.

#2709. குளிகை இட்டுப் பொன் ஆக்குவான்

எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
தெளிய ஓதிச்சிவாயநம என்னும்
குளிகை யிட்டுப் பொன் னாக்குவன் கூட்டையே.

எந்தை சிவபெருமானின் பெருமைகளை அறியாமல் சிலர் அவனை எள்ளி நகையாடுவர். அவன் தன்மைகளைக் குறித்து விதண்டாவாதம் புரிவர். அங்ஙனம் இன்றி அவனை ஒளிமயமாக எண்ணி, அவனை நினைத்து, உருகும் உள்ளம் படைத்தவர்களுக்கு அவன் ஒளிமயமாக வெளிப்படுவான். 'சிவாயநம' என்று அவனை இடையறாச் சிந்தனை செய்வீர். அப்போது அவன் ரசவாதிகள் குளிகையின் உதவியுடன் செம்பைச் சொக்கத் தங்கம் ஆக்குவது போல மலங்கள் நிறைந்த உங்கள் உடலை மலங்கள் நீங்கிப் பொன்னொளி பெறச் செய்வான்.

#2710. ஐந்தெழுத்துக்கள் ஐந்து மலங்களை அகற்றும்

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலம்ஐந்து அகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவம்சேர்த்த பாசம் அணுககி லாவே.

'சிவாயநம ' என்று சொல்லில் உள்ள ஐந்து எழுத்துக்களும் முறையே சிவன், சக்தி, சீவன், மலம், மாயை என்ற ஐந்தையும் உணர்ந்துகின்றன. இதை உள்ளன்போடு ஓதினால் சீவனுக்குத் துன்பம் தருகின்ற ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்ற ஐந்து மலங்களும் அகன்று சென்று விடும். சிகாரம் குறிக்கும் சிவன், வகாரம் குறிக்கும் சக்தியுடனும், யகாரம் குறிக்கும் ஆன்மாவுடனும் சேர்ந்து சீவனைப் பற்றியிருந்த துன்பங்களை போக்கும். ஒளிமயமான சிவனும் சக்தியும் ஒளிமயமாக மாறியுள்ள சீவனுடன் இணைந்தவுடன் அறியாமை இருள் அகன்றுவிடும்.

#2711. பவம் அகன்று பரசிவம் ஆகும்

சிவன்அரு ளாய சிவன்திரு நாமம்
சிவன்அருள் ஆன்மா திரோதம் மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவமது அகன்று பரசிவன் ஆமே.

'சிவாயநம' என்ற ஐந்தெழுத்துக்கள் சிவன், சக்தி, சீவன், திரோதாயி, மலமாயைகள் இவற்றைக் குறிக்கும். சீவன் ஐந்தெழுத்தை ஓதும் பொழுது வினைகளும் வினைப் பயன்களும் நீங்கும். சீவன் பிறவிப் பிணி நீங்கி பரசிவன் ஆகிவிடும்.

#2712. சிவஞான யோகம் சித்திக்கும்

ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டு அவ்
ஆதி தனைவிட்டு இறையருள் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதும் சிவாயமலமற்ற உண்மையே.

'சிவாய நம' என்று எண்ணும் போது 'நம' என்பது குறிக்கின்ற இருளும், மலமும் தாமே அகன்று சென்று விடும். ஆணவமும் அகன்றுவிடும். அப்போது தூய சிவசக்தியரின் அருளால் சீவனுக்குத் தூய சிவஞானம் சித்திக்கும். எனவே சிவாய நாம என்ற ஒளியினை வழிபடுங்கள். அதன் பயனாகச் சீவனின் மலம் அகன்ற உண்மை நிலை சித்திக்கும்.

#2713. நமாதி சமாதி சிவமாதல் எண்ணவே.

நமாதி நனாதி திரோதாயி யாகத
தம்ஆதிய தாய்நிற்கத் தான்அந்தத் துற்றுச்
சமாதித் துரியம் தமதுஆகம் ஆகவே
நமாதி சமாதி சிவமாதல் எண்ணவே.

ந, ம, சி, வா, ய என்ற ஐந்தெழுத்துக்கள் சீவனின் ஐந்து நிலைகளில் (நனவு, கனவு, சுழுத்தி, துரிய, துரியாதீதம்) விளங்கும். திரோதாயீ என்ற ஆன்மாவை மறைக்கும் ஆவரண சக்தி பராசக்தியாக மாறி அருள் பொழியும் பொழுது, சீவன் உயரிய சமாதியில் உள்ள துரிய நிலையை அடையும். எனவே 'நமசிவாய' என்ற நாமத்தை இடையறாது சிந்தித்திருந்தால், சமாதி நிலையை அடைந்து சீவன் சிவன் ஆக மாறிவிடும்.

#2714. அருவினை தீர்ப்பது ஐந்தெழுத்து

அருள்தரும் ஆயமும் அத்தனும் தம்மில்
ஒருவனை ஈன்றவள் உள்ளுறும் மாயை
திரிமலம் நீங்கிச் சிவாயஎன்று ஓதும்
அருவினை தீர்ப்பதும் அவ்வெழுத் தாமே.

அருள் புரிவதில் வேறுபட்டு இருக்கின்ற சக்திக் கூட்டத்துடன் தலைவன் ஆகிய சிவன் கலந்து சீவனின் உடலுடன் அதன் ஆன்மாவைப் பொருத்தி வைப்பான். எனினும் சீவனின் உடல் மாயையில் மூழ்கி இருக்கும். 'சிவாய' என்று ஒளி வடிவாகச் சிவனை வழிபட்டால், சீவனை மாயையில் ஆழ்த்துகின்ற ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களும் அகன்று விடும். பிறவிக்கு காரணமான வினைகளும் வினைப் பயன்களும் அழிந்து விடும். அருவினைகளைத் தீர்ப்பது அருள் மிகுந்த ஐந்தெழுத்துக்கள் ஆகும்.

#2715. 'சிவசிவ' எனத் திருவருள் ஆகும்.

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவும் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ ஆய தெளிவின் உள் ளார்கள்
சிவசிவ ஆகும் திருவருள் ஆமே.

வாய் பேசமுடியாத ஊமைகளும் 'சிவசிவ' என்று எண்ணுவதில் விளையும் நன்மைகளை அறியார். 'சிவசிவ' என்று எண்ணம் நிலைத்திருக்கும் போது மூச்சின் கதியும் சீரடைந்து அந்த நாமத்தில் லயம் அடைந்து விடும். மூச்சின் கதி லயம் அடைந்தால் எண்ணங்கள் ஒடுங்கி மனமும் லயம் அடையும். இதில் தெளிந்தவர்கள் சிவசக்தியாகவே மாறி அமைந்து விடுவர்.

#2716. சிவசிவ என்னச் சிவகதி தானே

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

முற்பிறவிகளில் செய்த தீவினைகளால் சிலர் 'சிவசிவ' என்று ஓதாமல் வீணே தம் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். எத்தகைய தீவினை புரிந்திருந்தாலும் 'சிவசிவ' என்று உரைக்கும் போதே அந்தத் தீவினைகள் அனைத்தும் மாய்ந்து போகும். 'சிவசிவ' என்று ஓதுபவர் தேவ உடல் பெறுவார். 'சிவசிவ' என்று சிந்தித்திருப்பதால் அவர்கள் சிவகதியும் அடைவர்.

#2717. அவமதி தீர்ந்து பிறப்பு அறும்!

நம என்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவ என்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவம் அது தீரும் பரிசும்அது அற்றால்
அவமதி தீரும் அறும்பிறப்பு அன்றோ.

'சிவாய நம' என்ற திரு ஐந்தெழுக்களை உச்சரிக்கும் முறை இதுவே. 'நம' என்ற எழுத்துக்களை கழுத்துக்கு கீழாக உள்ள இருண்ட பகுதியில் நிறுத்த வேண்டும். 'சிவா' என்ற எழுத்துக்களைக் கூறுகையில் அவற்றைச் சித்தத்தில் உள்ள ஆன்ம ஒளியில் நிறுத்த வேண்டும். தலையின் மீது உள்ள ஒளி மண்டலத்தில் இருப்பது யகரம் ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
7. அதி சூக்கும பஞ்சாக்கரம்

'சிவாய சிவ சிவ' என்பது நுட்பமான பஞ்சாக்கரம்
சிவஒளியில் சீவன் சீவன் எந்த நினைவும் இல்லமால் அடங்கி இருத்தல் நுண்ணிய பஞ்சாக்கர தரிசனம்.

#2718. அவாயம் கெட ஆனந்தம் ஆமே.

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே.

'சிவாய நம' என்று சித்தத்தை வெளியே செல்லாதவாறு அடக்கிச் சீவன் உரைத்துவந்தால், சீவன் சிவத்துக்கே அடிமை ஆகிவிடும். அதன் மன மலங்கள் அறுந்துவிடும். 'சிவாயசிவசிவ' என்று ஓதிவந்தால் அபாயங்கள் அனைத்தும் நீங்கிச் சீவனுக்குள் தூய ஆனந்தம் பெருகும்.

#2719. நீங்கா நிலை பெறலாகுமே

செஞ்சுடர் மண்டலத்து ஊடுசென்று அப்புறம்
அஞ்சண வும்முறை ஏறிவழிக் கொண்டு
துஞ்சும் அவன்சொன்ன காலத்து இறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே.

நுண்ணிய ஐந்தெழுத்துக்களின் தரிசனத்தால் சீவனின் மூலாக்கினி உடலில் உள்ள ஆறு ஆதாரங்களின் வழியே மேலே செல்லும். கதிரவன் மண்டலத்தைத் தாண்டிச் செல்லும். திங்கள் மண்டலத்தைச் சென்று அடைந்து ஐந்து அறிவுகளும் பொருந்த அங்கே நிற்கும். அங்கே யோக நித்திரையில் பொருந்திய சீவன் உலக நினைவுகளை மறந்து இருக்கும் பொழுது சிவம் அதன் நெஞ்சை இடமாகக் கொள்வான். அதனால் சீவன் சிவனுடன் இணை பிரியாத நிலையை அடையும்.

#2720. அங்கரை சேர்க்கும் அருங்கலம் ஆகும்

அங்கமும் ஆகம வேதமது ஓதினும்
எங்கள் பிரான்எழுத்து ஒன்றில் இருப்பது
சங்கைகெட்டு அவ்எழுத்து ஒன்றையும் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலம் ஆமே.

அங்கங்கள் ஆறு, ஆகமங்கள், வேதங்கள் என்பவற்றை முறையாக ஓதினாலும் அவை அனைத்தும் கூறும் மெய்ப் பொருள் 'சி' என்ற சிவனின் முதல் எழுத்தில் அடங்கிவிடும். ஐயங்களை நீக்கி அந்த எழுத்தின் உண்மையை உணர்ந்து கொண்டு அதைச் சாதனை செய்தலே போதும். அதுவே சீவனை முத்தியாகிய அக்கரையைச் சென்று அடைவிக்கும் அரிய தோணி ஆகும்.

#2721. தலை எழுத்தை அழுத்தும் எழுத்து

பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்துஅங்கு உறங்கும் வினைஅறி வாரில்லை
எழுத்துஅறி வோம்என்று உரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்துஅறி யாரே.

பழுத்த கனிகளைப் போலத் திரு ஐந்தெழுத்துக்கள் பண்டைய மறைகளில் உள்ளன. அந்தக் கனிகளை உண்பதற்கு அவற்றையே சிந்தித்து அவற்றில் ஆழ்ந்துவிடும் அருமையை உணராதவர்கள் அறிவிலிகள். அவர்கள் இந்த எழுத்துக்களின் பெருமையை அறியாமால்,"இவை வெறும் எழுத்துக்கள் தானே!" என்று கூறுவார். ஆனால் அவர் தம் தலை எழுத்துக்களையே மாற்றும் வல்லமை படைத்தவை ஐந்தெழுத்துக்கள் என்று அவற்றின் பெருமையை அவர்கள் அறிய மாட்டார்கள்.

ஒன்பதாம் தந்திரம் -
8 (1) திருக் கூத்துத் தரிசனம்

திருக்கூத்து என்றால் ஒளியின் அசைவு.
தரிசனம் = அந்த ஒளி அசைவில் திளைத்து இருத்தல்.
இந்த ஒளியின் அசைவே உலகின் எல்லா அசைவுகளுக்கும் மூல காரணம் ஆகும்.

#2722. எங்கெங்கும் தங்குபவன் சிவன்

எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளை யாட்டதே.

எங்கும் நிறைந்துள்ளது சிவன் வடிவம்; எங்கு நிறைந்துள்ளனர் சிவசக்தியர்; எல்லா இடங்களும் சிதம்பரம்; எங்கு நோக்கினும் திரு நடனம்; எங்கும் உள்ளான் சிவன், எல்லாம் அவன் அருள்; நிகழ்பவை எல்லாம் அவன் அருள் விளையாட்டு!

#2723. அறிவதற்கு அரிய அற்புதக் கூத்தன்!

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார்அறி வாரே.

சிவன் சிற்பரஞ்சோதி; சிவன் ஆனந்தக் கூத்தன்; சிவன் பிரணவ நாதத்துள் உறைபவன்; சிவன் சுந்தரக் கூத்தன்; சிவன் பொற்பதிக் கூத்தன்; சிவன் பொற் தில்லைக்கு கூத்தன்; சிவன் அறிவதற்கு அரிய அற்புதக் கூத்தன்! அவனை அறிபவர் யார் ?

ஒன்பதாம் தந்திரம் -
8(2) சிவானந்தக் கூத்து

சிவானந்தத்தை விளைவிக்கும் கூத்து இது!

#2724. தான் அந்தம் இல்லாத ரூபன்

தான்அந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேன்உந்தும் ஆனந்த மாநடம் கண்டீர்
ஞானம் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கு அங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங்கு ஆனதே.

தான் அந்தமில்லாதவள் சதா ஆனந்தத்தில் விளங்கும் சக்தி தேவி. தேன்சுவை சிந்தும் ஆனந்த மாநடனம் ஆடும் சிவசக்தியர் இருவரையும் காணீர்! அவர்களைக் கண்டபின்னர் ஞானம் கடந்து நடனம் ஆடும் சிவ பிரானுக்கு ஆடல் அரங்கு ஆகி விடுவீர்கள் நீங்களும்!

#2725. ஆனந்தக் கூத்து உகந்தான்

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துஉகந் தானுக்கே.

சிவனின் ஆடலரங்கு ஆனந்த மயமானது; அவன் ஆடலின் பாடல்கள் ஆனந்த மயமானவை; அவன் ஆடலின் இசை ஆனந்த மயமானது; அவன் ஆடலின் வாத்திய இசை ஆனந்த மயமானது; சிருட்டிகள் அனைத்தும் ஆனந்த மயமானவை; ஆனந்த நடனம் ஆடும் ஈசனும் ஆனந்த மயமானவன்.

#2726. சிவானந்த நடனம்

ஒளியாம் பரமாம் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகும் சமயக்
களியார் பரமும் கருதுறை யந்தக்
தெளிவாம் சிவானந்த நட்டத்தின் சித்தியே.

சிவானந்த நடனத்தின் பயன் யாது?

அறிவுப் பேரொளியாகிய சிவபரமும், தத்துவங்களை விட்டு விட்ட ஆன்மபரமும், உயிர்களுக்கு அன்பைப் பொழிந்து இன்பம் தரும் சக்தியாகி பரமும், ஆன்மாவின் கருத்தில் உறைகின்ற பேரின்பத்தில் எல்லையே சிவானந்த நடனத்தின் உண்மைப் பயன் ஆகும்.

#2727. தேன்மொழி பாகனின் திருநடனம்

ஆன நடம்ஐந்து அகள சகளத்தர்
ஆன நடமாடி ஐங்கரு மத்தாக
ஆன தொழில்அரு ளால்ஐந் தொழில்செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே.

வடிவம் அற்ற சிவபெருமான் ஏன் வடிவம் எடுத்துக் கொண்டு நடனம் ஆடுகிறான்? சிவன் புரியும் இந்த நடனங்கள் ஐந்து வகைப்படும். அவை செயய்யும் தொழில்கள் ஐந்து வகைப்படும். தேன்மொழி பேசும் தேவியைத் தன் உடலின் ஒரு பாகமாகக் கொண்டுள்ள பிரான் இந்த ஐந்தொழில்களை இயற்றுவதற்கே ஐந்து வகை நடனம் ஆடுகிறான்.

#2728. ஐங்கருமம் இயற்றுபவன்

பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாண்ட ஐங்கரு மாத்தாண்ட தற்பரத்து
ஏகாந்த மாம்பிர மாண்டத்த என்பவே.

ஒன்பது வகையான அண்டங்கள் ஈசன் படைப்பில் உள்ளன. அவை முறையே

1). ஐம்பூதங்களின் கலப்பால் உண்டாகிய அண்டம்;
2). வேறு வகையான பூதங்களின் கலப்பால் உருவாகிய அண்டம்;
3). வினைகளுக்கு ஏற்ப சீவன்கள் போகங்களை அனுபவிக்கும் அண்டம்;
4). யோக சாதனைகளுக்கு ஏற்ப யோகியர் சென்று அடையும் அண்டம்;
5). புனர் சிருட்டியின் போது சீவர்கள் சென்று பிறக்கும் அண்டம்;
6). முக்தி அடைந்தவர்களின் அண்டம்;
7). உயிர் பிரிந்த பின்பும் கொண்ட ஆசைகளைத் துறக்காதவர்களின் அண்டம்;
8). பூத உடலுடன் சீவர்கள் வாழ்கின்ற அண்டம்;
9). விருப்பங்கள் மிகுந்தவர்கள் வாழ்கின்ற அண்டம்.

பிரம்மாண்டத்தில் உள்ள இந்த ஒன்பது அண்டங்களிலும் ஐந்தொழில்களைத் தன் விருப்பம் போல இயற்றுபவன் ஏகாந்தத்தில் இருக்கும் தற்பரன் ஆகிய சிவன்.

#2729. ஞான ஆனந்தக் கூத்து!

வேதங்கள் ஆட மிகுஆ கமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளர்அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதம்கொண் டாடினான் ஞானாந்தக் கூத்தே.

வேதங்களில் உள்ள அறிவு ஆடிட; ஆகமங்களில் உள்ள அறிவு ஆடிட; கீதங்களின் அறிவு ஆடிட; ஆதாரச் சக்கரங்கள் ஏழில் விளையும் அறிவும் ஆடிட; ஐம்பூதங்களின் அறிவு ஆடிட; அனைத்து புவனங்களின் அறிவும் ஆடிட; ஞானத்தை அளிக்கின்ற ஞான ஆனந்தக் கூத்தினை நாத சக்தியுடன் கூடி ஈசன் ஆடினான்.

#2730. ஆடும் சித்தன் சிவன்!

பூதங்கள் ஐந்தில் பொறியில் புலன்ஐந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகும்ஆ கமந்தன்னில்
ஓதும் கலைகாலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்தில் புணர்ந்தாடும் சித்தனே.

ஐந்து பூதங்களிலும்; ஐம் பொறிகளிலும்; ஐம் புலன்களிலும்; ஐந்து வேதங்களிலும்; எண்ணிக்கையில் மிகுந்த ஆகமங்களிலும்; ஐந்து கலைகளிலும்; பல காலத்திலும், பல ஊழிகளிலும்; பல வேறு அண்டங்களில் உள்ள ஐந்து வகை அறிவிலும்; இரண்டறக் கலந்து சித்த மூர்த்தியாகிய சிவன் நடனம் ஆடுகிறான்.

#2731. ஈசன் ஆட ஆடும் சராசரம்

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே.

தேவர்கள், சுரர்கள், நரர்கள், சித்தர்கள்; வித்தியாதரர்கள்; மும் மூர்த்திகள், முப்பத்து முக்கோடி தேவர்கள்; தவம் செய்பவர்கள், ஏழு பெரும் தவ முனிவர்கள், அசையும் உயிர்கள், அசையாத பொருட்கள் எனப் படைப்பில் இருக்கும் அத்தனையும் இறைவன் நடனம் ஆடும் இடங்கள் ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
8(3). சுந்தரக் கூத்து

சீவனின் அண்ட கோசத்தினுள் உமை அம்மை கண்டு ரசிக்கும்படி சிவன் புரியும் நடனம்.

#2732. உமை காணக் கூத்து உகந்தான்

அண்டங்கள் ஏழினிக்கு அப்புறத்து அப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத்து உச்சிமேல்
கண்டம் கரியான் கருணை திருவுருக்
கொண்டுஅங்கு உமைகாணக் கூத்துஉகந் தானே.

அண்டங்களில் ஏழினுக்கும் அப்பால்; சக்தி, சதாசிவனின் உறைவிடத்துக்கும் மேலே; கரிய கழுத்தினை உடைய; கருணையே திருவுருவாகக் கொண்ட ஈசன் அன்னை உமை கண்டு மகிழும்படிக் கூத்துப் புரிந்திட உகந்தான்.

#2733. மன்னவனின் பல்வேறு நடனங்கள்

கொடிகொட்டி பாண்டுரங் கோடுசங் காரம்
நடம் எட்டோடு ஐந்துஆறு நாடியுள் நாடும்
திடம்உற்று எழும்தேவ தாருவும் தில்லை
வடம் உற்ற மாவனம் மன்னவன் தானே.

மன்னவன் ஆடும் கூத்தின் வகைகள்:

கொடுகொட்டிக் கூத்து: அனைத்துத் தத்துவங்களையும் அழித்துவிட்டு ஆடும் கூத்து பாண்டரங்கம்: திரிபுரங்களை எரித்தபோது உண்டாகிய சாம்பலை உடலில் அணிந்து கொண்டு ஆடும் கூத்து கொடு: நான்முகனின் தலையைக் கிள்ளிய போது ஆடிய கூத்து நடம் எட்டு: அட்ட மூர்த்தத்தில் ஆடுகின்ற கூத்து நடம் ஐந்து: நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளில் ஆடும் கூத்து ஆறு: உடலின் ஆறு ஆதாரங்களில் ஆடும் கூத்து தேவதாருவனம்: தாருகாவன முனிவர்கள் ஆணவத்தை அழிக்க ஆடிய கூத்து. தில்லைவனம்: அறியாமை என்னும் தில்லைவனத்தை அழிக்க மனம் என்னும் தாமரை மலரில் ஆடிய கூத்து வடமாவனம்: திரு ஆலங்காட்டு என்ற மூலாதாரத்தில் ஆடிய கூத்து.

#2734. பரன் நடம் ஆடுவான்

பரமாண்டத்து ஊடே பராசத்தி பாதம்
பரமாண்டத்து ஊடே படரொளி ஈசன்
பரமாண்டத்து ஊடே படர்தரு நாதம்
பரமாண்டத்து ஊடே பரன்நடம் ஆடுமே.

பரமாண்டத்தின் உச்சியில் உள்ளன பராசக்தியின் திருப்பாதங்கள்.
பரமாண்டத்தின் உச்சியில் படரும் ஒளியில் இறைவன் இருக்கின்றான்.
பரமாண்டத்தின் உச்சியில் படரும் ஒளியில் உள்ளது நாதம்.
பரமாண்டத்தின் உச்சியில் படரும் ஒளியில் விளங்கும் நாதத்தில் பரன் நடனம் ஆடுகின்றான்.

#2735. போதல், புகுதல் இல்லை!

அங்குசம் என்ன எழுமார்க்கம் போதத்தில்
தங்கிய தொந்தி எனும்தாள ஒத்தினில்
சங்கரன் மூலநா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போகல் இல்லையே.

யானையை அடக்குவதற்கு ஒரு சிறிய அங்குசம் போதுமானது. சீவனின் அறிவில் தோம் தீம் என்ற தாளத்துக்கு ஏற்பச் சிவன் சுழுமுனையில் நடனம் புரிவான். அப்போது சீவனின் மனம் வெளியே செல்வதை விட்டு விட்டு அங்குசத்திற்கு அடங்கிய யானையைப் போல அடங்கிவிடும்.

#2736. ஞானத்துள் ஆடி முடிக்கும் நாதன்

ஆன்நந்தி யாடிபின் நவக் கூத்தாடிக்
கான்நந்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான் என் நாதனே.

சீவன்களின் அறியாமையைப் போக்க விரும்பிய சிவன் நடனம் ஆடினான். சீவன்களின் அறியாமை நீங்கிச் சீவர்கள் அறிவு பெற்ற பின்பு, உயிர்களிடம் ஒன்பது வகையாகப் பொருந்தி ஆடினான். மூன்று நாடிகளும் பொருந்தும் சுழுமுனையில் நின்று ஆடினான். எல்லையற்ற சிவஞானத்தில் நின்று ஆடினான். சிவன் எனக்குள் புகுந்து என் உயிர் அறிவைக் கெடுத்து அருள் செய்தான்.

#2737. தொல் நடனம் ஆடுவான்

சத்திகள் ஐந்தும் சிவபேதம் தான்ஐந்தும்
முத்திகள் எட்டும் முதலாம் பதம் எட்டும்
சித்திகள் எட்டும் சிவபதம் தான்எட்டும்
சுத்திகள் எட்டுஈசன் தொல்நடம் ஆடுமே.

சிவன் நடனம் செய்யும் இடங்கள்:
பிராமி, வைணவி, ரௌத்திரி, காளி, மனோன்மனி என்னும் சக்திகள் ஐவர்; நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற ஐந்து சிவபேதங்கள்;

மூர்த்திகள் எண்மர் லயம் அடையும் எட்டு இடங்கள்; அணிமா முதலிய எட்டுச் சித்திகளின் நிலைகள்; சிவ பாதங்களின் எட்டு நிலைகள்; சுத்தி கர்மங்கள் எட்டு என்ற இவற்றுள் சிவன் நடனம் புரிகின்றான்.

#2738. நந்தி அடிக்கீழ் அடங்குமே.

மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழும்
தேகங்கள் ஏழும் சிவபாற் கரன்ஏழும்
தாகங்கள் ஏழும் சாந்திகள் ஏழும்
ஆகின்ற நந்தி அடிக்கீழ் அடங்குமே.

சிவபிரானின் திருவடிகளுக்குக் கீழே அடங்கி இருப்பவை இவை:-

1. மேகங்கள் ஏழு:
ஆவர்த்தம், புட்கலம், சங்காரம், ஆசவனம், நீர்க்காரி, சொற்காரி, சிலாவருடம்

2. கடல்கள் ஏழு:-
உப்புக்கடல், கரும்புச் சாற்றுக்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், தூய நீர்க்கடல்

3. தீவுகள் ஏழு:-
நாவலந்தீவு, இறலித் தீவு, குசத்தீவு, கிரௌஞ்சத் தீவு, இளவந்தீவு, தெங்கத் தீவு, புட்கரத் தீவு

4. உயிரினங்கள் ஏழு:-
தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்

5. சிவ பேதங்கள் ஏழு:-
நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், நாதம், விந்து

6. ஏழு நாக்குக்களை உடைய அக்கினி.

7. சாந்திகள் ஏழு:-
ஐந்து இந்திரியங்கள் + மனம் + புத்தி

ஒன்பதாம் தந்திரம் -
8(4). பொற்பதிக் கூத்து

பொன் ஒளி வீசுவது பொன்னம்பலம்.
தலையின் மீது பொன்னொளியில் விளங்குவது பொற்பதிக் கூத்து.

#2739. தனி நடம் செய்வான் தற்பரன்

**தெற்கு வடக்குக் கிழக்குமேற்கு உச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத்து உபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடம் செய்யுமே.**

சிவனின் ஐந்து முகங்கள்: தெற்கே உள்ள முகம் அகோரம்; வடக்கில் உள்ளது வாமதேவம்; கிழக்கில் உள்ளது தத்புருடம்; மேற்கில் உள்ளது சத்தியோசாதம்; உச்சியில் உள்ள முகம் ஈசானம். இந்த அற்புதமான ஐந்து முகங்களிலும், உருவம், அருவம், உருவருவம் என்னும் ஒன்பது பேதங்களிலும் பொருந்தி, ஒப்பற்ற நடனம் செய்கின்றான் சிவபெருமான்.

#2740. சிவனடியார் என்பவர் யார்?

**அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தருள் உற்றோர்
அடிஆர் பவரே அடியவர் ஆமால்
அடியார்பொன் அம்பலத்து ஆடல்கண்டாரே.**

சிவானந்தத்தைத் தமக்குள் அனுபவித்தவர்; சிவபெருமானிடத்தில் அடங்கி அங்கே நிலைத்து இருப்பவர்; சிவன் திருவடிகளின் இன்பத்தில் திளைத்து இருப்பவர்; பொன்னம்பலத்தில் சிவநடனம் கண்டு களித்தவர் என்ற இவர்களே மெய்யான சிவனடியார்கள்.

#2741. நடம் செய்யும் நந்தி ஒரு ஞானக் கூத்தன்

**அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடம்காண் பரானநத்தத் தேஎன்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படம்தான்செய்து உள்ளுள் படிந்திருந் தானே.**

ஐம்பொறிகளின் வசப்பட்டு அடங்காமல் திரிந்த என் மனத்தில் தன் திருவடிகளைப் பதித்து சிவன் என்னை அடக்கினான். என் சீவனின் சக்தியைப்

பெருக்கி ஒளிரச் செய்தான். என்னைப் பேரின்பத்தில் ஆழ்த்தினான். நன்மை தரும் ஞானக் கூத்தினை ஆடுகின்ற ஈசன் என்னை ஓர் அசையாத ஓவியம் போல ஆக்கி விட்டான். என் உள்ளத்தில் நிலை பெற்று விளங்கினான்

#2742. கூத்தனை என் அன்பில் வைத்தேன்

**உம்பரில் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொன் திருமன்றுள் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே.**

வானில் நடனம் செய்பவன் சிவன்; உத்தமர்கள் உள்ளங்களில் நடனம் செய்பவன் சிவன்; பொன்னம்பலத்தில் நடனம் செய்பவன் சிவன்; சீவனுக்குத் துணையாக உள்ள சேவகன் சிவன்; சீவர்களுடன் இணைபிரியாத உறவு கொள்பவன் சிவன்; தற்பரம் என்ற உயரிய பொருள் ஆனவன் சிவன்; இன்பம் பெற வேண்டி அவனை நான் என் அன்பில் பொதிந்து வைத்தேன்.

#2743. ஆரும் அறியா ஆணிப் பொற்கூத்தன்

**மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே.**

சிவந்த ஒளி மணடலத்தில் ஆடுபவன் சிவன்; தில்லையில் நடனம் புரிபவன் சிவன்; ஒளிவீசும் மன்றத்தில் நடம் புரியும் விரிசடையோன் அவன்; துவாதசாந்த ஒளியில் நடம் புரிபவன் சிவன்; சிவானந்தத்தில் ஆடுபவன் சிவன்; மாற்றுக் குறையாத பொன் வண்ணமேனியனை யாரால் உணர்ந்து கொள்ள முடியும்? யாரால் பிறருக்கு உரைக்க முடியும்?

#2744. மெய்யன்பரின் மெய்ப்பாடுகள்!

**விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோரும்
தம்மையும் தாமறி யார்கள் சதுர்கெடும்
செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத்து அன்புவைப் பார்கட்கே.**

செம்மை சிறந்த திரு அம்பலத்தில் நடம் செய்யும் சிவபெருமானின் பொற்றாமரைப் பாதங்களின் மேல் மாறாத அன்பு கொண்டுள்ள மெய்யடியார்களின் மெய்ப்பாடுகள் இவை. அவர்கள் கொண்ட தாளாத காதலால் அவர்கள் நெஞ்சம் விம்மும்; மகிழ்ச்சி பெருகும்; தொடர்ந்து அச்சம் தோன்றும்; பக்தி மேலீட்டால் மெய்

சோர்ந்து விழுவார்; பிறகு எழுவார்; உடல் தளர்ந்து ஐம் பொறிகளும் தம் அறிவு மறைந்தால் நினைவை இழக்கும். சீவனின் செயல் திறமும் குறைந்து விடும்.

#2745. ஆனந்தம் அடையும் நாட்டம் அதிகரிக்கும்

தேட்டறும் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறும் கால்புந்தி யாகி வரும்புலன்
ஓட்டறும் ஆசை அறும்உளத்து ஆனந்த
நாட்ட முறுக்குறும் நாடகங் காணவே.

திரு அம்பலத்தில் சிவானந்தம் தரும் சிவநடனம் கண்டவரின் நிலை என்ன ஆகும் ? வெளி உலகத்தில் சென்று எதையாவது தேட வேண்டும் என்று எண்ணம் அறவே விலகிவிடும்! சிந்தை வேறு வேறு பொருட்களைச் சீர்தூக்கி நோக்கும் செயலைத் துறந்து விடும். உடல் நினைவு இல்லாமல் போகும்! உடல் தளர்ச்சி தெரியாது! மூச்சு பிரம்மப் புழையை நோக்கிப் பாயும். எனவே அந்த உணர்வின் அறிவு மட்டும் செம்மையாக இருக்கும். ஐம்புலன்களின் அறிவு அழிந்து சீவனின் ஆசைகள் அறுந்து விடும். உள்ளத்தில் ஆனந்தம் பெருக்கு எடுக்கும். மேலும் மேலும் சிவானந்தத்தைச் சுவைக்கும் ஆர்வம் மட்டும் முதிர்ச்சி அடையும்.

#2746. அம்பலத்தும் அரன் ஆடுவான்

காளியோடு ஆடிக் கனகா சலத்துஆடிக்
கூளியோடு ஆடிக் குவலயத் தேஆடி
நீடிய நீர்தீகால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே.

சிவன் காளியோடு நடனம் ஆடினான்; கனகாசலம் ஆகிய துவாதசாந்தப் பெருவெளியிலும் சிவன் நடனம் ஆடினான்; பேய்களுடன் சிவன் நடனம் ஆடினான்; பூமியில் சிவன் நடனம் ஆடினான்; நீரிலும், தீயிலும், காற்றிலும், வானத்திலும் சிவன் நடனம் ஆடினான். சீவர்கள் நெடுநாள் வாழ்வதற்குச் சிவன் அம்பலத்திலும் நடனம் ஆடுவான்.

#2747. இவை இரண்டும் சிவபூமி

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும்இவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாரும் திலைவனத் தண்மா மலயத்தூடு
ஏறும் கழுமுனை இவைசிவ பூமியே.

உடலில் உள்ள சகசிரதளம் ஆகும் உடலில் உள்ள மேருமலை. இடைகலை, பிங்கலை, நடு நாடியாகிய சுழுமுனை, இவை மூன்றும் உடலின் தொடர்பு

இல்லாமல் இங்கு விளங்கும். இடைநாடியும், பிங்கலையும் இதயம் என்னும் தில்லை வனத்தை வளைத்து மேலே சென்று சகசிரதளம் என்னும் மேருமலை உச்சியை அடைந்து அங்கு சுழுமுனையுடன் விளங்கும். எனவே இதயம், சகசிரதளம் இவை இரண்டும் சிவன் நடனம் புரியும் சிவபூமியாகின்றன.

#2748. பாதி மதியோன் பயிலும் அம்பலம்

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலைஒண் சுழுமுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத்து எல்லையின் ஈறே.

இடைக்கலை பூதலம் ஆகும். சுழுமுனை மேருமலை ஆகும். பிங்கலை தெக்கணம் ஆகும். இந்தச் சுழுமுனை நாடியைத் தன் அம்பலமாகக் கொண்டு பாதிமதி அணிந்த பரன் நடனம் புரிகின்றான். பூத அண்டத்தின் எல்லையும் இதுவே ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
8(5). பொற்றில்லைக் கூத்து

ஆறு ஆதாரங்களிலும் உள்ள ஒளிகள் ஒன்றாக இணைந்து நெற்றிக்கு நேரே விளங்கும் பொன் ஒளியில் சிவன் ஆடும் கூத்து.

#2749. பரஞ்சோதியின் கூத்து

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டைஆ காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினில் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே.

மூலாதாரம் முதலாக சகசிரதளம் வரையில் உள்ள ஏழு அண்டங்களும் (ஆதாரச் சக்கரங்களும்) சிவன் ஆடும் அழகிய பொன்னம்பலம் ஆகும். ஐவகை வானங்கள் (மண்ணில் ஆகாயம், நீரில் ஆகாயம், நெருப்பில் ஆகாயம், காற்றில் ஆகாயம், வெளியில் ஆகாயம்) என்பவை சிவபிரான் நடிக்கும் இடம் ஆகும். அக்கினியில் விளங்கும் குண்டலினி சக்தியே சிவன் நடம் புரியும் திருவம்பலம் ஆகும். இங்கனம் சோதி வடிவாகிய சிவபிரான் மிகுந்த விருப்பத்துடன் தன் கூத்தைப் புரிகின்றான்

#2750. நிரானந்த நிருத்தியம் புரிவான் பரன்

குரானந்த ரேகையாய்க் கூர்ந்த குணமாம்
சிரானந்தம் பூரித்துத் தென்திசை சேர்ந்து
புரானந்த போகனாய்ப் பூவையும் தானும்
நிரானந்த மாகி நிருத்தஞ் செய் தானே.

குரு உணர்த்திய இன்பயமான திங்கள் மண்டல ஒளி ஆவான் சிவன். நன்மை தரும் ஆனந்தத்தைப் பெருக்குவான் சிவன். திங்கள் கலையில் திகழ்கின்ற சிவன் கதிரவக் கலையை அடைந்து அங்கு சக்தியுடன் இணைந்து இருந்து நித்திய இன்பத்தைத் தரும் அற்புதக் கூத்தை ஆடி அருளுகின்றான்.

#2751. நாதமோடு ஆடினான் நந்திப் பிரான்

ஆதி பரன்ஆட அங்கைக் கனலாட
ஓதும் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோடு ஆடினான் நாதாந்த நட்டமே.

சிவன் தன் அற்புத நடனம் புரிகையில் சுழுமுனையில் திங்கள் மண்டல ஒளி அசைந்தது! புகழ்ந்து பேசப்படும் ஒளிக்கற்றைகள் ஆகிய சடைகள் ஆடின! உன்மத்தர்கள் ஆகிய சீவர்கள் தம் செயல் இழந்து தாமும் ஆடினர். பாதிமதி சக்தி தேவியின் நீல ஒளியுடன் ஆடியது! உடல் தத்துவத்துக்கு அப்படிப்பட்ட வான அணுக்கள் தாமும் ஆடின. நாதாந்தத்தை அடைவிக்கும் கூத்தைத் தன் நாத சக்தியால் ஆடினான் நந்தி எம்பிரான்.

#2752. மோன ஞான அந்தம்

கும்பிட அம்பலத்து ஆடிய கோன்நடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட நட்டமாம்
செம்பொருள் ஆகும் சிவலோகம் சேர்ந்துற்றால்
உம்பரம் மோன ஞானந்தத்தில் உண்மையே.

அடியவர் தன்னை வணங்கி உய்யுமாறு அரன் அவரவர் சிதாகாசத்தில் தனிநடம் புரிகின்றான். இது சிவபிரான் அண்டங்களில் ஆடும் நடனம் ஆகும். இதுவே செம்பொருள் ஆகிய சிவனை அறிந்து கொள்ளும் உண்மை நிலை ஆகும். சீவன் இந்த நிலையில் பொருந்திவிட்டால் உயரிய மோனம் கைக்கூடும். அதனால் தூய ஞானம் கைக்கூடும். இதுவே சீவன் அடைய வேண்டிய உண்மைப்பேறு ஆகும்.

#2753. பரனின் இரு பாதங்கள்

மேதினி மூவேழ் மிகும்அண்டம் ஓரேழு
சாதக மாகும் சமயங்கள் நூற்றெட்டு
நாதமொடு அந்தம் நடானந்தம் நாற்பதம்
பாதியோடு ஆடிடும் பரன்இரு பாதமே.

நடனம் ஆடும் இறைவனது இரு திருப் பாதங்கள் அனைத்தையும் இயக்குகின்றன. வெளியே புறவுலகில் அமைந்துள்ள மூவேழு இருபத்தொன்று அண்டங்களையும், அவற்றிலும் உயரிய உடலில் உள்ள ஏழு ஆதாரச் சக்கரங்களையும், இவற்றைக்குச் சாதகமாக அமைந்துள்ள நூற்றெட்டு சமயங்களையும், இவற்றின் நான்கு பகுதிகள் ஆகிய நாதம், நாதாந்தம், நடனம், நடனாந்தம் என்பவற்றையும் ஆட்டுவிப்பது சிவசக்தியர் புரியும் திருநடனமே!

#2754. பரமாம் பரமே பரன்!

இடைபிங் கலைஇம வானோடு இலங்கை
நடுநின்ற மேரு நடுவாம் சுழுமுனை
கடவும் திலைவனம் கைகண்ட மூலம்
படர்பொன்றி என்னும் பரமாம் பரமே.

சீவனின் தலையின் இடதுபுறம் பனிப் படலம் போன்று விளங்கும் இமயம் இடைகலை ஆகும். பிங்கலை தலையின் வலப்பக்கம் ஒரு தீவு போல விளங்குவது. நடுவே உள்ள சுழுமுனை பரவெளி ஆகிய மேருமலை ஆகும். இவற்றின் வேர் தில்லைவனம் என்னும் சீவனின் இதயப்பகுதி ஆகும். இவற்றில் ஊடே பரவி மேலே செல்பவன் பரன் என்னும் சிவபெருமான் ஆவான்.

#2755. தென்திசை வையகம் தூயது!

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறாம் நவதீர்த்தம் மிக்குள்ள வெற்புஏழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே.

பாரத நாட்டில் தெற்கு கோடியில் உள்ள கன்னியாகுமாரி, தென் பகுதியில் பாயும் காவேரி நதி, மேலும் இவற்றிலும் வேறான ஒன்பது புண்ணிய தீர்த்தங்கள், புகழ் வாய்ந்த ஏழு மலைகள் போன்ற இடங்களில் தோன்றுவன வேதங்களும், ஆகமங்களும். இதனால் பூமியின் தென் பகுதி மிகவும் தூய்மை வாய்ந்தது எனலாம்.

#2756. தேவாதி தேவர் பிரான் சிவன்

நாதத்தினில் ஆடி நாற்பதத் தேயாடி
வேதத்தில் ஆடித் தழல் அந்தம் மீதாடி
போதத்தில் ஆடி புவனம் முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே.

தீமையில்லாத தூய சிவபிரான் நாதத் தொனியில் ஆடுவான்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பதங்களிலும் நின்று ஆடுவான்; சிவன் வேதத்தில் நின்று ஆடுவான்; அக்கினிக் கலையின் மீது நின்று ஆடுவான்; சிவன் சீவனின் அறிவில் நின்று ஆடுவான்; புவனங்கள் அனைத்திலும் பொருந்தி ஆடுவான் சிவன்.

#2757. கூத்தப் பிரான் ஆவான் சிவபிரான்

தேவரோடு ஆடித் திருஅம்பலத்து ஆடி
மூவரோடு ஆடி முனிசனத் தோடு ஆடிப்
பாவினுள் ஆடிப் பராசத் தியில் ஆடிக்
கோவினுள் ஆடிடும் கூத்தப் பிரானே.

கூத்தப் பிரான் ஆகிய சிவபிரான் தேவர்களின் அறிவில் நின்று ஆடுவான்; திரு அம்பலத்தில் நின்று ஆடுவான்; மும்மூர்த்திகள் ஆகிய நான்முகன், திருமால், உருத்திரன் என்பவர்களிடன் நின்று ஆடுவான் ; தவ முனிவர்களிடம் நின்று ஆடுவான்; பாவினுள் நின்று ஆடுவான்; பராசக்தியிடம் நின்று ஆடுவான்; ஆன்மாக்களின் அறிவில் நின்று நடனம் ஆடுவான்.

#2758. அரன் ஆறு முகத்தில் அதிபதி

ஆறு முகத்தில் அதிபதி நான்என்றும்
கூறு சமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத் திருஅம்ப லத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின் றானே.

“இறைவனிடம் ஆற்றுப் படுத்தும் ஆறு வழிகளும் நானே! சமயங்கள் புகழும் குருபரனும் நானே!” என்று கூறும் சிவனைத் தன் ஆன்ம வடிவாகத் தன் தலையின் தென்புறத்தில் உள்ள வானவெளியில் சாதகன் அறிந்து கொண்டான். இந்த உண்மையை அறிந்து கொண்டவர்களிடம் இருந்து என்றும் வேறுபடாமல் ஒன்றாகக் கலந்து விளங்குகின்றான் சிவபெருமான்.

#2759. தானே வந்து அருள்வான் தயாபரன்!

அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளின் ஈரொளி
உம்பர மாம்ஐந்து நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே.

அம்பலம் அரனின் ஆடல் அரங்கு ஆகும். அதன் மேல் எம் பரன் சிவபிரான் திரு நடனம் புரிவான். அவன் இரு திருவடிகளின் ஒளி அணுக்களின் கூட்டமே வானம் ஆகும். அந்த வானத்தில் அகர, உகர, மகர, விந்து, நாதங்கள் பொருத்தியுள்ள திங்கள் கலை பொருந்தி விளங்கும். அந்தத் திங்கள் கலையில் சிவபிரான் நிலையாகப் பொருந்திச் சீவனுக்கு ஒளியாக அருள் புரிவான்.

#2760. ஐயன் கூத்து ஐயங்களைப் போக்கும்!

ஆடிய காலும் அதிற்சிலம்பு ஓசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே.

தூக்கிய இடது திருவடியும், அதில் பிறக்கும் காற்சிலம்பின் ஒலியும், அங்கு இசைக்கப்படும் பாட்டும், பலவகையான அழகிய நடன அசைவுகளும், இவை அனைத்தும் கூடி ஒன்றாகத் தோன்றிய அழகிய கோலத்தைக் கண்ட நான் என் உள்ளத்தில் மண்டியிருந்த இருந்த ஐயங்கள் அகலக் கண்டேன்.

#2761. எங்கணும் கூத்து உகந்தான்

இருதயம் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினில் மாணிக்கக் கூத்தன்
குரவனயாய் எங்கணும் கூத்துகந் தானே.

இதயத்தில் இருந்து மேலே எழுந்த பிராணன், உடல் முழுவதும் நன்றாகக் கலந்து விளங்கும்படி, மூலாதாரத்தில் செவ்வொளி வீசும் அக்கினியாக விளங்கும் பிரான், விரிந்து பரந்த தன் ஒளி வடிவால் சீவனின் உடலிலும் விளங்கினான். சீவனின் உடலைக் கடந்தும் விளங்கினான்.

ஒன்பதாம் தந்திரம் -
8(6). அற்புதக் கூத்து

சொற்களுக்கு அப்பாற்பட்ட இன்பத்தை அளிப்பது ஈசனின் அற்புதக் கூத்து.

#2762. திரிபுரை உமையவள்

குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவது அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே

குருவுருவில் இருக்கும் ஒருவுருவம் அருவுருவான சிவத்தின் உருவம். சிவத்தின் அருவுருவம் ஆவாள் அன்னை பராசக்தியும். எனவே திரிபுரையாகத் திகழும் உமை அன்னையே உருவாகவும், அருவாகவும் விளங்குவாள்!

#2763. அருள்வழி ஆகும்!

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவதும் உற்றுணர்ந் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே.

ஞானத்தை அடைவிக்கும் திருவழி எது?

தலையின் முன் உள்ள வான் மண்டலத்தின் ஒளியின் உள்ளே ஒருவர் தியானிக்கும் வடிவமே அந்தத் திருவழியும் நன்னெறியுமாகும். தியானிக்கும் அந்த உருவம் மறைந்து அருவம் ஆகும். வான் மண்டலத்தின் ஒளியில் பொருந்தி ஞான நெறியில் நடப்பவருக்கு அதுவே அருள் வழியும் ஆகும்.

#2764. அரன் ஆடும் அம்பலம் அதுவே!

நீரும் சிரிசிடைப் பன்னிரண்டு அங்குலம்
ஓடும் உயிர்எழுந்து ஓங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மான்உகந்து
ஆடும் இடந்திரு அம்பலந் தானே.

தலைக்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரத்தில் இருப்பது துவாதசாந்தப் பெருவெளி. தியானம் செய்து, கீழ்நோக்கிச் செல்லும் ஆன்மாவை மேல் நோக்கிச் செல்ல விடுங்கள். நாதம் ஒடுங்கிய நாதாந்தத்தில் விளங்குபவன் நம் நந்திப் பிரான்.

அவன் விருப்பத்துடன் நடனம் புரியும் திருவம்பலம் இந்த துவாதசந்தாப் பெருவெளியே ஆகும்.

#2765. ஒளி உருவாகி ஒளிந்து நிற்பான்

வளிமேகம் மின்வில்லு வானகஓசை
தெளிய விசும்பில் திகழ்தரு மாறுபோல்
களிஒளி ஆறும் கலந்துடன் வேறாய்
ஒளியுரு வாகி ஒளித்துநின் றானே.

காற்று, மேகம், மின்னல், வானவில், இடியோசை போன்ற மாறுபாட்டவற்றுக்கு அகண்ட வானம் தன்னில் இடம் அளிக்கின்றது. தான் அவற்றுடன் கலந்து விடாமல் தெளிந்த வானம் ஆகவும் திகழ்கின்றது. இறைவனும் வானத்தைப் போன்றே ஆனந்தத்தைத் தருகின்ற ஆறுஆதாரங்களில் ஒளிரும் ஆறு வகை ஒளியுடன் கலந்து விளங்குவான். அவற்றிலிருந்து வேறுபட்டுத் தனித்தும் விளங்குவான். ஒளி வடிவாகிய அவன் சீவனின் கண்களுக்குப் புலப்படாமல் ஒளிந்து நிற்கின்றான்.

#2766. நடம் செய்யும் நாயகன் நந்தி

தீமுதல் ஐந்தும் திசை எட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக்கு அப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயகன் நின்று நடஞ்செய்யும் ஆறே.

எந்தை நந்திப் பிரான் நடனம் செய்யும் முறை இதுவே! ஐம்பெரும் பூதங்களின் ஒளி அணுக்களிலும், எட்டு திசைகளிலும், கீழும் மேலும் ஆகிய மேலும் இரு திசைகளிலும், அறிவைக் கடந்த சிவானந்த நிலை நிலவுகின்றது. தூமாயை, தூவா மாயை என்ற இரண்டையும் கடந்து நிற்பவர்கள் கண்டு களிக்கும்படி நாயகன் நந்தி நடனம் செய்கின்றான்!

#2767. ஞானக் கூத்தனும் கூத்தியும்.

கூத்தன் கலந்திடும் கோல்வளை யாளொடும்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஞானத்துக்
கூத்தனும் கூத்தியும் கூத்ததின் மேலே.

சகசிரதளத்தில் ஞானக் கூத்தன் கோல்வளையாளோடு கலந்து நிற்பான். சீவர்களுக்கு கோதில்லாத ஆனந்தம் தருவான். சாதகர்களின் குற்றமற்ற

தூயஞானத்தில் கலந்து நிற்பான். பலவண்ணங்கள் கொண்ட சக்தியும், வெண்ணிற ஒளிகொண்ட கூத்தனும், மேல் நோக்கி நிமிர்ந்த சகசிரதளத்தின் மீது விளங்குவர்.

#2768. சிவசக்தியர் ஆடுவது ஏன்?

இடம்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலும் தாமாய்நின்று ஆடுகின் றாரே.

உயிர்களை இடமாகக் கொண்ட சிவபெருமானின் இடப்பகுதியைத் தனதாக்கிக் கொண்டவள் சக்தி தேவி. அவளிடம் இருந்து இணை பிரியமால் இருப்பவன் எந்தை சிவன். சிவசக்தியர் என் உயிரின் ஒளியில் கலந்து இருப்பதை நான் கண்டு கொண்டேன். மலங்கள் வந்து திரைபோலச் சீவனின் தூயஅறிவை மறைக்கின்றன. சீவர்களின் மலங்கள் மாறுவதற்காகவே சிவசக்தியர் சீவனுள் ஓர் அற்புத நடனம் புரிகின்றனர்.

#2769. சீவன் சிவனை அடைவதும் ஒரு நடனம்

சத்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத்து எழுந்துஇரண்டு
ஒத்த ஆனந்தம் ஒருநட மாமே.

சீவனின் அறிவில் சத்து ஆகவும், சித்து ஆகவும், ஆனந்தம் ஆகவும், இருப்பது சக்தியின் திருமேனியே! சீவர்களின் சகள வடிவமும் சக்திதேவியின் வடிவமே ஆகும். சக்தியின் வடிவம் உயிர்களிடத்தில் விளங்கித் தூய்மை அடைந்த சீவன், சிவனுடன் கலந்து ஆனந்தம் அடைவதும் ஒரு நடனம் ஆகும்.

#2770. சிவனின் இருப்பிடம் சிற்றம்பலம்

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே.

நெற்றிக்கு முன்னால், புருவத்துக்கு நடுவில் பொருந்தி, சாதனை செய்தால் உள்ளத்தில் உரைக்கும் மந்திரம் ஒளிவடிவாகும். அந்த அறிவாகாயமே சீவனின் பற்றுக்கோடு ஆகிய பரமனின் இருப்பிடம் என்று அறிந்து கொண்டு நான் அங்கு சென்று சிவனுடன் சேர்ந்து கொண்டேன்!

#2771. பரஞ்சோதி கூத்து உகந்தான்

**அண்டங்கள் தத்துவ மாகிச் சதாசிவம்
தண்டினில் சாத்தவி சாம்பவி ஆதனம்
தெண்டினில் ஏழும் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே.**

எண்ணற்ற அண்டங்கள், அளவற்ற தத்துவங்கள், சதாசிவம், சுழுமுனை, சக்தி தேவி, சாம்பவி தேவி, குண்டலினி சக்தி என்ற இந்த ஏழு இடங்களையும் தன் நடனத்துக்கு உரிய இடமாகக் கொண்டு பரஞ்சோதி ஆகிய பரமன் தன் கூத்தினை உகந்து நிகழ்த்துகின்றான்.

#2772. நெடு மண்டலம்

**மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தான்இதழ் நாலொடு நூறவை
சென்றுஅது தான்ஒரு பத்திரு நூறுள
நின்றது தான்நெடு மண்டல மாமே.**

சிதாகாசத்தில் உள்ள சகசிரதளத் தாமரை, ஈசன் நடனம் ஆடும் மன்றினை ஒளிவெள்ளத்தால் நிரப்பும். விந்தையான மலர் அந்த ஆயிரம் இதழ்த் தாமரை. மூலாதாரத்தில் நான்கு இதழ்களாக உள்ள குண்டலினி சக்தியே சிரசில் ஆயிரம் இதழ் தாமரையாகின்றது. மேலம் இருநூற்றுப் பத்து உலகங்களிலும் அது நிமிர்ந்து உயர்ந்து ஒரு மண்டலம் ஆகின்றது. இதுவே சிவபெருமான் உள்ளம் உகந்து நடனம் ஆடுவதற்கு ஏற்ற இடம்.

#2773. அரன் நடனம் செய்யும் ஆலயங்கள்

**அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்ட நடஞ்செயும் ஆலயம் தானே.**

அண்டங்கள் ஏழு; தேவர்கள், மனிதர்கள், நிலம் வாழ் விலங்குகள், நீர் வாழ்பவை, ஊர்வன, பறப்பன, தாவரங்கள் என்ற பிண்டங்கள் நான்கு; உடலில் உள்ள ஆதாரங்கள் ஏழு; எண் திசைகளில் பொருந்தி விளங்கும் லிங்கங்களும் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம் என்ற ஏழு; அண்டங்களுக்கும், பிண்டங்களுக்கும் தலைவன் ஆன சிவபெருமான் இவற்றைத் தான் நடனம் செய்யும் இடங்களாகக் கொண்டுள்ளான்.

#2774. முக்கண்களின் மூன்று ஒளி

ஆகாச மாம்உடல் அங்கார் முயலகன்
ஏகாச மாம்திசை எட்டும் திருக்கைகள்
மோகாய முக்கண்கள் மூன்றொளி தானாக
மாகாய மன்றுள் நடஞ்செய்கின் றானே.

எம்பெருமான் சிவன் சீவனின் அறிவுப் பெருவெளியில் நடனம் செய்யும் விதம் இது:

அகண்ட ஆகாயமே ஈசனின் உடல் ஆகும். அந்த ஆகாயத்தில் உள்ள கரிய இருள் அறியாமை ஆகிய முயலகன். விரிந்த மேலாடை போலத் தோன்றும் எட்டு திக்குகள் அவன் கைகள். முக்கண்கள் ஆகும் கதிரவன், நிலவு, அக்கினி. இவ்வண்ணம் ஈசன் ஆகாசப் பெருவெளியில் அற்புத நடனம் செய்கின்றான்.

#2775. அம்பலம் ஆவது அகில சராசரம்

அம்பல மாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே.

சிவன் கூத்தாடுகின்ற அம்பலங்கள் இவை:

அகில சராசரத்தில் உள்ள இயங்குகின்ற, இயங்காத பொருட்கள் அனைத்தும் அவன் அம்பலம் ஆகும்; ஆதிப் பிரானின் திருவடிகள் அவன் நடனம் ஆடும் அம்பலம் ஆகும்; ஐம்பெரும் பூதங்களும் அவன் ஆடும் அம்பலம் ஆகும். திரு ஐந்தெழுத்து சிவன் ஆடுகின்ற அம்பலம் ஆகும்.

#2776. பாண்டரங்கக் கூத்து

கூடிய திண்முழ வம்குழல் ஓமென்று
ஆடிய மானுடர் ஆதிப் பிரான் என்ன
நாடிய நற்கணம் ஆரம்பல் பூதங்கள்
பாடிய வாறுஒரு பாண்டரங் காமே.

வண்மையான திண்முழவமும், குழலும் “ஓம்! ஓம்!” என்று ஒலிக்கும்; மெய்ஞானியர் அந்த நாதமே எந்தை ஈசன் என்று உணர்ந்து மகிழ்வர். பெருமானைக் காண விரும்பிக் கூட்டம் கூட்டமாக நிற்கும் பூதப் படைகளும், தேவகணங்களும் போற்றி பாடும்படி அமைந்துள்ள கூத்து திரிபுர சங்காரக் கூத்து எனப்படும் பாண்டரங்கக் கூத்து ஆகும்.

#2777. கண்டு சேவித்துக் நற்கதி அடைவர்

அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிசை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே.

அண்டத்தில் உள்ள தேவர்கள்; அண்டத்துக்கு வெளியே உள்ள தேவர்கள்; அலைகடல் சூழ்ந்த உலகில் வாழும் தேவர்கள் என்ற அனைவரும் தம் தலையின் மேல் விளங்குகின்ற பொன் அம்பலத்தில் கூத்து நிகழ்த்துகின்ற ஈசனின் தாமரைப் பொற்பாதங்களைக் கண்டு வணங்கி நற்கதி அடைவர்.

#2778. உள்ளத்தில் அமுது ஊறும்!

புளிக்கண்ட வர்க்குப் புனலூறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கு எல்லாம்
துளிக்கும் அருட் கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள்ஆ னந்தத்து அமுதூறும் உள்ளத்தே.

புளியைப் பார்த்தவர்களுக்கு வாயில் உமிழ் நீர் ஊறும். அது போலவே சிவானந்தத்தைத் தரும் திருக் கூத்தைத் தம் தலையின் மீது கண்டவர்களுக்கு ஆனந்தக் கண்ணீர் துளிக்கும். அன்பால் உருகி நெஞ்சம் சோர்வடையும். அவர் உள்ளத்தில் விளங்கும் ஒளியாகிய சிவன் இன்பத்தைப் பெருக்குவான்.

#2779. உணர்ந்தவர் உன்மத்தர் ஆவர்!

திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க்கு உணர்வுண்டால் உன்மத்தம் சித்திக்கும்
கொண்டாடு மன்றுள் குனிக்கும் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணம் கேட்டார்க்கும் ஒக்குமே.

சிவானந்தம் அடைந்தவரின் நிலைப்பாடுகள் இவை:

இறைவன் புரியும் திருநடனத்தைக் கண்டு இவர் திண்டாடித் தடுமாறிக் கீழே விழுவார்; அவர் நோக்குப் புற உலகை விடுத்து அகத்தின் ஒளியில் சென்று பதியும். அதனால் அவர் உன்மத்தர் ஆகித் தன் வசம் இழப்பர்; எல்லோரும் கொண்டாடும் அறிவு ஆகாசத்தில் ஈசன் நேசத்துடன் புரியும் நடனத்தைக் கண்டவர் மெய்ப்பாடுகளும், நாதாந்தத்தில் அவன் பிராணவத் தொனியைக் கேட்டவர்களின் நிலைப்பாடுகளும் ஒத்தவைகள் ஆக அமையும்.

#2780. மங்கை ஒரு பாகன் ஆடும் மாநடனம்!

அங்கி தமருகம் அக்குமா லைபாசம்
அங்குசம் சூலம் கபாலம் உடன்ஞானம்
தங்குஉ பயந்தரு நீல மும்உடன்
மங்கையோர் பாகமாய் மாநடம் ஆடுமே.

அக்கினிச் சட்டி, உடுக்கை, உருத்திராட்ச மாலை, பாசக் கயிறு, தோட்டி, முத்தலை வேல் (சூலம்), மண்டையோடு இவற்றைக் கைகளில் ஏந்தியும்; பர ஞானம், அபர ஞானம் இவற்றைத் தருபவளும், நீல நிற ஒளியுடன் விளங்குபவளும் ஆகிய உமையைத் தன் உடலின் இடப்பாகமாகக் கொண்ட சிவன் நடனம் மாட்சிமை மிகுந்த அற்புத ஆடுவான்.

#2781. நந்தி புறம் அகம் நிறைவான்

ஆடல் பதினோர் உறுப்பும் அடைவாகக்
கூடிய பாதம் சிலம்புகைக் கொள்துடி
நீடிய நாதம் பராற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறம்அகந் தானே.

பாண்டரங்கக் கூத்து ஆடுபவர் உடலின் பதினோரு உறுப்புக்களின் அசைவால் நிகழ்வது. முறைப்படி பதினோரு உறுப்புக்களும் ஆடலில் பொருந்தி இருக்க, கால்களில் சிலம்பும், கைகளில் உடுக்கையும் கொண்டு சிவன் நடனம் செய்வான். அந்த நடனத்தின் ஒலி சீவனை பராத்பரனிடத்தில் கொண்டு செலுத்தும். இங்கனம் சிவபிரான் சீவனுக்கு உள்ளும் புறமும் நிறைந்து நிற்பான்.

#2782. அரன் ஆடும் ஆனந்தக் கூத்து!

ஒன்பதும் ஆட ஒருபதி னாறுஆட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடனாட
இன்புறும் ஏழினும் ஏழுஐம்பத் தாறுஆட
அன்பதும் ஆடினான் ஆனந்தக் கூத்தே.

சிவபிரானின் ஒன்பது பேதங்கள் நடனம் ஆடிடும்; எட்டுத் திசைகள், அவற்றின் உள் திசைகள் எட்டு எனப் பதினாறு திசைகளும் நடனம் ஆடிடும்; பக்தி நெறிகள் ஆறும் நடனம் ஆடிடும்; இன்பத்தை அளிக்கும் உடலின் ஏழு ஆதாரங்களும் நடனம் ஆடிடும்; ஏழு வகைத் தோற்றங்கள் நடனம் ஆடிடும், ஐம்பத்தாறு தேசங்கள் நடனம் ஆடிடும்; ஐம்பது சக்தியர் எழுத்துக்களின் வடிவம் ஆக இருக்க அவர்களிடமும் ஐயன் ஆனந்தக் கூத்து ஆடுவான்.

ஒன்பது பேதங்கள்:

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன்,விந்து, நாதம்,சத்தி, சிவன்.

பக்தி மார்க்கங்கள் ஆறு:

காணாபத்தியம், கௌமாரம், சாத்தம், சௌரம், வைணவம், சைவம்.

#2783. ஏழிசையில் இசைந்து அரன் ஆடுவான்!

ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுந்து ஏழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்துஅமைந்து ஒன்றாகி
ஏழினில் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானே.

ஏழு சுரங்களில் ஏழாகவும்; அந்த ஏழு சுரங்களும் குறுகி விடும் போது அவற்றைக் குறிக்கும் ஏழு எழுத்துக்களாகவும்; அவை ஏழு சுரங்களும் மேலும் மேலும் குறுகி ஒரே ஒலியாக அமைந்து பிராணவமாக விளங்கும் போதும், அவை அனைத்திலும் அரன் விளங்குகின்றான். சன்மார்க்கம் என்னும் நன் நெறியில் விளங்கும் பரஜோதி சிவன் ஏழு இசைகளிலும் இசைந்து தானும் ஆனந்த நடனம் புரிகின்றான்.

#2784. மூன்றெழுத்தால் ஆன பிரணவம்

மூன்றினில் அஞ்சாகி முந்நூற்று அறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றின்இலக்கம் முடிவாகி முந்தியே
மூன்றிலும் ஆடினான் மோகாந்தக் கூத்தே.

இறைவன் ஆடும் மோகாந்தக் கூத்து:

கதிரவன், திங்கள், அக்கினி என்ற மூன்று மண்டலங்களிலும் சிவன் ஆடுவான்; திரு ஐந்தெழுத்தின் வடிவமாக சிவன் ஆடுவான்; முந்நூற்று அறுபது கலைகளாகச் சிவன் ஆடுவான். மூன்று மண்டலங்களிலும் உள்ள ஆறு ஆதாரங்களாகச் சிவன் ஆடுவான். நுண்மை, பருமை என்ற பேதங்களால் அமையும் பன்னிரண்டு ஆதாரங்களிலும் சிவன் ஆடுவான். அகரம், உகரம், மகரம் என்ற மூன்று எழுத்துக்கள் ஒன்றாகி அமைந்த பிரணவத்தில் பிரான் விருப்பத்தை உண்டாக்கும் தன் கூத்தினை நிகழ்த்துவான்!

#2785. ஞாலம் கடந்து நின்றான்!

தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் மலரடித் தாளினை
வாமணி அன்புடை யார்மனத் துள்ளெழுங்
காமணி ஞாலம் கடந்துநின் றானே.

அழகிய மணிமுடிகளைத் தரித்த வானவர்களின் தலை மேல் தானே ஒரு மாமணியைப் போன்று ஒளிரும் ஈசனின் திருவடிகள் உறைகின்றன. அதே தாமரைத் திருவடிகள் அன்புடையவர்களின் மனதில் அழகுற விளங்குகின்றன. அப்படி விளங்கி வேண்டுபவர்களுக்கு வேண்டுபவற்றை அளிக்கும் ஈசன் வானுலகக் கற்பகத் தருவனை ஒத்தவன். அவன் இந்த ஞாலத்தைக் கடந்து நிற்பவன்.

#2786. அரன் ஆடல் கண்டு இன்புறுவர்

புரிந்தஅவன் ஆடில் புவனங்கள் ஆடும்
தெரிந்துஅவன் ஆடும் அளவுளங்கள் சிந்தை
புரிந்துஅவன் ஆடில்பல்பூதங்கள் ஆடும்
எரிந்தவன் ஆடல்கண்டு இன்புற்ற வாறே.

எல்லாம் அறிந்த சிவன் ஆடினான் என்றால் அனைத்து புவனங்களும் அவனுடன் சேர்ந்து ஆடும். சிந்தையின் சீர்மையை அளந்து அதற்கு ஏற்ப சிவன் நடனம் புரிவான். அவன் நடனம் புரிந்தால் என்றால் பூதங்களும் அவனுடன் நடனம் புரியும். பேரொளியாகத் திகழும் சிவன் நடனத்தைக் கண்டவர்கள் அடையும் இன்பம் அளவற்றது.

#2787. அருட்சக்தி துணை புரிவாள்

ஆதி நடஞ்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடஞ்செய்கை யாரும் அறிகிலர்
ஆதி நடமாடல் ஆரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாம் அருட் சத்தியே.

“ஆதி சிவன் நடனம் செய்தான்!” என்பர் ஆதர்கள். ஆனால் ஆதி சிவன் நடனத்தைக் கண்டவர்கள் எவரும் இலர். ஆதி சிவன் தம் உள்ளத்தில் நடனம் செய்வதை அறிந்து கொண்ட பின்னர், ஆதி சிவன் நடனத்திற்குத் துணை புரிபவள் ஆதி சக்தியே என்ற உண்மையை அவர்கள் அறிந்து கொள்வர்.

#2788. அன்புறு எந்தை ஆடலுற்றான்

ஒன்பதோடு ஒன்பதாம் உற்ற இருபதத்து
அன்புறு கோணம் அதிபதந்து ஆடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநின்று ஆடவே
அன்புறு எந்தை நின்று ஆடலுற் றானே.

வியஷ்டி நிலையில் உள்ள சீவனுக்கும் சமஷ்டி நிலையில் உள்ள சிவனுக்கும் ஒன்பது பேதங்கள் உள்ளன. சீவனுள் ஒன்பது நிலைகள் நனவு முதல் துரியாதீதம் வரை அமைந்துள்ளன. சிவன் தன் வடிவில் ஒன்பது பேதங்களை

உருவாக்குபவன். தத் பதம், தொம்பதம் என்ற இருபதங்களிலும் இருந்து கொண்டு சீவனுக்கு இன்பத்தை உண்டாக்குவதற்காகவே சிவன் ஆடுகிறான். காம வேட்கையை எழுப்பிச் சீவனுக்குத் துன்பத்தைத் தருகின்ற காளி ஆடிட, சீவர்களுக்கு இன்பத்தைத் தருவதற்குச் சிவன் ஆடுகிறான்.

#2789. அத்தனின் ஆனந்தக் கூத்து

தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே.

அத்தனின் ஆனந்தக் கூத்துடன் நிகழும் அற்புத நடனங்கள் இவை:

அனைத்துத் தத்துவங்களும் அத்தன் உடன் ஆடும்; சதாசிவன் உடன் ஆடுவான்; சித்த மண்டலம் உடன் ஆடும்; சிவசத்தி உடன் ஆடுவாள். அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் என்ற அத்தனையும் உடன் ஆடும்; வேதங்கள் உடன் ஆடிடும்.

#2790. அருளுருவாகி நின்று ஆடினான்

இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோடு அருவோடு ஒருபர ரூபமாய்த்
திருவருள் சத்திக்குள் சித்தன்ஆ னந்தன்
அருளுரு வாகிநின்று ஆடலுற் றானே.

பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் கண்டு மகிழும்படிச் சிவன் ஆடினான். அழகிய அம்பலத்தில் உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்றும் ஒரு பரரூபமாகப் பொருந்தச் சிவன் ஆடினான். திருவருள் புரியும் சக்திக்கு உள்ளே ஆனந்த மயமாகவும், அறிவு மயமாகவும் உள்ள சிவன் அருளே உருவாகி ஆனந்த நடனம் ஆடினான்.

#2791. வேதாந்தச் சித்தாந்தத்துள் சிவன் ஆடினான்

சிவமாட சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவம் நாதாந்தம் ஆடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே.

சிவன் ஆட, சக்தியும் ஆட, சகத்தில் அவம் ஆட, அசைவில்லாத வானம் ஆட, உருவம் அருவுருவம் அருவம் என்ற ஒன்பது தத்துவங்களும் ஆட,

தத்துவங்களைக் கடந்து விளங்கும் நாதாந்தமும் ஆட, சிவன் வேதாந்தச் சித்தாந்தத்தினுள் நின்று ஆனந்த நடனம் ஆடினான்.

#2792. சிவ நடனத்தின் சிறப்புக்கள்

நாதத்தின் அந்தமும் நாற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா னந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமம் சிவநாட மாமே.

நாதத்தின் அந்தம் நாதாந்தம் ஆகும்; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவித அறிவின் அந்தம் போதாந்தம் ஆகும்; வேதங்களின் அந்தம் வேதாந்தம் ஆகும்; சிவன் தரும் ஆனந்தம் சிவானந்தம் ஆகும்; முடிவே இல்லாத சிவானந்தம் சதாசிவானந்தம் ஆகும்; இந்த நிலைகள் அனைத்திலும் சிவநடனம் புரிபவன் நாதப் பிரம்மம் ஆகிய சிவபெருமான்.

#2793. பரன் எங்கும் தானாக ஆடும்!

சிவமாதி ஐவர்திண் டாட்டமும் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரன்எங்கும் தானாக ஆடும்
தவமாம் சிவானந்தத் தோர் ஞானக் கூத்தே.

சீவர்களைப் பிறவியில் செலுத்தித் திண்டாட வைப்பவர்கள் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவர். இவர்கள் செயல்பாடுகள் முடிந்ததும் சீவனின் பிறவிப்பிணி ஒழியும். தவத்தில் சிறந்த சீவன் தன் பாசத் தளைகளைத் துணிக்கும். தவத்தின் பயனாக அடையாகக் கூடியவன் சிவன். சீவன் தன் தவப்பயனாக எங்கும் நீக்கம் அற நிறைந்து ஆடும் சிவனின் ஞானக் கூத்தைக் கண்டு, அதனால் சிவானந்தம் அடையும்.

#2794. அத்தன் என்னை ஆட்கொண்ட விதம்

கூடிநின் றானொரு காலத்துத் தேவர்கள்
வீடநின் றான்விகிர் தாஎன்னும் நாமத்தைத்
தேடநின் றான்திக ழுஞ்சுடர் மூன்றொளி
ஆடநின் றான்என்னை ஆட்கொண்ட வாறே.

சிவன் என்னை ஆட்கொண்ட விதம் இதுவே! அவன் என்னுடன் பிரிவின்றிக் கூடி நின்றான்; வேறு சில பல சிறு தெய்வங்களின் பிடியிலிருந்து அவன் என்னை மீட்டான்."விகிர்தா!" என்று நான் விளித்தவுடன் அவன் விருப்புடன் வெளிப்பட்டு

நின்றான். கதிரவன், திங்கள், அக்கினி என்ற முச்சுடர்களின் ஒளியும் ஆடுமாறு அவன் முற்றிலுமாக என்னை ஆட்கொண்டான்.

#2795. பேதம் இன்றிப் பின்னிப் பிணைந்தான்

நாதத் துவம்கடந்து ஆதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் எய்தினர்
நேதத் துவமும் அவற்றோடு நேதியும்
பேதப் படாவண்ணம் பின்னிநின் றானே.

நாதத் தத்துவத்தைக் கடந்து நாதாந்த நிலையில் விளங்குபவன் ஆதிசிவன். இவனே ஆதிமறைகள் போற்றும் நம்பி ஆவான். இவன் சீவனின் சுவாதிட்டான மலரை ஒளிரச் செய்தான். அதனால் சீவன் அங்கே பொருந்தி உலக இன்பங்களை சுவைத்தது. ஆனால் அவனே பிரிக்கப்பட வேண்டிய தத்துவங்களைப் பிரித்தும் வைத்தான். 'நேதி' என்று 'சத்'தை 'அசத்'திலிருந்து பிரித்து உணர்ந்த சீவனுடன், சிவன் வேறுபாடு இன்றிப் பின்னிப் பிணைந்து நின்றான்.

#2796. 'தான்' அந்தமாவது ஆனந்தம்

ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்
தான் அந்தம் அற்றிடம் ஆனந்த மாமே.

அறிவிலிகள் "ஆனந்தம்! ஆனந்தம்!" என்று எதை எதையோ கூறுவார். மெய்யான ஆனந்தம் தருவது சிவனுடைய பெருமை வாய்ந்த கூத்து என்று இவர் அறிகிலர். ஆனந்தம் தருவது சிவநடனம் என்று அறிந்து கொண்ட பின்னர், சீவனின் 'தான்' என்னும் தத்துவங்களின் கூட்டம் அந்தம் அடையும் அந்த இடமே, உண்மையான ஆனந்தம் என்று அவர்கள் அறிந்து கொள்வர்.

#2797. ஐந்தெழுக்கள் பொருந்தும் ஐந்து இடங்கள்

திருந்துநல் சீஎன்று உதறிய கையும்
அருந்தவர் வாஎன்று அணைத்த மலர்க்கையும்
பொருந்த அமைப்பில் ய என்ற பொற்கையும்
திருந்தநல் தீயாகும் திருநிலை மவ்வே.

திருந்திய 'சி'கரத்தின் நீட்சி ஆகிய 'சீ' உடுக்கையை உதறிய கரத்தினை இருப்பிடம் ஆகக் கொண்டது. ருந்தவத்தினரை "வா" என்று அன்புடன் அழைத்து அணைத்துக் கொள்வது மலர் போன்ற இடக்கையினை இடமாக கொண்டது. பொருந்திய 'ய'கரம் அவன் பொற்கரத்தைத் தான் பொருந்தும் இடமாகக் கொள்ளும்.

திருத்துகின்ற 'ந'கரம் பொருந்தும் இடம் அக்கினியை ஏந்திய இடக் கரம் ஆகும். மலத்தை அடக்க முயலகன் மீது பொருந்திய திருவடி 'ம'கரம் பொருந்து இடம் ஆகும்.

#2798. உருவில் 'சிவாயநம' என்று ஓதுமின்

மருவும் துடியுடன் மன்னிய வீச்சும்
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவில் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே.

உடுக்கையினை அடிக்கும் வலக்கரத்தையும், வீசிய இடக் கரத்தையும், அபயம் அளிக்கும் வலக் கரத்தையும், அக்கினியை ஏந்திய இடக் கரத்தையும், பிறவிப் பிணியை அறுக்கும் திருவடியினையும், வடிவம் இல்லாத 'சிவாயநம'வுடன் பொருத்தி அதனைத் துதிப்பீர்கள் நீங்கள்!

#2799. அரன் அடி என்றும் அனுக்கிரகம்

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங் காரம்
அரன் உற்று அணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே.

தனக்குள் அனைத்துத் தத்துவங்களையும் ஒடுக்கிக் கொண்டு விளங்குபவன் சிவபெருமான். அவன் தன் உடுக்கையின் ஒலியை எழுப்பிப் படைக்கும் தொழிலை நிகழ்த்துகின்றான். தன் அபயக் கரத்தினால் படைப்பினைக் காக்கும் தொழிலைச் செய்கின்றான். தீயை ஏந்திய கரத்தினால் அழிக்கும் செயலைச் செய்கின்றான். ஊன்றிய திருவடியினால் மறைக்கும் தொழிலைச் செய்கின்றான். தூக்கிய திருவடியால் அருளும் செயலைச் செய்கின்றான். ஐந்தொழில்களும் நிகழ்வது அரன் அனுக்கிரகத்தினால் என்று அறிவோம்!

#2800. நாத வடிவாக வேதங்கள் ஒலித்தன

தீத்திரள் சோதி திகழ்ஒளி உள்ஒளி
கூத்தனைக் கண்டஅக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வன் இடம் செல்லப்
பார்த்தனள் வேதங்கள் பாடின தானே.

தீப் பிழம்பாகவும், சீவ ஒளிக்குள் உள்ள ஒளியாகவும் இருப்பவன் சிவன். அந்த சிவனைக் கண்டாள் சிற்சக்தி தேவி. நான்முகன், திருமால், உருத்திரன் என்ற மூவரும் முறையே மகேசுரன், சதாசிவன், சிவன் என்ற மூவரிடம் சென்று

நுண்மையாக அவர்களுள் ஒடுங்குவதைக் கண்டாள். அப்போது சீவனின் தலையின் மீது நாத வடிவாக வேதங்கள் ஒலித்தன.

#2801. சுந்தரக் கூத்தன் சிவன்

நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திரம் ஒன்றுள் மருவி அதுகடந்து
அந்தர வானத்தின் அப்புறத்து அப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லு மாறே.

நந்திப் பெருமான் என் தந்தை ஆவான்; அவன் ஞானத் தலைவன்; 'ஓம்' என்னும் பிரணவத்தினுள் பொருந்தி விளங்குபவன். அதையும் கடந்து சென்று உடல் பற்று ஒழிந்த வானத்தில் விளங்குகின்ற அழகிய கூத்தன் அவன். சீவனுக்கு இந்த சுந்தரக் கூத்தனைப் பற்றிப் புகழுதல் இயலும்! சீவனுக்கு சிவனைப் பற்றிப் புகலுதல் இயலாது அன்றோ?

#2802. அரன் மேனியில் அணை புகலாம்!

சீய குருநந்தி திருஅம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடும் அத்தன்மை
ஆயுறு மேனி அணைபுக லாமே.

வனவிலங்குகளை அடக்கி ஆளும் சிங்கத்தைப் போலத் தத்துவங்களை அடக்கி ஆள்பவன் சிவபெருமான். திரு அம்பலத்தில் ஆடுபவன் குரு சிவன் ஆவான். அவன் திருமேனி எத்தகையது என்று அறிந்தவர் எவரும் இல்லை. சிவத்தின் நிறம் மூலாதாரத்தில் உள்ள அக்கினியின் சிவப்பு நிறம் ஆகும். அதுவே சிரசின் உச்சியைச் சென்று அடையும் பொழுது வெண்மை நிறம் அடையும். இந்த வேறுபாட்டை அறிந்து கொண்டு, சிவனை ஒளி வடிவாகக் கண்பவர்களுக்குச் சிவனது திருமேனி அடைக்கலம் புகும் இடமாகும்.

#2803. பரனும், பரையும் சக்தியே ஆவாள்!

தானான சத்தியும் தற்பரை யாய்நிற்கும்
தானாம் பரற்கும் உயிர்க்கும் தரும் இச்சை
ஞானாதி பேதம் நடத்தும் நடித்தருள்
ஆனால் அரனடி நேயத்த தாமே.

சிவத்தின் சக்தியே தற்பரை ஆகித் செயல்கள் புரிவாள். சக்தியின் செயல்படாத நிலை பரன் எனப்படும். சக்தியின் செயல்படும் நிலை பரை எனப்படும். சக்தியே சிவனுக்கும், சீவனுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துபவள். அவளே

சீவர்களிடத்தில் இச்சா சக்தியாகவும், கிரியா சக்தியாகவும், ஞான சக்தியாகவும் விளங்குவாள். சீவனைப் பக்குவப் படுத்துவாள். பக்குவப் படுத்தப்பட்ட சீவன், சக்தியில் அருளால், சிவனிடம் மாறாத அன்பு கொள்ளும். பின்னர் சீவன் சிவனிடம் சென்று அவனோடு ஒன்றி விடும். சீவனும் சிவனாகவே மாறி அறிவு மயம் ஆகிவிடும்.

ஒன்பதாம் தந்திரம் -
9. ஆகாசப் பேறு

கூத்தன் தரிசனத்துக்குப் பின்னர் பராகாயத்தில் ஒளியில் திளைத்துச் செயல் அற்று இருத்தல்!

#2804. உள்ளத்துள் ஓம் எனும் ஈசன்

உள்ளத்துள் ஓம்என ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேயங்கி யாய ஒருவனை
உள்ளத்து ளேநீதி யாய ஒருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாமே.

மனமண்டலத்துள் ஓங்காரமாகி நிற்பவன் ஈசன். அவன் அக்கினியைப் போல ஒளிர்பவன். அவன் நீதி மயமானவன். அவனைத் தன்னுள்ளே கொண்டுள்ள மனமண்டலத்தைச் சூழ்ந்துள்ள உடம்பு வானம் ஆகும்.

#2805. அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே.

பெருநில மாய்அண்ட மாய்அண்டத்து அப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே.

உடல் என்ற பெருநிலமானவன் ஈசன்; உடலைச் சூழ்ந்துள்ள அண்டகோசமும் அவனே. அவற்றுக்கும் அப்பால் ஒளிர்கின்றவனும் அவனே. பெருநிலமாக உருவெடுத்து அனைத்தையும் தாங்குகின்ற அருளுடைய ஆதிசிவனே அருவமாகவும் விளங்குகின்றவன்.

#2806. அண்ட ஒளியும் பிண்ட ஒளியும்

அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்
பிண்ட ஒளியாய் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே.

அண்ட ஒளி ஆவான் சிவன்! அண்டங்களைக் கடந்த அகண்ட ஒளியும் ஆவான் சிவன்; சீவ ஒளியுடன் தன் சிவ ஒளியைப் பொறுத்துபவன் சிவன்; சீவன், தான் பெற்றுள்ள உட்கருவிகளின் பெருமையால் பிதற்றும் வீண் பெருமையை விழுங்குபவன் சிவன். அதனால் சீவ உடல் பரமாகாயத்தில் உள்ள ஒளியில் மறையும். சீவ உடல் தன் வடிவத்தை இழந்து தானும் ஒளிமயமாக மாறிவிடும்.

#2807. பரஞ்சுடர் ஜோதி

பயனறு கன்னியர் போகத்தின் உள்ளே
பயனுறும் ஆதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மால்அறி யாவகை நின்றிட்டு
உயர்நெறி யாய்ஒளி ஒன்றது வாமே.

ஓர் ஆண் பெண்களிடம் சிற்றின்பம் அனுபவிக்கும் போது அவனிடம் காமாக்கினி மேலிட்டு விளங்கும். அந்த நிலையில் பரஞ்சோதியாகிய சிவபெருமான் தானும் இன்ப வடிவினனாகத் திகழுவான். சிற்றின்பம் தரும் மகளிரை விடுத்துச் சீவன் சிவனிடம் தாளாத அன்பு கொண்டுவிட்டால், மாலும், அயனும் காண இயலாத வண்ணம் சிவன் மேன்மையான ஒளியாக மாறிச் சீவனின் ஒளியில் கலந்து விடுவான்.

#2808. பிரியாது இருந்தால் பெருங்காலம் வாழ்வு!

அறிவுக்கு அறிவாம் அகண்ட வெளியும்
பிறிவா வலத்தினில் பேரொளி மூன்றும்
அறியாது அடங்கிடும் அத்தன் அடிக்குள்
பிறியாது இருக்கில் பெரும்காலம் ஆமே.

சீவனின் அறிவுக்கு காரணம் திங்கள், கதிரவன், அக்கினி என்னும் மூன்று மண்டலங்களை நன்கு விளக்கம் பெறுவது ஆகும். இவை மூன்றும் அடங்கி விட்டால் உடல் அறிவு மறைந்து விடும். சீவ ஒளி சிவ ஒளியுடன் கலந்துவிட்டால் சீவன் தன் உடலில் இருந்து கொண்டே நெடுங்காலம் வாழ இயலும்.

#2809. அங்கி வண்ணன் அரன்

ஆகாச வண்ணன் அமரர் குலக்கொழுந்து
ஏகாச மாசுணம் இட்டுஅங்கு இருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின்று அப்புறம்
ஆகாச மாய்அங்கி வண்ணனும் ஆமே.

அந்தி வானத்தின் வண்ணம் கொண்டவன் சிவன்; அமரர்கள் குலக் கொழுந்து சிவன்; பெரிய பாம்பைத் தன் உடலில் அணிந்தவன்; அவன் வான் மயமாக விளங்குவான்; அறிவுப் பேரொளியாகவும் விளங்குவான். அவனே நெருப்பை போன்ற சிவந்த நிறம் படைத்த நம் சிவபெருமான்.

#2810. வெயில் கொண்டு உள்ளம் வெளியது ஆகும்.

உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயில்கொண்ட பேதை குலாவி உலாவி
வெயில்கொண்டு என்உள்ளம் வெளியது ஆமே.

உடலில் உயிர்ப்பாக விளங்குவது பிராணசக்தி. உலகின் அசைவுக்கு கரணம் ஆனது சோதி மயமான பிராணசக்தி. இந்த இரண்டு பிராணசக்திகளும் இணையும் பொழுது மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி சீவனின் உடல் முழுவது பரவுவவாள். நாதத்தை எழுப்புவாள். ஒளியாகச் சீவனின் மனத்தில் பொருந்துவாள். அதனால் சீவனின் நுண்ணுடல் தானே வெளிப்படும்.

#2811. அமுதம் பருகலாம்!

நணுகில் அகல்கிலன் நாதன் உலகத்து
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலும் ஆமே.

சீவன் சிவன் நினைவில் பொருந்தி இருக்கும் போது, சிவன் சீவனை விட்டு அகல்வது இல்லை. சீவன் சிவனை மறந்து உலக விஷயங்களில் ஆழ்ந்துவிட்டால், சிவன் சீவனிடமிருந்துச் சற்று விலகியே நிற்பான். சீவன் சிவனை விட்டு அகலாமல் ஒளிர்கின்ற பரவெளியை அறிந்து கொண்டு அதனை வழிபடுமானால் அது அமுதம் போன்ற சிவானந்தத்தைச் சுவைக்கலாம்.

#2812. செழுஞ் சுடர் சோதி

புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசம்எம் ஆதி அறிவு
சிவத்துளா காசம் செழுஞ்சுடர் சோதி
சகத்துளா காசம் தானம்ச மாதியே.

புறத்தில் காணப்படும் ஐந்து வானவெளிகள் என்பவை அனைத்து புவனங்களையும் உலகங்களையும் தாங்கி நிற்கும் ஒளியாகும். அகத்துள் காணப்படும் ஆகாசம் என்பது சீவனின் அறிவு. பேரறிவு விளங்குகின்ற வானம் என்பது சிவன் என்னும் செழுஞ்சுடர் சோதியாகும். சகத்திலுள்ள சீவனுக்கு ஆகாயம் என்பது தன் செயல் அற்றுச் சிவ ஒளியில் சீவ ஒளி கலப்பது ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
10. ஞானோதயம்

"சிவன் வேறு! சீவன் வேறு!" என்ற எண்ணம் மாறிச் சீவனுக்குத்
"தானே சிவன்!" என்ற எண்ணம் வருவது ஞானோதயம் ஆகும்.
குருவிடம் தீட்சைபெற்ற மாணவனுக்கு ஞானோதயம் நன்கு விளங்கும்.

#2813. இரண்டு வகை ஆனந்தம் இவை

மனசந் தியில்கண்ட மனநன வாகும்
கனவுற ஆனந்தம் காண்டல் அதனை
வினவுற ஆனந்தம் மீதொழிவுஎன்ப
இனமுற்றான் நந்தி ஆனந்தம் இரண்டே.

மனம் ஐம்பொறிகளின் உதவியுடன் உலகில் உள்ள விஷயங்களுடன் பொருந்தி இன்பம் துய்ப்பது சாக்கிரம் என்கின்ற நனவு நிலையில் நிகழ்வது ஆகும். பொறிகளின் உதவியின்றிச் சீவன் கனவில் விஷயங்களுடன் பொருந்தும் போது, நனவில் ஏற்படும் ஆனந்தம் போன்றே கனவிலும் ஏற்படும். ஆனால் சீவனின் ஆன்மஅறிவு நீங்கிய நிலையில் உயரிய சிவானந்தம் ஏற்படும். இவ்வாறு சீவர்களுக்குச் சிவன் ஏற்படுத்தியுள்ள ஆனந்தம் இரண்டு வகைகள்: அவை விஷயானந்தம், சிவானந்தம்.

#2814. அரியன், பெரியன், சிவன்!

கரியட்ட கையன் கபாலம்கை யேந்தி
எரியும் இளம்பிறை சூடும்எம் மானை
அரியன் பெரியன் என்று ஆட்பட்டது அல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே.

எம்பெருமான் ஒரு பெரிய, கரிய, கரியின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவன்; கையில் கபாலம் ஏந்தியவன்; ஒளிவீசும் இளம் பிறையை அணிந்தவன்; இத்தகைய மேன்மை வாய்ந்தவனை நான் “அரியவன்! பெரியவன்!” என்று அடிபணிவேனே அல்லாமல், “அவன் கரியனா? சேயனா?” என்று ஆராய்ந்து பார்ப்பது இல்லை.

#2815. நக்கார் கழல்வழி நாடுமின்!

மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறியே சென்று
புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் சுழல்வழி நாடுமின் நீரே.

கொடிய நஞ்சினை தான் உட்கொண்டவன் சிவன். செருக்கு மிகுந்த வானவர்களுக்குச் சிறந்த அமுதினை வழங்கியவன் சிவன். தகுந்த அறிவு பெற்றுத் தவநெறியில் நின்று, தன்னை அடைந்தவர்களுக்குச் சிவன் பொன் போன்ற தூய ஞானத்தைத் தருபவன்; நாதவழியில் நின்று சாதனை செய்து சிவன் திருவடிகளை அடைவீர்களாகுக!

#2816. விளக்கில் விளக்கை விளக்க வல்லார்

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலும் ஆமே.

ஆன்மா ஒளிமயமானது என்ற உண்மையை குரு முகமாகக் கற்றுத் தெளிய வேண்டும். அந்த நெறியில் நின்று ஆன்ம அறிவைப் பெருக்க வேண்டும். அந்த அறிவின் பேரொளியில் சிவ ஞானத்தைத் தூண்ட வேண்டும். சிவத்தின் அகண்ட ஒளியில் சீவ ஒளியைப் பொருத்த வேண்டும். இதைச் செய்ய வல்லவர்கள் சீவ ஒளியைத் தந்த சிவனடிகளில் பொருந்தி வாழ இயலும்.

#2817. தத்துவன் அங்கே தலைப்படும் தானே.

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே.

அறிவு மயமான ஆன்மா, தத்துவங்களுடன் பொருந்தி இருக்கும் போது அந்தத் தத்துவங்கள் ஆன்மாவால் அறியப்படும் பொருட்களாக இருக்கும். எப்போது தத்துவங்கள் அறியப்படுவது இல்லையோ, அப்போது அவற்றை அறியும் ஆன்ம அறிவும் அங்கு இராது. சீவன் தத்துவ ஞானம் அடைந்து, "தான் உடல் முதலிய அறியப்படும் பொருட்கள் அல்ல! அவற்றை அறிந்து கொள்பவன்!" என்ற உண்மையை உணர்ந்த கொண்ட உடனேயே அந்தச் சீவன் சிவன் ஆகும் தன்மையை அடைந்து விடும்.

#2818. பசும் பொன் திகழும்

விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின்று ஊறியது ஆர்அமுது ஆகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தம் கூடிநின் றானே.

வான்மயமான ஒரு பொருள் அனைத்தையும் தாங்கி கொண்டு உள்ளது என்ற உண்மை ஞானத்தைச் சீவன் அடைந்த உடனேயே, சேற்று நிலமாகிய சுவாதிட்டானத்தில் உள்ள தாமரை மலரிலிருந்து, ஒரு சக்தி அந்தச் சீவனின் உடலில் பரவும். அது பொன் நிறம் கொன்டு சீவனின் சிரசில் பரவும். அங்கு பொருந்தி நன்கு ஒளிரும். செந்நிறம் கொண்ட சுவாதிட்டான மலரில் உள்ள சிவ சொரூபமே இங்கனம் விளங்கும்.

#2819. சோதி ஏத்தன்மையால் வேறானது?

முத்தின் வயிரத்தின் முந்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின்தூவொளி மாணிக்கம்
ஒத்துஉயிர் அண்டத் துள்அமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரே.

முத்து, வைரம், கடல் நீரில் விளையும் பவளக் கொத்து, பசும் பொன் வீசும் தூய ஒளி, மாணிக்கத்தின் சிவந்த ஒளி இவை அனைத்தும் கலந்து விளங்குபவன் எந்தை சிவன். அண்டத்திலும், பிண்டத்திலும் சோதியாக விளங்கும் சிவனை எந்தத் தன்மையால் சீவனிடம் இருந்து மாறுபட்டவன் என்று கூறுவீர்?

#2820. நான் என்ற நானும் நினைப்பு ஒழிந்தேன்

நான்என்றும் தான்என்றும் நாடினேன் நாடலும்
நான்என்றும் தான்என்றும் இரண்டில்லை என்பது
நான்என்ற ஞான முதல்வனே நல்கினான்
நான்என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே.

"நான் வேறு சிவன் வேறு!" என்று எண்ணி அவனை நான் நாடினேன். சிவன் “நான் வேறு தான் வேறு அல்ல!” என்று எனக்கு உணர்த்தித் “தானே நான்!” என்ற ஞானத்தை எனக்கு நல்கினான். அப்போது நான் “நான் ஒரு பொருள்!” என்ற எண்ணத்தையும் துறந்து விட்டுச் சிவமயமாக நின்றேன்.

#2821. ஞானத்தின் நல்மோனம் நாதாந்த வேதமே.

ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென்று அறிவோர்தல்
ஞானத்தின் நல்யோகம் நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நல்மோனம் நாதாந்த வேதமே.

சிவனை அடைவதற்கு உண்டாகிய நன்னெறி என்பது, சிவஞானத்தை அடைந்து, நாதத்தை வசப்படுத்தி, நாதாந்தத்தை அடைவதே ஆகும். ஞானத்தின் நன்னெறி என்பது ஆன்மா “தான் அறிவே உருவானவன்!” என்ற உண்மையை அறிந்து கொள்வது. ஞானத்தில் நல்ல யோகம் என்பது சீவன் தன் சீவ போதத்தைத் துறந்துவிட்டுச் சிவனின் சிவ போதத்தில் திளைத்து நிற்பது ஆகும். ஞானத்தினால் பிரணவப் பொருளை அடைவது நாதாந்த வேதம் ஆகும்.

#2822. உய்ய வல்லார் அறிவுள் அறிவாமே.

உய்யவல் லார்கட்கு உயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட்கு உயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்
உய்யவல் லார்அறி வுள்அறி வாமே.

உய்ய விரும்புபவர்களுக்கு உயிர் போல இன்றியமையாதது சிவ ஞானம். உய்ய விரும்புபவர்களுக்கு உயிர் போல இன்றியமையாதது சிவம் ஆகும். உய்ய விரும்புபவர்கள் ஒடுங்கும் இடம் பிரணவம் ஆகும். உய்ய விரும்புபவர்களின் அறிவில் அறிவாக இருப்பது சிவன்.

#2823. சிவன் கண்ணின் மணியொக்கும்

காணவல் லார்க்குஅவன் கண்ணின் மணியொக்கும்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்கப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணவல் லார்க்கே அவன்துணை யாமே.

அருள் வழியில் நடந்து சிவனைக் காணும் வல்லமை படைத்தவர்களுக்கு, அவன் கண்ணின் மணியைப் போன்றவன். சிவனைக் காண வல்லவர்களுக்கு, அவன் கடலில் விளைந்த அமுதினை ஒத்தவன். தன்னை அடைந்தவர்களைத் தவறாமல் காப்பவன் நந்தி எம் பெருமான். தன் மீது மிகுந்த அன்பு கொண்டவர்களுக்கு அவன் என்றும் நல்ல துணையாக நின்று உதவுவான்.

#2824. தேவர் விரும்பும் விழுப்பொருள்

ஓம்என்றும் எழுத் துள்நின்ற ஓசைபோல்
மேல்நின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
ஆய்கின்ற தேவர் அகம்படி யாமே.

“ஓம்” என்ற ஓர் எழுத்து மந்திரம் பிரணவம். இந்த எழுத்திலிருந்து அதன் நாதம் என்றுமே நீங்காமல் அதனுள் உறைந்து இருக்கும். அது போலவே வானவர்கள் விரும்பும் விழுப்பொருள் எது என்று கேட்டால் சீவர்கள் உள்ளத்தை விட்டு நீங்காமல் நிறைந்திருக்கும் சிவம் ஆகும். மனத்தையும், வாக்கையும் கடந்து நிற்கும் அந்த செழும்பொருளின் திருவடிகளை வணங்கி நிற்கின்ற தேவர்கள் நம் உள்ளத்திலும் விளங்குவர்.

ஒன்பதாம் தந்திரம் -
11. சத்திய ஞானானந்தம்

முத் துரியங்களையும் கடந்த நிலையில் ஞானத்தினால் விளைகின்ற உண்மையான ஆனந்தம்.

#2825. தான் அது ஆகும்!

எப்பாழும் பாழும் யாவுமாய் அன்றாகி
முப்பாழும் கீழுள முப்பாழும் முன்னியே
இப்பாழும் இன்னவாறு என்பதில்லா இன்பத்துத்
தற்பரஞா னானந்தர் தானது வாகுமே.

பிரகிருதி மாயை, தூவா மாயை, தூய மாயை என்னும் மூன்றும் சூனியத்தை அடைந்தபோது ஆன்மா தத்துவங்களில் இருந்து நீங்கிவிடும். நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளையும் கடந்து துரியத்தை அடையும். துரிய நிலையும் சூனியம் ஆகும்போது, இன்னது என்று விவரிக்க முடியாத ஓர் ஆனந்த நிலையில் தற்பரன் ஆகிய சிவன் ஆன்மாவில் வந்து பொருந்துவான். அப்போது ஆன்மாவும் சிவம் ஆகிவிடும், ஆனந்தமாகப் பொலிவடையும்.

#2826. செம்பொருள் சீர் நந்தி தானே

தொம்பதம் தற்பதஞ் சொன்ன துரியம்போல்
நம்பிய மூன்றாம் துரியத்து நன்றாகும்
அம்புவி யுன்னா அதிசூக்கம் அப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே.

'தொம்பதம்' முதல் துரிய நிலையிலும், 'தத் பதம்' இரண்டாவது துரிய நிலையிலும், 'அசி பதம்' மூன்றாவது துரிய நிலையிலும் அமைந்துள்ளன. இவற்றைக் கடந்த எல்லையே இல்லாத நிலையில் இருப்பவன் செம்பொருள் ஆகிய சீர்மிகுந்த நந்தி ஆவான்.

#2827. சத்திய ஞான ஆனந்த நிலை

மன்னும் சத்தியாதி மணியொளி மாசோயை
அன்னதோடு ஒப்பம் இடல்ஒன்றாம் மாறது
இன்னிய உற்பலம் ஒண்சீர் நிறம்மணம்
பன்னிய சோபை பகர்ஆறும் ஆனதே.

சத்திய ஞான ஆனந்தம் ஈடு இணை அற்றது. அதை ஒளிரும் மணிகளுக்கு ஒப்பிடுவதும் பொருத்தமற்றது. நீலோத்பல மலரும், அதில் பொருந்தியுள்ள தூய்மை, அழகு, வர்ணம், நறுமணம், சோபை போன்றதே சத்திய ஞான ஆனந்த நிலை.

#2828. அனந்தம் ஆகும் சிவானந்தம்!

சத்தி சிவன்பர ஞானமும் சாற்றுங்கால்
உய்த்த அனந்தம் சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொருபத்த சத்தி வருகுரு
உய்த்த உடல்இவை உற்பலம் போலுமே.

சக்தி, சிவம், ஆனந்தம் இவற்றைப் பற்றி நாம் இவ்வாறு கூறலாம். அனைத்து உயிரினங்களின் தொகுத்த இன்ப நிலையே அனந்தம் இல்லாத சிவானந்தம் ஆகும். அழகிய வடிவை உடைய சக்தியை விட்டுப் பிரியாமல் இருப்பவனே சிவன். இது

நீலோத்பல மலரை விட்டு அதன் ஒண்மை, சீர்மை, நிறம், மணம், சோபை, தூய்மை அகலாமல் இருப்பது போன்றதே.

#2829. சத்தியாதி தோன்ற நின்றானே.

உருஉற் பலநிறம் ஒண்மணம் சோபை
தரநிற்ப போல்உயிர் தற்பரன் தன்னில்
மருவச் சிவம்என்ற மாமுப் பதத்தின்
சொரூபத்தின் சத்தியாதி தோன்றநின் றானே.

அழகான நீலோத்பல மலரில் நிறம், ஒண்மை, மணம், சோபை முதலியவை கலந்து இருப்பதை போன்றே, சீவன் சிவனோடு கலந்து விடுவான்! அப்போது சிவன் என்ற சீரிய தத்துவத்தின் சொற்பொருளாக விளங்குகின்ற சிவன் சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற மூன்றும் நன்றாக விகசிக்கும்படி நின்றான்.

#2830. புனையில் அவனைப் பொதியலும் ஆகும்

நினையும் அளவில் நெகிழ வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலும் ஆகும்
எனையும் எங்கோன்நந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித் தனனே.

நினைத்த மாத்திரத்தில் உள்ளம் உருகும் மெழுகென நெகிழும்படிகிச் சிவனை வணங்கி; அவனைப் புகழ்ந்து போற்றி பாக்கள் புனைந்தால்; அவனை நம் உள்ளத்தில் வைத்து; அங்கிருந்து அகன்று செல்லாதபடி அன்பால் பொதிந்துவிட முடியும். எனக்கு அருள் காட்டிய நந்தி எம்பிரான் அவனை மறவாத வரம் தந்தான். எனக்கு அவன் மேல் தாளாத காதலும், மாளாத அன்பும், நீங்காத பற்றும் ஏற்படச் செய்தான்.

#2831. மயிர்க்கால் தொறும் பெருகும் ஆனந்தம்!

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீலம் மயிர்க்கால் தொறும்தேக் கிடுமே.

துரிய நிலையைக் கடந்து விட்ட சீவனுள் சிவன் அன்புடன் புகுந்து கொள்வான். பாலும், தேனும், பழ ரசமும், தூய அமுதத்தின் இன்சுவையும் கலந்த கலவை போன்ற இன்பத்தை சிவன் சீவனின் ஒவ்வொரு மயிர்க் காலிலும் தோன்றச் செய்து, சீவனுக்குப் பேரின்ப நிலையை அருள்வான்.

#2832. துவளற்ற சோதி தொடர்ந்து நிற்பான்

அமரத் துவம்கடந்து அண்டம் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்தும் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே.

தனிப் பெருந்தலைவன் ஆகிய சிவன் அழியாத இயல்பினை உடைய சீவனையும், அவன் பொருந்தி இருக்கும் அண்டகோசத்தையம், அதற்கும் அப்பால் நாதத் தத்துவத்தையும் கடந்து தனித்து நிற்பான். முத்துப் பற்களும், பவள இதழ்களும், பனி போன்ற குளிர்ந்த மொழியினையும் உடைய அழகிய இளம் மாதர்களின் உடல் கவர்ச்சியில் தளர்ச்சி அடையாத சோதியாகச் சிவன் தொடர்ந்து நிற்கின்றான்.

#2833. சத்தியம், ஞானம், ஆனந்தம்

மத்திமம் ஆறாறும் மாற்றி மலம்நீக்கிச்
சுத்தம தாகும் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற்றுச்
சத்திய ஞானானந்தம் சார்ந்தனன் ஞானியே.

மெய்ஞானியின் இலக்கணம் இதுவே! அவன் முப்பத்தாறு தத்துவங்களையும் துறந்துவிட்டு வேண்டும். சீவனிடம் மலங்களால் ஏற்படுகின்ற விஷய வாசனைகளை நீக்கிவிட வேண்டும். தூய துரிய நிலையின் குற்றங்களைக் கடந்து செல்ல வேண்டும். பாசத் தளைகளால் கட்டப்பட்டுள்ள சீவனின் பெத்த நிலை மாற வேண்டும். சீவன் சிவத்தையே எதிர் நோக்கி இருக்க வேண்டும். சத்தியம், ஞானம், ஆனந்தம் இவற்றில் நன்கு பொருந்தி இருப்பவனே உண்மையான மெய்ஞானி!

#2834. சொரூபம் அது ஆமே

சிவமாய் அவமான மும்மலம் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானானந் தத்தே
துவமார் துரியம் சொரூபம் தாமே.

சீவன் சிவ வடிவம் அடைந்து விட்டால் என்ன நிகழும்?

சீவன் சிவத்தை அடைந்து சிவமாக ஆகி விட்டால் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் அகன்று விடும், பிரகிருதி மாயை, தூமாயை, தூவா மாயை என்ற மும் மாயைகளும் கெடும். பற்று அற்றுப் போய் விடும். துரியாதீதத்தில் சீவன் சிவனுடன் பொருந்திச் சிவவடிவம் அடைந்து சத்திய ஞானமும், ஆனந்தமும் அடையம்!

ஒன்பதாம் தந்திரம் -
12. சொரூப உதயம்

சிவ சொரூபம் வெளிப்பட்டுச் சீவனுக்கு முத்தியை அளிப்பது.

#2835. அரிய துரியத்து அணைந்து நின்றானே.

**பரம குரவன் பரம்எங்கு மாகித்
திரமுற எங்கணும் சேர்ந்துஒழி வற்று
நிரவும் சொரூபத்துள் நீடும் சொரூபம்
அரிய துரியத்து அணைந்துநின் றானே.**

சீரிய சிவகுரு தத்துவங்களைத் துறந்துவிட்ட சிறந்த சீவனுடன் வந்து பொருந்துவான். அந்தப் பிணைப்பு உறுதி அடையும் வண்ணம் எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பான். சீவனின் ஆன்மாவின் சொரூபத்தில் நிலைபெற்று நீங்காமல் இருக்கும் சிவன், சீவனை அதன் அரிய துரிய நிலையில் பொருந்தி விளங்குவான்.

#2836. வரைந்து வலம் செயுமாறு அறியேனே.

**குலைக்கின்ற நீரின் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடு ஆகாசம்
நிலத்திடை வானிடை நீண்டகன் றானை
வரைந்து வலம்செயு மாறுஅறி யேனே.**

சீவனை நிலைகுலையச் செய்பவை ஐம்பூதங்கள். நிலம், நீர் நிறைந்த கடல், அலைந்து திரிகின்ற காற்று, அனல், ஆகாசம் இவற்றில் நிறைந்திருக்கும் அதே சிவன் இவற்றைக் கடந்தும் நிற்கின்றான். மண்ணுலகு முதல் விண்ணுலகு வரை நீண்டு நிறைந்திருக்கும் இந்த இறைவனை நான் ஒரு சிறிய எல்லைக்கு உட்படுத்தி வணங்கும் முறையை அறிந்திலேன்.

#2837. புவனாதிபதி சிவனே ஆவான்

**அங்குநின் றான்அயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவன் என்று ஏத்துவர்
தங்கிநின் றான்தனிநாயகன் எம்இறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானே.**

இங்கனம் மண்ணுக்கும் விண்ணுக்கும் நீண்டு நிறைந்து இருக்கும் சோதியாகிய சிவனை அயன், திருமால், பிற தேவர்கள் வந்து “இறைவா!” என்று தாள் தொழுவர். ஒப்பாரும், மிக்காரும் இல்லாத சிவபெருமான் அவர்களிடம் சோதி

வடிவாகப் பொருந்தி அவர்களை இயக்குகின்றான். அவர்களைக் கடந்து அனைத்து புவனங்களின் அதிபனாகவும் அவனே விளங்குகின்றான்.

#2838. அமரர்க்கு அதிபதியாகி நிற்பாரே.

சமயச் சுவடும் தனையறி யாமல்
சுமையற்ற காமாதி காரணம் எட்டும்
திமிரச் செயலும் தெளிவுடன் நின்றோர்
அமரர்க்கு அதிபதி யாகிநிற் பாரே.

சமயங்கள் நாம் வாழ வேண்டிய நல்ல நெறிமுறைகளை வரையறை செய்து அமைத்துத் தருகின்றன. ஆனால் அவற்றை அறிந்து கொள்ள முடியாதபடி குறிக்கிடுகின்றன மனிதனிடம் உள்ள எட்டுத் தீய குணங்கள். அவை முறையே காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், மண்ணாசை, பொன்னாசை என்பன. அவற்றால் விளைகின்ற தீமைகளை நன்கு உணர்ந்து கொண்டு அவற்றை விட்டு விலகிச் சிவனுடன் பொருந்துகின்ற மனிதன் தேவர்களுக்கும் தலைவன் ஆவான்.

#2839. இறைநூல் இயம்புமே.

மூவகைத் தெய்வத்து ஒருவன் முதல்உரு
வாய்அது வேறாம் அதுபோல் அணுப்பரன்
சேய சிவம்முத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென்று இறைநூல் இயம்புமே.

நான்முகன், திருமால், உருத்திரன் என்ற மும் மூர்த்திகளில் ஒருவன் உருத்திரன். அவனே அம்மூவரில் இருந்து வேறுபட்டு நின்று அவர்களை இயக்கவும் செய்வான். சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்பவை முத்துரியங்கள். இவற்றில் ஒருவனாக இருக்கும் சிவபெருமான் அவற்றில் இருந்து வேறுபட்டும் நிற்பான் என்று வேத ஆகமங்கள் உரை செய்யும்.

#2840. குருவன்றி யாவர்க்கும் கூட ஒண்ணாதே.

உருவின்றி யேநின்று உருவம் புணர்க்கும்
கருவின்றி யேநின்று தான்கரு வாகும்
அருவின்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவின்றி யாவர்க்கும் கூடஒண் ணாதே.

தனக்கு என்று ஓர் உருவம் இன்றி அனைவரின் வடிவங்களையும் தானும் எடுத்துக் கொள்பவன் சிவன். தனக்கு என்று ஒரு மூலம் இன்றியே அனைத்துக்கும் மூலம் ஆகுபவன் சிவன். அவன் அருவ நிலையையும் தாண்டி விளங்கும்

பெருமான். சீவன் சிவனுடன் கூட வேண்டும் என்றால் அதற்கு உள்ள ஒரேவழி சிவனே குருவாக வெளிப்பட்டுச் சீவனுக்கு அருள் செய்யவேண்டும். அன்றேல் அது ஒரு போதும் நிகழாது!

#2841. உருவம் நினைப்பவர் உலகத்தில் யாரே?

உருவம் நினைப்பவர்க்கு உள்ளூறும் சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவம் நினைப்பவர் உலகத்தில் யாரே.

சிவனது திருவருளை இடையறாது சிந்தனை செய்பவர் பெறும் பயன்கள் இவை:
அவர்கள் உள்ளத்தில் உள்ள இருள் கெடும்! அங்கு ஒளிமயமாக விளங்கும்.
அவர்கள் மரணத்தை வென்று ஊழி வரை வாழ்ந்திருப்பர்.
அவர்கள் தேவ உடல் பெற்று சிறப்பு அடைவர்.
உலகில் சிவனை இவ்வாறு சிந்தனை செய்பவர்கள் யார் உளர்?

#2842. பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே.

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி என்னுள் படிந்துஅதன் பின்னைப்
பரஞ்சோதி யுள்நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே.

நான் பரஞ்சோதியாகிய சிவனின் பேரொளிப் பிழம்பைக் கண்டேன்! அதனையே என் பற்றுக் கோடாகக் கொண்டேன். அந்தப் பரஞ்சோதி என்னுள் வந்து பொருந்தியது. பின்னர் நான் அந்த சோதியில் அடங்கி இருந்தேன். நான் அடங்க அடங்க அந்தச் சோதி நாத வடிவத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

#2843. சொரூபக் குரவன் சுகோதயத்தானே.

சொரூபம் உருவம் குணம்தொல் விழுங்கி
அரியன உற்பலம் ஆமாறு போல
மருவிய சத்தியாதி நான்கும் மதித்துச்
சொரூபக்குரவன் சுகோதயத் தானே.

சொரூபம், ரூபம், குணம், தொன்மை பொருந்தி விளங்கும் அரிய நீலோத்பல மலர். அது போன்றே சீடனுக்கு நன்மை செய்து இன்பம் அளிக்கும் குரு சிவனும் ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்ற நான்கு சக்தியருடன் ஒன்றாகக் கலந்து நிற்பான்.

#2844. உள்ளொளி ஆகும்!

உரையற்ற ஆனந்த மோன சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற்று உகாரம் மகாரம தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே.

சிவ சொரூபத்தைக் கண்ட சீவன் தன் பயனற்ற பேச்சு அறும், அரிய மோனத்தை மேற்கொள்ளும், மாறாத ஆனந்தம் அடையும். அந்தச் சீவன் அகண்ட சக்தியைக் கண்டதும் அதன் இச்சை, ஞானம், கிரியை என்பவை அகர, உகர, மகரத்துடன் பொருந்திப் பிரணவத்தின் ஒளியாகப் படர்ந்து நிற்கும்.

#2845. கள்வனைக் கண்டு கொண்டேன்!

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனில் கண்டுகொண் டேனே.

சிரசில் உள்ள தாழ்வரையில் நின்று கொண்டு நான் சிவனைக் குறித்து ஓர் அரிய தவம் செய்தேன். அங்கு நான் அந்தக் கள்வனைக் கண்டு கொண்டேன். அவன் தன் கலைகளை மறைத்துக் கொண்டு சக்தியுடன் அங்கு நின்றிருந்தான். அந்த உள்ளம் கவர் கள்வனைக் கண்டதும் என் பொல்லாத பிறவிப்பிணி அகன்று சென்று விட்டது.

#2846. நானும் முதல்வன் எனலாமே!

ஆமாறு அறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமாறு அறிந்தேன் புகுமாறும் ஈதென்றே
ஏமாப்ப தில்லை இனியோர் இடமில்லை
நாமாம் முதல்வனும் நான்என லாமே.

அகத்தில் ஒளிந்திருக்கும் அரும்பொருள் ஆகிய சிவன், சீவனை ஆட்கொள்ளும் விதத்தை நான் அறிந்து கொண்டேன். அவனைச் சென்று அடையும் வழியினையும் நான் அறிந்து கொண்டேன். நான் இறுதியாகச் சென்று அடைய வேண்டிய இடம் அவன் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். எனக்கு வேறு பாதுகாப்பு எதுவும் தேவை இல்லை! நான் செல்ல வேண்டிய இடமும் வேறு எதுவும் இல்லை. நான் மட்டுமல்ல. நாம் அனைவரும் சென்று சேர வேண்டிய இடம் சிவனே என்று அறுதியிட்டு உறுதியாக கூறுவதில் இனி எந்தப் பிழையும் இல்லை.

ஒன்பதாம் தந்திரம் -
13. ஊழ்

சீவனின் கருமங்களின் இருவினைப் பயன்கள் சீவனை வந்து அடைவது.

#2847. தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே.

செற்றிலென்? சீவிலென்? செஞ்சாந்து அணியிலென்?
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்?
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே.

கூரியவாள் கொண்டு உடலைத் துணித்தால் தான் என்ன? நறுமணம் கமழும் செஞ்சாந்து கொணர்ந்து பூசினால் தான் என்ன? தலையில் உளியால் அடித்து மரிக்கச் செய்தால் என்ன? தத்துவ ஞானிகள் இவைகள் எல்லாம் வித்தகன் விகிர்தன் சிவன் இச்சைப்படியே நிகழ்கின்றன என்று எண்ணி தம் பொறுமையை இழக்காமல் இருப்பார்கள்!

#2848. நான்முன்னம் செய்ததே நன்னில மானதே

தான்முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னம் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னம் செய்ததே நன்னில மானதே.

சீவன்கள் அனுபவிக்கும் இன்பமும், துன்பமும் அவரவர் செய்த வினைகளினால் மட்டுமே அமைகின்றன. இறைவன் சிவன் இவற்றைச் சீவன்களுக்காக முன்பே அமைத்து விடவில்லை. அந்தத் தலைவனை நான் நோக்கிய போது, நான் முன்னம் செய்த தவம் என்னைச் சென்னியின் வழியே செலுத்தி, எனக்கு உன்னதமான இடத்தைத் தந்தது.

#2849. நந்தியை என் உள்ளம் பிரியகில்லாவே.

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டுஎன் உள்ளம் பிரியகில் லாவே.

ஆற்றில் வந்து சேரும் நுண்மையான மணல் அந்த ஆற்றால் சுமக்கப்படுவதில்லை. பொங்கி வரும் ஆற்று வெள்ளம் மேடுகளைப் பள்ளங்கள்

ஆக்கலாம். பள்ளங்களை மேடுகள் ஆக்கலாம். அது போன்றே ஒருவன் செய்த நல்வினைகள், தீவினைகள் இவற்றின் பயன்கள் அவனையே வந்து சேரும். நீறு அணிந்த இறைவன் சிவனையே நான் பெறும் பேறாகக் கருதி நான் அவனை விட்டு விலகாமல் இருப்பேன்.

#2850. நாதனை நாடுவன் நானே.

வான்நின்று இடிக்கில்என்? மாகடல் பொங்கில்என்?
கான்நின்ற செந்தீக் கலந்துடல் வேகில்என்?
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்?
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே.

வானம் இடிந்து விழுந்தால் தான் என்ன? அலைகடல் பொங்கினால் தான் என்ன? காட்டுத்தீயினால் உடல் வெந்து அழிந்து போனால் தான் என்ன? சண்டமாருதம் பெரும் அழிவைப் ஏற்படுத்தினால் தான் என்ன? நான் அவற்றைச் சற்றும் பொருட்படுத்த மாட்டேன். நான் என் நாதனையே எப்போதும் வழுவாமல் நாடுவேன்.

#2851. ஞானத்து உழவினை நான் உழுவேனே

ஆனை துரக்கிலென்? அம்பூடு அறுக்கிலென்?
கானத்து உழுவை கலந்து வளைக்கிலென்?
ஏனைப் பதியினில் என்பெரு மான்வைத்த
ஞானத்து உழவினை நான்உழு வேனே.

மதயானை என்னைத் துரத்தினால் தான் என்ன? கூரிய அம்பு என்னைத் துளைத்தால் தான் என்ன? காட்டுப் புலி என்னை சுற்றி வளைத்தால் தான் என்ன? ஞான பூமியில் ஞானத்தை தலைவன் ஆகிய எம் பெருமான் எனக்கு அளித்த ஞானத் தொண்டினைச் செய்வதிலிருந்து நான் வழுவ மாட்டேன்.

#2852. பாடது நந்தி பரிசறி வார்க்கே

கூடு கெடின்மற்றோர் கூடுசெய் வான்உளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக் கால்ஒக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே.

சீவனுக்கு கிடைத்த உடல் கெட்டுவிட்டால் மற்றொரு நல்ல உடலை வழங்குவதற்கு இறைவன் இருக்கின்றான். அதிக மழை அதிக வறட்சி நிலவும் நாட்டை விட்டு விட்டு வேறு நாடு சென்று பிழைப்பர் மனிதர்கள். குடியேறிய வீடு பழுது பட்டால் வேறு வீட்டுக்கு குடியேறுவது போல சீவன் ஓர் உடலை

விட்டுவிட்டு வேறு ஓர் உடலை எடுத்துக் கொள்ளும். சிவஞானம் பெற்றவர்கள் இதனை நன்கு அறிந்து கொள்வார்கள்.

ஒன்பதாம் தந்திரம் -
14. சிவ தரிசனம்

சிவன் சீவனுக்குக் காட்சி தருவது!

#2853. சிந்தையின் உள்ளே சிவனிருந்தானே.

சிந்தையது என்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவனிருந்தானே.

சிவனையே எண்ணிக் கொண்டு இருப்பவருக்குச் சிந்தை வேறு, சிவன் வேறு என்பது இல்லை. சிந்திப்பவரின் உள்ளத்தின் உள்ளே சிவன் வெளிப்பட்டு அருள்வான். சிந்தையைத் தெளிவிக்கும் சிவ ஞானத்தால் சிந்தை தெளிந்தவர்களின் சிந்தையின் உள்ளே சிவன் இருப்பான்.

#2854. வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்

வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
யாக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே.

சொற்களைக் கடந்தவன் சிவன்; மனத்தினைக் கடந்தவன் சிவன்; என்றும் மறைகள் உரைக்கும் மறை நாயகன் சிவன். அவன் அருளை நாடி அவனையே நோக்குங்கள். நீங்கள் நோக்கும் அந்தப் பொருள் மிகவும் நுண்மையானது. அதற்குப் போக்கும், வரவும் இல்லை; அழிவும், கேடும் இல்லை. இங்கனம் சிவனை ஆராய்ந்து தேடுபவர்களுக்கு அவனே தேடும் பொருளாவான்.

#2855. அரனாய் அருள் புரிந்தான்!

பரனாய்ப் பராபர னாகிஅப் பால்சென்று
உரனாய் வழக்கற்ற ஒண்சுடர் தானாய்த்
தரனாய் தனதென ஆறுஅறிய வொண்ணா
அரனாய் உலகில் அருள்புரிந் தானே.

பரனாகியவன் சிவன்; பராபரன் ஆகியவன் சிவன்; யாண்டும் பரவிய தன்மையைக் கடந்து சென்று பேரறிவும் பேராற்றலும் பொருந்தியவன் சிவன். மறைக்கப்படாத ஒளியுடன் சுடர் விடும் பரஞ்சோதி அவன். அரனே அனைத்துக்கும் ஆதாரம் ஆகநின்றாலும், அரன் னைத்து சீவர்களாலும் அறியப்படாதவனாகவும் இருக்கின்றான். அறிய ஒண்ணாத அரனாக இருந்தாலும், அரன் உயிர்களுக்கு அரணாக நின்று அருள் புரிகின்றான்.

ஒன்பதாம் தந்திரம் -
15. சிவசொரூப தரிசனம்

சிவனின் இயல்புநிலை ஆகிய சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றையும் சீவன் தானும் உணருவது.

#2856. வேதமும் ஓதும் சொரூபி

ஓதும் மயிர்க்கால் தொறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றுஅகன்று அப்பாலை
வேதம் ஓதும் சொரூபிதன் மேன்மையே.

ஓதுகின்ற மயிர்க்கால்கள் தோறும் அமுது ஊறிடும்; இன்பம் பொங்கும்; உள்ளும் புறமும் இடையறாத ஆனந்தம் தோன்றும்; உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று சொரூபங்களையும் கடந்த, மறைகள் ஓதும் சிவனின் சொரூபத்தின் மேன்மை இவை ஆகும்!

#2857. மலர் கந்தம் துன்னி நின்றான்

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணரும் அவனே புலவி அவனே
இணரும் அவன்தன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் றானே.

சீவர்களின் உணர்வும் சிவனே. அந்த உணர்வை வெளிப்படுத்தும் உயிரும் அவனே! உயிர்கள் புணரும்படிக் கலவி செய்விப்பவனும் சிவனே. அவைகள் மாறுபடுமாறு புலவி செய்விப்பவனும் அவனே! அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் சிவனை இத்தன்மையன் என்று வரையத்துக் கூற முடியாது. அவன் உடலில் ஆறு ஆதாரங்களில் உள்ள தாமரை மலர்களின் நறுமணத்தால் பொருந்தி உள்ளான்.

#2858. மறையவன் மாதவன் சிவன்

துன்னிநின் றான்தன்னை உன்னிமுன் னாஇரு
முன்னி அவர்தம் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்தின் ஆமே.

ஆதாரத் தாமரைகளில் பொருந்தி இருக்கும் சிவனின் சன்னதியில் நீங்கள் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். அப்போது சிவனே உங்கள் உள்ளக் கிடக்கைகளை அறிந்து கொண்டு நிறைவேற்றுவான். அவன் தேவ வடிவானவன். அரிய தவத்தினால் அறியப்படுபவன்; சீவனின் சென்னியில் நின்று கொண்டு அதன் சிந்தயைத் தெளிவிப்பவனும் சிவனே!

#2859. பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தி

மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலும்
தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற்று அறிவன்நான் என்விழித் தேனே.

ஈசன் திருவருளால் விளங்கப் பெற்ற என் அகக்கண்களை நான் விழித்து நோக்கினேன். நோக்கியபோது என்னுள் நிலைபெற்ற சோதியும், ஒப்பற்ற தலைவனும் ஆகிய பொன்னார் மேனியன், புரிசடை உடைய சிவன் என்னிடம் வந்து பொருந்தினான். நான் அறிவு மயமானவன் என்று எனக்கு உணர்த்தினான்.

#2860. உய்த்த துரியத்து உறுபே ரொளியே.

சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தம்
சித்தத்தின் நில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியம் துரியத்துள்
உய்த்த துரியத்து உறுபே ரொளியே.

சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று வடிவங்களுடன் இருப்பவன் சிவன். தனிப்பொருளாகவும் இருப்பவன் சிவன். முக்குணங்களின் வசப்பட்ட சீவனிடம், சிவானந்தத்தைத் தரும் அவன் பேரொளி சென்று பொருந்தாது. சீவன் நிர்குணன் ஆகும் பொழுது தூய்மை அடையும். பிரம்ம துரியத்தில் விளங்கும். சீவனின் அந்த பிரம்ம துரியத்தில் சிவன் பேரொளியாகச் சுடர் விடுவான்.

#2861. ஆனந்தத்து அப்புறத்தானே.

பரன்அல்ல நீடும் பராபரன் அல்ல
உரன்அல்ல மீதுணர் ஒண்சுடர் அல்ல
தரன்அல்ல தான்அவை யாய்அல்ல வாகும்
அரன்அல்ல ஆனந்தத்து அப்புறத்தானே.

சிவன் வெறும் பரன் மட்டும் அல்லன்; சிவன் உயர்ந்த பராபரன் மட்டும் அல்லன்; சிவன் சீவனின் அறிவாற்றலால் அடையப்படுபவன் அல்லன்; சிவன் சீவனின் சென்னி மேல் விளங்கும் ஒளிமண்டலம் மட்டும் அல்லன்; சிவன் அனைத்தையும் தரிப்பவன் மட்டும் அல்லன்; இவைகளாக இருப்பவனும் சிவன் தான்! இவைகள் மட்டுமே அல்ல என்று இருப்பவனும் சிவன் தான்! இன்பத்தைத் தரும் அரன் மட்டும் அல்லன் சிவன். அவன் ஆனந்தத்துக்கு அப்பாற்பட்டவன்!

#2862. சுகானந்த போதரே.

முத்தியும் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங் கூடலால்
சுத்தி யகன்றொர் சுகானந்த போதரே.

முத்தியும், சித்தியும் தரவல்ல சிவஞானம் கைக் கூடியவர்கள் எல்லையில்லாத பக்தியில் பொருந்துவர்; அவர்கள் பரமாகும் தன்மை அடைவர்; அவர்கள் சக்தியில் நிலை பெற்றவுடன் அவர்களுடன் சிவன் பொருந்துவான். இத்தகையவர்கள் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருப்பர்.

#2863. உரைப்பது எவ்வாறே?

துரிய அதீதம் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியும் குவியும் விள்ளா மிளிரும்தன்
உருவும் திரியும் உரைப்பது எவ்வாறே.

சீவனின் துரியாதீதம் என்னும் நிலை சொற்களுக்கு அப்பாற்பட்ட பாழ்நிலை ஆகும். இந்த அரிய துரியாதீதத்தை சீவன் அடைந்தவுடன்; விரித்தலும் குவித்தலும் இல்லாத சீவனின் மனம் சிந்திக்கும் திறனை இழந்துவிடும். அப்போது அங்கு நினைப்போ மாறப்போ இராது. மனம் தத்துவங்களுடன் கொண்ட தொடர்பை இழந்து, தன் உருவம் அழிந்துவிட்ட அந்த நிலையைச் சொற்களால் கூறவும் இயலுமோ?

ஒன்பதாம் தந்திரம் -
16. முத்திபேதம், கர்மநிர்வாணம்

முத்தி பேதம் = முத்தி நிலைகளின் வகைகள்
கர்ம நிர்வாணம் = சீவன் தன் செயல் அறுதல்.

#2864. நிர்வாண நிலை பிறக்கும்

ஓதிய முத்தியடைவே உயிர்பரம்
பேதமில் அச்சிவம் எய்தும் துரியமோடு
ஆதி சொரூபம் சொரூபத்த தாகவே
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே.

மறைகள் கூறும் வீடுபேறு என்பது என்ன? சீவன் பரம் ஆகிச் சிவவடிவத்தில் இலயம் அடையும். அப்போது துரிய நிலையில் முறையே சீவன், பரம், சிவன் என்ற மூன்றும் நன்கு பொருந்தி விளங்கும். சீவ வடிவமாகிய பரம் சிவ வடிவத்துடன் பொருந்தும். அந்த நிலையில் குற்றமற்ற நிர்வாண நிலை பிறக்கும்.

#2865. பிதற்று ஒழிவர்!

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே.

உலகப் பற்றுக்களைத் துறந்தவர்கள் பற்றி நிற்பது பரம்பொருளாகிய நம் சிவபெருமானை. கல்வி கற்றுத் தேர்ந்து அதன் முடிவாக சிவஞானத்தை அடைந்தவர் கருதுவது கண்ணுதலோன் ஆகிய சிவபெருமானை. உற்றம் சுற்றம் அற்றவர்கள் சுற்றி நிற்பது சோதியாகிய என் சிவபெருமானையே. அத்தகைய சிவ பெருமானை அடைந்து அவனுடன் பொருந்தியவர்கள் வீண் பிதற்றல் ஒழிந்து மோன நிலையை அடைவர்!

ஒன்பதாம் தந்திரம் -
17. சூனிய சம்பாஷணை

ஞான மொழிகளை மறைவாக உரைத்தல்.

#2866. மாயக் கவற்றின் மறைப்பறி யேனே.

காயம் பலகை கவறைந்து கண்மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோர் அக்கரம்
ஏய பெருமான்இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே.

மனிதனின் உடல் ஒரு சூதாடும் பலகையைப் போன்றது. ஐம்பொறிகள் சூதாடும் கருவிகள் ஆகும். இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்றும் அதன் கண்கள் ஆகும். விஷய சுகத்தை நாடும் சீவன் ஐம்பத்தொன்று எழுத்துக்களை உடைய ஆறு ஆதாரச் சக்கரங்களின் இருந்து கொண்டு செயல்படும். சூதாடும் கருவியாகிய உடலில் சூதாடுவதற்கு ஒரு சீவன் வேண்டும். உலகைப் பற்றிக் கொண்டு இருக்கின்ற சீவன் சிவத்தை உணராது. சிவனைப் பற்றிக் கொண்டு இருக்கின்ற சீவன் உலகை அறியாது.

#2867. ஊறிக் கிடந்ததென் உள்ளன்பு தானே.

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்ததென் உள்ளன்பு தானே.

பரம்பொருளாகிய சிவத்தை அடைவிக்கும் தூய நெறி என்னும் பயிர் முளைக்காதபடி அங்கு ஆணவம், கன்மம், மாயை என்னும் களைச்செடிகள் மண்டிக் கிடந்தன. இந்தக் களைகளை அழித்துச் சிவம் என்ற பயிரை வளர்க்கும் வகை அறிந்தவர் எவரும் இல்லை. ஆணவம் முதலிய களைகளை அழித்துச் சிவம் என்னும் பயிரை வளர்ப்பவர்களிடம் என் உள்ளம் ஊறி அன்பைப் பெருக்குகின்றது.

#2868. கடல் ஏழுங் கண்டேனே.

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறுபடுவன நான்கு பனையுள
ஏறற்கு அரியதோர் ஏணியிட்டு அப்பனை
ஏறலு றேன்கடல் ஏழுங்கண் டேனே.

ஆறு ஆதாரங்களுக்கு கீழே அமைந்துள்ள மூலாதாரத்தில் நான்கு இதழ்கள் கொண்ட ஒரு நீண்ட பனைமரம் உள்ளது. பக்குவம் அடையாத சீவனில் இது அறியாமை என்ற இருள் முகமாக இருந்து தொழிற்படும். ஏறுவதற்கு அரிய சுழுமுனை என்ற ஏணியில் ஏறி நான் அந்தப் பனையின் உச்சியை அடைந்தேன். அங்கு உடலின் ஆதாரங்களாகிய ஏழு கமலங்கள் கூடி ஒன்றாக ஒளிவீசுவதைக் கண்டேன்.

#2869. பழுத்தது வாழைக் கனியே.

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண்டு ஓடினோர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

ஞான சாதனை என்னும் கத்தரிச் செடியின் விதையை நான் விதைத்தேன். அதிலிருந்து வைராக்கியம் என்ற பாகற்கொடி முளைத்தது. தத்துவ ஆராய்ச்சி என்ற புழுதியைக் கிளறினேன். அதனால் சகசிரதளத்தில் ஓர் ஒளி மண்டலம் தோன்றியது. மனித உடலின் ஆதாரத் சக்கரங்களில் வாழ்ந்து கொண்டிருந்த ஐம்பத்தோரு எழுத்துக்களும் விடை பெற்றுச் சென்றான. கிடைப்பதற்கு அரிய உயர்ந்த சிவக் கனி எனக்கு கிடைத்தது.

#2870. மையணி கண்டன் மனம் பெறுமின்!

ஐஎன்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவுஅறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன்றும் இன்றிப் புகஎளி தாமே.

ஐம் பெரும் பூதங்களின் கூட்டுறவின் பயனாக உண்டாகும் விதையில், சீவனின் ஆன்மாவை விளங்கச் செய்கின்ற விந்து மண்டலம் உள்ளது. ஆயினும் இந்த விந்து மண்டலம் செயல்படுகின்ற முறையை அறிந்தவர் எவரும் இல்லை. மையணி கண்டனிடன் சீவன் மனம் பதித்தால், தன் ஆன்மாவை விளக்கும் ஒளி மண்டலத்தை அது உறுதியாகச் சென்று அடைய முடியும்.

#2871. வெள்ளச் செய்யாகி விளைந்தது

பள்ளச்செய் ஒன்றுண்டு பாடச்செய் இரண்டுள
கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் அங்கே உழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே.

சுழுத்தி என்ற பயன் இல்லாத பள்ளமான நிலம் ஒன்று உள்ளது. கனவு, நனவு என்று சிவப்பயிர் விளையாத பாழ் நிலங்கள் இரண்டு உள்ளன. கள்ளனைப் போல மறைந்து இருக்கும் ஆன்மா தன்னைக் குறித்த உண்மைகளை அறியாமல் இந்த மூன்று பாழ் நிலங்களாகிய மூன்று அவத்தைகளில் உழன்றது. தன் உண்மை நிலையை அறிந்து கொண்டு, உள்ளம் என்ற நிலத்தைச் சீர்படுத்தி, சிவத் தொண்டு என்ற உழவினைச் செய்தால், வெள்ளமாகப் பாய்ந்து வருகின்ற சிவானந்தம் சீவனுக்கு முத்தி என்ற விளைச்சளைத் தரும்.

#2872. களர் உழுவாரே!

மூவணை ஏரும் உழுவது முக்காணி
தாமணி கோலித் தறியுறப் பாய்ந்திடும்
நாஅணைகோலி நடுவில் செறுஉழார்
காலணை கோலிக்களர்உழு வாரே.

இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்றும் உழுகின்ற ஏர்கள் ஆகும். இவை உழுகின்ற நிலம் முக்கோண வடிவில் உள்ள மூலாதாரம் என்ற நிலம். உழுது முடித்த பின்பு அவைகள் சுழுமுனையில் முதுகுத் தண்டு என்ற கயிற்றால் கட்டப் படும். ஞான சாதனை செய்கின்றவர்கள் நாக்குக்கு மேலே உள்ள பிரம்மப் புழையின் வழியே சிரசை அடைந்து அங்குள்ள சகசிரதளம் என்னும் வயலை உழ மாட்டார்கள். மூச்சுக்கு காற்றை அடக்கி ஹடயோகம் செய்து அவர்கள் விளைச்சலே இல்லாத நிலத்தில் வீணே பயிர் செய்கிறார்களே! இதனால் என்ன பயன் ?

#2873. கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள்

ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையோன் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடில்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே.

உடலில் ஆதாரங்கள் என்ற ஏழு கிணறுகள் உள்ளன. அவற்றில் நீர் இறைப்பதற்கு இடைகலை, பிங்கலை என்ற இரண்டு ஏற்றங்கள் உள்ளன. மூத்தவன்(சந்திரகலை) கிணற்றில் இருந்து நீர் இறைக்கின்றான். இளையவன்(கதிரவக்கலை) அந்த நீரைப் பாய்ச்சுகின்றான். அந்த நீர் பாத்தி(அக்கினிக் கலை) வழியாக வயலுக்குப் (சகசிரதளத்துக்குப்) பாயாமல் (காம வேட்கைகளைத் தணிப்பதில்) வீணாகிறது. இது விலைமகள் வளர்த்த கோழி அவன் ஆசைநாயகனுக்கு உணவாக மாறி அழிந்து விடுவதைப் போன்றது.

#2874. பட்டிப் பசுவே வாய்த்ததே.

பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோர்ஏழுளு ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே.

ஆன்ம தத்துவங்கள் என்ற இருபத்து நான்கு பசுக்கள் தம்மை நன்கு மேய்ப்பவர்கள் இல்லாமல் திரிகின்றன. இவை பால் தராத பட்டிப் பசுக்கள் ஆகும். வித்தியா தத்துவங்கள் என்னும் குட்டிப் பசுக்கள் ஏழும், சிவதத்துவங்கள் என்ற

குட்டிப் பசுக்கள் ஐந்தும் நிரம்பப் பாலைத் தரக் கூடியவை. என்றாலும் ஆன்மாவாகிய பனவனுக்குப் பால் தராத பட்டிப் பசுக்கள் தாம் வந்து வாய்த்தன!

#2875. ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள

ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒரு குடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவுஅறி யோமே.

பால் கறக்காத பசுக்கள் என்று இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்கள் உள்ளன. பால் ஊறும் சிவத்துவங்கள் என்ற ஐந்து பசுக்களும் உள்ளன. இவை தரும் பாலில் ஒரே ஒரு குடம் ஆன்மாவுக்குப் போதுமானது. ஆனால் சீவன் இடைகலை, பிங்கலை என்ற காற்றுப் பசுக்களைக் கறந்து உண்ணும் போது, அவற்றிலிருந்து மாறுபட்ட பிற சுத்த தத்துவங்களாகிய பசுக்களை ஆன்மாவால் உணர்ந்து கொள்ள முடியாது.

#2876. மொட்டாய் எழுந்தது செம்பால் மலர்ந்தது

தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டாய் எழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானே.

உயிரின் மனமண்டலத்தில், சென்னியில் உள்ள நிமிர்ந்த சகசிர தளத்தில், அரும்பு போலத் தோன்றிப் பின் செம்மையாக படர்ந்தது செம்மையான நாதம். மெய்ப்பொருள் ஆன சிவனைத் தனக்குள் நிலைபெறச் செய்த சீவன், சிவனைத் தனக்கு உரிமை ஆக்கிக் கொண்டது.

#2877. வெள்ளரி வித்து

அரிக்கின்ற நாற்றங்கால் அல்லல் கழனி
திரிக்கின்ற ஒட்டம்சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல்ஆன் கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே.

உடல் என்னும் வயலில், துன்பம் அளிக்கின்ற வினைப் பயன்கள் என்னும் பயிர் விளையும். இங்கு கீழ் முகமாகச் செல்லும் உயிர் மூச்சின் வழியை அடைக்க வேண்டும். அதை மேல் முகமாக்க வேண்டும். இதற்குச் சிவ தத்துவம் என்ற கறவை மாட்டை சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது சென்னி மேல்

விளங்குகின்ற விந்து மண்டலம் சிவப் பயிரை விளைவிக்கின்ற வித்தாக மாறிவிடும்.

#2878. செந்நெல் அறுக்கின்ற வாறே.

இடாக்கொண்டு தூவி எருவிட்டு வித்திக்
கிடாக் கொண்டு பூட்டிக் கிளறி முளையை
மிடாக் கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
கிடாக்கொண்டு செந்நெல் அறுக்கின்ற வாறே.

இடைகலை ஆகிய சந்திர கலையைத் தூண்டிவிட வேண்டும்; சிவ சிந்தனை என்ற எருவினைத் தூவி விட வேண்டும்; உணர்வு என்னும் விதையை அங்கு விதைக்க வேண்டும். இடைகலை, பிங்கலை என்ற இரு காளைகளைச் சேர்த்துக் கொண்டு உயிர் மூச்சின் கதியை மாற்ற வேண்டும்; தொண்டைச் சக்கரம் ஆகிய விசுத்தி என்னும் மிடாவில் ஞான சாதனை என்ற சோற்றைப் பதப்படுத்த வேண்டும். அதை மென்மையாக உண்ண வேண்டும். இடைகலை, பிங்கலை என்னும் இரு கிடாக்களைக் கொண்டு, உடல் என்னும் வயலில், சிவபதம் என்னும் செந்நெல்லை விளைவிக்கும் விதம் இதுவே.

#2879. விளைந்து கிடந்தது மேவு முக்காதமே

விளைந்து கிடந்தது மேலைக்கு வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து விளைந்து விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுமுக் காதமே.

சிவத்தை அடையும் வழியினை அறிந்து கொண்டவருக்குச் சிவம் நன்கு விளங்கும். அன்னாருக்கு விந்து மண்டலம் ஒரு காதத் தொலைவுக்குப் பெருகிக் கிடைக்கும். சிவத்தின் நினைவாகவே இருந்து, சிவத்தை அடைகின்ற நெறியினை அறிந்து கொண்டு, அதன் வழியே சிவத்தினை அடைபவருக்கு அது மும்மடங்கு ஆனந்தத்தைத் தரும்.

#2880. வளர் இளவஞ்சியின் மாய்தலும் ஆமே.

களர்உழு வார்கள் கருத்தை அறியோம்
களர்உழு வார்கள் கருத்திலும் இல்லைக்
களர்உழு வார்கள் களரில் முளைத்த
வளர்இள வஞ்சியின்மாய்தலும் ஆமே.

அடயோகம் ஒரு களர் நிலம் போன்றது. அதில் இருந்து கொண்டு சாதனை என்ற உழவினைச் செய்கின்றவர்களின் உள்ளக் கிடக்கையை நாம் அறியவில்லை.

"ஏன் களர் நிலத்தில் உழுது பயிர் செய்கின்றோம்?" என்று அவர்களும் சிந்தித்தது இல்லை. செய்யும் செயலைப் பற்றிய ஞானம் சிறிதும் இன்றி, இவ்வாறு வீண் சாதனையில் தன் காலத்தைக் கழிப்பவர்கள் களர் நிலத்தில் தோன்றி வளரும் இளமை வாய்ந்த வஞ்சிக்கொடி ஆகிய குண்டலினி சக்தியின் வயப்பட்டு காமத்துக்கு இரையாகி மாய்ந்து போவர்.

#2881. இல்லத்து இனிதிருந்தானே

கூப்பிடு கொள்ளாக் குறுநரி கொட்டகத்து
ஆப்பிடு பாசத்தை அங்கியுள் வைத்திட்டு
நாட்பட நின்று நலம்புகுந்து ஆயிழை
ஏற்பட இல்லத்து இனிதிருந்தானே.

சீவனுக்குள் உள்ள சிவனின் நாதத்தைச் சீவனுக்கு விளங்கவிடாமல் வஞ்சனை செய்து தடுப்பது காமவாயு என்னும் ஒரு சிறு நரி. அது தங்கும் இடம் விந்துப்பை என்னும் கொட்டில். அந்தக் கொட்டிலில் ஏற்றிய சிவ அக்கினியில் சீவன் தன் ஆசா பாசங்களை இட்டு எரிக்க வேண்டும். நாத உபாசனை செய்ய வேண்டும். அப்போது நன்மை தரும் ஒளி பெருகும். அங்கு சக்தி தேவி வந்து பதிவாள். அவளுடன் சிவனும் வந்து அந்த உள்ளத்தில் குடியேறுவான்.

#2882. அமிர்தம் பொழியவைத் தானே.

மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத் தானே.

தலை என்னும் மலையின் மீது அங்குள்ள ஒளிக் கதிர்கள் கனமழையைப் போலப் பரவும். பிராணன் என்ற மான்கன்று உயரத் தாவித் சீவனின் தலையின் மத்தியில் சென்று மோதும். அங்கு ஊர்த்துவ சகசிரதளம் என்ற ஆயிரம் இதழ்த் தாமைர ஒரு குலை போலப் பழுத்து நிற்கும். அந்தக் குலையில் இருந்து செழித்த சிவக்கனி கீழே உதிர்ந்து விடும். உதிர்ந்த சிவக்கனி கொல்லன் உலையில் உருக்கிய இருப்பு போன்று ஒளிரும். அது சீவனின் மார்புப் பிரதேசத்துக்கு மேலே அமுதத்தைப் பொழியும்

#2883. பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

ஆன்மா என்னும் பார்ப்பானின் வீட்டில், ஐம்பொறிகள் என்ற ஐந்து பசுக்கள் உள்ளன. அவைகளை மேய்ப்பவர் என்று யாரும் இல்லை. அதனால் அவை வெறித்துத் திரிகின்றன. அவைகளை மேய்ப்பதற்கு ஒருவர் இருந்து, அவற்றின் உலக இன்பம் என்ற வெறியும் அடங்கினால் அப்போது அந்த ஐந்து பசுக்களும் அந்தப் பார்ப்பானுக்குப் பேரின்பம் என்ற பாலைச் சொரியும்.

#2884. காமம் அழிய ஞானம் ஒளிரும்

ஆமாக்கள் ஐந்தும் அரியேறு முப்பதும்
தேமா இரண்டொடு திப்பிலி ஒன்பதும்
தாமாக் குரங்கொளில் தம்மனத் துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் றாரே.

பஞ்சப் பிராணன் என்ற ஐந்து காட்டுப் பசுக்கள், 24 ஆன்ம தத்துவங்களுடன், புருடன் நீங்கலாக மற்ற 6 வித்தியா தத்துவங்கள் சேர்ந்த முப்பது சிங்கங்கள்; குற்றமற்ற பக்தி மார்க்கங்கள் ஒன்பது; இவை அனைத்தும் சீவனுக்கு உரியனவாக அடங்கி விட்டால் அந்த சீவனின் உள்ளத்தில் காமம் முதலிய குறைகள் வளர்ச்சி அடையா. இந்த முறையில் தம் காமத்தை அழிப்பவர் தம் ஞான ஒளியை வளர்ப்பார்.

விளக்கம்:

பஞ்சப் பிராணன்கள் 5:-
பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்

ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு:-
பஞ்ச பூதங்கள் (நிலம், நீர், நெருப்பு, வளி, வெளி)............................5
பஞ்ச தன்மாத்திரைகள் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம்)............5
பஞ்ச ஞானேந்திரியங்கள் (கண், நாசி, நாவு, செவி, தோல்).............5
பஞ்ச கர்மேந்திரியங்கள் (வாக்கு, பாணி, பாதம், குய்யம், குதம்).....5
அந்தக் கரணங்கள் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்)....................4

புருடன் நீங்கலாக வித்தியா தத்துவங்கள் ஆறு :-
1. காலம், 2. நியதி, 3. கலை, 4. வித்தை, 5. ராகம், 6, மாயம்

பக்தி மார்க்கங்கள் ஒன்பது:-
சிரவணம், கீர்த்தனை, ஸ்மரணம்,சேவை, அர்ச்சனை, அடிமை, வந்தனம், சாக்கியம், ஆன்ம நிவேதனம்

#2885. மலராத பூவின் மணம்

எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெறிந்திருந்து ஓத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே.

எழுதப் படாத மறைநூலில் ஒளிந்திருக்கும் பரம்பொருளைத் தெருளாத கன்னியாகிய குண்டலினி சக்தி சீவனின் சென்னியை அடைந்து எழுப்பினாள். அங்கு மலராத சகசிரதள மலரில் தேன் போன்றை ஆனந்தம் விளைந்தது. உடலுடன் பொருந்தி இருப்பதைத் துறந்து விட்ட ஆன்மா ஆகிய வண்டு அந்தத் தேனைப் பருகி இன்பத்தில் திளைத்தது.

#2886. வேகின்ற கூரை!

போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்தும்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
ஆநின்ற வைங்கூழ் அவையுண்ணும் ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரே.

உடலில் இருந்து வெளியே செல்லும் அபான வாயுவும், உடலின் உள்ளே புகுகின்ற பிராணவாயுவும் ஒன்றாகக் கூடி இருக்கின்ற உடல் ஒரு நாவல் மரம் போன்றது. அது தருகின்ற நாவற் பழம் உலக இன்பம் என்னும் விஷய போகம். இதைச் சுவைக்கத் துடிப்பவர்கள் ஐம்பொறிகள் என்னும் ஐவர். உயிர் பிரிந்ததும் வெந்துவிடும் கூரை போன்ற மனித உடலில் இந்த ஐவரும் இங்கனம் மகிழ்ச்சியுடன் திளைக்கின்றனரே! என்ன இவற்றின் விந்தைச் செயற்பாடு!

#2887. மூங்கிலும், வேம்பும்!

மூங்கில் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினில் சார்ந்து கிடந்த பனையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பார்இன்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே.

சீவனின் உள்ளம் என்ற மூங்கில் முளையில் இருந்து வைராக்கியம் என்ற வேப்பமரம் வளர்ந்தது. அது முதுகுத்த தண்டு என்ற பனை மரத்தைச் சார்ந்து உள்ளது. அந்தப் பனை மரத்தின் கீழே குண்டலினி என்னும் பாம்பு சுருண்டு கிடக்கின்றது. சுருண்ட குண்டலினிப் பாம்பை எழுப்பிப் பனை மரத்தின் மேலே செலுத்தினால் சீவன் அமுதம் உண்டு மகிழலாம். அது நிகழாவிட்டால் வைராக்கியம் என்ற வேம்பு வெடித்து முற்றிலுமாக வீணாகிவிடும்.

#2888. ஐவர் அமர்ந்து நின்றாரே

பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோதகர் ஈ ரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்து நின் றாரே.

தச நாடிகள் என்ற பத்துப் பருத்த புலிகளும்; ஐம்பூதங்கள், ஐம்புலன்கள், பஞ்சதன்மாத்திரைகள் என்ற பதினைந்து யானைகளும்; ஞானேந்திரியங்கள் என்று ஐந்து வித்தகர்களும், பத்து வாயுக்கள் என்னும் வினோதகர்ளும், முக்குணங்கள் என்ற மூவரும், மருத்துவர்கள் அறுவரும், பொருந்தி இருக்கும் மனித உடல் ஐந்து மாறுபட்ட நிலைகளில் அமையும்.

விளக்கம்:
1). பத்து நாடிகள்:
இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு
2). ஐம் பூதங்கள்:-
விண், மண், தீ, நீர், காற்று.
3). ஐந்து தன்மாத்திரைகள்:-
சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்
4). ஐந்து ஞானேந்திரியங்கள்:-
மெய், வாய், கண், மூக்கு, செவி,
5). பத்து வாயுக்கள் :-
பிராணன், அபானன், உதானன், சாமானன், வியானன், நாகன், கூர்மன், கிரிதரன், தேவதத்தன், தனஞ்சயன்.
6). மருத்துவர் அறுவர்:-
கற்றல், பிதற்றல், தேடல், கூடல், வாழ்வு, தாழ்வு.
7). ஆன்மாவின் ஐந்து நிலைகள்:-
நனவு, கனவு, சுழுத்தி, துரியம், துரியாதீதம்,

#2889. இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்

இரண்டு கடாவுண்டு இவ்வூரின் உள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே.

மனித உடல் என்ற ஊர். அதில் உழவைச் செய்வது உசுவாசம், நிசுவாசம் என்ற இரண்டு எருதுகள். இந்த இரண்டு எருதுகளையும் செலுத்துபவன் சீவன் என்னும் ஒரே தொழும்பன். அந்தத் தொழும்பன் தன் நிலையை அறிந்து கொண்டு,

இந்த இரண்டு கடாக்களையும் செயல்படாமல் நிறுத்தி விட்டால், அப்போது போக்கும் இன்றி, வரவும் இன்றி அந்த இரண்டு எருதுகளும் ஒரே எருதாக மாறிவிடும்.

#2890. நித்தம் பொருது நிரம்பநின் றாரே.

ஒத்த மனக்கொல்லை உள்ளே சமன்கட்டிப்
பத்தி வலையில் பருத்தி நிறுத்தலால்
முத்தம் கயிறாக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பநின் றாரே.

விருப்பு, வெறுப்புக்களை அகற்றி மனம் என்ற நிலத்தைச் சமன் செய்ய வேண்டும். பக்தி என்ற வலையில் மனத்தைப் பொருத்த வேண்டும். பருத்தி போன்ற தூய வெண்ணிற ஒளியைத் தலையின் மேலே விளங்கச் செய்ய வேண்டும். அதுவே சீவனை முக்திக்கு அழைத்துச் செல்லும் ஏணியாகிவிடும். படைத்துக் காத்து அழிக்கும் மும் மூர்த்திகளின் பிடியில் உள்ள உடலையே தன் இடமாகக் கொண்டு சீவன் சாதனை செய்ய வேண்டும். அத்தகைய சீவர்கள் முழுமை பெற்று விளங்குவர்.

#2891. கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே.

கூகையும் பாம்பும் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுகல் உறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே.

உருவங்களும் அவற்றின் பொருட்களும்:-

கூகை = கோட்டான் = அறியாமை
பாம்பு = காமம்
கிளி = தர்மம்
பூஞை = பூனை = அதர்மம்
நாகணவாய்ப் பறவை = சிற்றறிவு
எலி = சீவன்

கோட்டான், பாம்பு, கிளி, பூனை, நாகணவாய்ப் பறவை இவை அனைத்தும் மனமண்டலத்தில் விரோத்ததுடன் வாழ்ந்து வருகின்றன. நாகணவாய்ப் பறவையைக் கோட்டான் அணுகும்போது அதைக் கண்ட எலி சத்தம் எழுப்பி நாகணவாய்ப் பறவையை எச்சரிக்கை செய்யும்.

#2892. புலைக்குப் பிறந்தவை போகின்ற வாறே.

குலைக்கின்ற நன்னகை யாம்கொங்கு உழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்
உலைக்குப் புறமெனில் ஓடும் இருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்ற வாறே.

குலைத்து நிற்கும் முக்குணங்களைக் கலக்கி விட்டால் வெள்ளெலி ஆகிய சீவன் நிலை பெற்று நிற்காமல் அந்த முக்குணங்களின் வயப்பட்டு நிற்கும். அந்தச் சீவன் குண்டலினியின் நெருப்பில் இருக்கும் பொழுது சீவனைப்பற்றி இருந்த முக்குணங்களும் ஓடி மறைந்து விடும். அங்ஙனம் இல்லை என்றால் முக்குணங்கள் அகலாமல் அங்கேயே இருக்கும். சீவனிடம் உடல் பற்று இருக்கும் வரையிலும் முக்குணங்களின் தாக்கமும் இருக்கும்.

#2893. மூடு புகாவிடின் மூவனை யாமே.

காடுபுக் கார்இனிக் காணார் கடுவெளி
கூடுபுக்கு ஆனது ஐந்து குதிரையும்
மூடுபுக்கு ஆனது ஆறுள ஒட்டகம்
மூடு புகாவிடின் மூவணை யாமே.

அறியாமையில் அழுத்துகின்ற ஆன்மத் தத்துவங்களின் காட்டில் புகுந்துவிட்டவர் சிவபூமியைக் காண மாட்டார். அங்ஙனம் காண இயலாதபடி மறைத்து நிற்பவை ஐம்பொறிகளும், ஆறு மனமலங்களும் ஆகும். இந்த மறைப்பினை அகற்றி விட்டால் சீவன் சீவதுரியம், பரதுரியம், சிவ துரியம் என்ற மூன்றையும் காண இயலும்.

#2894. ஆறைக் குழியில் அழுந்துகின் றாரே.

கூறையும் சோறும் குழாயகத்து எண்ணெயும்
காறையும் நாணும் வளையலும் கண்டவர்
பாறையில் உற்ற பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றாரே.

வண்ண ஆடைகள், நறுமணப் பொடிகள், மூங்கில் குழாயில் வைக்கப்பட்ட வாசனை எண்ணெய், கழுத்தில் காறை, இடையின் நாண், கையில் வளையல்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட பெண்களைக் கண்டு மோகம் கொண்டவரின் நிலை என்ன ஆகும்? பாறையின் மீது வைக்கப்பட்ட ஆடை பறந்து செல்வதைப் போல இவர்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சியம் என்ற ஆறு குழிகளில் அழுந்தி விடுவர்.

#2895. அவர் ஊர் அறியோமே!

துருத்தியுள் அக்கரை தோன்றும் மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்திஉள் நின்ற மலையைத் தவிர்ப்பாள்
ஒருத்திஉள் ளாள்அவர் ஊர்அறி யோமே.

துருத்தி போன்றது மனித உடல். அதன் தலை ஒரு மலை போன்றது. அந்த அறிவு வானத்தில் நிகழுகின்ற விருத்தியினைக் கண்காணிக்க, மூன்று வேளைகளிலும் ஞான சாதனை செய்பவர் அதனை நாடுவர். அவர்களை துன்புறுத்த மலை போன்ற தீவினைகள் ஒன்று கூடி வரும். அவற்றைத் தடுத்துப் பொடியாக்கும் பராசக்தி ஒருத்தி உள்ளாள். அந்த சக்தியின் துணை இன்றி அந்த சிவனது ஊரைச் சென்று அடைய முடியாது.

#2896. இருந்திய பேற்றினில் இன்புறு வாரே.

பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் போலுரு வாகும்
இருந்திய பேற்றினில் இன்புறு வாரே.

அறம் என்ற கிளியும், பாவம் என்னும் பருந்தும் சேர்ந்து சீவனின் வாழ்வில் இன்பம், துன்பம் என்ற மேளங்களை மாற்றி மாற்றிக் கொட்டும். இன்பத்தில் தான் கொண்டிருந்த பற்றினையும், துன்பத்தில் தான் கொண்டிருந்த வெறுப்பினையும் துறந்து விட்ட சீவன், ஒரு திருந்தி விட்ட சீவன். இந்தச் சீவன் சிவனுடன் பொருந்தி இணையும். அதனால் அது வான்மயமான அற்புத உடலைப் பெறும். அதன் பின்பு அந்தச் சீவன் சிவானந்தத்தை அனுபவித்து அதில் திளைத்திருக்கும்.

#2897. பயன் எளிதாமே.

கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக்கு உண்டி அறுக்குறில் என்ஒக்கும்?
சூடுஎரி நெய்யுண்டு மைகான்று இடுகின்ற
பாடுஅறி வார்க்குப் பயன்எளி தாமே.

கூடுகின்ற பறவை இறையைக் கொத்தித் தன் இணைப் பறவைக்கு ஊட்டுவதைப் போன்று எளிதானதே மூலத் தீயில் நெய் சொரிந்து அதனைச் சூழ்ந்துள்ள இருளை போக்க அறிந்த சீவனுக்குச் சிவனை அடைவதும்!

#2898. குலை இல்லை கொய்யும் மலருண்டு

இலைஇல்லை பூவுண்டு இனவண்டு இங்கில்லை
தலைஇல்லை வேர்உண்டு தாள்இல்லை பூவின்
குலைஇல்லை கொய்யும் மலர்உண்டு சூடும்
தலைஇல்லை தாழ்ந்த கிளைபுல ராதே.

இலைகள் இல்லை, வண்டுகள் மொய்க்கவில்லை ஆயினும் அங்கு ஒரு மலர் உண்டு. தலையும் இல்லை, தாளுமில்லை ஆயினும் அதற்கு வேருண்டு. குலை இல்லை எனினும் கொய்யும் மலர் அங்கு உண்டு. தலை இல்லை மலர் சூட எனினும் தாழ்ந்த அந்தக் கிளை வாடாதே.

#2899. நக்கரை வாழ்த்திப் பயன் கொள்வார்

அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
நக்கரை வாழ்த்தி நடுவே பயன்கொள்வர்
மிக்கவர் அஞ்சு துயரமும் கண்டுபோய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே.

சகுணமாகிய கரையைக் கடந்து அக்கரையில் நிற்கும் நிர்குணப் பிரமம் ஆகிய ஆலமரத்தைக் காண்பவர், நிர்குணன் ஆகிய சிவபெருமானை வணங்கிப் பயன் அடைவர். மக்களில் சிறந்தவர்கள் ஆகிய அவர்கள் தாம் படும் ஐந்து விதத் துன்பங்களையும் துடைக்கும் நிர்குணப் பிரம்மத்தின் தாள் பணிந்து அதனால் சிறந்த பயன் அடைவர்.

#2900. கூப்பிட மீண்டு கூரை கொண்டார்

கூப்பிடும் ஆற்றிலே வன்காடு இருகாதம்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றார்உளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிட மீண்டதோர் கூரை கொண் டாரே.

அனைவரும் விரும்பும் இல்லறம் என்ற நல்லறவழியில் அஞ்ஞானம் என்ற காடு இருகாத தூரம் நீண்டுள்ளது. அந்தக் காட்டின் வழியே செல்பவரைக் கட்டிப் போடுவதற்கு அங்கு ஐம்புலன்கள் என்ற கள்வர் உள்ளனர். சிவ ஒளி என்ற வெள்ளை வீரன் அந்தக் கள்வர்களை ஒலி எழுப்பி விரட்டி விட்டான். அப்போது சீவன் பத்திரமாகத் தலைமேல் உள்ள சகசிரதளத்தைச் சென்று அடைந்தது.

#2901. எட்டிப் பழத்துக்கு இளைக்கின்றவாறே.

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக்கு இளைக்கின்ற வாறே.

இல்லறம் என்னும் கடலில் அறிவு, அறியாமை ஆகிய கொட்டியும், ஆம்பலுலும் பூத்து நிற்கின்றன. உலகில் வலம் வரும் நாம, ரூப பேதங்கள் வெட்டியையும், வேம்பையும் போலப் பொல்லாத சுவை தருவன. மனிதன் அவற்றைத துறந்துவிட்டு சத்து, சித்து, ஆனந்தம் என்னும் வாழைக்கனி, கற்கண்டு, தேன் இவற்றைக் கலந்துண்ண வேண்டும். இதை விடுத்து எட்டியைப் போலக் கசக்கும் உலக விஷயங்களை நாடுபவர்கள் கெடுதல் அடைவர்.

#2902. சக்தியின் அருளால் சீவன் இன்பம் அடையும்

பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலம் உண் டானும்
கடைவண்டு தான் உண்ணும் கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்றது இன்பமும் ஆமே.

ஆண் வண்டும், பெண் வண்டும் போல இணையாக வண்ணக் குடையின் கீழ் அமர்ந்துள்ளனர் சிவனும் சக்தியும். பாசத் தளைப்பட்டுப் பரிதவிக்கும் சீவன், சக்தியின் கருணையால் கிடைக்கும் அமிர்தத்தைப் பருகுகின்றது. அதில் சீவன் இன்பம் பெறுகின்றது.

#2903. கொல்லையில் மேயும் பசுக்கள்

கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்வதன்
எல்லை கடப்பித்து இறையடிக் கூட்டியே
வல்லசெய்து ஆற்றல் மதித்தபின் அல்லது
கொல்லைசெய் நெஞ்சம் குறியறி யாதே.

கொல்லை புறத்தில் ஆசாபாசங்கள் வசப்பட்டு மேய்கின்ற ஆன்மாக்களாகிய பசுக்களை என்ன செய்ய வேண்டும்? அவைகளைக் கொல்லையின் எல்லையைக் கடக்கச் செய்ய வேண்டும். இறைவன் அடிகளை நோக்கிச் செலுத்த வேண்டும். அவைகளைத் திருத்தி நல்வழிப் படுத்த வேண்டும். இங்கனம் செய்யாத வரையில் அவைகளின் எண்ணங்கள் கொல்லைப்புறத்தில் தங்களின் ஆசாபாசங்களுடனேயே இருந்து கொண்டு வளைய வரும்.

#2904. சிவக்கனியை அடையலாம்

தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரில் குவளை எழுந்தது
விட்டத்தின் உள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தில் இட்டதோர் கொம்மட்டி யாமே.

வலக்கண் என்ற அகன்ற இடத்தில் கதிரவக் கலை என்கின்ற அழகிய செந்தாமரை மலர்ந்தது. இடக்கண் என்ற நீர் நிலையில் சந்திரகலை என்னும் கருங்குவளை மலர்ந்தது. மூலாதாரத்தில் இருந்து சுழுமுனை வழியே மேலெழுந்துவரும் அக்கினிக் கலையுடன் இந்த கதிரவக் கலை, சந்திர கலை இரண்டையும் இணைக்க வல்லவருக்குச் சிவக்கனி என்ற அரிய, பெரிய, இனிய கனி கிடைக்கும்.

#2905. மனை புகலாமே!

ஆறு பறவைகள் ஐந்தகத்து உள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே.

ஐம்பூதங்களால் ஆன உடலில் ஆறு பறவைகள் உள்ளன. அவையே காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம். இவைகள் தலையின் மீது உள்ள நூறு நாடிகள் என்னும் நூறு பறவைகளால் உண்ணப் படுகின்றன. ஆயினும் சீவன் உடலின் ஏழு ஆதாரங்களையும் ஏறிக் கடந்து சென்று விட்டால் உறுதியாகச் சிவன் உறையும் மனையில் புகுந்துவிடலாம்.

#2906. ஒட்டனஞ் செய்தால் ஒளி உண்டாகும்

கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள்
வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்
கட்டனஞ் செய்து கயிற்றால் தொழுமியுள்
ஒட்டனஞ் செய்தொளி யாவர்க்கு மாமே.

சீவன் குடைதல் போன்ற செயல்களைச் செய்து இன்பத்தில் திளைப்பது பெண்ணின் யோனி என்ற குளத்தில். அதில் சீவனுக்கு இன்பம் ஊற்றெடுத்துச் சுரக்கும். சீவன் தன் வீரியத்தை வெளியே விடாமல் தடுப்பதற்கு அதைச் சுழுமுனையில் கட்டி உடலினுள் நிலை பெறச் செய்ய வேண்டும். இதைச் செய்பவருக்கு உடலில் ஒளி உண்டாகும்.

#2907. அது ஆலயம் ஆகும்!

ஏழு வளைகடல் எட்டுக் குலவரை
யாழும் விசும்பினில் அங்கி மழைவளி
தாழு மிருநிலந் தன்மை யதுகண்டு
வாழ நினைக்கில தாலய மாமே.

உலகைச் சுற்றியுள்ளன ஏழு கடல்கள்; மேன்மை வாய்ந்த எட்டு மலைகள்; தீ, நீர், காற்று, நிலம் என்ற அனைத்தையும் தங்கி நிற்பது வானம் என்ற உண்மைத் தன்மையை அறிந்து கொண்டவர் நீண்ட காலம் வாழ விரும்பினால் அந்த வானமே அவருக்கு இருப்பிடமாகிய ஆலயமாகும்.

#2908. மனமும், பொறிகளும்

ஆலிங் கனஞ்செய்து அகம்சுடச் சூலத்துச்
சால்இங்கு அமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோல்இங்கு அமைத்தபின் கூபப் பறவைகள்
மால்இங்கன் வைத்துஅது முன்பின் வழியே.

ஆலிங்கனம் செய்து, அகம் சூடேற, ஆண் பெண் உறவாடிக் கருப்பையினுள் கருவை உருவாக்கினர். பின்னர் அவர்கள் காமச் செயலைக் கைவிட்டனர். கரு உருவாகிக் காமம் கழிந்த பின்பு, பொறிகள் கொண்டிருந்த மயக்கம் தீர்ந்தது. பொறிகளின் வழியே சென்று கொண்டு இருந்த மனம், மீண்டும் பொறிகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டுத் தான் அவற்றுக்கு முன்பாக நின்றது!

#2909. ஈசன் அருளிய இட்டம் வலிது!

கொட்டுக்கும் தாலி இரண்டே இரண்டுக்கும்
கொட்டுக்கும் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்கும் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளே.

திருமணச் சடங்குகளில் முக்கியமான இரண்டு மேளமும், தாலியும் ஆகும். இந்த இரண்டைக் காட்டிலும் வலியது களவு வழி அன்பாகிய பாரை என்பர். இந்த மூன்றிலும் வலியது எது என்று அறிவீரா? இறைவன் அருளால் உண்டாகும் அன்பே இந்த மூன்றைக் காட்டிலும் வலிமை வாய்ந்தது.

#2910. உருவம் பொன்னாமே!

கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பான் ஒருவன்
மறையொன்று கண்ட துருவம் பொன்னாமே.

மீனைக் கண்டவர்கள் நேரம் போவதை அறியாமல் அதையே பார்த்துக் கொண்டு நிற்பார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் உலகில் பிறவி எடுத்துக் கொண்டே இருப்பார்கள். சிவம் என்னும் முயலைப் பெற விரும்புபவர்கள் சரியை நெறி, கிரியை நெறி, ஞான நெறி என்ற மூன்றில் ஒன்றைப் பற்றிக் கொண்டு சிறிது சிறிதாக ஞானம் அடைந்து உய்வர். வீண் விதண்டாவாதம் செய்பவன் சிவத்தை அடைய முடியாது. மறைகளின் மெய்ப்பொருளாகிய சிவத்தைக் கண்டு கொண்டவர் மேனி தூய பொன் போலாகிவிடும்!

#2911. நாரை போலல்ல நாதனார்!

கோரை எழுந்து கிடந்த குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படிகின்றாற் போலல்ல நாதனார்
பாரை கிடக்கப் படிகின்ற வாறே.

உள்ளம் என்ற குளத்தில் ஆசை என்னும் கோரைப் புற்கள் மண்டிக் கிடந்தன. பாசம் என்னும் ஆரையும் அதில் நீண்டு நிறைந்து இருந்தது. ஆரையும், கோரையும் நிரம்பி இருக்கும் குளத்தில் மீன்பிடிக்கும் நாரை போன்றவன் அல்ல நம் நாதன்! அவன் சலனம் அற்ற, தெளிந்த நீர் நிலை போன்ற, தூய உள்ளத்தில் சீவன் என்னும் மீனை பிடிப்பவன் ஆவான்.

#2912. ஒல்லை கடந்து ஊர் புகலாம்

கொல்லைமுக் காதமும் காடுஅரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்காது இயங்க வல் லார்கட்கு
ஒல்லை கடந்துசென்று ஊர்புக லாமே.

கொல்லை முக்காதம் பரந்து கிடக்கின்றது. காடு அரைக்காதம் பரவிக் கிடக்கின்றது. எல்லைகள் மயங்கி கிடக்கின்றன இந்த இரண்டும்.! எல்லை மயங்காது இயங்க வல்லவர் மட்டுமே இங்கு ஒல்லையைக் கடந்து தான் செல்ல வேண்டிய ஊரைச் சென்று அடையலாம்.

#2913. வளர் சடையான் வழுவாது போவான்.

உழவொன்று வித்து ஒருங்கின காலத்து
எழுமழை பெய்யாது இருநிலச் செல்வி
தழுவி வினைசெய்து தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யோனே.

அகண்ட சிவத்தை அடைவிக்கும் உழவு என்பது சீவன் செய்யும் தவம் ஆகும். அந்தத் தவத்தால் சீவனின் உள்ளம் ஒருமை அடையும். எண்ணங்கள் என்னும் மழை அங்கு பெய்யாது. சிவ பூமிக்குரிய சக்தி பொருந்தும். மலபரிபாகம் உண்டாகும். வினைகள் தம் போகத்தைத் தாரா. அங்கு வளரும் ஒளிக் கதிர்களை உடைய சிவன் வந்து பொருந்தி விளங்குவான்.

#2914. பொதுங்கிய ஐவர்

பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
மதுங்கிய வார்கனி ஆரமுது ஊறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத் தானே.

சீவன் எந்தத் தொழிலும் செய்யாமல் இருந்தாலும் கதிரவனின் இயக்கம் பன்னிரண்டு ராசிகளிலும் பொருந்தி இருக்கும். ஆனால் சீவன் தன் உடலைக் கடந்து விடும் பொழுது திங்கள் மண்டலத்தில் ஒளி பெருகும். சிவக்கனி தேன் கசிவது போன்ற இன்பத்தைத் தரும். அப்போது தன்னை வருத்தி வந்த ஐம்பொறிகள் செயல்படாதவாறு சீவன் அவற்றை அடக்கி ஆள்வான்.

#2915. ஆலிப்பழம் போல் அளிக்கும் அப்பு

தோணியொன்று ஏறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபம் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக்கு இறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்து
ஆலிப் பழம்போல் அளிக்கின்ற அப்பே.

பிரணவம் என்பது ஒரு தோணி. சீவன் அதில் ஏறிக்கொண்டு அறிவு வானம் என்னும் கடலில் செல்லும். அது செய்யும் வணிகம் தன்னிடம் இருக்கும் இருளை விடுவதும் அதற்குப் பதிலாக ஒளியைப் பெறுவதும் ஆகும். அது விரும்புவது தான் விருத்தியை அடைவது மட்டுமே. அப்போது மாயா காரியம் ஆகியவற்றைச் சீவன் விட்டு விடுவான். குளிர்ந்த சந்திர மண்டலம் தரும் ஒளி தேனைச் சிந்தும் கனியைப் போல இனிக்கும். சீவன் அந்த ஒளி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து இருப்பான்.

#2916. நடுவு நின்றாரே!

முக்காதம் ஆற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலம் காய்த்தன
பக்கனார் மிக்கார் படங்கினார் கன்னியர்
நக்கு மலருண்டு நடுவுநின் றாரே.

சத்துவம், ராஜஸம், தாமசம் என்ற முக்குணங்களால் அமைக்கப்பட்டுள்ள ஓர் ஆற்றில் நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று வாழைகள் உள்ளன. செந்நிறம் கொண்ட அக்கினி மண்டலத்தின் காரணமாக விளையும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் அங்கு நிறைந்திருந்தன. சிவபெருமானின் மீது அன்புகொண்டவர்கள் இவற்றிலிருந்து விலகி வாழ்பவர். மெய்போலப் பொய்பேசும் அழகிய கன்னியரிடம் காமச் சுவை என்ற மணம் மிகுந்த மலரை விருப்பி அனுபவித்தாலும், இவர்கள் மனம் மட்டும் சுழுமுனையைப் பற்றியே நிற்கும். ஒரு போதும் அதை விட்டு அகலாது.

#2917. வலம்புரி வாய்த்தது!

அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின் கண் முத்தலை மூங்கில்
கொடியும் படையும் கோட்சரன் ஐஐந்து
மடியும் வலம்புரி வாய்த்தது அவ் வாறே.

ஆத்தி மரம் போன்ற சீவனின் முதுகுத் தண்டுக்கு அடியாக இருப்பது கீழேயுள்ள மூலாதாரம். முடியாக இருப்பது சிரசு. அதன் உச்சியில் மூங்கிலின் முக்கண்கள் போல மூன்று கலைகள் அமைந்துள்ளன. அவை முறையே கதிரவக் கலை, திங்கள் கலை, அக்கினிக் கலை ஆகும். சாதகனின் பயிற்சியால் வளர்ச்சி அடைந்து இவை மூன்றும் ஒன்றாகிவிடும். அப்போது கொடி, படை போலச் சீவனுக்குத் துன்பம் தருகின்ற ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் அழிந்து போகும். அங்கு வலம்புரிச் சங்கத்தின் நாதம் ஒலிக்கும்.

#2918. பன்றி, பாம்பு, பசு, வானரம்

பன்றியும் பாம்பும் பசுமுசு வானரம்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
குன்றாமை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறே.

மனித மனம் பன்றியைப் போலத் தூய்மை இன்மையில் விருப்பம் கொண்டது. பாம்பு போலப் பகைமையில் சீற்றம் கொண்டது. பசு போலத் தீமையில் அடக்கம் கொண்டது. வானரம் போல அடங்காமல் திரிவது. இத்தகைய

உள்ளத்துடன் பொருந்தாமல் மனிதன் சிவத்துடன் பொருந்த வேண்டும். தராசுத் தட்டுக்கள் போல இவை இரண்டும் சமம் ஆனால் அந்த சீவனின் குறைவுகள் குறைந்து அதன் நிறைவுகள் வளரும்.

#2919. கட்டு வீட்டாருக்கு அன்றிக் காண ஒண்ணாது!

மொட்டித்து எழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட்டு ஓடின் மலர்தலும் காணலாம்
பற்றுவிட்டு அம்மனை பாழ்பட நோக்கினால்
கட்டுவிட் டார்க்கு அன்றிக் காணஒண் ணாதே.

சீவனின் தலையில் சகசிரதளத் தாமரை மொட்டு ஒன்று உள்ளது. பாசத்தில் இருந்து விடுபட்ட சீவன், அந்த ஆயிரம் இதழ்த் தாமரை மொட்டு மேல் நோக்கி விரிவதைக் காண இயலும். உடல் பற்றினைத் துறந்து விட்டுத் தத்துவங்களின் கூட்டமாகிய உடல் கெடும்படிச் செய்து, அதனை ஒளியாகக் கண்டு, தம் உள்ளத்தில் குடியேறிய பற்றுக்களை அறவே துறந்தவர்களால் மட்டுமே அந்த ஆயிரம் இதழ்த் தாமரை விரிவதைக் காண இயலும்.

#2920. நீரின்றிப் பாயும் நிலத்தினிற் பச்சையாம்

நீரின்றிப் பாயும் நிலத்தினிற் பச்சையாம்
யாவரும் என்றும் அறியவல் லார்இல்லை
கூரும் மழைபொழி யாது பொழிபுனல்
தேரின் இந் நீர்மை திடரின்நில் லாதே.

சீவனின் சென்னியில் உள்ள சகசிரதளம் என்னும் நிலத்தில் நீர் பாயாமல் சீவனின் உணர்வு பாயும். ஞான சாதனை செய்பவருக்கு இந்த நிலம் மரகத்தைப் பச்சை நிறத்தில் இருக்கும். இதைக் கண்டு அறிந்தது கொள்ள வல்லவர் எவரும் இலர். மிகுந்த மழையினால் பெருகும் நீர் போலச் சீவனின் உணர்வினால் பெருகும் இந்த நீர், ஐம்பொறிகளின் வசப்பட்ட மனம் என்ற திடர் நிலத்தில் பொருந்தி இருக்காது! அங்கு தங்காது.

#2921. நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்

கூகை குருந்தமது ஏறிக் குணம் பயில்
மோகம் உலகுக்கு உணர்கின்ற காலத்து
நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனும் ஆகின்ற பண்பனும் ஆமே.

இருளில் மூழ்கி இருக்கும் கோட்டானைப் போலச் சீவன் அறியாமை என்ற இருளில் மூழ்கிக் கிடைக்கும். குருவின் உபதேசத்தால் உண்மையை உணர்ந்து

கொண்ட சீவன் ஒளிமயமான குருந்தின் மீது ஏறும். இந்த உலகத்துக்குக் காரணம் முக்குணங்கள் கொண்ட மாயை என்ற உண்மையைச் சீவன் அறிந்து கொள்ளும். மண்டலமிட்ட பாம்பு போன்ற குண்டலினி சக்தி உடலின் ஆதாரங்களின் வழியே மேலே ஏறிச் செல்லும். அது சென்னியில் உள்ள மேல் நோக்கிய சகசிரதளத்தில் சென்று பொருந்தும். அங்கு நாதத்தை எழுப்பும்! அதனால் பொறிகளின் வசப்பட்டுப் பிறந்து இறந்து கொண்டிருந்த சீவன், பிறவிப் பிணியைத் துறந்துவிட்டுத் தானும் சிவம் ஆகிவிடும்.

#2922. வாழையும் சூரையும் வன்துண்டம் செய்மின்!

வாழையும் சூரையும் வந்திடம் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையும் சூரையும் வன்துண்டம் செய்திட்டு
வாழை இடம்கொண்டு வாழ்கின்ற வாறே.

சீவனின் இருவினைப் பயன்களாகிய வாழையைப் போன்ற இன்பமும், சூரயைப் போன்ற துன்பமும் தாமே வலிந்து வந்து சீவனைச் சேரும். "இன்பத்தை விடவும் துன்பம் வலியது!" என்று உரைப்பர். "இன்பம், துன்பம் என்ற இரண்டும் சீவன் கொண்டுள்ள உடல் பற்றினால் விளைகின்றவை!" என்ற உண்மையைச் சீவன் புரிந்து கொள்ள வேண்டும். அவை இரண்டையும் சமமாக எண்ணிக் கொண்டு அவற்றைக் களைய வேண்டும். நிலையான சிவத்தைப் பற்றிக் கொண்டு வாழ வேண்டும்.

#2923. புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்

நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையாது
அருத்தமும் இன்றி அடுவதும் ஆமே.

சுவாதிட்டானம் என்ற நிலத்தைச் சீவன் என்ற வேடன் தோண்டுவான். அங்கு உப்புநீர்க் கடலில் சென்று வீரியம் என்னும் கொழுத்த மீனைக் கொண்டு வருவான். அந்த மீனை நழுவ விட்டு விடாமல் நன்கு பாதுகாத்து வாருங்கள். அப்போது எவர் வேண்டினாலும், அவருக்குக் குறைவில்லாத சிவம் என்ற செல்வம் கிடைக்கும். அந்த சீவனும் மெல்ல மெல்லப் பக்குவப் பட்டுத் தானே சிவம் ஆகி விடுவான்.

#2924. விளிப்பது ஓர் சங்குண்டு

தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டான் அகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்கும் குசவர்க்கும் காவிதி யார்க்கும்
அளிக்கும் பதத்தொன்று ஆய்ந்துகொள் வார்க்கே

அசைவுகளே அனைத்து சிருஷ்டியின் அடிப்படை ஆகும். அந்த அசைவு உணர்வில் சீவனின் உடல் வளர்ச்சி அடையும். சீவன் சிவனை அழைக்கும் சங்கின் நாதம் அங்கு இருக்கும். அந்த ஓசையின் மூலம் சிவனை அடைவது சீவனுக்கு இன்பம் தரும். "சீவன் சிவனை நடுவதால் சந்திரனுக்கும், சூரியனுக்கும், சுழுமுனையில் இடம் கிடைக்கும்!" என்ற உண்மையை ஆராய்ச்சி செய்பவர் அறிவார்.

#2925. படை கண்டு மீண்டது பத்தி வழியில்!

குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி உள்ளலும் ஊரார்
அடையா நெடுங்கடை ஐந்தொடு நான்கே

சித்தம் என்னும் கோவில் எருமை, உடல் என்னும் குடையை விட்டுவிட்டு, நாதசம்மியம் என்பதை நோக்கிச் சென்றது. பாதி வழியில் உலக விஷயங்கள் என்ற படையினை எண்ணியபோது அது மீண்டும் உடலையே வந்து அடைந்தது. ஆன்மா என்னும் எஜமானன் புத்தி என்னும் மந்திரியின் உதவியுடன் உண்மையை உணர்ந்த பின்பு ஒன்பது துவாரங்களின் வழியே மனம் செல்வது நின்றுவிடும்.

#2926. பாகன் விடாவிடில் பன்றியும் ஆமே

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடில் பன்றியும் ஆமே.

சீவனின் உலகில் இருந்து வெளிப்படும் சந்திர கலையினாலும், உடலின் உள்ளே புகுகுன்ற கதிரவக் கலையாலும் உடலில் உள்ள ஒன்பது துவாரங்களும் செயல்படத் தொடங்கும். உடலைச் செலுத்தும் பாகன் ஆகிய சீவன்; குண்டலினி சக்தி, சந்திரகலை, மற்றும் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்ற நான்கு கலைகளையும் நன்கு அறிந்து கொண்டு செயல் புரிந்தால் மேன்மை அடைவான். அன்றேல் சீவன் பன்றியைப் போல இழிந்த நிலையை அடைவான்.

#2927. தூசி மறவன் துணை வழி எய்துமின்!

பாசி பாடர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்கும் குருகு இரைதேர்ந்துண்ணும்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே.

சீவனின் சித்தம் என்ற நீர் நிலையில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் என்று ஆறு பகைவர்கள் பாசி போலப் படர்ந்துள்ளன. பாசத்தில் தளைப்பட்ட சீவன் என்னும் கொக்கு, அந்த நீர் நிலையில் நின்று கொண்டு, விஷய இன்பம் என்ற இரையைத் தேடி உண்கின்றது. ஆனால் ஒளி மயமான கொடியினை உடைய வீரன் சிவனின் துணை கிடைத்தவுடன், சீவனை இருளாகப் பீடித்து இருந்த பாசம் அழிந்து ஒழிந்து விடும்.

#2928. மணங்கொள்வன் ஈசனே.

கும்ப மலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுடைப் பூவக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வன் ஈசனே.

குடத்தைப் போல உள்ளது மனிதனின் சிரசு. அந்தத் தலை உடலின் மலை போன்றது. அந்த மலையில் மேல் நோக்கியுள்ள சகசிரதளம் என்ற கொம்பு ஒன்று உண்டு. சீவனின் உணர்வு என்னும் பிராணன் அந்த சகசிரதளத்தில் சென்று மோதும். அப்போது சிவானந்தம் என்னும் மலரில் சிவம் என்னும் வண்டு சென்று பொருந்தி நாதத்தை எழுப்பும். அந்த நாதம் சிவனைச் சீவனுடன் உறவு கொள்ளச் செய்யும். சீவனுடைய உணர்வு உலகியலில் இருந்து விலகி சகசிரதளத்தை நோக்கிச் சென்றால், ஈசன் தானே வெளிப்பட்டு அருள் புரிவான்!

#2929. வீணையும் தண்டும்

வீணையும் தண்டும் விரவி இசைமுரல்
தாணுவும் மேவித் தருதலைப் பெய்தது
வாணிபம் சிக்கென்று அதுஅடை யாமுன்னம்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே.

வீணையின் இசையையும், குழலின் இசையையும் கலந்து ஒலிக்கச் செய்பவன் சிவன். அவன் சீவனைக் கேவல நிலையில் இருக்கும் கும்பகத்தை அடைவித்தான். சீவன் செய்கின்ற வாணிகம் எதுவென்றால் தன்னையே சிவனுக்கு கொடுப்பதும் அதற்கு மாற்றாக சிவனையே தான் கொள்வதுமாகும். எனவே சீவனின் உரிமை சிவனின் உரிமை ஆகிவிடும்!

#2930. ஆய்ந்து அறிவார் எவர்?

கொங்குபுக் காரொடு வாணிபம் செய்தது
வங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வாரில்லை
திங்கள்புக்கால் இருளாவது அறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே

சிவானந்தம் என்னும் திகட்டாத தேனை வாங்கியும், அதற்குப் பிரதியாகத் தன்னையே கொடுத்தும், சிவனுடன் சீவன் நிகழ்த்தும் வாணிபம் செய்யும் தன்மை அறிந்தவர் துரிய பூமியைச் சென்று அடைந்தவர் மட்டுமே. அனுபவத்தால் மட்டும் இது அறியப்படுவது அன்றி ஆராய்ச்சியால் அறியப்படுவது அன்று! திங்கள் மண்டலத்தை அடைந்தவர் அறிவர் 'அறியாமை என்னும் இருளே சீவனின் உண்மையான வடிவம்' என்னும் உண்மையை. அந்தத் திங்கள் மண்டலத்தில் தங்கி இருப்பவர்கள் உண்மையிலேயே இந்த பூமியைத் துறந்தவர் ஆவர்.

#2931. போது புலர்ந்து பொன்னிறம் கொண்டது!

போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கும் இருகரை
ஏதமில் ஈசன்இயங்கு நெறியிது
மாதர் இருந்ததோர் மண்டலம் தானே.

சீவனின் சகசிர தளத் தாமரை மலர் நன்கு விளக்கம் அடைந்தது. அது அழகிய பொன்னிறத்துடன் விளங்கியது. புன்னைப் பூவின் மகரந்தம் போன்ற அதன் அணுக்கள் இரு மருங்கிலும் ஒதுங்கி நின்றன. குற்றமற்ற சிவன் இயங்கிகின்ற இடம் இதுவே ஆகும். காதல் வயப்பட்ட சீவனும், அது காதலிக்கும் சிவனும் இணையுமிடம் இதுவே.

#2932. ஐந்து உண்ணலாம்!

கோமுற்று அமரும் குடிகளும் தம்மிலே
காமுற்று அகத்தி இடுவர் கடைதொறும்
மீவற்ற எல்லை விடாது வழிகாட்டி
யாமுற்ற அதட்டினால் ஐந்துண்ண லாமே.

ஆன்மாவுடன் பொருந்தியுள்ள தத்துவங்கள் தத்தம் விருப்பம் போலச் செயல்படும். சீவனின் உடலில் ஆசைத் தீயை மூட்டி விடும். சிவன் அவற்றை அச்சுறுத்தி அவற்றுக்கு வசப்படாமல் சீவன், அழிவற்ற இடத்துக்குச் செல்லும் வழியைக் காட்ட வேண்டும். அப்போது சீவன் தன்னைப் பிடித்திருக்கும் ஐந்து கோசங்களில் இருந்து விடுபட்டு அவற்றைக் கடந்து செய்ய முடியும்.

#2933. காட்டிக் கொடுத்தவர் கை விட்டவாறே!

தோட்டத்தில் மாம்பழம் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத்து என்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டு
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

சாதனை செய்யும் பொழுது நிட்டை கைவராமல் போகலாம்! அல்லது எளிதாகக் கலைந்து போய்விடலாம். அதற்காகச் சீவன் மீண்டும் புறத்தே சென்று சரியை கிரியை முதலியற்றைச் செய்வதால் என்ன பயன் விளையும்? முதல்வனை முன்னிட்டு நிட்டை கூடுவதற்கு உபதேசம் செய்தவர் குருநாதர். ஆயினும் நிட்டையைச் சாதிப்பது மாணவனின் கடமை.

#2934. புலர்வதில்லை பொழுது!

புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பின் அவளொடும் போகம் நுகரும்
புலம்பனுக்கு என்றும் புலர்ந்திலை போதே.

நாட்காலையில் கதிரவனின் ஒளி உண்டானதும் பறவைகள் சிலம்பும். அது போலவே, உடலில் ஞான ஒளி தோன்றியவுடன் சிவ தத்துவங்கள் என்னும் பறவைகள் ஓசை எழுப்பும். அந்த ஒளி தோன்றும் போது சிற்சக்தி சீவனின் தலையில் வந்து பொருந்துவாள். சிற்சக்தியுடன் சீவன் பரபோகத்தில் திளைத்துவிடும். எப்போதுமே ஒளியுடன் விளங்கும் சீவனுக்குப் பொழுது விடியல் என்று எதுவும் இராது.

#2935. ஆணி கலங்கில் சீவன் சிவமகதும்!

தோணி ஒன்று உண்டு துறையில் விடுவது
வாணி மிதித்துநின்று ஐவர்கோல் ஊன்றலும்
வாணிபம் செய்வார் வழியிடை ஆற்றிடை
ஆணி கலங்கில் அதுஇது வாமே.

சீவன் அறிவாகாயப் பெருவெளி என்னும் துறையைச் சென்று சேர வேண்டும்! இதற்கு உதவி செய்வது பிரணவம் என்னும் தோணி. அந்தப் பிரணவ ஒலி தோன்றாத வரையில் சீவன்; நான்முகன், திருமால். உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவரின் ஆளுமையில் அடங்கி இருக்கும். தன்னையே தந்து சிவனைப் பெற்றுக் கொள்ளும் வாணிபம் செய்வதற்கு அறிவு ஆகாய பெருவெளிக்குச் செல்லும் சீவன், தன் உடல் பற்றினைத் துறந்து விட்டால், அப்போதே சிவத்துடன் பொருந்தித் தானும் சிவம் ஆகிவிடலாம்.

ஒன்பதாம் தந்திரம் -
18. மோன சமாதி

சகச நிட்டை எனப்படும் இது சீவன் மௌனத்தில் ஒடுங்குவது ஆகும். சீவன் பிரணவ யோகத்தால் இந்த நிலையை அடைய முடியும்.

#2936. மோன சமாதி

நின்றார் இருந்தார் கிடந்தார் எனஇல்லை
சென்றார்தம் சித்தம் மோன சமாதியாம்
மன்றுஏயும் அங்கே மறைப்பொருள் ஒன்றுண்டு
சென்றாங்கு அணைந்தவர் சேர்கின்ற வாறே.

நின்றார், இருந்தார், கிடந்தார் என்பதோ; ஆதனம், காலம், திக்கு என்பனவும் மோன சமாதி செய்கின்ற பிரணவ யோகிக்குக் கிடையாது. சித்தம் அடங்க நாதாந்த நிலையில் நிலைத்து இருப்பதே மோன சமாதி ஆகும். சீவனின் சென்னியின் மேலே உள்ள அறிவாகாயப் பெருவெளியில் சிவம் இருக்கின்றது. சீவன் நாத வழியில் சென்று நாதாந்தத்தை அடைய வேண்டும்.

#2937. குரு நந்தி கூட்டினால் யோகம் கைக்கூடும்

காட்டும் குறியும் கடந்த அக் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத்து என்பயன்?
கூட்டும் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.

காணப்படும் குறிகளையும், அடையாளங்களையும் தாண்டி நிற்பவன் சிவன். அந்தப் பெருமானைப் பற்றி நூல்களில் எழுதி வைப்பதால் மட்டும் என்ன பயன் விளையும்? சிவகுரு தன் அருள் காட்டி ஞானத்தை வழங்கினால் மட்டுமே சீவன் ஞானம் பெற முடியும். வெறும் எட்டுப் படிப்பு மட்டும் படிப்பது, ஆட்டின் கழுத்தில் இருக்கும் அதர் போலச் சிறிதும் பயனற்றது ஆகும்.

#2938. உணர்வுடையார் உணர்ந்து காண்பார்!

உணர்வுடை யார்கட்கு உலகமும் தோன்றும்
உணர்வுடை யார்கட்கு உறுதுயர் இல்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்த அக்காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்து கண் டாரே.

சிவ உணர்வு நிரம்பியவர்களுக்குத் தாம் இருக்கும் இடத்தில் இருந்தே உலக நிகழ்வுகள் அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் இருக்கும். அவர்கள் எது நேர்ந்தாலும் கவலையோ, துன்பமோ அடைய மாட்டார்கள். சிவ உணர்வை நிரம்பப் பெற்ற குருநாதர் மாணவனுக்கு அதை உணர்த்த இருக்கும் போது, மாணவன் தானே தன் அனுபவத்தால் சிவத்தைக் காணும் பேறு பெறுவான்.

#2939. உறக்கமின்மை போகத்தில் உறங்குவான்

மறப்பது வாய்நின்ற மாயநன் னாடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்திரு மங்கையும் தானும்
உறக்கமில் போகத்து உறங்கிடுந் தானே.

மௌன யோகி தனக்கு இந்த உலகம் புலப்படாதவாறு அமைந்து இருப்பான். அவன் மீண்டும் பிறவி எடுக்க வேண்டிய தேவை இல்லாதவன். பிறருக்கும் அருளும் வல்லமை படைத்தவன். அனைத்துச் சிறப்புகளும் பொருந்தியவன். சிவ சக்தியருடன் தானும் பொருந்தி இருப்பவன். அதனால் தன்னை நன்கு அறிந்து கொண்டவனாகவும், இந்த உலகை அறியாதவனாகவும் இருப்பான் ஒரு மௌன யோகி.

#2940. விரிவும் குவிவும் விழுங்கியும் உமிழ்ந்தும்

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரியம் அதன்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே.

துரியங்கள் மூன்று. அவை சீவ துரியம், பர துரியம், சிவ துரியம் என்பர். இந்த மூன்றையும் கடந்து விளங்கும் ஒரு பேரொளி. அரிதாகிய துரிய நிலைக்கு மேலேயுள்ள இந்த மூன்று நிலைகளிலும் சாதகன் பொருந்தியும், விரிந்தும், குவிந்தும், விழுங்கியும், உமிழ்ந்தும், சொற்களைக் கடந்த அற்புதமான அனுபவங்களைப் பெறுகின்றான்.

#2941. என் மனம் புகுந்த மருவிலி

உருவிலி ஊனிலி ஊனம்ஒன்று இல்லி
திருவிலி தீதிலி தேவர்க்கும் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்துஎன் மனம்புகுந் தானே.

சிவனின் தன்மைகள் என்ன என்று அறிவீர்களா? சிவன் மாயையின் காரியமாகிய உருவம் என்று ஒன்றும் இல்லாதவன்; சிவன் ஊனால் ஆகிய உடல் என்று ஒன்றும் இல்லாதவன்;சிவன் எந்தக் குற்றமோ, குறையோ இல்லாதவன்; சிவன் சக்தி தேவியையே தன் உடல் ஆகக் கொண்டவன்; சிவன் தீமைகள் எதுவும் செய்யாதவன்; சிவன் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன், ஆகிய ஐந்து தெய்வங்களுக்கும் தலைவன் ஆனவன். தனக்கு ஒப்பர் என்று எவருமில்லாதவன்; பூதப் படைகளை உடையவன்; தான் எல்லாவற்றுக்கும் ஆதாராம் ஆகுபவன். ஆனால் தனக்கு என்று ஆதாரம் எதுவும் இல்லாதவன். இத்தனை பெருமைகள் வாய்ந்த சிவன் என் உள்ளத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டு அமர்ந்துள்ளான்.

#2942. அண்டங் கடந்த அளவிலாத ஆனந்தம்

கண்டறி வார்இல்லைக் காயத்தின் நந்தியை
எண்டிசை யோரும் இறைவன் என்று ஏத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே.

தான் எடுத்துள்ள உடலில் உறைகின்ற சிவனைக் கண்டறிந்தவர் இல்லை. எட்டுத் திசைகளிலும் உள்ள மனிதர்கள், “எல்லா இடங்களும் உள்ளான் சிவன்!” என்று ஏத்தித் தொழுவர். அண்டங்களைக் கடந்ததும், அளவில்லாத ஆனந்தம் ஆனதும் ஆகிய சிவனந்தத்தைத் தொண்டர்கள் அனுபவிக்கும் முறையினை நாம் அறியோம்!

#2943. கற்பனை இன்றிக் கலந்து நின்றான்

தற்பரம் அல்ல சதாசிவன் தான்அல்ல
நிட்களம் அல்ல சகள நிலையல்ல
அற்புத மாகி அனுபோகக் காமம்போல்
கற்பனை இன்றிக் கலந்துநின் றானே.

சிவன் ஒன்பது வித பேதங்களை உடைய தற்பரன் மட்டும் அல்ல. அவன் அருவுருவமான சதாசிவன் மட்டும் அல்ல. அவன் வெறும் அருவம் மட்டும் அல்ல. அவன் வெறும் உருவத்துடன் கூடியவன் மட்டுமல்லன். அற்புதம் போலத் தோன்றும் கற்பனையான காம இன்பத்தைப் போல் அல்லாமல், சிவன் சீவனின் ஆன்மாவில் உண்மையிலேயே பொருந்திப் பேரின்பத்தை அளிக்கின்றான்.

#2944. அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே.

முகத்தில் பொருந்தியுள்ள புறக்கண்களால் புறவுலகில் உள்ள பொருட்களைக் கண்டு மகிழ்கின்றவர் முழு மூடர். அறிவுக் கண்ணைக் கொண்டு அக உணர்வை வளர்ப்பதே உண்மையில் சிவானந்தம் எனப்படும். மகள் தன் தாயிடம் அவள் தன் மணாளனோடு ஆடிய சுகத்தைக் கூறுமாறு கேட்டால் தாயினால் கூற முடியாது. அது போன்றே சிவானந்தத்தை அனுபவித்த குருநாதரிடம் மாணவன் அதைப் பற்றிக் கேட்டாலும் குருவினால் அதைக் குறித்துக் கூறமுடியாது! ஏனெனில் அந்த இன்பம் சொற்களுக்கு அப்பாற்பட்டது.

#2945. உப்பும் அப்பும் போலக் கலப்பர்!

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரம் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பதம் மாயக் கலந்தமை
எப்படி அப்படி என்னும் அவ்வாறே.

உப்பை நீரில் இட்டுக் கரைத்தால், உப்பு நீருடன் இரண்டறக் கலந்து விடும். அது போலவே சிவன் சீவனுடன் பொருந்தும் பொழுது அதனுடன் இரண்டறக் கலந்து விடுவான். பரன் என்னும் சீவனும் பராபரம் என்னும் சிவனும் இருவேறு பொருட்களாக இருக்க மாட்டார். 'தத் த்வம் அசி' என்ற மகாவாக்கியத்தில் 'அசி' பதம் அழிந்தவுடன், 'தத்'என்ற சிவன் 'த்வம்' என்ற சீவனைத் தன்னைப் போன்ற உயர்ந்த பொருளாக மாற்றி விடும்.

#2946. கண்டார்க்கு அழகு காஞ்சிரத்தின் பழம்

கண்டார்க்கு அழகிது காஞ்சிரத் தின்பழம்
தின்றார்க்கு அறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்தான் நிரம்பி மடவியள் ஆனால்
கொண்டான் அறிவன் குணம்பல தானே.

காண்பதற்கு எட்டிப்பழம் மிகவும் அழகாக இருக்கும்! ஆனால் அது தின்பருக்குக் கசப்பைத் தரும். உலக வாழ்வும் அது போலவே காண்பதற்கு கவர்ச்சி நிறைந்ததாகவும், அனுபவித்தவருக்குக் கசப்பை அளிப்பதாகவும் இருக்கும். ஓர் இளம் பெண் வயதால் பக்குவம் அடைந்து மடந்தை ஆகிறாள். அது போன்றே உலக

வாழ்வில் கசப்புற்ற சீவன் பக்குவம் அடைந்தவுடன், சிவன் சீவனிடத்தில் விளங்கி நிற்பான். சீவனும் சிவன் தரும் சிவானந்தத்தில் இன்பம் பெறும்.

#2947. உந்தியினுள்ளே உதித்தெழும் சோதி

நந்தி யிருந்தான் நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே ஒழிந்தன
உந்தியின் உள்ளே உதித்தெழும் சோதியைப்
புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனே.

தத்துவக் கூட்டங்களின் நடுவே இருந்த சீவனிடம் சிவன் விளக்கம் பெற்றுத் திகழ்ந்தான். அவன் நன்கு விளக்கம் பெற்று விட்டதால் அவனை அடைவதற்குச் செய்கின்ற சமாதிப் பயிற்சி தேவை அற்றது ஆனது. ஒளிர்கின்ற சிவக் கதிரவன் என் உந்தியில் உள்ள மணிபூரகத்தில் இருந்து உதித்து மேலே எழுந்தான். எந்தன் புத்தியினால் நான் அவனைப் புணர்ந்து நின்றேன்.

#2948. கற்பனை உதறிய பாழ்

விதறு படாவண்ணம் வேறிருந்து ஆய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றானே.

ஞான சாதனைகளால் நான் தளர்ச்சி அடையவில்லை; நான் தத்துவங்களில் இருந்து வேறாக இருந்து ஆராய்ந்தேன். நடுக்கமும், தயக்கமும் இன்றி நாத சம்மியம் செய்தேன். கதறியபடி விலகி ஓடுகின்ற மாயையை விட்டு நீங்கினேன். கற்பனையைக் கடந்து நிற்கும் சிவச்சோதியில் நான் ஒடுங்கினேன்.

#2949. வாடா மலர் புனை சேவடி

வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அறநெறி நாடொறும் இன்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுடர் உட்சென்று
நாடார் அமுதுற நாடார் அமுதமே.

வானவர்கள் வாடாத மலராகிய சகசிரதளத் தாமரையில் இருக்கின்ற சிவனுடைய செம்மையான திருவடிகளைச் சென்று பொருந்த மாட்டார்கள். அறநெறிகள் நாள்தோறும் தழைத்து வளரும் வண்ணம் மேன்மை பொருந்திய அக்கினி மண்டலத்தில் சென்று அமுதம் விளைவிப்பதையும் நாடார். விளைந்த அமுதத்தை அடையவும் அவர்கள் விரும்ப மாட்டார்கள்.

#2950. மதுக்கொன்றைத் தாரான் வளம் தரும்.

அதுக்கென்று இருவர் அமர்ந்த சொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரும் அன்றே.

காம இனம் சுவைப்பதற்குத் தயாராக உள்ள இருவரில் ஒருவர் சொற்களைக் கேட்டதும் மற்றவருக்கு விரைவாகக் காம உணர்வு பொங்கி எழும். அது போலவே தன் அந்தக்கரணங்கள் நான்கும் நன்கு விருத்தி அடைந்து இருப்பவரைக் கண்டவுடன், சிவன் தேன் சிந்தும் மஞ்சள் நிறக் கொன்றை மாலையினைப் போன்ற மஞ்சள் நிற ஒளியில் தோன்றி அந்தச் சீவனுக்கு இன்பம் அளிப்பான்.

#2951. நான் அறியேனே!

தானும் அழிந்து தனமும் அழிந்துநீடு
ஊனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்துபின்
நானும் அழிந்தமை நானறி யேனே.

சிவ சிந்தனையில் ஆழ்ந்திருந்த என்னிடம் உடல் பற்று அகன்றது; எனக்குப் பொருட்களின் மீதிருந்த பற்று அகன்றது; ஊனால் சமைக்கப்பட்ட என் உடல் வேட்கைகள் கெட்டன; என் உயிர் பற்றும் அகன்று விட்டது; புறவுலகினை நாடும் என் மனமும் அழிந்தது; என் இச்சை என்பதும் அழிந்து விட்டது. இவை அனைத்தும் எங்கனம் நிகழ்ந்தன என்பதை நான் சற்றும் அறிகிலேன்!

#2952. உருளாத கல்மனம் உற்று நின்றேன்

இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கல்மனம் உற்றுநின் றேனே.

நான் இருள்மயமான தத்துவங்களையும் நோக்கவில்லை; ஒளிமயமான சிவனைச் சுட்டி அறியவும் இல்லை; வேறுபாடுகள் இன்றிச் சிவத்துடன் என் சீவன் பொருந்தியது. அந்த அருளால் என் தன்னிலை கெட்டு விட்டது. பிறழாத உறுதியான கல்லைப் போல என் மனம் அத்தன் சிவனை திருவடிகளில் பொருந்தும் வண்ணம் நான் நின்றேன்.

#2953. பல ஊழி கண்டேனே!

ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே.

என் உள்ளத்தில் பொருந்திப் பரமாகவும், அபரமாகவும் விளங்கும் என் ஈசனை நான் அறிந்து கொண்டேன்! என் உள்ளத்தில் நிலை பெற்றுச் சிவகதியை நான் அறிந்தேன்; சிவனும் சீவனும் ஒன்றாகிப் பொருந்தும் முறையினை நான் அறிந்து கொண்டேன். என்னுள்ளே விளங்கும் என் தலைவனுடன் நான் பொருந்திப் பல ஊழிகளைக் கடந்து நின்றேன்.

ஒன்பதாம் தந்திரம் -
19. வரையுரை மாட்சி

வரை = எல்லை
உரை = தேய்வு
மாட்சி = பெருமை
வரை உரை மாட்சி = சீவன் தன்னை உணர்ந்து கொண்டு சிவனுடன் பொருந்தி இருக்கும் அளவற்ற பெருமை.

#2954. தூமொழி வாசகம் சொல்லுமின்

தான்வரைவு அற்றபின் ஆரை வரைவது?
தான்அவ னானபின் ஆரை நினைவது?
காமனை வென்றகண் ஆரை உகப்பது?
தூமொழி வாசகம் சொல்லுமின் நீரே!

சீவ எல்லையைக் கடந்து சிவத்துடன் இணைந்த பின்பு ஆன்மா வேறு எவருடன் சென்று பொருந்த வேண்டும்? தானே அவனாக ஆகிவிட்ட பிறகு சீவன் வேறு யாரைப் பற்றி எண்ணமிட வேண்டும்? கவர்ச்சியான உலக இச்சைகளை வென்று விட்டவருக்கு வேறு என்ன கவர்ச்சி இருக்க முடியும்? நீங்களே ஆராய்ந்து நல்ல மொழியை விடையாகக் கூறுங்கள்!

#2955. திரையற்ற நீர் போன்ற சிந்தை

**உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்று இருந்தான் புரிசடை யோனே.**

மொழிகளைக் கடந்த மேன்மை படைத்த சிவனை மொழிகளால் கூற முயல்கின்ற அறிவிலிகளே! எல்லை அற்ற சிவத்தை வெறும் வாய் வார்த்தைகளால் வரையறுத்துக் கூறவும் இயலுமோ? அலைகள் ஓய்ந்த ஆழ் கடலைப் போன்ற தெளிந்த சிந்தை உடையவர்களுக்குப் புரிசடையோன் சிவன் மறைவின்றித் தானே வெளிப்படுவான்.

#2956. தன்னை ஆய்ந்து இருப்பது தத்துவம்

**மனமாயை மாயைஇம் மாயை மயக்கம்
மனமாயை தான்மாய மற்றொன்றும் இல்லை
பினைமாய்வது இல்லை பிதற்றவும் வேண்டா
தனைஆய்ந்து இருப்பது தத்துவந் தானே.**

மனதின் நினைவு அலைகளே மனிதனைத் தளைப் படுத்துகின்ற மாயை ஆகும். இவையே மனமயக்கத்தைத் தருகின்றன. மனம் படைக்கும் கற்பனைகளை அழிக்க, மன நினைவுகளை முதலில் அழிக்க வேண்டும். வேறு உபாயம் ஒன்றும் இல்லை. அழிக்கப்பட வேண்டிய பொருள் என்று வேறு எதுவும் இல்லை. வீண் பிதற்றலில் காலத்தைக் கழிக்காமல் செயல்படுங்கள்! ஆன்மா தன் உண்மை வடிவத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டு அடங்கி இருப்பதே அதற்கு மேன்மை தரும்.

ஒன்பதாம் தந்திரம் -
20. அணைந்தோர் தன்மை

சிவனை அடைந்து மோனத்தில் இருப்பவர்களின் இயல்பு.

#2957. மலமில்லை மாசில்லை

**மலமில்லை மாசில்லை மானாபி மானம்
குலமில்லை கொள்ளும் குணங்களும் இல்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி அன்பில் பதித்துவைப் போர்க்கே.**

சிவகுருவாகிய நந்திப் பிரானைத் தன் ஞானத்தினால் உறுதியாகப் பொருந்திச் சிவனைத் தன் அன்பிலே கட்டி வைத்துள்ளவர்களிடத்தில் சீவன்களைப் பற்றியிருக்கும் மலங்கள் இரா! அதனால் அவற்றால் விளையும் மாசுக்கள் இரா! மானம், அபிமானம், குலம், கொள்ளுங்குணம் என்ற எதுவுமே இரா! உயிர்களின் மீதோ, இனத்தின் மீதோ அல்லது பொருட்களின் மீதோ எந்தப் பற்றும் இராது. தாமச, ராஜஸ, சத்துவ குணங்கள் இரா! அதனால் அந்த சீவனிடன் எந்தச் சுயநலமும் இராது!

#2958. சிவனைக் கண்டேனே!

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன் றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண் டேனே.

நன்மைகளை மட்டுமே அருளுகின்ற நம் சிவபெருமானைக் கண்டேன்! அதனால் என் பிறவிப் பிணியை ஒழித்தேன்! என்னைத் தளைப்படுத்தி இருந்த பாசாங்கைக் கை கழுவினேன். சிவனும், நானும் ஒன்றே என்னும்படி ஆகிவிட்டேன். சிவத்துடன் பொருந்திவிட்ட நான் இறப்பதையும் மீண்டும் வந்து உலகில் பிறப்பதையும் விரும்ப மாட்டேன்.

#2959. குறை ஒன்றும் இல்லையே!

ஆலைக் கரும்பும் அமுதும்அக் காரமும்
சோலைத் தண்ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் அன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணாட்குக் குறை யொன்றும் இல்லையே.

ஆலையில் பிழியப்பட்ட கருப்பஞ்சாறு, இனிய பால், வெல்லம், சோலையின் குளிர்ந்த நீர் இவற்றை போன்ற இனிமை வாய்ந்த சிவானந்தம் என்பது எமது சிவபூமியில் உள்ளது! மயில் பீலியின் கண் போன்று ஒளியை வீசுகின்ற அழகிய சக்தி தேவியால் அந்தச் சிவ பூமியில் உள்ளவர்க்கு எந்தக் குறையும் இல்லையே!

#2960. சீரார் பிரான் என் சிந்தை புகுந்தான்

ஆராலும் என்னை அமட்டஒண் ணாதிதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதால் லால் இனி
யார்படுஞ் சாரா அறிவறிந் தேனே.

எல்லாத் தத்துவங்களையும் கடந்து இருக்கின்ற சிவபெருமான் என்னிடம் வந்து என் சிந்தையில் குடி கொண்டான். அதனால் இனிமேல் என்னை எந்தத் தத்துவமும் கட்டுப்படுத்தாது. இனிச் சிவ பூமியில் சிவனுடன் சீராடித் திரிவேனே அன்றிப் பிற தத்துவங்களுடன் கூடி நான் அறிய வேண்டியது எதுவும் இல்லை!

#2961. சிவகதி செல்லும் நிலை

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லும் நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன வாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே.

பிரமன் என்னைப் பிறவிப் பிணியில் பிணித்தான். ஆனால் நான் அதைத் துறந்து, அதிலிருந்து பிரிந்து விட்டேன். சிவநெறியை அடையும் வழியை நான் அறிந்து கொண்டேன். மனம் என்ற வாளால் என் பழைய வினைகளை அறுத்து விட்டேன். என் திரிபுரமாகிய பருவுடல், நுண்ணுடல், காரண உடல் என்ற மூன்றையும் கெடுத்து விட்டு நான் என் குறிக்கோளை நோக்கி முன்னேறுகின்றேன்.

#2962. உலகுக்கு ஒரு தெய்வம்

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குஉயி ராவது
நன்றுகண் டீர்இனி நமசிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

உலகுக்கு ஒரே தெய்வமாகப் பேரொளிப் பிழம்பாகிய சிவன் இருப்பதைக் கண்டு கொண்டீர்! சிவனே உலகத்துக்கு உயிராக இருந்து அதை இயக்குவதை அறிந்து கொண்டீர்! நமசிவாய என்னும் சிவக்கனி உயிர்த் தொகைகளுக்கு நன்மைகள் செய்வதைக் கண்டு கொண்டீர். நான் அந்த சிவக்கனியை உண்டதால் அதன் இனிமையை நன்கு அறிந்து கொண்டேன்!

#2963. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பொருள்

சந்திரன் பாம்பொடும் சூடும் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக்கு ஆனவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்குஅறுத் தானே.

ஒளி வீசும் சந்திரனையும், பாம்பையும் சூடுபவன் சடாதரன் ஆகிய சிவபெருமான். தானே வந்து என்னை ஆட்கொண்ட மணிவிளக்கு அவன்.

ஆதியும்,அந்தமும் இல்லாத அரும்பொருள் ஆகிய சிவன் என் சிந்தையில் வந்து பொருந்தி, என் அறியாமையால் விளைந்த மயக்கத்தைத் தீர்த்து வைத்தான்!

#2964. வெறுமனம் ஆகவேண்டும்!

பண்டுஉளங்கள் ஈசன் நெடுமால் பிரமனைக்
கண்டுஅங்கு இருக்கும் கருத்தறி வாரில்லை
விண்டு அங்கே தோன்றி வெறுமனம் ஆயிடில்
துண்டு அங்கு இருந்ததோர் தூறுஅது வாமே.

முன்பே ஈசன் நெடுமாலையும், பிரமனையும் படைத்தான். சிவன் அவர்களுடனேயே விளங்குகின்றான். இந்த உண்மையை ஆராய்ந்து அறிந்து கொள்பவர் எவரும் இல்லை. நான்முகன், திருமால் போன்ற தெய்வங்கள் இயக்குகின்ற உடல் தத்துவத்தைக் கடந்து, எண்ணங்கள் அற்ற நிலையை சீவன் அடைந்துவிட்டால், பிரணவ வடிவினன் ஆகிய சிவன், அந்தச் சீவனைத் தன் ஆதனமாகக் கொண்டு அங்கு அமர்வான்.

#2965. அன்னையும், அத்தனும்

அன்னையும் அத்தனும் அன்புற்றது அல்லது
அன்னையும் அத்தனும் ஆரறி வார்என்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்து
அன்னையும் அத்தனை யான்புரந் தேனே.

அன்னையும் தந்தையும் ஆன சிவபெருமான் என்னிடம் அன்பு கொண்டு என்னைப் பாதுகாக்கின்றான். அவன் அங்ஙனம் செய்யாவிட்டால் என்னைப் பெற்ற தாய் தந்தையர் எவ்வாறு என்னைப் பாதுகாக்க முடியும்? தாய் தந்தையருடன் நானும் சேர்ந்து கொண்டு சிவ சக்தியரிடம் அன்பு கொண்டேன்!

#2966. நான் இனி உய்ந்து ஒழிந்தேனே!

கொண்ட சுழியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந்து என்கைத் தலத்துளே
உண்டனர் நானினி உய்ந்தொழிந் தேனே.

சிவனுடன் பொருந்தி இருக்கும் எனக்கு கிடைத்த மேன்மைகள் என்ன என்று தெரியுமா? உலகினைத் தனக்குள் கொண்ட கடலும், உலகினை விட உயர்ந்து நிற்கும் மலையின் உச்சியும், அண்டர்களும், அண்டங்களின் தலைவரும், ஆதி சக்தியும், எண் திசையோரும் என் சொற்படி நடக்கின்றனர். நான் இனி உய்ந்து ஒழிந்தேனே!

#2967. தானே உலகின் தலைவனும் ஆமே

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே வடவரை ஆதியுமாய் நிற்கும்
தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே.

சிவத்துடன் பொருந்தி விட்ட சீவர்கள் அடையும் மேன்மைகள் இவை: தாமே திசைகளாகி நிற்பர்! தாமே தேவருமாகி நிற்பர்! தாமே மேருமலையாகவும், அதற்கும் மேலே உள்ளதாகவும் விளங்குவர்,தாமே சீவ நிலையில் உடல், உயிர், தத்துவங்கள் என்று விளங்குவர். தாமே உலகின் தலைவரும் ஆவர்.

#2968. ஞான வாள் கொண்டு எறிவன்

நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வரும் சிந்தைத் தான்எதிராரே.

உடல் பற்று நீங்கிய பின்னர் வான் மயமான ஓர் உணர்வு தோன்றும்.அப்போது காலன் என்னிடம் வந்தால், நான் ஞானவாளைக் கொண்டு அவனை வெட்டுவேன். சிவன் என்னிடம் வந்தால், அவனுடன் சேர்ந்து நானும் எங்கும் நிறைந்திருக்கும் பொருளாக மாறிவிடுவேன். பிறவிக்கு காரணமான வல்வினைகளை முன்னமே நான் அறுத்து எறிந்து விட்டேன். தவத்தால் பெற்ற தெளிந்த சிந்தையை எதிர்த்து அஞ்ஞானம் என்னும் இருள் நிற்க முடியுமா?

#2969. சிலுகும், கலகமும் கை காணார்!

சித்தம் சிவமாய் மலமூன்றும் செற்றவர்
சுத்தச் சிவமாவர் தோயார் மலபந்தம்
சுத்தும் சிலகும் கலகமும் கைகாணார்
சத்தம் பரவிந்து தானாம்என்று எண்ணியே.

சித்தம் சிவமயமாக ஆனவர்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் வென்றவர் ஆவார். அன்னார் தாமும் சிவத்தின் தூய ஆற்றலுடன் விளங்குவார். சீவனைத் தளைப்படுத்தும் மலத்தில் அவர் கட்டுப்பட மாட்டார். நுண்மை வாக்கை அறிந்தவர் ஆதலால் சத்தம் இட்டு வீண் வாதமோ, பூசலோ, பிதற்றலோ செய்ய மாட்டார்.

#2970. நீளியன் ஆவான்

நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற்று அறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற்று அறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறில்அவன் நீளியன் ஆமே.

நினைத்தலும் மறத்தலும் இல்லாதபடி எப்போதும் சிவனையே சிந்தித்து இருப்போரின் மனத்தில் வினைப் பயன்களை அழித்து விடும். விமலன் ஆகிய சிவன் நீங்காமல் இருப்பான். அவ்வாறு இன்றி இடைவெளி விட்டு விட்டுச் சிவனை நினைந்து வந்தால் அவன் நம்மை விட்டு நீங்கிச் சென்று விடுவான்.

#2971. தவப் பெருமான் தான் வந்து நின்றான்

சிவபெரு மான்என்று நான்அழைத்து ஏத்தத்
தவப்பெரு மான்என்று தான்வந்து நின்றான்
அவபெரு மான்என்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே.

அங்கு இங்கு என்னாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பெருமானை நான் “சிவபெருமானே!” என்று அழைத்தேன். தவத்தால் அறியப்படும் அப்பெருமானும், “இங்கு இருக்கின்றேன்!” என்று கூறி என்னிடம் வந்து நின்றான். பற்றுக்களைக் கொடுத்துச் சீவனை பந்தத்தில் ஆழ்த்துபவனும் சிவனே! பற்றுக்களை நீக்கிச் சீவனை விடுவிப்பவனையும் சிவனே! என்றும் மாறாது நிலைத்திருக்கும் நித்தியமான சத்தியமான சிவனை நான் வணங்கி நின்றேன்.

#2972. சிவன் தன்மை கண்டேனே

பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்றொன்றும் வேண்டேன்
அணிந்துநின் றேன்உடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே.

பரம அதிபதியாகிய சிவனை நான் பணிந்து நின்றேன். “அவனே பரம் பொருள். அவனுக்கு மிஞ்சிய தெய்வம் வேறு எவருமில்லை!” என்று நான் துணிந்து நின்றேன். அவனையன்றி வேறு எதையும் நான் வேண்டேன்! என் உடலில் நான் கண்டுகொண்ட ஆதியான சிவனுடன் நான் பொருந்தி நின்றேன். என் சீவபோதத்தைத் துறந்து நான் நின்றேன். நான் தணிந்ததும் அவன் அகண்ட தன்மையைக் கண்டு கொண்டேன்.

#2973. பிணக்கு அறுத்தானே!

என்நெஞ்சம் ஈசன் இணையடி தாம் சேர்ந்து
முன்னம்செய்து ஏத்த முழுதும் பிறப்பறும்
தன்நெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னம்செய்து என்னைப் பிணக்கறுத் தானே.

என் நெஞ்சம் ஈசனின் இணையடிகளைச் சேர்ந்தது. அந்தத் திருவடிகளைப் போற்றி புகழ்ந்தால் பிறவியும் அதற்கு உரிய காரணங்களும் கெட்டுவிடும். தனக்கு என்று ஓர் உள்ளம் இல்லாதவன் சிவன். நான்முகன் எழுதிய தலை எழுத்தையே மாற்றிக் கெடுப்பவன் சிவன். தத்துவங்களுடன் போராடிய என் நிலையைக் கெடுத்து என் பிணக்கை மாற்றிவிட்டான்.

#2974. முன் வந்த துன்பம் வணக்கலுற்றேன்

பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத்து எண்ணும்
கணக்கறுத் தாண்டவன் காண்நந்தி என்னைப்
பிணக்கறுத்து என்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவன் வந்தது தானே.

என் உள்ளத்தில் பொருந்தி என் பிணக்கினை அறுத்தவன் சிவன்; நோயற்ற உடல் தந்து நரை, திரை, முதுமை இல்லாமல் காலஎல்லையைக் கடந்து வாழுமாறு செய்து காலக் கணக்கை அறுத்தவன் சிவன். நான் என்னைத் தொடர்ந்து வந்த வினைகளைக் கெடுத்தேன். அப்போது சிவம் மேலும் பிரகாசித்தான்!

#2975. அவன் வந்து என்னுள் அகப்பட்டான்!

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்டு
அவன்எந்தை ஆண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே அகப்பட்ட வாறே.

தேவர்கள் குழாத்துடன் வந்து சிவன் என் உள்ளத்தில் நிலை பெற்றான். சீவனின் பிறவிக்கு காரணம் ஆகிய பாசத் தளைகளை சிவன் அறுத்துக் களைந்தான். அறியாமை என்னும் இருளை போக்கி என்னை ஆண்டு அருளினான். சிவன் என் சிந்தையில் வந்து புகுந்து என்னை ஆட்கொண்டவிதம் இதுவே ஆகும்.

#2976. கரும்பு கசந்தது! தேன் புளித்து!

கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே.

சீவனுக்கு கரும்பு போன்றது காமம். தேனைப் போன்றது காமச் சுவை. இவை பொருந்தியுள்ளன சீவனின் உடலில்! அரும்பி மணக்கும் சிவானந்தத்தை நாடிச் சீவன், உடல் இயல்புகளைக் கடந்து தன் உணர்வை மேலே செலுத்திச் சிவானந்தத்தைச் சுவைத்தால், அப்போது சீவனுக்குக் கரும்பு போன்ற காமமும் கசக்கும். தேன் போன்ற காமச் சுவையும் புளிக்கும்!

#2977. எல்லாம் அவன் செயல் என்று இருமின்!

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாம் சிவமாகக் காண்டலால்
கைவளம் இன்றிக் கருக்கடந் தேனே.

முன்னைப் பிறவிகளில் சரியை,கிரியை போன்ற நெறிகளின் நான் நின்றிருந்தேன்.என்னை அந்த நெறிகளில் இருந்து மீட்டான் சிவன். என்பால் வள்ளல் போலக் கருணை காட்டினான் சிவன். அவன் அன்பின் திறத்தைப் பாராட்டினேன். “நான் செய்கின்றேன்!” என்ற எண்ணத்தைத் துறந்து “அவன் என்னைச் செய்விக்கின்றான்!” என்ற எண்ணம் பிறந்ததால் வினைகளையும், வினைப் பயன்களையும் நான் ஒருசேர ஒழித்து விட்டேன்!

#2978. பூண்டாள் புவன சூடாமணி

மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் தகளிசெய் சேர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவன சூடாமணி
மாண்டான் ஒருவன்கை வந்தது தானே.

உலகக் கவர்ச்சியில் இருந்து மீண்டவர், தம் மூலாதாரத்தில் உள்ள தீயை எழுப்பி, அதை மேல் நோக்கிச் செலுத்தி, சகசிரதளம் என்னும் தூண்டா விளக்கில், உணர்வு என்னும் நெய்யைச் சேர்ப்பார்கள். அங்கு ஒளி வீசவும், புவன சூடாமணி ஆகிய சக்தி தேவி அங்கு வந்து பொருந்துவாள். சீவன் தன் சுட்டறிவை இழந்து நிற்கும்! ஆனால் அரிய சிவானுபவம் பெறும்.

#2979. ஆறு அருவி பாயும் அருங்குளம்

ஆறே அருவி அகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலை கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே.

சீவனின் சென்னியில் உள்ள சகசிரதளம் என்னும் குளத்தை, உடலின் ஆறு ஆதாரங்களின் வழியே பாய்ந்து செல்லும் அருவியாகிய உயிர்சக்தி வந்து நிரப்பும். கீழே உள்ள உயிர்சக்தியை மேல்நோக்கிச் செலுத்தும் சிவகதி மிகவும் நுண்ணியது. சீவன் பெறும் சிவகதியின் முடிவில், குவிந்த முலைகளை உடைய சக்தி தேவியுடன் அனைத்துக்கும் வேறாக இருக்கும் மேலான சிவமும் விளங்கும்.

#2980. என் பொன்மணி இறைவன் ஈசன்

அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே.

இறைவன் என் மேல் காட்டிய பெருங் கருணையை எண்ணி எண்ணி நான் அன்பினால் உள்ளம் உருகுவேன்; அரற்றுவேன்; என்பு உருகுவேன்; இரவு பகல் பார்க்காமல் அவனை ஏத்துவேன்;என் பொன்மணி போன்றவன் என் ஈசன், என் இறைவன். அவனை நான் அன்பின் மிகுதியால் தின்பேன்; கடிப்பேன்; அவனை எனக்கு உரியவன் ஆக்கிக் கொள்வேன்!

#2981. மனம் விரிந்து உரை மாண்டது முத்தியே

மனம்வி ரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது வாயு
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை மாண்டது முத்தியே.

மாதவம் என்பது என்ன என்று அறிவீரா?

உள்ளம் உலகக் கவர்ச்சியில் வெளியே சென்று, விரிந்து, பரந்து, பல துன்பங்களை அடைந்து, பின்பு அடங்கி ஓடுங்குவதே உண்மையான தவம். மனம் விரிந்து பின் அடங்கியவருக்கு பிராணனும் அடங்கி விடும். கும்பக நிலை வந்து பொருந்தும். விரிந்து பின்னர் குவிந்த மனம் உயிரில் ஒடுங்கும். அப்போது மௌனம் ஓங்கும். பேச்சு இல்லாத பேரானந்தம் ஏற்படும். இதுவே சீவனின் முத்திநிலை ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
21. தோத்திரம்

இறைவனைப் புகழ்ந்து பாடுவது தோத்திரம்.

#2982. காய மின்நாட்டில் கண்டு கொண்டேன்!

மாயனை நாடி மனநெடுந் தேரெறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காயம்மின் நாட்டிடைக் கண்டுகொண் டேனே.

ஊனக் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து உறையும் மாயக் கள்வனைத் தேடி, மனம் என்னும் தேரில் ஏறி, அலைந்து திரிந்த நாடுகளின் கணக்கையோ அல்லது இயல்பையோ கூற முடியாது என்று புலம்பித் திரிவர் அறிவற்றவர்கள். நானும் அவ்வண்ணமே பல நாடுகளில் சென்று தேடித் திரிந்தேன். அவனைக் காணாமல் வருத்தம் அடைந்தேன். பின்னர் மின்னல் போலத் தோன்றி மறைகின்ற மனித உடலில் நான் தேடிக் காணமுடியாத ஈசன் இருப்பதைக் கண்டு கொண்டேன்.

#2983. முன்னியலில் முதல்வனைப் பன்னியவர்

மன்னு மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவர் ஆரெனில்
முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
பன்னினர் என்றே பாடறி வீரே.

பிரணவ யோகம் பொருந்திய தலையின் மீது, சத்துவ அகங்காரத்தின், சிகரத்தில் இன்னிசை பாட இருப்பவர் யார் அறிவீரா ? முன்னமே பலகாலமாக ஒப்பற்ற முதல்வனின் திரு நாமத்தைப் பன்னிப் புகழ்ந்தவர்களே அவர்கள் என்று அறிந்து கொள்வீர்!

#2984. அத்தனைக் காணாதவன் பித்தன்

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணாது அரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே.

முத்துக்களில் சிறந்த ஆணிமுத்துப் போன்றவனை, உதிக்கின்ற இளம் ஞாயிறு போன்று ஒளிவீசும் இறைவனை, அத்தனை வானோர்களும் ஏத்தும் என்

இறைவனை, என் அத்தனைக் காணாமல் புலம்பித் திரிகின்ற என்னை ஒரு பித்தன் என்று உலகத்தோர் பேசுகின்றார்களே!

#2985. புண்ணிய மூர்த்தியைப் போற்றுகின்றேனே!

புகுந்துநின் றான்எங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றான்எங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே.

புண்ணியம் செய்தவர்களால் உணரப்படும் சிவசூரியன் என்னிடம் புகுந்து நின்றான். அவ்வண்ணம் புகுந்து நின்றவன் ஒரு போதறிவாளன். தன் அடியார்களின் உள்ளத்தில் அன்புடன் புகுந்து நின்றான் சிவன். அவ்வாறு என்னிடம் வந்து புகுந்து நின்ற என் புண்ணிய மூர்த்தியை நான் போற்றிப் புகழ்ந்து வழிபடுகிறேன்!

#2986. கீதக் கண்ணாடியில் கேட்டு நின்றேன்!

பூதக்கண் ணாடியில் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படு
நீதிக்கண் ணாடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியில் கேட்டுநின் றேனே.

சகசிரதளத் தாமரையில் இருக்கும் ஈசன், சீவர்களின் ஊனக் கண்களுக்குப் பூதக் கண்ணாடி வழியாகவும் தெரிய மாட்டான். அவன் வேதக் கண்ணாடியில் நோக்கும் அன்பர்களின் ஞானக் கண்களுக்கு வெளிப் படுவான். நீதிக் கண்ணாடியில் நிற்கின்றவர் மனதில் அவன் நிறைந்து உள்ளான். நான் அவனைக் கீதக் கண்ணாடியில் நாதமயமாகக் கண்டு கொண்டேன்.

#2987. நாதன் நாமம் ஓராயிரம் ஓதுமின்!

நாமம் ஓர் ஆயிரம் ஓதுமின் நாதனை
ஏமம் ஓர் ஆயிரத் துள்ளே இசைவீர்கள்
ஓமம்ஓர் ஆயிரம் ஓதவல் லார்அவர்
காமம் ஆயிரம் கண்டொழிந் தாரே.

சிவபெருமானை அவனது ஆயிரம் நாமங்களைக் கூறி வழிப்படுவீர்!ஓராயிரம் நன்மைகளையும், மேன்மைகளையும் நீர் அடைவீர்! சென்னி மேல் சிந்தையைச் செலுத்தி சிவபெருமானின் ஆயிரம் நாமங்களை ஓதுபவர்கள் ஆயிரம் அற்ப ஆசைகளில் இருந்து விடுபடுவர்!

#2988. தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தைப்
போற்றுகின் றேன்எம் பிரானென்று நானே.

சிவபெருமான் எனக்கு அளித்த ஞானத்தினால் நான் அவன் புகழைப் போற்றுகின்றேன். சிவன் சேவடிகள் சென்னிமேல் விளங்கும் விந்து நாதங்கள் என்று நான் தெளிவு அடைந்தேன். சிவயோகத்தில் பெருமையை எல்லோரும் அறியும்படி நான் பறை சாற்றுகின்றேன். சிவனை எம்பிரானென்று நான் புகழ்ந்து போற்றுகின்றேன்.

#2989. நானாவிதஞ் செய்து நந்தியை நாடுமின்!

நானா விதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊனார் கமலத்தின் ஊடுசென்று அப்புறம்
வானோர் உலகம் வழிபட மீண்டபின்
தேனார உண்டு தெவிட்டலும் ஆமே.

பலவகைப் பட்ட தொண்டுகள் செய்து சிவபிரானை நீங்கள் நாடுவீர்! உடலில் உள்ள ஆறு ஆதாரத் சக்கரங்களில் நடுநாடி வழியே மேலே சென்று, வானோர் உலகம் உம்மை வழிபடுமாறு செய்து, மீண்டு வந்த பின்பு, தூய சிவானந்தத் தேனைத் தெவிட்டும் அளவுக்கு உண்ணலாம்.

#2990. அந்தர வானத்தின் அப்புறம் ஆகுமோ?

வந்துநின் றான்அடி யார்கட்கு அரும்பொருள்
இந்திரன் ஆதி இமையவர் வேண்டினும்
சுந்தர மாதர் துழனியொன்று அல்லது
அந்தர வானத்தின் அப்புறம் ஆமே.

அடியவர் உள்ளத்தில் அரும் பெரும் பொருளான சிவம் வந்து நிலை கொள்வான். இந்திரன் முதலிய இமையவர் வேண்டிக் கொண்டாலும் அவர்களுக்குச் சுந்தர மாதர்களின் இன்னிசை விருந்து கிடைக்குமே அன்றி அந்தர வானத்தின் அப்புறம் ஆகிய முத்தி கிடைக்குமோ?

#2991. தெண்ணீர் படுத்த சிவன் உள்ளான்

**மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன் இவன்என்னார்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணீர்ப் படுத்த சிவன்அவன் ஆமே.**

கலங்கிய சேற்று நீரில் தூயநீரின் தன்மை தெரியாது. அது போன்றே உடல் பற்றினால் கலங்கிய மனத்தினை உடையவர்கள் இறைவனின் தூயதன்மையை அறியார். கலங்கிய குடிநீரை ஒரு குடத்தில் முகந்து வைத்தால் அது சிறிது நேரத்தில் தெளிந்துவிடும். அது போன்றே சீவன் தன் கலங்கிய சிந்தையைத் தெளிவிப்பதற்கு அதைச் சிவன் மீது செலுத்திக் காத்திருக்க வேண்டும். சித்தம் தெளிந்தவுடன் சீவன் சிவன் ஆவான்.

#2992. கைத்தலம் சேர்தரும் நெல்லிக்கனி

**மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலம் சேர்தரு நெல்லிக் கனியொக்கும்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந் தொழிந் தேனே.**

மெய்த் தவத்தான் ஆகிய சிவபிரானை விரும்பும் மெய்யன்பருக்கு அவன் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளத் தெளிவாகத் தோன்றுவான். எனவே நானும் தூயவனும், தூய நெறியாய் விளங்குபவனும் ஆகிய நம் தேவதேவனை உளமாற விரும்பினேன். அவனிடம் இரண்டறப் பொருந்தினேன். உலகக் கவர்ச்சியையும், என் இருவினைகளையும் கடந்து நின்றேன்.

#2993. புகைந்து எழும் பூதலம்.

**அமைந்தொழிந் தேன்அள வில்புகழ் ஞானம்
சமைந் தொழிந் தேன்தடு மாற்றம்ஒன் றில்லை
புகைந் தெழும் பூதலம் புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலும் ஆமே.**

அளவில்லாத புகழை உடைய ஞானத்தைப் பெற்று, நான் தத்துவக் கூட்டங்களிலிருந்து விடுபட்டு நின்றேன். என் எண்ணங்களில் சிறிதும் தடுமாற்றம் இல்லாமல் இருந்ததால் நான் சிவ வடிவம் பெற்று நின்றேன். அதனால் இருளாகிய மலங்களில் நான் இருந்து விடுபட்டேன். மூலாதாரத்தீ புகைந்து எழுந்து சென்னியை அடைந்த போது, ஒளிபொருந்திய புண்ணிய மூர்த்தி என்னிடம் வந்து பொருந்தினான். சீவனின் உடல் வேறு, அந்த உடலின் உடமையாளன் ஆகிய ஆன்மா வேறு என்று வகைப்படுத்தி எனக்கு விளங்கச் செய்த வள்ளல் ஆனான்.

#2994. உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருப்பான்

வள்ளல் தலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேதமுதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொலோஎன்று
உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருந்து ஆளுமே.

வள்ளல் தன்மை உடைய என் தலைவன், வான நன்னாட்டின் அதிபதி; கங்கை புனைந்த சடையான்; வேதங்களின் முதல்வன்; கள்ளத் தன்மை படைத்த கீழோர் தன்னைக் காணக்கூடாது என்று எண்ணி அவர்கள் உள்ளத்தில் ஒளிந்திருந்து அவர்களை ஆளுவான்.

#2995. மலர் பதம் தந்த கடவுள்

ஆளும் மலர்ப்பதம் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்கும் குரிசிலின்
வாளும் மனத்தொடும் வைத்தொழிந் தேனே.

தன் மலர்பாதங்களை எனக்குத் தந்து என்னை ஆண்டு கொண்டவன் இறைவன். அவன் தன்னை நாடொறும் வழிபட்டு நன்னெறியில் நின்பவர்களின் தீய குணங்களையும், தீய செயல்களையும் அறுத்துக் களைவான். நானும் ஒளியை விரும்பி என் மனத்தை அவன்மேல் வைத்து உலகப் பற்றினை ஒழித்து விட்டேன்.

#2996. அவன் திருவடிகள் தருபவை

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்
வருந்தி அவனடி வாழ்த்தவல் லார்க்கே.

சிவன் பிரிவை எண்ணி எண்ணி வருந்தி அவன் அடிகளை வாழ்த்தி வணங்குபவருக்கு அந்தத் திருவடிகள் தருபவை எவை? சிவனை விரும்புபவர்களுக்குச் சிவன் திருவடிகளே வீரசுவர்க்கம்; அவன் திருவடிகளைப் பொருந்துவதே புண்ணிய லோகத்தை அடைவது ஆகும். அவன் திருவடிகளே அவர்களுக்குப் புண்ணிய தீர்த்தமும் ஆகும்.

#2997. வானகம் ஊடறுத்தான்

வானகம் ஊடறுத் தான்இவ் வுலகினில்
தானகம் இல்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந்து உள்ளூறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே.

விண்ணைக் கடந்து விளங்குபவன் சிவன்; இந்த உலகில் தனக்கு என்று ஓர் உடல் இல்லாதவன் சிவன்; அனைவரின் உடலும் அவன் உடலே! அறிவு மயமானவன் சிவன்; சீவனின் குருநாதன் ஆகியவன் சிவகுரு, சீவனிடம் பொருந்தியுள்ள அறியாமை என்ற வாழைக் கனியை அழித்துவிட்டு, ஞானம் என்னும் பானகத்தைத் தருகின்ற பரஞ்சோதியை நான் பற்றி நின்றேன்!

#2998. தொல்வினைப் பற்று அறுவிக்கும்!

விதியது மேலை அமரர் உறையும்
பதியது பாய்புனல் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
பதியது வவ்விட்டது அந்தமும் ஆமே.

சீவனின் தலையெழுத்து ஆவது அதன் அறிவாகாயத்தின் ஒளியே! இதுவே தேவர்கள் வசிக்கும் இடம். இங்கு வான் கங்கை உள்ளது. துதிப்பதற்குத் தகுதி வாய்ந்தது இது. தொல்வினைகளைப் பற்றறுத்திடும் அருட்சக்தியின் பதி இதுவே. உலகைத் தாண்டிய முடிவு நிலை இதுவே!

#2999. ஆனது செய்யும் எம் ஆருயிர் தானே

மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதுஅனங்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யும்என் ஆருயிர் தானே.

அறிவாகாசத்தில் மேலே இருப்பவர்கள் வானவர்கள். அதற்கு கீழே மாதவர்கள் இருப்பர். துன்பங்களில் சிக்கித் தவிக்கும் மானிடர் அதற்கும் கீழே இருப்பர். அறிவும் ஆனந்தமும் பொருந்திய சக்தி தேவி, வில்வமாலை சூடிய சிவனுடன் அங்கு பொருந்தி இருப்பாள். உயிர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் அவள் செய்வாள்.

#3000. திரு ஐந்தெழுத்தின் மன்னன்

சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை
ஏழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையும் அடவியும் அங்குளன்
வாழும் எழுந்தைந்து மன்னனும் ஆமே

பாற்கடலில் பொங்கித் திரண்ட கரிய நஞ்சினை உண்டு அதைத் தன் கண்டத்தில் அடக்கியவன் சிவன். ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் கருவானவன் ஆயினும் பிறப்பிலி! ஆழ்ந்த சுனைகளும், காடும் நிரம்பிய கயிலை மலையில் அவன் உறைவான். சீவனை வாழ வைக்கும் திரு ஐந்தெழுத்துக்களில் குடி இருப்பவனும் அவனே!

#3001. திகைத்தேவர் பிரான்

உலகமது ஒத்துமண் ஒத்ததஉயர் காற்றை
அலர்கதிர் அங்கிஓத்து ஆதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீர்ஒத்து மீண்டுஅச்
செலவுஒத்து அமர்திகைத் தேவர் பி ரானே.

உலகத்தில் உள்ள உயிர்த்தொகைகளின் உயிராகவும், நிலத்தின் மண்ணாகவும்,வீசும் உயர்ந்த காற்றாகவும், சூரியன், சந்திரன், அக்கினி என்பவைகளாகவும், பெரிய மேகம் பொருந்துகின்ற வானம் ஆகவும், அதன் நீராகவும் அனைத்துமாக விளங்குபவன் சிவன். அவனே அவற்றை அழிப்பவனாகவும், திசைத் தேவர்களின் தலைவனாகவும் இருக்கின்றான்.

#3002. பரிசறிந்து அங்குளான்

பரிசறிந்து அங்குளன் அங்கி அருக்கன்
பரிசறிந்து அங்குளன் மாருதத்து ஈசன்
பரிசறிந்து அங்குளன் மாமதி ஞானப்
பரிசறிந்து அந்நிலம் பாரிக்கும் ஆறே.

அக்கினி, கதிரவன் இவற்றின் தன்மையை அறிந்த சிவன் அவற்றுள் அதற்கேற்பப் பொருந்தி இருப்பான். காற்றின் தன்மைக்கு ஏற்ப அதில் பொருந்தி இருப்பான். மதி மண்டலத்தின் தன்மை அறிந்து அதில் பொருந்தும் ஈசன் அந்த சந்திர மண்டலத்தைப் பெருக்கிச் சீவனின் அறிவு விளங்கச் செய்வான்.

#3003. தந்த உலகு எங்கும் தானே பராபரன்

அந்தங் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
பந்த வுலகினிற் கீழோர் பெரும்பொருள்
தந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாமே.

ஐம்பெரும் பூதங்கள் சிவனால் அழிக்கப்பட்டாலும் அவை நுட்பமான ஒளி அணுக்களாக மாறிச் சிவசோதியில் திகழும். சீவனைப் பதப்படுத்தும் உலகில் தன்னை அடைந்தவர்களைத் தாங்கும் பொருளும் சிவனே. தான் படைத்து அளித்த உலகம் அனைத்துக்கும் தானே பராபரன் ஆவான். பக்குவம் அடைந்துவிட்ட சீவனுக்குத் தானே சிவகுருவாக வந்து அருள் புரிவதே அவன் மாண்பு!

#3004. அத்தன் உருவம் உலகேழு எனப்படும்!

முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தனின் பாதாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே.

வீடுபேறு எனப்படும் சிவலோகம் சிவபெருமானின் திருமுடியாகும்ஏழு உலகங்களும் அவன் திருமேனியாகும். அவன் திருவடிகள் பாதாளம் ஏழினுக்கும் கீழே ஊடுருவி நிற்கும். அறிவற்றவர்கள் பெருமானின் இந்த சிறப்பினை உணர்ந்தும், அறிந்தும் அகம் மகிழ இயலாதவர்.

#3005. ஆதிப் பிரான் நடுவாகி நின்றான்!

ஆதிப் பிரான்நம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானே.

நம் அனைவரையும் நடத்திச் செல்லும் லைவன் சிவன்; முத்தி உலகில் அவன் கதிரவன், திங்கள், அக்கினி என்னும் முச்சுடர்களாகப் பேரொளி வீசுவான். மேலே உள்ள அண்டங்களுக்கு மேலாக இருப்பவன் அவனே. கீழே உள்ள அண்டங்களுக்குக் கீழாக இருப்பவனும் அவனே. இந்த உலகங்களின் நடுவாகி நின்று அவற்றை நடத்துபவனும் அவனே!

#3006. அண்டம் கடந்த பெருமையன்

அண்டம் கடந்துஉயர்ந்து ஓங்கும் பெருமையன்
பிண்டம் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த கனைகழல் காண்டொறும்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கிநின் றானே.

அண்டங்களைக் கடந்து ஓங்கி இருக்கும் பெருமை வாய்ந்தவன் சிவன்; உருவம் பொருந்தி இருக்கும் தாழ்ந்த பிறவிகளின் நிலைகளைக் கடந்து நிற்பவன் அவன்; ஒலிக்கின்ற தன் திருவடிகளை நாடி நடந்து வரும் தொண்டர்களைத் தூயநெறியில் அழைத்துச் செல்பவனும் அவனே!

#3007. பொன்னிறமாகி நின்றான்!

உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ
நிலம்முழுது எல்லாம் நிறைந்தனன் ஈசன்
பலம்முழுது எல்லாம் படைத்தனன் முன்னே
புலம்முழு பொன்னிற மாகிநின் றானே.

பெருங் கடல் சூழ்ந்த பரந்த நிலவுலகில் ஈசன் நிறைந்து நிற்பது அதில் உலவும் எண்ணம் கொண்டு இருப்பதனால்! சீவராசிகளுக்குத் தேவையானவற்றை அவன் உலகில் முன்னரே படைத்துவிட்டான். அவன் உலகினரைக் காக்கவேண்டிப் பொன்னிறம் ஆகி நிற்கின்றான்.

#3008. நிராபரனாகி நிறைந்து நின்றான்

பராபர னாகிப் பல்லூழிகள் தோறும்
பராபர னாய்இவ் அகலிடம் தாங்கித்
தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே.

தானே பரனாகவும், அபரனாகவும் விளங்குபவன் சிவன். பல ஊழிகளில் தானே நுண்மையாகவும், பருமையாகவும் விளங்குபவன் சிவன். தானே பூமியைத் தங்கி வருவதை உலகத்தோர் உணர்ந்து கொள்ளவில்லை. அவன் ஆன்ம எல்லைகளைக் கடந்து ஆன்மாவிலும் நிறைந்து நிற்கின்றான்.

#3009. போற்றும் தெய்வம் தானே!

போற்றும் பெருந்தெய்வம் தானே பிறரில்லை
ஊற்றமும் ஓசையும் ஓசை ஒடுக்கமும்
வேற்றுடல் தானென்றும் அதுபெருந் தெய்வமாம்
காற்றது ஈசன் கலந்து நின்றானே.

போற்றுதலுக்கு உரிய பெருந்தெய்வம் சிவனன்றி வேறு எவரும் இல்லை. சீவனுக்கு ஆதாரமாகிய உடலும், அந்த ஆதாரத்தைக் கடந்து நிற்கும் நாதமும், அந்த நாதத்தைக் கடந்து நிற்கும் நாதாந்தமும், அகண்ட வடிவமும் ஆகிய சிவனே அனைத்துத் தெய்வங்களிலும் பெரிய தெய்வம் ஆவான். பருமை, நுண்மை என்ற இரண்டையும் ஒன்றாக இணைக்கும் பிராணசக்தியும் நம் சிவனே!

#3010. திகையனைத்தும் சிவனே!

திகையனைத் தும்சிவ னேஅவ னாகின்
மிகையனைத் தும்சொல்ல வேண்டா மனிதரே
புகையனைத் தும்புறம் அங்கியிற் கூடு
முகையனைத் தும்எங்கள் ஆதிப் பிரானே.

அனைத்துத் திசைகளும் நம் சிவனே! அவனுக்கு மேலான தெய்வம் ஒன்றுண்டு என்று நீங்கள் சொல்ல வேண்டாம் மனிதர்களே! புகை மேலே உயரத்தில் காணப்பட்டாலும் அது தீயிலிருந்து எழும்பியதே. மேலாகக் காட்சி தரும் பொருட்கள் எல்லாம் சிவன் என்னும் ஆதிப்பிரானிடம் இருந்து தோன்றியவை என்று அறிவீர்!

#3011. சிவன் தான் பலப்பல சீவன் ஆவான்

அகன்றான் அகலிடம் ஏழும்ஒன் றாகி
இவன்தான் எனநின்று எளியனும் அல்லன்
சிவன்தான் பலபல சீவனு மாகி
நவின்றான் உலகுறு நம்பனும் ஆமே.

மேல் உலகங்கள் ஏழு, கீழ் உலகங்கள் ஏழு என்ற எல்லா உலகங்களும் சிவனே! அவனே அவற்றில் இருந்து வேறாகவும் நிற்பான்! சிவன் அனைத்துருவாக இருந்த போதிலும், இவனை எவராலும் காண இயலாது. பலப்பல சீவராசிகளின் உயிராக இருந்து அவற்றைச் செலுத்துபவன் சிவனே! சீவன் நம்புவதற்கு உரிய ஒரே தெய்வம் சிவனே!

#3012. உள்ளூறும் உள்ளவன் சிவன்

கலையொரு மூன்றும் கடந்தப்பால் நின்ற
தலைவனனை நாடுமின் தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் உரைப்பன்
உரையில்லை உள்ளூறும் உள்ளவன் தானே.

தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக் கலை என்ற மூன்றினையும் கடந்து அவற்றுக்கு அப்பால் நிற்பவன் சிவன். அந்தத் தலைவனை நீங்கள் விரும்பி

நாடுங்கள்! அனைத்துத் தத்துவங்களுக்கும் அவனே தலைவன்! அவன் நம்மால் விலை மதிக்க முடியாதவன்! அவனைத் தேவர்களுள் ஒருவனாகப் பிற தேவர்களைப் போல எண்ணுவது தவறு. சிந்தையை அவன் மேல் நிலை நாட்டி இடையறாது அவனைக் குறித்து எண்ண எண்ண உங்களிடம் நன்கு விளங்குவான் சிவன்.

#3013. அன்பு கொண்டேனே!

படிகால் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம் அறுத்துச்
செடியார் தவத்தினில் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத்து அன்புகொண் டானே.

பல பிறவிகள் தொடரக் காரணம் ஆகிய என் பாசத்தை சிவன் அறுத்துக் களைந்தான். காக்கும் தெய்வம் திருமால் எனக்குள் பெருக்கிய உலகப் பொருட்களின் மேலே உள்ள விருப்பங்களை ஒழித்தான். அட்டாங்க யோகத்தால் விளையும் துன்பங்களைப் போக்கினான். இங்கனம் தானே உவந்து வந்து என்னை உய்வித்த பிரானிடம் நான் அன்பு கொண்டேனே!

#3014. வாசமலர் போல மருவி நின்றானே

ஈசனென்று எட்டுத் திசையும் இயங்கின
ஓசையில் நின்றெழு சத்தம் உலப்பிலி
தேசமொன்று ஆங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவி நின் றானே.

ஈசன் திருவடிகளே எட்டுத் திசைகளையும் இயங்க வைத்தன. வைகரி வாக்குக்கு நாதம் அடிப்படையாக இருப்பதைப் போல சிவன் எப்போதும் அழியாது இருப்பவன். நிலம், நீர், தீ, காற்று, வானம், கதிரவன், மதி, அக்கினி, ஆன்மா ஆகியவற்றில் மலரில் மணம் போலக் கலந்து விளங்குகின்றான்.

#3015. சொல்லரும் சோதி

இல்லனும் அல்லன் உளன் அல்லன் எம்இறை
நல்லது நெஞ்சம் பிளந்திடும் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லரும் சோதி தொடர்ந்துநின் றானே.

எம் பெருமான் நம் புறக் கண்களுக்குத் தோன்றுவதில்லை. அகக் கண்களுக்குத் தோற்றம் தருகின்றான். அதனால் அவன் இல்லாதவன் என்று எண்ணிவிடக் கூடாது. ஆனால் அவன் உள்ளவனும் அல்ல. கல் நெஞ்சைக்

கரைத்துக் கொண்டு நிற்பவர்களுக்கு அவன் காட்சி தருபவன்; அவன் பழமையானவன்; அவன் தூய்மை ஆனவன்; அவன் எந்தவிதத் தடுமாற்றம் இல்லாதவன்; அவன் தூய மாணிக்கத்தைப் போன்றவன், சொல்வதற்கு அரிய பேரொளியாகிய சிவன் சீவர்களை ஒளியாகவும், இருளாகவும் தொடர்ந்து அருள் புரிகின்றான்.

#3016. கமழ் சடை நந்தி

உள்ளத் தொடுங்கும் புறத்துளும் நானெனும்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற்பெருமை வழக்கஞ்செய் வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்துநின் றானே.

சீவனின் உள்ளம் என்னும் மன மண்டபத்தில் ஒடுங்குபவன் சிவன். சீவன் உலகக் கவர்ச்சியில் சிக்கி இருக்கும் போதும் அவன் சீவர்களுக்கு உள்ளே நிலை பெற்றவன். அவ்வமயம் கள்ளத் தலைவன் ஆகிய கமழ் சடைநந்தி, அந்த சீவனின் பொறிகளை இயக்குகின்றான். அவன் வள்ளல் தன்மையை உணர்ந்து கொண்டு அவனைச் சிந்திக்கும் அன்பர்களின் பிறவிப் பிணியை அறுத்துத் துன்பங்களில் இருந்து விடுவிக்கின்றான்.

#3017. குரை கழல் நாடுவர்

மாறெதிர் வானவர் தானவர் நாடொறும்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவர் உள்ளத்து அகத்தும் புறுத்துளும்
வேறுசெய்து ஆங்கே விளக்கொளி யாமே.

எதிரம் புதிருமாக உள்ள வானவர்களும், தானவர்களும் நாள் தோறும் தோத்திரம் செய்து; கழல்கள் ஒலிக்கும் ஈசன் திருவடிகளைத் தொழுவர். ஆனால் அவன் அடியவர்களோ எனில் அகமும் புறமும் ஒருமித்து இருக்கும்படி அவன் உதவுகின்ற தன்மையை எண்ணி உள்ளம் கசிந்து இருப்பர். அந்த மெய்யடியார்களின் ஊனால் ஆகிய உடலை நீக்கி, உணர்வினைப் பெருக்கி, விளக்கொளியாக இருந்து உதவுவான்.

#3018. எண்ணில் ஆனந்தம் எங்கள் பிரானே!

விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணில் ஆனந்தமும் எங்கள் பிரானே.

இந்த விண்ணும் சிவன் மேனியே! அந்த வெளியும் அவன் மேனியே! சிவன் புறக்கண்களுக்குக் காட்சி தர மாட்டான். அகக்கண்களுக்கு அவன் காட்சி தருவான். பண்புடன் கூடாத வெறும் வாய்த் தோத்திரங்களுக்கு அவன் வசப்படமாட்டான். உள்ளன்போடு அவனை நாடினால் அவனும் வெளிப்பட்டு அருள்வான்.எண்ணில்லாத ஆனந்தத்தை சீவனுக்குத் தருபவன் சிவனே அன்றோ!

#3019. நித்திலச் சோதியன் நீலக் கருமையன்

உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரே.

எந்தைப் பிரான் ஓர் உத்தமன், அனைவரும் விரும்பும் ஆனந்தக் கடல். நல்ல முத்தைப் போன்று ஒளிர்பவன்; வெண்மை நிற ஒளியிலும், நீலக் கருமை ஒளியிலும் விளங்கும் ஈசனை இடையறாது சிந்திக்கும் ஞானியர் தம் அன்பால் உணர்ந்த கொள்வர். சித்தரும், அமரரும் ஆராய்ச்சி செய்த பின்பும் அவனைத் தேர்ந்து தெளிய மாட்டார்கள்!

#3020. புறம் பல கண்டும் போற்றுகில்லர்

நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே.

எந்த அளவுக்குச் சாதகனின் முகத்திற்கு முன்பு நிறங்கள் தெரிகின்றனவோ, அந்த அளவுக்கு ஈசன் தன்னை அவனுக்கு வெளிப்படுத்துவான். எந்த அளவுக்கு அறம் கடைப்பிடிக்கப் படுகின்றதோ அந்த அளவுக்கு இன்பம் வந்து அமையும். எந்த அளவுக்கு அதர்மம் கடைப் பிடிக்கப்படுகின்றசிதோ அந்த அளவுக்கு பாவம் வந்து சேரும். இந்த உண்மைகளை உணர்ந்து கொண்டிருந்த போதிலும் மக்கள் அதன்படி நடப்பது இல்லையே!

#3021. பொங்கி நின்றான் புவனபதி

இங்குநின் றான்அங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் றான்புவ னாபதி புண்ணியன்
கங்குல்நின் றான்கதிர் மாமதி ஞாயிறு
எங்குநின் றான்மழை போல்இறை தானே.

சிவன் இங்கு இருக்கின்றான்; அங்கு இருக்கின்றான்; எங்கும் இருக்கின்றான்; பொங்கி நிறைந்து இருக்கின்றான்; புவனத்தின் அதிபதி புண்ணிய மூர்த்தியாகிய சிவன் சீவனின் அஞ்ஞான இருளிலும் நிற்கின்றான்; ஞான ஒளியில் கதிரவன் போன்றவன்; அவன் அருள் மழை எங்கும் நிறைந்திருக்கும்.

#3022. உணர்வு, உடல், அண்டம் ஆகி நின்றான்

உணர்வது வாயுவே உத்தம மாயும்
உணர்வது நுண்ணறிவு எம்பெரு மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமும் ஆகிநின் றானே.

சீவனின் உணர்வும் சிவனே; சீவனின் உடலும் சிவனே; இவற்றிலும் உன்னதமாகிய சீவனின் சூக்கும அறிவும் அவனே; சீவனுடன் புணர்ந்து இருப்பவனும் அவனே; அனைத்திலும் நுட்பமானவனும் அவனே; சீவனின் ஆண்ட ஆகாயத்திலும் அதன் உயிரிலும் நிலை பெற்று ஒளிர்பவன் சிவனே!

#3023. உலகு எழும் தரித்தவன்

தன்வலி யால்உல கேழும் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினும் தான்நொய்யன்
தன்வலி யால்மலை எட்டினும் தான்சாரான்
தன்வலி யாலே தடம்கட லாமே.

ஈசன் தன் வலிமையால் ஏழு உலகங்களையும் தரிக்கின்றான்; தன் ஆற்றலினால் அணுவைக் காட்டிலும் நுட்பமானதாகவும் இருக்கின்றான்; எட்டுப் புகழ்பெற்ற குல மலைகளும் அவன் வலிமைக்கு நிகர் ஆகா. அவன் அகன்ற கடலிலும் தன் ஆற்றலால் நிறைந்து இருக்கின்றான்.

#3024. தானே அறியும் தவத்தின் அளவே!

ஏனோர் பெருமையன் ஆகிலும் எம்இறை
ஊனே சிறுமையும் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

எம் பெருமான் சிவன் அனைத்துத் தெய்வங்களிலும் மேலானவன். என்றாலும் ஊனால் ஆகிய சிறிய உடலிலும் அதன் உணர்வாகக் கலந்து பரவி இருக்கின்றான். வானோர்களாலும் அவன் பெருமையை அறிந்து கொள்ள முடியாது; அந்த மகாதேவன் சீவன் செய்யும் தவத்துக்கு ஏற்ப சீவனால் அறியப்படுகின்ற சிறப்பினை உடையவன்.

3025. உண்டனர் உண்டார் உணர்வில் மூடர்கள்!

பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமுளைக்
குண்டாலம் காயத்துக் குதிரை பழுத்தது
உண்டனர் உண்டார் உணர்விலா மூடர்கள்
பிண்டத்துஉட் பட்டுப் பிணங்குகின்றார்களே.

பிண்டம் ஆகிய சீவனின் உடலில் ஆலவிதையைப் போல எழும் அதன் சீவசக்தி. அது ஆலமரம் போன்ற சீவனின் உடலில் மேல் நோக்கிச் சென்று பக்குவம் அடைந்த பின்னர் சிரசில் ஒளியினைக் கண்டது. அந்த சீவன் அந்த ஒளியில் ஆனந்தமாகத் திளைத்து இருந்தது. இவ்வாறு செய்ய அறியாத மூடர்கள் உடலே பெரியது என்று எண்ணி அதன் இச்சைகளைப் பூர்த்தி செய்து விஷய சுகத்தில் திளைத்தனர். உடலைக் கடந்து சென்று சிரசில் உள்ள ஒளியைக் காண இயலாமல், உடலை பெரிதென மயங்கும் இவர்களின் பேதைமை தான் என்னே!

ஒன்பதாம் தந்திரம் -
22. சர்வ வியாபி

சிவன் அனைத்துப் பொருட்களிலும் வியாபித்து எங்கும் நிறைத்திருப்பவன் என்ற உண்மை.

#3026. சாயும் தனது வியாபகம் தானே

ஏயும் சிவபோகம் ஈதன்றி ஓரொளி
ஆயும் அறிவையும் மாயா உபாதியால்
ஏய பரிய புரியும் தனதுஎய்தும்
சாயும் தனது வியாபகம் தானே.

ஞானப் பயிற்சியினால் சீவனுக்குச் சிவானுபவம் கிடைக்கும். ஆராய்ந்து பெற்ற அறிவையும், மாயையியின் காரியமாக விளைந்த உடலையும், தன் வசப்படுத்திக் கொண்ட சீவன் தன் விஷய வாசனைகளை வென்று விடும். அதனால் அந்த ஆன்மா நிறைவு எய்தும்.

#3027. உயிர்க்கின்ற ஒண்சுடர்

நான்அறிந்து அப்பொருள் நாடஇடம் இல்லை
நான்அறிந்து அங்கே வழியுற விம்மிடும்
ஊன்அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தான்அறிந்து அங்கும் தலைப்பட லாமே.

நான் அறிந்த சிவபெருமான் அங்கும், இங்கும், எங்கும் நிறைந்திருப்பதால் அவரைச் சென்று அடைய எங்கும் செல்ல வேண்டுவது இல்லை. சென்னியில் உள்ள வான மண்டலத்தை அறிந்து கொண்டு அதனை வழிபட்டால் அது மேலும் சிறந்து விளங்கும். சீவன் தன் உடலின் தன்மையையும், தன்னுள் ஒளிர்கின்ற உயிரின் தன்மையையும் உள்ளபடி அறிந்து கொண்டு விட்டால் அதன் பின்னர் எங்கு வேண்டுமானாலும் செல்லவும், அங்கிருந்து மீண்டு வரவும் ஆற்றல் பெற்று விடும்.

#3028. கடலின் மலிதிரைக் காணலும் ஆமே

கடலிடை வாழ்கின்ற கௌவை உலகத்து
உடலிடை வாழ்வுகண்ட உள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்
கடலின் மலிதிரைக் காணலும் ஆமே..

சீவனின் உலக வாழ்வு என்பது ஓயாத கடல் அலைகள் போல ஓயாத துன்பங்களைக் கொண்டது. சீவன் தன் உடலில் வாழ்கின்ற போதே தனக்குள் ஒளிர்கின்ற சோதியை நாட வேண்டும். தன் உடலில் உறைந்திருக்கும் சிவனைக் கண்டுகொண்ட பின்னர், அலைகள் போன்ற துன்பங்களைத் தாண்டிச் சென்று சீவன் கரை சேர முடியும்!

#3029. பெருஞ்சுடர் மூன்றுக்கும் உள்ளொளி சிவன்

பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி யாகித்
தெரிந்துட லாய் நிற்கும் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட்டு இகலிடம் எல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே.

தேவர் பிரான் ஆகிய சிவன் கதிரவன், திங்கள், அக்கினி என்ற மூன்று பெருஞ் சுடர்களிலும் அவற்றின் உடலாக விளங்கி அவற்றுக்கு ஒளியைத் தருபவன். இந்தச் சுடர்களில் இருந்து மாறுபட்டு நிற்கும் இருண்ட உலகில் அவனே சீவர்களைப் பரிவுடன் தொடரந்து செல்லும் நுண்ணியவனும் ஆவான்.

3030. சிறுதியில் உள்ள திப்பிய மூர்த்தி

உறுதியின் உள்வந்த உள்வினைப் பட்டு
இறுதியின் வீழ்ந்தார் இரணமது ஆகும்
சிறுதியின் உள்ளொளி திப்பிய மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட ராமே.

உலகம் இன்பம் நிறைந்தது என்று உறுதியாக எண்ணும் சீவன் பலவேறு வினைகளை ஆற்றும். அந்த வினைகளின் பயனாகத் துன்பத்தில் வீழும். அந்தச்

சீவன்களைக் காப்பவன் சிவனே. ஈசான திக்கில் உள்ள திவ்விய மூர்த்தியைக் கண்டுகொண்டால், சிவன் சீவனின் சென்னியில் மேலான பெரும் ஒளியாக விளங்குவான்.

#3031. மற்றவனாய் நின்ற மாதவன்

பற்றி னுள்ளே பரமாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியின் உள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ னாய்னி ன்ற மாதவன் தானே.

பற்றப்பட வேண்டிய பொருட்களில் மேலானவன் சிவபெருமானே! கதிரவன், திங்கள், அக்கினி என்ற மூன்று ஒளிச் சுடர்களை தன் நெற்றியில் நினைக்கத் தெரிந்து கொண்டவருக்கு அவன் தன்னை வெளிப்படுத்துவான். நினைப்பவர்கள் நினைக்கும் வண்ணம் அவன் அவர்களுக்கு விளங்குவான்!

#3032. நாவனும் ஆகி நவிற்றுகின்றானே

தேவனும் ஆகும் திசைதிசை பத்துளும்
ஏவனும் ஆம்விரி நீருலகு ஏழையும்
ஆவனு மாம் அமர்ந்து எங்கும் உலகினும்
நாவனும் ஆகி நவிற்றுகின் றானே.

சிவம் ஆகிவிட்ட ஒரு சீவன் ஒளி உருவம் பெறுவான். அவன் பத்துத் திக்குகளிலும் உள்ளவரை ஏவல் செய்ய வல்லவன். நீர் சூழ்ந்த ஏழு உலகங்களிலும் அவன் நிறைந்து இருப்பான். அவன் நாவன்மை கொண்டு அனைத்தையும் அறிந்து கொண்டு அதை எடுத்துக் கூறும் வல்லவன் ஆவான்.

#3033. காக்கும் அவனித் தலைவன்

நோக்கும் கருடன் நொடிஏழ் உலகையும்
காக்கும் அவனித் தலைவனும் அங்குளன்
நீக்கும் வினைஎன் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானே.

கூரிய பார்வையை உடைய கருடனைப் போலவே உலகநாதன் சிவனும் ஏழு உலகங்களையும் கூர்ந்து நோக்குகிறான். அடியவர்கள் அனைவரையும் காக்கின்றான். அடியவர்களின் வினைகளைப் போக்கும் என் தலைவன் நின்மலன், பிறப்பிலி, அவன் எங்கும் செல்வதிலும், எங்கும் வருவதிலும், எல்லாவற்றோடு பொருந்துவதிலும் வல்லவன்.

#3034. செழுஞ் சடையான் செம்பொன் மேனியன் சிவன்

செழுஞ்சடை யன் செம்பொ னேயொக்கும் மேனி
ஒழிந்தன னாயும் ஒருங்குடன் கூடும்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்திலன் ஏழுலகு ஒத்துநின் றானே.

சிவ யோகியாரிடம் பொருந்தி விளங்கும் சிவன் ஒளிக் கற்றைகளையே தன் விரிசடையாகக் கொண்டவன். அவன் மேனி செம்பொன் நிறம் வாய்ந்தது. அவன் உலகத் தொடர்பு உள்ளவனும் ஆவான்; அவன் உலகத் தொடர்பு இல்லாதவனும் ஆவான்! அவன் உயிர்களிடமிருந்து விலகி நிற்பவன் அல்ல! உயிர்களுடன் கலந்து நிற்பவன். பிறப்பற்ற சிவன் ஏழு உலககங்களில் கலந்து இருந்த போதும் அவனே அவற்றிலிருந்து வேறுபட்டும் நிற்பான்.

3035. துணரின் மலர் கந்தம் துன்னி நிற்பான்

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரும் அவன்தன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் றானே.

சீவனிடம் பொருந்தியுள்ள உணர்வும் சிவனே! சீவனின் உயிரும் சிவனே! பொருட்களை அறியும் அறிவும் சிவனே! பொறிகளால் அறியப்படும் அறிவும் சிவனே! சீவனைச் சிவன் தொடர்ந்து வந்த போதிலும் சீவனால் அவனைத் தன் எண்ணங்களில் அடக்கி விட முடியாது. சிவன் மலர் கொத்துக்களின் நறுமணம் போல எங்கும் பரவியும் விரவியும் இருப்பவன் ஆவான்.

#3036. பலமையில் எங்கும் பரந்து நின்றான்

புலமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
நலமையின் ஞான வழக்கமும் ஆகும்
விலமையில் வைத்துள் வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின் றானே.

புண்ணியன் ஆகிய எந்தை சிவன், சீவன் கற்றுத் தேர்ந்து பெற்ற புலமையினால் அடைய வேண்டியது என்று எதையும் வேண்டாதவன். நாடி வரும் சீவனுக்கு நலம் தரும் ஞானத்தை அவனே நல்கிட வல்லவன். வேதியர்கள் ஓதும் விலை மதிக்க முடியாத வேதங்கள் கூறும் பல பொருட்களிலும் அவன் பரவி நிற்கின்றான்.

#3037. கண்ணவன் ஆகிக் கலந்து நின்றானே!

விண்ணவ னாய்உலகு ஏழுக்கு மேலுளன்
மண்ணவ னாய்வலம் சூழ்கடல் ஏழுக்கும்
தண்ணவன் ஆயது தன்மையின் நிற்பதோர்
கண்ணவ னாகிக் கலந்துநின் றானே.

சிவன் ஏழு உலகங்களுக்கு அப்பால் வெகு உயரத்தில் உள்ள விண்ணகத்திலும் உள்ளான். அவனே மண்ணவனாய் சீவன்கள் நிலவுலகத்திலும் உள்ளான். உலகைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்களுக்கும் அவனே குளிர்ச்சியினைத் தருகின்றான். அந்தக் கடலின் தன்மையை உடைய வலது கண்ணிலும் அவனே கலந்து நிற்கின்றான்!

#3038. தானே வளங்கனி ஆகி நின்றான்

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தான்நிலம் கீழொடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயே.

சிவன் தானே நான்முகன், திருமால் போன்ற தெய்வங்களாகி நின்றான். சிவன் கீழே தாங்கும் நிலமாகவும் மேலே உயர்ந்த வானமாகவும் நின்றான். சிவன் உயர்ந்த மேரு மலை ஆகவும், உலகில் உள்ள ஏழு கடல்களாகவும் உள்ளான். சாதகனுக்கு சிவனே வளமான சிவக்கனியாக இருந்து பயன் தருகின்றான்.

#3039. உலகின் அடர் பெரும் பாகன்

புவனா பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனும் ஆகும்
அவனே இறையென மாலுற்ற வாறே.

புவனங்களின் அதிபதியாகியவன் என் தந்தை புண்ணிய மூர்த்தி சிவன்! அவனே உலகில் உள்ள சீவ ராசிகள் அனைத்தையும் செலுத்தி இயக்குகின்ற பாகன் போன்றவன். அவனே எண்ணற்ற உயிர்த் தொகைகளாகவும் விளங்குகின்றான். இத்தகைய சிறப்பு வாய்ந்த சிவனே எம் இறைவன் என்று சிவஞானியர் விரும்பிக் கூறுகின்றனர்!

#3040. கண்ணின்று இயங்கும் கருத்தவன்

உண்ணின்று ஒளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின்று இயங்கும் வாயுவு மாய் நிற்கும்
கண்ணின்று இலங்கும் கருத்தவன் தானே.

சீவனின் உடலினுள்ளே ஒளிருகின்ற பிராணனனும், விண்ணில் நின்று இயங்குகின்ற திங்களும், சீவனின் பூமித் தானத்தில் செயல்படும் அபான வாயுவும் இவை எல்லாமாகி நிற்பவன் சீவனின் கண்ணில் பார்வையாக விளங்கும் சிவனே ஆவான்.

#3041. உள் நின்று உருக்குவான்

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணும் திறனும் படைத்த பரமனைக்
கண்ணிற் கவரும் கருத்தில் அதுஇது
உண்ணின்று உருக்கியோர் ஆயமும் ஆமே.

தியானத்துக்கு உரிய எழுத்துப் பிரணவம். அதைக் கற்றுக் கொடுத்தவர் குருநாதர். அவர் காட்டிய வழியில் நின்று சாதனை செய்வதையும், அந்த சாதனை சென்று வழியே முன்னேறுவதையும் படைத்தவன் பரமசிவன். சிவனைச் சீவன் தன் அகக்கண் கொண்டு காணும் பொழுது, சிவன் அந்தச் சீவனின் உடலில் பொருந்தி, அதை உருக்கி அதன் இயல்பை உரு மாற்றித் தானே அதன் ஊதியமாகவும் ஆகி விடுவான்.

#3042. திருக் கொன்றை வைத்த செஞ்சடையான்

இருக்கின்ற எண்டிசை அண்டம்பா தாளம்
உருக்கொடு தன்னடு ஓங்கஇவ்வண்ணம்
கருக்கொடு எங்கும் கலந்திருந் தானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே.

தான் நடுவில் இருந்து கொண்டு, தன்னைச் சுற்றி எண் திசைகளும், அண்டங்களும், பாதாளமும் விளங்கும்படி சிவன் நின்றான். திருக்கொன்றை சூடிய செஞ்சடைச் சிவபிரான், அறிவின் வடிவமாக அவை யாவற்றிலும் கலந்து நின்றான்.

#3043. சேயன் அணியன் சிவன்

பலவுடன் சென்றஅப் பார்முழுது ஈசன்
செலவுஅறி வார்இல்லை சேயன் அணியன்
அலைவிலன் சங்கரன் ஆதிஎம் ஆதி
பலவில தாய் நிற்கும் பான்மைவல் லானே.

உலகில் உள்ளவர்களுக்குப் பலவேறு தத்துவங்களாகக் காட்சி தரும் பெருமானின் உண்மை இயல்பினை அறிந்தவர் எவரும் இலர். சிவன் சீவனுக்கு வெகு தொலைவில் இருப்பவன். அவனே சீவனுக்கு மிகவும் அருகில் இருப்பவன்; சிவன் மாறுபாடுகள் அற்றவன்; சிவன் உயிர்களுக்கு இன்பம் அளிப்பவன்; சிவன் அநாதியானவன்; பல வேறு தத்துவங்களாக உள்ள சிவனே அவற்றைக் கடந்தும் விளங்குகின்றான்.

#3044. எது அறியாவகை நின்றவன் நந்தி

அதுஅறி வானவன் ஆதிப் புராணன்
எதுஅறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுஅது வான புவனங்கள் எட்டும்
இதுஅறி வானநந்தி எங்கள் பிரானே.

சிவன் எல்லா உயிர்களின் அறிவுக்கும் அறிவானவன். அவன் ஆதி புராணன். அவனை யாவரும் அறிய முடியாத வண்ணம் நிற்பவன் ஈசன். ஆயினும் எட்டு புவனங்களையும், ஒவ்வொரு சீவனையும் நவன் அங்கு அறிவான்.

#3045. ஊரும் சகலன் உலப்பிலி சிவன்!

நீரும் நிலனும் விசும்புஅங்கி மாருதம்
தூரும் உடம்புறு சோதியு மாய் உளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்இறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே.

நீர், நிலம், விசும்பு, நெருப்பு, காற்று என்னும் ஐம்பெரும் பூதங்களாகவும், அவற்றைத் தாங்கி நிற்கும் ஆதாரமாகவும், சீவ ராசிகளின் உடலில் உள்ள ஒளியாகவும் சிவபெருமான் இருக்கின்றான். அவன் பெயர் பராபரன். பிஞ்சு மதியினை அணியும் அந்தப் பிஞ்சகன் அனைத்துத் தத்துவங்களில் பொருந்தியிருப்பவன். அவன் அழிவே இல்லாதவன் ஆவான்!

#3046. மூலன் உரை செய்த மூன்றுமொன்றாமே!

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே.

திருமூலர் அருளிய மூவாயிரம் திருமந்திரப் பாக்களும், அவர் அருளிய முன்னூறு மந்திரப் பாடல்களும், அவர் அருளிய முப்பது உபதேசப் பாடல்களும் ஒரே உன்னதமான பொருளை விளங்குவன ஆகும்.

ஒன்பதாம் தந்திரம் -
23. வாழ்த்து

#3047. வாழ்க நம் நந்தியின் திருவடிகள்!

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

என் நந்திப் பிரானின் திருவடிகள் வாழ்க! வாழ்கவே!
என் மலக்கட்டினை அறுத்த ஈசன் திருவடிகள் வாழ்க! வாழ்கவே!
எனக்கு மெய்ஞ்ஞானம் அருளிய இறைவன் திருவடிகள் வாழ்க! வாழ்கவே!
நின்மலன், அமலன், விமலன் ஆகிய சிவன் திருவடிகள் வாழ்க! வாழ்கவே!

திருமந்திரம் ஒன்பதாம் தந்திரம் முற்றிற்று.
திருமூலர் அருளிய திருமந்திரம் முற்றிற்று.
வையகத்துள்ளோர் வாழ்வாங்கு வாழ்க! வாழ்கவே!
அன்பே சிவம்! அன்பே சிவம்! அன்பே சிவம்!
காரணம் இல்லாத, சுயநலம் இல்லாத, தூய அன்பை நாம் வளர்ப்போம்!
அன்புக்கு மட்டுமே கட்டுப்படும் முக்தி தாயகன் சிவபிரானை அடைவோம்!

முடிவுரை

எந்தத் துணிச்சலுடன் இந்தப் பணியை மேற்கொண்டேனோ
அந்த சிவபெருமானும் சக்திதேவியும் அறிவர்! யான் அறியேன்!

எத்தனையோ தடங்கலுக்கு நடுவில் இந்தப் பணியை
மெத்தனம் இன்றி செய்ய அருளியவள் சக்தி அன்னை!

அனைத்து உலகினருக்கும் மற்றும் அனைத்து சீவராசிகளுக்கும்
அன்னை தந்தை ஆகிய உமை, சிவன் பாதங்களில் சமர்ப்பணம்!

ஓம் தத் ஸத்! ஸர்வம் சிவார்ப்பணம் அஸ்து!